

மதுரைத் தமிழ்ச் சங்கம்

நூற்றாண்டு விழா மலர்



1149



அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன்



வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர்
நிறுவனர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்




சேதுகாவலர் மன்னர் பாசுகர சேதுபதி அவர்கள்



மேதகு பிரதீபா பாட்டீல் அவர்கள்
இந்தியக் குடியரசுத் தலைவர்



மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள்
இந்தியப் பிரதமர்



மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள்
தமிழக முதலமைச்சர்



மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள்
தமிழக நிதி அமைச்சர்



மாண்புமிகு டி.ஆர். பாலு அவர்கள்
மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர்



மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள்
மத்திய நிதி அமைச்சர்



மாண்புமிகு க. பொன்முடி அவர்கள்
உயர் கல்வித்துறை அமைச்சர்




மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள்
பள்ளி கல்வித்துறை அமைச்சர்



மாட்சிமைதங்கிய முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி அவர்கள்
தலைவர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்



திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் அவர்கள்
துணைத்தலைவர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்



திருமிகு. இரா. அழகுமலை அவர்கள்
செயலாளர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்



திருமிகு. இரா. குருசாமி அவர்கள்
செயலாளர்
செந்தமிழ்க் கல்லூரி



டாக்டர். திருமிகு. ந. சேதுராமன் அவர்கள்
தலைவர்
செந்தமிழ்க் கல்லூரி

A.P.J. Abdul Kalam

Rashtrapati Bhavan
New Delhi - 110004

ஜூன், 2007

திரு. அழகுமலை அவர்களுக்கு,

வணக்கம்.

நூற்றாண்டு விழா காணும் மதுரைத் தமிழ்ச்சங்கம் சார்பாகத் தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. நன்றி.

தங்கள் வேண்டுகோளுக்கிணங்க, மதுரைத் தமிழ்ச்சங்கமும், சங்கத்தின் *செந்தமிழ்* ஆராய்ச்சி மலரும் ஒருமுகமாக நூற்றாண்டு விழா காணும் இந்த நல்ல சமயத்தில், *செந்தமிழ்* ஆராய்ச்சி மலருக்காக, எனது கவிதை ஒன்றை பகிர்வதில் மகிழ்கிறேன்: -

<u>நாம் எங்கிருக்கிறோம்?</u>

எங்கிருக்கிறோம் நாம், என்னருமை நண்பர்களே,
இந்திய மக்களின் இதயவொலி அழைப்பிற்கு,
வரலாற்று வடிவம்தரும் மகாசபையில் இருக்கின்றோம்.
மக்கள்நமை கேட்கிறார்கள், மக்கள்நமை கேட்கிறார்கள்:

"பாராளு மன்றத்து பாரதத்தாய் சிற்பிகளே,
எங்களது வாழ்விற்கு வளங்கொடுங்கள், ஒளிகொடுங்கள்,
உங்களது நல்லுழைப்பே, எங்களுக்கு ஒளிவிளக்கு.
உயர்ந்திடலாம் நாமெல்லாம், உண்மையிலே நீவிர் உழைத்தால்"

அரசன் எவ்வழியோ, குடிமக்கள் அவ்வழியே.
வளருங்கள் எண்ணத்தில், உயருங்கள் செயலில் நீர்.
வாய்மைமுறை உங்களுக்கு, வழித்துணையாய் ஆகட்டும்.
நீவிர் எல்லோரும் வாழ்க! இறைகருணையால் என்றென்றும்.

உங்களுக்கும், மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)

Shri R. Azhagumalai
Secretary - Madurai Tamil Sangam
54, Tamil Sangam Salai
Madurai - 625 001
Tamil Nadu.

N.C. Jhingta
Secretary to Shri Atal Bihari Vajpayee

MESSAGE

Shri Atal Bihari Vajpayeeji is glad to know that on the occasion of centenary celebration of the Fourth Tamil Sangam at Madurai in the month of August 2008 a centenary souvenir is being released.

Shri Vajpayeeji extends his very best wishes to the organization and other persons associated with it and also for the successful publication of the souvenir.

New Delhi
August 08, 2008

(N.C.Jhingta)

6A, Krishna Menon Marg, New Delhi 110011 India
Tel.: +91 11 23015308, 23793877 Fax: +91 11 23794612

L. K. ADVANI
LEADER OF OPPOSITION
(LOK SABHA)

44, PARLIAMENT HOUSE
NEW DELHI - 110 001
PHONE : 23016705, 23034285
FAX : 23017470



Dated: August 18, 2008

MESSAGE

I am glad to know that Madurai Tamil Sangam, Madurai, is celebrating the centenary of the Fourth Tamil Sangam and a Souvenir containing the essays on Tamil Literature and Culture will be released on this occasion.

Please accept my greetings and good wishes for the success of the celebrations.

L. K. Advani

(L. K. ADVANI)

RES. : 30, PRITHVIRAJ ROAD, NEW DELHI-110 011 TEL : 23794124, 23794125, FAX : 23017015

டி. ஆர். பாலு
टी. आर. बालु
T. R. BAALU

मंत्री
पोत परिवहन, सड़क परिवहन और राजमार्ग
भारत सरकार
नई दिल्ली-110 001
MINISTER
SHIPPING, ROAD TRANSPORT & HIGHWAYS
GOVERNMENT OF INDIA
NEW DELHI-110 001

ஆகஸ்ட் 2008.

அன்புடையீர், வணக்கம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது அறிந்து பேருவகை அடைகிறேன். 1901-ஆம் ஆண்டு திருமிகு வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்ட இந்த நான்காம் தமிழ்ச்சங்கம் கடந்த நூறாண்டுகட்கும் மேலாகத் தமிழ் வளர்க்கும் பல்வேறு அரிய பணிகளை ஆற்றிவந்திருப்பது தமிழ்கூறும் நல்லுலகத்தின் பாராட்டுதற்குரியதாகும். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையிலே கம்பராமாயணமும் திருக்குறளும் கிடைத்திடாத நிலையில், தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் வள்ளல் பாண்டித்துரையார் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய ஓராண்டுக்குள் 'செந்தமிழ்' எனும் திங்களிதழ் துவக்கப்பட்டதில் இருந்து இன்று வரை இச்சங்கம் ஆற்றிய தமிழ் வளர்ச்சிப் பணிகள் எண்ணற்றவை. பரிதிமாற்கலைஞர் அவர்கள் நூறாண்டுகளுக்கு முன்னால் 'செந்தமிழ்' இதழில் தமிழ் மொழிக்கு செம்மொழித் தகுதி வேண்டும் என்று கோரிக்கை எழுதிய 'உயர்தனிச் செம்மொழி' என்கிற கட்டுரை வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் விடாமுயற்சியால் அந்தக் கோரிக்கை நிறைவேறி தமிழினத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்துள்ளது.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்று கீதமிசைத்தார் புரட்சிக்கவி பாரதிதாசன். தமிழர்தம் வாழ்வும், வளமும் மங்காமல் திகழ வேண்டுமானால் தமிழின் வலிவும் பொலிவும் காலத்தை வென்று நிலைநிறுத்து விளங்க வேண்டும். அந்தத் திருப்பணியைத் தலைமை ஏற்று ஆற்றிவரும் தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தும் வண்ணம் இன்று போல் என்றும் காலத்தை வென்று வருங்காலங்களிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முயற்சிகளும், செயல்பாடுகளும் அமையும் என்ற நம்பிக்கையுடன் சங்கத்தின் நூற்றாண்டு விழா சீருடனும் சிறப்புடனும் அமைய எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையும் உவகையும் கொள்கிறேன்.

நன்றி; வணக்கம்.

அன்புடன்,

டி. ஆர். பாலு

(டி.ஆர். பாலு)

செயலர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச்சங்கச் சாலை,
மதுரை - 625 001.

க. அன்பழகன்
நிதித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

வாய்மையே வெல்லும்

நாள் 24-07-2008

அன்புடையீர்,

வணக்கம். தமிழகத்தின் தொன்மைமிகு வரலாற்றின் புகழ்மிக்க அறிவுக் கூடமாகத் திகழ்ந்த சங்ககால மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நினைவும், சிறப்பும் தொடரும் வகையில், தமிழ் காத்து வளர்த்த மன்னர் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா வரும் ஆகஸ்டில் கொண்டாடப்படவிருப்பது அறிந்து மகிழ்கிறேன். விழாவில் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் கலந்து கொள்வது விழாவிற்குத் தனிப்பெருமையாகும்.

நூற்றாண்டு விழா காணும் மதுரைத் தமிழ்ச் சங்கம் இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைபெற்றுச் சிறக்கவும், புகழ் பெற்று விளங்கவும் வாழ்த்துகின்றேன்.

அன்பன்

க. அன்பழகன்

(க. அன்பழகன்)

பெறுநர்

திரு. இரா. அழகுமலை,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச்சங்கச் சாலை,
மதுரை - 1.

மருத்துவர்: **ச. இராமதாசு** மரு.இ.அறு.இ.

நிறுவனர் : பாட்டாளி மக்கள் கட்சி

10, காமாட்சியம்மன் கோயில் வீதி,
திண்டிவனம் - 604 001.
விழுப்புரம் மாவட்டம்,
தமிழ்நாடு.

தைலாபுரம் : 04147-235261, 235350, 235599
இல்லம் : 04147-222586, 222709
மின்னஞ்சல் : founderpmk@sify.com
கைப்பேசி : 94432 23314

வலைதளம்: www.thepmk.in

நாள் : 31.7.2008

வாழ்த்து

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் தலை நகரில் அவர்தம் ஆட்சிக்குப்பின், வேற்றுப்புலத்தாரின் காட்டாட்சியில் தமிழும் தமிழரும் பேரளவில் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு வீழ்ந்து கிடந்தபோது, ஆங்கில அயலார் ஆட்சியில் மீண்டும் தமிழாட்சி மலரவும், தமிழர் வாழ்வு ஓங்கவும் 'பைந்தமிழ்க் காவலர்' பாண்டித்துரையார் அவர்களால் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது ஒரு வரலாறு.

வரலாறு படைத்த அப்பெருமகனார் பாண்டித்துரையார்க்குப் பன்னாட்டுத் தமிழரும் நன்றிக் கடனாற்றும் கடப்பாட்டில் உள்ளோம். இத்தமிழ்ச் சங்கம் நூறாண்டுகள் செந்தமிழ்ப் பணியாற்றிச் சிறப்பாக விழாக் காண்கிறது. இஃது இன்னொரு வரலாறு.

இதன் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் தமிழர் அனைவரும் பங்கேற்றுத் தமிழுணர்வு புதுக்கி, அதன் தமிழ்த் தொண்டு முயற்சிகளுக்குத் துணை நிற்க வேண்டுகிறேன். இந்த நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்த் தொண்டு தொய்வின்றித் தொடர்ந்து மீண்டும் ஒரு வரலாறு படைக்க வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளுடன்,

(மருத்துவர் ச. இராமதாசு)
நிறுவனர் - பா.ம.க.

பெறுநர்

திரு. மன்னர் நா. குமரன் சேதுபதி அவர்கள்
தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச்சங்கச் சாலை,
மதுரை - 625 001.

☎ 2851 65 65
2851 65 66
2854 98 84



மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

"தாயகம்"
எண் : 12, ருக்மணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008.

வைகோ
பொதுச்செயலாளர்

30.08.2008

வாழ்த்து

சீர்நடை செம்மொழி தமிழ்மொழி! உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி! என்று பாவேந்தரால்
புகழப்பட்ட தேமதுரத் தமிழை தழைத்தோங்கச் செய்ய
நாளும் உழைத்திட்ட வள்ளல் பெருமகனார் பாண்டித்துரை தேவராவார்.
"தமிழ் கெழு கூடல்" என்று புறநானூறும்
"தமிழ் நிலைக்களனாக விளங்கிய மதுரை" என்று சிறுபாணாற்றுப்படையும்
"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை" என்று மதுரைக்காஞ்சியும்
சிறப்பித்துக் கூறுகின்ற மூதூராம் மதுரையில் நான்காம்
தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழ்த் தொண்டாற்றியவர் அவர்.
தரணி எங்கும் தமிழ் பரப்பிய அச்சங்கம் நூற்றாண்டு மலர்
வெளியிடும் செய்தி என் செவிகளில் செந்தேனாகப் பாய்கிறது.
அதிலும் தமிழ்த்தாயின் தலைமகன் அறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு
விழாக் காலத்தில் நூற்றாண்டு மலர் வெளியிடுவது சாலப் பொருத்தம்.
புலவர்கள் வள்ளல்களைப்பாடி பரிசுகள் பெற்ற நாட்டில்,
வள்ளல் பாண்டித்துரைத் தேவரே புலவராக அமர்ந்து தமிழாய்ந்த
சிறப்பு என்றும் நினைவு கூறத்தக்கதாகும்.
நூற்றாண்டு விழா மலர் தமிழ்ச்சங்க நந்தவனத்தில் ஒரு
மனோரஞ்சித மலராக மணம் வீச மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பெறுநர்:
திரு. க. சின்னப்பா அவர்கள்,
தலைவர், செந்தமிழ்க் கல்லூரி

வைகோ
(வைகோ)

சிவபெருமான் போற்றி





தொலைபேசி : 0452 : 4377116
4381005
2347475

புனித மிக்க
மதுரை ஆதீனம்
292 ஆவது குருமகாசன்னிதானம்
**ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்**

தெற்காவணி மூல வீதி,
மதுரை - 625 001.

திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
❖ மதுரை ❖

ஆசீர்வாதம்!

தங்கள் அன்பான 16/07/08 ஆம் நாளிட்ட மடல் இன்று கிடைத்து, நமது நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, சைவத்தையும், தமிழையும் வளர்த்த வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் தமிழ்ச்சங்கம், நூற்றாண்டு விழாவைக் காண்கிறது என்பதையும், அவ்விழா, நமது டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நிகழ இருக்கிறது என்பதையும் அறியும் போது, உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

விழா சிறப்புற நடக்கட்டும்! நூற்றாண்டு மலர் அரிய கருவூலமாக மலரட்டும்!

தமிழ் மொழியின் மகிமை, உலக மக்கள் அனைவரின் இதயங்களில் எல்லைப் ததும்பி நின்று, தமிழரின் ஆட்சியும், மாட்சியும் எங்கு நோக்கினும் ஒளி வீசட்டும்! அதனால், எல்லோரும் மகிழ்வுடனும், நிம்மதியுடனும் வாழட்டும்! அதற்கே, இந்த நூற்றாண்டு விழா வழிகாட்டட்டும்!!

எல்லோர்க்கும் ஆசீர்வாதம்!

15/07/08. ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803, நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - 232021



"அருள் வாழ்த்துரை"

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

மின்காட்டுங் கொடிமருங்குதல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருட்புவலிச் சிலக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்புத் தூரில்
திருத்தனியான் காண்அவனென் சிந்தையானே.

- ஆறாந்திருமுறை.

வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பெற்ற மதுரைத் தமிழச்சங்கம் ஆகஸ்டு 2008ல் நூற்றாண்டு விழா காண இருப்பது அறிந்து மகிழ்ந்து அடைகின்றோம்

பண்டைத் தமிழ்ச் சான்றோர் நெறிநின்று சங்கத்தின் மூலம் தமிழ் வளர்ந்து வரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தொண்டுகள், தமிழகத்தின் தொன்மைச் சிறப்பினை உலகம் அறிந்து போற்ற உறுதுணையாய் விளங்குவன.

நமது ஆதின முனிபுங்கவர்களாகிய அருள்திரு. சுவாமிநாத தேசிகர் அவர்கள் "இலக்கணக் கொத்து' என்ற நூலினையும், மாதவச் சிவஞான சுவாமிகள் தொல்காப்பிய சூத்திரவிருத்தி, நன்னூல் விருத்திரை - திருத்தம் ஆகிய நூல்களையும் இயற்றியருளித் தமிழ் மரபுகளை உலகறிய விளக்கியிருக்கும் திறம் சிறப்பான ஒன்றாகும். நம் ஆதினப் புலவராக விளங்கிய சங்கர நமச்சிவாயப் புலவர் இயற்றியுள்ள "நன்னூல் விருத்தியுரை" தமிழ் உலகில் என்றும் செல்வாக்கு பெற்று விளங்குவது, மேலும் செந்தமிழ் மொழியில் ''பாடியம்'' என்னும் பேருரையினைச் சிவஞானபோதம் என்னும் சித்தாந்த சாத்திரத்திற்கு நமது ஆதினத்து மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றித் தமிழுலகிற்குத் தந்துள்ளமை அறிஞர் உலகம் அகமகிழ்ந்து போற்றும் அருஞ்சாதனையாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் நமது ஆதினத்து மாதவச் சிவஞானயோகிகள் தவச்சிறப்பினையும், தமிழ்ப்பணிகளையும் போற்றிப் பல கவிகள் இயற்றிப் பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

நமது ஆதின முன்னோர் நெறிநின்று தமிழ் வளர்க்கும் நோக்கில் தமிழறிஞர்கள் நமது ஆதீனத்தால் சிறப்பிக்கப்பெற்று வருகின்றனர். குருமுதல்வரின் குருபூசை விழாவிலும், திருவள்ளுவர் குருபூசை நாளிலும், விசயதசமி நாளிலும் தமிழறிஞர்கள் பாராட்டுச் சான்றிதழும், பொற்கிழியும் வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப் பெறுகின்றார்கள். சங்க இலக்கியம், தொல்காப்பியம் குறித்த ஆய்வுரைகள் ஆதீன விழாக்களில் இடம் பெறுகின்றன. இவ்வாறு தமிழ்ப்பணிகள் இயற்றிவரும் நம் ஆதீனம். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நூறாண்டு தமிழ்ப் பணிகளை வாழ்த்துவதில் மகிழ்ச்சி கொள்கிறது.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் மேன்மேலும் தழைத்துச் சிறந்து இன்னும் பல நூறாண்டுகள் கண்டு " கொண்டல்" மாமழை பொழிந்த நுண்ப றுளியினும் வாழிய பலவே" என்று நம் வழிபடுகடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தொலைபேசி : 2607995, 2608678
கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010, தமிழ்நாடு.
இணையதளம் : www.Peruradinam.com
மின்னஞ்சல் : peruradigal@yahoo.com
: perurmutt@ yahoo.com

உ

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க

Telephone : 2607995, 2608678
Kailai - Ma - Munivar - Vidwan
Santhalinga Ramasamy Adigal
Peruratheenam, Perur (P.O.)
Coimbatore - 641 010, Tamilnadu
webpage : www.Peruradinam.com
Email : peruradigal@yahoo.com
: perurmutt@ yahoo.com

பெறுநர் நாள்: 26.7.08 நாள்: 26.7.08

திருமிகு இரா.அழகுமலை அவர்கள்,
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54 தமிழ்ச் சங்கச்சாலை,
மதுரை-625 001.

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக.

வாழ்த்து

1 முத்தமிழ்க் கூடாக முச்சங்கம் அமைத்தார் சான்றோர்
ஒத்துயர்வுடையார் நான்காம் தமிழ்ச் சங்கம் மதுரையில் கண்
இத்தரை புகழத் தோற்றி இயல் இசை நாடகத்துத
புத்தமுதை ஊட்டிப் புலமையோர் போற்றத் தந்தார்

2 பல்பார் பாண்டிச் சேதுபதியாம் மன்னர் தமிழர்களால்
நற்றும் புலவர்தமைப் பேணி நான்காம் சங்கம் உருவாக்கி
என்றும் எத்தம் உயர்புலமை எய்த செய்தே தமிழகத்தில்
வென்றத் தமிழை வளமாக்கி வளர்த்தார் அவர்தம் புகழ் வாழி

3 செந்தமிழ் நெறியை அயலவர்கள் சிதைத்தார் அரும் செருக்கதனால்
வந்தமொழியே உயர்வாக மாற்றி அமைத்துத் துறையிலையும்
சொந்தமாக்கிக் கருவறையில் தொழுவோர் தம்மைப் புறக்கணித்து
மந்தையோர் தம் மரபகற்றி புரியா மொழிக்கு முதன்மை தந்தார்

4 நாட்டில் புலவர் தமிழர்களால் நான்காம் சங்கம் வேட்டு நின்றார்
பாட்டில் பல்பில் உயர்நிலைசேர் பாஸ்கரப்பேர் சேதுபதி
ஏட்டில் பதித்த இலக்கியங்கள் எங்கும் பரவ வழிகாட்டி
மீட்டும் தமிழே முதன்மையுற விளக்கம் தந்த பணிவாழி.

5 புலவர் அறிஞர் தமிழ்ச் சான்றோர் போற்றி வளர்த்த தமிழ்ச்சங்கம்
உலகும் இசை நாட்டியம் அவைகள் முழக்கச் செய்யும் பல பணிகள்
நிலவும் தமிழ்ச் செம்மொழி உயர்வால் நிகழும் நூற்றாண்டுவிழா
பலனாம் மறையும் தமிழ்மொழியில் பதிக்க வரை வாழ்த்துகின்றோம்

அப்புகழுரிய மதுரை தமிழ்ச் சங்கச் செயலர் திரு இரா.அழகுமலை அவர்களுக்கு நம்கள் மடல் கிடைத்தது. நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா மலருக்காக வாழ்த்து இத்துடன் வெளியிட தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளுங்கள். நூற்றாண்டு விழா மலரும், விழாவும் சிறக்க அம்பலவாணப் பெருமான் இன்னருள் நினைந்து வாழ்த்துகின்றோம். சேதுபதி மன்னர் மரபு வாழ்க.

இத்துடன் சாந்தலிங்கப் பெருமான் அருட்திருநீறு வைத்துள்ளோம், அணிந்துய்யுங்கள்.

வேண்டுதல்களைப்பு

அன்புள்ள,
சாந்தலிங்க ராமசாமி
(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்)
பேரூராதீனம்.

PHONE : 56655

"KAILAI MA MUNIVAR "
THIRU VALAR THIRU KASIVASI
MUTHUKUMARASWAMI TAMBIRAN
SWAMIGAL



SIVA SIVA

HEAD OF KASITHIRU MADAM
TIRUPANANDAL - 612 504.
THANJAVUR DISTRICT

DATE: 31.7.08

வாழ்த்துரை

'புலவர்'செந்நாப் பொருந்திய நிவப்பில், பொதிகைத்தென்றல் போலாது ஈங்கு மதுரைத்தென்றல் வந்தது காணீர்' — என்றும், 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக'என்றும், சங்கத்துப்புலவரும்" கூடலில் ஆய்ந்த ஒண்டீந்தமிழின் துறைவாய்' என மணிவாசகரும் போற்றிய மதுரைக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு விரிக்கவொண்ணாதது. அத்தகு மதுரையில் தமிழ்மீது கொண்ட மாளாக்காதலாலும் தமிழின் சீர்மை புரியாத புலவர்களால் தமிழுக்கு எந்தத் தீங்கும் வந்துவிடக் கூடாது என்பதாலும், ஸ்காட்டுரை போன்ற அரைகுறைத் தமிழ் அறிவுடையோரால் திருக்குறள் போன்ற மேன்மை மிக்க நூல்களுக்கு ஏற்படக்கூடிய சீர்கேடுகளை களைந்திட தேவையானதாலும் 'நீளநினைந்து' பாண்டித்துரைத்தேவரால் உருவாக்கப்பெற்ற மதுரைத்தமிழ்ச் சங்கம் நூற்றாண்டு விழாக் காணும் செய்தியறிந்து மகிழ்கிறோம்.

'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்'—எனும் நிகண்டு மொழியை சிந்தையிலிருத்தி, நெடுநாள் மனதில் அதனை வளர்த்துப் பேணிப் பராமரித்துப் பலர்க்கும் ஊர்வரிய உயர்தமிழ்ச் சுவையை மாந்திட உதவட்ட தமிழ்ச்சங்கத்தின் நூற்றாண்டு விழா மாண்புற நிகழவும், 'மலர்' மங்காத செந்தமிழின் மகத்தான சிறப்பைப் பகரும் படைப்புகளுடன் பொன் மலராய் மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ

ஜெ./

நிறுவனர்,
மதுரை தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

215, மும்பைத் தமிழ்ச் சங்கச் சாலை, மும்பை - 400 022.
தொலைபேசி : 2409 4021 • தந்தி : முத்தமிழ் மும்பை-22

21.09.2008.

பேரன்புடையீர்,

வணக்கம். வாழிய நலம்.

வரலாற்றுப் புகழ் மிக்க தங்கள் சங்கத்தின் நூற்றாண்டு விழா பேச்செல்லாம் தமிழ் மொழியின் பெருமை பேசுபவரும், அல்லும் பகலெல்லாம் அருந்தமிழின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றுகின்றவருமான தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நிகழ உள்ளது அறிந்து மிக்க மகிழ்ந்தோம்.

"இதனை இதனால் இவன் முடிக்கும்' என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப இறவாவியத்தை தமிழ்கூறும் நல்லுலகத்திற்குத் தந்த கலைஞர் அவர்களை விழாவின் தலைமைப் பொறுப்பேற்று அமைத்திருக்கின்ற பாங்கினைப் பாராட்டுகிறோம்.

விழாவினையொட்டி செந்தமிழ்ச் சான்றோர் பெருமக்களின் வண்ண வண்ணப் படைப்புகளடங்கிய நூற்றாண்டு விழா மலர் மலரவுள்ளது என்பது போற்றுதற்குரிய செயலாகும்.

விழா சீரும் சிறப்புமாக நடைபெற எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வெ. பாலு.
செயலாளர்.

பெறுநர்
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

Estd : 1950

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்

ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ

BANGALORE TAMIL SANGAM (Regd)

#59, Annaswamy Mudaliar Road, Bangalore - 560 042.
Phone : 25510062 / 25551357, Fax : 91-80-25551357

President :
A. P. Shanmugasundaram

Secretary :
Porchezhian

ACTIVITIES :
Library
Reading Room
Competitions in :
Music, Dance & Drama.
Debates, Symposia
Excursions
Literary discourses
Conferences
Matrimonial

MAGAZINE : OOTRU

CLASSES
Tamil, Kannada
Dances, Yoga, Karate,
Vocal, Veena, Thirupugazh

SCHOOL
Kamarajar High School

TREATMENT
Homeopathy
Accupuncture
Yoga Therapy

WINGS :
Youth Wing,
Women's wing

BUILDING :
Ground Floor :
Auditorium & Seminar Hall
First Floor :
Reading Room
Library
Guest Rooms
Second Floor :
Translation and
Research Departments
Class Rooms

FUTURE PLANS :
Students Hostel
Orphanage
Marriage Hall

Ref : BTS/ Date : 29.08.2008

பெறுநர் : தலைவர் – மதுரைத் தமிழ்ச் சங்கம்

வரலாற்றுப் புகழ்மிக்க மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு சிறப்பாகக் கொண்டாடப்படுவதையும், அதுபோழ்து தமிழக முதல்வர் தலைமை ஏற்பதையும் அறிந்து மிகவும் பெருமைப் படுகிறோம். இந்த இனிய நிகழ்வின்போது நிறுவனர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் பெருமகனாரைத் தமிழ்கூறும் நல்லுலகும், உலகமெல்லாம் பரவியுள்ள தமிழினத்தாரும் நன்றியுடன் நெஞ்சம் நெகிழ நினைவுகூர்ந்து வணங்கக் கடமைப்பட்டுள்ளது.

இத்தகு சிறப்புடையவரும் நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனரும் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் பெருமகனாரின் புகழ் சிறக்கவும் வணங்கி வாழ்த்துகிறோம். நன்றி. இவண்,

தங்களின் மேன்மையே நாடும்
29.08.2008

தலைவர்,
பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்

வாழ்க தமிழ்   உ   வளர்க சைவம்

சிவமயம்

அருள்தரு மங்களாம்பிகை உடனாய அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி துணை

Ph: 04577 - 264446



HIS HOLINESS

Sri La Sri Niramba Alagiya Gnanaprakasa Desika Paramachariya Swamigal

MADATHIPATHI - THULAVUR MADAM

KUNNAKKADI - Via (Sivaganga Dt.) Pin : 630 206. Tamilnadu. India.

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மடாதிபதி, துலாவூர் மடம்.

சர்வதாரி ஆண்டு ஆடித் திங்கள் 11.ஆம் நாள் Date: 26-7-2008

வாழ்த்துரை

மதுரை மாநகரில் ஸ்ரீமான், வள்ளல். பொன். பாண்டித்துரை தேவர் அவர்களால் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது. இச்சங்கத்தின் நூற்றாண்டு விழா தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர். கலைஞர். மு.கருணாநிதி அவர்கள் தலைமையில் 2006.ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சிறப்பாக நடைபெற, திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

நூற்றாண்டு விழாவின் நினைவாக வெளியிடப்பெறும் விழாமலர் தமிழ்ச் சான்றோர் பெருமக்களின் கவிதைகள் கட்டுரைகள் கருத்துக்கள் தமிழ்ச் சங்கத்தின் சிறப்புக்கள் யாவும் சேர்ந்து சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

நலமே தழைக!

ஸ்ரீ. நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்
26.7.2008

பெறுநர்: திரு. இரா. அழகுமலை எம்.ஏ. எம்.ஃபில் அவர்கள்
54. தமிழ்ச் சங்கம் சாலை
மதுரை- 625 001

கே. வைத்தியநாதன்
ஆசிரியர்

தினமணி

August 1, 2008

திரு இரா.அழகுமலை,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச்சங்கச்சாலை,
மதுரை - 625 001.

என் அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய நண்பர் திரு.அழகுமலை அவர்களுக்கு,

வணக்கம்.

கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ஆகஸ்டு திங்களில் தமிழ்ச் சங்கத்தின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்கிற செய்தி மகாகவி பாரதியின் வார்த்தையில் சொல்வதாக இருந்தால் காதினில் இன்பத் தேன் வந்து பாய்ந்தது போன்ற உவகை அளித்தது.

தமிழ் வாழும் காலம் வரை தமிழ்ச் சங்கமும் வாழும் என்கிற நமது நம்பிக்கை பொய்த்திடாது. வள்ளல் பொன் பாண்டித்துரை தேவர் அவர்களின் கனவும் தமிழ்கூறு நல்லுலகத்தின் ஆதரவும் உங்களைப் போன்ற தமிழ் நேசர்களின் உழைப்பும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை இலக்கிய ஆர்வலர்களின் தேன்கூடாய் தமிழ் கவிஞர்களின் உரைகல்லாய் மொழி வல்லுநர்களின் உறைவிடமாய் உலகம் உள்ளளவும் நிலைநிறுத்தும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

பள்ளி மாணவனாய் நான் சங்கத்தைச் சுற்றி சுற்றி வந்த காலம் நினைவில் நிழலாடுகிறது. என்னில் தமிழ் உணர்வை ஊட்டிய மதுரைத் தமிழ்ச் சங்கம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவில்லையே என்கிற எனது ஆதங்கத்திற்கு விடை தேடித் தந்திருக்கிறாள் அன்னை மதுரை மீனாட்சி.

நூற்றாண்டு விழா காணும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இப்படிக்கு அன்பன்,

வைத்தியநாதன்

Regd. Office: Express Publications (Madurai) Limited, Express Gardens, 29, 2nd Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058
Phone: 044 23457645 (Dir), 23457601 - 10, Ext.: 485, Fax: 044 23457619 / 20, email: vaidiyanathan@epmltd.com

நா. மகாலிங்கம், பி.எஸ்சி. எஃப்.ஐ.இ
தலைவர்
சக்தி நிறுவனங்கள்

74, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032.
அலு. 2235 0814 இல். 2499 6898
ஃபாக்ஸ் : 2235 0041

வாழ்த்துரை

சிவபெருமான் தன் சடை முடியில் விளங்கும் சந்திரனில் பொதிந்த மதுவைத் தெளித்த காரணத்தால் மதுரை எனப் பெயர் பெற்றது என்று திருவிளையாடல் கூறுகிறது என்றாலும், மதுரம் - இனிமை. அதாவது தமிழ். இறைவன் தமிழைத் தலைமைதாங்கி வளர்த்த காரணத்தால் மதுரை எனப் பெற்றது என்று கூறுவது மிகவும் பொருத்தம்.

மூன்று சங்கங்கள் முதன்மையாகத் தொடர்ந்து நடைபெற்றுத் தமிழை வளர்த்தன என்று அறிகிறோம். அதன் பின்பும் பல சங்கங்கள் இடையிடையே நடைபெற்றன என்பது துடிசைகிழார் முதலியவரது கோட்பாடு.

ஆனால் நான்காவது சங்கம் எனப் பெயர் படைத்த சங்கத்தை வள்ளல் பாண்டித்துரை நிறுவினார். தேவரவர்கள் அன்றைய பாண்டியப் பேரரசர்கள் போலவே கொடையாளர். தமிழறிஞர், மூன்று தமிழையும் முறையாக வளர்த்த பேருளாளர். அவருடைய ஆதரவில் எண்ணற்ற தமிழ்ப் புலவர்கள் வாழ்வு பெற்றார்கள்.

தமிழ்ச்சங்கம் திருநாராயண ஐயங்கார், மு.இராகவ ஐயங்கார், பாஷா கவிசேகர ரா.ராகவையங்கார் முதலிய மாமேதைகளைக் கொண்டு தமிழாய்வு செய்தது. செந்தமிழ் இதழ் வாயிலாக அதன் பயனைத் தமிழ்ப் புலவர் உலகம் பெற்று மகிழ்ந்தது. செந்தமிழ்க் கல்லூரி பலப்பல புலவர்களைத் தமிழுலகத்துக்குத் தந்தது. மாணவர்களைத் தேர்வுகளும் போட்டிகளும் நடத்தி ஊக்குவிக்கின்றது தமிழ்ச்சங்கம்.

ஒரு நூற்றாண்டு கண்டு ஓங்கி நிற்கும் தமிழ்ச் சங்கம் வையை மணலிலும் பலவாழ்க என்று அன்றைய புலவர்கள் வாழ்த்தியது போலவே நானும் வாழ்த்துகிறேன். திங்களும் ஞாயிறும் உள்ளளவும் தமிழ் வாழும்; அங்கயற்கண்ணி ஆலவாயிறைவர் தண்ணருளால் தமிழ்ச்சங்கமும் அதனோடு இணைந்து வாழும்.

நா.மகாலிங்கம்.

மின் அஞ்சல் : nmahalingam@sakthisugars.com

தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தேவர்



பழ. நெடுமாறன்,
மதுரை.

சங்கம் கண்டு தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர்கள். அவர்கள் மட்டுமல்ல சேரரும் சோழரும் பாண்டியர்களுடன் இணைந்து தமிழ்ப் புலவர்களைப் புரந்தனர்.

வடமொழிப் பண்பாட்டுப் படையெடுப்பின் விளைவாக அழிய இருந்த சங்க இலக்கியங்களை மூவேந்தரும் முனைந்து நின்று தொகுத்துக் காத்தனர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் மூவேந்தர்களால் தொகுக்கப்பட்டன. இதன் மூலம் சங்க இலக்கியங்கள் அழியாமல் நிலைத்தன.

தொகுத்துக் காக்கும் தொண்டு தொடர்ந்தது. மூவர் பாடிய தேவாரங்கள் இராசராசப் பெருமன்னன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப் பட்டன.

ஆழ்வார்கள் பாடிய தீந்தமிழ்ப் பாடல்கள் நாலாயிர திவ்ய பிரபந்தம் என்ற பெயரில் நாதமுனியால் தொகுக்கப்பட்டன.

இவ்வாறு தொகுக்கப்படாத பல நூல்கள் காலப்போக்கில் அழிந்து மறைந்தன.

பிற்காலத்தில் விசயநகர நாயக்கர்கள், மராட்டியர்கள், நவாபுகள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் என அடுத்தடுத்து அந்நியர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில் ஆதரிப்பாரும் ஊக்குவிப்பாரும் இல்லாமல் தமிழ் தத்தளித்தது.

ஆங்கிலேயர்கள் ஆட்சி முழுமையாக ஏற்பட்டபோது ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; தமிழ்க்கல்வி பின்னுக்குத் தள்ளப்பட்டது.

மன்னர்களும் சிற்றரசர்களும் சிற்றின்பம் துய்த்தல், வேட்டையாடுதல் போன்றவற்றிலும் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு ஆடம்பர விருந்தளிப்பதிலும் பொழுது போக்கினர். தங்களைப் புகழ்ந்து பாடிய புலவர்களுக்குப் பரிசு அளித்து மகிழ்ந்தார்கள். ஆனால் தமிழைப் பேணுவதற்கு முன்வந்தாரில்லை.

இந்தக் காலகட்டத்தில் இராமநாதபுரம் சேதுபதி மன்னரின் உறவினரும், பாலவனத்தம் சிற்றரசருமான பாண்டித்துரைத் தேவர் வேறுபட்டவராக வாழ்ந்தார். தம்மையொத்த சிற்றரசர்களைப் போல வீண் பொழுது போக்குகளில் ஈடுபடவில்லை. தொலைநோக்குப் பார்வையும், தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற தூய உள்ளமும் அவரிடம் இயற்கையிலேயே குடி கொண்டிருந்தன.

இதன் விளைவாக 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது 1901ஆம் ஆண்டு மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார்.

தீர்க்கமான சிந்தனையுடனும் தொலை நோக்குப் பார்வையுடனும் அவர் செய்த இந்தச் செயல், தமிழ்மொழி, தமிழர் வாழ்வு ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. மிகப்பெரிய விளைவுகள் இதன் மூலம் உருவாயின.

தமிழ்க்கல்வி என்பது மரபு வழிப் புலவர்களின் வீடுதேடிச் சென்று அவருடைய விருப்பு வெறுப்பு களுக்கு இசையக் கற்பிப்பதைக் கற்றுவரவேண்டி இருந்தது. முறையான தமிழ்க்கல்வி என்பது இல்லை. ஒவ்வொரு புலவரும் அவருக்குத் தெரிந்த சில இலக்கியங்களைக் கற்றுத்தந்தனர். முழுமையான

தமிழ்க்கல்வி பெற வெவ்வேறு புலவர்களிடம் கற்க வேண்டிய நிலைமை நிலவிற்று. அதுவும் எல்லோருக் கும் தமிழ்க்கல்வி கிடைக்கவில்லை. ஆசிரியர்கள் தாங்கள் விரும்பும் மாணவர்களுக்கு மட்டுமே கற்பித்தனர்.

இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு விரும்பிய பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமிழ்க்கல்லூரி ஒன்றைத் தமிழ்ச்சங்கத்தில் நிறுவினார். பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய பட்டயங்களை அளிக்கக்கூடிய வகுப்புகள் முறையாக நடத்தப்பட்டன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் படித்துத் தேறிய பண்டிதர்கள் நாடெங்கும் தமிழ்க்கல்வியைப் பரப்பினார்கள்.

ஆங்கிலக் கல்வி மோகம் பரவி இருந்த அந்தக் காலத்தில், ஆங்கிலேயர் ஆட்சியில் செய்யத் தவறிய ஒன்றைப் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் துணிந்து செய்தார்கள். இதை அவர் செய்யாமல் போயிருந்தால் முறையான தமிழ்க்கல்வி உருவாகாமலே போயிருக்கும். அவருடைய இந்தத் தொலைநோக்குப் பார்வை எண்ணி எண்ணி வியக்கத்தக்கதாகும்.

தமிழ்ச்சங்கம் அளித்த பண்டிதர் பட்டத்தைப் பின்பற்றிப் பிற்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் வித்துவான் பட்டய வகுப்புகளைத் தொடங்கிற்று. பிற்காலத்தில் இப்பட்டம் புலவர் பட்டமாக மாற்றப்பட்டது.

செந்தமிழ்க் கல்லூரி மட்டுமன்றி நூலகம் ஒன்றையும் நிறுவி அதில் தமிழ் இலக்கியங்கள், ஓலைச்சுவடிகள் போன்றவற்றைச் சேகரித்து வைத்தார். இலக்கியங்களை அச்சிடுவதற்கு அச்சகம் ஒன்றினை யும் உருவாக்கினார். இதன் மூலம் தமிழ் இலக்கியங் கள் பரவின.

தனி ஒரு மனிதராகவே இருந்து அவர் ஆற்றிய இந்தச் சீரிய தொண்டு தமிழ்நாட்டில், தமிழ் அலைகள் வீசுவதற்குக் காரணமாயிற்று. அவர் நிறுவிய தமிழ்ச்சங்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒன்றை உமாமகேசுவரனார் நிறுவினார். அண்ணாமலை அரசர் தமிழிசையைப் பரப்பத் தமிழிசைச் சங்கத்தை நிறுவினார். தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்தது. சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

பிற்காலத்தில் நாடு விடுதலை பெற்ற பிறகு, கல்வி அமைச்சராய் இருந்த அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கினார். அதன் சார்பில் கலைக்களஞ்சியங்கள் வெளியிடப்பட்டன.

1970களின் பிற்பகுதியில் முனைவர் தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கினார். அதன் சார்பில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன.

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்று விக்கப்பட்டது. இன்னும் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிக்கும் துறைகள் தொடங்கப்பட்டன. இன்று தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

வானுற ஓங்கி நிற்கும் கோபுரத்தின் உச்சியில் உள்ள கும்பங்களும், சிலைகளும் நம்மை வியக்க வைக்கின்றன. ஆனால் மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் கோபுரத்தின் அடித்தளம் உறுதியாக அமைக்கப்பட்டதனால்தான் கோபுரம் அழியாமல் கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

அதைப்போல, தமிழ் இன்று பெற்றுள்ள அத்தனை வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது 1901ஆம் ஆண்டு பாண்டித்துரைத் தேவர் தொலைநோக்குப் பார்வையுடன் அமைத்த தமிழ்ச்சங்கம் என்னும் அடித்தளம்தான் என்பதை ஒருபோதும் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.

1954ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாவினைத் தமிழவேள், பி.டி. இராசன், கி. பழனியப்பனார், சண்முகசுந்தரம் மற்றும் பல தமிழறிஞர்களைக் கொண்ட குழுவினர் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். பிற்காலத்தில் தமிழக அரசின் ஆதரவோடு நடத்தப்பட்ட உலகத் தமிழ் மாநாடுகளுக்கு இப்பொன்விழா மாநாடு முன்மாதிரியாக அமைந்தது.

தமிழ்ச்சங்கத்தின் நூற்றாண்டு விழா இன்னும் சிறப்பாகத் தமிழக அரசாலும், தமிழக மக்களாலும் கொண்டாடப்பட வேண்டும். தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழாவின் மூலம் தமிழ் வளர்ச்சிக்குப் புதிய திருப்பம் அளிக்க அனைவரும் முனைய வேண்டும்.

தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நினைவை நாம் போற்றுவதற்கு இதுவே வழி.

செந்தமிழ் ஈந்த நந்தா விளக்கு



மு.கு. ஜகந்நாத ராஜா
இராசபாளையம்

திருமலிந்த தீந்தமிழின் பழமையும், செழுமையும் இலக்கியவளமும் உயர்தனிச் செம்மொழிச் சிறப்பும் இன்று உலகம் நன்குணர்ந்துள்ளது. அண்மையில் நடுவண்அரசு சட்டபூர்வமாகச் செம்மொழித் தகுதியினை உலகுக்குணர்த்தியுள்ளது. மக்கள் பேச்சு வழக்கில் இன்று வடமொழி எனும் சமஸ்கிருதம் இல்லை. அதிலிருந்து புத்தர் காலத்திலேயே திரிந்த பிராகிருத மொழி (பாலி, அர்த்தமாகதி) முதலியனவும் பேச்சு வழக்கில் இல்லை. நூல் வழக்கிலும் சமண பவுத்த மத வழிபாட்டிலும்தான் அவைகளும் உள்ளன. இன்று இந்தியாவில் பேசப்படும் மொழிகள் எல்லாமே ஆரிய மொழிக் குடும்பத்தையோ, திராவிட மொழிக் குடும்பத்தையோ சேர்ந்தவையாய் உள்ளன. பாரசீகம், ஜெண்டஅவஸ்தாமொழி சமஸ்கிருதத்தோடு நெருங்கிய தொடர்புடையதே. நம் நாட்டில் சங்ககாலத்திலேயே யவன, கிரேக்கர் தொடர்புகள் குறித்துச் சான்றுகள் உள்ளன. பிற்காலத்தில் நபிகள்நாயகம் காலத்திலிருந்து முகம்மதியர்கள் நம் நாட்டில் புகுந்து விட்டதால், அவர்களது மதம் கட்டுப்பாடுடைய மதமாக வேரூன்றியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களும் தமிழகம் வந்து தம் மதம் பரப்பின வரலாற்றுண்மைகளை மறக்க இயலாது. இவற்றால் விளைந்த பரிணாமத்தால் தமிழ் இலக்கியங்களைக் காப்பாற்றும் ஒரு நிறுவனம் இல்லாது போயிற்று. மத நோக்கில்தான் தங்கள், தங்கள் மத நூல்களைக் காப்பாற்ற மரபுவழிப்பட்ட சமய ஆச்சாரியர்களும், அவர்கள் நிறுவிய மடங்களும் முற்பட்டன.

வரலாற்று ரீதியாய்ப் பார்த்தால் தங்கள் தாய்மொழியைப் பாதுகாக்கவும், வளப்படுத்தவும் தமிழில் மட்டுமே முதன்முதலில் சங்கங்கள் ஏற்படுத்தினர். இறையனார் அகப்பொருள் உரையாசிரியர்கள் கூறும் முச்சங்க வரலாற்றில் புராண கற்பனைக் கதைகளையும் சேர்த்துத் தந்துள்ளார்கள். வரலாற்று ரீதியான ஆய்வாதாரமில்லை. தமிழுக்கே உரிய காப்பியங்கள் இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை மட்டுமே. சீவகசிந்தாமணி சமண தீர்த்தங்கரர் கதைகளிலிருந்து வந்தது. பிற்காலத்தில் ராஜராஜன் காலத்தில் எழுந்த – சேக்கிழார் தொகுத்த – பெரியபுராணம், சமணமகாபுராண பிராகிருத நூலுக்கு இணையாகச் சைவநூல் வேண்டிப் படைத்ததாக அறிகிறோம். ஆக மதநோக்கில்தான் சங்கங்களும் நூல் வெளியீடுகளும் தொன்மைக்காலமாகவே நிகழ்ந்து வந்துள்ளன. இதற்கு மாறாக, மத நோக்கமோ, இன நோக்கமோ இன்றித் தமிழ்மொழி வளத்திற்காகத் தோன்றிய சங்கமே மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். கூலவாணிகன் சாத்தன் வாழ்ந்து தமிழ் வளர்த்த அதே மதுரையில் இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது மதுரைத் தமிழ்ச் சங்கம். சிறந்த தமிழ்த்தொகை நூல் புதிதாகப் படைத்தளித்தவரும், தமிழே அமுதும் ஆருயிரும் எனப் போற்றியவருமாகிய பாண்டித்துரைத் தேவர் அவர்களும் விவேகானந்தரை மேனாட்டுக்கு உலகசமய சபைக்கு அனுப்பிவைத்து இந்திய நாட்டுக்கே பெருமையும் சுதந்திர உணர்வும் ஈந்தவரான அப்பெருமானுக்கு ஆதரவு காட்டிய

இராமநாதபுரம் மன்னராகிய பாசுகர சேதுபதியவர்களும் அடித்தளம் அமைத்துத் தந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மாண்பினை அறியாதார் யார் ? இத்துணைச் சிறப்புமிக்க மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பில்லாத தமிழ்ப்பேரறிஞர்கள் எவருமிலர்.

என் கெழுதகை நண்பரும் பட்டிமன்றப் பேச்சாளர்களில் சிறந்திருந்தவருமான பேராசிரியர் துரைராஜ் அவர்கள் தமிழ்க் கல்லூரி முதல்வராக இருந்தபோது நான் தமிழ்ச் சங்கத்திற்குப் பல தடவை வந்துள்ளேன். அவர் காலமான பிறகு, அங்கு வரவும் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பில்லாது போனது. மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிடும் செந்தமிழ் இதழ்களும் பிரசுரங்களும்தாம் என் தமிழ் ஆய்வுக்கு உரமூட்டியவை. ரா.ராகவையங்காரால் செந்தமிழ்ப் பிரசுரமாக 1935இல் வந்த இரண்டாம் பதிப்புநூல் தான் என்னைத் தமிழ்க் காதலனாக மாற்றியது. பின்னர் நான் தென்காசியில் வசித்த ஓராண்டில் ரசிகமணி டி.கே.சி.யின் பாதந்தொட்டுப் பணிந்து முத்தொள்ளாயிரம் படித்தது மூலமாகக் கவிதை என்றால் என்ன? செய்யுள் என்றால் என்ன? தொனி என்றால் என்ன? என்பதை – எனது இருபத்தைந்தாம் வயதில் – புரிந்து கொண்டேன். (பின்னர் வடமொழி பயின்று, அலங்கார சாத்திர நூல்கள் தொன்யாலோகம், ஔசித்ய விசாரசர்ச்சா போன்றவை பயின்றபின் திறனாய்வுத் துறையிலும் அறிமுகப்படுத்திக் கொண்டேன்). இவ்விதமாக முத்தொள்ளாயிர முத்துகளை இழந்தவை போக சிலவற்றையாவது மீட்டுத் தந்தது மதுரைத் தமிழ்ச்சங்க ஏடுதான்.

1938இல் சென்னைப் பல்கலைக்கழகம் சார்பில் வையாபுரிப் பிள்ளையவர்கள் புறத்திரட்டு ஏட்டுப்பிரதியை வெளியிட்டு அதிலிருந்த முத்தொள்ளாயிரப் பாடல்களையும் வெளியிட்டார். பின்னர் டி.கே.சி 1943இல் முத்தொள்ளாயிரப் பாடல்களைத் தம் விளக்க உரையுடன் வெளியிட்டார். கவிதையின் உயிர்த்துடிப்பான தொனி தத்துவத்தை விளக்க உதாரணமான பாடல்கள் மலிந்த முத்தொள் ளாயிரம் மதுரைத் தமிழ்ச்சங்கம் தந்த பரிசாகவே நான் மதிக்கிறேன். முத்தொள்ளாயிரத்தை நான் 1978இல் தெலுங்காக்கம் செய்து வெளியிட்டேன்.

நான் 1965இல் இராஜபாளையத்தில் தெலுங்கு வித்யாலயம் என்ற பெயரில் ஓர் அமைப்பினைத் தமிழகத் தெலுங்கு உறவுக்காகத் தோற்றுவித்து நடத்தி வந்தேன். அதன் வெள்ளி விழா 18–11–90, 19–11–90இல் சிறப்பாக நடைபெற்றது. அதில் சிறப்புமலர் வெளியிட்டோம். அம்மலரில் முதல் கட்டுரையாகத் "தமிழரும் ஆந்திரரும்" என்று மு.ராகவய்யங்கார் அவர்களால் மதுரைச் சங்கத்து 23ஆம் ஆண்டு திருவிழாவில் படிக்கப்பட்ட கட்டுரையை மறுபிரசுரம் செய்தோம். அக்கட்டுரை செந்தமிழ் 22ஆம் தொகுதியில் வந்தது. தமிழுக்கும் தெலுங்குக்கும் உள்ள பழங்கால உறவுகளை ஆய்ந்து கூறப்பட்ட அற்புதமான தகவல் களஞ்சியமாக அக்கட்டுரையுள்ளது. சென்னை கல்வி மந்திரி ஸ்ரீமான் சர். பரசுராம பாத்ரோ அவர்களின் தலைமையில் மு.ராகவையங்காரால் படிக்கப்பட்ட கட்டுரை செந்தமிழ்த் தொகுதி 22இல் வந்துள்ளது. இருபத்தொரு பக்கமுள்ள அக்கட்டுரை தமிழ் தெலுங்கு நாட்டுறவுக்கு ஆவணமாகத் திகழும் மதிப்புடையது. மதுரைத் தமிழ்ச்சங்கம் பல அரிய நூல்களையும் வெளியிட்டதை நாம் அறிவோம். சங்க இலக்கிய நூல்கள், ஐந்திணைஐம்பது, பழமொழி, நான்மணிக் கடிகை போன்றவை வெளியிடப்பட்டன. நாராயணய்யங்கார் 1922இல் பழமொழி மூலமும் உரையும் பதிப்பித்தார். மு.ராகவய்யங்கார், ரா.ராகவய்யங்கார், தமிழ்த்தாத்தா உவே.சாமிநாதய்யர் (சிராமலைக்கோவை பரிசோதித்து 1937இல் வெளியிட்டது. கலசைக்கோவை 1935இல் வெளியிட்டது) போன்றோர்; தமிழ்ச் சங்கத்தில் நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்தனர் இத்தகைய தமிழ் வளர்த்த தலைமைச் சான்றோர்களைக் கொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் செய்த தொண்டை வியந்து போற்றுகிறோம்.

நமது இந்திய இலக்கியமும் பண்பாடும் தொன்மைக்காலத்திலிருந்தே வைதிக நெறியையும், சமண, பவுத்த நெறிகளையும் சார்ந்தே உள்ளன. புறநானூற்றிலேயே வேத நான்மறைகளைப் பற்றியும் சமண, ஆசீவக, பவுத்தமதப் பிரிவுகளையும் சார்ந்த பாடல்களைக் காண்கிறோம். இந்தத் தொன்மையான

மதங்களின் ஒருமைப் பாட்டுணர்வினைச் சிலப்பதிகாரமே சான்றாக நின்று விளக்குகிறது. இதனையே மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட நூல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

செந்தமிழ் இதழ்கள் மூலம் சமணச் சான்றோர்கள் பலரது நூல்களும் வரலாறுகளும் உணரமுடிகிறது. சமணதத்துவத்தைச் சார்ந்த சில நல்லிலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளனர். இது சமண சமயத்தினருக்குப் பேருதவி செய்துள்ள தன்மையை விளக்குகிறது. உதாரணமாக இரு நூல்களைக் குறிப்பிடுகிறேன்.

அவிரோதியாழ்வார் இயற்றிய திருநூற்றந்தாதி நூலின் முதற்பதிப்பின் முன்னுரையில் ரா.ராக்வய்யங்கார் சமணதத்துவ நூல்களின் நுட்பங்களை வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1935இல் வந்தது. அந்நூலை நான் பயின்று மகிழ்ந்தேன். இது போன்ற மற்றொரு சமண நூல் உதீசிதேவர் இயற்றிய திருக்கலம்பகம். இந்நூலை மு.ராகவய்யங்கார் பரிசோதித்து வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1951இல் வெளிவந்தது. மூலமும் உரையுமுடைய பிரதியையே பரிசோதித்து வெளியிட்டார்.

மூலநூலாசிரியர் ஆரணி நெடுந்துறை ஆர்ப்பாகைக்கோன் என்று பாயிரத்தில் உள்ளது. இவர் சமண தத்துவத்தில் வல்லவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வரிய இலக்கியங்களை மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுத் தமிழிலக்கிய உலகுக்கு மகோபகாரம் செய்ததை நினைவு கூர வேண்டும்.

செழுமை மிக்க நிலமாயினும் பயிர்கள் மேலும் செழித்துப் பயன்தர வேற்றுப்புல மண்ணையும் சத்துப்பொருள்களையும் உரமாக இடுவது போல நமது தமிழ் மொழியும் மேலும் வளம் பெறப் பிறமொழி இலக்கியங்கள், தத்துவ நூல்கள், விஞ்ஞான நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பெறல் வேண்டும். இன்றைய விஞ்ஞானயுகத்திற்கேற்பத் தமிழிலேயே பல் துறைநூல்கள் வெளிவர வேண்டும். அதற்கு முதலில் மொழிபெயர்ப்புத்துறை வளர வேண்டும். ஏற்கெனவே பல்கலைக்கழகங்களும், சாகித்ய அகாடமி, நேஷனல் புக்டிரஸ்ட், தனியார் பதிப்பகங்களும் பல நல்ல நூல்களை மொழியாக்கம் செய்து உலக இலக்கியப் போக்கின் புதுவரவுகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

நம் நாட்டு மொழிகளில் இலக்கியமும் தத்துவமும் இணைந்தே வளம் பெற்றுள்ளன. மணிமேகலைக் காவியத்தை இலக்கியமாக மட்டுமன்றித் தத்துவ நூலாகவும் காண்கிறோம். சிவஞானபோதம் போன்ற தத்துவ நூல்களிலும் இலக்கிய நயம் காண்கிறோம். இராமாயண மகாபாரதங்களில் இலக்கிய நயம் எவ்வளவு உள்ளனவோ அவ்வளவு தத்துவ ஞான போதனையும் உள்ளன. இம்மரபு இக்காலத்தில் பல துறைவளர்ச்சி மூலம் மாறி வருகிறது. இலக்கியம் வேறு, பிரசாரநோக்க நூல்கள் வேறு என்றாகி விட்டது. பழம் பேரிலக்கியங்களைக் காப்பாற்றவும் புத்திலக்கியத்திற்கு உரமூட்டவும் மொழி பெயர்ப்புத்துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலம், வடமொழி, இந்தி மொழி களிலுள்ள பழம்பேரிலக்கியங்கள் தமிழாக்கம் பெற்றது போலத் திராவிட மொழிகளில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து கன்னட இலக்கியமும் பத்தாம் நூற்றாண்டிலிருந்து தெலுங்கிலக்கியமும் தந்துள்ளவற்றைத் தமிழாக்கம் செய்து தர வேண்டும். தமிழ்ப் பேரிலக்கியங்களில் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சில பேரிலக்கியங்களே தெலுங்கிற்குச் சென்றுள்ளன. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் மட்டுமன்றிச் சங்க நூல்கள் பலவும் கூடத் தெலுங்கு, கன்னட மொழிகட்குச் செல்லவில்லை. மொழிப் பற்றே மொழி வளர்ச்சிக்கு இடையூறாகி விடாமல் பிற மொழிகளைக் கற்பதிலும் பிறமொழிச் செல்வங்களைத் தமிழாக்குவதிலும் தமிழ்ச் செல்வங்களைப் பிறமொழிகளில் பரப்புவதிலும் அறிஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்ப வேண்டும். மதுரைத் தமிழ்ச்சங்கம், தமிழ் இலக்கியப் பெருமையைச் சாதாரண மக்கட்கும் உணர்த்த வேண்டிய பொறுப்பினை உணர்ந்து செந்தமிழ் இதழைப் புது மெருகுடன் வெளியிட வேண்டும்.

செந்தமிழ் இதழில் பிறமொழிகளிலுள்ள தொன்மையான இலக்கியங்களைப் பற்றிய அறிமுகக்

கட்டுரைகள் அதிக அளவில் வெளியிட வேண்டும். தமிழில் புதிதாகப் படைக்கப்பட்ட காவியங்கள் குறைவே. பாஞ்சாலங்குறிச்சி வீரசரிதத்தை ஜெகவீர பாண்டியனார் காவியமாக்கினார். அரங்க ஸ்ரீனிவாசன் காந்தி காவியம் படைத்தார். சிலம்புமேகலைக் காவியத் தொடர்ச்சியாக 'மாதவமேகலை' போன்ற சில காவியங்கள் வந்தன. எனினும் பாரதிக்குப் பிறகு சிறந்த காவியப்படைப்பு பிறமொழியாளரும் பாராட்டும் அளவிற்கு எழவில்லை. ஏனெனில் தமிழில் விமரிசனத்துறை வடமொழி போல உருவாகவில்லை. வடமொழி அலங்கார நூல்களின் தமிழாக்கங்களையேயன்றித் தமிழ் மரபு சார்ந்த தொல்காப்பிய உவம இயலையும் இக்காலப் புதிய உத்திகளையும் புரிந்து அணிநூல்கள் படைக்க வேண்டும். பிறமொழிக் காவிய உத்திகள் தமிழ் மரபுக்கேற்ப அமைத்துத் தர வேண்டும். நமது தொன்மையான செய்யுள் மரபைக் காப்பாற்றவேண்டும். மரபுக் கவிதைகளில் காவியங்கள் படைத்தல் தொடர வேண்டும். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் ஊக்கம் தர வேண்டும்.

நூற்றாண்டு விழாக் காணும் மதுரைத் தமிழ்ச் சங்கம் "இன்னுமொரு நூற்றாண்டு இரும்" எனச் சான்றோர் வாழ்த்தியதுபோல, இன்னும் ஒரு நூற்றாண்டுக் காலமும் அதற்கு மேலும் தமிழ்ப் பணி புரிந்து வளர்தமிழுக்கு மெருகூட்டும் நூல்களை வெளியிட்டுச் சிறப்புறவேண்டும் என்று வாழ்த்துவோமாக. செந்தமிழ் ஈந்த நந்தா விளக்கு என்றும் சுடர் வீசித் திகழுமாக.

பாண்டித்துரைத்தேவரின் சங்கீத விநிகை

6-ஆம் வருடம் நவம்பர் மாதம் பாலவநத்தம் ஜமீன்தாராகிய பொ. பாண்டித்துரைத் தேவர் கும்பகோணத்திலிருந்த மௌன சுவாமிகளைத் தரிசிப்பதற்கு வந்தார். அக்காலத்தில் அவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்துப் பல கனவான்கள் கூடிய மகாசபையில் அவரைப் பேசச் செய்தேன். இரண்டு மூன்று நாட்கள் அவர் கும்பகோணத்தில் தங்கியிருந்தார். என் வீட்டுக்கு ஒரு முறை வந்தார். அப்போது பல அன்பர்களையும் அழைத்து உபசரித்து அவருடன் வந்திருந்த சங்கீத வித்துவான் சீனுவையங்கார், திருக்கோடி கிருஷ்ணையர் முதலியவர்களைக் கொண்டு என் வீட்டில் ஒரு சங்கீத விநிகை நடைபெறச் செய்தேன். என்னிடமிருந்த ஏட்டுச் சுவடிகளையெல்லாம் பாண்டித்துரைத் தேவர் பார்த்துப் பெருவியப்புற்றார். மணிமேகலை அப்போது அச்சாகி வருவது தெரிந்து அதற்குப் பொருளுதவி செய்வதாக வாக்களித்தார். — உ.வே.சா

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் உதயமாயிற்று

(மு. ஆபிரகாம் பண்டிதர் எழுதிய கருணாமிர்த சாகரம் என்னும் இசைத்தமிழ் நூலில் காணப்படும் முத்தமிழ்ச் சங்க வரலாறும் நான்காம் தமிழ்ச்சங்க வரலாறும்)

ஆயிரம் ஆயிரமான வருடங்களுக்கு மேற்பட்ட சங்கதிகளை பூர்வசரித்திரங்களைக் கொண்டே ஒருவாறு சொல்லலாமேயொழிய நிச்சயமாய்ச் சொல்லுவது கூடியகாரியமில்லை. முச்சங்கமும் அவைகளிருந்த வருடமும் எவ்வித ஆட்சேபணை யுமின்றி நாம் ஒப்புக் கொள்ளக்கூடிய சரித்திரமுடைய தாகத் தெரிகிறது. அவ்வருடத்தைக் கொண்டு, மற்ற நடவடிக்கைகளையும் நாம் ஒத்துப் பார்த்தால் இந்தியப் பூர்வீக சரித்திரங்களின் உண்மை விளங்கும். தென்மதுரையும் அதைச் சேர்ந்த 49 நாடுகளும் தண்ணீருக்குள் மூழ்கிப் போனதால் வேறு எவ்விதமான துப்புந்துலங்கவில்லை. அப்படியில்லா திருந்தால் நமக்கு வேண்டிய அநேக ஆதாரங்கள் அங்கே கிடைத்திருக்கும்.

அழிந்துபோன இலமூரியாவைப் பற்றியும் அதன் சுற்றிடங்களிலிருக்கும் இயற்கை அமைப்பின் சில குறிப்புக்களைப் பற்றியும் தமிழ்மொழியின் பூர்வத்தைப் பற்றியும் தமிழ் மொழி பல மொழிகளில் கலந்திருப்பதைப் பற்றியும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்பவை உண்மையென்று புலபடுகின்றன. இன்னும் சிலநாள் செல்லச்செல்ல இதிலும் மேலான சில ஆதாரங்கள் கிடைக்கலாம். ஆதிபூர்வமாயுள்ள இலமூரியாவில் தமிழ்ப்பாஷையே பேசப்பட்டு வந்த தென்றும் தமிழ்மொழியே மற்றெல்லா மொழிகளுக்கும் முந்தினதென்றும் சாஸ்திரிகள் கூறும் அபிப்பிராயம் சரியென்று நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்துமகாசமுத்திரத்தின் தென் பக்கத்திலுள்ள கெர்கியூலன் தீவுவரை விசாலித்திருந்த பூமியே ஒரு காலத்தில் அதாவது முதல் ஊழிக்குமுன் தமிழ்மக்கள் குடியிருந்த நாடாகவும் 4400 வருடங்களாக முதற்சங்கமிருந்த பூமியாகவும் தோன்றுகிறது. இதோடு இந்நாட்டின் தென்பாரிசத்தில் பனிமலைத் தொடர்களால் சூழப்பட்ட குமரியென்ற மலைச்சிகர மிருந்ததாகவும் அதிலிருந்து பஃறுளியாறு வடிவலம்ப நின்ற பாண்டியனால் வெட்டப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது. மேற்றிசை மலைகளிலிருந்து அரபிக்கடலில் விழும் பெரிய ஆற்றை கிழக்குத்திசையில் வரும்படி வைகை வாய்க்கால் வெட்டி விட்டது போல இதுவுமிருக்கலாமென்று சொல்லவேண்டியதாகி யிருக்கிறது. இது ஒரு பெரிய ஜீவநதியாயிருக்க வேண்டும். இந்நதியும் குமரி ஆறும் இமயமலை யொத்த குமரிமலைகளின் தொடர்ச்சியினின்று உற்பத்தியாயிருக்கலாமென்று எண்ண இடமிருக் கிறது. இம்மலையும் நதியும் அழிந்த காலத்தில் அந்நாட்டிற்கு வட எல்லையாயிருந்த குமரியாறும் அழிந்துபோயிற்று. இதனுடைய பூர்வீகத்தை நாம் அறிந்து கொள்வதற்கு அதிக ஏதுக்களில்லா திருந்தாலும் அழிந்துபோன முதற் சங்கத்தின் கடைசி காலத்திலிருந்து தப்பி கபாடபுரத்துக்கு வந்த முடத்திருமாறன் முதற்சங்கத்தின் பாண்டியனும் அகத்தியர் தொல்காப்பியர் போன்ற முதற் சங்கப் புலவர்களும் ஒருவாறு முதற் சங்கத்தின் பெருமையை இரண்டாஞ் சங்கத்துக்குப் புலப்படுத்தியிருப்பார்

களென்று தோன்றுகிறது. மற்றபடி 4440 வருடங்கள் கடந்த தமிழ்ச் சங்கத்தை 4440 வித்வ சிரோமணிகள் தலைமை வகித்தார்களென்று திட்டமான கணக்கு ஏற்பட்டிருக்காது. இதற்குச் சுமார் 3700 வருடங்களுக்குப் பின்னுண்டான மற்றொரு அழிவினால் முந்தின ஊழியின் அழிவு நுட்பமான சில சரித்திரங்களல்லாத அட்டவணையாக மாத்திரம் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அப்படியிருந்தாலும் வித்வபரம்பரையாக இது வழங்கிவந்ததினால் இது உண்மைத் தவறுதல் என்று நினைக்க இடமில்லை. மூன்றாவது சங்கம் அழிந்து இற்றைக்கு சுமார் 1800 வருடங்கள் ஆயிற்றென்பது யாவரும் அறிந்த செய்தி. அப்படியிருந்தாலும் ஒரு தமிழ்ச் சங்கமிருந்ததாகச் சொல்லப்படவில்லை. கிறிஸ்து பிறந்த இரண்டாம் நூற்றாண்டில் மூன்றாம் சங்கம் கலைந்துபோனபின் சுமார் 1000 வருடங்கள் அதாவது கி.பி. 1200 வருடங்கள் வரைக்கும் பாண்டிய ராஜகுலத்தவர்களாலே அரசாட்சி செய்யப்பட்டு வந்தது. அதன் பின் சுமார் 50 வருடங்களாக ஆதிகல்தான் என்னும் மகம்மதிய அரசனும் அதன்பின் விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர் போன்ற சில நாயக்க வம்சத்தவர்களும் அதன்பின் முராரி ராயர், அப்பாஜி ராயர், சந்தா சாகிபு, கான் சாகிபு போன்ற அநேகம் சில்லறை ராஜாக்களும் ஒரு வருடம் இரண்டு வருஷம் போன்ற அற்ப காலங்கள் ஒருவர்பின் ஒருவராகக் கலகஞ் செய்துகொண்டு அரசாட்சி செய்து வந்தார்கள். 1801 ஆம் வருடம் மதுரையும் அதைச் சேர்ந்த நாடுகளும் மாட்சிமை தங்கிய ஆங்கிலேயர் ஆளுகையில் வருகிற வரையும் நாட்டில் சமாதானமில்லாதிருந்தது. தன் உயிரையும் குடும்பத்தார் உயிர்களையும் தனது பொருள்களையும் காப்பாற்றச் சக்தியில்லாது தவித்துக் கொண்டிருக்குங் காலத்தில் ஒரு தமிழ்ச்சங்கம் வைத்து நடத்துவது கூடிய காரியமாகுமா? அதோடு அன்னிய மொழிகளில் எழுதிய பல நூல்களும் வார்த்தைகளும் இனிய தீஞ்சொற்றமிழ் மொழிக் கலங்கடித்தது.

மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி அவர்கள் காலத்தில் மதுரையில் நாலாவது தமிழ்ச்சங்கம் ஆரம்பமாயிற்று

எவ்வுயிரையும் தன்னுயிர்போல் நினைத்து அரசாட்சி செய்துவரும் ஆங்கிலேய துரைத்தனத்தார் உள் நாட்டுக் கலகங்களையடக்கி வெளிநாட்டார் படையெடுப்பைத் தடுத்து துஷ்ட ராஜாக்களை நீக்கி குடிகள் சுகமுற்று வாழ்வதற்கு அனுகூலமான தந்தி, தபால், பெரும் பாதைகள், இருப்புப்பாதைகள், நீர் பாசன வசதிகள், வைத்தியசாலைகள், கல்விச்சாலைகள், கலாசாலைகள், நியாயஸ்தலங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி இந்தியாவை, சமாதான நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

தமிழ்மொழியின் பூர்வீகத்தையும் அதன் சொற்சுவை பொருட்சுவையையு மறிந்து பலர் பழைய தமிழ் நூல்களைத் தேடவும் அதை ஆராய்ச்சி செய்யவும் அச்சிடவும் ஒரு சபையைக் கூட்டவும் ஆரம்பித்தார்கள்.

ஆங்கிலேயர் அரசாட்சியில் இந்தியாவில் முதல் சக்கிராதிபத்தியம் பெற்ற விக்டோரியா மகாராணி அவர்களின் அரசாட்சியின் 64வது வருடமாகிய 1901-வது வருடத்தில் நாலாவது சங்கம் ஆரம்பமாயிற்று. கலியுகம் 3200 இல் மூன்றாவது சங்கம் கலைந்து போக அதற்குச் சுமார் 1800 வருடங்களுக்குப்பின் கலியுகம் 5002இல் மதுரை நாலாவது தமிழ்ச்சங்கங்கூடி 13 வருடங்களாக நடந்து வருகிறதையும் அதில் 251க்கு மேற்பட்ட பல வித்வசிரோமணிகள் சேர்ந்திருப்பதையும் தமிழைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருவதையும் நாம் காண்கையில், இதற்கு முன் நடந்த மூன்று சங்கங்களையும் அதன் பெருமையையும் உண்மைத் தவறுதலென்று யார் மறுக்கக்கூடும். பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் பெருமுயற்சியால் இந்நாலாம் சங்கம் ஆரம்பித்தது. இந்நாலாஞ் சங்கத்திற்கு பாலவனத்தம் தமிழ்ச்சங்க மென்றாவது பாண்டித்துரை தமிழ்ச்சங்க மென்றாவது பெயர் வைக்கலாமே. அப்படியில்லாமல் மதுரைத் தமிழ்ச்சங்கம் என்று வைத்தது, இதன் முன் மதுரையில் நடந்த தமிழ்ச்சங்கத்தின் பெயரையே முதற்காரணமாகக் கொண்டு வைக்கப்பட்டதென்று தோன்றுகிறது. இதன் முன் பிரபலமான மூன்று சங்கங்களிருந்ததினால் இதற்கு நாலாம் சங்கமென்று பெயர் வந்தது.

இந்நாலாம் சங்கத்தைப் பற்றி சில முக்கிய குறிப்புகள் அதாவது, ஆரம்பித்தகாலம், கூட்டப்பட்ட

சங்கத்தில் தலைமை வகித்தவர்கள், சங்கத்தை ஆதரித்து வரும் ராஜாக்களும் கனவான்களும், சங்கத்தை நடத்தி வருவதில் பிரயாசை எடுத்துக் கொள்ளுங் கனவான்களும், சங்கத்தில் அங்கத்தின ராக இருக்கும் வித்வான்களும் ஆகிய இவர்களைப் பற்றிச் சுருக்கமாய் பார்ப்பது முந்திய மூன்று சங்கங்களின் உண்மையை அறியாதவர்களுக்கு அவற்றின் உண்மையை வெளிப்படுத்துமென்று எண்ணு கிறேன்.

நாலாவது மதுரைத் தமிழ்ச்சங்கம் 1901ம் வருடம் மே மாதம் 24ந் தேதி ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 13 வருடமாக சங்கம் கூடிற்று.

1. ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்கள்

2. ஸ்ரீமான் எஸ். சாமினாதவிஜயத்தேவர் அவர்கள்

3. பி.எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

4. ராஜாராஜேஸ்வர முத்துராமலிங்கசேதுபதி அவர்கள்

5. ஸ்ரீமான் ராவ்பகதூர் எம். ஆறுமுகம் பிள்ளை அவர்கள்

6. ஸ்ரீமான் ஆனரபிள் கே. இராமஐயங்கார் அவர்கள்

7. ஸ்ரீமான் ஆனரபிள் பி. இராமநாதன் அவர்கள்

8. மகா-ள-ள-ஸ்ரீ மகாமகோபாத்தியாயர் உ.வே. சாமிநாதையர் அவர்கள்

ஆகிய இவர்களால் தலைமை வகித்து நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

அடியிற்கண்ட கனவான்களும் மற்றும் கனவான்களும் சங்கத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்து ஆதரித்து வருகிறார்கள்.

1. பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் சங்க ஸ்தாபகர்

2. மாட்சிமை தங்கிய பாசுகரசேதுபதியவர்கள்

3. மாட்சிமை தங்கிய ராஜாராஜேஸ்வர முத்துராம லிங்க சேதுபதியவர்கள்

4. மாட்சிமை தங்கிய புதுக்கோட்டை மகாராஜா அவர்கள்

5. மாட்சிமை தங்கிய திருவாங்கூர் மகாராஜா அவர்கள்

6. மாட்சிமை தங்கிய பரோடா மகாராஜா அவர்கள்

7. மாட்சிமை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள்

8. மாட்சிமை தங்கிய தர்பங்கா மகாராஜா அவர்கள்

9. மாட்சிமை தங்கிய கொச்சி மகாராஜா அவர்கள்

10. மாட்சிமை தங்கிய எட்டையபுரம் மகாராஜா அவர்கள்

11. ஆண்டிப்பட்டி ஜமீன்தார் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் அவர்கள்

12. ஸ்ரீமான் வி.டி.எஸ். சேவுக பாண்டியத்தேவர் அவர்கள் ஜமீன்தார் சேத்தூர்

13. ஸ்ரீமான் ஏ.எல்.ஏ.ஆர். அருணாசலம் செட்டியார் அவர்கள்

14. ஸ்ரீமான் இராமச்சந்திர தேவர் அவர்கள்

15. ஸ்ரீமான் சுப்பிரமணிய தீர்த்தபதி அவர்கள் ஜமீன்தார் சிங்கம்பட்டி

16. ஸ்ரீமான் ராஜா எம். தினகரபகதூர் அவர்கள்

17. ஸ்ரீமான் ராம.மெ.சி.த வைரவன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

18. ஸ்ரீமான் மெ.லெ.மெ. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

19. மெ.அரு.நா. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

20. ஸ்ரீமான் ராம.அரு.அரு.ராம. அருணாசலஞ் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

21. ஸ்ரீமான் அரு.அரு. சோம சுந்தரஞ் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

22. ஸ்ரீமான் மெ.அரு.அரு. அருணாசலச் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

23. ஸ்ரீமான் முத்து.கரு.வெ. அழகப்ப செட்டியார் அவர்கள், தேவகோட்டை

24. ஸ்ரீமான் வீர.லெ.ராம.லெ. பெத்தப்பெருமாள் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

இன்னும் பல கனவான்கள் உதவி செய்திருக்கிறார்கள்.

இது தவிர அடியிற்கண்ட கனவான்கள் சங்கத்தின் விருத்திக்கான விஷயங்களைக் கவனித்து சங்கத்தை நடத்தி வருகிறார்கள்.

1. மாட்சிமை தங்கிய ஸ்ரீமான் ராஜராஜேஸ்வர முத்துராமலிங்கசேதுபதி அவர்கள் அக்கிராசனாதிபதி

2. எஸ்.ஆர்.எம்.எம்.டிடி. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் உப அக்கிராசனாதிபதி

3. மகா-எ-எ-ஸ்ரீ மகாமகோபாத்தியாயர் உ.வே.சாமி நாதய்யர் அவர்கள்

4. மகா-எ-எ-ஸ்ரீ வி. கோபாலசுவாமி ரகுநாத ராஜாளியார் அவர்கள்

5. மகா-எ-எ-ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி துரைராஜா அவர்கள் பி.ஏ.,பி.எல்.,

6. மகா-எ-எ-ஸ்ரீ நல்லசாமிபிள்ளை அவர்கள் பி.ஏ.,பி.எல்.,

7. மகா-எ-எ-ஸ்ரீ சிடி. ஏ.வி. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் பி.ஏ.,பி.எல்.,

8. மகா-எ-எ-ஸ்ரீ டி.ஏ. இராமலிங்கம் செட்டியார வர்கள் பி.ஏ.,பி.எல்.,

9. மகா-எ-எ-ஸ்ரீ ஆர். இராகவையங்கார் அவர்கள்

10. மகா-எ-எ-ஸ்ரீ ராவ் சாகேப் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்

11. மகா-எ-எ-ஸ்ரீ வி.எஸ். இராமசுவாமி சாஸ்திரி கள் அவர்கள்

12. மகா-எ-எ-ஸ்ரீ கான்பகதூர் ஹெச். அப்துல் கபான் சாகிப் அவர்கள்

13. மகா-எ-எ-ஸ்ரீ எஸ். கோபாலசாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ.,

14. மகா-எ-எ-ஸ்ரீ டி.என். சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள் பி.ஏ.,பி.எல்.,

காரியதரிசி அடியில் வரும் கனவான்கள் இச்சங்கத்தின் அங்கத்தினராக இருந்து அநேக அரிய விஷயங்களை வசன நடையாகவும் செய்யுள் நடையாகவும் புதிதாக எழுதி சங்கத்தில் அரங்கேற்றியும் பழைய நூல்களை வெளிப்படுத்தியும் பற்பல ஆராய்ச்சிகள் செய்தும் வருகிறார்கள்.

1. மகா-எ-எ-ஸ்ரீ உ.வே. சாமிநாதையர் அவர்கள், மஹாமஹோபாத்தியாயர், பிரசிடென்சி காலேஜ், சென்னை.

2. மகா-எ-எ-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள், சேதுசமஸ்தான வித்வான் இராமநாதபுரம்.

3. மகா-எ-எ-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள், செந்தமிழ்ப் பத்திராதிபர் மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

4. மகா-எ-எ-ஸ்ரீ ஸ்ரீஅரங்கசாமி ஐயங்காரவர்கள், தலைமை உபாத்தியாயர், தமிழ்ச்சங்கம் கலாசாலை, மதுரை.

5. மகா-எ-எ-ஸ்ரீ சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்வான்

6. மகா-எ-எ-ஸ்ரீ அ. சண்முகம்பிள்ளை அவர்கள், தமிழ் வித்வான், சோழவந்தான்

7. மகா-எ-எ-ஸ்ரீ அம்பலவாண நாவலரவர்கள், தமிழ் வித்வான், திருநெல்வேலி

8. மகா-எ-எ-ஸ்ரீ பூவை அஷ்டாவதானம் கலியாண சுந்தர முதலியாரவர்கள், தமிழ்வித்வான்,சென்னை.

9. மகா-எ-எ-ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.

10. மகா-எ-எ-ஸ்ரீ தி.ப. சிவராமபிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், இந்து காலேஜ், திருநெல்வேலி.

11. மகா-எ-எ-ஸ்ரீ ஆ. முத்துத்தம்பி பிள்ளையவர்கள், தமிழ் வித்வான், நாவலர் கோட்டம், யாழ்ப்பாணம்.

12. மகா-எ-எ-ஸ்ரீ அ. குமாரசாமி பிள்ளையவர்கள், தமிழ் வித்வான், சுன்னாகம், "யாழ்ப்பாணம்.

13. மகா-௱-௱-ஸ்ரீ கவிராஜ நெல்லையப்ப பிள்ளை யவர்கள், தமிழ் வித்வான், திருநெல்வேலி.

14. மகா-௱-௱-ஸ்ரீ ரெ. அப்புவையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்

15. மகா-௱-௱-ஸ்ரீ ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள், தமிழ் வித்வான், ஸ்ரீரங்கம்பாடி

16. மகா-௱-௱-ஸ்ரீ பி.எஸ். தெய்வசிகாமணி ஐயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், ராஜா ஹைஸ்கூல், சிவகங்கை.

17. மகா-௱-௱-ஸ்ரீ மு.ரா.கந்தசாமிகவிராயரவர்கள், பத்திராதிபதி, வித்தியாபாநு, மதுரை.

18. மகா-௱-௱-ஸ்ரீ மு.ரா.அருணாசலக்கவிராயரவர்கள், தமிழ் வித்வான், விவேகபாநு ஆபீஸ், மதுரை.

19. மகா-௱-௱-ஸ்ரீ காஞ்சி நாகலிங்கமுதலியாரவர்கள், தமிழ்வித்வான், சென்னை.

20. மகா-௱-௱-ஸ்ரீ எம்.எஸ். சுப்பிரமணியக் கவிராயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், காலேஜ், மைசூர்.

21. மகா-௱-௱-ஸ்ரீ கோ. ஸ்ரீநிவாஸாசாரியவர்கள், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைவர், யாழ்ப்பாணம்.

22. மகா-௱-௱-ஸ்ரீ த. கைலாசம் பிள்ளையவர்கள், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைவர், யாழ்ப்பாணம்.

23. மகா-௱-௱-ஸ்ரீ வெ. சதாசிவசெட்டியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், எஸ்.பி.ஜி. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

24. மகா-௱-௱-ஸ்ரீ வி. குப்புசாமி ராஜு அவர்கள், வித்வான் கோவிந்தன் பிரதர்ஸ், தஞ்சாவூர்.

25. மகா-௱-௱-ஸ்ரீ நா. சுவாமி வேதாசலம், சென்னை.

26. மகா-௱-௱-ஸ்ரீ கா. கோபாலசாரியாரவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், கிரிஸ்டியன் காலேஜ், சென்னை.

27. மகா-௱-௱-ஸ்ரீ தெ.ச. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், திருஞானசம்பந்த மடாலய சபை, தூத்துக்குடி.

28. மகா-௱-௱-ஸ்ரீ சுவாமி உருத்திர கோடீசுரர், தர்மலாட்ஜ், புத்தன் சந்தை, திருவனந்தபுரம்.

29. மகா-௱-௱-ஸ்ரீ ஏ. ஜி. பிச்சைமுத்துப்பிள்ளை அவர்கள், பி.ஏ.,எல்.டி., புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளி, தஞ்சை.

30. மகா-௱-௱-ஸ்ரீ சி. அரங்கசாமி நாயக்கரவர்கள், ஜார்ஜ் டவுன், சென்னை.

31. மகா-௱-௱-ஸ்ரீ வி. கோபாலசாமிரகுநாத ராஜாளியாரவர்கள், ஹரித்வாரமங்கலம், தஞ்சாவூர் ஜில்லா.

32. மகா-௱-௱-ஸ்ரீ மு. சாம்பசிவநாயனாரவர்கள், தமிழ் வித்வான், சாலிமங்கலம், தஞ்சாவூர்.

33. மகா-௱-௱-ஸ்ரீ ஜி. சதாசிவநாயனாரவர்கள், நீலலோசனி பத்திராதிபர், நாகப்பட்டணம்.

34. மகா-௱-௱-ஸ்ரீ நல்லகுற்றாலம் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர். சேதுபதி உயர்நிலைப்பள்ளி, மதுரை.

35. மகா-௱-௱-ஸ்ரீ சி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், கோயம்புத்தூர்.

36. மகா-௱-௱-ஸ்ரீ ரா.ம. பழனிவேல் பிள்ளையவர்கள், அயர்ன் மெர்சண்ட், கீழவாசல், தஞ்சாவூர்.

37. மகா-௱-௱-ஸ்ரீ எம்.வி. இராமாநுஜாசாரியவர்கள், தமிழ்ப் பண்டிதர், காலேஜ், கும்பகோணம்.

38. மகா-௱-௱-ஸ்ரீ எம். பழனிசாமிக் கவுண்டரவர்கள், குமரலிங்கம், பழனித்தாலுகா.

39. மகா-௱-௱-ஸ்ரீ செ.மு. சையத்மகமத் ஆலிம் புலவரவர்கள், கீழக்கரை.

40. மகா-௱-௱-ஸ்ரீ எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் பி.ஏ.,எஃப்.எம்.சி. புதுக்கோட்டை.

41. மகா-௱-௱-ஸ்ரீ ஐ. சுப்பிரமணிய ஐயரவர்கள் பி.ஏ., எடிட்டர், சுதேசமித்ரன், சென்னை.

42. மகா-௱-௱-ஸ்ரீ டி. ராமகிருஷ்ணபிள்ளையவர்கள் பி.ஏ., ஹைகோர்ட், சென்னை.

43. மகா-௱-௱-ஸ்ரீ கே. சுந்தரராமையரவர்கள் எம்.ஏ., லெக்சரர், கும்பகோணம்.

44. மகா-௱-௱-ஸ்ரீ ஜெ. எம். நல்லசாமி பிள்ளை--யவர்கள், பி.ஏ.,பி.எல்., கமிட்டி, தமிழ்ச்சங்கம், மதுரை.

45. மகா-ள-ள-ஸ்ரீ கே.ஜி. சேஷையரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைஹோர்ட்டு வக்கீல், திருவனந்தபுரம்.

46. மகா-ள-ள-ஸ்ரீ பி.எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், பி.ஏ., ரெவின்யூ போர்டு ஆபிசர், சென்னை.

47. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.வி. கன்னபிரான் பிள்ளையவர்கள், பி.ஏ., ஸ்பெஷல் டெபுடி கலெக்டர், திருச்சி

48. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.பி. பகடால எஸ்.பி. நரசிம்மலுநாயுடுகாரு அவர்கள், எடிட்டர், கிரெசெண்ட், கோயம்புத்தூர்.

49. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சாமிநாதையரவர்கள், சன்னதிதெரு, இராமனாதபுரம்.

50. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். பால்வண்ண முதலியாரவர்கள், செகரட்டரி, எஸ்.வி. சப்லியா, திருநெல்வேலி.

51. மகா-ள-ள-ஸ்ரீ எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், பி.ஏ.,பிரிட்ஜ், திருநெல்வேலி.

52. மகா-ள-ள-ஸ்ரீ டி.சி. ஸ்ரீநிவாசையங்காரவர்கள், பி.ஏ.,பி.எல்., செகரட்டரி, தமிழ்ச்சங்கம்.

53. மகா-ள-ள-ஸ்ரீ ஐ. சாமினாத முதலியாரவர்கள், பிரைமரி ஸ்கூல் சூப்பர்வைசர், தஞ்சாவூர்.

54. மகா-ள-ள-ஸ்ரீ வி.பி. சுப்பிரமணிய முதலியாரவர்கள், ஜி.பி.வி.சி. டெபுடி சூப்பிரடெண்டண்ட், சிவில் வெட்டிரினரி, சென்னை.

55. மகா-ள-ள-ஸ்ரீ வி. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள், பி.ஏ., இன்ஸ்பெக்டர், ரங்கூன்.

56. மகா-ள-ள-ஸ்ரீ சித்-கைலாசம் பிள்ளையவர்கள், செகரட்டரியேட், கொழும்பு.

57. மகா-ள-ள-ஸ்ரீ கற்குளம் - குப்புசாமி முதலியாரவர்கள், பி.ஏ., அரசு செகரட்டரண்ட், சென்னை.

58. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், எம்.ஏ.,எம்.ஆர்.ஏ.எஸ்., பெங்களுர் நகரம்.

59. மகா-ள-ள-ஸ்ரீ டி. கனகசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ, 315, மிண்ட் தெரு, சென்னை.

60. மகா-ள-ள-ஸ்ரீ பி. வெங்கிடசாமி முதலியாரவர்கள், ஒசூர் செரிஸ்டடார், திருநெல்வேலி.

61. மகா-ள-ள-ஸ்ரீ வி.ஜெ. தம்பிப்பிள்ளையவர்கள், எம்.ஆர்.ஏ.எஸ்.,வெள்ளவேட்டி, கொழும்பு.

62. மகா-ள-ள-ஸ்ரீ டி.ஏ. இராமலிங்க செட்டியாரவர்கள், பி.ஏ.,பி.எல்., கொழும்பு.

63. மகா-ள-ள-ஸ்ரீ என்.வி. சுந்தரராஜ ஐயங்காரவர்கள், பி.ஏ., கிரேடு பிளாடெர், இராம்நாடு.

64. மகா-ள-ள-ஸ்ரீ கே. தேவநாதாசாரியவர்கள், தமிழ் பண்டிட், மகாராஜா காலேஜ், மைசூர்.

65. மகா-ள-ள-ஸ்ரீ டி. இலட்சுமணபிள்ளையவர்கள், பி.ஏ., ஹோசூர் ஆப் பைஸ், திருவனந்தபுரம்.

66. மகா-ள-ள-ஸ்ரீ கே.வி. சுப்பையா அவர்கள், ஹெட்மாஸ்டர், டி,ஹெச்.ஸ்கூல், சென்னை.

67. மகா-ள-ள-ஸ்ரீ எம்.ஆர். ஸ்ரீநிவாஸயைங்கார் அவர்கள், தமிழ் வித்துவான், புதுக்கோட்டை.

68. மகா-ள-ள-ஸ்ரீ எம்.கே.வி. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள், ஹக்தூர், தூத்துக்குடி.

69. மகா-ள-ள-ஸ்ரீ எம். ஜுலியன் வின்சன் எஸ்க். புரொபஸர் அல் எகோல் டி லாங்குயிஸ் ஓரியண்டல்ஸ் 58 ரூடெல் யூனிவர்சிட்டி, பாரிஸ்.

70. மகா-ள-ள-ஸ்ரீ எம்.என். சேஷையரவர்கள், ஆசிரியர், சேதுபதி உயர்நிலைப் பள்ளி, மதுரை.

71. மகா-ள-ள-ஸ்ரீ பெருகவாழ்ந்தான் அரங்காசாரியரவர்கள், மகாமகோபாத்தியாயர், கும்பகோணம்.

72. மகா-ள-ள-ஸ்ரீ தி.ஈ. ஸ்ரீநிவாசாச்சாரியவர்கள், ஸமஸ்கிருத பண்டிதர், காலேஜ், கும்பகோணம்.

73. மகா-ள-ள-ஸ்ரீ வி. ஸ்ரீநிவாசாச்சாரியாரவர்கள் ஸமஸ்கிருத வித்வான், இராமநாதபுரம்.

74. மகா-ள-ள-ஸ்ரீ வீராசாமி ஐயங்காரவர்கள், ஸமஸ்கிருத வியாகரண வித்துவான், எட்டையாபுரம்.

75. மகா-ள-ள-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள், மகாமகோபாத்தியாயர், ஸமஸ்கிருத பண்டிதர் சென்னை.

76. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். கிருஷ்ணமாசாரியரவர்கள் எம்.ஏ., ஸமஸ்கிருத பாடசாலை இன்ஸ்பெக்டர், சென்னை.

77. மகா-ள-ள-ஸ்ரீ எல்.கே. துளசிராம் அவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

78. மகா-ள-ள-ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி துரைராஜா அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட்டு வக்கீல், மதுரை.

79. மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரலிங்கசாமி காமயநாயக் கரவர்கள், மதுரை.

80. மகா-ள-ள-ஸ்ரீ கான்பகதூர் ஹெச். அப்துல் சுபஹான் சாகேப் அவர்கள், ரிடயர்டு அஸிஸ்டெண்டு போலீஸ் சூபரிண்டெண்டெண்ட், மதுரை.

81. மகா-ள-ள-ஸ்ரீ கே. அண்ணாமலைப்பிள்ளை, தமிழ்ப்பண்டிதர் அம்மனூர், திருத்துறைப்பூண்டி.

82. மகா-ள-ள-ஸ்ரீ கா.ப. செய்குதம்பிப் பாவலரவர் கள், சந்தித்தெரு, கோட்டாறு.

83. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். காளியண்ணக் கவுண்டரவர்கள், சேர்வாம்பட்டி ஜமீன்தார், திருச்செங்கோடு.

84. மகா-ள-ள-ஸ்ரீ எம். கதிரேசசெட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி, இராமநாதபுரம்.

85. மகா-ள-ள-ஸ்ரீ என். சோமசுந்தரம் பிள்ளையவர் கள், போலீஸ் எஸ்.ஹெச்.ஓ. திருமக்கோட்டை, தஞ்சை.

86. மகா-ள-ள-ஸ்ரீ ஜெ.வி. சுப்பிரமணிய ஐயரவர்கள், மானேஜர், பல்லாரி.

87. மகா-ள-ள-ஸ்ரீ தி.அ. முத்துசாமிக் கோனாரவர் கள், செக்ரட்டேரி சைவசமாஜம், திருச்செங்கோடு.

88. மகா-ள-ள-ஸ்ரீ எம்.பி. மாஸ்கேர்னைல்ஸ் எஸ்க்., கோரல் மில்ஸ் கோ. (லிமிடெட்) தூத்துக்குடி (திருவனந்தபுரம்)

89. மகா-ள-ள-ஸ்ரீ டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள், ஆர்க்கியாலாஜிகல் சூபரின்டெண்டெண்டு.

90. மகா-ள-ள-ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளையவர்கள், சப்-மாஜிஸ்டிரேட், உடுமலைப்பேட்டை.

91. மகா-ள-ள-ஸ்ரீ முத்துரத்னமுதலியாரவர்கள், திருவாரூர்.

92. மகா-ள-ள-ஸ்ரீ எம்.வி. மீனாக்ஷிசுந்தர முதலியா ரவர்கள், பர்ஸ்ட்கிரேட் பிளீடர், கோயம்புத்தூர்.

93. மகா-ள-ள-ஸ்ரீ பி. இராமநாத முதலியாரவர்கள், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

94. மகா-ள-ள-ஸ்ரீ ஒய்.எஸ்.டேலர் போதகர், கீழவாசல், மதுரை.

95. மகா-ள-ள-ஸ்ரீ என். தங்கவேலு முதலியாரவர்கள், அசிஸ்டெண்டு ஆடிட்டர், சென்னை.

96. மகா-ள-ள-ஸ்ரீ பாவா வைத்தியலிங்க முதலியாரவர்கள், மிராசுதார், திருவாரூர்.

97. மகா-ள-ள-ஸ்ரீ கே.எஸ். ராவ்பகதூர் ஸ்ரீநிவாசம் பிள்ளையவர்கள், பிளீடர், தஞ்சை.

98. மகா-ள-ள-ஸ்ரீ இராமசுப்பா முதலியாரவர்கள், மிராசுதார் ஆலத்தம்பாடி, திருத்துறைப்பூண்டி.

99. மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீலஸ்ரீ ஆனந்தசண்முக சரணாலய சுவாமிகள், தில்லை வளாகம், தஞ்சை.

100. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.என்.எம். சுவாமிநாத பிள்ளையவர்கள், மர்ச்செண்ட், வெளிப்பாளையம், நாகை.

101. பி.சாம்சன் எஸ்.குயர், அட்வகேட், மைங்கியன், பர்மா.

102. மகா-ள-ள-ஸ்ரீ அ. சுந்தரநாத பிள்ளைவர்கள், தமிழ்ப்பண்டிதர், எஸ்.பி.ஜி. காலேஜ், திருச்சி.

103. மகா-ள-ள-ஸ்ரீ குமாரசாமி முதலியார் அவர்கள், பெரியவீடு, குன்னூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

104. மகா-ள-ள-ஸ்ரீ எம். மாரியப்ப பிள்ளையவர் கள், மிராசுதார், கருவப்பநாயக்கன்பேட்டை, திருச்சி.

105. மகா-ள-ள-ஸ்ரீ உ.சி.ப.செ.யி. பக்கீர் மைதீன் ராவுத்தர், மதுரை.

106. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி சேனைய நாடாரவர்கள், மிராசுதார், பள்ளியூர்.

107. மகா-ள-ள-ஸ்ரீ ஏ. சிதம்பர முதலியாரவர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர், உத்தரன்மேரூர், செங்கற்பட்டு.

1149

108. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி ஐயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், காலேஜ் திருவனந்தபுரம்.

109. மகா-ள-ள-ஸ்ரீ வி.எம். தங்கையாநாயக்கரவர்கள், மிராசுதார், வளத்தாமங்கலம், தஞ்சை.

110. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கோவிந்தசாமி பிள்ளையவர்கள், மானேஜர், எஸ்.எஸ். ஸ்கூல் அவளிவணல்லூர், தஞ்சாவூர்.

111. மகா-ள-ள-ஸ்ரீ கே. கிருஷ்ணசாமித்தேவரவர்கள், மிராசுதார் அவளிவணல்லூர், ஹரித்துவாரமங்கலம்.

112. மகா-ள-ள-ஸ்ரீ ஏ.எம். சடகோபாராமானுஜாச்சாரியவர்கள், தமிழ்ப் பண்டிட், என்.ஹெச். ஸ்கூல், திருச்சி.

113. மகா-ள-ள-ஸ்ரீ இராமசாமி வன்னியரவர்கள், மிராசுதார், புலர்நத்தம், தஞ்சை.

114. மகா-ள-ள-ஸ்ரீ பம்பையா சேதுராயரவர்கள், நற்றமிழ்ச் சங்கத்தலைவர், இளங்காடு.

115. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். ஞானசிகாமணி முதலியாரவர்கள், பி.ஏ., ஸ்ரீவைகுண்டம்.

116. மகா-ள-ள-ஸ்ரீ கே.ஆர். வெங்கட்டராமையர் அவர்கள் பி.ஏ.,பி.எல்., ஹைஹோர்ட் வக்கீல், மதுரை.

117. மகா-ள-ள-ஸ்ரீ எம். பஞ்சந்தம் பிள்ளையவர்கள், கீழவீதி, திருவையாறு.

118. மகா-ள-ள-ஸ்ரீ எம். வெங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், எஸ்.பி.ஜி. காலேஜ், திருச்சி.

119. மகா-ள-ள-ஸ்ரீ வீ.ர. பக்கிரிசாமி பிள்ளையவர்கள், நாகப்பட்டணம்.

120. மகா-ள-ள-ஸ்ரீ இராமசாமி பிள்ளையவர்கள், உபாத்தியாயர், புதுக்கோட்டை.

121. மகா-ள-ள-ஸ்ரீ டி.என். சுந்தரராஜையங்காரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹானரரி செகரட்டரி, தமிழ்ச் சங்கம், மதுரை.

122. மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாகேப். எம். ஆபிரகாம் பண்டிதர் அவர்கள், கருணாநிதி மெடிகல் ஹால், தஞ்சை.

123. மகா-ள-ள-ஸ்ரீ முத்துவிஜய ரகுநாத முத்துக்குமார வணங்காமுடிவலுவதிதேவரவர்கள், ஜமீன்தார், தஞ்சை.

124. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். சாமிநாத விஜயதேவரவர்கள், பாப்பாநாடு ஜமீன்தார், தஞ்சை.

125. மகா-ள-ள-ஸ்ரீ டி. பக்தவத்சலம் அவர்கள், பி.ஏ., வெப்பேரி, சென்னை.

126. மகா-ள-ள-ஸ்ரீ சி.வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள், டிஸ்ரிக்ட் முன்சீப், திருவாரூர், தஞ்சை.

127. மகா-ள-ள-ஸ்ரீ பி.எஸ். இராமலிங்க விஜய தேவரவர்கள், யங்கர் ஜமீன்தார் ஆப் பாப்பாநாடு, தஞ்சை.

128. மகா-ள-ள-ஸ்ரீ பி. குமாரசாமி பிள்ளையவர்கள், பி.ஏ., ஹெட்கிளார்க், முன்சீப் கோர்ட், மதுரை.

129. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கோபாலசாமி ஐயங்காரவர்கள், பி.ஏ., வக்கீல், ஆடிட்டர், தமிழ்ச்சங்கம்.

130. மகா-ள-ள-ஸ்ரீ மதிப்பிற்குரிய எஸ். ஆரெம். எம். இராமசாமி செட்டியாரவர்கள், முனிசிபல் சேர்மன், சிதம்பரம்.

131. மகா-ள-ள-ஸ்ரீ என்.ஏ.வி. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ.,பி.எல்., திருநெல்வேலிப்பாலம்.

132. மகா-ள-ள-ஸ்ரீ யாழ்ப்பாணத்துநல்லூர் உபயவேதாகம பண்டிதர், சிங்கப்பூர்.

133. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்கள், ஹைக்கோர்ட்டு வக்கீல், சென்னை.

134. மகா-ள-ள-ஸ்ரீ ராஜமன்னார்சாமி நாடாழ்வார் அவர்கள், சீராளுர், தஞ்சாவூர்.

135. மகா-ள-ள-ஸ்ரீ வெங்கடாசல ரகுநாத ராஜாளியாரவர்கள், மிராசுதார், தஞ்சாவூர்.

136. மகா-ள-ள-ஸ்ரீ வி. அப்பாசாமி வாண்டையாரவர்கள், லாண்டு லார்டு பூண்டு, தஞ்சை.

137. மகா-ள-ள-ஸ்ரீ கே. சதாசிவசெட்டியாரவர்கள், தங்கசாலைத்தெரு, சென்னை.

138. மகா-ள-ள-ஸ்ரீ மோகூர்-முனிசாமி முதலியாரவர்கள், மிராசுதார், கொடிவிநாயகநல்லூர், திருத்துறைப்பூண்டி.

139. மகா-ள-ள-ஸ்ரீ கே.பி. அருணாசல முதலியா ரவர்கள், மிராசுதார், மணலி திருத்துறைப் பூண்டி.

140. மகா-ள-ள-ஸ்ரீ வன்மீகலிங்கம் பிள்ளையவர் கள், மிராசுதார், மணலி, திருத்துறைப் பூண்டி.

141. மகா-ள்-ள-ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணய்யரவர் கள், தமிழ்ப்பண்டிதர், மதுரைக் காலேஜ்.

142. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.டி. கிருஷ்ணய்யங்காரவர் கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

143. மகா-ள-ள-ஸ்ரீ எம்.எஸ்.சேஷையங்காரவர்கள், பி.ஏ., பர்ஸ்ட் கிரேட் பிளீடர், மதுரை.

144. மகா-ள-ள-ஸ்ரீ ஏ. கோபாலமுத்துச்சாமி நாயுடு அவர்கள், டீச்சர், கவர்ண்மெண்டு ஸ்கூல், பாகூர்.

145. மகா-ள-ள-ஸ்ரீ வி. சுந்தரமய்யர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

146. மகா-ள-ள-ஸ்ரீ வி.எஸ். லெட்சுமிநாராயணய்யர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

147. மகா-ள-ள-ஸ்ரீ கே. வெங்கோபராவ் அவர்கள், தானப்பமுதலியார் அக்கிரகாரம், மதுரை.

148. மகா-ள-ள-ஸ்ரீ சி. நடேசையர் அவர்கள், பி.ஏ..பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

149. மகா-ள-ள-ஸ்ரீ சி. ஸ்ரீநிவாஸராவ் ஸாகேப் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

150. மகா-ள-ள-ஸ்ரீ சி.எஸ். வெங்கடாச்சாரியார் அவர்கள், ஹைக்கோர்ட் வக்கீல், சென்னை.

151. மகா-ள-ள-ஸ்ரீ டி. இராமசாமி ஐயங்கார் அவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

152. மகா-ள-ள-ஸ்ரீ பி.என். நாகநாதய்யர் அவர்கள், பி.ஏ., வக்கீல், மதுரை.

153. மகா-ள-ள-ஸ்ரீ எம். மாதுவையர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

154. மகா-ள-ள-ஸ்ரீ சி. ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

155. மகா-ள-ள-ஸ்ரீ ஏ. ரெங்கசாமி ஐயரவர்கள், கவர்ண்மெண்டு பிளீடர், இராமநாதபுரம்.

156. மகா-ள-ள-ஸ்ரீ வி.ஆர். சடகோபய்யங்கார் அவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

157. மகா-ள-ள-ஸ்ரீ ஜி. சோமயாஜி ஐயர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

158. மகா-ள-ள-ஸ்ரீ வி. இராமச்சந்திர ஐயர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., கவர்ண்மெண்டு பிளீடர், மதுரை.

159. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். இராமசாமி ஐயங்காரவர் கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

160. மகா-ள-ள-ஸ்ரீ ஜி.ஏ. சுந்தரமையரவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

161.மகா-ள-ள-ஸ்ரீ எஸ். ஹரிஹர ஐயரவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

162. மகா-ள-ள-ஸ்ரீ மதிப்பிற்குரிய கே. இராமயங் காரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை.

163. மகா-ள-ள-ஸ்ரீ மெ.அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

164. மகா-ள-ள-ஸ்ரீ என். நடேசையர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., மதுரை.

165. மகா-ள-ள-ஸ்ரீ ஜனகராஜத்தேவர் அவர்கள், மதுரை

166. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். பூபாலம்பிள்ளையவர்கள், சீப் கிளார்க்கு, பி.டபிள்யூ.டி. பட்டிகலோயா, சிலோன்.

167. மகா-ள-ள-ஸ்ரீ ஏ. உக்கிரபாண்டியம் பிள்ளை யவர்கள், வக்கீல், இராமநாதபுரம்.

168. மகா-ள-ள-ஸ்ரீ நம்பெருமாளையங்கார் அவர்கள், முகவூர், திருப்பாசேத்தி (அஞ்), இராமநாதபுரம் மாவட்டம்.

169. மகா-ள-ள-ஸ்ரீ காரை. மு. சபாரத்தின ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், யாழ்ப்பாணம்.

170. மகா-ள-ள-ஸ்ரீ வி.எஸ். இராமசாமி சாஸ்திரிகள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், மதுரை.

171. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.ஏ. சுப்பிரமணிய ஐயரவர்கள், ஹெட் மாஸ்டர், மதுரை காலேஜ்

172. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.ஆரெம். எம். சிடி. பெத்தாச்சி செட்டியாரவர்கள், எம்.ஆர்.ஏ.எஸ்., கானாடுகாத்தான், வைஸ் பிரஸிடெண்டு, தமிழ்ச்சங்கம், மதுரை.

173. மகா-ள-ள-ஸ்ரீ ஜி. இராமசாமி ஐயங்காரவர்கள், வாண்டு லார்டு, மதுரை.

174. மகா-ள-ள-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், தமிழ் லெக்ஸிகன் ஆபிஸ், மதுரை.

175. மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையவர்கள், பேஷ்கார், திருப்பாச்சேத்தி போஸ்டு

176. மகா-ள-ள-ஸ்ரீ பி. சுப்பராய ஐயரவர்கள், பி.ஏ., வக்கீல், மதுரை

177. மகா-ள-ள-ஸ்ரீ ஏ.சுந்தரமையரவர்கள், வக்கீல், மதுரை

178. மகா-ள-ள-ஸ்ரீ கே. கோபாலய்யங்காரவர்கள், பிளீடர், பரமகுடி

179. மகா-ள-ள-ஸ்ரீ எம். நாகலிங்கம்பிள்ளையவர் கள், பிளீடர், இராமநாதபுரம்

180. மகா-ள-ள-ஸ்ரீ எம்.சி. ஆனையப்ப முதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர், நாமக்கல்

181. மகா-ள-ள-ஸ்ரீ சி.எம். ராஜு செட்டியாரவர்கள், எம்.பி.பி.ஜி., சென்னை.

182. மகா-ள-ள-ஸ்ரீ முத்து க.மா. நடேசன் செட்டியாரவர்கள், தேவகோட்டை

183. மகா-ள-ள-ஸ்ரீ பி.கே. இராமசாமி ஐயங்காரவர்கள், ஹைக்கோர்ட் வக்கீல், மதுரை

184. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். வேதாந்தமையங்காரவர் கள், பிளீடர், பரமகுடி

185. மகா-ள-ள-ஸ்ரீ டி.வி. கோதண்டராமய்யரவர் கள், பிளீடர், பரமகுடி.

186. மகா-ள-ள-ஸ்ரீ ஏ.எஸ்.சுப்பையரவர்கள், பிளீடர், பரமகுடி

187. மகா-ள-ள-ஸ்ரீ ஏ.எல்.வி.ஆர்.ஆரெம். சிதம்பரஞ்செட்டியாரவர்கள், தேவகோட்டை

188. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். நாகலிங்கம் பிள்ளையவர்கள், பிளீடர், பரமகுடி

189. மகா-ள-ள-ஸ்ரீ டி.வி. இராமசாமி ஐயங்காரவர்கள், பிளீடர், பரமகுடி

190. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். கங்காதரமய்யரவர்கள், இராமநாதபுரம்.

191. மகா-ள-ள-ஸ்ரீ பி.பி. சுப்பராமய்யரவர்கள், தமிழ்ப்பண்டிதர், மதுரை

192. மகா-ள-ள-ஸ்ரீ நெ.ரா. சுப்பிரமணியசர்மா அவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஏ.எம். ஹைஸ்கூல், பசுமலை

193. மகா-ள-ள-ஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், மதுரை

194. மகா-ள-ள-ஸ்ரீ டி.ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர் கள், வக்கீல், மதுரை

195. மகா-ள-ள-ஸ்ரீ ஏ.ஆர். நாராயணையரவர்கள், பிளீடர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

196. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.ஆர். வெங்கடாச்சாரியாரவர்கள், பிளீடர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

197. மகா-ள-ள-ஸ்ரீ ரா.கு. நல்லகுற்றாலம் பிள்ளையவர்கள், பிளீடர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

198. மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சுப்பையரவர்கள், பிளீடர், ஸ்ரீவில்லிபுத்தூர்

199. மகா-ள-ள-ஸ்ரீ டி. சுந்தரராஜ ஐயங்காரவர்கள், பிளீடர், மதுரை

200. மகா-ள-ள-ஸ்ரீ எம்.எஸ். வெங்குசாமி ஐயரவர் கள், பிளீடர், மதுரை

201. மகா-ள-ள-ஸ்ரீ நா.சு.ரெ. நாச்சியப்ப முதலியா ரவர்கள், நாகப்பட்டணம்

202. மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பஹதூர், ஜி. ஸ்ரீநிவாசராவ் அவர்கள், பிளீடர் முதல்நிலை, மதுரை.

203. மகா-ள-ள-ஸ்ரீ டி. இராமாநுஜ ஐயங்காரவர் கள், வக்கீல், இராமநாதபுரம்

204. மகா-ள-ள-ஸ்ரீ கே.வி. இராமாச்சாரியவர்கள், தெற்குமாசிவீதி, மதுரை

205. மகா-ள-ள-ஸ்ரீ அரு.அ.அரு.ராம. அருணாசலஞ் செட்டியாரவர்கள், காரைக்குடி

206. மகா-ள-ள-ஸ்ரீ ஜி.எம். வெங்கிடாஜலபதி ஐயரவர்கள், முனிசிபல் கவுன்சிலர், மதுரை.

207. மகா-ள-ள-ஸ்ரீ சு.வெ. அழ. நாகசாமி செட்டியாரவர்கள், இளையாங்குடி.

208. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.எம். முத்தையா ரோட்ரிகோ அவர்கள், ஸாப்கீப்பர், சில்லோ, சிலோன்.

209. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். சடகோபாச்சாரி அவர்கள், மானேஜர், சேத்தூர்.

210. மகா-ள-ள-ஸ்ரீ டி.வி. சிதம்பர ஐயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவனந்தபுரம்

211. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். கிருஷ்ணமாசாரியார் அவர்கள், மதுரை

212. மகா-ள-ள-ஸ்ரீ கே.ஏ. வெங்கிடசுப்பிரமணிய ஐயர் அவர்கள், பிளீடர், மதுரை

213. மகா-ள-ள-ஸ்ரீ டி.எஸ்.ரெங்காச்சாரியர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட்டு வக்கீல், சிவகங்கை

214. மகா-ள-ள-ஸ்ரீ வி.மாணிக்கம்பிள்ளை அவர்கள், பிளீடர், மதுரை

215. மகா-ள-ள-ஸ்ரீ சி.பத்மனாபய்யங்கார் அவர்கள், பிளீடர், மைலாப்பூர்.

216. மகா-ள-ள-ஸ்ரீ எம்.வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், பிளீடர், மதுரை.

217. மகா-ள-ள-ஸ்ரீ ஆர்.எஸ். நாராயணசாமி ஐயர் அவர்கள், வக்கீல், மதுரை.

218. மகா-ள-ள-ஸ்ரீ பி.ஆர். கிருஷ்ணமாச் சாரியாரவர்கள், தமிழ்வித்வான், மதுரை.

219. மகா-ள-ள-ஸ்ரீ பி.கே. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், சப் அஸிஸ்டெண்ட் சர்ஜன், மதுரை.

220. மகா-ள-ள-ஸ்ரீ கே. வடிவேலுசெட்டியார் அவர்கள், எடிட்டர், லோகோபகாரி, சென்னை.

221. மகா-ள-ள-ஸ்ரீ வி.தி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், காலேஜ், புதுக்கோட்டை.

222. மகா-ள-ள-ஸ்ரீ அ. கந்தசாமி பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், காட்டுப்புதூர், திருச்சி.

223. மகா-ள-ள-ஸ்ரீ சி.ஏ.சி. 'காசிநாதன் செட்டியாரவர்கள், கொத்தமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம்.

224. மகா-ள-ள-ஸ்ரீ அள.அ.அரு. அண்ணாமலை செட்டியாரவர்கள், லேவாதேவி, கீழசெவல்பட்டி.

225. மகா-ள-ள-ஸ்ரீ பெ.ஈசுவரமூர்த்தியாபிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

226. மகா-ள-ள-ஸ்ரீ அ. வரதநஞ்சய பிள்ளையவர்கள், தோரமங்கலம், சேலம்.

227. மகா-ள-ள-ஸ்ரீ பி.ஜெ.எம். குலசேகரராஜ் அவர்கள், பிரகாசபுரம், நாசரேத், திருநெல்வேலி மாவட்டம்.

228. மகா-ள-ள-ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸ தேசிகாச் சாரியவர்கள், பிளீடர் முதல்நிலை, மதுரை.

229. மகா-ள-ள-ஸ்ரீ வி.ஆர். வெங்கட்டராமய்யரவர்கள், தம்பிபட்டி, வாட்ரப்

230. மகா-ள-ள-ஸ்ரீ வி. ரெங்காசாரியவர்கள், 40, டாங்கு ஸ்குயர், திருவல்லிக்கேணி

231. மகா-ள-ள-ஸ்ரீ பண்டிட் எஸ். சிவானந்தம் பிள்ளையவர்கள், நேட்டிவ் டாக்டர், மதுரை.

232. மகா-ள-ள-ஸ்ரீ வி. முத்துசாமி ஐயரவர்கள், எம்.ஏ., பி.டி., ஸ்கூல் இன்ஸ்பெக்டர், அருப்புக் கோட்டை

233. மகா-ள-ள-ஸ்ரீ பி. சிதம்பர புன்னைவனநாதன் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்.

234. மகா-ள-ள-ஸ்ரீ கே.எம். முத்துகிருஷ்ண பிள்ளையவர்கள், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

235. மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் எஸ். பவானந்தம் பிள்ளையவர்கள், எப்.ஆர்.ஹெச்.எஸ் (லண்டன்) எம்.ஆர்.ஏ.எஸ். (லண்டன்) அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆப் போலீஸ், சென்னை நகரம்.

236. மகா-ள-ள-ஸ்ரீ டி.எஸ். சுப்பிரமணி ஐயரவர்கள், பி.ஏ.,பி.எல்., பிளீடர் முதல்நிலை, மதுரை.

237. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். ரெங்காசாரியர் அவர்கள், பி.ஏ.,பி.எல்., முதல் அஸிஸ்டெண்ட், மடன்னபள்ளி

238. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். கணபதி ஐயரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட்டு வக்கீல், மதுரை.

239. மகா-ள-ள-ஸ்ரீ ஆர். நாகேஸ்வர ஐயரவர்கள், ஜர்னலிஸ்ட், மதுரை

240. மகா-ள-ள-ஸ்ரீ எம். ரெங்கசாமி ஐயரவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், இராமநாதபுரம்

241. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.பி. நாகஸ்வாமி ஐயரவர்கள், பிளீடர், இராமநாதபுரம்.

242. மகா-ள-ள-ஸ்ரீ எஸ்.சீனிமுருகம் பிள்ளையவர்கள், வக்கீல், இராமநாதபுரம்.

243. மகா-ள-ள-ஸ்ரீ தேவன் பகதூர், எல்.டி. சுவாமிகண்ணுப் பிள்ளையவர்கள், எம்.ஏ.,பி.எல்., எல்.எல்.பி., ரெஜிஸ்டரர் ஆப் கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டிஸ், சென்னை.

244. மகா-ள-ள-ஸ்ரீ மாவை. வே. விசுவநாதபிள்ளை அவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஜி.டி சென்னை.

245. மகா-ள-ள-ஸ்ரீ டபிள்யூ. நாராயணையரவர்கள், பி.ஏ., செரீஸ்டடர், மாவட்ட நீதிமன்றம், சித்தூர்.

246. மகா-ள-ள-ஸ்ரீ டி. கோபாலாச்சார்லு அவர்கள், பி.ஏ.,பி.எல்., வைத்தியரத்னா பண்டிதர், முதல்வர், ஆயுர்வேதக் கழகம், சென்னை.

247. மகா-ள-ள-ஸ்ரீ மதிப்பிற்குரிய ராவ் பகதூர், பி. கேசவபிள்ளை அவர்கள், பிளீடர், கூலி.

248. மகா-ள-ள-ஸ்ரீ வ.மு. இரத்னேஸ்வர ஐயரவர்கள், தமிழ்ப்பண்டிதர், எஸ்.எம்.எஸ். காரைக்குடி.

249. மகா-ள-ள-ஸ்ரீ டி.வி. உமாமகேஸ்வரம் பிள்ளையவர்கள், பி.ஏ.,பி.எல்., வக்கீல், தஞ்சாவூர்.

250. மகா-ள-ள-ஸ்ரீ பி. ஸம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ.,பி.எல்., ஹைக்கோர்ட்டு வக்கீல், சென்னை.

தமிழ்ச்சங்கப் பதிப்புகள்



பெரும்புலவர் இரா. இளங்குமரன்
அல்லூர், திருச்சி

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் (14–9–1901) பகல் 1.30 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் தனுர் ஓரையில் சேதுபதி உயர்பள்ளி மண்டபத்தில் நிறுவப்பட்டது.

பதிப்புத்திட்டம் :

நிறுவப்பட்ட போதே, ஒன்பான் கொள்கைகளைக் கொண்டது. அவற்றுள், "வெளிவராத அரிய நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுப் பரப்புதல் (3), வடமொழி ஆங்கிலம் முதலாய மொழிகளில் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தல் (4), தமிழ்க் கல்வி பற்றிய இதழ் வெளியிடுதல் (5) என்னும் மூன்றும் தமிழ்ச்சங்கப் பதிப்புத் தொடர்பானவையாம்.

பதிப்புத்துறை :

இப்பதிப்புப் பணிக்கென நூலாராய்ச்சிச் சாலை, தமிழ்ச்சங்க முத்திராசாலை என்னும் அச்சகம், செந்தமிழ் என்னும் திங்கள் இதழ் என்பவற்றைச் சங்கம் அமைத்தது.

பதிப்புப்பணி :

சுபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்களில் செந்தமிழ்த் தொகுதி.1, பகுதி.1. வெளியிடப்பட்டது (1903). அம் முதல் இதழிலேயே, "அச்சிடாத பழைய தமிழ் நூல்களுள் அகநானூறும் மாறனலங்காரமும் அச்சிட்டு அருகியவற்றுள் யாப்பருங்கலக்காரிகையும், தண்டியலங்காரமும் உரையுடன் இச்சங்கத்தினின்றும் இப்போது அச்சிட்டு வெளியிடுவதற்குரிய நூல்களாகத் தெரியப் பெற்றுப் பரிசோதிக்கப்படுகின்றன" என்னும் குறிப்பு உள்ளது.

மேலும் "இச்சங்கத்தினின்றும் வெளியிடுவதாகக் குறித்த பத்திரிகை, வேண்டுங் கருவிகள் எல்லாம் முற்றப்பெற்ற அச்சியந்திரசாலை அமைக்கப் பெற்றமையின் செந்தமிழ் மாதந்தோறும் தவறாமல் வெளிவரும்" என்னும் குறிப்பும் செந்தமிழ் முக வுரையிலேயே இடம் பெற்றுள்ளது. அவ்விதழே சங்கத்தின் பதிப்புப் பணியைத் தோற்றுவித்து, வளர்த்து வளமான விளைவும் வழங்கியது எனல் தகும்.

செந்தமிழ் வெளியீடு :

இதன் முதல் இதழிலேயே வன்னிவேட்டுக் கல்வெட்டு அச்சாகின்றது. தொல்காப்பியம், திருவள்ளுவம், திருக்கோவையார், நன்னூல் முதலிய நூல்களை ஆய்ந்து கண்டு அரசஞ் சண்முகனார் ஆக்கிய நுண்பொருட்கோவை என்னும் தொடர் முதல் இதழிலேயே இடம்பெறுகிறது.

பதிப்புக்கு உதவி-செப்பம் :

அந்நாள் இதழாசிரியராக இருந்தவர் பெரும்புலவர் இரா.இராகவ ஐயங்கார். அவர், "அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியல் உரைகாரர் பேராசிரியர் என்றும், நச்சினார்க்கினியர் அல்லர்" என்றும் தெளிவிக்கிறார். அச்சிட்டவர் சி.வை.தாமோதரம் பிள்ளை.

தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையைத் தமிழ்ச்சங்கம் வாயிலாக 1917இல் வெளியிட்ட இரா. இராகவ ஐயங்கார், அப்பதிப்பின் முன்னுரையில் இதனைச் சுட்டுவதுடன் பொருளதிகார மரபியலுரையும் பேராசிரியரது உரையே என்றும் கூறுகிறார். அது பற்றிச் செந்தமிழ் இரண்டாம் தொகுதி பதினொன்றாம் பகுதி முதற்கண் தெளிவித்ததையும்

குறிக்கிறார். செந்தமிழ் இதழ், நூற்பதிப்புப் பணியில் செய்த பெரும்பங்களிப்பு அருமை மிக்கதாம்.

புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர் எவரெனப் புலப்படாதிருந்த நிலையில் அவர், "செயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர்கிழான் சாமுண்டி தேவநாயகன்" என ஏடுகளைக் கொண்டு நிலைப்படுத்தியது செந்தமிழ் ஆராய்ச்சிப் பகுதியேயாகும்.

'திருவள்ளுவ நாயனார்' என மழவை மகாலிங்க ஐயரவர்களும் யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளையவர்களும் வெளியிட்ட தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரை அச்சுப்பிரதிகளில் சிறப்புப் பாயிர உரைக்கண் 'முப்பாலாகக் கூறி' என்ற இடத்து, "எமக்குக் கிடைத்த அந்நூற் பழைய ஏடுகள் பலவற்றிலும், இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி என்பதே உள்ளது" என இதழாசிரியர் தெளிவிக்கிறார். திருக்குறள் பரிமேலழகர் உரை அச்சிடப்பட்டு வெளிவந்திருந்தது. அதில் காணுதற்குரிய பிழைகள் மூன்றனைக் கண்டு செந்தமிழ் ஆராய்ச்சிப் பகுதி வெளியிட்டது.

"*எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை*" (582)

என்னும் குறளில், 'தக்கவழியாகத் தேறுதலாக' என்றிருப்பது, 'தக்க அளியாக, தெறலாக' என்று இருக்கவேண்டும் என்றும்,

"*உப்பமைந் தற்றால் புலவி*"(1302)

என்னும் குறளில் 'இன்சுவை யாக்கற்கு' என்றிருப்பது, 'இன்சுவைய வாக்கற்கு' என்று இருக்கவேண்டும் என்றும்,

"*நோயெல்லாம் நோய் செய்தார்*" (320)

என்னும் குறளில், 'உவர்நிலத்து விளைவித்திட்டார்க்கு', என்றிருப்பது, 'உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு' என்று இருக்க வேண்டும் என்றும் ஏட்டுப்படியொடும், சான்று விளக்கங்களொடும் நிறுவியமை செயற் கரியவையாம்.

ஐந்திணை ஐம்பது :

மாறன் பொறையனார் அருளிச் செய்த 'ஐந்திணை ஐம்பது' மூலமும் உரையும் முதல் இதழிலே தொடங்கப்பட்டு, இரண்டாம் இதழிலேயே செய்யுள் முதற்குறிப்பு அகராதியுடன் நிறைவுறுகின்றது. இதனைப் பிரித்துத் தனிநூல் ஆக்கம் செய்து கொள்ளும் வகையில் நூலுக்குத் தொடர், பக்கஎண் கொடுக்கப் பட்டுள்ள சீர்மை எவ்விதழாரும் பின்பற்றத்தக்க பெருமையதாம்.

நேமிநாதம் முதலியன :

முதல் இதழ் தொட்டே, குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம் மூலமும் உரையும் தொடங்கித் தொடர்நடையிட்டு, பன்னிரண்டாம் பகுதியொடு நிறைகின்றது.

குண்டலகேசிக் காப்பியத்தில் கிடைத்த பாடல்கள் பகுதி மூன்றிலும், வளையாபதிக் காப்பியத்தில் கிடைத்த பாடல்கள் பகுதி நான்கிலும் அடைவு செய்யப் பட்டுள்ளன.

பொன்னவன் என்பான் செய்த கனாநூல் மூன்றாம் பகுதியிலும் திருக்குருகூர் சிறிய இரத்தின கவிராயர் இயற்றிய புலவராற்றுப்படை, பகுதி ஐந்து, ஆறு ஆகியவற்றிலும் பதிப்பிக்கப்பட்டன. மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் அருளிச் செய்த இனியது நாற்பது மூலமும் உரையும் ஏழாம் பகுதியில் அகர நிரலுடன் நிறைகின்றது.

அவிரோதி யாழ்வார் இயற்றிய திருநூற்றந்தாதி மூலமும் உரையும் எட்டாம் பகுதியில் தொடங்கி, தொகுதி இரண்டு பகுதி ஒன்றில் நிறைவுறுகின்றன.

வெளியீடுகள் :

"செந்தமிழ் இரண்டாம் தொகுதியில் வெளிவந்த நூல்கள்" என்னும் தலைப்பில் இரண்டு பட்டியல்கள் உள. அவற்றுள் ஒன்று முடிந்தவை; மற்றொன்று முடியாதவை என்பன.

முடிந்தவை :

அநுமானவிளக்கம், விவசாய ரசாயன சாஸ்திரச் சுருக்கம், திருநூற்றந்தாதி மூலமும் உரையும், பன்னிருபாட்டியல், திணைமாலை நூற்றைம்பது, அட்டாங்க யோகக்குறள், நான்மணிக்கடிகை.

முடியாதவை :

திருச்செந்திற் கலம்பகம், விவசாய நூல், சுகசந்தர்சனதீபிகை, தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை.

நூலாக்க உத்தி :

முதல் இரண்டு தொகுதிகளிலேயே—செந்தமிழ் இதழ் உறுப்பினர்களுக்கு இயல்பாக எத்தனை நூல்கள் கிடைத்துவிடுகின்றன என்பதை எண்ணினால், இதழ்ப்பதிப்பு என்னும் ஒன்றே பன்னூல் பதிப்பகமாகத் திகழ்தல் வெளிப்படும்.

நூல் பகுதியைத் தனித்தனியே பிரித்தெடுத்து நூலாகக் கட்டிக் கொள்ளவும், எஞ்சியதைத் தொடர்ச்சி அறாமல் பக்க வரிசைப்படி செந்தமிழ் இதழாக அமைத்துக் கொள்ளவும் ஆக, "வினையா வினையாக்கிக் கொள்ளும்" விழுமிய நெறி விளக்கமாகத் திகழ்கின்றதாம். செந்தமிழ் இதழ் பெறுபவர்களே நூலாக்கிக் கொள்ளும் வகையில் இருப்பினும், அவ்விதழ் பெற்றாரும், பெறாரும் நூலைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழ்ச்சங்கமே வேண்டும் முன்னுரை விளக்கம் ஆகியவற்றுடன் நூலாக்கி விற்கவும் செய்தது.

செந்தமிழ்ப் பதிப்பு :

செந்தமிழ் இதழில் வந்த ஐந்திணை ஐம்பது மூலம் உரை செய்யுள் முதற்குறிப்பு என்னும் அமைப்பில் 20 பக்க அளவில் அமைகின்றது.

ஆனால் நூலாக்கம் பெறும்போது முகவுரை பொருளடக்கம் எட்டுப்பக்கங்களும், இறுதியில் அரும்பத அகராதி நான்கு பக்கங்களும் கொண்டு நூல் 32 பக்க அளவில் விரிவாகின்றது. அட்டைக் கட்டும் பெறுகின்றது.

வெளியீடும் விளம்பரமும் :

இவ்வாறு செந்தமிழ் இதழ் வழியாக வந்த நூல்களுடன் தமிழ்ச்சங்கமும் தனியே நூல் வெளியிடவும் செய்கின்றது. அதனால்,

"மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப் பெறும் புத்தகங்கள்" என்னும் தலைப்பில் "சங்கப்பிரசுரம்" "செந்தமிழ்ப் பிரசுரம்" என இருவகை வெளியீட்டு விளம்பரங்களும் நூலில் இடம் பெறுகின்றன.

பதிப்பு வகை :

ஐந்திணை ஐம்பது மூன்றாம் பதிப்பு 1935இல் நான்கணா விலையுடன் வெளிவருகின்றது. அதில் சங்கப்பிரசுரம் நூல்கள் 15, செந்தமிழ்ப் பிரசுரம் நூல்கள் 60—ஆக 75 நூல்களின் விலைப்பட்டியல் பின்னட்டையில் விளம்பரமாக வந்துள்ளது.

ஒரு பதிவாவணம் :

முகவுரையில், பதிப்பாசிரியர்க்கு இருக்கவேண்டிய அறநெஞ்சம் ஒன்றனைப் பதிப்பாசிரியர் இரா.இராகவ ஐயங்கார் 'பதிவாவணம்' ஆக்குகிறார். அது, "இதனுள் முல்லையில் மின்னுமுழக்கம்" என்பது முதலாகப் 'பிரிந்தவர் மேனி' என்பது இறுதியாக உள்ள வெண்பாக்கள் ஆறும் "அணிநிறமஞ்ஞை" என்பது போலப் பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது ஆயிற் செவ்வனம் இயைவனவாகும். அவ்வாறன்றிப் பிரதிகளிற் 'பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது' எனவேயுள்ளது. தலைவியது ஆற்றாமைக்குக் காரணமாய காரும் மாலையும் சிறுகுழலோசை முதலியனவும் தோழி கண்டு கேட்டுத் தானும் ஆற்றாளாய்க் கூறி ஆற்றுவித்தாளென ஒருகாற் கொள்ளவுமாம் என்று கருதி அதனையான் மாற்றத் துணிந்திலேன் என்பது. நூல்வல்லாராக விளங்கியவரும், ஏடு படியெடுத்தவரும் அறிந்து செய்த சூழ்ச்சியாலும் அறியாமைக் குறையாலும் ஏடுகளுக்கு ஏற்பட்ட கேடுகள் பலப்பல. அக்கேடுகளுக்கு மேல் பதிப்பிப்பாரும் தத்தம் மனம் போல் விளையாடினால் ஏட்டின் உண்மை நிலை தான் என்ன? பதிப்புப் பணி மாசிலா அறப்பணி என மனங்கொண்டு ஈடுபட்டவரே மாணப் பெரியர். அப்பெருந்தகை அற்றார், தொல்காப்பியத்தும் வள்ளுவத்தும் விளையாடும் விளையாட்டு, 'இவர்களுக்கு என்ன ஆனது?' என்று இந்நாள் எண்ணும்படியாக உள்ளமை வெளிப்படை.

பன்னூற்றிரட்டு :

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் வெளியீடு பன்னூற்றிரட்டு என்பது.

மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் பொன். பாண்டித் துரையாரால் தொகுக்கப்பட்டு, அவராலேயே அச்சிடவும் பட்டது. 1931இல் நான்காம் பதிப்பு வெளிவந்தது.

புறத்திரட்டு என்பதொரு நூல் கட்டுரையாளர்க்கும் பொழிவர்க்கும் கையகத்தே ஒரு நூலகமே இருப்பது போல் மேற்கோளுக்குப் பயன்படும் நூல். ஏட்டுச் சுவடியாக இருந்தது. அதன் தூண்டலே பன்னூற்றிரட்டு

என்னும் தொகைநூல் வடிவெடுக்க உதவியது. அந்நூலில் மேற்கோளாகக் கொள்ளப்பட்ட சில நூல்கள் மறைந்தே போயின. அவற்றின் பாடல்களையும், வழக்கில் உள்ள நூல்களின் அரிய பாடல்களையும் தொகுத்துத் தொகையாக்கப்பட்டது பன்னூற்றிரட்டாகும்.

அறத்துப்பால், பொருட்பால் என இருபால்களையும் கடவுள் வாழ்த்து முதல் கற்பனை இறுதியாக ஐம்பத்து மூன்று அதிகாரங்களையும் மொத்தத்தில் (1070, 1003) 2073 பாடல்களையும் உடையது.

திருக்குறள், நாலடியார்,புறத்திரட்டு என்னும் நூல்களும் அதிகாரப் படுத்துதலுக்கும் வைப்பு முறைக்கும் பயன்பட்டுள்ளமை அறிய முடிகின்றது.

"யான் விடாது முயன்றும், எடுத்துக்கொண்ட நூல்கள் யாவும் பார்த்து இந்நூல் தொகுத்தற்கு ஒன்றரை வருடமாயிற்று. அதன்மேலும் எனது நேர்பார்வையில் இவ்வூரிலேயே அச்சேற்றச் சற்றேறக்குறைய எட்டு மாதங்களாயின. ஆக இந்நூல் தொகுத்து அச்சிடுதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாயின" என முதற்பதிப்பின் முகவுரையில், பொ.பாண்டித்துரை வரைந்துள்ளார். உவே. சாமிநாதையர். வீர.லெ. சிந்நயச் செட்டியார் என்னும் இருவர்தம் சிறப்புப் பாயிரங்கள் இடம் பெற்றுள. இரண்டும் அகவல் நடைய. முன்னது 124 அடி. பின்னது 93 அடி.

நாடும் மொழியும் :

பாண்டித்துரையார் வாழ்வு, முற்றான தமிழ் வாழ்வு. சங்கம், அரசியல் சங்க மாநாட்டின் நிறைவில் எடுக்கப்பட்ட கொள்கை வழியில் தோன்றியது. "நாடும் மொழியும் நம்மிருகண்கள்" என்னும் ஆழ்ந்த நோக்கமாக அமைந்தது.

தம் தொண்டளவில் தமிழ் வளர்ச்சி அமைந்து விடல் ஆகாது. நாட்டுத் தொண்டு போலவே கூட்டுத் தொண்டாகத் தமிழ்த் தொண்டும் நிகழ்தல் வேண்டும் எனும் உறுதிப்பாட்டில் உருக்கொண்டது. அவ்வகையில் இதழ்ப்பதிப்போடு, நூற்பதிப்பும் செய்த பாண்டித் துரையார், தாமே கட்டுரையாளராக பதிப்பாசிரியாக – நூலாசிரியராக – பாவலராக – புரவலராக – காவலராக – விளங்கினார். தக்கார் கட்டுரை எழுதத் தூண்டினார். நூல் பதிப்பிக்கத் தூண்டினார். இவற்றொடும் நின்றார் அல்லர். பிறர் நூல்பதிப்புக்கும் உதவி புரிந்தார் என்பது தொடக்க நாள் தொட்டே புலப்பாடாகின்றது.

பன்னூற்றிரட்டுச் சிறப்புப் பாயிர முதல் அகவலில்,

"தேனினும் பாலினும் தித்தித் தோங்கும்
தண்பா மாலை சாற்றுவோன் புறப்பொருள்
வெண்பா மாலை வெளிவரச் செய்தோன்
திருந்து கவின்சேர் அருந்தமிழ் மடந்தை
அணிமே கலையா மணிமே கலையை
யாவரும் பெறச்செய் மாவுப காரி"

'பாண்டித்துரைப் பெயர் படைத்த கோமான்' எனப் பாராட்டப்படுகின்றார். இதனால், உ.வே.சா. பதிப்புக்கு உதவியது 'உப்புக்கும் காடிக்கும்' உதவியது அன்று! தமிழ் உலகுக்கு உதவிய உதவியாம்.

பன்னூற்றிரட்டுப் பயன் :

இப்பன்னூற்றிரட்டுச் செய்த பயன்பாடு தமிழ்ச்சங்க வாயிலாக நான்கு பதிப்புகளைச் செய்ய வைத்தது. பின்னர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியாகப் பின்னும் பலநூல் பாடல்கள் சேர்க்கப் பெற்று, "பன்னூல் பாடற்றிரட்டு" என்னும் பெயரில் வெளிவந்தது.

சைவமஞ்சரி :

பாண்டித்துரையார் பதிப்பித்ததும் அவரே தொகுத்தது மாகிய ஓர் அரிய நூல் 'சைவமஞ்சரி' என்பது. அதுவும் விரிவுற்றுக் கழகத்தின் வழியே "சிவனருள் செய்யுள் திரட்டு" என்னும் பெயரால் வெளிவந்தது.

பெருந்தொகை :

சங்கத்துச் செந்தமிழ் இதழிலே பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளிவந்த திரட்டு ஒன்று 'பெருந்தொகை' என்பதாம். அத்தொகையை அரிதின் முயன்று தொகுத்தும் அடைவு செய்தும் குறிப்பு எழுதியும் உதவியவர், செந்தமிழ்ப் பதிப்பாசிரியராக விளங்கிய மு. இராகவையங்கார் ஆவர்.

சங்கத் தொகை நூல்களைப் போல இடைக்கால– பிற்காலப் புலவர்கள் இயற்றிய தொகை நூல்கள் கிடைத்திலவே, அவற்றைப் பற்றிய குறிப்புகள் தாமும் அறிதற்கு இயன்றிலவே என்னும் ஏக்கம் உந்திய நோக்கால், தொகுக்கப்பட்ட தொகை இஃதாம்.

இத்தொகை இலக்கண உரைகள், இலக்கிய உரைகள் ஆகியவற்றைக் கொண்டு தொகுக்கப்பட்டது. இப்போது அகப்படாத நூல்களின் பாடல்களே இவை. தொகுக்கப்பட்ட பாடல்களின் மொத்தத் தொகை 3500க்கு மேற்பட்டதாகும். இவற்றைக் கடவுள் வாழ்த்து, அறவியல், பொருளியல், இன்ப இயல், ஒழிபியல் என ஐந்து இயல்களாக வகைப்படுத்தி இந்நூல் அமைக்கப் பட்டது. எண்ணளவாற் பெருமையுடைய இந்நூற்கு ஏற்புளவாறு பெருந்தொகை எனப் பெயர் தரப்பெற்றது. முதல் மூன்று இயல்களே 2214 பாடல்கள் ஆயமையால் முதற்பாகம் என 1935இல் வெளிவந்தது. இரண்டாம் பாகம் 1500 பாடல்களைக் கொண்டிருக்கலாம் என்று கண்ட அது நிறைவேறாமலே நின்றது போலும்.

தொடர்எண் கொண்ட இத்தொகை, பாடல் தலைப்புக் கொண்டுள்ளது. பாடல் இடம் பெற்றநூல், அதன் பகுதி ஆகியவை அடிக்குறிப்பாக அமைக்கப்பட்டுள.

தொடர் வரிசையில் விசேடக் குறிப்பு என்பது 137 பக்கத்தில் அமைந்துளது. செய்யுள் முதற்குறிப்ப கராதியின் பின், 'பொருட் குறிப்பகராதி' அகரநிரலில் பாட்டெண்ணுடன் அமைந்துளது. அதுமட்டும் தொண்ணூற்றொரு பக்கம். கூர்த்தமூளை, உழைப்பின் திறம் என்பவை பளிச்சிட அமைந்த அப்பதிப்பு செந்தமிழ்ப் பிரசுரம்–62 ஆகும். அதன் விலை உருபா ஐந்து.

பதிப்பு வழிமுறையர் :

சங்கப்பதிப்பு இருபதாம் நூற்றாண்டில் தொடங்கியது எனினும் சங்க நிறுவனரின் தந்தையார் பொன்னுசாமித் தேவர் தமிழ் நூல் பதிப்புச் செய்தலிலும் பதிப்புச் செய்வார்க்கு உதவுதலிலும் பேரீடுபாடு கொண்டிருந்தார். புலமைச் செல்வர் அவையத்திருந்ததோடு அவர் அவைத் தலைமையராகவும் பெரும் பாவலராகவும் திகழ்ந்தார்.

1861ஆம் ஆண்டில் திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் அரிய பதிப்பாக நல்லூர் ஆறுமுக நாவலர் வெளியிட்டார். அப்பதிப்புச் செய்ய வேண்டுகோள் விடுத்தவரும், நூல் வெளியிட்டவரும் பொன்னுசாமித் தேவரே. முதற்பதிப்பு சென்னபட்டணம் வாணி நிகேதன வச்சுக் கூடத்தில் துன்மதி வருடம் வைகாசி மாதம் பதிப்பிக்கப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு யுவ வருடம் ஆடி மாதம் வெளியாயது (1875)

மதுரைத் தமிழ்ச்சங்கத்து முதல் நூலாக வெளிவந்தது 'வைத்தியசார சங்கிரகம்' (பராபவ, வைகாசி 3). அந்நூல் முதற்கண் பதிப்பித்தவர் பொன்னுசாமித் தேவர். இரண்டாம் பதிப்புக் கொண்டு வர விரும்பினார் பாண்டித்துரை. அதனைப் பாசுகர சேதுபதியிடம் அறிவித்தார். "சிவத்தைப் பேணும் தவமிக்குடையவரும் அண்டினர்க்காக்கும் அருண் மிக்குடையரும், என்னுள்ளிடங்காணா அன்பிற் குரியவரும் எனதின்னு யிரனைய நன்னிலைத் துணைவரும் வரையாதளிக்கும் வள்ளலுமாகிய இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் இராஜா எம். பாசுகர சேதுபதியவர்கள், தாமே அதற்கு வேண்டும் பொருளுதவி செய்து வெளியிடுவதாகச் சொல்லி அவ்வாறே இற்றைக்கு 10 வருஷங்கட்கு முன் இதன் இரண்டாம் பதிப்பை அச்சிடுவித்துதவினார்கள். அச்சிட்ட பிரதிகள் அனைத்தும் செலவாயினமையால் மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பாக இம்முறைபதிப்பிக் கலாயிற்று". இங்ஙனம், பொ.பாண்டித்துரை (மதுரைத் தமிழ்ச்சங்கம் பராபவ வருடம் வைகாசி மாதம் 3)" என்பது முதற்பதிப்பின் முகவுரையின் நிறைவுப் பகுதி.

இந்நூல் ஆக்கிய அருமையர், இராமநாதபுர அரண்மனை எழுத்தரும் 'நீண்ட அநுபவ வைத்தியரும்' ஆகிய முத்துக் கருப்ப பிள்ளை அவர்கள்.

பொன்னுசாமித்தேவர் பதிப்பு, அவர் உடன்பிறந்த முத்துராமலிங்க சேதுபதி மகனாராகிய மன்னர் பாசுகரர் பதிப்பு, பொன்னுசாமித் தேவர் மகனார் பாண்டித்துரையார் பதிப்பு என இவ்வாறு தொடர்முறைத் தமிழ்ம்மையும், கொடைமையும் வரலாற்றுலகில் மிகமிக அரியவையாம்.

தனிச்செய்யுள் சிந்தாமணி :

'தனிச்செய்யுட் சிந்தாமணி' என்பதொரு தொகைநூல். 1908இல் வெளிவந்தது. 745 பக்கங்களை உடையது. அரிதின் முயன்று தொகுத்து வெளியீட்டுக்கு ஆக்கம் செய்தவர் 'ஒருகுடியில் எழு புலவர்' என்னும் பாராட்டுப் பெற்றவர்களும், தமிழ்ச்சங்கப் பணியில் ஒன்றி நின்றகுடும்பத்தில் ஒருவருமாகிய முகவூர் இரா. கந்தசாமிக் கவிராயர். பெரும் பொருள் செலவால் வெளியிட்டவர் முறையூர் வள்ளல் சி.சண்முகம் செட்டியார். அத்தொகைக்கு – தொகுப்புக்கு – பாண்டித்துரையார் பங்களிப்புக் குறித்து வரும் முகவுரைப் பகுதி.

"இந்நூற்கு, செந்தமிழ் வளர்க்கும் சீமானும் கல்வியும் செல்வமும் கவினப் பெற்றுள்ள வள்ளலுமாகிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந் பாண்டித் துரைத் தேவரவர்கள் தங்கள் அருமைத் தந்தையாரான ஸ்ரீமாந் பொன்னுசாமித் தேவரவர்களுடைய தனிப்பாகரங் களிலே தாங்கள் கேட்டெழுதி வைத்திருந் தனவற்றையும், தாங்கள் அவ்வப்போது பாடிய அரும் பாடல்கள் சிலவற்றையும் உபகரித்தலோடு, இவ்வாறே ஏனைய கல்விச் செல்வர்கள் பலரும் இயன்ற உதவி செய்திருத்தலால், இந்நூல் தமிழ் மக்கட்கெல்லாம் ஆனந்தம் பயவாமற் போகாது என்பது திண்ணம்" என்கிறார் செந்தமிழ் இதழாசிரியர். இதனைத் தொகுப்பாசிரியரும் குறிப்பிடுகிறார். (பதிப்புரை)

அபிதான சிந்தாமணி :

அபிதான சிந்தாமணி என்பது அக்காலத்தில் ஓர் அரிய தமிழ்க் கலைக் களஞ்சியம் (1899). ஆயிரத்து அறுநூற்று நாற்பது பக்கங்களைக் கொண்டது. ஆ. சிங்காரவேலு முதலியார் என்பவரால் தொகுக்கப்பட்டது. தமிழகத்தும் ஈழத்தும் முயன்று இந்நூல் வெளிவர அலமந்தார். அறிக்கைகள் வெளியிட்டு உதவுவாரை நாடினார். பயனில்லை! 'நூலைப் புற்றிடுவோமா' என நைந்தார். அவர் வரைகிறார்: "நான் வழிபடு கடவுளாகிய மலை மகள் நாயகர் உள்ளக் குறிப்போ, நான் முதன்முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ, இரண்டாம் முறைவெளிப்படுத்திய அறிக்கையோ, மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரவர்களின் திருக்குமாரரும் என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல்பவருமாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திர சாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச் சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக் கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சியந்திர சாலையில் என் முன்னிலையில் அச்சிட உத்தரவளித்து அப்போதைக்கப் போது பொருளுதவி செய்து வந்தனர். அவர்கள் அருஞ் செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்" என்பது அது.

தமிழ் நூல் அச்சீட்டில் பாண்டித்துரையார் கொண்ட ஆர்வம் மட்டும் இப்பகுதியால் புலப்படவில்லை. அவர்தம் செய்நேர்த்தி, செயன்முறை என்பனவெல்லாம் விளக்கம் பெறுகின்றனவாம்.

பிழையின்றிப் பதிப்பிப்பதே பதிப்பாளர் கடமை. அவ்வாறு ஊன்றி நின்று பதிப்பித்தவை தமிழ்ச்சங்கப் பதிப்புகளாம். பிழைப் பதிப்பைத் திருத்திக் காட்டுதல், பாடவேறுபாடு காட்டுதல், விடுபாடுகளை நிரப்புதல் என்பனவெல்லாம் சங்கச் செந்தமிழ் வழியே அறியக் கிடப்பனவாம்.

பாடம் திருத்துவார்க்குப் பாடம் :

நூலின் பாடத்தை மாற்றி மனம்போல் திருத்திப் பதிப்பிக்கும் பதிப்புப் பற்றிப் பாண்டித்துரையார் கொண்டிருந்த ஆழ்ந்த கவலையும் அவற்றை அழித்தொழிக்க முனைந்த முனைப்பும் கருதற்பாலன திருக்குறளைத் திருத்திப் பதிப்பித்த ஆங்கிலர் கையில் இருந்த நூல்களையெல்லாம் ஒருங்கே விலைதந்து வாங்கி எரியூட்டியழித்த ஆக்கச் செயல் கோடியில் ஒருவர் தமக்கும் வாராதாம். சங்கப் பதிப்பில் இக்குறிப்பும் விடுபடக்கூடாது என்பதால் எழுதப்பட்டது இது.

பழம்பதிப்புக்கு உதவிய ஏடுகள் :

சங்கப் பதிப்பு விரிவுமிக்கது. நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாறுடையது. அந்நாளைப் புலமைச் செல்வர்கள் பதிப்புக்குப் பாண்டித்துரையின் வண்மை உதவியது என்றால், அவர் உண்டாக்கிய சங்கத்தில் தொகுத்து வைக்கப்பட்ட ஏடுகள் எத்தனை பழம்பதிப்பாளர்க்கு உதவின என்பதையும் சுட்டிய அளவில் அமைவோம். சௌரிப் பெருமாள் அரங்கனார் குறுந்தொகைப் பதிப்பு, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் நற்றிணைப் பதிப்பு, உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை நற்றிணைப் பதிப்பு, டாக்டர். உ.வே. சாமிநாதையர் புறநானூற்றுப் பதிப்பு, சைவ சித்தாந்த சமாசத்தின் சங்க இலக்கியப் பதிப்பு முதலியவற்றுக்குத் தமிழ்ச்சங்க ஏடுகள் பயன்பட்டமை அப்பதிப்புகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளாம்.

வேண்டுதல் :

சங்கப் பதிப்புகள் வரிசைப்பட ஆயப்பெறுதல் வேண்டும். அது தனி நூலாக்கமாகி விடும். கட்டுரை அளவுக்குச் சுருக்கிய சிதறல் செய்திகள் இவை எனில் சாலும்.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்



இல. கணேசன்
சென்னை.

வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் இராமநாதபுர சமஸ்தான பரம்பரையில் தோன்றியவர். பாலவநத்தம் புரந்த பாண்டியராவார். சிறந்த தமிழறிஞர். நல்ல தமிழன்பர். இரத்தத்தோடு கலந்த தமிழ்ப்பற்று மிகுந்த சான்றோராவார். சிறந்த சிவபக்தர். எல்லாவற்றிற்கும் மேலாக மாபெரும் தேசபக்தர்.

இவர் காலத்தில் இராமநாதபுரசமஸ்தானம் நல்ல தமிழறிஞர்களைப் புரந்து வந்தது.அவர்களுள் உயர்திரு வாளர்களான மு. இராகவையங்கார், ரா. இராக வையங்கார், திருநாராயணையங்கார், பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சதாவதானி முத்துச்சாமி ஐயங்கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இந்த அறிஞர்களுடன் இணையாகப் பேசும் தமிழறிவு கொண்டவர் பாண்டித்துரைத் தேவரவர்கள்.

ஒருசமயம் பாண்டித்துரையவர்கள் மதுரைநகர் வந்திருந்தார். அதுசமயம் அவருக்குக் கம்ப ராமாயணமும், திருக்குறளும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்விரு நூல்களையும் பலவிடங்களில் தேடியும் அவை கிடைக்கவில்லை. உறுதிசெய்து கொள்ளப் (Reference) புத்தகங்கள் மதுரையில் கிடைக் காமை அவருக்கு மிகுந்த வேதனை ஏற்படுத்தியது. தமிழின் மிகச்சிறந்த இலக்கியங்களான இப்புத்தகங்கள், தமிழ் வளர்த்த மதுரையிலே கிடைக்காதது அவருக்கு அபாய அறிவிப்பாகத் தோன்றியது. இந்த நிலைக்கு முடிவு கட்ட எண்ணினார். தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்கவும், மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவும், நல்ல தமிழறிஞர்களை உருவாக்கவும், சங்கம் வளர்த்த மதுரையிலே மீண்டும் ஒரு தமிழ்ச்சங்கம் - நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முடிவெடுத்தார். அங்ஙனம் அவரால் தோற்றுவிக்கப்பட்டதுதான் இன்றைய மதுரைத் தமிழ்ச்சங்கமாகும். அப்படிப்பட்ட தமிழுணர்வு படைத்த தமிழ்த் தொண்டர், வள்ளல் பாண்டித்துரைத் தேவராவார்.

இராமநாதபுரம் சமஸ்தானத்துத் தமிழறிஞர்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு அறிஞர்களுள் ஒருவராகிய திருநாராயணையங்காரிடத்தும் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. சிறந்த சிந்தனையாளரை அவர் திருநாரா யணையங்காருள் கண்டார். அவரைத் தலைமைப் புலவராக இருந்து பணியாற்றுமாறு கேட்க, மிகுந்த நட்புடன் அவரை மதித்த திருநாராயணையங்காரும் அவரது வேண்டுகோளை ஏற்றார். தமிழாய்வுகளைப் பதிக்கச் 'செந்தமிழ்' என்ற ஆய்வுப் பத்திரிகை வெளியிடவும் முடிவாயிற்று. அதற்கு ஆசிரியர் பொறுப்பையும் தலைமைப் புலவரான திருநாராயணை யங்காரே ஏற்றார். ஆய்வுப் பத்திரிகையும், தமிழ் இலக்கியங்களும் அச்சிடச் செந்தமிழ் அச்சுக்கூடமும் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்ச்சங்கத்தில் தமிழறிஞர்களை உருவாக்கும் பணியும் கூடவே நடந்தது. அரசஞ் சண்முகனார் தொடங்கி எழுத்தாளர் நா. பார்த்தசாரதி வரை மிகச்சிறந்த தமிழறிஞர்கள் வெளிவந்துள்ளனர். இப்படித் தமிழை வளர்க்க அருந்தொண்டாற்றிய பெருமகனார் பாண்டித்துரையவர்களால், மிகச்சிறந்த நூல் நிலையமும் தமிழ்ச்சங்கத்தில் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்ச்சங்கத்துத் தலைமைப்புலவரான திருநாராயணை யங்காரிடம் அவருக்கு மிகுந்த ஈடுபாடு. அன்பும், பக்தியும் கலந்த உறவு அது.

ஒருசமயம் பாலவநத்தத்து அரண்மனைக்குத் தமிழ்ச்சங்கம் தொடர்பாகக் கலந்து பேசுவதற்காகத்

தலைமைப்புலவர் சென்றிருந்தார். அவ்வமயம் பாண்டித்துரைத் தேவரவர்கள் வேறு அலுவல் நிமித்தம் வெளியே சென்றிருந்தார். நல்ல வெயில் காலம், மதிய வேளை. தலைமைப்புலவருக்கும் அகவை எழுபதுக்கு மேல் ஆகிவிட்ட சமயம். அரண்மனைக் கார்யஸ்தர் அவருக்கு இருக்கையளித்து அமருமாறு செய்து 'சற்று நேரத்தில் வந்து விடுவார்' என்று செய்தி கூறி விட்டுத் தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்று விட்டார். இருக்கையில் அமர்ந்த தலைமைப் புலவர் அயர்ச்சியில் கண்ணயர்ந்து விட்டார். சற்று நேரத்தில் பாண்டித் துரைத் தேவரவர்கள் திரும்பிவர, தலைமைப்புலவரும், ஆசானுமாகிய திருநாராயணையங்கார் அயர்ச்சியில் நாற்காலியில் அமர்ந்தபடி உறங்கிவிட்டதையும், முகத்தில் முத்து முத்தாய் வியர்வை அரும்பியிருப் பதையும் கண்டார். அதுசமயம் அங்குவந்த அரண்மனைப் பணியாளர்கள் புலவரை எழுப்ப முனைய, அவர்களைத் தடுத்த தேவரவர்கள், விசிறி கொண்டுவரப் பணித்தார். விசிறி கொண்டு வந்ததும், அதைத் தாம் வாங்கிப் புலவருக்கு விசிறத் தொடங்கினார். குளிர்ந்த காற்றுப்பட்டதும் அயர்ச்சி நீங்கிய புலவர் திடுக்குற்றார். "உங்களுக்கு ஏராளமானோர் பணி செய்ய இருக்க, நீங்கள் இப்படிச் செய்யலாமா?" என்றார் புலவர் திருநாராயணையங்கார். "முரசு கட்டிலில் துயின்ற மோசிகீரனாருக்காக நம் தமிழ் மன்னன் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை கவரி வீசவில்லையா? நான் என்ன, தாங்கள் துயில் கலையும்படி செய்து விட்டேனா!" என்று வினயமாகப் பதில் கூறினார் வள்ளல் பாண்டித்துரை. எத்தகைய தமிழ்ப்பற்றும், தமிழ்ப்புலவர்களை மதிக்கும் சங்ககால மன்னர்களுக்கிணையான பண்பும் வாய்த்தவராக இருந்திருந்தால் இப்படிக் கூறியிருப்பார். அவருக்கு இணை அவர்தாம்.

வள்ளல் பெருமான் தலைமைப்புலவரை, தம் ஆசானை, ஐயங்கார் ஸ்வாமிகள் என்றே அழைப்பார். நல்ல சிவபக்தரான பாண்டித்துரையவர்கள் எப்பொழுதும் திருநீறும் குங்குமமும் இலங்கும் நெற்றியுடனேதான் காட்சியளிப்பார். அவருக்குப் பிறர் எழுதும் கடிதங்களில் 'சிவமயம்' என்று கடித முகப்பில் எழுதப்பட்டிருந்தால் மட்டுமே அக்கடிதத்தை அவரிடம் காரியஸ்தர் கொடுப்பார். அந்தக் கடிதங்களை மட்டுமே அவர் படிப்பார். அங்ஙனம் 'சிவமயம்' என்று எழுதப்படாத கடிதங்களைக் காரியஸ்தரே படித்து விவரம் கூறி விடுவார். ஆனால் தலைமைப்புலவர் திருநாராயணை யங்கார் வைணவர். அவர் 'ஸ்ரீராமஜெயம்' என்று எழுதுவார். ஆனாலும் கார்யஸ்தர் ஐயங்கார் ஸ்வாமிகளிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்றால், உடனே வாங்கிப் படித்துவிடுவார். இருவரிடையே அப்படி ஒரு ஈர்ப்பு, தமிழில்.

தலைமைப்புலவருக்குச் சொந்தமாக வீடு இருக்க வேண்டும், வாடகை வீட்டில் இருக்கக்கூடாது என்ற எண்ணம் வள்ளல் பெருமகனார்க்கு ஏற்பட்டது. தமிழ்ச்சங்கம் இருந்த பகுதி அந்தக்காலத்தில் ஊருக்கு வெளியே இருந்தது. வெளிவீதி ஊருக்குப் புறத்தே இருந்த சாலையாகும். அதற்கும் வெளியே தோப்பும் துரவுகளும் இருந்த பகுதிகள். அப்பகுதிகளில் செல்வாக்கு மிகுந்தவர்கள் பங்களாக்கள் அமைத்துக் கொண்டு, கட்டுக்காவலுடன் வசித்துவந்தனர். அத்தகைய ஒரு பங்களாதான் தமிழ்ச் சங்கத்துக்கு வாங்கப்பட்டது. தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த அதே பகுதியில் மேற்குப் பக்கத்தில் 11 செண்ட் அளவான நிலம் விலைக்கு வர, தலைமைப்புலவருக்கு வீடு அமைக்க எண்ணி அதை வாங்கிக் கொடுத்தார். தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சி குறித்து அச்சமயம் பாண்டித்துரையவர்கள் தென்னாப்பிரிக்கப் பயணம் மேற்கொள்ள வேண்டி வந்தது. தென்னாப்பிரிக்கப் பயணம் சென்றிருந்த சமயம் தலைமைப்புலவர் வீடுகட்டும் பணி நடந்து விட்டது.

தலைமைப்புலவர் தமக்குத் தேவையான அளவு போதுமென்ற மனம் படைத்தவர். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்று கருதும் பண்பாளர். மனையிடத்தில் பாதியை வேறு ஒருவருக்கு விற்று அந்தப் பணத்தையும், வள்ளல் தந்த பணத்தையும் கொண்டு சிறிய வீடாகக் கட்டிக்கொண்டுவிட்டார். தென்னாப்பிரிக்கப் பயணம் முடித்துத் திரும்பிய பாண்டித்துரைத் தேவரவர்கள் தலைமைப்புலவரின் வீட்டைக் காண வந்தார். பார்க்க வந்தவர் மனம் வேதனைப்பட்டார். காரணம் தலைமைப்புலவரின் வீடு சிறியதாக இருந்ததுதான். "பண்டிதர்வாள்" என்று விளித்துத் தம் மனக்குறையை வெளிப்படுத்தினார். ஏனெனில் எப்பொழுதும் தலைமைப்புலவரை ஐயங்கார் ஸ்வாமி என்றே அழைக்கும் பழக்கமுடையவர். "பண்டிதர்வாள்"! என்ன இப்படிச் செய்து விட்டீர்களே!" தமிழ்ச் சங்கத்துத் தலைமைப்புலவரின் வீடு இவ்வளவு சிறியதாக இருக்கலாமா" என்றார். 'பண்டிதர்வாள்' என்று தலைமைப்புலவரைப் பாண்டித்துரைத் தேவர்

அழைத்தது அந்த ஒரு சமயத்தில் மட்டும்தான். புலவர் பதில் கூறினார். "எனக்கு இவ்வளவு போதும். தமிழ்ச்சங்கத்துக்கு நிறையச் செலவு இருக்கிறது, அனாவசியச் செலவு வேண்டாமே, துணைக்குப் பக்கத்தில் ஒரு குடும்பம் இருப்பது உதவியாகவும் இருக்கும். அதனால்தான் இப்படி ஏற்பாடு செய்தேன்" என்றார். அதற்குப் பெருமகனார், "இருக்கட்டுமே, நீங்கள் தமிழ்ச்சங்கத்தின் தலைமைப்புலவர். சங்கத்திற்கும் தலைமைப்புலவருக்கும் எனத் தனி மரியாதை இருக்க வேண்டாமா, தலைமைப்புலவரின் வீடு சாதாரணமாகவா இருப்பது, அது தமிழ்ச் சங்கத்துக்கும் மதிப்புக் குறைவல்லவா." "இருக்கட்டும், பிறகு பெரிதாக அமைத்துக் கொள்ளலாம்" என்று கருத்தும் சமாதானமும் கூறி விடை பெற்றார்.

வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் முதலீடு செய்திருந்தார். வ.உ.சி.யின் தமிழ் ஞானத்திலும், தேசபக்தியிலும் மிகுந்த மதிப்பு. இவரும் தேசபக்தராயிற்றே! வ.உ.சி.க்குக் கை கொடுத்தார். துரதிருஷ்டவசமாக வ.உ.சி. சிறை சென்றார். வெள்ளையர்கள் தொல்லையால் கம்பெனி மூழ்கும்படியாயிற்று. அவ்வமயம் துரையவர்கள் உடல்நலம் சீர்கெட்டது. நோயின் கடுமையால் அவர் படுத்தபடியானார். அப்பொழுதும் தமிழ்ச்சங்கம் பற்றியே எண்ணம். அவரைக் காணவந்திருந்த தலைமைப் புலவரிடம் "எனக்குப் பிறகு தமிழ்ச் சங்கத்தின் நிலை என்னாகுமோ" என்றார். தலைமைப் புலவர் "நானிருக்கும் வரை தமிழ்ச்சங்கத்திற்குக் குறை வராது" என்று வாக்களித்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்த இணைவேந்தரே தலைமைப் புலவரைப் பல்கலைக்கழகப் பணிக்கு வருமாறு அழைத்தார். பத்து மடங்கு ஊதியம் அதிகம் கிடைக்கும் வாய்ப்பிருந்தும், தலைமைப்புலவர் "பாண்டித்துரைத் தேவரின் ஆன்மா சாந்தியடையாது. நான் வரமாட்டேன்" என்று கூறி மறுத்துவிட்டார். தம் இறுதிநாள் வரை தமிழ்ச்சங்கப் பணியாற்றினார்.

இப்படித் தமிழன்பும் அதனால் நட்பும் மேலோங்கிய இருபெரும் தமிழன்பர்களால் தமிழ்ச்சங்கம் தோன்றித் தளர்நடையிட்டு வளர்ச்சி பெற்று நிற்கிறது. இன்று நூற்றாண்டு கடந்து நிற்கிறது. நாமும் மகிழ்வுடன், மேலும் வளர, வளம் பெற, சிறக்க, ஆலவாய் அண்ணலையும், அங்கயற்கண்ணம்மையையும் வேண்டி வாழ்த்தி வணங்குகிறோம்.

பாசுகர சேதுபதி மறைந்த நாளை பாடியது

சோபகிரு தாண்டொன்பான் றூர்ம்மதியீ ராறுவளர்
மாபிறையெண் ணாளிரவி வாரமீன்-நீபமலை
மாதுபதி தூக்கு மலரடியைப் பாற்கரனாஞ்
சேதுபதி சேர்ந்த தினம்

வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரின் வாழ்வும், பணியும்



முனைவர் க. சின்னப்பா,
மதுரை.

முன்னுரை

தமிழ் நாட்டில் பல வள்ளல்கள் தோன்றி மறைந்தனர். அவர்கள் மறைந்தாலும் அவர்களின் புகழ் இன்றும் மக்களிடையே பேசப்பட்டு வருகிறது. அவ்வள்ளல்களுள் ஒருவராகிய வள்ளல். பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு வள்ளலாக இருந்தார். இவ்வள்ளலின் வாழ்வும், பணியும் வணங்குதலுக்குரியன.

பிறப்பு

தமிழ் வள்ளலான பொன்னுச்சாமித் தேவருக்கும், முத்து வீராயி நாச்சியாருக்கும் 21.3.1867இல் மூன்றாவது மகனாகப் பாண்டித்துரைத் தேவர் தோன்றினார். இளம் வயதிலேயே தந்தையை இழந்த இவர் சேஷாத்திரி ஐயங்கார் கண்காணிப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்.

"பேச்சிலே பெரியசாமி
பெருமையிலே சீமைச்சாமி
அழகிலே பாண்டித்துரை
அமைந்தார் பொன்னுச் சாமிமக்கள்"

என்னும் நாட்டுப்புறப் பாடலில் பாண்டித்துரைத் தேவரும், அவர் உடன் பிறந்தோரும் வளர்ந்த சிறப்பு போற்றுதற்குரியது.

கல்விப்பயிற்சி

சேஷாத்திரி ஐயங்காரின் கண்காணிப்பில் பாண்டித்துரையவர்கள் தக்க கல்விப் பயிற்சி பெற்று வந்தார். அழகர் ராஜு என்ற புலவர், இளம் பருவம் முதல் ஆசிரியராவார். வழக்குரைஞர் வேங்கடேசுவர சாஸ்திரி என்பவர் இவரது ஆங்கில ஆசிரியராயிருந்தார். இவர்களின் திறமையாலும் தம் இயற்கையறிவினாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பாண்டித்துரைக்கு இளமையிலேயே வாய்த்தது. இராமநாதபுரத்தில் சுவார்ட்ஸ் துரையால் உருவாக்கப் பெற்ற உயர்தரப்பள்ளியில் சேர்ந்து இவர் ஆங்கிலப் பயிற்சி பெற்று வந்தார். அக்காலத்தில், அப்பள்ளிக்குத் தலைவராக இருந்தவர் ஷீட்டிதுரை என்பவர். தேவருடன் பள்ளித் தோழராக இருந்தவர்களிலே பூச்சி சீனிவாச ஐயங்காரும் ஒருவர்.

பாலவனத்தம் ஜமீன் நிர்வாகம்

பாண்டித்துரைத் தேவர் தம் சொத்துக்களை ஏற்கும் பருவத்தை அடைந்தார். இராமநாதபுரம் பாலவனத்தம் என்ற ஜமீனும், வேறு பல கிராமங்களும் இவருக்கு உரிமைகளாக அமைந்தன. அவ்வுரிமைச் சொத்துக்களின் நிர்வாகம் யாவும் தேவரின் நேர்பார்வையில் அமையும்படி, ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்காரால் 1884ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 4ஆம் தேதி அளிக்கப்பட்டன.

பாண்டித்துரைத் தேவர் தம் ஜமீன் நிர்வாகத்தை அடைந்த சில ஆண்டுகளில் பாசுகரரும் சேதுபீடத்தில் அமர்ந்தார். ஆகவே, பெரும் பொருட் செல்வங்களையும், கலைச் செல்வங்களையும் தங்கள் குலத் தனங்களாகப் பெற்ற சேது குலத் தோன்றலும், தேவர் குலத் தோன்றலும் ஆகிய தமிழ்ச் செல்வர் இருவரும் சூரிய சந்திரர் தோற்றம் போல

இராமநாதபுரத்தைப் பொலிவு பெறச் செய்தனர்.

இவ்வாறாக ஜமீன் பொறுப்பேற்ற பாண்டித்துரைத் தேவர் அவர்கள் பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்தினார்.

பதிப்புப் பணிக்கு உதவி

தமிழ் நூல்கள் மறைந்து விடாமல் இருப்பதற்காகத் தம் கொடைக்கரம் கொண்டு பதிப்புக்கலையால் மீட்டுருவாக்கம் கொடுத்தவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்.

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த உ.வே. சாமிநாதஐயர் அவர்கள், தேவர் அவர்களால் இராமநாதபுரத்திற்குப் பலமுறை அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றார்கள். புறப்பொருள்வெண்பாமாலை, மணிமேகலை என்ற இரண்டு பழைய நூல்களையும் முதலில் உ.வே.சா. அவர்கள் வெளியிடுவதற்கு வேண்டிய பொருளுதவி செய்தவர் நம் தேவர் அவர்கள்.

தேவர் அவர்கள் தம் ஆசிரியருள் ஒருவரான இராமசாமிப் பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு தேவாரத் தலமுறைப் பதிப்பை முதன் முதல் வெளியிடத் தூண்டி உதவி புரிந்தார். சிவஞான முனிவர் இயற்றிய பிரபந்தங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, “சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு” என்ற பெயருடன் பிள்ளையவர்கள் வெளியிட்ட நூல் நம் தேவரின் பொருளுதவி பெற்று வெளிவந்தவையாகும். சபாபதி நாவலர் என்ற பெரும் புலவரைக் கொண்டு அச்சிவஞான முனிவரால் இயற்றப்பட்ட “சிவசமவாத உரை மறுப்பு” முதலிய வாத நூல்களை வெளியிடச் செய்தார். சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்கள் சிலவும் தேவரின் ஆதரவைப் பெற்று வெளிவந்தனவாகும்.

தமிழ்ச்சங்கம் தோற்றம்

காப்பியக் கவிஞர்கள் தம் கவித்திறத்தால் தமிழ்த்தாய்க்கு அழகு செய்யும் வண்ணம் பல காப்பியங்களைப் பாடி அழகு செய்தனர். நம் தேவர் அவர்களோ தமிழ்த்தாய் குடிகொள்வதற்குச் சங்கம் அமைத்துக் கொடுத்து, அச்சங்கத்தில் தமிழ் மொழி செழித்து வளர்வதற்கு வழிசெய்தார்.

பாண்டித்துரைத்தேவர் ஒருமுறை மதுரைக்குச் சென்று அங்கே சிலகாலம் தங்க நேர்ந்தது. தேவர் வருகையை அறிந்த மதுரை அறிஞர் பலர் அவரது சொற்பொழிவுகளைக் கேட்கப் பெரிதும் விரும்பினர். பாண்டித்துரைத் தேவர் சொற்பொழிவு நடத்த நேர்ந்தபோது கம்பராமாயணம், திருக்குறள் விரும்பி நண்பர் சிலரிடம் சொல்லி அனுப்பினார். நூல்கள் எவரிடமிருந்தும் இவர் கைக்கு எட்டவில்லை. இந்நிலையை அறிந்ததும் செந்தமிழின் பிறப்பகமான மதுரையிலே, தமிழுக்குக் கதியாகத் திகழும் கம்பராமாயணமும், திருக்குறளும் கிடைப்பது அருமையாய் விட்டதே என்று பாண்டித்துரைத்தேவர் வருந்தினார். அவ்வருத்தம் அவருள்ளத்தில் நன்கு பதிந்தும் விட்டது. அப்பெருங்குறை நீங்க மதுரையில் தமிழ் வளர்ந்தோங்கும்படி செய்யும் வழிமுறையைப் பாண்டித்துரைத்தேவர் ஆராய்ந்தார்.

மாகாண அரசியல் மாநாடு

1901 ஆம் ஆண்டு மே மாதம் 21,22,23 ஆகிய நாட்களில் சென்னை மாகாண அரசியல் மாநாடு மதுரை மாநகரில் கூடியது. அதன் பொருட்டு அரசியல்துறை வல்லுநர்களும், அறிஞர்களும் அப்பெருநகரில் கூடினர். அக்கூட்டத்திற்கு நம் வள்ளல் துணைத்தலைவராயிருந்து, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுச் சொற்பொழிவு ஆற்றினார். மூன்று நாட்கள் கூடிப் பல அரசியல் தீர்மானங்களை அம்மகாசபை நிறைவேற்றியது. அதன் முடிவில் பாண்டித்துரையார் தம் வேண்டுகோளொன்றை அச்சபையோர்க்கு வெளியிட்டார். தமிழ் வளர்ச்சி பெருகியிருந்த மதுரை மாநகரின் பழம்பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும் சுருங்கக்கூறி அந்நகரில் தமிழ் மொழி நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றை உருவாக்க விரும்புவதாகவும், மறுநாள் சேதுபதி பள்ளி மண்டபத்தில் கூடப்போகும்

பேரவைக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளும் நகரமக்களும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மறுநாள் கூடிய கூட்டத்தில் தமிழ்ச்சங்கம் அமைப்பது ஒருமனதாக நிறைவேறியது. இம்மாநாடே நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்குக் கருவாய் அமைந்தது.

தமிழ்ச்சங்க உருவாக்கம்

1901ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பெறும் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் பிற அறிஞர்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் சென்றன. பிலவ வருடம் ஆவணி மாதம் 13ஆம் தேதி, பானுவாரமும், சித்திரா நட்சத்திரமும் கூடிய நன்னாளிலே பகல் 1.30 மணிக்கு மேல் 2.45 மணிக்குள் தனுர்லக்னத்தில் சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தே சேது வேந்தர் திருமுன்பும் பேரறிஞரின் குழாத்திடையும் மதுரைத் தமிழ்ச்சங்கம் உருவாக்கப் பெற்றது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகச்சாலை, நூலாராய்ச்சி சாலை முதலியன சேதுபதி பள்ளியை ஒட்டியிருந்த தனிக் கட்டடங்களில் அன்றே தொடங்கப் பெற்றன. அரசரும், புலவரும், பிறரும் "மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வாழ்க" என்று ஒருசேர வாழ்த்தலாயினர். அன்று முதல் மூன்றுநாள் வரை நடந்த பெருங்கூட்டங்களில் அரியபல சொற்பொழிவுகளை அறிஞர் பலர் நிகழ்த்தினர்.

வடலூரில் மண்ணுயிர்களுக்கு வயிற்றுப் பசி இல்லாதிருக்க வள்ளலார் ஏற்றி வைத்த தீபம் இன்றளவும் எரிந்து கொண்டே இருக்கிறது.

வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரோ அறிவுப்பசி போக்குவதற்காகவும், அதன் வாயிலாகத் தமிழ் வளர்ச்சி பெறுவதற்காகவும் மதுரையில் தமிழ்த்தீபம் ஏற்றி வைத்தார். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தல் என்பது பாண்டித்துரைத் தேவர் வாழ்வில் மெய்யானது.

பாண்டித்துரைத் தேவரின் இலக்கியப் பணி

பாண்டித்துரைத் தேவர் நாவன்மை மிக்க பேச்சாளராகவும், சிறந்த ஆய்வாளராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் கவிபாடுவதில் வல்லவராகவும் திகழ்ந்தார்.

இவர் இயற்றியனவாகப் பின்வரும் படைப்புகள் காணப்படுகின்றன:

1. சிவஞானபுரம் முருகன் காவடிச்சிந்து
2. ராஜராஜேஸ்வரி பதிகம்
3. சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை
4. தனிப்பாடல்கள்
5. ஆராய்ச்சிப் பதிப்புரைகள், முகப்புரைகள் முதலியன
6. பன்னூல் திரட்டு

இப்படைப்புகள் அனைத்தும் இவரது இலக்கியப் பணியின் சிறப்பினைப் பறைசாற்றுவனவாகத் திகழ்கின்றன.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்

தேவர் அவர்கள் மிகுந்த செந்தமிழ்ப் பற்று மிக்கவர். தமிழில் பிழை மலிந்த நூற்பதிப்புகளைக் கண்டு அப்பிழைகள் தமிழ்த்தாயின் அங்கத்தில் ஏற்பட்ட வடுவாக எண்ணி அதற்கு மருந்தாகவும் தானே அமைந்தார். இதுபற்றி ஒரு சிறு நிகழ்ச்சி. மதுரையில் ஸ்காட்துரை என்ற ஆங்கிலோ இந்தியர் ஒருவர் வக்கீலாக இருந்தார். இவர் தமிழ் மொழியில் அரைகுறையான பயிற்சியுடையவர். வள்ளுவரது திருக்குறட் பாடல்களில் எதுகை மோனை இல்லாத இடங்களையெல்லாம் திருத்திப் புதியதான குறட்புத்தகமொன்றை அச்சிட்டு வெளியிட்டிருந்தார். மதுரையில் தேவர் அவர்களை அவர் ஒருமுறை சந்தித்தபோது, தாம் செய்த அவ்வரிய வேலையைத் தெரிவித்து, அதன் பிரதியொன்றையும் தேவர்க்கு அளித்தார். அதைப் பெற்ற தேவர், அதன் முதற்பக்கத்தைத் திறந்ததும்,

“அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
உகர முதற்றே உலகு”

என்று அமைந்திருந்தது. இவ்வாறே பல குறட்பாக்கள் திருத்தப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டதும் தேவரவர்கட்குக் கோபம் ஒரு பக்கம் பொங்கி எழுந்தது. ஆயினும் அதை அடக்கிய வண்ணமே அவரிடமிருந்த மொத்த பிரதிகளையும் தாமே வாங்கிக் கொள்வதாகக் கூறி அப்பிரதிகளை வாங்கி குழியொன்று தோண்டி அப்புத்தகப் பிரதிகள் முழுமையும் அதனுள் இடச் செய்து தம் கண்முன் தீயிட்டுக் கொளுத்தும்படி உத்தரவிட்டார்.

தேவர் தேசபக்தியும் தெய்வபக்தியும் மிகுந்தவர்

பாரி தம் நாட்டில் முல்லைக்கொடி வாடாமல் இருப்பதற்காகத் தாம் ஓட்டி வந்த தேரினை ஈந்தான். அவனின் கொடை மரபில் வந்த வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமிழ்நாட்டுக் கடலில் கப்பல்விட எண்ணிய வ.உ.சி.க்கு ரூபாய் ஒரு இலட்சம் கொடுத்து உதவியதோடு தமக்கு வேண்டியவர்களையெல்லாம் அதனில் ஈடுபடும்படியும் செய்து உதவினார். அவர் காலத்தில் அவர் கொடுத்த ஒரு இலட்ச ரூபாய் என்பது இன்று பல கோடிகளுக்குச் சமமானது.

இத்தகைய அரும்பணியை ஆற்றிய தேவரவர்கள் 1911ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் தேதி விண்ணுலகம் அடைந்தார். தமிழுக்காக ஒடி உழைத்த உத்தமர் தனிமையில் உறங்க எண்ணியதை நினைத்து “செந்தமிழ் வளர்த்த செல்வப் பாண்டியன் சென்றனரே” என்று தமிழ்ப்புலவர் பலர் வருந்தினர்.

முடிவுரை

“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க பாண்டித்துரைத் தேவர் கருவிலே திருவுடையவராய் இம்மண்ணுலகில் தோன்றி தமிழுக்கும், தமிழ்த் தாய்க்கும் பணிகள் பல செய்து புகழொடு இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரின் வாழ்வும், பணியும் இன்று வரையிலும் தமிழ் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது.

வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் படைப்புகள்



முனைவர்.வீ.காந்திமதி,
மதுரை.

தமிழ் நிலைபெற்ற மதுரையில் கடைச்சங்கம் என்னும் மூன்றாம் தமிழ்ச்சங்கம் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் நிறைவுற்றது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய மன்னனின் பெயரைக் கொண்ட பாண்டித்துரைத்தேவரவர்கள், நான்காம் தமிழ்ச்சங்கத்தை மதுரையில் தோற்றுவித்தார். கடைச்சங்கத்தின் நிறைவுக் காலத்தில் இருந்த பாண்டிய வேந்தனின் பெயர் உக்கிரப் பெருவழுதி ஆகும். 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அமைந்த நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனராம் பாண்டித்துரைத் தேவரவர்களின் இயற்பெயர் உக்கிரப்பாண்டியன் என்பதாம். 'வழுதி' என்ற சிறப்புப் பெயர் 'பாண்டியன்' என்ற வேந்தனின் பெயரைக் குறிப்பதாகும். அவ்வாறாயின் 'உக்கிரப் பெருவழுதி' என்றாலும், உக்கிர பாண்டியன் என்றாலும் ஒன்றுதானே! உக்கிரப் பெருவழுதி காலத்தில் ஒடுங்கிய மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் உக்கிரப்பாண்டியன் என்னும் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் மீண்டும் பிறந்தது. பாண்டிய வேந்தன் மறுபிறவி எடுத்ததால் இன்றைய நான்காம் தமிழ்ச்சங்கம் மறுபிறப்பெடுத்ததோ என்று கருதத் தோன்றுகிறது.

தமிழ்மொழிக்குக் 'கதி'யாகத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவரவர்கள், தம் புலமை நயத்தால் பல்வேறு படைப்புகளைப் படைத்துத் தமிழ்த்தாய்க்கு அணிசேர்த்தார். அவரது படைப்புகள் பலதிறத்தன.

1. தாமே கவிபுனைந்து இயற்றிய நூல்கள்
2. தொகுத்த தொகுப்பு நூல்கள்
3. செந்தமிழ் இதழில் எழுதிய விளக்க உரைகள், கட்டுரைகள்
4. தனிப்பாடல்கள்,
5. நூலாராய்ச்சி செய்து பதிப்பித்த நூல்கள்

என்றவாறு அவரது படைப்புலகம் விரிந்து காணப்படுகின்றது.

1.நூல்கள்

1. சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை
2. காவடிச் சிந்து
3. இராஜ ராஜேஸ்வரி பதிகம்

1.1 சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை

சைவ சித்தாந்தத்தில் வல்லவரான சிவஞான சுவாமிகள், ஈசன்பால் மிகுந்த பக்தியும், இறையடியார்களிடம் மதிப்பும் கொண்டவராக விளங்கினார். 18-ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த ஆதீனமாக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனகர்த்தரான குருநமசிவாய தேசிகரின் திருவருள் கிடைக்கப் பெற்றார். சைவ சமய சாத்திரங்களை முறையாகக் கற்று, சிவதீட்சையும் பெற்றார். சிவஞான யோகி என்றும், சிவஞான சுவாமிகள் என்றும், திராவிடம் மாபாடியம் பாடிய சிவஞான முனிவர் என்றும் போற்றப்பட்டார். இத்தகு சிறப்புகளுக்குரிய சுவாமிகளைக் காணும் வாய்ப்பு, பாண்டித்துரை தேவரவர்களுக்குக் கிட்டியது.

சைவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பாண்டித்துரைத் தேவரவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்ற பொழுது, சிவஞானசுவாமிகளது திருவுருவத்தைக் கண்டு மகிழ்ந்தார். சுவாமிகளின் கருணை பொழியும் முகமும், திருநீற்று நெற்றியும், துறவித் தோற்றமும் கண்ட தேவரவர்கள் அச்சுவாமிகள் மீது இரட்டைமணிமாலை பாடினார்.

வெண்பாவும், கலிப்பாவுமாக மாறிமாறிப் பாடப்பெற்ற 21 செய்யுட்களைக் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. சிவஞான முனிவரிடம் தேவரவர்கள் கொண்டிருந்த பக்தியும், அவரது புலமைத்திறனும் நூலுள் புலப்படுகின்றன. இரண்டுவகை யாப்புகளில் அமைந்த பாடல்களைக் கொண்டுள்ளதால் இந்நூல், 'இரட்டை மணிமாலை' என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

'சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை' என்னும் இந்நூல், சீமான். பழ.சி. சண்முகஞ் செட்டியாரால் 1905-ஆம் ஆண்டில் தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப் பெற்றுச் சங்கப் பதிப்பு நூலாக வெளியிடப் பெற்றது. பாண்டித்துரைத் தேவரவர்கள், சிவஞான சுவாமிகள் மீது முன்னம் இயற்றிய தனிப்பாடல்கள் மூன்றும் நூலுள் சேர்க்கப்பட்டுள்ளன.

"ஆய்சம யம்பலவு மாரியமா பாடியமே
மேயவென நற்சைவ மேன்மையுந் – தூயதமிழ்ப்
பாடியமும் பாரிற் பகர்ந்தான் பரனடியே
நாடுசிவ ஞானமுனி நன்கு"

பலசமயங்களும் போற்றும் வகையில், சைவம் மேன்மையுற வடமொழியில் அமைந்த மாபாடியத்தைச் சிவஞானமுனிவர் தூய தமிழில் பாடியுள்ளார் என்பதைப் பாண்டித்துரைத் தேவரவர்கள் இப்பாடலில் பகர்கின்றார்.

எல்லோரும் புரிந்து கொண்டு பயிலும் வகையில் எளிய தமிழில் அமைந்த இவ்விரட்டைமணிமாலை, தேவரவர்களின் பா இயற்றும் ஆற்றலுக்குத் தக்க சான்றாகத் திகழ்கின்றது.

1.2 காவடிச் சிந்து

பாண்டித்துரைத் தேவரவர்களின் புலமைச் சிறப்பிற்கு ஒரு மணிமகுடமாக விளங்குவது அவர் பாடிய 'காவடிச் சிந்து' நூலாகும். 'சிந்து' என்னும் இலக்கிய வடிவமானது, காவடிச் சிந்து, வழிநடைச் சிந்து, வழிநடை அலங்காரச் சிந்து, பூவடிச் சிந்து என்று வேறு உருக்களில் வழங்கப்படுகிறது. நாட்டுப்புற மக்கள் விரும்பிப் பாடுகின்ற எளிய வடிவமாக காவடிச் சிந்து பாடல்கள் பாடப்படுகின்றன. முத்தமிழ்க் கடவுளாம் முருகனுக்குக் காவடி எடுத்து வரும் பக்தர்கள், இசையோடு பாடிக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் இக்காவடிச் சிந்துப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. ஆதலால் காவடிச்சிந்துப் பாடல்கள் யாவும் குமரக்கடவுளாம் முருகனையே போற்றித் துதிக்கின்றன. இப்பாடல்களைத் தமிழ்மக்களிடம் கொண்டு சென்று தமிழுலகம் பாராட்டும் வண்ணம் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் (கி.பி. 1861-1891) ஆவார். கழுகுமலையில் கோயில் கொண்டுள்ள கந்தவேளைப் புகழ்ந்து பாடிய 24 பாடல்களைக் கொண்டதாக அவரது காவடிச் சிந்து விளங்குகிறது. இந்தக் காவடிச்சிந்து நூலிற்கு இணையாகப் பாண்டித்துரைத் தேவரவர்கள், பக்தியுணர்வுடன் இனிய எளிய சொற்களில் சிந்தையும் செவியும் மகிழும்படி 'காவடிச்சிந்து' நூலினைப் பாடியிருக்கிறார்.

இராமநாதநகரின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சிவஞானபுரத்தில் குமரையா கோவில் என்றழைக்கப்படும் முருகன் கோவில் ஒன்று உள்ளது. இக்கோவிலைப் பாண்டித்துரைத் தேவரவர்களின் பாட்டனாரான சிவஞானத்தேவரவர்கள் 1859-இல் நிறுவியுள்ளார். கோவிலில் குடிகொண்டுள்ள சிவஞான முருகன் மீது கொண்ட பக்தி மேலீட்டினால்தான் பாண்டித்துரைத் தேவரவர்கள் 'காவடிச்சிந்து' பாடினார்.

"அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து நூலினைப் போலவே இனிமையும் நீர்மையும் உடையதாய் இந்நூலைப் பாண்டித்துரைத் தேவர்

பாடியுள்ளார். இவர், முருகக்கடவுள் மீதுள்ள பக்தியை மோனை, திரிபு, யமகம், சிலேடை, கற்பனை ஆகியவற்றுடன் இணைத்துத் தம்பாடல்களில் தந்துள்ளார்." என்று மு.ரா. அருணாசலக் கவிராயர் கூறியுள்ளார். (காவடிச்சிந்து, முன்னுரை)

காவடிச்சிந்து நூலானது அகப்பொருள் மரபினை உடையதாக விளங்குகிறது. பன்னிரு தலைப்புகளில், ஒவ்வொரு தலைப்பிலும் பல பாடல்களைக் கொண்டதாய் இந்நூல் அமைந்திருக்கின்றது. 1910-ஆம் ஆண்டில், தமிழ்ச்சங்கப் பதிப்பாகக் காவடிச்சிந்து நூல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

திங்களுஞ் செங்கதிர் போலுமே- வந்து
செந்தழல் தூவுமென் மேலுமே - சற்றுத்
தேட்டமில் லையன்னம் பாலுமே

தலைவனுள்ளத்து எழுந்த காதலுணர்வைச் சித்தரிக்கும் பாடலிது. வெறியாடத் துணிந்த நற்றாயிடம், தலைவி விரும்பிய தலைவனைக் குறித்துத் தோழி கூறுவதாக அமைந்த பாடல்,

"வல்லிக்கி சைந்தபூண வாளன் - நம்மை
வாழ்விக்க வந்தருள் தயாளன் - உயர்
வாகை யுயர்ந்தசிவ ஞானடி ரத்தினிய
வாசன் குமரேசன்"

என்பதாகும். இப்பாட்டின் எளிமையும், இனிமையும் பாடுவோருக்கு இன்பம் அளிப்பனவாக உள்ளன.

பானலங்கொள் தேனிகர்சொல் லாளே! - உக்ர
பாண்டியன்ற னையடிமை யாளே - எனப்
பாலனஞ்செய் யுங்குமர வேளே
நெடுந்தோளே உன்கண் வாளே - சென்று
பாயணுயா தேயணையிந் நாளே"

இப்பாடலில், குமரவேளைக் குறித்துக் கூறும்போது, 'உக்ரபாண்டியனை அடிமை செய்த குமரன்' என்று பாண்டித்துரைத் தேவரவர்கள், தமது இயற்பெயரைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

1.3 இராஜ ராஜேஸ்வரி பதிகம்

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், இராமேச்சுரத்து இராமநாத சுவாமியின் தொண்டராக, இராமேச்சுரத்துக் கோவிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்து வந்தவர்கள் ஆவர். 'இராமநாதசுவாமி காரிய துரந்தரன்' (இராமநாத சுவாமி தொண்டுபுரிபவன்) என்ற கல்வெட்டு வாசகமும் சேதுபதிகளின் தொண்டுகளை உறுதிப்படுத்துகிறது. ஆலயத் திருப்பணிகள் செய்வதைத் தமது கடமையாகக் கருதியவர்கள். இத்தகைய சேதுபதி மன்னர்களுள் ஒருவரான திருமலை ரகுநாத சேதுபதி அவர்கள் கி.பி. 1649 முதல் 1678 வரை சேதுநாட்டை ஆட்சி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில், மதுரையிலிருந்த திருமலை நாயக்கருக்கு உதவியாகத் தம்படைகளை அனுப்பிக் கன்னடப்படையுடன் போரிட்டு வெற்றி தேடித் தந்தார். திருமலை ரகுநாத சேதுபதி அவர்கள் செய்த இப்பேருதவிக்குக் கைம்மாறாகத் திருமலை நாயக்கர், பலவிதமான பரிசுப் பொருட்களை வழங்கினார். அப்பரிசுப்பொருட்களில், 'கனக துர்க்கா' என்ற, பொன்னாலான கொற்றவையின் சிலையும் ஒன்று. இப்பொன்திருமேனிப் படிவம், கி.பி. 1658 ஆம் ஆண்டில் இராமநாதபுர அரண்மனையில் நிறுவப்பெற்றது. அன்றுமுதல் சேதுபதிகளின் குலதெய்வமாக விளங்கிவரும் இந்த இராஜராஜேஸ்வரி அம்மன் மீது பாண்டித்துரைத் தேவரவர்கள் பதிகம் பாடியுள்ளார். இப்பதிகப் பாடல்கள் அனைத்தையும் பக்திமணம் கமழ, பாராயணம் செய்வதற்கு ஏற்ற வகையில் இனிய எளிய சொற்களால், கழிநெடில் ஆசிரிய விருத்தப்பாவில் பாடியிருக்கிறார். இந்நூல் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் தொகுத்து அளித்த தனிச் செய்யுட் சிந்தாமணியில் (பக். 601-604) இடம் பெற்றுள்ளது.

2. தொகுப்பு நூல்கள்

பாண்டித்துரைத் தேவரவர்கள், சங்ககாலம் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை தோன்றியுள்ள பல நூல்களிலிருந்து ஒரு பொருள் பற்றிய பாடல்களைத்

தொகுத்துத் தனித்தனித் தொகுப்பு நூல்களாக வெளியிட்டுள்ளார். அவ்வகையில் அவர் தொகுத்தவை:

1. சைவ மஞ்சரி
2. பன்னூற்றிரட்டு
3. தோத்திரத் திரட்டு
4. துதி மஞ்சரி

ஆகிய நான்கு நூல்களாகும். இவற்றுள் 'துதிமஞ்சரி' என்னும் நூலைத் தவிர மற்றைய மூன்று நூல்களும், சங்கப் பிரசுரங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. 'துதி மஞ்சரி' என்பது துதிப் பாடல்களின் தொகுப்பாகும்.

2.1 சைவ மஞ்சரி

பாண்டித்துரைத் தேவரவர்கள் தொகுத்துள்ள 'சைவமஞ்சரி' என்னும் நூல், 1904-ஆம் ஆண்டில் சங்கப் பிரசுரங்களில் இரண்டாவது நூலாக வெளியிடப் பெற்றது.

பாண்டித்துரைத் தேவரவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள் பற்றிய பாடல்களைப் பல நூல்களிலிருந்து திரட்டி 'பன்னூற்றிரட்டு' என்னும் பெயர் வைத்து 1898 ஆம் ஆண்டில் வெளியிட்டார். பின்னர் வீட்டுநெறி குறித்துப் பல நூல்களிலிருந்து திரட்டிய பாடல்களைத் தொகுத்துச் 'சைவ மஞ்சரி' என்னும் பெயரில் சங்க வெளியீடாகத் தந்துள்ளார்.

இந்நூல் சைவ சமயப் பற்றுடையாருக்குப் பெரிதும் பயன்படும் வகையில் கடவுள் வாழ்த்து, பதி, பசு, பாசம் முதலிய ஆதிகார அடைவுகளுடன் விளங்குகிறது. அருணகிரி அந்தாதி, அருணகிரிப் புராணம், இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா பாடல்கள், உறையூர்ப் புராணம், கூடற் புராணம், கோயிற் புராணம் போன்ற அறுபத்தியேழு சைவ நூல்களிலுள்ள ஒரு லட்சத்து எண்ணாயிரத்து முந்நூற்றித் தொன்னூற்றொன்பது (1,08,399) செய்யுட்களிலிருந்து ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆயிரத்து முந்நூற்றிப் பதினாறு (1316) செய்யுட்களை உடையது. ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் பின்னும், பல சிறப்புக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சமய அறிவு பெற விரும்புவோர்க்கும், பேச்சாளருக்கும் பயன்படும் வகையில் பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

2.2 பன்னூற்றிரட்டு

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிலும் ஒரோர் பொருள் பற்றிப் பல நூல்களில் புலப்படும் பாடல்களை ஒரு நிலைகளப்படத் தொகுத்து அதிகார முறையால் வகுத்துப் பாண்டித்துரைத் தேவர் அவர்கள், 'பன்னூற் றிரட்டு' என்று பெயரிட்டுள்ளார். இந்நூலின் முதற்பதிப்பு, நான்காம் சங்கம் தோன்றுவதற்கு முன்பே 1898-ஆம் ஆண்டில், இராமநாதபுரம் எஸ்.பி.ஜி. இன்டஸ்ட்ரியல் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு தமிழ்ச்சங்கப் பிரசுரமாக 1906-ஆம் ஆண்டில் பதிக்கப் பெற்றது.

பன்னூற்றிரட்டு நூலில் நீதிகள், அறச்செயல்கள், அரசியல் முறைகள், அகப்பொருள் துறைகள் பற்றிய முன்னோர் கருத்துக்களைக் காணலாம். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால் என்னும் இருபிரிவுகளைக் கொண்டது. 'கடவுள் வாழ்த்து' முதலாக, 'ஊழ்' ஈறாக 28 அதிகாரங்கள் அறத்துப்பாலிலும், 'அரசு' முதலாகக் 'கற்பனை' ஈறாக 25 அதிகாரங்கள் பொருட்பாலிலும் கொண்டு மொத்தம் 53 அதிகாரங்கள் இந்நூலில் உள்ளன. தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், சேதுபுராணம், பிரபுலிங்க லீலை, அரிச்சந்திர சரிதை, குசேலோபாக்கியானம், நளவெண்பா, புறநானூறு, சூளாமணி, நாலடியார், சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருக்கோவையார், திருக்குறள் போன்ற 53 நூல்களிலிருந்து தொகுத்த பாடல்களும், 37 தனிப்பாடல்களும் சேர்த்து 1647 செய்யுட்கள் முதற்பதிப்பில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

இரண்டாம் பதிப்பில், முதற்கண் சேராத வளையாபதி, குண்டலகேசி, பாகவதம், பகவத்கீதை, மயூரப்புராணம், தணிகைப் புராணம், அகதிக்கோவை, மூதுரை, நல்வழி, நீதிவெண்பா, சிவப்பிரகாசப் பெருந்திரட்டு போன்ற 51 நூல்களிலிருந்து தொகுத்த பாடல்களும், 13 தனிப்பாடல்களும் சேர்த்து 485 பாடல்கள் ஏற்ற இடங்களில் சேர்க்கப் பெற்று 2132

பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவை, 104 நூல்களிலிருந்து, 1,33,961 பாடல்களிலிருந்து தொகுக்கப் பெற்றவை என்பதை அறியமுடிகிறது.

இந்நூலினுள் 'கல்வி' என்னும் அதிகாரத்திற்குப் பாண்டித்துரைத்தேவர் ஓர் அரிய விரிவுரையும் எழுதியுள்ளார். காரண காரியத்தோடு கூடிய பன்னூற்றிரட்டின் அதிகார வைப்புமுறை, பாண்டித்துரைத் தேவரவர்களின் நுண்மாண் நுழைபுலனை உணர்த்துகின்றது.

இந்நூலின் சிறப்பினை, வீர. லெ. சிந்நயஞ் செட்டியார், பாற்கடலில் திரட்டிய அமுதெனப் பன்னூற்றிரட்டு விளங்குவதாகப் பாராட்டியுள்ளார். 'இச்சிறப்புக் கருதியே சென்னைப் பல்கலைக்கழகத்தாரும் வித்துவான் கல்வியில் பிரவேச பண்டித வகுப்புக்கும், பிரதமகலாசாலை வகுப்பிற்கும் பல வருடங்கள் தொடர்ச்சியாகப் பயிற்றற்குரிய தமிழ்ப் பாடங்களைப் பன்னூற்றிரட்டு நூலிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.' என்று திருநாராயணையங்கார் குறிப்பிட்டுள்ளார். எஸ். வையாபுரிப்பிள்ளையும் பன்னூற்றிரட்டின் சிறப்பினைப் பலபடியாகப் பாராட்டியிருப்பதை, இலக்கிமணிமாலை (ப.34) என்னும் நூலில் காணமுடிகின்றது.

பன்னூற்றிரட்டின் இரண்டாம் பதிப்பும் சில ஆண்டுகளில் தீர்ந்துவிட்டபடியால், பாண்டித்துரைத் தேவரது மறைவிற்குப் பின்னர், தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவராயிருந்த ஆண்டிபட்டி சமீன்தார் சா.ராம.மு.சித. பெத்தாச்சி செட்டியார் உதவிய பொருளுதவியால் மூன்றாம் முறையாகப் பதிப்பிக்கப் பெற்றது. பின்னர், இந்நூலின் நான்காம் பதிப்பு 1931-ஆம் ஆண்டில், தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் ச. ஹரிஹரையரால் வெளியிடப் பெற்றது.

2.3 தோத்திரத் திரட்டு

பலநூல்களிலிருந்து தோத்திரச் செய்யுட்களைத் தொகுத்துத் 'தோத்திரத் திரட்டு' என்ற நூலாகப் பாண்டித்துரைத் தேவரவர்கள் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். தமிழ்ச்சங்க வெளியீடுகளில் ஏழாவது நூலாகத் தோத்திரத் திரட்டு என்னும் நூல் இடம்பெற்றிருக்கிறது. இந்நூலைப் பற்றிய பிற செய்திகள் கிடைத்தில.

3. செந்தமிழ் இதழில் வெளியானவை

பாண்டித்துரைத் தேவரவர்கள், செந்தமிழ் இதழில் அரிய செய்யுட்களுக்கு விளக்க உரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள் எனப் பல்பொருள் பற்றி எழுதியிருக்கிறார். இவ்வாறு எழுதியவற்றுள்,

1. அருஞ்செய்யுள் விளக்கம்
2. தமிழ்ப் பழஞ்சரிதம்
3. தனிச் செய்யுட் கோவை
4. திருக்குறளைப் பற்றிய கதைகள்
5. நூலாராய்ச்சி (கம்பராமாயணம்)
6. இந்திய வீரமாதர்

ஆகியன குறிப்பிடத்தக்கன.

3.1 அருஞ்செய்யுள் விளக்கம்

கச்சியப்ப முனிவர் எழுதிய தணிகைப் புராணத்தின் பாடற்பொருளையும், நயங்களையும் சிறப்புற எடுத்துக்காட்டித் தேவரவர்கள் விளக்கி எழுதிய கட்டுரையே 'அருஞ்செய்யுள் விளக்கம்' என்பதாகும். (செந்தமிழ், தொகுதி.1, பகுதி.7, பக்.331-336; பகுதி.9, பக். 413-417; பகுதி. 10, பக். 447-450).

தணிகைப் புராணத்தின் பாடல்களில் உள்ள இருபொருள்சிலேடை, முப்பொருள்சிலேடை, நாற்பொருள் சிலேடை, ஐம்பொருள் சிலேடை, அறுபொருள்சிலேடை ஆகியவற்றை விளக்கி ஒவ்வொரு சிலேடையையும் பொருத்திக் காட்டிப் பாண்டித்துரைத்தேவரவர்கள் விளக்கியுள்ள திறம் போற்றுதற்குரியது.

3.2 தமிழ்ப் பழஞ்சரிதம்

தமிழ் மொழியின் மிகப் பழமையான வரலாற்றுக் கூறுகளை ஆராய்ச்சி செய்து, 'தமிழ்ப்பழஞ்சரிதம்' என்ற தலைப்பில் பாண்டித்துரைத் தேவரவர்கள் செந்தமிழ் இதழில் ஆய்வுரையை எழுதியிருக்கிறார். (செந்தமிழ்,

தொகுதி.6, பகுதி.11, பக். 327-329; தொகுதி.7, பகுதிகள் 6,7,10,11, பக். 283-289, 331-333, 483-484, 539-542)

இக்கட்டுரை, இலக்கிய ஆராய்ச்சிக்கும் பழந்தமிழ் நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. பாண்டித்துரைத் தேவரவர்கள், "நம்மொழியின் மிகப் பழைய காலத்துச் சரித்திரம் அறிய வேண்டின், நவீன சாத்திரமாகிய பாஷா தத்துவ நூல்முறை அதற்குரிய கருவிகளில் சிறந்ததொன்றேயாம். அச்சாத்திரமாவது உலகத்து வழங்கும் பல மொழிகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க வல்லது" என்று கூறியுள்ளார். தமிழ் மொழியின் வரலாற்றைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காணும் வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

3.3. தனிச் செய்யுட் கோவை

'தனிச் செய்யுட் கோவை' என்பது, தனிப்பாடல்கள் பலவற்றைத் தொகுத்து அவற்றிற்குக் குறிப்புரைகள் எழுதி வெளியிட்ட தொடர் கட்டுரையாகும். (செந்தமிழ், தொகுதி. 7, பகுதிகள். 6,7,8,10, பக். 289,290, 372-374, 432, 433, 533). இக்கட்டுரைக்கெனப் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொகுத்துள்ள பாடல்கள் எந்த நூலுக்குரியன என்பது பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. அதனால் ஏட்டுச் சுவடிகளில் உள்ள தனிப்பாடல்களே தொகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியமுடிகிறது. இப்பாடல்கள் யாவும், ஒரே பொருளுக்குரியனவாக இல்லாது பல பொருள் பற்றிய பாடல்களாக உள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் கீழே, பாடலின் அருஞ்சொற்களுக்குப் பொருளுரையும், அவை பற்றிய சிறுசிறு குறிப்புரைகளும் தரப்பட்டுள்ளன.

3.4 திருக்குறளைப் பற்றிய கதைகள்

திருக்குறட்பாக்களுக்குப் பொருத்தமாகக் கதை கூறி விளக்கும் முறையில், 'திருக்குறளைப் பற்றிய கதைகள்' என்ற கட்டுரையை எழுதியிருக்கிறார். (செந்தமிழ், தொகுதி, 7, பகுதிகள் 8,9, பக். 387-392, 443, 444) உலக வழக்கில் திருக்குறளைப் பற்றி எழுந்த கதைகள் பல உள்ளன. அவற்றைச் செவிவழிச் செய்தியாக மட்டுமே அறிந்துள்ளதால், பலரும் அறிந்து கொள்வதற்கு உரிய வகையில் 'செந்தமிழ்' வாயிலாகத் தமது சிற்றறிவிற்கு எட்டிய சிறுகதைகளை வெளியிடுவதாகப் பாண்டித்துரைத்தேவரவர்கள் தெரிவித்துள்ளார். இவர் எழுதியுள்ள கதைகள் குறட்கருத்துக்களைச் செம்மையுற புரிந்து கொள்வதற்குத் துணை செய்கின்றன.

3.5 நூலாராய்ச்சி

கம்பராமாயணத்துள் சில பாடல்களை ஆராய்ச்சித் திறனுடன் விளக்கி எழுதிய கட்டுரை 'நூலாராய்ச்சி' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. (செந்தமிழ், தொகுதி. 9, பகுதி.3, பக். 125-132) பாண்டித்துரைத் தேவரவர்கள், 'நூலாராய்ச்சி செய்வதில் கிடைக்கும் மன இன்பம் பிறிதொன்றில் கிடைப்பதில்லை' என்கிறார். ஆராய்ச்சி என்பது, செம்பொருளேயன்றிப் பாடல்கள் நுவலும் குறிப்பிலுள்ள பொருளை விளங்க வைப்பதாகும். இதனுள் கம்பராமாயணப் பாடல்களை நுட்பமாக ஆராய்ச்சி செய்து தமது ஆய்வுக் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்.

3.6 இந்திய வீரமாதர்

'இந்திய வீரமாதர்' என்னும் கட்டுரை, இந்திய வரலாற்றில் இடம் பெற்ற வீரமும், திறமையும், துணிவும், தியாகமும் கொண்ட பெண்மணிகளின் வரலாறு குறித்த ஆராய்ச்சி ஆகும். (செந்தமிழ் தொகுதி. 9, பகுதிகள். 6.7, பிற்சேர்க்கை, பக் 1-8, 9-16) கிடைத்த பகுதிகளில் இராணி சுங்சுக்தா, சித்தூர் ராணி பத்மினி ஆகிய இருவரது வரலாறுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரை இந்திய நாட்டின் வரலாற்றையும், பெண்களின் பெருமையையும் எடுத்துக்காட்டுகிறது.

4. தனிப்பாடல்கள்

பாண்டித்துரைத் தேவரவர்கள் பாடிய தனிப்பாடல்கள், அவரை மிகச் சிறந்த கவிஞராக அறிமுகப்படுத்துகின்றன. பாசுகரசேதுபதி அவர்கள்

இளவயதிலேயே இறைவடி சேர்ந்த போது, அவரது பிரிவாற்றாது பாடிய இரங்கற்பாக்களைத் தொகுத்துச் செந்தமிழ்த் தொகுதியில் 'சமரகவிகள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளனர். (செந்தமிழ், தொகுதி,2, பகுதி,2, பிற்சேர்க்கை, ப.1)\

"என்னாவி யுளங்குளிர அண்ணாவென்
றன்பொடினி யெனையார் சொல்வார்
மன்னாமன் னாமன்னா வெனயாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்.
பொன்னாகுந் தொழுஞ்சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீவே(று)
என்னாடு சென்றனையோ எங்கள்குல
மணிவிளக்கே இசைத்தி டாயே"

இப்பாடல், பாண்டித்துரைத் தேவரவர்கள், பாசுகர சேதுபதியிடம் கொண்டுள்ள பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துவதுடன், தனது சகோதரர் மறைந்த போது ஏற்பட்ட அவருடைய ஆழ்ந்த துயரத்தையும் புலப்படுத்துகிறது.

தமிழ்த்தாத்தா என்று தமிழறிஞர்களால் போற்றப் பெற்ற உ.வே. சாமிநாதையர், பாண்டித்துரைத் தேவரவர்களின் அன்பையும், நட்பையும் பெற்றவராவார். தமிழ்ச்சங்க வளர்ச்சிக்காகவும், தமிழ்க்கல்விக்காகவும், உ.வே.சா. அவர்களின் கருத்துக்களைக் கேட்குமளவிற்கு அவர்பால் தேவரவர்கள் நன்மதிப்புக் கொண்டிருந்தார். உ.வே.சா. அவர்களுக்குப் பாண்டித்துரைத்தேவரவர்கள் பல கடிதங்களை எழுதியுள்ளார். இக்கடிதங்கள் யாவும் சென்னையில் உ.வே.சா. நூலகத்தின் கருவூலத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 17-12-1894 ஆம் நாளில் தேவரவர்கள், கலிவெண்பா யாப்பில் எழுதிய மடலில் 15 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் யாவும் அவரது பா இயற்றும் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

"பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்றெரி வோரென்ற வுண்மைநாடி -
முயன்றிதுபோ
தைந்நூறு ரூபாவனுப்பி னைஃதேற் றருள்வாய்
மெய்ந்நூ னுரீஇயொ வித்தகா - மைந்நூறி
யாமாலையிற் சுவையுண் டாக்கும் புறப்
பொருள்வெண்
பாமாலையச் சிற்பதிவு செயுமா முயற்சி
யூறிகந்து முற்றலுறு விப்போனோங் குகவா
னாறுகந்த சென்னி யருள்"

(கருவூலம், உ.வே.சா. நூலகம்)

புறப்பொருள் வெண்பாமாலை நூல் வெளியீட்டிற்கு ரூபாய் ஐந்நூறு அனுப்பியதுடன், இத்தொகை மிகச் சிறிதளவே என்றும், அதைப் பெரிதாக நினைத்து ஏற்கவேண்டுமென்றும் எழுதிய கடிதம் இது. இலக்கணச் செம்மையும், பொருட்சிறப்பும் மிக்க செய்யுள் வடிவில் தேவரவர்கள் எழுதியிருக்கிற இதுபோன்ற கவிகள் அவரை மிகச் சிறந்த கவிஞராகக் காட்டுகின்றன.

பாண்டித்துரைத் தேவரவர்கள் பாடிய 21 தனிப்பாடல்கள், 'தனிச்செய்யுட்சிந்தாமணி' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளன. (மு.ரா. கந்தசாமிக் கவிராயர் (தொ.ஆ), தனிச்செய்யுட் சிந்தாமணி, பக். 601-604)

"ஓசிப் பொடியென்று ஒருநாள் உனக்களித்தால்
நீசற்றும் வெட்கமின்றி நித்தநித்தம் – கடசாது
அடிக்கடி சும்மாவந்து அலட்டுகின்றாய் சீசீ
பொடிகொடுப்ப தில்லையினிப் போ"

(செந்தமிழ், தொகுதி.48, பகுதி 3-4, ப.77)

ஒரு பாடகர், பாண்டித்துரைத் தேவரவர்களிடம் அடிக்கடி ஓசிப்பொடி கேட்பாராம். அப்படி ஒருநாள் கேட்டபோது, வேடிக்கையாய் இப்பாடலைப் பாடி விடையளித்தாராம். இதனால் நினைத்த மாத்திரத்தில் பா இயற்றும் ஆற்றலுடையவர் என்பதற்கு இப்பாடல் தக்கச் சான்றாகத் திகழ்கிறது. அத்துடன் அவரது நகைச்சுவை உணர்வையும் இப்பாடல் உணர்த்துகிறது.

5. பதிப்பு நூல்கள்

கிடைத்தற்கரிய நூல்களை ஏட்டுச்சுவடியிலிருந்து வெளிக் கொணர்ந்து, ஆராய்ச்சி செய்து நூலாக அச்சிட்டு வெளியிடவேண்டும் என்பதற்காகவே 'பவர்பிரஸ்' என்னும் அச்சகத்தை நிறுவினார்.

இவ்வச்சகத்தின் வழியாகவும், செந்தமிழ் இதழின் மூலமாகவும் ஏட்டுச்சுவடியிலிருந்த நூல்களை வெளியிட்டுச் சிறந்த பதிப்பாளராகவும் பாண்டித்துரைத் தேவரவர்கள் விளங்கினார். அவரே நூற்பாடல்களுக்குப் பொருளுரையும் அல்லது ஆய்வுரையும் அல்லது குறிப்புரையும் வழங்கிப் பதிப்பித்த நூல்களும் பல உள்ளன.

5.1 இலக்குமி தோத்திரப் பதிகம்

திருவாவடுதுறை ஆதீனத்துத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய சுவாமிகள் அருளிச் செய்த 'இலக்குமி தோத்திரப் பதிகம்' என்னும் நூலைக் குறிப்புரையுடன் செந்தமிழில் வெளியிட்டுள்ளார். (செந்தமிழ், தொகுதி.7, பகுதி.9, பக். 473-476)

5.2 வைத்திய சார சங்கிரகம்

பாண்டித்துரைத் தேவரவர்களின் தந்தையார் பொன்னுச்சாமித் தேவரவர்களின் அரிய முயற்சியால் இயற்றுவித்து வெளியிடப்பெற்ற மருத்துவ நூலே 'வைத்திய சார சங்கிரகம்' ஆகும். பொன்னுச்சாமித் தேவர், தமது அரசவையில் எழுத்தராக இருந்தவரும், தமிழ் ஆங்கில மருத்துவ முறைகளைத் தெரிந்தவருமான முத்துக்கருப்பப்பிள்ளை என்பாரைக் கொண்டு இந்நூலை எழுதுவித்தார். அவரே இந்நூலை முதற்கண் பதிப்பித்தும் வெளியிட்டார். முதற்பதிப்பு நூல்கள் யாவும் தீர்ந்து போனதால், 1896ஆம் ஆண்டில் பாண்டித்துரைத் தேவரவர்கள் இரண்டாம் முறையாகப் பதிப்பித்தார். பாசுகர சேதுபதி அவர்கள் இரண்டாம் பதிப்பிற்குரிய பொருளுதவியினைச் செய்தார். பின்னர் 1906ஆம் ஆண்டில் தமிழ்ச்சங்கப் பிரசுரமாக நூலின் மூன்றாம் பதிப்பு வெளியிடப் பெற்றது. இம்மூன்றாம் பதிப்பில், நூலை எழுதிய முத்துக்கருப்பப்பிள்ளை மேலும் தமது ஆராய்ச்சியால் கண்டு வைத்துப்போன மருந்துவகைகளை, அவரது மகனார் கிருஷ்ணசாமிப்பிள்ளையிடமிருந்து பெற்று, அவற்றையும் தக்கவாறு சேர்த்துப் பாண்டித்துரைத்தேவர் நூலை வெளியிட்டார்.

5.3 திருவாலவாயுடையார் திருப்பணிமாலை

செந்தமிழ் இதழின் தொகுதி 6, பகுதிகள் 4,5,8,12 ஆகியவற்றிலும், தொகுதி 7, பகுதி 2லும் 'திருவாலவாயுடையார் திருப்பணிமாலை' என்னும் நூற்பகுதிகள் தொடர்ச்சியாக வெளியிடப் பெற்றன. பின்னர் செந்தமிழ் வெளியீடாகப் பதிப்பிக்கப் பெற்று நூல்வடிவம் பெற்றது. இந்நூலின் பதிப்பாண்டு விபவ வருடம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

தாண்டவமூர்த்தி பண்டாரம் என்பவர் இந்நூலை இயற்றியவராவார். இறைவன் எண்ணெண் திருவிளையாடல்களை இயற்றியருளிய தலமாகிய திருவாலவாயில் உள்ள திருக்கோவில், திருக்கோபுரம், மண்டபம், பொய்கை, வாவி முதலிய சிவதர்மங்கள் இன்ன காலத்து இன்னின்னாரால் இவ்வாறு இயற்றப் பெற்றன என்பதை முறைப்படத் தமிழ்ப்பாவில் அமைத்துப் பாடப்பெற்ற நூலாகும். நூல் முழுவதுமான ஏட்டுச்சுவடி கிடைக்காததால், மதுரைப் பரமசிவ பட்டர், மு.ரா. அருணாசலக் கவிராயர் ஆகியோரிடத்துச் சிறந்தனவாகக் கிடைத்த ஏடுகளைக் கொணர்ந்து பாண்டித்துரைத் தேவரவர்கள் நூலாராய்ச்சி செய்து செந்தமிழில் வெளியிட்டார். கோவில் திருப்பணி செய்த முன்னையோரது வரலாறுக்கும், நெல்சன் துரை என்பாரின் 'மதுரை நாடு' (The Madurai Country) என்ற நூலிலிருந்து தெரியவந்த நாவல்களை, ஒவ்வொரு பாடலின் கீழ்க்குறிப்பில் தெளிவாகக் குறித்திருக்கிறார்.

5.4 மதுரைத் தலவரலாறு

'திருவாலவாயுடையார் திருப்பணிமாலை' என்ற நூலுக்குரிய ஏட்டுச் சுவடியுடன், 'மதுரைத் தலவரலாறு' என்ற நூலுக்குரிய ஏட்டுச் சுவடியும் இணைத்து இருந்ததைக் கண்ட பாண்டித்துரைத் தேவரவர்கள், அந்நூலையும் பதிப்பித்து வெளியிட்டார். மதுரையைப் பற்றிய தலவரலாற்றுக் குறிப்புகள் நூலுள் கூறப்பட்டிருந்தன. எனவே, இந்நூலையும் 'திருவாலவாயுடையார் திருப்பணிமாலை' என்ற நூலுடன் இணைத்துப் பதிப்பித்திருக்கிறார். இரண்டு

நூல்களுக்கும் தமது ஆய்வுக்குறிப்புகளைத் தந்து வெளியிட்டிருக்கிறார்.

5.5 அகப்பொருள் விளக்கம்

நாற்கவிராச நம்பி எழுதிய 'அகப்பொருள் விளக்கம்' என்ற நூலின் ஏட்டுச்சுவடிகள் பலவற்றையும் ஒப்புநோக்கி, ஆராய்ச்சி செய்து, விளக்கவுரை தந்து பாண்டித்துரைத் தேவரவர்கள் செந்தமிழ் இதழில் தொடர்ச்சியாக வெளியிட்டார். செந்தமிழ்த் தொகுதி 7,8,10 ஆகியவற்றில் தொடர்ந்து வெளியிடப்பெற்றது இந்நூல்.

நூலுள் சான்று காட்டப்பெற்ற செய்யுட்கள் பலவும் பல ஏடுகளில் பிழைபட்டிருந்தன. அவற்றையும் திருத்தியும், விளக்கியும் பாண்டித்துரைத் தேவரவர்கள் நூலாராய்ச்சி செய்துள்ளார். மேலும் அவரது வேண்டுகோளை ஏற்ற உ.வே. சாமிநாதையர், தெளிவில்லாத பாடல்கள் பலவற்றையும் திருத்தம் செய்தார். நூலின் பெரும்பகுதி அச்சிட்டு முடியும் நேரத்தில், தேவரவர்கள் திடீரென மறைந்த காரணத்தால், அவர் ஆராய்ச்சி செய்து வைத்திருந்த எஞ்சிய பகுதிகளைச் சங்கச் சான்றோரே அச்சிட்டு வெளியிட்டனர்.

நிறைவுரை

தமிழ்க் கல்விக்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டித்துரைத் தேவரவர்கள், படைப்பாளராக, ஆய்வாளராக, பதிப்பாளராக உயர்ந்து சிறந்தார் என்பது கண்கூடு. அன்னாரது புகழ் நிலத்திலும் பெரியது! வானிலும் உயர்ந்தது!



வள்ளல்.பாண்டித்துரைத்தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம்
தோற்றுவிக்கக் காரணமாயமைந்த திருக்குறளும் கம்பராமாயணமும்

நம்பவே இல்லை

பாவேந்தர் பாரதிதாசன்,(தேனருவி)

இனியுமோர் தமிழ்ச் சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச் சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை!

(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)

வியந்தது வையம் சென்ற நாள் சிலவே
விரிந்தது மதுரைச் தமிழ்ச் சங்க நிலவே
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே!

(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பலதமிழிலக்கிய மாசு துடைத்தான்
பாண்டித்துரைத் தேவன் புகழ்க்கொடி எடுத்தான்!

(இனியுமோர் தமிழ்ச் சங்கம்)



பாண்டித்துரைத்தேவர், உ.வே.சாமிநாதையருக்கு மணிமேகலை மற்றும்
புறப்பொருள்வெண்பாமாலை பதிப்பிக்க நிதி வழங்குதல்

செந்தமிழ் வளர்த்த சேதுபதி

மாண்புமிகு பாசுகரசேதுபதி மகாராசா அவர்கள் செந்தமிழ் வளர்த்த தமிழறிஞர் இரா.இராகவையங்கார் அவர்களுக்குப் பல்லக்கு முதலிய வரிசைகள் வழங்கினார். பசலி தோறும் ஆயுட்காலபரியந்தம் ரூபாய் 635 சன்மானமாகத் தரவும் உரிமைப்பத்திரம் பதிவுசெய்து தந்துள்ளார்கள். புலவரைப் போற்றும் புரவலர் வழங்கிய சாசனம்:

"நமது சமத்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமத்தானத்து அன்னப் பிரபாவத்தினாலே தமிழ்க் கல்வியில் பூரண பாண்டித்தியமுடையராய், ராவ்பகதூர் பி.அரங்கநாதமுதலியார் முதலிய பல கல்வியிற் பெரியோர்கள் மிகச் சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய் அநேக ஆண்டுகளாக நமது சேது சமத்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாயுள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும் தமிழிலுள்ள அரிய பெரிய பொருள்களைப் பலருக்கும் எடுத்துரைத்தலாலும் அனேகர்க்குப் பூர்வீகத் தமிழ் மொழியைப் போதித்து வருதலாலும் கிடைத்தற்கருமையாயுள்ள பழைய தமிழ் நூல்களைத் தேடிச்சேர்த்தலாலும் அவற்றைப் பரிசோதித்தலாலும் வெளியிடுதலாலும் இன்னும் பல நன்முயற்சிகளாலும் தமிழ்மொழியை நன்றாய் வளர்ப்பவர்களாயும் நமது சமத்தானத்துக் கற்றோர் அரங்கத்தில் பரமமுக்கியராயும் இருத்தலை ஆலோசித்து திரமான சம்மானமாக இப்பத்திரத்தின் மூலம் நம்மால் கொடுக்கலாயிற்று."

– பாசுகரசேதுபதி மகாராசா

நன்றி : ஆத்திச்சூடி முன்னுரை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

பாற்கரரின் தமிழ்ப்பணி

இ. சுந்தரமூர்த்தி
சென்னை.

தமிழின் மறுமலர்ச்சி

தமிழையும் சமயத்தையும் இருகண்களாகப் போற்றி வளர்த்துப் பெருமை பெற்றவர்கள் சேதுபதி மன்னர்கள். சேதுபதி மரபில் தோன்றிய பாண்டித்துரைத் தேவரும் (1867-1911) பாற்கர சேதுபதியும் (1868-1903) தமிழ் மொழியின் வளர்ச்சி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க பெருந்தொண்டினை ஆற்றியவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழின் மறுமலர்ச்சிக்கு உள்ளார்ந்த உணர்வோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அயராது பாடுபட்டவர்களாவர். அவர்கள் காலத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களுக்கு இவர்களுடைய ஆதரவு கிடைத்ததனால்தான் பல அரிய நூல்கள் புத்துயிர் பெற்றன. காலங்காலமாக நம்முடைய வாழ்வையும் வளமார்ந்த பண்பாட்டினையும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கத் துணைநின்ற பெருமக்கள் செந்தமிழ் வளர்த்த சேதுபதிகளேயாவர்.

நாமணக்கும் பாற்கரசாமி

தமிழ் நூல்களைப் பதிப்பித்துப் பழம் நூல்களுக்குப் புதுவாழ்வு தந்த தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் பாற்கர சேதுபதியைப் பின்வருமாறு பாராட்டிப் போற்றியது இங்கு நினைவு கூரத்தக்கது.

"பூமணக்கும் பொழில் முகவைப் புரிமணக்கும்
தவப் பேறாய்ப் போந்து கற்றோர்
தாம்மணக்கும் பெருமையுடைச் சபை மணக்கும்
பிரசங்கம் சாற்றல் மேவிப்
பாமணக்கும் சுவைத்தமிழ்ப் படிமணக்கும்
படிபரிபாலனஞ் செய்து ஆன்றோர்
நாமணக்கும் புகழ்மிகுத்த நலமுறு பாற்கரசாமி"

என்று பாற்கரரைப் பாராட்டுவார் டாக்டர் உ.வே.சாமிநாதையர்.

பாண்டித்துரைத்தேவரும் பாற்கரசேதுபதியும் பண்டைத் தமிழ்மன்னர்கள் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்திப் புரந்ததைப்போல் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்துத் (14.9.1901) தமிழின் வளர்ச்சிக்கு வழிகோலினர்.

தமிழ்ச்சங்கம்

பாண்டித்துரைத்தேவர் 1901 ஆம் ஆண்டு மேத் திங்கள் 21, 22, 23 நாள்களில் சென்னை மாகாண அரசியல் மாநாட்டைக் கூட்டினார். அம்மாநாட்டின் நிறைவு நாளான்று மதுரையில் நடந்த பெருங்கூட்டத்தில் தமிழின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய அரிய பணிகள் குறித்து உரையாற்றினார். அப்போது உருவான எண்ணம்தான் மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1901 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாளில் மன்னர் பாண்டித்துரைத்தேவர், பாற்கரசேதுபதி முன்னர் தமிழறிஞர்கள், புலவர்கள் கூட்டம் சூழ்ந்திருக்க மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், ரா.ராகவையங்கார், சோழவந்தான் அரசன் சண்முகனார், மு.சடகோபராமானுஜாசாரியார், வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருமயிலை சண்முகம் பிள்ளை ஆகிய பெருமக்கள் பங்கேற்றனர். சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையும், பாண்டியன் புத்தகசாலையும் நூலாராய்ச்சிசாலையும் தோற்றுவிக்கப் பெற்றன.

தமிழ்ப் பணி

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் மூலம் தமிழ்த்தேர்வுகளை நடத்திப் பட்டங்களை வழங்கினர். பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் எனத் தனித் தமிழ்த் தேர்வுகளை நடத்தினர். திருநாராயண ஐயங்கார் அவர்களைக் கொண்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தனர். மாணவர்களுக்குச் சங்கத்திலேயே உணவு, உடை, உறையுள் ஆகியன இலவசமாக அளிக்கப் பெற்றன.

தமிழ்த் தேர்வுகள்

தமிழில் நிறைந்த புலமை பெற்றோர்தாம் இச்சங்கத்தின் வாயிலாகப் பட்டம் பெறமுடியும். சில ஆண்டுகளில் வெற்றி பெறா நிலையும் உண்டு. 'இந்த ஆண்டு அறுவர் தேர்வு எழுதினர். ஒருவரும் தேறிலர்' என்று ஓர் ஆண்டில் தேர்வு முடிவுகளை அறிவித்தனர் எனில் அப்பட்டத்தின் பெருமையையும் சிறப்பையும் நன்கு உணரலாம்.

பல்லாண்டுகளுக்கு முன்னாலேயே இன்று மிகுதியாகப் பேசப்பெறும் 'தேர்வில் வெளிப்படை' என்னும் கருத்தைக் கொண்டு அக்காலத்தில் தேர்வுகளை நடத்தினர் என்பதை அறியும்போது வியப்பு மேலிடுகின்றது. சங்கம் நடத்திய தேர்வுகளுக்குரிய வினாத்தாளில் குறிப்போருடைய பெயர்கள் அச்சிடப்பெற்றிருந்தன. அவ்வாறே விடைத்தாளிலும் திருத்துவோருடைய பெயர்களும் அச்சிடப் பெற்றிருந்தன. பரீசகர், உ.வே.சாமிநாதையர், ரா.ராகவையங்கார், ரா. சுப்பிரமணியகவிராயர், ச.சோமசுந்தர பாரதியார், மு.கதிரேசன் செட்டியார், மு.ராகவையங்கார், வை.மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் என அக்காலப் பெரும் புலவர்களின் பெயர்கள் அவற்றில் குறிப்பிடப் பெற்றிருந்தன.

சங்கத்தின் இத்தகைய கடுமையான புலமைமிகுந்த தேர்வுகளில் வெற்றி பெற்றுப் புகழ் பூத்தவர்களுள் ஒருவர்தாம் சுவாமி விபுலானந்த அடிகள்.

பதிப்புப் பணி

மதுரைத் தல வரலாறு, மாறனலங்காரம், பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி, அகப்பொருள் விளக்கம், சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை முதலிய பல நூல்கள் சங்கத்தின் மூலம் வெளிவந்தன. 'செந்தமிழ்' என்னும் அரிய இதழை வெளியிட்டு நடத்தினர். இங்ஙனம் சங்கத்தின் அரிய தமிழ் முயற்சிகளுக் கெல்லாம் உறுதுணைபுரிந்தவர் பாற்கர சேதுபதி. சங்கம் சிறப்புடன் நடைபெற அக்காலத்திலேயே ரூபாய் பத்தாயிரம் நிதிவழங்கியவர். இச்சங்க நிகழ்ச்சியைப் 'புலவர் ஆற்றுப்படை' என்னும் நூலினை யாத்துப் போற்றினார் குலாம் காதிறு நாவலர். 'மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம்' என்னும் நூலும் சங்கத்தின் புகழை எடுத்துரைக்கும்.

பாற்கரோதயம்

பாற்கர சேதுபதி அவர்கள் 35 ஆண்டுகள்தாம் உலகில் வாழ்ந்தார். 1888இல் அரசுப்பொறுப்பேற்ற அவர் 1903 ஆம் ஆண்டில் மறைந்தார். பதினைந்தாண்டுகளுக்கும் குறைவாக அவர் அரசாட்சியிலிருந்தாலும் சேதுமரபில் மாண்புற்று விளங்கிய மன்னர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

அறிஞர் மு.இராகவையங்கார் 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்னும் தம்முடைய நூலில் அவரைப் பின் வருமாறு பாராட்டுவார்.

"பாற்கர சேதுபதியவர்கள் காலத்தில் அடைந்து வந்த சீரும் சிறப்பும் குறிப்பிடத்தக்கவை. பல துறைகளில் வல்ல இதயக்கமலங்களை மலர்விக்கும் பாற்கரோதயம் போல் இவர் தோற்றம் அமைந்தது. பாவாணரும் இசைவாணரும் பல திசைகளிலிருந்தும் சேதுவேந்தர் சமுகத்தை நாடிவந்து தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெற்றுச் செல்வராயினர்."

பாற்கர சேதுபதியைப் 'பாற்கரோதயம்' என மகிழ்ந்து அவர் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது.

"கோதிலாத செந்தமிழ்க் கடல் குளித்து அகங்குளிரும் சேதுகாவலர்" என்று மகாவித்துவான் ரா.இராகவையங்கார் புகழ்வார்.

பெரும் பணக்காரர்களையும் மன்னர்களையும் புகழ்ந்தறியாத விவேகானந்தர் இவர்தம் அரிய தொண்டினைப் பாராட்டிப் போற்றித் தம் சொற்பொழிவுகளில் குறிப்பிட்டதாகக் கூறுவர். எனவே இவருடைய பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ!

உலகப் புகழ் பெற்ற இராமேசுவரக் கோயில் பிரகாரங்களை ஏற்படுத்திய சேதுபதிகளின் புகழ் வானோங்கி நிற்பது போல் அவர்களின் தமிழ்ப்பணியும் தமிழ் உள்ளளவும் நின்று விளங்கும்.

தமிழ்நெஞ்சம்

தமிழுக்குத் தோளையும் சமயத்திற்குத் தலையையும் தந்து இரண்டையும் தாங்கி நின்று வளர்த்தவர், பாற்கர சேதுபதி என்பர். நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரை மாநகரில் மகாவித்துவான் ரா.இராகவையங்காரைப் பல்லக்கில் ஏற்றிப் பவனி வரச்செய்தவர் பாற்கரசேதுபதி அவர்கள். தமிழறிஞர் இராகவையங்காரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி 'உரிமைப் பத்திரம்' ஒன்றை வழங்கினார். வரலாற்றுப் புகழ் பெற்ற அவ்வுரிமைப் பத்திரம் அவருடைய தமிழார்வத்தையும் தமிழ் நெஞ்சத்தையும் காட்டும்.

இன்றைய தலைமுறை முந்தையோரின் தமிழ் நெஞ்சத்தை உணர வேண்டியது மிகமிக இன்றியமை யாததாகும். அவ்வுரிமைப் பத்திரத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற வாசகங்கள் வருமாறு:

"ஒருவன் இவ்வுலகிற் செய்ய வேண்டிய தருமங்கள் பலவற்றிலும் தனது தாய் மொழியின் பொருட்டுச் செய்யும் தருமம் அதிகம் சிறந்ததாகும்.

நமது சமஸ்தானம் தமிழையே தனக்குத் தாய் பாஷையாக உடைத்தாதலால் எமது முந்திய ராஜாக்கள் எல்லாம் பரம்பரையாகத் தமிழ் வித்துவான்களுக்கு ஏராளமான உபகாரங்கள் செய்துள்ளது பிரசித்தமானது.

சேர சோழ பாண்டியர்கட்குப் பின் சுத்த தமிழ் அரசர்களான சேதுபதிகளே தமிழ் பாஷாபிவிருத்தி செய்பவர்களும் தமிழ் வித்வான்களை ஆதரிப் பவர்களும் ஆவார்கள்.

தமிழ் வித்துவான்களுக்குப் பரம்பரையாகப் பெற்றுவரக் கூடிய சாசுவத தர்மங்கள் செய்து வருவது இந்தச் சமஸ்தானத்தில் தொன்றுதொட்டு வரும் வழக்கமே.

இக்காலத்துக்குத்தக்க தமிழ் வித்துவான்கள் மிகச் சிலரானமையாலும், அச்சிலருக்கும் கவர்மெண்டார் தக்க உதவியொன்றும் செய்யாமையாலும் நமது புராதன தமிழ் மொழியானது விருத்தியடையாது குறைகின்றது.

இவ்வாறு நமது அருமைத் தாய்மொழி குறைந்து கெடாதபடி பாதுகாக்குமிடத்து அப்பாஷையை நன்றாய்க் கற்றுத் தேர்ந்த வித்துவான்களே முதலில் பாதுகாக்கத் தக்கவர்களாகின்றார்கள். அவர்களாலேதான் அம்மொழியின் உயர்வும் அருமையும் பெருமையும் இனிமையும் புலப்படுவதோடு அப்பாஷை வளர்ந்து நிலைபெறுதலும் உண்டாவது.

ஆதலால் நமது சமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமஸ்தானத்து அன்ன பிரபாவத்தினாலேயே தமிழ்க் கல்வியில் பூரணபாண்டித்திய முடையவராய், ராவ்பகதூர், பி.அரங்கநாத முதலியார் முதலிய பல கல்வியில் பெரியோர்கள் மிகச்சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய், அனேக வருடங்களாக நமது சேதுசமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாய் உள்ள தாங்கள்,

தமிழ் நூலுரைகள் முதலிய செய்கின்றனதனாலும் தமிழிலுள்ள அரியபெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபதேசித்தலாலும் அனேகர்க்குப் பூர்விகத் தமிழ் மொழியைப் போதித்து வருவதாலும், கிடைத்தற்கு அருமையாயுள்ள பழைய தமிழ் நூல்களைத் தேடிச் சேர்த்தலானும், அவற்றைப் பரிசோதித்தலானும், வெளியிடுதலானும் இன்னும் பல நன்முயற்சிகளாலும், தமிழ்ப் பாஷையை நன்றாக வளர்ப்பவர்களாயும் நமது சமஸ்தானத்துச் செந்தமிழ் பரீக்ஷாதிகாரத் தலைவராயும் நமது சமஸ்தானத்து வித்வத் அரங்கத்தில் பரமமுக்கியராயும் இருத்தலை ஆலோசித்து தங்கள் போன்ற பண்டிதர்களையும் திரவிய சகாயம் செய்து கொடுக்க வேண்டுவது இந்தச் சமஸ்தானத்தின் முக்கியதர்மமும் அதுவே."

மகாவித்துவான் ரா.இராகவையங்காருக்குச் சிறப்புச் செய்தமைக்கான காரணங்களை மன்னர் 'உரிமைப் பத்திரத்தில்' பட்டியலிட்டுக்காட்டும்போது தமிழறி ஞர்களைப் பாராட்டிச் சிறப்பித்தால்தான் தமிழ்வளரும் என்னும் அவருடைய உயர்ந்த கொள்கை நன்கு புலனாகும். தமிழறிஞர்களைப் பாராட்டிய உயர்ந்த நெறியும் இதனால் புலப்படும்.

சேதுபதி தரிசனம்

தமிழ்த் தொண்டிற்காகத் தமக்கு அளித்த பாராட்டை ஏற்றுப் பாற்கரரைப் புகழ்ந்து பாராட்டுவார் இராகவையங்கார்.

"சிவிகை தாங்கிப் புரந்தனன் பாற்கரன்"

என்று பாற்கரர் சிவிகைதாங்கிப் புரந்த செய்தியை மகிழ்வோடு குறிப்பிடுவார்.

சேதுபதிகளை வைணவர் ஸ்ரீராமனாகவும் சைவர் ஸ்ரீராமநாதமூர்த்தியாகவும் கருதிப் போற்றினர் என்று இராகவையங்கார் கூறுவர்.

சேதுபதியென்று நரசென்மம் எடுத்தாய் கமல
மாதுபதிக்கு உன்பேர் வாய்க்குமா-பூதலத்தில்
நீயே இரகுராமன் நின்னையே பெற்றெடுத்த
தாயே அருட் கோசலை

என்றும் இரகுராமனாக நினைந்து போற்றுவார்.

ஆதிபதியான மண்டலாதி பதிவம்சபதி
அரசர்க்கென்று
நீதிபதி சத்ரபதி சமஸ்தானபதி விஜய
நிறைந்தேநிற்கு
மாதுபதி துரகபதி கஜபதி நராதிபதி
வளர்தென் தேவைச்
சேதுபதி தரிசனமே இராமலிங்க தரிசனமாச்
செப்பலாமே

என்று சேதுபதி தரிசனத்தை இராமலிங்க தரிசனமாகவே கொள்வர்.

சேதுபதி மன்னர்களைப் புலவர்கள் இறைவனாகவே போற்றி மகிழ்ந்தனர் என்பது இதனால் புலனாகும்.

தமிழ் மாதின் அகம் மலரும்

புலவர் எம்.கே.எம் அப்துல்காதிர்ராவுத்தர் பாற்கர சேதுபதியைப் புகழும் போது பாற்கரரின் தோற்றத்தால் தமிழ்மாதின் அகம் மலர்ந்தது என்பர்.

பவப்பனியும் புலவர் கலிப் பகையிருளும்
பயந்தொளிப்பத்
தவச்சலசச் செழுமலரும் தமிழ்மாதின்
அகமலரும்
உவப்புடனே விரிந்திலங்க உதித்தவதன்
சிறப்ப னைத்தும்
எவர்க்கும் அறிவுறுத்தும் வகைஇசைத்தனர்
பாற்கரன் பேர்

என்று புலவர் கூறுவதும் எண்ணி மகிழத்தக்கது.

'ஆங்கிலமும் ஆரியமும் ஆந்திரமும் அரியினமா
ஓங்கிய செந்தமிழமுதை உட்கொண்டு வளர்வுற்றான்

என்று தமிழமுதம் பருகியதைச் சுட்டி மகிழ்வார்.

பாற்கர சேதுபதியின் புலமைத்திறத்தைக் கண்டு வியந்து,

குடமுனியோ அவன்பால் கொண்டுஅமர்
தொல்காப்பியனோ
படமுடைய பணிஇறையோ பாரதம்பாடிய
தவனோ
மிடலுறு அன்னவன் கல்வி விளம்புவதென்
எனவியப்பக்
கடலமுதப் பெருக்கன்ன கவிபிரசங்கம்
புரிவான்

எனப் பாராட்டி மகிழ்வார். அவர் சொற்பொழிவு கடலமுதப் பெருங்கடல் போல் முழங்கும் என்பார்.

மு.ரா.அருணாசலக் கவிராயர் அவரைப் பற்றிக் கூறும் போது 'பன்னூலால் உணர்ந்து மெய்ஞ்ஞானச் சனகனைப் போல் புவியைக்காக்கும் துங்கன் பாற்கர சேதுமன்னன்' எனப் புகழ்வார்.

பாற்கர சேதுபதி மன்னர் பல்துறைக் கலைகளிலும் பெரும் புலமை பெற்றிருந்த செய்தி அறிஞர்களுடைய பாராட்டுரைகளால் நன்கு புலனாகும்.

நவராத்திரிவிழா

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரை நவராத்திரி விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார். உ.வே.சா அவர்களும் அவ்விழாவில் பங்கேற்று மகிழ்ந்தார். கல்லூரியில் விடுப்புப் பெற்றுக் கொண்டு இராமநாதபுரத்திற்குச் சென்றார். வழியில் பல வண்டிகள் தாங்க முடியாத பண்டங்களை ஏற்றிக் கொண்டு சென்றன. பாரமிகுதியால் பரிஅச்சுகள் முறிந்தன. எல்லாம் இராமநாதபுரத்தை நோக்கிச் செல்வதை அறிந்து நவராத்திரிவிழாவின் சிறப்பை ஊகித்துக் கொண்டதாகக் கூறுவார். அவர் தம்முடைய நூலில் எழுதிய குறிப்பு அவ்விழாவின் பெருமையைக் குறிக்கும்.

"இத்தமிழ் நாட்டிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான வித்துவான்கள் வந்திருந்தார்கள். தமிழ்நாட்டுக் கனவான்களில் ஒருவர் பாக்கி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஊர் தாங்காத கூட்டம் கூடியிருந்தது. பண்டங்களின் விலையெல்லாம் பன்மடங்கு ஏறிவிட்டது. மேளக்கச்சேரி, சங்கீத வினிகைகள் முதலியவற்றிற்கும் கணக்கேயில்லை. சமஸ்கிருத வித்வான்கள் சபையும் தமிழ்ப் பண்டிதர்களின் சபையும் நடந்தன. அங்கே இருந்த பத்து நாட்களும் பொழுது போனதே தெரியவில்லை.

சேதுபதியினுடைய உபகாரமும் சாதுரிய வசனங்களும் கொடைப்பெருமையும் எனக்கு வியப்பை உண்டாக்கின. அந்த விழாவிற்கு இரண்டுலட்ச ரூபாய்களுக்கு மேல் செலவாயிற்று என்று தெரிந்தது."

என்று தம் நூலில் குறிப்பிட்டு எழுதுவார். பாற்கர சேதுபதி அந்த விழாவிற்காகச் செய்த செலவு மிகுந்த வியப்பையும் அளிக்கின்றது. அந்த விழாவில் கலந்து கொண்டு மகிழ்ந்த உ.வே.சாமிநாதையர் அவர்கள் பாற்கர சேதுபதியை வாழ்த்திப் பின்வரும் பாடல்களையும் பாடியுள்ளார்.

'பண்ணிற் சிறந்த கவிவாணரைப் பரிபாலனஞ் செய்து
எண்ணிற் சிறந்த அறங்காத்து எவர்க்கும் இதமளித்து
விண்ணிற் சிறந்ததொரு பாற்கரன் நாளும் விளங்குதல்போல்
மண்ணிற் சிறந்ததொரு பாற்கர பூபதி வாழியவே'

சீர்பெற்ற பல கலைகள் தேர்ந்தவர்கள் குழுமியே
சிந்தையில் மகிழ்ந்து மேவும்
திருவார்ந்து அவற்றினது தெய்வவுரு மேவிடல்
சிவணவிசை வீணை சாலப்

பேர்பெற்ற புத்தகம் எழுத்தாணி இவைநன்கு
பெய்தொடிக் கையில் மேவ பெருமை கொள்
மகாநவமி ஏழாம் தினத்தழகு
பெற்ற பகலிடை முகவையின்

ஏர்பெற்ற கல்விவளம் எளிதருள் செய்யக்காட்சி
இயைந்தருளும் அமல வாழ்வே
இராசராசேச்வரி எம்போலி யர்க்குஎய்ப்பின்
இடைவைப்பை அனைய-சுகுண

தார் பெற்ற திண்புயன் சாதுஜன பாலகனு
தாரமந் தார மனையான்
தனை நிகரில் பாற்கரச் சாமி மகிபதியினும்
தழைத் தோங்க அருள் செய் வையே

இப்பாடல்களாலும் உ.வே.சா எழுதிய குறிப்பாலும் பாற்கர சேதுபதி அவர்கள் தமிழ்க் கலை விழாவிற்காக ஆற்றிய பெருந்தொண்டு நன்கு புலனாகும்.

தமிழ்ப் பரிசு

இன்றும் கிறித்தவக் கல்லூரியில் பாற்கர சேதுபதியின் பெயரால் வழங்கும் 'தமிழ்ப் பரிசும்' குறிப்பிடத் தக்கதாகும். தமிழறிஞரும் சைவசித்தாந்தப் பேரறிஞருமாகிய சைவசித்தாந்த சண்டமாருதம் பரசமய கோளரி சோமசுந்தரநாயகருக்குத் தங்கத் தோடாவும் பட்டமும் அளித்துப் பாராட்டியவர் பாற்கர சேதுபதி.

இந்தியாவின் ஆன்மிகப் பெருமையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டப் 'பாற்கரக் கதிரவன்' தோன்றினார். பாற்கரர் ஏற்றிவைத்த விவேகானந்தப் பேரொளியால்தான் ஆன்மிக உலகம் இந்தியாவை அண்ணாந்து பார்க்கத் தொடங்கியது.

குலமணி விளக்கு

தமையனார் பாண்டித்துரைத் தேவருக்கு முன், தாம் இறந்துவிட வேண்டும் என்று விரும்பிய பாற்கரரின் எண்ணம் அவ்வாறே நிறைவேறியது. அப்போது ஆற்றாது அழுது அரற்றிய பாண்டித்துரைத் தேவர்,

என்னாவி உளங்குளிர அண்ணாவென்று
அன்போடு இனிஎன்னை யார் சொல்வார்?
மன்னா, மன்னா, மன்னா என யாரை
யான் இனிமேல் மதித்துச் சொல்வேன்?
பொன்னாடும் தொழும் சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீ வேறு
எந்நாடு சென்றனையோ எங்கள் குல
மணிவிளக்கே இசைத்திடாயே?

என உள முருகினார்.

'செந்தமிழ்ப்பாவின் சுவையை இனி எங்கையா சொல்வேன்' எனப் பாற்கரரை நினைந்து வருந்துவார் இராகவையங்கார்.

முப்பத்தைந்து வயதிலேயே வாழ்ந்து மறைந்த வள்ளல் பாற்கர சேதுபதி முழுமையான வாழ்வினைப் பெற்றிருந்தால் எத்தனை பணிகளை ஆற்றுவாரோ அத்தனை பணிகளை குறைவான ஆயுளிலேயே செய்தார். தமிழுக்கும் சமயத்திற்கும் அளப்பரிய பணிகளை ஆற்றினார்.

வள்ளல் பாற்கரர்

தமிழுணர்வும் சமயவுணர்வும் மானுடநேயமும் பொருந்திய மாண்புமிகு மன்னராக வாழ்ந்தவர்

பாற்கரசேதுபதி. திருவாவடுதுறை ஆதீனமடமான கல்லிடைக்குறிச்சி துறவிகள் மடத்திலே தங்கியிருந்த போது தம்மைப் பார்க்க வந்த ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதரை உவந்து வரவேற்றார்; மோகனப் பண்ணிலரிய இசையை வழங்கிய அவருக்கு மன்னருக்கே உரிய நவகண்டி மாலையைப் பரிசாக வழங்கி மகிழ்ந்தார்.

இந்து சமயத்தின் மேன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டிய சுவாமி விவேகானந்தரின் திருப்பாதம்பட்ட பாம்பனில் பாற்கர சேதுபதி அழகிய ஸ்தூபி ஒன்றினை நிறுவி மகிழ்ந்தார்.

"ஸ்ரீமத் பூஜ்ய பாத விவேகானந்த சுவாமிகள், குடகோளார்த்தத்தில் வேதாந்த சித்தாந்தத்தைப் பரப்புதற் பொருட்டு லோகோபகார்த்தமாக உத்தம சேவை செய்து ஆங்குக் குறைபாடில்லாத காரியசித்தியுடன் அழியாப்புகழடைந்து, வெற்றித் தார்சூடி, அங்கிருந்து புறப்பட்டு, ஆங்கிலேயே சீடர்களுடன் பாரத பூமியில் முதன்முதலாக 1897ஆம் வருடம் ஜனவரி ீ 26 அன்று திருவடி சாத்திய புண்ணிய ஸ்தலத்தைக் காட்டும் இந்த ஞாபகஸ்தம்பம்"

"இராமநாதபுரம் பூபாலராகிய ஸ்ரீபாற்கரசேதுபதி யவர்களால் நாட்டப்பெற்றது" என்பது அத்தூபியில் பொறிக்கப் பெற்ற தொடராகும்.

தமிழக மொழி, சமய, இலக்கிய வரலாற்றுப் பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ்ப் பாற்கர சேதுபதிக்கும் பாண்டித்துரைத் தேவருக்கும் தனித்த இடமுண்டு என்பதில் ஐயமில்லை. தமிழ்ச்சங்கம் தோற்றுவித்துத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றிய பெருமக்கள் தமிழ்மக்களின் நன்றிக்கு என்றும் உரியவர்களாவர்.

சேதுபதிகள்



இரா. இராகவையங்கார்,
செந்தமிழ்ப் பத்திராசிரியர்,மதுரை.

இவர் தொன்று தொட்டே தமக்கியல்பாயுள்ள வீரச்செயலாலும் வில்வாள் முதலாய படைத்தொழில் வலிமையாலுமே தம்முயிர் வாழ்தலிற் சிறந்த தமிழ் நாட்டு மறவர் குடியினராவர். "வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்" என்றார் அகநானூற்றினும். (35) இம்மறவரையே வில்லேருழவர், வாளுழவர், மழவர், வீரர் முதலிய பல பெயர்களால் கூறுவர் முன்னோர். இவர் நிரைகவர்ந்து ஆறலைத்துச் சூறைகொள்ளுங் கொடுந்தொழிலாற் றம்முயிரோம்பும் வெட்சி மறவர் எனவும் அவ்வெட்சி மறவரை முனையிற் சிதறவீழ்த்து, அவராற் கவரப்பட்ட நிரைகளை மீட்டு ஆறலையாமற்காத்துப் பிறருயிரோம்பு முகத்தாற்றம் உயிர் ஓம்பி வாழுங் கரந்தை மறவர் எனவும் இருதிறத்தினராவர். இதனை "ஆபெயர்த்துத்தருதலும்" (பொ.புறத்.5.) என்னுந் தொல்காப்பியத்து நச்சினார்க்கினியருரையானும் "தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை, நுழைநுதி நெடுவேற் – குறும்படைமழவர், முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்"(35) என்னும் அகநானூற்றுரையானும் அறிந்துகொள்க. வெட்சி மறவர்க்கு ஆறலைப்பார், கள்வர் முதலிய பெயர்களும், கரந்தை மறவர்க்கு வயவர், மீளியர் முதலிய பெயர்களும் நன்று பொருந்துவனவாகும். இவ்விருவகை மறவருள், சேதுபதிகள் தீதெலாங்கழுவுஞ் சேதுநீராடப் போதுவார் யாவரையும் ஆறலைக்கள்வர் முதலியோராற் சிறிதும் இடர்ப்படாமற்காத்து அவர்கட்கு வேண்டுவன உதவுதலே தமக்குறு தொழிலாகக் கொண்ட சிறப்பாற்-றம்பெருவலியானே பிறருயிரோம்புங்கரந்தை மறவரேயாவர். இதுபற்றியன்றே இம்மறவர் வாழ்ந்த பழையவூரைக் கரந்தை எனவும், இவரைக் கரந்தையர் எனவும், இவர் தலைவனைக் கரந்தையர் கோன் எனவும் பிற்காலக் கவிகள் வழங்குவாராயினர் எனக் கொள்க. "மல்லர் கரந்தை ரகுநாதன் றேவை வரையில்" (ஒருதுறைக்கோவை 68) "கரந்தையர்கோன் ரகுநாதன்"(62,76) என வருதல் காண்க. இவ்வகை மறவரே இத்தமிழ்நாட்டு மூவேந்தராவர். இவ்வீரரே இம்மூவேந்தரையுந் தமது அரிய பெரிய வெற்றித் தொழில்களால் மகிழ்வித்து, அவரான் முடியுங் கோலும் மாலையும் பிறவும் அளிக்கப்பட்டுக் குறுநில மன்னராய், அப்பேரரசர்க்குப் போர்த்துணைவராய் விளங்கினோராவர். இவர் இம்மூன்று தமிழ்வேந்தர்க்கும் உரியராதல் பற்றி முற்காலத்தே சேரன்மறவர், பாண்டியன்மறவர், சோழன் மறவர் என மூன்று பகுதியினராக வழங்கப்பட்டனர். நன்னன், ஏறை, அத்தி, கங்கன், கட்டி முதலாயோர் சேரன் மறவர் (அகநானூறு 44). கோடைப்பொருநன் ஆகிய பண்ணி முதலாயோர், பாண்டியன்மறவர் (அகம் 13). பழையன், பண்ணன் முதலாயோர் சோழன் மறவர் (அகம் 44, 326. புறம், 173). இவரைச் சோழன் மறவர், பாண்டியன் மறவர் என வேறு வேறு கூறுவதுங் காண்க. இம்மறவராகிய படைவீரர் குறுநில மன்னருமாய் இருந்தனர் என்பது "தானே சேறலுந் தன்னொடு சிவணிய, வேறோர் சேறலும் வேந்தன் மேற்றே" (தொல். பொ.அகத்.27.) என்னுஞ் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர், வெண்கோட் டியானைப் போஎர் கிழவோன், பழையன் வேல்வாய்த்தன்ன" எனவரும் நற்றிணையை எடுத்தோதி, "இது குறுநில மன்னர் போல்வார் சென்றமை தோன்றக் கூறியது" எனச் சோழன் படைத்தலைவனான பழையனைக் (அகம்–44) குறுநில மன்னனாகக் கூறியதனானே அறியலாவது.

இவ்வாறு மூவேந்தர்க்கும் பெருந்துணைவராய், அம்மூவர் படைவீரருங் குறுநில மன்னருமாகிய மூவகைமறவருள், இச்சேதுபதிகள் சோழன் மறவராவர். இதுபற்றியே இவரைச் செம்பிநாட்டு மறவர் என்று வழங்குவர். செம்பியன்–சோழன். பாண்டியன் நாடு பாண்டிநாடு என்று ஆகியது போல செம்பியன் நாடு செம்பிநாடு என ஆயது. ஒருதுறைக்கோவையிலும் ரகுநாதசேதுபதியை செம்பிநாடன் (60, 82) செம்பியர் கோன் (196) செம்பிநாட்டிறை(200) செம்பியர் தோன்றல் (211) என வழங்குதல் காண்க. இச்சேதுபதிகளை இரவிகுலத்தவ ரெனக்கூறுதலும், அச்சோழர் குலத்தையே பற்றி வந்ததாகும். இவர் சாசனங்களில் உள்ள விருதாவளிகளில் முதற்கட் "சோழமண்டல பிரதிஷ்டாபகன்" "அகளங்கன்" எனவரும் விருதுகளும் இவர் சோழர்பாற் பெற்ற படைத்தலைமை குறிப்பனவாம். சோழன் மறவராகிய இவர் சோணாட்டைவிட்டுச் சேதுதீரத்திற் குடியேறிய காலம் இஃது என நன்குதேறப்படாவிடினும், திரிபுவனதேவன் எனப்பெயர் சிறந்த குலோத்துங்கசோழன் காலத்துக்குப் பின்னேதான் இவர் ஆங்குக் குடியேறியதாகுமென்பது சில ஏதுக்களால் அநுமானிக்கப்படுகின்றது. குலோத்துங்கசோழன் கி.பி.1064இல் பாண்டி நாடாண்ட வீரபாண்டியனென்பவனைப் போர்தொலைத்து பாண்டி நாட்டைத் தன்னடிப்படுத்தித் தன் தம்பியாகிய கங்கைகொண்டான் சோழற்குச் சுந்தரபாண்டியன் என்னும் பேர்தந்து அப்பாண்டி நாட்டையாளும் அரசுரிமையைக் கொடுத்தனனாதலால், அக்காலத்தே அப்போர்க்குப் பெருந்துணையாச் சிறந்த சோழன் மறவர் பலர் இப்பாண்டி நாட்டிற் குடியேறினாராவர். குலோத்துங்கசோழனுக்குப் பின்னே சோணாடு பலவேற்றரசராற் படையெடுக்கப்பட்டுப் பிறர் பிறர் ஆட்சிக்குள்ளாகி அரசுரிமை மாறுபட்டதனானே, இம்மறவர் தம்படைத் தலைமையிழந்து தந்நாட்டே வேற்றரசர்கள்கீழ் ஒடுங்குதலும் வேற்றுநாட்டிற் குடியேறி வாழ்தல் சிறந்ததாமென்று கருதிச் சோணாடு விட்டுக் கடலோரமாகப் போந்து சேதுதீரத்துக் காடுகெடுத்து நாடாக்கித் தம்மரசு நிலையிட்டு ஆட்சி புரிந்தனராவரெனக் கொள்ளினுமமையும். இவர் ஆட்சியுட்படுத்த நாட்டிற்கும் இவர் பயின்ற செம்பி நாட்டின் பெயரே, பெயராக இட்டு வழங்கினர் போலும். இவர்களது பழைய சாசனங்களிற் பெரும்பாலும் "குலோத்துங்கசோழ நல்லூர்க்கீழ்பால் விரையாத கண்டனிலிருக்கும் வங்கிசாதிபர்" என்னும் ஒரு விசேடணம் காணப்படுதலால் இவர் சோணாடுவிட்டு ஈண்டுப் போந்துகண்ட தலைமைநகர் குலோத்துங்கசோழ நல்லூர் என்பதாகுமென ஊகிக்கத்தக்கது. இவ்வூர் பெயரும் குலோத்துங்க சோழனுக்குப் பின்னரே இவர் குடியேற்றம் ஈண்டு உளதாயது குறிக்கும். விரையாத கண்டன் என்பதிலுள்ள கண்டன் என்பதும் குலோத் துங்கசோழன் பெயராகும். "தொழுகின்றமன்னர் சொரிந் திட்ட செம்பொற் றுலாத்திடை வண்டுமுழுகின்ற தார்க் கண்ட னேறியஞான்று" (தமிழ்நாவலர் சரிதை) என்றார் ஒட்டக்கூத்தரும். கண்டன்பெயரானே கண்டனூர் முதலாகப் பல ஊர்கள் இச்சேதுநாட்டு வழங்கப்படுதலுங் காண்க. இக்காலத்துச் சேதுபதிகள் தலைநகராகிய முகவைக்கு ஒரு காத தூரத்து வையைக்கரையிலே கங்கை கொண்டான் என்னும் பெயரில் ஒரூருண்மை யினையும் இச்சேதுநாட்டு வீரபாண்டி, விக்கிரமபாண்டி, வீரசோழன், சோழபுரம் என்னும் பெயர்களாற் சிலவூர்கள் வழங்கப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இவர் சாசனங்களில் அகளங்கன் என இருத்தற்கேற்ப அமிர்த கவிராயர் அபயரகுநாத சேதுபதி(201) செம்பியன் (234), அநபாயன்(234), ரகுநாதன், (202) புனற்செம்பியன், (212) சென்னிக்குஞ் சென்னியெனும் ரகுநாதன் (212) எனக் கூறுதல் காண்க. இரவிகுலமென்பதும் பற்றி மனு சிபி முதலிய வேந்தர் பெயர்களைச் சோழர்க்கிட்டு வழங்கியாங்கு, அச்சோழர்க்குறுப்பாய்ச் சிறந்த நலம் பற்றி இரவிகுலத்தவராகக் கொண்டு, அக்குலத்துதித்த தனிவீரனும் பிற்காலத்து இவர் காவலிற்பட்ட புண்ணிய சேதுவைப் பண்ணியோனுமாகிய சீராமமூர்த்தி பெயரே இவர்க்குப் பெயராகவைத்து ரகுநாத சேதுபதியெனச் சிறப்பித்து வழங்கினார் போலும். குலம்பற்றி இராஜசூரியசேதுபதி எனப்பட்டாரும் இவ்வழியிலுண்டு. இவர் பெயரான் இந்நாட்டில் இன்றைக்கும் இராஜசூரியமடையென ஒரு சிற்றூர் வழங்கப்படுதலுங் காண்க. இவரைப் படைவீராகக் கொண்டு சிறந்த சோழஅரசர் பெயரும் இவர்பாற் காண்டலால், ஈண்டைச் சூரியன் என்பதும் சோழன் பெயரே எனினும் அமையும். இதனைச் "சூரியன் புனனாடன் சோழன் பெயரே" என்னும் பிங்கல நிகண்டாலுமறிக. "கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்" என்னும் பட்டம் பெற்றுக் குலோத்துங்க சேதுபதியென்னும் பெயரான் விளங்கினார் ஒருவருளராதலானே இஃதறியப்படும். சோழன் மறவராகிய பண்ணன் பெயர்வழக்கும், காவிரி

வடகரையிலுள்ள அவன் ஊராகிய சிறு குடியின் பெயர்வழக்கும், இவர் குடியேறிய இந்நாட்டில் இன்றைக்கும் காணலாகும். விரைபாதகண்டனென்பது சேதுநாட்டு இராஜசிங்கமங்கல சேகரத்துள்ளது. அச்சேகரத்துப் பண்ணக்கோட்டையெனவும், சிறுகுடியெனவும் வழங்கும் ஊர்கள் இரண்டு உள்ளன.

சோழர்குலத்தோரைத் தொண்டியோர் என வழங்குவர் என்பதும், அத்தொண்டி என்னும் பதி கூடற்குக் குணதிசைக் கண்ணுள்ளதென்பதும் "வங்க வீட்டத்துத் தொண்டியோர்" (106) என்னும் ஊர்காண் காதைக்கு அடியார்க்குநல்லார் கூறிய உரையானே அறியலாம். இச்சேதுபதிகட்குத் "தொண்டியந்துறைக் காவலோன்" என ஒரு பட்டம் பழைய சாசனங்களிலெல்லாம் காணப்படுகிறது. இத்தொண்டிப்பதி இக்காலத்தும் இச்சேதுநாட்டுச் சிறந்த துறைமுகப்பட்டினமாயுள்ளது. சோழர்க்குச் சிறந்த துறைமுகமாயிருந்தது இவர் காப்பிற்பட்ட சிறப்பான், இவர் தொண்டியந்துறைக் காவலர் எனப் பெயர் பெற்றனராவர். எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் சேரர்க்குரியதாகக் கூறப்பட்ட குட்டுவன் தொண்டியென்பது குடகடற்கரைக் கண்ணதாகும். அது வேறு, இது வேறென உணர்க. "நளியிரு முந்நீர் நாவா யோட்டி, வளிதொழி லாண்ட வுரவோன் மருக" என்னும் புறப்பாட்டாற் சோழர் மரக்கலப் படையை யுடையராயினாரென்பது நன்கறியப்படும். இம்மறவர் அவர் படைத்தலைவராதல் பற்றி ஆற்றினும் கடனும் தம்படையைச் செலுத்துவோர் என்னுங் கருத்தால் "ஆற்றுப்பாய்ச்சி" "கடற்பாய்ச்சி" எனப்பட்டம் பெற்றனராவர். இவர் இம்மரக் கலப்படை வயாற் சென்று "ஈழமும், யாழ்ப்பாணராயன் பட்டணமும் கஜவேட்டைகொண்டருளினா" ரென்று விருதாவளியும் பெறுவர். இவரது மரக்கலப்படைப் பயிற்சி, இவர்க்குச் சோழரினின்று எய்தியதாகும். இம்மறவருள் மரக்காய கிளை என்னும் பெயரால் கிளை வழங்கப்படுதலும் இக்கருத்தையே வலியுறுத்தும். அது மரக்கலப்படையைக் கொண்டு செலுத்தும் பகுதியினர் எனப் பொருள் தருதலும் கண்டு கொள்க. வடநாட்டும் நிஷாதர் எனப் பெயரியார் முற்காலத்தே மரக்கலம் இயக்குதல் தேர்ந்துளாரென்பது, வான்மீகி ராமாயணத்துங் கண்டது. வேடர் தலைவனாகிய குகனே சீராமமூர்த்திக்குத் தோணி இயக்கினான் என்பதனால் ஈதறியப்படும். இவர் கடலோரத்துள்ள இச்சேதுநாட்டிற் குடியேறியதும் இக்கடற்பயிற்சி பற்றியேயாகுமென்பது ஊகித்தறியத் தக்கது.

இம்மறவருள் தொண்டைமான் கிளையெனச் சிலரை வழங்குவதும் சோழர்க்கும் இவர்க்குமுள்ள இயைபையே குறிப்பதாகும். நாகபட்டினத்திலிருந்த சோழன் ஒருவன் நாகலோகம் சென்று ஒரு நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேனென்ற பொழுது தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே வரவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பேனென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிட, அவனைத் திரைகொண்டு தந்தமையால், அவனும் அவன் வழியினரும் திரையன், திரையர் எனப் பெயர் பெற்றனரெனவும், அவன் வழியினரெல்லாம் தொண்மையே குடிப்போந்த காரணத்தால் தொண்டையர், தொண்டைமான்கள் என வழங்கப்பட்டனரெனவும் பெரும்பாணாற்றுப் படையாலும் அதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் அறியப்படுதலால், தொண்டைமான்களும் சோழர்வழித் தோன்றினோராவரென்பதும், சோழராலே நாடாட்சி அளிக்கப்பட்டனரென்பதும் தெளியலாகும். கலிங்கத்தை வென்ற கருணாகரன் என்பவன் சோழன் படைத் தலைவன் என்பதும் அவன் தொண்டைமான் எனச் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினான் என்பதும் கலிங்கத்துப்பரணி என்னும் நூலால் நன்கறியலாவன. இவற்றாற் சோழர் வழித்தோன்றி நாடாட்சி தனியேயளிக்கப்பெற்றாரும், அச்சோழர்க்குப் படைத் தலைவராய்ச் சிறந்தாரும், தொண்டைமானெனச் சிறப்புப் பெயர் பெறுதலின் இம்மறவரும், சோழர் படைத்தலைவராய்ச் சிறந்த ஒற்றுமையால் தொண்டை மான்களெனச் சிறப்புப்பெயர் எய்தினாராவர். இப்பகுதியினரைத் தொண்டைமான் கிளையெனலும் நன்கு பொருந்துவதேயாம். இவர்கள் சாசனங்களில் "சுவாமித்துரோகிகள் மிண்டனென்றிருப்பது இவர்கள் படைவீரர்களாய் இருந்தனர் என்பதையே நன்கு புலப்படுத்தும்.

இனி இம்மறவர் தேவரெனச் சிறப்புப்பெயர் புனைதலும் அச்சோழர்பாற் பயின்றமையே குறிக்கின்றது. குலோத்துங்க சோழதேவன், திரிபுவனதேவன், ராஜராஜ சோழதேவன், ராஜேந்திர சோழதேவன் எனச் சோழர் சாசனங்களில் வழங்குவது காண்க. திரிபுவனதேவன் எனச் சோழர் வெண்பாமாலை உரையினும் கண்டது. உலகபாலராய தேவருருவாய் நின்று உலகங்காத்தன் அரசனைத் தேவன் என்பர் என உணர்ந்து கொள்க. இவையெல்லாம் இம் மறவர்க்கும் சோழர்க்கும் உள்ள பண்டை இயைபினை வலியுறுத்துவனவாம்.

இனி இம்மறவர் புனைகின்ற முல்லை மாலையும் சோழர்க்குரியதாம். "மூவர் விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்" (பாடாண் படலம்-34) என ஐயனாரிதனார் கூறியவாற்றானே, சோழர்க்கு முல்லை மாலையுரியதாதல் கண்டுகொள்க. அரசர்க்குப் போர்ப்பூ எனவும் தார்ப்பூ எனவும் இரண்டுண்டு என்பது "படையுங் கொடியும்"(71) என்னும் மரபியற் சூத்திர வுரையானுணர்க. போர்ப் பூவாவது போரில் இன்ன வேந்தன் வென்றான் என்பதற்கு ஓர் அறிகுறிவேண்டிச் சூடும்பூ, தார்ப்பூவாவது ஓர் விசேடமாக இடுவது என்ப. சோழற்கு ஆர் என்பது போர்ப்பூவாகவும், முல்லை என்பது தார்ப்பூவாகவுங் கொள்க. இக்கருத்தானன்றே"ஆரங் கண்ணிச் சோழன்" எனவும், "முல்லைத்தார்ச் செம்பியன்" எனவும் சான்றோர் வேறு வேறு கூறினாரெனவுணர்க. திருமுருகாற்றுப்படை உரையினும் நச்சினார்க்கினியர் முருகக்கடவுட்குக் கடம்பினைத் தார்ப்பூவாகவும், காந்தளை அடையாளப் பூவாகவும் கூறினார். ஆண்டுங் கண்ணியையும் தாரினையும் வேறுபடுத்து, "மாராஅத் துருள் பூந் தாண்டார்" எனவும், "காந்தட் பெருந்தண் கண்ணி" எனவும் வழங்குதல் ஆராய்ந்துகொள்க. அன்றியும் இம்முல்லைத் தார் அரசமுல்லை முதலாக, மறமுல்லை யிறுதியாகக் கூறப்பட்ட துறை வகைகளாற் பெரும்பாலும் அரசியல் பின் மிகுதியும் வீரரரியல்பின் மிகுதியுமே கூறுதலால், அவற்றிற்கு அறிகுறியாய் வீரமாலையாய்ச் சிறத்தலுங் கண்டுகொள்க. இக்கருத்தானே முல்லைத்தார்ச்செம்பியன் என்பதற்கு வெற்றி மாலையையுடைய சோழன் என்றார் சாமுண்டி தேவநாயகரும். "முல்லைத்தார் வேந்தன் றொடுகழன் மைந்தர் தொழில்" என்றார் வஞ்சிப்படலத்தும். (வெண்பா மாலை) இம்மறவர் தஞ்சோழனது தார்ப்பூவாதலானும், தமக்கு வீரமாலையாய்ச் சிறத்தலானும், முல்லை மாலையைப் புனைவாராயினார் எனக் கோடலே இயை புடைத்தாகும். ஒருதுறைக் கோவையில் அமிர்த கவிராயரும் "முல்லை வீரத்தொடை புனைவோன் ரகுநாதன்" (9) எனக் கூறுதலுங் காண்க. இத்துணையுங் கூறியவாற்றான் இச்சேதுபதிகள் சோழன் மறவர்வழித் தோன்றியோரேயாவர் என்பது நன்குணரலாகும்.

இனி இச்செம்பிநாட்டு மறவருக்குள் ஓர் கிளையினர் 'பிச்சகிளை' என்னும் பெயரான் வழங்கப்படுகின்றனர். இக்கிளையினராகிய மறவர் தம்முடைய வீரத்தால் முடியுடைப் பெருவேந்தர்பாற் கொற்றக்குடை முதலிய விருது பெற்றுச் சிறந்தார் வழித் தோன்றினராவர்.பிச்சம்-குடை. இச்சேதுபதிகளுக்குச் சிறந்த கொற்றக்குடை செங்குடையாகும். இவரது பெருவீரத்துக்கு அறிகுறியாய நிறம் செம்மையேயாதலால், இவர் தங்குடையைச் செந்நிறத்தாகக் கொண்டனராவார். செந்நிறம் எத்தற் பொருட்டுச் செவ்விய காவிக்கற்றோய்க்கப்பெறுதலால், இது செங்காவிக் குடை எனப்படும். "நங்காமதேனு வெனவந்த கார் செம்பி நாடனுயர், செங்காவி யங்குடை யான் ரகுநாதன்" என்றார் ஒருதுறைக்கோவையினும். குடைவகையிற் செங்குடை என ஒன்றுண்டு என்பதனைச் "செங்குடை மீயையுஞ் சிந்தூ ரமுமாகும்" எனவரும் பிங்கல நிகண்டானுமறிக. தந்நிலையிற் றாழாமையும் தாழவரினுயிர் வாழாமையுமாகிய மானத் தையே தலையாய்ச் சிறப்பித்தோம்புதற்கு அறிகுறியாய்க் கவரிமானின் மயிரை இவரது செங்குடைக் காம்பின் றலையிற் சூட்டுவது இவர்க்குத் தொன்று தொட்டு வந்த வழக்கம். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமானன்னா ருயிர் நீப்பர் மானம்வரின்" என்றார் திருவள்ளுவரும். இவரது வெற்றிக்கொடியும் செங்காவிக் கொடி யென்ப. ஒருதுறைக்கோவையிற் கருடக் கொடியும் அநுமக்கொடியுமே இவர்க்குளவாகக் கூறப்பட்டன. ககராசவீரவெங் கேதனத்தான், 'கருடவெங்கேதனத் தளவாய்' 'தூதே நடந்த கவிகுல மாமணி தோன்றுகொடி, மீதே யுயர்த்த ரகுநாதன்' என வருதல் காண்க. திருவுடை மன்னரெல்லாம் திருமால் கூறாவர் என்பது பற்றியும், ரகுநாதன் எனப் பட்டம் புனைதல் பற்றியும் இவ்விரு கொடிகளையும் தனக்குரியனவாகக் கொண்டனராவார். இவர் சூரியகுலத்தவதரித்த தோலாத தனி வீரன் திருப் பெயராகிய விஜயரகுநாதன் என்பதே தமக்குரிய சிறப்புப் பெயராகச் சூடியதும் வீரவென்றி பற்றியதேயாகும். விஜயாலயன் பேரனாகிய வீரநாராயண சோழன் என்பவன் வீரவென்றி பற்றிச் சங்கிராமராகவன் எனப் பட்டம் புனைந்தமையும் பழைய சோழர் சாஸனங்களிற் காண்க. குலோத்துங்க சேதுபதிகளின் புத்திரராகிய சமரகோலாகல சேதுபதி என்பவர், சோழரிடம் மன்னார் குடாக்கடலில் முத்துக்குளிக்கும் உரிமையைத் தமது வீரத்துக்குப் பரிசாகப் பெற்றனராதலால், அன்று முதல் இவர் தமது கடல் வளமுடைமையை மேம்படுத்தித் தம் சிறப்புப் பெயர்கட்கு முன் முத்து என்னும் பதத்தினையும் இணைத்து வழங்கினராவர். முத்து விஜயரகுநாதன் என்பது இவர்க்குச் சிறந்த பெயராம். இவரது சாஸனங்களிற் சொறிமுத்து வன்னியன் என ஓர் விருதாவளி காணப் படுவதும் இவரது கடற்படுமுத்தின் பெருக்கத்தினையே குறிப்பதாகும். "வணங்காத தெவ்வைப் பொருமால் சொரிமுத்து வன்னியன்பொன்,

னணங்காரு மார்பன் ரகுநாதன்" என ஒருதுறைக் கோவையிலும் வருதல் காண்க. வன்னியர் என்பதும் அரசர் படைத்தலைவர்க்கு கொருபெயர்.

" கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்
செங்கோன் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலைகள வென்னும் படர்களை கட்டுத்
திக்குப்பட ராணை வேலி கோலித்
தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்"

எனவரும் கல்லாடத்தானும் அறிந்துகொள்க. இனி இவர் சிறப்பித்துத் தாங்கும் படைக்கலம் வளரி எனப் பெயர் பெறுவது. இதனை ஆளுதலிலிவர் மிகக் கைந்- -தேர்ந்தவராவர். கருதிய குறியினைத்தப்பாமலெய்தலும் எறிந்தவளரியை மீண்டும் தங்கைக்கு எய்துவித்தலும் இவர்க்கே சிறந்த பெருஞ்செயல்களாயிருந்தன என்ப. இத்தகைய அறிய வளரிப் பயிற்சி ஆஸ்டிரேலிய கண்டத்துத் தொன்றுதொட்டுள்ள காடுறை வாழ்க்கை யரிடம் யாரும் வியக்கத்தக்க நிலையில் இக்காலத்தும் சிறந்துள்ள தென்பர் மேற்றிசையார். அச்சேதுபதிகளது வடிவமைத்த பண்டைக் கல்லுருவங்களிலெல்லாம், இடையிற் சுற்றிய வீரக்கச்சனையில், இவ்வளரியே செருகப்பட்டுள்ளது இன்றைக்கும் காணலாம். இதுவே இவர்க்குரிய பேரடையாளமாவது. இவரது வீரக்கழல் சேமத்தலை எனப் பெயர் சிறக்கும். இது தம்மால் வெல்லப்பட்ட பகைவனது தலையையே தமக்குச் சிறந்த தாளணியாக்கிக் கொண்டு விளங்கியமை குறிப்ப தாகும். இச்சேதுபதிகள் முற்காலத்து எட்டன் ஒருவனோடு பொருது, அவனைப் போரில் தொலைத்து அவன் தலையையே தம் வீரக்கழலில் அணிந்து கொண்டனரெனக் கூறுவர். இதனை மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய தளசிங்கமாலையில்,

சிலையயா மெழுத்துஞ் சகாயமுங் கீர்த்தியுஞ் செந்தமிழு
நிலையாகு மன்னர்சொல் வார்த்தையு மென்றைக்கு நிற்குங்கண்டாய்
கலையாருங் கானில்வன் கல்லைப்பெண் ணாக்கிய காலிலெட்டன்
றலையார் விசய ரகுநாத சேதுதள சிங்கமே.

என வந்தலானே அறிந்து கொள்க . இராமேச்சுரத்துத் திருக்கோயிற் பிரகாரமெல்லாம் நிறைந்துள்ள இச்சேதுபதிகள் கல்லுருவங்களில் இவ்வளரியுஞ் சேமத்தலையுமே சிறந்த அடையாளங்களாவன காணலாகும் .

இனிச் சோழரால் நாடாட்சி பிரித்தளிக்கப்பட்ட திரையரெல்லாம் தொண்டைமான்கள் எனப் பெயர் கொண்டாற் போல, இச்சேதுபதிகளுடைய நாட்டிலிருந்து பிரிந்தோர் விஜயரகுநாதன் என்னும் பட்டத்தினைப் புனைந்து விளங்குதலுங் கண்டுகொள்க. பண்டைக் காலத்துச் சேதுநாடு என்பது இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை இம்மூன்று ஸமஸ்தானங்களும் ஒருங்குசேர்ந்ததாகும். கிழவன் சேதுபதி காலத்துப் புதுக்கோட்டையும் (கி.பி.1673 –1708) பவானி சங்கர சேதுபதிகாலத்துச் சிவகங்கையும் (கி.பி.1724–1728) தனியரசு பெற்றவாம். கி.பி.1673ஆம் வருடம் வரை இம்மூவகை நாட்டிற்குஞ் சேதுபதிகளே தனித்தலை வராய்ச் செங்கோல் செலுத்தினராவர். இவர் வட நாட்டினின்று ஆரியர் பலரைக் கொணர்ந்து புண்ணிய சேதுவிற்றிருக்கோயில் கொண்டருளிய இராமேச்சர் கைங்கரியத்துப் புகுவித்துத் தாமும் அக்கடவுட்கு வழிவழித்தொண்டராய்ச் சிறந்தனர். 'ராமநாத சுவாமி ஸகாயம்' என்பதே பண்டைச் சேதுபதிகள் கையொப்பமாகும். 'சூலங்கைக் கொண்ட விராமேசர் தாண்முடி சூடியெழு, ஞாலங்கைக் கொண்ட ரகுநாயகன்' எனவும், ஆரியர் போற்றுமிராமேசர் தாளிணைக் கன்புவைத்த, சூரியன் வீரையர் கோன் ரகுநாதன்' எனவும் அமிர்தகவிராயர் கூறுதல் காண்க. இவர் சாஸனங்களில் 'ஆரியர் மானங்காத்தான்' என ஓர் விருது வழங்குவதும் இவர் ஆரியரைப் போற்றிவந்தமை குறிக்கும் . இச்சேதுதிகள் இராமநாதபுரம் ஆகிய முகவையைத் தமக்குரிய தலைநகராகக் கொள்ளுதற்கு முன்னே சேதுநாட்டிற் பல ஊர்களைத் தலைநகராக்கி வந்தனரென்பது, பழைய சாஸனங்களாலும் அறியப்படுகின்றது. அவ்வூர்களாவன :–

1. குலேத்துங்க சோழநல்லூர்– (சாஸனம்)

2. விரையாதகண்டன் – (சாஸனம்)

3. செம்பி – (ஒரு துறைக்கோவை)

4. கரந்தை – (ஒரு துறைக்கோவை)

5. வீரை .– (ஒரு துறைக்கோவை)

6. தேவை – (ஒரு துறைக்கோவை)

7. மணவை–(ஒருதுறைக்கோவை)

8. மழவை–(ஒரு துறைக்கோவை)

9. புகலூர்–(ஒரு துறைக்கோவை)

என இவையாம் . இவ்வூர்களில் அரசாண்ட பழைய சேதுபதிகள் பெயர்கள் முறையே தொடராக இப்போது கிடைக்கப்பெறாவிடினும் சேதுபதிகள் வரலாறு குறித்துள்ள பழைய கையெழுத்துப் பிரதியொன்றாற் சில பெயர்கள் அறியலாவன . அப்பெயர்கள் வருமாறு–

1. ஆதிரகுநாத சேதுபதி

2. ஜயதுங்கரகுநாத சேதுபதி

3. அதிவீரரகுநாத சேதுபதி

4. வரகுணரகுநாத சேதுபதி

5. குலோத்துங்க சேதுபதி

6. சமரகோலாகல சேதுபதி

7. மார்த்தாண்டபைரவ சேதுபதி

8. சுந்தரபாண்டிய சேதுபதி

9. காங்கேயரகுநாத சேதுபதி

10.விஜயமுத்துராமலிங்க சேதுபதி

இவர்கள் சேதுநாட்டிலுள்ள சில பழைய கோயில்களைக் கட்டுவித்தனர் எனவும் கூறுவதேயல்லாது, வேறு இவர் காலம், ஊர், செயல் முதலிய ஒன்றும் விளங்குமாறு அவ்வரலாறு கூறிற்றில்லை. இவர்க்குப் பின் கி.பி. 1604 ஆம் வருடமுதல் இந்நாடாண்ட சேதுபதிகள் வரலாறே, அஃது ஒருவாறு தொகுத்துரைப்பதாகும். அதுவே, Mr.Nelson's Madura Country மகா–ள–ள–ஸ்ரீ. ராஜாராமாராவ் அவர்களின் Ramnad Manual,Ms.Sewell -List of Antiquities .Madras, Vol.II இவற்றினும் பெரும்பாலுங் காணப்படுவது, அச் சேதுபதிகளாவர்.

1. சடைக்கத்தேவராகிய உடையான் சேதுபதி கி.பி.1604–1621

2. கூத்தன் சேதுபதி கி.பி.1621–1635

3. தளவாய்சேதுபதி கி.பி.1635–1645

4. ரகுநாத சேதுபதியாகிய திருமலை சேதுபதி கி.பி.1645– 1670

5. ராஜசூரிய சேதுபதிகி.பி1670–1673

6. கிழவன் சேதுபதி கி.பி.1673–1708

7. திருவுடைய தேவர் கி.பி.1709–1723

8. தண்டத்தேவர் கி.பி.1724

9. பாவனி சங்கரதேவர் கி.பி.1724–1728

10. குமாரமுத்துவிஜயரகுநாதசேதுபதி கி.பி.1728–1734

11 . முத்துக்குமார சேதுபதி கி.பி.1734–1747

12. இராக்கத்தேவர் கி.பி.1747–1748

13. செல்லத்தேவர் கி.பி.1748–1760

14. முத்துராமலிங்க சேதுபதி கி.பி.1760–1794

15. இராணிமங்களேசுவரிநாச்சியர் கி.பி.1803 - 1812

16. அண்ணாச்சாமி சேதுபதி கி.பி.1812–1815

17. இராணிமுத்துவீராயிநாச்சியார் கி.பி.1815–1829

18. இராமசுவாமி சேதுபதி கி.பி.1829

19. இராணிமங்களேசுவரிநாச்சியார் கி.பி.1829–1838

20. இராணிதுரைராஜநாச்சியார்கி.பி.1838–1845

21. இராணிபர்வதவர்த்தனி நாச்சியார் கி.பி.1845–1868

22. முத்துராமலிங்க சேதுபதி கி.பி.1868–1873

23. பாஸ்கர சேதுபதி கி.பி.1873–1903

என இவர்கள். இச்சேது வேந்தர்களெல்லாம் தெய்வ வழிபாட்டானும் தரும சிந்தனையானும், செந்தமிழபி மானத்தானும், பெருங்கொடை யானும் அளவில்லாத புகழையே விளைத்தவர்கள். இச்சேதுநாட்டு தேவஸ் தானங்களும் அன்னசத்திரங்களும் வருடமொன்றுக்கு நான்கிலக்க ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்வருவா யுடையனவாகும். புண்ணிய சேதுவைக் கண்ணிய பெருவழிகளெல்லாம் இவர்களது அன்னசத்திரங்களே நிறைந்து விளங்குவன காணலாம். நீர்வளமிகுந்த நல்லூர்கள் பல, அந்தணர்க்குத் தருமாசனம் என்னும் பெயரான் முற்றூட்டாக இவர்களால் அளிக்கப்பட்டுள்ளன. தேவாலயங்களுக்கும் அன்ன சத்திரங்கட்கும். மடாலயங்கட்கும் இவ்வாறே இவ்வேந்தர்கள் செந்தமிழ்ப் புலவர்கட்கும் முற்றுட்டாக அளித்த கிராமங்களை எண்ணில் மிகப்பலவாம். வருட மொன்றுக்கு முப்பதினாயிர ரூபாவுக்கு மேற்பட்ட பொருள் வருவாய் இச்சமஸ்தானபதிகள் பரோபகாரத்துக்கென்று வரைந்து வைத்த பெருந்தன மாகும். இது "தரும மகமை", "சாரி மகமை" என்னும் பெயர்களால் இன்றைக்கும் விளங்குகிறது. இராமேச்சுரம்

இவ்வேந்தர்களால் பெரிதுஞ் சிறப்பித்துப் போற்றப்பட்ட முக்கிய தேவாலயமாகும். இவர்கள் ஆண்டுப்புரிந்த தருமங்களே மிகவும் விலையுயர்ந்தன. இத்திருக் கோயிற்கண் இவ்வரசரியற்றிய அரிய பெரிய மண்டபங்களின் விசித்திர சிற்பங்கள் மேற்றிசை யோராலின்றைக்கும் பாராட்டப் பெறுவன. சிதம்பரம், மதுரை, திருப்பரங்குன்றம், திருப்பெருந்துறை, திருச்செந்தூர், பழனி முதலிய கோயில்களெல்லாம் இவர்களது கட்டளைகள் உடையன. சேதுதீரத்துள்ள இராமேச்சரம், திருப்புல்லாணி முதலிய சிவாலய விஷ்ணு ஆலயங்களில் பெரிய திருப்பணிகளெல்லாம் இவர்களாலே நன்கியற்றப் பட்டனவாகும். இதனைத்,

"தேனார் மொழிமட மாதர்சந் தானம்பொன் சேருங்கல்வி
மேனாட் டவமுனைப் போற்செய் தவர்க்குண்டு வீணர்குண்டோ
வானா டரும்பணி ராமே சருக்குமுன் மண்டபஞ்செய்
தானாம் விசய ரகுநாத சேது தளசிங்கமே"

"எனதன்ம மாகிலுந் தான்கற்ப கால மிருக்கவுன்போன்
மனதி னினைந்த படிசெய்ய யார்க்கும் வராதுகண்டாய்
கனதன மாறிருப் புல்லாணிக் கோபுரங் கட்டுவித்த
தனத விசய ரகுநாத சேது தளசிங்கமே"


என்னுந் தளசிங்கமாலைப் பாடல்களான் அறிந்து கொள்க. இவ்வேந்தர்களது செந்தமிழ் வண்மை ஒருத்துறைக்கோவையிற் பலவாறாய்ப் புகழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது. சேர சோழ பாண்டியர்க்குப் பின் தனித் தமிழ் அரசர்களாகிய இச்சேதுபதிகளே செந்தமிழ்ப் பரிபாலனஞ்சீர் பெறவியற்றினரென்ப. ஒருதுறைக்கோவை பாடிய பொன்னாங்கால் அமிர்த கவிராயருக்குப் பதினாயிரம் பொன் பரிசில் அளித்தனரெனக் கூறுவர். இதனைக் "கோவைத் துறைக்குப் பதினாயிரம் பொன் கொடுத்திசை கொள், தேவைத்துறைக்குத் துரைரகுநாதன்" என அக்கவிராயர் பாடியதனானே அறியத்தக்கது. இவ்வொருதுறைக்கோவை கொண்டவர், திருமலைரகுநாத சேதுபதி என்பவர். இவர் தளவாய் சேதுபதியின் புதல்வர்; தமிழில் செய்யுள் செய்தலிலும் வல்லவர் என்ப. அமிர்தகவிராயர் இவரைத் 'தளவாய் குமாரன்' எனவும் 'காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வுங் கவிமதுர வாக்குந் தழைத்த ரகுநாதன்' எனவும் கூறுமாற்றினவையறியப்படும். இவ்வாறே இச்சேதுபதிகள் நல்லுதவிப் பெற்றுச் சிறந்த செந்தமிழ் புலவர் பலராவர். யானறிந்தளவில் அப்புலவர்கள் பெயர்களும் அவர்கள் பாடியனவும் ஈண்டுக் கூறுகிறேன்.

1. அகோரதேவர் – திருக்கானப்பேர்ப்புராணம்
2. திருமறைக்காடு–திருச்சிற்றம்பலதேசிகர் – திருவடானைப்புராணம்
3. காடடர்ந்தகுடி–தலைமலை கண்டதேவர் மருதூரந்தாதி
4. மிதிலைப்பட்டி – சிற்றம்பலக்கவிராயர் தளசிங்கமாலை
5. மிதிலைப்பட்டி– மங்கைபாகக்கவிராயர் – கொடுங் குன்றப்புராணம்
6. பொன்னாங்கால்–அமிர்தகவிராயர் – ஒருதுறைக் கோவை
7. குருகூர்–இராமாநுஜ கவிராயர் – இரகுநாதக்கோவை
8. சக்கரைப்புலவர் – திருச்செந்தூர்க்கோவை
9. சவ்வாதுப்புலவர் – இராசேசுவரிபஞ்சரத்தினம்
10. சோமசுந்தரக்கவிராயர் – திருக்கழுக்குன்றக்கோவை
11. மதுரகவி(பெருங்கரை) – பல இசைப்பதங்கள்
12. சதாவதானம் பெரியசரவணக்கவிராயர் – பணவிடுதூது
13. முத்துநாயகப்புலவர் – கண்ணுடையம்மன் பள்ளு
14. சதாவதானம் சிறியசரவணக்கவிராயர் – குன்றைச் சிலேடை மாலை
15. சதாவதானம் கிருட்டிண ஐயங்கார் – புல்லை மாலை
16. பெருங்கருணை சதாவதானம் முத்தழகரையங்கார் – திருக்கோட்டிக்கலம்பகம்
17. சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார் – குருகை கலம்பகம்
18. வேலாயுதக்கவிராயர்
19. முத்துவீரப்பிள்ளை
20. செவ்வூர் வெண்பாப்புலி

இன்னுஞ் சில புலவர் பரம்பரையினர் கமுதியினும் முதுகுளத்தூரினும், ஊருணிக் கோட்டையினும்,

மாடம்பூரினும் பிறவிடங்களிலும் உள்ளார்கள். இவர்களெல்லாம் இச்சேதுபதிகளின் கைவண்மையின் பயனைத் துய்த்துச் சிறந்தவராவார்கள். இச்சேதுபதிகள் போலவே இவ்வரசர்பால் மந்திரக் கிழவராயமர்ந்தாரும் செந்தமிழ்ப் புலவரை இனிதோம்பினர். இந்நாடு முழுதுமுள்ள பல்வேறு வகைப்பட்ட நிலங்களின் தகுதியைப் பல்லாற்றானும் ஆராய்ந்துணர்ந்து அவற்றிற்கேற்ற இறையினைச் செவ்வனம் விதித்து ஒழுகு எனப் பெயர் சிறந்த நிலவிறைக் கணக்கை இந்நாட்டிற்கு உதவிய முத்திருளப்பப் பிள்ளையவர்கள் மதுரகவிகளாற் பெரிதும் சிறப்பித்துப் பாடப்பட்டனர். கிபி 1770ஆம் ஆண்டில் தஞ்சையரசனைப் போர்தொலைத்துச் சிறந்த தளவாய்–தாமோதரம் பிள்ளையவர்கள் வேள்விக் கோவை கொண்டனர். இனியிவ் வில்லேருழவர் தொல்குடி சிறக்க வந்த சொல்லேருழவரும், இராச்சியந்திர மகாநிபுணரென அறிஞர் பலரானும் புகழ்ந்து கொண்டாடப்பட்ட பேரறிவாளரும் ஆகிய ஸ்ரீமாந்–பொன்னுச்சாமித் தேவர்களது செந்தமிழ்வன்மை நந்தமிழ்நாடெல்லாம் நன்கறிந்ததே. இவர்கள் நல்லுதவியால் வெளிவந்த செந்தமிழ் நூல்கள், திருச்சிற்றம்பலக் கோவையாருரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, நன்னூல் விருத்தியுரை, இலக்கணக் கொத்துரை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி, முதற்சூத்திர விருத்தி, தமிழ்ப் பிரயோகவிவேகவுரை, தருக்கசங்கிரகவுரை, தனிப்பாடற்றிரட்டு, மருத்துவ நூல் எனப் பலவாம். இப்பிரபுசிகாமணிகளது அருமைச் சகோதரராகிய ஸ்ரீமாந் – முத்துராமலிங்க சேதுபதியவர்களது ஸங்கீதஸாகியத்தியவன்மை இந்நாடெல்லாம் நன்கு தெரிந்ததேயாம். அவர்களியற்றிய நூல்கள் வள்ளிமணமாலை, முருகரநுபூதி, மும்மொழி மாலை, பிரும்மகைவல்யம், பாலபோதம், பிரபாகரமாலை, காயகப்பிரியா, ரஸிகரஞ்சனம் எனப்பலவாம். இத்தகைச் சேதுபதிகள் மரபிற்கோர் திலகம் போல் விளங்கிப் பலகலையறிவானும் பிரசங்கவலியானும் பெருங் கொடையானும் நிலவு புகழ் பரப்பி, நந்தமிழ்நாடு புலம்பச் சமீப காலத்துத் தேகவியோகமடைத்த ஸ்ரீமாந்–பாஸ்கரசேதுபதி மன்னரது செந்தமிழறிவும் செந்தமிழபிமானமும் யாமெல்லாம் கண்கூடாகக் கண்டனவே. அமிழ்தினுமினிய தமிழ் முழுதோர்ந்து இமிழ்கடல் வரைப்பெல்லாம் அத்தமிழ்ச் சுவைதெருட்ட விழைந்து செந்தமிழ்ச் சங்கமொன்று சீர்பெற நிறுவி அதன் வளர்ச்சிக்கண்ணே கண்ணுங் கருத்தும் உடையராய்ச் சிறந்த நஞ்செந்தமிழ் வள்ளலாகிய பாலவனத்தம் ஜமீந்தார் மகா–ள–ள–ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்களும் இத்தொல் குடிப்பிறப்பினராவார். இவையெல்லாம் இச்சேதுபதிகட்கும் தமிழிற்கும் உள்ள பொருத்தம் விளக்குவனவாம். இத்துணையுங் கூறியவாற்றான் இச்சேதுபதிகளது தொன்மையியல்பும், செந்தமிழ் வண்மையும் ஒருவாற றியத்தக்கன. செந்தமிழபிமானத்தாற் சிறந்த சேதுபதி மரபு நீடுழி வாழ்க.

செப்பரும் பெரும்புலமைச் செந்தமிழ் ஆசான்



கு.வெ. பாலசுப்பிரமணியன்,
தஞ்சை.

செந்தமிழின் முதற் பத்திராதிபராக அமர்ந்து, தம் புலமையாலும் அயரா உழைப்பாலும் தமிழின் சீருயரச் செய்தக்கன செய்த பெரும்புலமைப் பேராசான் பெரிய இராகவனார் எனப் பெயர்பெற்ற ரா.ராகவய்யங்கார் 1870 முதல் 1948 முடிய எழுபத்தெட்டாண்டுகள் வாழ்ந்த புகழ் மறையாப் பொற்புடையவர். ஆங்கிலக் கல்வியின் பரவலால் அருந்தமிழ்க் கல்வியும் புலமையும், மங்கியிருந்த காலத்தில், தண்டமிழ்க் கூடற் கோநகரிலேயே திருக்குறள் நூல் கிடைக்கவில்லை என்ற நிலை தோன்றிற்று. சங்கமிருந்து தமிழாய்ந்த திருநகரில் திருக்குறள் நூல் ஒன்றில்லைகாண் என்பதறிந்து உளந் துடித்த பாண்டித்துரைக் கோமகனார் 1901 ஆம் ஆண்டில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தனர். 1902 ஆம் ஆண்டில் சங்கத்தின் சார்பில் திங்களிதழாகச் செந்தமிழ் தொடங்கப் பெற்றது. இவ்விதழின் ஆசானாக இரண்டரையாண்டுகள் ஈடில் பெரும் பணி ஆற்றினார் இராகவனார்.

பேரவைப் பெரும்புலவர்

சேதுசமத்தானப் பெரும்புலவர் என்ற இருக்கைக்கண் அமர்ந்து அரசப் பேரவைக்கு அணி செய்த பெருமகனார் இராகவய்யங்கார். 'பொப்பண்ண காங்கேயன் அளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை செய்வித்ததே' என்று அடியார்க்கு நல்லார் கூறுவது போன்று இராகவனாரும் சேதுவேந்தர்களின் புரப்பே தம்மைப் புலவராக்கியது எனக் கூறுகின்றார்.

இன்பாற் கரனார் இராசரா சேச்சுரச்சேய்
தென்னாக நாதவர சேதுபதி-மன்னரிவர்
வீறுமே வன்ன மிசையாதேல் என்நாவே
கூறுமே பாரி கொடை

என ஒட்டக்கூத்தர் வேந்தர் மூவர் அவை வீற்றிருந்து தமிழ்செய்ததுபோல் இப்பெருமகனாரும் சேதுவேந்தர் மூவர் அவையிலும் தலைமைப்புலவராக இருந்து அவர்களால் புரக்கப் பெற்றமை கூறுவர்.

பாஸ்கர சேதுபதியின் காலத்தில் அவைக்களப் புலவராகப் பணியமர்த்தப் பெற்ற இராகவனார், சேதுமன்னர் விவேகானந்தப் பெருமகனார் சிகாகோவிலிருந்து திரும்பியபோது (20.1.1897) அளித்த பெரிய வரவேற்பு விழாவில் உடனிருந்தனர். அப்போது விவேகானந்தரோடு சமயத் தொடர்பாகக் கலந்துரையாடி அவரை மகிழ்வித்தனர். இப்பெருமகனாரைத் தம் அவைக்களப்புலவராக ஆக்கிய பாஸ்கரர் அவர்க்கு ஊதியம் வழங்கவென ஓர் ஆவணம் எழுதி 4–11–1901 ஆம் நாளன்று அளித்தனர். அந்த ஆவணம் (மன்னர் பாஸ்கர சேதுபதி, டாக்டர் எஸ்.எம்.கமால்) இராகவனாரின் அருமை பெருமைகளை உரிய வகையில் விவரிக்கின்றது.

". . . . நமது சேது சமஸ்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாய் உள்ள தாங்கள் தமிழ் நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும், தமிழிலுள்ள அரிய பெரிய விஷயங்களைப் பலர்க்கும் உபந்யசித்தலாலும், அனேகர்க்குப் பூர்விகத் தமிழ் மொழியைப் போதித்து வருதலானும், வெளியிடுதலானும், இன்னும் பல நன் முயற்சிகளானும், தமிழ் மொழியை நன்றாய் வளர்ப்பவர்களாயும், நமது சமஸ்தானத்துச் செந்தமிழ் பரீக்ஷாதிகாரத் தலைவராயும், நமது சமஸ்தான வித்வத் அங்கத்தில் பரம முக்கியராயும் இருத்தலை யாலோசித்து, . . ."

'திரவிய சகாயம்' கொடுக்க வேண்டுமென்று உணர்ந்து ஆண்டொன்றுக்கு ரூ 600 ஊதியமும் பல்லக்குக் கட்டணம் 35 ரூபாயும் சேர்த்து ரூ635 ஐ இராகவய்யங்கார் ஆயுட்காலம் முழுமைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தனர். இவ்வாவணத்தை இராகவர்க்கு வழங்கி அவரைப் பல்லக்கில் ஏற்றித் தாமும் சுமந்தார் பாசுகர சேதுபதி. இத்தமிழுள்ளச் சால்பினை இராகவர்,

குவிகை தாங்கிக் குறையி ரந்தார்முனம்
கொண்ட லெனப்பொழி தருபாஸ்கரன்

சிவிகை தாங்கிட ஏறிய வீறுடைச்
சேது காவலர் தங்கவி யாகினேன்

என்று போற்றுகின்றார். தம்மைப் புரந்த பாஸ்கர வள்ளல் மறைந்தமை கண்டு நெஞ்சம் உருகிக் கண் பனித்துக் கையறு நிலையில் இராகவர் கலங்கினார்.

பாட்டும் உரையும் பயிலாப் பதடிகள்தம்
ஒட்டைச் செவியுள் உகுப்பேனோ-நீட்டுகொடைச்
செங்கையாய் பாற்கரனே செந்தமிழ்ப்பா
வின்சுவையை
எங்கையா சொல்வேன் இனி

என்று அக் கொடை ஞாயிறு மறைந்தபோது பாடினார்.

செந்தமிழ்ப்பணி

ரா.ராகவய்யங்கார் செந்தமிழின் ஆசிரியராய்ப் பணியாற்றிய இரண்டரை ஆண்டுக் காலத்தில், தாமே பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் செந்தமிழில் எழுதியதோடன்றி அறிஞர் பலரின் கட்டுரைகளையும் பெற்றுச் செந்தமிழில் வெளியிட்டார். அவ்வாறு கட்டுரைகள் அளித்த அறிஞர்களுள், பரிதிமாற்கலைஞர், சோழவந்தான் அரசஞ் சண்முகனார், கனகசபைப் பிள்ளை, யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை, மறைமலை அடிகளார், பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், மு.இராகவய்யங்கார், குலாம் காதிறு நாவலர், வெ.ப.சுப்பிரமணிய முதலியார், பாண்டித்துரைத் தேவர், திருமணம் செல்வகேசவராய முதலியார், நாராயணை யங்கார், உ.வே.சாமிநாதையர், கோபிநாதராவ், அமாதவையர், சடகோபராமானுசாச்சாரியார், ஆபிரகாம் பண்டிதர், சதாசிவ பண்டாரத்தார், வேங்கடசாமிநாட்டார், வை.மு.கோபால கிருஷ்ணமாசார்யர், வையாபுரிப் பிள்ளை, விபுலானந்தர், சோமசுந்தர பாரதி, பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரி என்போர் ரா.இராகவய்யங்கார் காலத்திலும் அவர்க்குப்பின்னும் எழுதியோராவர்.

இராகவய்யங்கார் செந்தமிழில் எழுதிய கட்டுரைகளிற் பல புதிய ஆய்வு முடிவுகளை அறிஞருலகிற்குக் காட்டின. சி.வை.தாமோதரம் பிள்ளை அச்சிட்டு வெளியிட்ட தொல்காப்பிய உவமவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல், மரபியல் நான்கும் அதுகாறும் நச்சினார்க்கினியரின் உரையின என்றே கருதப்பெற்றன. அவை பேராசிரியரின் உரையென்று ஆய்ந்து நிறுவியவர் இராகவய்யங்காரேயாவர். கம்பராமாயணத்திற்குக் கம்பர் சூட்டிய பெயர் இராமாவதாரம் என்ற செய்தியும் அவரால் புலப்படுத்தப்பட்டதாகும். பாகவத புராண ஆசிரியர் வேம்பத்தூர்ச் செவ்வைச் சூடுவார் என்பதையும் ஐயங்காரே வெளிக்காட்டினார். சங்கப் புலவர் பலர் குறித்த ஆய்வுக் கட்டுரைகளும், கம்பர் திருவள்ளுவர் குறித்த ஒப்பீட்டாய்வும், பெண்பாற் புலவர் பலர் குறித்த வரலாறும், சேதுவேந்தர்களின் வரலாறும் வழிமுறையும் இப்பெருமகனாராற் செந்தமிழில் வெளிவந்தன.

செந்தமிழ் இதழ், தமிழாராய்ச்சி உலகில் பெரிதும் போற்றப்பெற்றது. இதனைத் தொடர்ந்தே பல ஆராய்ச்சி இதழ்கள் தமிழுலகில் தோன்றின. மதுரைத் தமிழ்ச் சங்கத் தோற்றம், செந்தமிழ் இதழ் பிறப்பு ஆகியவற்றைக்கண்டே 1909 இல் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் அதனைத் தொடர்ந்து அச்சங்க இதழான தமிழ்ப்பொழிலும் தோற்றுவிக்கப் பெற்றன. ஒரு நூற்றாண்டுக்காலத் தமிழாராய்ச்சியில் செந்தமிழின் பணி விழுமியது.

இரண்டாங் கபிலர்

இராகவய்யங்கார் சுவைமிகச் செய்யுளியற்றும் புலவருமாவர். இவருடைய செய்யுட்களில், கற்பனைச் செழுமையும் உணர்ச்சியின் வெளிப்பாடும் மிகுதியும் தோன்றும். சென்னையில் தமிழ், வடமொழி அறிஞர் பலர் கூடி இவர்க்குப் 'பாஷா கவி சேகரர்' என்ற சிறப்புப் பெயர் தந்து மகிழ்ந்தனர். இவர் ஆறு செய்யுள் நூல்களைப் படைத்தவர். இராசராச சேதுபதியின் மீது 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் ஒருதுறை பற்றி நானூறு பாடல்களைக் கார்முகிலெனப் பொழிந்த பாமுகிலிவர்.

இப்பெரும் புலவர் இயற்றிய 'பாரி காதை' வள்ளல் பாரியின் கொடை மடத்தைப் போற்றுவது. இப் பெருநூலுக்கு இவரே உரையும் வரைந்தனர். 14–2–1934 ஆம் நாளன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்நூல் அரங்கேற்றப் பெற்றது. அண்ணாமலை அரசர் பிறந்த நாளில் அவர் மகனார் முத்தையவேள் இந்நூலை அரங்கேற்றச் செய்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார்

விழாவைத் தொடங்கி வைக்க, உ.வே.சாமிநாதையர் தலைமை தாங்க மு.இராகவய்யங்கார் பாரி காதைச் செய்யுட்களைப் படிக்க, பெரிய இராகவய்யங்கார் உரை நயம் கூறத் தமிழகத் தலைமைப் புலவர் பலர் அமர்ந்தினிது கேட்டு நூலாசிரியரைப் போற்றினர். அரசர் முத்தையவேள் இந்நூற்கு ஆயிரம் வெண்பொற் காசளித்துச் சிறப்பித்தார். 753 வெண்பாக்களால் இயன்ற இக்காதை ஒன்பான் சுவையும் தன்பாற் சேர அமைந்தது. பாரிவேள் முல்லைக்குத் தேரீந்தபின் நடந்துவரல் கண்ட மக்கள் உள்ளங்கசிந்து அக்கொடை மடச் செயலைப் போற்றினராம்.

குடிவருத்தம் என்னாகக் கொள்ளுமோ என்றார்
கொடிவருத்தம் காண்கிலாக் கோவேள்-படியின்
அடிவைத்த நன்சுவடாய் வார்கண்டார் ஒன்னார்
முடிவைத்த தாளானை முன்

என்று பாரியின் கொடைப்பண்பு காட்டுவர். பாரி இறந்தபின் கபிலர் பாரிமகளிரை உரியவர்பால் அடைக்கலப்படுத்தித் தீப்பாய்ந்து உயிர்ப்பலி ஈந்தனர். இறக்குமுன் கபிலர்,

உன்னைப் பிரிந்தும் உயிர்போகா என்னுடலம்
தன்னைத் தழல்வீழ்த்தல் தக்கதே - நின்னைப்
பிரிந்துள்ளே மூளும் பெருநெருப்புக் கீண்டு
விரிந்த தழல்குளிர்தல் மெய்

என்றனரென்பர். பாரிகாதையை அரங்கேற்றிய பின் இராகவய்யங்கார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராய்ப் பணியமர்த்தப் பெற்றார். 1935 ஆம் ஆண்டிலிருந்து 1941 ஆம் ஆண்டு முடிய ஆறாண்டுகள் ஐயங்கார் பல்கலைக்கழகத்தில் அரிய ஆய்வுகளை நிகழ்த்தியதோடு முதுகலை மாணவர்களுக்குப் பாடமும் கூறினர். பல பைந்தமிழ் ஏடுகளை ஆராய்ந்தும் உரைவரைந்தும் பயன்மிகு பணியாற்றினர். அக்காலத்தில் அவர் குறுந்தொகையின் நூற்றுப்பதினொரு பாடல்களுக்கு எழுதிய உரை 1946 இல் வெளிவந்தது. பின்பு அவரெழுதிய நூல் முழுமைக்குமான உரை கிடைக்கப் பெற்றுப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப் பெற்றது.

மகாவித்துவான் ஐயங்காரவர்கள், குறுந்தொகை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய சங்க நூல்களுக்கும், கீழ்க்கணக்கில் நான்கு நூல்களுக்கும் உரை வரைந்து பதிப்பித்தனர். நேமிநாதம், பன்னிருபாட்டியல், தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியருரை ஆகிய இலக்கண நூல்களையும் ஐயங்கார் பதிப்பித்தார். பகவத்கீதை, சாகுந்தலம் எனுமிரு வடமொழி நூல்களை இப்பெருமகனார் தமிழில் மொழிபெயர்த்தார்.

ஐயங்காரின் தமிழ்ப்புலமை பல தனித்திறன்களைக் கொண்டது. இதழாசிரியர், இலக்கியப் படைப்பாளர், இலக்கண ஆசிரியர், சுவடி ஆய்வாளர், நூற்பதிப்பாசிரியர், உரையாசிரியர், ஒப்பீட்டாய்வுரைஞர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல நிலைகளில் அவர் புலமைப் பணி வெளிப்பட்டது.

துதிபெறு தமிழில் வடமொழிப் பரப்பில்
தோய்ந்துநுண் பொருள்பல ஆய்ந்து
விதிமுறை அவையோர் வியக்குமாறு நுவலும்
விறல்மிகு நாவளம் படைத்தோன்
பொதிபொருட் சுவையின் வீறுகொள் பாடல்
பொருளுரை ஆய்வுரை பலவும்
மதிவலி இயற்றும் பெருமைசால் புலமை
வாய்ந்தவன் இராகவ மாலே

என்று பண்டிதமணி கதிரேசனார் ஐயங்காரின் புலமைத் திறம் போற்றுவர். பெரிய இராகவனாரின் உடனிருந்து துணைபுரிந்த அவர்தம் உறவினர் சின்ன இராகவனார் எனும் மு.இராகவய்யங்கார், பெரியவர் மறைந்தமை குறித்துக் கையற்று,

கம்பன் பிறப்போ கபிலரவ தாரமோ
இம்பரிவ ரென்ன இருந்தான் இறந்தானே
செம்பதுமை ஈன்றருளும் சீரா கவனோடும்
அம்புவியிற் காண்டற் கரும்புலமை மாய்ந்ததுவே

எனப் பாடுகின்றனர். இப்பெரியார்தம் இதழ்ப்பணியும் ஆராய்ச்சிப் பெருந்திறமும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் மறையா என்பது மறுக்கவியலா உண்மையாகும்.

மகாவித்துவான் இரா. இராகவையங்காரின் ஆய்வுநெறி



முனைவர். சு. முத்துலட்சுமி
மதுரை.

காலந்தோறும் தமிழ்க்கடலில் மூழ்கி முத்தெடுத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் செழுமைக்கு வித்திட்டு வந்த-வருகின்ற-வரும் தமிழ்ப் பேராசான்கள், ஆய்வறிஞர்கள், சான்றோர்கள் பலர் ஆவர். தமக்கென ஒரிடத்தைப் பெற்று வித்தகம் பதித்த முத்திரை மகாவித்துவான்கள் தமிழ் உலகில் இருவர் ஆவர். ஒருவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. மற்றொருவர் மகாவித்துவான் ரா. ராகவையங்கார் ஆவார்.

'உரைநடை' இலக்கிய வகையில் புதிய புதிய ஆய்வுக் கருத்துக்களை வழங்கிய தமிழறிஞர்கள் வரிசையில் சேதுபதி சமஸ்தான மன்னர்கள் காலத்தில் அரிய தொண்டாற்றிச் சிறப்புப் பெற்றவர் மாபெரும் வித்துவான் மகாவித்துவான் ரா. ராகவையங்கார் ஆவார். அந்நியர் வரவோடு வந்த அச்சுக் கருவியால் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் 'பதிப்பு இலக்கிய' வடிவினைப் பெற்றன. பத்திரிகைகள், இதழ்கள் எனப் பொதுமக்களும் தங்களது எழுத்தறிவினை-வாசிப்பினைப் பெற்று இலக்கியத் தேடலுக்குத் தங்களை முன்னெடுத்துச் சென்றனர். மகாவித்துவான், பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப் பாண்டித்தியப் புலமையாலும் இலக்கிய வீச்சு எழுச்சியாலும் உருவான 'செந்தமிழ்' என்ற இலக்கிய இதழுக்குப் 'பத்திராசிரியராய்ப்' பொறுப்பேற்றுப் பணியாற்றினார்.

எங்ஙனம் ஒட்டக்கூத்தர் முப்பெரும் சோழர்களின் அவையில் மாபெரும் புலவராக வீற்றிருந்து கவிச்செல்வத்தை வழங்கினாரோ அதே போல மகாவித்துவான் ரா. ராகவையங்காரும் முப்பெரும் சேதுபதிகளின் அவையின் ஆஸ்தானப் புலவராக விளங்கி இலக்கியப் பணியைத் தமது நுண்மாண் நுழைபுலத் திறத்தால் 'செந்தமிழ்' இதழில் தெளிவுபடுத்தினார். அவர்தம் இலக்கியப் படைப்புக்களைப் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் வியப்பு மேலிடுவது உறுதி. மேலும், பாண்டித்துரைத்தேவரின் 'நான்காம் தமிழ்ச்சங்கம்' நானிலம் போற்றும் நல்லதொரு வரலாற்றுப் பதிவு என்பதைக் குறிப்பிடவேண்டும். தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வுகளில் முக்கியப் பொறுப்பில் பங்கு பெற்றவர் மகாவித்துவான் ஆவார்.

சேது சமஸ்தான மன்னர்களின் 'தர்ம மகிமை' முறையால் கல்வி கற்ற ரா.ராகவையங்கார், சேது சமஸ்தானத்தின் செல்லப்பிள்ளையாகச் செல்வப் பிள்ளையாக விளங்கினார். கல்விக் களத்தில் தம்மை நாளும் புதியவராக்கிக் கொண்ட ரா.ராகவையங்கார் தமது 18 ஆம் வயதில் இல்லறமாம் நல்லறத்தில் புகுந்தார். மதுரை சேதுபதி பள்ளியிலும் திருச்சி 'சேஷையங்கார்' பள்ளியிலும் அண்ணாமலைப் பல்கலையின் ஆய்வுப் புலத்திலும் பணியாற்றினார்.

'செந்தமிழ்' இலக்கிய இதழ் 1902இல் தொடங்கப் பெற்றது. இவ்விதழின் முதல் பத்திரிகாசிரியர் ரா. ராகவையங்கார் ஆவார். இரண்டரை ஆண்டுகளே இப்பணியில் இவர் விளங்கினாலும் இவரது ஆய்வு, தமிழறிஞர்களுக்கு 'அமுதசுரபி'யென அள்ள அள்ளக் குறையாது தமிழ்க் கருத்துக்களை வழங்கியது என்றால் ஏற்புடைத்து.

தொல்காப்பியர், 'நோக்கு'க் குறித்துக் கூறும்பொழுது,

"நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே"

(தொல். 1361)

பொருளை முடிய நாட்டல் என்ற முறைமையில் படைப்பாக்கம் பெறும் பொழுது கற்பார் கண்டு மகிழும் வகைமை ஏற்படும். இலக்கியச் சிந்தனையாளர்கள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் 'கருத்தில்' தெளிவு இருத்தல் வேண்டும் என்பது முதற்கண் இடம் பெறும் குறிப்பு ஆகும். அப்பொழுதுதான் கற்பாருக்கு இனிமை வந்தமையும் எனலாம்.

ரா. ராகவையங்காரின் இலக்கியப் படைப்புக்களைப் படிக்குங்காலத்து அவர் எங்ஙனம் கட்டுரையின்

தொடக்கத்திலேயே தாம் எப்பொருள் குறித்து எக்கருத்தினைக் குறித்துச் சிந்தித்து எழுதப் போகிறார் என்பதை முதற்கண் எடுத்துரைத்து விளக்குகிறார். இது இன்றைய ஆய்வுலகில் 'ஆய்வு நெறி' என்பர். (Research Methodology) மேலும், முதற்கண் ஆய்வுக்குத் தேவை 'கருதுகோள்' (Hypothesis) என்று ஆய்வு வழிகாட்டிகள் எடுத்துரைப்பர். எனவே இத்தகு வழிமுறை அன்றைய ரா. ராகவையங்காரின் வழியினது (இன்றைய ஆய்வு நெறி) என்று கூறலாம்.

"வேளிர் என்பார் வடநாட்டிலிருந்து அகத்தியருடன் தமிழகம் வந்த பதினெட்டுக் குடிமக்கள் எனச் சங்க நூல்கள் கூறும். அவர்கள் வாழ்ந்த ஊர் துவாரகை என்றும், சோழனை வென்ற வேளிர் வேந்தன் (புலிகடிமால்) புருவன் என்றும் பெறப்படுகிறது. இதில் குறிப்பிட்டுள்ள துவாரகை எது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்." (தமிழகக் குறுநில வேந்தர்கள் ரா. ராகவையங்கார் - பக்.1) என்று மகாவித்துவான் தமது கட்டுரையின் கருதுகோளைச் சுட்டிக் காட்டுகிறார்.

கொங்கிளங்கோசர், நான்மொழிக்கோசர், வாய்மொழிக் கோசர், துணைதேர்க்கோசர் என்று பழைய தமிழ் நூல்களில் குறிப்பிடப்படும் கோசர் குடி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். (மேலது. பக்.50) என்ற வரிகளும் அவரது இலக்கினை இயம்புவன.

எனவே ஆய்வாளருக்குத் தேவை தாம் எத்தலைப்பில் எக்கருத்தினைக் குறித்துத் தெளிவான விளக்கங் களைக் காண உள்ளோம் என்ற சிந்தனையாகும். இம்முதற்படி ஆய்வு நெறியின் அடித்தளக் கட்டுமானத்திற்கு உரியது. இதனை ரா. ராக வையங்காரின் கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

'கருதிய பொருள்' இன்னது என்று இனங்கண்ட பின்பு இலக்கிய இலக்கணத் தரவுகளை ஒருசேரப் பெற்றுத் தொகுத்து, விளக்கம் பெற்று உள்ளத்தில் பதிவு செய்து உணர்த்துதல் வேண்டும். 'கோசர்' என்ற கட்டுரையின் வழி மகாவித்துவான் ரா.ராகவையங்கார் எடுத்த கருத்தினை விளக்கம் செய்கிறார் என்பதைக் காணலாம்.

"கோசம் என்பதோர் அரிய சூள் முறையைக் கையாண்டதனால் கோசர்கள் என அழைக்கப்பட்டனர்" (மேலது ப. 50) என்ற வரியின் மூலம் 'கோசர்' என்ற பெயருக்குரிய காரணம் விளக்கப்படுகிறது.

"மொழியாராய்ச்சி செய்வோர் சொல்லையும் பொருளையும் இயைத்தே ஆய்ந்து செல்ல வேண்டும்" என்பர் ஆய்வாளர். (பாவாணர் ஆய்வு நெறி, ப. 41) இத்தகு நெறியே மகாவித்துவானின் நெறியாகும்.

காஷ்மீர் மக்கள் தம்மைக் 'கோஷர்' என்று கூறிக் கொள்ளும் காரணத்தால் இவர்கள் வடபுலத்திலிருந்து வந்தேறிய குடிமக்கள் என்பது பெறப்படுகிறது. எனவே இம்மக்களின் பூர்வீகம் புலனாகிறது என்கிறார்.

சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் கோசர் பற்றிய குறிப்பில் 'குறும்பு செலுத்துவோர் சில வீரர்' என்பதனால் இவர்தம் பணி சிறிய அரண்களில் ஆட்சி செலுத்துவது என்பதாகும் என்ற கருத்து தெளிவுடன் பெறப்படுகிறது. மேலும்,

கொங்கிற்கோசர், இளங்கோசர் நன்மொழி
நாட்டுக் கோசர், வாய்மொழிக் கோசர்

என்றழைக்கப்படுவதற்குரிய காரணங்களையும் ரா.ராகவையங்கார் விளக்கும் வகைமை ஆய்வு நெறி மேற்கொள்வார் உள்ளத்தில் பதிவு செய்யவேண்டிய நெறியாகும்.

மேலும் கோசர்கள் 'துளு' நாட்டினர் என்று அகப்பாடல் (எண் 15) கூறும் காரணத்தையும் இலக்கியத் தரவுகள்வழி எடுத்துரைக்கிறார்.

இக்குறுநில அரசர்கள் வேற்படையான் வென்றியைப் பெறும் பெருந்தேர் வீரர் என்பதையும் புறப்பாடல், அகப்பாடல் வழி விளக்குகிறார்.

"வென்வேல், இளம்பல் கோசர் விளங்குபடை
கன்மார் இகலினர் எறிந்த . . . " (புறம் 169)

"துனை காலன்ன புனைதேர்க் கோசர்" (அகம் 251) என்பனவே அப்பாடல் வரிகள்.

இக்கோசரின் நற்பண்புகளாவன:

- தம்முடைய நட்பிற் கோடாதவர்
- கருதியது முடிக்குந் திறமிக்கவர்
- தமக்கே சிறப்பாக வாய்மையை விடாது போற்றுபவர்
- தம்மகத்து வந்த வறியவரைப் போற்றும் பேரளியுடையவர்

இவை போன்றவற்றைத் தக்க இலக்கியத் தரவுகள் மூலம் மகாவித்துவான் விளக்கும் பான்மை போற்றுதற்குரியது.

'கோசம்'-'கோசாம்பி' என்ற சொல்லாட்சியின் வழி இவ்வீரர்கள் வாழிடம் - மன்னர்கள் குறித்த குறிப்புக்கள் அனைத்தும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

'கோசம்புத்தூர்' கோயம்புத்தூராக மருவிய பாங்கும் மகாவித்துவானால் விளக்கப்படுகிறது.

இங்ஙனம் 'கோசர்' என்பவர்கள் குறித்த குறிப்புக்களைப் பல்வேறு தரவுகளின் வழித் தொகுத்து நிரல்படத் தொடுத்து விளக்கியுள்ள அவரது அணுகுமுறை 'கருதிய பொருளை முடிய நாட்டல்' என்ற ஆய்வு இலக்கிற்கு ஏற்ப அமைந்துள்ளது என்பது கண்கூடு.

இதேபோன்று இவர்தம் ஊர்ப்பெயர் ஆய்வு விளக்க நூல்களான 'சேதுநாடும் தமிழும்', 'வஞ்சி மாநகர்' ஆகியனவற்றில் பல்வேறு இலக்கிய இலக்கணச் சான்றுகளின் வழியும் கல்வெட்டாய்வு மற்றும் வெளிநாட்டவர் வழங்கியுள்ள குறிப்புக்களின் வழியும் காரண காரிய முறைமையில் தமது முடிபைத் தெளிவுபடுத்தியுள்ளார். இன்றைய நாளில் மேற்கொள்ளப்படும் ஊர்ப்பெயராய்விற்கு வித்திட்ட பெருமை ரா. ராகவையங்காருக்கு உரியதாகும்.

இப்பரத கண்டத்துக்கு இருபெரும் வரம்பாக உள்ளவை ஸேதுவும் இமயமும் ஆகும். எனவேதான் "ஆஸேது ஹிமாசலம்" என்ற வழக்குப் பழக்கத்தில் உள்ளது என்று கூறும் மகாவித்துவான் "சேது என்பது சிராமமூர்த்தி கடல்மேலிட்ட திருவணை. இது கன்னியாகுமரி முதற்றென்பது" (மேலது. ப. 91) என்று கூறுகிறார். கழகத் தமிழ் அகராதி "சேது என்பது செய்கரை" (ப.198) என்று குறிப்பிடுகிறது. எனவே சேது நாடு இதிகாச காலந்தொட்டு விளங்கிய சிறப்பிற்குரியது. சோழநாட்டு மறவர்கள் பாண்டிய மன்னனுக்கு உதவ வந்தார்கள். பின்னர்ச் சேதுநாட்டில் குடியேறிச் சிற்றரசர்களாக வாழ்ந்தனர் என்ற குறிப்பினையும் மகாவித்துவான் தெளிவுபட விளக்குகிறார்.

"இதன் புண்ணிய விசேடங்களாலும் இச்சேது நாடொன்றே நாடென்று வழங்கப்படும் போலும்; இதனை 'ஊர்' எனப்படுவது உறையூர்; 'பூவெனப்படுவது பொறி வாழ் பூவே', 'கோயில் என்பது கோன்றிருவரங்கம் என்பது போல... 'திருமலைச் சேதுபதியைப் படிக்காசுப் புலவர் 'நாட்டிற் சிறந்த திருமலையா' என்று விளித்தலானும் இதனுண்மை ஊகிக்கப்படும்" (சேதுநாடும் தமிழும் - ப.46) என்று மகாவித்துவான் உள்ளமகிழ்வுடன் உரைக்கிறார்.

மகாவித்துவானின் 'நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரைகள் அனைத்திலும் மகளிரின் கல்வி, புலமை, படைப்புத் திறன்களை எடுத்தியம்பியுள்ளார். சங்க காலத்தில் புலமை வாய்ந்த மகளிரில் ஆதி மந்தியார் தொடங்கிப் பூங்கணுத்தரையார் ஈறாக ஏறத்தாழ 25 பெண்பாற் புலவர்களின் தனித்துவங்களை விளக்கும் சிந்தனையுடைய மகாவித்துவான் ரா. ராகவையங்காரின் மாண்பு குறிப்பிடத்தக்கது.

மேலும், குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் மயக்கத்தைத் தோற்றுவிக்கும் குழந்தைகள் மீது ஈடுபாடு கொண்டு அவர் படைத்துள்ள "சங்கு சக்கரச் சாமி வந்து சிங்கு சிங்கென ஆடுமாம்" என்ற பாடல் என்றும் நின்று மழலையர்களால் மனமகிழ்வுடன் பாடப்பெறும் பாடலாகும். "இப்பாட்டுக்குக் காலில் வெள்ளிக் கொலுசுடன் அவர் கைபிடித்து ஆடியபேறு பெற்றவன் நான்" (இன்கவித் திரட்டு, ப.11) என்று மகாவித்துவானின் மகன் வழிப் பெயரன் டாக்டர். ரா. விஜயராகவன் நினைவு கூர்கிறார்.

மகாவித்துவான் பதிப்பித்துள்ள உரைநடை மற்றும் ஏனைய நூல்கள் 15 ஆகும். பல செய்யுள் நூல்களையும் படைத்துள்ளார். வடமொழிப்புலமை மிக்க மகாவித்துவான் மொழிபெயர்ப்புத் துறையில் கால்பதித்த சிறப்பிற்குரியவர். வடமொழிப்புலமை மிக்கவர்களால் வழங்கிய 'பாஷா கவிசேகரர்' என்ற பட்டத்தையும் பெற்றார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் அன்பிற்குரிய மாணவர் தமிழ்த்தாத்தா டாக்டர். உ.வே. சாமிநாத அய்யரால் வழங்கப்பட்ட பட்டமே ரா. ராகவையங்காருக்கு மகாவித்துவான் என்பதாகும். மகாவித்துவானின் மாணாக்கர் தம்முடைய குருவினைப் போன்ற ரா. ராகவையங்காருக்கு மகாவித்துவான் என்ற பட்டத்தை வழங்கினமையால் "கற்றாரைக் கற்றாரே காமுற்ற நிலை" உணரப்படுகின்றது எனலாம்.

மகாவித்துவானின் தனித்தமிழ் நடையும் தமிழ்ச் சொல்லாட்சித்திறமும் தரவுகளைத் தொகுத்து விளக்கும் திறமும் கருதிய பொருளுக்கு ஏற்ப இயைத்தும் இணைத்தும் கூறும் திறமும் பயிலுந்தோறும் புலனாகும். அவரது எழுத்துக்கள் ஆய்வு மாணாக்கருக்கு வழிகாட்டும் சீரிய நெறித்திறம் மிக்கவை. ஆய்வுலகம் போற்றும் இவ்வாசிரிய மணியின் ஆய்வு நெறியில் தமிழ் அறிஞர்கள் தங்களது ஆய்வுக்களத்தை அமைத்துவிட்டால் நாளும் தமிழ் உலகிற்குப் புதிய கருத்தியல்கள் அமைந்திட இயலும் என்றால் மிகையன்று!

மு. இராகவையங்காரின் செந்தமிழ்ப் பணி



முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
புதுச்சேரி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் அறிஞர் பெருமக்களுள் மு. இராகவையங்காரும் ஒருவர். தமிழறிஞராக, இதழாசிரியராக, வரலாற்றாசிரியராக, பதிப்பாசிரியராக, உரையாசிரியராக, இலக்கிய ஆசிரியராக, கவிஞராக விளங்கிய பெருமை இவருக்குண்டு. பாண்டித்துரைத் தேவரவர்களால் 1902 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியராக 1906 ஆம் ஆண்டு முதல் 1910 ஆம் ஆண்டு வரை இருந்து இவர் ஆற்றிய பணிகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழ்ச் சங்கமும் செந்தமிழும்

பாண்டித்துரைத் தேவர் 14-09-1901ஆம் நாளன்று மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் தமிழ்நாட்டிலுள்ள தலைவர்களையும், தமிழ்ப் பெரும் புலவர்களையும் அழைத்துப் பேரவை ஒன்று கூட்டி நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார். இதற்குப் பாசுகரசேதுபதி தம் சமஸ்தானத்திலிருந்து பெரும் பொருள் உதவியும் செய்தார்.

இச்சங்கத்தின் அங்கங்களாகச் செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சித்துறை, அச்சகம் ஆகியவை அமைக்கப்பட்டன. கல்லூரித் தலைமை ஆசிரியராக வடமொழி தென்மொழிப் புலமை நிரம்பிய நாராயண ஐயங்கார் நியமிக்கப் பெற்றார். ரா. இராகவையங்கார் தமிழ் நூலாராய்ச்சித் துறைத் தலைவராகவும், சே.சுப்பிரமணியக் கவிராயர், சே.கந்தசாமிக் கவிராயர் ஆகிய இருவரும் நூற்பரிசோதகராகவும், நூல் பதிப்பாளராகவும் இருந்தனர். கல்லூரியில் அரசஞ் சண்முகனார், சுந்தரேசுவர ஐயர், கோபாலையர் ஆகிய இவர்கள் மூவரும் ஆசிரியப்பணி புரிந்தனர்.

தமிழ்க் கல்வியைப் பரப்புதற்கும், சங்கத்தின் செய்திகளை வெளியிடுவதற்கும் 1902 ஆம் ஆண்டு முதல் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழ் இச்சங்கத்தில் இருந்து வெளிவந்தது.

1902ஆம் ஆண்டு முதல் 1906ஆம் ஆண்டு வரை ரா. இராகவையங்கார் இவ்விதழின் பத்திராசிரிய ராயிருந்தார். மு. இராகவையங்கார் இந்த நான்காண் டுகளில் உதவிப் பத்திராசிரியராய் இருந்தார். பின்னர் 1906 ஆம் ஆண்டு முதல் 1910 ஆம் ஆண்டு வரை மு. இராகவையங்கார் 'செந்தமிழி'ன் பத்திராசிரியராய் இருந்தார். இவருக்கு உதவிப் பத்திராசிரியராய் இருந்தவர் நாராயண ஐயங்கார் ஆவர்.

“தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையிலும் அதுவரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டேயிருந்தன. பத்திராசிரியர் எழுதியனவெல்லாம் தமிழ் மணமும் ஆராய்ச்சி நலமுஞ் செறிந்து விளங்கின; கற்பார்க்குப் பெருவிருந்தாய மைந்தன. ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். தமிழ் நாட்டுப் பெரும் பேராசிரியனாயமைந்து, தமிழ் மக்கள்

விடுதோறுஞ் சென்று, தமிழ்க்கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாயிருந்தது. இப்பத்திரிகையின் உயிர் நிலையாயிருந்தவர்கள் ஸ்ரீ மு. இராகவையங் காரவர்களே. பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்கு வதற்கும், அறிவு நலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்ளுதற்கும் இவர்களே காரணமா யிருந்தார்கள்.

(ச.வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், பாரிநிலையம், சென்னை, 1968, பக்.392-393)

இவ்வாறு ச.வையாபுரிப்பிள்ளை 'செந்தமிழ்' இதழைப் பற்றியும் அதன் ஆசிரியராக இருந்த மு. இராகவையங்காரைப் பற்றியும் கூறியிருப்பது இவண் நினைவுகூர்தற்கு உரியது.

செந்தமிழ் இதழில் இவர் எட்டு ஆண்டுகளாக இருந்தபொழுது எழுதிய கட்டுரைகள் பல திறத்தன. "வெற்றெலும்புக்குச் சமமென்று சாதாரணமாகக் கருதும் ஆராய்ச்சிப் பொருளுங்கூட இவ்வாசிரியரது எழுதுகோலால் அழகிய உருவமெடுத்து வந்து நம் அறிவை வசீகரித்து விடுகிறது."

(ச.வையாபுரிப்பிள்ளை,மு.கா.நூல்,ப.396)

இலக்கியம், இலக்கணம், மொழிநூல், எழுத்து வரலாறு, நாட்டு வரலாறு, சமய வரலாறு, நூற்பதிப்பு முறை, நூலாராய்ச்சி, நூல் மதிப்புரை, பண்டைப் புலவர்கள், பண்டைத் தமிழ் மக்களின் ஒழுக்க நெறி, சிலாசாசனங்கள், இடப்பெயர்கள், கவிதைகள் முதலான பல பொருள்கள் பற்றி இவரது கட்டுரைகள் செந்தமிழில் அடங்கியுள்ளன.

இவற்றுள் சில கட்டுரைகள் ஆராய்ச்சித் தொகுதி, ஆழ்வார்கள் காலவாராய்ச்சி, கட்டுரை மணிகள் போன்றவை நூல்களில் இடம் பெற்றுள்ளன. நூல் வடிவம் பெறாத கட்டுரைகளே இவ் ஆய்வில் இடம் பெறுகின்றன.

I. கட்டுரைகள்

மொத்தம் 53 கட்டுரைகள் செந்தமிழில் வெளிவந்துள்ளன. 23 கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றவையாகும். எஞ்சிய 30 கட்டுரைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. இலக்கியம்
   - அ) புலவர்கள்
   - ஆ) திறனாய்வு
2. இலக்கணம்
3. வரலாறு
   - அ) பொது
   - ஆ) சமயம்
   - இ) ஒப்பீடு
4. மூலபாடம்

இக்கட்டுரைகளில் மு. இராகவையங்கார் கூறும் முடிவுகள் தொகுத்துத் தரப்படுகின்றன.

1. இலக்கியம்

இவ்வகையில் நான்கு கட்டுரைகள் அடங்குகின்றன. 'பாண்டியர்களும் தமிழ்ப் புலவர்களும்' எனுந்தலைப்பில் கோபிநாதராயர் எழுதிய கட்டுரையில் எழுந்த ஆறு ஐயங்களை விளக்கிக் 'கடைச்சங்க வாராய்ச்சி' எனுந்தலைப்பில் எழுதியுள்ளார். (செந்தமிழ் 6, பக், 583-587)

நீலி என்பவள் பழையனூரிலிருந்த ஒரு வணிகனின் மனைவி. இவளைப் பற்றிக் கூறும் கதையினை விளக்கியுள்ளார். சான்றுக்குத் தொண்டை மண்டல சதகத்தைக் கூறியுள்ளார். (செந்தமிழ் 5, பக், 312-314)

'குண்டலகேசி வரலாறு' எனுந்தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் (செந்தமிழ் 7, பக், 603-605) பின்வரும் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

ரா. இராகவையங்கார் 'நீலகேசி' என்ற நூலின் உரையில் குண்டல கேசியின் வரலாற்றைக் கூறியுள்ளார். அடுத்து, 1900 ஆம் ஆண்டு செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் வெளிவந்த மகாபோதி சங்கத்துப் பத்திரிக்கையில் (Journal of the Mahabodhi Society) குண்டலகேசி வரலாறு வெளிவந்துள்ளது. இவ்விரண்டு வரலாற்றுச் செய்திகளையும் அப்படியே முதலில் கொடுத்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இரு வரலாற்றுக்கும் சிலபேதங்களே உள்ளனவாயினும், பெரிதும் ஒற்றுமையிருத்தல் கண்டு

கொள்க. இதனால், வைசிய புராணம் என்னும் புத்தகத்தில் 34 ஆம் அத்யாயத்துக் கண்ட குண்டலகேசி வரலாறு முழுதும் அதற்குச் சம்பந்தமில்லாத கதையேயன்றி உண்மை சிறிது முடையதன்றெனத் தெரிந்து கொள்க."

கோவூர்கிழார், காரிக்கண்ணனார், பொய்கையார், பரணர், பெருஞ்சித்திரனார், கபிலர், மாங்குடிமருதனார், ஔவையார், மாறோக்கத்து நப்பசலையார் முதலிய சங்கப் புலவர்களின் பாடல்கள் சிலவற்றை எடுத்து, 'பழைய புலவரின் பெருந்தன்மைகள்' எனுந்தலைப்பில் (செந்தமிழ் 7, பக், 175-190) விளக்கியுள்ளார்.

அ) புலவர்கள்

பொய்யா மொழிப் புலவர், நக்கீரர் ஆகிய இவ்விரு புலவர்களைப் பற்றி இரு கட்டுரைகள் (செந்தமிழ் 5, பக், 505-513, 537-545; செந்தமிழ் 6, பக், 557-564) எழுதியுள்ளார்.

தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம் ஆகிய இரு நூல்களிலும் கூறப்படும் பொய்யாமொழிப் புலவரைப்பற்றிய செய்திகள் முதற்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.

மதுரை மான்மியங்கள், சீகாளத்திப்புராணம், திருப்பரங்குன்றப் புராணம் முதலியவற்றில் கூறப்படும் நக்கீரர் வரலாற்றின் சுருக்கம் முதலிற் கூறப்பட்டுள்ளது. பின்னர் நக்கீரர் என்பவர் ஒருவரே என்ற கருத்தே இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது. நக்கீரர் வழிபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஆ) திறனாய்வு

இவ்வகையில் மூன்று கட்டுரைகள் இடம் பெறுகின்றன. 'மதுரைக் காஞ்சி' எனுந்தலைப்பிலேயே இரண்டு கட்டுரைகள் (செந்தமிழ் 7, பக், 65-69; செந்தமிழ் 40, பக், 157-164) வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டுள்ளன. முதற்கட்டுரை 1908இல் வெளிவந்தது. அதில், அவர் கூறுவதாவது:

மதுரைக் காஞ்சியினுஞ் சிலப்பதிகாரத்தும் முறையே,

> “*தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்*
> *றொன்முது கடவுட் பின்னர் மேய*
> *வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந*”(ம.கா.)
> “*மறைமுது முதல்வன் பின்னர் மேய*
> *பொறையுயர் பொதியிற் பொருப்பன்*”(சிலம்பு.)

என்று பாண்டியன் குன்றுபோலக் கூறப்படுவதற்கு அரும்பதவுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூற்றுப்படி மாதேவன், பிரமன் இவரில் ஒருவன் பின்னோன் அகத்தியன் என்பதினும், நச்சினார்க்கினியர் கூற்றுப்படி அகத்தியன் பின்னோன் பாண்டியன் என்றலே பொருந்தும்.

இரண்டாவது கட்டுரை 1942இல் ஐயங்கார் திருச்சி வானொலியில் ஆற்றிய சொற்பொழிவாகும். இக்கட்டுரையில் மதுரைக் காஞ்சியில் கூறப்படும் செய்திகளை விளக்கியுள்ளார்.

அடுத்துச் 'சிலப்பதிகார வழக்க வொழுக்கங்கள்' எனும் இக்கட்டுரையும் (செந்தமிழ் 40, பக், 379-388) 1943 இல் திருச்சி வானொலியில் ஆற்றிய உரையாகும். இக்கட்டுரையில் அவர் கூறுவன:

1. நாட்டு வழக்க ஒழுக்கங்கள் என்பன அதன் மக்களைச் சார்ந்தவை ஆதலால் தமிழ் மக்கள் எனப்படுவோர், குறிஞ்சி முதலிய ஐவகை நிலப்பகுதிகட்கும் நால்வகை வருணங்கட்கும் உரியவராவர்.

2. சைவம், வைணவம், சக்தி முதலிய வழிபாடுகள் சிலம்பில் கூறப்படுவதை விளக்குகிறார்.

3. பெண் தேவதைகளை வழிபடுவதற்குப் பெண் பாலரை நியமிப்பது பண்டை வழக்கம். இதுவே வடநாட்டு மரபுமாம். இப்பெண் பூசகர் 'பயிரவி' எனப்படுவர்.

4. ஐவகை நிலமக்கள், நால்வகை வருணத்தவர் வழக்க ஒழுக்கங்கள், பொதுவான வழக்க ஒழுக்கங்கள் முதலியன கூறப்பட்டுள்ளன.

2. இலக்கணம்

இவ்வகையில் நான்கு கட்டுரைகள் அடங்குகின்றன தமிழ் மக்களது புராதன எழுத்து வரலாற்றைப் பற்றிப் 'பழைய தமிழெழுத்துக்களி'ல் (செந்தமிழ் 5, பக், 225-234) குறிப்பிட்டுள்ளார். 'காப்பியக்குடி' (செந்தமிழ் 6, பக், 110-111) என்பதில் அவர் கூறுவன:

இளம்பூரணர், 'தொல்காப்பியன்' என்பதற்குப் 'பழைய காப்பியக் குடியிலுள்ளோன்' என்று பொருள் கூறுவதால், 'காப்பியம்' என்பது பார்ப்பாரது பழைய குடிவகையுள் ஒன்று. இக்குடியே 'காப்பியத் தொல்குடி கவின் பெற வளர்ந்து' என்று சிலம்பிலும் கூறப்பட்டுள்ளது. பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் முதலியோரும் இக்குடியைச் சேர்ந்தவராவர். தொல்காப்பியனார் என்பதிலுள்ள 'தொல்' என்னும் அடை காப்பியர் குடிக்குப் புணர்க்கப்பட்டதென்று கொள்ளுதல் ஒன்று; அன்றி அதனை அக்குடிக்குப் பிறந்த முனிவர்க்கு உரியதாக்கலும் பொருந்தும்; வடமொழியில் பராசரர் என ஒரு முனிவர் காணப்படினும் அவரின் வேறாக 'விருத்தபராசரர்' என்னும் அடையுடன் ஒருவர் வழங்கப்படுகின்றார். அது போலவே தமிழ் மொழியில் வழங்கும் காப்பியர் பலரினின்று பிரித்தற்குத் 'தொல்' எனும் அடை புணர்க்கப்பட்டது.

'அமிதசாகரர்' (செந்தமிழ் 24, பக்,161-170) எனும் கட்டுரையில் அமிதசாகரரைப் பற்றிய சாசனங்கள் இரண்டின் மூலத்தைக் கொடுத்து, தமிழ் மொழிபெயர்ப்பையும் தந்துள்ளார்.

வடமொழி தென்மொழிகளில், நிகண்டு என்பது சொற்களின் பொருளை விளக்கும் நூல்கட்குப் பெயராக வழங்குகிறது. நன்னூல் விருத்திகாரர் நிகண்டு என்னும் சொல் இடுகுறிப்பெயர் என்பர். இந்நிகண்டுகள் செய்யுள் வடிவத்தில் சூத்திரமாக எளிதில் மனப்பாடம் செய்யும் வகையில் முன்னோரால் இயற்றப்பட்டுள்ளன. வடமொழியில் அமரசிம்மம், அமரதத்தம், விசுவம், விசாமிர்தம், சப்தார்ணவம், சரசுவதி விலாசம் முதலானவை உள்ளன. தமிழில் திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாதரம், அகராதி, ஆசிரியம் முதலிய ஏழு நிகண்டுகள் உள்ளன.

இந்நிகண்டுகள் அந்தந்தக் காலத்தில் வழங்கும் வழக்குகளைத் தழுவிச் செய்யப்பட்டுள்ளன. இந்நிகண்டுகளில் சொல்லப்படுவனவற்றையும், ஆசிரியர், காலம் முதலியவற்றையும் 'நிகண்டுகள்' (செந்தமிழ் 5, பக், 113-125) எனுந்தலைப்பில் மு.இராகவையங்கார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

3. வரலாறு

'சிற்றாராய்ச்சிகள்' (செந்தமிழ் 5, பக்,111-112) எனுந் தலைப்பில், திருவள்ளுவர் ஊர் மதுரையென்றும், ஒட்டக்கூத்தர் ஊர் சீர்காழி யென்றும் கூறியுள்ளார். இதற்குத் தகுந்த சான்றுகளை மேற்கோள் காட்டியுள்ளார். அடுத்து, 'அந்தணர்' எனும் சொல்லுக்கு 'வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்' என்று நச்சினார்க்கினியர் பாலைக்கலியிலும் பத்துப் பாடல் ஒன்றிலும் பொருள் கூறியிருப்பது பொருந்தும் என்று கூறி அதற்குரிய சான்றுகள் பலவற்றையும் கூறியுள்ளார்.

'வேள்புலம்' எனும் கட்டுரையில் (செந்தமிழ் 8,பக், 59-62) மு.இராகவையங்கார் குறிப்பிடுவதாவது;

1. வேளிர் கூட்டத்தவருள் ஒருவரான சளுக்கரைப் பழைய நிகண்டாகிய திவாகரமும், பிங்கலந்தையும் வேள்புலவரசர் என்று கூறுகின்றன.

2. வேள்புலம் என்பது பம்பாய் மாகாணமேயாகும்.

3. பம்பாயிலுள்ள நகரங்கள் பல 'வேள்' என்ற சொல்லினடியாகவே வழங்குகின்றன.

4. பம்பாய் மாகாணத்து, சோலாபூர் (Sholapur) மாவட்டத்திலுள்ள ஒரு நகரம் வேளாபுரம் (ve' · -) என்ற பெயர் கொண்டுள்ளது.

'முனியோதன அத்தியாயம்' என்பதில் கூறப்பட்ட 'முனையதரையர்' (செந்தமிழ் 7, பக், 190-194) வரலாற்றைக் கூறி, இவனே சோழ மண்டல சதகப் பாடல்கட்கும் புராணக் கதைக்கும் உரியவன் என்று கூறுகின்றார்.

'புதுவைச் சேதிராயன்' (செந்தமிழ் 5, பக், 57-60) என்பவனைப் பற்றிக் கூறுவதாவது:

சேதிபன் அல்லது சேதிராயன் என்பவன் வெண்ணைச் சடையற்கு மகனாயும் வள்ளலாயும் விளங்கினவன். அவனே கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும்போது விடந் தீண்டப்பட்டு, அப்புலவர் பெருமானால் அது நீக்கப்பெற்றவன். அவன் தந்தையாகிய சடையற்கு வழங்கிய 'புதுவையர்கோன்', 'சேதிபர்கோன்' என்பன அவனுக்கு முறைப்படி வந்தன. அவனுக்குப் பிள்ளைப்பெருமாள் என்ற பெயருமுண்டு.

சங்கப் புலவர்கள், பாண்டியநாடு 12 ஆண்டு வற்கடஞ்சென்றபோது அண்டி வாழ்ந்த வேளிர் தலைவனான 'ஆலஞ்சேரி அயிந்தனி' ன் (செந்தமிழ் 6, பக், 587-588) வரலாற்றை விளக்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் பண்டைக்கால முதலே வருகின்ற 'வேளிர்' என்ற வகுப்பினர், கண்ணன் வழியினராய்த் துவாரகையினின்று வந்தேறியவரென வழங்கும் செய்தி, அவர் யாதவ குலத்தினர் என்பதை விளக்குகின்றது.

பண்டைவேளிர் தமிழ்நாட்டுக்கு வந்தேறிய காலம் பாரத காலத்தையடுத்த கி.மு. 11ஆம் நூற்றாண்டாகும். இதற்குப் பல மேற்கோள்கள் காட்டித் தம் கருத்தைக் கூறியுள்ளார் (செந்தமிழ் 3, பக், 212-231)

1943இல் திருச்சி வானொலியில் ஆற்றிய சொற்பொழிவே 'பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' (செந்தமிழ் 40, பக், 65-72) எனும் கட்டுரையாகும். அவனுக்கு வழங்கும் பல பெயர்களையும், அவனால் பரிசு பெற்ற புலவர்களையும், பாடல்கள் மூலம் அவனைப் பற்றி அறியப்படும் செய்திகளையும், வேள்விக்குடிச் சாசனம் மூலம் அவனைப் பற்றி அறியப்படும் செய்திகளையும் இதிற் கூறியுள்ளார்.

விநோதரச மஞ்சரியில் கூறப்படும் 'ஏகம்பவாணன்' (செந்தமிழ் 6, பக், 2-5) பற்றி மறுத்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. மாவலி பரம்பரையினராய பாணவமிசத்தைச் சேர்ந்தவன்.

2. இற்றைக்கு 340 ஆண்டுகட்கு முன் விளங்கிய சீவலமாறன் காலத்தவன்.

3. கம்பர் காலத்தோடு இவன் சம்பந்தம் உடையவனல்லன்.

ஆ) சமய வரலாறு

செந்தமிழ் 2ஆம் தொகுதியில் பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலைத் திருப்பதிகத்தே

"கொன்னவில் கூர்வேற்கோன் நெடுமாறன்,
தென் கூடற்கோன்
தென்னன் கொண்டாடுந் தென்றிருமாலிருஞ்
சோலையே"

என்று தங்காலத்து விளங்கிய 'நெடுமாறன்' என்னும் பாண்டியனைக் குறித்துள்ளார் என்று தாம் கூறியுள்ளதை மீண்டும் ஆராய்ந்து 'ஸ்ரீ பெரியாழ்வாரும் பாண்டியனும்' எனும் கட்டுரையில் (செந்தமிழ் 6, பக், 51-55) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. மாறஞ்சடையனைப் 'பரமவைஷ்ணவன்' என்னும் அடையால் சாசனம் சிறப்பித்துக் கூறுகிறது.

2. 'நெடுமாறன்' என்பது மாறவர்மனுக்கும் அவன் மகன் நெடுஞ்சடையனுக்கும் வழங்கியது.

3. இம்மாறஞ் சடையனே ஆழ்வாரால் குறிக்கப் பட்டவன்.

4. மாறவர்மன் மகனே பெரியாழ்வார் காலத்த வனாவான்.

5. பெரியாழ்வார் கூறிய பாண்டியனுக்கு, ஸ்ரீ வல்லபன் என்பது பெயரென்று குரு பரம்பரைகளில் கூறப்ப டுகிறது.

6. ஆனால் இவன் பரம வைணவன் என்பது எதிலும் காணப்படவில்லை. மேலும் 'நெடுமாறன்' என்பதிலுள்ள நெடுமை அடையும் இவனுக்குக் காணப்படவில்லை. இதனால் ஆழ்வார் இவனைக் குறிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

7. மேலும் ஸ்ரீ வல்லபன் என்னும் பெயரை, இவனேயன்றி இவன் பின்னோர் சிலரும் தரித்து வந்தமை தெரிவதால், அப்பெயர் பாண்டிய வமிசத்திற் பலர்க்கு வழங்கிய முறைப்படி, அந்நெடுஞ் சடையனுக்கும் வழங்கி இருத்தல் கூடுமென்று கருதப்படுகிறது.

திருமங்கை மன்னன், அட்டபுயகரப் பதிகத்து இறுதியில் பாடிய,

"மன்னவன் தொண்டையர்கோன் வணங்குநீன் முடிமாலை
வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி"

என்ற தொடர்க்கு-தொண்டையர்கோனால் வணங்கப்படும் வயிரமேகனுடைய வலிபுகழ் சூழ்ந்த கச்சி என்பது மு.இராகவையங்கார் கொண்ட பொருள் ஆகும்.

இங்ஙனம் ஒரு தொடராகக் கொண்டு,தொண்டையர் கோனையும் வயிரமேகனையும் இருவராகப் பொருள்

கூறுதல் பொருந்ாது என்று கே.ஜி.சேசஐயர் கூறிப் பல காரணங்களைக் காட்டியுள்ளார்.

இக்காரணங்களை மறுத்தற்பொருட்டு எழுந்ததே 'திருமங்கை யாழ்வாரும் தந்திதுர்க்கனும்' (செந்தமிழ் 22, பக், 1-16) எனும் மு.இராகவையங்காரின் கட்டுரை யாகும். இதில் அவர் கூறுவதாவது:

"ஒரே தொடராகவே பொருள் கொளல் வேண்டும். ஐயரவர்கள் கொண்டு கூட்டிப்பொருள் கொண்டுள்ளார். திருமங்கைமன்னன் வாழ்கையை நோக்குவோரெவர்க் கும், அஃது, ஆற்றொழுக்காகப் பொருளைக்கொண்டு செல்லும் போக்கு வாய்ந்ததென்பது எளிதிற் புலப்படத் தடையில்லை. கொண்டுகூட்டு முதலிய பொருள்கோள் முறையால் நலிந்து பொருள் காணவேண்டுவது, அவர் பாசுரங்களுக்கு ஆவசியகமன்று"

என்று கூறித் தம் கருத்தை நிறுவுவதற்குப் பல சான்றுகளைக் காட்டுவார். இறுதியில்,

"திருமங்கைமன்னன், பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தைப் பல்லவ மல்லனது ஆட்சியிடையிலும், அட்டபுயகரப் பதிகத்தை வயிரமேகன் (தந்திதுர்க்கன்) வெற்றி கொண்ட காலமாகிய கி.பி. 754 லும் பாடினவராதல் வேண்டும்".

என்று கூறித் தம் கட்டுரையை முடிக்கின்றார்.

'வில்லிபுத்தூரா ர் காட்டிய வீரநெறிகள்' எனுந்தலைப்பில் (செந்தமிழ் 40, பக்,353-362) 1943இல் திருச்சி வானொலியில் ஆற்றிய சொற்பொழிவில் கூறுவதாவது.

1. வில்லிபாரதத்தில் கௌரவ பாண்டவ யுத்தமானது ஆனிரை கவர்தல் அதனை மீட்டல் என்ற செயல் களிலிருந்தே தொடங்கியது.

2. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலும் சாதுவான அறமுறையால் மட்டுமன்றி அசாதுவான மறமுறையாலும் அடையத்தக்கவை என்பது வில்லிபாரதத்தால் விளங்கும்.

3. பக்தி ஞானங்களாகிய சாந்தநெறியால் பெறும் அறநிலை வீடேயன்றி, வீரநெறியால் அடையும் மறநிலை வீடும் உண்டு என்பது பெறப்படும்.

4. வில்லிபுத்தூரர் அருளிய இதிகாசமானது சதுர்வித புருசார்த்தங்களையும், அறநிலையோடு மறநிலை என்ற வீரமார்க்கத்தால் அடையும் முறைகளையும் நன்கு தெளிவாக்குகின்றது.

இ) வரலாறு - ஒப்பீடு

ஆரிய மேலோர் எண்வகை மணம் என்று வரையறுத்துக் கூறியவற்றுள் 'காந்தருவவிவாகம்' என்பதுமொன்று. இவ்விவாகமே பழந்தமிழ் நூலாசிரியரால் 'யாழோர் கூட்டம்' என்று கூறப்படுகிறது. கந்தருவகுமாரரும் அம்மகளிரும் தம்முள் எதிர்ப்பட்டு மனமொத்து இயைவது போலத் தலைவனுந் தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டு மனமொத்தியைவதே இவ்விவாகத்தின் தாற்பரியம். ஆரியர், தமிழர் திருமணமுறைகள் ஆதி முதல் இன்று வரை எவ்வாறு உள்ளது என்பதனை விளக்கிச் செல்வதே 'யாழோர் கூட்டம்' எனும் கட்டுரை (செந்தமிழ் 5, பக், 169-179).

'வால்மீகருந் தமிழ் வழக்குகளும்' எனும் கட்டுரையில் (செந்தமிழ் 8, பக், 1-6) பின் வருவனவற்றை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

1. வடக்கிருத்தல்

உலக இன்பத்தை முற்றும் வெறுத்துப் பட்டினி கிடந்து உயிர் துறத்தலாகிய இதனைப் 'பிரயோபவேச விரதம்' என்பர் வடநூலார். சங்க நாளில், இவ்விரதம், அரசராலும் புலவர்களாலும் கொடிய துக்ககாலங்களில் நிகழ்த்தப் பெற்றது. இத்தகைய அரிய விரதம் தற்கொலை ஆகாது சநாதனதர்மங்களில் ஒன்றாக அக்காலத்தில் கருதப்பட்டது. 'வடக்கிருத்தல்' என்னும் தமிழ் வழக்குக்கேற்ற சொல் வடமொழியில் காண்டல் அரிதாயினும், அவ்விரதம் பூண்டோர் தம் ஊர்க்கு வடதிசையில் சென்று அதனைச் செய்தல் மரபாகக் கருதப்பட்டது.

2. மலை ஆத்திக்கொடி

சோழருக்குரியதாகக் கருதப்படும் ஆத்திமாலை, பனம்பூமாலைக்குரிய காரணத்தை வான்மீகத்தோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதாவது, "கிழக்கு மேற்குத் திசைகளின் எல்லையாக, முத்தலையும் பத்துத் தலையுமுடைய பனைமரங்கள் ஆண்டுத் தேவர்களால் நாட்டப்பட்டுள்ளன" என்றும் (கிட்கிந்தா காண்டம், நாடவிட்ட சருக்கங்கள்), "சேரர், மேற்றிசை

யரசராதலின், கிழமேலோடிய தேசமுழுமைக்குந் தாங்களே உரியவரென்பதைச் சூசிப்பதற்கு அத்திசைகளில் எல்லையாக வைத்த பனையைத் தங்கள் சின்னமாகக் கொண்டனர்" என்றும் கூறப்பட்டுள்ளது.

3. தமிழ் மக்கள் பூச்சூடுதல்

போருக்குச் செல்லும் பொழுது பூச்சூடுவதும், தங்கள் குலத்திற்கென்று பூச்சூடுவதும் தமிழரது மரபாகும். இவ்வழக்கத்தையே, வான்மீகி முனிவர், அயோத்தியா காண்டம், 96 ஆம் சருக்கத்தில் பரதன் கூற்றில் வைத்து "நமது யுத்த வீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன், தென்னாட்டாரைப் போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்" என்று கூறப்பட்டுள்ளது.

4. திருவெண்காடு

சுவேதாரண்யத்தில் சூத்திரரும் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்தது போல, கரன், இராமருடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான் என்பது செய்தி. வான்மிகத்துக்கு உரையிட்டவர்களில் தீர்த்தர் என்பவர், சுவேதாரண்யமென்னும் ஊரினர், அது கடலுடன் கலக்குமிடத்து உள்ளது என்பர். அஃதாவது இப்போதுள்ள திருவெண்காடு என்னும் சிவத்தலமேயாகும்.

'பிரமதேவரையும் திருவள்ளுவரையும்' (செந்தமிழ் 8, பக், 539-540) பற்றிக் கூறுவதாவது:

பிரமதேவர் இயற்றிய மகாசாத்திரம் முப்பாலாக வெளிவந்தது. அந்நூலில் இருந்தே ஏனைய நீதிநூல்கள் தோன்றின அல்லது கிளைத்தன எனலாம். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும் முப்பாலாம். பிரமதேவர் கூறிய கருத்துகளைச் சுருங்க அருளியமை பற்றி முன்னோர், 'நான்முகன் அவதாரம் திருவள்ளுவர்' எனக் கூறியது பொருத்த முடையதாகும்.

மு.இராகவையங்காரின் கட்டுரைகளில் சில அக்காலத்தில் விவாதங்களுக்கு இடந்தந்து நின்றுள்ளன. சில கட்டுரைகள் மறுப்பதற்கென்றே எழுதப்பட்டவையாகும். மறுப்பதற்குத் தகுந்த காரணங்கள் பலவற்றைச் சான்றுகளுடன் தம் கட்டுரையில் தருவதையும் காண்கின்றோம். சேர வேந்தர் தாய வழக்கு, சேர நாட்டின் தலைநகரம் வஞ்சியா? கரூரா? என்ற இவ்விரண்டும் பற்றி இவரும், நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரும் எழுதிய கட்டுரைகள் ஆராய்ச்சிக்கு இடந்தந்து நிற்றலை அறியமுடிகின்றது. சில கட்டுரைகள் எழுத நேர்ந்தமைக்குரிய காரணங்களைக் கட்டுரையின் தொடக்கத்தே கூறி எழுதிச் செல்கின்றார். 'திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்' எனும் கட்டுரையின் முன்னுரை இங்குச் சான்றுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

"பங்களூரிற் பிரசுரமாகும் மிதிக்-ஸொஸைட்டி பத்திரிகையில், திருமங்கையாழ்வார் கால விஷயமாகத் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ மு.மு. சேஷ ஐயர் அவர்களும், ஞச.ஸ்ரீதி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களும் எழுதிய விவாதவுரைகளைச் சமீபத்திற் படித்து வரலானேன். இற்றைக்குப் பத்தொன்பது வருஷங்கட்கு முன் அவ்வாழ்வார் காலத்தைப் பற்றி முதன்முதல் நான் செந்தமிழ்ப் பத்திரிகையில் எழுதிய போது, அவ் அபிப்பிராயங்கள் டாக்டர் ஐயங்கார் அவர்களால் முழுவதும் ஆதரிக்கப்பட்ட விசயம் பலரும் அறிந்தவை. அப்போது எழுதப்பட்ட காரணங்கள் பொருந்தாதவையென்று ஸ்ரீமாந். சேஷ ஐயரவர்கள் கருதி, டாக்டர் ஐயங்கார் அவர்கள் எழுதிய சமாதானங்களையும் பலமாக ஆக்ஷேபித்து ஷை பத்திரிகையில் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஆக்ஷேபங்களைப் பரிசீலனை செய்து விடையளிக்க வேண்டிய கடமை இவ்விவாதத்துக்கு மூலகாரணமான எனக்கும் உண்டாதலால், அறிஞர் என் கருத்துக்களையும் அறிந்து கொள்ள விரும்பி இஃது எழுதலானேன்"(செந்தமிழ் 22, பக், 1 - 16)

4. மூலபாடம்

ஏடுகளில் எழுதப்பட்ட பழந்தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள் அமைவது உண்டு. உரையாசிரியர்--கள் அவற்றுள் ஏற்புடையனவற்றைக் கொண்டு ஏலாதனவற்றை விலக்கி விடுவதுண்டு. அம்முறையில் ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களில் காணப்படும் பாடவேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார். அருளிச் செயற்பாடவமைதி

எனுந்தலைப்பில் 42 பாடல்களுக்குப் பாடவேறுபாடு களைச் சுட்டிக்காட்டியுள்ளார். சங்க இலக்கியம், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனார் களவியலுரை, கம்பராமாயணம், சிவஞான போதம், உரையாசிரியர்கள் கூறுவன முதலானவற்றைச் சான்றுகளாகக் காட்டுவர். சான்றுக்குப் பெரியாழ்வார் திருமொழி முதற்பத்தில் காணப்படும்,

"வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவ நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றங் கலந்தள றாயிற்றே" (1)

"பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்" (3)

என்ற பாசுரங்களில் 'நம்பி பிறந்தினில்', 'பிள்ளை பிறந்தினில்' என்று வழங்கப் படுகின்றன. 'பிறந்தினில்' என்பதற்குப் பிறந்தபோது, பிறந்தவளவில் எனவும், 'பிறந்தவிதனில்' என்பதன் விகாரமாகவுமாம் எனவும் சிலர் பொருளுரைத்துள்ளனர். இதை,

'நம்பி பிறந்தீனில்','பிள்ளை பிறந்தீனில்'

என்று பாடங்கொள்வதே பொருந்தும். கண்ணன் அவதரித்த சூதிகாகிருகம் என்பது இங்கே பொருளாம். பிறந்த ஈனில் - பிறந்தீனில்; பிறந்தகம் என்பது போல. ஈன் இல் - பிரசவ வீடு, பிறந்த பிள்ளையைக் காணப்புகுவதற்கும், புக்குப் போதுதற்கும் பிரசவ வீடு என்ற பொருளே மிகவும் ஏற்புடையதாகும். இப்பொருளில் குறுந்தொகை, பதினோராந்திருமுறை, திருக்கோவையார் முதலான நூல்களில் வழங்கப்படும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் (செந்தமிழ் 40, ப. 11.) இனி,

"இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
இளையாண்,முலைநலங் கொண்டு முறுவலிக்கின்ற
வினையுடை நெஞ்சினை வெய்து கொளீரே"

எனும் இத்திருமூலர் வாக்கு, யாப்பருங்கலவிருத்தியில், சீர்மிக்குவந்த ஆசிரியச் செய்யுட்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இப்பாடலின் மூன்றாமடியின் முதற் சீராகிய 'இளையாண்' என்பது இப்போது அச்சுப் பிரதிகளில் காணப்படவில்லை. ஆயினும் பழைய நூலாகிய அவ்விருத்தியில் அஃதிருத்தல் காண்டலால், முன்னையது பழம்பாடம் என்பது பொருந்தும் (செந்தமிழ் 5, பக், 111-112).

II. கவிதைகள்

செந்தமிழ் இதழில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் இறைவன் திருவடி நிழலடைந்த பொழுது பாடிய 12 கவிதைகளும், சேதுபதியின் 34 ஆவது வெள்ளணி நாள் விழாவையொட்டிப் பாடிய 5 கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. (செந்தமிழ் 39, பக், 277 - 278, 561). இக்கவிதைகள் பாடியதன் மூலம் இவர் ஒரு கவிஞராகவும் விளங்கியதைக் காணமுடிகிறது.

III. நூலாராய்ச்சி

மதுரைத் தமிழ்ச்சங்கத்திலுள்ள நூல்களில் அருமையான சில நூல்களைப் பற்றிய சிறப்புச் செய்திகளை 'நூலாராய்ச்சி' எனுந் தலைப்பில் எழுதியுள்ளார்.

"பூரூரவா சரிதை: இந்நூலை இயற்றியவர், தென்காசி ஆண்டவர்ராம பாண்டியனது வாயிற் பெரும்புலவரான சிவந்த கவிராயர் மருகர் அய்யம்பெருமாட் சிவந்த கவிராசராவர். தென்காசியிலிருந்த கச்சிராமையர் புத்திரரான பிரபு ஒருவரது வேண்டுகோளின்படி இந்நூல் இயற்றப்பட்டது. 920 பாடல்கள் கொண்ட இந்நூல் 27 படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சந்திரகுல விளக்காய் விளங்கிய புரூரவ சக்கரவர்த் தியின் வரலாறு மகாபாரதத்தில் மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டுள்ளன. ஆயின், அதில் இல்லாத கதா சந்தர்ப்பங்கள் அநேகம் இந்நூலுட் காணப்படுகின்றன. இவற்றுக்கு மூலம் இன்னது என்பது அறியப்பட்டிலது. கதைப் போக்கானது அரிச்சந்திர சரிதையைப் போன்று உள்ளது. நாடு, நகரம், இளவேனிற் பருவம், போதுகொய்தல், புனல் விளையாட்டு முதலான படலங்களிலும், பிற இடங்களிலும் கூறியிருக்கும் கற்பனைகளும், வருணனைகளும், கருத்துக்களும் பெரிதும் அருமைப்படத்தக்கனவாய் உள்ளன." (செந்தமிழ் 6, பக், 81-89)

என்று இந்நூலைப் பற்றிக் கூறிய ஐயங்கார் நூலாராய்ச்சியை எழுதும் முயற்சியைத் தொடராமல் விட்டுவிடுகிறார். இதற்குரிய காரணம் எதுவெனத் தெரியவில்லை.

IV. பத்திராசிரியர் குறிப்புகள்

பத்திராசிரியராக இருந்த காலத்தில் 'பத்திராசிரியர் குறிப்புகள்' எனுந்தலைப்பில், நூல் பதிப்பிக்கும் பொழுது நூலுக்கு முன்பகுதியிலும், சிலர் எழுதிய கட்டுரைகளில் ஐயங்கள் ஏதாவது எழுமாயின் அவற்றைக் குறிப்பிட்டுச் சில விளக்கங்களையும் எழுதியிருக்கின்றார்.

V. பதிப்பாசிரியர்

பதிப்பாசிரியராக இருந்த காலத்தில் பதிப்பித்த நூல்கள், பாடல்கள் பலப்பல. சிலவற்றுக்கு உரைக்குறிப்பும் வரைந்துள்ளார். சிலவற்றின் மூலத்தை மட்டும் பதிப்பித்துள்ளார். எல்லாவற்றுக்கும் முன்னுரை ஒன்று எழுதியுள்ளார். அதில் தாம் பதிப்பித்தற்கான காரணத்தையும் கூறியுள்ளார். சான்றுக்கு ஒன்று இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

1. பெரும்பொருள் விளக்கப் பாடல்கள்

"இப்பெயர் பெற்ற நூலொன்று, புறத்திரட்டு என்னும் தொகை நூலில் எடுத்தாளப்படுகின்றது. இத்திரட்டில் எடுத்துக் கோக்கப் பெற்ற பாடல்கள் நாற்பதென்று ஒருவாறு கணக்கிடப்பட்டது. இப்பெரும் பொருள் விளக்கம் இப்போது அகப்பட்டிலதாயினும், இதன் பாடல்களால், அநேக தர்ம விஷயங்களை இந்நூல் கூறுவதென்பதும் பழைய சான்றோரால் இயற்றப் பெற்ற உயர்வுடையதென்பதும் விளங்குகின்றன. தொல் காப்பியப் பொருளாதிகாரம் புறத்திணையியலில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் புறப்பொருட்டுறைகள் பலவற்றுக்கு இந்நூற்பாடல்களை மிகுதியும் உதகரிக்கின்றனர். அவற்றில், புறத்திரட்டாற் பெரும் பொருள் விளக்கம் என்று தெளிவாகத் தெரிந்தவைகளே இப்போது பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே, புறத்திரட்டில் வளையாபதி, ஆசிரியமாலை, சாந்தி புராணம், தகடூர் யாத்திரை, நாரத சரிதை, இரும்பல் காஞ்சி முதலிய நூல்களினின்று பல அழகிய பாடல்களும் கோக்கப்பட்டிருக்கின்றன. முன்பு, வளையாபதி ஆசிரியமாலைப் பாடல்களைச் செந்தமிழ் மூலம் ஆராய்ந்து வெளியிட்டது போலவே, இப்போது பெரும்பொருள் விளக்கப் பாடல்களையும், நூலிலுள்ளவாறு இயன்றவரை ஆராய்ந்து வெளியிடுகின்றமையால், இம்முயற்சியில் நேருங் குற்றங் குறைகளை அறிஞர் பொறுப்பார்களாக". (செந்தமிழ் 6, பக், 577-583)

2. நுண்பொருள் மாலை (ஒரு பழைய நூல்) 6, 1907-1908, பக், 136, 166, 313, 544, 570.

3. புறத்திரட்டிற் கண்ட பாடல்கள் (22) 8, 1909-1910, பக், 209-213.

4. பேரகத்தியம்-வடபதப்படலம் (27) 8, 1909-1910, பக், 471-474.

5. தருக்க சூத்திரம் (20) 7, 1908-1909, பக், 75-76.

6. ஆசிரியமாலைச் செய்யுட்கள் (16) 5, 1906-1907.

7. தளசிங்கமாலை (25) 6, 1907-1908.

8. தனிச்செய்யுட் கோவை 6, 1907-1908.

9. மழையைக் குறிக்கும் ஜந்துக்கள் 6, 1907-1908.

10. மதுரை ஸ்தானீகர் வரலாறு 5,1906-1907

11. நரிவிருத்தம் அரும்பதவுரையுடன் 5, 1906-1907.

12. திருக்கலம்பக மூலமும் உரையும் 1907

13. சிதம்பரப்பாட்டியல் மூலமும் உரையும் 1907

14. சந்திராலோக மூலம் 125 சூத்திரம் 1909

15. விக்கிரம சோழனுலா குறிப்புரை, விளக்கவுரை 1909

16. சங்கர சோழனுலா 1909

17. தொட்டிக்கலைக் கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை மூலம், அரும்பத விசேடம்

18. சாசனமும் தமிழ்ச் சரிதங்களும் 1915

19. பெருந்தொகை 1923.

இவை தவிரச் 'சாதுரிய வசனங்கள்' எனுந்தலைப்பில் அக்காலத்திலிருந்த நகைச்சுவைத் துணுக்குகள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார்.

VI. புத்தகக் குறிப்புகள்

'புத்தகக்குறிப்புகள்' எனுந்தலைப்பில் அந்தக் காலத்தில் வெளிவந்த நூல்களைப் பற்றி 'மதிப்புரை' எழுதியுள்ளார். நூலாசிரியரைப் பற்றியும், நூலைப் பற்றியும் பாராட்டிக் கூறுவதாகவே இம்மதிப்புரைகள் அமைந்துள்ளன. சில நூல்கள் அறிமுகம் மட்டும் செய்து வைக்கப்படுகின்றன. இவ்வாறு 63 நூல்களைப் பற்றிய குறிப்புகளை

இப்பகுதியில் ஐயங்கார் எழுதியுள்ளார். சான்றுக்குச் சில நூலின் மதிப்புரைகளை இவண் காண்பது பொருந்தும்.

1. சீவக சிந்தாமணி

தமிழ் மொழியில் ஐம்பெருங்காவியங்களிலே தலைசிறந்ததான சீவக சிந்தாமணியின் அருமை பெருமைகள், முன்னோரும் பின்னோருமான நல்லறிஞர் பல்லோரால் நன்கெடுத்துப் பாராட்டப்பெற்றவை யென்பதும், அதன் பெருமையை நாம் விசேடமாகப் புகழ்தல் மிகையே யென்பதும் பலரும் ஒப்புவர். ஆயினும், சமீபத்தில் வெளிவந்துள்ள அந்நூற் பதிப்பைப்பற்றிய விசேடங்கள் அநேகர்க்குத் தெரிந்திரா வாதலால் அவற்றைக் குறித்துத் தெரிந்தளவு சில கூறுதல் பொருந்து மெனலாம். மகாமகோபாத்தியாயர் ப்ரஹ்ம ஸ்ரீ உ.வே.சாமிநாதையரவர்கள், தாம் செந்தமிழணங்கைச் சிறப்பிக்கத் தொடங்குகாற் கொண்ட முதன்முயற்சி சீவக சிந்தாமணிப் பதிப்பென்பது யாவரும் நன்கறிந்தது. அச்சிந்தாமணியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கியதற்குப் பின்பு அவர்கள் ஊக்கமும் ஆராய்ச்சியும் உழைப்பும் அமோகமாகித் தமிழகத்துக்கு அளவற்ற பயனை விளைவித்தன. இவ்வாறு ஐயரவர்களது ஆராய்ச்சி செல்லற்கு முதலிலக்காய் விளங்கிய சிந்தாமணியே இப்போது, மறுபடியும் ஆராய்ப்பெற்ற இரண்டாம் பதிப்பாக அவர்களால் வெளியிடப் பெற்றது கண்டு அடங்கா மகிழ்ச்சியடைகின்றோம். ஐயரவர்கள் ஏனைய பதிப்புக்களில் வெளியிட்ட விஷயசூசிகை முதலிய ஆராய்ச்சிக் குறிப்புகள் முதன் முதல் வெளிவந்த சிந்தாமணிக்கும் அமையாத குறை தமிழ் மக்களால் பெரிதும் உணரப்பட்டு வந்தது. புலவர் சிந்தித்தவற்றையெல்லாந்தரும் ரத்னம் போன்ற அந்நூல், புறநானூறு, மணிமேகலை முதலியவை போல எல்லாச் செயற்கையழகுகளுடனும் வெளிவருதல் பெரிதும் விரும்பத்தக்கதன்றோ. அக்குறை நீங்க ஐயரவர்கள் அந்நூலை மறுமுறை ஆராய்ச்சி செய்து வருகிறார்களென்று நாம் சில காலமாகக் கேள்விப்பட்டு வந்தது, இப்போது நேரிற் கண்டுகளிக்கும்படி வெளிவந்துவிட்டது. இப்பதிப்பில், முகவுரைகளும் நூலாசிரியர் உரையாசிரியர்களது சரித்திர வாராய்ச்சிகளும், நூலைப் பற்றிய சில குறிப்புகளும் ஸ்ரீ புராணத்துக் கண்ட சீவகன் சரித்திரமும், இந்நூற்கும் பிற நூற்குமுள்ள ஒற்றுமைப் பகுதிகளைக் குறிக்கும் நீண்டதோர் ஆராய்ச்சி விளக்கமும், மூலத்திலும் உரையிலுமுள்ள கடினமான பகுதிகளை விளக்கும் விசேடக் குறிப்பும், அரும்பதங்கள் சிறந்த வாக்கியங்கள் அரிய விஷயங்கள் பழமொழிகள் அபிதானங்கள் முதலியவற்றைக் குறிக்கும் மிக நீண்ட 'அரும்பத அகராதி முதலியன'வும் பிற குறிப்புகளும் புதியனவாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றிலும் அப்பதிப்பின் செயற்கையழகுகளைப் புனையும் விதம் எங்ஙனம்? இக்குறிப்பெல்லாம் அந்நூலைப் படிப்போர்க்கு எத்தகைய உபகாரத்தை அளிக்கக் கூடியன என்பதையும், எத்தனை அரிய விஷயங்களை உலகிற்கு வெளியிடுகின்றன என்பதையும், கூறப்புகின் மிக விரியும். சுருங்கவுரைக்குமிடத்து, ஐயரவர்கள் இயற்கையழகு நிரம்பிய சிந்தாமணிக்கு ஏனைச் செயற்கையழகுகளை யெல்லாமூட்டி, 'அமிழ்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கழகு செய்து விட்டார்கள்' என்றே சொல்லலாம். இவ்வாறு, தமிழ் மக்கட்குத் தலைவராய் நிற்கும் ஐயரவர்கள் தமிழ்த் தாயை எல்லாவற்றானும் அலங்கரித்துப் போற்றி வருதற்கு நம்மவர் செய்யும் கைம்மாறு அளவிலதாக வேண்டுமாயினும், தமிழராயினாரெல்லாம் அவர்கள் பதிப்புகளைப் பெற்றுப் படித்தலொன்றனைச் செய்வாராயின், அதுவே அவர்கட்குப் பெருமகிழ்ச்சி விளைத்திடுமென்பது திண்ணம். ஐயரவர்கள் இதுவரை பதிப்பித்துள்ள தமிழ்ப்பெருநூல்கட்குச் சிந்தாமணி முதற்பதிப்பு எவ்வாறு அடிப்படையாய் நின்று சிறந்ததோ, அவ்வாறே, இவ்விரண்டாம் பதிப்பும், அவர்களால் இனி வெளிவரும் அரிய பெரிய நூல்கட்கு அடிப்படையாக விளங்குமென்றே கருதுகின்றோம். சருவேசுவரன் அவர்கள் முயற்சிக்காம் அறிவாற்றல்களைத் தந்து நம்மவர்க்கு உபகரிக்கச் செய்வாரென்றே நம்பியுள்ளோம் இப்பதிப்பின் விலை ரூ 6/= (செந்தமிழ் 6, பக், 102-103).

2. சுவதேச கீதங்கள்

இப்பெயர் கொண்ட பாடற்றிரட்டொன்று சென்னையினின்று சிறக்க வெளிவரும் 'இந்தியா'

பத்திராதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றி வெளியிடப்பட்டுளது. இதன் பெயரைக் கேட்கும்பொழுதே, இத்திரட்டு நம்மவர்க்கு ஒரு புதுவழியைக் கற்பிக்கவந்ததென்பது விளங்கும். நம் தமிழ் மொழியில், ஈசுவரசம்பந்தமான பாடல்களும் காவியங்களும் புராணங்களும் பிறவும் நிரம்ப வுண்டாயினும், நம்மவர்க்குத் தற்காலம் இன்றி யமையாது வேண்டத்தக்கனவும் தேசாபிமானத்தை உண்டாக்கவல்லனவுமான உயர்கவிகள் கிடைத்தில. வங்காள நாட்டார், இந்தியமக்கள் ஏனையரினும் விசேடமான தேசாபிமானமும் உள்ளக்கிளர்ச்சியும் பெற்றிருப்பதற்குரிய முக்கிய ஏதுக்களில் ஒன்று, அந்நாட்டில் சமீபத்திற்றோன்றிய கவிஞர் சிகாமணிகளது அருமைபெருமை வாய்ந்த தேசகீதங்கள் அந்நாடெங்கும் பரவிப் பேரெழுச்சியை உண்டாக்கி வருதலாம். மேனாட்டார்களெல்லாம் தம் நாட்டுக் கவிஞர்களியற்றிய தேசகீதங்களைப் பாராட்டிப் போற்றிவருதலை இயற்கையாகவுடையராய் விளங்குதலும் காணலாம். அத்தகைய பாடல்களுங் கீதங்களும் தமிழ் மக்கட்கும் இன்றியமை யாதனவாயிருத்தலோடு, அவை நாடெங்கும் பரவி ஊக்கத்தை விளக்கக் கூடியனவாகவுமிருத்தல் வேண்டும். சிற்சிலர் 'சுதேசமித்திரன்', 'இந்தியா' முதலிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிட்ட சுதேசியப்பாடல்கள் மிகவுயர்ந்தனவாயிருந்தமை கண்டு, அவை யாவருமறியத் திரட்டித் தொகுக்கப்படின் பெரிதும் உபயோகமாம் என்று கருதியதுண்டு. இப்போது, பாராதியார் தாமியற்றிய தேசகீதங்களைத் திரட்டிச் சிறுபுத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி விளைவித்தது. இவர்கள் வந்தேமாதரம், நாட்டுவணக்கம், எங்கள்நாடு, பூபேந்திரவிஜயம், கிளிக்கண்ணிகள் முதலாக அநேக விஷயங்களைப் பற்றிப் பாடியிருக்கும் செய்யுள்களும் கீதங்களும் சொன்னயம் பொருணயங்களுடையன வாயிருத்தலோடு, படிப்போர் மனத்தில் எழுச்சியை உண்டாக்கவல்லனவாகவும் விளங்குகின்றன. இயற்கையில் இனிய கவிகள் பாடவல்ல பாரதியார் தம் சக்தியை இத்தகைய புதுவழியில் திருப்பி உபயோகப்படுத்தியிருப்பது, நம்மவர்க்கு ஒரு நல்வழியைக் கற்பிக்கின்றது. இத்தகைய கீதங்களை, தேசாபிமானிகளான நந்தமிழ் நாட்டாரெல்லாம் படித்து மகிழ்வதுடன், முக்கியமாகத் தம்மக்கட்கு இவற்றை மனப்பாடம் பண்ணும்படிக் கொள்ளற்கேற்றபடி, கும்மி முதலான கீதங்களை அமைத்து வெளியிடுதல் மிக்க பயனளிக்கக்கூடியது. பெண்பாலாரிடம் அத்தகைய பாடல்கள் பரவுதல் எளிதாயிருப்பதோடு, அதனாலுண்டாம் நன்மைகளும் அனந்தமாம். பாரதியாரவர்களும் அவர்களையொத்த தேசாபி மானிகளும் இதுவிஷயமான முயற்சியைச் செய்து புகழும் புண்யமும் அடையத்தவறார்களென்றே நம்புகிறோம். இத்தேசகீத புஸ்தகத்தின் விலை அணா 2. விலாசம்: 'இந்தியா' பத்திரிகையாபீஸ், 34 பிராட்வே, சென்னை (செந்தமிழ் 6, பக், 105-106).

3. இராஜாம்பாள்

இது சென்னை ஸ்ரீ மத்-ஜெ-ஆர்.ரங்கராஜா அவர்களால் எழுதப்பெற்ற துப்பறியும் நவீனங்களில் (Novels) ஒன்று. மேற்றேயத்துக் கல்வியின் பெரும் பயனாக நாம் அடைந்துவரும் அநேக நன்மைகளில் உள்ளோன் தலைவனாகவும் இல்லோன் தலைவனாகவுங் கொண்டு, ஒரோ வழி ஒருசாராார்மாட்டு நிகழும் ஒழுக்கங்களைச் சிலரிடத்தேற்றி இடமும் காலமும் முதலாயின நியமித்துக் கூறும் இத்தகைய கற்பித சரிதங்களும் ஒன்றாம். இக்கதைகள், பொழுதை இனிதாகப் போக்குதற்குரிய கருவிகளில் ஒன்றாயினும், அதனால் அடைதற்குரிய நன்மைகளும் அனந்த மென்பதில் ஐயமில்லை. நல்லறிஞர்களால் வெளிவரும் கற்பித சரிதங்கள் சாதாரண நிலையிலுள்ள ஒருவனை உலகியல் நன்கறிந்தவனாக்கவல்லன என்பது திண்ணம். ஆங்கில முதலிய மேனாட்டு மொழிகளில், அறிவாளர்களால் எழுதப்பெற்ற கதைகள், அந்நாட்டாரது லௌகீகஞானத்தின் அளவற்ற பெருமைக்கு ஒரு காரணமென்று சொல்லலாம். இத்தகைய சரித்திரங்கள் சில நம்மவரும் தமிழில் எழுதி வருகின்றனராயினும், அவற்றில் தலைசிறந்து எல்லா வழியிலும் உபயோகப்படுவன சிலவேயாம். அவற்றில் ஒன்றாக, ராஜா அவர்கள் எழுதி வெளியிட்ட இராஜாம்பாளைக் கூறத் தடையில்லை. இந்நூலால், ஆண்பாலாரும் பெண்பாலாரும் அறியக்கிடக்கும் நீதிகளும் வழக்கங்களும் யுக்திகளும் அநேகமுள்ளன. இத்தகைய கதைகள், கேவலம் பொழுது போக்கற்குரிய இன்பமாத்திரமன்றி, பாஷையின் வளர்ச்சிக்குங் கருவியாகக் கூடுமாயின், இவற்றால் இன்னும் பெரும்

பிரயோஜனமுண்டென்பது திண்ணம். இந்நவீனகத்தின் போக்கு ஒழுங்குடையதாகவும், படிப்பவர் மனத்தை இழுத்துச் செல்லக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வியக்கத் தக்கதேயாம். இப்புத்தகம் பார்வைக்கு மிக அழகாகவும் நல்ல காகிதத்திலும் அமைக்கப்பெற்று, 184 - பக்கங்கள் கொண்டுள்ளது. இதன்விலை அணா-12 (செந்தமிழ் 6,பக்,75).

செந்தமிழ் 5, 1906 - 1907

4. காங்கிரஸ் உபந்நியாசங்கள், மொ. பெ. அணா 8, பக், 223 - 224.
5. ஸ்ரீ கம்பராமாயணம் - சுந்தரகாண்டம், ஸ்ரீரங்கம், ப. 316.
6. விசுவநாதம் - செய்யுள் நாடகம், அகவற்பா, சி.எஸ்.முத்துசாமிஐயர், தஞ்சை, ரூ.1, பக், 413 - 414.
7. ஆரியர் சத்தியவேதம், எஸ்.பி.நரசிம்மலுநாயுடு, ரூ 1-12-0. ப. 414.
8. பலிஜவாரு புராணம், ப. 414.
9. பிரமோத்தர காண்ட வசனம், த.சுப்பிரமணிய பிள்ளை, பக். 503-504.
10. சித்தாந்தம், பூவை கல்யாணசுந்தர முதலியார், ப. 504.
11. பொருநராற்றுப்படைப் பொருள் விளக்கம், உ.வே.கா. ஸ்ரீகோபாலாசாரியர், மகாதேவ முதலியார், அணா 8, ப.535.
12. காசி மாகாத்மியம், வசனநூல், வ.சு.செங்கல்வராய பிள்ளை, அணா 8, பக். 535-536.
13. கம்பராமாயணம் (கிட்கிந்தா காண்டம் உரை), யாழ்ப்பாணத்துச் சாவகச்சேரி ஸ்ரீமத் நா.பொன்னம்பலப் பிள்ளை, ரூ 3 சதம் 25, ப. 580.

செந்தமிழ் 6, 1907 - 1908

14. பரிமளா, பங்கிம் சந்திர ஜடோபாத்தியாயர், மொ.பெ.டி.வி.கிருஷ்ணஸாமி சாஸ்திரியார், அணா 10, பக். 75-76.
15. கைசிக ஏகாதசி புராணம், க.வெ.திருவேங்கட நாயுடு, ப.50.
16. ஸ்ரீமகாபாரதம், சஞ்சிகை, விலை அணா 12, பக்.615-616.
17. விவசாயபோதினி, ஸ்ரீகாந் அ சேதுராம ஐயர், ரூ 2, பக். 371-372.
18. பகவத் கீதை, மொ.பெ. ஸ்ரீ திருநயம் - ஸா- முத்து ஐயரவர்களால் வெண்பா விகற்பங்களில் எழுதப்பட்டது, ரூ 1-0-0, ப. 148.
19. ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் சரித்திரம், ஸ்ரீமத்- குருமலை. சுந்தரம் பிள்ளை, அணா 8, பக். 106-107
20. வருணதர்ப்பணம், ஸ்ரீமத் கா. ஆறுமுகநாயகர், சென்னை, அணா 1-12-0, பக். 103-104.
21. மர்மசாஸ்திர தர்மபோதினி, ஸ்ரீமத் மணமங்களர், சென்னை, அணா 5, பக், 104-105.

செந்தமிழ் 7, 1908-1909

22. ஸ்ரீ விவேகானந்த விஜயம், மகேசகுமார சர்மா, சென்னை, 1-4-0, ப.118.
23. யசோதர காவியம், தி. வேங்கடராமையங்கார் (பதிப்.), சென்னை, அணா 8, ப. 171.
24. ருதுவான பிராமணப் பெண்களின் விவாகம் சாஸ்திரியமானது என்பதைப் பற்றிய வியாசம், ஆங். மூலம் வி. எஸ். சீநிவாச சாஸ்திரியார், மொ.பெ. ப. நாராயணையர், சென்னை, அணா 4, ப. 172.
25. ஸ்ரீ திலகர் சரித்திரம், எம்.வி. ஈசுவரர், சென்னை, அணா 4, ப. 172.
26. வ.உ.சிதம்பரம் பிள்ளை சரிதம், ஷை அணா 2.
27. வாய்ப்பூட்டுச் சட்டமறுப்பு, விஸ்வபாரதி செட்டியார் (மொ.), அணா 8, ப. 173.
28. பிரமஞான சங்கிரகம், லேட் பீர் துரை (ஆங்), தி. சாம்பசிவ ஐயர் (மொ), பக். 173-174.
29. ஜன்ம பூமி, சுப்பிரமணிய பாரதியார், அணா 3, ப. 174.
30. மன்பதை யாற்றுப்படை, பு.க. சீநிவாஸாசாரியர், ப. 174.
31. மயூரகிரிக் கோவை, சர்க்கரைப் புலவர் குமாரர் சாந்துப் புலவர், சர்க்கரை இராமசாமிப் புலவர் (பதிப்), ரூ1, பக்.229 - 230.
32. குசேல வெண்பா, நா.சேதுராமஐயர், பாடற்றொகை 422, ப.230.
33. திருவுருமாமலைச் சிலேடை வெண்பா, மு.ரா. அருணாசலக் கவிராயர், ப. 282.
34. ஹிந்துமத தூஷணை பரிகாரம், ப. நாராயணையர், மொ. பெ. அணா 4.
35. மனிதன் வமிசாவளியினுண்மை, ஷை அணா 8, பக். 653-654.
36. ஸ்ரீ வேதாந்த தேசிகர் வைபவம், உ.வே. வேங்கடராமையங்கார், சென்னை, அணா 8, ப. 654.

செந்தமிழ் 8, 1909-1910.

37. இயற்கையறிவு, ஸ்ரீமத் என். சுவாமிநாத ஐயர், ரூ 1, ப. 422.
38. ஸ்ரீ இராமாயண வினாவிடை, ஸ்ரீமத் ஆ.சி. கஸ்தூரி ரெங்கையர், ரூ1, பக் 420-421.

39. திருநெல்வேலிப் புராண வசனம், ஸ்ரீமத் ம. அழகர்சாமி பிள்ளை, ப. 421.
40. ஸ்ரீ பகவதநுகீதை, ஸ்ரீமத் சிந்நயநாயக்கரவர்களால் 665 விருத்தங்களால் பாடப்பெற்றது, ரூ 1, பக். 421-422
41. தமிழ்ப் பெயரகராதி, ஸ்ரீமாந் பி. இராமநாத முதலியார், சென்னை, ரூ.. 10, ப. 420.
42. ஜனநிர்மாணம், அனிபெசண்டு அம்மையார் 1907-1908இல் சென்னையில் ஆற்றிய சொற்பொழிவின் தமிழாக்கம், ப. 58.
43. A Catalogue of the Tamil Books in the Library of the British Museum, P.110.
44. ஆரியமத உபாக்கியானம், நெல்லை ஏ. கிருட்டிணசாமி ஐயர்.
45. சர் வால்ட் ஸ்காட் இயற்றிய ஐவன்ஹோ சாரசங்கிரகம், என். பஞ்சாபகேச சர்மா.
46. கண்ணம்மாள் அல்லது பஞ்சாயத்து நாடகம், உ.வே.சா. இராகவாசாரியார்.
47. மனம் போல வாழ்வு, வ.உ. சிதம்பரம்பிள்ளை.
48. ராஜம் அய்யர் சரிதை, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர்.
49. திருக்குறள் வசனம், பு.து. இரத்தினம் பிள்ளை.
50. ஸ்ரீ மகாபாரத மொழிபெயர்ப்பு, இராமானுசாசாரியர்.
51. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, உ. .வே.சா. ப. 724, ரூ 2.50, ப. 419.
52. விஜய சுந்தரம், ராவ்ஸாஹிப் ஸ்ரீமத் தி.ம. பொன்னுசாமிப் பிள்ளை, பக். 477-478.
53. மதுரைக் கலம்பகம், ஸ்ரீமாந் மதுரைப் பிள்ளையவர்கள் மீது இயற்றப் பெற்ற பிரபந்தம், இந் நூலியற்றியவர் சாஹிப் பஹதூர், எம்.கே எம். அப்துல் காதிறு ராவுத்தர், பக். 537-538.
54. ஸ்ரீ வியாசபாரத மொழிபெயர்ப்பு, ஆதிபர்வம், சபாபர்வம், சாந்திபர்வம், பக். 652-653.
55. ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் உபந்நியாசங்கள், ஆர். நாராயணசாமி ஐயர் (மொ.பெ) அணா 12, சென்னை, ப. 653.
56. யுத்தலோலன், ஒதெல்லோவை அநுசரித்து நம் நாட்டு இடம் பெயர்களுடன் அமைக்கப்பட்டதோர் நாடகம், பி. எஸ். துரைசாமி ஐயர், சென்னை, அணா,8 பக். 653-654.
57. சத்தியவல்லி, கற்பனைக்கதை, ஆர்.பி. குழந்தை சாமிப் பிள்ளை, சென்னை, அணா 12, ப. 654.
58. பாநுமதி, நாடகம், அ. சுப்பிரமணிய பாரதியார், சென்னை, அணா 12, ப. 654.
59. கமத்தொழிற்போதம், பயிர்ச்செய்கையைப் பற்றிய போதனை நூல், யாழ்ப்பாணம் சி. எம். சின்னைய முதலியார், விலை சதம் 30, ப. 655.
60. தசகாரியம், பொ. முத்தைய பிள்ளை, விலை அணா 8, ப. 656.
61. குலோத்துங்க சோழன் கோவை, மு.ரா. அருணாசலக் கவிராயர், அணா 12, மதுரை, ப. 657.
62. பத்மாவதி, அ. மாதவையா, நாவல், ரூ 1, மதுரை, ப. 657.
63. கல்வியே கருந்தனம், கா. நமச்சிவாய முதலியார், ப. 658.

ஒரு நூலைப் படித்து அதற்கு மதிப்புரை எவ்வாறு எழுத வேண்டும் என்ற நெறிமுறையை இவரெழுதிய இம்மதிப்புரை மூலம் அறியமுடிகிறது. இவ்வாறே இவர் பல நூல்களுக்கு மதிப்புரை எழுதிச் செந்தமிழ் இதழில் வெளியிட்டுள்ளார்.

மு.இராகவையங்கார் தம் 24ஆம் வயதில் முதன்முதல் செந்தமிழ் இதழ் மூலம் ஆய்வுப்பணியைத் தொடங்கி ஏறத்தாழ 58 ஆண்டுகள் வரை எழுத்துப் பணியைத் தம் மூச்சாகக் கொண்டிருந்தார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இவருக்கென்று ஓரிடம் இருப்பது வெள்ளிடைமலை. இவரது கட்டுரைகள் பல விவாதங்களுக்கு இடந்தந்துள்ளன. இவரெழுதிய புத்தகக் குறிப்புகள் மூலம் அக்காலத்தில் வெளிவந்த நூல்களை அறிந்து கொள்வதற்கு முடிகிறது. இன்றைய இளம் ஆய்வாளர்களுக்கு இவர் ஆய்வுப் போக்கு நெறிமுறைகள் பெரிதும் உறுதுணைபுரியும்.

செந்தமிழ்



ச.வே. சுப்பிரமணியன்
தமிழூர்.

தமிழ்ச்சங்கங்களால் தமிழ் வளர்ந்த கதை, தமிழ் நிலைபேறு அடைந்த கதை, தமிழ் என்றும் நிற்கின்ற கதை பலரும் அறிவர். இறையனார் களவியல் உரை வழியாக கி.மு. வில் நடந்த தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்ததையும், தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற நூல்களை நாம் பெற்றதையும் உலகு அறியும்.

இந்த நோக்கத்தில் 1901இல் பாண்டித்துரைத்-தேவர் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற நான்காம் தமிழ்ச்சங்கம் பற்றித் தமிழ் அறிஞர் அறிவர். அத்தமிழ்ச்சங்கத்தின் வானொலி போன்று செந்தமிழ் என்ற இதழ் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேல் வந்து கொண்டிருக்கிறது. செந்தமிழ் என்ற இதழில், தமிழர்க்கு அறிமுகம் ஆகாத பல நூல்கள் வெளியிடப் பெற்றன. அவற்றுள் ஒன்று பொன்னவன் கனா நூல். இதனைப் பற்றித் தமிழறிஞர் பலரும் அறிந்ததில்லை.

சிலப்பதிகாரத்தில் கனவுகள் திருப்பு மையங்-களாக அமைகின்றன. அவற்றுள் ஒன்று கோவலன் கண்ட கனவு. கோவலன் கொலை செய்யப்படுவதற்கு முந்திய நாளுக்கு முந்திய நாள் ஒரு கனவு கண்டான். மதுரைப் புறஞ்சேரியில் இருந்தபொழுது அக்கனவைக் கவுந்தியடிகள், மாடலன் இவர்களிடம் கூறுகிறான்.

ஒரு கீழ்மகனால், கோவலன் வேந்தனுடைய நகரில் மணம் பொருந்திய ஐவகைக் கூந்தலையுடைய கண்ணகி நடுக்கமுற, தான் அணிந்திருந்த ஆடை பிறரால் கொள்ளப்பட்டு, கொம்புடைய விலங்கின் மேல் ஏறிச் செல்வதாகவும், கண்ணகி வானுலகை அடைவதாகவும், மாதவி மணிமேகலையைப் பௌத்த துறவியாக்கியதாகவும் கனவு கண்டதாகக் கூறுகிறான். இதில் அவன் கனவு கண்ட காலம் நான்காம் சாமம். நான்காம் சாமத்தில் கனவு கண்டால் அது பத்துநாளில் பலிக்கும் என்ற கனாநூல் பாடலை அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டுகிறார். அதோடு கோட்டுமா என்ற தொடர் கொம்புடைய விலங்கு என்று பொருள்படும். அது யானையையும் குறிக்கும். எருமையையும் குறிக்கும். பன்றியையும் குறிக்கும். யானை மேல் ஏறிச் செல்வதாகக் கண்டால் சிறப்பு நிலை கிடைக்கும். எருமை மேல் ஏறிச் செல்வதாகக் கண்டால் அரசனால் தீமை ஏற்படும். பன்றி மேல் ஏறிச் செல்வதாகக் கண்டாலும் தீமை நிகழும். இதற்கு அடியார்க்கு நல்லார் என்ற சிலப்பதிகார உரையாசிரியர் நான்கு கனா நூல் நூற்பாக்களை எடுத்துத் தந்து இவை கனாநூல் ஆதலால் கொள்க என்று எழுதுகிறார்.

அடியார்க்கு நல்லார் காலம் 13ஆம் நூற்றாண்டு. அவர் காலத்திற்கு முன்பே தமிழில் கனாநூல் இருந்துள்ளது. ஆனால் அந்நூல் வெளிவரவில்லை. நான் இலக்கியக் கனவுகள் பற்றி 1976இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவு செய்தேன். அதற்குப் பேராசிரியர் டாக்டர். மு.வ. அவர்கள் வழிவகுத்தார்கள். அது நூலாகவும் வெளிவந்துள்ளது. ஆனால் அப்போது எனக்குக் கனா நூல் கிடைக்கவில்லை. 1920 – இல் செந்தமிழ் பத்திரிகையில் பத்திராசிரியராக இருந்த ரா. இராக வையங்கார் அவர்கள் செந்தமிழ் வழியாக இந்நூலை வெளியிட்டுள்ளார். அக்கனா நூலை எழுதியவர் பொன்னவன் என்பவர். 30 பாக்களால் ஆயது அந்நூல். கனா நூலுக்கு இலக்கணமாக அந்நூல் அமைகிறது.

உலகில் சிறந்த நூல்களாகக் கருதப்பெறுகின்ற நூல்களுள் ஒன்று சிக்மண்ட் பிராய்டு எழுதிய

கனவுகளின் விளக்கம் (The Interpretation of Dreams. Singmund Freud, Shrijee's Book International, New Delhi 110 049, First Impression-2003) என்ற நூல். கனவுகள் பற்றி சிக்மண்ட் பிராய்டு ஆய்வு செய்தது 19ஆம் நூற்றாண்டில் தான். ஆனால் தமிழன் 10ஆம் நூற்றாண்டிலேயே கனவுகள் பற்றி ஆய்வு செய்து நூல் எழுதியுள்ளான் என்பதை அடியார்க்குநல்லார் தம் உரையில் வெளிப்படுத்த, அந்த நூலைத் தந்தது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரமாகிய இரண்டாம் பதிப்பு.

கனா நூல்

இது சேதுஸமஸ்தான வித்வானும்,

செந்தமிழ்ப் பத்திராசிரியருமான

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

THE MADURA TAMIL SANGAM

செந்தமிழ்ப்பிரசுரம் - 2

இரண்டாம் பதிப்பு.

மதுரை

தமிழ்ச்சங்க முத்திரசாலைப் பதிப்பு - 1920.

ஸ்ரீ - கடவுள் துணை

கனாநூல் - முகவுரை

தமிழிற் கனாநூல் எனப்பெரிய ஒரு நூலுண்மை சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையாற் பலரும் அறிந்தது. யான் இத்தமிழ்ச் சங்கத்திற்கு ஏடுதேடிச் சென்ற காலத்தில் இந்நூற்பிரதி ஒன்று ஆழ்வார்திருநகரியிற் கிடைத்தது. சிலப்பதிகார உரைக்கண் அடியார்க்கு நல்லார் எடுத்தாண்ட கனாப்பயனைப் பற்றிய பாடல்கள் நான்கும் சில பாட பேதங்களுடன் உள்ளன. இஃது அடியார்க்கு நல்லார்க்கு முற்பட்ட பழையதோர் நூலாதலால், கால நீட்சிபற்றி எழுதுவோராற் பாடபேதங்கள் நேர்ந்தன போலும்! இந்நூலால், கனவுப் பயனைப் பற்றி முதலில் தேவகுருவாகிய வியாழனால் ஓர் நூல் செய்யப்பட்டுள்ள தென்றும், அதன் பொருளை விளக்கி அம்பர் என்னும் நகரத்திலிருந்த கணப்புரத் தேவன் என்பான் சொல்ல, அவன் சொன்னவாறு பொன்னவன் என்பான் இந்நூலை அந்தாதியாக முப்பது பாடல்களாற் செய்து அமைத்தான் என்றும் ஊகிக்கப்படுகின்றன. தேவகுரு செய்த கனாநூல் வடமொழி போலும்! எந்தை கணப்புரத்தேவன்றன் கட்டுரையே என இந்நூல் 29ஆம் பாடலிற் காண்டலால் இந்நூல் செய்தான் கணபுரத்தேவனாகாமையும், கட்டுரையார் மகன் பொன்னவன் சொன்ன கனவு நன்னூலெட்டுமிரண்டு மிருபதும் என இதனிறுதிச் செய்யுளிற் கூறப்பட்டுள்ளமையால் இம்முப்பது பாடலும் இயற்றியோன் பொன்னவன் ஆதலும் அறியத்தக்கன. எந்தை கணபுரத்தேவன் எனவும், மகன்பொன்னவன் எனவும் உண்மையால் இந்நூல் செய்த பொன்னவன் அம்பர்க்கணபுரத் தேவற்கு மகன் எனினும் அமையும்.

இஃது இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று வெளியாகின்ற செந்தமிழ்ப் பத்திரிகையின் இரண்டாம் பிரசுரமாவது. இவ்வாறே இதுகாறும் வெளிவரப் பெறாது, மறைந்து கிடக்கும் பண்டையோருரைத்த தண்டமிழ்ச் சிறு நூல்களை இச்செந்தமிழ் வாயிலாக வெளியிடக் கருதியிருத்தலின், அப்பழைய ஏடுகளையுடைய நல்லோர், அவற்றை இச்சங்கத்துக் கனுப்பியுதவுமாறு அவரைப் பன்முறை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

சேதுசமஸ்தான வித்வான்,

ரா. இராகவையங்கார்

செந்தமிழ்ப் பத்திராசிரியர்.

திராவிட மொழிகளில் கன்னட மொழியில் முதல் நூலாக (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) காவியா தர்சம் என்ற அணியிலக்கண நூல் காணப்பெறுகிறது. தெலுங்கில் நன்னயபட்டயருடைய பாரதம் (கி.பி. 11ஆம் நூற்றாண்டு) என்ற மொழிபெயர்ப்பு நூல் உள்ளது. மலையாளத்தில் இராமசரிதம் என்ற இராமாயணம் பற்றி நூல் உள்ளது. (கி.பி. 12ஆம் நூற்றாண்டு) தமிழில்தான் முதல் நூலாக முதன்மையான நூலாகத் தொல்காப்பியம் என்ற நூல் கி.மு. 8ஆம் நூற்றாண்டு தோன்றியுள்ளது. அதற்கு முன்பு ஏறத்தாழ, பத்தாயிரம் ஆண்டுகள் தமிழ் இலக்கியம் மிகுந்த வளமையுடன் இருந்தால்தான் தொல்காப்பியம் போன்ற நூல் தோன்ற முடியும்.

கனவு பற்றிய குறிப்புகள் எல்லா மொழிகளிலும் இருக்கலாம். ஆனால் திராவிட மொழிகளில் தமிழில்தான் முதன்முதலாகக் கனாநூல் என்ற நூல் பத்தாம் நூற்றாண்டில் பொன்னவனால் செய்யப் பெற்றுள்ளது என்பதை அறிகிறோம்.

இப்பொன்னவன் கனாநூலை 2004இல் உரை விளக்கங்களுடன் மணிவாசகர் பதிப்பகம்வழி நான் வெளியிட்டுள்ளேன்.

சமீபத்தில் தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும் குறிப்பு விளக்கங்களுடன் மெய்யப்பன் பதிப்பகம்வழி வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. (மார்ச் 2007) அதற்காக மாறன் அலங்காரம் என்ற நூலைப் பெறுவதற்கு முயன்றபோது செந்தமிழ்ப் பிரசுரம் - 37, மதுரை - 1915-இல் நாராயணய்யங்கார் வெளியிட்டது கிடைத்தது. அதற்குப் பிறகு யாரும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

அதேபோன்று பன்னிருபாட்டியல் என்று நூலும் ரா. இராகவையங்கார் செந்தமிழ் பிரசுரத்தின் வழியாகப் பதிப்பித்த நூலே கிடைத்தது. இவ்வாறு செந்தமிழ் பிரசுரங்கள் பல நிலைகளில் முதன்மையான நூல்களை வெளியிட்டுள்ளன.

100 ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழி எந்நிலையில் இருந்தது என்பதற்குக் கீழ்வரும் பகுதியை 1904 செந்தமிழ் இதழில் வந்த பகுதியை அப்படியே கொடுத்துள்ளேன்.

உ

திருச்சிற்றம்பலம்

மதுரைத் தமிழ் சங்கம்

1903 ஸ்ரீ டிசம்பர் மீ 23-உ கூடிய சபையாரால் முடிவு செய்யப்பெற்ற சங்க விதிகள்.

(இவ்விதிகள் 1904 ஸ்ரீ ஜனவரி மீ முதற்றேதி முதல் உறுதியாகக் கையாளப்பெறுவன)

இச்சங்கத்திற்குரிய எல்லாப் பிரிவுகளையும் மேற்பார்த்தற்கு ஏற்பட்டுள்ள விதிகள் அடியில் வருமாறு. இச்சங்கத்தின் எல்லா உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் அடியிற்குறித்துள்ள விதிகளை அநுசரித்து அவ்வழி தவறாது நடந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களாவர்.

1. மானேஜ்மெண்டு ஆபீஸ்

இச்சங்கத்தின் எல்லாப் பிரிவுகளையும் மேற்பார்த்து நடத்தி வர இவ் ஆபீஸ்க்கு அதிகாரமுண்டு. எல்லா உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் முறையே நடந்து கொள்ள வேண்டிய விஷயம்பற்றி, அவ்வக் காலங்களில், இவ் ஆபீஸூ மூலம் உத்தரவுகளோ அல்லது விதிகளோ பிறப்பிக்கப்படும். அம்முறைவழுவி நடப்பவர்களைக் குறித்து, தவறி நடந்துகொள்ளும் விஷயத்தின் தன்மைக்குத்தக்கவாறு, அக்கிரா சனாதிபதியவர்கள் மிகக்கண்டிப்பாய்க் கவனிப்பார்கள்.

இவ்வாபீஸூக்குரிய உத்தியோகஸ்தர் இருவர். ஒருவர் மானேஜர், மற்றொருவர் ரைட்டர் இவ்விருவரும் தமிழ்ச்சங்கமாபீஸூக்குரிய எல்லாப் பொருளையும், ரிக்கார்டுகளையும் அவ்வவற்றிற்குள்ள அட்டவணைக் குறிப்புகளுடன், காப்பாற்றிவைத்துக் கொள்ளவும், வரவுசெலவு முதலிய கணக்குகள் வைத்துக் கொள்ளவும், எவ்வழியானும் சங்கத்தின் அபிவிர்த்திக்குரிய எவ்வகை ஒழுங்குகளையும் நடத்திவரவும் கடமைப்பாடுள்ளவர்கள்.

2. பத்திராசிரியர்கள் ஆபீஸ்

இவ்வாபீஸூக்குரிய உத்தியோகஸ்தரர் ஐவர். 1. தலைமைப் பத்திராசிரியர், 2. உதவிப்பத்திராசிரியர், 3. சைவநூற்பரிசோதகர், 4,5, எழுத்தாளர் இருவர். பத்திராசிரியரிருவரும் செந்தமிழ்ப் பத்திரிகை மாதந்தோறும் பிரசுரித்துவரவும், புத்தகங்கள் பதிப்பிக்கவும் ஏற்பட்டவர்கள். சைவநூற்பரிசோதகர், சைவசம்பந்தமான ஏடுகளையும் மற்றும் குறிப்பிடும் நூல்களையும் பரிசீலனை செய்து புத்தகரூபமாக அச்சிடுதற்குரிய நிலையிற் கொணர்தற்குரியர். எழுத்தாளர் இருவரும் பத்திரிகை புத்தக சம்பந்தமான வேலைகட்கு உதவியாயிருந்து, பத்திராசிரியர், சைவ நூற்பரிசோதகரிருவர்க்கும் வேண்டிய பணிகளை முடித்துத் தரவும், ஏடுகட்குப் பிரதி செய்யவும் கடமைப்பட்டவர்கள்.

3. பாண்டியன் புத்தகசாலை

இச்சாலைக்கு உரியார், தலைமைப்புத்தகசாலையாளர், உதவிப் புத்தகசாலையாளர் என இருவர். இவ்விருவரும், புத்தகசாலைக்குரிய எல்லாப் புத்தகங்களையும் ஏடுகளையும் அட்டவணைக் குறிப்புடன் ஒழுங்காகவும் சாவதானமாகவும் வைத்துக் கொண்டும், வந்துபடிப்போர்க்கு அவ்வப்போது எடுத்துக்கொடுத்து வரும் நூல்களைக் குறிப்புப் புத்தகத்திற் பதிவுசெய்து படித்தவர் கையெழுத்து வாங்கியும் உத்திரவாதிகளாயிருந்து வேலைபார்த்தற் குரியவர்கள்.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாவரும் புத்தகசாலைக்குள் வந்து புத்தகங்கள் வாங்கிப் படித்து வரலாம். எவ்விதக்காரணத்தாலும் அங்ஙனம் கொடுக்கும் புத்தகங்களைப் புத்தக சாலையினின்றும்

வெளியேற்றல் கூடாது. அவ்வக்காலங்களிற் புத்தகசாலைக்கு விலைகொடுத்து அல்லது விலையின்றி வாங்கப்பெறும் புத்தகங்கட்குத் தனித்ததோர் குறிப்பு வைத்துக்கொண்டு, அதன் விவரங்களைக் குறிப்புப் புத்தகத்திற் பதிவு செய்துகொள்ளல் வேண்டியது.

4. சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை

இக்கலாசாலைக்கு, தலைமை உபாத்தியாயர் ஒருவர், உதவி உபாத்தியாயர் இருவர். சமஸ்கிருத உபாத்தியாயர் ஒருவர், ஆங்கில உபாத்தியாயர் ஒருவர், ஆக ஐவராவர். இக்கலாசாலையில் 25 மாணாக்கர்க்கு மேற்படாது, உண்டி உடை புத்தக முதலிய போஷணை பெற்றுக் கற்றுவருபவரும், புத்தகமட்டில் அளிக்கப் பெற்றுக் கற்றுவருபவருமென இருதிறத் தினராவர். அவர்கள் கற்கும் நூல்களும், விஷயங்களும் அவ்வக்காலங்களில் தெரிந்து குறிக்கப்பட்டு வருகின்றன.

கலாசாலையில் ஏற்பட்டுள்ள விண்ணப்ப வரையறைப் பிரகாரம் ஒவ்வொரு மாணாக்கரும், கலாசாலைத் தலைமை உபாத்தியாயர்க்கு விண்ணப்பஞ்செய்து, அதன்மேல் மானேஜ்மென்டாபீஸின் முடிவான உத்திரவின்படி அக்கலாசாலையிற் சேர்தற்குரியர். மாணாக்கர் மேஜராயிருந்தால் தானாகவும், மைனராயிருந்தால் தன்னினத்தாரைக் கொண்டும் கலாசாலையொழுங்கை அநுசரித்து உடன்படிக்கைச் சாதனம் பிறப்பித்துத்தரல் வேண்டியது.

5. தமிழ்ச்சங்க முத்திரசாலை

இவ்வாபீஸுக்குரிய கம்பாஸிட்டர்கள் என்னும் வேலைக்காரர்கள் கவனிக்கவேண்டிய விதிகள் அடியில் வருமாறு.

1. வேலைக்குரியகாலத்தில் கம்பாஸிட்டர்கள், மானேஜரவர்களுடைய உத்தரவின்றி ஆபீஸைவிட்டு வெளியே செல்லுதல் கூடாது.

2. அநாவசியமான சம்பாஷணை, பாட்டு முதலிய விநோதங்களிற் காலங்கழிக்காது, சுறுசுறுப்பாய் வேலை செய்தல் வேண்டும்.

3. கம்பாஸிடர் தங்கள் சொந்த வேலையொன்றையும், ஆபிஸிற் செய்தல் கூடாது.

4. மானேஜருடைய உத்தரவின்றி வேலைசெய்யு மிடங்களில் அந்நியரை அழைத்து வருதல் கூடாது.

5. கம்பாஸிடர்கள் தாங்கள் வேலை செய்யும் ஸ்தானத்தை விட்டு அகலாது வேலைபார்த்து வருவதுடன், தங்கட்குரிய இடத்தைச் சுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

6. டைப்ஸ், காயின்ஸ் முதலியவற்றை அஜாக்கிரதையாய்ச் சிதறி எறியக்கூடாது.

7. ஒவ்வொரு கேசுகளிலும் அவ்வவ்வறைக்குரிய அக்ஷரங்கள் தவறி மாறுபடாமல் சரிபார்த்து அவ்வவ்விடங்களிற் சேர்க்க வேண்டியது. தரையிற் சிதறுண்டு கிடக்கும் டைப்ஸ் முதலியவற்றை அப்போதைக்கப்போது பொறுக்கி அதனதனிடத்திற் சேர்க்கவேண்டியது. அதன் பின்னர் தான் வேலை செய்யத் தொடங்க வேண்டும்.

8. இவ்வாபீசுக்கு வருகிற ஒவ்வொரு ஆர்டரையும் கிரமமாய் இவ்வாபீசு ஆர்டர்புக்கிற் பதிவுசெய்து, அவ்வாறு பதிவுசெய்தற்கு அடையாளமாக மானேஜ்மெண்டாபீசு உத்தியோகஸ்தர்களுடைய கையொப்பம், தேதி, முத்திரை பதிந்த பின்னர் தான் அவ்வாடர்களையேற்று கம்பாசிட்டர்கள் வேலைசெய்யத் தொடங்க வேண்டியது.

9. சிப்பந்திகள் மானேஜருடைய உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது. அவசியமான பொழுது ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும், இராக்காலங்களிலும் கம்பாசிட்டர்கள் ஆயத்தமாய் வந்து வேலை செய்யவேண்டியது. அக்காலங்களில் வேலைசெய்யும் கம்பாசிட்டர்களுக்கு வேலையின் தன்மைக்குத் தக்கவாறு சார்ஜ் கொடுக்கப்பெறும்.

10. கம்பாசிட்டர்கள் செய்துவரும் வேலைகளிற் குறைவு நேரிட்டாலும் அஜாக்கிருதை யாயிருந்தாலும், அப்போதைக்கப்போது ஹெட்கம்பாசிட்டர் அது விபரம் பற்றி மானேஜ்மெண்டாபீசிற்குத் தெரிவித்து வரவேண்டியது. சுருசுருப்பாயும் ஊக்கத்துடனும் வேலைப்பார்த்துவரும் கம்பாசிட்டர்களின் நன்மையைக் கருதி அவர்களைப் பற்றியும் மானேஜ்மெண்டாபீசிற்கு ஹெட்கம்பாசிட்டர் ரிப்போர்ட்டு செய்துகொண்டு வரவேண்டியது.

வேலைசெய்யும் காலம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த செந்தமிழ்க்

கலாசாலை நீங்கலாக மற்றெல்லாப் பிரிவுகளிலும் உள்ள சிப்பந்திகளும் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், பகல் 2 மணி முதல் 6 மணி வரையிலும் ஆக, 8 மணி நேரம் வேலை செய்து வரவேண்டியது. கலாசாலை மாணாக்கர்களோ காலை 11 மணிக்குக் கலாசாலை வந்து பகல் 2 மணிக்குச் சென்று மறுபடியும் பகல் 3 மணிக்கு வந்து மாலை 5 மணிக்குப் போகவேண்டியது. மேற்கண்டவாறு மாணாக்கர்களும் சிப்பந்திகளும் காலை மாலை இருபொழுதிலும் வந்து போவதில் 5 நிமிஷ காலம் பிந்தி வரலாம். ஆனால் மாதக்கடைசியில் இரண்டு மணி நேர அளவு பிற்பட்டு வந்ததாக ஏற்படுமானால் அரைநாட் சம்பளம் பிடித்தஞ்செய்யப்பெறும். ஒவ்வொரு டிப்பார்ட் மெண்டிலும் அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தர் வைத்துக் கொண்டு அதில் ஒவ்வொரு சிப்பந்தியும் கையொப்பஞ் செய்து வரவேண்டியது. அவ்வாறு கையொப்பஞ் செய்து வரத் தவறினால் ஆபீசுக்கு வராததாகவே பாவிக்கப்படுவார்கள். கையொப்பஞ் செய்தபிறகு வேலை செய்யுங்காலத்தில் ஆபீசில் இல்லாமல் வெளியே சென்றிருந்தால் அது விபரத்தை ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டின் தலைமை உத்தியோகஸ்தரும் மானேஜ்மெண்டாபீசிற்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

ரஜா விதிகள்

1. சாமான்ய ரஜா
2. சிக்கு ரஜா
3. சம்பளத்துடன் ரஜா
4. சம்பளப்பிடித்தத்தின்பேரில் ரஜா
5. விசேஷ ரஜா

என ஐவகை ரஜாக்கள்

1. ரஜாப் பெற விரும்புவோரெல்லாம் எழுத்து மூலமாகவே சங்கத்தின் பிரசிடெண்டு டிரஸ்ட்டிய வர்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டு அவ்விண் ணப்பத்தை அவ்வப்பிரிவின் தலைமையதிகாரியின் அபிப்பிராயத்துடன் சங்கம் மானேஜ் மெண்டாபீசிற் கொடுத்துக் கொள்ளவேண்டியது. அதன்மீது உத்தரவு பெற்ற பிறகுதான் ரஜாக்கள் கொடுக்கப்பெறும்.

2. ஐந்து நாள்வரை சாமான்ய ரஜாவுக்கு மானேஜர்கள் சாங்கஷன் செய்யலாம். மற்றவித ரஜாவுக்கெல்லாம் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்களே முடிவு செய்ய வேண்டியது. எவ்விதக்காரணத்தாலும் வருடத்தில் 15 தினங்களுக்கு மேற்பட சாமான்ய ரஜா கொடுக்கப்பட மாட்டாது. இந்த ரஜாவை ஏற்பட்ட விடுமுறை நாட்களை விலக்கியே உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

3. உண்மையாகவே சீக்காயிருக்கும் பட்சத்தில் 3 மாதம் வரை பாதிச்சம்பளத்தின்பேரில் ரஜாக் கொடுக்கப்பெறும். ஒருவருஷத்தில் ரஜாவே பெறாது முற்றிலும், உழைத்து வேலைசெய்தவர்களுக்குச் சம்பளத்துடன் ஒரு மாதத்திற்கு ரஜா கொடுக்கப்பெறும்.

4. ஒரு வருஷத்திற்கதிகப்படாமல் சம்பளமின்றி ஒவ்வொருவரும் ரஜா பெற்றுக்கொள்ளலாம்.

5. நெருங்கிய பந்துக்களிறந்துபோனால் அது விஷயத்தில் முழுச்சம்பளத்துடன் 20 நாளைக்கு ரஜாக் கொடுக்கப்பெறும்.

6. எவ்வித ரஜாவும் காரணம் பற்றியும் சமயா நுகுணம் பற்றியுங் கொடுக்கப்பெறுமேயொழிய, கட்டாயமல்ல.

7.கலாசாலை சிப்பந்திகளுக்கு வருஷத்திலிரண்டு முறை விடுமுறையிருப்பதால் அவர்களுக்கு பிரிவிலிஜ் ரஜாக் கொடுக்கப்பெறும்.

8. எவர்களும் ரஜாவாய்தாவிற்கு மேற்பட்டு ஒருநாளேனும் தாமதித்து வந்து தாமதத்திற்குக் காரணம் திருப்திகரமாய் விளக்காவிட்டால், அவர்கள் தங்கள் உத்தியோகத்தை இழந்துவிட்டார்களென மதிக்கப் பெறுவார்கள்.

9.கோர்ட் சாட்சிகளாகவேனும் அஸ்ஸெஸர்களாகவேனும் சங்கம் உத்தியோகஸ்தர்கள் கோர்ட்டிற்குச் செல்ல நேரிட்டால் அக்காலத்தில் அவர்களுக்குச் சம்பளபிடித்தமில்லை.

10.கலாசாலை, பத்திராசிரியராபீசு, தலைமை உத்தியோகதாரர்கள் தங்களின் கீழான சிப்பந்திகளுக்கு அவசியம்பற்றி ஒரு நாள் ரஜாக் கொடுக்கப்பெறும். தாங்களும் மானேஜரவர்களுக்குத் தெரிவித்து ஒருநாள் சாமான்யரஜாப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது விதி

1. அவ்வப்பிரிவின் தலைமை உத்தியோகஸ்தர்கள், தங்களின் கீழான சிப்பந்திகள் விஷயத்தில் வேலைக் குறைவேனும் நடத்தைத்தவறேனுங் கண்டால் அது விபரம்பற்றி மானேஜ்மெண்டாபீசிற்குடனே தெரிவித்து

வரவேண்டியது,

2. அவ்வப்பிரிவின் தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்கள் பார்வையிலும் ஸ்வான்தீனத்திலுமிருக்கிற மேஜை, நாற்காலி, பெஞ்சு முதலிய எல்லாப் பொருள்களையும் சாவதானஞ்செய்து காப்பாற்றி வருவதுடன் அவைகளுக்கு உத்திரவாதிகளாயிருந்து ஒருகுறிப்பெடுத்து வைத்துக்கொண்டு அதன் பிரதியொன்று மானேஜ்மெண்டாபீசிற்கு அனுப்ப வேண்டியது,

3. கம்பாசிட்டர்களும் மெஷீன்டிப்பார்ட்மெண்டு முதலிய மற்றச் சில்லறை வேலைக்காரர்களும் வாஸ்தவமாய்ச் சீக்காயிருக்கும் பட்சத்தில் 5 நாள்வரையில் ரஜாக் கொடுக்கப்பெறும். அவர்கள் மற்றவித ரஜாப் பெற எவ்விதத்திலும் உரியரல்லர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் இங்ஙனம்
மதுரை பொ.பாண்டித்துரை
23.12.1903 அக்கிராசனாதிபதி

தொல்காப்பியம் - பொருளதிகார நூற்பாக்கள் - மொத்த நூற்பாக்கள் பற்றிய பாடல்களுடன் தொல்காப்பியத்திற்கு இப்போதுள்ள உரைகள் போக மற்றொரு உரையும் இருத்தல் வேண்டும் என்ற குறிப்பு இவ்வாராய்ச்சிப் பகுதி வழித் தெரிகிறது. அதனால் இப்பகுதி செந்தமிழ் (தொகுதி 2, சோபகிருது மாசி மீ பகுதி 4 - 1904) என்ற இதழிலிருந்து கொடுக்கப் பெற்றுள்ளது.

ஆராய்ச்சி

ஈட்டும் அகத்திணையும் ஏய்ந்த புறத்திணையும்
காட்டு களவியலும் கற்பியலும் – மீட்டும்
பொருளியன்மெய்ப் பாடுஉவமம் போற்றிய செய்யுண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு.
பூமலர்மென் கூந்தல் பொருளியலிற் சூத்திரங்க
ளாவவறு நூற்றறுபத் தைந்தாகு – மூவகையா
லாயிரத்தின் மேலு மறுநூற் றொருபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்

இவ்விரண்டு வெண்பாக்களும் இச்சங்கத்திற்குக் கிடைத்த பழையதோர் தொல்காப்பியவேட்டினிறுதியில் எழுதப்பட்டிருந்தன. இவற்றாற் பொருளதிகாரச் சூத்திரங்கள் 665 எனவும், தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் 1610 எனவும் விளங்குகின்றன. இக்காலத்துப் பொருளதிகாரச் சூத்திரங்கள் 666 ஆகவும், தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் 1612 ஆகவும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வேற்றுமை உரைகாரர்கள் இரண்டு சூத்திரங்களை ஒரு சூத்திரமாக்கியும் ஒரு சூத்திரத்தை இரண்டு சூத்திரமாக்கியும், பொருள் கொள்ளுதலாற் போந்ததாகும். இதுகாறும் வெளிவராத தொல்காப்பியச் செய்யுளியற் பழையவுரை யொன்று இச்சங்கத்திற்குயான் ஏடுதேடிச் சென்றபோது கிடைத்தது. அதனை உற்றுநோக்கின் இத்தகைய வேற்றுமை பெரிதும் புலனாயது. அவ்வுரை பேராசிரியர், நச்சினார்க்கினியருரைகளின் வேறாகும். இவ்விரண்டா சிரியர்களாலும் குறிக்கப்பட்ட பாடபேதங்கள் அப்பழையவுரைக்கண்ணே காணப்படுகின்றன. 'துகளொடும் பொருளொடும்' என்னும் சூத்திரவுரையிற் பேராசிரியர் "இனிப் புகழொடும் பொருளொடும் என்பதூஉம் பாடமாக வுரைப்ப, புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃதமையும். மற்று அன்றாயின் ஈண்டாராய்ச்சியின்றென்பது, என்னை? வசையொடு நசையொடும் புணர்ந்தன்றாயினங்கதச் செய்யுள் என மேலோதுமாதலினிவன் என்பது" எனவும், நச்சினார்க்கினியர், "புகழொடும் பொருளொடுமென்று பாடமோதின் மேல்வசையொடு நசையொடு மென்பது பொருந்தாதாம்" எனவும் கூறுதலாற் கருதிய புகழொடும் பொருளோடும் என்ற பாடமே அவ்வுரை யேட்டிற் காணப்படுவது. இக்காலத்து வழங்காத அரிய உதாரணச் செய்யுட்கள் பல அதன் கண்ணுள்ளன. அவற்றுட் பரிபாடற் செய்யுட்கள் சிலவாம். கபிலதேவ நாயனார் அருளிச் செய்த மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை யினின்று 'கனியு நினைவொடு', 'நல்லார் பழிப்பில்' என்னும் முதல்களையுடைய இரண்டு கலித்துறைகளும் அதன்கண் எடுத்தாளப்பட்டுள்ளன.

'சேரிமொழியாற் செவ்விதிற்கிளந் தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற் புலனென மொழிப புலனுணர்ந்தோரே' என்னுஞ் சூத்திரம், 'தெரிந்த மொழியாற் செவ்வி திற்கிளந்து, தேர்தல்வேண்டாது குறித்தது தோன்றிற், புலனெனமொழிப புலனுணர்ந்தோரே' எனப்பெரிதும் பாடம் வேறுபட்டுள்-ளது. இவ்வுரை செந்தமிழ் வாயிலாக வெளிவரும்.

அன்றியும் பாட்டுரை நூலே (79) என்னுஞ் சூத்திரத்து 'வண்புகழ் மூவர்' என்பதற்கு வளவிய புகழையுடைய சேரன்,பாண்டியன்,சோழன் என்னும் மூவர் எனக் கூறியவரைக்கண் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலாயோர் வழங்கிய சேர சோழ பாண்டியர் என்னும் முறைவைப்புக் காணப்படாமல் சேரன் பாண்டியன் சோழன் என்னும் முறைவைப்பு காணப்படுவது. ஆசிரியர் தொல்காப்பியனார் புறத்திணையியலில் வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப் போந்தை வேம்பே யாரெனவரூஉ, மாபெருந்தானையர் மலைந்த பூவும் என்புழிச் சேரற்குரிய போந்தையினை முன்னும் பாண்டியற்குரிய வேம்பினை இடையினும் சோழற்குரிய ஆரினை இறுதியினும் வைத்து வழங்கியவாற்றால் அவர்க்கும் சேரன் பாண்டியன் சோழன் என்னும் முறைவைப்பே கருத்தாதல் நோக்கி இவ்வுரைகாரரும் சேரன் பாண்டியன் சோழன் எனவே வழங்கினாராவர். சிறுபாணாற்றுப்படையுள்ளும் குட்டுவன், செழியன், செம்பியன் எனச் சேரன், பாண்டியன், சோழன் என்ற முறைவைப்பே கூறப்பட்டுள்ளமை காண்க. இனிப் புறப்பாட்டும் பெரும்பான்மையும் இம்முறைவைப்பே கொண்டு சேரர்பாட்டு பாண்டியர்பாட்டு சோழர் பாட்டெனத் தொகுக்கப்பட்டிருத்தலுங் காண்க. இவையன்றி வெண்டளை விரவியும் என்னுஞ் சூத்திர வுரையில் அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியருளிய சிறியகட்பெறினே என்னும் புறப்பாட்டை எடுத்தோதி இப்பதினோழடி யாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான்வந்தன. மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாகிய நான்கடியும் பதினாலமடியும் ஐஞ்சீரான் வந்தன. ஏனைய நான்குசீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று எனக் கூறுதலானே அப்புறப்பாட்டுப் பதினோழடியான்வந்த அடிமயங்காசிரியம் என்பதும் அறியப்படும். இன்னும் அவ்வுரை கொண்டு அறியக் கிடப்பன பலவாம். இவற்றான் அவ்வுரையின் பழைமை ஆராயத்தக்கது.

ரா.இராகவையங்கார்.

என்னுடைய பணிவான வேண்டுகோள் இதுவரை செந்தமிழ் வழியாக வந்த நூல்கள் அனைத்தையும் பட்டியலிட்டு, பதிப்பித்த ஆசிரியர் - நூலாசிரியர் போன்ற குறிப்புக்களுடன் வெளியிட்டால் நல்லது.

நான்காம் தமிழ்ச்சங்கத்தின் வரலாறு என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிடப்பெறுதல் வேண்டும். அது தமிழர்க்குப் பெருமை தரும்.

(இக்கட்டுரை எழுதுவதற்கு செந்தமிழ் இதழ் 1904 - தந்து உதவியது சிவஞானமுனிவர் நூலகம் - திருநெல்வேலி நகரம். இந்நூலகத்தில் பழமையான நூல்கள், பிறஇடங்களில் கிடைக்காத நூல்கள் உள்ளன. இந்நூலகத்தினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் பாதுகாத்து வருகின்றனர்)

பயன் கொண்ட நூல்கள்

செந்தமிழ் - இதழ் - 1904.

பொன்னவன் கனா நூல் - ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108 - டிசம்பர் 2006.

தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும் - குறிப்பு விளக்கங்களுடன் - ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

தொல்காப்பியம் தெளிவுரை - ச. வே. சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108 - எட்டாம் பதிப்பு - 2006.

செந்தமிழ் இதழில் இலக்கண - மொழியியல் ஆய்வு



முனைவர். பெ. சுயம்பு,
திருச்செந்தூர்.

முகவுரை :

மதுரை மாநகரிலுள்ள நான்காம் தமிழ்ச்சங்கம்,வள்ளல் பெருந்தகை பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. மூதறிஞர்கள் ரா.இராகவையங்கார், உ.வே.சாமிநாதய்யர், பரிதிமாற்கலைஞர், அரசஞ்சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமிஅய்யர், மு.இராகவையங்கார் முதலியோர் நிறைந்த அவையில் தோன்றிய இச்சங்கம் தமிழ்மொழி, பண்பாட்டு மேம்பாட்டிற்கான திட்டங்களை ஆராய்ந்தது. அதன் பயனாகச் செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் புத்தகசாலை, நூல் ஆராய்ச்சித்துறை, அச்சகம் ஆகியனவும் நிறுவப்பட்டன.

தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களைச் செயற்படுத்தும் திட்டங்களுள் ஒன்றாகச் 'செந்தமிழ்' என்னும் ஆராய்ச்சி இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழ் 1902–ஆம் ஆண்டு நவம்பர் முதலாய்ப் புலமை சான்ற அறிஞர்களைப் பதிப்பாசிரியராய்ப் பெற்றுள்ளது. ரா.இராகவையங்கார், மு.இராகவையங்கார், திருநாராயணையங்கார், நா.பாலுசாமி எனப் பதிப்பாசிரியர் பட்டியல் தொடர்கிறது.

'செந்தமிழ்' தமிழுலகில் பெற்றுள்ள சிறப்பினைப் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை, "தமிழ்க்கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ்மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். தமிழ்நாட்டில் பெரும் பேராசிரியனாயமைந்து தமிழ்மக்கள் வீடுதோறும் சென்று தமிழ்க் கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்து வந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாயிருந்தது. இப்பத்திரிகையின் உயிர்நிலையாயிருந்தவர்கள் இவ்வாசிரியரவர்களே. பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்குவதற்கும், அறிவு நலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கும் இவர்களே காரண மாயிருந்தார்கள்" என்று எழுதுகிறார். 1938–இல் மு.இராகவையங்கார் எழுதிய ஆராய்ச்சித் தொகுதி என்னும் நூலுக்கு வரைந்த முன்னுரைச் செய்திகளோடு ஒன்றி இந்நாளிலும் செந்தமிழ் இதழ் சிறந்த ஆராய்ச்சிக்குரிய களமாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

செந்தமிழ் இதழில் புலமை தோய்ந்த ஆய்வாளர்கள் பலர் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, கலை போன்ற பல்வேறு துறைகளில் கட்டுரைகளைப் பதிப்பித்து வருகின்றனர். தமிழ் மரபினைப் பேணுகிற பழந்தமிழ் இலக்கிய, இலக்கணம் தொடர்பான கட்டுரைகளை இவ்விதழ் பெருமையுடன் ஏற்று வெளியிட்டு வருகிறது.

செந்தமிழில் வெளியிடப்படுகிற இலக்கண மொழியியல் கட்டுரைகள் பல திறத்தன. அவற்றுள் சில மொழியியல்ஆய்வு, இலக்கண நூல் ஆய்வு, சொல்லாய்வு, இலக்கணவிதிகள் – கூறுகள் ஆய்வு எனப் பகுத்து இங்கு விவரிக்கப்படுகின்றன.

மொழியியல் ஆய்வு :

மொழியியல் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றைச் செந்தமிழ் வெளியிட்டு வருகிறது. இக்கட்டுரைகள் திராவிட மொழியியலைக் குறிப்பாகத் தமிழ் மொழியின் அமைப்புடன் தொடர்புபடுத்தி விவரிக்கும் முறையில் உள்ளன.

பேராசிரியரும் பேராய்வாளருமான ச.வையாபுரிப்பிள்ளை, முனைவர் கமில்சுவலபில், பேராசிரியர் இரா.கோதண்ட ராமன், பேராசிரியர் கி.அரங்கன் முதலியோர் மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைச் செந்தமிழில் வழங்கியுள்ளனர்.

வையாபுரிப்பிள்ளையின் 'தமிழும் மலையாளமும்' என்னும் கட்டுரை ஒப்பியல் முறையிலானது. இது சொல் வடிவங்கள், ஒலி மாற்றம், காலஇடைநிலை, வேற்றுமை விகுதிகள், மொழிநடை, வரி எழுத்துப் போன்ற மொழிக்கூறுகளில் தமிழுக்கும் மலையாளத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளின் அடிப்படையில் இரு மொழிகளுக்கும் உள்ள உறவினைச் சுட்டிக்காட்டுகிறது. மூலத்திராவிட மொழியிலிருந்து கிளைத்த மொழிகளுள் ஒன்றே மலையாளம் என்று கூறுவோரின் கொள்கைக்கு இக்கட்டுரை எதிரானது. தமிழிலிருந்து கி.பி பத்தாம் நூற்றாண்டளவில் மலையாளம் தோன்றியது என்பது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கொள்கையாகும். தமது கொள்கையை வலுப்படுத்தும் நோக்கில் இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, வரலாறு, பேச்சுவழக்கு முதலியவற்றிலிருந்து சான்றுகளைத் தருகிறார்.

"மொழிகளில் அதிபுராதனமாகிய சொற்கள் ஸர்வ நாமங்கள் என்று சொல்லப்படுகிற மூவிடப் பெயர்களும், ஒன்று முதலாய எண்ணுப்பெயர்களும் ஆம். மூவிடப் பெயர்களில் "யான்" என்பது தன்மையொருமைக்குரிய பண்டைத்தமிழ். நான் என்பது இடைக்காலத்தே தோன்றி நாளடைவில் வழக்கில் மிகுந்து இன்றைக்குச் சொல்லாகிவிட்டது. இப்படித் திரிந்த தன்மைப் பெயரே மலையாளத்தில் ராமசரிதத்தில் "ஞான்" என வருகிறது. நான் என்பது ஒலிமாற்றத்தால் திரிந்து ஞான் என வருதல் இங்கு அறியத்தக்கது. நாறு–ஞாறு, நாலுதல்–ஞாலுதல் முதலிய சொற்களை நோக்குக. எண்ணுக்குரிய பெயர்களில் ஒன்று என்பது ஒந்து என மலையாளத்தில் வரும். இது இடைக்காலத்திறுதியில் பேச்சு வழக்குத் தமிழிலிருந்து தோன்றிய வடிவமாகும். இதுபோன்ற பல சொற்கள் உள்ளன. "மூந்நு" "கந்நுகாலி" முதலியவற்றைக் காண்க."

தமிழ்மொழிக்குரிய வட்டெழுத்துக்களே மலையாள நாட்டில் பூர்வகாலத்தில் கையாளப்பட்டு வந்தன. அங்குள்ள புராதனச் சாசனங்கள் தமிழ் மொழியிலேயே அமைந்துள்ளன. இவை, தமிழ் மொழியே பண்டைக் காலத்தில் இந்நாட்டில் வழக்கிலிருந்த தென்பதைப் புலப்படுத்தும். பிராசீன மலையாளக் கவிஞர்கள் தமது மொழியைத் தமிழ் என்ற பெயராலேயே அழைக்கின்றனர். பேராசிரியர் ராமப் பணிக்கர் தமது 'பிரம்மாண்ட புராண' மொழி பெயர்ப்பைக் குறித்து "இதரஞான் தமிழாய்க் கொண்டறியிக்கிந்நேன்" என்று கூறியுள்ளார்.

பல சான்றுகளால் ஆய்வு முடிபுகளை ஆணித்தரமாகத் துணிந்துரைப்பவர் பேராசிரியர் வையாபுரியார். இதனைப் பின்வரும் அவரது உரையில் காணலாம்.

"ஆகவே சொற்கள், சொல்வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள், மொழியின் நடை, செய்யுள்–அமைதி, சாசன இலக்கியம், மலையாள நாட்டினர் இயற்றிய பூர்வ இலக்கியங்கள், எழுத்து வரலாறு, மலையாளக் கவிஞர்களின் கருத்து முதலிய பல நெறிகளால் நோக்கினாலும் இடைக்காலத் திருதியிலுள்ள தமிழிலிருந்து கி.பி 10ஆம் நூற்றாண் டளவிலே பிராசீன மலையாள மொழி தோன்றத் தொடங் கியதென்று ஐயமின்றிக் கூறலாம். இதனால் தமிழும் மலையாளமும் தாயும் மகளும் என்ற தொடர்புடையன என்பது தெளிவாக விளங்கும். மலையாளம் தமிழைப் போல் மூலத் திராவிட மொழியிலிருந்து நேரடியாகப் பிறந்ததென்றும், இரண்டும் சகோதரித் தொடர்புடையன வென்றும், மலையாளம் தோன்றி 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன என்றும் சிலர் கூறுவதெல்லாம் அபிமானம் பற்றிய கூற்றென்று தள்ளவேண்டுமேயன்றி நேர்மையான ஆராய்ச்சியின் முடிவெனக் கொள்ளுதற் கில்லை."

அயல்நாட்டுத் தமிழறிஞர்களுள் முனைவர் கமில் சுவலபில் திராவிட மொழியியல், தமிழியல் ஆகியவற்றில் வலுவான ஆய்வாளர். இவர் 'திராவிட மொழி ஆராய்ச்சியும் முறையும்' என்னும் கட்டுரையில் திராவிட நாகரிகம், மொழிக்குடும்பம் ஆகியவற்றின் சிறப்புக்களைப் பொதுநிலையில் கூறித் திராவிட மொழி ஆராய்ச்சியில் தமிழர்கள் நல்ல குறிக்கோளும் மனத்திட்பமும் கொண்டு நல்ல முறையில் உழைக்க வேண்டும் என்னும் தம் பேரவாவினையும் வெளிப் படுத்தியுள்ளார்.

மொழியியல் ஆய்வுக் கட்டுரைகள் மொழிக் கூறுகளைத் திறனாய்வு செய்வனவாகவும், பொது மொழியியல், திராவிட மொழியியற் செய்திகளைச் செந்தமிழ் வாயிலாக அறிமுகம் செய்வனவாகவும் உள்ளன. முனைவர்.கி.அரங்கன் எழுதிய "மொழி ஆய்வு", "திராவிட மொழியியல் அறிமுகம்" ஆகியனவும் முனைவர். இரா.கோதண்டராமனின் "மொழிக்குடும்பங் களும் மொழி வகைகளும்" என்பதும் இத்தகையவற்றுள் சில.

இலக்கண நூல் ஆய்வு :

இலக்கணக் கருத்துகளே அன்றி, இலக்கண நூல்களை முழுமையாக ஆய்வு செய்கிறகட்டுரைகளையும் செந்தமிழ் வெளியிட்டு வருகிறது. இலக்கணக் கல்வி பின்னுக்குத் தள்ளப்பட்டு வரும் இக்காலத்தில் தமிழிலுள்ள இலக்கண நூல்களையும் உரை நூல்களையும் நினைவூட்டும் நோக்கில் இவை எழுதப் படுகின்றன. நூல் தோன்றிய காலம், சூழல், நூலாசிரியர் வாழ்ந்த காலம், தோன்றிய நோக்கம், நூலின் கட்டமைப்பு, விவரிக்கப்படும் செய்திகள் போன்றவற்றுடன் அந்நூலுள் கூறப்பட்டுள்ள சிறப்புச் செய்திகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுதலும் கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. தவிர குறிப்பிட்ட ஓர் இலக்கண நூற் கருத்துக்களில் படர்ந்துள்ள முந்தைய இலக்கணங்களின் செல்வாக்கும் கருத்து விளக்கங்களும் (Interpretations) திறனாய்வு செய்து குறிப்பிடப்பட்டுள்ளன.

செந்தமிழில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டுள்ள இலக்கண நூலாய்வுக் கட்டுரைகள் தனியொரு நூலை ஆய்வு செய்தலும், ஒன்றனுக்கு மேற்பட்ட நூல்களை ஒப்பிட்டு ஆராய்தலும் என இரு வகைகளில் அமைந்துள்ளன.

இலக்கண நூலாய்வுக் கட்டுரைகளை எழுதியோருள் முனைவர் பெ. சுயம்பு குறிக்கத்தக்கவர். தொல்காப்பிய இலக்கியக் கொள்கை, நேமிநாதம், நன்னூலும் முத்து வீரியமும், குட்டித் தொல்காப்பியம், தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணமும் தொன்னூல் விளக்கமும், இலக்கணக் கொத்து, சுவாமிநாதம், தமிழ்நூல் முதலியன இவரது கட்டுரைகளுள் சில.

இலக்கண நூல்களுள் வீரமாமுனிவர் இயற்றிய கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ், தொன்னூல் விளக்கம் ஆகியன நூலமைப்பு, விவரிப்பு முறை, கருத்து விளக்கம் போன்றவற்றில் தமிழகத்து இலக்கணிகளின் நூல்களிலிருந்து வேறுபடுகின்றன. இவற்றுள் தொன்னூல் விளக்கம் தமிழில் தமிழ் மரபைப் பெரிதும் ஏற்று இலக்கணத்தை விவரிக்கிறது. ஏனைய மூன்றும் மேலை நாட்டினர்க்குத் தமிழை அறிவிக்கும் நோக்கில் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டவை. இவற்றில் மேலை நாட்டு மொழி மரபும் மொழியியல் எண்ணங்களும் ஒளிர்கின்றன. இத்தகைய செய்திகளைச் செந்தமிழில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் காணமுடிகிறது.

வீரமாமுனிவரின் கருத்துக்களுள் குறிப்புவினை, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர்கள், உரிச்சொல் போல்வன குறிக்கத்தக்கவை. குறிப்பு வினைச்சொற்கள் உண்மையில் பெயர்களே; அவை வினைமுற்றுக்களைப் போன்று பால்விகுதிகளை ஏற்றுப் பயனிலைகளாக வருதலால் குறிப்புவினை என்று தமிழர்களால் கூறப்படுகின்றன. பெயரெச்சமும், வினையெச்சமும், வினைமுற்றுச் சொற்களிலிருந்து உருவாக்கப்படுகின்றன. வினையாலணையும் பெயர்கள், பெயரெச்சங்களுடன் சுட்டுப் பெயர்கள் அவன், அவள், அவர் போல்வன இணைத்து அமைக்கப்பட்டவை ஆகும். உரிச்சொற்கள் என்பன அடைமொழிகளே. இவை போன்ற பல அறிவியலார்ந்த கருத்துக்கள் வீரமாமுனிவர் நூல்களில் இடம் பெற்றள்ளமையைக் கட்டுரைகளில் ஆசிரியர் சுட்டியுள்ளார்.

வீரமாமுனிவர் பதினெட்டாம் நூற்றாண்டில் குறிப் பிட்டிருக்கும் இலக்கணக் கருத்துக்கள் பலவற்றை இக்கால மொழியியலாரும் கூறியுள்ளனர். அன்னார் தமிழ்ச் சொற்களைப் பகுத்து, அவை தொடரில் செயலாற்றும் திறத்தையும் கண்டறிந்து விளக்கு கின்றனர். குறிப்பு வினை, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர் முதலியவற்றுக்கு மொழியியலார் தருகிறவிளக்கம், ஏற்கனவே முனிவரால் குறிப்பிடப்பட்டிருந்தும், அவரை இவர்கள் மேற்கோள்காட்டி விளக்கவில்லை. தொல்காப்பியம், நன்னூல் என்பன மட்டுமே கல்வியிலும் ஆய்விலும் பெரும்பான்மையும் அறிமுகமாகியுள்ளன. எனவே ஆய்வாளர்களுக்கு முனிவரது கருத்துக்களை ஒத்துப் பார்க்கும் வாய்ப்பு அமைந்தில எனலாம். செந்தமிழ், நூலாய்வுக் கட்டுரைகளை வெளியிடுதல் வாயிலாக இக்குறையினைத் தவிர்த்தற்கு வழி வகுத்துள்ளது.

சொல்லாய்வு :

சொல்லாய்வு, சொற்களுக்குப் புதிய பொருண்மை யினையும் புதிய இலக்கண விளக்கத்தினையும் அறிதற்குத் துணை செய்யும். இலக்கணம், பண்பாடு தொடர்பான கலைச் சொற்களைப் பகுத்து ஆராய்கிறசொல்லாய்வுக் கட்டுரைகள் பலவற்றை வெளியிட்டுத் தமிழ் மொழி, பண்பாட்டு ஆய்வுகளுக்குச் செந்தமிழ் இதழ் உரமேற்றி வருகிறது. இத்தகைய ஆய்வில் அறிஞர்கள் பலர் ஈடுபட்டுக் கருத்துப் போரிட்ட வரலாற்றுக்கும் இவ்விதழ் சான்றாகத் திகழ்கிறது.

சொல்லாய்வுக் கட்டுரைகளைச் செந்தமிழில் வெளியிட்டோருள் மு.இராகவையங்கார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, மோ.இசரயேல், அ.தட்சிணாமூர்த்தி போன்றோர் குறிக்கத்தக்கோர், மூதறிஞர் இராகவையங்கார் அமிதசாகரர், இளம்பூரணவடிகள், கருணாகரத் தொண்டைமான், கூத்தச் சாக்கையன், திருவள்ளுவர், பகழிக் கூத்தர், வேள்ஆயண்டிரன், ஸ்ரீஇருந்தவள முடையார் போன்ற பெயர்களை ஆராய்ந்து செந்தமிழ் இதழில் வெளியிட்டார். இவரது ஆய்வு பெயர்ச்சொல்லின் உண்மையான வடிவம், பொருள், அப்பெயருக்கு உரியோர் வாழ்ந்த காலம் ஆகியவற்றைப் புலப்படுத்தும் நிலையில் ஆனது.

யாப்பருங்கலத்தையும் யாப்பருங்கலக் காரிகையினையும் இயற்றிய புலவரது பெயர் அமுதசாகரர் என்றும் அமிதசாகரர் என்றும் நூல்களில் காணப்படுகிறது. இதன் உண்மை வடிவத்தை யாப்பருங்கலப் பாயிரத்தின் 'அளப்பருங் கடற்பெயராருந்தவத் தோனே' என்னும் அடியிலுள்ள அளப்பருங் கடற்பெயர் என்பதை அடிப்படையாகக் கொண்டு மூதறிஞர் உய்த்துணர்கிறார். வடமொழியில் 'அளப்பரும்' என்பதனை 'அமித' என்றும் கடல் என்பதனைச் 'சாகரம்' என்றும் அழைப்பர். இதனால் அமிதசாகரர் என்பதே சரியான பாடம் என்பது இவரது கருத்து.

பேராசிரியர் இசரயேலின் ஆய்வு,இலக்கண விகுதிகளைப் பகுத்து உண்மையை எடுத்துரைப்பதில் ஆர்வம் உடையது. பேராசிரியர் மு.வரதராசனின் ஆய்வு நெறியினை முன்னோடியாக ஏற்ற இவர் 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினைச் சொல்லோடு தொடர்புடைய விகுதிகளை ஆராய்வதில் பெரிதும் ஈடுபட்டுள்ளார். இவரது இலக்கண மொழியியல் ஆய்வுக்குப் பெருந்துணை நின்ற இதழ் செந்தமிழே எனின் அது மிகையாகாது. இவரது ஆய்வுக்கட்டுரைகள் 'எதிர்காலக் குறியீடு உம்/ம்', 'மார் ஈற்று வினைச் சொற்கள்', 'தமிழில் கால வேறுபாடு' முதலியனவாகும்.

பேராசிரியர் இசரயேல் 'எதிர்காலக் குறியீடு உம்/ம்' என்னும் கட்டுரையில் செய்யும் வாய்பாட்டு வினைமுற்றுக்கும் உந்தீற்றுச் சொல்லுக்கும் இடையே உள்ள தொடர்பினை இலக்கண, இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துரைக்கிறார். அவரது உரையுள் ஒரு பகுதி வருமாறு :

"உந்தீற்றுச் சொல் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் அடிப்படையினின்றே தோன்றியுள்ளது. அதாவது 'செய்யும்' என்னும் வாய்பாட்டுச் சொல்லோடு "அஃறிணை ஒன்றன்பால் விகுதி 'து' இணைந்து அமைந்த வடிவமாகவே தோன்றுகின்றது. திணை–பால், எண் காட்டும் விகுதியை ஏற்காத 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் காலப்போக்கில் ஒரோவிடங்களில் அவ்விகுதிகளை ஏற்று வழங்கலாயின. அவ்வாறு அவை விகுதிகளை ஏற்கவே அவை பொது வினைகளாக அமையாமல் (தொ.சொ.227) குறிப்பிட்ட ஒரு பாலுக்குரியனவாகவே வழங்கத் தலைப் பட்டன"

செந்தமிழில் கருத்துப்போர் புரிந்த அறிஞர்கள் புலமைத் தெளிவுடனும் சொல் நய நாகரித்துடனும் தம் கொள்கையை எடுத்துரைத்தனர். பேராசிரியர் கி.இளங்கோவன் 'ஆயர் பெயரும் பெயர்க் காரணமும்' என்னும் கட்டுரையில் ஆயர், இடையர், பொதுவர், கோவலர், கோன் என்னும் சொற்கள் குறித்துச் சில கருத்துகளை உரைத்தார். இக்கட்டுரை நவம்பர்(2002) இதழில் அச்சேற்றப்பட்டது. இவரது கட்டுரைக் கருத்துக்களுக்கு மாற்றாகப் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தியின் "ஆயர் சொல்லாய்வு" என்னும் கட்டுரை மார்ச்சு(2003) திங்களில் வெளியானது. இக்கட்டுரையின் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

ஆயர் :

முதற்கண் ஆயர் என்ற பெயரை ஆய்வோம். இப்பெயர் இம்மக்கள் பேணி வளர்க்கும் பசுக்களின் பெயரான "ஆ" என்பதன் அடியாகப் பிறந்தது என்றே பலரும் கருதுவர். அது சரியானது போல் தோன்றினாலும் உண்மையில் பிழையானது. பசுக்களைக் குறிக்கும் சொற்களாக ஆ, ஆன் என இரு சொற்கள் வழங்கின. ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்(புறம்.9) என்பதில் இரண்டு வடிவங்களும் உள்ளன. இவற்றில் ஆன் என்பதே பழையது என்றாலும், தொல்காப்பியர் ஆ என்பதனையே அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சி விதி வகுத்தார். (ஆனும் நீனும் என்னும் என் கட்டுரையில் விளக்கம் காண்க.) அவ்வாராய்ச்சி இங்கு விரியின் பெருகும். "ஆ' என்பது சொல்லாயின் அதனை மேய்ப்பார் "ஆவர்" என்று சுட்டப்படல் வேண்டும். இதற்கு 'ஏனை உயிர் வழி வவ்வும்' என்றவிதி கொள்க. அவ்வாறன்றி "ஆயர்" என வந்ததற்கு வேறு காரணம் இருத்தல் வேண்டும். 'ஆன்' என்பதே சொல்லாயின் ஆன்+அர்=ஆனர் என்று பெயர் அமையவேண்டும். ஆனால் அத்தகுச் சொல் ஒன்றேனும் சங்க நூல்களுள் இல்லை.

ஆயம் என்பது தொகுதி, மந்தை என்னும் பொருள் கொண்ட சொல் என்பது விளங்கிற்றாதலின் ஆக்களை அல்லது எருமைகளை அல்லது ஆடுகளை மேய்ப்பார் என்னும் பொருளிலேயே ஆயர் என்னும் பெயர் அமைந்தமை விளங்கும்". இது கட்டுரையின் ஒரு பகுதி.

"இனி, ஏடர் என்றசொல்லும் ஆயர்க்கு உண்டு என்--கிறார் பேராசிரியர் இளங்கோவன். இதன் தோற்றம் தெளியப்பெறவில்லை. ஆனால் சேஷன் என்பது சேடனாகிப் பின் சகரம் விடுபட்டு ஏடன் ஆகியிருக்க இடமுண்டு. இச்சொல்லுக்கு அடியவன், தொழும்பன் என்பது பொருள். தொழு, தொறு என்பன மந்தையைக் குறிக்கும். தொழுவர் என்பார் பணியாளர். தொழுதி– தொகுதி என்பன கூட்டத்தையே குறிப்பன. இங்கும் மந்தை என்ற பொருளே அமைந்தது.

ஏடர்–இண்டர்–அண்டர்–இடையர் என்ற வரிசையில் திரிபு ஏற்பட்டது என்று முனைவர் இளங்கோவன் கூறுவது வலிந்த கூற்றாகவே தோன்றுகின்றது". இது கட்டுரையின் மற்றொரு பகுதி.

சொல்லாய்வுக் கட்டுரைகளுள் 'பாடாணும் மூலிகையே' என்பதும் குறிக்கத் தக்கது. திரு.குழந்தைவேல் பன்னீர் செல்வம் இக்கட்டுரையில் புதிய செய்தியைத் தருகிறார். இலக்கண உரையாசிரியர்கள் "பாடப் பெறும் ஆண்மகனின் வீரம், கொடை, ஒழுக்கம் ஆகியவற்றை விவரிப்பது பாடாண் திணை" என விளக்குவர். ஆனால் இக்கட்டுரை வெட்சி, வஞ்சி, உழிஞை என்பவற்றைப் போன்று பாடாண் என்பதும் ஒரு மூலிகைத் தாவரத்தின் பெயரே என்று கூறுகிறது.

சொல்லாய்வு தொடர்பான அறிஞர்களின் கருத்து முடிந்த முடிபாக உறுதி செய்யப்படாமையால், மேலும் பல ஆய்வுக் கட்டுரைகள் தோன்றுவதற்கு வழி செய்கின்றன. செந்தமிழ் இதழும் அவற்றுக்குத் தகுந்த களம் அமைத்துத் தருகிறது.

இலக்கண விதிகள், கூறுகள், ஆய்வு :

செந்தமிழ் இதழில் வெளிவந்த கட்டுரைகளுள் பல இலக்கண நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள விதி களுக்கும் மொழியமைப்புக் கூறுகளுக்கும் புதிய விளக்கங்களைத் தருவனவாகும். இவ்விதழின் ஆசிரியராய்த் திகழ்ந்த மூதறிஞர் மு.இராகவையங்கார் எழுதிய 'தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்' 'ஆய்த வோசை' இரண்டும் ஆராய்ச்சித் தொகுதி என்னும் நூலின் பக்கங்களை அலங்கரிக்கும் சிறப்புடையன. இவற்றுள் முதற் கட்டுரையில் மூதறிஞர், "முற்றுகரத்தின் வேறுபாடு தோன்றக் குற்றுகரங்கட்குக் கொக்கு, நாடு, வரகு, என்பன போல் புள்ளியிடுதல் தொல்காப்பியர் வழக்கு என்றும்; குற்றியலிகரமும் புள்ளி பெறும் வண்டியாது,நாகியாது,கேண்மியா என்றும்,ஆய்தம்: என்று வந்தது ஃ என்றாகியது" என்றும் விளக்குகின்றார்.

"ஆய்தவோசை" என்னும் கட்டுரையில், "இதுகாறும் கூறிப் போந்தவற்றால், ஆய்தவெழுத்து, தொல்காப்பியர் காலத்தே தான் சார்ந்த வல்லெழுத்துச் சாயலான ஒசையையும், இடைக்காலத்தில் அய், அஇ என்றஇரண்டு ஒசைகளையும், பிற்காலங்களிலே குகரச் சாயலான ஒசையையும் ஏற்று ஒலித்து வந்த செய்தி விளக்கமாகும்" என்று முடிபு கூறுகிறார்.

தமிழறிஞர்கள் பலர் மொழியமைப்புக் கூறுகள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகளைச் செந்தமிழ் வழியாக இலக்கண உலகுக்கு வழங்கியுள்ளனர். பேராசிரியர்கள் வ.அய்.சுப்பிரமணியம், எஸ்.இளைய பெருமாள், நா.பாலுசாமி, கே.கருணாகரன், இரா.கோதண்டராமன், இராம.சுந்தரம் ஆகியோரின் குறிப்பு வினை, செய்மன, தொல்காப்பியத்தில் எச்சங்கள், தமிழில் வினைப்பெயர், திராவிட மொழிகளில் செய்யுந்து வாய்பாட்டு வினைகள், எதிர்மறைவினை எச்சம் என்னும் கட்டுரைகள் குறிக்கத்தக்கன.

பேராசிரியர் நா.பாலுசாமி தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்கள் விவரிக்கிற பத்து வகை எச்சங்களுக்கு உரையாசிரியர்கள் பலரும் வெவ்வேறு விளக்கங்கள் தருதலைச் சுட்டிக் காட்டி, அவற்றுள் ஏற்புடைய விளக்கம் யாருடையது என்பதனை மேற்கோள்களுடன் நிறுவுகிறார். இது 'தொல்காப்பியத்தில் எச்சங்கள்' என்னும் கட்டுரையின் ஆய்வு.

முனைவர் இரா.கோதண்டராமனின் கட்டுரைகள் புதுமையான முடிபுகளைக் கூறுவன. இலக்கண, இலக்கிய, பேச்சு, மொழியிலுள்ள மொழியமைப்புக் கூறுகளைத் தரவுகளாக ஏற்று, மொழியியல் நோக்கில் செய்திகளை ஆராய்வன. 'குற்றியலுகரம் அன்றும் இன்றும்', 'சில்லுக் கருப்பட்டியும் இலக்கண விளக்க மரபும்' என்னும் கட்டுரைகளை இவண் குறிப்பிடுதல் தகும்.

எழுத்தாளர் தாமரைமணாளன் எழுதிய சில்லுக்கருப்பட்டி என்னும் கதைத் தொடர் கல்கியில் வெளிவந்தது. அதில் இடம்பெற்றுள்ள சொற்களையும் தொடர்களையும் தரவுகளாகக் கொண்டு 'சில்லுக் கருப்பட்டியும்

இலக்கண விளக்க மரபும்' என்னும் கட்டுரை எழுதப் பட்டுள்ளது. நெல்லை, குமரி மாவட்டங்களின் வட்டார மொழி வழக்கில் இத்தொடர் எழுதப்பட்டுள்ளது. எனவே கோதண்டராமனின் ஆய்வு தமிழின் கிளைமொழி ஆய்வாக அமைகிறது. இதில் இலக்கண விதிகளில் அடக்கப்படாத புதிய ஒலிமாற்றங்கள், கால இடை நிலைகள், தொடரமைப்பு ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறார்.

நிறைவுரை :

செந்தமிழ் இதழ், நாட்டில் அரசும் பல்கலைக் கழகங்களும் செய்கின்ற பணிகளினும் மேம்பட்ட தமிழ்ப் பணிகளைச் செய்து வருகிறது. நாடறிந்த அறிஞர் பெருமக்களின் ஆய்வுச் செய்திகளைத் தமிழுலகிற்கு எடுத்துச் செல்கிறது. வீட்டினுள்ளே ஒடுங்கிக் கிடந்த கல்வியாளர்களை நாடறிந்த ஆய்வாளர்களாக இனங்காட்டுகிறது. ஏட்டளவிலே முடங்கி மக்கி அழியவிருந்த பல நூல்களை அச்சேற்றி வெளிப்படுத்தியுள்ளது. சிறந்த நூல்களை மதிப்புரை எழுதி மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இன்னோரன்ன இணையிலாப் பணிகளைச் செய்யும் இவ்விதழைப் பேணிச் சிறப்படைதல் தமிழினத்தின் கடமையாகும்.

பாண்டித்துரைத் தேவர் மீது பாடிய இரங்கற்பாக்கள்

கார்மேகக்கோனார் பாடியவை

சீராமகதையமிர் துஞ்சிறப்புறுமின்னுரைய மிர்துஞ்சேர்ந்தவாயுங்
காராருங் கொடைக்கரமுமடை திறந்தாலொத்தவருட் கமலக்கண்ணும்
வாராருந்தனமடவார் மடலெழுதுவனப்பு மதிமாண்பு மென்று
பாராருமக்களுள் யாரிடைக்காண்பாம் பாண்டியனே பகருவாயே

அன்னைபிதாவென வென்னை யாதரித்துக்கல்வி நலமமையுமாறே
யன்னமுடன் கலையுதவிக்கலையளித்தவான் பாண்டித்துரையே யந்தோ
பன்னுநலந்தமிழ்க் குழவி தனைப்பரிவோடினிக் காக்கப்பாரின்மீதே
யின்னொருகாலெய் துவையோவின் முகநீகாட்டுவையோ வியம்பிடாயே

நான்கு தமிழ்ச் சங்கங்கள்



கவிஞர் பெ. சிவராமன்,
உசிலம்பட்டி.

பாண்டிய மன்னர்கள் தமிழ் மொழியின் மீது கொண்ட அன்பின் மிகுதியாலும், ஆழ்ந்த பற்றுதலாலும் தங்கள் தலைநகரங்களில் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள் என்று பல இலக்கியச் சான்றுகளின் வாயிலாகவும், செப்பேடுகளின் வாயிலாகவும், பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் வாயிலாகவும் நாம் அறிகின்றோம். முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய முப்பெரும் தமிழ்ச் சங்கங்கள் அழிந்து போன போதிலும் நான்காம் தமிழ்ச் சங்கம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றே. தமிழ்ச் சங்கங்களைப் பற்றியும், சங்க வரலாற்றுச் செய்திகளைப் பற்றியும் அறிய பல இலக்கியச் சான்றுகள் உதவுகின்றன.

சங்கச் சான்றுகள் :

1. கடைச்சங்கப் புலவராகிய சீத்தலைச் சாத்தனார்,

    புலம்பரிச் சங்கம் பொருளொடு முழங்க

என மணிமேகலையில் கையாண்டுள்ளார். மற்றுமோரிடத்தில்

    பன்னீராண்டு பாண்டி நன்னாடு
    மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது
    புலவரை எல்லாம் வம்மின் யான்
    உங்களைப் புரந்தர கில்லேன்

என்கிறார்.

இதன் மூலம் பாண்டியர்கள் சங்கம் வளர்த்தனர் எனத் தெளிவாகிறது.

2. முச்சங்கச் செய்திகளையும் வரலாறுகளையும் தனியொரு அகவற்பாவாலும், சிலப்பதிகாரத்தாலும், இறையனார் களவியல் உரைகளாலும் அறிய முடிகிறது. பிற்காலத் திருவிளையாடலிலும் சில சங்கச்செய்திகள் உள்ளன.

3. மதுராபுரிச் சங்கம் வைத்தும்
    மகா பாரதம் தமிழ்ப் படுத்தும்

எனச் செப்புகிறது சின்னமனூர் செப்பேடு - பாண்டியன் மெய்க்கீர்த்தி

4. தலைச் சங்கப் புலவனார் தம்முன் - பெரிய புராணம்

5. சங்கத் தமிழ் மூன்றும் தா - ஔவையார்

6. புகலி ஞான சம்பந்தன் உரை செய்
    சங்கமலி செந்தமிழ்கள்

- திருஞான சம்பந்தர் திருதேவூர்

7. இமிழ்குரல் முரசம் மூன்றுடன் நாளும்
    தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே

காரிக் கண்ணனார் - புறம் 58

8. தொல்லாணை நல்லாசிரியர்
    புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
    நிலந்தரு திருவின் நெடியோன்

- மதுரைக் காஞ்சி 761-763

9. தமிழ் நிலைபெற்ற தாங்கருமரபின்
    மகிழ்நனை மறுகின் மதுரை

- சிறுபாணாற்றுப்படை 66-67

10. நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
    புலனாவிற் பிறந்த சொற்புதிதுண்ணும் பொழுதன்றோ!

- கலித்தொகை 3 - 5

11. சங்க முத்தமிழ் - ஆண்டாள் பெரிய திருமொழி

12. பாடு தமிழ் வளர்த்த கூடலின் வடாது

- புறத்திரட்டு - புகழ்மாலை

மேல்காணும் பல்வேறு இலக்கியச் சான்றுகளின் வாயிலாக முச்சங்கங்கள் இருந்த உண்மைகளைத் தெளிவாக உணரமுடிகிறது. மேலும் நக்கீரனாரின்

இறையனார் அகப்பொருளுரையும் கடைச்சங்கம் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது. இன்னும் பல ஆதாரங்கள் உண்டு.

தலைச் சங்கம் அல்லது முதல் சங்கம் கி.மு. 5000 – கி.மு. 3000 வரை.

பழம் பாண்டிய மன்னனான காய்சினவழுதி என்பவனால் முதல் சங்கம் நிறுவப்பட்டது. பழம் பாண்டி நாட்டின் தலைநகராக குமரியாற்றங்கரையில் வீற்றிருந்த தென் மதுரையில் முதல் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழை ஆய்ந்தனர். மன்னன் காய்சினவழுதி முதல் முதலாம் கடுங்கோன் வரை 89 பாண்டிய மன்னர்கள் அச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்து தமிழை ஆய்ந்தனர். 549 புலவர்கள் தமிழ்ச் சங்கத்தில் பங்கேற்றனர். அவர்களில் அகத்தியர் தலைசிறந்த புலவராய்த் திகழ்ந்தார். தென்மதுரையைத் தலைநகராகக் கொண்டு முதல்சங்கம் கி.மு. 5000 முதல் கி.மு. 3000 வரை ஏறக்குறைய 2000 ஆண்டுகள் சிறப்புடன் வளர்ச்சி பெற்று வந்தது.

அக்காலத்தில் ஈழம் பாண்டிய நாட்டின் ஒரே பகுதியாக இருந்தது. பக்றுளியாற்றிற்கும் குமரிக் கோட்டிற்கும் இடையே இருந்த பெரும் நிலப்பகுதியே பாண்டியநாடு. இதன் தலைநகர் தென் மதுரை. ஏழுபனைநாடு, ஏழு தெங்கு நாடு, ஏழு முன்பாலை நாடு, ஏழு பின் பாலைநாடு, ஏழு மதுரை நாடு, ஈழ நாடு போன்ற 49 நாடுகள், மலைகள், ஆறுகள், காடுகள் கொண்ட நாடு பாண்டிய நாடு என அடியார்க்கு நல்லார் கூறுகிறார்.

திடீரென நிகழ்ந்த கடற்கோளால் பக்றுளியாறும் பன்மலையடுக்கும், குமரியாறும், குமரிக்கோடும், தென்மதுரையும் முதல் தமிழ்ச்சங்கமும் முழுமையாய் அழிந்து கடலுக்குணவாயின. தரைப் பகுதிகளாக இருந்த பாண்டியநாடு அழிந்து இந்துமகா சமுத்திரமாக மாறியது. தலைச்சங்கமும் தலைச்சங்க நூல்களும் அழிந்தன. பாண்டிய நாட்டுடன் பழமைவாய்ந்த லெமூரியக் கண்டமும் அழிவுற்றது எனப் பேராசிரியர் ஹெக்கல் கூறுகிறார்.

இடைச்சங்கம் அல்லது இரண்டாம் சங்கம் கி.மு. 3000 முதல் கி.மு. 1500 வரை

முதல் சங்கமிருந்த தென்மதுரை அழிந்து போகவே மீண்டும் சங்கத்தை உருவாக்க எண்ணிய பாண்டிய மன்னன் கடுங்கோன் என்பவன் கபாடபுரத்தை அமைத்து அதில் இடைச்சங்கத்தை நிறுவி தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தான். இச்சங்கம் சுமார் கி.மு. 3000 முதல் கி.மு. 1500 வரை நிலை பெற்றிருந்தது. இச்சங்கத்தில் அவைப் புலவர்களாக தொல்காப்பியர், கீரந்தையர் போன்ற பெரும் புலவர்கள் வீற்றிருந்தனர். இவர்களுக்கு அகத்தியம் நூலாகத் துணைபுரிந்தது.

வால்மீகி ராமாயணம், வியாசபாரதம் போன்றவைகளின் வாயிலாகக் கபாடபுரத்தைப் பற்றிய பல செய்திகளை அறிய முடிகிறது. மேலும் கபாடபுரம் பாண்டியனின் தலைநகராக மட்டுமல்லாமல் கபாடபுரம் ஒரு சிறந்த துறைமுகமாகவும் திகழ்ந்தது.

இவ்வகை யரசிற் கவியரங்கேறினார்
ஐவகையரசர் ஆயிடைச் சங்கம்
விண்ணகம் பரவும் மேநகுகீர்த்திக்
கண்ணகல் பரப்பிற் கபாட புரமென்ப

என்ற பழைய அகவற்பாவும் கபாடபுரத்தில் இடைச் சங்கம் இருந்த செய்தியைச் சுட்டிக் காட்டுகிறது.

இடைச்சங்க காலத்தில் பல இலக்கியங்களும் , இலக்கண நூல்களும் வெளிவந்தன. அவைகளில் பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, இசை நுணுக்கம், தொல்காப்பியம் போன்றவைகளாம். இதில் தொல்காப்பியம் தலைசிறந்த நூலாகப் போற்றப்பட்டது. கி.மு. 1500 அளவில் ஏற்பட்ட கடற் கோளானது கபாடபுரம் இருந்த பகுதி முழுவதையும் அழித்துவிட்டது. கடற்கோளால் பாண்டிய நாட்டையும், இரண்டாம் தமிழ்ச் சங்கத்தையும் இழந்ததோடு இடைச் சங்க இலக்கியங்களையும் இழக்க நேரிட்டது.

கடைச் சங்கம் அல்லது மூன்றாம் தமிழ்ச் சங்கம் கி.மு. 1500 முதல் கி.பி. 250 வரை

கபாடபுரம் அழிவுற்ற அதே வேளை இடைச் சங்கமும் சேர்ந்தே அழிவுற்றது. அழிவுற்ற பாண்டிய நாட்டையும் தமிழ்ச்சங்கத்தையும் மறுபடியும் மீண்டும் உருவாக்க எண்ணிய முடத்திருமாறன் என்னும் பாண்டிய மன்னன் தன்னாட்டிற்குள் கூடல் என்னும் மதுரை மாநகரை உண்டுபண்ணி மூன்றாம் தமிழ்ச்சங்கமான கடைச்சங்கத்தை உருவாக்கினான். கடைச்சங்க காலம் கி.மு. 1500 முதல் கி.பி. 250 வரை. இப்பொழுது உள்ள மதுரையில் கடைச்சங்கம் நிலைபெற்றிருந்தது என இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. இச்சங்கத்தைப் பற்றிய செய்திகள் நமக்கு நிறையக் கிடைத்துள்ளன. கடைச் சங்கத்தில் 59 அவைப் புலவர்கள் தமிழாய்ந்துள்ளனர். அவர்களில் நக்கீரன், நல்லந்துவனார், சீத்தலைச் சாத்தனார் போன்றவர்கள் தலைசிறந்தவர்கள் ஆவர். கபிலர், பரணர் போன்ற

பெரும்புலவர்களும் கடைச் சங்க காலத்தவர்களே. இச்சங்கத்தில்தான் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினார். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் இச்சங்கத்தின் இறுதிக் காலத்தில் வாழ்ந்தவரே. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடைச் சங்கத்தில் இயற்றப்பட்டவைகளே.

கடைச் சங்கத்தின் சிறப்புக்கள் :

பழைய திருவிளையாடற் புராணத்தின் வாயிலாகச் சங்கப் பலகை என்ற ஒன்று இருந்த செய்திகளை அறியமுடிகிறது. மொழியறி சங்கப் பலகை என்றும் பாவறி சங்கப் பலகை என்றும் இருவகை சங்கப் பலகைகளை நமக்குத் தெரிவிக்கின்றது. பாடிக் கொண்டிருக்கும் பாடலைச் சங்கப் பலகை ஏற்றால்தான் புலவர் பெருமக்கள் அப்பாக்களைப் போற்றுவார்களாம். பாண்டிய மன்னன் ஒருவன் கடைச்சங்கத்திலிருந்து நாற்பத்தொன்பது புலவர்களின் உருவங்களைச் சிலைகளாகச் செய்து நிறுவினானாம். ஒரு சமயம் பொய்யாமொழிப் புலவர் அச்சிலைகள் முன் நின்று பாடினாராம். அவர் பாட்டைக் கேட்டு ரசித்த அப்பதுமைகள் தலையசைந்ததாகப் பழஞ் செய்தி கூறுகிறது.

கடைச்சங்கத்தின் அழிவு :

சிறந்து விளங்கிய கடைச் சங்கமானது பாண்டி மன்னன் உக்கிரப்பெருவழுதியின் காலத்திற்குப் பின் நிலவாது மறைந்தொழிந்தது. அவனுக்குப் பின் வந்த பாண்டியர்கள் சங்கம் நிறுவாது. தமிழை வளர்க்காது போயினர். காரணம், அரசியல் குழப்பங்கள் பல நிகழ்ந்தன. களப்பிரர்கள் படையெடுப்புக்கள். பல்லவர்களின் படையெடுப்புக்கள், பாண்டிய நாட்டில் பன்னீராண்டு கடும் பஞ்சம் காரணமாக சங்கப் புலவர்களைப் பாதுகாக்க முடியாமற்போகவே அவர்கள் சேர, சோழ நாடு நோக்கிச் சென்று விட்டனர். இச்சூழ்நிலையில் கி.பி. 3ம் நூற்றாண்டின் இறுதியில் சங்கம் அழிவுற்றது என இறையனார் அகப்பொருளுரை தெரிவிக்கிறது.

நான்காம் தமிழ்ச் சங்கம் – கி.பி. 1901 முதல்

பிலவ ஆண்டு ஆவணித் திங்கள் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சித்திரை மீன் கூடிய நன்னாளில் 14-09-1901 பகல் 1.30 மணிக்கு மேல் 2-45 மணிக்குள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் நான்காம் தமிழ்ச்சங்கம் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. அதே நன்னாளில் 1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, 2. பாண்டியன் புத்தகசாலை, 3. நூலாராய்ச்சி சாலை என்பனவும் தொடங்கப் பெற்றன.

சங்கம் தோன்றக் காரணங்கள் :

முதல், இடை, கடையென்னும் முச்சங்கங்களும் அழிவுற்றுச் சிதைந்தன. கடைச்சங்கப் பாண்டிய மன்னன் உக்கிரப்பெருவழுதிக்குப் பின் கி.பி.250-இல் கடைச்சங்கம் முழுமையாய்ச் செயல் இழந்துவிட்டது. பண்டைய நாளில் தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சங்கத்திற்கும் இருந்து வந்த ஏற்றத்தையும் பின்நாளில் தமிழுக்கு ஏற்பட்ட தாழ்வையும் எண்ணி வருந்திய பாண்டித்துரைத் தேவர், மீண்டும் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் நிலை ஏற்றம் பெற்றுப் பண்டைய நிலைக்கு உயரவேண்டும் என்னும் பேராவப் பெருக்கால் சுமார் 1651 ஆண்டுகளுக்குப் பின் 1901-ம் ஆண்டில் மதுரை மாநகரில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைத்தார்.

1. நான்காம் தமிழ்ச் சங்கம் பொழுது போக்குக்காகவோ, பொருள் ஈட்டுவதற்காகவோ, அரசியல் செல்வாக்குப் பெறுவதற்காகவோ அமைக்கப்பட்ட அமைப்பு அல்ல.
2. அரசின் பொருட்கொடையையோ, பல்கலைக் கழகங்களின் நல்குதலையோ எதிர்பார்த்து தொடங்கப்பட்டதும் அல்ல.
3. தமிழ மொழி வளர்ச்சிக்காகவும், முச்சங்கம் கண்டு முன்பு தமிழ் மொழி பெற்றிருந்த உச்சநிலைக்கு மீண்டும் உயர்த்த வேண்டும் என்ற நன்னோக்கோடு உருவாக்கப்பட்ட சங்கமே நான்காம் தமிழ்ச் சங்கம்.

தொடக்க நாளிலே உருவாக்கப்பட்ட சங்கத் தீர்மானங்கள் :

நான்காம் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவிற்கு மன்னர் பாசுகர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்கள் புடைசூழ வந்திருந்தார். சேதுநாட்டு அவைப் புலவர்களும் பாண்டித்துரைத் தேவர்தம் அவைப் புலவர்களும் குழுமினர். பெரும்புலவர்களாகிய உவே. சாமிநாதய்யர், சடகோப ராமானுசாச்சாரியார், ராகவ ஐயங்கார், பரிதிமாற் கலைஞர், சண்முகம்பிள்ளை பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் முதலியோர் பெருவிரப்புடன் விழாவிற்கு வந்திருந்தனர். மதுரை மாநகரமேவிழாக்கோலம் கண்டது. சங்கத் தொடக்க நாளிலேயே கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தமிழ்க் கல்லூரி உண்டாக்குதல்.

2.தமிழ் ஏடுகளை அச்சிட்டுப் பயன்படுமாறு தொகுப்பது.

3.வெளிவராத அரிய நூல்களை அச்சிட்டுப் பரப்புதல்

4. வடமொழி, ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்

5. தமிழ்க்கல்வி பற்றிய செந்தமிழ் இதழ் வெளியிடுதல்

6. தமிழில் தேர்வு நடத்தி பட்டமும் பரிசும் வழங்குதல்

7. தமிழ் அறிஞர்களைக் கொண்டு பேருரையாற்றச் செய்தல்

8. தமிழில் திறமிக்க பெருமக்களை ஒன்று கூட்டித் தமிழாராய்தல்

9. வேண்டத்தக்க புது நூல்களும் புத்துரைகளும் படைத்து அவற்றை அரங்கேற்றுதல்.

இந்த ஒன்பது நோக்கங்களை நிறைவேற்றத்தக்க ஏழு அமைப்புக்கள் வெற்றிகரமாக இயங்கின.

1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை
2. பாண்டியன் புத்தகசாலை.
3. நூலாராய்ச்சி சாலை
4. கல்விக் கழகம்
5. தமிழ்ச் சங்க முத்திராசாலை (அச்சகம்)
6. செந்தமிழ் என்னும் திங்களிதழ்.
7. தமிழ்த் தேர்வு என்பவைகளாம்.

சேது சகோதரர்களின் கொடைகள் :

ஒன்றுவிட்ட உடன்பிறப்புக்கள் மன்னர் பாண்டித்துரையாரும் மன்னர் பாசுகர சேதுபதியவர்களும் இளம்வயதிலேயே தந்தையர்களை இழந்தபோதிலும் மனம் தளராமல் தமிழ்த் தொண்டாற்றத் துணிந்தனர். இன்று நாம் காணும் சேதுபதி மேல்நிலைப்பள்ளி, செந்தமிழ்க் கல்லூரி, நான்காம் தமிழ்ச் சங்கம் போன்ற அனைத்துமே அவர்கள் தந்தருளிய கொடைகளே. வேந்தர் பாசுகர சேதுபதி சங்கத் தொடக்க நாளிலே 1000 வெண்பொன் வழங்கி வாழ்த்தினார். பாண்டித்துரைத் தேவர் தாம் குடியிருந்த வீட்டையே சங்கத்திற்குத் தியாகம் செய்ததோடு மட்டுமல்லாமல் சங்கம் என்ற குழந்தை எந்தவிதக் குறையுமின்றி வளரத் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் தம் சொந்தச் செலவிலேயே பராமரித்தார். சங்கம் என்றுமே சுயமாகத் தங்குதடையின்றி நடைபெறுவதற்குத் தக்க வகையில் சில நிலையான அறக்கட்டளைகளை அமைத்துக் கொடுத்தார் மன்னர் பாசுகர சேதுபதியவர்கள். கடைச் சங்கப் பாண்டிய மன்னன் உக்கிரப்பெருவழுதி காலத்தில் கி.பி. 250ல் மறைந்த தமிழ்ச் சங்கம், 1901-இல் பொன்.பாண்டித்துரைத்தேவரால் மீண்டும் நான்காம் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் உயிர்பெற்று எழுந்தது. நான்காம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி, உயிர்கொடுத்து, உடல் வளர்த்து, கல்லூரி கண்டு, செந்தமிழ் என்னும் திங்களிதழ் பெற்று, தமிழ்மணம் வீச வீரநடை போடுகிறதென்றால் அது சேது சகோதரர்கள் வழங்கிய கொடைகளே.

இன்றும் நான்காம் தமிழ்ச் சங்கம் :

அன்று, அதாவது 1901-இல், எவ்வளவு சிறப்பாக இந்த நான்காம் தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டதோ; அதே சிறப்புடன் அதே நோக்கங்களை நிறைவேற்றி, வளர்ச்சிப் பாதை நோக்கி முன்னேறிச் செல்கிறது இன்று. சங்கம் தொடங்கப்பட்ட அன்றே போடப்பட்ட முதல் மற்றும் ஐய்ந்தாம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செந்தமிழ்க் கல்லூரியாகவும், செந்தமிழ் திங்களிதழாகவும் மலர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருகின்றன. பல தமிழ் அறிஞர்களையும், தமிழ் முனைவர்களையும், தமிழ் இலக்கிய மேதைகளையும் உருவாக்கி மகிழ்கிறது நான்காம் தமிழ்ச்சங்கம்.

தமிழ்ச் சங்க நிர்வாகங்களை, தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு கண்காணித்து வருகிறது. ஆட்சிக் குழுவின் தலைவராக முகவை மன்னர் திருமிகு. நா. குமரன் சேதுபதியவர்களும், துணைத் தலைவராக திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் அவர்களும், திருமிகு. இரா. அழகுமலை அவர்கள் செயலாளராகவும் மற்றும் ஒன்பது ஆட்சிக்குழு உறுப்பினர்களும் ஆட்சிக் குழுவில் பங்கேற்றுச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

செந்தமிழ்க் கல்லூரியின் நிர்வாகங்களைக் கல்லூரிக் குழு கண்காணிக்கிறது. கல்லூரிக்குழுவின் தலைவராக திருமிகு.டாக்டர் ந. சேதுராமன் அவர்களும், செயலாளராக திருமிகு. இரா. குருசாமி அவர்களும் மற்றும் 13 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. செந்தமிழ் திங்கள் இதழ் சிறப்பாகத் தமிழ்த் தொண்டாற்றி வருகிறது.

பாண்டித்துரைத் தேவரின் உருவச்சிலை :


கொடை வள்ளல், சங்கம் கண்ட தமிழ்ச் செம்மல், மாண்புமிகு மன்னர் பாண்டித்துரைத் தேவரின் உருவச்சிலை ^யை^ மீண்டும் 2007-இல் சங்கம் நிறுவியது. சங்கத்தலைவர், துணைத் தலைவர், சங்கச் செயலர், கல்லூரிச் செயலர், சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு, கல்லூரிக் குழு' கல்லூரிப் பேராசிரிய ^ப்^ பெருமக்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களின் ஆர்வத்தாலும் அயராத உழைப்பாலும் சிலை நிறுவப்பட்டதோடு மட்டுமல்லாமல், மாணவ மாணவியர்களின் அணிவகுப்பு மரியாதைகளோடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர் குழு :

நான்காம் தமிழ்ச் சங்க வெளியீடாகிய செந்தமிழ் என்னும் திங்கள் இதழ், 1902 முதல் இன்று வரை மிகச் சிறப்பாக தமிழ்த் தொண்டாற்றி வருகிறது. இவ்விதழைச் சிறப்புடன் வெளியிட ஆசிரியர் குழு ஒன்று சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. இக்குழுவில் தமிழறிஞர்களும், பெரும்புலவர்களும். பேராசிரியப் பெருமக்களும், முனைவர் பெருமக்களும், மொழி ஆய்வாளர்களும், தமிழாய்வாளர்களும் பங்கேற்றுத் தொண்டாற்றுகிறார்கள். பேராசிரியர் திரு. இரா. சதாசிவம் அவர்கள் பதிப்பாசிரியராகவும், தமிழறிஞர் முனைவர் திரு. தமிழண்ணல், பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன், நா. பாலுசாமி, ம.ரா.போ. குருசாமி, அ.அ. மணவாளன், கதிர் மகாதேவன் மற்றும் தமிழாய்வாளர்கள் ஆலோசகர்களாகவும் அவைப் புலவர்களாகவும் வீற்றிருக்கிறார்கள்.

சங்க நூற்றாண்டு விழா :

நான்காம் தமிழ்ச் சங்கம் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் 1901 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் நூறு ஆண்டைக் கடந்து ஏழாம் ஆண்டில் நடையயின்று கொண்டுள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற வேண்டிய நூற்றாண்டு விழா 2007-இல் நடைபெறத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் சங்க ஆட்சிக் குழு தீவிரமாகத் திட்டமிட்டு வருகிறது. நூற்றாண்டு விழா வெற்றிவாகை சூடட்டும். கொடை வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் புகழ் ஓங்கட்டும். நான்காம் தமிழ்ச் சங்கம் செழித்தோங்கி வளரட்டும். நாற்சங்கம் கண்ட செம்மொழித் தமிழே நீ வாழ்க!



வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் வாழ்க்கைக் குறிப்புகள்...

1. பெற்றோர் : வள்ளல் பொன்னுச்சாமித் தேவர் (தந்தை) பர்வதவர்த்தினி நாச்சியார் (தாயார்)

2. பிறந்த நாள்: 21–03–1867 இடம் : கௌரி விலாசம், அரண்மனை, ராஜவீதி, இராமநாதபுரம்.

3. பெற்றோர் இட்டபெயர்: உக்கிரபாண்டியன். வழங்கிய பெயர்: பாண்டித்துரை

4. உடன்பிறப்புக்கள் : கோட்டைச்சாமி என்ற பெரியசாமி (தமையன்) சிவஞானம் என்றசீமைச்சாமி (தமையன்)

5. தந்தை பொன்னுச்சாமித் தேவர் மறைவு : கி.பி.1870

6. இளமைப்பருவ வளர்ப்புப் பொறுப்பாளர் : இராமநாதபுரம் சேஷாத்திரி ஐயங்கார்

7. தமிழ் கற்பித்தவர்: இராமநாதபுரம் அழகர்ராஜு, சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார்

8. ஆங்கிலம் கற்பித்தவர்: வக்கீல் வெங்கடேச சாஸ்திரி

9. பயின்றபள்ளி: சுவார்ட்சு உயர்நிலைப்பள்ளி, இராமநாதபுரம்.

10. பள்ளித் தோழர்: பூச்சி சீனிவாச ஐயங்கார் (அரியக்குடி இராமானுஜ ஐயங்காரது குரு)

11. ஜமீன் பொறுப்பு ஏற்பு: 04–04–1884

12. புதுமனைப்புகுதல்: சோமசுந்தர விலாசம், ராஜவீதி, அரண்மனை, இராமநாதபுரம். 1893.

13. அ) திருமணம்: முதல் மனைவி நாகம்மை நாச்சியார். (குழந்தையில்லை) இரண்டாம் மனைவி துரைக்கண்ணு நாச்சியார் (குழந்தையில்லை)

    ஆ) வளர்ப்புமகன்: சோமசுந்தர பாண்டியன் (இளமையிலேயே இறப்பு)

14. அரசியல் பணி: 1. மதுரையில் 1901ஆம் ஆண்டு மே மாதம் 21,22,23ல் தமிழ் மாகாணக் காங்கிரசு அரசியல் மாநாடு கூட்டியது. வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றியது.

    2. தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் நிறுவனம் அமைப்பு (1905) நிறுவனத் தலைவர்.

15. தமிழ்ப்பணி: 1) மதுரையில் தமிழ்ச்சங்க அமைப்புப் பற்றிய ஆலோசனைக் கூட்டம் கூட்டியது. 24–05–1901.

    2) மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவியது. 14–09–1901. தலைமை ஏற்றது.

    3) சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை தொடங்கியது. 14–09–1901

    4) பாண்டியன் நூல் நிலையம் தொடங்கியது. 14–09–1901.

    5) தமிழ் ஆய்வு மையம் தொடங்கியது 14–09–1901.

    6) செந்தமிழ் (இதழ்) தொடக்கம். கி.பி.1903.

    7) பாளையங்கோட்டை, தஞ்சை, திருவாரூர், சென்னை, சிதம்பரம், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் சைவ சித்தாந்த மாநாடுகளில் சொற்பொழிவுகள்.

16. தேசபக்தர் வ.உ.சிதம்பரனார் வாழ்த்துப்பா: திருமந்திர, சைவ சித்தாந்த மாநாட்டில் நூறு அடி நெடும் பாடலால் புலவர் போற்றும் புகழ்க்குரிமை பெற்றது.

17. தொகுத்து வெளியிட்ட நூல்கள்

    1) பன்னூல் திரட்டு 1898லும், 1906லும் வெளியீடு (தேவாரம் முதல் திருக்குறள் வரையிலுள்ள 96121

பாடல்களில் இருந்து 1647 பாடல்கள் தொகுப்பு).

2) சைவ மஞ்சரி ஐம்பதிற்கும் மேற்பட்ட சைவத் தமிழ் இலக்கியங்களில் இருந்து 1316 பாடல்களைத் தொகுத்த வெளியீடு.

3) நாற்கவிராசநம்பி அகப்பொருள் உரை 1911

4) திருவாலவாய்த் திருப்பணிமாலை

5) மதுரைத்தல வரலாறு

6) இலக்குமி தோத்திரம்

18. உதவி பெற்று வெளிவந்த நூல்கள்– நிதி உதவி பெற்றவர்கள்

1) புறப்பொருள் வெண்பாமாலை– உ.வே.சாமிநாதையர்

2) மணிமேகலை– உ.வே.சாமிநாதையர்

3) மதுரைத் திருவிளையாடற் புராணம்– உ.வே.சாமிநாதையர்

4) தேவாரத் தலமுறைவைப்பு– செ.இராமசாமிப்பிள்ளை

5) சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (1892)– செ.இராமசாமிப்பிள்ளை

6) சிவ சமவாத உரை மறுப்பு– சபாபதி நாவலர்

7) தண்டியலங்கார உரை– சுன்னாகம் குமாரசாமித் தம்பிரான்

8) அபிதான சிந்தாமணி (1911)– சென்னை சிங்காரவேலு முதலியார்

9) ஞானாமிர்தம்– சேத்தூர், சுப்பிரமணியக் கவிராயர்

10) வில்லிபாரதம்– சேத்தூர், சுப்பிரமணியக் கவிராயர்

11) சாதக சந்திரிகை (1897)– திருநாராயண ஐயங்கார்

12) மெய்கண்ட சாத்திரம் (1910) – காஞ்சிபுரம்,நாகலிங்கமுனிவர்

13) பாண்டியம் (1910)– திருநாராயண ஐயங்கார்

14) தமிழ்ச்சொல் அகராதி – யாழ்ப்பாணம் கதிரைவேற்பிள்ளை

15) சோழவம்ச சரித்திரச் சுருக்கம்– டி.ஏ.கோபிநாத ராவ்

19. ஆதரவு பெற்ற புலவர் பெருமக்கள்

1) டாக்டர்.உ.வே.சாமிநாதையர், சென்னை.

2) அரசன் சண்முகனார், சோழவந்தான்.

3) புலவர் ராமசாமிப்பிள்ளை, மதுரை..

4) சபாபதி நாவலர், மதுரை.

5) சிங்காரவேலு முதலியார், சென்னை.

6) சுப்பிரமணியக் கவிராயர், சேற்றூர்.

7) திருநாராயண ஐயங்கார், எதிர்க்கோட்டை.

8) சிவஞானம் பிள்ளை, இராமநாதபுரம்.

9) சிவகாமியாண்டார்.

10) சுந்தரேச ஐயர்.

11) சாமி ஐயங்கார், எட்டையபுரம்.

12) அரங்கசாமி ஐயங்கார்.

13) ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணம்.

14) சுன்னாகம் குமாரசாமிப் புலவர், யாழ்ப்பாணம்.

15) குலாம்காதிறு நாவலர், நாகூர். (யாழ்ப்பாணம்)

16) புலவர் அப்துல் காதிறு ராவுத்தர், சோதுகுடி.

20. இசைப் புலவர்கள்

1) பட்டணம் சுப்பிரமணிய ஐயர்

2) வையை.மகாவைத்திய நாதையர்

3) தஞ்சை நாராயண சாமியப்பா

4) திருக்கோடிக்கா கிருஷ்ணஐயர்

5) பூச்சி. சீனிவாச ஐயங்கார்

21. நாடகப் புலவர்கள்

1) பெரிய மகாதேவ ஐயர், சென்னை.

2) சின்ன மகாதேவ ஐயர், சென்னை.

22. இயற்றிய நூல்கள்

1) சிவஞானபுரம் முருகன் காவடிச்சிந்து.

2) சிவஞான சுவாமிகள் பேரில் இரட்டை மணிமாலை

3) இராஜ ராஜேஸ்வரி பதிகம்.

4) தனிப்பாடல்கள்

23. புகழுடம்பு எய்தியது–இராமநாதபுரத்தில், 02–12–1911.

நன்றி : டாக்டர்.எஸ்.எம்.கமால்.

பாண்டி வள்ளல் பாண்டித்துரைத் தேவர் சொற்பொழிவு

கவியோகி. சுத்தானந்தபாரதி.

"திருவளரும் சிவச்செல்வம் தேனார்செந்
தமிழ்ச்செல்வம் திகழவேண்டிப் பொருள் வழங்கித்
தமிழ்ச்சங்கம் பொலியவைத்த புரவலனாம்
பாண்டிவள்ளல் அருள் வளரும் அறச்செல்வம்
அறிஞர்தரும் புகழ்ச் செல்வம் அன்புச் செல்வம்
தெருள்வளரும் கவிச்செல்வம் செழித்திங்கு
திருக்குறள்போல் வாழ்கின்றானே"

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக நடந்தது. அவ்விழாவிற்குத் தெய்வ சிகாமணிப் புலவர் என்னையும் அழைத்துச் சென்றார். கோபாலகிருட்டிணப்புலவர் "தம்பீ வா" என்று என்னைப் பல புலவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவருள் முதன்மையானவர் பெரும் பேராசிரியர் சாமிநாதையர், திருநாராயணர், இராகவர், அரசன் சண்முகம் முதலியோர். புலவர் மன்றம் இலக்கியப் பொலி வெய்தியது. "வருகிறார் பாண்டித்துரைத் தேவர் . . . எழுந்து நிற்போம்" என்றார் என் ஆசிரியமணி.

வள்ளல் தோற்றம் : மன்றத்தை மலர்விழியால் அளந்தார்; புன்னகை பூத்தார்; கைமலர் குவித்தார்; மாண்புறஅமர்ந்தார். நான் உலகையே மறந்தேன்; பாண்டி வள்ளலான தேவரையே கண்கொட்டாது பார்த்தேன்; அவர் விழியும் என்பால் அடிக்கடி திரும்பியது.

நெற்றி நிரம்பத் திருநீறு; சந்தனப்பொட்டுக்கு மேல் குங்குமப்பொட்டு; காதில் வைரக்கடுக்கன்; முறுக்கி விட்ட மீசை; சிந்தனை விழிகள்; அழகான முகப்பொலிவு; சரிகைக்குல்லா; நீண்ட அங்கி; பழம் பாண்டி மன்னனோ என்று வியக்கும் திருக்கோலத்துடன் விளங்கினார் பாண்டிவள்ளல். இடப்புறம் அப்பாவு ஓதுவார் இசைக்கருவிகளுடன் அமர்ந்திருந்தார். அவர்பால் கண்ணைத் திருப்பினார் வள்ளல். உடனே "நீலமாமிடற்றால வாயிலான்" என்ற சம்பந்தர் தேவாரம் நடந்தது. தேவர் கண்மூடி, மனங்குவிந்து தமிழ் மறையைப் பருகி உருகினார். புலவர் மன்றத்தில் அமைதி பூத்தது. சங்கத் தலைமை ஆசிரியர் திருநாராயணப் புலவர் வரவேற்பிசைத்தார். கவிதையாக இசைத்ததை உரைநடையிற் சொல்லுகிறேன்.

"பைந்தமிழ்ச் சோலையான பாண்டி மதுரையில் நான்காவது தமிழ்ச்சங்கத்தை நாட்டிய வள்ளலே நின்னைக் காணும்போது எத்தனையோ பெருமைகள் அலைமோதிக் கொந்தளிக்கின்றன. பாரிவள்ளல் முல்லைக்கொடிக்குத் தேரைத் தந்தது போலத் தமிழ்க்கொடி வளர நினது மாளிகைச் செல்வத்தையே தந்தனை. சேது நாட்டின் அருமை அளவற்றது. ஸ்ரீ இராமபிரானே வணங்கிய இராமேசுரம் அகில இந்தியக் கோவிலாக விளங்குகிறது. சங்ககாலம் முதல் சேதுநாட்டுப் புலவர் சீர்சிறந்தோங்கினார். சிவ கங்கைக்கு அருகே அள்ளூர் நன்முல்லையார். ஒக்கூர் மாசாத்தியார், திருக்கோட்டியூர் நல்லந்தனார், வெள்ளைக்குடி நாகனார், திருப்புல்லாணி புல்லங்காடர் பாடல்கள் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, கைந்நிலை முதலிய சங்க நூல்களில் உள்ளன. இவர்களெல்லாம் சேதுநாட்டுப் புலவர்கள். ஒட்டக்கூத்தர் பிறந்த மலரி சேதுநாட்டைச் சேர்ந்தது. கவிகுஞ்சர பாரதியார், சிலேடைப் புலவர் வேம்பத்தூர்ப்பிச்சுவையர், பாகவதம் பாடிய செவ்வைசூடுவார், தமிழில் சௌந்தரியலகரி பாடிய கவிராசர், செந்தில் பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக்கூத்தர், அரிச்சந்திர புராணம் பாடிய வீரை ஆசுகவி, கீழக்கரை வள்ளல் சீதக்காதி, படிக்காசுப்புலவர் அனைவரும் சேதுநாடர்.

சேதுமன்னர் கொடை வள்ளல்கள். ஒருதுறைக்கோவை பாடிய அமிர்த கவிராயருக்கு இரகுநாத சேதுபதி பொன்னங்கால் என்னும் சிற்றூரையளித்தார். அழகிய சிற்றம்பலக் கவிராயர், மதுரகவி முதலியோர் சேது மன்னர் தண்ணளியில் தழைத்தனர்.

முத்துராமலிங்கசேதுபதியின் அமைச்சரான பொன்னுச் சாமித் தேவர் மாம்பழக் கவிராயரைக் "கவிச்சிங்கம்" என்று போற்றிப் பொன்னும் புகழும் அளித்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் போன்ற பெரும்புலவர்களைப் போற்றிப் பரிசில் அளித்தார். தனிப்பாடல் திரட்டு 46 கோத்தளித்தார். ஆறுமுகநாவலரைக் கொண்டு திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார், சேது புராணம் முதலிய அரிய நூல்களை வெளியிட்டார். இவர் பாலவநத்தம் ஜமீந்தார்; குடிகளுக்குச் செய்த நன்மை அளவற்றது. 1870–இல் இவர் காலஞ்சென்றபோது புலவர் பெருமக்கள் அனைவரும் கண்ணீர் வடித்தனர்.

இவர் புதல்வர் நமது சங்கப் புரவலர் மாண்புமிகு பாண்டித்துரைத்தேவர் அறிவும், திருவும், திறமும், அழகும், கலையும், பொலியும் செந்தமிழ்ச்செம்மல்; இவரும் பாசுகர சேதுபதியும் ஆர்வமுடன் தமிழ் பயின்றனர். அழகர்ராசு இவர்களுக்குச் செந்தமிழ் பயிற்றினார். பூச்சிசீனிவாசஐயங்கார் இசை பயிற்றினார். இராமசாமிப்பிள்ளை பெரியபுராணம் சொன்னார்; பழநித்தம்பிரான் சிந்தாந்த பாடம் சொன்னார். பாசுகர சேதுபதிக்குக் கண்ணாயிருந்த இரண்டு புலவர்கள் இரா.இராகவைய்யங்கார், இசைவாணர் பூச்சிசீனிவாச ஐயங்கார். அவரிடம் கம்பனையும், இவரிடம் இசை நுணுக்கத்தையும் கற்றார். பாண்டித்துரையின் சோமசுந்தர விலாசம் புலவர் சங்கமாயிருந்தது. மறைமலையடிகள், அரசன் சண்முகனார், செல்வ கேசவராய முதலியார், பூரணலிங்கம்பிள்ளை, கோபால கிருட்டிணையர், தெய்வசிகாமணிப் புலவர் முதலியோர் திருவிழாவில் பங்கு கொண்டனர். அரசாங்க முதல்வர் திரு.வி.கிருட்டிணசாமிஐயர் தலைமையில் விழா நடந்தது.

இச்சங்கம் வளம்பெற வளர்கிறது. செந்தமிழ்க்கலாசாலை அடியேன் தலைமையில் நடக்கிறது. பல புலவர்கள் இங்கே பயின்று நாடெங்கும் தமிழ்ப்பணி செய்கிறார்கள். நூலாராய்ச்சி சாலை புலவர் இரா.இராகவையங்கார் தலைமையில் அரியபணி செய்து செந்தமிழ் என்னும் இலக்கிய மலரை வெளியிடுகிறது. பாண்டியன் புத்தகசாலை பல அரிய நூல்களும் ஏட்டுப் பிரதிகளும் கொண்டு மாணவருக்கும் ஆராய்ச்சியாளருக்கும் பெரும்பயனளிக்கிறது. பாண்டிய வள்ளல் அள்ளி விடுகிறார். அவர் வண்மையால் மாணவர் கவலை யில்லாமல் உண்டுடுத்திருந்து கல்வி கற்கின்றனர். இங்கே பயின்ற புலவர்கள் நாடெங்கும் ஆசிரியராயிருந்து தமிழ்ப்பணி செய்கிறார்கள்.

அறத்தால் வருவதே இன்பம் எனக்கொண்ட பாண்டி வள்ளல் இராமனாதபுரத்தில் ஒரு பள்ளிக்கூடம் உயர்வாக நடக்கச் செய்தார். இவர் பாசுகர சேதுபதியுடன் கூடி சுவாமி விவேகானந்தரைப் போற்றிச் சிகாகோவுக்கு அனுப்பினார்."

"புலவர் திருநாராயண ஐயங்கார் பொழிந்த புகழ் மொழியெல்லாம் என்னை வளர்த்த தமிழ்த் தாய்க்கே யாகுக. தமிழன்பு மணிகாள் இங்கே கூடியிருக்கும் புலவர்கள் தமிழ்ப் பணியைத் தவமெனக் காக்க வேண்டும். பழந்தமிழ்ச் செல்வத்தைப் பண்புறக் காத்துப் புதுத்தமிழ்ச் செல்வத்தைப் பயனுறப் போற்றவேண்டும். மாணவர்களை மாண்புறப் பயிற்றி வழிவழியாகத் தமிழ் வளம்பெற வழங்கிவரச் செய்ய வேண்டும். இக்காலம் தமிழை உயிரெனப் போற்றும் உத்தமருக்கு நன்றி செலுத்துவோம். நம்முன்னே நிலவும் பேரிசைப் புலவர் பிரம்மதிரு.உ.வே.சுவாமிநாதஐயர் (கைதட்டல்) பட்டி தொட்டியெல்லாம் பறந்து சென்று பழந்தமிழ்ச் சுவடிகளைத் தேடி விரிவான குறிப்புரைகளுடன் வெளியிட்டுவரும் பணியைப் போற்றுவோம். சிலப்பதிகாரத்தைப் பூண்டு தமிழன்னை கிண்கிணி நடை பயில்கிறாள். சிலம்போசை கேட்குந்தோறும் ஐயரை வாழ்த்துவோம்.

இப்போது ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்றான, மதுரைச் சீத்தலைச்சாத்தனார் யாத்த மணிமேகலை வெளி வருகிறது. பெருந்தகைப் புலவர் சாமிநாத ஐயருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்ச் சங்கத்தை நல்லமுறையில் நடத்தியும் 'செந்தமிழ்' நடத்தியும் மாணவரைப் பயிற்றியும்வரும் புலவர் திருநாராயணஐயங்கார், இரா.இராகவஐயங்கார் முதலியோர் செய்யும் தமிழ்ப்பணி போற்றற்குரியது. நச்சினார்க்கினியர் சங்கம் நாட்டி மாணவரை ஊக்கித் தமிழுக்கு ஆக்கமளிக்கும பண்டித கோபால கிருட்டிணரின் அயராத தொண்டை எல்லாரும் அறிவர்.

இவ்வாறு தமிழ் முன்னேறி வருகிறது. தமிழ்த்தாய் செங்கோல் பிடித்து நிற்கிறாள். மக்கள் எழுந்து நின்று அன்னைக்கு அன்புத் தொண்டு செய்க. இந்தக் காலத்தில் ஆளும் ஆங்கிலத்தில் மோகங்கொண்டு தமிழைப் பலர் மதிப்பதில்லை. கற்றவர் என்போர் ஆங்கிலமே பேசுகின்றனர். அல்லது ஆங்கிலம் பெரிதும் கலந்து சில தமிழ்ச் சொற்களை உதிர்க்கின்றனர். தமிழன் தமிழனுடன் தூயதமிழிற் பேசவேண்டும். ஆங்கிலேயர் ஆங்கிலேயருடன் ஆங்கிலத்திலேதான் பேசுகின்றனர். ஆங்கிலமும் கற்போம்; ஆனால் தமிழைப்பறி கொடுக்கக்கூடாது. தமிழைத் தமிழர் போற்றாவிட்டால் வேறு யார் போற்றுவார்? தமிழின் அருமை பெருமை போப்பு, கால்டுவெல், வீரமாமுனிவர் போன்றஆங்கிலப் புலவரையும் கவர்ந்தன. திருக் குறளும், திருவாசகமும் ஆங்கிலவுலகில் தமிழார் வத்தைத் தூண்டியுள்ளன. ஜி.யூ.போப் தம்மைத் தமிழ் மாணவன் என்றே கருதுகிறார். வீரமாமுனிவர் தமிழ் பயின்று தேம்பாவணி என்னும் மகாகாவியத்தை இயற்றினார். நமது இலக்கணத்தை ஆய்ந்து ஆங்கிலேயர் சிற்றிலக்கணங்களைத் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளில் எழுதி வெளியிட்டிருக் கிறார்கள். நாம் தமிழ் இலக்கியத்துடன் நமது திருநெறிச் சமயத்தையும் போற்றவேண்டும். ஐரோப்பியர் கிறித்துவ சமயத்தை உலகெங்கும் பரப்புகிறார்கள். நமது மதுரையில் கிறித்துவப் பாதிரிமார் செய்து வரும் கல்வித் தொண்டும் மருத்துவத் தொண்டும் பாராட்டத்தக்கவை. இந்த வழியில் நமது சிவசமயப் புலவர் ஆறுமுக நாவலர் செய்து வரும் தமிழ்ப் பணியையும் சைவ சமயத் தொண்டையும் நாம் போற்றுகிறோம். அவரது பாலபாடம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் எல்லாம் தமிழுக்குச் செய்த மாபெருந் தொண்டுகளாகும். திருக்குறள் பரிமேலழகர் உரை வெளியிட்ட பிறகு இன்று அவர் திருக்கோவையாரை ஆய்ந்து வெளியிடுகிறார். எம்மையாளுடைய இறைவன் அருளால் தமிழ் விழித்தெழுந்து வீரநடை போடுகிறது. ஆனால், எங்கெங்கே பார்த்தாலும் ஆங்கிலமே தலைதூக்கி நிற்கிறது. தமிழ் இங்குமங்கும் விழித்தெழுந்துள்ளது. ஐரோப்பிய மொழிகளைப் போலவே, நமது தமிழும் பலதுறைகளில் பல அறிவியல், கலையியல் துறைகளில் வளம் பெறவேண்டும். அதற்கு ஏராளமான எளிய இனிய உரைநடை நூல்கள் புதுப்புது பொருட் செறிவுடன் வெளிவரவேண்டும். மேனாட்டார் பெருமை கொள்ளும் விஞ்ஞானம், கணிதம், வரலாறு, பொருளாதாரம், அரசியல் நூல்களெல்லாம் உலகமேதாவிகள், சரித்திரங் களெல்லாம் தமிழில் வெளி வந்து பரவவேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி மொழிகளில் அரிய இலக்கியங்களும், நவீனங்களும், கலைச் செல்வங்களும் குவிந்துள்ளன. அவையெல்லாம் சுவைபடத் தமிழில் வந்து நம்மை ஊக்கவேண்டும். நாம் செய்தது துளியளவு; செய்ய வேண்டியது கடலளவு. தமிழன்பர்களே, அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும் பயக்கும் தமிழை சிவபெருமான் அருள் பெற்ற தமிழைப் போற்றி உய்வோமாக.

பாண்டித்துரைத் தேவர்

இராமாநுஜஅய்யங்கார்

இவர், கல்வி, அறிவு, ஆண்மை, வண்மை முதலிய பலசிறந்த குணங்களால் பிரசித்தி பெற்ற இராமநாதபுரம் சப்டிவிஷன் ஜமீந்தார் பொன்னுசாமித் தேவருடைய மூன்றாவது புத்திரரான புண்ணிய புருஷன்.

இவர் சிறுபிராயந்தொடங்கி ஆஸ்திகபுத்தியும் அறநெறி யொழுக்கமும் வாய்மையும் தூய்மையும் மனநல முடைமையும் தயையும் கொடையும் தாளாண்மையும் முதலான பல குணநலன்களுமுடையராய்த் தமிழிலக்கிய இலக்கண நூல்களையும், சைவ புராண சமயசாத் திரங்களையும், நல்லாசிரியர் பல்லோரிடத்துப் பயின்று தாமின்புறுவதுலகின்புறக்கண்டு பிறர்க்கும் அவற்றைப் பயிற்றிவந்தவர். செய்யுளியற்றும் ஆற்றலும், செவ்விய சிறந்த தமிழ்நடையிற் பொருளுரைவரையும் தேர்ச்சியும், விரிவுரை நவிலும் வன்மையும் உடையவர்.

தமிழபிமானமுடையராய் அச்சில் வெளிவராத பழந்தமிழ் நூல்களுள் மணிமேகலையும் புறப்பொருள் வெண்பா மாலையும் அச்சிட்டு வெளியிடுமாறு மஹாமஹோபாத்தி யாயஐயரவர்களுக்குப் பொருளுதவிபுரிந்தார். இவரி யற்றிய பாடல்கள் சிவஞானமுனிவர் இரட்டை மணிமாலையும் முருகவேள் காவடிச்சிந்தும் சிற்சில முத்தகச்செய்யுள்களுமாம்.

பன்னூற்றிரட்டும் தோத்திரத்திரட்டும் சைவமஞ்சரியும் தொகுத்துதவியவர். வைத்தியசார சங்கிரகம், அபிதானசிந்தாமணி, தமிழ்ச்சொல்லகராதி, வில்லிபாரதம், ஞானாமிர்தம் முதலிய சிறந்த தமிழ்நூல்கள் பலவற்றைத் தக்க பண்டிதர்களால் வெளியிடவித்தவர். பன்னூற்றிரட்டிற் கல்வியதி காரத்துக்கு உரைவரைந்தார். அகப்பொருள் விளக்கம் என்னும் இலக்கணநூலைப் பரிசோதித்து அச்சிட்டு தவினார்.

சங்கீதசாகித்தியசாஸ்திரங்களிலும் தமிழிலும் வல்லவர் களான பண்டிதர்களில் ஒருவரேனும் இவரிடம் தகுதிக் கேற்றபரிசு பெறத் தவறவில்லை.

இவர் மஹாமஹோபாத்தியாய உ.வே.சாமிநாதை யரவர்கள் முதலான பற்பல பண்டித சிரேஷ்டர்களாற் பாடப்பெற்றவர்.

வடமொழியிலும் தமிழிலும் வல்லுநரான பல பண்டிதர் களை மாதநிவேதனங்கொடுத்தும் அவரவர் தகுதிக் கேற்ற பரிசளித்தும் உபசரித்தும் அவர்களை ஈடுபடச் செய்தவர். இவர் கற்றோரை உபசரிக்கும் உபசரணைக்கு ஈடுபட்ட கல்வியிற்பெரிய பெருந்தகை யாளரொருவர், இவரை "உன்னும்போ தெனக்கென்னி னுமினியன்" என்றார்.

தமிழபிவிருத்தியில் கருத்துடையராய் சேதுசமஸ் தானத்தின் ஆதரவைக் கொண்டும், நாட்டுக்கோட்டை நகரத்தார் பொருளுதவி கொண்டும் தாமும் வேண்டும் பொருளுதவி புரிந்தும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தார். அதில் வடமொழி தென்மொழி ஆங்கிலமொழி நூல்கள் அடங்கிய "பாண்டியன் புத்தகசாலையும்" "செந்தமிழ்க்கலாசாலையும்" "செந் தமிழ்" என்னும் மாதாந்திரப் பத்திரிகையும் இனிது நடைபெறநிறுவியதன்மேலும் தனித்தமிழ்ப்பரீக்ஷை ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைகளை வகுத்து அவற்றில் தேர்ச்சி பெறுபவர்க்குப் பட்டமும் பரிசும் வழங்கிவரச் செய்தார். இதுகொண்டே தமிழ்வளர்ச்சி தலையெடுக்கத் தொடங்கிற்று.

இச்சங்க ஸ்தாபனத்தைப் பற்றித் தமிழ்ப்புலமையிற் சிறந்த பெருந்தகையாளர் ஒருவர்,

"பிறந்தசங் கத்தை யெடுத்துயிர் கெடுத்துப்
பின்னரோர் சிறுதொனி கேட்பார்
இறந்தசங் கத்தை யெடுத்துயிர் கொடுத்தஃ
தெங்கணு முழங்கிடக் குறித்தான்
சிறந்தசங் கத்தை மேற்படுந் தொகையிற்
சிறந்தசெந் நாப்புல வீர்காள்
நிறந்தசங் கத்தை யேந்திடு னனைய
நெடுந்தமிழ்ப் பாண்டிமன் மன்னோ"

என்று அருமைபாராட்டினர்.

இன்னும் இவர் உயர்தரக்கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கற்கும் மாணவர் பலர்க்கு உபகாரச்சம்பள முதவியும் உத்தியோகங்களளித்தும் அவரது வறுமை தீர்த்து வாழ்வித்து வந்தார். கற்றோரும் உற்றோருமாகிய பலர்க்கு இவர் செய்துவைத்த கன்னிகா தானங்களும் கிருஹதானங்களும் பூதானங்களும் பல உள.

இவர் வேடிக்கையாகப் பொழுதுபோக்கும் வேளைகளிலுங்கூட வித்துவான்களுடனிருந்தே விநோதங்களுள்ள சாதுரியகவிகளைச் சொல்லிவருவர்.

இன்னும் அவர் பண்டிதர்களுடன் பொழுதுபோக்குங்கால் அவரவர்க்குத் தெரிந்த பழம்பாடலாவது புதியபாடலாவது அந்தாதியாக முறையே சொல்லிவரச்செய்து தவறாது சொல்லிவருபவர்க்கெல்லாம் பரிசளிப்பர். இது பண்டிதர்களது தமிழ்ப்பயிற்சியை வளம்பெறச் செய்வதாகும்.

இவர் தொகுத்த பன்னூற்றிரட்டுக்கு மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் அளித்த சிறப்புப்பாயிரத்தில்,

'அருமறை நாவின் அந்தணர் தனக்கும்
ஆறறி காட்சிப் பேறுடை யார்க்கும்
திசைபோம் பெரும்புக ழிசைவல் லார்க்கும்
செயிரிலாத் தேர்ச்சி வயிரியர் தனக்கும்
மற்றவை மரபிற் கற்றவர் திரட்கும்
மாதுய ரொடுவரும் ஆதுலர் தனக்கு
அடையா வாயி லகன்கடை யுடையான்,
வாய்ந்தநுண் ணூல்பல வாய்ந்து மகிழ்ந்தே
நாவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
சூழும்படி தழீஇ வாழும் பெருமையன்;
அன்னமும் ஆவும் அன்னமா ணவர்பலர்க்
கனமும் தனமும் ஆடையும் மேடையும்
கொடுத்தே மிடியைக் கெடுத்தே மகிழ்வித்
தருந்தமிழ் பயிற்றிப் புரந்திடு மேன்மையன்;
தீயவெம் பிணியா லாயபஃ றுன்பிற்
காற்றா மாந்தர்க் கருந்துணை யானோன்;
இருவே றுலகத் தெனுங்குறட் கெதிரா
வருவேள்; ஒழுக்க மாண்பினில் அதிகன்;
குளிர்இன் சொல்லொடு மிளிர்குலோத் துங்கன்;
அகத்தூக் கேமனம் தொகுத்தே மென்னும்
அக்குறை யறவரும் உக்கிர பாண்டியன்;
வருத்த மகற்றும் திருத்தகு தேவன்;
களங்க மில்லாது விளங்கு பொய்யாமொழி
மெச்சி யடைந்து நச்சினார்க் கினியன்;
தீதிய லாதுசெய் நீதிநூல் பலவும்
தெரிமே லவர் சொல் பரிமே லழகன்;
பொடியார்க்கு மேனி அடியார்க்கு நல்லான்;
புலவர்கள் துயர்களைந் திலகு கற்பகம்;
வந்தடை வோர்துயர் சிந்து சிந்தாமணி
மண்ணிலும் மீக்கிளர் விண்ணிலும் அமைந்த
வண்மையன் எனவே ஒண்மையி னாலுயர்
சீரியர் சொல மிளிர் பாரிசாதம்;
தால மாந்தரின் தாலந் துறந்தெனத்
தாலம் துறக்கும் தமிழ்த்தொன் னூல்கள்
பழுதா காவணம் பரிசோ திப்பித்
தெழுதா வெழுத்தில் இயைவித் திடுவோன்;
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாக நினைப்போர் சோகம் அகற்ற
வானினும் ஆனினும் வழுங்குசெங் கரத்தான்

தேனும் பாலும் தித்தித் தோங்கும்
தண்பா மாலை சாற்றுவோன்; புறப்பொருள்
வெண்பாமாலை வெளிவரச் செய்தோன்;
திருந்து கவின்சேர் அருந்தமிழ் மடந்தை
அணிமேகலையாம் மணிமேகலையை
யாவரும் பெறச்செய் மாவு பகாரி;
பண்ணமை விழுச்சீர்த் தண்ணுமை யொடுங்களத்து
ஏழிசை யோடும் யாழிசை யோடும்
எழுது மறைகள் இசைத்தே அன்பில்
தொழுது பல்லோர் சூழ்ந்திருந் தேத்த
உருத்திர சின்னம் அருத்தியிற் றாங்கி
மனமொழி மெய்யினிற் றினமொழி வின்றி
யீசனை அன்பிற் பூசனை புரிவோன்;
சிவனடி யவரைச் சிவனென மதித்து
வேண்டிற் றுதவும் விழுச்சீர்ப்
பாண்டித் துரைப்பெயர் படைத்த கோமானே'

என்று இவர் குணவிசேஷங்கள் பலவும் விளங்க, இவரது சரித்திரச் சுருக்கம்போல உள்ளதை உள்ளபடியே பாராட்டிப் பாடியுள்ளார்.

இவ்வாறே இவரைப் பல புலவரும் பாராட்டிப் பாடிய பாடல்கள் பலவுள. அவை இவருள்ள காலத்திற் பாடியனவாதலால் இவரை அறியாதாரால் முகமனென்று கொள்ளுதற்கு இடமுண்டாயினும், இவர் காலஞ் சென்றபின் இவரைப் பற்றிப் புலவர் பலரும் பாடிய இரங்கற்பாக்கள் ஆயிரக்கணக்கானவை. அவற்றுள் நூற்றுக்கணக்கான பாடல்கள் செந்தமிழில் வெளி வந்துள்ளன. அவை ஒன்றும் முகமனல்லாமையால் அவற்றால் இவர் குணாதிசயங்கள் உள்ளபடி அறியத்தகும். அவற்றுள் ஒருசில வருமாறு :–

இவர் நிரியாணமானகாலத்தைக் குறித்து, ஒருபுலவர்,

விரோதி கிருதே விருச்சிகமே உங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா-குரோதத்தால்
தம்மிற் கடையாம் சனியும் இரேவதியும்
உம்மிற் கலந்துற் றவோ?

என்று பழித்துப் பாடியுள்ளார். இச்செய்யுளால் அப் புலவர்மனம் இவரிடத்து எவ்வளவு ஈடுபட்டிருந்ததென அறியலாம்.

இவர், தமிழ்ச்சங்கத்துக்குப் பொருள் தேடுதலையும், ஏடுகள் தேடுதலையும் மேற்கொண்டு செல்பவர் என்பது குறித்து, ஒரு புலவர்,

சங்க நிதிவளர்க்குந் தாளாளன் வானில் உள்ள
சங்க நிதிகொணர்வான் சார்ந்தனனோ-அங்கிருக்கும்
சிந்தாமணி கொணர்வான் சென்றனனோ
என்றுணரேன்
வந்தார் புகழ்ப்பாண்டி மன்

என்று பாடியுள்ளார்.

இந்நாட்டுப் புலவரேயன்றிப் பிறநாட்டுப் புலவரும் இவரைப் பாராட்டிப் பாடியுள்ளார்கள். அவருள் பிரான்ஸ்தேசத்துத் தலைநகரான பாரிஸ் நகரத்தில் தமிழ்ப்புலமை பெற்றிருந்த புரொபஸர் ஜூலியன் வின்ஸன் என்பவரும் ஒருவர். அவர் பாடல் வருமாறு:–

செந்தமிழ்நாட் டெல்லாருஞ் சேர்ந்தேத்து மாமகனே
தந்தபுகழ் விட்டுத் தவறினையோ-அந்த
இருவினையும் வென்று கடந்திலையேல் இன்னும்
பெருநலஞ் செய்வாய் பிறந்து.

புலவரும் புரவலரும்

(உ.வே.சாமிநாதய்யர் பரம்பரை)

மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றைப் பதிப்பிக்கப் பெரிதும் உதவியவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவர். அவருடைய தாயார் திடீரென மரணமடைய பாண்டித்துரைத் தேவருக்கு ஆறுதல் கூற ராமநாதபுரம் சென்றார் தமிழ்த் தாத்தா உவே.சாமிநாதய்யர். அங்கு அவர் பல நாள்கள் தங்கியிருந்தார்.

ஒருநாள் வெளியே சென்றுவிட்டுத் திரும்பிய பாண்டித்துரைத் தேவர், "உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லப்போகிறேன்" என்றார். "ஏதாவது நூல் பதிப்பிக்க வேண்டும் என்று சொல்லப் போகிறீர்களா ?" என்றார் உ.வே.சா.

"ஒரு நூல் அல்ல . . . பல நூல்களைப் பதிப்பிக்கலாம். அந்த அளவுக்குச் செல்வம் அளிக்குமாறு ஒரு கிராமத்தையே உங்கள் பெயரில் எழுதிவைக்க மகாராஜா (பாசுகர சேதுபதி) நினைக்கிறார்" என்றார் பாண்டித்துரைத் தேவர். மேலும், "இதுவரை உங்களுக்கு ஏதும் செய்யாமல் இருந்ததையே பெரிய தவறாக மகாராஜா கருதுகிறார்" என்றார்.

உடனே அந்தப் பரிசை ஏற்றுக் கொண்டாரா உ.வே.சா.? இல்லை. அரண்மனைக்குத் தாமே சென்று அரசரைச் சந்தித்தார். அவர் மனமுவந்து கிராமத்தை அளிக்க முன் வந்ததற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், "எனக்கு இப்போது ஒன்றும் குறை இல்லை. ஆண்டவன் திருவருளால் கல்லூரியில் சம்பளம் வருகிறது. நான் செட்டாக வாழத் தெரிந்தவன்" என்று கூறி நன்கொடையை மறுத்தார்.

இது மட்டுமல்ல. இது போன்ற எண்ணற்ற நன்கொடைகளையும் பதவிகளையும் பல வாய்ப்புகளையும் நிராகரித்துள்ளார் தமிழ்த்தாத்தா. ஏன் ? "எனக்குப் பணம் முக்கியமல்ல. என்னுடைய நேரம் கல்லூரியில் பாடம் சொல்வதிலும் மற்ற சமயங்களில் தமிழ் நூல்களை ஆராய்வதிலுமே கழிந்து கொண்டிருக்கிறது. பணம் வரத் தொடங்கினால் கவலை வேறு வழிகளில் ஏற்பட்டுவிடும். பிறகு எனக்கு ஆராய்ச்சி செய்வதற்கு நேரம் இருக்காது. பழைய நூல்களைப் பதிப்பிக்கவும் தோன்றாது" என்று கூறித்தான் நிராகரித்தார்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் இலக்கியம் என்றால் கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற சில நூல்கள்தான் என்று நினைத்திருந்தார்கள். ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட தமிழ் இலக்கியங்கள் காணாமல் போயிருந்தன. ஏராளமானவை வெள்ளத்தால் சுமந்து செல்லப்பட்டன. தீயில் கருகின. மிஞ்சியிருந்தவை கூட ஓலைச் சுவடிகளில் செல்லரித்துப் போயின. இவற்றையும் மீறித் தப்பியுள்ள இலக்கியங்களே ஏராளம். அவற்றைத் தேடி ஊர் ஊராகச் சென்று கண்டுபிடித்து யாவருக்கும் புரியும் வகையில் பதிப்பித்தார் உ.வே.சா.

அப்படி அவர் பதிப்பித்த நூல்கள்தான் சீவகசிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், எட்டுத்தொகை நூல்களான ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் உள்ளிட்ட எண்ணற்றவை.

அன்றைய தஞ்சை மாவட்டம் உத்தமதானபுரம் வேங்கடசுப்பையனின் குமாரர்தான் சாமிநாதய்யர். 19.2.1855ல் பிறந்தார். அவரது தாய்மாமன் கனம் கிருஷ்ணய்யர் மிகப்பெரும் சங்கீத வித்வான். அந்த நாளில் இசையுலகில் கடினமாகக் கருதப்பட்ட 'கன' மார்க்க இசை வடிவத்தில் விற்பன்னர். தனது குமாரரும் இசையில் விற்பன்னராக வேண்டுமென்று வேங்கடசுப்பையர் விரும்பினார். உவே.சா. தமிழ் மீது

கொண்ட ஆர்வத்தால் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்றார். அதே சமயம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனங்கள் செய்த கோபால கிருஷ்ண பாரதியாரிடம் இசையும் பயின்று வந்தார். தமிழ்ப் படிப்பிற்கு இசைப்பயிற்சி இடையூறாகும் என்றும், அதை நிறுத்திவிடும்படியும் மீனாட்சி சுந்தரம்பிள்ளை கூறினார். அந்த உத்தரவை ஏற்றுத் தமிழ்ப் படிப்பிலேயே கவனம் செலுத்தினார் உ.வே.சா.

16–6–1868 அன்று உ.வே.சாமிநாதய்யருக்கும் மதுராம்பாளுக்கும் திருமணம் நடந்தது. ஒரே மகன் கல்யாணசுந்தரம். ஐயர் சுமார் 87 ஆண்டுகள் வாழ்ந்தார். திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பணி, கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியப் பணி, சிதம்பரம் தமிழ்க் கல்லூரி முதல்வர் என்று பல்வேறு பணிகள் இடையேயும், அடிக்கடி நோய்வாய்ப்படுதல் ஆகிய இவற்றைச் சமாளித்தும் நூல்களைப் பதிப்பித்தார் உ.வே.சா. அவரது பணியை ஆதீனங்கள், அரசர்கள், வெள்ளைத் துரைகள் முதல் வ.உ.சி., பாரதி போன்றதேசிய வீரர்கள் வரை பாராட்டினர்.

உ.வே.சாமிநாதய்யரின் ஒரே மகன் கல்யாணசுந்தரம் ரயில்வே துறையில் பணியாற்றினார். இவரது மனைவி, கமலம்மாள். கல்யாணசுந்தரம்–கமலம்மாள் தம்பதிக்கு 5 மகள்கள், ஒரு மகன். கல்யாணசுந்தரம் ஐயரின் ஒரே மகன் சுப்பிரமணியனின் மூத்தமகன் வெங்கட கிருஷ்ணன், உ.வே.சா. சென்னையில் வாழ்ந்த வீட்டிலேயே வசிக்கிறார். இனி அவர் :

"எனது கொள்ளுத்தாத்தா இறந்தபோது ஏராளமான ஓலைச்சுவடிகளும், காகிதப் பிரதிகளும், பழைய நூல்களும் இருந்தன. தமிழ்ச் சமூகத்தின் சொத்தான இவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று என் தாத்தா கல்யாணசுந்தரம் ஐயர் விரும்பினார். 1943ம் ஆண்டில் கலாக்ஷேத்ரா நிறுவனர் ருக்மணி அருண்டேலைச் சந்தித்து உ.வே.சா. சேகரித்த நூல்கள், ஓலைச்சுவடிகளைத் தாம் இலவசமாகத் தருவதாகவும், அவற்றைக் கொண்டு ஒரு நூலகம் உருவாக்கி அவற்றைப் பாதுகாக்கும்படியும் வேண்டினார். அப்படி உருவாக்கப்பட்ட நூலகம்தான் இன்று வளர்ந்து சென்னை கலாக்ஷேத்திரத்தில் உள்ள உ.வே.சா நூலகமாகப் பிரபலமடைந்துள்ளது. மேலும் எனது தந்தை சுப்பிரமணியம், உ.வே.சா நூல்கள் மீதுள்ள உரிமைகள் அனைத்தையும் நூலகத்திற்கே வழங்கியுள்ளார். இதனால் அந்த வருமானத்தின் மூலம் நூலகம் தொடர்ந்து இயங்கவழி ஏற்பட்டது. இன்று நூலகக்குழுவின் தலைவராக வா.செ.குழந்தைசாமி உள்ளார். இந்த நூலகத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

என் தாத்தா கல்யாணசுந்தரம் ஐயரின் மூத்தமகள் (எனது மூத்த அத்தை) சரஸ்வதி அம்மாள். இவர் கணவர் வெங்கட்ராமன் மிராசுதார். இவர்களுக்கு மூன்று மகள்கள், ஒரு மகன். அடுத்த அத்தை சாவித்ரி அம்மாள். அவர் கணவர் கணபதி ஐயர் வர்த்தகர். இவர்களுக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். மூன்றாவது அத்தை அலமேலு அம்மாள். இவரது கணவர் ராஜகோபாலன் வழக்கறிஞர். இவர்களுக்கு ஒரு மகள், மூன்று மகன்கள். நான்காவது அத்தை நீலாயதாக்ஷி, கணவர் சுந்தரம். இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன். அடுத்து எனது தாத்தாவின் ஒரே மகனான என் அப்பா சுப்பிரமணியம். இவர் தபால் தந்தித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டவர். என் தாயார் ரங்கநாயகி. இவர்களுக்கு நாங்கள் இரண்டு மகன்கள், மூன்று மகள்கள். அடுத்துக் கடைசி அத்தை மீனாட்சியின் கணவர் வெங்கடசுப்பிரமணியம். ரயில்வே துறைஅதிகாரி. இவர்களுக்கு மூன்று மகன்கள், மூன்று மகள்கள்.

எனது முந்தைய தலைமுறையில் என் தாயார் ரங்கநாயகி அம்மாள் மட்டுமே தற்போது உயிருடன் உள்ளார். அடுத்த தலைமுறை. அதற்கு அடுத்த தலைமுறை என்று பார்த்தால் இன்று தமிழ்த்தாத்தாவின் பரம்பரையில் 300 குடும்பங்கள் உள்ளோம்.

"நான் பொறியியல் படிப்புப் பயின்று தனியார் நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனது மனைவி விஜயா. என் தம்பி சுவாமிநாதன் தனியார் நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அவரது மனைவி, வசந்தா. அடுத்த தங்கை மதுரம். இவர் கணவர் பஞ்சாபகேசன் துபாயில் பணிபுரிகிறார். அடுத்த தங்கை பானுமதி. இவர் சென்னையில் உள்ள உ.வே.சா நூலகத்தின் ஆயுள் கால உறுப்பினராக உள்ளார். பானுமதியின் கணவர் சேதுராமன் பாரத ஸ்டேட் பாங்க் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். கடைசித் தங்கை சுகன்யா கட வாத்தியக் கலைஞர். விநாயக்ராமிடம் இசை பயின்ற இவர் தனியாகக்

கச்சேரிகள் செய்கிறார். இவர் கணவர் ராம்கோபால், பெல் நிறுவன அதிகாரி.

எனக்குக் கமலா, வரலட்சுமி என இரு மகள்களும் வெங்கடேஷ் என்ற மகனும் உள்ளனர். இந்தியன் வங்கியில் கமலா பணிபுரிகிறார். இவர் கணவர் ரகுநாதன் டிசிஎம் நிறுவனத்தில் மேலதிகாரியாக உள்ளார். இவர்கள் மூலம் எனக்கு நிவேதிதா என்றபேத்தி உள்ளாள்.

இரண்டாவது மகள் வரலட்சுமி பொருளாதாரத்தில் ஆய்வுப் பட்டம் பெற்றவர். இவர் கணவர் சுந்தர், குஜராத் கெமிகல்ஸ் நிறுவனத்தில் மேலாளராக உள்ளார். எனது ஒரே மகன் வெங்கடேஷ், ஆரக்கிள் நிறுவனத்தில் பணிபுரிகிறார். மருமகள் நாராயணி. எனது சகோதரன் சுவாமிநாதனுக்கு ஒரே மகன் தீபக். தனியார் நிறுவனத்தில் அதிகாரியாக இருக்கிறார்."

உ.வே.சாமிநாதையர் தம்முடைய மணிமேகலைப் பதிப்பிற்குப் பொருளுதவியமைக்காக 1.12.1894-இல் பாடியது.

"அனாதரவென் னும்பிரம அத்திரத்தால் மாய்ந்து
தனாதுருவம் தேய்ந்து தனித்தே-வினாவற்ற
வாய்ந்த சுவையார் மணிமே கலைக்குமருந்
தீந்தியலச் செய்தாய் இனிது"

பூவேவு செந்தமிழைப் புரத்தனாற் சிவபத்திப் பொவால் என்றும்
தமேவு பரிசிலர்கள் கழறியதை அறிதனால் தமிழ்வல் லோர்கள்
தேமேவும் உக்கிரபாண் டியனென்னச் சிவபாத சேகரப்பேர்த்
தூமேவு வளவனென சேரனென மிளிர்பாண்டித் துரைசீர் வாழ்க



புறநானூறு காட்டும் வாழ்வியல் அற விழுமியங்கள்

முனைவர்.தி. முருகரத்தனம்,
மதுரை.

விழுமியம்: விளக்கம்:

ஒரு பண்பாட்டினர், தனி மாந்தனும், குடும்பமும், சமூகமும் மேற்கொள்ள வேண்டிய ஒழுகலாறுகளை அறம் அல்லது அற ஒழுக்கம் அல்லது நீதிநெறிகள் என வகுத்துக் கொள்வர். இவை சமூகத்தில் அமைதி, நிறைவு, இன்பம் ஆகியவை நிலைபெறத் துணையாகின்றன. (இவ் அற ஒழுக்- -கத்தை ஆங்கிலத்தில் Ethics எனக் குறிப்பிடுவர்.) இவ் ஒழுகலாறுகளுள் நாள்தோறும், காலந்தோறும், காலங்கடந்தும் மேற்கொள்ளும் ஒழுக்கங்களும் சில, பல உண்டு. இவற்றின் தகுதிக்கும், பயனுக்கும் ஏற்ப இவை சமூகத்தில் போற்றப்படுன்றன. இவ்வாறு போற்றப்படுபவை விழுமியம் என வழங்கப்படும். ஆங்கிலத்தில் value எனப்படும். ஒரு சில ஒழுக்கங்கள் முடிவான இறுதி எனக் கருதத்தக்க வாழ்வின் குறிக்கோள் எனப் போற்றத்தக்கவையாகவும் உள்ளன. இவை "குறிக்கோள் இறுதி விழுமியங்கள்" (Ultimate values) எனப்படும். பண்டுதொட்டு விளங்கிவரும் பல பண்பாடுகளில் இத்தகைய இறுதி விழுமியங்களைக் காணலாம். தமிழ்ப்பண்பாட்டிலும் இவை பல உண்டு.

('விழுமியம்' விழுப்பம் என்னும் சொல்லின் வேறு வடிவம். 'விழுமியம்' (புறம் 78.5) தன்மைப் பன்மையாக வழங்கப் பட்டுள்ளது. இங்கு 'விழுமியம்' அஃறிணைப் படர்க்கைப் பெயராக வழங்கப்படுகிறது.)

1.ஈகை

புறநானூற்றின்வழிப் பரவலாகப் பேசப்பட்டு அறியலாகும் ஓர் அறம் "ஈகை" யாகும். இவ்ஈகை, 'ஈதல்' எனவும், 'கொடை' எனவும், 'விருந்து புரந்தருதல்' எனவும், ,வள்ளன்மை, எனவும், 'வண்மை' எனவும், 'பரிசு', 'பரிசில்' எனவும் பல பொருட்கோளால் வழங்கப்படுகிறது.

'செல்வத்துப்பயனே ஈதல்' (பு: 189:7) என்னும் தொடர் ஈகையின் முடிந்த முடிவான தேவையை எடுத்து முழங்குகிறது. இந்தக் கருத்தியலின் தோற்றம் ஓர் அரிய அடிப்படை உண்மைக் கோளைக் கொண்டுள்ளதை இந் நக்கீரர் பாடல் விளக்குகிறது. வேந்தர்க்கும் வேடர்க்கும் உண்பதும் உடுப்பதும் ஒரு தன்மையவாம். ஆகவே செல்வத்துப் பயனே ஈதலாம்! செல்வத்திற்கு வேறொரு பயனும் இல்லை என்பதை ஏகாரம் விளக்குகிறது.

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பன இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

இக்கருத்தினை வேறொரு புறப்பாடலும் (134) வற்புறுத்துகிறது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறிஎன
ஆண்டுப் பட்டன்று அவன்கை வண்மையே"

ஈகை, சான்றோர் நெறி; தமிழர் நெறி.

'எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று' (பு.141:13) எனப் பரணர் அறைகின்றார். ஈத்தல் இறுதி விழுமியம் போன்று இங்குப் பேசப்படுகிறது. இதற்கான பின்னணி வைப்பு இதனைத் தெளிவுபடுத்துகிறது.

'மறுமை நோக்கின்றே அன்றே;
பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே'
(பு 141: 14,15)

'மறுமை இன்பம்' என்னும் குறிக்கோளையும் கடந்து வையகத்து வறுமையைப் போக்கும் தேவையைச் சுட்டி 'வண்மை' என்னும் விழுமியத்தைப் பரணர் உயர்த்திப் பிடிக்கிறார். மறுமை இன்பம் நோக்கித் 'தான தருமங்கள்' செய்வதுண்டு. ஆனால் வறுமை நோக்கி ஈதல் என்பது மேல்மேல் உயர்ந்தது.

புறப்பாடல் (141) பேகனைப் பற்றிப் பரணர் பாடியது. ஈகைக்குப் பேர் (=புகழ்) போனவன் பேகன் அல்லவா! அவனது ஈகை, ஈத்தலில் உச்சம் கண்டது.

'படாஅம் மஞ்ஞைக்கீத்த எம்கோ' (பு.141.11) முகிலைக் கண்டு மயில் ஆடுகிறது. அது நடுங்குகிறது என இரக்கங் கொண்டு அதற்குப் போர்வை கொடுக்கின்றான் பேகன். ஈகையின் உச்சம் இது. ஆனாலும் அறியாமை-மடமை-தானே இச்செயல்! இதனைக் 'கொடைமடம்' என வையகம் வாழ்த்துகிறது.

முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் செயல் மேலும் ஒருகொடைமடம் அல்லவா! உண்மையோ பொய்யோ! அறிவோ மடமையோ! ஈகை என்னும் விழுமியத்தை விளக்கும் கற்பனைகள் இவை என்றும் கொள்ளலாமே!

'தள்ளாது ஈயும் தகைசால் வண்மை' (பு.158.15) யுடைய வள்ளல்கள் எழுவரைப் பற்றிப் புறம் பன்னிப் பன்னிப் பேசுகிறது (பு.158). இவ்வெழுவரைப் போன்ற மேலும் பலர்; அவர்களுள் ஒருவன் குமணன். பரிசில் வழங்க இயலா நிலையில் தன் தலையையே நல்க முன்வந்தவன் குமணன்!

இவ்வாலாறு 'ஈகை உயிரினும் உயர்ந்தது; ஓம்பத்தக்கது' என எடுத்துப் பேசுகிறது. இந்த வள்ளல்களின் அரண்மனை, வாயில்கள் 'பரிசிலர்க்கு அடையா வாயில்' (பு.206.5) களாகத் திறந்திருந்தனவாம்; இதில் வியப்பில்லை.

ஆதலால் பழந்தமிழ் வள்ளல்கள் 'பசிப்பிணி மருத்துவர்கள்' எனப் போற்றப்படுகின்றனர். (பு.173.11). பரிசிலர், இரவலரது பசிப்பிணி போக்கப் பாரி வள்ளல் தன் ஆட்சியில் இருந்த முந்நூறு ஊரும் பரிசிலர் பெறத் தந்தான். (பு.110.4) சோழன் நலங்கிள்ளி 'ஈ' என இரக்குவராயின். முரசு கெழுதாயத்து அரசினையும் தருவானாம். (பு.73.2,3) சாகா நெல்லிக்கனியை அதியமான் அவ்வைக்கு ஈகை செய்யவில்லையா! (பு.91) கொழுத்தும் வெயில் உடைய கோடையில் மழை பொழிந்தது போன்று 'கவலை நெஞ்சத்து அவலம் தீர' (பு.174.22) ஈகை செய்யும் வள்ளற் பெருமக்கள் தோன்றுவராம்.

கவலை நெஞ்சத்து அவலம் தீர
நீ தோன்றினையே - நிரைத்தார் அண்ணல்!
கல்கண் பொடிய, கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பின் கயம்பல உணங்க,
கோடை நீடிய பைதுஅறு காலை,
இருநிலம் நெளிய ஈண்டி
உரும் உரறு கருவிய மழை பொழிந்தாங்கே
- (புறம் 174. 22-28)

இவ்வாறு அரிய உவமையால் ஈகையின் பயனும் தேவையும் விளக்கப்படுகின்றன. 'மாரி ஈகை' (மழை போன்ற ஈகை) எனப் பிறிது ஒரு புறப்பாடலும் இக்கருத்தைக் குறிப்பிடுகிறது. (பு.158.7)

ஈகையின் விரிவு

ஈகை என்பது இரப்போர்க்கு - பரிசில் வேண்டுவோர்க்கு - வழங்கி விடுவது என்பது மட்டும் அல்ல. அது 'விருந்து புரந்தருதல்', 'விருந்தோம்பல்', 'உடன் உண்ணல்'; 'பகுத்துண்டு பல்லுயிர் பாதுகாத்தல்' ஆகும். இக்கருத்தியலை அழகுற விளக்குகிறது இளம்பெருவழுதியின் புறப்பாட்டு (பு.182).

உண்டால் அம்ம, இவ்வுலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்வு இலர்,
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே
- பொருள்மொழிக் காஞ்சித்துறை

உடன் உண்ணலை இப்பாடல் விளக்குகிறது (பு.95.5-9)

- - - - - - - - என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்

இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம்கோமான் - அவ்வையார்

இப்பகுதியில் இதுவரை புறநானூற்றின் வழியாக எடுத்துக்காட்டப்பட்ட சான்றுகள் எல்லாம் 'ஈகை', 'வள்ளன்மை', 'கொடை' எனப்பட்ட கொள்கை தமிழர் வாழ்வியலில் ஓர் உயரிய விழுமியமாக மட்டும் அல்லாது இறுதி விழுமியமாகவும் (Ultimate value) போற்றப்பட்டுள்ளதை நன்கு அறிய முடிகிறது.

2. மறம்

2.1 மறவர் ஊழி

பழந்தமிழர் நூற்படைப்புக்கள் அகம், புறம் என இரு கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளன. புறப்பொருளைப் பாடுவதாகப் புறநானூறு அமைந்துள்ளது. இல்லறமும் காதல் வாழ்வும் போகப் பிற புற வாழ்க்கையாகும். ஆடவர் வேளாண்மை, வணிகவழிப் பொருளீட்டல், மன்னர்க்குத் துணையாக ஊர்காவல், நாடுகாவல் மேற்கொள்ளல், பகைவரைப் போரில் வெல்லல், அவர்களிடம் திறை கொள்ளல், மக்களது வறுமை போக்கிப் பசிப்பிணி களைந்து விருந்தோம்பி இரவலர்க்கு ஈகை செய்து, கலைஞரையும் புலவரையும் போற்றிப் புகழ் ஈட்டிப் பேர் நாட்டி மறுமை நோக்கி வாழ்ந்து முடிதல் ஆகிய ஒழுகலாறுகள் புறம் பேசும் பொருள்களாகும். ஆன்நிரை கவர்தலும் மீட்டலுமாகிய வெட்சியும் கரந்தையும், அரண் தாக்கலும் காத்தலும் ஆகிய உழிஞையும் நொச்சியும், போர் நிகழ்ச்சிகளில் வீழ்தலும் வெல்லுதலும் ஆகிய தும்பையும் வாகையும், புகழ் வாழ்க்கை பேசும் பாடாணும் எனப் புறப்பொருள் திணைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆதலால் புறப்பொருளில் பெரும்பகுதி பூசலும் போரும் பற்றியவை ஆகும். மன்னரும் மக்களும் வள்ளல்களும் வறியோரும் பாடல்களில் பங்கு பெறுவோர் ஆவர்.

இந்தப் பழந்தமிழ்ப் பண்பாட்டின் காலத்தை 'மறப்பண் பாட்டு ஊழி' (Heroic Age) என ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். (ஈழத்துத் தமிழாய்வறிஞர் க.கைலாசபதி The Heroic Age என நூல் வரைந்து இப்பண்பாட்டை விளக்குகிறார்.) இப்பண்பாட்டிற்கு என ஒழுகலாறுகளும் அறங்களும் அறவிழுமியங்களும் இருத்தல் வேண்டும் அல்லவா? இவை பற்றிப் புறநானூறு பேசுவதைக் காணலாம்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பெயரில் அமைந்த வஞ்சினக்காஞ்சித்துறைப் பாட்டு முதலில் கருத்தில் கொள்ள வேண்டியது. (பு.72).

நகுதக் கனரே, நாடு மீக்கூறுநர்;
'இளையன்' இவன்என உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாஅடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படைஅமை மறவரும் உடையம் யாம்' என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினம்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின்- பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
'கொடியன்எம் இறை'எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புண்கண் கூர
இரப்போர்க்கு ஈயாஇன்மை யான் உறவே.

ஒன்று : சிறுசொல் சொல்லிச் சினம் கொண்ட பகை வேந்தரைப் போரில் சிதையத் தாக்கி வெல்லுதல்.

இரண்டு : உலகில் நிலைபெறும் பலரும் புகழும் சிறப்பினை உடைய புலவர் பெருமக்களால் பாடப்படுதல்.

மூன்று : இரப்போர்க்கு ஈதல்

இவை மூன்றும் போற்றத்தக்க அறங்கள்; இவற்றுள் ஒன்றாவது இல்லையாயின் இரண்டாவதும் மூன்றாவதும் தேவை இல்லை. அதாவது போரில் வெல்லுதலே முதன்மையான அறம், விழுமியம் என நெடுஞ்செழியன் அறிவிக்கிறார்.

2.2 தாய்மையா? மறமா?

இந்தப் போர் மற அறம் மேலும் பல அறங்களைக் கடந்து உயர்கிறது.

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன்' என்று பலர் கூற
'மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்

முலைஅறுத் திடுவென் யான்'எனச் சினைஇ
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே.

- உவகைக்கலுழ்ச்சி, (பு.278)
- நச்செள்ளையார் பாடியது.

'ஈன்ற ஞான்றினும் பெரிது உவத்தல்' எங்ஙனம் நிகழ்கிறது? ஒருபுறப்பாட்டு, (295, உவகைக்கலுழ்ச்சி, அவ்வை) இந்த உவகையை ஒடாப்பூட்கைத் தாயின் மெய்ப்பாட்டுவழி விளக்குகிறது. "ஞாட்பின்... அழுவத்துச் சிதைந்து வேறாகிய சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி வாடுமுலை ஊறிச் சுரந்தன".

தாய்மை போற்றல் ஓர் உயர்ந்த அறம்தான். ஆனால் அதனினும் உயர்ந்தது போர்மறம் எனப்படுகிறது. தாய்மை, மறத்திற்குத் துணை (means/instrument) ஆகிவிடுகிறது.

மேலும் ஒருபுறப்பாட்டு (277) 'முதியோள் சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே' என இக்கருத்தியலை வற்புறுத்துகிறது. 'தாயின் ஈன்ற வயிறு புலிசேர்ந்து போகிய கல்அளை' யாம் (பு.86)

2.3. குடி காத்தலா? மறமா?

தாய்மை, அறத்தை மட்டும் அல்ல; 'குடிகாத்தல்' என்னும் அறத்தையும் போர்மறம் கடந்து உயர்கிறது:

கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதில் மகளிர் ஆதல் தகுமே:
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
'செருமுகம் நோக்கிச் செல்க' என விடுமே.

- மூதில் முல்லை (பு.279)
- மாசாத்தியார் பாடியது.

போரில் தந்தை மடிந்தான்; பின் கொழுநன் இறந்தான்; ஒரே மகனையும் செருமுகம் செல்க என்றாள் மூதில் மகள். 'ஆண் மக்கள், போர்க் களத்தில்தான் தோன்றுவராம்' (பு.86.6)

ஆண் குழந்தை, ஆடவன் ஆகாது இறந்தால் மறக்குடி என்ன ஆகும்? ஆடவன் நோய்வாய்ப்பட்டு இறந்தால் மறக்குடி என்ன கருதும்? இவை மறக்குடிக்கு இழுக்காம்! விழுப்புண் படாது ஆடவர் மடிந்தால் மறக்குடி பொறுக்காது; ஏற்காது.

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்"

- முதுமொழிக் காஞ்சி, (பு.74)
- சேரமான் கணைக்கால் இரும்பொறை

நால்மறை முதல்வர்- பார்ப்பார்- மன்னரது நோய்ப்பால் இறந்த யாக்கையைக் கிடப்பி 'மறம் துணையாக மறவர் செல்வுழிச் செல்க' என வாள் போழ்ந்து அடக்கல் உண்டு (பு.93)

2.4. கடமை மறம் நோக்கியே!

தமிழ்ச் சமூகத்தின் அனைவரும் போர்மறத்தை நோக்கியே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொருவருடைய கடமையையும் இப்புறப் பாடல் பேசுகிறது.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே;'

- மூதில் முல்லை, (பு.312),
-பொன்முடியார்.

[சான்றோன் = போர்மறவன். கடன் = அறம்] போர்மறம் தானே இங்கு இறுதி அறம் எனப் பேசப்படுகிறது.

2.5. மன்னரும் ஈகையும்

குறுநில மன்னர்க்கும் வள்ளல்களுக்கும் குடிமக்களுக்கும் உரியனவாகச் சில பல ஒழுகலாறுகளை - அறங்களை - புறநானூற்றின் வழி இதுகாறும் காண முடிந்தது. முடிவேந்தர்க்கு உரிய கடமைகள் பல பேசப்படுகின்றன. அவையும் போற்றத்தக்க அறங்கள்.

வேந்தர்க்குக் காவல் - நாடு காவல்,
குடிகாவல் - ஓர் அறம்:

*'அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின், ஓம்புமதி!'*

- (பு-5.5,6,7) - செவியறிவுறூஉ
- நரிவெரூஉத் தலையார்

வேந்தர்க்கு உரிய அறங்களாக நெடுஞ்செழியன் புறப்பாட்டு (72) போர்மறம், புலவர் போற்றல், ஈகை ஆகியவற்றைத் தந்தன. நலங்கிள்ளி பாட்டு ஒன்று (பு.73) இல்லறக் காதல் ஒழுக்கத்தினை உயர்த்திப் பிடிக்கிறது.

*'உள்ளம் எள்ளிய மடவோனை . . . வருந்தப்
பொரேஎன் ஆயின், . . . தீதுஇல்
நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்இருங்கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடைக்
குழைக என் தார்'*

எனப் பேசுகிறது அந்தப் பாட்டு. (தார் = மாலை; பொரேன் = போர் செய்யேன்)

மதுரை மருதன் இளநாகனார் நன்மாறனைப் போற்றிப் பாடிய புறப்பாட்டு (55) வேந்தர் மேற்கொள்ளவேண்டிய அறநெறி, கோல் கோடாமை, குணம் கொல்லாமை, ஆண்மை, சாயல் என்னும் மென்மை, வண்மை ஆகிய அறங்கள் எனத் தொகுத்துத் தருகிறது.

*கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும், நெஞ்சுடைய புகல்
மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்;
அதனால், 'நமர்'எனக் கோல்கோடாது,
'பிறர்'எனக் குணம்கொல்லாது,
ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,
வானத் தன்ன வண்மையும், மூன்றும்
உடையை ஆகி . . .*

3. ஈகையும் மறமும் இணைதல்

பல்வேறு அறங்களுள் ஈகையும் மறமும், இருவேறு அறவிழுப்பங்களாகப் பழந்தமிழர் பண்பாட்டில் பரவலாகப் போற்றப்பட்டதை இதுகாறும் புறநானூற்றின் வழி அறிதல் முடிந்தது. இரண்டும் தனித்தனி அறங்கள் மட்டும் அல்ல; அவை இணைந்து ஒன்றுடன் மற்றது உறவுடையதாகத் தெரிகிறது.

'திருந்துவேல் குமணன் நல்கிய வளன்' - (பு.163.9)
*"... ... ... வண்மையொடு
பகைமேம் படுக நீஏந்திய வேல்* -(பு.158.27,28)

'மாரிஈகை மறப்போர் மலையன்' - (பு-158.7)
- குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

*"படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்,
'எத்துணையாயினும் ஈத்தல் நன்று' என"*
(பு.141.11,12,13)

இவை போன்ற பாடல்களில் வேற்படை, மறப்போர், யானைப்படை, மான் (குதிரைப் படை) ஆகியவை ஈகையுடன் இணைத்துப் பாடப்படுவதைக் காணலாம். ஆதலால் இவை இரண்டுமே ஒருங்கு இணைத்துப் போற்றத்தக்க அறங்கள் எனக் கொள்ளப்பட்டிருந்தன என்பது புலப்படுகிறது.

4. மறம் வழி; ஈகை குறிக்கோள்

ஈகையும் மறமும் உயர்ந்து நிற்கின்றன. இரண்டையும் இறுதி விழுமியங்கள் (End Values/ Essential Values) எனக் குறிப்பிடலாம் போலும். இருப்பினும் புறநானூறு, ஈகைக்கு மறம் என்பது துணை அறமாகவும் வழி அறமாகவும் (Instrumental Value) அமைகிறது என்னும் கருத்தியலையும் தாங்கி நிற்கிறது. மறப்போர் வழி ஈகைக்குப் பொருள் தேடப்படுகிறதாம்.

*"குன்றம் . . . கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துஉணக் கிடப்பினும் கிடக்கும்; அஃதான்று
நிறைஅருந் தானை வேந்தரைத்
திறை கொண்டு பெயர்க்கும் செம்மலும் உடைத்தே*

இயல்மொழி - (பு.156).
கொண்கானங்கிழானை மோசிகீரனார் பாடியது

*"யாம்தன் இரக்கும் காலை, தான்எம்
உண்ணா மருங்குல் காட்டி, தன்ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்,
திருந்துஇலை நெடுவேல் வடித்திசின் எனவே"*

- (பு.180-10,11,12,13)
- (ஈந்தூர் கிழான் தோயன் மாறனை
மாடலன் மதுரைக் குமரனார் பாடியது)

*'புலவர் எல்லாம் நின்நோக் கினரே;
நீயே, மருந்துஇல் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்றுஇரு வேந்தர் மண்நோக் கினையே'*

- அரசவாகை, (பு.42-21-24)
கிள்ளிவளவனை இடைக்காடனார் பாடியது.

*'வேந்து தந்த பணி திறையான்
சேர்ந்தவர் கடும்பு ஆர்த்தும்'*

- (பு.22.26,27), அரசவாகை
- இரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது.

ஈகை, மறம் என்னும் இருவிழுமியங்களுள் மறம் துணையாக்கப்பட்டு ஈகை உயர்ந்து ஓங்குகிறது.

5. இசை

ஈகை ஒன்றே இறுதி விழுமியமாக விளங்குவது போலத் தோன்றுகிறது. ஆயினும், மேலும் ஒரு கருத்தியல் தலைதூக்கி நிற்கிறது. ஈகையே பிறிதொரு விழுமியத்திற்குத் துணை வழி (instrument) ஆகி விடுகிறது என்பதையும் புறம் வழிக் காண முடிகிறது.

*'இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுக, நீ ஏந்திய வேலே'* (பு.158-27,28)
- குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

'இசை விளங்கு கவிகை நெடியோய்!'-(பு. 102-6)
- பொகுட்டெழினியை அவ்வை பாடியது.

*'மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே'* -(பு.66-7,8)
-கரிகாற் பெருவளத்தானை
வெண்ணிக்குயத்தியார் பாடியது

'ஈத்தோன், எந்தை, இசைதனதாக' -(பு.386-9)
-கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியது.

'பரந்துபடு நல்லிசை எய்தி' -(பு-213-9)
-கோப்பெருஞ்சோழனை எயிற்றியனார் பாடியது

'ஈத்த நின் புகழ்' - (பு.159-20)
*'. . . . . விறற் புகழ்
வசைஇல் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றல்!'* - (பு.159-26.28)
-குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

*'
. . . . பொறைய!
விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் ;
மம்மர் நெஞ்சத்து எம்ம னோர்க்கு ஒருதலை
கைமுற்றல, நின்புகழே, என்றும்.'* - (பு.53-5-8)
- இரும்பொறையை இளங்கீரனார் பாடியது.

*'. . . . . மற்போர் வேந்தர்
தாம் மாய்ந்தனர். . . . . . பொலிக நும் புகழே'*
-(பு.62-7,8,19)
- கழாத்தலையார் (இசை = புகழ்)

மேற்கண்ட சான்றுகள் இசை எனப்படும் புகழுக்கு, ஈகையும் மறமும் என்னும் விழுமியங்கள் வழியாகி விடுகின்றன என விளக்குகின்றன. ஈகையாலும் மறத்தாலும் புகழ் ஈட்டுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. புகழ், உயிருக்கும் மேலாம்: 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்' என்கிறது (புறம் 182-5). ஆகவே புகழே தமிழ்ப் பண்பாட்டின் மாந்தர் குறிக்கோள்; இறுதி அற விழுமியம் (Ultimate Value) ஆகும். தான் எதற்கும் துணையாகவோ வழியாகவே (Instrumental) இராது தானே இறுதி விழுமியமாக (End value) அமைவதே இறுதி உயர் விழுமியத்தின் பாங்கு. அந்தத் தகுதியைப் பெற்றதே இசை எனப்படும் புகழ்.

ஈகையும் மறமும் வழிகள் என்பதால் அவற்றுக்கு விழுமியம் ஆகும் தகுதி இல்லை என்பதில்லை. அவை தூண்கள் போன்றவை. அவற்றின் மீது கட்டப்பட்டதே புகழ்! புகழைத் தாங்கி நிற்பன ஈகையும் மறமும் ஆகும். இந்தக் கருத்தியற் பண்பாடே பழந்தமிழர் பண்பாடு எனலாம் எனப் புறம் வழி அறியமுடிகிறது.

6. மண்ணகப் பண்பாடும் மாற்றகப் பண்பாடும்

1) புறநானூறு தமிழர் பண்பாட்டுக்கே உரியவையான கருத்தியல்களையும் அறங்களையும் மட்டும் கொண்டிருக்கிறது எனக் கொள்ள இயலவில்லை. பிறபண்பாட்டின் தாக்கத்தையும் அதில் காணமுடிகிறது. பழந்தமிழகத்தில் கி.மு.வின் தொடக்கத்திலேயே ஆசீவகம், சமணம், பவுத்தம், வைதீக பிராமணீயம், உலகாயதம் ஆகியவற்றின் உறவினையும் தாக்கத்தையும் காணலாம். பழந்தமிழரின் பண்பாட்டை ஆய்வோர் இவ்வரலாற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். தொல் பழந்தமிழக மண்ணகத்திலேயே அம்மண்ணகத்திற்கு ஏற்பத் தோன்றிய பண்பாட்டுக் கூறுகள் இருத்தல் வேண்டும் அல்லவா. இவற்றை ஆய்வறிஞர்கள் பண்பாட்டுக் கூறுகள் Orthogenetic Cultural elements என வகுத்துக் கூறுகின்றனர். காலம் செல்லச்செல்ல அண்டை அயலார் உறவுகள் ஏற்பட அவர்களுடைய பண்பாட்டின் கூறுகள் அகப்பண்பாட்டுக் கூறுகளுடன் உறவாடலாம்; வந்தேறலாம். இவற்றை (அயல்) புறப்பண்பாட்டுக் கூறுகள் - Heterogenetic cultural elements என ஆய்வறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். பழஞ்செவ்வியல் தமிழ்க் காலத்திலேயே புறப்பண்பாடுகளின் தாக்கத்தைத் தமிழகத்தில் காண முடிகிறது. இவ்வாறான இருவேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளையும் நாம் நம் ஆய்வில் பிரித்தறிதல் வேண்டும். கீழ்வருவன இவ்வகையில் கருத்திற் கொள்ளத்தக்கன:

உயிர் என ஒன்று நிலைபேறு உடையது, அழிவில்லாதது. இம்மையொடு மறுமைப் பிறப்புக்கள் பல உண்டு. பரம் பொருள்கள்/ கடவுள்கள் உண்டு.

உருவ வழிபாடு / கோவில் வழிபாடு தேவை. மண்ணுலகம் (கர்ம பூமி), தேவருலகம் (போகபூமி), நரகஉலகம் உண்டு.

வீடு (மோட்சம்), நிர்வாணம் மாந்தர் குறிக்கோள் ஆகும்.

அறம் பொருள் இன்பம்/ முப்பால்

அறம் பொருள் இன்பம் வீடு / நாற்பால் ஆகியவை வாழ்வியற் குறிக்கோள்கள்.

நாலாசிரமங்கள்/பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் (துறவு) ஆகியவை வாழ்க்கை நிலைகள்.

வருண சாதி உயர்வு தாழ்வு வேறுபாடுகள் இயற்கை. கரும வினை - ஊழ்க் கொள்கை உண்டு. ம ந் தி ர மொழிகள், சாப விளைவு உண்டு. தவ ஆற்றல் யாக வழிபாடு. பாவம் புண்ணியம்; தானம் தருமம். கொல்லாமை, இன்னா செய்யாமை, கள், காமம், பெண்டிரைக் கடிதல்.

இவை போன்ற கருத்தியல்கள் எந்த எந்தப் பண்பாட்டினர்க்கு உரியவை? இவை எக்காலத்தில் தோன்றின? எங்குத் தோன்றின? இவ்வினாக்களுக்கு விடை காணுதல் வேண்டும். காணப்படும் விடைகளின் பின்புலத்தில்தான் பழந்தமிழ்ப் பண்பாட்டாராய்ச்சி நிகழ்தல் வேண்டும். புறநானூறு பேசும் அறங்கள், விழுமியங்கள் பற்றிய ஆராய்ச்சியும் இந்தப் பின்புலத்தில்தான் நிகழ்தல் வேண்டும்.

7. தேவருலகக் கருத்தியல்

'புறநானூற்றின் வழி அறியலாகும் பழந்தமிழர் பண்பாட்டின் இறுதி விழுமியம் புகழ் ஆகும்' என்னும் கூற்று தடுமாற்றத்துக்கு உள்ளாகும் போலும். புறநானூற்றின் கீழ்க்கண்ட கருத்துக்கள் எண்ணப்பட வேண்டியவை.

'இவண் இசையுடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை'

- (பு.50-14,15 இயல்மொழி)

(சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசிகீரனைத் தவறு செய்யாது, அவன் துயில் எழுந்துணையும் கவரி கொண்டு வீசியானை மோசிகீரனார் பாடியது.)

(உயர்நிலை உலகம் = தேவலோகம்)

. . . . நும் முன்
ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன்

- (பு.174: 18,19,20)

(நும் முன் = உன்மூத்தோன், உணீஇயர் = உண்ணவேண்டி, நல்வினை, மறப்போரும், ஈகையும் ஆகலாம்)

நிலவரை சூட்டிய நீள்நெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பு இவர்ந்தன்ன
சேண்விளங்கு சிறப்பின் செம்பியர் மருகன்
கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்
தேவருலகம் எய்தினன் - (பு.228: 6-11)

- கிள்ளிவளவனை ஐயூர் மூவனார் பாடியது.

போர் மறமும் புலவர் புகழும் பொய்யா நல்லிசையும் பேசப்படுகின்றன.

மேலோர் உலகம் எய்தினன் . . .
. . . .
பகைவர்ப் பிணிக்கும் ஆற்றல், நசைவர்க்கு
அளந்து கொடை அறியா ஈகை
மணிவரை அன்ன மாயோனே - (பு.229.22-27)

- இரும்பொறையைக் கூடலூர் கிழார் பாடியது

போர் மறம், ஈகை பேசப்படுகின்றன.

'. . . . . படினே
மாசுஇல் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப' - (பு.287:10,11,12)

நீண்மொழி- சாத்தந்தையார்

(படின் = இறப்பின், மன்றல் = மணம், நுகர்ப = நுகர்வர்)

மறப்போர் புரிந்த கொழுநன் உயர்நிலை உலகம் சென்றால் மகளிரும் அங்குச் செல்வர்.

தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்

- (புறம் 214: 8.9)

- கோப்பெருஞ்சோழன்

உடம்பொடு சென்மார், உயர்ந்தோர் நாட்டே

- (பு.362: 22), பெருங்காஞ்சி

- சிறு வெண்தேரையார்

யார், எதற்கு என்னும் விளக்கம் பெற இயலவில்லை; பாடல் சிதைந்தது: இப்பாடலில் மட்டுமே வேள்விப்பார்ப்பார் இடம்பெறுகின்றனர்.

சுவர்க்கம் என்னும் கருத்தியல் 'உயர்ந்தோர் உலகம்', 'உயர்நிலை உலகம்', 'தேவர் உலகம்', 'மேலோர் உலகம்', 'அரும்பெறல் உலகம்', 'அந்தரம்', 'புத்தேள் உலகம்', 'உயர்ந்தோர் நாடு', 'தொய்யா உலகம்' என்றெல்லாம் புறநானூற்றில் குறிக்கப்படுகின்றன. போரில் மறம் நாட்டி மறைந்தோரும் ஈகை நல்கிப் புகழ் எய்தினோரும் உயர்ந்தோர் உலகம் எய்தலாம் என்னும் கருத்து மேற்கண்ட சான்றுகளால் பெறப்படுகிறது. மறத்தாலும் ஈகையாலும் புகழ் எய்தினோரும் உயர்ந்தோர் உலகம் எய்தலாம் என்னும் கருத்தும் பெறப்படுகிறது.

'மறம், ஈகை, புகழ் ஆகியவற்றில் உயர்ந்தோர் உலகம் பெறலாம்' என்னும் கருத்தியல் ஏற்கப்படுமானால் உயர்ந்தோர் உலகம் செல்லலே இறுதி விழுமியமாகக் கொள்ளப்படும். புகழ் உட்படப் பிற, துணை வழி விழுமியங்களாக அமைந்து விடுகின்றன.

ஆய்வு நிறைவுறவில்லை. உயர்ந்தோர் உலகம் செல்லல் என்னும் கருத்தியல் புறநானூற்றில் அங்கும் இங்குமாக - மேற்போக்காக - பத்து இடங்களுக்குக் குறைவாக - வந்து செல்கிறது. ஆனால் பழந்தமிழ்ப் பண்பாட்டில் போர் மறமும் கொடையும் புகமும் பரவலாகப் பேசப்படுகின்றன.

தேவருலகம் பற்றிய கருத்தியல் ஆரியர் வடபுலம் வந்தபோது தோற்றுவிக்கப்பட்ட யாக வழிபாட்டினை ஒட்டித் தோன்றியது என்பது வரலாறு. அதாவது இக்கருத்தியல் வைதிக பிராமணிய சமயத்துக்கு உரியது. அதன் சாயலையே மேற்கண்ட புறநானூற்றுச் சான்றுகள் காட்டுகின்றன. தமிழரின் தாயகப் பண்பாட்டுக்கு உரியதாக அதனைக் கொள்ள வாய்ப்பில்லை.

8. மறுமைப் பயன்

மறுமையின்பம் - அடுத்து வரும் பிறவியில் இன்பம் பெறல் - ஒரு வாழ்வியற் குறிக்கோளாகக் கருதப்படுகிறது. இதற்கு ஈகையும் பிற அறங்களும் - நல்வினைகள் - வழியாக அமையும்; அமைக்கப்படும். இது பொது நம்பிக்கை. ஆனால் ஆய்வள்ளலும், பேகன் வள்ளலும் மறுமையின்பத்தைக் கீழ்த்தள்ளி ஈகைவண்மையை உயர்த்திப்பிடிக்கின்றனர். இத்தமிழரிடத்தில் ஈகை இறுதி விழுமியமாக அமைகிறது.

உயிர் நிலைபேறு உடையதாகிப் பல பிறப்புக்கள் எடுக்கிறது என்னும் கொள்கை தமிழரின் தாய்ப் பண்பாட்டிற்கு உரியதாகக் கொள்ள இயலவில்லை. இக்கொள்கை ஆரியர்க்கு உரியதும் அல்ல; இந்திய மண்ணிற்கு உரியதுதான். ஆயினும் இது எங்கு எப்போது தோன்றிப் பரவியது என்னும் வரலாறு தெளிவுபடவில்லை. பழந்தமிழர் வரலாற்றில் இக்கொள்கை ஒட்டியும் ஒட்டாமலும் இடம் பெற்றதாகவே கொள்ளுதல் வேண்டும். போரும் காதலும் ஈகையும் போன்று இக்கருத்து பழந்தமிழரிடைப் பரவலாக வழங்கக் காணோம்.

9. மண்ணுலகில் இசைநட்டு மாய்தல் தலையாயது

புறநானூற்றின்வழிப் பழந்தமிழரின் வாழ்வியல் விழுமியங்களைத் தேடலின் முடிவுதான் என்ன? பல்வேறு கருத்தியல்களின் பூசல்களிடையே ஓரிரு கருத்தியல்கள் மேலோங்கி நிற்கின்றன. கோப்பெருஞ்சோழனின் பொருள்மொழிக் காஞ்சிப் பாட்டு பூசலிடையே பூத்த ஒரு நறும் பூவை எடுத்துக் காட்டுகிறது. வினைக்கொள்கை, முயற்சியின் பயன், தொய்யா உலக நுகர்ச்சி, இம்மை மறுமைப்பயன் ஆகியவற்றை இப்புறப்பாட்டு ஆய்ந்து 'இவற்றுள் எதுவும் உறுதியில்லை' எனக் குறிப்பிட்டு விளக்கிப் 'புகழ் நட்டுத் தூய வாழ்க்கையொடு இம்மண்ணுலகில் மாய்தலே மிகச் சிறப்புடையது' என அந்தப் பாட்டுப் பேசுகிறது. வினைப்பயன்கள், தேவஉலகம், மறுமை வாழ்வு ஆகியவை இயற்கையின் அறிவியலுக்குப் பிடிபடாக் கருத்தியல்கள் (Paranormal/paranatural) தாமே. கோப்பெருஞ்சோழன் தமிழ் மண்ணிலே தோன்றித் தமிழ்ப்பண்பை உண்டு வளர்ந்த மைந்தன் (மாந்தன்) தானே. அவன் பேசுகிறான்:

'செய்குவம் கொல்லோ, நல்வினை', எனவே
ஐயம் அறாஅர், கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்தி
சினோர்க்கு

6)சய்வினை மருங்கின் எய்தல் உண்டுஎனின்,
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சிஇல் எனின்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்;
மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டு,
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே

- பொருள்மொழிக்காஞ்சி, (பு: 214)
- வடக்கிருந்தான் கோப்பெருஞ்சோழன்

நல்வினை, ஐயம்; பயன் உறுதி இல்லை. யானை வேட்டுவன் யானை பெறலாம். முயல் வேட்டையில் முயல் பெறாது போகலாம். தேவருலகம் கிட்டலாம்; கிட்டாது போகலாம். இசைநட்டு மாய்க.

இக்கோப்பெருஞ்சோழன் நடுகல் ஆயினான். அவனைப் பற்றிப் பொத்தியார் பாடிய பாடல் 221 'கெடுஇல் நல்லிசை சூடி நடுகல் ஆயினன் புரவலன்' என இசைநட்டு மாய்தலை மட்டுமே குறிப்பிடுகிறது. தேவருலகம் பற்றியோ மறுமை வாழ்வு பற்றியோ இங்குப் பேச்சில்லை.

பழந்தமிழரின் வாழ்வியல் எண்ணக்கோள் (Life ideology) தான் என்ன? 'இந்த வையக வாழ்வே வாழத்தக்கது. காதல், மறம், ஈகை, இவற்றின் வழிப் புகழ் ஈட்டி இறுதி எய்தல்' புறம் 24,56 இவ் எண்ணக் கோளைத் தெளிவாக எடுத்து விளக்குகின்றன.

கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலை இயர் நின் நாள் மீன்; நில்லாது
படாஅச் செலீஇயர் நின் பகைவர் மீனே-
நின்னொடு தொன்று மூத்த உயிரினும், உயிரொடு
நின்று மூத்த யாக்கை அன்ன, நின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த,
இரவல் மாக்கள் ஈகைநுவல,
ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப, மகிழ்சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி, பெரும! ஆங்கு அது
வல்லுநர் வாழ்ந்தோர்' என்ப - தொல்லிசை,
மலர்தலை உலகத்துத் தோன்றி,
பலர், செலச் செல்லாது, நின்று விளிந்தோரே.

- பொருள்மொழிக்காஞ்சி, (பு.24: 23-36)
-நெடுஞ்செழியனை மாங்குடிகிழார் பாடியது

உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈந்தும்
மகிழ்கம் வம்மோ, மறப் போரோயே

- பெருங்காஞ்சி, (பு,364:7,8).
- கூகைக் கோழியார்

. . . . யாங்கும்
அரியவும் உளவோ, நினக்கே? அதனால்
இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா,
யவணர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி!- ஓங்குவாள் மாற
அம்கவின் விசும்பின் ஆர்இருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும், குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்,
நின்று நிலைஇயர், உலகமொடு உடனே!

- பூவை நிலை, (பு.56:15-25)
- நன்மாறனை மருதன் இளநாகனார் பாடியது

(ஈயா = ஈந்து. மடுப்ப = உண்பிக்க. நிலைஇயர் = நிலைபெறுக, உலகமொடுஉடன் = உலகில் ஒன்றாக)

10. தமிழர் சமயம் : வாழ்வு விழைவு

வையகம் மெய்யகமா? பொய்யகமா? மாயமா? மருளா?

இயற்கை எனும் இப்பால் உண்டு; இயற்கை கடந்து அப்பால் உண்டா? (Super nature)

மன்னுயிர் உண்டு; மக்கள் உண்டு. இவை இகம்பொருள்; பரம்பொருள் உண்டா? வையக இயக்கம் பரம்பொருளாலா? (கடவுளாலா?)

உயிர் உண்மையா? நிலைத்ததா? இம்மை மறுமை உம்மை உண்டா?

வையக வாழ்வு இன்பமா? துன்பமா?

இவ்வினாக்களுக்கு விடையும் விளக்கமும் சமயம் ஆகின்றன. ஒரு விடை: வையக வாழ்வை மறுத்துப் பேசுவது (Life negation); பிறிதொரு விடை: வையக வாழ்வை ஏற்றுப் பேசுவது (Life affirmation) புறநானூற்றின் தமிழகத்தில் 'வாழ்க்கை விருப்புக் கொள்கை, ஒலிக்கிறது. தமிழகம் பிற பண்பாட்டினரின் வாழ்க்கை மறுப்பொலியைக் கேட்டு எதிரொலிக்கிறது. புறப்பாடல்கள் பல சாக்காட்டுத் துன்பத்தையும் வாழ்க்கை நிலையாமையையும் வறுமைத் துன்பத்தையும் பரவலாகப் பேசுகின்றன. ஆனால் தமிழகம் நம்பிக்கை இழப்பு, தளர்ச்சி, சோர்வு (Pessimism) கொள்ளவில்லை. அது வாழ்க்கையை வெறுத்து ஓடவும் இல்லை; காணாப்பொருளை நாடவும் இல்லை; இன்னாமையில் இனிமை காண விழைகிறது, துன்பத்தை இன்பமாக்க முயல்கிறது; நிலையாமையில் நிற்பதைச் செய்ய எண்ணுகிறது.

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்,
இன்னாது அம்ம, இவ்வுலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே

- பெருங்காஞ்சி, (பு.194)
-பக்குடுக்கை நன்கணியார்

நெய்தல்கறங்கல் = துன்பப்பண் ஒலித்தல்,
தண்முழவின்பாணி = இன்பப்பண்
பைதல் உண்கண் பனிவார்பு உறைத்தல் = துன்பக் கண்ணீர் வடித்தல்

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லோரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே.


- (பு.195:4-9; பொருள்மொழிக்காஞ்சி) -
நரிவெரூஉத்தலையார்

புறநானூறு காட்டும் தமிழ்ப் பண்பாட்டில் சமயம் உண்டா? சமயம் உள்ளதானால் அந்தச் சமயம்தான் என்ன? பரம்பொருட்கடவுளர்கள், ஆன்மாக்கள், பரலோகங்கள், இம்மை, மறுமை, உம்மை, பக்தி, பாவ புண்ணியங்கள், கோவில், வழிபாடு .... இவையுடையவற்றைச் சமயங்கள் (Religions) என்பர். இவை இல்லாத வாழ்வியலைச் சமயச் சார்பின்மை (Secularism) என்பர்.

ஆனால் மேற்கண்டவை இல்லாத பவுத்தம் சமயம் எனப்படுகிறது; அவற்றை மறுக்கும் உலகாயதம், மெட்டீரியலிசம் (Materialism) சமயமா?' பழந்தமிழ்ப் பண்பாட்டில் மேற்கண்ட கருத்தியல்கள் வளர்ச்சி பெறவில்லை; வாங்கிக் கொள்ளப்படவும் இல்லை. பழந்தமிழ்ப் பண்பாட்டிற்கு என்று வையக வாழ்வு ஏற்புக் கொள்கை உண்டல்லவா! அக்கொள்கையையே அப்பண்பாட்டின் சமயம் எனலாமே!

(சமயம் என்பதற்கான விளக்கம்-இலக்கணம் - என்னவோ அதற்கேற்ப இவை விளக்கப்படலாம்.)

புறநானூற்றின் வழித் தமிழர் விழுமியங்கள் (Values)



(மறம் = வீரம், இசை = புகழ், உயர்ந்தோர் உலகம் = தேவருலகம்)



அகநானூற்றில் சில அரிய செய்திகள்



பேரா.அ. தட்சிணாமூர்த்தி,
தஞ்சை.

கடந்த ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளாக இடையீ--டற்ற, தொடர்ச்சியான இலக்கிய வரலாறு படைத்தது நம் தமிழ்மொழி. இந்திய மொழிகளுள் தமிழுக்கு மட்டுமே இத்தனிப்பெருமை உண்டு. இம்மொழியின் மிகப் பழைய இலக்கியத்தைச் சங்கஇலக்கியம் என வழங்கு--கின்றோம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமென ஒன்பது தொகுதிகளாக இவ்விலக்கியம் வழங்குகிறது. எட்டுத்தொகைகளுள் ஒன்றான அகநானூற்றில் 13 அடிகள் முதல் 31 அடிகள் வரையில் கொண்ட 400 அகவல்கள் அடங்கும். பண்டைத்தமிழரின் உயரிய பண்பாட்டையும் வரலாற்றையும் உள்ளவாறு அறிந்துகொள்ள ஓர் ஒப்பற்ற கருவூலமாக இது விளங்குகின்றது. இத்தொகுப்பில் காணும் சில அரிய செய்திகளை மட்டும் சுட்டிக்காட்டுவது இக்கட்டுரை.

இன்று கோயில்வெண்ணி என்ற பெயரோடு நிலவும் ஊர் சங்ககாலத்தில் வெண்ணி என்றே வழங்கிற்று. இங்கிருந்த ஒரு பரந்த வெளியை வெண்ணிப் பறந்தலை என்று அழைப்பர். அதில்தான் மாவீரனான கரிகாலன், சேரமான் பெருஞ்சேரலாதனொடு போரிட்டு வென்றான். அப்போரில் சேரலாதன் மார்பில் தைத்த வேல் ஊடுருவி அவன் முதுகிலும் புண்ணுண்டாக்கிற்று. மானவுணர்வு மிக்க சேரமான் தன் வாளொடு வடக்கிருந்து உயிர்விட்டு மங்காப் புகழ் கொண்டான். வெற்றிபெற்ற வேந்தனை வெண்ணிக்குயத்தியாரெனும் புலமைப் பெருமாட்டி,

"சென்றமர்க் கடந்தநின் னாற்றல் தோன்ற
வென்ற நின்னினும் நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே"
(புறம்.66)

என்று பாராட்டினார். ஆம். வென்றவனை விடத் தோற்றவன் புகழ்பெற்றான். பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் விட்ட வரலாறு மட்டுமே புறநானூற்றில் உள்ளது. ஆனால் அகநானூறோ, உயிர் துறந்தவனுக்காக, உயிர் துறந்து புகழ் பெற்ற சான்றோர் வரலாற்றையும் பதிவு செய்துள்ளது. இப்பதிவைச் செய்தவர் வரலாற்றுணர்வு மிக்க மாமூலனார்.

சேரமான் உயிர் துறந்த செய்தியை 'இன்னா இன்னுரை' என்று குறித்த மாமூலனாரை எத்துணையும் புகழலாம். மன்னன் மாண்டான் என்பது இன்னாச் செய்தியே. ஆனால் அவன் மானங்காக்க உயிர்விட்டான் என்பது இனிய செய்தியன்றோ.

"— ஒண்படைக்
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பிறிதுஆகி யாங்கு" (அகம்.55)

என்பது புலவர் வாக்காகும்.

கள்ளூர்ப் பேரவை

இந்தியநாட்டில் விளங்கிய உள்ளாட்சி மன்றங்கள் பற்றி எல்பின்சுடோன் என்னும் அறிஞர், "கிராம வாழ்க்கையின் நிலைபேறும், நீடித்த தன்மையுமே இந்தியா கடந்த காலத்தில் பெற்ற நன்மைகள் அனைத்திற்கும் அடிப்படையாகும் " என்றார். இவ்வூராட்சி மன்றத்து உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர் என்பதற்குரிய முதற்சான்று அகநானூற்றில்

தான் இடம் பெற்றுள்ளது. இறந்து விட்ட மாவீரர்களின் குடலைக் கழுகுகள் தம் அலகினால் கொத்தியெடுத்து உண்ணுதலை வருணிக்கும் மதுரை மருதன் இளநாகனார்,

> "_முதுபாழ்
> கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்
> பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்
> உயிர் திறம் பெயர நல்லமர்க் கடந்த
> தறுகணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
> செஞ்செவி எருவை அஞ்சுவர இகுக்கும்"
>
> – (அகம்.77)

என்றார்.

மதுரையைச் சார்ந்தோர் சிற்றூர் கள்ளூர் என்பது. இவ்வூரில் ஒழுக்கமில்லாத உலுத்தனொருவன் இளம் பெண்ணொருத்தியின் பெண்மை நலத்தைச் சிதைத்தான். தனக்கும் அப்பெண்ணுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்றான். இவ்வழக்கினை ஊரவை உசாவியறிந்தது; அவன் குற்றவாளியென்பதனைச் சான்றுடன் நிறுவித் தண்டனை விதித்தது. அத்தண்டனையை மதுரைத்தமிழக்கூத்தனார் கடுவன்மள்ளனார் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

> "தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
> கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
> திருநுதற் குறுமகள் அணிநலன் வவ்விய
> அறனிலாளன் அறியேன் என்ற
> திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
> முறியார் பெருங்கிளை செறியப்பற்றி
> நீறுதலைப் பெய்த ஞான்றை
> வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே"
>
> – (அகம். 256)

குற்றவாளியை மரத்திற்பிணித்து அவன் தலையில் நீற்றினைப் பெய்து அவமானப்படுத்தினர் என்றும், அது கண்டு மக்கள் தம் மகிழ்ச்சியை ஆரவாரத்தால் வெளியிட்டனர் என்றும் புலவர் கூறுதல் காண்க.

பண்ணிக்காடு

தமிழகத்தில் கடந்த ஈராயிரமாண்டுகட்கு முன்னர் இருந்த ஊர்கள் பல இன்னும் தம் பெயரில் எவ்வகை மாற்றமும் இன்றி வழங்குகின்றன. சிலவற்றில் சிலதிரிபுகளும் காணப்படுகின்றன. காலம் காலமாக மக்கள் வழங்கியமையால் திரிபுகள் தோன்றுதல் இயற்கையே. கோடைக்கானல் இப்போது கொடைக்கானல் என்று வழங்குகிறது. அம்மலையின் ஒரு பகுதியைப் பண்ணைக்காடு என்கின்றனர். அங்குப் பழத்தோட்டங்களும் பண்ணைகளும் இருந்ததால் அப்பெயர் ஏற்பட்டதாகக் கருத இடமேற்பட்டுள்ளது. ஆனால், அகநானூற்றிலுள்ள 13ஆம் பாடல் இதன் உண்மை வரலாற்றைக் கூறுகிறது. இம்மலையில் ஒரு மன்னன் ஆண்டான். அவன் பெயர் 'பண்ணி' என்பது. அவன் பாண்டியமன்னன் ஒருவனது அன்பிற்குரியவனாக விளங்கினான். அவன் யாதோ ஒரு வேள்வி செய்து பெரும் சிறப்பு எய்தினான். அவன் ஆண்ட காரணத்தி லேயே அது பண்ணிக்காடு என்று வழங்கிப் பிறகு பண்ணைக்காடு என்று மாற்றம் பெற்றது. இதனைப் புலவர் வாக்கால் அறிக.

> "திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
> குழியிற் கொண்ட மராஅ யானை
> மொழியின் உணர்த்தும் சிறுவரை யல்லது
> வரைநிலை யின்றி இரவலர்க்கு ஈயும்
> வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
> பண்ணி தைஇய பயங்கெழு வேள்வி"
>
> – (அகம்.13).

உமணரும் யானைக்கறியும்

பண்டைத்தமிழ் மக்களில் பெரும்பாலோர் புலாலுணவினை விரும்பியுண்டனர் எனச் சங்க நூல்கள் கூறுகின்றன. மான், முயல், ஆடு, மாடு முதலான நாற்கால் விலங்குகளின் இறைச்சியினை உண்டமைக்குப் பல சான்றுகள் உள்ளன. அவ்வாறே கோழி, காடை முதலான பறவைகளின் இறைச்சியையும் உண்டமைக்குச் சான்றுகள் உள்ளன. இவற்றி லொன்றும் வியப்பில்லை. ஆனால், அகம் 169 ஆம் பாடல், அக்காலத்தில் யானையின் இறைச்சியை உண்ணும் வழக்கமும் இருந்தது என்கிறது. இச்செய்யுளை இயற்றியவர் தொண்டி ஆமூர்ச்சாத்தனார்.

> "புலிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழியூன்
> கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை
> ஞெலிகோல் சிறுதீ மாட்டி ஒலிதிரைக்
> கடல்விளை அமிழ்தின் கணஞ்சால் உமணர்,
> சுனைகொள் தீம்நீர் சோற்றுலைக் கூட்டும்"
>
> – (அகம்.169)

இது வியப்பிற்குரிய செய்தியாகவே நமக்குத் தோன்று கிறது.

பங்குனி முயக்கம்

சித்திரை முதல் பங்குனி வரை பன்னிரு மாதங்கள் இன்று வழங்குகின்றன. இவைதாம் தொல்காப்பியர் காலம் முதல் வழக்கத்திலிருந்த மாதங்கள். தொல்காப்பியர் காலத்தில் ஐகார வீற்றிலும் இகர வீற்றிலுமே மாதங்களின் பெயர்கள் முடிந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (தொல்.எழுத் .நச்சி.248,286)

பங்குனி என்னும் திங்கட் பெயர் அகநானூற்றில் மட்டுமே காணப்படுகிறது. உறையூர் அருகிலோடும் பேராற்றின் மணலில் அமைந்த மணம் கமழும் ஒரு பொழிலில் பங்குனி முயக்கம் நடந்தது என்றும், அது நடந்து முடிந்த மறுநாளில் அடுப்புகள் பலவும் தீயின்றிக் கிடந்தன என்றும் உறையூர்ப் புலவர் முதுகூத்தனார் பதிவு செய்துள்ளார். 'தீயில் அடுப்பின் அரங்கம்' எனக் குறிக்கும் இடம், இப்பொழுதுள்ள திருவரங்கம் என்பது உறுதி. பாட்டின் பகுதி வருமாறு:

“வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்
இன்கடும் கள்ளின் உறந்தை யாங்கண்
வருபுனல் நெறிதரும் இகுகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீ இலை அமன்ற மரம்பயில் இறும்பின்
தீயில் அடுப்பின் அரங்கம்” (அகம்.137)

காரோடன் கல்

வாள், வேல் முதலான கருவிகளைத் தீட்டுதற்குப் பயன்படும் சாணைக்கல்லை உருவாக்கும் முறை பற்றிய குறிப்பினை அகம் முதற் செய்யுளிலும், 356 ஆம் செய்யுளிலும் காண்கிறோம்.

'சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கற்போற் பிரியலம்' (அகம்.1) என்பது தலைவன் தன் காதலிக்குக் கூறிய உறுதி மொழியாகும். 'பயின்' என்பது ஒருவகைப் பிசின். ஒருவகைக் கருங்கல்லைப் பொடியாக்கி, அதனை இப்பசையோடு சேர்த்துப் பிசைந்து உருவாக்கிய கல்லே காரோடக்கல். கற்பொடியைப் பிசினிலிருந்து பிரிக்க முடியாதன்றோ. 356ஆம் செய்யுளில், இக்கட்டான சூழலில் நா பேச வொட்டாமல் அண்ணத்தோடு ஒட்டிக் கொண்டதை விளக்க இதே கல் உவமையாக்கப்பட்டுள்ளது. 'சிறு காரோடன் பயினொடு சேர்த்திய கற்போல் நாவினேமாகி' (அகம். 356) என்பது பாடற்பகுதி.

முதற்பாட்டில், இத்தொழிலாளியின் ஊராகப் பொதினி சுட்டப்படுகிறது. அவ்வூர் இன்று பழனியாகி விட்டது. பழனிமலையிற் கோவில் கொண்ட முருகப்பெருமானின் திருவுருவச்சிலை நவபாடாணத்தாலானது என்றும், அதனைச் செய்தவர் போகமுனிவர் என்றும் சான்றோர் கூறுவர். இச்சிலைக்குச் சார்த்திய சந்தனம் மருத்துவப் பண்புடையது என்றும் சான்றோர் கூறுவர். பாடாணமாவது கல்லாகும். ஒன்பது வகையான கற்களைப் பொடி செய்து யாதோ ஒரு பசையின் துணையுடன் சேர்த்து இவ்வுருவச்சிலை செய்யப்பட்டது என்று கருத வேண்டியுள்ளது. காரோடக்கல்லுக்குரிய தொழில் நுட்பமே கடவுள் உருவத்தினைச் செய்யவும் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இக்காரோடக்கல்லை ஏற்றுமதி செய்தனர் என்றும், அது கெம்பகரோடம் எனக் கல்வெட்டில் சுட்டப்பட்டுள்ளது என்றும் அறிஞர் பி.எல்.சாமி என்பார் குறிப்பிட்டுள்ளார். தஞ்சைக்குக் கிழக்கேயுள்ளதோர் ஊர் கொரடாச்சேரியாகும். இதன் பழைய பெயர் காரோடுசேரி என்பது கல்வெட்டால் அறியப்படுகிறது. இது காரோடர்சேரியாகலாமல்லவா? சிந்தித்துப் பாருங்கள்.

இக்கல் வகையைக் கொறுண்டம் என்பார் இவ்வறிஞர். (சங்க இலக்கியத்தில் கல்வெட்டுச் சொற்கள் ஆராய்ச்சி இதழ்.)

Corundum: a mineral consisting of alumina, second in hardness only to the diamond including sapphire, ruby,emery (Tamil corundum) (Chambers English dictionary, p.320, Reprint 1990)

1.Corundam emery, adamantine spar
2.Grey flint Emery

சாணைக்கல் செய்வதற்குதவும் ஒரு வகைக்கல்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, - பக்.1019.

பாண்டியன் தனுக்கோடி

தமிழ் மக்களில் பலர் தனுக்கோடி என்னும் பெயரைப் பூண்டுள்ளனர். ஊரின் பெயரே மனிதர்க்கு அமைதலைச் சிதம்பரம், பழனி, செந்தில் முதலான பெயர்களால் அறியலாம். பாண்டியன் ஆட்சிக்குட்பட்ட தனுக்கோடி பண்டு 'கோடி' என்றே வழங்கிற்று.

தொன்மைபற்றித் 'தொன்முதுகோடி' என்று புகழ்ந்துரைக்கப்பட்டது அவ்வூர்.

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிய விந்தன்றால் இவ்வழுங்க லூரே" (அகம்.70)

என்பது அகநானூற்றுச் செய்தி. இராமபிரான், தம் பரிவாரங்களுடன் தொன்முதுகோடியில் கடற்கரை யோரமாக இருந்தவோர் ஆலமரத்தடியில் யாதோ மந்தணமான காரியம் பற்றி ஆய்ந்த பொழுது பறவைகள் ஆரவாரம் செய்தன என்றும், இராமபிரான் தம் கையை அசைத்து அப்பறவைகளை அமைதியாக்கினார் என்றும் இப்பாடல் குறிக்கின்றது. இராமேசுவரத்திற்கும் தனுக்கோடிக்குமுள்ள உறவு உலகறிந்ததன்றோ. இவ்விடம் பற்றிச் சென்னைப் பேரகராதி இப்படிக் கூறுகின்றது: இராமேசுவரத்திற்குத் தென்கிழக்காக, நீண்ட தரை முனையிலுள்ள பிரசித்தமான தீர்த்தக் கட்டம். "The promontory in the south east of Rameswaram and the bay enclosed thereby being one of the most sacred places in India" [Lexicon- vol. III 1982, P. 1819]

இராமநாதபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த வீரர்க்கு முன்னின்ற வீரனான விசய ரகுநாத சேதுபதியை "தனுக்கோடி காத்தவனே ரகுநாத தள சிங்கமே" எனப் பாராட்டுகிறது தளசிங்கமாலை என்ற நூல் சேதுகாவலர்களான மறவர்குல மாணிக்கங்களோடு உறவுடைய தனுக்கோடி பற்றி 2500 ஆண்டுகட்கு முற்பட்ட அகநானூறு சிறப்பானதொரு செய்தியைப் பதிவு செய்திருப்பது வியப்பிற்குரியதாகும். அகநானூற்றில் இடம்பெற்ற இச்செய்தி எந்த இராமாயணத்திலும் இல்லாதது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(இம் மாமன்னர்க்குத் திருமலை சேதுபதி என்றும் பெயருண்டு. 1623 - 1659 காலப் பகுதியில் மதுரையை ஆண்ட திருமலைமன்னர் காலத்தவர் விசயரகுநாத சேதுபதியாவார்.)

மாஞ்செல மிதித்த மால்

இராமாயணம் தொடர்பான செய்தியை விட, மகாபாரதம் குறித்த செய்திகளே சங்க இலக்கியத்தில் மிகுதியாகக் கிடைக்கின்றன. கலித்தொகையில் பாரதக்கதைப் பகுதிகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அகநானூற்றில் காணப்படும் கண்ணன் பற்றிய ஒரு கதையும் வேறு பாரதங்களில் காணமுடியாததே. வடக்கிலுள்ள தொழுநைத்துறையில் இடையக் குலப் பெண்கள் குளிர்ந்த தழையைப் பறித்து உடுத்திக் கொள்ளும் வகையில் திருமால் ஒரு மரத்தின் மேலே நின்று ஒரு கிளையைத் தன் காலால் மிதித்தார் என்பது அச்செய்தி.

-வடா அது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர் மரஞ்செல
மிதித்த மாஅல்" (அகம்.59)

என்பது பாடற்பகுதி. இதன் ஆசிரியரும் மதுரை மருதன் இளநாகனார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடலிலேயே, திருப்பரங்குன்றம் அந்துவன் என்ற புலவரால் புகழப்பட்டது என்ற வரலாறும் குறிக்கப்படுகிறது.

திருப்பரங்குன்றத்து முருகப்பெருமானை நல்லந்து-வனார் பாடிய பாட்டு ஒன்று பரிபாடலில் உள்ளது. (பரி.8) ஆனால் அதன்கண் மிகப்பல வடசொற்கள் பயின்று வந்துள்ளமையால், அவரினும் வேறானவரே மருதனிளநாகனார் குறிப்பிட்ட அந்துவன் என்று கருத வேண்டியுள்ளது.

"சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"
(அகம்.59)

என்பது இளநாகனார் குறிப்பு.

மன்மருங்கறுத்த மால்

திருமால் எடுத்த திருஅவதாரங்கள் பத்தினுள் பரசுராம அவதாரமும் ஒன்று. இராமாவதாரத்திற்கும் கண்ணன் அவதாரத்திற்கும் புதுமை சேர்த்த தமிழகத்தில் பரசுராம அவதாரத்திற்கும் ஓரிடம் அளித்துள்ளமை ஒரு நெய்தல் திணைப்பாட்டால் அறியப்படுகிறது. பரசுராமர், தம் தந்தையின் கட்டளைப்படி மன்னர் மரபின் 21 தலைமுறைகளை அழித்து வேள்வி செய்தார் என்றும், அவ்வேள்வியும் பழந்தமிழகத்தில் செல்லூர் என்ற ஊர்க்கு அருகில்தான் நடந்தது என்றும் மருதன் இளநாகனாரே கூறியுள்ளார்.

"கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச் சமம் ததைய
மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன் முயன்று அரிதினின் முடித்த வேள்விக்
கயிறு அரையாத்த காண்தகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல யாவரும்
காண லாகா மாண்எழில் ஆகம்" (அகம். 220)

இப்பாட்டிற்குறித்த செல்லூர் சோழநாட்டிலுள்ளதோர் ஊர் என்பர். எனினும், மதுரையின் பகுதியாக இன்றுள்ள செல்லூராகலும் கூடுமே. (இதனை இயற்றியவரும் மதுரை மருதனிளநாகனார் என்பது எண்ணத்தக்கதாகும்.)

'தண்சாய்க்கானம்' (திருச்சாய்க்காடு) புகார்ப் பகுதியிலுள்ளதாகும். நெய்தல் நிலத்திலுள்ள இவ்வூரையும் இவ்வாசிரியர் சுட்டுவதனால், செல்லூர், சோணாட்டூர் என்பதும் பொருந்துவதே. இதுகாறும் கூறியவற்றால் அகநானூறு, தமிழ் நாகரிக வரலாற்றில் குறிப்பிடத்தக்க பல அரிய செய்திகளின் வைப்பாக விளங்குவதனை நன்குணரலாம்.

பாண்டித்துரைத் தேவரும் சேதுபதி மன்னரும்

ஒருநாள் பாண்டித்துரைத் தேவர் சேதுபதி மன்னரைப் பார்க்கப் போயிருந்தார். மன்னரிடம் பேசிக் கொண்டிருந்து புறப்படும்போது பாசுகர சேதுபதி பாண்டித்துரைத் தேவரைப் பார்த்து, "சாமி, கொஞ்சம் இருங்கள் ஒரு முக்கியமான சமாசாரம் சொல்ல வேண்டும்" என்று சொன்னார். பாண்டித்துரைத் தேவரைச் சாமி என்று அழைப்பது வழக்கம்.

எல்லோரும் போனபிறகு மகாராஜா ஒரு கருத்தைச் சொன்னார். அது கேட்டு மிகவும் மகிழ்ந்து, "அது மிகவும் பொருத்தமானது" என்று பாண்டித்துரைத் தேவர் சொல்விட்டுத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. இருந்த விடுதிக்கு வந்தார்.

உ.வே.சா.விடம் தங்கள் தமிழ்ப்பதிப்புப் பணிக்கு ஒரு கிராமத்தையே தங்கள் பெயரில் எழுதிவைக்க மகாராஜா நினைக்கிறார் என்றார் பாண்டித்துரைத் தேவர். பாசுகர சேதுபதி அவர்கள் உ.வே.சா.வின் தமிழ்ப்பணிக்கு உதவியாக ஒரு கிராமத்தையே மானியமாக வழங்க விரும்பிய செய்தியை இரகசியமாக வைத்துக் கொண்டு ஐயரது சம்மதத்தைப் பெற்று எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார். (அதைத் தமிழ்த்தாத்தா ஏற்கவில்லை என்பது வேறு விசயம்)

மன்னர் தாம் செய்ய இருக்கும் தமிழ்ப்பணி சார்ந்த எதையும் பாண்டித்துரைத் தேவரிடம் தெரிவித்து அவர் மூலமாகவே செய்ய விரும்பியது இங்குக் கவனிக்கத் தக்கது.

சங்க நெடும் பாடல்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்



முனைவர். அமுதன்,
பொள்ளாச்சி.

அது ஒரு பாலை நிலம். ஒரு பொருநன். அவன் மனைவி, சுற்றத்தார் - அனைவரும் போய்க் கொண்டிருக்கிறார்கள். எங்கே?

தங்கள் கலைச்செல்வத்தைப் பெற்றுப் பசி போக்கும் பொருட்செல்வத்தைத் தங்களுக்குத் தந்து மகிழ்விக்கும் ஒரு நல்லோனைக் காணோமா? என்ற ஏக்கம் துரத்த, அந்தப் பசிப்பட்டாளம் போய்க் கொண்டிருக்கிறது.

அவர்கள் இடுப்பில் இருக்கும் ஆடையைப் பாருங்கள்! அந்த ஆடையில் ஈரும் பேனும் கூடிக் கூட்டாட்சி நடத்துகின்றன. வேர்வை நாற்றம், ஆடை அசையும் பொழுதெல்லாம் வெளியேறுகிறது. அதில் நெய்த நூலை விட, கிழிசலைத் தைத்த நூல்கள் மிகுதி.

> *"ஈரும் பேனும் இருந்து இறை கூடி*
> *வேரொடு நனைந்து, வேற்றிழை நுழைந்த*
> *துன்னல் சிதார்"* (பொருநர்: 80 - 82)

மதிய வெயிலில் கொதிக்கும் மணலில் கால் கொதிக்கச் சென்று கொண்டிருந்த அந்த வறுமைப் பேரணிக்குத் திடீரென்று ஓர் இடையூறு.

"நில்லுங்கள்! உங்களிடம் இருப்பதையெல்லாம் எடுங்கள். . ., எங்களிடம் ஒப்படையுங்கள்!"

வேலும் வாளும் நீட்டி நின்றது அந்தக் கொள்ளைக் கூட்டம்.

"எங்களிடம் வயிற்றுப் பசியைத் தவிர வேறு என்ன இருக்கின்றது? ஒன்றும் இல்லையே! உள்ளிருக்கும் பசியை வெளியே எடுத்து உங்களுக்குத் தர முடியாதே!" "பசப்பாதீர்கள்! அது என்ன குடம்போன்ற ஒன்றைத் தோளில் சார்த்தியிருக்கிறீர்கள்?"

"அது யாழ்!"

"எதற்கு?"

"இசை எழுப்பப் பயன்படுவது!"

"அப்படியென்றால். . . ?"

"இந்த நரம்புகளை மீட்டினால் இதனுள்ளிருந்து இசைத்தேவி வெளி வருவாள்!"

"எங்கே செய்து காட்டுங்கள்! அந்த இசைத் தேவியை வெளியே வரச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" யாழ் மீட்டப்படுகிறது. இசை வெள்ளம் புறப்படுகிறது. விறலி பாடியபடியே மீட்டுகிறாள்; மீட்டிய படியே பாடுகிறாள்!

அந்தப் பாலை முதன்முதலில் ஒரு மழையைச் சந்திக்கிறது. அது இசை மழை. அந்தக் கள்வர்கள் இதுவரை இப்படி ஓர் இசையைக் கேட்டதில்லை. அந்தக் கொள்ளையர்கள் உள்ளம் கொள்ளை போய்விட்டது. கொள்ளையர்களிடம் கொள்ளையடிப்பது எத்தகைய தீரம்? வாயைத் திறந்தபடி மெய்ம்மறந்து நிற்கிறார்கள்!

அவர்கள் கைகளில் உள்ள ஆயுதங்கள் கைநழுவி வீழ்கின்றன! ஆயுதங்கள் மட்டுமா நழுவி வீழ்ந்தன? இல்லை இல்லை!

அவர்கள் உள்ளத்தில் பன்னெடு நாளாய்க் குடியிருந்த கொடுமையும் கொள்ளைக் குணமும் நழுவி வீழ்ந்துவிட்டன!

விறலியின் பாட்டும் யாழின் இசையும் நின்றன. இல்லை; இசைத்தேவியின் ஊர்வலம் நின்று போனது. இசைக்குக் கொள்ளை போயின அவர்களின்

நெஞ்சங்கள்! அவற்றில் இப்போது இரக்கம் மட்டுமே மிச்சம். கொள்ளையர்கள் தங்கள் மடியிலிருந்த எல்லாப் பணத்தையும் எடுக்கிறார்கள்; விறலி கையில் கொடுக்கிறார்கள்; இன்றிலிருந்து கொடு மனத்தையும் கொள்ளைத் தொழிலையும் விடுக்கிறோம் என்று கூறியவாறு ஆயுதம் விடுத்த கைகளோடு போய்க் கொண்டே இருக்கிறார்கள். பணம் பிடுங்க வந்தவர்கள், பணம் கொடுத்த வள்ளல்களாய்ப் போய்க் கொண்டேயிருக்கிறார்கள்!

இத்தனை வரிகளில் இப்பொழுது சொல்லப்பட்ட நிகழ்ச்சியை இரண்டே அடியில் சொல்ல முடியுமா? முடியும். பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநர் ஆற்றுப்படை பாடிய முடத்தாமக்கண்ணியாரால் முடியும்.

கேளுங்கள் அந்த இரண்டு வரிகளை:

"ஆறலை கள்வர் படைவிட, அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"-

(பொருநர்: 20 - 21)

சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் சங்க நெடும் பாட்டுகளுக்கே உள்ள தனிச் சிறப்பு! கள்வர்கள் மனங்களின் கடுமையை அழித்துக் கருணை வெள்ளம் பாய்ச்சியது தமிழ் இசைக் கலை.

இந்த நிகழ்ச்சி, வருங்கால மக்களுக்கு உணர்வூட்டும் என்று கருதி, பொதிந்து வைத்திருக்கிறது பொருநர் ஆற்றுப்படை என்னும் சங்க நெடுங்கவிதை!

பட்டினப்பாலையும் சங்க நெடுங்கவிதைகளுள் ஒன்று. சோழன் கரிகாற் பெருவளத்தானை, கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது என்ற அந்த நெடும்பாட்டின் இறுதியில் வரையப் பெற்றுள்ள குறிப்பொன்று கூறுகிறது.

அரசனுக்கு ஒருமை விகுதி "அன்".
புலவருக்குப் பன்மை விகுதி "ஆர்".

இந்த ஓர் எழுத்து மாறுபாட்டில், அன்று புலவர்கள் பெற்றிருந்த புகழ் எல்லாம் கொட்டிக் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது.

கவிஞருக்கும் கவிதைகளுக்கும் நெஞ்சு பறிகொடுத்து, அவர்களை ஆண்டிருந்த மன்னர்கள் புறச்சிம்மாசனத்தைத் தாங்கள் வைத்துக் கொண்டு, அகச்சிம்மாசனத்தை இக்கவிஞர்களுக்குத் தந்து விட்ட இலக்கிய வரலாற்றை "ஆன்", "ஆர்" எனும் விகுதியில் உள்ள ஒரெழுத்து மாற்றம் உலகுக்கு உணர்த்தி நிற்கிறது.

இந்தப் பட்டினப்பாலை நெடும்பாட்டுக்கு அரசன் கொடுத்த பரிசுப் பணம் எவ்வளவு தெரியுமா உங்களுக்கு? கேட்டால் வியப்பின் விளிம்புக்கே போய் விடுவீர்கள்!

16 லட்சம் பொன்! அந்த 301 அடிகளுக்குக் கரிகாலன் கொடுத்த பரிசு 16 லட்சம் பொற்காசுகள்!

உலகில் மிக அதிகமான தங்கம் பரிசு பெற்ற ஒரு நூல், ஒரே நூல் "பட்டினப்பாலை" யாகத்தான் இருக்க முடியும்! அந்தக் காலத்தில் உலக உச்ச அதிசய நிகழ்வுகளைப் பதிவு செய்யும் (கின்னஸ்) புத்தகம் இல்லை. அதனால் இது பதிவு பெறவில்லை!

இந்தப் பட்டினப்பாலையின் புகழ் இன்னொரு நிகழ்ச்சி யாலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலின் அருமையையும் பெருமையையும் கருதி, சோழ வேந்தனின் அரண்மனையில், இந்தப் பட்டினப்பாலை அரங்கேற்றத்திற்கென அழகு கொலு வீற்றிருக்கும் பதினாறு கால் மண்டபம் ஒன்று புதிதாக அமைக்கப் பட்டது. அந்தப் பதினாறுகால் மண்டபத்திலிருந்துதான் கரிகால்பெருவளத்தான் மீது; கடியலூர் உருத்திரங் கண்ணனார் இந்நூலைப்பாடி அரங்கேற்றினார்.

என்றும் பதினாறாய் இந்நூல் இலங்க வேண்டும் என்று இந்தப் 16 கால் மண்டபம் கட்டப்பட்டது போலும்.!

பல்லாண்டுகள் கழிந்தன. பாண்டியன் செயமாறன், சோழன் மேல் படையெடுத்து வென்றான். பாண்டியன் சோழ மன்னன் அரண்மனையை முற்றும் தீயிட்டு அழித்தான். அன்று அந்த அரண்மனையில் அழியாத பொருள் இல்லை - ஒன்றே ஒன்றைத் தவிர! எது அது? அது இந்தப் பட்டினப்பாலை அரங்கேறிய பதினாறு கால் மண்டபம்! அதனை எரிப்பது தமிழை எரிப்பதற்குச் சமம் என்று பாண்டியன் கருதி அந்த மண்டத்தை மட்டும் அழிக்காது விட்டுவிட்டுச் சென்றுவிட்டான்!

முரசுகட்டிலில் அறியாது துயில்போன மோசிகீரனை, வாளால் துணிக்கப் போனபோது, சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை, துயில்பவர் புலவர் என்றுணர்ந்து கத்தியை வீசி விட்டுக் கவரியை எடுத்து வீசினான்.

தூங்கியது ஒரு தனி மனிதரல்லர்; தூங்கியது குன்றாக் கொழி தமிழ்; அது முற்றிப் பழுத்த புலமை என்று உணர்ந்ததன் விளைவு அது!

பட்டினப்பாலை அரங்கேறிய பதினாறுதூண் அரங்கம், பாதுகாக்கப்பட்ட நிகழ்ச்சியைத் திருவண்ணாமலைக் கல்வெட்டு ஒன்று பாதுகாத்து வைத்திருந்து சொல்கிறது:

"தத்துநீர் வரால் குடுமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர், பொன்
பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப்பாலை கொண்டதும்"

என்பது கலிங்கத்துப்பரணிச் செய்தி. இச்செய்தியைத் திருவருணைக் கல்வெட்டு மேலும் நயம்படப் பின்வருமாறு சொல்கிறது:

"வெறிஆர் தளவத் தொடைச் செயமாறன்
வெகுண்டது ஒன்றும்
அறியாத செம்பியன் காவிரிநாட்டில் அரமியத்துப்
பறியாத தூண்இல்லை; கண்ணன்
செய்பட்டினப் பாலைக்குஅன்று
நெறியால் விடும்தூண் பதினாறுமே
வென்று நின்றனவே"

உலக இலக்கிய வரலாற்றில், 16 லட்சம் பொன் பெற்றது என்று ஒரு நூலும் எங்கும் இல்லை.

அந்த நிகழ்ச்சிக்கு நினைவுச் சின்னமாயிருந்த மண்டபத்தை, போர் வெறியிலும் அழியாது காத்த தமிழ் தழீஇய வரலாறுடைய ஒருநாடு இப்புவியில் எங்கும் இல்லை!

"தமிழன் என்றோர் இனம் உண்டு!
தனியே அவற்கொரு குணம் உண்டு!"

என்ற நாமக்கல் கவிஞரின் சுவைபொதிந்த அடிகளின் பொருள் இப்பொழுது நன்கு நமக்குப் புரியக்கூடும்!

எட்டுத்தொகை நூல்களுள் சிலவற்றிற்குக் கடவுள் வாழ்த்து முன்பு இல்லை. இதனால், கடவுளுக்குத் தொல்லை தராது, அவரை அவர் பாட்டுக்கு விட்டுவிட்டு, அறவாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தனர் பண்டைத் தமிழர்கள் என்று தெரிகிறது.

பின்வந்த பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடிச் சேர்த்தார். அதுபோலப் பத்துப்பாட்டின் ஒன்பது பாட்டுக்கும் கடவுள் வாழ்த்துப் பாட்டாக அமைந்திருக்கிறது திருமுருகாற்றுப்படை.

அது ஓரடியில் யாரும் உரைக்க முடியாதவாறு தெய்வ இலக்கணம் கூறுகிறது.

"என்றும் இளையாய்! அழகியாய்!" என்பது அது கூறும் இறைமையின் இலக்கணம். எது என்றும் இருக்கிறதோ, எது என்றும் இளமையாய் இருக்கிறதோ, எது என்றும் அழகாய் இருக்கிறதோ அது தெய்வம்!

தெய்வ இலக்கணத்தை இதைவிட எளிதாய்ச் சுருக்கமாய் எப்படிச் சொல்ல முடியும்?

நாம் என்றும் இருப்பதில்லை; என்றும் இளமையாயும் இருப்பதில்லை; என்றும் அழகாயும் இருப்பதில்லை - ஓரடியில் இறைமைக்கும் மானுடத்துக்கும் இலக்கணம் கூறியாயிற்று!

இவ்வாறு சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் பொங்கப் பொங்க நொங்கும் நுரையுமாய்ப் பெருக்கெடுத்தோடுகின்றன சங்க நெடும் பாடல்கள். சங்க நெடும் பாடல்களில் செம்பாதியாகிய ஐந்து பாடல்கள் ஆற்றுப்படைப் பிரிவின.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

எனும் அற்புதக் கோட்பாட்டை உலகுக்கு அறிவிக்கிற ஆற்றுப்படைகள், ஈத்துவக்கும் மனம் கொண்ட நம்மவர் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்து ஈர்த்துள்ளதில் வியப்பொன்றும் இல்லை.

"பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன" (தொல்36)

இவ்விலக்கிய வடிவம் பழந்தமிழருக்குப் பெரிதும் பிடித்துப் போன ஒன்றாயிற்று. ஏன் என்றால், தொல்தமிழரின் பண்பாட்டுக் கோட்பாடு இந்த இருஅடிகளில் சிக்கியுள்ளது.

ஒரு செல்வரிடம் போய்ச் செல்வம் பெறுகிறார் ஒருவர். அவ்வாறு செல்வத்தைப் பெற்றவர், பெறாத வறியவரிடம் "அச் செல்வரிடம் சென்று நீயும், என்போல உன் நிலை சொல்லிப் பெற்று மகிழ்!" என்று வழிகாட்டி அனுப்பி வைப்பது ஆற்றுப்படை இலக்கியம்.

ஆற்றுப்படை என்னும் இந்த அற்புத இலக்கியப் படைப்பு, உலக இலக்கியம் எவற்றிலும் காணப்படாதது. பிறர் உயர்வைக் கண்டு பொறுக்க முடியாத மனித மனப்பேயை வென்றெடுத்த இலக்கிய முயற்சியின் வெற்றி விளைச்சல் ஆற்றுப்படை இலக்கியம்.

செல்வம் பெற்றார் அகத்துக்குள், செல்வம் பெறாத எளியோர் சென்றடையப் புலவர்கள் அமைத்துத் தந்த அற்புதப் பாலம் ஆற்றுப்படை இலக்கியம்.

செல்வம் பெற்றவர்கள், அச்செல்வத்தை மற்றவர்கள் அடைந்துவிட முடியாதபடி, அச்செல்வம் வெளிச் செல்லும் வழிகள் அனைத்தையும் அடைத்துவிட ஓயாது முயல்வதுதான் மிகு செல்வர்களின் முழுநேரப் பணியாகும்.

அந்த மனஇயல்பை வெல்ல எழுந்த மகத்தான இலக்கியப்போர் முயற்சி இந்த ஆற்றுப்படை! மேலும், தமிழ்நாட்டின் ஐந்திணை நிலங்களிலும் நம்மைக் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறது ஆற்றுப்படை. மேனாட்டார் புகலும் "Easy Chair Travellague'' என்பது இதுதான். வீட்டை விட்டு ஆடாமல் அசையாமல் இருக்கையில் இருந்து கொண்டே உலகங்களைச் சுற்றிவரச் செய்யும் மாயக் கம்பளப் பயணம் இது. அக்காலத்து மக்களுக்குத் தகவல் தொடர்புச் சாதனங்களாக, இந்தப் பாணர்கள் சார்பாகப் புனைந்த இவ்வகை இலக்கியங்கள் மிகப் பெரும் பணி புரிந்திருக்கின்றன.

இல்லாதவனுடைய ஏழ்மையை இதயம் உருக வருணித்து, இருப்பவன் நெஞ்சத்தில் கருணை ஊற்றின் கண்களைத் திறக்க வைக்கின்றன இந்த ஆற்றுப்படை இலக்கியங்கள். பாட்டுடைத் தலைவனின் பண்புகளை மட்டுமின்றி, அக்காலச் சமுதாயத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றங்களை, இலக்கிய அழகோடு காட்டி நிற்கிற கவின் இலக்கியமாகவும், இச்சங்க நெடும் பாடல்கள் மிளிர்கின்றன.

வள்ளலிடமிருந்து பரிசு பெற்று வந்தவன் காட்டும் வழித்தடத்தில் உள்ள ஆறுகள், குளங்கள், கோயில்கள், குடும்பங்கள், சிற்றூர்கள், பேரூர்கள் - அவ்விடங்களில் வாழ்ந்து வரும் அப்பழுக்கற்ற மனமுடைய மக்கள், அவர்களின் அன்பு கொட்டும் விருந்தோம்பல்கள் அத்தனையையும் இலக்கியமாக்கி விழிமுன் நிறுத்தும் மேதகவு ஆற்றுப்படைகள் பெற்றுள்ள அளப்பரும் ஆற்றல்கள் ஆகும்.

இந்த நெடும் பாட்டுகளின் வளர்ச்சியே, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவிய வளர்ச்சியில் போய் நின்றது. காவிய எழுச்சிக் காலத்தில், ஆற்றுப்படைகளின் வழித்தட வர்ணனைகளே ஆற்றுப் படலம், நாட்டுப்படலம், நகரப்படலங்களாகப் பரிணமித்தன.

இந்த ஆற்றுப்படை இலக்கியங்களில் சுவைசுவையான அற்புத நிகழ்ச்சிகளைப் பொதிந்து வைத்திருக்கிறார்கள் நம் சங்கப் புலவர்கள். தமிழரின் உரிமைமிகு சொத்துக்களுள் ஒன்றான விருந்தோம்பல் பற்றிச் சிறுபாணாற்றுப்படை செப்பும் ஒரு நிகழ்வு ஒரு சோறுபதமாக நாம் உணர உதவும்.

உழவர் தங்கை அவள். யானையின் தும்பிக்கை போன்ற சடை அவள் முதுகில் துவள, உணவு சமைக்கிறாள். வீட்டுக்குள் இருந்தவாறே, வாடிய முகத்தோடும் வற்றிய வயிற்றோடும் வழியில் ஒருவர் செல்வதைப் பார்க்கிறாள். தன் மகனை அழைத்து, "அந்த மாமாவை உணவுண்ண அழைத்து வா!" என்று வேண்டுகிறாள் அந்த உழவர் தங்கை. உடனே, தெருவுக்கு ஓடி, வழிப் போக்கரின் கையைப் பற்றி, "மாமா! வாருங்கள்! எங்கள் இல்லத்தே உணவுண்டு போகலாம்; உங்கள் தங்கை என் அன்னை; உங்கள் தங்கையின் வீட்டில் உணவுண்ண என்ன தயக்கம்? வாருங்கள்!" என்று தடுக்கிறான் அந்தச் சிறுவன்.

"மாமா!" என்று அழைத்த மறுகணமே சிறுவனின் தாய், வழிப்போக்கருக்குத் தங்கை ஆகிவிடுகிறாள். சகோதரி, தங்கை என்ற சொற் கேட்டாலே, தமிழர் உள்ளம் தணலில் மெழுகாகும். மறு பேச்சின்றி, திடீர்த்தங்கையின் வேண்டுதலை மறுக்க இயலாது, சரியென இசைந்து இல்நுழைந்து உணவுண்டு செல்கிறார் வழிப்போக்கர். இன்று பஞ்சமாகிப் போன மானுட நேயத்தின் மகத்தான வெளிப்பாடல்லவா இது!

இவ்வாறு உறவுமுறை சொல்லி, விருந்தினர்களை வழிமறித்து உணவூட்டும் நிகழ்வை "மகமுறை தடுத்தல்" என்று ஆற்றுப்படைகள் போற்றிப் புகழும்! ஆன்மநேயத்தின் புதிய வெளிப்பாட்டைச் சங்க நெடும்பாட்டு காட்டும். மற்றும் ஒரு நிகழ்வையும் காண்போம்.

அவள் உப்பு விற்பவள். அவள் தன் குழந்தைகளோடு குழந்தையாய், ஒரு குரங்கையும் அன்பு பாராட்டி வளர்க்கிறாள். பெற்றோர்க்கு வாய்த்த மக்கட் செல்வங்களுள் அதுவும் ஒன்றாய் வளர்கிறது. கிளிஞ்சல்களுக்குள் முத்துக்களைப் போட்டு, நெய்தல் நிலச் சிறுவர்கள் கிலுகிலுப்பையாகக் குலுக்கிச் செவியின்பம் நுகர்ந்து விளையாடுவர். அந்தப் பெண்ணின் குழந்தைகள் அந்தக் கிலுகிலுப்பை விளையாட்டு விளையாடுகிறார்கள். அவர்களோடு அவர்கள் சகோதரனாகத் திரியும் அக்குரங்குக்கும்

கிலுகிலுப்பை விளையாட விருப்பம். அந்த விருப்பத்தோடு அது தன் அம்மாவாகிய அம்மங்கையை ஆசை விழிகள் தவழ நோக்குகிறது.

"நானும் கிலுகிலுப்பை ஆடுவேன்; உதவுக" என்பது அந்த ஏக்கப் பார்வையின் பொருள். அவள் மனம் நெகிழ்கிறது. அவள் தன் குழந்தைகளை நோக்கி "மக்களே! தம்பிக்கும் கிலுகிலுப்பையைக் கொடுத்து விளையாடுங்கள்!" என்று ஆணையிடுகிறாள். அன்னையின் ஆணைப்படி, அவர்களும் குரங்காகிய அத்தம்பிக்கும் அந்த விளையாட்டுக் கருவியைக் கொடுக்கிறார்கள். குரங்கும் அதைக் குலுக்கிக் குலுக்கி மகிழ்கிறது. அன்னை உட்பட அக்குடும்பத்தின் அத்தனை உறுப்பினர்களும் அக்காட்சியைக் கண்டு மகிழ்வில் குலுங்குகிறார்கள்; திளைக்கிறார்கள். இப்பொழுது கிலுகிலுப்பை மட்டும் குலுங்கவில்லை. அக்குடும்பமே மகிழ்வில் குலுங்குகிறது. தன் மக்களுக்குக் கொடுக்க என்று தன் இருப்பாக வைத்து இருக்கும் பாசத்தையும், நேசத்தையும் அந்தக் குரங்கிற்கும் பங்கிட்டுக் கொடுக்கிறாள் அந்தத் தாய்.

> *"மகா அர் அன்ன மந்தி மடவோர் . . . .*
> *. . . . .*
> *கிளர்பூண் புதல்வரொடு கிலிகிலி யாடும்"*
>
> -சிறுபாண்(56 - 61)

அந்த உப்பு விற்பாளின் நெஞ்சத்தை, அதில் ஊறிப் பொங்கித் ததும்பும் ஆன்ம நேய அருஞ்சுரப்பை என் என்று போற்றுவது?

இதுதான் வள்ளலார் கண்ட ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையாக இருக்கக் கூடும். இல்லறம் என்பது, நற்பண்புகளின் பயிற்சிச்சாலை என்பர். இந்த ஆன்மநேயப் பயிற்சியும் அவற்றுள் ஒன்றாதல் கூடும்.

இத்தகைய அற்புத நிகழ்ச்சிகள் பற்பலவற்றைக் காலத்தை வென்று கட்டிக் காத்து வைத்திருக்கின்றன சங்க நெடுங்கவிதைகள் - கற்பாரை எதிர் நோக்கி! அன்றைய சங்க நெடும் பாட்டுக்கள் காட்டும் நூல் நெறியை இன்றைய நம் மக்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழத்தொடங்கினால், என்னென்ன அற்புதங்கள் நிகழும்! நினைக்க இனிக்கும் மனம்!

"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்" எங்கும் நிலவும். "நிலனும் மரனும் பயன் நிறைந்து செழிக்கும்". "அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக் கைப்பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக் கொடியோர் இன்றி" நாடுகாவல் நனிசிறந்தோங்கும்.

உருமும் உரறாது; அரவும்தப்பா; காட்டுமாவும் உறுகண் செய்யாத இலட்சிய வளநாடு மீண்டும் கட்புலம் ஆகும்.

"முதுவோர்க்கு முகிழ்த்த கை" கள் காணுமிடம் எல்லாம் காட்சிப்படும். "ஏரோர்க்கு (உழவர்க்கு) இனிய" செங்கோல் நீதி எங்கும் திகழும். மக்கள் "அறவழி பிழையாது ஆற்றின் ஒழுகுவார்கள்". "விழுச்சீர் எய்திய ஒழுக்கம் பிறழா" உயர் வாழ்க்கை வாழ்வார்கள் மக்கள். "அறநெறி பிறழா அன்புடை நெஞ்சினர்" ஆவார்கள் அவர்கள்.

அப்போது, "மழைத் தொழில் உதவும்; மாதிரம் கொழிக்கும்; தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைக்கும்" நிலம்.

"கொள்வது மிகைபடாமல் கொடுப்பது குறைபடாமல் பல்பண்டம் பகர்ந்து வீசும்" வணிகப் பெருமக்கள் மிகுவர். சட்டத்தின்படி தீர்ப்புரையாமல், தருமத்தின்படி தீர்ப்புரைக்கும் அறங்கூர் அவையங்கள் எங்கும் நிலவும்.

மக்களுக்கு மதவெறி காட்டாது மனநெறிகாட்டும் மாண்புடைச் சான்றோர் எங்கும் உலவுவர்.

இத்தகைய அறம் பிறழா வாழ்க்கை நெறியால், மேலே உள்ளதாகக் கூறப்படும் விண்ணுலக இன்பம், இங்கேயே பெற்று மக்கள் துய்த்துத் திளைப்பர்.

சங்க நெடும்பாடல்கள் காட்டும் இந்நன்னெறி அன்றி வேறு எந்நெறி ஒரு நாட்டு மக்களுக்குத் தேவை?

சங்க நெடும்பாட்டில், எந்த நூலைப் பிரித்தாலும், எந்த இடத்தை விரித்தாலும் தமிழரின் உன்னத நாகரிகமும் பண்பாடும் குதித்தெழுந்து நிற்கும்.


சங்க நெடுங்கவிதைகளை விரித்துப் படித்தால், பாலை நிலத்தின் கொடுமை தெரியும். விறலியரின் பாதாதிகேச அழகுக் கொள்ளை விரியும். ஐந்திணைத் தமிழ் நிலங்களின் வளம் அணி வகுக்கும். வறுமையோ உயிர் பெற்று நடக்கும்.

எதிராக, வள்ளல்கள் பலரும் கொடைப் பதாகையையேந்தி வறுமையை நேருக்கு நேர் எதிர்த்து நிற்பார்கள்; வள்ளல்களின் அணைப்பால் வறுமையில் உலர்ந்த பாணர், புலவர், விறலியர், குடும்பங்கள் செந்தாமரைக் காடு பூத்தது போலத் தேரேறிப் போகும்.

செந்தமிழ்த் தேனில் நனைந்து திளைத்து நாமும் செம்மாந்து திரும்புவோம். இதுதான் சங்க நெடுங்கவிதைகள், இன்றைய உலகுக்கு நல்கும் அற்புதக் கொடை!

> *"பத்துப் பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ?*
> *எத்துணையும் பொருட் கிசையும் இலக்கணமில் கற்பனையே!".*
>
> - மனோன்மணீயம் சுந்தரனார்.

சங்ககால விழாக்களில் காலத்தின் பங்கு



பேரா. க. முத்துவேல்,
மதுரை.

முன்னுரை

சங்க அக இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் செழுமையான வாழ்வியல் நெறிகளையும் சிந்தனைப் போக்கையும் அறிமுகப்படுத்தும் உளவியல் இலக்கியங்கள் ஆகும். இவை ஏதேனும் ஒரு மனநிலையையோ அல்லது சூழலையோ பாடு பொருளாய்க் கொண்டவை. இவ்விலக்கியங்கள் மூலம் காலையில் துயில் எழுதல் தொடங்கி இரவில் துயில் கொள்ளுதல் வரையிலான அக்கால மக்களின் வாழ்வியல் முறைகளின் அனைத்து நிகழ்வுகளும் காலத்தை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றன என்பதை அறியலாம்.

மக்கள் வாழ்வியலில் காலத்தின் பங்கு

சங்கத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த எளிமையான வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தனர். அன்பையும் அறத்தையும் ஆரத்தழுவிய நெஞ்சினை உடையவர்களாய் விளங்கினர். அறந்தோய்ந்த நெஞ்சினரான அத்தமிழ்ப் பெருங்குடி மக்கள் பண்பட்ட வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர்.

சங்ககால மக்கள் எந்த ஒரு நல்ல செயலாக இருந்தாலும், அச்செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்பாக நல்லநாள் பார்த்துச் செய்தால் அச்செயல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உடையவர்களாய் விளங்கினர். எனவே நல்ல நாள் பார்த்து நல்ல செயல் முடிவு செய்யப்பட்டது.

திருமணம், பண்டிகை போன்ற மங்கல நிகழ்வுகள், விழாக்கள் அனைத்தும் நாள் குறித்து நல்லநேரத்தில் முடிவு செய்யப்பட்டன.

விழாக்களில் காலத்தின் பங்கு

காலம் என்பது எல்லையன்றி விரிந்து பரந்து நிற்பதோர் அருவப் பொருளாயினும் அக்காலத்தின் வயப்பட்டு ஒழுகிய சங்ககாலத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை வளமுற நடத்துதற் பொருட்டு இயற்கையில் காணப்படும் ஞாயிறு, திங்கள், நாள்மீன் முதலியவற்றின் இயக்கங்களைக் கருவியாகக் கொண்டனர். கண்ணிமைப் பொழுதினும் நுண்ணிய பல காலக் கூறுகளையும், நாழிகை, நாள், திங்கள், ஆண்டு, ஊழியென எண்ணப்படும் மிகப்பெரிய காலக் கூறுகளையும் வரையறுத்துக் கொண்டனர். தாங்கள் வரையறுத்துக் கொண்ட காலத்தின் தன்மைக்கு ஏற்ப, பலவகையான விழாக்களைக் கொண்டாடினர்.

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றிய குறிப்புக்கள் சங்கஇலக்கியங்களில் கிடைக்கின்றன. சமயம் தொடர்பான விழாக்களும், சமூகம் தொடர்பான விழாக்களும் அக்காலத்தில் கொண்டாடப்பட்டன. நகரங்கள் சில 'விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்' என்று பாராட்டப்பட்டுள்ளன. விழாக்களில் ஆடலும் பாடலும் இடம்பெற்றன. பாணர் கூத்தர் முதலிய கலைஞர்கள் விழாக்களில் ஆடியும் பாடியும் மக்களை மகிழ்வித்தனர்.

சங்கத் தமிழருடைய விழாக்காலங்கள் சூரியனால் ஏற்படும் பருவகாலங்களையும் சந்திரனால் உண்டாகும் நிலாக் காலங்களையும் பொறுத்தவனாய் அமைந்திருந்தன. *"மக்கள் பலர் ஒருங்கு கூடி மகிழ்ந்து செய்யும் செயல்களெல்லாம் விழா என்று கூறப் பெறும்"*[1]

விழாக்கள் பண்டைக்காலந் தொட்டு நடைபெற்று வந்த மரபினை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

பெருநாள், திருநாள், மங்கல நாள் என விழாக்கள் வழங்கப்பட்டு வந்தன. இவ்விழாக்கள் அரசர் சார்பாகவும், கடவுளோடு தொடர்பு கொண்டும், ஒவ்வொரு குடும்ப நிகழ்ச்சிகள் குறித்தும், இயற்கையாக நிகழும் பருவநிலைகளை ஒட்டியும் பெரும்பாலும் நிகழ்ந்தன. அக்காலத்தில் *"நாட்டில் ஊர்தோறும் திருவிழாக்கள் நிகழும் இவை பெரும்பாலும் ஒவ்வொரு திங்களிலும் நிறைமதி நாளை ஒட்டி நிகழ்வனவாம்"*[2] காலம் முழுவதும் உழைப்பிலே ஈடுபட்டு வாழ்ந்த மக்கள் தங்களுடைய உள்ளமும் உடலும் ஒய்ந்து போகாமல் மகிழ்வுடன் இருக்க, பல்வேறு விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர். *"சேரி விழவுகளிலும், திருவிழாக் காலங்களிலும் ஆடவரும் பெண்டிரும் தம்முட் கலந்து, கைகோத்து தழுவித் துணங்கையாடுதலும் குரவை யயர்தலும் தமிழ்நாட்டில் பெருவழக்கிற்றாயிருந்தன"*[3]

எனவே விழாக்களின் போது பாட்டும் கூத்தும், விருந்துகளும் நிறைந்து, மக்களை அவ்விழாக்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

பொங்கல் விழா

இயற்கையாக நிகழும் பருவநிலைகளை ஒட்டிநிகழும் விழாக்களில் சிறந்தது பொங்கல் விழா. சங்கத் தமிழர்களால் அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளத்தைக் குறித்த விழாவாக மாறியது இப்பொங்கல் விழா. மார்கழியும், தையும் முன்பனிப் பருவம் ஆகும். பொங்கலும் அப்பருவத்தில்தான் வருகிறது. பொங்கல் எனும் சொல் சங்க இலக்கியங்களில்,பொங்கல் என்ற உணவிற்குப் பெயராக வழங்கப்படாமல் 'பொங்கி எழுதல்' என்னும் தொழிலை உணர்த்தும் பெயர்ச் சொல்லிற்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்றது.

"பெய்துபுலம் திறந்த பொங்கல் வெண்மழை
எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன
துவலை தூவல் கழிய"[4]

"கடாஅ மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ"[5]

"தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட"[6]

அக்காலத் தமிழர்கள் பொங்கல் என்னும் சொல்லை உணவுப் பெயருக்கு வழங்காமல் மழை பெய்து ஓய்ந்த மேகத்திற்கு அடைமொழியாய் வழங்கினர். அப்பொங்கல் மேகம் முன்பனித் தொடக்கத்தில் சிறுதுவலைகளைத் தூவும். இந்நிகழ்வு மழை பெய்து முன்பனிப் பருவத்தின் இடைக் காலமாகிய மார்கழியின் பிற்பகுதியில் தோன்றும். இப்பொங்கல் தோன்றினால் மழை பெய்யாது என்று அக்கால மக்கள் நம்பினர். ஐப்பசி தொடங்கி அடைமழையிலும் குளிர்காற்றிலும் வருந்திய மக்கள் பொங்கி எழுந்த வெண்மேகத்தைக் கண்டு பொங்கல் வந்தது, பொங்கல் வந்தது என்று ஆரவாரம் செய்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றன.

இளவேனில் விழா

இளவேனில் விழா காமனுக்காகக் கொண்டாடப்படும் விழா ஆகும். இளவேனில் காலம் காமனுக்கு உரிய காலமாகக் கொள்ளப்படும். *"இளவேனிற் காலத்து இன்ப உணர்ச்சியைத் தூண்டும் தெய்வமாகிய காமனை வழிபட்டுக் கொண்டாடி மகிழ்தல் காமவேள் விழாவாகும்"*[7]

வில்லவன் விழா என்றும் அது வழங்கப்பட்டது. அவ்விழாவின்போது மகளிரும் மைந்தரும் இளமரச் சோலையிலும் நீர்த்துறையிலும் நீராடி மகிழ்வர். பூக்கள் நிறைந்த பெருந்துறையிலே பகற்பொழுதிலே அனைவரும் கூடி இளவேனிற் செவ்வியை நுகர்ந்து மகிழ்வர்.

"மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும்
பொழுதன்றோ"[8]

இளவேனிற் காலத்தில் நடைபெறும் இவ்விழாவில் காமனை வேண்டிச் சில வழிபாடுகளும் செய்யப் பட்டன. தலைவன் ஒருவன் தலைவி ஊரில் காமவேள் விழா நடப்பதை அறிந்தான். விழா நடக்கும் போது தான் அங்கு இல்லையெனில் தலைவி வருந்துவாள்

என்று கருதித் திண்தேரேறி தலைவன் வந்ததாய்த் தோழி கூறுவதைக் கலித்தொகை குறிப்பிடுகிறது.

"காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிதென
ஏமுறு கடுந்திண்டேர் கடவி
நாம்அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே"[9]

இவ்விழாவின் போது கணவனைப் பிரிந்த மகளிர் வருந்தினர். சில ஆடவர்கள் பரத்தையருடன் கூடியாடினர்.

"உறலியாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடுவான் மன்றே"[10]

காதற் கடவுளான காமனைப் போற்றும் இவ்விழா இளவேனிற் காலத்தில் கொண்டாடப்பட்டது.

நீர் விழா

'புனலாட்டு விழா' என்று அழைக்கப்படும் இவ்விழா சங்ககால மக்கள் கொண்டாடிய விழாக்களுள் சிறப்பிடம் பெறுகின்றது. பருவகாலங்களுக்கு ஏற்ப, தாங்கள் நீராடும் நீர்த்துறையில் நீர்ப்பெருக்கம் மிகுந்து இருக்கும்போது நீராடி மகிழ்ந்தனர். இதை நீர்விழா என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன. மலர்களையும் பொன்மீன்களையும் எடுத்துக் கொண்டு மக்கள் நீராடச் சென்றனர். மன்னர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

"முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்"[11]

இப்பாடலில் தலைவனிடம் வரைவு வேட்கையைத் தூண்டும் தோழி, காவிரி நீராடும் துறையாக விளங்கியது என்பதையும் நீர்விழா அங்கு நிகழ்ந்ததையும் குறிப்பிடுகிறாள்.

"மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒண்கதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
களிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை"[12]

சோழன் கரிகாலன் ஆரவாரத்தோடு தனது சுற்றஞ்சூழ நீராட்டு விழாவில் கலந்து கொண்டான் என்பது இப்பாடலால் தெரியவருகிறது. நீர்விழாவின் போது நீர்ப்பெருக்கைக் கண்ட மக்கள் மகிழ்ந்து அம்மகிழ்ச்சியை அனைத்து மக்களுடனும் பகிர்ந்து கொண்டனர் என்பதை இதனால் அறியமுடிகிறது.

உள்ளி விழா

கொங்கு நாட்டுப் பகுதியில் வாழ்ந்த அக்காலத் தமிழர்கள் உள்ளிவிழாக் கொண்டாடினர். கொங்கர்கள் இடையிலே மணியைக் கட்டிக் கொண்டு ஆரவாரம்படத் தெருவிலே கூத்தாடுதல் உள்ளி விழாவாகும்.

"எவன்கொல் வாழி தோழி கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே"[13]

தலைவன் குறித்த காலத்திற்குள் தலைவியை வரைந்துகொள்ளாமல் காலம் தாழ்த்தியதால் ஊரில் அலர் பெருகியது. இதனை அறிந்தாள் தோழி. காலத்தின் அருமையைத் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டு அலர்ப் பெருக்கத்தினை அறிவுறுத்தும் பொருட்டு, உள்ளி விழாவின்கண் உண்டாகின்ற ஆரவாரம் போன்று பலர் வாய்ப்பட்ட அலரானது பல்கிப் பெருகுகின்றது என அலரின் இயல்பினை இப்பாடலில் தோழி இயம்புகிறாள். எனவே உள்ளி விழாவின் போது மிகுந்த ஆரவாரம் உண்டாயிற்று என்பதும் இதனால் புலப்படுகிறது.

பங்குனி விழா

பங்குனித் திங்களில் நிறைதிங்களும் உத்திரநாளும் கூடுகின்றநாளில் இவ்விழா கொண்டாடப்பட்டது. பகைவரை வென்று முழங்கும் வீரமுரசத்தை உடைய வெற்றி தரும் பேராற்றல் மிக்க சோழ மன்னர் தலைநகரமாகிய உறையூரிலே பங்குனி விழா கொண்டாடப்பட்டது.

"இன்கடும் கள்ளின் உறையூ ராங்கண்
வருபுனல் தெரிதரும் இடுகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"[14]

இங்ஙனமாக உறையூர் மக்கள் பங்குனி விழா நிகழ்த்தினர். இப்பங்குனி விழா நிறைமதி நாளை ஒட்டிக் கொண்டாடப்பட்டது.

பூந்தொடை விழா

பூந்தொடை விழா வீரர்களின் கலைப் பயிற்சித் தொடக்க விழாவாகும். அக்கால மக்கள் தாங்கள் செய்யும் காரியத்திற்கு ஏற்றநாளைத் தேர்ந்தெடுத்து அந்த நாளை அக்காரியத்திற்கு ஏற்ற முதல்நாளாகக் கருதினர். அந்த முதல் நாளை நல்ல நாளாகக் கருதி விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

"வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்"[15]

இங்ஙனமாக வீரர்களின் கலைப் பயிற்சிக்குத் தொடக்க விழாவாக அமைந்தது இப்பூந்தொடை விழா. இவ்விழாவின் போது, மாலைகளால் வீரனையும் விழா நடக்கும் இடத்தையும் அழகுபடுத்துவர். மறவர்கள் முதன்முதலாக அம்பு தொடுத்தற் பொருட்டு, நிகழ்த்தும் "தலைநாள் திருநாள்" பூந்தொடை விழாவாகக் கொண்டாடப்பட்டது.

கார்த்திகைத் திருவிழா

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய சமய விழாக்களுள் கார்த்திகைத் திருவிழா சிறப்பிடம் பெறுகிறது. கார்த்திகை மாதத்தில் மக்கள் அனைவரும் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடினார்கள். அத்திருநாளில் வீதியிலும், வீட்டிலும் விளக்குகளை ஏற்றித் தொழுதனர். கார்த்திகைத் திருநாள் மக்களுக்கு மகிழ்ச்சியும் சிறப்பும் கொடுக்கும் விழாவாக அமைந்தது. கார்த்திகை விண்மீனை "அறுமீன்" என்று வழங்கினார்கள். *"சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நட்சத்திரத்துடன் சேர்கிறான். கார்த்திகை மாதம் பூர்ணிமையன்று கார்த்திகை நட்சத்திரத்தோடு சேர்கிறான். கார்த்திகை நட்சத்திரம் ஆறு விண்மீன்களின் தொகுதி. அதை அறுமீன் என்று சொல்வார்கள்"*[16]

இவ்விழாவின் போது இல்லங்களும், வீதிகளும் புதுப் பொலிவினைப் பெற்றன.

"குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைத்
தறுமீன் சேரு மகலிரு ணடுநாண்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன் றுவன்றிய
விழவுட னயர............"[17]

கார்த்திகைத் திங்களில் நீராடி, விளக்கேற்றி வைத்துப் பார்ப்பனருக்கு அளித்தல் அறம் எனப்பட்டது. எனவே கார்த்திகைத் திங்களை, "அறம் செய் திங்கள்" என்றழைத்தனர்.

"அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல் சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே"[18]

தலைவியை உடன் கொண்டு போகும் தலைவன் அவளுடைய வருத்தம் நீங்குமாறு, "கார்த்திகை நாளின் பெயராலே பெற்ற அறஞ்செய்வதற்குரிய திங்களில் எடுக்கப்பட்ட விசும்பிலே செய்கின்ற ஒளியையுடைய நீண்ட விளக்கங்களின் வரிசை போலப் பல்பூக்கள் நிரம்பிய நின் தந்தைக்குரிய இக் காட்டினைக் காண்பாயாக" என்றான். இவ்வாறாகக் கார்த்திகை நாளில் வீடுகளும் தெருக்களும் அழகுபடுத்தப் பெற்றன.

கார்த்திகைத் திருநாள் மக்களுக்கு மகிழ்ச்சியும் சிறப்பும் கொடுக்கும் விழாவாக அமைந்தது. வீதிகளிலும் இல்லங்களிலும் விளக்கு ஏற்றி விளக்குகளை வரிசையாகத் தொங்கவிட்டனர். இவ்விழாவினைக் கார்த்திகை விளக்கீடு என்றும் அழைத்தனர். *"விளக்கீடு என்னும் திருவிழா கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் கொண்டாடப்பட்டது என்பதை கார்த்திகை நாள் விளக்கீடு என்னும் சொல் கொண்டு உணரலாம்."*[19]

விழாக்கள் பொதுவாக ஆண் பெண் இருபாலருக்கும் உரித்தான முறையில் இருந்தாலும் சிற்சில விழாக்கள் பெண்களுக்கே உரித்தான முறையில் அமைந்திருந்தன. அத்தகைய முறையில் பெண்களுக்கு உரிய நிலையில் கார்த்திகை விழா கொண்டாடப்பட்டது.

கார்த்திகை நாளில் புதிதாக மணம் செய்து வரப்பெற்ற மகளிர், பல்கோட்டடுப்பில் பாலுலையேற்றிப் பழனத்தில் விளைந்த பசுஞ்சாலிக் கதிர்களை முறித்து வந்து பதமாக அவலிடித்து, அப்பாலுலையிலிட்டு அடிசில் ஆக்கினர்.

"பல்கோட் டடுப்பிற் பாலுலை யிரீஇக்
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவ லிடிக்கு மிருங்கா முலக்கைக்
கடிதிடி வெரீஇய கமஞ்சூழ் வெண்குருகு"[20]

கார்த்திகை விழாவிற்குக் காரவலிடித்துப் பாற்பொங்கல் சமைத்துக் கடவுளுக்குப் படைப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறாக அக்கால மக்கள் கார்த்திகை நாளோடு நிறைமதி கூடும் திங்களைக் கார்த்திகை விழாக் கொண்டாடுவதற்கு உரிய காலமாகக் கருதி அதை விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பிறவிழாக்கள்

சங்கத் தமிழர்கள் நட்சத்திரங்களுக்கு உரிய காலங்களுக்கு ஏற்ப விழாக்களைக் கொண்டாடினார்கள். அவ்விழாக்களுள் கடவுளோடு

தொடர்புடையனவாக ஆவணி அவிட்டமும், பங்குனி விழாவும், கார்த்திகை விளக்கீடும் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டன. அரசர் சார்பாக, பிறந்த நாள் விழா, முடிசூடிய நாள் விழா, பகைவென்று திறைகொண்டு வரும் வெற்றி விழா போன்றவை கொண்டாடப்பட்டன. இதனைத் தொல்காப்பியர்,

"சிறந்த நாளணி செற்றம் நீங்கிப்
பிறந்த நாள்வயிற் பெரு மங்கலம்" என்பார்.

மேலும் ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழும் திருமணம், மகப்பேறு, மகவிற்குப் பெயரிடுதல், காதணி புனைதல், கல்வி பயில்வித்தல் ஆகியன விழாக்களாகக் கொண்டாடப்பெற்றன.

அவ்விழாவிற்கெல்லாம் காரணமாய் இருப்பவள் மனையாள். ஆதலினால் அவளை விழவு முதலாட்டி என்று அக்கால மக்கள் கூறினர். தலைவனது இல்லறம் சிறப்புற்று இலங்கத் தலைவி வருகையே காரணமாதலின் அவளை விழவு முதலாட்டி என்றனர்.

"யாய்ஆ கியளே விழவுமுத லாட்டி"

விழாவிற்குரிய முதன்மையை ஆளுகின்ற தலைவியைப் புகழும் தோழி,

"ஓர்இன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவு ஆயிற்று என்னும் இவ்ஊரே"

எனத் தலைவியின் வருகை விழாவிற்குரிய வளம் மிக்கதாயிற்று என்கிறாள்.

எனவே சங்கத் தமிழர்களின் விழாக் காலங்கள் இயற்கையில் நிகழும் பருவ காலங்களை ஒட்டி நிகழ்ந்தன. காலங்களுக்கு ஏற்ப, பருவ மாற்றங்களுக்குத் தக்கவகையில் அக்காலத்தில் விழாக்கள் அமைந்திருந்தன.

முடிவுரை

சங்கத் தமிழர்கள் காலத்தின் இயல்புகளை அறிந்து அவற்றிற்கேற்ப வாழ்க்கை முறைகளை, விழாக்களை அமைத்துக் கொண்டனர். மேலும் விழாக்காலங்களை இயற்கையில் நிகழும் பருவ காலங்களை ஒட்டியே அமைத்துக் கொண்டு நடத்தினர். காலத்தின் அடிப்படையில் செயல்களைச் செய்தால் அவற்றால் நன்மை உண்டாகும் என்பதைக் கண்டறிந்தனர்.

அடிக்குறிப்புகள்

1. சபைக்கட்டுரைகள், சன்மார்க்க சபை வெளியீடு, ப–1.
2. க.வெள்ளைவாரணன், சங்ககாலத் தமிழ்மக்கள், ப–54.
3. தமிழர் வாழ்வு (கட்டுரைத் தொகுப்பு), ப–23.
4. அகநானூறு, பா.எண்–217.
5. மேலது, பா.எண்–217.
6. ஐங்குறுநூறு, பா.எண்–276.
7. க.வெள்ளைவாரணன், சங்ககாலத் தமிழ்மக்கள், ப–55.
8. கலித்தொகை, பா.எண்–35.
9. மேலது, பா.எண்–27.
10. மேலது, பா.எண்–30.
11. அகநானூறு, பா.எண்–222.
12. மேலது, பா.எண்–376.
13. மேலது, பா.எண்–368.
14. மேலது, பா.எண்–137.
15. மேலது, பா.எண்–187.
16. கி.வா.ஜெகந்நாதன், வாழ்வரசி, ப–64.
17. அகநானூறு, பா.எண்–141.
18. நற்றிணை, பா.எண்–202.
19. பாலூர் கண்ணப்ப முதலியார், கட்டுரைக் கொத்து, ப67.
20. அகநானூறு, பா.எண்–141.

தமிழ் இலக்கியங்களின் வழி மதிப்புக்கல்வி



முனைவர். ம.ரா.போ. குருசாமி,
கோவை.

இந்தியக் கல்வி வரலாற்றில் 1835ஆம் ஆண்டு ஒரு முக்கியத் திருப்புமுனைக் காலமாகும். அந்த ஆண்டில்தான் பழிக்கள நாயகன் மெக்காலே இந்தியாவுக்கான கல்விமுறையை வகுத்தளித்த அவலம் நிகழ்ந்தது. அதற்குமுன் இந்த நாட்டில் கல்வி முயற்சியே இல்லையென்பது போலவும் கல்வியின் ஆழ அகலங்கள் தெரியாதவர்களாகவே பாரத நாட்டினர் வாழ்ந்தனர் என்பது போலவும் ஒரு கருத்து உண்டு. இன்றைய நிலையில்கூட இந்தக் கருத்தின் சாயல் கற்றோரிடையே உள்ளது என்பது வெட்கத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

தேசியக் கல்வி

இந்தியப் பண்பாட்டு வழியில் விழுப்பொருள் போற்றும் கல்வியே நம் கல்விநிலையங்களில் கற்பிக்கப்பட வேண்டும் என்று சிந்தித்தவர்கள் சிலர் உண்டு. அவர்களின் கருத்தோட்டத்தை நினைவூட்டிக் கொள்வது பொருத்தமாக இருக்கும். தமிழகத்தில் சுப்பிரமணிய பாரதியார் தேசியக்கல்வி பற்றி எழுதியுள்ளார். வெள்ளையாட்சி வழங்கிய கல்வி அடிமைகளுக்கே உரியது, (அது மண்படு கல்வி என்று கவிதையிற் கூறியுள்ளார்.) 'தேசியக்கல்வி' என்ற தலைப்பிலே எழுதிய உரைநடைக் கட்டுரையில் பாரதியார் தெரிவித்துள்ள சில கருத்துரைகளை எடுத்துக்காட்டுவது நலம்.

"உபாத்தியாயர்களுக்குத் தேச பாஷையில் நல்ல ஞானம் இருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, இங்ஙனம் தமிழ்நாட்டில் ஏற்படும் தேசீயப் பாடசாலைகளில் உபாத்தியாயராக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும் ஸ்வதர்மாபிமானமும் எல்லா ஜீவர்களிடத்திலும் கருணை உடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்தல் நன்று. அங்ஙனம் தேசபக்தி முதலிய உயர்ந்தகுணங்கள் ஏற்கெனவே அமைந்திராத உபாத்தியாயர்கள் கிடைத்தபோதிலும் பாடசாலை ஏற்படுத்தும் தலைவர்கள் அந்த குணங்களைப் புகட்டுவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்."

பாரதியாரிலிருந்து மேலே காட்டிய பகுதியிலிருந்து கல்வித் துறையினர் குறித்துக்கொள்ள வேண்டிய கருத்துகள்:

1. ஆசிரியர்களாக வருவோர் நாட்டுக்குரிமையுடைய சிறப்பு நூல்களை அறிந்தவர்களாக இருக்கவேண்டும்.

2. நாட்டுப்பற்று (ஸ்வதேசாபிமானம்), தமக்குரிய பண்பாட்டுப் பற்று (ஸ்வதர்மாபிமானம்) உடையவர்களாக இருக்க வேண்டும்.

3. எல்லா உயிர்களிடத்தும் கருணை உடையவர்களாக இருக்க வேண்டும்.

முதல் இரண்டு பற்றுகளும் கொண்டவர்கள் அந்த உணர்வுகளைப் பரப்புவதற்கு உரிமை கொண்டவர்களாகத் திகழ்வார்கள். எல்லா உயிர்களிடத்தும் கருணையுடைவர்களாக ஆசிரியர்கள் அமைய வேண்டும் என்பது பெரிதும் போற்றப்பட வேண்டிய கருத்தாகும். ஓர் இனத்தவரிடையேயும் பல்வேறு இனத்தவரிடையேயும் பிளவுகளும் பிணக்குகளும் பெருகிச் சமுதாயம் துண்டுபட்டுத் துவள்வதைக் கண்டு வருகிற நமக்கு, இது மிகவும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை. கல்வி கற்கும் பருவத்திலேயே

ஆன்ம நேய ஒருமைப்பாட்டுர்மை அறிமுகமாவது இன்றியமையாதது. அடிப்படையில் கருணையுணர்வு கொள்ளாத கல்வியாளர்கள் இருக்கும்வரையில். எத்தனை ஐக்கிய நாடுகளின் மன்றம் ஏற்பட்டாலும் மனிதன் மனிதனாக வாழ வழியே இல்லை.

இன்னொரு முக்கியமான குறிப்பு :

பாரதியார் வகுத்துள்ள இந்த இலக்கணம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு. தொடக்கம் சரியாக இருந்தால், தொடர்வதும் சரியாகவே இருக்கும். மனிதம் வாழ வழி பிறக்கும். இளநிலைப் பட்டப்படிப்பிலும் முதுநிலைப் பட்டப்படிப்பிலும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வுக்கு இடம் இருக்கவேண்டும். இளநிலை, முதுநிலைப் படிப்புகளில் மட்டுமல்லாமல் ஆய்வுப்பட்டப் படிப்பிலும் ஆன்ம நேயத்துக்கு இடம் இருக்கவேண்டும். அறிவுவளம் மட்டும் சேர்த்துவைக்கும் குதிராக வாழ்பவன் மனிதனாகான். 'நன்றின்பால் உய்ப்பது அறிவு' (422), ‘ஊருணி நீர்நிறைந்தற்றே உலகு அவாம் பேரறிவாளன் திரு’ (215) ஆகிய திருக்குறட் பாக்கள் உள்ளடக்கியுள்ள கருத்துகள் இங்கே நினைவிற் கொள்ளத்தக்கன.

முடிவைக் கணித்துப் பார்த்தால், முறையின் தன்மை தெளிவாகும். வெள்ளையர் வகுத்துக்கொடுத்த கல்வி முறை செம்மையானதாக இருந்தால் இதயக்கனிவு பட்டதாரிகளின் வாழ்விலே தலைதூக்கியிருக்கும். கண்மூடிக் கல்வியாக இருப்பதால் அதிலே கருணைக்கு இடம் இல்லை. நல்லவேளையாக அகராதிகளிலிருந்து அன்பு, அருள், ஒப்புரவு போன்ற சொற்களை நீக்க முடியவில்லை. விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்காது. மெக்காலே வகுத்த கல்வித்திட்டம் கும்பெனி நிர்வாகத்தில் கீழ்நிலைப் பணியாளர் நியமனத்தையே குறிக்கோளாகக் கொண்டது. அரசாங்கப் பணிகளில் அமர்வதே படித்தவர்களின் நோக்கமாக முடிந்திருப்பதை இன்றும் காணுகிறோம். சமூகப்பணி (Social Service) என்பது அண்மைச் சில ஆண்டுகளாகக் கல்லூரிகளில் கல்விப் புறத்திட்டமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மாணாக்கர்களும் கல்லூரி நிர்வாகங்களும் இந்தச் சமூகப் பணிக் குறிக்கோளைச் செயல்படுத்துவதுபற்றிப் பேசாமலி ருப்பதே நல்லது.

கோத்தாரிக் கல்வியாணைக் குழு தெரிவித்துள்ள கருத்தை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

“கல்வியின் குறிக்கோளையே முற்றும் மாற்றிப் பார்க்க வேண்டியுள்ளது. அறிவைப் புகட்டுவதே கல்வி என்று இனிமேல் பார்க்கமுடியாது; அறிவின் முழுமையான விளைச்சலாக உருவாக்கி (பட்டதாரிகளை) வெளியனுப்புவது என்ற அணுகுமுறை ஒவ்வாது; மேன்மேலும் அறியவேண்டுமென்ற நாட்டம் வளர்முகத்தில் அமையவேண்டும்; முறையான, ஈடுபாடு, தகுதியான அணுகுமுறை, விழுப்பொருள்கள் பால் மதிப்பு முதலான அடிப்படைகளை அறியும் திறன்வேண்டும். எதனைப் பற்றியும் தானே சிந்தித்துப் பார்த்துக் கணித்துக் கொள்ளும் திறமை இருக்கவேண்டும்.”

பணிக்களம் எது?

மேற்குறித்த இலக்குகளை அடைய வேண்டுமாயின் மொழிக்கல்விக்கும் இலக்கியக் கல்விக்குமே முதலிடம் தரவேண்டும் என்பது தெளிவு. ஓரளவு வரலாற்றுத் துறை, உளவியல் துறை, மெய்யியல் துறை ஆகியவை உதவமுடியும். வேதியியல், இயற்பியல் போன்ற துறைகள் மூளை வளர்ச்சிக்கு உதவுமளவு மனவள வளர்ச்சிக்கு உதவமுடியாது. வேறு வகையில் சொன்னால் - வாழ்வியல் (Humanities) என்னும் பிரிவில் அடங்குவனவே மனவளத்துக்குப் பெரிதும் உதவமுடியும்.

மானுடம் வளர்வதற்கு மூளைத் திறன் வளர்ந்தால் போதாது; போதவே போதாது. இதய வளம், இதயக்கனிவு ஆகியவற்றின் வளமே மனிதப் பாங்கு வளம் பெற்று வளர உதவ முடியும்.

மேலே குறித்த கல்விக் குறிக்கோள்களையும் அணுவியல், கணிப்பொறியியல் ஆகியவற்றின் வளர்ச்சியோடு இணைத்து எண்ணிப்பாருங்கள். அறிவியல் வளர்ச்சி அணுக் கருவிப் போரிலே மனித வாழ்வை எரிமலைவாயில் பதித்திருப்பதையும் எண்ணிப் பாருங்கள். அற்புதப் பேராற்றல் கொண்ட விஞ்ஞான வளர்ச்சியையெல்லாம் அரசியல் அரக்கத்தனம் உலக சமுதாய அழிவுக்கே பயன்படுத்திக் கொண்டிருக்கிறது, இல்லையா! உலகக் கோளத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிவிடுவோம் என்று அரசியல்வாதிகள் உருவாக்கிய உலக நாடுகளின் அமைப்புகளெல்லாம் தன்னல வெறி கொண்ட அரசியல்வாதிகளின் கைப்பாவை களாய்விட்டன. “மானுடம்” என்ற உணர்வோ- கனிவு, கருணை, ஒருமைப்பாடு, ஒற்றுமையுணர்வு என்ற

குறிக்கோள்களோ பெயர் சொல்லுமளவுக்கு நம் சமுதாயத்தில் இடம் பெற்றிருக்கின்றனவா? இந்த உணர்வுகளும் குறிக்கோள்களும் இடம் பெறாமல் உலகிலே அமைதி நிலவ முடியுமா?

உயிர் இரக்கம் என்ற கருணையும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்று வள்ளற்பெருமான் போற்றியுரைத்த தயவுணர்வும் இலக்கியக் கல்வியில்தான் மலரமுடியும்.

கல்லூரி / பல்கலைக்கழகக் கல்வியரங்கிலே இலக்கியக் கல்விக்குப் பெருமைக்குரிய இடம் வகுத்தாலன்றி மனித இனம் வாழவே முடியாது.

அறிவியற் கல்வி துணைக் கருவி என்ற அளவில் அமைவது போதும். வாழ்க்கையின் புற வளத்துக்கே விஞ்ஞானம் பெரிதும் உதவவல்லது. வாழ்வின் அகக்கூறு வளம் பெறுவதற்கு இலக்கிய/சமய/தத்துவத் துறைகளே பெரிதும் உதவமுடியும். இந்தத் தெளிவு பெற்று, அந்தத் தெளிவு உரம் பெற்று ஓங்குவதற்குப் பல்கலைக்கழகங்கள் திட்டம் வகுத்திடும் காலமே மானிடம் கனிந்து சிறக்கும் காலமாகும்.

என்ன செய்யலாம்?

முதற் பட்டப்படிப்பில் இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். குருமார்களின் வாழ்க்கை வரலாறுகள், இலக்கியச் சுவை உணரும் பாங்கு ஆகியவை இளநிலை பட்டப்படிப்பிலே இடம் பெறவேண்டும்.

முதுநிலைப் பட்டப்படிப்பிலே பக்தி, சமரச சமய அடிப்படை, தத்துவம் போன்ற பிரிவுகள் ஆழமாகக் கற்பிக்கப்படவேண்டும்.

அறிவியல், தொழிலியல் பயிலும் மாணவரும் இதயக்கனிவு தரும் இலக்கியக் கல்வி பெறும் வகையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பெற வேண்டும்.

மேற்குறித்த வகையில் சிந்தித்துப் பாடத்திட்டம் வகுப்பதற்குப் பல்வேறு பாடக்குழுக்களின் தலைவர்கள் கூடியிருந்து பொதுவான அடிப்படைகளை வகுக்க வேண்டும். அப்படி வகுக்கப்பெறும்போது அடிப்படைக்கு முரண்படாத வகையில் அந்தந்தக் கல்வி நிலையங்கள் தனித் தனியாகப் பாடங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால். . . குடியாட்சித் தத்துவம் தழைய - இதயம் பக்குவம் பெற - கனிவும் கருணையும் கொண்ட மானுடம் மலர வழிவகுக்கும் கல்வியே விழுமியம் என்ற உயர் மதிப்பு வாழ்வதற்கு வழி வகுக்கும். விவேகானந்தர் சொல்லிய வண்ணம் மனிதனை/ மானுடத்தை உருவாக்கும் கல்வியே (Man Making Education) வேண்டும். அதற்கு உதவுவது இலக்கியக் கல்வியே.

முடிவாக

சர்வோதயம் என்ற திங்கள் இதழ் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையின் சில பத்திகளே இன்றைய ஆய்வுக்குப் பொருத்தமான முடிவுரையாக அமைந்திருக்கிறது.

"இன்றைய கல்விமுறை பற்றிப் பல்வேறு விவாதங்கள் மற்றும் விமரிசனங்கள் ஒரு பக்கம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. குழந்தைகளின் பாடச் சுமைகளும் கல்வி சார்ந்த கட்டணச் சுமைகளும் மாற்றமின்றி மறுபக்கம் தொடரவே செய்கின்றன. பெற்றோர்களின் பேராசை மற்றும் வெளிநாட்டு மோகம், கல்வி நிறுவனங்களின் வணிகத் தந்திரங்கள் விழிப்புணர்வில்லாச் சமுதாயம் என இவையெல்லாம் ஒருங்கிணைந்து பிஞ்சுக் குழந்தைகளின் இயல்பான பருவ உணர்ச்சிகளைச் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தி வருகின்றன. ஒருவரும் இந்நிலையை உணரவோ அதுபற்றிக் கவலைப்படுவதாகவோ இல்லை."

"ஆங்கில மோகத்தின் வலிமை, நம்நாட்டின் கலாசாரத்திலிருந்து குழந்தைகளைத் தனிமைப் படுத்திக்கொண்டே வருகிறது. இதனை அதிகார வர்க்கங்கள் உண்மையிலேயே உணர்ந்துள்ளனவா என்பது வினாக்குறியாகவே உள்ளது."

"விழுமியச் சிதைவு" பெருமளவில் நம்மிடையே காணப்படுகிறது. நமது சமூக வாழ்வில் விழுமியங்கள் குன்றிப் போனதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய வேண்டியது அவசியம் என்று நம் பிரதமர் சுதந்தர நாளன்று நம்மைப் பார்த்துக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. நமது அரசியல் கட்சிகளுக்குள்ளும் நம்மிடையேயும் இவ்விழுமியச் சிதைவு ஏற்பட்டதற்கான காரணத்தை நாமே கண்டறிய வேண்டியது அவசியம். இதற்கான முக்கியக் காரணம் நமது கல்விமுறை 'மனிதம்' சார்ந்ததாக இல்லை என்பதே. சமூகத்தில் மனிதநேயத்திற்கான அக்கறை நன்கு பேணிப் பாதுகாக்கப்படவில்லை. கல்வி என்பது பொருளீட்டலுக்கு மட்டுமே என்ற மாயை நம் சமூகத்தைப் பீடித்துள்ளது. பெரும் செல்வந்தர்கள்

அடிப்படைக் கல்வி அறிவு கூட இல்லாதவர்கள் என்பதே வெளிப்படை.

"கல்வி அந்நிய மொழியில் கற்பிக்கப்படும்வரை நம் குழந்தைகளிடம் நமது பண்பாட்டையும் படைப்பாற்றலையும் போற்றிப் பாதுகாப்பது என்பது இல்லாததாகவே இருக்கும்"

"பணம் செய்யும் தொழிலாகக் கல்வி மாறிவிட்டால் மனித மனத்தில் நலம் எவ்வாறு விளங்கும்? கல்வி, ஒழுக்கத்தை வளர்க்கவேண்டும்" என்றார் காந்தியடிகள். "மனிதனை உருவாக்கும் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தார் விவேகானந்தர். மனிதனுள் காணப்படும் விலங்கியல் இயல்பூக்கத்தை மாற்றி அமைப்பதே கல்வி" என்றார் ஜே. கிருஷ்ணமூர்த்தி.

ஆனால் நாம் இன்னும் இவர்களைப் பற்றியெல்லாம் அறிவதில் ஆர்வம் கொள்ளவில்லை. அந்த அளவிற்கு மெக்காலே நம்மைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக் கிறார்.

மனிதத்தை மையமாக்கிக் கொண்டு கல்வி விளங்காதவரை உலகில் மனிதன் தான் ஒரு சமுதாய விலங்கு என்பதை மட்டுமே நிரூபித்துக் கொண்டிருப் பான். விலங்கின் இயல்பு வன்முறைதான். மனித சமூகத்தை அழிவிலிருந்து காக்க உண்மையிலேயே விழைபவர்கள் 'மனிதம்' சார்ந்த கல்வியை அளிக்க ஏதேனும் செய்ய வேண்டும். இவ்வகையில் மறுசிந்தனையே உடனடித் தேவை.

பாண்டித்துரைத்தேவர் ஆளுமை
உ.வே.சா - பாராட்டு

சென்ற விடுமுறைநாட்களில், மதுரை சென்று, தமிழ்ச்சங்கத்தின் அங்கங்களாகவுள்ள சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, செந்தமிழ் முத்திராசாலை முதலியவற்றைப் பார்த்தேன்; அவைகள் சென்ற ஆண்டுகளிருந்த நிலைமையைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு வளர்ச்சியுற்று விளங்குகின்றன.

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள், நன்கு பாதுகாக்கப் பெற்றுத் தத்தமக்குரிய பாடங்களை மிகச் செவ்வையாகக் கற்றுச் சிந்தித்துத் தேர்ந்து, கேட்ட வினாக்களுக்கு யாதொரு தடையுமின்றி இனிமையாக விடை பகர்தலும், செய்யுட்களைச் சந்தத்தோடு ஒப்பித்தலும், சங்கீதப்பயிற்சி, வடமொழிப்பயிற்சி, ஆங்கிலப்பயிற்சி, சொல்வன்மை, ஊக்கம், தெய்வபக்தி, வணக்கம் முதலிய நல்லொழுக்கங்களுடைமையும், மிகுந்த மகிழ்ச்சியை விளைவித்தன. இவர்கள் படிக்கத்தொடங்கிய பொழுது இவர்களுடைய நிலைமையைப் பார்த்திருந்த எனக்கு, இவர்கள் அதிசீக்கிரத்தில் இவ்வளவு மேம்பாடமைந்து விளங்குவது, பெரியதோர் வியப்பைத் தந்து உபாத்தியாயர்களுடைய உழைப்பை நன்கு புலப்படுத்தியது.

பாண்டியன் புத்தகசாலையில், பெரும்பாலும் அகப்படாதனவாகிய அரிய பெரிய கையெழுத்துத் தமிழ்ப் புத்தகங்கள் பல சேகரஞ் செய்து மிகச் செவ்வையாக வைக்கப்பெற்றிருத்தலும், அவை நன்றாகப் பாதுகாக்கப் பெற்று வருதலும், சிறந்த வித்துவான்களால் முறையே பரிசோதித்துப் பதிப்பிக்கப்பெற்று வருதலும் மிகுந்த ஆனந்தத்தை விளைவிக்கின்றன.

இதுவரையில் ஆராய்ந்து பதிப்பிக்கப்பெறாத சில புத்தகங்கள் தக்க குறிப்புரைகளோடு பதிப்பிக்கப்பெற்று வெளிவந்திருத்தலும், இதுவரையில் வெளிப்படாத அரிய பெரிய விஷயங்கள் பல வெளிவந்திருத்தலும் "செந்தமிழெ"ன்னும் பத்திரிக்கையைப் பெற்றுவரும் அன்பர்களுக்கு நன்கு புலப்பட்டிருக்கும்.


எத்தனையோ பலர் சேர்ந்து செய்யவேண்டிய இப்பெருங்காரியத்தை ஏகதேசத்தில் வகித்துச் செலவு செய்து பரிபாலித்து வருபவர்களும் பாலவனத்தம் ஜமீந்தாரும் தமிழ்ச்சங்கத்து அக்கிராஸனாதிபதியுமாகிய இராமநாதபுரம் ஸ்ரீ.பொ.பாண்டித்துரைஸாமித் தேவரவர்களுடைய பெருந்தகைமை மிகப் பாராட்டற்பாலது. தம்முடைய ஜமீன் ஸம்பந்தமாகவுள்ள காரியங்கள் எவ்வளவோ இருந்தும் அவற்றைச் சிறிதும் மதியாமல் தமிழ்ச்சங்கத்தின் ஸம்பந்தமான காரியங்களையே அவர்கள் எப்பொழுதும் கவனித்து வருவதாகவும் தெரிகிறது.

கவர்ண்மெண்டாரும், இத்தமிழ்நாட்டைச் சார்ந்த அரசர்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், மற்றவர்களும் கவனித்துச் சங்கத்தின் ஸம்பந்தமான பொருட்செலவு முதயவற்றில் ஸ்ரீபாண்டித்துரைஸாமித் தேவரவர்களுக்கு அதிகக் கவலை வையாமல் சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதிப் பொருளுதவி செய்வார்களாயின், இக்காலத்தில் நிரம்ப உபகாரமாகவிருக்கும்.

இவ்வரிய காரியத்தை மேற்கொண்டு இடைவிடாமல் உழைத்துவரும் அக்கிராஸனாதிபதியவர்களுடைய மனத்திற்கு யாதொரு கவலையும் உண்டாகதவண்ணம் பாதுகாத்தருளும்படி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவருடைய திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்

சென்னை. வே. சுவாமிநாதையன்,
10.10.1905. தமிழ்ப்பண்டிதர்
பிரசிடென்ஸி கல்லூரி,
சென்னை.



காவியத் தலைவிகள்



கமலா சங்கரன்,
மும்பை.

கணவனின் குறட்டை ஒலியைப் பொறுக்காமல் விவாகரத்து வேண்டுகிறாள், முன்னேற்றத்தில் முதலாக நிற்கும் அமெரிக்க நாட்டுப் பெண் ஒருத்தி. அலுவலகம் சென்ற துணைவன் வரச் சிறிது தாமதமாகி விட்டால் அசட்டுக் கற்பனைகளால் துளைத்தெடுத்து விடுகிறாள் இருபதாம் நூற்றாண்டுச் சிறுகதைத் தலைவி.

கணவனிடம் சிறு குறை ஒன்று இருந்தாலும் அதை மிகப் பெரிதாக்கி அமர்க்களப்படுத்தி, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக . . . எத்தனை பெண்களை நாம் பார்த்ததில்லை?

இவர்களுக்கெல்லாம் நேர்மாறான சில பெண்களைக் காணவேண்டுமா? சங்க இலக்கியத்துக்கு வாருங்கள்! நற்றிணையில் ஒரு காட்சி.

தங்கக் கிண்ணத்திலே தேனும் பாலும் கலந்து தான் ஊட்டி வளர்த்த அருமைப் பெண் புக்ககத்திலே ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியில்லாமல் திண்டாடுவதைத் தாய் அறிகிறாள்; மனம் நொந்து கணவனிடம் கூறி, பெண்ணுக்குப் பெரும் பொருள் அனுப்பச் சொல்லுகிறாள். என்ன ஏமாற்றம்! அனுப்பியவை அவளிடமே திரும்பி வருகின்றன. அது கண்டு ஒரு கணம் திடுக்கிடும் தாய், அடுத்த கணமே மகளின் உயரிய நிலையை உணர்ந்து மகிழ்கிறாள். அவள் கண்முன் மகளின் குழந்தைப் பருவம் விரிகிறது.

செவிலியர்கள், ஒளிவிடும் தங்கக் கிண்ணியிலே தேன் கலந்த பாலை ஒரு கையில் எடுத்துக் கொண்டு மறு கையில் சிறு கோலுடன் அப்பெண்ணை உண்பிக்க அவள் பின்னாலேயே ஓடுவார்களாம். அவளோ தண்டை குலுங்கப் பந்தலைச் சுற்றிச் சுற்றி ஓடி அவர்களை அலைக்கழிப்பாளாம். விளையாட்டுச் சிறுமியாய் நேற்றளவும் பொறுப்பற்றுத் திரிந்த மகள், இன்றோ கணவன் வீட்டுக்கு வந்து வறுமையையும் பொறுத்துக் கொண்டு, கொடுத்தாலும் வாங்காத இந்தப் பண்பும் அறிவும் எப்படிப் பெற்றாள் என்று அந்த அன்னை வியக்கிறாள்.

"பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு ணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணும் சிறுமது கையளே"

– போதனார்

இப்பாடலின் தலைவி குடும்பத்தில் ஏற்பட்ட குறையை அடக்கத்தினாலும் ஒழுக்கத்தினாலும் பொறுத்துக் கொள்கிறாள். கரம் பிடித்தவனின் குறையைப் பிறர் பேச

விடாமல் மறைக்கின்றபெண்ணும் இலக்கியத்தில் உண்டு. நல்ல குறுந்தொகையில் வருகிறாள் அவள். கார்காலம் வந்தால் பணிமேல் சென்ற தலைவன் திரும்பி விடுவானென்று தலைவிக்குத் தெரியும். வாயில் புறத்திலுள்ள கொன்றைமரம் பூத்துக் குலுங்கிக் கார்காலம் வந்துவிட்டது என்று அறிவித்துக் கொண்டிருந்தது. தலைவனோ வந்தபாடில்லை. தலைவியை எப்படி ஆற்றுவது என்று தோழி கவலைப்படுகிறாள். ஆனால் கொன்றைப் பூக்களை வெறித்து நோக்கிக் கொண்டிருந்த தலைவியோ கொஞ்சமும் கவலைப்படவில்லை. அதற்கு மாறாக, கவலைப்படும் தோழியை அவள் சமாதானப்படுத்த ஆரம்பித்து விடுகிறாள்.

"தோழி! இந்தக் கொன்றைமரத்தை வந்து பாரேன். பசுமையான தழைகளுக்கிடையே பொன்னென ஒளிரும் பூக்கள், கரிய நீண்ட கூந்தலைப் பொன் ஆபரணங்களால் நிறைத்துக் கொண்டிருக்கும் மணமகளைப் போல இல்லையா? இருந்தாலும் இது மணமகள் ஆகிவிடுமா? அது போலத்தான் இந்தக் கொன்றைமரம் காலம் தப்பிப் பூத்திருக்கின்றதே தவிர உண்மையில் இது கார்காலம் ஆகிவிடாது. ஏன் தெரியுமா? 'கார்காலம் வந்தவுடன் நான் வந்துவிடுவேன்' என்று என் தலைவர் கூறிச் சென்றாரல்லவா? அவர் சொன்னபடி நடந்தே தீருவார். அவர் எப்பொழுது வரவில்லையோ அப்பொழுது இது கார்காலமும் இல்லை". இந்தச் சொற்களில்தான் எத்தனை பெருமிதம்?

"வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மாந்தளிர்
கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றை
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன்அவர் பொய்வழங் கலரே"

– ஒதலாந்தையார்

கணவன் குறையை மறைக்கின்ற இக்குறுந்தொகைக்காரிகை, பொறுத்துக் கொள்ளும் நற்றிணை நல்லாளையும் ஒருபடி விஞ்சி விடுகின்றாள். ஆனால் இவளையும் பெருமையில் பின்னடையச் செய்பவள் கம்பர் படைத்த சீதா பிராட்டி.

குழைக்கின்ற கவரியின்றி, கொற்றவெண் குடையு--மின்றி, தவக்கோலத்தில் சிற்றன்னை தந்த சீரையைச் சுற்றிக்கொண்டு இராமன் காட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் கரம் பற்றிய மனைவிக்கோ அரண்மனையில் நடந்தது எதுவுமே சரிவரத் தெரியவில்லை. நாடே குழம்பிக் கிடக்கிறது. யாரை அணுகிச் செய்தியைத் தெரிந்து கொள்வது என்று சீதைக்கும் குழப்பம். அந்த நேரத்திலே இராமனே அவளிடம் வருகிறான். கண்டோர் நெஞ்சு துணுக்குறும் கோலத்தில் வருகிறான். சீதை அவனைப் பார்க்கிறாள். ஆனால் நம்மைப் போல் திடுக்கிடவில்லை. அவன் தோற்றத்தில் யாதொரு மாறுதலையும் அவள் கண்டதாகவே தெரியவில்லை. அப்படிக் கண்டிருந்தால்,

"பொன்னை யுற்றபொலங்கழ லோய்புகல்
மன்னை யுற்றதுண்டோ மற்றிவ் வன்துயர்
என்னை உற்றது இயம்பென்று இயம்பினாள்
மின்னை உற்ற நடுக்கத்து மேனியாள்"

என்று கம்பர் காட்டும்வண்ணம், "பொன்னாலான வீரக்கழலை அணிந்தவனே! அரண்மனையில் ஏனிந்தக் குழப்பம்? – தசரதச் சக்கரவர்த்திக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்து விட்டதா?" என்ற அர்த்தமற்ற கேள்வியைக் கேட்டிருக்க மாட்டாள். இராமனுடைய கோலமே நிகழ்ந்ததைக் கூறவில்லையோ?

கேட்ட கேள்வி மட்டுமா விந்தையானது? கேட்ட முறையும்தான்! இராமனை விளிக்கின்ற அந்த அடைமொழியைப் பாருங்கள். அன்னையிட்ட ஆணைப்படி துறவுக் கோலம் பூண்டவனை, 'பொலங்கழலோய்' என்று அழைக்கிறாளே! கற்பணங்கு சீதைக்கு, எந்த நிலையிலும் பட்டாபிராமனாகவே, மன்னாதி மன்னனாகவே இராமன் காட்சி தருகின்றான் போலும்! அவன் குறை அவள் கண்ணில் படவேயில்லை.

துணைவன் குறையைத் தெரிந்து கொண்டு பொறுப்பதைவிட, பிறர் பார்வையினின்றும் மறைப்பதைவிட, காணாமலேயே இருந்து விடுகின்ற இந்த மிக உயர்ந்த பெண்ணை, கவிஞன் எவ்வளவு நுணுக்கமாக உணர்த்தி விடுகின்றான். கொண்டவன் ஆண்டியான நிலையிலும் அரசனாகவே காணும் இப்பெண்ணோடு குணநலப் போட்டிக்கு வரக்கூடிய தமயந்தியும் இச்சமயம் நம் நினைவில் எழுகினறாள்.

இப்பின்னவளின் நாயகன் நளன் கலியின் கொடுமைக்கு ஆளானவன். அரியாசனம் துறந்து செங்கோலை இழந்து, வீட்டைவிட்டு, நாட்டைவிட்டுக் கட்டிய மனைவியோடும் பெற்றெடுத்த பிள்ளைகளோடும் காட்டிலே நடக்க

வேண்டிய கொடுமையை அடைந்தவன். அந்த வேளையில், பிஞ்சுப் பாதங்கள் நோகத் தள்ளாடி நடைபோடும் பிள்ளைக்கனியமுதுகளைக் காணப் பொறாத நளன் "தமயந்தி! இவர்களை உன் தந்தை வீட்டில் சேர்த்துவிடலாமா? நம்முடைய தீவினையால் இவர்களும் வீணே ஏன் வருந்த வேண்டும்?" என்று கேட்கிறான். தமயந்தியும் சற்றும் தயங்காமல்,

"செங்கோலாய் உன்றன் சித்தம் இதுவாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே-நங்கோலக்
காதலரைப் போக்கி யருள்கென்றாள் காதலர்க்கு
ஏதிலரைப் போல எடுத்து"

கணவன் சொல்லுக்கு மறுசொல் பேசாது, வாழ்க்கை வசதிகள் அத்தனையும் இழந்தவள், பெற்றெடுத்த மக்களையும் பிரிய முன்வருகிறாளே அதுவல்ல அதிசயம்! அவள் நளனுக்கு அமைக்கின்ற அடைமொழிதான் அவள் பண்பாட்டைக் காட்டும் சுடர் விளக்காய் மிளிர்கிறது.

தலையிலணிந்த மணிமுடி துறந்து, கையில் பிடித்த செங்கோலை இழந்து, கட்டிய உடையோடு அடுத்த வேளைக்கு வகையறியாதிருக்கும் கணவனை, அந்த நிலையிலும் கையில் செங்கோல் தரித்து அரியா--சனத்தில் அமர்ந்திருக்கும் அரசர் பெருமானாகவே காண்கிறாளே தமயந்தி – குறை கண்ணிலேயே படாத இந்தப் பெண்களின் பெருமையை எப்படிப் புகழ்வது?

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற தமிழ்மறைக்கேற்பத் தற்கொண்டானைப் பேணுவதில் குலக்கோசலையும் நிகரற்றுத் திகழ்கிறாள். கைகேயியின் கோயிலில் மன்னவனைக் கண்டு அவன் மைந்தனைக் காட்டுக்குப் போகும்படி இட்ட கட்டளையை மாற்றவேண்டுமென்று வருகிறாள் அவள். தயரதன் தன்னிலை இழந்து அவலமுற்றுக் கிடப்பதைக் காண்கிறாள். அங்கே அவள் புலம்பும் மொழிகள்–மூத்த மைந்தனுக்கு முறையில் அரசளிக்காது இளையமைந்தர்க்கு ஈந்ததை இடித்துரைப்பது போலவா இருக்கின்றன? 'ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்' – என்பதற்கேற்பத் "தனி நாயக; கருணைக்கடலே–வருத்தம் வந்துற்றகாலை இங்ஙனம் மாய்தல் தங்களுக்குத் தகுமா?" என்று அவன் நிலைக்காகவே இரங்குகின்றாள். அந்நிலையிலும் அவள் மாற்றவளை இங்கிதத்தாலும் பழிக்கவில்லை. கொழுநன்பால் ஒரு குறையும் காணவில்லை. வருத்தம் பெரிதுடையாள் உணமைய்ே; ஆயினும் திருந்திய நேர்மையினின்றும் தீர்ந்திலள். மன்னவன் ஆணையை மறுக்காத கற்பினள் ஆவதுடன் கைகேயியை ஏசாப் பெருமைக் கோசலையாகவும் காட்சி தருகிறாள்.

மன்னவன் ஆவி அகன்றிடுகிறது. வெயிற்படு புழுவென வெந்து, அருந்துணையிழந்த அன்றிற்--பெடையென அவள் அரற்றும் நேரத்திலும்,

"இன்றேவந்தீண்டஞ்சலென்னாது எம்மகனென்பான்
கொன்றானன்றோ தந்தையை"

என்று கதறுகின்றாள். மகனிடமே குறைகாண்கிறது கற்புடையவள் நெஞ்சு. தந்தை அழியக் காரணமாக இருந்த அம்மைந்தனை மைந்தனென்று சொல்லவும் கூசியவள்போல் மகனென்பான் – என்று வேற்றுமைப்படுத்திப் பேசுகின்றாள். முன்னரும் மகன் அரசிழந்தானென்று அவள் அரற்றவில்லை; பிரிந்தேகுகிறானே என்றுதான் வருந்தினாள். பெற்றமகனினும் கொண்ட கணவனே அவள் பரிவுக்குப் பெரிதும் பாத்திரமாகிறான். இக்கட்டத்தில் மட்டுமே மகனைக் கடிந்த அதே முறையில்,

"வடித்தாழ் கூந்தல் கேகயன் மாதே
முடித்தா யன்றே மந்திரம்"

என்று மாற்றாளையும் பழித்திருக்கிறாள் குலக்கோசலை. கொழுநனுக்குத் தீங்கிழைப்பார் யாரையும் பொறுக்காத இக்குணம் அவளை உயர்த்துகிறதேயன்றிக் குறைப்பதில்லை.

கற்பணங்குகளில் ஒருத்தியாய்க் கொண்டாடப்படும் மண்டோதரியும் இத்தகையவளே. இந்திரசித்து போர்க்களத்தில் இலக்குவனால் உயிரிழக்கிறான். அது கண்ட மண்டோதரி தன் விதியை நொந்து கொள்ளுகிறாளே தவிர வேறு யாரையும் பழிக்கவில்லை. இராமன் வனம்புக வேண்டுமென்றதைக் கேட்டு,

"அறமெனக்கிலையோ எனும்"

என்று தன்னைத் தானே நொந்து கொண்ட கோசலையைப் போலவே,

"கலையினார் திங்கள்போல வளர்கின்ற
காலத்தேயுன்
சிலையினால் அரியை வெல்லக் காண்பதோர்
தவமுன்செய்தேன்
தலையிலா யாக்கை காண எத்தவம் செய்தேன்
அந்தோ
நிலையிலா வாழ்வையின்னம் நினைவனோ
நினைவிலாதேன்"

என்ற வார்த்தைகள்தாம் இந்திரசித்தை இழந்தவுடன், மண்டோதரி வாயில் வருகின்றன.

இவளுடைய சகக்கிழத்தி தான்யமாலை தன்னுடைய மகன் அதிகாயனை அமர்க்களத்தில் பலி கொடுத்ததும் எப்படிக் கதறினாள் என்பதையும் பார்க்கவேண்டும். தலைவிரிகோலமாய் இராவணன் முன் சென்று, அவன் முகத்துக்கெதிரே,

"ஏதையா சிந்தித் திருக்கின்றாய் எண்ணிறந்த
கோதையார் வேலரக்கர் பட்டாரைக் கூவாயோ
பேதையாய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ
சீதையால் இன்னம் விளைவ சிலவேயோ"

இவ்வாறு மகனை இழந்த துயரத்தால் கணவனையே 'காமம் பிடிப்பாய்' என்று ஏசிப் பேசும் அளவுக்கு, அரக்கி மகளே தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறாள் இவள். மயன் மகள் மண்டோதரியோ, இந்திரசித்தனை இழந்தபோது யாரையும் பழிக்கவில்லை. ஆனால் இராவணன் மாண்டு விட்டான் என்றவுடன் அவளால் பொறுக்கமுடியவில்லை. அதற்குக் காரணமான எல்லோரையும் நொந்து கொள்கிறாள்.

"காந்தையருக் கணியனைய சானகியார்
பேரழகும் அவர்தம் கற்பும்
ஏந்து புயத்து இராவணனார் காதலும்
அச்சூர்ப்பணகை இழந்த மூக்கும்
வேந்தர் பிரான்பணி தன்னால் வெங்கானில்
விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்றன்றோ"

இவ்வாறு புலம்பும்போது கூட இராவணன் கொண்ட தகாத ஆசையைக் 'காமம்' என்று குறிப்பிட மனமின்றி 'இரவணனார் காதலும்' என்று சிறப்புச் செய்துள்ளமை கண்டு மகிழத்தக்கது.

இவ்வாறு, சங்கத் தமிழ் மகளிர் ஆவியன்ன அவிர் நூல் கலிங்கம் அணிந்து, அழகுக்கலையின் நுணுக்கமெல்லாம் தெரிந்து வெளியழகில் நாட்டம் செலுத்தினதைப் போலப் பன்மடங்கு உள்ளத்தழகையும் வளர்த்துக் கொண்டிருந்ததால்தான் புலவர் பாடும் புகழுடையோராய்த் திகழ்கின்றனர்.

கண்ணகி எத்தனைக்கெத்தனை 'அலையிடைப் பிறவா அமிழ்தாய்', 'யாழிடைப் பிறவா இசையாய்', 'தாழிரும் கூந்தல் தையலாய்' அமைந்தாளோ, அத்தனைக்கத்தனை 'மாதரார் புகழ்ந்தேத்த வயங்கிய பெருங்குணத் தளாய்த்' திகழ்ந்திருக்கிறாள். மன்னன் தவற்றை உணர்த்திக் கணவன் பழியைத் துடைத்திருக்கிறாள்.

மாதவி கூந்தலை அலங்கரித்துக் கொள்வதை ஒரு காதையில் பாதியளவு புலவர் வருணித்திருக்கிறார். ஆடல் பாடலோடு அழகையும் ஒரு கலையாகவே வளர்த்துக் கொண்டவள் அவள். அதே மாதவியின் உள்ளம் கண்ணகியைக் 'குலப்பிறப்பாட்டி' என்று புகழ்ந்ததுடன் தன் மகளையும் 'மாபெரும் பத்தினி கண்ணகி மகள் மணிமேகலை' என்று அவளுக்கே உரிமைப்படுத்தும் உயர்ந்த அழகினைப் பெற்றிருந்தபடியால்தான் அவளையும் சிலப்பதிகாரக் காவியத்தலைவியாகவே நாம் எண்ணுகிறோம்.

பாரிஜாத மலரொன்று வேண்டிக் கணவனைப் பலமுறை மேல் உலகுக்கு அனுப்பி வைத்தாள் திரௌபதி. அழகுடைய பொருள்களிடத்தில் அவ்வளவு ஈடுபாடு அவளுக்கு. ஆயினும் என்? துரியோதனன் சபையிலே, பாவி துச்சாதனன் துகில் பற்றி உரியும் நேரத்திலே, கணவன்மார்களெல்லாம் கற்சிலை என நின்றிட்ட வேளையிலே பரமனைக் கதறி அழைக்கும் மனப்பக்குவம் அவளுக்கு அமைந்திருந்ததால் உத்தமர்கள் ஏத்தும் உயர்வினள் ஆயினாள்.

தேவர்களையே தன்னழகால் கலங்கச் செய்து சுயம்வர மண்டபத்துக்கு வரவழைத்தாள் தமயந்தி. அதே நேரத்திலே,

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா – வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

என்று புலவர் புகழேந்தி சித்திரிக்கும் வண்ணம் பெண்மை அரசாளும் மனத்தழகைக் குறைவறப் பெற்றிருந்ததால் கற்றவர்கள் களிக்குமொரு காரிகை ஆயினாள். அழகு சுமந்திளைத்த திருமேனியாள் சீதை. இளங்கோவடிகள் கண்ணகியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதுகூட "மாதரார் தொழுதேத்த" என்றுதான் சொன்னார். கம்பரோ வெறும் பெண்கள் என்று சொல்லாமல், உமையவளுக்குச் சமமாகிய பெண்கள் சீதையைப் போற்றினர் என்று நயம்பட,

"உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக்கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாண
இமையா நாட்டம் பெற்றிலம் என்றார் இருகண்ணால்
அமையா தென்றார் அந்தர வானத் தவரெல்லாம்"

மைதிலியைக் கண்ட மங்கையர்கள் தங்கள் கரங்களைச் சிரமேற்கூப்பி அவள் அழகினை ஆராதிக்கின்றனர். அதிலும் எத்தகைய பெண்கள்– ஒவ்வொருவரும் உமையாள் ஒப்பர். – பார்வதியை நிகர்த்த எழில் குலுங்கும் பாவைகள். சாதாரணமாக ஒரு பெண்

இன்னொரு பெண்ணை அவ்வளவு எளிதில் புகழ்ந்துவிட மாட்டாள். எந்த நாடும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அமெரிக்க நாட்டு வித்தகர் வில் டூரண்ட (Will Durant) சொல்லுகிறார்,

"When a women speaks well of another,
the stars are disturbed in their courses"

என்று. ஆயின், உமையாள் போன்ற உயர்ந்த அழகுடைய பெண்களையே மெய்சிலிர்க்கச் செய்யும் சீதையின் அழகு எத்தகைத்தென்பதை எடுத்தியம்பல் மிகை. இந்த அழகினைக் கண்டவர்கள் தங்கள் விழிகள் இமைக்காமல் இருந்தால் இன்னும் நன்றாக அனுபவிக்கலாமே என்று ஏங்கினராம். இமையா நாட்டம் பெற்ற வானத்தவரோ எங்கள் இரண்டு கண்கள் எந்த மூலைக்கு என்றனராம்! சுவையை இன்னும் சிறிது நீட்டக் கம்பர் பாட்டு இடந்தருகின்றது.

இரு கண்களே உடைய தேவர் முக்கண்ணரிடம் சென்று அன்னையின் அழகு பற்றி வினவினர். சிவனோ, 'அன்பரீர்! எனக்கு உங்களைவிட ஒரு கண் அதிகமேயானாலும் அது எரிக்க மட்டுமே பயன்படுமென்பதை மறந்தீரோ' என்றார். பின்னர் அனைவரும் கண்கள் இருநான்குடைய பிரம்மதேவனை அணுக, அவர் பெருமூச்செறிந்து 'என் கண்கள் திசைக்கு இரண்டாகவன்றோ அமைந்து கிடக்கின்றன. நீங்கள் ஈராறு கண்களுடைய முருகனைப் பிடியுங்கள்' என்றார். முருகனோ, 'எனக்குக் கேவலம் பன்னிரண்டு கண்கள்தாமே! இவை போதவே போதா. ஆயிரம் கண்களுடைய இந்திரனை விட்டுவிட்டு என்னிடம் வந்தீர்களே?' என்று எள்ளினாராம்.

தேவர் குழாம் தேவேந்திரனை அணுகித் தங்கள் நோக்கத்தை வெளியிட அவன் பெரிதாகக் கண்ணீர்விட்டு 'எனக்கு உடல் முழுவதும் கண்ணான கதை தெரிந்து பரிகசிக்கவோ இங்கு வந்தீர்?' எனப் பொருமினானாம்.

இறுதியாக அனைவரும் இரண்டாயிரம் கண்களுடைய ஆதிசேடனை அடைந்து, 'ஐயனே! அன்னையின் அழகினை ஈராயிரம் கண்கள் கொண்ட நீயாவது முழுமையாகக் கண்டாயோ?' என வினவ அதற்கந்த அரவு,

"அல்லும் பகலும் இரண்டாயிரம் இமைக்காத கண்களாலும் திருமகளின் எழிலைக் கண்டு கண்டு இன்னமும் பார்த்தது போதும் என்று அமைய முடியாதவனாக இருக்கிறேன். என் நிலையைப் பார்த்தால் அது உங்களுக்குத் தெரியவில்லையா? பிராட்டியைப் பார்த்துக் கொண்டே இருப்பதால் எனக்கு ஏற்பட்ட கழுத்து வலியை ஆயிரம் நாவாலும் சொல்ல முடியாது. அப்படியும் பார்க்காமல் இருக்க என்னால் இயலவில்லையே? போதும் என்று மட்டும் எனக்குத் தோன்றிவிட்டால் என் கழுத்தை நிமிர்த்தி இருக்கமாட்டேனா?" என்று ஒரு போடு போட்டதாம்!

இது கம்பன் கவியுமல்ல! காவிய நயமுமல்ல, வெறும் காலட்சேபம். இவ்வாறு, 'அழகு இவளைத் தவம் செய்து பெற்றது காண்' என்று சீதையை நமக்கு அறிமுகப்படுத்தும் கம்பர், மெல்ல மெல்ல அவள் உள்ளத்தழகின் உணர்ச்சியிலே தம்மையே மறந்து,

"தவம் செய்த தவமாந் தையல்"

என்று சிகரத்தில் வைக்கிறார். அசோகவனத்தில் அக்கற்பணங்கைக் கண்டு களித்த அனுமன் வாயாலே,

"விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

என்று கைகொட்டிக் களிக்கின்றார்.

சீதாபிராட்டியை இராமனின் நிழல் என்று வருணிப்பார் துளசிதாசர். அவள் காலை நிழல் போல் அயோத்தியில் இராமபிரானுக்குப் பின் தங்கினாள். நண்பகல் நிழல் போல் வன வாழ்க்கையில் உடன் உறைந்து சென்றாள். மாலை நிழல் போல் பின்பகுதியில் தன் நாயகனுக்கும் முன்னாலேயே இலங்கை சென்று கற்புத் தீயினால் அந்நகரின் அழிவுக்கு அடிகோலி விட்டாள்.

வான் இயலும் காலக் கணக்கும்



அருட்செல்வர் முனைவர். நா. மகாலிங்கம்,
பொள்ளாச்சி.

இன்ன செயல் இன்ன காலத்தில் நிகழ்ந்தது, இன்ன அறிஞர் இன்ன நூற்றாண்டில் வாழ்ந்தார் – என்றெல்லாம் கணித்துக் கூறுவதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் முதயவை துணை செய்கின்றன. இலக்கியம், கல்வெட்டு முதலானவற்றை ஆதாரமாகக் கொண்டு காலத்தைக் கணிக்கும் போது பல சிக்கல்கள் எழுகின்றன. மாறுபட்ட முடிவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆதாரமாகக் கொள்ளும் பாடலுக்கு ஓர் அறிஞர் பொருள் கொள்வதுபோல் மற்றோர் அறிஞர் பொருள் கொள்வதில்லை. எனவே அவரவர் பொருளுக்கு ஏற்ப, காலத்தைப் பற்றிய முடிவும் வேறுபடுகிறது. கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்தின் வடிவம், சொல்லமைப்பு முதலானவற்றை ஆய்வாளர்கள் ஆயும்பொழுதும் அவரவர் கொள்ளும் முடிவுகளுக்கு ஏற்ப, காலத்தைப் பற்றிய கருத்தும் மாறுபடுகிறது. இதுதான் என உறுதிப்படுத்த முடியாத நிலை உருவாகி விடுகிறது.

ஆனால் காலத்தை உறுதியாகவும் முறையாகவும் கணிப்பதற்கு நமக்கு ஓர் அரிய சாதனம் கிடைத்துள்ளது. அதுதான் வான்இயல் என்பது. வான்வெளியில் உலவும் கோள்களும் விண்மீன்களும் ஒரு குறிப்பிட்ட கதியிலேயே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. சூரியன் தனது பரிவாரங்களாகிய கோள்களுடன் மில்கிவே (Milky way) எனப்படும் ஒளிமண்டலத்தை வலமாகச் சுற்றி வருகிறான். ஒரு வினாடிக்கு 225 மைல் என்ற வேகத்தில் அவன் 'மில்கிவே' ஒளிமண்டலத்தை ஒருமுறை சுற்றி வருவதற்கு 25 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இதே வேகத்தில் சூரியன் இருபது சுற்றுகளை முடித்துக்கொண்டு இப்பொழுது இருபத்து ஒராவது சுற்றில் .இயங்கிக் கொண்டிருக்கிறான். சூரியனை மையமாகக் கொண்டு சுற்றிவரும் கோள்கள் அனைத்தும் தாம் உருவான நாள் தொடங்கி ஒரு குறிப்பிட்ட பாதையில் **(ORBIT)** ஒரே சீரான கதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இ ங்கும் போது, உடன் இணைத்துக் காணப்படும் விண்மீன் குழுக்கள் (Clusters) முதலியவையும் காலம்தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ளனவாகக் காணப்படுகின்றன. கோள்களின் சுழற்சி, விண்மீன்களின் தானம் முதலானவற்றின் பின்னணியில் உலகியல் நிகழ்ச்சிகளைக் கூறும் கூற்றுகள் காலத்தை உறுதியாக புலப்படுத்தக் கூடியவையாக விளங்குகின்றன.

வானியல், காலத்தை உறுதிசெய்ய எவ்வாறு துணை செய்கிறது என இப்பொழுது காண்போம்.

பொதுவாகச் சங்க இலக்கியங்கள் கி.மு. 3000–க்கு முன்னே தோன்றவில்லை எனத் தமிழ் அறிஞர்கள் பலரும் இன்றளவும் கருதி வருகின்றனர். தொல்காப்பியம் கி.மு.3000–க்கு முற்பட்டதாக இருக்க முடியாது என்பதே இவர்களின் கோட்பாடு. சங்க இலக்கியங்கள் அனைத்தும் தொல்காப்பிய காலத்துக்குப் பிற்பட்டவையே என்றும் கூறி வருகின்றனர். ஆனால் வானியல் அடிப்படையில் பார்க்கும்பொழுது, சங்க இலக்கியங்களின் காலம் கி.மு.10,000–க்கும் முற்பட்டதாகவே கணிக்கமுடிகிறது. எடுத்துக்காட்டாக, எட்டுத்தொகையில் ஒன்றாகிய பரிபாடல் என்னும் நூலில் உள்ள 11 ஆம் செய்யுள் கூறும் செய்திகளைக் காண்போம்.

"நிலவுடன் சேர்ந்து விளங்கும் கார்த்திகை, திருவாதிரை, பரணி இம்மூன்றுடனும் தொடர்புடையனவாகிய இடபம், மிதுனம், மேடம் எனப்படும்

மூவகை ராசிகள் ஆகிய வீதிகளில், சுக்கிரன் இடபராசியில் விளங்க, செவ்வாய் மேடராசியில் விளங்க, புதன் மிதுன வீட்டில் இருக்க, கார்த்திகை உச்சத்தில் இருக்க விடியற்காலை நேர, வியாழக்கோள் மீனத்தைச் சார்ந்து இருக்க, சனிக்கோள் மகர வீட்டைச் சார்ந்து இருக்க அகத்தியம் எனும் விண்மீன் உயர்ந்த தன் இடத்தைக் கடந்து மிதுனராசியில் விளங்க, ஆவணித்திங்கள் முழுமதிநாளில் அவிட்ட நட்சத்திரத்தில், சந்திரன் மகரராசியில் நிற்க, இராகு தீண்டியதால் கிரகணம் ஏற்பட்டது. வையை நதியில் வெள்ளம் பெருக்கு எடுத்தது"

இத்துணைச் செய்திகள்,இப்பாடல் முதல் 15 வரிகளில் தரப்படுகின்றன. பரிபாடல் மூலம் நமக்குக் கிடைக்கும் மிக அரிய, மிக வியப்புக்குரிய வானியல் சான்று இது. இது கூறும் ராசிகளின் அமைப்பையும் விண்மீன்களின் அமைப்பையும் வானியல் நெறிப்படி ஆய்ந்து காணும்போது, இங்கே குறிப்பிடப்படும் ஆவணி மாதத்துச் சந்திர கிரகணம் கி.மு.10,200இல் ஏற்பட்டது எனக் கணிக்க முடிகிறது.

இப்பாடலைப் பாடிய நல்லந்துவனார், இவ்வாறு கோள்களின் நிலையையும் விண்மீன்களின் நிலையையும் மிகவும் துல்லியமாகக் கூறுவதை நோக்கும்போது, அவரது காலத்தில் வானியல் ஆய்வு எந்த அளவுக்கு வளம் பெற்றிருந்தது என உய்த்துணரலாம். அதுமட்டுமன்று. வானியல் தொடர்பான இனிய தமிழ் வழக்குச் சொற்களையும் காண முடிகிறது.

அங்கி, எரி	–	கார்த்திகை
சடை	–	திருவாதிரை
வேழம்	–	பரணி
வெள்ளி	–	சுக்கிரன்
படிமகன்	–	செவ்வாய்
அந்தணன்	–	வியாழன்(குரு)
பங்கு	–	சனி
பொதியின் முனிவன்	–	அகத்திய நட்சத்திரம்

இவ்வாறு கோள்களுக்கும் விண்மீன்களுக்கும் வரும் பெயர்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

"திங்களும் எல்ஆதவனும் சீவன்மழைக் கோளும்
சேய் சனியும் தூதுவனும் சீறுஅரவு இரண்டும்"

எனப் பாடுவார் பாம்பன் சுவாமிகள். இங்கே சீவன் என்பது வியாழக்கோளையும், மழைக்கோள் என்பது சுக்கிரனையும், சேய் என்பது செவ்வாய்க் கோளையும், தூதுவன் என்பது புதனையும் குறிக்கும். சீறும் அரவு – ராகுவும் கேதுவும், கோள்களுக்கும் விண்மீன்களுக்கும் உரிய தமிழ்ப் பெயர்களைக் கையாளும் மரபு பாம்பன் சுவாமிகள் காலம் வரை தொடர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பரிபாடற் செய்யுளில் ஓர் அரிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. அந்தக் குறிப்பும் இந்தப் பாடல் கி.மு. 10,200 க்கு முன் பாடப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது. *"அகத்தியம் என்னும் விண்மீன், உச்சநிலையைக் கடந்து மிதுன ராசியில் விளங்க"* எனவரும் குறிப்பே அது. இருபத்தேழு நட்சத்திர வரிசையில் அகத்தியம் எனும் விண்மீன் சேராவிட்டாலும், இந்த விண்மீனின் இயக்கத்தைக் கணித்து இயற்கை நிகழ்வுகளைக் கணிக்கும் வானியல் பயிற்சி அந்தக் காலத்தில் தமிழகத்தில் இருந்திருக்கிறது.

அகத்திய விண்மீன், இன்றைய வானியல் நூலில் **Canopus** எனக் குறிப்பிடப்படுகிறது. இன்றைய வானியல் வல்லுநர்கள் **Canopus** எனப்படும் அகத்திய நட்சத்திரத்தைப் பற்றி ஆய்ந்து அது இப்பொழுது நமது கண்களுக்குப் புலப்படாது என்றும், தென்துருவ நட்சத்திரங்களுள் ஒன்றாக அது ஆகிவிட்டது **(South circum polar)** என்றும், எனவே உதயமோ, அத்தமனமோ அதற்குக் கிடையாது என்றும் கூறியுள்ளனர். இவ்வாறு இந்த அகத்திய நட்சத்திரம் தென்துருவ நட்சத்திரங்களுள் ஒன்றாக ஆகிய காலம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எனவும் உறுதி செய்துள்ளனர்.

நல்லந்துவனார் காலத்தில் அகத்தியம் எனும் விண் மீன் உதயமாகி, உச்சிநிலையில் சென்று மிதுனராசியில் விளங்கியது எனக் கூறுவதால், அவரது காலத்தில் இந்த விண்மீன் உலகத்தார் கண்களுக்குப் புலப்படுவதாகவே விளங்கி இருந்தது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகத்தார் கண்களுக்குப் புலப்படாத வகையில் தென்துருவ நட்சத்திரமாக ஆகிவிட்ட அகத்திய நட்சத்திரத்தின் உதயத்தையும், இயக்கத்தையும் அது சார்ந்து இருந்த ராசியையும் ஒருநூல் குறிப்பிடுகிறது என்றால் அந்த நூல் உறுதியாகப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தாகத்தானே இருக்கவேண்டும்.

பரிபாடல் 11ஆம் செய்யுளில் விளக்கப்பட்டிருக்கும் கோள்களின் அமைப்பு, விண்மீன்களின் நிலை, சந்திர கிரகண நிகழ்ச்சி, இவை அனைத்துக்கும் மேலாக அகத்திய நட்சத்திரத்தின் உதயநிலை, உச்சநிலை ஆகிய இவை அனைத்தையும் நாம் கருத்தில்கொண்டு நுணுகிக் கண்டால் பரிபாடலின் காலம் கி.மு.10,200க்கு முன் என்று உறுதியுடன் கூறமுடிகிறது. எனவே பரிபாடலோடு சேர்ந்து விளங்கும் ஏனைய நூல்கள் பலவும் இந்தக் காலத்தைச் சார்ந்தவையே என்றும் கூறலாம்.

எரி, அங்கி என்றெல்லாம் சங்கத் தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிருத்திகை நட்சத்திரம், மிகு பழங்காலத்தில் 27 நட்சத்திர வரிசையில் முதல் நட்சத்திரமாக எண்ணப்பட்டதையும், அது அவ்வாறு கருதப்பட்டமைக்கு அந்த நீண்ட நெடும் காலத்தில் வடதுருவ நட்சத்திரங்களுள் ஒன்றாக அது விளங்கியதே காரணம் என்பதையும், தமிழகத்தின் முதற்பெரும் தெய்வமாக விளங்கிய முருகப் பெருமானோடு தொடர்புபடுத்தி ஆறு விண்மீன்களையும் ஆறு மாதர்களாக உருவகப்படுத்திப் புராணங்களில் கூறப்பட்டுள்ளதையும் நாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிருத்திகை எனப்படும் அறுமீன் கூட்டம் வடதுருவ நட்சத்திரங்களுள் ஒன்றாக **(North circum polar)** விளங்கிய காலம் கி.மு. 20,000 ஆண்டுகளுக்கு முன்னர் என இப்பொழுது வானியல் விஞ்ஞானப்படி உறுதிப்படுத்த முடிகிறது. உலகில் உள்ள மிகப் பழைய கலாச்சார மரபுகள் அனைத்தும் நம் தமிழக மரபு உட்பட, இந்தக் கிருத்திகை நட்சத்திரத்தோடு தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் தமிழ் ஆய்வாளர்கள் மேலும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மூத்த அறிஞர் நா.பொ.இராமதுரை அவர்கள் வானியல் கணித முறையில் கோள்களின் இயக்கத்தை நன்கு ஆய்ந்து, ஸப்தரிஷி சகாப்தம் தொடங்கிய ஆண்டு கி.மு. 15261 என நிறுவியுள்ளார். கிருத்திகை நட்சத்திரம் விளங்குவது போன்றே ஸப்தரிஷி மண்டலம் என்பதும் உலக கலாச்சார மரபுகள் அனைத்திலும் தொடர்புடையதாக விளங்குகிறது.

அகத்திய முனிவரின் பெயரால் அகத்திய நட்சத்திரம் விளங்குவது போன்று ஸப்தரிஷி மண்டலத்தில் உள்ள ஏழு நட்சத்திரங்களும் ஏழு முனிவர்களின் பெயர்களால் வழங்கப்படுகின்றன. ரிஷி எனும் சொல் வடமொழியில் முனிவரையும் குறிக்கும், நட்சத்திரத்தையும் குறிக்கும். மரீசி, வஸிஷ்ட அருந்ததி, ஆங்கிரஸர், அத்ரி, புலத்தியர், புலகர், கிரது என, ஸப்தரிஷி மண்டலத்தின் நட்சத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. வஸிஷ்ட–அருந்ததி என்பது இரட்டை நட்சத்திரம். (BINARY STAR) இணைபிரியாத நட்சத்திரம். ஒன்றையொன்று ஒருமுறை சுற்றி வருவதற்கு 60 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நட்சத்திர மண்டலம் 27 நட்சத்திரங்களில் ஒவ்வொரு நட்சத்திரத்துடனும் 100 சாந்திரமான ஆண்டுகள் தொடர்பு கொண்டதாக இருக்கும். சூரிய ஆண்டு முறைப்படி 81 ஆண்டுகள் என திரு.இராமதுரை நிர்ணயித்து உள்ளார். புராணங்களிலும், காவியங்களிலும், கல்வெட்டுகள் பலவற்றிலும் ஸப்தரிஷி மண்டலம் இன்ன நட்சத்திரத்தில் இத்தனையாவது ஆண்டு தங்கி உள்ளது எனக் குறிப்பிடப்படும் மரபு காணப்படுகிறது. இந்த ஸப்தரிஷி மண்டல நட்சத்திரத் தொடர்பின் அடிப்படையில் பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளுக்குரிய காலமும், புராண நிகழ்ச்சிகளுக்குரிய காலமும் இப்பொழுது தெளிவாக உறுதிசெய்ய முடிகிறது.

உலக நாடுகள் பலவற்றிலும் இந்த ஸப்தரிஷி மண்டலம் தொடர்பான நிகழ்வுகள் பல,ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஸப்தரிஷி மண்டலத்தின் (alkaid) அதாவது மரீசி எனும் நட்சத்திரம் வியாழக்கோளுடன் தொடர்பு உடையதாக விளங்கியபோது ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது என மேலைநாட்டு வானியல் ஆய்வு நூல்கள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வெள்ளச் சேதம் பெரும் அளவில் நிகழ்ந்த ஆண்டு கி.பி.1598.

இவ்வாறெல்லாம் வானியல் என்பது ஒரு நிகழ்வுக் குரிய காலத்தை உறுதியாகக் கணிப்பதற்குச் சிறந்த சாதனமாக விளங்குகிறது என்பதை நன்கு உணர வேண்டும். உணர்ந்து, இத்துறையில் மேலும் அதிக ஈடுபாடு கொண்டு காலத்தொடர்பான முடிபுகளை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்திக் கூறுவார்களாக.

குறுந்தொகை : கடவுள் வாழ்த்து கட்டமைப்பு ஆய்வு



முனைவர். செ. வை. சண்முகம்,
சிதம்பரம்.

1. முன்னுரை

கவிதைக்கு யாப்பு வடிவம் முக்கியமானது. ஆனால் தமிழ்க் கல்வி உலகில் கவிதை யாப்பு சடங்குச் செய்தியாக ஆகிவிட்டது. அதாவது பாவகையை அடையாளம் காணுவதோடு அல்லது குறிப்பிடுவதோடு நின்று விட்டது. அது எப்படிக் கட்டமைக்கப்பட்டது என்று பெரும்பாலானவர்கள் பார்ப்பதே இல்லை. யாப்பு மாணவர்களுக்குத் தேர்வுக்குரிய ஒரு பாடம் அல்லது ஆய்வாளர் சிலருக்கு உரிய தலைப்பு என்ற முறையில் இன்று யாப்பு கருதப்பட்டு வருகிறது. அதனால் கவிதையின் அடிஅமைப்பு, சீரமைப்பு முதலியனவும், தொடை அமைப்பும் வெறும் வாய்பாடாக அமைந்துவிட்டன. அவை மூலம் கட்டமைப்பின் வடிவக்கோலம் உணர்ந்து கவிதை அழகியல் உணர்வு உணரப்படவில்லை.

2. யாப்பு

கவிதைக்கு அடியே அடிப்படை அலகு. அடி அமைப்பைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் கூறிய பொழிப்பு, ஒரூஉ, தொடை அமையக்காரணம் என்ன? அடியின் சீர் எண்ணிக்கை மாறுபடக் காரணம் என்ன? சங்கப் பாடல்களில் ஒரு சில அடிகளில் மட்டும் தொடை அமைவது ஏன்? என்று கேள்விகளை எழுப்பிக் கவிதையை ஆழ்ந்து நோக்குதலே அமைப்பு அழகை உணர வழிவகுக்கும்.

பொருள் நிலையில் ஒரு கவிதையை, கருத்து அலகாகப் பிரித்து முன்னும் பின்னும் மாற்றி ஏன் பொருள் கொள்கிறோம் என்றும், கவிதையை மீண்டும் மீண்டும் நோக்கவே கட்டமைப்புச் சிறப்புப் புலனாகி, அழகு உணர்வு தோன்றும். தொடை அமைப்பும், வண்ணம் – குறிப்பாக ஒலி அடிப்படையில் வண்ண அமைப்பும் – சேர்ந்து கவிதையின் ஒலிக் கோலம் அமைகிறது. மொழி அமைப்பு நோக்கில் ஒரு முகப்போக்கு, சொல் திருப்புரை போன்றவைகளைச் சொற்கோலமாகக் கருதலாம். பொருட்கோலம் என்பது பொருண்மை இயல் நோக்கில் பார்க்கப்படவேண்டிய ஒன்று. இப்படிக் கவிதையைப் பலவகை நோக்கில் ஆழ்ந்து பார்க்கும் பொழுது அதன் பலநிலைக் கட்டமைப்பு, ஒழுங்கமைவு (Pattern) புலனாகி, கவிதை அழகியலை உணரவழி வகுக்கும். அந்த ஆழ்ந்த நோக்கத்தில்தான் கவிதையின் கட்டமைப்பில் ஒழுங்கமைவைக் 'கட்டமைப்பு அழகாக' உணரமுடியும்.

2.1 தூக்கு

'கவிதையின் அடிப்படை அலகு அடியே'. அதனால்தான் தொல்காப்பியர் 'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' (செய்.35) என்கிறார். கவிதையை வாய்விட்டுப் படிக்கும் பொழுது ஒவ்வொரு அடியையும் நிறுத்திப் படிப்பது இயல்பானது. ஓர் அடியில் உள்ள சீர் எண்ணிக்கையில் சந்தேகம் வரும் பொழுது எங்கே நிறுத்தம் செய்து வாசிக்கிறோம் என்பதைப் பொறுத்தே அடியின் அமைப்பு அமையும். அதனால் அடி நிறுத்தம் என்பதும் கவிதையில் முக்கியமானதாகக் கருதப்படும். அதைப் பேராசிரியரும், அவரையொட்டி நச்சினார்க்கினியரும் 'தூக்கு' என்று குறிப்பிட்டு அதன் அவசியத்தை, செய்யுளியலில் தூக்கு(செய்.86) பற்றிய சூத்திரத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். (சண்முகம்.1998 : 228–43) அந்தத் தூக்கு தொல்காப்பியர் குறிப்பிடும் தூக்கிலிருந்து மாறுபட்டது. தொல்காப்பியர் குறிப்பிடும் தூக்கு செய்யுள் முழுமைக்கும் உரியது. மாறாகப் பேராசிரியர் குறிப்பிடுவது ஓர் அடிக்கு மட்டும் உரியது. இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒவ்வோர் அடியும்

நிறுத்தம் செய்து வாசிப்பதாலேயே தூக்கு அமைகிறது என்பதே.

2.2 பிணை

கவிதையின் ஓர் அடியை யாரும் ஒட்டு மொத்த-மாகப் படிப்பதில்லை. அதாவது அடிக்குள்ளும் நிறுத்தம் செய்தே வாசிக்கிறோம். நாலு சீர் கொண்ட பாடலிலும், இரண்டாவது சீருக்குப் பிறகோ, மூன்றாவது சீருக்குப் பிறகோ ஓரளவு நிறுத்தம் செய்தே வாசிக்கிறோம். மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் – என்றகுறளடியை(3) மலர்மிசை ஏகினான் என்பதை ஒரு பகுதியாகவும், மாணடி சேர்ந்தார் என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே படிக்கிறோம். அதாவது இரண்டாவது சீருக்குப் பிறகு நிறுத்தம் செய்து படிக்கிறோம் என்பது பொருள். இதை 2+2 என்று குறிப்பிடலாம். அதாவது இரண்டாவது சீருக்குப் பிறகு நிறுத்தம் இருக்கிறது என்பது பொருள். 'கற்றதனாலாய பயனென் கொல்'என்ற மூன்று சீரை ஒரு பகுதியாகவும் வாலறிவன் என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே படிக்கிறோம். இதை 3+1 என்று குறிப்பிடலாம். இந்த நிறுத்தமே பிணை என்று அழைக்கப்படுகிறது.

பெரும்பாலும் ஓர் அடிக்குள் ஒரு நிறுத்தமே இருக்கும். ஒரு சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பிணை நிறுத்தமும் அமைவதுண்டு. "துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்" என்ற(42) குறளடியில் துறந்தார்க்கு என்பதை ஒரு பகுதியாகவும், துவ்வா தவர்க்கு என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே நிறுத்தி வாசிக்கிறோம். அதனால் இங்கு 1+2+1 என்று பிணை நிறுத்தம் அமைவதாகக் கருதவேண்டும். அதற்கு முக்கியக்காரணம் அவை நாலாம் வேற்றுமை ஏற்றமூன்று உம்மைத் தொடராக அமைவதே.

'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து' (குறள் : 1085)

இங்கு மூன்று ஒகார இடைச் சொற்கள் மாற்றுப் பொருளில் அமைந்துள்ளதால் 1+1+1+1 என்ற மூன்று பிணைகள் அமைந்துள்ளன. மூன்று மாற்றும்மையாக ஒகாரம் இருப்பதால் மூன்று பிணை அமைந்துள்ளதாகக் கொள்ளவேண்டும்.

தொல்காப்பியர் ஓர் அடிக்குள்ளேயே பொழிப்பு (முதல் சீரும் மூன்றாவது சீரும் தொடை ஒற்றுமை உடையது செய்: 97) ஒரூஉ (முதல் சீரும் நாலாவது சீரும் (செய்:98) ஒத்து வருவது) என்ற இரண்டு வகைத் தொடைகள் குறிப்பிடப்படுவதாலேயே ஓர் அடிக்குள் நிறுத்தம் இருப்பதை உள்ளூர உணர்ந்திருக்கிறார் என்பது புலப்படுகிறது. இந்த அடிப்படையிலேயே சீருக்கும் அடிக்கும் இடைப்பட்ட 'பிணை' என்ற புதிய யாப்பு அலகு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் ஓர் அடிக்குள் எங்கு நிறுத்தம் செய்து படிக்கிறோம் என்பதையே பிணை அலகு குறிப்பிடுகிறது. பெரும்பான்மையும் ஒன்றுக்கு மேற்பட்ட சீர் பிணையாக அமைவதால் பிணைக்கட்டு இங்குக் குறிப்பிடப்படுகிறது.

2.3 தொடைக்கட்டு

இடைக்கால இலக்கியங்களில் நான்கு அல்லது ஐந்தடிகள் உள்ள பாடல்கள் ஒரே அடி எதுகையோ, மோனையோ பெற்று இருக்கும். சில பாடல்கள் முதல் இரண்டடி ஒரு தொடை அமைப்பும், பின் இரண்டடி ஒரு தொடை அமைப்பும் கொண்டதாக அமைந்துள்ளதைப் பார்க்கலாம். யாப்பிலக்கண ஆசிரியர்கள் முன்னதை ஒரு விகற்பப்பாடல் என்றும், பின்னதை இரு விகற்பப்பாடல் என்றும் அழைப்பார்கள். அதாவது இடைக்காலப் பாடல்கள் அடியைப் பிரித்து அறிவதற்குக் கூட அடியின் தொடை அமைப்பு பயன்பட்டது. மாறாகச் சங்க இலக்கியப் பாடல்களில் அடித்தொடை முழுவதும் பின்பற்றப்படுவதில்லை. 'முட்டுவேன்கொல் தாக்கு வேன்கொல்' என்ற குறுந்தொகைப் பாடலில் அடி, தொடை எதுவும் அமையவில்லை. மாறாகப் பல பாடல்களில் முதலிலோ, இடையிலோ, கடையிலோ இரண்டு அடிகளில் மட்டும் அடித்தொடை அமைந்து காணப்படுகிறது. 'அருளும் அன்பும் நீக்கி' என்ற குறுந்தொகைப் பாடலில்(20) முதல் இரண்டு அடிகளில் மட்டும் அடி எதுகை பெற்றுள்ளது. அதாவது சங்கப் பாடல்களில் அடித்தொடை கட்டாயமாகப் பின்பற்றப்படாததால் ஒரு பாடலில் எந்த இரண்டு அடிக்குள் அடித்தொடை அமைந்திருக்கிறது என்று பார்ப்பது குறிப்புப் பொருள் உணர வழிவகுக்கும். ஒரு பாடலில் அடித்தொடை அமைந்த அடிகளை ஓர் அலகாகக் கொள்வதே 'தொடைக்கட்டு' என்று குறிப்பிடப்படுகிறது.

3. குறுந்தொகை – கடவுள் வாழ்த்து

"தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்து அன்னமேனி, திகழ்ஒளி
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்

நெஞ்சுபக எறிந்த, அஞ்சுடர் நெடுவேல்
சேவலம் கொடியோன், காப்ப
ஏம வைகல், எய்தின்றால் உலகே.”

3.1 பிணைக்கட்டு

2+2 = முதலாவது அடி

3+1 = இரண்டாவது அடி

3+1 = மூன்றாவது அடி

2+2 = நான்காவது அடி

2+1 = ஐந்தாவது அடி

2+2 = ஆறாவது அடி

முதல் அடியில் உள்ள பிணைக்கட்டு பொழிப்பு எதுகையாலும், இரண்டாவது அடியில் ஒரூஉ இயைபாலும் மூன்றாவது அடியில் ஒரூஉ முற்று மோனையாலும், நான்காவது அடியில் பொழிப்பு எதுகையாலும், ஆறாவது அடியில் இணைமோனை யாலும் உறுதிபட, ஐந்தாவது அடி பிணைக்கட்டுக்குத் தொடை நோக்கில் உள்ளார்ந்த சான்று இல்லை, என்றாலும் தொடரியல் நிலையில் எழுவாய்–பயனிலை என்ற முறையில் பிணைக்கட்டு உறுதிப்படுவதாகக் கொள்ளலாம். இங்குப் பிணை நிறுத்தம் பெரும்பான்மையும், தொடை அமைப்பு நோக்கில் அமைந்துள்ளது. அதை மொழி அமைப்பு நோக்கிலும் நியாயப் படுத்தமுடியும் என்பது சுட்டிக் காட்டத் தகுந்தது. முதல் அடியில் உவமானத் தொடர் + உவமேயத்தொடர் என்ற முறையிலும், இரண்டாம் அடியில் இரண்டு உம்மைப் பெயர்த் தொடர்கள் என்றமுறையில் பெயர்த் தொடர் + பெயர்த் தொடர் என்ற முறையிலும், மூன்றாம் அடியில் அடிவகையுளி அதாவது ஒரு தொடரும், இன்னொரு தொடரின் பகுதி என்ற முறையிலும், நான்காம் அடியில் பெயரெச்சத் தொடர் என்ற தொடர் முறையில் தொடர்பெயரெச்சம் + பெயர்த்தொடர் என்ற முறையிலும், கடைசி அடியில் ஒரு வாக்கியம் என்ற முறையில் செயப்படுபொருள் + பிறதொடர் என்ற முறையிலும் பிணை நிறுத்தங்கள் அமைந்துள்ளன.

3.2 தொடைக்கட்டு

இந்தப் பாடலில் முதல் இரண்டு அடியும் எழுத்தடி இயைபாலும், இறுதி இரண்டு அடிகள் அடிஎதுகையாலும் தொடைக்கட்டுப் பெறுகின்றன. முதல் தொடைக்கட்டு அகஉறுப்பு என்ற பொருள் ஒற்றுமை (அடி, மேனி) உடையது. மாறாக அடுத்த அடி(ஆடை– உடுக்கை) புறத்துறுப்பு என்ற பொதுமை பெறுவதால் அவை ஒரு தொடைக்கட்டு என்பது உறுதி ஆகின்றன. இறுதி இரண்டு அடிகளும் கடவுள் வாழ்த்து என்ற முறையில் பொருள் ஒற்றுமை பெறுவதால் ஒரு கட்டாக அமைகின்றன.

இன்னொரு நிலையில் முதல் நான்கு அடிகளும் அவருடைய உடல் வருணனை என்ற முறையில் பொதுமைப்படுவதால் அது ஒரு பொருள் அலகு என்று கொள்ள வைக்கிறது.

3.3 அடிக்கட்டு

இந்தப் பாடலில் ஆறு அடிகள் அமைந்திருப்பது முருகனுக்கு மற்றொரு பெயராக உள்ள ஆறுமுகம் என்பதன் பிரதிபலிப்பாகவும் 'நமகுமாராய' என்னும் ஆறெழுத்து மந்திரத்தின் பிரதிபலிப்பாகவும் அமையும் என்பார் பண்டிதமணி.மு.கதிரேசன் செட்டியார் (1941). மேலும் இங்குச் சேவடி, மேனி, ஒளி, உடுக்கை, நெடுவேல், கொடி ஆகிய ஆறு உறுப்புகள் அமைந்துள்ளதும் ஆறுமுகம் என்பதற்குக் கூடுதல் சான்றாகும்.

கடவுளின் உறுப்புக்களில் திருவடியே முக்கியமான சிறப்புடையதாகக் கருதுவதே பக்தி இலக்கிய மரபு. வள்ளுவரும் கடவுள் வாழ்த்தில் திருவடியின் சிறப்பைப் பல குறள்களில் நற்றாள்(2), மாணடி (3) என வற்புறுத்தியுள்ளார். பிற்காலப் பக்தி இலக்கியங்களிலும் இந்த உண்மை வலியுறுத்தப்படுவதைக் காணலாம். உதாரணமாக, அப்பர், 'குனித்த புருவமும்' என்ற பாடலில் 'இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்' என்று திருவடியை நாலு சீராலும் ஏனைய உறுப்புகளைக் குறைந்த சீராலும் (குனித்த புருவம், பனித்தசடை என்று ஈரிரண்டு சீராலும், 'கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பு, பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறு' என்று மும்மூன்று சீராலும்) பாடியுள்ளதும், கம்பர், 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற பாடலில் 'தொடுகழல் கமலமன்னதாள் கண்டார்தாளே கண்டார்' என்று திருவடியை அதிகச் சீராலும் (இரண்டு அடிகளின் பகுதியாலும்) வருணித்து இருப்பதும் இந்த உண்மையை வலியுறுத்தும்.

'மேனி' என்பது உடலின் பெரும்பகுதியைக் குறிப்பதால் மூன்று சீர் பெறுகிறது. புறத்துறுப்புகளில் உடுக்கை மூன்று சீர்களைப் பெற்று ஓர் அடியின் ஒரு பகுதியாகவும், வேல் ஐந்து சீர் பெற்று இரண்டு அடிகளின் பகுதியாகவும் அமைந்துள்ளன. காரணம், வேல் முருகனுடைய அருள்

திறத்தை – பகைவர்களை அழித்து, அடியார்களைக் காப்பாற்றுவதை – உணர்த்துவது தான்.

3.4 சொல் தேர்வு

'எய்தின்றால்' என்ற சொல்லுக்கு, உ.வே.சா 'அடையாநின்றன' என்றும், பிரேமா(1999) 'பெற்றுச் சிறக்கின்றன' என்றும் பொருள் கூறி விளக்கி யுள்ளார்கள். பொதுவாக எய்துதல் என்பது மெல்லச் சேருவதைக் குறிக்கும். முருகன் காப்பதால் உலகம் பாதுகாவலான நாட்களை அடைந்தது என்று சொல்லும் போது ஓர் எதிர்மறைப்பொருள் தோன்றும் வாய்ப்புள்ளது. அதற்கேற்பக் "காவாக்கால் உயிர்கள் இன்புறமாட்டா" என்ற சோமசுந்தரனார் விளக்கவுரையும் அமைந்துள்ளது.

உலகம் என்பதற்கு 'அறிவில் (அறிவில்லாத) உலகினை ஒழித்து அறிவுடைய உலகத்தை' என்று சோமசுந்தரனார் குறிப்பிடுவதைச் சிறப்பானதாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால் கடவுள் அறிவுடைய, அறிவில்லாத எல்லா உயிர்களையும் காப்பார் என்பதே சிறப்பு.

3.5 தொடர்க்கட்டு

இப்பாடல் ஒரு கலவை வாக்கியம். ஈற்றயலடி,'காப்ப' என்னும் செயவென் வினையெச்சம் கொண்டுள்ளதால் துணைவாக்கியம் ஆகும். அதற்குக் கொடியோன் என்பதே எழுவாய். எனவே கொடியோனுக்கு முன் உள்ள எல்லாச் சொற்களும் (முதல் நான்கு அடிகளும், ஐந்தாவது அடியின் முதல் சீரும்) அடையாக அமையும்.

ஈற்றடி தான் தலைமை வாக்கியம் (ஏமவைகல் எய்தின்றால் உலகு). அது செயப்படுபொருள் + பயனிலை + எழுவாய் என்றஅமைப்பு உடையது.

'கொடியோன் காப்ப உலகு ஏம வைகல் எய்தின்று' என்ற கலவை வாக்கியம் பிறவினை கொண்டு (காப்ப எய்தின்று) முற்றுப் பெற்றுள்ளது.

இறைவனின் திருவடியே அடியார்களுக்கு முக்கியமானது போலவே பாட்டின் திரள் கருத்தை இறுதி இரண்டு அடிகளே (கொடியோன் காப்ப, உலகம் ஏமவைகல் எய்தின்று) விளக்குவதாக அமைந்துள்ளதும் சிறப்பாகச் சுட்டிக் காட்டத் தகுந்தது. அதாவது இறைவன் திருவடி போலப் பாட்டின் இறுதி அடியும் பொருள் வகையால் முக்கியத்துவம் பெற்று சிறப்புப் பெறுகிறது. யாப்பு நோக்கிலும் இந்த இரண்டு அடி ஒரு தொடைக் கட்டாக அமைந்துள்ளது தனிச்சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

உண்மையில் 'சேவலம் கொடியோன்' என்பது குறிப்பு வினையாலணையும் பெயர். சேவலம்கொடி+ஒன். உண்மையில் 'ஒன்' என்றஆண்பால் விகுதி, முன் உள்ள எல்லாப் பெயர்களுக்கும் பொருந்துவதாகக் கூடக் கொள்ளலாம். சேவடியோன், மேனியோன், திகழொளி யோன், உடுக்கையோன், வேலோன் இந்த நிலையில் ஆறுபெயர்களும் இணைந்து உம்மைத் தொகையாக அமைந்து 'காப்ப' என்ற வினையை ஏற்பதாகக் கொள்வதில் தவறு இல்லை. வாக்கியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்த பெயர்கள் வரும்பொழுது ஒரு பெயரைத் தக்கவைத்துக் கொண்டு மற்ற பெயர்களைக் கெடுப்பது போல (முருகன் வந்தான், முருகன் படித்தான், முருகன் எழுதினான், என்ற தொடர்களை முருகன் வந்தான்; படித்தான்; எழுதினான் என்று சொல்லலாம்). இங்கு ஆறு ஒத்த விகுதிகள் அமைந்திருப்பதால் ஐந்து கெடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆகும். செய்யுள் என்பதால் இறுதி விகுதியைத் தக்கவைத்துக் கொண்டு ஏனைய விகுதிகள் கெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் சோமசுந்தரனார் அஃறிணைப் பொருளாகக் கொள்ள (அடி, மேனி). இங்கு உயர்திணைப் பெயர்களின் தொகைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்குப் புலவர், கடைசியில் உள்ள பெயரான கொடிக்கு, குறிப்பு வினை விகுதியைச் சேர்த்தது அதன் தனிச்சிறப்பைக் காட்டும். அதாவது ஏனைய பெயர்கள் தனிமனிதன் உறுப்புகள் என்ற முறையில் அமைந்துள்ளன என்று ஆகும். கடவுள் உலகு காப்பதை எல்லோரும் அறிவார்கள் என்ற முறையில் செயப்படுபொருள் 'உலகு' கெடுக்கப் பட்டதாகக் கொள்ளலாம். தலைமை வாக்கியத்தில் உலகு (எழுவாய்) + ஏமவைகல் (செயப்படுபொருள்) எய்தின்றால் (பயனிலை) என்ற புதைநிலை அமைப்பு, செயப்படு பொருளும் பயனிலையும் சேர்ந்த பயனிலைத் தொடர் முன் நிறுத்தம் செய்யப்படுவதால் 'உலகு' என்பது ஈற்றுச் சொல்லாகப் புறவடிவம் கிடைக்கிறது.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் 'உலகம் உவப்ப வலனேர்பு' . . . என்று தொடங்கி 'உலகு' என்ற சொல்லை முதலில் அமைக்க இங்கு 'உலகு' ஈற்றுச் சொல்லாக வருகிறது. ஆனாலும் இந்தப் பாடலின் எழுவாய் என்ற முறையில் (உலகு சேவலங்கொடியோன் காப்ப ஏமவைகல் எய்தின்று) தலைமைப் பண்பைப் பெற்று

வாசகருக்கு எதிர்பார்ப்பை உண்டாக்கும் வகையில் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

துணைவாக்கியத்தில் உள்ள வினை 'காப்ப', செயப்படுபொருள் குன்றா வினையாக இருப்பதால் அதற்கு ஒரு செயப்படுபொருள் இருக்கவேண்டும். 'சேவலம் கொடியோன் உலகைக் காப்ப' என்பது புதைநிலை வாக்கியமாக அமையும். ஒத்த பெயர் செயப்படுபொருளாகவும், எழுவாயாகவும் அமைந் தாலும் செயப்படுபொருளில் உள்ள ஒத்த பெயர் என்ற முறையில் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

3.6 வண்ணக்கோலம்

முதலடி குறிலும் நெடிலும் கலந்து வருவதால் சித்திர வண்ணமாகவும், இரண்டாவது அடி இடையினம் மிகுந்து வருவதால் இயைபு வண்ணமாகவும், அடுத்த இரண்டு அடிகளும் வல்லினம் மிகுந்து வருவதால் வல்லிசை வண்ணமாகவும் வீரத்தின் பிரதிபலிப்பாகவும் அமைகின்றன. ஒவ்வொரு சீரிலும் நெட்டெழுத்து முறைமாறி (முதல் சீரில் முதல் அசையிலும், இரண்டாவது சீரில் இரண்டாவது அசையிலும், மூன்றாவது சீரில் முதல் அசையிலும்) வருகிறது. கடைசி அடியில் நெட்டெழுத்து இரண்டு சீரை ஓர் அலகாகக் கொண்டு முறைமாறி (முதல் இரண்டு சீரில் முதல் அசையிலும், கடைசி இரண்டு சீரில் இறுதி அசையிலும்) வந்துள்ளது. பாட்டு முழுமையும் ஒழுகிசை வண்ணம் அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

3.7 பொருள் கோலம்

பேராசிரியர் திருக்கோவையார் முதல் பாடலுக்கு எழுதிய உரையை ஒட்டிப் பண்டிதமணி. கதிரேசன் செட்டி-- யார் (1941) இந்தப் பாடலிலும் ஐந்து நிலமும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) குறிப்பிடப் பட்டுள்ளதாக விளக்கியுள்ளார். அதாவது பொருள்கள் ஆகுபெயராக அல்லது சுட்டியாக (Index) நிலத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. 'தாமரை' மருத நிலத்தையும், 'பவழம்' நெய்தல் நிலத்தையும், 'குன்று' குறிஞ்சி நிலத்தையும், 'குன்றி' (குண்டுமணி) முல்லை நிலத்தையும் சுட்டுவதாகக் கொண்டுள்ளார். பாலைக்குத் தனிநிலம் கிடையாது. ஆனாலும் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலை நிலமாகும் என்ற கருத்துக்கேற்பக் 'குன்றி' (முல்லை)யும் 'குன்றும்' (குறிஞ்சியும்) ஒரே அடியில் குறிப்பிடப்பட்டிருப்பதால் பாலையும் குறிப்பிடப்பட்டதாகக் கருதலாம் என்பார் அவர். மாறாக, 'நெஞ்சுபக எறிதல்' என்பதைப் பாலை நிலக்கள்வரின் செயலின் குறியீடாகக் கொண்டு பாலைநிலம் குறிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அதாவது உலகு என்பது ஐந்துவகை நிலத்தால் ஆனது என்பதும் கூடுதல் பொருளாக விளக்கப்பட்டதாகக் கொள்வது ஒருவகையில் 'பொருள் கோலம்' எனலாம்.

3.8 மெய்ப்பாடு

ஒரு கவிதையை வாசிக்கும் பொழுது கவிதை மாந்தர் புலப்படுத்தும் மெய்ப்பாடும், அந்தக் கவிதையை வாசிப்பவர் உணரும் மெய்ப்பாடும் கவனிக்கத் தகுந்தவை. பின்னது வாசகரின் புரிதிறனின் (புரிந்து கொள்ளும் திறமை) ஆழத்தைப் புலப்படுத்தும். இந்தக் கவிதை முருகனின் வருணனையாக அமைந்துள்ளதால் இங்கு வாசகர் மெய்ப்பாடே அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

முதல் இரண்டு அடிகள் முருகனின் உருவ அழகு என்பதால் உவகை மெய்ப்பாட்டையும், அடுத்த இரண்டு அடிகள் 'அணங்கு' (மெய்ப்பாடு.8) தெய்வம் என்பதே பேராசிரியர் உரை) காரணமாக எழும் அச்ச மெய்ப்பாட்டையும், கடைசி இரண்டு அடிகள் ஆக்கம் (மெய்ப்பாடு.7) காரணமாக எழுந்த மருட்கை மெய்ப்பாட்டையும் புலப்படுத்துகின்றன.

5. முடிவுரை

இது ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல். தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும்போது அகப்புறப்பாடலுக்குப் பிறகுதான் பக்திப் பாடல் தோன்றியதாகக் காணலாம். பக்திப்பாடல் புறப்பாடலின் ஒருவகை நீட்சி என்பார் ராமானுஜன் (1985). அதற்கு ஏற்பவே சங்க காலத்தில் அரசனோடு தொடர்புடைய கோயில் (அரண்மனை), இறை(அரசன்) போன்ற சொற்கள், இடைக்காலத்தில் கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்படியே அரசனை வாழ்த்தும் பாடல் மரபுகளும், கடவுள் வாழ்த்துப்பாடல் மரபுகளாக மாற்றம் பெற்றன. அரசனை வாழ்த்தும் போது அந்த அரசன் காப்பதால் நாடு வளம் பெற்றது என்று சொல்கிற மரபுண்டு. அங்கும் ஓர் எதிர்மறைப்பொருள் உண்டு. அந்த அரசனுக்குமுன், மக்கள் நல்ல பாதுகாவலரைப் பெறவில்லை என்ற குறிப்புண்டு. இங்கும் 'காப்ப' என்றும், 'ஏமவைகல் எய்தின்று' என்றும் கூறியவை அரசனோடு தொடர்புடையவையே.

அந்த நிலையில் பார்க்கும் போது இந்தப் பாடலும் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைந்திருந்தாலும் அரச வாழ்த்துப் போல அமைந்துள்ளது. அதனால் குறுந்தொகை காலத்துக்குப் பிறகு தொகுக்கும் பொழுதே எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது தேவாரம், நாலாயிரத் திவ்யபிரபந்தம் போன்ற முழுபக்தி இலக்கியத்திற்கு முன்னாலும், சங்க இலக்கியத்திற்குப் பின்னாலும் பாடப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் இந்தப் பாடலில் பக்தி இலக்கிய மரபு முழுவதும் காணப்படவில்லை.

துணையன்கள்

1 கதிரேசன் செட்டியார், மு.பண்டிதமணி, 'குறுந்தொகை' உரைநடைக் கோவை, இரண்டாம்பகுதி ப.109–32, சென்னை. 1941.

2. சண்முகம்.செ.வை, 'தூக்கு அடி விட்டிசை' இலக்கியமும் மொழி அமைப்பும், ப.223–43, சென்னை. 1998.

3. சண்முகம்.செ.வை, கவிதைக் கட்டமைப்பு, சிதம்பரம். 2004.

4. சாமிநாதையர்.உ.வே (பதிப்பு), குறுந்தொகை, சென்னை. 1937.


5. சோமசுந்தரனார்.பொ.வே, குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை. 1955.

6. தொல்காப்பியம் பொருளதிகாரம், பிற்பகுதி பேராசிரியர் உரை. (குறிப்புரையுடன்) பதிப்பு. கு.சுந்தரமூர்த்தி, அண்ணாமலை நகர். 1985.

7. பிரேமா.இரா, குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை. 1999.

8. Ramanujan.A.K. (Tr), Poems of war and love, Delhi. 1985.

உள்ளுறையும் இறைச்சியும்



முனைவர். நா. பாலுசாமி,
மதுரை.

உள்ளுறை உவமம்

(அ) "உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகும் திணைஉணர் வகையே" (46)

(ஆ) "உள்ளுறைதெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (47)

(இ) "உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிக என
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறைஉவமம்" (48)

(ஈ) "ஏனை உவமம் தான் உணர் வகைத்தே" (49)

– அகத்திணை இயல் நூற்பாக்கள்

(உ) "உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே" (48)

(ஊ) "அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே" (49)

(எ) "மங்கல மொழியும், வைஇய மொழியும்,
மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கில் கொள்ளும் என்ப" (50)

- பொருளியல் நூற்பாக்கள்

(ஏ) "பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபின் கூறுங் காலைத்
துணிவோடு வருஉம் துணிவினோர் கொளினே" (23)

(ஐ) "உவமப் போலி ஐந்தென மொழிப" (24)

(ஒ) "தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும்உருவினும்
பிறப்பினும் வருஉம் திறத்தியல் என்ப" (25)

-உவம இயல் நூற்பாக்கள்

மேலே காட்டிய (அ) முதல் (ஒ) ஈறாகிய பத்து நூற்பாக்களையும் மனம் கொண்டு, ஆய்ந்து தெளிந்தாலே உள்ளுறை உவமத்தின் பொருளையும் பயனையும் உண்மையாக அறிய முடியும். ஏனை உவமத்தை ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. ஏனை உவமத்தில் உள்ளுறைக்கு இடமில்லை. ஏனை உவமத்தில் பொருளும் உவமமும் வேறு வேறு நின்று பொருள் வெளிப்படத் தோன்றும்.

இனி, (ஆ), (இ) ஆகிய இரு நூற்பாக்களையும் ஆய்ந்து உள்ளுறை உவமத்தின் நுட்பத்தை அறிவாம். "உள்ளுறை உவமமாவது, ஏனை வெளிப்படை உவமம் போலாது உணர்தற்கு அரிதாய், களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளின்கண்ணும், வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்னும் ஐவகை நிலைக்களன் உடைத்தாய், தெய்வம் ஒழிந்த கருப்பொருளைப் பற்றிச் சான்றோர் செய்யுட்கண் வரும் உவம வகை. . . . . இஃது ஐவகைப்படும் என்றும் இஃது இன்பமும் துன்பமும் தோன்றச் சொல்லப்படும் என்றும் கூறுப" என்பது ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் உரைவிளக்கம் (ஐங்குறு, வேட்கை. மருதம் 1) இனி, இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்.

"வாழி ஆதன்; வாழி அவினி;
நெற்பல பொலிக; பொன் பெரிது சிறக்க;
எனவேட் டோளே யாயே! யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க;
பாணனும் வாழ்க; எனவேட் டேமே!"

பொழிப்பு

"காவல் பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதல் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதல் பொருட்டுப் பொன் மிக உண்டாகுக; என யாய் (தலைவி)

இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகியதல்லது, பிறிது நினைத்திலள்; அவள் இத்தன்மையளாக, நீ (தலைவன்) ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும், நின் ஒழுக்கத்திற்குத் துணையாய பாணனுக்கும் தீங்குகள் வரும் என்று அஞ்சி, யாணர் ஊரன் வாழ்க; பாணனும் வாழ்க' என விரும்பினேம் யாம்". 'யாம்' என்றது ஆயத்தாரையும் உளப்படுத்தி. (பழைய உரை)

இப்பாடலில் ஊரன் என்றது மருதநிலத் தலைவனை. யாணர் – புதிய வருவாய். காஞ்சிப் பூவையும் சினை மீனையும் ஒருங்கே உடைய ஊரன் என்பதால், புறவொழுக்கம் பூண்டு ஒழுகிய தலைவன் என்பது பெறப்படும். யாங்ஙனம் எனின், குலமகளாகிய (மனைவி) காஞ்சிப்பூவையும், விலை மகளாகிய சினை மீனையும் ஒன்றாக நினைக்கும் இழிசினன் இவன் என்பது பெறப்படும். உள்ளுறை தலைவன் பரத்தையர் மாட்டுச் செல்லும் தகாத நடத்தை உடையவன் என்பதை வெளிப்படையாகக் கூறாது, பூவையும் மீனையும் வெளிப்படக் கூறி நாகரிகமாக அவனது களவொழுக்கத்தைப் புலப்படுத்தினாள் தோழி.

நறுமணம் மிக்க காஞ்சிப்பூ - இல்லத்தரசி.
நாற்றமெடுக்கும் சினைமீன் - பரத்தை.
இரண்டும் அவனது மருதநிலக் கருப்பொருள்கள்

ஆனால், புலவர் கூற நினைப்பது ஊரன் பரத்தமை உடையவன் என்பதாம்.

"தலைமகளையும் பொதுமகளிரையும் தலைமகன் ஒப்பக் கருதி ஒழுகுகின்றான் என்பதனை உள்ளுறையால் கூறினமையின் வெளிப்படக் கூறிற்றிலள்; காஞ்சியின் பூவும், மீனின் சினையும் ஒப்ப விளையும் ஊரன் என்றதனால் குலமகளிரையும் பொது மகளிரையும் ஒப்பக் கருதுகின்றான் என உள்ளுறைஉவமம் கொள்ளப்படும்"
–(ஔவை, சு.து)

இனிப் பிறிதோர் எடுத்துக்காட்டும் காண்போம்: நற்றிணைப் பாடல்(4) நெய்தல்: இது, தலைவன் சிறைப்புறத்தானாக, தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது. பாடியவர் அம்மூவனார். பாடல் வருமாறு:

"கானலம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்
நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
அம்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு
அலரே,அன்னை அறியின் இவண்உறை வாழ்க்கை
அரிய வாகும் நமக்கு எனக்கூறின்
கொண்டும் செல்வர்கொல் தோழி! உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல்மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்ப்பின்தம் உறைவின் ஊர்க்கே"

பொழிப்பு

"தோழீ, கடற்கரைச் சோலையில் உள்ள சிறுகுடியிலிருந்து, கடலின் மேல் செல்லும் பரதவர், நீல நிறத்தை உடைய புன்னை மரத்தின் கொழுவிய நிழலில் தங்கி, தண்ணிய பெரிய கடல்பரப்பில் செல்லுதற்கு நல்ல அற்றம் (வேளை) பார்த்து, அவ்விடத்து முறுக்குண்டு கிடந்த வலையைப் பிரித்துப் புலர்த்தாநிற்கும் துறையை உடைய நமது தலைவர்பால் சென்று, நமக்கு உண்டாகிய பழிச்சொல்லை அன்னை(நற்றாய்) அறிந்தால், இனி இங்குத் தங்கிக் களவொழுக்கத்து வாழ்தல் அரிதாகும் என்று கூறினால், உப்பு வாணிகர் வெளிய நல்லுப்பின் விலை கூறிக் கூட்டமாகிய ஆநிரையை எழுப்புகின்ற நெடிய நெறியில் செலுத்தும் பண்டிகள் (வண்டி) மணலில் மடுத்து முழங்கும் ஓசையைக் கேட்டு, வயலில் உள்ள கரிய காலை உடைய, வெளிய நாரைகள் வெருவாநிற்கும் கரிய கழி சூழ்ந்த நெய்தல் நிலத்தின்கண் உள்ள தம் உறைவிடமாகிய ஊருக்கு, உம்மை அழைத்துக் கொண்டும் போவரோ!"
– பின்னத்தூரார்.

உள்ளுறை (I)

பரதவர் புன்னையின் கீழ் இருந்து, கடலில் செல்லுதற்குப் பதம் (உரிய நேரம்) நோக்கி, அதுகாறும் வலையை உணக்கும் (உலர்த்தும்) துறைவன் என்றது – தலைவன் சிறைப்புறத்திலிருந்து, தலைவியைக் கூடுதற்கு யாரும் இல்லாத நேரம் பார்த்து, அதுகாறும் ஆராய்ந்து கொண்டிருப்பன் என்றதாம். பரதவர் – தலைவன்; வலையை உணக்குதல்–காத்திருத்தல், பதம்–ஆள் நடமாட்டம் இல்லாத சமயம், மீன்பிடித்தல்–தலைவியைக் கூடுதல். இப்பாடலில் தலைவன் தலைவியை விரைவில்

மணந்து கொள்ள வேண்டும் என்று வரைவு கடாவுகிறாள் தோழி.

உள்ளுறை (2)

சகடம் (பண்டி) மணலில் மடுத்து முழங்கும் ஓசைக்குக் கழனி நாரை வெருவும் (அஞ்சும்) என்றது–தலைவன் சான்றோரை முன்னிட்டு அருங்கலன் தந்து வரைய வரும் மணமுரசொலி கேட்டு, அலர் எடுக்கும் (பழி கூறும்) ஏதிலாட்டியர் (வேண்டாதவர்) வாய் வெருவி (பேசக்கூசி) ஒடுங்கா நிற்பர் என்றதாம். இவ்வாறு விளக்குவர் உரைகாரராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். இதுகாறும் காட்டிய ஏதுக்களால், உள்ளுறைஉவமம் பற்றிய விளக்கம் தெளிவாகும் அன்றோ? இவ்வுள்ளுறை உவமத்தைத் தொல்காப்பியம் உவமப் போலி என்று கூறும். உவமம் சுட்டப்பட்டு, பொருள் சுட்டப்படாமையால் இஃது உவமப் போலியாயிற்று. இவ்வுள்ளுறை உவமம் அகப்பொருளுக்கே உரித்து.

இனி, உள்ளுறை 5 வகைப்படும் என்பர் தொல்காப்பியர். அவை (அ) உடனுறை (ஆ) உவமம் (இ) சுட்டு (ஈ) நகை (உ) சிறப்பு என்பனவாம். நச்சினார்க்கு இனியர் உள்ளுறை என்பதற்குத் தரும் விளக்கம் வருமாறு: "ஒன்றனை உள்ளுறுத்து, அதனை வெளிப்படாமல் கூறலின், அதனை உள்ளுறையாம் என்றனர்."

அ) உடனுறை (உடன்+உறை) இஃது இறைச்சி எனவும் படும். அஃதாவது, "நான்கு நிலத்தும் உளவாய அந்நிலத்து உடனுறையும் கருப்பொருளால் பிறிதொன்று பயப்ப மறைத்துக்கூறும் இறைச்சி. ஒவ்வொரு நிலத்தினும் தோன்றிய கருப்பொருள், அதனை விட்டு, நீங்காமல் தங்கி இருப்பது என்பதனால் கருப்பொருள் உடனுறை எனப்பட்டது,

ஆ) உவமம், உள்ளுறை உவமும் ஏனை உவமும் ஆம். இவை அக்கருப்பொருள்களால் கொள்ளப்ட்டுபவை.

இ) சுட்டு: ஒருபொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள்படுமாறு வருதல்.

"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள்செய் தது"

(1279)

என்பது குறட்பா. தலைமகள் குறிப்பறிந்து தோழி தலைமகற்கு உணர்த்தியது.

1. தலைமகள் குறிப்புத் தலைவனுடன் செல்வது (உடன்போக்கு)

2. பிரிந்து இருப்பின் தொடி நில்லா

3. தோள் மெலியும்

4. ஆகவே, அடிநோக்கி என்பது (உடன் செல்வது குறிக்கும்)

இக்குறளில் சுட்டப்பட்ட பொருள்கள் தொடி, தோள், அடி. இவற்றால் பெறப்பட்ட உட்பொருள் உடன்போக்கு.

ஈ) நகை– இதனால் பிறிதொரு பொருள் உணர்த்துவது; எண்ணி நகையாடுவதால் ஒரு குறிப்புத் தோன்றல்.

(பரத்தை கூற்று – தலைவனைப் பற்றி)

"எம்இல் பெருமொழி கூறித்தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே"

(குறுந். 8)

பொழிப்பு

தலைவன், எம்வீட்டில் எம்மை வயமாக்கு தற்குரிய பெருமொழிகளைக் கூறிச் சென்று, தம்முடைய வீட்டில், முன் நின்றார் தம் கையையும் காலையும் தூக்கத் தூக்கும் கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போலத் தன்னுடைய மனைவிக்கு அவள் விரும்பியனவெல்லாம் செய்வான். தலைவன் தன் மனைவியை அஞ்சி ஒழுகினான் என்பது கருத்து. இது காதல் பரத்தை கூற்று. இந்நகையுள் உள்ளுறை பொருந்தியமை அறிந்து இன்புறுக.

உ) சிறப்பு: இதற்குச் சிறந்தது இது எனக் கூறுதலால் பிறிதொரு பொருள் தோன்றுவது.

"என்ஒண்நுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவது எவன்கொல் அறியேன் என்னும்"

(கலி. 4)

தலைவன் தன் பிரிவை உணர்த்தும் வகையில் தலைவியின் ஒளிமிக்க நெற்றியைத் தடவி மகிழ்ச்சி தருவன். அவன் அவ்வாறு செய்தலின் குறிப்பு பிரிவினை உணர்த்துவதேயாம். இதற்கு முன்னைய தாழிசையில்,

ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
எண்ணுவது எவன்கொல் அறியேன் என்னும்"

என்று பாராட்டு முகத்தான் இழை திருத்துவதினும் நுதல் நீவுவது சிறப்புடைத்தாதலின் சிறப்பு என்னும் உள்ளுறை தோன்றியது.

இனி, இவ் ஐவகை உள்ளுறைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்போம்: ஐந்தும் அகத்திணை மாந்தர்க்குரிய கூற்றுக்களாகச் செய்யுளில் அமையும். இதுவே ஒற்றுமை. இனி வேற்றுமைகள்:

அ) உடன்உறை : கருப்பொருள்களின் பண்பையும் செய்கையையும் கொண்டு வரும்.

ஆ) உள்ளுறை உவமம் : தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களின் வழித் தோன்றும்.

இ) சுட்டு : கூறுவோன் குறிப்பின் வழியே தோன்றும்.

ஈ) நகை : எள்ளுதலை அடிப்படையாகக் கொண்டு வரும். முதல், கரு, உரி வேண்டா.

உ) சிறப்பு : ஒருவரைச் செயற்கையாகப் பாராட்டிக் கூறுதல்.

இனி, அகப்பொருளுக்கே உரிய உள்ளுறை உவமம் போலவே புறப்பாடல்களிலும் உள்ளுறுத்துக் கூறும் உவமைகள் உள. ஆயின், அத்தகு உவமை பிறிது மொழிதல், அல்லது பிறிது நவிற்சி என்ற அணியின்பாற்படும். எடுத்துக்காட்டு:

"மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்
முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு"

(நாலடி, இளமை. பாடல் 9)

கொடிய காற்று அலைப்பின் முற்றிய பழங்கள் விழாமல் நிற்பவும், காய்கள் உதிர்தலும் உண்டு. முற்றிய பழம்– முதுமை; காய்–இளமை. முதியோர் நீடு வாழவும், இளைஞர் எதிர்பாராது சாவவும் நேர்கிறது. இக்கருத்து வெளிப்படையாக இல்லை. ஆயின், பழம், காய் முதலிய கருப்பொருள்களின் வாயிலாகப் புலப்படுகிறது. இதுவும் உள்ளுறுத்துப் பேசப்படினும், புறப்பாட்டாதலின் உள்ளுறைஉவமம் அன்று; பிறிது மொழிதல் அணியாகும். மற்றும் ஓர் எடுத்துக்காட்டு:

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

மென்மையான மயிலின் தோகைகள் ஏற்றப் பெற்ற வண்டி, பார மிகுதியால் அச்சொடிந்து ஓடாது நிற்கும்; இது வெளிப்படையான கருத்து. இதனால் பெறப்படும் மற்றுமொரு கருத்து, எளியர் என்று இகழ்ந்து, பலரொடும் பகை கொள்வான், அவ்எளியர் கூடிய வழி வலி தொலைவான். இப்புறப்பொருள் சார்ந்த அரசியல் கருத்து உள்ளுறுத்துப் பேசப்பட்டுள்ளது. ஆயினும் இஃது உள்ளுறைஉவமம் ஆகாது. காரணம், புறப்பாட்டாதலின்.

இறைச்சி

உள்ளுறை உவமை போன்று இறைச்சியும் அகப் பொருளுள் ஒரு பொருள்கோளாகக் கொள்ளப் பட்டுள்ளது. உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த பிற கருப் பொருள்களைப் பற்றி வரும்; இறைச்சி தெய்வமும் மக்களும் ஒழிந்த பிறகருப்பொருள்களின் புறத்தே பிறக்கும். இவ்விரண்டும் அகத்திற்கே உரியவை. இறைச்சி பற்றிய தொல்காப்பிய நூற்பாக்கள் பின்வருமாறு:

1. "இறைச்சி தானே பொருட்புறத்ததுவே"
2. "இறைச்சி தானே உரிப்புறத்ததுவே"
3. "இறைச்சியில் பிறக்கும் பொருளுமாறுளவே
   திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கே"
4. "அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும்
   வன்புறையாகும் வருந்திய பொழுதே"

(பொருளியல்)

பொழிப்பு

"கருப்பொருள்களின் இயைபு, கூறவேண்டிய கருத்துக்கு வேறாய், அடைமொழி வடிவில் வந்து தங்கிப் பயன்படுவது."

"இறைச்சியில் பிறக்கும் வேறு உட்கருத்துக்களும் உள்ளன. இஃது ஆராய்வார்க்குப் புலனாம்.

"பிரிவாற்றாது வருந்திய காலத்து, இது வற்புறுத்தலாய் முடியும். அன்பு கொள்ளத்தக்க கருத்துக்களைக் கருப்பொருள்களின் உட்கருத்தாகக் குறித்தலும் உண்டு"

உள்ளுறை உவமத்தில் உவமும் பொருளும் தோன்றும்; இறைச்சியில் உவமை தோன்றாது; இறைச்சி கருப்பொருள்களின் புறத்தே தோன்றும். இறைச்சியை உரையாசிரியன்மார் வெவ்வேறு எடுத்துக்காட்டுகளால் விளக்குவர். இளம்பூரணர் தம் உரையில் பின்வரும் குறுந்தொகைப் பாடலைக் காட்டி விளக்குவார்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"
(குறுந்.3)

தலைவனொடு செய்த நட்பு மிகச்சிறந்தது என்பது கருத்து. அவன் நட்பு பெரிது; உயர்ந்தது; ஆழமுடையது. இப்பாடலில், நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவும் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க என இளம்பூரணர் கூறியுள்ளார். டாக்டர்.உ.வே.சா. அவர்கள் இக்கருத்தை ஏற்றுத் தம் பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டியுள்ளார். (நாடன்–குறிஞ்சித் தலைவன்)

இனி, நச்சினார்க்கினியர் பிறதொரு பாடலைக் காட்டி இறைச்சியை விளக்குவார். அப்பாடல் வருமாறு:

"இலங்கும் அருவித்து, இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே-தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலி. 41)

நச்சினார்க்கினியர் உரை

"நற்றோழி, நீ வாழ்வாயாக! தோழி! தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாவானாய்ப் பொய்த்தவனுடைய மலையிலிருந்து வீழ்தலுற்று விளங்கும் அருவியை உடைத்து; விளங்கும் அருவியை உடைத்து; மழை பெய்தலால் விளங்கும் அருவியை உடைத்து.

"இஃதென்ன வியப்போ!" எனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. இதனை, இறைச்சிதானே பொருட்புறத்ததுவே என்பதனால் கொள்க. இவர் மலை, அருவி முதலிய கருப்பொருள்களின் புறத்தே பிறிதொரு பொருளைப்(இறைச்சியை) புலப்படுத்துவதாகக் கொண்டார். இளம்பூரணரோ, அடையாக வந்த கருப்பொருள்களின் அடிப்படையில் இறைச்சி தோன்றியதாகக் கொண்டனர். இருவரும் இறைச்சியை ஒரு பொருள் கோளாகக் கொண்டனர் என்பது தெளிவு. ஆயின், விளக்கத்தில் வேறுபட்டனர் என்க.

இனித் தஞ்சைப் பாவலரேறு ச.பாலசுந்தரனார், தொல்காப்பியச் சூத்திரத்தில் வரும் 'பொருட்புறத்துவே' என்பதனை,

"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே"

எனப் பாடவேறுபாடு கொண்டு பின்வருமாறு விளக்குவார். உரிப்புறத்ததுவே என்றமையான் மாந்தர் ஒழுக்கத்திற்கு வேறாகிய அஃறிணைப் பொருள்களின் பண்பும் நடவடிக்கையும் பற்றி வருவதோர் இயல்பு என்பர். இவரும் இறைச்சியை ஒரு பொருள்கோளாக ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவு. விளக்கம் மட்டில் வேறுபடுகிறது. இறைச்சி என்பதனைக் கருப்பொருளாகவே கொள்ளாமல் அவற்றின் தொழிலாகக் கொள்கிறார்.

"பறவை, விலங்கு முதலியவற்றின் செயல்கள் ஒழுக்கம் எனப்படாமையான் உயர்திணை மாந்தர்க்கு உரிய ஒழுக்கமாகிய 'உரி' என்னும் குறியீட்டினைச் சுட்டி, அதற்கு மறுதலையானது என்பது விளங்க அஃறிணைப் பொருள்களின் செயலும் பண்பும் ஆகிய நடக்கையை உரிப்புறத்தது என்றனர் நூலோர்". இவ்விளக்கம் ஏற்புடையதாகத் தோன்றுகிறது. மேலும் அவர் இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்று பொருள்கோடல் கூடாது என்பர். ஏனெனில் இறைச்சி என்பது தொழிற்பெயர். பறவை முதலியன பொருட்பெயர். இறைச்சி என்பது ஒரு குறியீடு. (இறு+ஐ+சி). இறைச்சி 'ச' பகுதிப்பொருள் விகுதி. 'ஐ' சாரியை.

நற்றிணை உரையாசிரியராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உள்ளுறைஉவமம் என்றும், இறைச்சி

என்றும் இருவேறு பொருள் கோள்களாகக் கொண்டனர். ஆயின் அவர் தரும் விளக்கம் இவ்விரண்டையும் பிரித்துணருமாறு அமையவில்லை. இரண்டையும் ஒன்றாகவே கூறி மயங்க வைத்துள்ளார். எடுத்துக்காட்டு:

"ஆய்மலர் மழைக்கண் தெண்பனி உறைப்பவும்
வேய்மருள் பணைத்தோள் விறலிழை நெகிழவும்
அம்பல் மூதூர் அரவம் ஆயினும்
குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி
வாரற்க தில்ல தோழி, சாரல்
கானவன் எய்தமுளவுமான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்து கொடு
காந்தளம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்குமலை நாடன் நின்நசையி னானே"

– (நற்றிணை.85)

(இது தலைவன் வரவு உணர்ந்த தோழி தலைவிக்கு உரைத்தது)

"கானவன் . . . . ஓங்குமலை நாடன்"

"வேட்டுவன்(கானவன்) எய்து கொணர்ந்த முள்ளம்பன்றியின் கொழுவிய தசைத்துண்டத்தைத் தேன்மணம் கமழும் கூந்தலை உடைய கொடிச்சி(குறத்தி) மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு, காந்தள் மிக்க சிறுகுடியில் உள்ளார் பலர்க்கும் பகுத்துக் கொடா நிற்கும் உயர்ந்த மலை நாட்டை உடைய காதலன்" என்றது.

"கானவன்-தலைவன்(காதலன்) கொடிச்சி-தலைவி
பன்றித்தசை-தலைவன் ஈட்டி வந்த பொருள்
சிறுகுடிப் பகுத்தல்-அப்பொருள் கொண்டு இல்லறம்
நடத்தல்"

ஆகவே உவமமும் பொருளும் வேறு நிறுத்தி, ஒத்துப் பொருள் முடித்தலால், இஃது உள்ளுறைஉவமம். இஃது ஐயர் அவர்களின் உரை விளக்கம். இனி இதே பாடலில் வரும்,

"குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுநடை வேழம் நின்று காத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி வாரற்க"

மலைநாடன் அஞ்சுவரு சிறுநெறி வாரற்க என்று வினைமுடிவு செய்க. "குறுகிய வரிகளை உடைய கரிய . புலிக்கு அச்சமுற்று, விரைந்து செல்லாத நடையை உடைய தன் கன்றைப் பிடியானை (பெண்யானை) ஆண்டு நின்று காத்துத் தங்கா நிற்கும், நீங்குதற்கு அரிய, இருள்மிக்க, கண்டார்க்கு அச்சத்தைத் தோற்றுவிக்கின்ற சிறிய நெறி(வழி)." இதில்,

பிடியானை– தோழி
புலிக்கு அஞ்சல்–தலைவன் பிரிவால் தலைவிக்கு வரும் ஏதம்
கன்று–தலைவி

அஃதாவது, தலைவன் பிரிவால் தலைவிக்கு வரும் ஏதத்திற்குத் (துன்பம்) தோழி அஞ்சி, "யான் அவளைக் காத்திருக்கின்றேன்" எனக் கூறினாள். இப்பகுதி இறைச்சி என்பர் ஐயர். இஃது உள்ளுறைஉவமம் போலத் தோன்றினும், இதனை இறைச்சியாகவே கொள்கிறார். இதனை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் பெரும்புலவர் வெள்ளைவாரணனார் பின்வருமாறு ஓர் அடிக்குறிப்புத் தருகிறார்.

"இறைச்சிப் பொருளைக் குறித்து இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறிய உரை விளக்கத்தினையும், மேற்கோளாகக் காட்டிய பாடல்களின் பொருளமைதியினையும் கூர்ந்து நோக்குங்கால், இறைச்சி தான் வெளிப்படக் கூறிய பொருட்கு உபகாரப்படும் அளவில் பொருட்புறத்ததாகி வருவதும், அவ்வளவின்றிப் பிறிதும் ஓர் உட்பொருள் கொள்ளும் வண்ணம் உள்ளுறை போன்று வருவதும் என இருவகைப்படும் என்பதும், இவ் இருவகை இறைச்சிகளுள் உட்பொருள் தரும் இறைச்சி, உள்ளுறைஉவமம் போன்று பொருள் தருவதாயினும், அதற்கும் உள்ளுறை உவமத்துக்கும் பெரிதும் வேறுபாடு உண்டென்பதும், ஆராய்ந்துணரும் நல்லறிவு உடையார்க்கு இவற்றிடை அமைந்த வேறுபாடு இனிது புலனாம் என்பதும் நன்கு விளங்கும்.' (க.வெள்ளைவாரணர் – தொல்காப்பியம். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு. பக்கம்–149.) இதுகாறும் கூறியவற்றால் உள்ளுறை உவமமும் இறைச்சியும் ஆகிய இரண்டும் தனித்தனிப் பொருள்கோள் வகைகள் என்பதனை இளம்பூரணர்,



அபிதானசிந்தாமணி வெளிவரச் சிங்காரவேலு முதலியார்க்குப் பாண்டித்துரைத்தேவர் நிதி உதவியது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் வேண்டுகோளை ஏற்று மகாகவி பாரதியார் பாடிய "செந்தமிழ் நாடு" என்னும் தலைப்பில் சில பகுதி

செந்தமிழ் நாடெனும் போதினிலே–இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே–எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே–ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி–என
மேவிய யாறு பலவோடத்–திரு
மேனி செழித்த தமிழ்நாடு

நீலத் திரைக்கட லோரத்திலே–நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை–வட
மாலவன் குன்றம் இவற்றிடையே–புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு–புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு–நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு



வள்ளல் பாண்டித்துரைத்தேவர் தலைமையில் குலாம் காதிறு நாவலர் நான்காம் தமிழ்ச்சங்க ஆற்றுப்படை பாட
இரா.இராகவையங்கார், மு.இராகவையங்கார், அரசஞ்சண்முகனார் ஆகியோர் உடனிருந்தமை.

சென்னை மாநகரில் தமிழ்த்தாத்தா உ.வே.சா வும் பாண்டித்துரைத் தேவரும்

1906ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 13ஆம் தேதி சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் மாணவர்களின் சங்கத்து ஆண்டுவிழா நடக்க ஏற்பாடு ஆகியிருந்தது. அதற்கு வந்து தலைமை தாங்கவேண்டும் என்று பாண்டித்துரைத் தேவருக்கு உ.வே.சா. எழுதியிருந்தார். அவரும் விழாவுக்கு இரண்டு நாள்கள் முன்பே சென்னைக்கு வந்து விட்டார். அதனால் அவரைப் பயன்படுத்திச் சென்னையில் பல விழாக்கள் ஏற்பாடு செய்யப் பெற்றன. அவற்றில் உ.வே.சாவும் பாண்டித்துரைத் தேவரும் சேர்ந்து கலந்து சிறப்பித்தார்கள்.

தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் பேச்சில்,

"இன்றைக்கு விழாத் தலைவராக வீற்றிருக்கும் தேவர் அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்திருப்பது மிகவும் அரிய விஷயம். அவரது பேச்சைக் கேட்டாலே போதும், பல அரிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். நாளைய தினம் மாநிலக் கல்லூரியில் தமிழ் மாணவர் சங்கவிழா. தேவர் அவர்களே அங்குத் தலைமை வகிக்கிறார். தவறாமல் நீங்கள் எல்லோரும் வந்து தேவர் அவர்களது பேச்சைக் கேட்டுப் பயன் அடையவேண்டும்" என்று பேசியதன் மூலம் தமிழ்த்தாத்தா தேவர் மேல் கொண்டிருந்த பெரும் மதிப்பு புலனாகும்.

சேதுபதி அவர்களுக்கு இருந்த பெருமையைக் காட்டிலும் பாண்டித்துரைத் தேவர்க்கு அதிகமான பெருமை இருந்தது. அதனால் மாநிலக் கல்லூரி விழாவில் பல செல்வர்களும் புலவர்களும் வந்திருந்தார்கள். பாண்டித்துரைத் தேவரது பேச்சு அன்று மிக்க எடுப்பாய் இருந்தது. மாலை 5 மணிக்குத் தொடங்கிய விழா இரவு 8 மணி வரை நடந்தது.

உ.வே.சாவிடம் யாவருக்கும் உள்ள மதிப்பை அறிந்து தேவர் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

கும்பகோணத்தை விடச் சென்னை பெரிய நகரம் ஆயிற்றே. அங்கே கடலில் பெருங்காயத்தைக் கரைத்தது போல உ.வே.சாவின் பெருமை ஆகிவிடுமோ ? என்றஅச்சம் தேவருக்கு இருந்தது. ஆனால் விழாவிற்காகச் சென்னை வந்தபோது தமிழ்த்தாத்தாவுக்கு முன்னைவிடப் பெரும்புகழும் செல்வாக்கும் இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தார்.

ஊருக்குச் சென்றவுடன் உ.வே.சா வுக்குத் தமக்குண்டான பெருமகிழ்ச்சியையும் உ.வே.சா. சென்னையில் கதிரவனைப் போல விளங்குவது பற்றிய இன்பத்தையும் வெளியிட்டு ஒரு கடிதம் எழுதினார்.

தமிழையும் தமிழ் அறிஞர்களையும் நேசிப்பதிலும் பாதுகாத்தலிலும் பாண்டித்துரைத் தேவர் நிகரற்றவர் என்பதை இந்நிகழ்ச்சிகளால் உணரலாம்.

நச்சினார்க்கினியர், பாலசுந்தரனார், வெள்ளை வாரணனார் ஆகிய நால்வரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆனால், சித்தாந்தக் கலாநிதி ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் உள்ளுறை உவமத்தை உடன்பட்டாலும் இறைச்சி எனத்தனியே ஒரு பொருள்கோள் கொள்ளவில்லை. அவர்தம் மறுப்புப் பின்வருமாறு:

"இறைச்சி தானே பொருட்புறத்ததுவே" என்றொரு நூற்பா தொல்காப்பியத்தில் உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அதன் உரைகாரர் இறைச்சிப் பொருள் என ஒருவகைப் பொருள்கோளாகக் கண்டுள்ளனர். தலைமகன் பிரிந்து வரவு தாழ்த்தானாக, வேறுபட்ட தலைமகளும் அவள் குறிப்பின் ஒழுகும் தோழியும் அவனை நொந்து கொடுமை கூறுமிடத்து அவன் மலையைப் பார்த்துச் சூள்பேணான் பொய்த்தான் மலை என்று கூறுகின்றாள். இதன்கண், சூள் பொய்த்தவன் மலையில் மழை பெய்தலும், அருவி வீழ்தலும் இல்லை என்பது பொருட்குப் புறமான கருத்து என்றும், ஆகவே, அஃது இறைச்சி என்றும் கூறினர். எனினும், இந்தப் பொருள் தொல்காப்பியனார் பிறாண்டு கூறும் குறிப்பு மொழிக்கண் அடங்குதலின், இறைச்சி என வேறு கூறல் மிகையாம். மேலும், அவர்க்கு அது கருத்தாயின், உள்ளுறைப் பொருள்கோளாகக் கூறுமிடத்து இதனையும் உடன் கூறியிருப்பர். அவ்வாறு இறைச்சி என விதந்து கூறாமையின் இறைச்சிப் பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியனார் கூறினார் எனக் கோடல் உண்மையாகத் தோன்றவில்லை.

பிற்கால உரைகாரர்கள் இறைச்சி என வேறுபட நிறுத்திக் குளறுபடி செய்துள்ளனர். (ஔ.சு.து உரை: ஐங்குறு, மருதம் முதற்பதிப்பு, முன்னுரை, பக்.28,29)

முடிவாகக் கூறுமிடத்து

1. உள்ளுறை உவமும் இறைச்சியும் இருவேறு பொருள்கோள்கள்.
2. இவை அகத்திணைக்கே உரியவை.
3. உள்ளுறை உவமையில் உவமும் பொருளும் வெளிப்படையாக நிற்கும்.
4. இறைச்சியில் உவமம் வாராது.
5. உள்ளுறை உவமம் பற்றிப் பண்டைய, இன்றைய உரையாசிரியன்மாரிடையே வேறுபட்ட கருத்து இல்லை. அனைவரும் உடன்படுகின்றனர். தொல்காப்பியச் சூத்திரங்களும் எளிதில் பொருள் கொள்ளத்தக்கவை.
6. இறைச்சி பற்றிய பொருள்கோளில் கருத்து வேறுபாடு உண்டு. விளக்கங்களும் வேறுபடு-கின்றன.
7. இறைச்சி என்றொரு பொருள்கோள் இல்லை. இது சித்தாந்தக் கலாநிதி, உரைவேந்தர் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை அவர்களின் முடிவு.
8. இறைச்சி பற்றி வரும் சூத்திரங்களில், இறைச்சி, உடனுறை, இறைச்சியில் பிறக்கும் பொருள் இவற்றிற்கு மேலும் விளக்கம் தேவைப்படுகிறது. ஆசிரியர் கருத்து யாதென விளங்குமாறில்லை.
9. இன்றைய ஆராய்ச்சியின்படி அகப்பொருள் பாடல்களில் உள்ளுறைஉவமம், ஏனை உவமம், இறைச்சிப் பொருள்கோள் ஆகியவை ஏற்கத்தக்கவை. ஏனை உவமம் புறத்திற்கே பெரும்பான்மையாக உரியது. அகத்தில் ஒரோ வழி வரும். மேலும் ஆராயலாம்.
10. தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலம் வியத்தற்குரியது.

குமரேச வெண்பாவில் பாட்டு அகராதியும் கதை அகராதியும் இல்லை

என ஒரு தொடரில் திறனாய்வு செய்திருக்கும் நுட்பம் காண்க

கல்லூரிச் செயலர் இரா. குருசாமியின் பாட்டனார் மா.இ.க.குருநாதத்தேவர் கல்வி கேள்விகளில் விருப்புடையவர். கவிராச பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் திருக்குறள் குமரேச வெண்பா என்னும் நூலில் திருக்குறளுக்கு உரையும் நான்கடி வெண்பாவும், திருக்குறள் விளக்கக் கதையும் எழுதியுள்ளார். நூலின் இறுதியில் நூல் பாடல் முதற்குறிப்பு அகராதியும் கதை அகராதியும் இல்லை; அவை இருப்பது படிப்பவர்களுக்கு வேண்டும் போது வேண்டிய குறளையும் கதையையும் பார்த்துப் படிக்க உதவியாக இருக்கும்.

அக்குறையை உணர்ந்த கோச்சடை மா.இ.க.குருநாதத்தேவர் 07–08–1940இல் தாம் வாசித்த நூலின் முகப்பு அட்டையில், இந்நூலில் ,

பாட்டு அகராதியும் கதை அகராதியும் இல்லை

என எழுதியிருப்பது அவர் நூலைத் திரும்பத் திரும்பப் படிக்கும் பண்புடையவர் என்பதை விளக்குகிறது. பண்டை நாட்களில் கல்வி நாள்தோறும் – சாகும் வரை பயிலப்பட்டு வந்தது என்பதை அறிவுறுத்துகிற உண்மை இதன்கண் தெற்றென விளங்கும். இந்நாட்களில் பலர் ஒய்வு பெற்ற பின்பு படிப்பதில்லை என்பதை அறியும் போது நம் முன்னோர்களின் கல்வி ஆர்வம் நினைக்கற்பாலதாகும். இவர் தாம் கற்றநூல்கள் அனைத்தையும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் நிலங்களைப் பராமரித்துக் கொண்டு குடிமைத் தொழில் செய்து வந்தவர். இவருடைய வழிவந்தவர்களே இப்பொழுது தமிழ்ச்சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரியின் செயலர்களாகப் பணிபுரியும் இரா..அழகுமலையும், இரா.குருசாமியுமாவர்.

மெய்ப்பாட்டியலும் இரசக் கோட்பாடும்



பேரா. க. பஞ்சாங்கம்,
புதுச்சேரி.

ஐம்புலன்களால் கட்டப்பட்ட இந்த மனித உடம்பு பல அற்புதங்கள் நிறைந்தது. மனித அறிதலுக்குள் அடங்காதது. இதுவரை இந்த உடம்பு, அதன் மூளை குறித்து அறிந்தவையாகக் கருதப்படுபவை எல்லாம் பத்து விழுக்காடுதான் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள். ரூபமாக அறியப்படும் மனித உடம்பு குறித்தறிதலே இவ்வளவுதான் என்றால், இந்த உடம்பின் உற்பத்திகளில் ஒன்றாக அமையும் "அரூபமான மனம்" குறித்த அறிதல் ஆரம்பநிலையில் இருப்பதாகவே கருதப்படுகிறது. மனத்தைச் சுட்டிக் கூறத்தக்க ஒரு ரூபமாகக் கருதி, அது மூளையில் இருக்கிறது(தேக்கார்ட்டே); அது இதயத்தில் இருக்கிறது (பழம்பெரும் இந்திய மருத்துவர் சாரகா); அது வயிற்றில் இருக்கிறது (எகிப்தியர்) என்று சொல்லப்பட்ட பழம் கருத்துக்கள் எல்லாம் இன்று தவறாக முடிந்திருக்கின்றன. அது ஒரு பொருளல்ல. அது செயல். மூளையின் செயல்பாட்டுப் படிமுறையிலிருந்து உற்பத்தியாவது; அதுவே உணர்ச்சிகளுக்கும் (Feelings), மனவெழுச்சிகளுக்கும் (Emotion) களமாகிறது. உட்புறச் செயல்பாடாய் அமையும். இதனால், உடலில் பலவித உள்ளுறுப்பு மாறுதல்களும் வெளியுறுப்பு மாறுதல்களும் ஏற்படுகின்றன. இம்மாறுதல்கள் தானியங்கு நரம்பு மண்டலத்தின் (Autonomic Nervous System) செயலாலும், உடலிலுள்ள சில நாளமில்லாச் சுரப்பிகளாலும் (Ductless Glands) உண்டாகின்றன. இவ்வாறு ஒருவகையில் உடலியலின் ஒரு பகுதிதான் மனம் என்பதனால் மனமும் உடலும் தனித்தியங்குவதில்லை. ஒன்றையொன்று சார்ந்தும் பாதித்தும் இயங்குகின்றன. அதேநேரத்தில் புரியாத ஒரு புதிராகவும் நீளுகிறது மனம். எனவேதான் அறிவியல் ஆராய்ச்சி முறைக்குள் மனத்தை உட்படுத்திய செக்மண்ட் பிராய்டு அதைக் கடலுக்குள் மறைந்து கிடக்கும் மாபெரும் பனிமலை என்கிறார். நமக்குத் தெரிய வருவதெல்லாம் அதனுடைய சிறுமுனை மட்டும்தான் என்கிறார். தமிழ்ப் பழமொழியும் அதைப் பாம்புப் புற்றாக உருவகப்படுத்துகிறது. எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமோ என்று மனத்தை மனிதப் புரிதலுக்கு வெளியே நிறுத்துகிறது.

மனமெனும் உணர்ச்சிக் கூட்டத்திற்கும் எதையும் பகுத்தாராய முயலும் அறிவிற்கும் போராட்டம் வரும்போது பெரும்பாலும் மனஉணர்ச்சியே அதிக வலுப்பெற்று தனிமனிதர்களின் செயலை நிர்ணயிக்கும் சக்தியாகப் பேருருக் கொள்கிறது. எனவே உணர்ச்சிகளின் அடிமை மனிதன் என்ற பேர் வந்து வாய்க்கிறது. இந்நிலையில் மனிதர்களுக்கு மாபெரும் பிரச்சினையாக இந்த மனமெனும் மாயப்பிசாசுதான் முன்நிற்கிறது. இதுகுறித்து,

மனமே! உன்னால் மயங்கிய நாட்கள்
மரத்தின் வாழ்வில் உதிர்ந்த பூக்கள்
உடும்பும் நீயும் ஒருகுல மாக்கள்
உதிர அணுக்கள் உன்கரப் பூக்கள்

எனக் கவிதை எழுதுவார் கண்ணதாசன். ஒருவகையில் நமது சமூக நிறுவனத்தின் அலகுகளான குடும்பம், மதம், கல்வி, கலை, இலக்கியம், அரசு முதலிய அனைத்து அமைப்புக்களும், அமைப்புகளில் நடத்தப்படும் எல்லாவிதமான சடங்குகளும் இந்த மனத்தின் உற்பத்தியான உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்த முயலுகிற தந்திரங்களாகத்தான் தோன்றுகின்றன. அதுவும் ஃப்ராய்டின் கருத்துப்படி தனிமனிதர்களை

ஆட்டிப்படைக்கும் உணர்ச்சியான பாலியல் வெள்ளத்தை (Libido) சமூக நிறுவனத்திற்கேற்பக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளைப் பயன்படுத்தும்போது, பல்வேறு வகையான மனத்திரிபுகளுக்கும், மனக்கோளாறுகளுக்கும் மனித மனம் ஆட்பட வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. இந்த நெருக்கடியை எதிர்கொண்டு மனஉணர்ச்சிகளை அளவுகடந்து கட்டுப்படுத்துவதோ அளவுக்கதிகமாகப் பெருக்கெடுக்க விடுவதோ இல்லாமல் நடுநிலையான ஒரே சீரான மனித ஆளுமையை உருவாக்கிக் கொள்ளுகிற நோக்கத்தில்தான் கலை இலக்கியத்தில் உணர்ச்சி குறித்த கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். கிரேக்கத்தில் அரிஸ்டாட்டிலின் கேத்தாரிசிஸ் (Catharsis) (தமிழில் உணர்ச்சிச் செப்பம் (அ) தூய்மைப்படுத்துதல் என அழைப்பர்) கோட்பாடும் மன உணர்ச்சிகளைச் சமநிலையில் வைத்துக்கொள்ள கலை இலக்கியம் பயன்படும் என்ற கருத்தைத்தான் முன்வைக்கிறது. இந்த அடிப்படையில் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாட்டின் தோற்றத்தையும் வடமொழியிலுள்ள இரசக் கோட்பாட்டின் தோற்றத்தையும் பார்க்கவேண்டும் போல் எனக்குத் தோன்றுகிறது.

தொல்காப்பியர் மனத்தின் அடிப்படை உணர்ச்சிகளாக முதலில் எட்டு வகையினைச் சுட்டுகிறார். அவைகள் நமது உடம்பெனும் மெய்யின் வழியாகப் புறத்தார்க்குப் புலப்படும்படியாக வெளிப்படுவதால் மெய்ப்பாடு என அந்த உணர்ச்சிகளை அழைக்கிறார். இந்த மெய்ப்பாடு புலவர் இயற்றும் செய்யுளில் வந்தமையும் 34 உறுப்புக்களில் ஓர் உறுப்பு என்றும் கூறுகிறார். (செய்.நூற்.1) தொடர்ந்து மெய்ப்பாடு என்றால் என்ன என்பதையும் கீழ்க்காணுமாறு வரையறை செய்கிறார்.

"உய்த்துணர்வின்றித் தலைவரும் பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்"

(தொல்.செய் 196)

அதாவது "யாதானும் ஒன்றைக் கூறியவழி அதன் அகப்பொருண்மையை விசாரித்துக் கூறுதலின்றி அவ்விடத்துவரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்றமுடிப்பது" என இதற்கு உரையெழுதுகிறார் பேராசிரியர். செய்யுள் செய்பவர்கள் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும்.

இந்த எண்வகை மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் எத்தகைய மனிதச் சூழலில் விளக்கமாக வெளிப்படும் என்பதை மனிதர்களின் நடத்தையியலில் ஆராய்ந்தறிந்து ஒவ்வொன்றிற்கும் நான்கு சூழல்களை அடிப்படையாக அமைத்துக்காட்டுகிறார். இந்த நான்கு சூழல்களும் படைப்பாளிகளுக்கு வழிகாட்டுதல் போல அமைகின்றன. நகையெனும் மெய்ப்பாடு எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்கிற நான்கிடத்திலும் , சிறப்பாக வெளிப்படும். இதுபோலவே "அழுகை", இழிவு, இழவு(இழத்தல்), அசைவு(தளர்ச்சி), வறுமை ஆகிய இடத்திலும்,இளிவரல் எனும் மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கிடத்திலும், மருட்கை எனும் மெய்ப்பாடு புதுமை, பெருமை, சிறுமை , ஆக்கம் என்ற நான்கிடத்திலும், அச்சம் என்ற மெய்ப்பாடு அணங்கு, விலங்கு, கள்வர், அரசர் என்ற நான்கிடத்திலும், பெருமிதமெனும் மெய்ப்பாடு கல்வி, தறுகண்மை, புகழ்மை, கொடை ஆகிய நான்கு மனிதச் சூழலிலும், வெகுளி என்ற மெய்ப்பாடு உறுப்பறை(உறுப்பைக் குறைத்தல்) குடிகோள் (குடிப்பிறப்புக்குக் கேடு சூழ்தல்), அலை (அலைத்தல்), கொலை ஆகிய நான்கு மனிதச் சூழலிலும், வெகுளி என்ற மெய்ப்பாடு செல்வம், புலன்(புலன்களால் நுகர்தல்), புணர்வு (காம நுகர்ச்சி), விளையாட்டு ஆகிய நான்கு மனிதச் சூழல்களிலும் சிறந்து புலப்படும்.

இவ்வாறு சொல்லின் மூலமாகச் செய்யப்படும் செய்யுளில் எந்தெந்த மெய்ப்பாடுகளை எந்தெந்த மனிதச் சூழல் மூலமாக உற்பத்தி செய்து, வாசகரை மெய்ப்பாட்டுச் சுவைக்குள் ஈர்க்கலாம் என்று தொல்காப்பியர் வகுத்தளிக்கிறார். மேலும் எந்தக் குறிப்பிட்ட ஒழுங்கிற்குள்ளும் அடங்காதது மனம் என்பதைப் புரிந்து கொண்ட தொல்காப்பியர், தான் வகுத்தளித்த மேற்கண்ட இந்தச் சூழல்களுக்கும் அப்பால் புலப்படும் வேறு 32 வகைகளை அடுக்கிக் காட்டுகிறார். அந்த முப்பத்திரண்டுக்குள் மெய்ப்பாடுகளும் சூழல்களும் ஒன்றையொன்று கலந்து பின்னிக் கிடக்கின்றன. தமிழண்ணல் சுட்டிக்காட்டுவது போல நடுவுநிலை, அருளல், அன்பு முதலியன மெய்ப்பாடுகளாகும். உடைமை, கையறுநிலை இடுக்கண்

முதலியன சூழல்களாகும் (தமிழண்ணல், சங்க இலக்கியக்கொள்கை, ப.180) இவ்வாறு தான் அமைத்த ஒழுங்கிற்குள் மனமென்கிற இந்த மாயப்பிசாசு அடங்காது என்பதைத்தான் இவ்வாறு கலந்து அடுக்குவதன் மூலமாகப் புலப்படுத்துகிறார் போலும். ஆனாலும் அடங்காது என்பதனால் உணர்ச்சிகளை அப்படியே விட்டுவிட முடியாதல்லவா? எனவே மனிதர்களைப் பெரிதும் ஆட்டிப் படைக்கும் காம உணர்ச்சிகளை இலக்கியமயப் படுத்துவதன் மூலம் எவ்வாறு ஒழுங்கிற்குக் கொண்டுவரலாம் என்று படைப்பாளிகளுக்கு வழிகாட்டும் நோக்கில் தம்முடைய மெய்ப்பாட்டியல் ஆராய்ச்சியில் பெரும்பகுதி காம விளையாட்டில் வினைபுரியும் பெண்களின் மெய்ப்பாடுகளையே முதன்மைப் படுத்தி விளக்குகிறார்.

காதலில் ஆணும் பெண்ணும்தான் ஈடுபடுகின்றனர். இருவருக்கும்தான் உணர்ச்சி உருவாகி மெய்ப்பாடு வெளிப்படும் என்பது உறுதி. ஆனாலும் தொல்காப்பியர் காதலெனும் களவு தொடங்கி, திருமணமெனும் கற்புக்காலம் முடிகின்றவரை ஆண் பெண் உறவில் நிகழும் நிகழ்ச்சிகளை அடுக்கி, அந்த நிகழ்ச்சிக் காலத்தில் தலைவியின் மெய்ப்பாடுகள் மட்டும் எவ்வாறு புலப்படும் என்று விரிவாகக் கருத்துரைக்கிறார். அவர் வகுத்தளிக்கிற இந்த முறையில் படைப்பாளி செய்யுள் படைத்தால் அதில் மெய்ப்பாடு சிறந்து கவித்துவம் மிளிரும். வாசகர் வசப்படுவர் என்பது இதன் கருத்து. ஆனால் இந்த நிகழ்ச்சிகளில் ஆணுக்கான மெய்ப்பாட்டைப் பற்றித் தொல்காப்பியர் ஏன் எதுவும் கூறவில்லை? இந்த வினா இளம்பூரணருக்கு எழவில்லை. ஆனால் பேராசிரியருக்கு அன்றைக்கே எழுந்துள்ளது. எனவே விடை தேடி இப்படிக் கூறுகிறார்.

"*ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழிக் கரந்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள் கண்ணே ஈண்டுக் கூறுகின்ற மெய்ப்பாடு சிறந்ததென்பது*"

(தொல்–மெய்ப்பாடு–பேரா.உரை)

பேராசிரியரின் இந்த விடையை வழிமொழிவது போல் 20ஆம் நூற்றாண்டு விளக்கவுரை ஆசிரியரும் இவ்வாறு எழுதுகின்றனர்.

"தொல்காப்பியர் தலைவனின் மெய்ப்பாடுகளை விளக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. காரணம் தெளிவாகவே உள்ளது. காதல் விவகாரங்களில் பெண்தான் தர்மசங்கடமான நிலைகளைச் சந்திக்க வேண்டியவளாகிறாள். ஆகவே அவளின் செயலே ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கும். எனவே தொல்காப்பியர் தலைவிக்கு உண்டான மெய்ப்பாடுகளை மட்டுமே விளக்குகிறார் எனக் கொள்ளலாம்".

(கோ. சுந்தரமூர்த்தி, ப.93)

பேராசிரியர் கூறுவது போலக் காதலில் பெண் மட்டும் ஏன் கரந்தொழுக நேர்கிறது? சுந்தரமூர்த்தி கருதுவது போலப் பெண் மட்டும் ஏன் தர்ம சங்கடமான நிலைகளைச் சந்திக்க நேர்கிறது? என்றபுதிய கேள்விகள், மேற்கண்டவாறு தொல்காப்பியர் காதலில் ஆணின் மெய்ப்பாட்டைவிடப் பெண்ணின் மெய்ப்பாட்டை விதந்து பேசுவதற்கு என்ன காரணம் என்பதற்கான வேறொரு விளக்கத்தைத் தேடிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றன. முன்பே எடுத்துக்காட்டியது போலக் கட்டுக்கடங்காத இயற்கை உணர்ச்சிகளை இலக்கியம் வழியாகச் சமூக ஒழுங்கிற்கேற்ப வடிவமைக்கிற முயற்சிதான் மெய்ப்பாட்டியல் குறித்த தேடலாகும். இந்த முயற்சியில் காமம், காதல் என்று வரும்போது, பெண்ணின் பாலியல் உணர்ச்சியை ஒடுக்கி, ஒருத்திக்கு ஒருவன் மட்டுமே என்ற சொத்துடைமைச் சமூகத்தில் உருவான சமூக நியதியை நிலைநாட்டப் பெண்ணின் காம உணர்ச்சியின் மேல் கூடுதலான கவனத்தைக் குவித்துச் செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இந்த ஆண்நலம் சார்ந்த சமூக அறத்தை மையமாகக் கொண்டுதான், தமிழ் அகத்திணைக் கோட்பாடுகள் பலவும் அமைந்துள்ளன. எனவே மெய்ப்பாட்டியல் குறித்த சிந்தனைகளும் அதற்கேற்ப இயங்குகின்றன. இவ்வாறு ஆண்–பெண் உறவு நிகழ்ச்சிகளை, (24 களவுக்காலம் + 20 களவிற்கும் கற்பிற்கும் பொது + 8 கற்புக்காலம் + 10

கற்புக்காலம்) மொத்தம் 62 என வகுத்து அவற்றில் பெரும்பான்மையும் பெண்ணுக்குரிய மெய்ப்பாடுகளை மட்டும் வகுத்துச் செல்வதில் ஆண்நலம் சார்ந்த சமூக அறம் வெளிப்படுவது போலவே, தலைவன்–தலைவி இருவருக்கும் இருக்கவேண்டிய ஒப்புமைகளாகப் பத்தினை அடுக்கிக் கூறும்போதும், இருக்கக் கூடாதவைகளாகப் பன்னிரண்டு கூறுகளைக் கூறும்போதும் மேற்கண்ட ஆண்நலம் சார்ந்த அணுகுமுறையே தொடர்வதைக் காணலாம். பொதுவாகக் களவு என்றால் என்ன என்று விளக்க வரும்போதே,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்புபொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"(கள.1)

என்று இன்பத்தோடு சமூக அறத்தையும் வலியுறுத்துவதைப் பார்க்கலாம். அதுபோலவே வடமொழியில் கூறப்படும் எண்வகை மணமுறைகளைத் தொல்காப்பியர் மரபு ஏற்காத தன்மையிலும் (குறிப்பாக இராக்கதம் (வலிதிற்கொள்வது), பைசாசம் (மூத்தோர், களித்தோர், துயின்றோர் புணர்ச்சி) ஆகியவற்றை ஏற்காத தன்மை இந்த அறநெறிப் பார்வைதான் முன்னே வந்து வெளிப்படுகிறது. ஆக மொத்தத்தில் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாடு உணர்ச்சிகளை அதுவும் குறிப்பாகக் காம விளையாட்டில் ஈடுபடும் பெண்ணின் உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தி, ஆண்நலச் சமூகத்தின் அறத்திற்கேற்ப வடிவமைக்கத் துணைபோகும் கோட்பாடாக அமைந்துள்ளது. அதாவது படைப்பாளி படைத்துக் காட்டும் இலக்கிய நயம், ஆண்நலச் சமூகம் சார்ந்த அறத்தை மீறாததாக இருக்கவேண்டும்.

வடமொழியின் இரசக் கோட்பாடு இந்தச் சமூக அறத்தைவிட, இலக்கிய இரசனையைத்தான் இலக்காகக் கொண்டு இயங்கியுள்ளதாகப்படுகிறது. மேலும் தொல்காப்பியருக்குப் பிறகு மெய்ப்பாட்டியல் கோட்பாட்டை மேலும் மேலும் தர்க்கபூர்வமான விவாதத்திற்கு உட்படுத்தி வளர்த்தெடுப்பதற்கான தமிழ்ச்சூழல் இங்கே இல்லாமற் போய்விட்டது. ஆனால் வடமொழியில் பரதரின் இரசக் கோட்பாட்டைத் தொடர்ந்து விவாதத்திற்கு உட்படுத்தி அது கலை இலக்கியத்தில் பெற்றுள்ள இடத்தை வளர்த்தெடுக்கத் தொடர்ந்து ஆனந்தவர்த்தனர், அபிநவக்குப்தர், பட்டலொட்டர், ஸ்ரீசங்குகர், பட்டநாயகர், விஸ்வநாதர் எனப் பலபேர் செயல்பட்டுள்ளனர். இலக்கியத்தின் ஆன்மா இரசத்தில் இருக்கிறதா? அலங்காரத்தில் இருக்கிறதா? தொனியில் இருக்கிறதா? ரீதியில் இருக்கிறதா? எனத் தொடர்ந்து அங்கே விவாதம் நடந்துள்ளதைப் பார்க்கமுடிகிறது. ஆனால் தமிழில் இடைக்காலத்தில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய வடமொழி அறிந்த உரையாசிரியர்கள்கூட, மெய்ப்பாட்டியலுக்கு விளக்கம் எழுதுவதோடு நிறுத்திக் கொண்டுள்ளனர். ஆனால் ஒன்று தெரிகிறது; தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாடு வேறு, அதன் நோக்கம் வேறு; சமஸ்கிருத இரசக் கோட்பாடு வேறு, அதன் நோக்கம் வேறு எனப் புரிந்துள்ளனர். எனவேதான் இரண்டையும் பெரிதும் ஒப்பிட்டு விளக்குவதைத் தவிர்த்துள்ளனர். தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாட்டிற்கு இணையான கோட்பாடு சமஸ்கிருதத்தில் இல்லை என்கிறார் கோ.சுந்தரமூர்த்தி (கோ.சுந்தரமூர்த்தி. ப.82)

உடம்பில் தோன்றும் மெய்ப்பாட்டைப் 'பாவமென'க் குறிக்கிறது இரசக் கோட்பாடு. இந்தப் பாவத்தை விபாவம், அநுபாவம், வியபிசாரி பாவம் (அ) சஞ்சாரி பாவமெனப் பிரித்து 'ஸ்தாயீபாவமென' நிலையான பாவமென்று எட்டு வகையான பாவத்தினைப் பரதர் முன்மொழிகிறார். இந்த எட்டு வகையான பாவங்களைத்தான் இரசமென்கிறார். (ஸ்தாயீ பாவோ ரசஸ்மிருத)

விபாவம் என்பது இரசத்திற்கு நிலைக்களனாயுள்ள தலைவன், தலைவி, நிலம், பொழுது, கருப்பொருள் ஆகியவையாகும். இவை ஆலம்பனம் (கதாபாத்திரம்) உத்தீபனம் (நிலம், பொழுது, சூழல்) என இருவகைப்படும்.

அநுபாவம் என்பது உடம்பிலே தோன்றும் வேறுபாடு. இந்த வேறுபாடு தானாய் உருவாவது; தன்னால் உருவாவது. இவை சாத்துவிக பாவமெனப்படும்.

வியபிசாரி பாவம் அல்லது சஞ்சாரி பாவமென்பது அவ்வப்போது தோன்றும் நிலையில்லா மனநிலையைக்

குறிக்கும். ஸ்தாயீபாவம் எட்டினையும் தமிழிலுள்ள எட்டு மெய்ப்பாட்டினையும் இணைத்துப் பார்க்கும் மரபு தமிழில் நிலவுகிறது. ஆனால் உண்மையில் எட்டு என்கிற எண்ணைத் தவிர இந்த இரண்டு மொழியிலும் அமைந்துள்ள பகுப்பு முறையில் வேறு ஒற்றுமை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சான்றாகப் பரதர் 'சிருங்காரம்' என்று சொல்வதைத் தொல்காப்பியர் கூறும் "உவகை" யோடு ஒப்பிடுவர். ஆனால் சிருங்காரம், காமரஸத்தை மட்டும்தான் குறிக்கும். உவகையோ, பரந்த பொருளில் கையாளப்படுகிறது. பல்வேறு உவகைச் சுவையில் காமப்புணர்ச்சியில் ஏற்படும் உவகைச் சுவை ஒன்று; அவ்வளவுதான். செல்வத்தால், புலனுகர்ச்சியால், விளையாட்டால் வரும் உவகைச்சுவை எல்லாம் உவகையில் இணைக்கப்படுவது தொல்காப்பிய மரபு. இரசக் கோட்பாடு பெரிதும் நாடகம் நோக்கி உருவாக்கப்பட்டது. எனவே நடிகனின் பாவத்தைப் பார்வையாளனுக்குள் செலுத்துபவை அபிநயம் எனக் கருதப்பட்டது. இந்த அபிநயம் 1. ஆங்கிகம் (நடிகரின் உறுப்புக்கள்), 2. வாசிகம் (உரையாடல்), 3. சாத்துவிகம் (கண்துடித்தல் போன்று உடம்பில் தோன்றும் மெய்ப்பாடு), 4. ஆசாரியம் (நடிகனின் உடை, அணி, பூச்சு முதலியன) ஆகிய நான்கின் மூலமாகச் சாத்தியப்படும்.

தொல்காப்பியரின் மெய்ப்பாடு பெரிதும் 'செய்யுள்' நோக்கி உருவாக்கப்பட்டதாகத் தெரிகிறது. மொழிவழிப்பட்ட செய்யுளின் ஓர் உறுப்பாக மெய்ப்பாட்டைக் கருதி விளக்குவதால், 34 வகைப்பட்ட பல்வேறு செய்யுள் உறுப்புக்களின் கலவையில் மெய்ப்பாடு உருவாகிக் கிடக்கும். அதை வாசகனும் பெறவேண்டுமென்றால், "அவன் கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுநடை மாந்தனாக விளங்கவேண்டும்" என்கிறார். இதை வேறொரு முறையில் சொல்வதென்றால், இரசனை வாசகனுக்குள் ஏற்கனவே இல்லாமல் இரசனை இன்பம் என்பது சாத்தியமில்லை. இது வடமொழியிலுள்ள பட்டநாயகரின் சிந்தனையோடு பொருந்திப் போகிறது. அவர் ஒவ்வொரு தனிமனிதருக்குள்ளும் சொல்லுக்கு மரபு பற்றி வந்த பொருளினும் (அபிதா), சுவையின் பாவனையினால் உண்டாகும் பொதுத் தன்மையினாலும் (பாவகத்துவம்) அனுபவிக்கும் ஆற்றலினாலும் (போஜகத்துவம்) இரசானுபவம் ஏற்கனவே இருக்கிறது. நாடகமோ இலக்கியமோ அதைத் தூண்டிவிட ஏதுவாகிறது என்கிறார். இதே கருத்தைத் தொல்காப்பியரும் வேறொரு இடத்தில் பதிவு செய்கிறார்.

"எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்"

(பொருளதி : நூ.220)

"எவ்வுயிர்க்கும் இன்பமென்பது அதனதன் மனத்தடிப்படையில்தான்" என்பது இதன் பொருள்.

இவ்வாறு இரசானுபவத்தை விரிவாக ஆராயும் சமஸ்கிருத மரபில் ஆனந்தவர்த்தனார் (கி.பி. 9), அபிநவகுப்தர் (கி.பி. 11) ஆகியோர் மூலம் தொனிக் கோட்பாட்டோடு இரசக் கோட்பாடு இணைக்கப்படுவதைப் பார்க்கிறோம். 'ரஸம்' தொனியின் மூலமாகச் சிறக்கிறது என்றும் 'ரஸவழகே தொனி' என்றும் இணைத்துப் பேசினர். ஒருமுனைப்படுத்தப்பட்ட இரசத்தின் வடிவமே தொனி (கோ.சுந்தரமூர்த்தி, 180), என்றும் தொனிப்பொருளே காவியத்தின் உயிரென்றனர். இந்த விவாதம் அங்கே பல கோணங்களில் விரிந்து பரவியுள்ளது.

பட்டலொட்டர், சுவை காண்போரிடத்தில் உண்டா--வதைக் குறித்துப் பொருட்படுத்தத் தேவையில்லை. சுவை எவ்வாறு தோற்றம் கொள்ளுகிறது என்பதில் கவனம் செலுத்துவதே முக்கியம் என்றார். இது உற்பத்திவாதமெனச் சுட்டப்பட்டது (நவாலியூர் நடராஜன், ப.239). இதை மறுத்தார் ஸ்ரீசங்குகர். இவர் நடிகனிடம் தோன்றும் சுவையைச் சபையோர் தங்கள் அனுமானத்தால் அறிகின்றனர் என வாதிட்டார். பட்ட நாயகர் சுவை பார்வையாளனுக்குள் இருக்கிறது என விவாதித்தார். மேலும் போஜர் என்பார் "இரசம் பல என்று கூறுவார் கூறுக. ஆனால் இரசம் ஒன்றேஒன்றுதான். அது தான் சிருங்கார ரசம். மற்றவை எல்லாம் இதன் மாற்றுவடிவங்களே" என்றார். இதற்கு மாறாக பவபூதி என்பார் கருணாரசம் ஒன்றுதான் இரசம் என வாதிடுகிறார்.

இவ்வாறு இரசம் குறித்துப் பல்வேறு விளக்கம் கொடுக்கும் சமஸ்கிருத மரபு, இரசத்தின் பயன் என்ன என்ற கேள்விக்குப் பதிலாக, இரசம் எத்தனை வகையாக இருந்தாலும் எல்லாவற்றின் மூலமாகவும் கிடைக்கும் இறுதிப் பயன் "ஆனந்தமே" என்றனர். இந்த ஆனந்தமும் மீஉயர் இன்ப உணர்வாகக் (Transcendental) கொள்ளத் தக்கதாகும். இதை அபிநவக்குப்தர் 'அலௌதிகம்' என்கிறார். இத்தகைய மீஉயர் இன்பத்தைக் கொடுக்கும் இரசத்தின் மூலம் மனிதர்களுக்கு வாய்ப்பது "விடுதலை" என்கின்றனர்; இன்னும் உன்னதமாக ஒரு நல்ல இரசிகன் யோகிக்குச் சமமானவன் என்பர்; அந்த இடத்தில் இரசனை அதன் உண்மையான பொருளில் இருக்கும் இடத்தில் – நான், எனது என்ற பந்தங்களும் எல்லைகளும் அடையாளங்களும் உதிர்ந்து விடுகின்றன. இவ்வாறு இரசத்தை ஒரு தெய்வீக அனுபவத்திற்கு ஈடாகக் கொண்டு செல்லும் சமஸ்கிருத மரபில் வந்த விஸ்வநாதர் என்ற அலங்கார நூலாசிரியர் இந்த இரசானுபவம் எல்லார்க்கும் கிடைத்துவிடாது; அது பூர்வ புண்ணியப் பயனால் கிடைப்பது என்று சொல்லும் அளவிற்குப் போகிறார். இவ்வாறு சமஸ்கிருத இரசக்கோட்பாட்டாளர்கள் இரசத்தின் தோற்றம், அதன் பல்வேறு பாவங்கள், அவற்றுள் தலையாய இரசம், அவற்றின் பயன் என்று பல்வேறு கோணத்தில் இரசத்தின் நுட்பத்தை விளக்கி, புரிதலுக்கு அப்பாற்பட்ட புதிராகக் கொண்டாடி இலக்கிய இரசனையை அற்புதத்தளத்திற்கு உயர்த்தியுள்ளனர். எனவே இலக்கிய இரசனையை முதன்மைப்படுத்திய இத்தகைய அணுகுமுறையும், சமூக அறநெறிக்கு உட்பட்ட தொல்காப்பியரின் அணுகுமுறையும் வெவ்வேறு தன்மை கொண்டவை. வெவ்வேறு நோக்கம் கொண்டவை. எனவே இரண்டு மரபையும் இணைக்க முயலுவதோ ஒன்றிலிருந்து ஒன்று வந்தது; ஒருவர் மற்றொருவர்க்குக் கடன்பட்டவர் என்று கூறுவதோ பொருத்தமற்ற கூற்றுகளாகும் (தமிழண்ணல், 185) பி.திருஞானசம்பந்தம் கீழ்க்காணுமாறு எழுதுகிறார்.

"இவ்விரண்டு கோட்பாடுகளையும் ஒப்பிடின் இவை இரண்டும் ஒரு பொது மூலத்திலிருந்து வந்தவை என்பது புலனாகும். இரசக்கோட்பாட்டிற்கும் பாவங்கள் உட்பட ஆரியர், திராவிடர் அளித்த கூறுகளைப் பகுத்துப் பார்த்துச் சீர்தூக்கின் அதற்குப் பின்னவர் பங்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று என்று தோன்றுகிறது.

(பி.திருஞானசம்பந்தம், ப.11)

இவ்வாறு குறைந்தது அல்லது உயர்ந்தது என்று இரண்டையும் மதிப்பிட எந்த முகாந்திரமும் இல்லை. இரண்டும் இரண்டு வகையான போக்குக் கொண்டவை. எனவே இரண்டையும் இன்றைக்கு எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதுதான் எண்ணிப்பார்க்கத் தக்கதாகும்.

அடிக்குறிப்புக்கள்

1. 32 – அவையாவன :

உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்றுதல், கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு (மறதி), பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம்.

2. 62 – அவையாவன :

புகுமுகம் புரிதல் (தலைவி, தன் முகத்தைத் தலைவன் காணுதலை விரும்புதல்), பொறிநுதல் வியர்த்தல், நகையுண்டாதலை மறைத்தல், சிதைவு பிறர்க்கு மறைத்தல், கூழை விரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல் (அணியைத் தடவுதல்), உடைபெயர்த்து உடுத்தல், அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலிறுத்தல், இருகையும் எடுத்தல், பாராட்டெடுத்தல், மடந்தப உரைத்தல், அலர் நாணல், கொடுப்பவை கோடல், தெரிந்து உடம்படுதல், திளைப்புவினை (விளையாட்டு) மறுத்தல், கரந்திடத்தொழிதல், கண்டவழி உவத்தல், புறஞ்செயச் (தலைமகன் அழகுபடுத்த) சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையறவு உரைத்தல், 24– (களவுக்காலம் சார்ந்தவை).

இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல், எதிர்பெய்து பரிதல் (உருவெளிப்பாடு கண்டு வருந்தல்), ஏதம்(குற்றம்) ஆய்தல், பசியட நிற்றல், பசலை பாய்தல், உண்டியிற் குறைதல், உடம்பு நனி சுருங்குதல், கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல், பொய்யாக் கோடல் (தலைவன் கூற்றை), மெய்யே என்றல், ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல், அறனழிந்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல், எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல், ஒப்புவழியுவத்தல் (தன்மகனோடு) உறுபெயர் கேட்டல் (மகன்பெயர்)மனங்கலங்குதல்–20(களவு+கற்புக் காலத்தவை)

முட்டுவயிற் கழறல் (களவு இடையீடுபட்டவிடத்து), முனிவு மெய்ந்நிறுத்தல், அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல், தூதுமுனிவின்மை, துஞ்சிச் சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை–8– (கற்புக்காலத்தவை).

தெய்வம் அஞ்சல், புரை அறம் தெரிதல், இல்லது காய்தல், உள்ளதுவர்த்தல் (தலைவனின் தலையளியை வெறுத்தல்) / புணர்ந்துழியுண்மை, பொழுதுமறுப்பாதல், அருண்மிக உடைமை, அன்புமிக நிற்றல், பிரிவாற்றாமை, மறைந்தவை உரைத்தல், புறஞ்சொல்–10–(கற்புக்குரியவை)

3. வேண்டிய ஒப்புமை :– 10

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு (அழகு), காமம், நிறை, அருள், உணர்வு (அறிவு), திரு.–

4. வேண்டாதவை :–12

நிம்புரி (அழுக்காறு), கொடுமை, வியப்பு (தன்னைவியத்தல்), புறமொழி, வன்சொல், பொச்சாப்பு, மடிமை, குடிமை, இன்புறல், ஏழைமை, மறப்பு, ஒப்புமை (பிறஆடவரை).

5.நகை–ஹாஸ்யம்

அழுகை–கருணை

இளிவரல்–பிபத்ஸம்

மருட்கை–அற்புதம்

அச்சம் –பயானகம்

பெருமிதம்–வீரம்

வெகுளி–ருத்ரம்

உவகை–சிருங்காரம்.

6. பி.திருஞானசம்பந்தம் இவ்வாறு இணைத்து விளக்க முயலுகிறார். தொல்காப்பியர் கூறும் எட்டு மெய்ப்பாட்டினை, வடமொழியிலுள்ள ஸ்தாயி பாவத்தோடும், அவர் தனியாகக் கூறும் முப்பத்திரண்டனையும், வடமொழியில் சஞ்சார பாவம் என்று கூறப்படும் முப்பத்துமூன்றோடும் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இப்படி ஒப்பிடுவது பொருத்தமாக இல்லை என்பார் தமிழண்ணல்

தொல்காப்பியரின் புறத்திணை இலக்கண அமைப்பு முறை



முனைவர். கி. இராசா
திருச்சி.

தமிழர்தம் வாழ்க்கையின் முதல் இரு கூறுகளாக விளங்கி நின்ற அகம், புறம் என்பனவற்றுள் புறமாகிய இரண்டாங் கூற்றினை விளக்கி இலக்கணம் சமைப்பதற்குத் தொல்காப்பியர் அமைப்பு முறைகள் சிலவற்றைப் பின்பற்றியுள்ளார். இவை புறத்திணை இலக்கணத்திற்கு அடிப்படை வரைபடம் (Blue print) போன்று அமைந்துள்ளன. ஒரு புற இலக்கணத்தை அல்லது ஒரு போர்முறையை விளக்கியதன் அடிப்படையிலேயே அனைத்து விளக்கங்களும் அமைகின்றன என்பது இதன் சிறப்பு ஆகும். இவற்றை இனி விரிவாகக் காண்போம்.

புறத்திணைகளுக்கான இலக்கணத்தை அறிவுறுத்த முயலும் தொல்காப்பியர்,

> "அகத்திணை மருங்கின் அரில்தல உணர்ந்தோர்
> புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்"
> -புறத்.1

என்று நூற்பாத் தொடக்கம் செய்துள்ளார். அகத்திணை இலக்கணத்தைப் பிழையற நன்கறிந்தோராலேயே புறத்திணை இலக்கணத்தைத் தெளிவுபட வகுத்துரைக்க இயலும் என்ற தொல்காப்பியர்தம் கருத்து இந்நூற்பாவின் வழிப் புலனாகின்றது. மேலும் அகத்திணை இலக்கணத்தை உணர்ந்தவர்க்கன்றி, பிறர்க்கு அவற்றின் புறத்தவாகிய புறத்திணையொழுகலாறுகளும், அவற்றின் துறைகளாகிய செயல்வகைகளும் இனிது விளங்க மாட்டா எனும் கருத்தும் இதன் வழிப் பெறப்படும்.

திணை அடிப்படையில் தொல்காப்பியர் புறப்பொருளை விளக்கியுள்ளார் என்பதை அகத்திணைக்குப் புறனாகப் புறத்திணையை அவர் இணைத்துக் காட்டும் பெற்றியால் அறியலாம்:

'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' - புறத்.1
'வஞ்சிதானே முல்லையது புறனே' - புறத்.6
'உழிஞைதானே மருதத்துப் புறனே' - புறத்.9
'தும்பைதானே நெய்தலது புறனே' - புறத்.14
'வாகைதானே பாலையது புறனே' - புறத். 18
'காஞ்சிதானே பெருந்திணைப் புறனே'- புறத். 22
'பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே' - புறத்.25

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் திணைகள் அகத்திற்கும் புறத்திற்கும் களமாக அமையும் சூழலைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் விளக்கியுரைத்துள்ளனர். அகத்திணை ஏழெனவே புறத்திணையும் ஏழாகப் பெறும் எனும் தொல்காப்பியத்தின் பாகுபாடு அகத்திணையை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது என்பதை இளம்பூரணர் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார்.

"புறப்பொருள் பன்னிரண்டு வகைப்படக்கூறில், அகமும் பன்னிரண்டாகி மாட்டேறு பெறுதல் வேண்டும். அகத்திணை ஏழாகிப் புறத்திணை பன்னிரண்டாகில் 'மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்' (மரபு.11) எனும் தந்திர உத்திக்கும் பொருந்தாதாகி 'மிகைப்படக் கூறல்' 'தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்' (மரபு. 109) எனும் குற்றமும் பயக்கும் என்க."

போரில் எதிர்கொள்ளும் இருபடைஞரையும் ஒரு திணை சார்ந்தவர்களாகவே தொல்காப்பியர் காட்டியுள்ளார். பொருதல், எதிர்த்தல் என்று இருவினைகளின் அடிப்படையில் புறத்திணை இலக்கணத்தை உணர்த்துதல் தொல்காப்பியர் கருத்தன்று என்பதைப் பின்வரும் நூற்பாப் பகுதிகளால் அறியலாம்.

குறிஞ்சி -> <- வெட்சி : ஆகோள், ஆபெயர்த்துத் தருதல்

முல்லை -> <- வஞ்சி : எஞ்சா மண்ணசை, அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தல்

மருதம் -> <- உழிஞை : அரணம் முற்றலும் கோடலும்

நெய்தல் -> <- தும்பை : மைந்துபொருள், சென்று தலையழித்தல்

அமர்நிகழ்வுகளின் அமைப்பு

புறத்திணையை, அகத்திணைக்கு இணையாகவும், அகத்திணையைப் புறத்திணைக்கு அடிப்படையாகவும் அமைத்துக் காட்டிய தொல்காப்பியர், அடுத்து அமர் நிகழ்வுகளை விளக்கும் போதும் ஒரு வரையறுத்த திட்டத்தை வகுத்துக் கொள்கிறார். அது என்ன என்பதைக் கீழே காண்போம்.

மூவகை அமர்நிகழ்வுகள்

அமரின்போது விளக்கமுறும் துறை நிகழ்வுகளைப் பார்க்கும்போது, அவை அமர்முன் நிகழ்வு, அமர் நிகழ்வு, அமர் பின்னிகழ்வு என மூன்று வகைகளாகப் பாகுபடுத்த வகை உள்ளது. இம்மூன்று அமர்நிகழ்வு களையும் குறிக்கும் துறைகளை அமர்க்களம் சுட்டும் (தும்பை வரை) புறத்திணைகளில் காணலாம். இவ் அமர் நிகழ்வுகள் திணை வளர்ச்சியையும் (போர்முறை வளர்ச்சி), துறை வளர்ச்சியையும் (போர் நிகழ்வின் தொடர்ச்சி) காட்டுகின்றன. இதனை மேலும் விளக்கும் பொருட்டு, தொல்காப்பிய வெட்சித்திணையில் சுட்டப்பட்டுள்ள துறைகள் அமர் முன் நிகழ்வு, அமர்நிகழ்வு, அமர்பின் நிகழ்வு ஆகிய நிலைகளில் அமைந்துள்ள பெற்றி இவண் எடுத்துக்காட்டப்படுகிறது. இதே போன்றதொரு அமைப்பு முறையே தொடரும் எல்லாப் போர்த்திணைகளிலும் பின்பற்றப்பட்டிருக்கக் காணலாம்.

அமர்முன் நிகழ்வு

செருமுகத்தில் எதிர்படும் முன்னர் இருதிறத்து வீரரும் வெற்றி வேண்டிச் செயலாற்றுவர். இச்செயல்முறைகள் வெறி, விரிச்சி, உன்னநிலை, பூமலைதல், வேய், புறத்திறை எனும் துறைகளாகத் தொல்காப்பிய வெட்சித்திணையில் இடம் பெற்றுள்ளன. (புறத். 4,5) இப்போர் முன்னேற்பாட்டுச் செயல்முறைகள் வெட்சிக்கு மட்டும் உரியன எனக் கொள்ள முடியாது. சான்றாக, முல்லைக்குப் புறனாக அமைந்த வஞ்சிப் போரின் போது விரிச்சி ஓர்ந்த செய்தியை முல்லைப்பாட்டின் வழிக் காணலாம். நிரைகோடல் கருதி எழும் படைஆரவாரத்தைப் 'படைஇயங்கு அரவம்' எனும் வெட்சித்துறை குறிப்பிடுகிறது. இப்படையெழுச்சிக் கருத்து அமர்க்களம் சுட்டும் பிறதிணைகளுக்கும் தொடக்கமாக அமைந்துள்ளது. பொருதல் வேண்டிச் செல்லும் படைஆரவாரத்தை 'இயங்குபடை அரவம்' எனும் வஞ்சித்திணையின் துறை குறிப்பிடுகின்றது (புறத்.7). மக்களைக் காத்தற்கும், பகைவரை அழித்தற்கும் வாளையும், குடையையும் புறவீடு விடுதலைக் 'குடைநாட்கோள்', 'வாணாட்கோள்' எனும் உழிஞைத் திணையின் துறைகள் சுட்டுகின்றன. (புறத்.11). பகைவர் உள்ளம் நடுங்குதற்கு ஏதுவாகிய காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை எனும் மூவகைப் படைகளின் நிலையைத் தானைநிலை, யானைநிலை, குதிரை நிலை எனும் தும்பைத் துறைகள் உணர்த்துகின்றன. (புறத்.14). இவ்வாறு படையெழுச்சி யைக் குறிக்கும் வெட்சித் திணையின் முதல் நான்கைந்து துறைகள் போன்று அமர்க்களம் சுட்டும் பிற புறத்திணைகளின் துறைகள் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

அமர்நிகழ்வு

செருமுகம் புகுந்த இருதிறத்து வீரரும் வெற்றி வேண்டிப் போருடற்றுவர். அவர்தம் போர்முறை காலச் சூழலுக்கேற்ப மாறுபடுவதுண்டு. இப்போர் முறைகளே அமர்நிகழ்வுகள் எனக் கருதப்படுகின்றன. 'ஆகோள்' என்பது வெட்சிக்கு உரிய களப்போர் முறையாகும். 'அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம்', 'பொருள் இன்று உய்த்த பேராண்பக்கம்' என்பன வஞ்சிக்கு உரிய களப்போர் முறைகளாகும். (புறத். 7) 'மதில்மிசை இவர்ந்த மேலோர் பக்கம்', 'அகத்தோன் வீழ்ந்த நொச்சி', 'புறத்தோன் வீழ்ந்த புதுமை', 'நீர்ச்செரு வீழ்ந்த பாசி', 'ஊர்ச்செரு வீழ்ந்த மறன்', 'மடையமை ஏணிமிசை மயக்கம்', எனும் மதிற்போர்முறைகள் உழிஞைக்கு உரியனவாகும். (புறத்.11)

'தான் மீண்டு எறிந்த தார்நிலை', 'கூழை தாங்கிய பெருமை', 'பாழி கொள்ளும் ஏமம்', 'வாளோர் ஆடம் அமலை', 'ஒருவனை மண்டிய நல்லிசை', 'ஒள்வாள் வீசிய நூழில்' என்பன தும்பைக்கு உரிய போர் முறைகளாகும்.

இவ்வாறு அமர்நிகழ்வுகள், காலச்சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றன. இவ் அமர் நிகழ்வுகளுக்கான அணுக்கமுறைகள் (tactics) துறைகள் எனும் அடிக்கருத்துக்களாகப் புறத்திணை யியலில் மொழியப்பட்டுள்ளன.

அமர்பின் நிகழ்வு

அமர் முடிந்த பின்னர் இருதிறத்து வீரரும் தொடரும் செயல்முறைகள் தொல்காப்பியரால் அடுத்து விளக்கப் படுகின்றன. இவை அமர் பின்னிகழ்வுகளாகக் கருதத்தகுவனவாகும். நுவல்வழித் தோற்றம், தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை என்பன போர் முடிந்தபின் தொடர்கின்ற போர் பின்னிகழ்வு களாகும். இவற்றை வெட்சிப்போரை முடித்து வைக்கும் இறுதித் துறைகளாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார். எவ்வகைப் போர் முறையிலும் போருடற்றிய பின்னர் வீரர்கள் தம் கட்டூர்க்குத் (Base Camp) திரும்பி வருவர். இன்றைய போர் முறைகளிலும் இது காணப்படுகிறது. இதனை 'நுவல்வழித் தோற்றம்' என்ற வெட்சித் திணையின் துறை குறிப்பிடுகின்றது.

கவர்ந்த ஆநிரைகளை வீரர்கள் தம் இடத்தில் கொண்டுவந்து நிறுத்திய செய்தியைத் 'தந்துநிறை' எனும் வெட்சித்துறை சுட்டுகிறது. வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய போர்முறைகளிலும் கொண்டிப் பொருளாகக் கைப்பற்றிய செல்வங்களைத் தம் நாட்டிற்கு வென்றோர் கொண்டு சென்று இரவலர்க்குப் பரிசிலாக வழங்கினர் (புற. 78: 6-7). இவ்வாறு பிற போர் முறைகளில் கொண்டிப் பொருளைக் கைப்பற்றிச் செல்லும் கருத்திற்குத் தோற்றுவாயாக வெட்சிப்போரின் 'தந்துநிறை' எனும் துறை அமைந்துள்ளது.

போரின் வெற்றிக்கு உதவியோரின் உதவி அளவறிந்து அவர்க்குப் போரில் கொண்ட பொருளைப் பகுத்துத் தந்ததைப் 'பாதீடு' எனும் வெட்சித் திணையின் துறை உணர்த்துகிறது. வஞ்சிப் போரின் போதும், உழிஞைப் போரின் போதும் கவர்ந்த யானை, குதிரை, தேர் எனும் செல்வங்களை வயிரியர், விறலியர், பாணர், அகவலன் என்போர்க்கு வேந்தர் பரிசிலாகத் தந்த செய்தியைச் சங்கப் பாடல்களின் வழி அறியலாம்.

(பதிற். 20: 146)

பன்னிரு படலம் காட்டும்

தொல்காப்பியர் திணைநோக்கில் வடித்தளித்த புறப்பொருள் இலக்கணத்தைப் பன்னிரு படலத்தார் செயல் நோக்கில் மாற்றிக் காட்டியுள்ளார். தொல்காப்பியப் புறத்திணை ஏழும், வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனச் செயல்நோக்கில் ஒன்பதாக வளர்ந்தன. இப்புறத்திணைகளுக்குப் பொதுவாக அமைந்த துறைகள் பொதுவியல் எனும் புதிய திணையில் வைக்கப்பட்டன. தொல்காப்பியர் சுட்டிய அகத்திணை ஏழனுள் கைக்கிளை, பெருந்திணை எனும் இருதிணைகள் இயற்பெயர் சுட்டுமாறு கருத்துவளர்ச்சி பெறவே, அவையும் தனித்தனித் திணைகளாகக் கருதப்பட்டன. இவ்வாறு திணைநோக்கில் தொல்காப்பியர் ஏழாக வகுத்த புறத்திணை இலக்கணம், பன்னிரு படலத்தில் செயல்நோக்கில் பன்னிரண்டாக வளர்ச்சி பெற்றது. இப்பன்னிருதிணைகளையும் 'மறனுடை மரபின்' என்றும், 'பொதுவியல்' என்றும், அகத்திணைப்புறன்' என்றும் (9+1+2) மூவகையானதாகப் பன்னிரு படலத்தார் பகுத்துக் காட்டுவார்.

புறப்பொருள் வெண்பா மாலையில் மாற்றத்தின் தொடர்ச்சி

'மறனுடை மரபின', 'பொதுவியல்', 'அகத்திணைப் புறன்', எனும் பன்னிருபடலப் புறத்திணை இலக்கணப் பகுப்பைப் பின்பற்றிய புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், இவற்றைப் புறம், புறப்புறம், அகப்புறம் எனக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியத்தின் சார்பு நூலாகவும், பன்னிருபடலத்தின் வழிநூலாகவும் அமைந் துள்ள புறப்பொருள்வெண்பாமாலை, காலமாற்றத்தின் காரணமாக எழுந்த கருத்து வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது எனலாம்.

அமர்நிகழ்வுத் திணைகளில் பொருவோர்-எதிர்ப்போர் என இருதிறத்து வீரரையும் ஒரே கூறாகக் காட்டிய தொல்காப்பியர், பொருதல், எதிர்தல் ஆகிய இருநிகழ்ச்சிகளையும் ஒரே நிகழ்வின் இணைவுகளாக-பொதிவுகளாகக் காட்டியுள்ளார். இந்நோக்கில் தொல்காப்பியர் வெட்சியையும் (நிரை கவர்தல்), அதன் தொடர்ச்சியான - இணைவான கரந்தையையும் (நிரை மீட்டல்) ஒரே நோக்கை மையமாகக் கொண்ட ஒரே திணையாகவே காண்கிறார். இதற்கு முக்கிய அடிப்படையாக அவர் கொண்டது அகத்திணைப் பாகுபாட்டை. இதனை நிறுவுதற்கு அவர் காட்டிய வகைபாடு, அமரினை, அமர்முன்நிகழ்வு, அமர்நிகழ்வு, அமர்பின்நிகழ்வு எனும் அடிப்படையில் காணுதல். வெட்சியில் தொல்காப்பியர் அறிமுகம் செய்த இந்த அமைப்பு முறை, எல்லாப் போர் நிகழ்வுத் திணைகளிலும் விளக்கமுற அமைந்திருப்பது தொல்காப்பியத்தின் சிறப்பாகும். இன்றைய சூழலிலும் நடைபெறும் போர்முறை உத்திகளைப் போன்றே தொல்காப்பியப் புறத்திணைப் போர் அணுக்கமுறைகள் அமைந்திருப்பதை அமர்முன்நிகழ்வுகள்,அமர்நிகழ்வுகள், அமர்பின்நிகழ்வுகள் எனப் புறத்திணைத்துறைகளைப் பாகுபடுத்திப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

தமிழில் கலைச் சொற்களைத் தரப்படுத்துதல் – மொழியியல் அனுபவங்கள்



முனைவர். கி. அரங்கன்,
தஞ்சாவூர்.

தரப்படுத்தல்

ஒரு மொழியைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரிடையே சுமுகமான செய்திப் பரிமாற்றம் நடைபெற வேண்டு மானால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கை வளப்படுத்தவேண்டும். ஒவ்வொரு மொழியும் வளர்ச்சிப் படியில் ஒவ்வொரு நிலையில் இருப்பதால் அதற்கேற்றவாறு தரப்படுத்தல் மாறுபடும். எழுத்துத் தமிழையே தமிழர்கள் அனைவரும் செய்திப் பரிமாற்றத்திற்கும் பயன்படுத்துவதால் பேச்சுத் தமிழில் உள்ள எந்த வழக்கைப் பயன்படுத்துவது என்பது போன்ற பிரச்சினை இங்கு எழவில்லை. எழுத்துத் தமிழே பல்வேறு துறைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடும் இல்லை. இவ்வாறு பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற தரப்படுத்தப்பட்ட வழக்கு (பேச்சில் உள்ள வழக்குகளில் ஒன்று தரப்படுத்தப்படுவதாயினும் அல்லது எழுத்து மொழியே பயன்படுத்தப்படுவதாயினும்) வட்டார அடிப்படையிலும் சமூகப் பிரிவுகளின் அடிப்படையிலும் வெவ்வேறான வழக்குகளைப் பயன்படுத்து கின்ற மக்களை இணைக்கிறது. தரப்படுத்தப்பட்ட வழக்கின் மூன்று செயற்பாடுகளில் இரண்டு நம்முடைய பணியோடு தொடர்புடையன (Garvin1964;521) தமிழில் மொழியியல் சொற்களைத் தரப்படுத்துதல் இணைப்பிற்கும் நோக்கீட்டிற்கும் பெரிதும் துணைபுரிகிறது. கௌரவம் (Prestige) என்பது இங்குச் செயல்படுவதாகத் தெரியவில்லை. தரப்படுத்தப்பட்ட வழக்கிற்கு இரு முக்கியச் செயற்பாடுகள் உள்ளன என்று கார்வின் (1964) குறிப்பிடுகிறார் – (1) வளைந்து கொடுக்கும் ஸ்திரத்தன்மை (flexible stability) – (2) அறிவாக்கம் (intellectualisation). பண்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஒட்டித் தரப்படுத்தப்பட்ட வழக்கு மாறுகிற தன்மையை வளைந்து கொடுக்கும் ஸ்திரத்தன்மை என்று மொழியியலாளர்கள் குறிப்பிடுவார்கள். நம்முடைய பணியோடு இதைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது வளைந்து கொடுக்கும் ஸ்திரத்தன்மை என்பதை மொழியியல் துறையின் வளர்ச்சிக்கேற்பத் தமிழில் கலைச் சொற்களைக் கூட்டுவதும், குறைப்பதும், மாற்றுவதும் ஆகிய செயல்கள் என்று பொருள் கொள்ளலாம். மொழியியல் துறையில் வளர்ச்சி ஏற்பட ஏற்படத் தமிழில் கையாளப்படுகிற கலைச்சொற்கள் மாறலாம்; வழக்கி லிருந்தே சில விடுபடலாம். இம்மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஈடுகொடுக்கும் போக்கில் மொழியியலை விவரிக்கப் பயன்படுத்தும் தமிழ் வளைந்து கொடுத்துத் தன்னுடைய ஸ்திரத் தன்மையைக் காப்பாற்றும். அறிவாக்கம் என்ற தன்மையை நம் பணியோடு தொடர்புபடுத்தும் போது தரப்படுத்தப்பட்ட கலைச்சொற்கள் மொழியியலில் வரையறுக்கப்பட்ட பொருளைச் சுட்டுகின்ற தன்மையையும் வெளிப்படுத்துகின்ற பொருளில் எவ்வித மயக்கமும் ஏற்படாத நிலையையும் கொண்டிருக்க வேண்டும்.

மற்ற பொருத்தமற்ற சொற்களை நீக்குவதன் மூலமும் பொருத்தமுடைய சொற்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் இக்குறிக்கோளை நாம் அடையலாம்.

முன்பு குறிப்பிட்டது போல, பல சொற்கள் மாற்றங்கள் பெறலாம், விடவும் படலாம். ஆகையால் நாம் இங்குத் தரப்படுத்திய சொற்களை மாற்றத்திற்கு உட்படாதவை என்று கருதவில்லை. இது நோக்கீட்டுச் செயற்பாங்கை நிறைவேற்றஉதவுகிறது. மேலும் மொழியைப்

பேசுபவர்கள் செய்திப் பரிமாற்றத்திற்காகத் தங்களுடைய பரந்து பட்ட குழுவினருடன் தொடர்பு கொள்ள இது பாலம் போல அமைகிறது. தரப்படுத்தல் என்ற பணி சொற்களை நூலாக வெளியிடுவதோடு மட்டும் முடிகின்றபணி அன்று. துறைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வழியில் தொடரும் பணி இது. தரப்படுத்தல் என்பது மொழித் திட்டமிடுதலின் பகுதியாக இருப்பதால் மொழி ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர்களின் தொடர்ச்சியான பணி இது.

முன்னைய முயற்சிகள்

கல்வி நிர்வாகப் பரவல், செய்தித் தொடர்பு ஆகியவைகளில் பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் மொழிகளைப் பயன்படுத்துவது என்ற கொள்கை மொழிவளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியக்கூடியது. இக் கொள்கையை நிறைவேற்றுவதில் அரசு காட்டும் உறுதியும் தீவிரமும்தான் மொழி வளர்ச்சிக்குரிய அடிப்படைகள். நாட்டு மொழியை அல்லது மாநில மொழியை எல்லாத் துறைகளின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்துவது என்ற மொழிக் கொள்கையின் அடித் தளத்தில் நூல்கள் வரும். இவ்வாறு வருகின்ற நூல்கள் வெவ்வேறு துறைகளில் நாட்டு/மாநில மொழியைப் பயன்படுத்தும்போது ஏற்படுகின்ற சிக்கல்களைப் பற்றிச் சிந்திக்க வைக்கும். நாம் இதில் இரண்டுவித பிரச்சினைகளை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். சான்றாக, வெவ்வேறு துறைகளை விளக்கி நூல்கள் எழுதும் போது தோன்றும் மொழிநடை குறித்த பிரச்சினைகள் ஒருவகை. அறிவியல் உரைக்கட்டு **(Science Discourse)** இலக்கிய உரைக் கட்டிலிருந்து வேறுபட்டது. இவ்விரு உரைக்கட்டிலும் பயன்படுத்தப் படுகின்ற மொழிநடை வேறுபடும். இரண்டாவதாக வெவ்வேறு அறிவியல், சமூக அறிவியல் ஆகிய துறைகளில் நாட்டு / மாநில மொழியைப் பயன்படுத்தும்போது உருவாக்க வேண்டிய கலைச் சொற்களைத் தரப்படுத்துதலோடு தொடர்புடைய இரு முக்கியப் போக்குகளை நாம் இனம் கண்டுகொள்ள வேண்டும். (1) கலைச் சொல் உருவாக்கத்தோடு தொடர்புடைய நெறி முறைகள். (2) கலைச்சொற்களைத் தொகுப்பதில் கடைப்பிடிக்கும் நெறி முறைகள்.

தமிழில் முயற்சிகள்

தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கல், தொகுத்தல், தரப்படுத்துதல் ஆகியவற்றின் நெறிமுறைகள் பற்றிய வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய முதன்மையானவர் பிஷ்கிரின் **(Fish Green)** என்றஅறிஞராவார். 1872–1875 ஆம் ஆண்டுகளில் மருத்துவம் சார்ந்த கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கி இரு தொகுதிகளில் வெளியிட்டார். தமிழில் கலைச் சொற்களை உருவாக்கும் போது பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை விரிவாக விவாதித்துள்ளார். அவர் வகுத்த நெறிமுறைகளுள் முக்கியமான மூன்றை நாம் இங்குக் குறிப்பிடுவோம். (1) கலைச் சொற்களுக்கு எளிய அல்லது கூட்டுச் சொற் களைத் தமிழில் தேட வேண்டும். இணையான சொற்கள் கிடைக்காதபோது புதிய வேர்ச் சொற்களை அல்லது விகுதிகளை உருவாக்கிக் கொள்ளலாம். (2) தமிழில் இணையான சொற்கள் கிடைக்காதபோது பயன்பாட்டில் உள்ள சமஸ்கிருத மொழிச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். (3) .தமிழிலும் சமஸ்கிருதத்திலும் இணையான சொற்கள் கிடைக்காதபோது ஆங்கிலத்திலிருந்து சொற்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கடன் பெறுகின்ற சொற்களைத் தமிழின் தன்மைக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம்.

மொழிக் கொள்கைகள்

தரப்படுத்துதலை நாம் மேற்கொள்ளும்போது நம்முடைய மொழிக் கொள்கைகளைத் தெளிவுபடுத்த வேண்டும். கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துவது பற்றிய தெளிவையும் நாம் கூறவேண்டும். நாம் தேவையான இடங்களில் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்துகிறோம். சான்றாக, மொழியியலாளர்களின் பெயர்களைக் குறிப்பிட நாம் கிரந்த எழுத்துகளைப் பயன்படுத்துகிறோம். ஹாக்கெட் (Hockett), ஹேரிஸ்(Harris), சோம்ஸ்கி(Chomsky) போன்று ஆங்கிலத்தில் உள்ள பெயர்களுடைய உச்சரிப்பின் நெருக்கத்திற்கு இவ்வெழுத்துகளைப் பயன்படுத்துவதின் மூலம் நாம் சொல்லமுடியும் என்பது தான் இதற்கு அடிப்படை. கிரந்த எழுத்துகளைத் தவிர்ப்பது என்பதைவிட மூல உச்சரிப்பைக் கொண்டு வருவது என்பதுதான் இம்மொழிக் சொள்கைக்கு ஆதாரம்.

நாம் பயன்படுத்துகிற சொற்கள் மரபிலக்கணங்கள் கூறும் விதிகளோடு ஒத்துப்போக வேண்டு மென்பதில்லை. சான்றாக 'ட்', 'ஸ்' போன்ற ஒலியன்கள் சொல்லின் இறுதியில் வருவதில்லை என்பது ஒருவிதி. இவ்விதிகளைப் பின்பற்றினால் ஹாக்கெட்டு, ஹேரிஸு

என்று பெயர்களைக் குறிப்பிட வேண்டும். நாம் முன்பு குறிப்பிட்டதுபோல உச்சரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் இச்சொற்களை ஹாக்கெட், ஹேரீஸ் என்றே விதிகளை மீறிக் கொடுத்திருக்கிறோம். இன்னொரு கோணத்தில் பார்த்தால் நாம் விதிகளை மீறவில்லை. இலக்கியங்களைத் தரவாகக் கொண்டு நமது மரபிலக்கணங்கள் தோன்றின என்று நாம் கூறலாம். இவ்விலக்கணங்களில் கூறப்பட்ட விதிகள், இலக்கியங்களில் கையாளப்பட்ட மொழியின் வகைக்குத்தான். மொழியியல் போன்ற அறிவியல்களில் பயன்படுத்தப்படும் மொழிவகை வேறானது. மரபிலக்கண விதிகளை அளவு கோலாகக் கொண்டு இந்த மொழிவகையை விவரிக்கவேண்டுமா? பேச்சு மொழியின் வகைகளை எடுத்துக் கொண்டு இக்கருத்தை விளக்க முற்படுவோம். பேச்சுத் தமிழ் என்று நாம் கூறினாலும் அது ஒரே வழக்கைக் கொண்டதன்று. நில அடிப்படையிலும், சமூகப் பிரிவுகளின் அடிப்படையிலும் பேச்சுத் தமிழில் பல கிளைமொழிகள் உள்ளன. இக்கிளை மொழிகளை நாம் விவரிக்கும்போது ஒவ்வொரு கிளை மொழியையும் தனித்தனியாக விவரித்து விட்டு, பின்னர் இக்கிளை மொழிகள் தாங்கள் கொண்டிருக்கிற பொதுவிதிகளை அடித்தளமாகக் கொண்டு பேச்சுத்தமிழ் என்பதை விளக்க முற்படுகிறோம். இதே பின்புலத்தில் எழுத்துத் தமிழையும் நாம் பார்க்கலாம். ஒவ்வொருவகை மொழியையும் இன்னொருவகை மொழியை மனத்தில் கொள்ளாமல் விவரிக்க வேண்டும். மொழியியலில் பயன்படுத்துகின்றமொழி வகையில் 'ட்', 'ஸ்' போன்றவை சொற்களின் இறுதியில் வருகின்றன என்று நாம் குறிப்பிட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வகையையும் தனித்தனியாக விவரித்து விட்டு இவற்றிக்கிடையே காணப்படும் விதிகளின் பொதுத்தன்மையின் அடிப் படையில் எழுத்துத் தமிழ் என்பதை விளக்க முன்வருவது சிறந்த பயனை அளிக்கும் என்று நாம் நினைக்கிறோம். நாம் இங்கு விவரிக்கின்றநிலை மொழி வெவ்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தும் போது வெவ்வேறு இலக்கணங்கள் உருவாகின்றன என்ற இடத்திற்கு இட்டுச் செல்கிறது. எந்த நிலையை நாம் மேற்கொண்டாலும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் நமக்கும் தெளிவாக விளங்கும். மொழி வெவ்வேறு துறைகளிலும் சூழல்களிலும் பயன்படுத்தப்படுவது மொழி மாற்றங்களை உண்டாக்குகிறது.

மொழிக் கொள்கையோடு தொடர்புடைய மற்றொரு முக்கிய அம்சம் பிறமொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கி நம் மொழியில் பயன்படுத்துவது குறித்தது எனலாம். பிறமொழிச் சொல் எதுவும் தரப் படுத்தப்படுகிற மொழியியல் கலைச்சொற்களில் இடம் பெறக்கூடாது என்ற தீவிர நிலையை நாம் மேற்கொள்ள வில்லை. இவ்வாறு கூறுவதால் பிற மொழிச் சொற்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்ற பொருளும் இல்லை. தமிழில் உள்ள வேர்ச் சொற்களிலிருந்து துறைகளுக்குரிய கலைச்சொற்களை உருவாக்குவது என்ற மரபு நம்மிடையே உள்ளது. அதையே நாமும் பின்பற்றுகிறோம். பிறமொழியிலிருந்து எடுத்தாளப்படும் சொற்கள் ஏற்கெனவே எழுத்தில் நிலைபெற்று வலுப்பெற்றிருந்தாலொழிய அவற்றைக் கையாள்வதில்லை என்ற நிலையை நாம் மேற் கொள்கிறோம். மற்ற நிலைகளில் தமிழில் படைக்கப்பட்ட சொற்களுக்கே முக்கியத்துவம் அளிக்கிறோம். தமிழில் உருவாக்கப்பட்ட சொல் மூலச்சொல் உணர்த்தும் பொருளையும் வீச்சையும் பெற்றிருக்க வேண்டும். நாம் தமிழில் இணையான சொல் கிடைக்காத போது பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம்.

கீழே குறிப்பிடப்படும் சூழல்களில் மட்டும் அயல் மொழிகளிலிருந்து சொற்களைப் பெற்றுக்கொள்வது என்ற நிலையை நாம் மேற்கொள்கிறோம்.

1. தமிழ்ச் சொல் இல்லாதபோதும்;

2.தமிழ்ச் சொல் மூலச் சொல்லின் பொருளை உணர்த்த இயலாத போதும்;

3. தமிழ்ச் சொல்லின் பயன்பாடு, பொருள் குழப்பத்தை ஏற்படுத்தும் போதும்;

4. பிறமொழியிலிருந்து எடுத்தாளப்பட்ட சொல்லை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்ச் சொல்லின் பயன்பாடு வழக்கில் நிலைபெறாத நிலையிலும்;

5. கலைச் சொற்கள் மொழியியலாரின் பெயரைக் குறித்த நிலையிலும்.

பொருட்குழப்பமும் கலைச் சொற்களும்

நாம் தரப்படுத்துகின்ற முயற்சியில் பொருத்த மற்ற பல்வேறு சொற்களை நீக்கியிருக்கிறோம். சொற்களை உருவாக்குவதுடன் ஒரே கருத்தை உணர்த்தக் கிடைக்கின்ற சொற்களுள் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுப்பதும் இவ்வாறு தேர்ந்

பலவற்றிற்கு ஒன்று என்ற நிலையில் உண்டாகும் குழப்பத்தை எவ்வாறு தவிர்ப்பது என்பது அடுத்து எழும் பிரச்சனை. சான்றாக மாற்றம் என்ற சொல் **Change** என்ற சொல்லுக்கும் Transformation என்ற சொல்லுக்கும் இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்றம் என்ற சொல் வரலாற்று அல்லது ஒப்பிட்டு மொழியியலில் வரும்போது Change என்ற சொல்லுக்குரிய பொருளைச் சுட்டும். உரைக் கட்டு(Discourse)வரலாற்று/ஒப்பிட்டு மொழியியலாக அமையும்போது இப்பொருளை நாம் தெளிவாகப் பெறலாம். உரைக்கட்டு தொடரியலாக அமையும் பொழுது மாற்றம் என்றசொல் Transformation என்ற சொல்லின் பொருளைச் சுட்டும். ஆகையால் உரைக் கட்டின் தன்மையின் மூலம் நாம் மூலச் சொல்லின் பொருளைப் பெறலாம். ஆகையால் பொருட் குழப்பத்தைத் தவிர்க்க மொழியின் எத்தகைய சாதனங்களைப் பயன்படுத்துகிறோம் என்பதைக் கலைச் சொற்களை நாம் தரப்படுத்தும்போது பார்ப்பது மிக முக்கியமானது.


நெறிமுறைகளும் சிக்கல்களும்

ஒரு மொழியைப் பல்வேறு துறைகளில் பயன்படுத்த முயற்சி செய்யும்போது நாம் முன்பே குறிப்பிட்டது போல அத்துறைக்கேற்ற மொழிநடையையும் வளர்க்க வேண்டும். சொல்வளத்தையும் பெருக்க வேண்டும். இவ்வாறு சொல் வளத்தை ஒரு மொழி வளர்க்க வேண்டுமானால் அது பல்வேறு வழிகளைக் கையாளவேண்டும். மேலோட்டமாகப் பார்க்கும்போது சொல் வளத்தைப் பெருக்குவதற்குரிய எளிய வழி அறிவியல் துறைகள் வளர்ந்த மொழிகளிலிருந்து சொற்களை நேரடியாகப் பெற்று நம் மொழியில் கையாளுதல். இவ்வாறு சொல்வளம் கூட்டுவதற்கு நாம் மொழியின் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது. இதற்கு அடுத்த நிலையில் வழக்கில் உள்ள சொற்களின் பொருண்மையின் வீச்சை விரிவுபடுத்துதல். நம்மொழியில் உள்ள சொற்களுக்கே புதுப் பொருளை ஏற்றுதல். இவ்விரண்டு முறைகளோடு மூன்றாவது முறையாக வட்டாரக் கிளைமொழிகளிலிருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல். எழுத்துமொழி இங்குத் தன்னுடைய பேச்சு வழக்குகளிலிருந்து சொற்களைப் பெறுகிறது. நான்காவது வழி நீண்ட இலக்கியப் பாரம்பரியமும் இலக்கணப் பாரம்பரியமும் உடைய மொழிகள் வேண்டிய கலைச்சொற்களைப் பழைய இலக்கியங்களிலிருந்தும் இலக்கணங்களிலிருந்தும் உருவாக்குதல். சான்றாக, நமமுடைய தமிழில உளள பழைய சங்க இலக்கியங்களிலிருந்தும் இலக்கணங்களிலிருந்தும் தேவையான சொற்களைப் பெறலாம். கலைச் சொற்களை உருவாக்கும்போது ஏதேனும் ஒரு முறையைத்தான் பின் பற்றவேண்டுமென்பதில்லை. இவற்றில் ஒன்றோ இரண்டோ முக்கியப்படுத்தப்படலாம். ஆனால் இந்நான்கு முறைகளுமே பின்பற்றப்பட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

கலைச்சொற்கள் புதியவாகப் படைக்கப்படுவதால் அவற்றின் முழுப்பொருளும் மொழிச் சூழலில் குறிப்பாக உரைக்கட்டின் பின்னணியில் புலப்படுத்தக் கூடிய தன்மையில் இருப்பின் சிறந்தது. பொருள் வெளிப்பாடு சொல்லிலோ சொல்லின் அமைப்பிலோ பொதிந்திருந்தால் சிறந்தது. கலைச் சொற்கள் வடிவில் சிறியதாகவும் இறுக்கமாகவும் இருத்தல் சிறந்தது என்று அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள். இவ்விரண்டும் முரண்படுகின்ற நிலைகளையும் நாம் சந்திக்கிறோம். இது போன்ற ஒரு குறிப்பிட்ட கலைச் சொல்லைப் பழைய இலக்கண நூல்களிலிருந்தும் பெறலாம். பேச்சு எழுத்துகளிலிருந்தும் சொல்லைப் பெறலாம். சான்றாக Possessive case என்ற கலைச்சொல்லுக்கு நம்முடைய பழைய இலக்கண மரபை ஒட்டிக் கிழமை வேற்றுமை என்ற சொல்லைக் கையாளலாம். இக்கால வழக்கை அடிப்படையாகக் கொண்டால் உடைமை வேற்றுமை என்பதைப் பயன்படுத்தலாம். பழைய மொழியிலிருந்து சொல்லை உருவாக்குவது என்ற நெறிமுறைக்கும் இக்கால மொழி வழக்கிலிருந்து சொல்லை உருவாக்குவது என்ற நெறிமுறைக்கும் முரண் ஏற்படுகிறது. பொருளை எளிதில் உணர்த்தல் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் உடைமை வேற்றுமை என்ற சொல்லைத் தேர்ந்தெடுக்கலாம். இவ்வாறு சொற்களை உருவாக்கும் போது பின்பற்றப் படுகின்ற பல்வேறு நெறிமுறைகள் தரப்படுத்தம் செய்யும் போது முரணாகத் தோன்றுகின்றன. இந்நெறிமுறைகளை முக்கியப்படுத்துதல் என்பதன் அடிப்படையில் தரப்படுத்தத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

நாம் முன்பே குறிப்பிட்டுள்ளது போல, துறைகளின் வளர்ச்சிக்கேற்பச் சொற்கள் நீக்கப்பட்டும் சேர்க்கப்பட்டும் தரப்படுத்தப்படுவதும் எதிர் காலத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் முறை. இது முடிந்த பணி அன்று;தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை.


தெடுக்கப்பட்டவைகளை மதிப்பீடு செய்வதும் தரப் படுத்தம் என்றசெயற் பாங்கின் முக்கிய அம்சங்கள். பயன்படுத்துகின்ற கலைச்சொற்களில் பொருட்குழப்பம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால் ஒரு சொல் ஒரு பொருளை மட்டும் குறிப்பதுதான் நல்லது என்று நாம் அனைவரும் நம்புகிறோம். மூலக்கலைச் சொல்லுக்கும் தமிழில் பயன்படுத்தும் கலைச் சொல்லுக்கும் உள்ள உறவு ஒன்றுக்கு ஒன்று என்ற நிலையில் அமைய வேண்டும். பொருட் குழப்பத்தைத் தவிர்த்துப் பொருள் தெளிவை உண்டாக்க இது தான் சிறந்த வழி என்று நாம் நினைக்கிறோம். X என்பது கலைச் சொல்லாகக் கருதப்பட்டு Y என்பதைத் தமிழில் இணையான சொல் என்று கருதினால் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பை நாம்




இவ்வாறு காட்டலாம். கீழே காட்டப்பட்டுள்ள பதிவுகள் இத்தகைய தொடர்பை நமக்குக் காட்டுகின்றன.


Phone	–	ஒலி
Phonene	–	ஒலியன்
Sentence	–	வாக்கியம்

இத்தகைய பதிவுகள் நிறையக் காணப்படினும் எல்லாப் பதிவுகளுக்கும் இது பொருந்தாது. Z என்ற கலைச்சொல்லுக்கு X என்ற இணையான தமிழ்ச் சொல்லோடு Y என்ற சொல்லையும் நாம் காண்கிறோம். இங்குக் காணும் தொடர்பு ஒன்றுக்கு ஒன்று அல்ல ; ஒன்றுக்குப் பல.




X , Y ஆகிய பதிவுகள் ஒன்றுக்குப் பல என்ற தொடர்பு வகையைச் சார்ந்தவை.





இதற்கு மறுதலையான தொடர்பு வகையையும் நாம் காண முடிகிறது. அதாவது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கலைச் சொற்களுக்கு ஒரே தமிழ்ச் சொல் வருவது. இங்குச் சுட்டப்படும் உறவு பலவற்றிற்கு ஒன்று என்று அமைகிறது.



ஒன்றுக்கு ஒன்று என்ற முறையிலான தொடர்பு குறிக்கோள் அளவில் வலியுறுத்தப்பட்டாலும் செயலளவில் அது முழுமையாக நிறைவேற்றப்பட இயலவில்லை. நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் மொழியின் தன்மையோடு ஒப்பிட்டு, பொருட்குழப்பம் எவ்வாறு தவிர்க்கப்படுகிறது அல்லது பொருட் குழப்பத்தைத் தவிர்க்க நம் மொழியில் எத்தகைய நிலைகளை மேற்கொள்கிறோம் என்பதை நாம் ஆராயலாம். ஒலியழுத்த வேறுபாட்டின் மூலமும் சொற்களைத் தொகுதிப்படுத்தும் (Grouping) முறையிலும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்களிருந்து புறஅமைப்பை வருவிப்பதின் மூலமும் பொருட்குழப்பத்தைத் தவிர்க்கிறோம். சொல்லையோ, வாக்கியத்தையோ சூழலின் பின் புலத்தோடு, இயைபுபடுத்தியும் பொருட்குழப்பத்தைத் தவிர்க்கிறோம். ஆகையால், மொழியில் பொருட் குழப்பம் ஏற்பட்டாலும் பொருள் தெளிவை உண்டாக்கக் கூடிய சாதனங்கள் நமக்கு மொழி அமைப்பில் கிடைக்கின்றன என்பது தெரிகிறது. அறிவியல் தமிழிலும் நாம் எத்தகைய சாதனங்களைப் பயன்படுத்திப் பொருள்தெளிவை உண்டாக்கலாம்.

ஒன்றுக்குப் பல என்ற நிலையை முதலில் காண்போம். Cerebralஎன்ற சொல்லுக்கு வளைநா என்ற சொல்லையும் தமிழில் இணையாகக் கொடுத்துள்ளோம். வளைநா என்ற சொல் ஒலியியலிலும் ஒலியனியலிலும் கையாளப்படுகிறது. அதே போன்று மூளைப்புறணி என்ற சொல் உளமொழியியலில் கையாளப்படுகிறது. வளைநா என்ற சொல்லுக்குப் பின்(ஒ) என்ற சுருக்கத்தையும் மூளைப்புறணி என்ற சொல்லுக்குப் பின் (உ,மொ.) என்ற சுருக்கத்தையும் கொடுத்தால் பொருட்குழப்பத்தைத் தவிர்க்கலாம். மொழியியல் கலைச்சொற்களைத் தமிழில் தரப்படுத்தும் போது இத்தகைய முறையை நாம் மேற்கொள்கிறோம்.

பலவற்றிற்கு ஒன்று என்ற நிலையில் உண்டாகும் குழப்பத்தை எவ்வாறு தவிர்ப்பது என்பது அடுத்து எழும் பிரச்சனை. சான்றாக மாற்றம் என்ற சொல் **Change** என்ற சொல்லுக்கும் Transformation என்ற சொல்லுக்கும் இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாற்றம் என்ற சொல் வரலாற்று அல்லது ஒப்பிட்டு மொழியியலில் வரும்போது Change என்ற சொல்லுக்குரிய பொருளைச் சுட்டும். உரைக் கட்டு(Discourse)வரலாற்று/ஒப்பிட்டு மொழியியலாக அமையும்போது இப்பொருளை நாம் தெளிவாகப் பெறலாம். உரைக்கட்டு தொடரியலாக அமையும் பொழுது மாற்றம் என்றசொல் Transformation என்ற சொல்லின் பொருளைச் சுட்டும். ஆகையால் உரைக் கட்டின் தன்மையின் மூலம் நாம் மூலச் சொல்லின் பொருளைப் பெறலாம். ஆகையால் பொருட் குழப்பத்தைத் தவிர்க்க மொழியின் எத்தகைய சாதனங்களைப் பயன்படுத்துகிறோம் என்பதைக் கலைச் சொற்களை நாம் தரப்படுத்தும்போது பாா்ப்பது மிக முக்கியமானது.

நெறிமுறைகளும் சிக்கல்களும்

ஒரு மொழியைப் பல்வேறு துறைகளில் பயன்படுத்த முயற்சி செய்யும்போது நாம் முன்பே குறிப்பிட்டது போல அத்துறைக்கேற்ற மொழிநடையையும் வளர்க்க வேண்டும். சொல்வளத்தையும் பெருக்க வேண்டும். இவ்வாறு சொல் வளத்தை ஒரு மொழி வளர்க்க வேண்டுமானால் அது பல்வேறு வழிகளைக் கையாளவேண்டும். மேலோட்டமாகப் பார்க்கும்போது சொல் வளத்தைப் பெருக்குவதற்குரிய எளிய வழி அறிவியல் துறைகள் வளர்ந்த மொழிகளிலிருந்து சொற்களை நேரடியாகப் பெற்று நம் மொழியில் கையாளுதல். இவ்வாறு சொல்வளம் கூட்டுவதற்கு நாம் மொழியின் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது. இதற்கு அடுத்த நிலையில் வழக்கில் உள்ள சொற்களின் பொருண்மையின் வீச்சை விரிவுபடுத்துதல். நம்மொழியில் உள்ள சொற்களுக்கே புதுப் பொருளை ஏற்றுதல். இவ்விரண்டு முறைகளோடு மூன்றாவது முறையாக வட்டாரக் கிளைமொழிகளிலிருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல். எழுத்துமொழி இங்குத் தன்னுடைய பேச்சு வழக்குகளிலிருந்து சொற்களைப் பெறுகிறது. நான்காவது வழி நீண்ட இலக்கியப் பாரம்பரியமும் இலக்கணப் பாரம்பரியமும் உடைய மொழிகள் வேண்டிய கலைச்சொற்களைப் பழைய இலக்கியங்களிலிருந்தும் இலக்கணங்களிலிருந்தும் உருவாக்குதல். சான்றாக, நம்முடைய தமிழில் உள்ள பழைய சங்க இலக்கியங்களிலிருந்தும் இலக்கணங்களிலிருந்தும் தேவையான சொற்களைப் பெறலாம். கலைச் சொற்களை உருவாக்கும்போது ஏதேனும் ஒரு முறையைத்தான் பின் பற்றவேண்டுமென்பதில்லை. இவற்றில் ஒன்றோ இரண்டோ முக்கியப்படுத்தப்படலாம். ஆனால் இந்நான்கு முறைகளுமே பின்பற்றப்பட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

கலைச்சொற்கள் புதியவாகப் படைக்கப்படுவதால் அவற்றின் முழுப்பொருளும் மொழிச் சூழலில் குறிப்பாக உரைக்கட்டின் பின்னணியில் புலப்படுத்தக் கூடிய தன்மையில் இருப்பின் சிறந்தது. பொருள் வெளிப்பாடு சொல்லிலோ சொல்லின் அமைப்பிலோ பொதிந்திருந்தால் சிறந்தது. கலைச் சொற்கள் வடிவில் சிறியதாகவும் இறுக்கமாகவும் இருத்தல் சிறந்தது என்று அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள். இவ்விரண்டும் முரண்படுகின்ற நிலைகளையும் நாம் சந்திக்கிறோம். இது போன்ற ஒரு குறிப்பிட்ட கலைச் சொல்லைப் பழைய இலக்கண நூல்களிலிருந்தும் பெறலாம். பேச்சு எழுத்துகளிலிருந்தும் சொல்லைப் பெறலாம். சான்றாக Possessive case என்ற கலைச்சொல்லுக்கு நம்முடைய பழைய இலக்கண மரபை ஒட்டிக் கிழமை வேற்றுமை என்ற சொல்லைக் கையாளலாம். இக்கால வழக்கை அடிப்படையாகக் கொண்டால் உடைமை வேற்றுமை என்பதைப் பயன்படுத்தலாம். பழைய மொழியிலிருந்து சொல்லை உருவாக்குவது என்ற நெறிமுறைக்கும் இக்கால மொழி வழக்கிலிருந்து சொல்லை உருவாக்குவது என்ற நெறிமுறைக்கும் முரண் ஏற்படுகிறது. பொருளை எளிதில் உணர்த்தல் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் உடைமை வேற்றுமை என்ற சொல்லைத் தேர்ந்தெடுக்கலாம். இவ்வாறு சொற்களை உருவாக்கும் போது பின்பற்றப் படுகின்ற பல்வேறு நெறிமுறைகள் தரப்படுத்தம் செய்யும் போது முரணாகத் தோன்றுகின்றன. இந்நெறிமுறைகளை முக்கியப்படுத்துதல் என்பதன் அடிப்படையில் தரப்படுத்தத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

நாம் முன்பே குறிப்பிட்டுள்ளது போல, துறைகளின் வளர்ச்சிக்கேற்பச் சொற்கள் நீக்கப்பட்டும் சேர்க்கப்பட்டும் தரப்படுத்தப்படுவதும் எதிர் காலத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல் முறை. இது முடிந்த பணி அன்று;தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை.

நோக்கீடுகள்

1. சண்முகம் , செ.வை (1987) 'தமிழில் கலைச் சொல்லாக்க நெறிமுறைகள் : ஒரு வரலாறு அளவீடு' அறிவியல் தமிழ் அமைப்புக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. சுந்தரம், இராம (1983) 'தமிழில் கலைச்சொல்லாக்க முயற்சிகள்' தமிழ்க்கலை 1.1 பக். 84–96.

3. ...... (1984) 'தமிழ் வளர்ச்சி–கலைச்சொல்லாக்கப் பணிகள்' தமிழ்க்கலை 2 – 4, பக். 55–69.

4. Rangan,k and chandra sekharan,G (1995), A Glossary of standardized Technicel Terms in Linguistics, Tamil University: Thanjavur, Thirumalai, M.S (1979) Language in science, Geetha Book House : Mysore.

தனியரங்கில் புலவரேறு

- இரா. இளங்குமரன்


மோராய்ச்சி கடைவதுபோல் மூலையிலே இருந்தோமை
ஆராய்ச்சி செய்யவென அவைகூட்டி அரங்கேற்றி
சீராய்ச் சிறந்தொளிரச் செந்தமிழை வாழ்வித்த
காவியச் சிறந்தானின் கடப்பாடு பெரிதன்றே.

வடநூல் வழக்கிலிருந்து மாறுபடுபவர் திருவள்ளுவர்;
அவற்றைத் தெளிவுறுத்துபவர் உரையாசிரியர் பரிமேலழகர்

உரையாசிரியர் என்ற முறையில் பரிமேலழகர் மேல் கூறப்பெறும் ஒரு பெரிய குற்றச்சாட்டு அவர் திருக்குறளை, வடநூல் வழக்கையும்,வேத நெறியையும் அடிப்படையாக வைத்துப் பார்க்கிறார் என்பதே. ஆனால் அவர் உரையைக் கற்கும் போது இக்கருத்து மறுபார்வை செய்யப்படவேண்டியதென்பது புலனாகும். வடநூல் வழக்கிலிருந்து வள்ளுவர் மாறுபடும் போதெல்லாம் அதனைச் சுட்டும் பரிமேலழகர் வள்ளுவர் வழியே தக்கதென்று வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ தெரிவிக்கிறார்.

பரிமேலழகர், திருக்குறள் உரையில் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், நெடுநல்வாடை, சிறுபாணாற்றுப்படை, முத்தொள்ளாயிரம், வளையாபதி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, நாலடியார், நான்மணிக்கடிகை, புறப்பொருள்வெண்பாமாலை, திரிகடுகம், திருச்சிற்றம்பலக்கோவை, திருவாய்மொழி போன்ற தமிழ் இலக்கியங் களிலிருந்தெல்லாம் மீண்டும் மீண்டும் மேற்கோள் தரும் பரிமேலழகர் ஒரிடத்திலேனும் மனு உள்ளிட்ட வடநூல் எதிலிருந்தும் ஒருவரியேனும் மேற்கோளாகத் தரவில்லையென்பது நாம் கருத்தில் இருத்த வேண்டிய வியப்புக்குரிய செய்தியாகும்.

செந்தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மொழியாக்கம்



முனைவர். க. செல்லப்பன்,
சென்னை.

உலக நாகரிகங்களில் சில, மதங்களை மையமாகக் கொண்டு உருவானவை. சில, இனங்களை மையமாகக் கொண்டு உருவானவை. ஒரு சிலவே மொழியை மைய மாகக் கொண்டு உருவானவை. தமிழ் நாகரிகமும் அப்படிப்பட்ட ஒரு மொழி முதல் நாகரிகம். ஆங்கில்ஸ் 'Angels' என்ற இனப்பெயரிலிருந்து 'English' என்ற மொழிப் பெயரும் 'Frank' என்ற இனப்பெயரிலிருந்து 'French' என்ற மொழிப்பெயரும் வந்தன. ஆனால் தமிழ் என்ற மொழிப்பெயரிலிருந்துதான் தமிழன் என்ற இனப்பெயரும் தமிழ்நாடு என்ற நாட்டின் பெயரும் வருகின்றன. தமிழிலிருந்துதான் தமிழன், தமிழ்நாடு, தமிழ்மொழி. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றியதோ என்னவோ, மனித இனம் முதன்முதலில் பேசிய மொழிகளில் ஒன்று என்பதுவும், இது பன்னெடுங்காலத்துக்கு முன்பே செம்மை பெற்ற மொழியாக, செவ்விலக்கியங்களையும் பெற்ற மொழியாக இருந்தது என்பதுவும் உலகொப்பிய உண்மை. செந்தமிழ் என்ற சொல்லே இதற்குச் சாட்சி. மொழிக்கும், இலக்கியத்துக்கும் வாழ்வுக்கும் இலக்கணமான தொல்காப்பியமும் இக்கருத்துக்கு வலுவூட்டும் சான்றாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியத்துக்கு இலக்கணம் எழுந்த மொழியென்றால், அப்போதே இலக்கியங்கள் பண்பட்டுச் செம்மை பெற்றிருந்தன என்பதுதான் பொருள். 'Classical' என்றால் 'தொன்மையான' என்பது மட்டுமல்ல, "உயிர்ப்புள்ள, நிலைத்தன்மையுள்ள" என்றும் பொருள். செம்மொழிப் பட்டியல் செத்த மொழிகளின் பட்டியல் எனக்கூறி இதனைக் கொச்சைப்படுத்த முயல்பவர்கள், இதனை உணரவேண்டும். சங்க இலக்கியங்களும், திருக்குறளும், சிலம்பும் செவ்விலக்கியங்கள் என்றால் அவை ஒரு பண்பட்ட, முதிர்ச்சியடைந்த இலக்கியப் பாரம்பரியத்தின் வெளிப்பாடு என்று பொருள். ஆனால் அவற்றின் பெருமை காலம் சம்பந்தப்பட்டது மட்டுமன்று; அவை காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலைப் பெற்றிருப் பதாலும்தான். தொன்மையும், உயிர்ப்பாற்றலும், நீண்ட பாரம்பரியமும், இன்றும், இனியும் நிலைத்து நிற்கும் ஆற்றலும், ஒரு சேரப் பெற்றதுதான் செவ்விலக்கியம். இது கிரேக்க ரோமச் செவ்விலக்கியங்களை விடத் தமிழ் இலக்கியத்திற்குப் பொருந்தும். ஏனென்றால் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் வெறும் வீரயுகத்தைச் சார்ந்தவை அல்ல. புதுயுகத்தின், இன்றைக்கும் என்றைக்கும் பொருந்தும் மனித விழுமியங்களின் வெளிப்பாடு.

அவற்றின் உயிர்ப்பாற்றலுக்கு இன்னொரு அடையாளம், அவை காலந்தோறும், இட எல்லைகளைத் தாண்டி மொழியாக்கம் செய்யப்படும் தகுதியைப் பெற்றிருப்பது தான். இலக்கியங்களுக்கு உயிர்ப்பாற்றலும், செம்மாந்த நிலையும் இருந்தால்தான் அவை மொழிபெயர்க்கப் படுகின்றன ("A work of Literature must have vitality and dignity to be translated") என்பர். திருக்குறளின் பெருமைக்கு ஒரு சான்று, அது பல்வேறு மொழிகளில் பலமுறை மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதுதான். 'திறமையான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கூற்றுக்கேற்பத் திருக்குறளின் புலமைக்கு உலகப் பேரறிஞர்கள் வணக்கம் செலுத்தியிருக்கிறார்கள். அதைத் தங்கள் மொழிகளில் மொழி பெயர்ப்பதன் மூலம் உலகப் பொது நெறியை வகுக்கிறார்கள். உலகப் பொது உடைமையாகும் திருக்குறள் ஒரு உலகப் பொது உள்ளத்தின் வேட்கையை வெளிப்படுத்துகிறது. ஆனால்,

அதில் வாழ்க்கையின் ஆயிரம் வண்ணங்களும் அடங்கியிருக்கின்றன. அதன் குறுகிய வடிவினிலே ஒளிந்திருக்கும் கீழ்ப்பிரதிகளை (hidden subtexts) ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளனும் தனது புரிதலுக்கேற்ப மறு படைப்புச் செய்கிறான். அப்படிச் செய்யும்போது திருக்குறளின் எல்லையற்றபொருள் விரிவாக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். கவிதை அர்த்தத்தைத் சுமந்து கொண்டிருக்கிறது என்பதை விட அர்த்தத்தை தேடித் தவம்செய்கிறது என்பதுதான் உண்மை. ஏனென்றால் அர்த்தம் ஓர் உற்பத்திப்பொருள் அன்று; தொடர் நிகழ்வு (not a product but a process).

திருக்குறளை ஜி.யு. போப் முதல் பல வெளி நாட்டவர்கள் சிறப்பாக மொழி பெயர்த்துள்ளார்கள். ஆனாலும் திருக்குறளின் உண்மையான முழுமையான பரிமாணத்தைத் தமிழர்களே இன்னும் புரிந்துகொள்ளவில்லை. தொடுவானம் போல் திருக்குறள் தொடர்ந்து விரிவடைந்து கொண்டுதான் வருகிறது. பண்பாட்டுச் சிக்கல், மொழியியல் சிக்கல், நடையியல் சிக்கல் எனப் பலவற்றை எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் சந்தித்திருக்கிறார்கள். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற குறள் " None can swim the great sea of birth but those who are united to the feet of god" என்று ஜி.யு. போப்பும்," Who then can swim the wide earthly sea? Not they who cling not to our Lord's feet" என்று போப்லியும் மொழி பெயர்க்கின்றனர். 'பிறவிப் பெருங்கடலை' போப்தான் சரியாக மாற்றம் செய்திருப்பது போலிருக்கிறது. ஆனால் 'நீந்தார் இறைவனடி சேராதாரில்' உள்ள எதிர்மறைப் பண்பைப் போப்லியின் மொழியாக்கத்தில்தான் பார்க்கமுடிகிறது. ஆனால் இருவருமே இதன் ஆக்கப்பூர்வத் தொடக்கத்தை (பிறவிப் பெருங்கடல் நீந்துவர்) மறந்துவிட்டனர். மூலத்தின் முன்பகுதியில் எழுவாய் ஒளிந்திருக்கிறது.

எனவே இதை ஆங்கிலத்தில் Passive அமைப்பில் உருவாக்குவதுதான் பொருந்தும். 'The ocean of birth can be traversed but not by those who have not reached the feet of god'. இப்படி எத்தனையோ உள்ளன. ஒழுக்கம், குடிமை இவற்றிற்கெல்லாம் ஈடான சொற்களை இன்னும் நாம் காணவில்லை. ஆனால் மொழியாக்கத்தில் இழப்பு மாத்திரம் இல்லை, அர்த்த வளர்ச்சியும் உண்டு. ஒரு மூலத்தின் பின்வாழ்வான (After Life) மொழியாக்கத்தின் வழி, மூலத்திற்கும் மூலமான மூல மொழியொன்றை, அதன் அர்த்தப் பான்மையினை ஓரளவு உணர்ந்து கொள்ளமுடியும். ப்ளாஞ்சட் என்பவரின் கருத்துப்படி, 'A work has the maturity and dignity to be translated only if it harbours the difference somehow made renderable'. சங்க இலக்கியங்களை மொழியாக்கம் செய்பவர்கள் இத்தகைய சங்கடங்களை, சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சங்கப் பாடலின் எளிமை, குறுகிய வடிவம், செறிவான, ஆனால் இயல்பான உவமைகள் இவற்றை, வேறுபட்ட வாழ்க்கை முறைகளைப் பேசும் மொழிகளில் எப்படிக் கொண்டுவருவது ?

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆய் அலன், பிறரும் சான்றோர் சென்றநெறியென ஆங்குப்பட்டன்று அவன் கைவண்மையே' என்ற ஆய்அண்டிரன் பற்றிய புறநானூற்றுப் பாடலைப் மொழிபெயர்க்க முயலும்போது மலைத்துப்போனேன். குறிப்பாக முதல் இரண்டு வரிகளையும், 'Aai is not a tradesman in morality who invests here and now in order to benefit in the hereafter' என்ற என் மொழியாக்கம் எனக்கு இன்னும் நிறைவுதரவில்லை.

அகப்பாடல்களை மொழியாக்கம் செய்யும் போது உள்ளுறை, இறைச்சி போன்ற தமிழ்க் கவிதைப் பண்புகளால் சிக்கல் மேலும் கூடுகிறது. எடுத்துக்காட்டாக "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல் இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை, எல்லி வருநர் களவிற்கு நல்லை அல்லை நெடுவெண்நிலவே" என்ற குறுந்தொகைப் பாடலில் வரும் களவை 'as he comes stealing through the night in the forest' என்று A.K. ராமானுஜமும், Where he comes at night to do what he should not என்று G.L.ஹார்ட்டும் மொழி பெயர்க்கின்றனர். இரு சிறந்த மொழி பெயர்ப்பாளர்களும் களவின் தொனியைச் சரியாகக் காட்டவில்லை. அதைவிட,வேங்கைப்பூ எப்படித் திருமணத்தை நினைவு படுத்துகிறது என்பதும் மொழியாக்கத்தில் வரவில்லை.

'எது மொழியாக்கத்தில் இழக்கப்படுகிறதோ அதுதான் கவிதை' என்பார் அமெரிக்கக் கவிஞர் ப்ராஸ்ட். ஆனால் நல்ல மொழியாக்கம் ஓரளவு மூலத்தின் உணர்வை மாற்றுவடிவில் தரமுடியும். இறுதியாக, 'யாயும் ஞாயும்' என்ற பாடலை மொழியாக்கம் செய்ய முயல்வோம்.

“யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே”

என்ற இப்பாடலின் ஆங்கில மொழியாக்கம் உலகத்தில் மிகச்சிறந்த பாடல்களில் ஒன்றாக லண்டன் சுரங்கப்பாதையில் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் இரண்டு உள்ளங்கள் இணைதலை, மிக எளிமையான அடிப்படை உறவுச் சொற்கள் மூலம் முதலில் உணர்த்துகிற யாய்/ஞாய், எந்தை நுந்தையில் உள்ள எதுகை இறுதிவரை வருகிறது. அது வேற்றுமையில் ஒற்றுமையை உணர்த்துவதாக உள்ளது. மேலும் இரண்டு உள்ளங்களும் எந்தத் துணையுமின்றி வெறும் 'யானும் நீயுமாக' இணைந்தது அடைமொழிகளில் காட்டப்பட்டுள்ளது. இறுதியில் இந்த இயற்கையான மனிதச் சங்கமம் இயற்கைச் சங்கமத்தால் விளக்கப்பட்டது. இதை ஏ.கே.இராமனுஜம் போன்றோர் ஓரளவு மொழி பெயர்ப்பால் காட்டியுள்ளனர். ஆனால் இறுதி உவமையால் உள்ளம் ஒன்றிய தன்மையை மொழியாக்கம் கொணர முடியவில்லை என்று சொல்லும் போது மூலத்தின் முழுமை, இரண்டும் இரண்டறக் கலந்த தன்மையைக் காணமுடியவில்லை. உலக இலக்கியங் களிலே ஒரு சிறிய உவமையால், தன் நாமம் கெட்டு அந்த உவமையையே பெயராகப் பெற்று இவ்வளவு காலம் வாழும் ஒரே கவிஞன் செம்புலப் பெயல்நீரார்தான். அந்த உவமையின் முழுமையான கவித்தன்மையைப் பெயர்ப்பது இன்னும் இயலவில்லை.

இந்த உவமையே, மொழியாக்கத்தில் பண்பையும், சுட்டுவதாக உள்ளது. எங்கோ பிறந்த இருவர் காதலால் இணைவதுபோல், வான் மழையும் மண்ணும் இயற்கையின் இயக்கத்தால் இரண்டறக் கலப்பதுபோல் எங்கெங்கோ எழுதப்பட்ட கவிதை இன்னொரு மண்ணில் மொழியில் இணைகின்ற விந்தையும் நிகழ்கிறது. இம்முயற்சி வெற்றி பெற இரு மொழியாளரும் இணைந்து பணியாற்ற வேண்டும். அப்போது இரண்டு மொழிகளும் இணைந்த ஒரு மூன்றாம் மொழி உருவாவ தாகக் கூறுகிறார்கள்.

மொழியாக்கம் செய்யும்போது மூலமும் புதிய பரிமாணம் பெறுகிறது. இந்தப் பரிமாண விரிவாக்கத்தைத் தமிழர்கள் மட்டும் தனித்துச் செய்யமுடியாது. உலகோடு இணைந்து செய்ய ஒரு உயர்நிலை மொழியாக்க மையம் நிறுவப்பட வேண்டும். யுனெஸ்கோ போன்ற அமைப்புகளின் அங்கீகாரமும் உதவியும் நாடப் படவேண்டும். முதல் நிலையில் திருக்குறள், சங்க இலக்கியம், சிலம்பு போன்ற இலக்கியங்களின் பல்வேறு மொழியாக்கங்களின் ஒப்பீட்டுப் பதிப்புகளை (Variorum editions) வெளிக்கொணரவேண்டும். 'தாயெழிற்றமிழை என்றன் தமிழரின் கவிதை தன்னை, ஆயிரம் மொழியிற்காண இப்புவி அவாவிற்றென்ற தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து பாயு நாள் எந்நாளோ? ஆரிதைப் பகர்வார்இங்கே?' எனப் பாவேந்தர் ஏக்கத்தோடும் எக்காளத்தோடும் கேட்டார். எத்தனை பெரிய ஆசை, அவருக்கு! அந்தப் பொய் சொல்லாப் புரட்சிக் கவிஞனின் கூற்றை நனவாக்கும் நாள் விரைவில் வரும் என நம்புவோமாக. . .

இலக்கணம் மரபா? நடைமுறையா?



முனைவர்.க. வெள்ளிமலை,
கோவை.

பிழையின்றிப் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படுவது இலக்கணம். பிள்ளைப் பருவத்தில் நாம் கற்ற பள்ளிப்பாடம் இது. இங்ஙனம், படித்தபின்பும் நம் பேச்சில்–எழுத்தில் அடுக்கடுக்காகப் பிழைகளை அள்ளித் தெளிக்கிறோம். ஏன்? தேனினும் இனிய தமிழின் சுவையைச் சிதைக்கிறோம்! ஆம்! மொழி வளர்ச்சி குறித்து நாளும் வாய் வலிக்கப் பேசுகிறோம்! அதிலொன்றும் குறையில்லை! ஆனால், மொழிக்கு ஊறு விளைவது குறித்து இம்மியளவும் யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை! பெருகிவரும் இப்பிழைகள் தள்ளத்தக்கனவும், உரிமம் வழங்கிக் கொள்ளத் தக்கனவுமாக உள்ளன. இவ்விரண்டும் நடைமுறை யிலக்கணமாகப் பயின்று வருகின்றன. இது குறித்துச் சிந்திப்பதே இக்கட்டுரை!

இலக்கண வளர்ச்சி

வாழும் மனிதனின் நடைஉடை பழக்க வழக்கங்கள் மாறுவனபோல அவன் பேசும் மொழியும் மாற்றம் பெறுவது இயல்பே. காலப் போக்கில் மாறிவரும் அம்மாற்றத்தை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது. ஏனென்றால், முன்னைப் பழமையான சொற்கள் எத்து னையோ இன்று வழக்கில் இல்லை! அவ்வாறே, முன்னர்ப் பழக்கத்தில் இல்லாத புதுமைச் சொற்கள் பல இன்று நடைமுறையில் களிநடம் புரியத்தான் செய்கின்றன. அழன், புழன், அதோளி, இதோளி, அவ்வாண்டை, இவ்வாண்டை போன்ற சொற்கள் இன்றைய மாந்தர் நாவிலே நுழையவில்லை. ஏன்? கற்றவர்தம் இலக்கியங்களிலும் ஏறவில்லை! மாறாக, வேட்பு, இணையம், கணிப்பொறி, சொற்பொழிவு, அறிவிக்கை, கோப்பு, செயலகம், பனிப்போர், குறுந்தகடு, வானொலி போன்ற எண்ணற்ற சொற்கள் இன்று புழக்கத்தில் வந்து விட்டன. இம்மாற்றம் உணர்ந்தே 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' என்றும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்றும் இலக்கண நூலார் சொல்லி வைத்தனர். மாற்றம் தவிர்க்க முடியாது என்பதனைச் சில சான்றுகளால் காணலாம்!

1. சகர மெய் அகரத்தோடு சேர்ந்து மொழி முதல் வராது என்பது தொல்காப்பியம். ஆனால், பின் வந்த நன்னூல் 'கசதந பமவய ஞங ஈரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்' என்று மொழிமுதல் உயிர் மெய்களுள் சகரத்தையும் சேர்த்துள்ளது. 'பன்னீ ருயிரொடும் கசதந பம வரும்' என்று முத்துவீரியமும் நன்னூலையே அடியொற்றிச் செல்கிறது;

2. 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்' என்று அளபெடை குறித்துப் பொதுவாகத் தொல்காப்பியம் கூறியிருக்க, நன்னூல் உயிரளபெடை, ஒற்றளபெடையென வகையும் விரியும் பாரித்துரைக்க, முத்து வீரியமோ அளபெடையின் எட்டு வகைகளை விரித்துரைக்கிறது.

3. 'சார்ந்து வரல் மரபின் மூன்று' எனச் சார்பெழுத்தின் வகையை ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் சுருங்க வுரைத்தார். நன்னூலாரோ அச் சார்பெழுத்து பத்துவகையென்றும், அதன் விரி ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்றும் குறித்தார்.

4. 'நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி' என்னும் குறியீடுகள் நன்னூல் முதலான பின்னூல்களில் நிலைமொழி வருமொழிகளென ஆட்சி பெற்றன.

5. ஆகுபெயர் ஒன்பது என்பது தொல்காப்பியம்; அதுவே நன்னூலில் இருபதாகப் பெருகியுள்ளது.

6. வினையெச்ச விகுதியென்று எதையும் தொல்காப்பியர் சுட்டாதிருக்க, நன்னூலார் சில விகுதிகளைத் தூவியுள்ளார். ஆனால், காண்டிகையுரையில் ஆறுமுகநாவலரோ நடைமுறைவழக்கை நினைந்து உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம், மை, மல், மே என வரும் 28 விகுதிகளைச் சுட்டி அவை இணைந்த காட்டுகளையும் கூறியுள்ளார்.

7. முன்னிலை அசைச்சொல் 'மியா' முதலாக ஆறு என (மியா இகமோ மதி இகும் சின்) வகுத்தார் தொல்காப்பியர். ஆனால், அதனைப் பத்தாக விரித்துரைத்தார் பவணந்தியார்.

8. தலையை இடமாகக் கொண்டு எந்த எழுத்தும் பிறப்பதில்லை என்பர் ஆய்வாளர். ஆனால், 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும்' என்று தலையைப் பேச்சுறுப்பாகத் தொல்காப்பியமும், 'ஆய்தத்துக்கு இடம் தலை' என்று நன்னூலும், 'உச்சி மெலியிடமாம்' என்று முத்துவீரியமும் முரண்படப் பகர்கின்றன.

இங்ஙனம், தொல்காப்பியரும், நன்னூலாரும், அவர்களைத் தழுவி இலக்கணம் வகுத்தவர்களும் இலக்கண மாற்றத்தைப் புலப்படுத்தியுள்ளமை இச்சான்றுகளால் தெளிவுறுகிறது.

மாற்றம் தேவையா?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்ததமிழ் இன்னும் சீரிளமைத் திறத்துடன் பொலிவுறுவதற்கு அதன் தனிச் செம்மையே அடிப்படை எனலாம். அச்செம்மையைத்–தனித் தன்மையை இன்றும் நிலைபெறச் செய்வது அதன் ல கட்டுப்பாடும் விதிமுறைகளுமேயாம். ஆம்! இ க்கியங்களில்– பேச்சிலே மொழியின் இயல்பைத்–தனிச் சிறப்பை உணர்த்தி வருவது இம் மொழியின் இலக்கணமே! நம் முன்னோர் எங்ஙனம் இலக்கியங்களைப் படைத்தார்கள் என்பதைப் புலப்படுத்துவது மட்டுமன்று; பின்னர் வரும் அறிவு நலம் கனிந்த புலவர் முதலான சான்றோர்களுக்கு வழிகாட்டுதலாகவும் அமைந்தது–அமைவது இவ்விலக்கணமேயாகும். இந்த இலக்கணத்தின் வாயிலாகத்தான் மக்கள் பேசும் மொழி, நாகரிகம், பண்பாடு குறித்து அறிய இயலும்! ஏனென்றால், மனிதன் பேசும் பேச்சினை–எழுதும் எழுத்தைப் புரிந்து கொள்ளத் துணைநிற்பது மொழி. அம்மொழிக்கு உயிர் மூச்சாக இருப்பது இலக்கணமே! அதுவே மொழி சிதையாமல்– கட்டுக் கோப்புக் குலையாமல் காத்துவருகிறது என்பது உணரத் தக்கது. தமிழ்மொழியின் இலக்கணம் காலப் போக்கில் ஓரளவு மாற்றம் பெற்றுள்ளது உண்மையே. இந்த மாற்றம் இயல்பானதுதான். ஆம்! பழையன கழிதலும் புதியன புகுதலும் வரவேற்கத்தக்கனவே! அனால், புதிய சொற்கள் என்ற போர்வையில் இலக்கண விதிமுறைகளுக்கு மாறாகப் புகுத்தக்கூடாது!

இலக்கணத்தில் எளிமை

இவ் இலக்கண மாற்றத்தால் மொழி எளிமையாகக் கையாளப்படுகிறது.

நான் வந்தேனல்லேன் நாம் வந்தோமல்லோம்	தன்மை	இலக்கண வழி
நீ வந்தாயல்லை நீர்/ நீங்கள் வந்தீரல்லீர்	முன்னிலை	
அவன் வந்தானல்லன் அவள் வந்தாளல்லள் அவர் வந்தாரல்லர் அது வந்திலது அவை வந்தில	படர்க்கை	

இவ்வினைச்சொற்கள் யாவும் இடம், பால்களுக்கு ஏற்ப வேறுபட்டுப் பயனிலைகளாக அமைந்துள்ளன. ஆனால் இன்று இவ் வினைமுடிபுகள் மாறுபட்டு எளிமைப்பட்டுள்ளமை காணலாம்.

நான், நாம், நீ, நீங்கள், அவன், அவள், அவர், அது, அவை	வரவில்லை	இன்றைய நிலை

இங்கு, மூவிட எழுவாயும் ஒரே வினைச் சொல்லைப் பயனிலையாகக் கொண்டுள்ளன. இதனால் பெருமுயற்சியும் இடர்ப்பாடும் குறைந்துவிட்டன எனலாம்.

மாற்றமும் மாற்றியவரும்

இங்ஙனம், காலப்போக்கில் மொழியிலக்கணம் மாறுவதற்கு அடிப்படைதான் என்ன? சிந்திப்பின் உண்மை விளங்கும். இதற்கு ஒருவர், இருவர் காரணர்

இல்லை; இச்சமுதாயமே அதற்குப் பொறுப்பு என்பதை உணர முடியும்.

1. படித்தவர்தம் பேச்சிலும், எழுத்திலும் ஏற்பட்ட சில மாற்றங்கள்.

2. பாமரர்தம் பேச்சிலே அவர்களையும் அறியாமல் அமையும் சில மாற்றங்கள்.

3. செய்தி இதழ்கள், வானொலி, தொலைக்காட்சிகள் செய்யும் மாற்றங்கள்.

4. மாணவர்தம் கட்டுரைகள், படைப்பாளர்தம் படைப்புகள்.

5. கற்றுவல்ல புலவர் வலியுறுத்தும் வேறுபாடுகள்.

6. திரைப்படத் துறையில் புகுத்தும் மாற்றங்கள்.

7. விளம்பரங்களில் வெளிப்படுத்தும் தொடர் மாற்றங்கள்

இன்ன வண்ணம், ஒரு மொழியில் ஏற்படும் மாற்றம் மேற்குறித்த நிலைகளில் அமைவதை உணரமுடிகிறது. இவ்வாறு அமையும் மாற்றங்கள் அனைத்தும் மொழியாம் கழனியைக் காக்கும் வரப்பென உறுதியாகக் கூறமுடியாது. இவற்றுள் மொழி மரபுகளுக்குப் பொருந்தாதனவும் இடம் பெற்றுள்ளன. இருப்பினும், மாற்றத்தை வரவேற்க வேண்டியது மொழி வளர்ச்சிக்கு ஏற்றதெனக் கொள்ளல் தகும். அதற்காக அனைத்து மாற்றங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஏனென்றால் தமிழ்மொழியின் செழுமையைக் கருத்திற் கொண்டு மாற்றம் செய்திருப்பின் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தடையிருக்க முடியாது. ஆனால், முயற்சிச் சுருக்கத்தால் – சோம்பலால் – உணர்ச்சிப் பெருக்கால் - படிப்புச் செருக்கால்– புதுமை நாட்டத்தால் – இலக்கண அறிவின்மையால் புகுத்தப்பட்ட மாற்றங்களை ஏற்றுக் கொள்ள இயலுமோ?

தள்ளத்தக்க மாற்றங்கள்

ஆண்பாலுக்கு எதிர்சொல்லாக (கவிஞன்) கவிஞி, (இளைஞன்) இளைஞி, (துறவி) துறத்தி, (தொகுப்பாளன்) தொகுப்பாளினி, (புலவன்) புலவி (பொருளே வேறு), (பேச்சாளன்) பேச்சாளினி என்று வழங்கிவருவதை ஏற்கலாமா? . . . இவ்வாறே, மனங்கள், உப்புக்கள், எண்ணெய்கள், கடைபிடி, கிணர், இரங்கசாமி, உலோகநாயகி, பத்திரிக்கை, கட்டிடம், கருவேப்பிலை கோர்வை, சிறுவாடு, தேனிர், மேன்பட, தட்பவெட்பநிலை, புடைவை, ஒருக்கால், (கொம்பன்) கொம்பி, (வம்பன்) வம்பி, திருநிறைச் செல்வி, அருகாமை, ஏமாற்றுத்தனம், ஐய்யர், பயனுற்றுள, கணவன்மார் போன்ற எண்ணற்றசொற்கள் புழக்கத்தில் உள்ளன. இத்தகைய இலக்கண வரம்புக்கு மாறான சொற்களைப் படித்தவரே பயன்படுத்துவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்! இம்முயற்சி தமிழ் வளர்ச்சிக்கு எவ்வகையில் துணை செய்யும்?

'ஒருவன்' இருக்க 'ஒருத்தன்' ஏன் புக வேண்டும்? 'அதேபோல ஒருத்திக்கு' எதிராக 'ஒருவள்' நுழைவது வேண்டியதுதானா? படிக்காதவர் இன்றும் 'ஒருவன்' 'ஒருத்தி' என்றுதானே சொல்கிறார்கள்! அவ்வாறே உயர்ச்சி, தளர்ச்சி, அயர்ச்சி, வளர்ச்சி என்ற வகையில் ('சி' விகுதித் தொழிற்பெயர்கள்) வழங்கி வருவது முயற்சி. இச்சொல்லில் 'முயல்' என்பது பகுதி. (கேள்வி முயல்). வினைச் சொல்லாகப் பயன்படுத்தும்போது 'முயன்றான்' என்று அமையும். அதை விடுத்து 'முயற்சித்தான்' என்று வலிந்து சொல்வது எதற்காக?

விகாரப்பட்ட 'ஒரு' என்னும் முற்றுகர எண்ணுப் பெயர்முன் 'கால்' என்ற சொல் வருமொழியில் வந்து புணரும்போது இயல்பாக வேண்டுமென்பது இலக்கண விதி. ஆனால், 'ஒருக்கால்' என்று வலிந்து மொழிவதை எங்ஙனம் ஏற்கமுடியும்?

கட்டடமா, கட்டிடமா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறோம்! பாமர மக்கள் அறிந்தது 'கட்டடம்' தான்! கட்டு+அடம் எனப் பிரித்துக் காணலாமே! அடமு அல்லது அடம் என்னும் தெலுங்குத் தொழிற்பெயர் விகுதி செயப்படுபொருளை அல்லது செயலின் பயனைக் குறிக்கப் பயன்படுத்தப் பெறுகிறது. அவ்வாறு அமைந்தனவே 'தாழ்வடம்', 'கரவடம்' போன்ற சொற்கள். இவற்றை அறிந்தபின்பும் 'கட்டிட' த்தை ஆள்வது முறையா?

ஏற்கத்தக்க புதியன

1. சொற்களில் இசை அதாவது இனிய ஒசை அமையவேண்டும். அதனை, அதனால். அவற்றை, மரத்தை என இனிமைப்பட வழங்குகின்றோம்! ஆனால், அளவோடு பெற்று 'வளமோடு' வாழ்க என்று கூறும்போது மனத்தை நெருடுகிறதே! அதனால் ஒசையின் சிறப்பை இங்கிலாந்து, பிரான்சு, ஆப்பிரிக்கா என்று இன்னோசையுடன் சொல்கிறோம்.

2. வடமொழிப் பண்புப்பெயர் விகுதியான 'த்வ' என்பதைக் கொண்டு தமிழிலும் முதலாளித்துவம்,

தத்துவம், முக்கியத்துவம் போன்றசொற்கள் உருவாகியுள்ளன. 'ஆகார இறுபெயர் ஐகாரமாகும்' என்னும் முத்துவீரியத்தின் விதிக்கேற்ப மாலா–மாலை, கலா–கலை, சிலா–சிலை, ஆசா–ஆசை என மாறியுள்ளமை அறியலாம். மேலும், "ஐந்து தலையிட்ட ஆறைந்து இரு கவ்வே" என்னும் நியதிப்படி பக்ஷம்–பக்கம், தக்ஷன்–தக்கன், அக்ஷரம்–அக்கரம் என்று வடிவம் மாறின எனலாம்.

3. 'கள்' விகுதி பலவின்பால் படர்க்கைப் பெயருக்கே வரும் என்பது அனைத்து இலக்கணங்களும் கூறும் விதியாகும். ஆனால், தொல்காப்பியரே 'உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே' என்று அவ் விகுதி உயர்திணைப் பன்மையிலும் வரும் என்பதைப் புலப்படுத்தியுள்ளார். அதுமட்டுமா? உயர் திணையிலே பெயரோடு சேர்ந்து விகுதிமேல் விகுதியாகவும் (அவர்கள், இவர்கள், சிறுவர்கள்) தனி விகுதியாகவும் (பெண்கள், ஆண்கள், பையன்கள்), வினையிலே உயர் திணைப் பன்மையை உணர்த்தும் விதியாகவும் (வந்தார்கள், ஆடினார்கள்) பயின்று வருகிறது. இம்மாற்றம் மொழிவளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படு கிறதன்றோ!

4. மெய்ம்மயக்கம் குறித்து நம் இலக்கணங்கள் பாரித்துரைக்கின்றன. ஆனால், அவ்விதிகளின்படி இன்றைய சொற்களை அடக்க முடியுமா? நிக்சன், பக்சிகுலாம், ('க'வும், 'ங'வும், 'ச'வும், 'ஞ'வும் தமக்குள் மயங்கும்) , அத்வானி, கித்வாய், மத்வாச்சாரி ('த்'வும் 'வ' வும் தமக்குள் மயங்கா) என்னும் சொற்களால் விதி மீறி னாலும் அவை ஏற்கத்தக்கனவே! ஏன்? அவை புகுந்து விட்டனவே!

5. தொல்காப்பியம் காட்டும் 9 வினையெச்சங்களும் இன்று வழக்கில் உள்ளனவா? இல்லையே! அவற்றுள் செய்து, செய, செயின் ஆகிய மூன்று எச்சங்களைத் தவிர மற்றவை பயன்படுத்தவில்லை! 'செயின்' என்பதும் 'செய்தால்' எனத் திரிந்து அவ்வினையெச்சப் பொருளை உணர்த்துகிறது.

6. தொல்காப்பியம் விதிக்கும் விரவுவினை எட்டில் 'செய்ம்மன' என்னும் வினைமுற்றை இன்று யாரும் பயன்படுத்துவாரில்லை! முன்னிலை ஒருமை வினை முற்றுக்களில் (ஐ ஆய் இ) 'ஆய்' தவிர ஐ,இ விகுதிகள் வழங்குதல் இல்லை! முன்னிலைப் பன்மை வினைமுற்றில் 'ஈர்' ஒழிய ஏனைய 'இர்', 'மின்' ஆகிய விதிகளை இன்று ஏற்றுக் கொள்வதில்லை!

7. தொல்காப்பியத்தின்படி தன்மை யாவும் உயர்திணை – –யையே சாரும்! இன்றோ மலை, கடல், ஆறு முதலான அஃறிணைப் பெயர்களும் பேசுவனபோலத் – தம் வரலாற்றைஉரைப்பன போலக் கவிஞர் பலர் கவிதை புனைவதை ஏற்றுக் கொள்வதுதானே முறை!

8. தன்மை ஒருமை வினைமுற்றுக்களில் 'ஏன்' விகுதி தவிர (வந்தேன், வருகின்றேன், வருவேன், உண்ணேன்) ஏனைய குடுதுறு அல் அன் ஆகிய விகுதிகள் பயன்பாட்டுக்கு வருதல் இல்லை! அவ்வாறே தொல்காப்பியம் கூறும் தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள் எட்டும் (எம் ,ஏம், அம், ஆம்,கும்,டும்,தும்,றும்) இன்று வழங்குமாறு இல்லை! நன்னூலார் கூறும் 'ஓம்' விகுதியே காலூன்றி நிற்கின்றது! (வந்தோம், உண்கிறோம், செல்வோம்).

9. 'எவன்' (என்ன) என்னும் அஃறிணை இருபால் பொது வினா இன்று 'என்ன' என்ற சொல்லால் வழங்கி வருகிறது. ஆனால் 'எவன்' என்றசொல் 'அவன் எவன்' என்று உயர் திணை ஆண்பாலைக் குறிக்கும் வினாவாக வழக்கத்தில் உள்ளது. அவ்வாறே, உயர்திணை முப்பாற் பொது வினாவாம் யார் (அவன், அவள், அவர்–யார்) இன்று 'ஆர்' என மருவிப் பயின்று வருகிறது (நானார் என்னுள்ளமார், அவன் ஆர் என்னைக் கேட்க)

10. சுட்டு முதலாகிய ஆய்தப் பெயரும் (அஃது, இஃது, உஃது) சுட்டு முதலாகிய வகரப் பெயரும் (அவ், இவ், உவ்) இன்று படித்தவராலும் புறக்கணிக்கப்படுகின்றன. சுட்டெழுத்துக்களில் அ இ (உகரச் சுட்டு ஒளிந்து கொண்டது) என்னும் இரு சுட்டெழுத்துக்களே பெயரோடு முன்னொட்டாக இணைந்து வருகின்றன (அப்பக்கம்,இந்நாடு).

11. இன்று பல பெயர்கள் மருவி வழங்கி வருகின்றன. பெயர் பேர் என்றும், நீயிர், நீவிர் என்பன நீர், நீங்கள் என்றும் நடைமுறையில் வழங்கி வருகின்றன. 'யா', 'ஆ' வாகத் திரியும் (யானை–ஆனை, யாண்டு–ஆண்டு, யாறு–ஆறு) இம்மாற்றத்திற்கு நேமிநாதம் விதியே வகுத்துவிட்டது. தவிர, அவ்விலக்கணம் உரைக்கும் "ஒன்றன்பேர் ஒன்றற்கு உரைப்பதாம் ஆகுபெயர்" இன்றும் நடைமுறையில் போற்றப்படுகிறது (சட்டினி இங்கு வா, சாம்பார் அங்கு கவனி).

12.வடசொற்களைத் தமிழ்ப்படுத்தும் முறையைத் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களிலே (தொல்–சொல் 401, 402) புலப்படுத்துகிறார். ஆனால், நன்னூலார் அதற்காகப் 'பதவியல்' என்ற ஓர் இயலையே வகுத்து அதிலே தற்சமம், தற்பவம் என்ற பகுப்புக்களில் வடசொற்கள் தமிழில் அமையும் பாங்கினை

விரித்துரைக்கிறார். மலையாளம், தெலுங்கு மொழிகளில் தொடக்கத்திலிருந்தே வடமொழியை ஏற்றுக் கொண்டார்கள். மலையாள இலக்கணமான 'லீலா திலகம்' வடமொழியும் மலையாளமும் கலந்த மணிப்பிரவாளம் 9 வகையாகப் பாகுபடுத்தி உரைக்கப் பெறுகிறது.

13. களிறும் பிடியும் முறையே ஆண்யானையும் பெண்யானையுமாகத் திரிந்துவிட்டன. புல்லினத்தைச் சேர்ந்த தென்னையும், புன்னையும், பனையும் இன்று மரங்களாக உருமாறிவிட்டன. நறுமணத்தைக் குறிக்கும் 'நாற்றம்' இன்று துர்நாற்றத்தைக் குறிக்கிறது. 'உசாவே சூழ்ச்சி' என்ற நூற்பாவின் பொருளே சிதைந்து இன்று வஞ்சனையைச் சதியை உணர்த்துகிறது. இதுபோலவே குப்பை, சேரி, வம்பு, காமம் போன்ற சொற்கள் இன்று இழிந்த பொருளைச் சுட்டுகின்றன. 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு' என்பது தொல்காப்பியம். இன்றோ கெடவரல் புழக்கத்தில் இல்லை; 'பண்ணை' தோட்டத்தையும், வயலையும் குறிக்கிறது.

14. சில புதிய விகுதிகள் சேர்ந்து இன்று எண்ணற்ற சொற்கள் உருவாகியுள்ளன. புத்திசாலி, பலசாலி, பொறுமைசாலி (சாலி) என்றும், கூலிக்காரன், பணக்காரன், மோசக்காரன், குடிகாரன் (காரன்) என்றும், வேலைக்காரி, கூலிக்காரி, குறும்புக்காரி (காரி) என்றும் வருவன அறியத்தக்கன.

15. 'இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்' என்று 'வகர' உடம்படுமெய் பெறுவதைத் தொல்காப்பியம் சொன்னது. (கோவில் : கோ+இல்) ஆனால் பின்னர் வந்த முத்துவாத்தியார் 'கோமா மன்வரின் யகரமும் குதிக்கும்' என்றார். கோ, மா முன்னர் வருமொழியில் உயிர் வரின் வகர மெய்யோடு யகரமும் உடம்படுமெய்யாக வருதற்கு இடமுண்டு என்பார். (கோயில், மாயிலை)

16. மொழிக்கு முதலில் வராத யரல ஆகிய மெய்களின்முன் அ இ உ என்னும் உயிர்களில் ஏதேனும் ஒன்று வரும் என்று விதி இருப்பினும் நடைமுறைக்கும், பொருளுக்கும் பொருந்துமாறு அமைத்தலே ஏற்புடைத்து. அரங்கநாதன், அரங்கநாயகம் (இரங்கநாதன், இரங்கநாயகம்–தவறு) என்றும், இராமன், இராக்கம்மாள் (அராமன், உராக்கம்மாள்–தவறு) என்றும், இலாபம், இலிங்கம், உலகம், உலக நாயகி (உலாபம், உலிங்கம், உலோகம், உலோகநாயகி–தவறு) என்றும் இயக்கன், இயந்திரம் என்றும் அமைவதே ஏற்றது; சிறப்புங்கூட.

17. ஒழி, தொலை, அழு முதலிய துணை வினைகள் சேர்ந்த சொற்கள் (செத்தொழி, சொல்லித் தொலை, சொல்லி அழு) விருப்பம் இல்லாத் தன்மையை உணர்த்துகின்றன. போடு, இடு, விடு என்பன (செய்துபோட்டான், சொல்லிவிடுவான், சொல்லி விட்டான்) முடிந்த நிலையையும், வரைநிலையையும் (Definitive) புலப்படுத்துகின்றன. 'வா' என்னும் துணை வினை வழக்கம் (Habit) என்னும் பொருளில் வழங்கிவருகிறது (பேசிவருகிறான், எழுதி வருகிறான்) 'போ' என்னும் துணைவினை நிகழ விருப்பதையும் (செய்யப் போகிறான், பாடப்போகிறான்), மூலவினையின் பொருளை (Main Verb) வலியுறுத்துவதையும் (தூங்கிப் போனான்) உணரமுடிகிறது.

தமிழிலே உள்ள சொற்கள் அனைத்தும் ஒரு காலத்தில் பொருள் குறித்தனவாகவே இருந்தன! ஆனால், இலக்கியம் கண்டு இலக்கணம் செய்த தொல்காப்பியர் காலத்திலேயே இந்நிலை மாறிவிட்டது. சொல்லின் பொருளுக்குப் பொருள் காணமுற்படின் அது வரம்பின்றி அனுமன் வாலாக நீள்கிறது. தவிர, ஒரு சொல்லின் பொருள் இது என்பதற்கான காரணத்தைச் சொல்லவும் இயலாது. இவற்றை'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே;' 'பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே', 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' என்னும் நூற்பாக்களால் தொல்காப்பியர் புலப்படுத்துகிறார்.

ஆனால், இவ்விலக்கணம் கூறியாங்குத் தமிழ் வளர்ச்சி என்னும் போர்வையில் கிஸ்ஸித்தான், தட்டச்சித்தான், ஜ்வாலை (நெருப்புக் கொழுந்து), அக்னி (நெருப்பு), புஸ்பம், ஸொப்பனம் (கனவு), ஸர்ப்ப யாகங்கள், ஸமர்ப்பணம், நடுக்கிய முதலான புதிய–தமிழ் மரபுக்குச் சிறிதும் பொருந்தாத – சொற்களை இன்றைய படைப்பாளிகள் தமது புலமையை (?)ப் புலப்படுத்த வெளியிடுவதை எங்ஙனம் ஏற்க இயலும் ?

இன்னவண்ணம், இலக்கணம் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றுள்ளவாறும், இலக்கியக் கழனி செழிப்புற அமையுமாறும், மாற்றங்களில் தள்ளத்தக்கனவும், கொள்ளத்தக்கனவும் இன்னவையெனச் சுட்டுமாறும், தொன்மை இலக்கணத்தைச் சார்ந்த எளிய விதிகள் அமையுமாறும் இக்கட்டுரையில் புலப்படுத்தப் பெற்றுள்ளன. இந்நோக்கில் அறிஞர் மேலும் ஆய்வாராக!

மக்கட்சுட்டு - ஓர் ஆய்வு

திரு. சு. குஞ்சிதபாதம்,
திருவாவடுதுறை ஆதீனப்புலவர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதற் சூத்திரத்தில் இடம்பெறும் 'மக்கட் சுட்டு' என்ற சொல்லிற்கு உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள் கூறியுள்ளனர். அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து உரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதற் சூத்திரமானது சொற்கள் உயர்திணைச்சொல் என்றும், அஃறிணைச்சொல் என்றும் இருவகைப்படும் என எடுத்துரைப்பது. உயர்திணை, அஃறிணை என்பன இலக்கண நூலார் மட்டுமே எடுத்தாளும் சொற்கள் என்பதால் கற்போருக்கு அவற்றின் பொருளை விளக்க வேண்டிய அவசியம் ஆசிரியர் தொல்காப்பியருக்கு ஏற்பட்டது. அதன்படி விளக்கும்போது முதலில் 'உயர்திணை' என்பதனை வரையறுத்துக் கூறுகையில்,

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'

என்று குறிப்பிடுகின்றார். உயர்திணை என்மனார் மக்களே என்று உரைக்காமல் மக்கட்சுட்டே என்று ஆசிரியர் தொல்காப்பியர் உரைத்திருக்கும் திறம் ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்து போற்றுதற்குரியதாகும். ஆகையால் மக்கட்சுட்டு என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கங்களை ஆராய்வோம்.

மக்கட்சுட்டு என்பதற்கு இளம்பூரணர், "உயர்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் மக்கள் என்று சுட்டப்படும் பொருளை என்றவாறு" எனப் பொழிப்புரையில் குறிப்பிடுவார்.

பின்னர் விசேட உரையில், "இனி மக்கட்சுட்டே என்பது, 'மக்கள் என்று வரைந்து சுட்டுதற்குக் காரணமாகிய தன்மை-' என்னும் ஒருவன்.

இனி, மக்கள் எனினும் சுட்டு எனினும் அவரையே சொல்லியவாறென்ப ஒரு திறத்தார். சுட்டென்பது கருத்து. அக்கருதற்பாடுடைமையின் சுட்டெனவும் படும் மக்களளென்பது"- என்று குறிப்பிடுவார்.

இளம்பூரணர் கூறியுள்ள பொழிப்புரையின் மூலம் 'மக்கட்சுட்டு' என்பது 'மக்கள் என்று சுட்டப்படும் பொருள்' எனப் பொருள்படுகிறது; அதே சமயம் 'சுட்டென்பது கருத்து' என்று விசேட உரையில் அவர் குறிப்பிடுவதால் கருத்து என்பது ஆகுபெயராய்ச் சுட்டப்படும் பொருள் (கருதப்படும் பொருள்) எனப் பொருள் தருவதையும் நம்மால் அறியமுடிகிறது. ஆயினும் இவ்வாறு பொருள் கொள்வதற்கு இளம்பூரணர் தக்க இலக்கணக் குறிப்பு எதுவும் வழங்கவில்லை. மேலும் ஆசிரியர் மக்க்ள் என்று மட்டும் குறிப்பிடாமல் மக்கட்சுட்டு என்று குறிப்பிட்டிருப்பதால் பெறத்தக்க பொருள் நலம் எதையும் அவர் உரையிலிருந்து பெற முடியவில்லை.

இனி, சேனாவரையர் உரையினை நோக்குமிடத்து "மக்கள் என்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணை யென்று சொல்லுவர்" என்று பொழிப்புரையில் அவர் குறிப்பிடுவதைக் காண்கின்றோம். எனவே 'மக்கட்சுட்டு' என்பது மக்கள் என்று கருதப்படும் பொருள் என்பதே சேனாவரையர் கருத்தாகும். இக்கருத்து இளம்பூரணர் கருத்தை ஒத்தே உள்ளது. எனினும் தமது விசேட உரையில் சேனாவரையர் மக்கட்சுட்டு என்பதற்கு இலக்கணக்குறிப்பு தந்து விளக்குகிறார். அதனைக் காணுமிடத்துப் பொழிப்புரையில் அவர் உரைத்த பொருளுக்கு விசேட உரையில் அவர் உரைத்த பொருள் சற்று மாறுபாடாக உள்ளது. தமது விசேட உரையில்,

"மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும், அது மக்கட்சுட்டு எனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை" என்று இலக்கணக் குறிப்பு தந்து விளக்குகிறார். எனவே மக்கள் சுட்டு என்பதனை 'மக்களாகிய சுட்டு' என இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக வைத்துக் கொண்டு 'மக்களாகிய சுட்டு நிகழும் பொருள்' என அன்மொழித் தொகை முறையில் பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் பொருள் கொள்ளப் புகும்போது சேனாவரையர் நம்மைத் தடுத்து மேலும் ஒரு செய்தியைச் சொல்லி அதனையும் இணைத்துக் கொண்டு பொருள்காணச் சொல்கின்றார். "ஈண்டு மக்கள் என்றது, மக்கள் என்னும் உணர்வை" என்று அவர் குறிப்பிடுவதே கூடுதலான செய்தியாகும். எனவே இதனையும் உட்கொண்டு மக்கட்சுட்டு என்பதற்குப் பொருள்கண்டால் 'மக்கள் என்னும் உணர்வாகிய சுட்டு (கருத்து) நிகழும் பொருள்' எனப் பொருள் கிடைக்கிறது. இது தமது விசேட உரையின் மூலம் சேனாவரையர் நமக்கு உணர்த்தும் பொருள். பொழிப்புரையில் மக்கள் என்று கருதப்படும் பொருள் எனக் குறிப்பிட்டவர், விசேட உரையில் மக்கள் என்னும் உணர்வாகிய கருத்து நிகழும் பொருள் எனப் பொருள் கிட்டுமாறு விளக்கியுள்ளார். விசேட உரை கூறும் விளக்கமான பொருளைப் பொழிப்புரை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

சேனாவரையர் பொழிப்புரையில் தரும் விளக்கத்திற்கும் விசேட உரையில் தரும் விளக்கத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளதாக நச்சினார்க்கினியர் தமது உரையில் குறிப்பிடுகின்றார். அது வருமாறு.

"முன்னர் 'மக்கள் என்று கருதப்படும் பொருளை உயர்திணை என்ப' என்று அவர் கண்ணழிவு கூறியது, ஒரு பொருளிடத்து நின்ற மக்கட்டன்மையாலே ஒருவற்கு அப்பொருள் மக்கள் என்று கருதப்பட்டதென்று பொருள்தந்து நின்றது. பின்னர், 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும்' என்றது, நோக்குகின்றவர்க்கு மக்களாகிய கருத்து யாதொரு பொருளிடத்துத் தோன்றும் என்று பொருள் தந்தால்..."

எனவே சேனாவரையர் முதலாவதாகப் பொழிப்புரையில் கூறிய பொருளால் மக்கள் தன்மை என்பது, காணப்படும் பொருள் வெளிப்படுத்துவதால் புலனாகும் தன்மை என்றும் ஆதலால் அம்மக்கள் தன்மை காணப்படும் பொருளையே சார்ந்துள்ளது என்றும் பெறப்படுகிறது. ஆனால் இரண்டாவதாக விசேட உரையில் கூறிய பொருளால் மக்கள் தன்மை என்பது காண்பவன் கொண்டுள்ள ஒரு கருத்து என்றும், ஆதலால் அம்மக்கள் தன்மை காண்பவனது நோக்கினையே சார்ந்துள்ளது என்றும் பெறப்படுகிறது. இவ்வாறு நச்சினார்க்கினியர் மக்கட் சுட்டுக்குச் சேனாவரையர் கொடுக்கும் பொழிப்புரை விசேட உரை விளக்கங்களுக்கிடையே வேறுபாடு இருப்பதை நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்துகிறார்.

மேலும் மக்கட்சுட்டு என்பதனைச் சேனாவரையர் அன்மொழித்தொகையாகக் கொண்டது பொருந்தாது என்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். அன்மொழித்தொகை ஆகுபெயர் போல் பிற பொருள் குறித்து வருவது. ஆகுபெயர் ஒரு தனித்த பெயர்ச்சொல்லாய் இருப்பது. அன்மொழித் தொகையோ இரண்டு பெயர்ச்சொற்கள் இணைந்திருப்பது. அவ்விரு சொற்களும் தம்முள் தொக்க தொகையாற்றலால் பிற பொருள் குறித்து வருவது. எடுத்துக்காட்டாக 'வெள்ளாடை வந்தாள்' என்னும் வாக்கியத்தை நோக்குவோம். இதனில் வெள்ளாடை என்பதில் வெள்ளை என்றும் ஆடை என்றும் இரண்டு சொற்கள் இணைந்துள்ளன. இருந்தும் வெள்ளாடை என்பது அந்த இரண்டு சொற்களின் பொருள்களையும் குறிக்காமல் அந்த ஆடையை உடுத்தியுள்ள பெண்ணாகிய வேறு பொருளைக் குறிக்கிறது. அவ்வாறு குறித்தலே அன்மொழித்தொகையின் இயல்பு. இனிச் சேனாவரையர் கூறும் விசேட உரையினை நினைவு கூர்வோம். 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும், அது மக்கட் சுட்டு...' என்றாரல்லவா. மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் என்பதற்கு விடைகண்டால் மக்களாகிய சுட்டு மக்களிடமே நிகழும் என்பதுதானே நமக்குக் கிடைக்கும் விடை. எனவே மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அப்பொருளே மக்கட்சுட்டு என்று கூறினால் மக்கட்சுட்டு என்பது மக்களையே உணர்த்தி நிற்றல் தெளிவு. ஆனால் அன்மொழித்தொகை தான் கொண்டுள்ள இருமொழிகளின் பொருள்களையும் உணர்த்தாமல் மூன்றாவதாக வேறு பொருளை உணர்த்த வேண்டுவதே முறை என்று கண்டோம். இங்கோ மக்கட்சுட்டு என்பது மக்கள் என்று முன்நிற்கும் பொருளையே உணர்த்துகிறது. எனவே மக்கட்சுட்டு

அன்மொழித்தொகை ஆகாது. இக்கருத்து பின்வரும் நச்சினார்க்கினியர் விளக்கத்தால் பெறப்படுகிறது.

"அது மக்கட்சுட்டு என்றதற்கு அப்பொருள் மக்கட்சுட்டு என்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நிற்றலின் அன்மொழித்தொகை அன்றாம்" -சொல்- முதற் சூத்திரம்- விசேட உரை (நச்சினார்க்கினியம்)

மக்கட்சுட்டு அன்மொழித்தொகை எனச் சேனாவரையர் கூறுவதை இவ்வாறு நச்சினார்க்கினியர் மறுக்கின்றார். எனினும் சேனாவரையர் கூறும் ஒரு கருத்தினை நச்சினார்க்கினியர் எடுத்துக் கொள்ளாமல் மறுத்திருப்பதால் இம்மறுப்பு பொருந்தாது போகின்றது. என்ன கருத்து எனில், "ஈண்டு மக்கள் என்றது, மக்கள் என்னும் உணர்வை" என்று சேனாவரையர் குறிப்பிட்ட கருத்தே ஆகும். எனவே மக்கள் உணர்வாகிய சுட்டு எப்பொருள் மீது நிகழும் அப்பொருளாகிய மக்கள் என்று பொருள் கிட்டுகிறது. இதன்படி மக்கட்சுட்டு என்பது முதல்மொழி கொண்டுள்ள மக்களுணர்வு என்ற பொருளையும், இரண்டாவது மொழி கொண்டுள்ள கருத்து என்ற பொருளையும் குறிக்காமல் இரண்டிற்கும் வேறான மக்கள் என்ற பொருளையே குறிப்பதால் அன்மொழித்தொகையின் இயல்பில் குன்றாமல் நிற்பதே தெளிவன்றோ! சேனாவரையர் கருத்தினை அரண் செய்ய முயலும் ஒரு சாரார் "ஈண்டு மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை" என்பது "மக்கட்சுட்டு என்றது மக்கள் என்னும் உணர்வை" என்றிருப்பது பொருத்தம் என்று கூறுவர். இவ்வாறு கூறுதல் அன்மொழித்தொகை அன்றென நச்சினார்க்கினியர் கூறும் மறுப்பினை அரண் செய்யவே உதவும்.

இவ்வாறு மக்கட்சுட்டு என்பது அன்மொழித்தொகையெனச் சேனாவரையர் கூறுவது இலக்கணப்படிச் சரியாக இருந்தாலும் சூத்திரத்தில் ஒரு வழுவை உண்டாக்கிவிடும். ஆகையால் மக்கட்சுட்டினை அன்மொழித்தொகையெனக் கூறுதல் தவிர்க்கப்பட வேண்டியதே. இம்முடிவு மாதவச் சிவஞானயோகிகள் தமது சூத்திர விருத்தியில் திறம்படக் கூறியுள்ள நுணுக்கமான விளக்கத்தால் பெறத்தக்கதாய் உள்ளது. மக்கள் என்பதனை மக்கள் என்னும் உணர்வு என்று கொண்டால்தானே மக்கட்சுட்டு அன்மொழித்தொகையாக விளங்கும். ஆனால் மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வு என்று கொண்டால் சூத்திரத்துள் ஓரிடத்தில் திணைவழு ஏற்படும் என்று காட்டுகின்றார் மாதவச் சிவஞான யோகிகள். அதனைக் காண்போம்.

'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' என்று வரையறுத்த ஆசிரியர் 'அஃறிணை என்மனார் அவரல பிறவே' என்று வரையறுக்கிறார். அவரல பிற என்றால் முதலடியில் குறிப்பிட்ட அம்மக்கள் அல்லாத பிற என்றே பொருள்படும். இதனைச் சேனாவரையரும் உடன்படுகின்றார். ("மக்கட்சுட்டே என மேல் நின்றமையின்..." எனத் தொடங்கும் அடியைக் காண்க). மக்கள் என்பதற்கு மக்கள் என்னும் உணர்வு எனப் பொருள் கூறின் மக்கள் என்னும் சொல் அஃறிணைச் சொல்லாகும். அவ்வாறு ஆனால் 'அஃதல பிறவே' என்றல்லவா (அஃது - அம்மக்கள் என்னும் உணர்வு) சூத்திரம் செய்திருக்க வேண்டும். ஆனால் அவரல பிறவே என்றே ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதால் மக்கள் என்ற சொல் மக்கள் என்னும் நேர் பொருளையே தந்து உயர்திணைச் சொல்லாகவே நிற்கிறது. திணைவழு உண்டாதற்குக் காரணமான மக்களுணர்வு என்னும் பொருளைத் தரவில்லை என்பது தெளிவாகின்றது. இவ்வுண்மை,

"இனி மக்கட் சுட்டென்புழி மக்களென்பது ஆகு பெயரான் மக்கட் கருத்தை உணர்த்திற்றென்பார்க்கு, அங்ஙனம் உணர்த்திற்றேல்,

'பாணன்பறையன் துடியன் கடம்பனென்று
அந்நான் கல்லது குடியு மில்லை'

என்புழிப் பாணன் முதலியனபோல மக்களென்பது ஆண்டு அஃறிணைச் சொல்லாதல் வேண்டும், வேண்டவே, அஃதல பிறவே என அஃறிணைச் சுட்டுப் பெயரால் கூறாது, "அவரல பிற" என்றல் திணை வழுவாய் முடியுமாகலின், அஃது ஆசிரியர் கருத்தன்று என்றொழிக". (- தொல்காப்பியச் சூத்திர விருத்தி - பக்கம் - 82. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு.) என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் மாதவச் சிவஞானயோகிகள் தருகின்ற விளக்கத்தால் நன்கு துணியப்படும்.

எனவே மக்கட்சுட்டு என்பதனை அன்மொழித்தொகையாகக் கொள்ள வழியில்லை, என்பது தெளிவாகிறது. அப்படியானால் மக்கட்சுட்டு என்பதன் பொருள்தான் என்ன என்று கேட்டால் மக்கட்சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என

இருபெயரொட்டாக நின்று, நன்கு மதிப்பு என்னும் பொருளைத் தரக்கூடிய சுட்டு என்ற சொல் ஆகுபெயரால் நன்கு மதிக்கப்படும் பொருள் எனப் பொருள் குறித்து நிற்கிறது. இவ்விளக்கம் நச்சினார்க்கினியர் உரையால் பெறப்படுவதாகும். அன்மொழித்தொகையெனச் சேனாவரையர் கூறுவதை நச்சினார்க்கினியர் மறுத்த முறைமைதான் பொருந்தவில்லையே தவிர மக்கட்சுட்டிற்கு நச்சினார்க்கினியர் கொடுக்கும் விளக்கம் மிகவும் பொருத்தமானதே ஆகும்.

நச்சினார்க்கினியர் உரையின் மூலம் மக்கட்சுட்டு என்பது மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள் என்று பொருள்படும். ஆகையால் 'உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே' என்னும் முதலடி 'மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை உயர்திணை என்று கூறுவர் ஆசிரியர்' என்று பொருள்படுகிறது. இரண்டு பெயர்ச்சொற்கள் இருபெயரொட்டாக நின்று அவற்றுள் இரண்டாவது சொல் ஆகுபெயராய் இருக்க, முதற்சொல் அந்த இரண்டாவது சொல்லின் ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நின்றால் இம்முறையில் நிற்கும் இருபெயரொட்டினை இருபெயரொட்டு ஆகுபெயர் என்பர். இருபெயரொட்டு ஆகுபெயர் குறித்த தெளிவான விளக்கம் மாதவச் சிவஞான யோகிகள் உரையினால் மட்டுமே கிட்டுகிறது. வகரக் கிளவி, அதுவாகு கிளவி, மக்கட்சுட்டு என்ற மூன்று எடுத்துக்காட்டுகள் தந்து இருபெயரொட்டு ஆகுபெயர் என்ற கருத்தினைத் தெளிவுற விளக்குகிறார் மாதவச் சிவஞான யோகிகள்.

"வகரக்கிளவி, அதுவாகு கிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டு ஆகுபெயருள், வகரமும் அதுவாதலும் மக்களுமாகிய அடைமொழிகள் கிளவி சுட்டென்னும் இயற்பெயர்ப்பொருளை விசேடித்து நில்லாது, எழுத்துஞ் சொற்பொருளும் பொருளுமாகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்ப, கிளவி சுட்டு என்பனவே ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்த, இருபெயரும் ஒட்டி நிற்குமாகலின்"

- தொல்காப்பியச்சூத்திர விருத்தி, பக்-81.
திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு.

எனவே மக்கட்சுட்டு என்பது மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள் எனப் பொருள் குறித்து இருபெயரொட்டு ஆகுபெயராக நிற்றல் தெளிவாகிறது. நச்சினார்க்கினியரும் இருபெயரொட்டு ஆகுபெயர் என்ற கருத்தில்தான் விளக்கியுள்ளார் என்பது "சேனாவரையர் இதனைப் (மக்கட் சுட்டினை) பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்றாராலோ வெனின், இருபெயரொட்டாகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு உணராமற் கூறினமையின் அது பொருந்தாது" என்று மறுப்பதன் மூலம் நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இனி நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்.

"மக்கட்சுட்டு என்பது 'மக்களாகிய சுட்டு' என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சுட்டு - நன்கு மதிப்பு. அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்தி நின்றது".

நன்கு மதிப்பு என்று பொருள்படும் சுட்டு என்ற சொல் ஆகுபெயராய் நின்று அவ்வாறு மதிக்கப்படும் மக்கட்பொருளைக் குறித்து நின்றது. எனவே மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை இருபெயரொட்டு ஆகுபெயராக விளங்குகிறது. மேற்கண்ட நச்சினார்க்கினியரின் உரை மக்கட்சுட்டு குறித்துத் தெளிவான விளக்கத்தினைத் திறம்பட வழங்கியுள்ளது. ஒரு சாரார், "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்...", "தன்மை சுட்டலும் உரித்தென மொழிப" முதலான மேற்கோள்களைக் காட்டி இவ்விடங்களிலும், இவை போன்ற பிற இடங்களிலும் சுட்டு என்பது நன்கு மதிப்பு எனப் பொருள்பட வழியில்லை; ஆதலால் பிற இடங்களில் ஆசிரியர் சுட்டு என்ற சொல்லைக் கருத்து என்ற பொருளில் கையாண்டிருப்பதால் இம்முதற்சூத்திரத்தும் 'கருத்து' என்ற பொருளில்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும். நன்கு மதிப்பு என்று கொள்ள வழியில்லை. நச்சினார்க்கினியரும் பிற இடங்களில் சுட்டு என வரும்போது நன்கு மதிப்பு என்று பொருள் எழுதவில்லை எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர். பிற சூத்திரங்களில் ஆசிரியர் 'சுட்டு' என்பதற்கு நன்கு மதிப்பு எனப் பொருள்படும் முறையில் சுட்டு என்ற சொல்லை ஆளாமை ஒன்றே கொண்டு இம்முதற் சூத்திரத்திலும் சுட்டு என்ற சொல்லிற்கு நன்கு மதிப்பு என்று பொருள் கொள்ளலாகாது என்பது ஏற்கக்கூடிய கருத்தன்று. எச்சொல்லிற்கும் அச்சொல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் நோக்கியே பொருள் கொள்ள வேண்டும். சுட்டு - நன்கு மதிப்பு என்று பொருள் குறித்தல் நச்சினார்க்கினியரும், சிவஞானயோகிகளும் கொடுக்கும் விளக்கங்களால் நன்கு புலனாகும். அவற்றைக் காண்போம்.

"உயர்ந்த ஒழுக்கம் (உயர்திணை) என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி, அதன் பயன் எய்துவிப்பத் தாமும் 'மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள் என்று அச்சொற்குப் பொருள்' கூறினார் என்றுணர்க."

- சொல் - முதற்சூத்திர விசேட உரை
- நச்சினார்க்கினியம்.

உயர்திணை என்பது உயர்ந்த ஒழுக்கமுடைய பொருள் என்று பொருள்படும். அப்பொருள் உலகத்தாருக்கு இனிதே புலப்பட வேண்டி மக்கள் என்று மட்டும் குறிப்பிடாமல் மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள் என்று குறிப்பிட ஆசிரியர் கருதுகிறார். எனவே அப்பொருள் குறிக்கும் முறையில் 'மக்கட்சுட்டு' என்று குறிப்பிட்டுள்ளார் என இவ்வாறு நச்சினார்க்கினியர் விளக்குகின்றார். இவ்விளக்கம் சாலப் பொருத்தமானதாகும்.

இக்கருத்தினை மாதவச் சிவஞானயோகிகளும் விளக்குகின்றார்.

"மக்கட் பொருள் எனவே அமையுமாயினும், அப்பொருட்கு உயர்திணை எனக் குறிப்பிட்டதற்குக் காரணந்தோன்ற, மனத்தோடு ஆறறிவினரே மக்களென மரபியலுட் கூறும் உயர்ச்சி பற்றி மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளென்பார் மக்கட் சுட்டென்றார்."

- தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பக்-82.
திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு.

மாதவச் சிவஞானயோகிகள் தருகின்ற இந்த விளக்கமும், 'மக்கட்சுட்டு' என்பது 'மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள்' என்றே பொருளுணர்த்தும் என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் ஆழமான விளக்கத்தைச் சூத்திர விருத்தியுள் காணலாம்.

முடிவு

தொல்காப்பியச் சொல்லதிகாரத்து முதற் சூத்திரத்தில் இடம்பெறும் 'மக்கட்சுட்டு' என்ற சொல், 'மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருள்' என்று பொருள்படும். இளம்பூரணர் உரையில் இது குறித்துச் சிறந்த விளக்கம் இல்லை. மக்கட்சுட்டு என்பது இருபெயரொட்டு ஆகுபெயராகும். சேனாவரையர் கூறுதல் போன்று அன்மொழித்தொகை அன்று. சேனாவரையருடைய பொழிப்புரைக்கும் விசேட உரைக்கும் உள்ள கருத்து மாறுபாட்டினை நச்சினார்க்கினியர் நுட்பமாக ஆய்ந்து வெளிப்படுத்தி உள்ளார். சேனாவரையரின் அன்மொழித்தொகை விளக்கம் குறித்து நச்சினார்க்கினியர் அளித்துள்ள மறுப்பு பொருத்தமுடையதன்று. மாதவச் சிவஞான யோகிகள் மறுத்துள்ள முறையே சரியானது. இருபெயரொட்டு ஆகுபெயர் என்னும் அரிய கருத்தினை மாதவச் சிவஞான யோகிகள் தெளிவுற விளக்கியுள்ளமை மக்கட்சுட்டின் பொருளை உணர மிகவும் அவசியமாகின்றது. மக்கட்சுட்டு என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள பொருள் பொருத்தமுடையதாகும். 'உயர்திணை' என்னும் குறியோடு இணைத்து அப்பொருளை விளக்கியுள்ள முறை சிறப்பானதாகும். மாதவச் சிவஞான யோகிகளும் அதே முறையில் பொருள் கூறுகின்றார்.

திறனாய்வாளராகப் பரிமேலழகர் : வள்ளுவரும் வடநூல் மதமும்



பேரா. ப. மருதநாயகம்,
புதுச்சேரி.

பரிமேலழகர் தமது திருக்குறள் உரையில் தரும் பாடல் விளக்கங்கள் நுட்பமானவை, தெளிவானவை, முழுமையானவை. அவருடைய முடிவுகளில் சில தற்சார்புடையன என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவர் சொல்லுபவற்றுள் எக்கருத்தும் ஆராயாமல் புறக்கணிக்கக் கூடியதன்று. "நிலையாமை" எனும் அதிகாரத்தின் பாடுபொருளைத் தெளிவாக்க, "நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதல் இலவாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த் தேரில் புனல் போலத் தோன்றி, மெய்யுணர்ந்த வழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலில் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்து இறக்கும் என்பாரும் ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடைய வென்பாரும் எனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தராவர்; அவர் எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார்."

(பரிமேலழகர் அதி.34)

என்று முன்னுரை வரைவார். உலகில் பிறப்பன யாவும் கயிற்றில் அரவு போல் மாயையென்று அத்துவிதக் கோட்பாட்டாளர்களும் அவை கணந்தோறும் பிறந்து இறக்கும் தன்மையவை என்று பௌத்த சமயத்தாரும் நிலைதலும் நிலையாமையும் உடையவையென்று பிற கோட்பாட்டாளர்களும் கூறுவதை எடுத்துரைத்து நிலை--யாமையை எல்லாச் சமயத்தார்களும் ஏற்றுக் கொள்ளுதலின் வள்ளுவர் அதனை வற்புறுத்துகிறார் என்று பரிமேலழகர் தெளிவுபடுத்துதல் நூலைப் படிப்பார்க்குப் பயன்படுவதாகும்.

"மடியின்மை" என்னும் அதிகாரத்தில் வரும்

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

எனும் குறளுக்கு உரையெழுதும்போது மடியும் குடியும் இருமுறை அடுக்கி வருவதற்கு அவர் காட்டும் காரணம் அரியதாகும்.

"நெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி, 'நெருப்பை நெருப்பாகவே கருதுக' என்றாற்போல, மடியின் தீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர் தன்னாலே கூறினார். அங்ஙனம் கருதியதனைக் கடிந்து முயன்றொழுகவே தாம் உயர்வர்; உயரவே, குடியுயருமென்பார், 'குடியைக் குடியாக வேண்டு பவ'ரென்றார். அங்ஙனம் ஒழுகாக்கால் குடி அழியுமென்பது கருத்து." (பரிமேலழகர் குறள் 602)

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து

எனும் குறளுக்கு விளக்கம் தரும்போது அரசன் பகடுபோல் வினையாற்ற வேண்டும் எனும் மரபு உவமையை விளக்கச் சீவக சிந்தாமணியிலிருந்து மேற்கோள் காட்டி "பகடு மருங்கொற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் அரிதின் உய்க்கும் ஆறுபோலத் தன் மெய் வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பானென்பார் பகடு அன்னான் என்றார்" என்று சேர்ப்பது நூல் கற்பார்க்குப் பெரு மகிழ்ச்சி தரும் என்பதில் ஐயமில்லை.

பரிமேலழகரின் பட்டறிவு பளிச்சிடும் இடங்கள் பல.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வா னென்று
அப்பால் நாற்கூற்றே மருந்து.

எனும் குறளை விளக்கும் போது,

"அவற்றுள், 'உற்றவன்' வகை நான்காவன: பொருள் உடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய்நிலை உணர்த்தல் வன்மை, மருந்துத் துன்பம் பொறுத்தல் என இவை.

'தீர்ப்பான்' வகை நான்காவன: நோய் கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியும் நுண்ணறிவும் உடைமை, பலகாலும் தீர்த்து வருதல், மன மொழி மெய்கள் தூயவாதல் என இவை.

'மருந்தி'ன் வகை நான்காவன: பல பிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல் என இவை.

'இயற்றுவான்' வகை நான்காவன: ஆதுரன் மாட்டு அன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல்வன்மை, அறிவுடைமையென இவை.

இவையெல்லாம் கூடிய வழியல்லது பிணி தீராமையின் இத்தொகுதியையும் மருந்தென்றார்.

(பரிமேலழகர் உரை - குறள் : 950)

மருந்து எவ்வாறு நான்கு பகுதியையுடைய நான்கு திறத்தது என்பதற்குப் பட்டறிவு மிக்குடையாரே இத்தகைய விளக்கம் தரமுடியும்.

அறம், பொருள் பற்றிய பாடல்களுக்கு மட்டுமல்லாமல் காமம் பற்றிய பாடல்களுக்கும் மதிநுட்பமும் நூலறிவும் கொண்டு உரை வரைவார் பரிமேலழகர். காமத்துப் பாலுக்கான முன்னுரையில் காமவின்பத்தின் தனிச்சிறப்பு என்ன வென்பதனைக்

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள

எனும் குறளின் கருத்தைக் கொண்டு,

"ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தல் சிறப்புடைத்தாய "காமவின்பத்தினை" என்பார். வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களால் அனுபவிக்கப்படுவன ஒரு காலத்து இவள் கண்ணே அனுபவிக்கப்பட்டன."

(பரிமேலழகர் உரை- குறள்: 1101)

என்று அவர் தரும் விளக்கம் வாத்ஸ்யாயனரின் காமசூத்திரத்திலும் காணப்படாத ஒன்றாகும்.

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்

எனும் குறளுக்கு உரை வரையும்போது 'அரிதாற்றல்', 'அல்லல் நோய் நீக்கல்', 'பிரிவாற்றல்', 'வாழ்வார் பலர்' ஆகிய தொடர்களுக்கு அவர் தரும் விளக்கம் போற்றுதற்குரியது.

பண்டையிற் சிறப்பத் தலையளி பெற்றின்புறுகின்ற எல்லைக்கண்ணே அஃதிழந்து துன்புறுதற்கு உடம்படுதல் அரியதொன்றாகலின் அரியதனைச் செய்தென்றும், செல்லும் தேயத்து அவர்க்கு யாது நிகழுமென்றும், வருந்துணையும் யாம் ஆற்றியிருக்கும் ஆறு என்னென்றும், அவ்வரவுதான் எஞ்ஞான்று வந்தெய்துமென்றும் இவ்வாற்றால் நிகழும் கவலை மனத்து நீங்காதாக்கலான் 'அல்லல்நோய் நீக்கி' யென்றும் பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழும் காம வேதனையும் புறத்து யாழிசை, மதி, தென்றல் என்றிவை முதலாக வந்து இதனை வளர்ப்பனவும் ஆற்றல் அரிய வாகலின் 'பிரிவாற்றி' யென்றும், தங்காதலரை இன்றியமையா மகளிருடன் இவையெல்லாம் பொறுத்துப் பின்னுமிருந்து உயிர் வாழ்வார் ஒருவருமில்லையென்பது குறிப்பால் தோன்றப் 'பின்னிருந்து வாழ்வார் பலர்' என்றும் கூறினார்.

(பரிமேலழகர் உரை_குறள் .1160)

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு

எனும் குறளை விளக்கும் போது,

"நாவின் புலத்தைச் செவி மேலேற்றிக் கைப்ப என்றார்" என்று பரிமேலழகர் கூறுவது அவரது நோக்கின் நுட்பத்திற்கும் கவிதைக் கலை அறிவிற்கும் பெருஞ்சான்றாகும். ஒருபுலத்திற்கு விளையும்

இன்பத்தை இன்னொரு புலத்திற்கு ஏற்றிக் கூறும் உருவகத்தை mixed metaphor என்று மேலையோர் குறிப்பர். "செந்தமிழ்த்தேன் வந்து பாயுது காதினிலே" எனும் பாரதி கூற்றில் தேன் காதுக்கு இன்பம் அளிப்பதாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

இலக்கியமல்லாப் பிற துறைகள் பற்றிய குறிப்புகள் பாடல்களில் வருமாயின் அவற்றிற்குத் தேவையான விளக்கங்களை அளவோடு தருவார் பரிமேலழகர்.

பண்ணென்னாம் பாடற்கியை பின்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

எனும் குறளுக்கு அவர் தரும் உரையில்,

"பண்களாவன: பாலை யாழ் முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களாவன: யாழின்கண் வார்தல் முதலிய எட்டும் பண்ணல் முதலிய எட்டும் மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும் பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடு இயையாதவழிப் பண்ணால் பயனில்லாதவாறு போலக் கண்ணோட்டத்தோடு இயையாதவழிக் கண்ணால் பயனில்லை என்பதாம்" எனும் விளக்கம் இடம் பெறும்.

சில சொற்களுக்குப் பொருளும் கருத்துகளுக்கு விளக்கமும் சுருங்கிய சொற்களில் மிகப் பொருத்தமாகத் தரவல்லவர் பரிமேலழகர். 'தலையளி' என்பது 'முகமலர்ந்து இனிய கூறல்' என்றும், 'அஞ்சாமை' - எண்ணாது செய்து நிற்றல், 'அஞ்சுதல்' - எண்ணித் தவிர்தல் என்றும், 'துணிவு' என்பது கலங்காமை என்றும், 'ஆற்றல்' என்பது மனவலி என்றும், 'நிறை' என்பது 'மறை பிறர் அறியாமை' என்றும், 'தஞ்சம் எளியன்' என்பன ஒரு பொருட் பன்மொழி என்றும் 'காத்தல்' என்பது முன்னறிந்து பரிகரித்தல் என்றும், 'ஒண்மை' என்பது அறிவுடைமை என்றும், 'மாசு' என்பது காமவெகுளி மயக்கங்கள் என்றும், 'அடங்குதல்' என்பது மனம் புறத்துப் பரவாது அறத்தின் கண்ணே நிற்றல் என்றும், 'செவ்வி' என்பது தன்குறை கூறுதற்கேற்ற மனம் மொழி முகங்களின் இனியனாங்காலம் என்றும், 'நிறைமொழி' என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி என்றும், 'தானம்' என்பது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல் என்றும், 'தவம்' என்பது மனம் பொறி வழிப் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின என்றும், 'குற்றம்' என்பது தீயன சிந்தித்தல் என்றும், 'சிறை' என்பது மதிலும் வாயில் காவலும் முதலாயின என்றும், 'நிறை' என்பது நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல் என்றும், 'தூய்மை' என்பது மனமாசின்மை என்றும், 'அழுக்காறு' என்பது பிறர் ஆக்கம் பொறாமை என்றும் துல்லியமாக வரையறை செய்யப் பெறும்.

உரையாசிரியர் என்ற முறையில் பரிமேலழகர்மேல் கூறப்பெறும் ஒரு பெரிய குற்றச்சாட்டு அவர் திருக்குறளை வடநூல் வழக்கையும் வேத நெறியையும் அடிப்படையாக வைத்துப் பார்க்கிறார் என்பதே. ஆனால் அவர் உரையை ஆழ்ந்து கற்கும்போது இக்கருத்து மறுபார்வை செய்யப்பட வேண்டியதென்பது புலனாகும். வடநூல் வழக்கிலிருந்து வள்ளுவர் மாறுபடும் போதெல்லாம் அதனைச் சுட்டும் பரிமேலழகர், வள்ளுவர் வழியே தக்கதென்று வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தெரிவிக்கிறார்.

உரைப்பாயிரத்தில், "மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு" என்று கூறி வள்ளுவர் அறம், பொருள், இன்பம் பற்றி மட்டும் பேசி, வீடு பற்றிப் பேசாததை "வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என்ற கூற்றின் மூலம் ஆதரிப்பார். பெருங்காப்பியங்கள் நான்கு உறுதிப்பொருள்களைப் பற்றிப் பேசவேண்டும் என்ற மரபையும் பரிமேலழகரின் முடிவு நிராகரிப்பது வெளிப்படை. நூல்கள் யாவும் அறம், பொருள், இன்பம் பற்றி மட்டுமே பேச முடியும் என்ற விளக்கம் ஏற்புடையதே. வீடு பற்றிப் பேச முயன்ற மேலை நூல்கள் தோல்வியடைந்தனவென்பதும் கருதற்குரியது.

அறத்தை "மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்" என்றும், ஒழுக்கத்தை "அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்" என்றும், வழக்கை "ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார்

அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேல் செல்வது, அது கடன்கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்" என்றும், தண்டத்தை "அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழிஇயினாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக ஒறுத்தல்" என்னும் வடநூல் மரபுப்படி வரையறை செய்யும் பரிமேலழகர் வள்ளுவர் வழக்கு, தண்டம் பற்றிப் பேசாது ஒழுக்கம் பற்றி மட்டும் பேசுவதுதான் சரியென்பார். அதற்கு அவர் கூறும் காரணங்கள் சிறப்பானவை.

"வழக்கும் தண்டமும் உலகநெறி நிறுத்துதல் பயத்தலாவதல்லது ஒழுக்கம் போல மக்கள் உயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவாகலானும் அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியாலும் தேயவியற் கையானும் அறியப்படுதலானும் அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் ஒழுக்கமே அறமென எடுத்துக் கொள்ளப்பட்டது" என்பார். வழக்கும் தண்டமும் உறுதிபயக்கும் சிறப்பற்றவை யென்றும் அவை உணர்வு மிகுதியாலும் தேயவியற்கையாலும் அறியப்படுதலால் நூல்கள் பேச வேண்டியதில்லையென்றும் அவர் கூறும் போது அவை பற்றி மிகுதியாகப் பேசும் மனுநூலையும் கௌடலியத்தையும் அவர் குறைகூறுவது தெளிவு. ஒழுக்கமே அறமென்று எடுத்துக்கொள்ளும் குறளின் ஆசிரியரைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் என்று அழைப்பதால் அவர் வழக்குப் பற்றியும் தண்டம் பற்றியும் பேசும் மாந்தர்களை விட மிக மேலானவர் என்பதை வலியுறுத்துகிறார்.

ஒழுக்கம் என்பது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவா தொழுகல்" என்று முதலில் கூறும் பரிமேலழகர் பின்னால் அறமானது நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலையால் கூறப்பட்டது" என்று வள்ளுவர் செயலைப் பாராட்டுகிறார். எல்லா வருணத்தாருக்கும் ஒத்த பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் எனும் இருநிலைகளே பேசுதற்குரியன, மற்ற நிலைகள் அல்ல என்பதையும் பரிமேலழகர் சுட்டிக் காட்டும் போது ஏனைய நிலைகள் பற்றிப் பேசும் வட நூல் மரபைப் புறக்கணிப்பதைக் காணலாம்.

"கடவுள் வாழ்த்து" எனும் அதிகாரத்தின் முன்னுரையில் அது மூவராகிய முதற்கடவுளைப் பற்றியது என்று கூறும் அவரே முதற் குறள் கூறும் பொருளுக்கு ஏற்புடைக் கடவுளென்றும் பொருத்தமின்றித் தொடங்குவார்.

"சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான், அம்மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென உணர்க" என்பார்.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பாடுபொருள் களைச் சத்துவம், ராஜசம், தாமசம் ஆகியவற்றோடும் சிவன், திருமால், பிரம்மாவோடும் வலிந்து பொருத்திக் காட்டிக் கடவுள் வாழ்த்து அம்மூவரையும் பற்றியது என்று கூறிவிட்டுத் தனிப்பாடல்களுக்கு விளக்கம் அளிக்கும்போது அம்மூன்று பண்புகளையும் மூன்று கடவுளரையும் பரிமேலழகர் புறக்கணித்து விடுகிறார், அல்லது மறந்து விடுகின்றார். ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இருவினையும் சேரா இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன் என வள்ளுவர் பயன்படுத்தும் தொடர்கள் எவ்வாறு சிவனையோ, திருமாலையோ, பிரம்மாவையோ அல்லது மூவரும் இணைந்த ஒரு கடவுளையோ குறிக்க முடியும் என்றோ, அவை சத்துவ, ராஜச, தாமச குணங்களை எவ்வாறு சுட்டுகின்றன வென்றோ பரிமேலழகர் விளக்க முன்வரவில்லை. "மலர்மிசை ஏகினான்" எனும் தொடருக்கு "மலரின் கண்ணே சென்றவன்" என்று பொருள் கூறிவிட்டு "இதனைப் பூமேல் நடந்தான்" என்பதொரு பெயர் பற்றிப் பிறிதொரு கடவுட்கேற்று வாருமுளர்" என்று அருகக் கடவுளைப் போற்றுவார் பற்றிக் கூறி அதற்கு எவ்வித மறுப்பும் சொல்லாது மேற்செல்கிறார். எக்கருத்தையும் மறுக்க விரும்பினால் மறுக்காது விடார் பரிமேலழகர் என்பதை அவர் உரையை ஆழ்ந்து படிப்பவர் அறிவர்.

"அறவாழி அந்தணன்" என்னும் தொடருக்கு அறக்கடலாகிய அந்தணன் என்று பொதுவாகப் பொருள் கூறி அவர் யார் என்று தாம் சொல்லாமல் "அறவாழி என்பதனைத் தரும சக்கரமாக்கி

அதனுடைய அந்தணன் என்று உரைப்பாரும் உளர்" என்று மீண்டும் அருகனையோ புத்தனையோ சுட்டும் பரிமேலழகர் அவர் கூற்றை மறுக்காது வேறு பொருள் பற்றிப் பேச முனைகிறார். "எண்குணத்தான்" என்னும் தொடருக்கு "எண்வகைப்பட்ட குணங்களை உடையான்" என்று பொதுவாகப் பொருள் கூறி அவன் யாரென்று தாம் சொல்லாமல் பின்வரும் விளக்கத்தில் சைவ ஆகமத்துக் கூறப்பட்ட எட்டுக் குணங்களைப் பட்டியலிட்டு விட்டு இவை "அணிமாவை முதலாகவுடையன எனவும், கடையிலா அறிவை முதலாகவுடையன எனவும் உரைப்பாரும் உளர்" என்று வேறு சமயக் கோட்பாடுகளைச் சுட்டி அதனையும் மறுக்காது, "தாளை வணங்காத்தலை" என்ற தொடரை எடுத்துக் கொண்டு, "காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல் வைத்துக் கூறினார், கூறினாரேனும் இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதூஉங்கொள்க" என்று சிலப்பதிகார வரிகளை நினைவூட்டிச் செல்வார்.

இத்தகைய விளக்கங்களெல்லாம் "கடவுள் வாழ்த்தில்" வரும் இறைவன் எச்சமயத்திற்கும் உரியவன் அல்லன் என்ற அவரது உள்ளக்கிடக்கையை அவர் உணர்ந்த உண்மையை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவதையே காட்டும். ஆனால் அவ்வுண்மையை மறைத்து அவ்விறைவன் சிவனோ, திருமாலோ, பிரம்மனோ வென்று ஆணித்தரமாகக் கூறி இல்லாத சான்றுகளை வலிந்து கொண்டுவந்து அக்கருத்தை அவர் நிலைநாட்டவும் விரும்பவில்லை.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

எனும் குறளுக்கு அவர் தரும் உரையில்,

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன அறிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க உலகத்தோடு ஒட்டவென்றும் .. . கூறினார். (பரிமேலழகர் 140) எனும் விளக்கம் காணப்படுகிறது. மனு முதலிய அறநூல்களுள் இக்காலத்திற்கு ஏலாதன பலவுண்டென்பதையும் அவை பேசாதவற்றுள் உயர்ந்தோர் ஏற்பவை பலவுண்டென்பதையும் இவ்விளக்கம் உறுதிப் படுத்துகிறது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

எனும் குறளுக்குரிய உரையில்,

"எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின், ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும் அவர் எல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலையாய அறமென்றும் கூறினார்" (பரிமேலழகர் 322) என்று கூறும்போது வள்ளுவரின் சமயப் பொதுமையையும் அவர் ஒரு சமயநூல் எதனையும் சார்ந்திருக்கவில்லை என்பதையும் பரிமேலழகர் வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்கிறார்.

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்ப ஆய்ந்தவர் கோள்

என்னும் குறளில் "ஆய்ந்தவர் கோள்" என்னும் தொடருக்கு "முன் நீதி ஆராய்ந்த அமைச்சரது துணிவு" என்று வலிந்து பொருள் கொண்டு "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்" என்று தேவையின்றிச் சேர்க்கும் பரிமேலழகர் வியாழ வெள்ளிகளின் கருத்துகள் எங்கு எடுத்தாளப்பட்டுள்ளனவென்று எங்கும் மேற்கோள் காட்டவில்லை. தமது திருக்குறள் உரையில் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், நெடுநல்வாடை, சிறுபாணாற்றுப்படை, முத்தொள் ளாயிரம், வளையாபதி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, நாலடியார், நான்மணிக்கடிகை, புறப்பொருள் வெண்பாமாலை, திரிகடுகம், திருச்சிற்றம்பலக்கோவை, திருவாய்மொழி போன்ற தமிழ் இலக்கியங்களிலிருந்தெல்லாம் மீண்டும் மீண்டும் மேற்கோள்கள் தரும் பரிமேலழகர் ஓரிடத்திலேனும் மனு உள்ளிட்ட வடநூல் எதிலிருந்தும் ஒரு வரியேனும் மேற்கோளாகத் தரவில்லை யென்பது நாம் கருத்தில் இருத்த வேண்டிய வியப்புக்குரிய செய்தியாகும். காமத்துப்பாலுக்கான முன்னுரையில் "சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச் சுவை

யொன்றனையே" என்று போசராசன் வடநூலுள் கூறுவதாக நல்ல தமிழில் எடுத்துரைப்பார். ஏன் அடிக்கடி அவர் சுட்டும் வடநூலார் யாரிடமிருந்தும் அறம் பற்றிய கோட்பாட்டினை எடுத்து இதைத்தான் வள்ளுவர் வழிமொழிகிறார் என்று காட்டவில்லை என்ற கேள்வி அவர் உரையைப் படிப்பார் எவருக்கும் எழவே செய்யும்.

காமம் வெகுளி மயக்கமிவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்

எனும் குறள் உரையில்,

"அநாதியாய அவிச்சையும் அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும் அது பற்றி எனக்கிது வேண்டு மென்னும் அவாவும் அது பற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும் அது பற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார்." என்று சொல்லும் பரிமேலழகர் திருவள்ளுவரின் பகுப்பே சரியென்பதை "இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான் மூன்றென்றார்" என்று காரணம் கூறி விளக்குவார்.

கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள

என்னும் குறள் விளக்கத்தில், "வடநூலார் இடக்கர்ப் பொருளாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன" என்று அவர் தெரிவிப்பது, காமசூத்திரங்களிலிருந்து திருக்குறள் வேறுபட்டிருப்பதையும் அவற்றின் விரசம் இங்கு இல்லை என்பதையும் வெளிப்படுத்தவே.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்

எனும் இறுதிக்குறளுக்கு உரை சொல்லிய பின் தமது உரையை இவ்வாறு முடிக்கிறார்: "ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம் பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவியென நால்வகைத்தாக்கிக் கூறினார்; அவற்றுட் செலவு - பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை - படர் மெலிந்திரங்கல் முதல் நிறையழிதல் ஈறாயவற்றுள்ளும், விதுப்பு - அவர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும், புலவி - நெஞ்சோடு புலத்தல் முதல் ஊடலுவகை ஈறாயவற்றுள்ளும் கண்டு கொள்க. அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்தினானாய நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாரால் எனின் - அஃது அறம் பொருள் இன்பமென்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவு அன்மையானும் முனிவராணையான் ஒருகாலத்து ஓர் குற்றத்தால் உளதாவது அல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டொழிக்கப்பட்டது என்க."

இவ்விளக்கமும், திருக்குறள் வடநூலிலிருந்து வேறுபட்டிருப்பதைக் காட்டுவதற்கே.

பரிமேலழகர் வடநூல் என்றும் வடநூல்மதம் என்றும் மனு முதலிய நூல்கள் என்றும் வியாழ வெள்ளிகள் என்றும் குறிப்பிடுகின்றவற்றின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்து அவர் திருக்குறளுக்கு உரையெழுதியிருக்கவேண்டும். எனவே அவற்றின் கருத்துகள் யாவும் திருக்குறளில் இடம்பெற்றிருத்தல்போல் ஆங்காங்கே அவற்றின் பெயர்களை மட்டும் சொல்லிவிட்டு, அவற்றிலிருந்து மேற்கோள் ஏதும் காட்டாமல் அவற்றிலிருந்து குறள் வேறுபடும் இடங்களில் எல்லாம் குறளின் கோட்பாடுகளே சரியென்று காட்டி வள்ளுவரே உண்மையில் தெய்வப் புலவர் என்பதை நிலைநாட்டுகிறார். வடநூல் வடநூல் என்று மீண்டும் மீண்டும் சொல்லுகிறாரே தவிரப் பரிமேலழகர் அறிவிலும் நெஞ்சிலும் நிறைந்து நின்ற அவர் உரைக்கு உயிர்ச்சத்து அளிப்பவை பழந்தமிழ் இலக்கியங்களே என்பதற்கு அவற்றிலிருந்து அவர் தரும் ஏராளமான மேற்கோள்களே சான்றாகும்.

திருக்குறளில் காணும் தொடரியற் புதுமைகள்



முனைவர் பொற்கோ,
சென்னை.

திருவள்ளுவப் பெருந்தகை அவர்கள் மிகப் பல வாழ்வியல் உண்மைகளை அழகாக முறைப்படுத்தி எளிய மொழி நடையில் எளிய யாப்பில் வழங்கியிருப்பது இலக்கிய உலகத்திலேயே ஒரு தனிச்சிறப்புக்குரிய பணி என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை எழ இடமில்லை. மொழிநடையாலும், கூறும் கருத்தாலும் அறிஞர்கள் எல்லோரும் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்குக் கட்டுப் பட்டவர்தாம் என்பது ஆய்வாளர்கள் எல்லோரும் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய உண்மை. சில அறிஞர்கள் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவராக இருக்கலாம். வேறு சில அறிஞர்கள் தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்கலாம். தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு அறவே கட்டுப்படாத அறிஞர்கள் யாரும் இதுவரை இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழல் வாழ்ந்த ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி எழுதிய நூல் வேறொரு சமுதாயச் சூழலில் வாழும் மக்களுக்கு முழுமையாகப் பொருந்தி வரும் என்று உறுதி இல்லை. அப்படி முழுமையாகப் பொருந்தி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முறையாகாது. எவ்வளவுக்குப் பொருந்தி வருகிறதோ அவ்வளவுக்கு அது பாராட்டத்தக்கது.

சமுதாயச் சூழல் மாறுபட, ஒரு சமுதாயம் வாழ்வு பற்றிக் கொண்டிருக்கிற கருத்திலும், மதிப்பிலும் கூட மாற்றங்கள் ஏற்படும். அதே போலக் கலை வெளிப்பாட்டு முறையிலும் மொழிநடையிலும், சுவைப் பாங்கிலும் கூட மாற்றங்கள் ஏற்படும்.

இந்தப் பின்னணியில் இலக்கியங்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும்போது மிகச் சில இலக்கியங்களே நெடுங்கால வாழ்வுக்குரிய நல்ல இலக்கியங்களாகத் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் இலக்கியங்களில் திருக்குறள் முதன்மையானதாகக் கருதத்தக்கது. சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்ட மதிப்பு மாற்றங்களுக்கு ஏற்பத் திருக்குறளில் காணும் சில கருத்துக்கள் கூட இன்றைய சூழலில் பொருந்தாதனவாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட கருத்து ஆராய்ச்சியில் இந்தக் கட்டுரை ஈடுபடவில்லை.

திருவள்ளுவருடைய மொழிநடையில் காணும் சில புதுமைகளை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கிறது. புதுமை என்பது குறிப்பிடத்தக்க வேறுபாடு என்ற பொருளில் இங்கே ஆளப்படுகிறது.

திருவள்ளுவருடைய மொழிநடையில் சிறப்பாகச் சில தொடரியல் புதுமைகளை மட்டும் இங்கே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளுகிறோம்.

> *"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்*
> *இறைவன் அடிசேரா தார்."* 1.10

இந்தத் திருக்குறளை உரைநடைப்படுத்தினால் அது, பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; இறைவன் அடி சேராதார் நீந்தார் என அமையும்.

ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறும்போது முதலில் தொடரியல் முறைப்படி அந்தச் செய்யுளை உரைநடைப் படுத்திக் கொள்ளவேண்டும். அப்படி உரைநடைப் படுத்தும்போது சில தொடரியல் விதி முறைகளுக்கு ஏற்ப அந்தச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களை வருவித்துக் கொள்ளலாம்.[1] மறைந்து நிற்கும் வேற்றுமை உருபுகளைப் பொருள் விளக்கத்திற்காக வெளிப்படுத்திக் கொள்வது போலச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களையும் பொருள் விளக்கத்திற்காக வருவித்துக்

கொள்ளுவது நமது உரையாசிரியர்கள் மேற்கொண்ட நெறிமுறைகளில் ஒன்று. மேற்காட்டிய குறளில் இறைவன் அடிசேராதார் நீந்தார் என்ற தொடர் இறைவனடி சேர்ந்தார் நீந்துவர் என்ற பொருளை உணர்த்துவதால் இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்று உரையாசிரியர்கள் உரை எழுதினர். மேற்குறிப்பிட்டது போல் உறழ்ந்து காட்டிப் பேசவேண்டிய சூழலில் ஒரு தொடரில் எழுவாயைக் கரந்து நிற்கச் செய்திருக்கிறார் வள்ளுவர். இத்தகைய சூழலில் எழுவாய் கரந்து நிற்பது தமிழ் இலக்கிய உலகில் பொதுமையான ஒன்று அல்ல. இது ஒரு புதுமை.[2]

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (28.1)

நகுதல் என்ற வினை வள்ளுவர் கால மொழிநடையில் செயப்படுபொருளை ஏற்கவல்லதாக இருந்திருக்கிறது. பூதங்கள் ஐந்தும் அகத்தே வஞ்சமனத்தான் படிற்றொழுக் கத்தை நகும் என இந்தக் குறள் உரைத் தொடர் வடிவம் பெறத்தக்கது.

"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்" (93.7)

எனச் செயப்பாட்டு வினைத் தொடரில் அமைந்த குறள் மேற்கூறிய குறளின் தொடரமைப்பை நமக்குத் தெளிவு படுத்துகிறது.

மேற்கூறிய குறளை உரைநடைப்படுத்தினால் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என அமைய வேண்டும் என்று கண்டோம். அப்படி உரைநடைப்படுத்தியும் இங்கே தொடர் முழுமை பெறாமல் இருப்பது கருதத்தக்கது. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் கண்டு பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்று தொடரை அமைக்கும் போதுதான் தொடர் முழுமை பெறுகிறது. இங்கே கண்டு என்ற வினையெச்சம் வருவிக்கப்பட்டது. தொடரியல் நெறிப்படி இப்படி ஒரு வினையெச்சம் மறைந்து நிற்பது மிகவும் புதுமை. பொதுவாக வினையெச்சங்கள் மறைந்து நிற்பதில்லை. வெளிப்பட்டே நிற்கவேண்டும்.

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்" (28.9)

உரைநடைப்படுத்தும்போது இந்தக் குறள் கணை கொடிது, யாழ்கோடு செவ்விது, ஆங்கன்ன வினைபடு பாலால் கொளல் என அமையும். இதை மேலும் விளக்கமாக்கும் போது கணை செம்மை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன வினைபடு பாலால் ஒருவன் கொள்ளுக என இந்தக் குறள் விரியும். இந்தக் குறளில் யாழ்கோடு செவ்விது என்ற தொடரின் உதவியால் கணைகொடிது என்ற தொடரைக் கணை செம்மை கொடிது என்று விரித்திருக்கிறோம்.[3] செம்மை என்ற சொல் இங்கே வருவிக்கப்பட்டது. இந்தச் சூழல் இப்படி வருவிப்பது தமிழ்த் தொடரியலில் ஒரு புதுமையே. இந்தக் குறளில் மேலும் ஆய்விற்குரிய தொடரியல் செய்திகள் உள்ளன. அவற்றையெல்லாம் இங்கே விளக்க முயல்வது பொருந்தாது.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" (40.5)

இந்தக் குறளை உரைநடையாக்கம் செய்தால் உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்கற்றார்; கல்லாதவர் கடையரே என அமையும். மேலும் இதை விளக்கம் செய்தால் கல்லாதவர் கடையர் என்பதற்கு ஏற்பக் கற்றார் தலையாவார் என அமையுமாறு, உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்கற்றார் தலைமையர்; கல்லாதவர் கடையர் என்று தொடர் விரிவு பெறும். இங்கே தலைமையர், தலையாயவர் அல்லது மேலோர் என்ற சொல் வருவிக்கப்பட்டது. தலையாயவர் கடையர் என்ற சொற்கள் இங்கே பயனிலைகளாக நின்றன. பயனிலையைக் கரந்து மொழிதல் இங்கே நாம் காணும் புதுமை.[4]

"நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது" (87.4)

இந்தக் குறள் உரைநடையாக்கம் பெறும்போது வெகுளி நீங்கான், எஞ்ஞான்றும் நிறையிலன், யாங்கணும் யார்க்கும் எளிது என அமையும். பொருள் விளக்கம் பெற மேலும் விரித்துரைக்கும்போது இக்குறளின் உரைத்தொடர், ஒருவன் வெகுளி நீங்கான், எஞ்ஞான்றும் நிறையிலன், அவனை வெல்லுதல் யாங்கணும் யார்க்கும் எளிது என்று அமையும். இந்தத் தொடரில் அவனை வெல்லுதல் என்பது வருவித்து உரைக்கப்பட்டது. இந்தச் சூழலில் இவ்வாறு எழுவாயைக் கரந்து மொழிவது தமிழ்த் தொடரியலில் மிகவும் புதுமையானது. அவன் பகை யார்க்கும் எளிது எனக் கொள்ளினும் எழுவாய் கரந்து நிற்றல் காண்க.

"வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது" (87.5)

இந்தக் குறளின் உரைநடையாக்கம் வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான், பழிநோக்கான் பண்பிலன், பற்றார்க்கு இனிது என அமையும். பொருள் விளக்கத்துக்கு மேலும் தொடரை விரித்துரைக்கும் போது ஒருவன் வழிநோக்கான் வாய்ப்பன செய்யான், பழிநோக்கான், பண்பிலன் அவனுடைய பகை பற்றார்க்கு இனிது என அமையும். இங்கே அவனுடைய பகை என்ற தொடர் இனிது என்ற பயனிலைக்கு எழுவாயாக வருவித்து உரைக்கப்பட்டது. இப்படி இத்தகைய சூழலில் எழுவாய்த் தொடரை வருவித்து உரைப்பது தமிழ்த் தொடரியலுக்கு மிகவும் புதுமையானது.

"பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று" (88.1)

இந்தக் குறள் தொடரமைப்பில் மிகவும் சிக்கலானது. இதை உரைநடையாக்கம் செய்யும்போது அது 'பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று' என அமையும். பண்பில்லாத ஒன்றை ஒருவன் வேண்டற்பாலது அல்லன் என்றிருந்தால் குழப்பம் இல்லை. இந்தச் சிக்கலைப் பரிமேலழகர் மிக நன்றாகக் கவனித்திருக்கிறார். வேண்டற்பாற்று அன்று என்ற பயனிலைக்கு ஏற்ப நீதி நூல் என்று எழுவாயை வருவித்து அவர் உரை கூறுகிறார். அவர் கருத்துப்படி இந்தக் குறளின் உரைத் தொடர்விரி பின்வருமாறு அமையும்.

'நீதிநூல் பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நலகையேயும் வேண்டும் பான்மையது அன்று.'

இங்கே நீதிநூல் என்ற எழுவாயை வருவித்து உரைத்தது நன்கு கவனிக்கத்தக்கது. இங்கே கரந்து நின்ற எழுவாய் அதுதானா?

இப்படி ஐயத்துக்கு உரிய வகையில் வள்ளுவர் எழுவாயைக் கரந்து மொழிந்திருப்பாரா? இவை ஆராயத்தக்கன.

திருவள்ளுவப் பெருந்தகை மிகுந்த புலமை வாய்ந்தவர் என்பதும் அவருடைய எழுத்துக்கள் கருத்துச் செறிவும் சிந்தனைத் தெளிவும் உடையவை என்பதும் எல்லோரும் ஒப்பத்தக்க உண்மைகள். அவருடைய சொல்லாட்சியிலும் தொடரியல் முறையிலும் நாம் காணும் தனித் தன்மைகள் மேலும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயத்தக்கன. இப்படிப்பட்ட ஆராய்ச்சி திருவள்ளுவரின் திருவுள்ளத்தை உள்ளது உள்ளவாறு புரிந்து கொள்ள உறுதுணையாக அமையும். இத்தகைய ஆய்வுகள் இனித்தான் நிகழவேண்டும்.

குறிப்புகள்

1. 'நான் அவனைப் பார்த்து அவனோடு பேச விரும்புகிறேன்' என்ற தொடரில் அவனோடு என்பது கரந்து நின்று அந்தத் தொடர் 'நான் அவனைப் பார்த்துப் பேச விரும்புகிறேன்' என அமையலாம். உருபுகள் மறைந்து நிற்பது பற்றி நம் இலக்கணப் புலவர்கள் ஒரளவுக்கு ஆராய்ந்து விதியமைத்திருக்கிறார்கள். சொற்கள் மறைந்து நிற்பது பற்றி மொழியில் திட்டவட்டமாக அமைந்து கிடக்கும் விதிகளை இனித்தான் ஆராய்ந்து தெளிவாக விளக்கவேண்டும்.

2. பொதுவாக உரையாடலில் எழுவாய் கரந்து நிற்பது இயல்பு. இன்னார் இது செய்வர்; இன்னார் இது செய்யார் என இரண்டு செய்திகளை உறழ்ந்து காட்டும்போது எழுவாய் மறைந்து நிற்றல் மிகவும் அரிது. மறைந்து நிற்பது இங்கே காணும் புதுமை.

3. 'யாழ்கோடு' என்பதை ஒரு தொகையாகக் கொண்டால் அது செவ்விது என்பதற்கு எழுவாயாகும். அது தொகையாயின் 'யாழ்க்கோடு' என ஒற்று மிகவேண்டும் என எதிர்பாக்கிறோம். இந்தச் சிக்கல் மேலும் ஆராயத்தக்கது.

4. மொழியில் பயனிலை கரந்து நிற்றல் மிகமிக அரிது. இந்தக் குறளுக்கு வேறு விளக்கம் இருக்குமோ என்று கருதவேண்டியுள்ளது. ஆராயவேண்டும்.



திருவள்ளுவமும் மேலாண்மைக் கோட்பாடுகளும்



பேராசிரியர் டாக்டர் கா. அரங்கசாமி
தாராபுரம்

திருவள்ளுவம் பற்றிய கருத்துரைகளாகப் புலவர்பெருமக்கள் பலர் கூறிய தனிப்பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள், மதுரைத் தமிழ் நாகனார் என்பார் தமது பாடலில் " எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை" எனக் குறிப்பிடுகின்றார். வள்ளுவத்தை நன்குணர்ந்து கற்றவர்க்கு இக்கருத்துரை எத்தகைய உண்மையான மதிப்பீடாக அமைந்துள்ளதென்பது நன்கு விளங்கும். இத்தகு சிறப்பிற்குக் காரணம் பிறரெல்லாம் மனிதனுக்குப் புறத்தே உள்ளவைகளைப் பற்றிப் பெரும்பாலும் பேசி நிற்க, வள்ளுவர் மட்டும் மனிதனையே பேசுகின்றார். எனவே மனிதனின் அகஉணர்வு நிலைகளும், அறிவுநிலைகளும் அவற்றைப் பாதிக்கின்ற புறக்காரணிகளும் வள்ளுவத்தின் ஆய்வுப் பொருள்களாகி விடுகின்றன.

கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் மனிதன் பெற்றுள்ள புறவளர்ச்சி அற்புதமானது; அளவிடற்கரியது. மேற்கு நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும், அறிவியலில் ஏற்பட்ட வியத்தகு முன்னேற்றமும் மனித வாழ்வின் பெரும் புறநிலை மாற்றங்களை உருவாக்கிவிட்டன. சமுதாயம், அரசியல், பொருளாதாரம் முதலான பல துறைகளில் உலக மக்கள் பல வகையான சிக்கல்களை ஒருங்கிணைந்து சந்திக்க வேண்டுவதாயிற்று. உலகின் எப்பகுதியில் எவ்விதமான முரண்பாடுகள் தோன்றினாலும் அவை உலகின் பிற பகுதிகளையும் ஏதாவதொருவிதத்தில் பாதிப்பதைக் காண்கின்றோம். 'வாமன'னாக இருந்த மனிதன் 'திரிவிக்கிரம' -னாக உலகை அளப்பதைக் காணுகின்றோம். தொலைத்தொடர்புத் துறையிலும் இன்று ஏற்பட்டுள்ள வளர்ச்சி உலகையே ஒரு நகரமாக எண்ணுமளவிற்கு மாற்றியமைத்துள்ளது.

இந்நிலையில், பல்வேறு விதமான தொழில்கள் தோன்றித் துறைகள்தோறும் பல்கிப் பெருகுகின்றன. பழங்காலத்தில் சிற்றூர்களிலும் சிறுநகரங்களிலும் முடங்கிக் கிடந்த தொழில்கள் இன்று உலகளாவிய வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகப் போர்க்கருவிகள் பண்டையநாட்களில் சிறுசிறு கொல்லர்களின் உலைக் களங்களில் மனித ஆற்றலை மட்டுமே கொண்டு செய்யப் பெற்றன. ஆனால் இன்று உலகையே நிமிடக்கணக்கில் அழித்து விடக்கூடிய கொடிய ஆயுதங்களைப் பெரும் தொழிற்சாலைகளில் எந்திர நுட்பங்களோடு, நாடுகள் போட்டி உணர்வோடு செய்து குவிப்பதனையும், வணிக நோக்கோடு அவை விற்கப்படுவதையும் காண்கின்றோம். இவ்வொரு தொழில் மட்டுமல்லாமல் இன்னும் பல தொழில்கள் உலகளாவிய வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. இத்தகு வளர்ச்சி நிலைக்கேற்ப இவற்றைக் கொண்டு செலுத்தும் மனித ஆளுமையும் பல விதமான தகுதிகளைப் பெற்று உருவாகி நிற்பதனைப் பார்க்கின்றோம்.

பண்டைக் காலங்களில் இயல்துறைக் கல்வியே பலராலும் கற்கப்பட்டது. தொழில் துறை சார்ந்த கல்வி பரம்பரைப் பயிற்சியாகப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பல குழுக்களில் பெறுகின்ற அனுபவக்

கல்வியாகவே இருந்தது. அஃதாவது தொழிற்கல்வி குலக்கல்வியாகவே இருந்தது. ஆனால் இக்காலத்தில் யார் வேண்டுமானாலும் எத்துறை சார்ந்த தொழிற்கல்வியைப் பெற விரும்பினாலும் பெறுதற்கேற்ற சூழல் அமைந்துள்ளது. அவற்றுக்கான பல்கலைக் கழகங்கள் உருவாகிவிட்டன. மேலும் ஒரு துறை சார்ந்த கல்வியே நுட்ப நோக்கில் பல பகுதிகளாகப் பகுக்கப் பெற்று ஒவ்வொரு பகுதிக்கும் தனித்திறன் பெறுதற்குரிய (Specialization) வாய்ப்பும் வழங்கப் பெறுகின்றது. இவ்வகையில் தொழில் துறை சார்ந்த நுட்பங்கள் மட்டுமன்றி ஒரு தொழிலைச் சிறப்புறக் கொண்டு செலுத்துதற்கு வேண்டிய மேலாண்மையும் (Management) ஒரு கல்வியாகப் பயிலுவதற்குரிய நிலை இன்று உருவாகி உள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப வளர்ந்துள்ள இப்புதிய துறை பற்றிய சிந்தனைகள் வள்ளுவத்தில் இடம் பெற்றுள்ளனவா? இடம் பெற்றுள்ளனவெனின் "எல்லாப் பொருளும் இதன் பாலுள்ள" என்ற நாகனாரின் உறுதியான நிலைப்பாடு உயிர்ப்புடையதாகும்.

"Management" என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் "மேலாண்மை" என்ற சொல் வழங்கி வருகின்றது. இச்சொல் ஆங்கிலச்சொல்லைக் காட்டிலும் பொருள் பொதிந்த சொல்லாக விளங்குகின்றது. எச்செயலுக்கும் அல்லது எத்தொழிலுக்கும் மேல் நிலையில் இருந்து அல்லது அத்தலைமையேற்று அச்செயலை அல்லது அத்தொழிலை மேலாகச் செய்யும் ஆளும் தன்மை என்பது இதன் பொருள்.

செயலும், தொழிலும் இல்லாத மனித வாழ்க்கை எப்போதும் இருந்ததில்லை! எனில், என்று செயலும், தொழிலும் இருந்தனவோ அன்றே ஆளுமையும் உடன் தோன்றிவிட்டதெனலாம். வரலாற்றுக் காலத்தை எடுத்துக் கொண்டால் கி.மு.5000-ஆண்டளவிலேயே சுமேரியர்கள் தங்களின் அரசியல் நடைமுறை ஆவணங்களை எழுதி வைத்துள்ளனர். கி.மு.3000-ஆண்டளவிலேயே ஒரு இலட்சம் வேலையாட்களைக் கொண்டு கட்டப் பெற்ற எகிப்தியரின் பிரமிடுகளின் உருவாக்கத்திற்கு மேலாண்மை இல்லாமலிருந்திருக்க முடியுமா? இன்று நாம் புதிய பெயர்களிட்டுப் புதிய கல்வித்துறையாக வளர்ப்பதனால் மட்டும் "மேலாண்மை" நமது கண்டுபிடிப்பாகிவிடாது.

தனிமனிதனாகட்டும், சமுதாயமாகட்டும், வேறுநிறுவனங்களாகட்டும் சரியான மேலாண்மை இல்லாதபோது சீரழியக் காணுகின்றோம். தனி மனிதன் தனது பொறிபுலன்களின் மீது மேலாண்மை உடையவனாகும் போது தனிமனித ஒழுங்கு நிலை பெறுகின்றது. துறவு நிலை அடைவதற்குத் தன்னக மேலாண்மை ஒருவற்கு மிகுதியும் வேண்டப்படுகின்றது. தனிமனிதனிலிருந்து சிறு நிறுவனமாக விளங்குகின்ற குடும்ப நிலையிலும், பல குடும்பங்கள் இணைந்த சமூகம் மற்றும் நாடு என விரிந்த நிலையிலும் மேலாண்மை அவற்றின் சீர்மைக்கு இன்றியமையாததாகின்றது. சிறந்த தலைமையின் மேலாண்மையின் கீழ் தான் ஒரு வீடோ அன்றி நாடோ சிறந்த நலன்களை அடைய முடிகின்றது.

இன்று மேலாண்மை பற்றிய கல்வி பெரும்பாலும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களை நடத்திச் செல்லுகின்ற மேலாளர்களை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. எனவே அதற்கேற்ப அதன் அடிப்படைக் கோட்பாடுகளும் பேசப் பெறுகின்றன. மேலாண்மைச் செயற்பாடுகள் குறித்த பாகுபாடுகள் பலவாறாக உள்ளன. அவை நான்கிலிருந்து ஏழு பகுப்புக்கள் வரை பகுக்கப் பெறுவதுடன் அவை பெறும் பெயர்களும் சிற்சில மாற்றங்களுடன் குறிக்கப் பெறுகின்றன.

'நியூமேன்' மற்றும் 'சம்மர்' எனும் இணை ஆசிரியர்கள் மேலாண்மையை,1) திட்டமிடல்(Planning) 2) நிறுவன ஆக்கம்(Organising) 3) கொண்டு செலுத்துதல் (Leading) 4) கட்டுப்படுத்துதல் (Controlling) என நான்கு பகுப்புக்களுள் அடக்கு கின்றனர்.[1] 'ஃஎன்றிஃபயல்' என்பவர், 1) திட்டமிடல் 2) நிறுவன ஆக்கம் 3) ஆணை வழிப்படுத்தல் (Commanding) 4) ஒருமுகப்படுத்துதல் (Coordinating) 5) கட்டுப்படுத்துதல் என ஐந்தாகப் பகுக்கின்றார்.[2] 'லூதர் கியுலிக்' என்பவர் 1) திட்டமிடல் 2) நிறுவன ஆக்கம் 3) அலுவலர் நியமனம் (Staffing) 4) நெறிப்படுத்துதல் (Directing) 5) ஒருமுகப்படுத்துதல் 6) அறிக்கை அளித்தல் (Reporting) 7) வரவு செலவுத் திட்டமிடல் (Budgeting) என ஏழு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார்.[3] இங்ஙனமே, 'வாரன்ஃகெய்ன்' மற்றும் 'சோசப்மெசி' எனும் இணையாசிரியர்கள் 1) தீர்மானித்தல் (Decision- making) 2) நிறுவன ஆக்கம் 3) அலுவலர் நியமனம் 4) திட்டமிடல்

5) கட்டுப்படுத்துதல் 6) செய்திப் பரிமாற்றம் 7) நெறிப்படுத்துதல் என எழுவகையாகப் பகுப்பர்.[4]

மேற்கண்டவாறு பலரும் பலவிதமாகப் பகுத்துக் கூறுபவை மேலாண்மையின் செயற்பாடுகளே ஆம். ஆனால் இச்செயற்பாடுகளைக் கொண்டு செலுத்தும் மேலாளரின் தகுதிக்கேற்பச் செயற்பாடுகளின் திறன் அமையும். மேலாளரின் தகுதி என்பது அவரது செயலாற்றும் திறனைப் பொறுத்து அமையும். செயலாற்றும் திறன் அறிவு நுட்பத்தோடு இயைந்த தாயின் பயன் மிகுதியாகும். 'இச்செயல்திறன் ஒருவற்கு உடன் பிறந்ததாக இருக்க வேண்டுவதில்லை. அதனைப் பயிற்சியின் மூலமே பெறமுடியும்' என்ற கருத்தும் கூறப்பெறுகின்றது.[5] ஆனால் வள்ளுவப் பெருமான் இதனை ஏற்றுக் கொள்வதில்லை.

'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்' - (குறள் : 373).

என்ற குறளின் மூலம், 'எவ்வளவு நுட்பமான நூல்களைக் கற்றறிந்தாலும் ஒருவற்கு இயல்பாக இருக்கின்ற அறிவுதான் விளக்கமுறுமேயன்றிப் புதிய அறிவுத்திறன் தோன்றுதல் இல்லை' என்பதைத் தெளிவு படுத்துகின்றார். அறிவியலாளரும் நுண்ணறிவுப் பதிவு (Intelectual-powers) ஒவ்வொருவருக்கும் வேறுபட்டே அமைகின்றதென்பர். நடைமுறையிலும், பலர் கூடியிருக்குமிடத்துக் கூறப்பெறுகின்றதொரு பொருளினை அவரவர் அறிவுத்திறனுக்கேற்பவே கொள்ளுகின்றமையைக் காணலாம். எனவே மேலாண்மைக் கோட்பாடுகளின் வெற்றி அவற்றைக் கையாளுகின்ற மேலாளனைப் பொறுத்தே அமைகின்றதெனில் மிகையாகாது.

மேலாளன் என்பவன் தலைவன். தலைவனின் தகுதியே நிறுவனத்தின் தகுதியாக அமைகின்றது. மேலே பலரும் பலவாறு கூறிய மேலாண்மைக் கோட்பாடுகளைத் தொகுத்தால், அவை, 1) திட்டமிடுதல் 2) நிறுவன ஆக்கம் 3) நெறிப்படுத்துதல் 4) கட்டுப்படுத்துதல் எனும் நான்கு பகுப்புகளாக நிறைவுறும். இந்நான்கு திறத்திலும் செம்மை காணவேண்டுமாயின் தலைமை தகுதியுடையதாதல் வேண்டும். இத்தகு தகுதியுடைய தலைமைக்கு வேண்டுவன இவை, வேண்டாதன இவை என உடன்பாட்டானும் எதிர்மறையானும் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் முழுமையிலும் வள்ளுவம் பேசுகின்றது. திருக்குறளைப் பொறுத்தவரை இக்குறள் இன்னார்க்குத்தான் சொல்லப்பட்டதென முடிவு செய்ய வேண்டுவதில்லை. எடுத்துக்காட்டாகப் பொருட்பாலில் இடம் பெறும்,

'இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு' - (குறள் : 385)

எனும் குறள், 'அரசன் பொருள் வரும் வழிகளைக் கண்டு பெருக்கி, அவ்வகையில் அதனை ஈட்டித் தக்க முறையில் காத்துப் பின்பு அதனைப் பல்வேறு துறைகளுக்குப் பகுத்துக் கொடுக்க வேண்டும்' எனக் கூறுகின்றது. ஒரு நாட்டை ஆளும் தலைவனுக்கும், ஒரு நிறுவனத்தை அல்லது தொழில்துறையைக் கொண்டு செல்லும் மேலாளனுக்கும் அவ்வவர்க்கு ஏற்ற அளவில் பொருந்தும். திருவள்ளுவர் தம் காலத்திலிருந்த தலைமைக்குக் கூறிய இலக்கணம், எக்காலத்திலும், எவ்விடத்தும், எப்பெயரைப் பெற்றிருப்பினும் தலைமையாளராவோர்க்கெல்லாம் பொருந்தும் வகையில் பொதுமைப் பண்புடையதாகின்றது. இனியவை கூறல், நடுவு நிலைமை, பயனில சொல்லாமை, வெகுளாமை, கல்வி, கேள்வி, சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைக்கோடல், கண்ணோட்டம் என்பனவும் இவை போல்வன பிறவும் எல்லார்க்கும் பொருந்துவனவன்றோ?

திருக்குறளில் மேலாண்மை பற்றிய செய்தியைத் திரட்ட வேண்டுமாயின், ஆள்வினை உடைமை, தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினைசெயல் வகை, வினைத் திட்பம், வினைத்தூய்மை முதலானவற்றை ஆராய்வதுடன், இடன்அறிதல், காலம் அறிதல், குறிப்பறிதல் (பொருள்) முதலாவற்றையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இங்ஙனம் மேற்கொள்ளும் ஆய்வில் பல்கலைக்கழகங்களில் இன்றைய மேலாண்மைக்குரிய பாடத்திட்டங்களாகக் கொடுக்கப்பெற்றுள்ளவை அனைத்தும் முழுமையாக வள்ளுவம் கூற வேண்டும் என எதிர்பார்ப்பது சரியான பார்வை அல்ல! ஆனால் மேலாண்மை குறித்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கான சிந்தனைகள் வள்ளுவத்தில் இடம்பெற்றிருக்கின்றன என்பதில் ஐயமில்லை எடுத்துக்காட்டாகத் 'திட்டமிடுதல்' பற்றிய சிந்தனையை எடுத்துக்கொள்வோம்; இது குறித்த கருத்துக்களைப் பிற காணுமாறு வள்ளுவப் பெருமானின் வழி நின்று வரிசைப் படுத்தலாம்.

1) ஒரு செயலைச் செய்வதன் முன் அதனைச் செய்வதால் ஏற்படும் இழப்பையும், (பொருள், காலம், மனித ஆற்றல் முதலாயின) அச்செயல் நிறைவுறும் பொழுது கிடைக்கும் பயனையும், அப்பயன், ஏற்பட்ட இழப்புக்களை ஈடுகட்டி மிகுந்த ஊதியத்தினைக் கொடுக்கின்றதா என்பதனையும் ஆராய்ந்து செயலைத் தொடங்க வேண்டும் (குறள்-461)

2) தமக்குத் தெரிந்த, தமதிடத்து அக்கறை உள்ளோருடனும் தாம் செய்யத் தொடங்கும் செயல் பற்றிய முன் அனுபவம் உடையவரோடும் ஆராய்ந்து பார்த்துப் பின்பு தாமும் நன்கு எண்ணி ஒரு செயலைச் செய்ய வேண்டும். (குறள்-462).

3) ஆக்கம் (லாபம்) ஒன்றையே கருத்திற்கொண்டு அதனை அடைதற்குச் செலவிடும் மூலதனமே ஒருகால் அழியினும் கூடும் எனும் நிலையில் ஐயத்திற்கிடமான செயலில் அறிவுடையார் ஊக்க முடையராதல் கூடாது. (குறள்-463).

4) தமக்கு ஒரு துறைபற்றிய தெளிவு இல்லாத போது, அதனைத் தொடங்கி வீழ்ச்சியுற்று இகழ்ச்சியினைத் தேடிக்கொள்ளக் கூடாது. (குறள்- 464).

5) ஒரு செயல், அதற்கு வேண்டப்படுவனவற்றைச் செய்யாமையாலும், வேண்டப் படாதனவற்றைச் செய்வதாலும் கெட்டுவிடும் என்பதனை அறிந்து செயல்பட வேண்டும். (குறள்-466).

6) ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பே அதற்குரிய சாதக, பாதகங்களை ஆராய வேண்டும். அங்ஙனமின்றிப் பிறகு பார்த்துக் கொள்வோம் எனத் தொடங்கினால் இழுக்கே விளையும். (குறள்-467)

7) ஒரு செயலைத் தொடங்கி நடைமுறைப்படுத்தும்போது அதன் ஆக்கத்திற்குக் கண்ணும் கருத்துமாக நின்று வருந்தி உழைக்க வேண்டும். அங்ஙனம் உழையாமற் போனால் அதன் வீழ்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது. (குறள்- 468).

8) ஒரு செயலின் பயனை, அதனைத் திட்டமிட்டபடியே செயல்படுத்தும் திட்பமுடையவர் அடையமுடியும். (குறள்-666).

மேற்கண்ட கருத்துக்களோடு, இக்காலத்தார் திட்டமிடுதல் பற்றிக் கூறுகின்ற கருத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வள்ளுவத்தின் சிறப்பை நன்கு உணரலாம். திட்டமிடுதல் குறித்த இக்காலத்திய கருத்துப் பின்வருமாறு அமைகின்றது. "Of all the managerial functions, planning is considered as the most basic function. Planning refers to the rational and orderly thinking about the ways and means for the realisation of the objective of the organisation"[6] 'ஒரு நிறுவன ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைவது முறையாகச் சிந்தித்துத் திட்டமிடுதலே' என்னும் இக்கருத்தினை வள்ளுவம் எங்ஙனம் விரிவாக விளக்குகின்றதென்பதனை மேற்காட்டிய எடுத்துக் காட்டுக்களின் மூலம் அறியலாம்.

அடுத்து, 'organising' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'நிறுவன ஆக்கம்', அல்லது 'நிறுவனப்படுத்துதல்' எனப் பொருள் கொள்வது பொருந்தும். திட்டமிட்டபின் அத்திட்டத்தைச் செயற்படுத்துதற்குரிய வழிவகைகளை ஒழுங்கு படுத்த வேண்டும். அதாவது தொடங்கும் தொழிலுக்குரிய கருவிகளையும், தொழிலாளர் -களையும் ஒருங்கு சேர்க்கவேண்டும்.[7] இதனை வள்ளுவம்,

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்' (குறள்-517).

என விவரிக்கின்றது. 'இச்செயலை, இக்கருவியால், இத்தகையவன் செய்து முடிப்பான் எனத்தேர்ந்து, அச்செயலை அத்தகையவனிடம் விடவேண்டும்' என்பது இதன் பொருள். இங்குச் செயலுக்கேற்ற மனிதர்களும், செயலுக்குரிய கருவிகளும் சுட்டப்படுகின்றன.

தகுந்த கருவிகளோடு, உரிய காலத்தில் செயல்பட்டால் செய்தற்கரிய செயல் என எதுவும் இருக்கவியலாது என்பது வள்ளுவக் கோட்பாடு. இதனை,

'அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்' (குறள்-483)

என்ற குறள் விளக்கும். செயலுக்குரிய கருவிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு புறமாக, செயலுக்குரிய மனிதர்களைத் தேர்வு செய்வது ஆராய்ந்து செய்வதற்குரியதாம். பருப் பொருள்களாகிய கருவிகளைக் காட்டிலும் அறிவுப்பொருளாகிய மனிதன் சிக்கலானவன். எவ்வெவ்வகைகளில் ஆராய்ந்து தேர்ந்தெடுப்பினும் செயற்படுங்காலத்து மாறுபடும் மனிதர்கள் பலர். (குறள் 514). எனவே மனிதனை அவனது முகத்தை, குறிப்பாகக் கண்களைக் கொண்டே அளக்க வேண்டும். இதனை,

'முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்' - (குறள் : 708)

'நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற' - (குறள் : 710)

என்ற குறள்கள் எடுத்தியம்புகின்றன.

நிறுவன ஆக்கம் முழுமைபெற்றவுடன், கொண்ட இலக்கை நோக்கி அதனைக் கொண்டு செலுத்த வேண்டும். இதனை ஆங்கிலத்தில், 'Directing', 'Leading', 'Motivating', 'Actuating' எனப் பல சொற்களால் குறிப்பிடுவர். ஆனால் பொருள் ஒன்று தான். மேலாளனாகச் செயல்படுபவனின் பணிகளில் இதுவும் ஒன்றாகும். இதனை 'ஆள்வினை உடைமை' 'கண்ணோட்டம்' என்ற அதிகாரங்களைக் கொண்டு அறிய முடியும். 'குடிசெயல் வகை' எனும் அதிகாரத்தானும் சில கருத்துக்களை உணரலாம். எடுத்துக்காட்டாக ஒருவன் தான் பிறந்த குடியை உயர்த்துவதற்கு, ஆள்வினையும், ஆன்ற அறிவும் உடையனாதல் வேண்டும்.

'ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி' (கு.1022)

என்பது குறள். ஒரு நிறுவனத்தை உயர்த்த வேண்டும் என அதனை நெறிப்படுத்துகின்றவனுக்கும் இவ்விரு தன்மைகளும் வேண்டப்படுவனவல்லவா?

'கட்டுப்படுத்துதல்' (Controlling) எனும் மேலாண்மைக் கோட்பாட்டிற்கான அடிப்படைக் கருத்துக்களைத் 'தன்னால் நிருவகிக்கப் பெறும் நிறுவனத்தின் நிறை குறைகளை ஆராய்ந்து நன்மை உண்டாகும் வண்ணம் அதனைக் கட்டுப்படுத்தி ஆள வேண்டும்' என்னும் கருத்துருவாக்கத்திற்கேதுவாக,

'நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்' - (குறள்: 511)

எனும் குறள் அமைவதைக் காண்கிறோம். இதனையே வேறுவகையாக, "The function of control consists of those activities that are undertaken to ensure that the events do not deviate from the pre-arranged plans" [8] என இக்காலத்தில் விவரிக்கின்றனர்.

பொதுவாக மனிதனின் அறிவு, மனம் - இவற்றால் உருவாகும் வாழ்வு நிலைகள், ஆகியவற்றை வள்ளுவம் மிகத்தெளிவாக ஆராய்ந்து கூறிவிடுகின்றது. இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித வாழ்வின் புறநிலை பெரும் மாற்றங்களுக்குட்பட்டிருக்கின்றது என்பதனை எவ்விதத்திலும் மறுத்தற்கியலாது. ஆனால் அதன் அகநிலை மாறுபட்டுவிட்டதெனக் கூறமுடியவில்லை! கூறஇயலாதவாறு அது மாற்றங்களுக்கு உட்படுவதில்லை! – அதாவது சான்றோர் வகுத்த எல்லைகளுக்கப்பால் அது சென்றுவிடவில்லை- சென்றுவிடமுடியாது! எனவேதான் மனிதனின் அகநிலை தொடர்பானவற்றைப் பற்றி ஆராயும் போது வள்ளுவம் ஓர் அசைக்க முடியாத சான்றாதாரமாக நிற்கின்றது.

காடுகளில் மிருகங்களை உணவுக்காக வேட்டையாடிய ஆதிகாலந்தொட்டு, குடியரசு கோலோச்சும் இக்காலம் வரை ஒரு குழுவையோ, இனத்தையோ, நாட்டையோ வழிநடத்தும் ஆற்றல் தனிப்பட்ட மனித ஆளுமையாகவே இருந்துவருகிறது. அத்தகைய ஆளுமை எவ்வாறு சிறந்திருக்க வேண்டும் என்பதனை வள்ளுவத்தின் வழி நின்று வகுப்பது இக்காலத்திய மேலாண்மை பற்றிய கருத்துக்களுக்குத் தெளிவைத் தருவதாக அமையும். ஒரு சரியான மேலாண்மையை இனங்காட்டுவதே மேலாண்மை குறித்த கல்வியாகின்றது. மேற்குறித்த திட்டமிடல், நிறுவன ஆக்கம், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் என்பவை மேலாண்மையின் செயற்பாடுகளே. செயற்பாடுகள் மேலாண்மையின் தகுதிக்குத்தக்கவாறு வேறுபடுவன.

தொழில்களின் வகைமை, நிறுவனங்களின் வகைமை முதலானவற்றிற்கேற்பவும் மேலாண்மையின் செயற்பாடுகள் மாறுதல்களுக்குட்படுவன. ஆனால் மேலாண்மையை உருவாக்கும் காரணிகள் மாறுபடுவன அல்ல. சரியான மேலாண்மை நிறுவன வகைமைகளுக்கேற்பத் தன்னைத் தகுதிப் படுத்திக் கொள்ளும் திறனுடையதாம்.

மேலாண்மையை உருவாக்கும் காரணிகளாக வள்ளுவம் பிற்காண்பவைகளைக் குறிப்பிடுகின்றது. அவற்றைக் கீழ்க்காணுமாறு வரிசைப் படுத்தலாம்.

(1) மேலாண்மை அல்லது தலைமை; அன்பும், அருளும், கண்ணோட்டமும் உடையதாய் இருக்க வேண்டும். அடக்கமும், அவைஅறிதலும், அவைஅஞ்சாமையும் உடையதாய், காட்சிக்கெளியதாய், கடுஞ்சொல் இலாததாய், காலத்தையும் இடத்தையும் அறிந்து செயல்படுவதாய் இலங்க வேண்டும். மேலும், நிறைந்த கல்வி கேள்விகளில் சிறப்பெய்தி, ஊக்கத்தில் தளர்ச்சி இன்றி, உட்பகை கண்டு களைவதாய், சிற்றினம் சேராமல், பெரியோரைத் துணைக்கொண்டு செயல்படுவதாய் அமைய வேண்டும்.

(2) மேலாண்மைக்குரிய அறிவுடைமை, நன்றின்பால் உய்ப்பதாகவும், மெய்ப்பொருள் காண்பதாகவும், உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதாகவும், ஆவதை அறிவதாகவும், எதிரதாக் காக்கும் தன்மை யுடையதாகவும், அஞ்சுவதற்கு அஞ்சுவதாகவும் அமைதல் வேண்டும். இங்ஙனமிருப்பின் மேலாளனின் அறிவுடைமை எல்லாவற்றையும் உடைமையாக்குவதுடன் அதனை அரணாகநின்று காக்கவும் வல்லதாகும்.

(3) மேலாண்மைக்குரிய செயலாற்றல் தெரிந்து தெளிவதாகவும், நடுவுநிலை உடையதாகவும், செயல்வகை தெரிந்து அதற்கேற்பச் செயல்படுவதாகவும் இருப்பதோடு சோம்பலின்றித் தூய்மையைக் கடைப்பிடிப்பதாகவும் இருக்க வேண்டும். வெஃகாமை என்னும் சுயநலமின்மையும், தன்கீழ்ப் பணிபுரிவார் அஞ்சுதற்குரிய செயல்களைச் செய்யாமையும் உடையதாய், மேலாண்மை, தான் ஏற்றுக் கொண்ட செயலைத் திட்டநுட்பங்களோடு நிறைவேற்றும் தகுதியும், வல்லமையும் உடையதாய்ச் சிறப்பெய்த வேண்டும்.

இதுகாறும் குறிக்கப்பெற்றவை வள்ளுவம் கூறும் மேலாண்மைக் கோட்பாடுகளின் முழுமையல்ல. முழுமையாகக் கண்டறிய இன்னும் நுணுகி ஆராய வேண்டும். ஆனால் மேலாண்மையையும், அதன் செயற்பாடுகளையும் வள்ளுவம் கூறுகின்றதெனக் கொள்ளும் கொள்கை வலிந்து கொள்ளப்படுவதன்று. இயல்பான நிலையில் ஒரு செயலை ஆளுவோனின் தகுதிகள் என்னவாக இருக்கவேண்டும் என்பதனையே வள்ளுவம் பேசுகின்றதென்பதே உண்மை. இக்கால மேலாண்மைத் துறையைச் சார்ந்த அறிஞர்கள் தமக்கு வேண்டிய கோட்பாடுகளை மேலை நாட்டு அறிஞர்களின் சிந்தனைகளைக் கொண்டுதான் வடிவமைக்க வேண்டுமென்பதில்லை. அதற்கு வள்ளுவம் பெருந்துணைபுரியும் என்பதை உணர வேண்டும். உணர்வார்களா?

1. W.H. Newman and C.E. Summer: The Process of Management (1965), P.11.

2. Henri Fayol; General and Industrial Management (1949), P.15

3. Luther Gulick & L. Urwick(Eds) Papers on Science of Administration

4. Warren Haynes & Joseph Massie; Management Analysis and Cases, P.11.

5. P.C. Tripathy & P.N. Reddy; Principles of Management, P.7


6. Kathiresan & Radha; The Principles of Management, P.11

7. "To Organise a business is to provide it with everything useful to its functioning: Personnel, Raw materials, tools, capital. All this may be divided into two main sections, the human organisation and materials organisation"

- P.C. Tripathi & P.N. Reddy; Principles of Management, P.4

8. J.S.Chandran; Management Theory & Practice, P.17

திருவள்ளுவரின் இறைமைக் கொள்கை



திருக்குறள் செம்மல். ந. மணிமொழியன்,
மதுரை.

திருவள்ளுவரின் திருக்குறள் சாதி, சமயம், இனம், மொழி கடந்து காலத்தை வென்று நிற்கும் நூல். பல சமயத்தினரும் தம் தம் மறைநூல் என மதித்துப் போற்றும் ஒப்பற்ற அறநூல். உலகமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இறைமைக் கோட்பாடுகளைக் கூறிப் பிணக்கில்லாப் பெரும்பயன் விளைவிக்கும் சிறந்த நூல். திருக்குறள் உலகப் பொதுமறையாய், உயர் வேதமாய்க் கருதப்படுகின்றது.

வள்ளுவரின் இறைமைக் கொள்கை யாது? கடவுள் வாழ்த்து இடைச் செருகலா? பிற்காலச் சமய நம்பிக்கையினர் புனைந்துரைத்ததா? கடவுள் வாழ்த்து இடைச் செருகலன்று. வள்ளுவர் இறைமையில் நம்பிக்கையுடையவர். திருவள்ளுவரின் இறைவன், உருவ மற்றவர். திருவடிகளாகக் காணப்பட வேண்டியவர்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல உலகமும் கடவுளை முதலாக உடையது. அகரம் எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் முதற்காரணம். அகரமின்றி ஒலி பிறக்காது. பிறவொலி பிறப்பதற்கு அகரம் துணையாகின்றது. அகரம் ஒவ்வொரு எழுத்திற்கும் உடன் துணையாக நின்று உதவுவது. எல்லாப் பேச்சு ஒலிகளுக்கும் அகரம், முதலும், துணையும், முடிவும் ஆக நிற்பது. அதுபோல, வையகமும் எல்லா உலகங்களும் நிறைந்த வானகமும் இறைவனடியாகத் தோன்றி, இறைவன் துணையால் காக்கப் பெற்று இறைவனால் ஒடுங்கும் என்ற உண்மையையும் இவ்வுவமையணியில் அறிய முடிகின்றது. இறைவனே மூலமும், முதலுமாய் இருக்கின்றான் என்ற உண்மையை அறிவியல் கண்ணோட்டத்தோடு அகரம் என்ற உவமையால் அழகுற எடுத்துக் காட்டுகின்றார். எழுத்துக்கெல்லாம் முதலான அகரத்துக்கு அகரமே முதலாகும். அதுபோல, உலகனைத்துக்கும், ஐம்பூதங்களுக்கும் முதலாகும் ஆதிபகவன் தனக்குத்தானே முதலாகும்.

வாழ்வு இனிமைமிக்கதாய், இன்பம் நிறைந்ததாய், உடல் நலமும், உள்ள நலமும் பெற்று உள்ளம் மகிழ்வும் அமைதியும் நிறைந்ததாய் நிறைவாழ்வு வாழ அனைவரும் விரும்புகின்றோம். நடைமுறைவாழ்வில் நாம் விரும்பியபடி வாழ முடிகின்றதா ?

வாழ்வில் இன்பம் எவ்வளவு இயற்கையோ அதுபோலத் துன்பமும் துயரும் இயற்கை. இன்பமும், துன்பமும் இரவும் பகலும் போல் மாறி மாறி வரும். யாரும் துன்பத்திலிருந்து கவலையிலிருந்து தப்பிக்க முடியாது. தோல்வியும், ஏமாற்றமும், சோர்வும், அச்சமும் நேரும்போது, 'வாழமுடியுமா ?' என்று கலங்கும்போது, உயராற்றலுடைய இடையூறுகளை, இடுக்கண்களை அழிக்கும் மேலான எல்லா வல்லமையும் நிறைந்த ஆற்றல் மிக்க உயர்துணையை, உயிர்த்துணையை நம்பிக்கையோடு நாடுகின்றோம். "இலக்கம் உடம்பு இடும்பைக்கென்று கலக்கத்தைக் கையாறாக் கொள்ளாதாம் மேல்" என்ற நம்பிக்கை இறைவனைத் துணைக் கொண்டால்தான் முடியும். தொடர் நினைவின் வலிமை தரும் நம்பிக்கை நமக்கு ஆற்றலைத் தருகின்றது; ஆறுதல் தருகின்றது; கவலையைப் போக்குகின்றது. எவ்வகையாலும் தனக்கு நிகரில்லாத அருளாளன் தாளைச் சேர்ந்தார்க்கு அல்லது மனத்தின்கண் நிகழும் எல்லாத் துன்பங்களையும், துயரங்களையும் நீக்கவியலாது.

ஏழை, எளியவர், துன்பமும், துயரும் உடையவர் மட்டுமன்றி ஆற்றலும், பெருமையும் மிக்க அரசாள்பவர்களும், முற்றும் துறந்த துறவியர், பெருஞ்செல்வர்கள், அறிஞர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள், வலிமைமிக்கவர் அனைவரும் தங்கள் நிலையிலிருந்து தாழாது வாழவும், மேலும் மேலும் உயரவும், எதிர்பாராத விபத்து, ஆபத்துக்கள், மனத்தில் தோன்றும் அச்சங்கள் இவைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், எல்லா மனக்கவலைகளையும் மாற்றிடவும் இறைவன் துணையை நாடுகின்றனர். கடவுளை மறுப்பார்களும் உயிரச்சம் ஏற்படும்போது, பதவியிழக்க நேரிடும்போதும் தங்களைக் காத்துக்கொள்ளப் பெரும் நம்பிக்கையோடு இறைவனை இரகசியமாகப் பற்றிக் கொள்கின்றார்கள்.

முதலில் கடவுள் நம்பிக்கையற்றவர்கள், காலம் மாறும் போது, துன்பங்கள், துயரங்கள் அடுக்கடுக்காய் நேரிடும்போது, நோய்களால் பாதிக்கப்படும்போது, தாழ்வு நேரும்போது நண்பர்களால் உறவினர்களால் கைவிடப் படும்போது, தனக்கு நிகரில்லாதான் தாளைப் பற்றிக் கொள்கின்றார்கள். அறிவின் துணை மட்டும் கொண்டு நாத்திகம் பேசுகின்றவர்களும், துன்பங்கள் பேரிடியாகத் தாக்கிப் பேரிடர் ஏற்படும் போது, இதயத்தால் உணர்ந்து உண்மை அனுபவத்தால் தெளிவுபெற்றுத் தங்கள் சிற்றறிவுக்கு அப்பாற்பட்ட வாலறிவன் அற்புத ஆற்றலை உணர்ந்து மாற்றம் பெறுகின்றார்கள். மனக்கவலையை மாற்ற வல்லவன், எல்லா வல்லமையும் நிறைந்த இறைவனே என்று உணர்கின்றனர். இயற்கையின் பேராற்றலை உணர்கின்றனர்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் வீற்றிருக் கின்றான். இறைவன் தூயவர் உள்ளத்தில் மாட்சியுடன் ஆட்சி செய்கின்றான். இறைவன் என்றால் எங்கும், எதிலும் நிறைந்து தங்கியிருப்பவன் என்று பொருள். கடவுள் என்றால் எல்லா எல்லைகளையும் கடந்து நிற்பவன் என்று பொருள். எங்கும் நிறைந்தும் கடந்தும், எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் நீக்கமறத் தங்கியிருக்கும் இறைவன் பெரும் கொடைஞன்; பேரருள் மிக்கவன். வேண்டத் தக்கது அறிந்து வேண்டுவன எல்லாம் நல்குபவன்; வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம், ஈண்டு முயலப்படும். இறைவனை நோக்கி முயன்று தவம் செய்தால், இடைவிடாது உழைத்தால் வேண்டியதை வேண்டியபடி பெறலாம் என்று வள்ளுவர் உறுதியளிக்கின்றார்.

மலர்மிசை ஏகினான் என்பது பரிமேலழகர் கருத்துப்படி அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைத்த வடிவோடு சேறலே ஆகும். அன்பாய் நினைப்பவர் நெஞ்சத்தாமரையில் எழுந்தருளிய இறைவனை வழிபடுவோர் இம்மையிலும் நீடுவாழ்ந்து மேலுலகிலும் நலம்பெற்று வாழ்வார். நிலமிசை, மிசைநிலம் என்று மாற்றிப் பொருள் கண்டால் நிலமிசை என்பது இம்மை உலகில் என்றும், மிசைநிலம் என்பது மேலுலகில் எனவும் பொருள் தரும்.

இறைவன் எல்லாவற்றுள்ளும் நிறைவுள்ளவன். அதனால் தனக்கு எதிலும் வேண்டுதல், வேண்டாமை, விருப்பு, வெறுப்பு இல்லாதவன். அவனுடைய திருவடியைச் சென்று அடைபவருக்கு என்றும் துன்பங்கள், துயர்கள் தோன்றா.

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

இறைவன் ஐந்து அவாக்களும் நீங்கப்பெற்றவன்; ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவன்; இறைவன் தன்னை வழிபடுவோரின் ஐந்து புலன்களின் வழியாகத் தோன்றும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியவன்; அத்தூயவனது உண்மையான ஒழுக்க நெறியைப் பின்பற்றி நடந்திடுவார் நீடிய புகழுடன் வாழ்வர்.

இறைவனின் நல்லியல்புகளைப் பின்பற்றி ஒல்லும் வகையால் அறவினை செய்வோரிடம், புகழ்மிக்க நற்பணி ஆற்றுபவர்களிடம் அறிவை மயங்கச் செய்யும் செருக்கை ஏற்படுத்தும் நல்வினையும் தீவினையும் சேரா.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

இறைவன் பொறிவாயில் ஐந்தவித்தான். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் இல்லாதவன்.

ஒழுக்கமே கடவுள் தன்மையை வளர்ப்பது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ஒழுக்கமே உயிர். பொய்தீர் ஒழுக்கநெறியே வள்ளுவர் போற்றும் உயர்வாழ்வு. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி. நல்லொழுக்கம்

நல்லறமாகிய விளைச்சலுக்கு விதைக்கப்படும் விதை. தீய ஒழுக்கம் அப்பொழுது மட்டுமன்றி எப்பொழுதும் தீராத துன்பம் தரும். ஒழுக்க நெறி வாழ்தலே தெய்வவாழ்வு; இன்ப வாழ்வு; இனிய வாழ்வு.

அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் வள்ளுவர் அறத்தின் ஆற்றலையும், பெருமையையும் விரிவாகக் கூறுகின்றார். சிறப்பாகிய வீடுபேற்றையும், செல்வச் செழிப்பையும், வழங்குவது அறநெறியாகும். இவ்வறத்தைக் காட்டிலும் மேன்மையானது எதுவும் இல்லை.

"சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

"அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல"

அறச்செயலால் வருவதே இன்பம். அறச்செயலே புகழ்தரும். அறத்திற்கு மாறானது இன்பம் தந்தாலும், துன்பம் ஆகும். புகழையும் பெருமையையும் கெடுக்கும்.

அறக்கடவுள் நன்மை செய்பவருக்கு நன்மையையும், புகழையும், இன்பத்தையும் நல்குவார். தீமை செய்பவரை, அறவாழியாகிய படைக்கலம் அழிக்கும்; தீயோரை ஒடுக்கும்; ஒறுக்கும்.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்"

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"

அறக்கடவுளாகிய இறைவன் மறத்தை, தீமையை அழித்து நன்மையாகிய அறத்தைக் காப்பான். அறக்கடவுளாக விளங்கும் அந்தணனாகிய இறைவன் அடிபோற்றி நடப்பவர், மற்றைப் பொருளும் இன்பமுமாகிய கடல்களை இறைவன் துணைகொண்டு எளிதாகக் கடந்து செல்வர். மற்றவர் பிற துன்பக் கடலில் இருந்து மீளமுடியாது துன்புறுவர்.

எண்குணத்தான் என்ற சொல்லுக்கு உரையாசிரியர்கள் பல்வேறு பொருள் கூறுகின்றார்கள். பரிமேலழகர், பரிதியார், மணக்குடவர் ஆகியோர் எட்டுக் குணங்களையுடையவன் என்று பொருள் கொள்கின்றனர்.

தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை எட்டுக்குணங்களாம்.

எட்டுக்குணங்களையும் ஏற்றுக் கொண்டு திரு.வி.க. அவர்கள் அடியாரால் எண்ணப்படும் குணங்களை உடையவன் என்ற சிறப்புப் பொருளும் கண்டார்.

எண்குணத்தான் என்பதற்கு எளிமை வாய்ந்த குணமுடையான், அன்பருக்கு எளியன் என்ற பொருளும் உண்டு. எண் என்னும் அடி திருக்குறளில் எளிமை என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.

"எண் பொருளவாகச் செலச் சொல்லி"

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப"

"எண்பதத்தால் ஓராமுறை செய்யா மன்னவன்"

இக்குறள்களில் வரும் எண் என்ற சொல் எளிமை என்ற பொருளில் வழங்கப்படுகின்றது. இறைவன் அடிகள், யான் எனது என்னும் செருக்கறுத்து அருளும். அவ்வடிகளை வணங்குவதே செருக்கு அறுக்க உதவும் குணமாகும்.

தலைநிமிர்வு முனைப்பிற்கு அறிகுறி
தலை, தாளை வணங்குவது தாழ்மைக்கு அறிகுறி

மேலேயுள்ள தலை இறைவனின் கீழேயுள்ள திருவடிகளில் விழுவது செருக்கும், முனைப்பும் சாய்ந்து விழுந்து ஒடுங்குதலைத் தெரிவிப்பது என்றார் திரு.வி.க.

எண்குணத்தான் :– ஆதிபகவன் மூலம் அருளப்பட்ட வேதம்.

மனிதன் தலை உயிரின் அறிவையே குறிக்கும். தலையாகிய சிற்றறிவு, தாளாகிய வேதமுடன் பொருந்தவேண்டும். இன்றேல், கற்றதனால் பெற்ற அறிவில் பயனில்லை. - கா.அப்பாத்துரை

இயங்காத உடல், பேசாதவாய், மோவாத மூக்கு, காணாத கண், கேளாத செவி ஆகியவற்றால் பயன் ஏதும் விளையாது. அதுபோல எண்ணரிய பண்புகளின் இருப்பிடமாகத்திகழும் இறைவனின் திருவடியை வணங்கி நடவாதவரின் தலைகளின் நிலையும் பயனற்றது ஆகும்.

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

திருவள்ளுவர் மறுபிறப்பில் நம்பிக்கையுடையவர்; ஒருயிர் பல பிறப்பு எடுக்கும் என்று கருதுபவர். இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள்,

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்கள், பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும்; மற்றவர் அப்பிறவிக்கடலைக் கடக்கமுடியாது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

திருவள்ளுவர் அறக்கடலாய் விளங்கும் இறைவனைச் சார்ந்து பேரா இயற்கை பெற்று இனிது வாழ, பிறவாநிலை பெற்றுப் பேரின்பம் காணக் காட்டும் வழிமுறைகள் யாவை?

இறைவன் ஒருவன் உண்டு என்றுணர்ந்து வாழ வேண்டும். துன்பங்கள் துயரங்கள் நீங்கி இன்புற்றுவாழ, நிலமிசை புகழோடு நீடு வாழ, அச்சம், ஆபத்து நீங்கி வாழ, இறைவனின் துணை வேண்டும். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, வாழ்வில் பயனடையப் பிறப்பு முதல் இறப்பு வரை தெய்வநிலை பெற இறைவன் திருவடிகளின் துணைவேண்டும்.

கடவுள் பெயரால் நடைபெறும் சடங்குகள், சரியை, கிரியை வழிபாடு இவற்றைப் பற்றி விருப்பு வெறுப்பின்றி யாதொரு செய்தியும் திருவள்ளுவர் கூறவில்லை.

வாழ்க்கை, அறத்தின் அடிப்படையில் அமையவேண்டும். அறத்தோடு பொருந்தி நற்செயல்கள் செய்தால் எல்லா நன்மைகளும் ஆக்கமும், உணர்வும் நாடிவந்து சேரும். அறச்செயல் செய்யாது மறந்துவிட்டால் தீமையும், கேடும் நாடாமலே தேடி வந்து சேரும்.

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு."

மனம் மாசற்றதாக இருந்தால்தான், – பொறாமை, நியாயமில்லாத பேராசை, தன்னையே அழிக்கும் கடுங்கோபம், கடுமையான இன்னாச்சொற்கள் இவைகளிலிருந்து நீங்கியிருந்தால்தான் – உண்மையால் நிறைந்திருந்தால்தான் – இறைவன் நம் மனத்தகத்தே வீற்றிருப்பான்.

திருவள்ளுவர் வலியுறுத்தும் அடிப்படை நெறிகள் யாவை? பொய்யாமை (வாய்மை), கொல்லாமை, பிறர் உயிர்களைத் துன்பம் செய்யாது போற்றி வாழ்தல், அன்பும் அருளும் கொண்டு வாழ்தல், குடும்பத்திற்கும், உலகிற்கும் உரிய கடமைகள் செய்து பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பற்றற்று வாழ்தல், விதித்த நற்கடமைகள் ஆற்றல், விலக்கியன ஒழித்தல், அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையுடைய சான்றோர்களாய், இயன்றவகையெல்லாம் அறப்பணிகள் செய்து வாழ்தல், அச்சமே கீழ் மக்கள் ஆசாரம் ஆதலால் மேன் மக்களாய் அஞ்சாமை அல்லால் துணைவேண்டா என அச்சமற்று வாழ்தல், அஞ்ச வேண்டிய பழிக்கு அஞ்சி மானத்தோடு வாழ்தல், நிலையாமை உணர்ந்து நிலைத்த செயல்கள் ஆற்றி, சுவை ஒளி ஊறு ஒசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிந்து வாழ்ந்து மெய்யுணர்வு பெற்று இம்மையில் புகழோடு வாழ்ந்து, பிறவா நிலை பெற்று, என்றும் பேரின்பம் பேரானந்தம் பெற்று வாழ்தலே வாழ்வில் புகழோடு பயனுறவாழ்ந்திட திருவள்ளுவர் காட்டும் நெறிகள் ஆகும்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று."

முதல் நிலையில் சிறந்த நல்லறம் கொல்லாமையே. அதனை அடுத்த நல்லறம் பொய்யாமை போற்றி வாய்மையை மேற்கொள்ளுதல்.

"கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி."

இவ்வுலகில் உண்மை உணர்த்தும் நூல்களைக் கற்று மெய்ப்பொருளைக் கண்டவர்கள் பிறவா நெறிக்கு முயல்வர்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு."


மனத்தைச் செம்மைப்படுத்துவது செம்பொருள். செம்பொருள்தான் கடவுள். பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும் இறைவன் திருவருள் நாடவேண்டும்.

"இன்பம் இடையறா ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்".


ஆசை என்று சொல்லப்படுகின்ற துன்பத்துள் துன்பம் கெடின் இன்பம் இடையறாது வந்து சேரும்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்".

ஒருக்காலும் நிறைவு பெறாத இயல்பினையுடைய ஆசையினை ஒருவன் நீக்கிவிடின், அவ்வாறு ஆசையை நீக்கிய நிலையே பிறவா நிலையைத் தரும். ஆசைகள் அற்ற நிலையிலே வீடுபேறு அடையலாம்.



செம்பொருள்



பேரா. இரா. சதாசிவம்,
மதுரை.

உயிர் மாயா காரியமாகிய உடம்பிலும்,பிருகிருதி மாயையின் காரியமாகிய உலகின் ஈர்ப்பிலும் வளர்வதால், "மான்கன்று நின்றுவளர்கின்றவாறே" எனத் திருமூலரும், "செம்மான் மகள்" என்று அருணகிரிநாதரும் கூறுவர். உலகம், உடல் இவற்றின் ஈர்ப்பு, உயிரை இதற்கு அப்பால் சிந்திக்கவிடாமல் ஈர்க்கிறது. மாயையின் ஈர்ப்பிலிருந்து உயிர்கள் கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் மெய்ப்பொருளைச் சிந்திக்கும் போது இறைவன் ஈர்த்து ஆட்கொள்கின்றான் என மணிவாசகரும் கூறுகின்றார்.

உலகமும் உடம்பும் தோற்றக் கேடுகளை உடையவாகலின், நிலையற்ற தன்மையுடையன என்பதை நிலையாமை என்னும் அதிகாரத்தில் விளக்குகின்றார் வள்ளுவனார். எனவே நிலையற்றவை உடம்பும் உலகமும் என்றால், நிலையான பொருள் எது? என்பதைச் சிந்திக்க வைக்கிறது. மேலும், தோற்றக் கேடுகள் அற்ற பொருள் நிலையானது என்பதை உணர்த்துகிறது.

நிலையாமையை உணர்ந்த உயிர், உடம்பின் மீது உள்ள பற்றை நீக்குகிறது. பற்றை நீக்கிய உயிர் பற்றுதற்குரிய பொருள் எது எனத் தேடுகிறது. தேடிச் செம் பொருளை மெய்ப் பொருளை உணர்கிறது. செம்பொருள் உணர்வே, உயிர் பிறப்பு இறப்பை நீக்கி, விடுதலை அடைவதற்குரிய நெறியாகும்.

இம்மெய்ப்பொருளைத் திருவள்ளுவர் 'ஆதிபகவன்' என முதல் திருக்குறளில் குறிக்கிறார். ஆதிபகவன் முதன்மையை எழுத்துக்களுக்கு அகரம் முதன்மையாக இருப்பதை உவமையாகக் காட்டுகிறார். அகர உயிர் தனித்து இயங்குகிறது. பிற உயிர்களோடு கலந்தும் நிற்கிறது. மெய் எழுத்துக்களின் இயக்கத்துக்குக் காரணமாகவும் இருக்கிறது. எனவே அகரம் ஒன்றாய் உடனாய் உயிரெழுத்துக்களுடனும் மெய் எழுத்துக் களுடனும் தனித்தும் இருத்தலினால் முதற் பொருளுடன் உவமிக்கப்படுகிறது. கடவுள் உயிர் களுடனும் தனித்தும் கலந்தும் நிற்றலினால் அகரம் உவமிக்கப்படுவதன் பொருத்தத்தை அரசன் சண்முகனார் எடுத்துரைப்பது வியப்பூட்டும் உண்மையாகும். கடவுளின் முதன்மை உணர்ந்த உயிர்கள், அவனை வழிபடுதல் ஒழுக்கம் என்பதை வலியுறுத்தி, "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என வினா எழுப்புகிறார். "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு.

கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், மெய்யுணர்தல், சமாதி நிலை அடைதல் என்பதைக் கல்வி கேள்விகளின் பயனாகக் கொள்வர். திருவள்ளுவரும் கல்வியின் பயன் பிறவிப் பிணிக்கு மருந்தாகிய அவன் நற்றாள் என்றும், அவன் தாளைத் தொழுது பிறவி அறுத்தல் வேண்டும் என்றும் விளக்குகிறார். இக்கருத்தின் விரிவை மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர், "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என விளக்குவார். கற்று என்றதனால் பலர் பக்கலினும் பலகாலும் உயர்ந்தோர் வழங்கிய மெய்ப்பொருள் தெரிதற்குரிய நூல்களைக் கற்றல் வேண்டும். மீண்டும் இவ்வுலகத்துப் பிறவா நெறிக்கு உதவும் முதற்பொருளை உணர்தற்கு உபாயம் கல்விப்பேறு; ஆகையினால், திருவள்ளுவர் முதல்திருக்குறளில் கடவுளது முதன்மையை வலியுறுத்தி இரண்டாம் திருக்குறளில் எதிர்மறை முகத்தான் வழிபடாததன் குற்றமும், கற்றுணர்தலின்

பயன் பிறவாநெறிக்குரியவனை உணர்ந்து வழிபடுதல் வேண்டும் என்பதும் வலியுறுத்துகின்றார்.

கற்றல் கேட்டலின் பயன் உள்ளம் மெய்ப்பொருளை உணர்தல். இதனை, கடவுள் வாழ்த்து மூன்றாம் பாடலான "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்னும் திருக்குறளில் வலியுறுத்துகின்றார். இக்குறளுக்கு விளக்கம் அளிக்கும் பரிமேலழகர், 'அன்பான் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேர்தலின் ஏகினான்' என்பார். இதனை மெய்யுணர்தல் என்னும் பகுதியில்

"ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாய்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்கிறார்.

உள்ள பொருளை உணர்வது உள்ளம் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றார் இவர். இதற்கு விளக்கம் தருகின்ற உரையாசிரியர் மெய்ப்பொருளை மனத்திலே தரித்து நன்றாய் ஆராய்ந்து, அதனால் முதற்பொருளான "பரப்பிரம்ம சொரூபத்தை" அறிந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்கிறார். எனவே, மலர்மிசை ஏகினான் என்ற தொடரும், ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் என்னும் தொடரும் மெய்ப்பொருட் சிந்தனையை மனம் - உள்ளம் இடைவிடாது சிந்திக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதேயாகும்.

கடவுள் வாழ்த்தின் நான்காம் திருக்குறள்,

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல" என்பதாகும்.

இடைவிடாது நினைப்பவர்க்குப் பிறவித் துன்பங்கள் உளவாகா என உரை விளக்குகிறது. இடும்பை - பிறவித்துன்பங்கள். பிறப்பாகிய துன்பம் நீங்கப் பேதைமை போக வேண்டும். பிறப்பிற்கு முதற்காரணம் பேதைமை - அறியாமை; உயிர் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கு நிமித்த காரணம் முதற்பொருளாகிய இறைவன் - செம்பொருள் ஆகும். உயிர் விருப்பு வெறுப்புகளை விட்டுத் திருவருளை இடைவிடாது பாவித்தல் வேண்டும் என்னும் உண்மையை மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தில்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்னும் குறளில் விளக்குகிறார்.

கடவுள் வாழ்த்தில்

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்றும்,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" என்றும் கூறுவார்.

இறைவனை வாழ்த்தும்போது பொருள் உணர்ந்து பொருளோடு பொருந்திய புகழைச் சொல்லுதல் வேண்டும்.

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார்"

என்பர் மணிவாசகர்.

உபதேச மொழிகளைப் பலகால் தேசிகர்பால் கேட்ட ஆற்றல் சான்ற மெய்யுணர்வுக் கேள்வி பயனுடையதாகும். கல்வி, கேள்வி, ஐம்புல அடக்கம், பொய்ம்மை நீங்கிய ஒழுக்கம் உடையவர் இடைவிடாத பக்குவ வாழ்க்கையை அமைத்தல் வேண்டும். அவரே திருவருளைப் பெறுவதற்குரியராவர்.

மேலே குறிப்பிட்ட இரண்டு திருக்குறளும் "பொருள் சேர் புகழ் புரிதல்", 'பொறிவாயில் ஐந்தவித்தல்' என்னும் திருவருள் நெறியை வற்புறுத்துகின்றன.

திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம், கடவுளது உண்மை, கற்றல் கேட்டலின் பயன், கடவுளை வழிபடுதல் என்பதை முதலிரண்டு குறளில் வற்புறுத்துகிறது. மெய்யுணர்தல் அதிகாரத்தில் ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் எனக்கேள்வி ஞானங்களின் பயன், அழியாது என்றும் உள்ள பொருளாகிய மெய்ப்பொருளாகிய உள்பொருளை உணர்ந்து அறிதல் என்றும், அவ்வாறு மெய்யுணர்வு பெற்ற வழி பேதைமையாகிய இருள் நீங்க, செம்பொருள் காட்சிதெளிவது காட்சி என்றும், அவ்வாறு தெளிந்த பொருளை இடைவிடாது மனம் நிலை திரியாமல் அம்முதற்பொருளோடு கலத்தலைச் சார்புணர்ந்து ஒழுகல் - சமாதி எனவும் உரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

திருக்குறள் முதல் குறளில் கடவுளது உண்மையையும் இரண்டாம் குறளில் கற்றலின் பயன் இறைவனை வழிபடுதல் என்பதையும் வலியுறுத்தியவர் மூன்றாம் குறளில் அவனை அன்பின் மிகுதியால் இடைவிடாது நினைத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தி நான்காம் குறளில் "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்னும்

கருத்தை விளக்குகிறார். இதனை மணக்குடவர், பொருளும் காமமும் ஆகா என்பதை வலியுறுத்தியது என்கிறார். இக்கருத்தையே மெய்ப்பொருள் உணர்ந்தோர் கடைப்பிடிப்பர் என்பதை வலியுறுத்துவதற்கு ஆசிரியர் திருவள்ளுவர் இறுதியாக "அவா அறுத்தல்" என்னும் அதிகாரத்தை அமைத்துள்ளார். பொருளும் காமமும் விடுதலே அவா அறுத்தல் ஆகும்.

இவ்வாறு, திருக்குறள் முதல் நான்கு அதிகாரம் மற்றும் துறவறவியல் ஆகிய பகுதிகளை நுட்பமாகப் பார்த்தால், கடவுளது உண்மையையும் அவனை அடையும் முறைமையையும் திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளமை தெளிவாகும்.

திருக்குறள் முதல் நான்கு அதிகாரம், துறவறவியல் ஆகியவை கடவுளையும் அவனை அடையும் வழிகளையும் தெளிவுபடுத்துகின்றன; பிற அதிகாரங்கள் உலகியலோடு உறுதிப்பொருளை நோக்கிய நெறி நிற்கும் இயமம், நியமம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

"நுண்மையும், சுருக்கமும், ஒளியுடைமையும்,
எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி,
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப"

- தொல்.செய். 170.

"நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளக்கும்
மறைமொழிதானே மந்திரம் என்ப"

- தொல்.செய். 171.

எனக்கூறிய நுட்பம் தேர்ந்து திருக்குறளை ஓதிவரின் இறையருள் தெளியலாம்.

காலமும் கருத்தும்



புலவர். ஆ. பழனி,
காரைக்குடி.

எதையும் மாற்றியமைக்கும் வல்லமை காலத்திற்கு உண்டு. மாறுதல் ஒன்றுதான் மாறாதது என்பார்கள் அறிவியலாளர்கள். அம்மாறுதல்கள் முறையாகக் காலவாரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால் வரலாறு இயல்பானதாகவும் எளிமையானதாகவும், இடைவெளியற்ற தொடர்ச்சி உள்ளதாகவும் இருக்கும். அம்மாறுதல்கள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்றால் இடைவெளிகள் நீண்டும், தொடர்பற்றும், தெளிவற்றும் இருக்கத்தான் செய்யும்.

சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்று காதையில் வரும் இசை, கூத்து தொடர்பான செய்திகள் சங்க காலத்தை ஒட்டியனவாக உள்ளன. அப்பகுதிக்கெழுந்த உரையானது பத்துப் பன்னிரண்டு நூற்றாண்டுகள் பிந்தியதாக உள்ளது. இதனால் இசை, கூத்து பற்றிய செய்திகளை நம்மால் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியவில்லை. மூலத்திற்கும் உரைக்கும் உள்ள காலஇடைவெளி நீண்டு கிடப்பதனால் கருத்துகள் விட்டிசைக்கின்றன. மூலம் தோன்றிய காலத்திற்கே சென்று உரை எழுதுவது எல்லார்க்கும் இயல்வதில்லை. மாறுதலுக்கு உள்ளான கலையின் வடிவங்கள் பெருமளவிற்குத் திரிபுற்ற காலத்தில் வாழும் உரையாசிரியன், அத்திரிபுகள் நிகழாமுன்னம் இருந்த வடிவத்தைக் கண்டறிவது கடினமானதாகி விடுகிறது.

உரையாசிரியனோ நிகழ்காலத்தை மூலத்திற்குள் ஏற்றுகிறான்; மூலமோ கடந்த காலத்தை (தான் தோன்றிய காலத்தை) விட்டு நகரமாட்டேன் என்று அடம்பிடிக்கின்றது. அந்தக் காலமும் இந்தக் கருத்தும் ஒத்துப்போக முடியவில்லை. இதனால் கால இடைவெளி மட்டுமன்று; கருத்து இடைவெளியும் தோன்றி விடுகின்றது. தோன்றவே, படிப்பவனுக்குக் குழப்பம்தான் எஞ்சுகின்றது. மூலத்தின் கருத்து வாழ்ந்த காலத்திற்கே உரையாசிரியன் செல்ல முடியுமானால் அங்கே குழப்பங்கள் தோன்ற மாட்டா. காலமும் (கடந்த) கருத்தும் (நிகழ்காலம்) முரண் நிற்க வேண்டியதில்லை; ஏனென்றால் திரிபுற்ற வரலாறு காலவாரியாகக் கூறப்பட்டிருப்பதனால்.

அந்தணர் என்றால் இக்காலத்தே பார்ப்பனர் என்று எழுதப்படுகின்றது. ஆனால் திருக்குறளோ அந்தணர் என்றால் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர் என்று பொருள் வரையறை செய்கின்றது. இந்த வரையறை கிடைக்கவில்லை என்றால் நாம் என்ன செய்வோம்? அந்தணர் என்பதற்குப் பிற்காலக் கருத்தைச் சரியானது என்று ஏற்றுக் கொண்டிருப்போம். இலக்கண நூல்களிலும் இலக்கிய நூல்களிலும் உரை முரண்பாடுகள் மிகுதியாகக் காணப்படுவதற்குப் பெரியதோர் காரணம் கால இடைவெளியே என்று அறிகின்றோம். மூலத்தை எழுதியவர்களே உரையையும் எழுதியிருந்தாலோ, மூலம் எழுந்த காலத்திலேயே உரையும் இயற்றப்பட்டிருந்தாலோ இவ்வளவு முரண்பாடுகள் இருக்க மாட்டா. இத்தகைய முரண்கள் (காலத்தால் ஏற்பட்ட) திருக்குறளில் மிகுதியாக இருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகிய 'தவம்' என்ற அதிகாரம் பற்றியும் அஃதுணர்த்தும் பொருள் பற்றியும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்றைய மனிதர்களிடம் தவம் என்றால் என்ன என்று கேட்டுப் பார்த்தால் 'காட்டுக்குச் செல்வது; சடைமுடி வளர்ப்பது; உண்ணாது உறங்காது தியானம் செய்வது; அதன் வாயிலாக இறைவன் தோன்ற அவனிடம் விரும்பிய வரத்தைப் பெறுவது' -

இப்படித்தான் பொருள் கூறுவார். ஏன் திருக்குறளின் தலைசிறந்த உரையாசிரியர் என்ற மகுடத்தைச் சூட்டிக் கொண்ட பரிமேலழகரையே கேட்டுப் பார்ப்போமே! அவர் என்ன சொல்கிறார்?

'மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும், பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை ஓம்புதல்.'

இவ்வாறு கூறுகின்றார் பரிமேலழகர். இங்கே கூறப்பட்டன எல்லாம் நம் புராணங்களிலும், விட்டலாச்சார்யா திரைப் படத்திலும் கூறப்பட்டவைதாம். இவற்றைத்தாம் நம்மில் பலர் தவம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இது தவமும் அன்று; துறவும் அன்று. திருவள்ளுவர் கூறும் தவத்தையும் துறவையும் நாம் அறிந்து கொள்ளவேண்டுமானால் சங்க இலக்கியத்தில் காணப்படும் தவம் பற்றிய கருத்துக்களையும் திருவள்ளுவர் தவம் பற்றிக் கூறும் பத்துக் குறள்களையும் நாம் மீளாய்வுக்கு உட்படுத்தவேண்டும்.

மனம் பொறி வழிப் போகாது தடுப்பதும் விரதங்களால் உண்டி சுருக்கலும், துன்பத்தைப் பொறுத்தலும் துறவிகளின் செயல் ஆதலின் தவம் துறவிகளுக்கே உரியது என்று உரையாசிரியர்கள் முடிவு கட்டிவிட்டனர். தவம் துறவிகளுக்கேயுரியது என்றால் துறவு என்றொரு அதிகாரம் கூறவேண்டிய அவசியமில்லை. மேலும் தவம் என்ற அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களையும், துறவு என்ற அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களையும் ஒப்பு நோக்கிப் பார்த்தால் பெரும் இடைவெளி மட்டுமன்று; முரண்பாடே இருப்பதைப் பார்க்கலாம். இப்பொழுது நாம் சங்க இலக்கியம் தவம் என்று எதைச் சொல்கிறது என்று பார்ப்போம்.

'அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள
விரிந்தானாச் சினைதொறூ உம் வேண்டுந்தா தமர்ந்தாடி'
(கலி - 30:1,2)

'அரிய தவத்தினைப் புரிந்தவர்கள் நுகர்ச்சியால் திளைத்து அழகு பெறுவது போலப் பரந்து விரிந்த மரங்களின் கிளைதோறும் மலர்ந்த மலர்களின் தாதினை உண்டு அழகுபெறும் வண்டுகள்' என்கின்றார். தவத்தினால் பெறும் பயன் யாது? நுகர்ச்சி என்கிறது கலித்தொகை. இன்னுமொரு கலித்தொகைப் பாடல் வேறொரு பொருளை விளக்குகின்றது.

'அடங்கருந் தோற்றத்து அருந்தவ முயன்றோர்தம்
உடம்பொழித் துயருலகு இனிதுபெற் றாங்கே'
.(கலி. 138 : 30,31)

புலனடக்கம் மனஅடக்கம் போன்ற அடக்கங்களால் அரிய தவத்தினை மேற்கொண்டோர் இந்த உடம்பை ஒழித்து உயர்ந்த உலகத்தை (துறக்கத்தைப் பெற்றது போல) அடைந்தது போல என்கின்றது இப்பாட்டு. இதில் வரும் அருந்தவம் என்பது அரிய துறவு என்று பொருள்படுகின்றது. உடம்பையும் துறப்பதுதான் துறவின் முழுமை என்பதை 'மற்றும் தொடர்ப் பாடெவன்கொல் பிறப்பறுக்கலுற்றார்க் குடம்பும் மிகை' என்பதனால் உடலை ஒழித்தல் துறவின் பயன் என்று அறிகின்றோம்.

உடம்பை ஒழிப்பது துறவில் உண்டென்றால் அது தவத்திலும் உண்டல்லவா? என்று யாரேனும் கேட்டால் இல்லை என்று விடையளிக்கின்றது நற்றிணை 226ஆம் பாடல்.

'மரஞ்சாம் மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம்'

'மாந்தர், மருந்துமரம் பட்டுப்போகுமளவிற்கு அம்மரத்தினைப் பயன் கொள்ளார்; தம் வலிமை எல்லாம் அழிந்து போமாறு தவத்தினைச் செய்யமாட்டார்கள்' என்கிறது நற்றிணை.

தம்வலிமையைக் கொஞ்சம் கொஞ்சமாக அழிப்பதற்காகவே 'விரதங்களான் உண்டி சுருக்கி' என்கிறார் பரிமேழலகர். ஆனால் நற்றிணையோ வலிமை கெடாமல் தவம் செய்யவேண்டும் என்று கூறுகின்றது. நான் மேலே காட்டியவற்றுள் கலித்தொகை முதற்பாட்டும், நற்றிணைப் பாட்டும் ஒத்த கருத்தைத் தெரிவிக்கின்றன. இரண்டாவதாகக் காட்டிய கலித்தொகைப் பாடலோ வேறொரு கருத்தை வெளிப்படுத்துகின்றது. முதலாவது நுகர்ச்சிக்குத் துணை செய்வது தவம் என்கிறது. இரண்டாவதோ துறவுக்குத் துணை செய்வது தவம் என்கிறது. ஆகத் தவம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் இருப்பதை அறிகின்றோம்.

தவத்தின் இரண்டாவது பொருளாகிய துறவு பற்றியும் தவம் நுகர்ச்சிக்குத் துணையாவது எவ்வாறு என்பது

துறவு பற்றிப் பரிமேலழகர் என்ன சொல்கிறார்? 'புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை அவற்றது நிலையாமை நோக்கி விடுதல்' என்கின்றார்.

திருவள்ளுவர் துறவிற்கு நான்கு நிலைகள் வகுப்பார்.

முதல் நிலை :

அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை. ஐந்து புலன்களை வெற்றி கொண்டு அவற்றான் வரும் இன்பங்களைத் துறக்க வேண்டும்.

இரண்டாம் நிலை :

விடல் வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு. இதுவரை உன் விருப்பத்திற்குரியனவாக எவைஎவை இருந்தனவோ அவற்றை எல்லாம் முற்றாக விடவேண்டும்.

மூன்றாம் நிலை :

இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றின்மை. துறவிக்கு இயல்பானது எது தெரியுமா? உடைமை எதனையும் பெற்றிராமைதான். புத்தர் தம்முடைய சீடர்களிடம் 'இரந்துண்ண ஒரு கப்பரை; மாற்றி உடுத்துக் கொள்ள இரண்டு துணி. இவை தவிர நீங்கள் எதனையும் உடைமையாக வைத்திருக்கக் கூடாது' என்று கூறினார். இம்மூன்றாவது நிலையையும் அவன் எய்திவிடுவானேயானால் இன்னும் ஓர் உடைமை அவனிடம் இருக்கும். அது என்ன உடைமை என்கிறீர்களா? அது அவனுடைய (அவன் ஆன்மாவினுடைய) உடல்தான்.

நான்காவது நிலை:

'மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக் கலுற்றார்க் குடம்பும் மிகை' என்று விட்டொழிப்பது. இந்த உடம்பும் மிகையானது என்று அதனையும் விட்டொழிக்கின்ற போது துறவு நிறைவு பெற்று விடுகின்றது. துறவு பற்றிய செய்தியில் திருவள்ளுவர் கருத்தும் பரிமேலழகர் கருத்தும் ஒரே மாதிரியாக இருப்பதை அறிகிறோம்.

தவத்திற்குப் பொருள் கூறும்போது பரிமேலழகர் உண்டி சுருக்கலும் உடம்பை ஒறுத்தலும் என்றல்லவா கூறினார். இங்கே திருவள்ளுவர் தவம் பற்றி என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்.

1. பகைவரை அழித்தலும் நண்பரை உயர்த்தலும் தவத்தால் நீ அடையலாம். - குறள் : 264
2. நீ விரும்பியவற்றை விரும்பியவாறே அடையலாம். - குறள்:265
3. தன்னுடைய காரியத்தைச் செய்தல் என்பது தவஞ் செய்தலே. - குறள்:266
4. சுடச்சுட ஒளிவீசும் பொன்போல் நீயும் புகழொளி வீச வாழலாம். - குறள்:267
5. தான் உயிர் கொண்டு வந்த பிறப்பிற்குரிய பயனை எவன் முழுமையாகப் பெற்றவனோ அவனை எல்லாரும் போற்றித் தொழுவார்கள். - குறள்:268
6. கூற்றத்தையும் (சாவையும்) வெற்றி கொள்ளலாம். - குறள்:269
7. உளர் (பொன், பொருள், புகழ்) ஆகலாம். - குறள்: 270

இவ்வேழு செய்திகளும் எவற்றை உணர்த்துகின்றன? தவத்தினால் மனிதன் பெறவேண்டிய பயன்களை உணர்த்துகின்றன. துறவோ மனிதன் இழக்க வேண்டியதைப் பற்றிப் பேசுகின்றது. தவமோ மனிதன் பெற வேண்டியதைப் பற்றிப் பேசுகின்றது. அடிப்படையிலேயே இவ்விரண்டும் முரண்பட்டு நிற்றலை நாம் இங்கே தெளிவாக அறிகின்றோம். அப்படி என்றால் தவத்தின் உண்மையான பொருள்தான் என்ன?

இதற்கும் கூடப் பரிமேலழகரே ஒரு சிறிய குறிப்பினை நமக்குத் தருகின்றார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் - குறள் 270

என்ற குறட்பாவிற்கு உரை எழுதும்பொழுது 'உலகத்துச் செல்வர் சிலராக, நல்கூர்வார் பலராவதற்குக் காரணம் யாதெனின் தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்', என்பார். மேலும் சிறப்புரை எழுதுமிடத்துச் 'செல்வம் நல்குரவு' என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும் குறித்து நின்றது' என்கின்றார்.

1. செல்வனாவதற்கும் வறியவன் ஆவதற்கும் காரணம் தவமே.

2. அறிஞனாவதற்கும் அறிவிலியாவதற்கும் காரணம் தவமே.

உழைப்பின் இன்னொரு பெயர்தான் செல்வம் என்பது. உழைப்பவன் செல்வனாகின்றான். உழைக்காதவன் வறியவனாகின்றான்.

உழைத்துக் கற்பவன் அறிஞனாகின்றான். கற்காமல் திரிபவன் அறிவிலியாகின்றான்.

ஆக உழைப்புதான் இங்கே தவம் என்று சொல்லப்படுகின்றதோ என்ற ஐயம் நமக்குத் தோன்றி விடுகின்றது. தவம் என்பது உழைப்புத்தான் என்பதைப் பரிமேலழகர் அறிந்திருந்ததனால்தான் வறுமைக்கும் வளமைக்கும் தவமே காரணம் என்று எழுதினார். அறிஞனாவதற்கும் அறிவிலியாவதற்கும் தவமே காரணம் என்று எழுதினார். பரிமேலழகர்க்கு இந்தக் கருத்து இல்லை என்றால் இலர் என்பதற்குத் தவம் புரியாதார் என்று எழுதியதோடு நிறுத்திக் கொண்டிருப்பார். இலர் என்பதற்கு வறியவர், அறிவிலி என்றும், உளர் என்பதற்குச் செல்வர், அறிஞர் என்றும் பொருள் எழுதியிருக்கமாட்டார். பரிமேலழகரே ஒரு ஊசலாட்டமான மனநிலையில்தான் இதனை எழுதுகின்றார். இலர், பலர் என்ற கருத்திற்கு உரை எழுதும்போது கலித்தொகை நற்றிணைக் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டும், பிற இடங்களில் அவர் காலத்து நம்பிக்கைகளைக் கொண்டும் உரை எழுதுகின்றார் என்றுதான் சொல்லவேண்டும். கலித்தொகை காட்டியது போலத் தவம் என்பது நுகர்ச்சிக்குரியதையும் குறிக்கும், துறவையும் குறிக்கும் என்பதைத் தெளிவாக வரையறுத்து உரை எழுதியிருந்தால் இந்தக் குழப்பங்கள் வந்திருக்கமாட்டா.

பிறிதோரிடத்தில் திருவள்ளுவர் 'மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு தானஞ் செய் வாரிற் றலை' (295) என்று கூறுகின்றார்.

மனத்தில் எது உள்ளதோ அதனையே வாய்வழியாக வெளிப்படுத்தும் வாய்மையாளன் என்பவன் தவத்தொடு தானஞ் செய்கின்றவர்களை விட மேலானவன் என்கின்றார்.

மனத்தில் உள்ள பொருளும் வாயில் வெளிப்படும் பொருளும் ஒன்றாகவே இருக்கவேண்டும். மாறுபாடு உடையவையாக இருக்கக்கூடாது. இதுபோலவே தவமும், தானமும் ஒன்றாகவே இருக்கவேண்டும். தொடர்பற்றவையாக இருக்கக்கூடாது. தவம் செய்கின்ற துறவியானவன் தானஞ் செய்யமுடியுமா? அவனுக்கேது பொருள். அவனே இல்லறத்தானைச் சார்ந்து தானம் பெற்று வாழ வேண்டியவனாக உள்ளான் என்பதைத் 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை' என்றும், 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' என்றும் கூறுவதனால் அறியலாம். 'மறந்தார் கொல் மற்றையவர்கள் தவம்' என்பதில் வரும் தவம் என்ற சொல்லுக்கு, துறவு என்று பொருள் கொள்ள வேண்டும். ஆனால் உரையாசிரியரோ தவம் என்று குழப்பமான பொருளையே எழுதுகின்றார். 'துறவு வாழ்வினை மேற்கொண்டவர்களின் துய்ப்புக் குரியவனவற்றைத் தருதலை விரும்பி மற்றவர்கள் துறந்தார்களோ துறவினை?' என்று பொருள் கூறுவதுதான் சரியான்தாக இருக்க முடியும்.

இங்கே நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? தானஞ் செய்வதற்குப் பொருள் தேவை. அந்தப் பொருள் துறவியிடம் இருக்கமுடியாது. ஏனெனில் அவனே பிறரைச் சார்ந்து வாழ்தலினால், பொருள் உடையவன்தான் தானம் செய்யமுடியும் என்றால் பொருளைத் தேடுவதுதான் தவம் என்று திருவள்ளுவர் கருதுகின்றாரா? மனத்தில் இருப்பதுவே நாவில் வருவதுதான் தொடர்புடையது. அதுபோல ஒருவனால் தேடப்பட்ட பொருள்தான் அவனாற் செய்யப்படும் தானமாகிறது. ஆதலின் பொருளைத் தரும் உழைப்பே இங்கே 'தவம்' என்று சொல்லப்படுகின்றது என்று எண்ணுகின்றேன்.

தவத்திற்கு இலக்கணம் கூறுமிடத்துத் திருவள்ளுவர் 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு', 261 என்று கூறுகின்றார்.

பொருள் தேடுவது, அறிவுத் தேட்டம் என்று சொல்லப்பட்ட எதனைத் தேடினாலும் அது உழைப்பு என்றே அழைக்கப்படும். உழைப்பின்றி யாரும் எதனையும் அடைய முடியாது. இவ்வாறு அவன் ஒன்றினைத் தேடுங்கால் அத்தேட்டத்தில் ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் தன்னைப் போலவே தேட்டத்தில் ஈடுபடும் மனிதர் முதல் அஃறிணை உயிர்கள் ஈறாக உள்ள எந்த ஒன்றுக்கும் குறுக்கே நின்று துன்பஞ் செய்யாமையும் தவத்திற்கு

உருவம் ஆகும் என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமானதாக இருக்கக்கூடும்.

ஒருவன் எச்செயலில் ஈடுபட்டாலும் அச்செயலில் முழு ஈடுபாட்டோடு செயல்படுவதுதான் தவம் எனப்படுகின்றது.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

– நீதிநெறிவிளக்கம்.

ஒரு செயலில் ஈடுபடுகின்றவன் கருமமே கண்ணாக இருந்து செயல்படுவதுதான் தவம் என்று கொள்ளவேண்டும். ஏனென்றால் திருவள்ளுவர் கூறும் தவத்தின் இலக்கணம் இந்நீதிநெறிவிளக்கப்பாடலில் முழுமையாக அமைந்துள்ளது.

மெய்வருத்தம் பாராமை, பசிநோக்காமை, கண் துஞ்சாமை, செவ்வி அருமையைக் கருதாமை ஆகிய இந்நான்கும் உழைப்பவன் மேற்கொள்ளவேண்டிய உற்ற நோய் நோன்றல் ஆகும்.

எவ்வெவர் தீமையையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமையும், பிறரால் இழைக்கப்படும் அவமதிப்பைப் புறந்தள்ளுதலும் ஆகிய இவ்விரண்டும் உயிர்க்குறுகண் செய்யாமையாகும். ஆகக் கருமமே கண்ணாக இருந்து கடும் உழைப்பை மேற்கொள்ளுகின்ற அந்நிலைதான் தவம் எனப்படுகின்றது என்பதை அறிய வேண்டுகிறேன்.

பிறர் செய்யும் தீமையைப் பெரிதாக எடுத்துக் கொண்டாலோ, பிறர் செய்யும் அவமதிப்பைக் கருதினாலோ எதிர்வினையாற்ற நேரிடும். அவ்வாறு எதிர்வினையாற்றினால் அது உயிர்க்கு உறுகண் செய்தலாக முடியும். இந்நீதிநெறி விளக்கப் பாடலைத் திருவள்ளுவரின் தவம் பற்றிய கோட்பாட்டை விளக்க வந்த தெளிவுரை என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

தவம் என்ற சொல் எவ்வாறு பொருள் உணர்த்துகின்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இது 'தபஸ்' என்ற வடசொல்லின் சிதைவு என்று கூறுவது பொருந்தாது. தவம் என்பது தூய தமிழ்ச்சொல். இதனை தவ+அம் = தவம் என்று பிரிக்க வேண்டும். 'தவ' என்பது மிகுதி என்ற பொருளை உணர்த்தும் உரிச்சொல்லாகும். அம் தொழிற்பெயர் விகுதி. உழைப்பின் மிகுதியை, முயற்சியின் மிகுதியை இச்சொல் விளக்குகின்றது.

'தவ' என்ற சொல் மிகுதி என்று பொருள்படுமே தவிர (மிகுதியான) உழைப்பு என்று பொருள்படுமா? என்று வினவக்கூடும். சால்பு என்பதும் உரிச்சொல்லடியாகப் பிறந்ததுதான். சால்பு எல்லை என்பதில் சால்பு என்பது சான்றோனைக் குறிக்கின்றது. சான்றோன் யார்? குணங்களால் மிகுந்தவன்தானே! சால்பு என்பது குண மிகுதியைக் குறிப்பதுபோல, தவம் என்பது உழைப்பு மிகுதியைக் குறிக்கின்றது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் தவம் என்பது தனித் தமிழ்ச்சொல்லே என்று அறியலாம்.

தவம் என்ற சொல்லின் பொருள் காலத்தால் உருமாறிப் போனதனால் சில நல்ல பாடல்கள் எல்லாம் போலிப் பொருள்களைச் சுமக்க வேண்டியதாகி விட்டன. நாலடியாரில் ஒரு பாடல். மனித வாழ்க்கையை மூன்று கூறாகப் பிரித்து, தலையாய வாழ்க்கை எது என்றும், இடையாய வாழ்க்கை எது என்றும், கடையாய வாழ்க்கை எது என்றும் விளக்கஞ் செய்கின்றது. இதோ அப்பாடல்:

"தலையே தவமுயன்று வாழ்தல், ஒருவர்க்கு
இடையே இனியார்கண் தங்கல் - கடையே
புணராதென் றெண்ணிப் பொருள்நசையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை.

வாழ்க்கை என்பது முயன்று வாழ்தல்; சார்ந்து வாழ்தல்; சாரக்கூடாத இடத்துச் சார்ந்து இழிந்து வாழ்தல் என்று முப்பகுப்பினை உடையது என்கின்றது இப்பாடல். மிகுந்த முயற்சியினை உடையவனாகி உழைத்து வாழ்தல் தலையாய வாழ்க்கை. இது முயன்று வாழ்தல் எனப்படும். தனக்கு இனியராகிய அண்ணனையோ, தம்பியையோ, மாமனையோ, மைத்துனனையோ சார்ந்து வாழ்தல் இடையாய வாழ்க்கை; முயன்றும் வாழாமல், இடையாரைச் சார்ந்தும் வாழாமல் தன்னை மதியா தாரிடத்தெல்லாம் சென்று தங்கி வாழ்வது கடையாய வாழ்க்கை எனப்படும். இதுதான் இயல்பாகப் பொருள் கொள்ளவேண்டிய முறை. ஆனால் 'தவமுயன்று' என்ற சொல்லைக் கண்ட உடனேயே தவத்தினை முயன்று செய்து என்று உரையெழுதி விடுகின்றனர். இதனால் மூலங்கள் தவறான பொருளைத் தாங்கி நிற்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றன. மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறாக மாறுபட்ட கருத்து நம்மீது

திணிக்கப்படுகின்றது. 'தவமுயன்று' என்ற தொடருக்கு 'மிக முயன்று' எனப் பொருள் கோடலே ஏற்புடையது. இதுவே உழைப்பின் மேன்மையைப் போற்றுவதுமாகும்.

தவம் என்ற சொல்லுக்கு, 'கருமமே கண்ணாகச் செயல்படுதல்' என்று நாம் பொருள் கொள்கின்றபோது இவ்வதிகாரத்தின் கீழ்வரும் பாடல்கள் பழைய பொருள்களை உதறிவிட்டுப் புதிய பொருளைப் பூணவேண்டியனவாக உள்ளன. அவ்வாறு புதுப்பொருளைக் கொண்டால் அது எப்படி இருக்கும்? இப்படித்தான் இருக்கும்.

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
   அற்றே தவத்திற் குரு.

கருமமே கண்ணாயினான் ஒருவன் அக்கருமம் செய்யுங்காலத்து ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், அக்கருமத்திற்குத் தடை செய்வார்பால் வெகுண்டு துன்பம் செய்யாமையும் தவத்தின் வடிவம் ஆம்.

2. தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
   அஃதிலார் மேற்கொள் வது

கடும் உழைப்பு என்பது அதற்குரிய உடலுறுதி, மனவுறுதி உடையார்க்கே கைகூடும். இவையில்லார் அக்கடும் உழைப்பில் ஈடுபடுவது வீண். இவர்கள் இடைக்கண் முரிந்து அம்முயற்சியில் தோற்பார். தவமுடையார் வைராக்கியமுடையார்.

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
   மற்றை யவர்கள் தவம்.

துறவினை மேற்கொண்டு வாழ்கின்றவர்கட்கு உதவுதலை விரும்பி ஏனையவர்கள் துறவினை மறந்தார்கள் போலும்.

4. ஒன்னார்த் தெறுதலும் உவந்தாரை யாக்கலும்
   எண்ணின் தவத்தான் வரும்.

முயன்று ஈட்டிய பொருள், வலிமை, செல்வாக்கு போன்றவற்றால் பகைவரை அழிக்கலாம், வேண்டிய வர்களை உயர்வு பெறச் செய்யலாம்.

'பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று' (753) என்றும், 'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃதனிற் கூரியது இல்' (759) எனப் பிறவிடத்தும் கூறுவதை ஒப்புநோக்கிக் காண்க.

5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
   ஈண்டு முயலப் படும்

எதனைக் குறித்துக் கருமமே கண்ணாகத் தொழிற்படுகின்றாரோ அதனை அவர்கள் தப்பாமல் பெறுதலால் அதனை விரும்பியோரால் அத்தவம் மேற்கொள்ளப்படும்.

6. தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
   அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு

தமக்கும் தம் குடும்பத்திற்கும், தாம் சார்ந்த சமுதாயத்திற்கும் நன்மை செய்யும் குறிக்கோளோடு அதற்குரிய செயல்களை முழு ஈடுபாட்டுடன் செய்பவர்களே தவஞ்செய்வோர் எனப்படுவர். குறிக்கோளும் ஈடுபாடும் இல்லாமல் ஒரு செயலில் இறங்குவோர் ஆசை காரணமாகத் தவறு செய்பவரே யாவார்.

7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
   சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

சுடுந்தொறும் சுடுந்தொறும் ஒளி வீசுகின்ற பொன்னைப் போலத் தாம் மேற்கொண்ட செயலில் துன்பங்கள் எதிர்வருந்தோறும் எதிர்வருந்தோறும் அவற்றை ஏற்று மேற்சென்று முயன்று வெற்றி பெறுவோரின் புகழ் பேரொளி உடையதாய்த் திகழும்.

8. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
   மன்னுயிர் எல்லாந் தொழும்

தன்னுயிரின் பயனை- அதாவது தன்னுயிரின் இயல்பாகிய உழைப்பின் பயனை முழுமையாக அடைந்தவனை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழுது வணங்கும். உடல் இயங்காதது; உயிர் அதனை இயங்க வைப்பது. ஆக உயிர் என்பது இயக்கத்தின் வடிவம். இயங்குதல் என்றால் என்ன? உழைப்புதானே. இயங்காமல் எந்தச் செயலை நாம் மேற்கொள்ள முடியும்? இதனால்தான் இங்கே உயிர் என்பதற்கு உழைப்பு என்று பொருள் உரைக்கப்பட்டது.

அறவே இல்லை என்றால் முழுமையாக இல்லை என்பதுதானே பொருள்.

இதனால்தான் 'அறப்பெற்றானை' என்பதற்கு முழுமையாக அடைந்தவனை என்று பொருள் கூறப்பட்டது. 'வகையறச் சூழாது எழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோர் ஆறு' 465 என்ற குறட்பாவில் 'அறச் சூழாது' என்ற தொடருக்கு உரைத்தாற் போலப் பொருள் கொள்க.

9. கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
   ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

சாவினை (விரைந்து வாராமல்) வெற்றிகொள்ளுதலும் கூடும், கடும் உழைப்பினால் வந்த ஆற்றலைப் பெற்றவர்கள்.

உழைப்பின் பயனால் நாம் பெறுபவை இரண்டு. ஒன்று பொருள். இரண்டு உடல்வலிமை. திரட்டிய பொருளால் அரச வைத்தியம் செய்து கொண்டும் விரைந்து வரும் சாவைப் புறங்காணலாம். உடல் வலிமை காரண மாகவும் நோய் நொடியின்றி விரைந்து வாரா வண்ணம் சாவினைப் புறங் காணலாம்.

10. இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

பொருள், அறிவு, புகழ் போன்றவற்றைப் பெற முடியாதவர்களாக மிகப்பலர் இருப்பதற்குக் காரணம் என்னவெனின் கடுமையாக உழைப்பவர்கள் சிலராகவும் உழைக்காதவர் பலராகவும் இருப்பதுதான். கடுமையாக உழைத்தவர்கள் பொருள், அறிவு, புகழ் போன்றவற்றை அடைந்து பெருமை பெறுகிறார்கள். உழைக்காதவர்களோ பொருள் வறுமை, அறிவு வறுமை, புகழ் வறுமைகளால் பீடிக்கப்பட்டு வருந்துகிறார்கள்.

புதிய பொருள் கொண்டு உரை எழுதினால் எப்படி இருக்கும் என்பதை இதுவரை கண்டோம். இது 'தவம்' என்ற சொல்லின் பழைய பொருளை மீட்டுருவாக்கம் செய்ததாகவும் அமையும். உண்மைப் பொருளைக் கண்டறிந்ததாகவும் முடியும். உரையாசிரியர்கள் கொண்டுள்ள கருத்துக்குச் சார்பாகவும், நிகழ்காலக் கருத்துக்குச் சார்பாகவும் பொருள் காண்பதனால்தான் மூலத்தொடு முரண் நிற்க வேண்டியதாகின்றது. நூல் தோன்றிய காலத்தை வரலாற்றுக்கண் கொண்டு நோக்கி உரை எழுதினால் இம்முரண்பாடுகள் தோன்ற மாட்டா. உரையாசிரியன் தன்னுடைய எல்லாச் சார்புகளையும் விட்டொழித்து விட்டு உரை எழுதப் போகும் நூலை மட்டுமே சார்ந்து நின்று உரை எழுதினால் அதுதான் உண்மை உரை. தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் உரையினுள் ஏற்றவேண்டும் என்று விரும்பினால் இத்தகைய முரண்பாடுகள் முளைக்கத்தான் செய்யும்.

திருக்குறளில் சில அதிகாரங்களின் தோற்றுவாய் உண்மைக்கு மாறாகவே அமைந்திருக்கின்றன. சில குறட்பாக்களோ தோற்றுவாயில் சொல்லப்பட்ட செய்தியோடு பொருந்தாமல் தனித்து நிற்கின்றன. இன்னுஞ் சில குறட்பாக்களோ சரியாகக் கூர்ந்து நோக்கப்படாமையால் பிழைபட்ட உரைவிளக்கங் களோடு இருள் கொண்டு நிற்கின்றன. இவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி உண்மைப் பொருளை வெளிக்கொணர வேண்டியது காலத்தின் தேவையாகும். இக் காலத்தேவையை நிறைவேற்றி வைக்க வேண்டியது தமிழறிஞர்களின் கடமையாகும்.



திருக்குறளில் பெண்ணியம்



முனைவர். ப. பழனியம்மாள்
மதுரை

முன்னுரை

பெண்ணியம் என்பது இன்றைக்கு உலகம் முழுவதும் பரவலாக வளர்ந்து வரும் இயக்கமாகும். இவ்வியக்கம் சமுதாயத்தில் நிலவியுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, சமத்துவமுடைய சமுதாயம் உருவாக வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது. சமுதாயத்தில் வாழ்கின்ற அனைத்துப் பெண்களும் ஆண்களுக்கு நிகராக எல்லா நிலைகளிலும் சமத்துவம் பெறுவதற்காகக் குரல் கொடுப்போரும் வழிகாட்டுவோரும் பெண்ணியவாதியாகக் கருதப்படுகின்றனர். இக்கருத்தின் அடிப்படையில் உலகப் பொதுமறை பாடிய தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெண்ணியவாதிகளுள் தலையாயவர் என்பதை நிலைநாட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பெண்மையின் ஏற்றம்

சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிது வென்றவர் என்னும் சிறப்பிற்கு உரியவர் வள்ளுவர். இவர் ஈரடி எழுசீர்களில் வான்மறையை யாத்துள்ளார். முதலடியில் நான்கு சீர்கள், அடுத்த அடியில் மூன்று சீர்கள். இந்த அமைப்பின் உட்பொருள் யாதெனில் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்தியவர் என்பதாகும். தமிழ்நாட்டில் பிறந்த வள்ளுவர் உலகியல் அறிவு நிறைந்தவர். சமுதாயத்தின் செம்பாதியாகத் திகழும் மகளிர் பற்றியும் பாடியுள்ளார். ஏன் பாடினார் என்றால் ஒரு பறவை விண்ணில் உயர உயரப் பறப்பதற்கு இரண்டு சிறகுகள் தேவை. அந்த இரண்டு சிறகுகளும் சமமாக இருத்தல் வேண்டும். ஒன்று பெரிதாக, மற்றொன்று சிறியதாக இருந்தால் விண்ணில் பறப்பதற்குத் தடையாகி விடும். அதுபோல் இவ்வுலகில் நல்லறங்கள் வளர்ந்து, சமுதாயம் உயர்வடைய மகளிரும் காரணமாவர் என்பதால் மகளிர் பற்றிக் காமத்துப்பாலில் பாடியுள்ளார். இவ்வாறு முப்பாலிலும் பெண்களுக்கு இடமளித்துள்ள வள்ளுவச் சான்றோன், அவர்களின் பெருமைகளையும் ஏற்றமுடன் இயம்பியுள்ளார். ஏற்றம் என்றால் சாதாரண ஏற்றம் அன்று. எடுத்துரைக்க இயலாத அளவிற்கு எண்ணிலடங்கா ஏற்றங்களைக் கூறியுள்ளார். சுருங்கக் கூறின் பெண்ணில்லையேல் இவ்வுலகில் வாழ்வில்லை என்பதுதான் வள்ளுவனின் தீர்க்கமான முடிவு. இம்முடிவைத் தேடி 1330 குறட்பாக்களையும் ஆராய வேண்டும் என்பதில்லை. மாறாக முதற்குறளே போதுமானது;

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)

என்பது முதற்குறள். ஆதி பகவன் முதற்றே உலகு என்பதால் இவ்வுலகம் ஆதிபகவனை முதலாக உடையது. இக்கருத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆதிபகவன் என்னும் இருவரில் முதலில் இடம்பெற்று இருப்பது இகர இறுதியை உடைய ஆதி என்ற சொல். இகர இறுதி இருப்பதால் இது பெண்பாற்சொல் என்பது தெளிவு. எனவே பெண்ணை முதலாக உடையது இவ்வுலகம் என்பது உறுதியாகின்றது.

பெண்ணுரிமை:

முப்பாலில் ஒன்றாகிய காமத்துப்பாலில் பெண்களின் உரிமையை வள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார். இன்பம் என்று கூறப்படுவது யாதெனில்,

கண்டு கேட்டு உண்டு உயிர்த்துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (1101)

என்று வள்ளுவர் குறிப்பிடுவதுதான் இன்பம் என்று

சுட்டப்படுகிறது. எவ்வாறு இந்த இன்பத்தை நுகர்வது என்பது தான் காமத்துப்பாலின் ஆராய்ச்சி. இக்காமத்துப்பாலில் வள்ளுவர் கைக்கிளை எனப்படும் ஒருதலைக் காமத்தைப் பற்றிப் பேசவில்லை. பெருந்திணை என்னும் பொருந்தாக் காமத்தைப் பற்றியும் கூறவில்லை. மாறாக ஒத்த காமமாகிய அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தையே வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வொழுக்கம் களவாக மலர்ந்து கற்பாக வளர்ந்து சிறக்கிறது. களவு எனப்படுவது கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தலைவனும் தலைவியும் தாமே தனியிடத்து இறைவன் அருளால் எதிர்ப்பட்டு ஒன்றுகூடி ஈருடலும் ஒருயிருமாய் இணைந்து இன்பம் துய்ப்பதாகும். இவர்களுடைய தொடர்பு இயற்கைப் புணர்ச்சி, தெய்வீகப் புணர்ச்சி, கடவுட் புணர்ச்சி என்று கூறப்பட்டது. திருவள்ளுவர் இன்பம் என்று பாராட்டுவதும் இந்தக் களவொழுக்கம்தான். இன்பம் என்பது அன்புள்ள இடத்தில்தான் நிறைந்திருக்கும். இந்த அன்பு களவொழுக்கத்தில் மட்டுமேகலப்பின்றிக் காணப்படும். மற்ற இடங்களில் அன்பினால்தான் ஒருவன் ஒருத்தியை மணக்கின்றான் என்று கூறமுடியாது. ஒரு பெண்ணின் அறிவைக் கண்டு மணக்கின்றான் என்று கூற முடியாது. ஒரு பெண்ணின் அறிவைக் கண்டு மணக்கலாம்; அல்லது அழகைக் கண்டு மயங்கலாம் அல்லது செல்வத்தைக் கண்டு இவளுடன் இணையலாம் அல்லது வீட்டிலுள்ள பெற்றோர், பெரியோர்களின் வேண்டுதலுக்காக, கட்டாயத்திற்காக அஞ்சி ஒரு பெண்ணை மணக்கலாம். ஆனால் களவொழுக்கத்தில் அன்பு ஒன்றைத் தவிர வேறு எதிர்பார்ப்புகள் இல்லை. எனவே பெரியோர் பலர் கூடிப் பெண்களை விற்றும் வாங்கியும் வழக்கத்தில் இருந்த திருமணத்தைத் திருமணம் என்று வள்ளுவர் உடன்படவில்லை. ஐம்பதாண்டுக் கிழவனும், ஐந்து வயதுக் குழந்தையும் மணப்பதைப் பிணத்தின் சடங்கென்று கூறலாமேதவிர, திருமணம் என்று திருக்குறள் சிறப்பிக்கவில்லை. அன்பற்ற இருவரை இணைவித்து ஊரறிய மங்கலநாண் அணிவித்து மணப்பறை அறைந்தால் அதைப் பிணப்பறை என்று வள்ளுவர் கருதியிருக்கலாம். அதனால் காமத்துப் பாலில் ஆணுக்கு எத்தனை உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளதோ அத்தனை உரிமைகளையும் பெண்ணுக்கும் வழங்கியுள்ளார் என்பதை,

> ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
> இருதலை யானும் இனிது (1196)

என்ற குறள் புலப்படுத்துகிறது. காவடித் தண்டின் ஒரு பக்கத்தில் பாரத்தை வைத்தால் அது துன்பம் தரும். இரு பக்கமும் சமநிகராக இருந்தால் தூக்குவது எளிது. அதே போல ஒருதலைக் காமம் துன்பமேதரும். இருவரும் ஒத்தகாமம் உடையவராயின் அது பெரிதும் இனிக்கும் என்று கூறி அன்பிலும் சமத்துவத்தை நிலைநாட்டுகிறார். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதலை உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்போடு ஒப்பிடுகிறார். இதனை,

> உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு (1122)

என்னும் குறளால் அறியலாம். தலைவியை உடம்பாக உவமித்துத் தாழ்வு கற்பிக்கிறார் எனில் அது பொருந்தாது. ஏனெனில் அவளுடன் கூடுவதே உயிர் வாழ்வதற்காக. அவள் பிரிந்து சென்றால் அது உயிர் நீங்குவதற்குச் சமம் என்று தலைவன் கூறுகிறான். இங்கு ஆண் – பெண் என்னும் சமத்துவத்தை உரையாடல் நடையில் நாடகப்போக்கில் காமத்துப் பாலில் நிலைநாட்டியுள்ளார். நாடக உறுப்பினர்களாகத் தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த நாடக உறுப்பினர்களுள் தலைவன் மட்டுமேஆண்பால் பாத்திரம், பெண்பாலர் மூவர் என்ற எண்ணிக்கையிலும் மகளிர்க்கு ஏற்றமளித்தள்ளார். இவ்வாறு இன்பத்துப் பாலில் உயிர்கள் இவ்வுலகில் இன்பத்தைப் பெற்று, துய்ப்பது எவ்வாறு என்று விளக்கியுள்ளார். இவ்வாறே,

> இன்பம் என்பது எல்லா உயிர்க்கும்
> தான் அமர்ந்து மேவற்றாகும்

என்று தொல்காப்பியம் கூறியிருப்பதால் வள்ளுவர் கூறிய கருத்துக்கள் உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும், மாந்தர்களுக்கும் பொருந்தும் என்று கூறலாம்.

மாண்புமிகு மனைவி

காதலியின் மேன்மைகளைக் காமத்துப்பாலில் கூறிய வள்ளுவர், அறத்துப்பாலில் மனைவியின் மாண்புகளையும் தாய்மையின் மேன்மைகளையும் பாடியுள்ளார். அறத்துப்பாலில் 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத் தலைப்பை வைத்துப் பெண்ணைத் துணையாகக் கூறியிருக்கிறாரே தவிர முதலாகக் கூறவில்லை என்று சிலர் மாசு கற்பிக்கின்றனர். இது கருதியே மனைவியை இல்வாழ்க்கைத் துணை என்று கூறாது. வாழ்க்கைத்துணை என்று பொதுவாகக் கூறியுள்ளார். வாழ்க்கைத் துணை என்பதால் மனைவி மணாளனது வாழ்க்கையில் அறத்திற்கும்

துணையாகிறாள்; அதனால் இல்லாள் என்று அழைக்கப்படுகிறாள். இல்லாளுக்கு இணையான ஆண்பாற்சொல் இல்லை. அவ்வாறு இருக்குமேயானால் வீட்டுத் தலைவன் இல்லான் - ஒன்றும் இல்லாதவன் என்னும் வறுமையாளனாகி வெறுமையாகக் காட்சி அளிப்பான் அல்லவா! இதற்கு மேலும் இவ்வுலகில் பெண்களுக்கு ஏற்றமளித்தவர் வேறு யாருளர்? வள்ளுவச் சான்றோர் ஒருவர் மட்டுமே என்று உறுதியாகக் கூறலாம்.

வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் தொடங்கினாலும் பெண்ணை வாழ்க்கையின் முதலாகவே கருதுகின்றார், அதனால்,

> மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

என்று கூறுகிறார் மனைத்தக்க மாண்பாவது யாது? அதற்குப் பரிமேலழகர் மனையறத்திற்குத் தக்க நற்குணங்களாவன, துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டு அருளுடையமையும் முதலாயின. நற்செய்கைகளாவன, கணவனுடைய வருவாய்க்குத் தகுந்து குடும்பம் நடத்துதல், சமையல் கலையில் தேர்ந்திருத்தல், ஒப்புரவு செய்தல் முதலாயின. எனவே இல்லற ஒழுக்கத்திற்கு இயல்பான உரிமைபூண்டவர் பெண்ணே என்பது தெளிவு. இல்லற ஒழுக்கம் அனைத்தும் இல்லாளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை,

> தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்ற குறளும் கூறுகிறது. இதிலுள்ள தற்கொண்டான் என்ற ஒரு தொடரைக் கொண்டு, திருவள்ளுவர் பெண்களை ஆடுமாடுகளைப் போலவும் ஆடை அணிகலன்களைப் போலவும் விற்கும் - வாங்கும் பொருள்களாகப் புனைந்துரைக்கிறார் என்று கூறுகின்றனர். கொண்டான் என்றால் விலைக்கு வாங்கிக் கொண்டவன் என்பது பொருள் அல்ல. தற்கொண்டான் என்பதற்குக் காதல் கொண்டான் என்று பொருள் கூறலாம். எனவே ஒரு பெண் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும். தன் கணவனை அவனுடைய தாய் பேணி வளர்த்தது போலத் தானும் அன்புடன் காத்தல் வேண்டும். கொழுநனைப் பேணி வளர்த்தலால் பெண் எனப் பெயர் பெறுகிறாள். தன் புகழுக்குப் பழுது ஏற்படாதவாறும் பாதுகாக்கிறாள். இவ்வாறு தன் புகழையும், தன் கணவர் புகழையும் காத்து இல்லறம் நடத்தும் பொழுது அது நல்லறமாக அமையும். இதில் கணவன் சோர்ந்து

நல்லறமாக அமையும். இதில் கணவன் சோர்ந்து இருக்கலாம். ஆனால் இல்லறமென்னும் பழுமரத்திற்கு ஆணிவேராய் அமைந்த பெண் சோர்ந்திருத்தல் கூடாது. தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாதவளே பெண்.

பெண் என்பவர் பிறக்கும் பொழுதே தந்தையின் காவலிலும், திருமணத்திற்குப் பின் கணவனின் காவலிலும், கணவனுக்குப் பின் மகனுடைய காவலிலும் வாழவேண்டும் என்று மனுதர்மம் முதலிய அறநூல்களை வற்புறுத்துகின்றன. ஆனால் வள்ளுவரோ பெண் என்பவள் கணவனால் காக்கப்படவேண்டியவள் என்ற கூற்றையே மாற்றிக் கணவனைக் காப்பவள் என்று உறுதிப்படுத்துகின்றார். பெண்ணிடம் தற்காக்கும் மறமும் உண்டு. தற்கொண்டானைப் பேணும் தாய்மையும் உண்டு. சோர்விலா அறமும் உண்டு. வீடுபேறடையும் வெற்றியும் உண்டு. இவையனைத்தும் ஒன்று கூடிய உருவமே பெண். தற்கொண்டாரைப் பேணும் தாய்மையைக் கூறுகிறாரே தவிர, அவளை அடிமைஎன்று வள்ளுவர் குறிப்பிடவில்லை. தன்னையும் காத்துத் தன் கணவனையும் காக்கின்ற பெண் சிறந்த காவலாளியும் ஆவாள். அவள் கைதியும் அல்ல. அடிமையும் அல்ல. இத்தகு பெண்ணைச் சிறையில் அடைப்பதால் யாது பயன்? என்பதை உணர்ந்த வள்ளுவர்.

> சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை

என்று பாடிப் பெண் விடுதலையை வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு பாடி முதன் முதலில் பெண் விடுதலையை நிலைநாட்டிய பெருமை வள்ளுவரையே சேரும். பெண் என்பவள் பிறப்பு முதல் இறப்பு வரை கட்டுக்காவலில் வாழவேண்டும் என்ற அடக்குமுறைச் சமுதாயத்தில்

> 'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?'

என்ற வினா ஒரு விழிப்புணர்ச்சியை உறுதியாக ஏற்படுத்தியிருக்கும்.

ஆதியும் அந்தமும்

கற்புடைய பெண்ணிற்குத் தெய்வீக ஆற்றலும் உண்டு. தெய்வங்களும் அவர்களுக்குப் பணிந்து ஏவல் செய்யும் என்பதால்,

> தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை (53)

என்று சிறப்பிக்கின்றார். தெய்வம் தொழாஅள் என்பது கடவுள் வழிபாட்டை மறுத்துரைப்பதாகப் பொருள்

கொள்வது தவறு. அதுபோலவே கொழுநனைத்தொழுது எழுவாள் என்பதால் பெண் தாழ்ந்தவள் என்று கருதுவதும் தவறு. கணவனைத் தெய்வமாகக் கருதி வழிபடும் நெறியிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு முறைகள் உள.

> கடிமனை விளக்கல் சரியை
> கணவர் உண்ணும் அறுசுவை ஊட்டல் கிரியை
> பத்தியோடு ஒன்றி ஒழிவிலா இன்பம் துய்த்தல் யோகம்
> உரையில் நிற்றல் நுடியிடை மடவார்க்கெல்லாம் ஞானம்

என்று உரைப்பர் தொல்லோர். சமயக் குரவர் நால்வரும் பின்பற்றிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளைப் பின்பற்றி வீடுபேறு அடைந்தனர். ஆனால் மகளிர் இல்லறத்தில் இருந்துகொண்டே இந்த நான்கு நெறிகளையும் பின்பற்றுவதால் வீடுபேறடைவர் என்பதால் அவர்களுக்கு வள்ளுவர் துறவறத்தை வற்புறுத்தவில்லை. ஆனாலும் மகளிர் காமம் என்ற கடைக்கோட் காலை ஆடவர் துறவறத்தை மேற்கொள்ளும்பொழுது அவர்களுக்குத் துணை நின்றனர். எனவே மகளிர் துணையின்றி இல்லமும் சிறக்காது. துறவறமும் சிறக்காது. வீடுபேறும் கிட்டாது. எனவே உலக வாழ்வில் ஆதியும் அந்தமுமாக இருப்பவள் பெண்ணே என்பது தெளிவு.

தாய்மையின் மேன்மை

மனையாளின் மாட்சிமைபற்றிக் கூறிய வள்ளுவர் தாய்மையின் மேன்மையையும் சிறப்பிக்கின்றார்.

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்

என்ற குறளில் தாய்மை உணர்வு வெளிப்படுகிறது. தன் மகன் அழகுடையவன் என்பதை அறிந்து மகிழ்வடையவில்லை. பணமுடையவன் என்று பரவசமடையவில்லை. மாறாகத் தன் மகனைச் சான்றோன் என்று சான்றோர் கூறியதைக் கேட்டுப் பெரிதும் உவந்தாள். எனவே தாய்மையின் நோக்கம் உயர்வுடையதாகவே இருக்கிறது என்பதை வள்ளுவரின் வாய்மொழி எடுத்துரைக்கிறது.

குலவிளக்கு

வள்ளுவர் கூறிய,

> பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
> நாணாக நாணுத் தரும்.

என்ற குறளுக்கு உரையாசிரியர் மணக்குடவர் தவறாகப் பொருள் கூறியுள்ளார். பெண்வழிச் சேறல் என்பதற்கு இன்பங் காரணமாக மனையாள் வழி ஒழுகுதல் என்று பொருள் கூறி அஃதொன்றினையே பழித்தல் வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அவர் கூறுவது போலப் பெண்வழிச் சேறலோ, மனைவி வழிச் சேறலோ பழியுடையதன்று. தன் இல்லாளைக் காதலித்தலும், மனையாளைக் காதலித்தலும் போற்றற்குரியது. எனவே மனைவியைத் தவிர பிற பெண்களுக்கு அடிமையாதலும், பிற பெண்களை விரும்புதலும் பழிக்கப்படுகின்றன. ஆனால் அறம் கருதியும், பொருள் நாடியும் அறிவுடைய இல்லாளின் வழிச்சேறல் இன்றியமையாதது. சுசீலையின் சொற்கேட்டுக் கண்ணபிரானைக் காணச் சென்ற குசேலர் பெண்வழிச் சென்றவர் என்று பழிக்கப்படுவதில்லை. இவ்வாறன்றி,

> எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் – அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்று கூறுகின்ற வள்ளுவர் வேறுவகையாகக் கூறவிரும்பார். மேல்நாட்டு அறிஞர் ஒருவர் வள்ளுவர் வழிநின்று பெண்மையின் மேன்மையை பின்வருமாறு போற்றுகின்றார்.

ஒருவன் சாக்கடையில் பிச்சைக்காரனாக மரித்தாலும் அவன் ஓர் உண்மையான பெண்ணின் இதயத்தில் சக்கரவர்த்தியாக இருப்பானேயானால் அவனுக்கு வாழ்க்கை வெற்றியடைந்து விட்டது என்று கூறலாம். எனவே வாழ்வில் பெற வேண்டிய பேறுகள் பல ஆயினும் அனைத்திற்கும் மேலாக ஓர் ஆடவனுக்கு அமைய வேண்டியது நல்ல வாழ்க்கைத் துணை எனலாம்.

முடிவுரை :

திருவள்ளுவர் பெண்மையைப் போற்றும் பெரு நெஞ்சினர். தாய்மையைப் போற்றும் தண்ணளியாளர். பெண்ணியம் பாடிய பெருந்தகையாளர் என்பது தெளிவு.

மணிமேகலை
ஒரு மதிப்பீடு

முனைவர். அ. காமாட்சிநாதன்,
சிதம்பரம்.

மணிமேகலையும் காப்பிய இலக்கணமும்

தண்டியலங்காரம், வெண்பாப்பாட்டியல் முதலிய பிற்கால இலக்கண நூல்கள் காப்பிய இலக்கணத்தைக் கூறுகின்றன. மணிமேகலை யாக்கப்பட்டுப் பல நூற்றாண்டுகள் கழித்து இவை தோன்றின. மேலும் இவை வடமொழிக் காப்பிய இலக்கணங்களையும் உடன்கொண்டு செய்யப்பட்டவை. எனவே அவை அத்தனையும் மணிமேகலை கொண்டிருக்க முடியாது. அங்ஙனம் எதிர்பார்ப்பதும் பொருத்தமில்லை. இருபதாம் நூற்றாண்டிலே வரையப்பட்ட கட்டிட அமைப்பினைக் கொண்டு மதுரை மீனாட்சி கோவிலையும் திருமலைநாயக்கர் மகாலையும் அளவிட்டுக் குறைகூறுவாருண்டா? இன்றைய இரென் & மார்ட்டின் **(Wren & Martin)** இலக்கண நூலைக் கொண்டு சேக்ஸ்பியரை **(Shakespeare)** எடை போடுவாருண்டா? சேக்ஸ்பியர் சிலவிதங்களில் இரென் & மார்ட்டினை ஒத்திருக்கலாம். திருமலை நாயக்கர் மகால் சிலவிதங்களில் இன்றைய கட்டிட அமைப்பிற்கேற்றதாக இருக்கலாம். அவை போலப் பல நூற்றாண்டுகட்குப் பின்பு பிறமொழி இலக்கணங்களையும் கொண்டு தண்டி கூறும் காப்பிய இலக்கணத்திற்குப் பல நூற்றாண்டுகட்குமுன் இயற்றப்பட்ட மணிமேகலை முற்றும் பொருந்தி வரமுடியாது. வரும் என எதிர்பார்ப்பதும் அறிஞர் விரும்பாதது.

"இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்"
"இலக்கணம் என்பது இலக்கியம் முறையுற
வைத்து என்று வழங்கப் படுமே"

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்இன்றாகில் எண்ணெயும் இன்றே.
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்"

என்பதல்லவோ நந்தம் செந்தமிழறிஞர்கள் கொண்ட கொள்கை. எனவே இலக்கியப்படியேதான் இலக்கணம் அமைய வேண்டுமே தவிர இலக்கணப்படி இலக்கியம் அமைய வேண்டியதில்லை. இதனால்தான் "இலக்கணத்தை வைத்து நான் இலக்கியங்களை அளவிடுவதில்லை" என்று மேலை நாட்டுக் கவிஞர் ஒருவர் சொன்னார் போலும் என்று எண்ண வேண்டியுள்ளது.

கீழ்வரும் தண்டியலங்காரப் பகுதிகளே மணிமேகலைக்குச் சில விதங்களிற் பொருந்தியவை.

"அவற்றுள், பெருங்காப்பியநிலை பேசுங்காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று
ஏற்புடைத்தாகி முன்வர இயன்று.
....
.... நாடு வளநகர் ....
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து
....
பூம்பொழில் நுகர்தல் ....
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றியது என்ப"

மன்னன் செங்கோலையும் மழையினையும் சாத்த-னார் விழாவறைகாதையிலே வாழ்த்துகிறார். பற்பல இடங்களில் சோழநாடு வாழ்த்தப்படுகிறது. அதன்வளம் புனையப்படுகிறது. கச்சிமாநகரில் மணிமேகலை புகுமுன் வஞ்சி சிறப்பிக்கப்படுகிறது. உவவனம் என்ற பொழில் நன்றாக வருணிக்கப்படுகிறது. மற்றும்

கதிரவன் உதித்தலும், தண்மதி உதித்தலும் நன்கு விளக்கப்படுகின்றன. மேலும் சுவையும் பாவமும் உண்டு. மணிமேகலையினை இயற்றியவர் கற்றுத்துறைபோய நற்றவக்குரிசில் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. மணிமேகலையினை விரும்பாதார் இல்லை. இளம்பூரணர், பேராசிரியர் போன்ற இலக்கண உரையாசிரியர்களும் சிவப்பிரகாசர் போன்ற முனிவர்களும் தத்தம் நூல்களிலே மணிமேகலை யினைக் குறித்துப் புகழ்ந்துள்ளனர் என்பதை அறியாதார் யார்? (மணிமேகலை–உ.வே.சா. 1931–பக்–10).

ஐம்பெருங்காப்பியங்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பவை ஐம்பெருங் காப்பியங்கள். இவற்றுள்ளே சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் செய்தவர்கள் சமணர்கள். மணிமேகலை, குண்டலகேசி செய்தவர்கள் பௌத்தர்கள். வளையா பதியினைச் செய்தது யார் என்பது இதுகாறும் தெரிந்திலது. இவற்றுள் சிலப்பதிகாரம் தவிர ஏனைய நூல்களைச் செய்தது சமயத்தைப் பரப்புவதற்காகவே என்பதை எல்லோரும் அறிவர். சிலப்பதிகாரத்தின் நோக்கம் சமணத்தைப் பரப்பவேண்டும் என்பதன்று. 'கண்ணகி என்னும் பத்தினியின் சிறப்பை உலகம் அறியவேண்டும்' என்றும், 'தாம் உணர்ந்த உண்மைகளை உலகம் உணர வேண்டும்' என்றும் இளங்கோவடிகள் கொண்டிருந்த குறிக்கோளே அவரைப் பெரிய காவியம் எழுதுமாறு தூண்டியது. மணிமேகலையின் தூய தொண்டினையும் புத்தர் பெருமானின் அறநெறியையும் உலகிற்குணர்த்த வேண்டும் எனும் குறிக்கோளே சீத்தலைச்சாத்தனாரை ஒரு காவியம் எழுத வேண்டுமென்று தூண்டியது.

சீவகசிந்தாமணி திருத்தக்கதேவர் எனும் சமணரால் இயற்றப்பட்டது. கி.பி. பத்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்தது. சீவகன் என்பான் வரலாற்றைக் கூறுவது. "அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்பதற்கிலக்கியம் அது. 3145 பாக்கள் உடையது. குண்டலகேசியும் வளையாபதியும் பெயரளவில் நிற்பவை. இவற்றின் சில செய்யுட்கள் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களின் உரைகளிலும் பிறவற்றிலும் காணப்படுகின்றன. குண்டலகேசி இயற்றியவர் நாகுதத்தனார் எனும் பௌத்தராம். இனி மணிமேகலை நூலமைப்பினைப் பார்ப்போம்.

நூலமைப்பு

நந்தம் செந்தமிழ்த்தாயின் எழிலிடையில் விளங்கும் மணிமேகலை எனும் பெருங்காப்பியம் பதிகத்தை முன்கொண்டு விழாவறைகாதை முதற் பெருகிப் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றகாதையில் முடிகிறது. இது முப்பது காதைகளையும் 4753 அடிகளையும் கொண்டு விளங்குகின்றது. நூல் முழுவதையும் நிலைமண்டில ஆசிரியப்பாவில் பாடியிருப் பதிலிருந்து சாத்தனார் அகவற்பாவிற் கொண்ட தேர்ச்சியும் பற்றும் எளிதில் விளங்கும். கம்பனியற்றிய இராமகாதை, சேக்கிழார் செய்த பெரியபுராணம் என்ற இரு பெருநூல்களைப் போல மணிமேகலையும் "உலகந்திரியா ஓங்குயர் இமயத்து" என உலகம் என்ற சொல்லைக் கொண்டு தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் அகத்திய முனிவர் பூம்புகாரைப் பெருமைப்படுத்த எண்ணுகிறார். உடனே அவர்தம் ஆணையின்படி, தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியன் எனும் சோழன், இந்திரனை இறைஞ்சி, அவன் உடன்பாட்டுடன் ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் இந்திரவிழா சீரும் சிறப்பும் நடத்திச் செல்லு கிறான். அவன்றன் பரம்பரையினரும் அவ்வாறே இந்திர விழாக் கொண்டாடி வருகின்றனர். பின்னர் மாவண்கிள்ளியின் காலத்தில் இந்திரவிழாச் செய்ய எண்ணிய சமயப் பேராசிரியர்களும் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் ஒருங்கு கூடி, இந்திரவிழாச் செய்யாவிடில் நேரும் இடுக்கண்களை விளக்கி இந்திரவிழாச் செய்ய நகர மக்களுக்கு ஆணையிடுமாறு வள்ளுவனுக்குக் கட்டளையிடுகின்றனர். அவன் வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசினை யானை மீதேற்றி மன்னவன் செங்கோல், புகார், மழை என்பனவற்றை வாழ்த்திப் புகார் மக்களை விளித்து, இந்திர விழாச் சிறப்பினை விளக்கித்

"தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்!
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்!"

என வேண்டிப்

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க"

என வாழ்த்தி, முரசும் அறைந்தனன். இங்ஙனம் மங்கலமாகத் திருவிழாவுடன் நூல் தொடங்குவது

இன்பம் மிகப் பயக்கிறது. மணிமேகலையோ பௌத்தக் கொள்கைகளைப் பரப்பப் பாடப்பட்டது. எனவே படிப் போர்க்குச் சலிப்பும் வெறுப்பும் ஏற்படாவண்ணம் இடையிடையே சோலை வருணனை, மாலைவருணனை, காலைவருணனை முதலிய வருணனைகளும் மற்றும் பற்பல இயற்கைப் புனைவுகளும், இசையும் கொண்டு இழுமெனும் ஓசையுடன் ஒழுகுறும் அருவிபோலச் செல்கிறது. கடைசி மூன்று (28, 29, 30) காதைகளும் பௌத்தமதக் கொள்கைகளைச் சுமந்து அவ்வளவாகச் சுவை தருவதில்லை.

நூலிற்கு முன்னால் பதிகம் என்ற ஒன்று காணப்--படுகிறது. நூலின் திரண்ட கருத்து சுருக்கி எழுதப்பட்டு இக்காலத்து நூல்களின் முன் விளங்கும் முன்னுரை (Forward) போல் வருவதுதான் பதிகம். இப்பதிகத்திற்குப் பாயிரம் முதலிய பல பெயர்கள் கூறுவர் பவணந்தியார். "ஆயிர முகத்தான் அகன்றது எனினும், பாயிரமில்லது பனுவலன்றே" என்று நன்னூலாசிரியர் கூறுவது போன்று ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் கூறவில்லை. பழம்புலவர்கள் பதிகம் பாடும் வழக்கத்தை மேற்கொள்ள வில்லை என்பதற்கு நற்றிணை, புறநானூறு முதலிய சில நூல்களைத் தொகுத்த பாரதம் பாடிய பெருந்தேவனார் தொகுத்த தொகை முழுமுதற் சான்றாம். மேலும் அவர் காலத்திலும் பதிகம் பாடுதல் வழக்கில் இல்லையெனவும் தெரிகிறது. அதோடு, பதிகம் என்பது தமிழ்ச் சொல்லுமன்று. மற்றும் பதிகம் நூலாசிரியரால் பாடப்படுவதன்று. பதிகம் என்பது பண்டையோர் வழக்குமன்று என்பதனைச் சிலப்பதிகாரப் பதிகத்துக்கும் நூலுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளைக் காட்டி விளக்கி நாவலர் டாக்டர் பாரதியார் அவர்கள் பல்லாண்டுகட்குமுன் எழுதியுள்ளார்கள். அதனை இதுகாறும் யாரும் மறுத்திலர் என்பதும் அறியத்தக்கது.

"பதிகம் என்பதே பண்டை நூலறியாப் பின்னோர் புகுத்திய புது வழக்கு. பழம்பெரும் நூல்களை முயன்று பயின்று கைவரக் கற்கப் பொறுமையும் அறிவும் குறுகிப் பிற்காலத்தில் பெருநூல்களுக்குச் சுருக்கம் அமைக்கும் வழக்கம் எழுந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பர் காவியம் போன்ற விரிந்த தொடர்நிலைச் செய்யுட்கெலாம் சுருக்கங்கள் தொகுக் கலானார். வடமொழியில் இத்தகைய சுருக்கங்கள் பிரதீகம் எனப்படும். பிரதீகம் என்றால் சங்கிரகம் அதாவது சுருக்கம் எனப் பொருள்படும். பிரதீகத்தின் மரூஉ பதிகமாதல் வெளிப்படை. ஒருபது பாட்டைப் பதிகமென்பது வடகலை வழக்கின் வடுவுடைத் தமிழ்ச்சொல். நூற்பொருட்சுருக்கம் நுவலும் பதிகம் என்பது தமிழில் தர்க்கம் முளிந்த வடமொழி. ஆன்றோர் நூலும் சான்றோர் செய்யுளும் ஆளாத பதிகத்தை இளங்கோவடிகள் தம்முடைத் தமிழ்ப் பனுவல் முன் வைத்திலர் என்பது அவர் பாவொடு பொருந்தாப் பதிக முரண்களைப் படித்தறிவார்க்கு வெள்ளிடை மலைபோல் விளங்குவதாகும். . . . பதிகம், நூன்முகம், பாயிரம் என்பவை பண்டைப்புலவர் நூலறியாப் புதிய கொள்கைகள்". மேலும் 'பதிகம் என்பது கதைபொதி பாட்டு' எனத் திருச்சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டு ஏட்டுச் சுவடியில் இருந்ததாக டாக்டர் ஐயரவர்கள் கூறி யுள்ளார்கள். இதுகாறும் விளக்கியவற்றால் பதிகம் பாடல் பிற்காலத்து வழக்கென்பதும், சாத்தனார் பதிகம் பாடவில்லை என்பதும், பதிகம் பாடியவர் அப்பதிகத்திற்கிட்ட தலைப்பு பதிகம் அன்று; கதைபொதி பாட்டே" என்பதும் நனி விளங்கும்.

மணிமேகலையிலுள்ள முப்பது பாட்டும் காதை எனக் காணப்படுகின்றது. முப்பது தலைப்புக்கும் சாத்தனார் காதை என்ற பெயரே இட்டார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. மணிமேகலைக்குப் பதிகம் பாடிய ஆசிரியர் கூட

"...... மணிமேகலை துறவு
ஆறைம்பாட்டினுள் அறியவைத்தனன்"

என்று "பாட்டு" என்ற சொல்லை ஆண்டிருக்கிறாரே தவிரக் காதை என்பதை ஆளவில்லை. மற்றும் மிதிலைப்பட்டித் திருச்சிற்றம்பலக் கவிராயர் அவர்கள் வீட்டுப் பிரதியில் 'காதை' காணப்படவில்லை. 'பாட்டே' காணப்படுகிறது. இதனையும் டாக்டர் ஐயரவர்கள், "காதை என்பதை இசையோடு பாடப்படுவதாகிய செய்யுளென்று பொருள்படுகிற 'காதா' எனும் வடசொற்சிதைவென்று கொண்டால் யாதொரு இழுக்குமின்று என்று வடமொழியாளர் கூறுவர்" என்று கூறியுள்ளார்.

இவற்றையெல்லாம் நோக்கச் சாத்தனார் நூல் யாத்த காலை காதை என்னாது முப்பது பிரிவையும் பாட்டு என்றே எழுதினர் என்பதும், அங்ஙனம் பாட் டென்றே பதிக ஆசிரியர் காலம் வரை வழங்கியது

என்பதும், பதிகம் பாடிய ஆசிரியர் பதிகத்திற்குக் கதைபொதி பாட்டு என்ற தலைப்பே இட்டனர் என்பதும், பிற்காலத்து வடமொழிப் பற்றுடையோருள் யாரோ ஒருவர் கதைபொதிப்பாட்டைப் பதிகமெனவும், பாட்டைக் காதையெனவும் திரித்து வழங்கத் தலைப்பட்டனர் என்பதும் விளங்குகின்றன. பதிக இறுதியில் சிதைந்த இரு வெண்பாக்கள் கவிராயர் பிரதியிற் காணப்படுகின்றன.

சாத்தனார் ஏத்தும் அடிகள்

"மறவணம் நீத்த மாசறு கேள்வி
அறவண அடிகள் உரவோன் அருளினன்"

"பழுதறு மாதவன் ...."

"நரைமுதிர்யாக்கை நடுங்கா நாவினன்
உரை மூதாளான்"

என்றும் மற்றும் பலவிடங்களில், சாத்தனாரால் ஏத்தப்பட்டவர் அறவண அடிகள் ஆவர். புத்தரின் தூய தத்துவம் பரப்பிய துறவியரில் இங்ஙனம் தமிழ்ப் பெயர் கொண்டவர்கள் ஆடவர்களில் அறவண அடிகளும் பெண்டிரில் மணிமேகலையும் ஆவர். புத்தப் பெரியாரின் பெயர்கள் அத்தனையும் வேற்றுமொழிப் பெயராக இருக்க இவ்வடிகள் பெயர் மட்டும் தமிழ்ப் பெயரா யிருப்பதை எண்ண உள்ளம் களிப்படைகிறது. இவர்தம் பெற்றோர் யார்? உற்றார் யார்? பிறந்த இடம் எது? என்பவை பற்றிச் சாத்தனார் யாண்டும் கூறினாரில்லை. தமிழுலகிற்கு முதன் முதல் இவ்வடிகளை அறிமுகப்படுத்தியவர் நம் சாத்தனார். சாத்தனார் பல இடங்களில் இவரை வெகுவாகப் புகழ்வது பற்றி இவரைச் சாத்தனாரின் ஆசிரியராகக் கருதுவர் அறிஞர் பெருமக்கள்.

மணிமேகலையால் இவர் வாழ்வின் பெரும்பாகம் காவிரிப் பூம்பட்டினத்திலேயே கழிந்ததெனத் தெரிகிறது. அதற்குக் காரணங்கள் பலவுள. மணிமேகலையினைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்ய இவர் செல்லுதலிலிருந்து இவருக்கு அரசன் அரசியரிடத்தில் செல்வாக்கிருந்ததெனத் தெரிகிறது. மேலும்,

"தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவி மகளும் மாதவர்க் காண்டலும்
எழுந்தெதிர் சென்றாங்கு இணைவளைக் கையால்
தொழுந்தகை மாதவன் துணையடி வணங்க"

என்னும் அடிகளான் அரசி ஆதரவு இவருக்குண்டென அறியலாம். மேலும் மன்னன் சிறைச்சாலையை பௌத்தருக்களிக்க அவர்கள் (மணிமேகலை மூலம்) அறச்சாலையாக்கிக் கொண்டனர். மற்றும் மணிமேகலா தெய்வம், புத்த பீடிகை, புத்தருக்குரிய ஏழு இந்திரவிகாரைகள், ஏனையோரால் சுடுகாட்டுக் கோட்டமென அழைக்கப்பட்ட பௌத்தர்தம் சக்கரவாளக் கோட்டம், அதில் உள்ள சம்பாபதி எனும் பௌத்த தெய்வம், கோயிற்றூணிற் பொருந்திய கந்திற்பாவை, சக்கரவாளம் என்ற பௌத்தரது அண்டகோளம் பொறிக்கப்பட்டது முதலிய பலவற்றையும் மணிமேகலை கூறலான் புகாரில் பௌத்தருக்கு மிகுதியும் செல்வாக்கிருந்தது எனலாம். எனவே அறவண அடிகள் அங்குப் பெரும்பகுதி வாழ்வைக் கழித்தார் என அறியலாம்.

மாதவிக்கு ஐவகைச் சீலமும், நால்வகை வாய்மையும் உரைத்தவர் இவரே. இவர் ஆண்டில் முதியவர், நாவன்மை மிக்கவர்; சொல்லாற்றல் உடைய நல்லார்; அரசி முதலியோர் வணங்க இவர் 'அறிவுண்டாக வாய்வதாக நின்மனப்பாட்டறம்' என வாழ்த்து கின்றமையால் இவர்தம் செவ்விய உள்ளம் தெள்ளிதின் விளங்கும். இவரே மணிமேகலைக்கு ஆபுத்திரன் மற்றும் அமுதசுரபியின் வரலாறுகள் கூறியவர். மேலும் உயிர்க்கமுது வழங்க மேகலையைத் தூண்டியவரிவரே. இவர் சுதமதி, மாதவி, மணிமேகலை என்பவர்களின் முற்பிறப்புணர்த்துவதிலிருந்தும், ஆபுத்திரன் மணிபல்லவத்து வருந்துகையில் தாம் சென்று அவன் வரலாறு கேட்டதாகக் கூறியதிலிலிருந்தும் இவர்தம் வயதும், இவர் கங்கை முதல் இலங்கை வரை உலவியவர் என்பதும் விளங்கும். இவர் இராசமாதேவிக்கு யாக்கை நிலையாமை கூறிப் பன்னிருநிதானமும் கூறியவர். காவிரிப்பட்டினம் கடல்வாய்ப்பட்டபின் மாதவி முதலியோரோடு வஞ்சி சென்று, சிலநாள் தங்கிப் பின் காஞ்சி சென்று வாழலானார்; அங்கு வந்த மணிமேகலைக்குப் பௌத்த அறங்களைப் போதித்தார். இவர் காஞ்சியில் வாழ்நாளைக் கழித்தமைக்குக் காரணம் அங்கு இளங்கிள்ளி, தருமதவனம், கோமுகிப் பொய்கை முதலியன அமைத்தமையாம்.

அறவணஅடிகள் காஞ்சி மாநகரில் தம் இறுதிக் காலத்தைக் கழித்தமைக்கு மற்றொரு குறிப்பும் உண்டு. பெரிய காஞ்சிபுரத்தில் அடிகன்பேட்டைக்கு

அண்மையில் உள்ள தொண்டை மானத்தத்தை அடுத்து அறப்பணஞ்சேரி என்றொரு தெருவுள்ளது. இச்சேரிப்பெயர் அறவண அடிகள் தொடர்பு பற்றி வழங்கியதாக வேண்டும் என்பது அதன் பெயரொற்றுமையால் எளிதில் உணரப்படும். அறவணன்சேரி அறப்பணஞ்சேரி என மாறுதல் தமிழ் வழக்கிற்கொத்ததே (காவியம்–காப்பியம்). காஞ்சியில் கச்சபேசுவரர் ஆலயத்திற்குப் பக்கத்தில் உள்ள ஏரியும் தெருவும் புத்தேரி (புத்தவேரி) புத்தேரித்தெரு என்ற பெயர்களால் வழங்குதல் அறியத்தக்கது. ஒரு சிலர் கி.பி. 528–60இல் வாழ்ந்த தருமபாலராக இருக்கலாமோ என எண்ணுவர். ஏனென்றால் தருமபாலர் என்பதற்குத் தமிழ் வடிவம் அறவண அடிகள் என்பதாம்.

"தருமதலைவன் தலைமையினுரைத்த ......
..
..
சொல்லலும் உண்டியான் சொல்லுதல் தேற்றார்"

என்று புத்த அறம் குறைந்தமைக்குப் பெரிதும் இவர் வருந்தலானும், 'எனினும் மெதுவாகப் பரப்பல் வேண்டும்' என்று முயற்சி செய்யலானும் இவர் அறவண அடிகள் என்பது உறுதியாகிறது.

இலக்கிய நயம்

"இலக்கியம் ஒருகலை, கலைகளிற் சிறந்த கலை. கலையில் இன்பம் ஒன்றே பயனாக உள்ளது". இது டாக்டர்.மு.வரதராசனார் கூற்று.

"கவிதை என்றால் என்ன? அஃதொரு கலைதானே? கலையை எவ்வாறு அனுபவிக்கிறோம்? வேறு பயன் கருதாமல் அதனை அனுபவிக்கும் பொழுது உண்டாகும் இன்பம் ஒன்றையே கருதித்தானே கலையை அனுபவிக்கிறோம்". பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார் உணர்ந்தது இது.

"வாழ்க்கைத் துன்பத்தைப் பொறுத்தற்கும் இன்பத்தைத் துய்ப்பதற்கும் நமக்குக் கற்பிப்பதே இலக்கியம்" இது டாக்டர் சான்சன் எண்ணியது.

"அழகுடைய பொருள் என்றும் இன்பந்தரும்" என்கிறார் கவிஞர் கீட்ச். எனவே கவிஞர்கள் அழகுடைய காட்சிகளைத் தம் திறமையால் வருணித்துக் காவியத்திலே எழில் ஓவியத்தைக் காட்டி மேலே சொன்ன அறிஞர்கள் கருத்துக்களை மெய்ப்பித்து விடுகின்றனர். எனவே சாத்தனார் நமக்கு எவ்வகையில் இன்பந்தருகிறார் எனப் பார்ப்போம்.

அந்திக் கன்னி வந்த விதம்

மாலைக் கதிரவன் மறைகிறான். அந்தி வருகிறது. இங்ஙனம் காட்சியளிப்பது உலகத்தார்க்கு. ஆனால் கவிஞருக்கு வேறுவிதமாகக் காட்சியளிக்கிறது. எப்படி? பெண்! ஒரு பெண்! காதற் கணவனைக் களத்திலே பறிகொடுத்து இல்லம் புகுகிறாள்! இவள்போலக் கணவன் கதிரவனை மேற்றிசையிற் பறிகொடுத்துவிட்டு முதிராத்துன்பமொடு அந்தி எனும் பசலையூரப் புகார் நகரின்கண் வந்து அந்திக்கன்னி தங்குகிறாளாம்! என்னே கற்பனை!

"அமரக மருங்கிற் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு
அந்தி என்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளால் மாநகர் மருங்கென்"

பாலூட்டும் பாவை

சோலை! அங்கே மாமரம் கனிகுலுங்கக் காட்சியளிக்கின்றது. அதன் பக்கம் கோங்கமரம் பூத்துக் காட்சியளிக்கின்றது. அக்காலை ஒருபால் கோங்கமரப் பூவொன்றுளது. அதற்கு மேலே மாங்கனி தொங்குகிறது. அவற்றினருகே ஒருபால் மயிலும் மற்றொருபால் கிளியும் அமர்ந்துள்ளன. அங்ஙனம் அமைந்த காட்சி பாவையொருத்தி தங்கத்தினாலாய தட்டில் பால்பெய்து கிளிக்கு ஊட்டுவது போலக் காட்சியளிக்கிறது புலவர்க்கு. இதோ பாலூட்டும் பாவை காட்டும் ஓவியம் :

கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி யூட்டுமோர் பாவையாம்

சோலையில் நடனம்

நடனம்! எங்கே? சோலையில்! ஆம்! உண்மை! குளம்! அங்கே பூத்த தாமரையிலோர் அன்னம்! அதற்கு எதிர்ப்புறக் கரையிலே மயில் தோகை விரித்தாடுகிறது.

அதற்கிடையே கம்புட்சேவல் ஒலிக்கிறது. இவற்றிற் கியையக் குயில் கூவுகிறது. தாமரையில் உள்ள அன்னம் அரியணை மீதுள்ள அரசன்; எதிர்த்த கரை நடனவரங்கு; ஆடும் மயில் நாட்டியராணி; சேவல் ஒலி முழவு; குயிலின் கூவல் பாட்டு! சோலையே நடனம் ஆடும் அவையாக மாறுகிறது.

கவிஞர் கண்ட நங்கை

கவிஞர் ஒரு நங்கையைக் காண்கிறார். அவளுக்குச் சிலம்பு, மணிநீரும் மலரும் வண்டும் மல்கிய அகழி; தோள்கள் வாயிலின் இருமருங்கும் உள்ள தோரணக் கம்பங்கள். அவளணியும் மணிமேகலை ஞாயிலுடைய மதில். அவளுடைய கொங்கைகள் எதிரெதிர் நிற்கும் கற்பகக் கோட்டமும் வச்சிரக் கோட்டமும். அவளது முகம் கோயில்; மேற்கில் மறையும் கதிரும் கிழக்கில் வரும் மதியும் விழியொடு பூசலாடி ஊசலாடும் குழைகள். இத்தகைய பெண் யார்? அவள்தான் கவிஞர் கண்ட நங்கை–புலவரையிறந்த புகார் எனும் பூங்கொடி.

அறநெறிக் கருத்துக்கள்

"சிறந்த கருத்துக்களின் தொகுதியே இலக்கியம்": அறிஞர் எமர்சன்.

"மனித இனத்துக்குரிய அறநெறிகள் ஒவ்வோர் இலக்கியத்திலும் சொல்லப்படவேண்டியன; தவிர்க்கப்பட முடியாதன" : மாத்யூ அர்னால்டு.

"எல்லா இலக்கியத்தின் குறிக்கோளும் நல்ல மனிதனை அல்லது அறிஞனை உண்டாக்குவதுதான்" : பென்சர்.

மேலே காட்டிய அறிஞர் உரைகளினின்று, இலக்கியம், இன்பத்தினை மட்டுமன்றியும், சிறந்த அறநெறிகள், பண்பாடு, கருத்துக்கள் முதலியனவற்றையும் தரல் வேண்டுமென்பதை அறியலாம். அம்முறையில் மணிமேகலை சிறந்த அறநெறிக் கருத்துக்களைக் கொண்டதெனலாம்.

"கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்.
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூறும்.
மாரிவறங் கூறின் மன்னுயி ரில்லை.
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதி யின்றாகும்".

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரைதேராய்"

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனின் இன்றால்"

"பொய்யாற் றொழுக்கம் பொருளெனக் கொண்டோர்
கையாற் றவலம் கடந்தது முண்டோ?"

"சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கல்"

"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்,
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே!"

மணிமேகலை, தனக்கு இராசமாதேவி செய்த இடுக்கண்களைப் பொறுக்கிறாள். ஏனைய உயிர்கட்குத் தீங்கு செய்யாது அமுதளிக்கிறாள். இன்னா செய்த அரசிக்கு அறிவுரை கூறுகிறாள். இவற்றிருந்து அறிவன:

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

"செய்யுளில் மெய்யறிவு அமைத்துப்பாடுதல்
இன்றியமையாதது" – கவிஞர் பிரௌனிங்

"ஒப்பற்றமெய்யறிவுப் புலவனாக இல்லாதவன்
சிறந்த கவிஞனாக இருந்ததில்லை"
– கவிஞர் காலரிட்ஜ்

"கவிதை மிகுதியான மெய்யறிவு உண்மைகளைக்
கொண்டது" – அறிஞர் அரிச்டாடில்.

மேலே காட்டிய மேலைநாட்டு அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் மணிமேகலையினையும் ஆசிரியர் சாத்தனாரையும் பொறுத்தமட்டில் உண்மையே. இறுதியிலுள்ள காதைகள் முழுக்க முழுக்க மெய்யறிவுக் கருத்துக்களையே கொண்டு விளங்குகின்றன.

"வினையின் வந்தது ....
..
.... மக்கள் யாக்கை" 4 : 113-20

என்றபகுதியும், நரை மூதாட்டியினைக் காட்டி உதயகுமரனுக்கு மணிமேகலை அறிவுரை கூறுவதும் நல்ல மெய்யறிவுக் கருத்துக்கள் (Philosophical ideas) பொருந்தியன.

அறிஞர் காரெட் கூறுவது போன்று நம்மை நம்மினின்றும், இன்னும் சில விருப்பு வெறுப்புகளினின்றும் விடுவித்துக் கொண்டு மணிமேகலையிலே மெய்யறிவுக் கருத்துக்கள் பொருந்திய பகுதிகளை உளம் ஒன்றிப் படிப்பின் உடனே துறவறம் எய்தத்தான் உள்ளம் தூண்டும். ஆசிரியர் ஊழ்வினையில் நல்ல அழுத்தமான எண்ணம் கொண்டவர். இதனை உதயன் இறப்பு சிறப்புறக் காட்டும்.

இவ்வாறாக மணிமேகலைக் காப்பியம் இன்பமும், அறநெறிகளும், அறிவுரைகளும், பற்றற்றான் பற்றினைப் பற்ற எண்ணுவார்க்கு மெய்யறிவுக் கருத்துக்களும் அள்ளியள்ளிக் கொடுத்திடும் அரும்பெரும் புதையலாகும். முடிவில் மணிமேகலை பல்பொருட் பண்டாரம் என்னலாம்.

மணிமேகலையால் அறியும் செய்திகள்

மணிமேகலை அக்காலத்துப் பண்பாடு பழக்க வழக்கங்கள் முதலியன பற்றிப் பல செய்திகள் கூறுகின்றது. அவற்றுள் சில பார்ப்போம்.

அக்காலத்தில் பூம்புகாரிலே சமயப் போராட்டம் இருந்திருக்கிறது. ஊரலர் உரைத்த காதையால் நாடக மகளிர்க்குரிய பல்வகைத் தொழிலும், இயல்பும், அவர்கள் கற்கும் நூல் ஓவியச் செந்நூல் என்பதும் விளங்கும். காதலன் இறக்கவும் கற்புடை மகளிர் உடனே உயிர்விடலும், கைம்மை நோற்றுயிர்விடலும், எரிபுகலும் உண்டு. மற்றும் அக்காலச் சிறுகுழவிகட்கு ஐம்படைத்தாலி அணிதலும், பேய்தீண்டி வருத்தா வண்ணம் தலையில் நெய்யும் வெண்கடுகும் அரைத்து அப்பி விடுதலும் மரபு. சந்திரா பீடன் என்பானது தலையில் இங்ஙனம் அப்பியதாகக் காதம்பரி எனும் வடமொழி நூல் கூறும். தலைவியர்க்கப்பால் தோழியர் ஐந்துவிரற்கிடை தூரம் விட்டு நிற்பர். பிணம் காப்போர் தம் ஓலைக் குடிசைகளைச் சுடுகாட்டுக்கு அண்மையில் அமைத்துக் கொள்வர். சிலர் பிணத்தைப் புதைப்பர். சிலர் சுடுவர். சிலர் தாழியிற் கவிப்பர். அரசன் ஆனிரைகள் மேய மேய்ச்சல் நிலம் விடுவான். சேனாதிபதிகட்கு ஏனாதிப்பட்டம் வழங்குவான். வடவர், பாவம் போக்கத் தமிழகத்துக் குமரிக்கு வருவர். இழிவெய்திய நாடக மகளிர் ஏழு செங்கற்கள் சுமந்து நடன அரங்கு சுற்றுவர். மகதர், மராட்டியர் முதலிய வெளிநாட்டார் நம் தமிழகத்தில் பல தொழில் செய்து வாழ்ந்துள்ளனர். அக்காலத்தில் வேண்டுங்காலை நிரப்பவும் வேண்டாக்காலை வற்றவும் செய்யக்கூடிய இயந்திரக்கிணறுகள், செய்குன்றுகள், செயற்கை ஊற்றுக்கள், தாமாகவே கல்லெறியும் கூடை பதித்த மதில்கள் இருந்துள்ளன. அரசர்கள் வணிகச் செல்வருக்கு எட்டிப் பட்டமும் பொற்பூவும் வழங்குவர். அக்காலத் தெய்வங்கள் கல், மரம், மண் என்பவற்றா லாயவை. மன்னன் பிறந்த நாள் வெள்ளணி நாள் ஆம். குழவிபெற்ற மகளிர் இரவில் குளங்களில் நீராடல் உண்டு. இன்னும் பலவுள.

மணிமேகலையில் பௌத்தச் செய்திகள்

முதலில் பௌத்தர் பழக்க வழக்கங்களை, எண்ணத்தைப் பார்ப்போம். புத்தபீடத்திலே பூ மொட்டுக்கள் இட்டால் விரியும். நாம் நினைக்கின்ற தெய்வத்தின் அடியில், நாம் புத்த பீடிகையிட்ட பூப்போய்ச் சேரும். ஒன்றும் எண்ணாது பூ வைப்பின் அங்கேயே இருக்கும். சாதுவன் கூற்றால், 'இறந்த உயிரின் புலாலை உண்டால் தவறில்லை' எனப் புத்தர் கருதுகிறார் போலும் என எண்ண இடமுண்டு. புத்தத் துறவிகள் மருதந்துவரில் தோய்த்துப் பெற்ற மஞ்சளாடை அணிவர். இல்லறத்தார் உண்ட எச்சிலைப் பெற உச்சிவெயிலிற் செல்வர். 'ஓம் மணிபத்மே ஹூம்' என எழுதப்பட்ட உலோகச் சக்கரத்தை உடையவர். பழம்பிறப்பை அறிவதில் அறிவுறுத்துவதில் ஆர்வமிக்கவர். மறையும் கதிரவனை இறப்பிற்கு உவமையாகக் கூறுவர். புத்த நூல்கள் கூறும் கதிகள் ஆறு. பல இடங்களில் இந்திரன் பீடிகை அமைத்ததாகக் கூறப்படுகிறது. இந்திரன், ஆன், ஆடு வெட்டிச் செய்த வேத வேள்விப் பிரியன். ஆனால் புத்தர் இதனை வெறுப்பர். இதற்கெடுத்துக்காட்டு

ஆபுத்திரன் வேள்விச் சாலையிலிருந்து பசுவைத் திருடலே. எனவே புத்தர் கூறும் இந்திரன், புராண இந்திரன் இல்லை போலும். இனிச் சில பௌத்த வரலாறுகள் பார்ப்போம்.

இந்திரவிகாரை

இத்தகைய விகாரைகள் ஏழு புகாரில் இருந்ததாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறும். வானவூர்திகளான புத்தர்கள் இங்கு வாழ்வர். இதனை ஆதியில் இந்திரன் ஏற்படுத்தியதாகப் புத்த நூல்கள் கூறும். "ஆனால் அசோகனால் பௌத்தப் பிரசாரத்திற்கனுப்பப்பட்ட அவன் தம்பியும் பிக்குவுமான மகேந்திரன் தமிழகம் சென்று ஒரு பெரும்விகாரை கட்டிச் சில நாள் வாழ்ந்ததாகவும், அதன் இடிந்த பகுதியில் கி.பி. 700இல் சென்ற யுவான்சுவாங் எனும் சீனன் தங்கியிருந்ததாகவும் வரலாற்றறிஞர் கூறுவர். எனவே மகேந்திரன் கட்டியதே பிற்காலத்தில் இந்திரன் (அரசன்) கட்டியதாக அழைக்கப்பட்டுள்ளது.

மணிபல்லவம்

இங்கு தான் மணிமேகலை பீடிகை வணங்கிப் பழம் பிறப்பறிந்தது. இதுபற்றி இருவகைக் கருத்துக்கள் உண்டு. 'இன்று யாழ்ப்பாணத்துக்கருகிலுள்ள காரைத் தீவைக் காட்டுவர் சிலர். ஆனால் இஃது அவ்வளவு பொருத்தமன்று. மணிமேகலை, 'புகாரிலிருந்து மணிபல்லவம் முப்பது யோசனை தூரத்தில் உள்ளது; அதன் அயலில் இரத்தினத்தீவம் உள்ளது. அங்குள்ளது சமந்தமலை' என்று கூறுகிறது. மேலும் இம்மலைக்குச் சமனொளி என்ற பெயரும் உண்டெனச் சொல்லுகிறது மணிமேகலை. இலங்கைத் தீவின் மேல் மாகாணத்தின் தென்கீழ்ப் பிரிவில் இரத்தினபுரி என்ற ஓரிடமும், சிலராற் சமந்தகூடம் என்றும், சிலராற் சமனெலை என்றும் சொல்லப்பட்டுள்ள மலையொன்றும் உள்ளன என்றும் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை வே.சதாசிவப்பிள்ளை அவர்கள் தாம் கி.பி.1884இல் பதிப்பித்த 'இலங்கைப் பூமி சாத்திர சங்கிரக', என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளார். இவற்றையெல்லாம் நோக்க இன்று ஆடம்பீக் என வழங்கப்படுவதன் அருகிலுள்ள இரத்தினபுரிதான் முன்னைய இரத்தின தீவமும் அங்குள்ள சமந்த மலையுமாம் என எண்ணவேண்டி உள்ளது. இன்றும் ஆடம்பீக் என்பது சமந்த கூடம், சமனெலை என அழைக்கப்படுவது இதனை நன்கு வலியுறுத்தும்.

கச்சித் தருமதவனம்

இது காஞ்சியில் தென்மேற்கில் உள்ளது. காஞ்சி சென்ற மணிமேகலை இங்கே தங்கினாள். மணிமேகலை நூல், அரசன் இளங்கிள்ளி, பீடிகையும் பொய்கையும் புத்த சைத்தியமும் கட்டியதாகக் கூறும். ஆனால் சீனச் செலவினன் யுவான் சுவாங் "கச்சிக்குத் தெற்கே ஒரு சங்கிராமம் உளது; அங்கே அசோகனாற் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள தூபியுள்ளது; அதனுள் புத்தப் பெரியோர் கூடுவர்" என்று எழுதியுள்ளான். இதற்குப் போதிய சான்றில்லை. எனவே இளங்கிள்ளி தருமதவனம் அமைத்தவன். யாப்பருங்கல விருத்தியுரையில் காஞ்சியை மயிலாகப் பாடும் மேற்கோட் செய்யுள் கூறும் கடிகா இத்தருமதவனமே.

மணிமேகலா தெய்வம்

சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றிலிருந்து மணிமேகலை கடல் காவல் தெய்வம் என்பது விளங்கும். புத்த சாதகக் கதைகளும் இதனை வலியுறுத்தும். இம்மணிமேகலை பற்றி இன்றும் கம்போடியா, சயாம், இலங்கை முதலிய தேசமக்கள் பேசுகின்றனர்.

> *"தீவதிலகையும் திருமணிமேகலா*
> *மாபெருந்தெய்வமும் வந்தித் தேத்துதற்கு*
> *ஒத்தகோயில் உளத்தகப் புனைந்து*
> *விழவும் சிறப்பும் வேந்தனியற்ற"*

எனும் மேகலையடிகளானும் பிறவற்றானும் இதன் புத்தமதப்பற்று விளங்கும்.

உலகபாலரான தேவர்களால் மணிமேகலா தெய்வம், அறம் திறம்பா மக்கள் கடலிடையே கலங்க வீழ்தல் போன்றவற்றால் துன்புறுகையில் ஏழாம் நாள் வந்து காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டாள். அதன்படியே சங்கன், மாசனகன் என்பார் காப்பாற்றப் பட்டனர் என்று சங்க சாதகமும் மாசனக சாதகமும் கூறுகின்றன. இதனைப் பேராசிரியர் மு.இராகவையங் காரவர்களும் டாக்டர் சைலன் இலவியும் நன்கு விளக்கியுள்ளனர்.

பாண்டுகம்பளம் ஆடல்

பாண்டுகம்பளம் இந்திரன் ஆசனம். உலகில் துறவறங் கொண்டவர்கள் இறந்தால், வருந்தினால், இஃது ஆடும். உடனே வருவான் இந்திரன்; வேண்டியன செய்து

செல்வான். இதனை ஆபுத்திரன் வரலாறு வலியுறுத்தும்.

"ஈண்டு நீர் ஞாலத்து இவன்செயல் இந்திரன்
பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின்
. . . .
இந்திரன் வந்தேன் யாது நின்கருத்து"

என்ற மேகலை அடிகள் காண்க. இதனையே ஸ்ரீ புராணமும் கூறும். இஃது கம்பள வடிவமெனப் பிறராலும் ஒப்பிலா மஞ்சட்படிக மணிகளாலான சிங்காதனம் என்று சாதகங்களாலும் கருதப்பட்டது.

ஆ! பாண்டு கம்பள சிலா!
ஆ! தேவசபா!

என்ற திவ்யாவதானத் தொடர்களைக் காண்க. இக்கருத்தினைக் கொண்டே சில வரலாற்றறிஞர்கள் "ஐந்தவித்தான் ஆற்றல்" எனத் தொடங்கும் திருக்குறளுக்குப் பொருள் கூறுவர்.

ஏழு

இந்த ஏழு என்ற எண் நம் தமிழலக்கியங்களில் அடிக்கடி ஆளப்பட்டுள்ளதைத் தமிழறிஞர்கள் அறிவர்.

"இன்றேழ் நாளில் இந்நகர் மருங்கே
வந்து தோன்றும்"
"இன்றேழ் நாளில் இடையிருள் யாமத்து"
"எழுநாள் எல்லையும் இரவலர்க்கீத்து"
"எழுநாள் எல்லை இடுக்கண் வந்தெய்தா"

என மணிமேகலை அடிக்கடி குறிக்கும். திருக்குறளும்

"எழுமையும் ஏமாப்புடைத்து"
"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்"
"ஒருநாள் எழுநாள் போல்"
"எழுநாளே மேனி பசந்து"

என இவ்வெண்ணை ஆளும்.

'மணிமேகலை நூல் போதி சத்துவர் ஏழுநாளிற் செல்வத்தை அழித்தார்; கடலிடை ஏழாம் நாள் மணிமேகலா தெய்வம் வந்து காப்பாற்றிற்று' என்று அடிக்கடி ஏழினை ஆளும்.

இத்தகைய எண்ணை மேனாட்டார் Mystic Number என்பர். இந்த எண்ணிற்கு உலகளாவிய மதிப்பும் உண்டு. 7–7–2007 என்ற தினத்தை உலகமே கொண்டாடிற்று; அன்று மேலைநாட்டவர் பலர் திருமணம் செய்து கொண்டனர். இன்னும் எத்தனையோ ஒற்றுமைகள் மணிமேகலைக்கும் பௌத்தத்திற்கும் உண்டு.

முடிவுரை

இதுகாறும் நந்தம் செந்தமிழ்த் தாயின் செவ்விய இடையில் ஒளிரும் மேகலையாம் மணிமேகலையின் வருணனை, காப்பிய அமைதி, அதன் வாக்கு, போக்கு முதலியவற்றில் ஈடுபட்டோம்.

"அவிஜ்ஜா யதுவேவ அஸேஸ
விராக நிரோதா ஸங்ககாரா நிரோதோ
ஸங்ககார நிரோதா விஞ்ஞாந நிரோதோ
விஞ்ஞாந நிரோதா நாமரூப நிரோதோ
நாமரூப நிரோதா ஸளாயதந நிரோதோ
ஸளாயதந நிரோதா பஸ்ஸ நிரோதோ
வேதநா நிரோதா தண்ஹா நிரோதோ
தணஹா நிரோதா உபாதாந நிரோதோ
உபாதாந நிரோதா பவநிரோதோ
பவநிரோதா ஜாதி நிரோதோ
ஜாதி நிரோதா ஜராமரண்ம ஸோக
பரிதேவ துக்க தோமஸ்ஸூ பாயாஸா நிருஜ்ஜந்தி

– வினய பிடகம் முதற்காண்டம்

இதன் மொழிபெயர்ப்பு

"பேதைமை மீளச் செய்கை மீளும்.
செய்கை மீள உணர்ச்சி மீளும்.
உணர்ச்சி மீள அருவுரு மீளும்.
அருவுரு மீள வாயில் மீளும்.
வாயில் மீள ஊறு மீளும்.
ஊறு மீள நுகர்ச்சி மீளும்.
நுகர்ச்சிமீள வேட்கை மீளும்.
வேட்கை மீளப் பற்று மீளும்.
பற்று மீளக் கருமத் தொகுதி மீளும்.
கருமத்தொகுதி மீளத் தோற்றம் மீளும்.
தோற்றம் மீளப் பிறப்பு மீளும்.
பிறப்புப் பிணி மூப்புச்
சாக்காடவலம் அரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையில் துன்பம்
எல்லா மீளும்" - மணி, 30 : 119–133.

இவ்வளவு அழகாக மொழி பெயர்த்திருப்பது இன்று அல்ல. ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்குமுன் மிகவும் துன்பந்தரக்கூடிய சமயக் கருத்துக்களைப் பிறமொழி யிலிருந்து சாத்தனார் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.

கடினமான சமயப் பகுதியினையே தீந்தமிழில் மொழிபெயர்க்கும் போது ஏனைய அறிவியல் முதலிய கலைகளைத் தமிழில் மொழிபெயர்ப்பது அவ்வளவு கடின மன்று என்பது குறிப்பு. ஆனால் இன்று தமிழின் நிலையென்ன ? அறிவியல் போன்றவற்றைத் தமிழில் எழுதமுடியாது! தமிழில் சொற்செல்வமில்லை எனக் காரணம் காட்டிக் கல்லூரிகளிலே தமிழ் புறக்கணிக்கப்படுகிறது. 'அரசாட்சிக்கு வேண்டிய கலைச் சொற்கள் தமிழில் இல்லை! எனவே அரசியலுக்கும் தமிழ் ஏற்றதல்ல' எனக் கூறி அரசியலுக்கும் தமிழுக்கும் முழு இடம் தரத் தயங்குகின்றனர்.

மேற்காட்டிய காரணங்கள் தன்னல வெறியால் எழுந்த போலிக்காரணங்கள். எத்தகைய கலைகளையும் தீந்தமிழில் மொழிபெயர்க்க முடியும் என்பதைச் சாத்தனார் காட்டியுள்ளார். எனவே நாம் மணிமேகலை போன்ற நூல்களைப் படித்து அழகான தீந்தமிழில் கலைச் சொற்களை உருவாக்கி யாண்டும் அஃதாவது வழக்குமன்றம்,கல்லூரி,அரசாங்கம் முதலிய அத்தனை இடங்களிலும் தமிழ்மணங் கமழச் செய்யவேண்டும். தமிழன்னை விம்மிதமுற்றுச் செம்மாந்து அரியணை மீது விளங்கவேண்டும்!

புத்தம் சரணம்! தம்மம் சரணம்! சங்கம் சரணம்!

பாண்டித்துரைத்தேவர் இயற்கை எய்திய ஆண்டு, நாள் குறித்துக் கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை பாடியது

"விரோதி கிருதே விருச்சிகமே யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா - குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற் றதோ"


தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் இருபத்திரண்டாவது வருட பூர்த்திக் கொண்டாட்ட மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமான். பொ.பாண்டித்துரைஸாமித் தேவரவர்களை கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் வாழ்த்தி வழுத்திய ஆசிரியப்பா

பூவுல கதனிற் பொருந்துபன் னாட்டில்
தேவரு முனிவருஞ் சிறப்புற் றுறைய
அந்தணர் பசுக்க ளறத்தோடு பெருகச்
சந்தத மின்பந் தழைத்துநனி பொங்கப்
பாண்டிநன் னாட்டிற் பல்வள நிறைந்து
வேண்டிய வெல்லாம் விரைந்துட னளிக்குஞ்
சீலமு நன்மையுஞ் செறிந்து விளங்கும்
பாலவ நத்தப் பதிசெய் தவத்தாற்
சாலவு நல்லறந் தளிர்த்து வளரக்
கால வரம்பின் கணக்கொன் றின்றி
யாண்டுநல் லுயிர்களை யருளொடு புரக்கும்
பாண்டித் துரையெனப் பகர்பே ரரசே!
யாண்டுங் கல்வி யினிதுற மணக்க
ஈண்டு மறுமையு மின்பம் பெருக
மதுரையம் பதியில் வண்டமிழ்ச் சங்கங்
கதியுற நாடாத்துங் கருத்தையுட் கொண்டு
முன்னா ளாக்கிய முடிமன்னர் போல
இந்நா ளாக்கி யிசையுற்ற வள்ளால்!
அன்புடன் கருணை யகத்திடை மருவி
இன்புட னெவரு மென்றும் வாழ
உன்னியிங் கெவர்க்கு மோரரு மருந்தாய்ப்
பின்னிய வறுமைப் பிணியெலா மகல
விரும்பிய வெல்லாம் விரும்பிய வாறே
விரும்பிநன் களிக்கு மேன்மக்கள் முதல்வ!
உலகுக் கெல்லா மொருமுத லாகிப்
பலவகை தோற்றும் பண்பு மரீஇய
கடவுளி னருட்பலன் கருத்துட் கொண்டு
திடமொடு சுகிக்கச் செவ்விதி னல்கும்
பண்பார் சைவப் பயிர்நனி வளர்த்தல்
கண்பார்த் தியற்றுங் கருணையங் கொண்டால்!
முன்ன முவந்து முழுமுதற் கடவுள்
நன்னயம் வழங்கு நந்தா யுமைக்குத்
திருமந் திரத்தைச் செவியுறச் சொற்ற
திருமந் திரமெனுஞ் செய்யவிந் நகரி
லுறையுநன் மாந்த ருய்யும் வண்ணம்
இறையென வந்த வின்னுயிர்த் துணைவ!
இந்நகர் தன்னிலியைவுறு மக்கள்
தந்நல முணர்ந்து சார்ந்தருள் பெற்றிடச்
சைவ நேயராற் றாபித் துள்ள
சைவசித் தாந்த சபையி னிருபத்
திரண்டாம் வயதுமுற் றெய்துங் காலைத்
திரண்ட பலர்க்குந் தேவென நின்று
சைவசித் தாந்தந் தமிழெனு மிரண்டுங்
கைவரப் பெற்ற கனிந்தபிர சங்கஞ்
செய்துநம் மிறையாஞ் சிவனடி யெளிதில்
எய்து நெறியை யினிதுறக் காட்டிய
நன்றியைப் போற்றுதல் நம்பெருங் கடமை
யென்றிங் கியம்பின ரினியவென் னண்பர்;
உற்றவென் கடமையை யுரிமையிற் செய்திட
உற்றன னிங்கே யொருபெரும் பாக்கியம்
பெற்றன னென்ற பெருங்களி யதனால்
கற்றவர் விளங்குங் கழகத் தரசே!

மற்றென் வார்த்தை மதியில தாயினுஞ்
சற்றே கேண்மதி தண்ணருட் டோன்றால்!
பரசுக வடிவாய்ப் பரந்து நிற்கும்
அரனுடை யிலக்கண மான்ம விலக்கணம்
அரனடி யான்மா வடையவொட் டாமற்
பெரிதுந் தடையாய்ப் பிரித்து நிற்கு
மாயையை நீக்கி மானடி சேர்க்கு
மோன நிலையின் முதிரச் செய்யு
ஞான நிலையு நயம்பட மொழிந்து
மற்று முள்ளநன் மார்க்க மனைத்தும்
பெற்று நிற்கும் பெற்றியை முறைமுறை
யுற்றுநின் றவற்றி னொன்றும் விடாமல்
முற்றுந் திறமையின் மொழிந்து பின்னர்த்
திறம்பெறு தமிழின் சிறப்பெலாந் திரட்டி
யறம்பொரு ளின்ப மனைத்து நல்கிப்
பந்த மகற்றிப் பவமு மகற்றி
அந்தமில் வீடு மளிப்ப ததுவெனா
எத்திறக் கவிஞரு மிங்குமு னியம்பா
அத்திற மாக வணிபெறப் புகன்றே
எம்மனோ ரெவரு மீடேறும் வண்ணஞ்
செம்மை புரிந்த திட்பமென் கூறுவன்?
மன்னர் விரும்பு மதுரைமா நகரின்
முன்ன ரிருந்த முழுதுணர் பாண்டியர்
இனிதாந் தமிழை யெழிலுற வளர்த்து
நனியாம் புகழை நாட்டின ரன்றித்
திருவருட் பயனைச் சேரும் வழியை
யொருவருக் காயினு முன்போ லுரைத்ததா
இதுவரை யெவரு மியம்பக் கேட்டிலம்;
அதுவு மன்றி யன்னவ ரய லி டஞ்
சென்றுபந் நியாசஞ் செய்தது மிலையால்
துன்றுசீர்ப் பாண்டித் துரைப்பூ பதிநீ
தமிழும் வளர்த்துச் சைவமும் வளர்த்தே
யமிழ்தினு மினிதா வய லி டஞ் சென்று
பலர்க்கும் பயன்படப் பண்புட னளித்தும்
உலகினி லெவரினு முயர்நிலை யடைந்து
நிலமிசை புகழை நிறுவியும் வீட்டு
நிலமிசை புக்கு நீடித்து வாழப்
பலபடி சாதனம் பண்பினிங் கமைத்துத்
தலைவ னாகுந் தகுதியும் பெற்றாய்
தொன்று தொட்டுத் தூய வழியில்
நின்று கருணை நிதிகொண் மாண்பா
லி ன்றிவ ணிறையா விசைந்து செய்தநின்
நன்றியை யெழுமையு நாமறக் கிலமே;
அன்றியு நின்னற மவனியின் மீது
நின்று நிலவநீ நீடு வாழ்கச்
சிவனடி மலரைச் சிந்தையில் வைத்துத்
தவமும் புரிந்து தவமுறு வோமே.

வ.உ.சி. பாடற்றிரட்டு, சென்னை, 1914.

மகாபாரதக் காப்பிய மரபிற்குத் தமிழிலக்கியத்தின் நன்கொடை



அ.அ. மணவாளன்,
சென்னை.

மகாபாரதப் புல வழக்குகள்

இந்திய இதிகாசங்களில் இரண்டாவதாக வைத்தெண்ணப்படும் மகாபாரதம் பல்வேறு புலவழக்குகளை (recensions) உடையது. கிரந்தத்தில் எழுதப்பெற்ற தென்புலவழக்கு, தேவநாகரியில் எழுதப்பெற்ற வடபுலவழக்கு, வங்காளி வழக்கு, சதுர்புஜ வழக்கு, நீல்கண்ட வழக்கு மற்றும் காஷ்மீர் வழக்கு, தெலுங்கு வழக்கு, மலையாள வழக்கு போன்ற பல்வேறு வழக்குகளைத் திரட்டி ஒப்பு நோக்கி அவற்றையெல்லாம் தென்புல வழக்கு, வடபுல வழக்கு என்னும் இருபிரிவுகளில் வகைப்படுத்தி இரண்டிற்கும் பொதுவான, அடிப்படையான, மூலபாரதம் எனத்தக்க, கருதுகோள் வடிவம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் 'திறனாய்வுப்பதிப்பு' என்னும் பெயரில் புனேயில் உள்ள பண்டார்கர் கீழையியல் ஆய்வு நிறுவனம் (Bhandarkar Oriental Research Institute) வெளியிட்டுள்ளது. பல்வேறு மொழி அறிஞர்கள், பன்னாட்டுப் பல்துறை அறிஞர்கள் மற்றும் சுவடியியல் அறிஞர்கள் ஆகியோரைக்கொண்டு, 1925 முதல் 1966 வரையிலான சுமார் 40 ஆண்டுகளாக அரும்பாடுபட்டு மகாபாரதத்தின் இந்தத் திறனாய்வுப் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மூலபாடத் திறனாய்வில் ஆழ்ந்தகன்ற புலமையுடைய டாக்டர் வி.எஸ்.சுக்தாங்கர் இத்திறனாய்வுப் பதிப்பின் முதல் தலைமைப் பதிப்பாசிரியராக விளங்கினார்.

இந்தப் பதிப்பில் காணப்பெறும் விவரங்களின் அடிப்படையில் பல்வேறு புலவழக்குகளில் காணப்பெறும் சுலோக எண்ணிக்கையைக் கீழ்வருமாறு குறிக்கலாம்.

பருவம்	வடபுல வழக்கு	தென் புல வழக்கு	திறனாய்வுப் பதிப்பு	பருவம்	வட புல வழக்கு	தென் புல வழக்கு	திறனாய்வுப் பதிப்பு
1	8466	10998	7187	10	810	815	772
2	2709	4377	2390	11	826	807	730
3	11854	14081	10306	12	13732	15153	12866
4	2327	3575	1834	13	7839	10983	6536
5	6618	6752	6063	14	2852	4543	2862
6	5817	5908	5406	15	1085	1098	1062
7	9593	10127	8112	16	287	300	273
8	4987	4986	3871	17	109	111	106
9	3608	3594	3293	18	307	337	194
மொத்தம்				18	83,826	98,545	73,863

திறனாய்வுப் பதிப்பு : 73,863 சுலோகங்கள்
வடபுல வழக்கு : 83,826 சுலோகங்கள் (+9963)
தென்புல வழக்கு : 98,545 சுலோகங்கள் (+24,682)

அதாவது, திறனாய்வுப் பதிப்பைவிட வடபுல வழக்கு மகாபாரதத்தில் 9,963 சுலோகங்களும், தென்புல வழக்கு மகாபாரத ஏடுகளில் 24,682 சுலோகங்களும் கூடுதலாகக் காணப்படுகின்றன என்பது கருத்து. இவற்றுள் திறனாய்வுப் பதிப்பு மேலே குறிபிட்டவாறு பண்டார்கர் ஆய்வு நிறுவனத்தில் வெளியிடப்பெற்றது. வடபுல வழக்கு கணபதி கிருஷ்ணாஜி பதிப்பு எனவும், தென்புல வழக்கு கும்பகோணம் பதிப்பு எனவும் வழங்கப்படுகின்றன.

மகாபாரதக் காப்பிய வளர்ச்சியின் படிநிலைகளாகக் கொள்ளக்கிடப்பன:

கி.மு.400 – கி.மு.200 : வாய்மொழி மரபுக் கதைகள் காப்பிய வடிவம் பெற்ற காலப்பகுதி.

கி.மு.200 – கி.பி.200 : கிருஷ்ணன் எல்லாம் வல்ல கடவுளாக வளர்ந்த காலகட்டம்; பல்வேறு புராண மரபுகள் சேர்க்கப்பட்டமை.

கி.பி.200 – கி.பி.400 : முதற்பருவமும், இறுதிப் பருவங்களும் சேர்க்கப்பட்டுத் தற்போதுள்ள நிலையை மகாபாரதம் அடைந்த காலப்பகுதி.

இத்தகைய காலப்பகுப்பு பெரும்பாலும் திறனாய்வுப் பதிப்பின் அதாவது, திறனாய்வுப் பதிப்பில் காணப்பெறும் சுலோகங்கள் மற்றும் பருவங்களின் அடிப்படையில் ஆய்ந்து கணிக்கப்பெற்றது. சமுதாய, வரலாற்று மற்றும் இலக்கியத்தரவுகள் புதியனவாகக் கிடைக்கப்பெறின், இந்தக் காலப்பகுப்பில் மாற்றம் ஏற்படக்கூடும்; எனினும் வளர்ச்சிப் படிநிலைகளில் மாற்றம் ஏற்படாது.

தமிழிலக்கிய மரபில் பாரத நூல்கள்

இந்தியாவின் வட மாநிலங்கட்கும் தமிழகத்துக்கும் இடையே வாணிகம், போர் மற்றும் கலை இலக்கியத் தொடர்புகள் சார்ந்த பண்பாட்டுப் பரிமாற்றங்கள் எப்பொழுதிலிருந்து தொடங்கின என அறுதியிட்டுக் கூறஇயலவில்லை. எனினும், இன்றுவரை நம்மிடையே வழங்கிவரும் தமிழ் நூல்களுள் தொன்மையானதாகக் கருதப்படும் தொல்காப்பியக் காலத்திற்கு முன்பிருந்தே இந்தப் பண்பாட்டுப் பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது எனக் கூறுவது மிகையாகாது. கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் தோன்றிய தொல்காப்பியத்தில் சில வடமொழி இலக்கணக் கூறுகள் ஒப்பியல் நோக்கில் கூறப்படுகின்றன. மேலும் வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தின் ஒரு கூறாக அமையும் என்றும், அந்நிலையில் அவற்றைத் தமிழின் ஒலியனியல் தன்மைக்கேற்ப எவ்வாறு பெயர்த்தமைக்க வேண்டும் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

மொழிகளுக்கிடையில் இலக்கியப் பரிமாற்றம் நடைபெறும்பொழுது முதலில் வாய்மொழி மரபுக்கதைகளும், தொன்மம் தொடர்பான பழங்கதைகளும், பின்னர்ச் சுவைமிக்க இலக்கியக் கதைகளும் பாடல்களுமே மொழிமாறிக் குடியேறுவது வழக்கம். இதனையடுத்துப் புலவர்களும், கலைஞர்களும் தம்முள் கலந்து வாதிட்டு இலக்கியப் பரிமாற்றத்தில் ஈடுபடும்போதுதான் இலக்கண நூல்களும் மரபும் மொழிமாறும் வாய்ப்பும் தேவையும் ஏற்படும். ஐரோப்பிய நாடுகள் தம்மிடையேயும், காலனிகளை உண்டாக்கி அவற்றோடும் பண்பாட்டுப் பரிமாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்தபோதும் இத்தகைய பண்பாட்டுப் பரிமாற்றமுறைசெயல்பட்டதை வரலாறு நமக்குக் காட்டுகிறது. எனவே தொல்காப்பியர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே வடபுல மொழிகளின கலை இலக்கிய நாகரிகத்தோடு தமிழ் மக்கள் தொடர்பு கொண்டிருந்தனர் எனக் கொள்ளக்கிடக்கிறது. தமிழில் வழிநூல்கள் தோன்றும் வகைகள் நான்கனுள் மொழிபெயர்ப்பு நூல்களும் ஒருவகை என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதனால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வடபுல, தென்புல மொழிகளுக்கு இடையே இலக்கியப் பரிமாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது என அறிகிறோம்.

சங்க இலக்கியத்தில் மகாபாரதக் கூறுகள்

மகாபாரதம் ஒரு முழுநூல் வடிவாகச் சங்க காலத்தே தமிழில் வழங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் மகாபாரதக் கதைக்கூறுகள், பாத்திர இயல்புகள் போன்றவை உவமை, உருவகம், எடுத்துக்காட்டு போன்ற இலக்கிய உத்திகள் மூலமாகக் கூறப்படுவதைச் சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. சில காட்டுகளைக் கீழே காணலாம்.

1. *அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ*
   நிலம் தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
   ஈர்ஐம் பதின்மரும் பொருதுகளத்து ஒழிய
   பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
   கொடுத்தோய்!

(புறநானூறு – 2)

என்று மகாபாரதப் போரில் இருசார் வீரர்கட்கும் பெருஞ்சோறு அளித்த வள்ளல் என்று சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடுகிறார்.

2. *காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்*
   பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
   பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்
   பனுவல் . . .

(சிறுபாணாற்றுப்படை 238–241)

என்று அருச்சுனன் காண்டவவனம் எரித்ததையும், அவனுடைய தமையனான வீமன் சமையற்கலையில் மிகவும் வல்லனாக இருந்தான் என்பதையும் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

3. *ஈர்ஐம் பதின்மரும் பொருதுகளத்து அவியப்*
   பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
   ஆராச் செருவின் ஐவர் போல

(பெரும்பாணாற்றுப்படை 415–417)



பாண்டித்துரைத்தேவர் சிவஞானபுரம் முருகன் மீது காவடிச்சிந்து பாடியது.

மன்னர் பாசுகர சேதுபதியைப் புகழ்ந்து சுவாமி விவேகானந்தர் அருளிய அருளுரை

"என்னால் ஏதாகிலும் நல்ல காரியம் நடந்திருக்குமேயானால் அவை அனைத்திற்கும் காரணமானவர் மன்னர் பாசுகரசேதுபதி அவர்களே ஆவார். இந்த நாடே அவருக்குக் கடமைப்பட்டு இருக்கிறது. அவர் துறவியாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம். அதற்கேற்ற எல்லாத் தகுதியும், அவரிடத்தில் இருக்கின்றன." மன்னர் பாசுகர சேதுபதி அவர்களுக்கு "ராஜ ரிஷி" என்ற பட்டத்தையும் வழங்கினார் சுவாமிஜி.



பாண்டித்துரைத்தேவர் இசைக்கச்சேரி

இடமிருந்து வலம் :

1. உமையாள்புரம் நாராயணசாமி அய்யங்கார் (கடம்), 2. பூச்சி சீனுவாச அய்யங்கார், 3. பட்டணம் சுப்பிரமணிய அய்யர், 4. பாண்டித்துரைத்தேவர், 5. மகாவைத்தியநாத அய்யர், 6. தஞ்சை நாராயணசாமி அப்பா (மிருதங்கம்), 7. லால்குடி ராதாகிருஷ்ணையர் (வயலின்).

நாடக மேடையில்
பாலவநத்தம் ஜமீன்தார்

பொ.பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களைப் பற்றி நாடக நடிகர், முத்தமிழ்ச்சேத்திர மதுர பாசுகரதாசு பாடியது.

(பாலபிசேகப் பழநிமலை என்ற மெட்டு)

தேசிகபியாக் கண்ணிகள் சாப்பு

பாலவநத்த ஜமீந்தா ரெனு மெங்கள்
பாண்டித்துரை யொரு பாவலனே
பண்டுள முச்சங்கப் பாங்கே தமிழ்ச் சங்கம்
பாரில் நிறுவிய காவலனே (பா)
மேலும் புலவர்கள் மெச்சும் ப்ரசங்கங்கள்
மிகுந்தநூ லாராய்ச்சி மிக்குடையான்
மேனாடெ லாம்புகழ் வேண்டுவன பெற்ற
மேதகையான் கற்பகக் கொடையான் (பா)
தொகையறா
வேதநூ லகத்தியத்தை விளங்குதொல் காப்பியத்தை
ஆதியாமிலக்கியத்தை அரும்பிறவிலக்கணத்தை
முடுகுசந்தம்
விதவிதம் பதிப்பித்து வெளியிடத்தனமே
விகசிதமுடனளித் துதவினன் முளுமே
பல்லவியெடுப்பு
விற்பன பாஸ்கர மாதாந்தச் செந்தமிழ்
வித்வக லாசாலை வாழியவே (பா)

என மகாபாரதப் போரில் பாண்டவர்கள் கௌரவர்களை அடியோடு அழித்த செய்தியைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடுகிறார்.

4. அ)

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர் என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்கில்லை கதழ்எரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா
முளிகழை உயர்மலை முற்றிய முழங்குஅழல்
ஒள்ளுரு அரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான் போல

(கலித்தொகை 25/1–8)

என்று துரியோதனனின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் தீவாய்ப் பட்டபோது அவர்களை வீமன் காப்பாற்றிய செயலையும்,

ஆ)

மறம்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கு அறுத்திடுவான் போல்

(கலித்தொகை 52/2–3)

என்று வீமன் துரியோதனனுடைய துடையை அறுத்துக் கொன்ற செய்தியையும்,

இ)

அஞ்சீர் அசையியல் கூந்தல்கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்.

(கலித்தொகை 101/18–20)

என்று பாஞ்சாலியின் கூந்தலைக் கையால் பற்றி இழுத்து வந்த துச்சாதனின் நெஞ்சைப் பிளந்து தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமனின் வீரத்தையும் கலித்தொகைப் பாடல்கள் மிக விரிவாகப் பாடுகின்றன.

மேலே சுட்டிய சங்கச் சான்றுகள் எல்லாம் பாரதக் கதையை நேரிடையாகக் கூறவில்லை என்பதும், உவமை, உருவகம் போன்ற இலக்கிய உத்திகளாக மட்டுமே பாரதச் செய்திகள் வருணிக்கப்படுகின்றன என்பதும் நன்கு சிந்திக்கத்தக்கன. அதாவது இக்கதையும், இதன் கூறுகளும் தமிழகத்தே நன்கு பல்கிப் பரவியிருந்தன என்பது கருத்து.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் பாரதக்கதை பற்றி பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றனவாயினும், கண்ணனைத் தொடர்புபடுத்திக் கூறப்பெறும் மகாபாரதச் செய்தியெதுவும் சங்க நூல்களிற் காணப்பெறவில்லை. கலித்தொகையில் கண்ணன், பலராமன் பற்றிய பல்வேறு குறிப்புகளும், பிள்ளைமைக் குறும்புகளும் விதந்து கூறப்படுகின்றன. ஆயினும் பாரதக்கதையோடு அவர்களைத் தொடர்புபடுத்திக் கூறும் செய்திகள் எவையும் காண்கிலோம்; பாரதப்போர் பற்றிய பல்வேறு வருணனைகள் காணப்படினும், கண்ணன் கீதை போதித்ததாக வரும் குறிப்புகள் எவையும் இல்லை. அதாவது பாகவதக் குறிப்புகள் காணப்படுகின்றன; ஆனால் பாரதக் கதையோடு கண்ணனைத் தொடர்புபடுத்தும் செய்திகளைத் தமிழகச் சங்க இலக்கியம் பதிவு செய்யவில்லை என்பது கருத்து.

தமிழ்க் காப்பியங்களில் மகாபாரதச் செய்திகள்

சங்க இலக்கியக் காலத்தையடுத்துத் தோன்றிய சில தமிழ்க் காப்பியங்களிலும் மகாபாரதச் செய்திகள் உவமைகளாகவும், உருவகங்களாகவும் எடுத்துக் காட்டுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வைதிக சமயங்களை அடியொற்றிப் படைக்கப்பெறாத சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்களில் இச்செய்திகள் காணப்பெறுகின்றன.

சிலப்பதிகாரம்

1. கதிர் திகிரியால் மறைத்த கடல் வண்ணன் (17.ஒன்றன் பகுதி)
2. இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
   நடந்த அடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி
   (17. முன்னிலைப் பரவல்)
3. . . . நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
   படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
   நடந்தானை . . .(17.படர்க்கைப் பரவல்)
4. கடல்வணன், தேரூர் செருவும் (26 : 238–39)
5. உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டியென்று
   யாண்டும் மதியும் நாளும் கடிகையும் ஈண்டுநீர்
   ஞாலம் கூட்டி யெண்கொள (27 : 8–10)
6. ஓர்ஐவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
   போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த

சேரன் பொறையன் மலையன் . . .(29/24)

மேற்கண்டவாறு, கண்ணபிரான் தன்னுடைய சக்கரப் படையால் சூரியனை மறைத்துப் பகலை இரவாக்கிய செய்தியும், பாண்டவர்க்காகத் துரியோதனனிடம் கண்ணபிரான் தூது சென்ற செய்தியும், பாரதப் போரில் கண்ணபிரான் அருச்சுனனின் சாரதியாகப் பணியாற்றினான் என்னும் செய்தியும், பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்தன என்னும் செய்தியும், சேரன் பெருஞ்சோற்று உதியன் பாரதப்போரில் இருசார் படையினருக்கும் பெருஞ்சோறு அளித்தான் என்னும் செய்தியும் தமிழில் தோன்றிய முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கக் காண்கிறோம்.

மணிமேகலை

விராடன் பேரூர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்கள் (3: 146–47)

என அருச்சுனன் பேடி உருவம் கொண்ட செய்தியை மணிமேகலை கூறுகிறது.

சங்க இலக்கியத்திற்குப் பின்னர், இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களிலும் கண்ணன் என்னும் மகாபாரதப் பாத்திரம் தெய்வத்தன்மை உடைய திருமாலின் அவதாரமாகிய கண்ணபிரானாக மாற்றம் பெற்றிருக்கக் காண்கிறோம். அதாவது, பாகவதபுராணத்தின் செல்வாக்கு மகாபாரதத்தின்மேல் படரத் தொடங்கிய நிலையைக் காண்கிறோம்.

பெருங்கதை

1. வாய்வயின் தெய்வம் வணங்குபு கொண்டு
   தீவயிறு ஆர்த்திய திறலோன் போல (1.46 : 90–91)

2. பேரமர் ஞாட்பினுள் பெருமுது தந்தைதன்
   வார்சிலைப் புரிநாண் வாளியின் அறுப்பத்
   தேர்மிசைத் திரிந்த திறலோன் போல (1.56 : 56–58)

3. ஈரும் பதின்மரை இகல்கெட நூறி
   வீரம் மிக்க விறல்தறுகண்மைக்
   குருகுலத்து ஐவருள் ஒருவன் போல(3.21 : 9–11)

அருச்சுனன் காண்டவ வனத்தை எரித்தமை, கர்ணன் தன் முதுகுப் பக்கம் இருந்து தன் வில்லின் நாணை அறுத்ததைக் கண்ட அபிமன்யு தேர் ஏறிப் போரிட்டமை, பாண்டவர்களுள் ஒருவனும் அஞ்சா நெஞ்சம் படைத்தவனுமாகிய வீமன், துரியோதனன் முதலான நூற்றுவரைக்கொன்றமை போன்றபாரதக் கதைக் கூறுகளைப் பெருங்கதை உவமைகளாக எடுத்தாளக் காண்கிறோம்.

சீவகசிந்தாமணி

1. பேரமருள் அன்றுபெருந் தாதையொடும் பேராப்
   போரமருள் நின்ற இளை யோனின்பொலி வுற்றான் (288)
2. அரவுயர் கொடியினான்தன் அகன்படை அனுங்க வென்ற
   புரவித்தேர் காளை யன்ன காளை . . . (456)
3. வட்டுடை மருங்கில் சேர்த்தி வாள்இரு புடையும் வீக்கித்
   தட்டுடைப் பொலிந்த திண்தேர் தனஞ்சயன் போல . . . (767)
4. விசயனே விசயன் விற்போர்க்கு . . . (1681)
5. ஐவருள் ஒருவன் அன்ன அடிசில்நூல் மடையன் (2735)

தன் பெரிய தந்தையோடு அன்று அஞ்சாது போரிட்ட அபிமன்யு போன்ற சீவகன், அரவக் கொடியோனாகிய துரியோதனின் படைகளை முற்றவென்று விரட்டிய அருச்சுனனைப் போன்ற சீவகன், வட்டுடையும் வாளும் அணிந்து தேர் ஏறிய அருச்சுனனைப் போன்ற சீவகன் என உவம வாய்பாடாகவும், விற்போரில் வல்லவன் விசயன், அடிசிற்கலையில் வல்லவன் வீமன் என்று நேராகவும் பாரதக் கதைக்கூறுகள் சீவகசிந்தாமணியில் கூறப்படுகின்றன.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், பெருங்கதை ஆகியவற்றில் கூறப்பெறும் பாரதக் கதை நிகழ்ச்சிகளில் கதைமாந்தர்களின் இயற்பெயர்கள் குறிப்பிடப்பெறவில்லை; குலமுறைப்பெயர், தொகைப்பெயர், செய்த வீர விளையாட்டுகள், பெற்றபோர் வெற்றிகள் என்பன குறித்த வினையாலணையும் பெயர்கள் மட்டுமே காணப்பெறுகின்றன. மணிமேகலையிலும் சீவக சிந்தாமணியிலும் மட்டுமே விசயன், விராடன், தனஞ்செயன் என இயற்பெயர்கள் கூறப்படுகின்றன. வேற்றுப் பண்பாட்டுச் செய்திகளை உள்வாங்கிக் கொள்ளும்போது தமிழ் இலக்கிய மரபு சில நெறிமுறைகளைப் பின்பற்றி வந்தமையையும், காலம் செல்லச் செல்ல இத்தகைய மரபில் நெகிழ்ச்சி தோன்றியமையையும் இந்தத் தரவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

1. தமிழில் எழுந்த பாரத நூல்கள்

சங்க காலத்தை அடுத்துப் பாரதக் கதையைத் தமிழில் காப்பியமாக வடிக்கப் பல முயற்சிகள் நடந்துள்ளமை தெரிகிறது. அவற்றுள் பெருந்தேவனார் என்னும் பெயரில் இரண்டு பாரத நூல்கள் வழக்கில் இருந்தனவாக அறிகிறோம். 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' என்றேஅழைக்கப்பெற்று வந்த பெரும்புலவரால் ஒரு பாரத நூல் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அந்நூல் வழக்கில் இல்லை. அதற்குரியனவென்று கருதப்படுகிற சில பாடல்கள் பிற்கால உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" எனவரும் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுவது, முதல் பெருந்தேவனாரின் பாரதமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

2. பாரதவெண்பா

கி.பி. 850க்கும் 859க்கும் இடைப்பட்ட காலத்தில் பெருந்தேவனார் என்னும் புலவரால் பாரதவெண்பா என்னும் நூல் இயற்றப்பட்டதாக அறிகிறோம். இவர் தெள்ளாறு எறிந்த பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மனின் ஆதரவு பெற்றவர். எனவே சங்க காலத்தையடுத்து வாழ்ந்த பெருந்தேவனாருக்குப் பிற்பட்டவர். நமக்குக் கிடைத்துள்ள பாரத நூல்களுள் பாரதவெண்பாதான் பழமையானது. ஆனால் இந்த நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. உத்தியோக பருவத்திலிருந்து பதின்மூன்றாம் நாட்போர் வரையுள்ள இந்த நூலில் 830 வெண்பாக்கள் உள்ளன. அதாவது பெருங்கதையைப் போல, ஆதியும் அந்தமும் இல்லாமல் இடைப்பட்ட பகுதி மட்டுமே இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. தகடூர் யாத்திரை என்னும் தமிழ் நூலைப் போன்று இதுவும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றப்பட்டுள்ளது. இதிலுள்ள வெண்பாக்கள் நல்ல தமிழில் அமைந்திருக்க, உரைநடைப் பகுதி மட்டும் மிகுதியான வடசொற்கலவை உடையதாக அமைந்துள்ளது வியப்பை அளிக்கிறது. ஒரு புலவரே கவிதைக்கு ஒருவகை மொழிநடையையும், உரைநடைக்கு மிகுதியும் மொழிக் கலவைமிக்க நடையையும் பயன்படுத்துவாரா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. இப்புலவர் வாழ்ந்த காலத்தே தோன்றிய வேறு சம்பு காவியங்களையோ, உரைநடைப்பகுதிகள் அமைந்த வேறு நூல்களையோ கண்டறிந்து ஒப்பிட்டால் அன்றி இந்த ஐயத்தைப் போக்கிக் கொள்ள இயலாது.

பாரத வெண்பாவிற்கு முன்னர்த் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, பெருங்கதை போன்ற தமிழ்க்காப்பியங்களும், இதற்குப் பின்னர்த் தோன்றிய சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பெருங்காப்பியங்களும் பயன்படுத்தாத சம்பு என்னும் உரையிடையிட்ட காப்பிய நடையை இந்தப் பாரதவெண்பா மட்டும் பயன்படுத்துவானேன் என்னும் சிந்தனை எழுவதைத் தடுக்க இயலவில்லை. பொதுவாக, மணிப்பிரவாளம் என்னும் இருமொழிக் கலவை நடையையும் சம்பு என்னும் காப்பிய நடையையும் சமண அறிஞர்கள்தாம் தொடங்கி வைத்தனர் என்பதைத் தமிழகத்தே எழுந்த சமய நூல்களும் கருநாடகத்தே கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றிப் புகழ்பெற்று விளங்கிய சம்பு காவியங்களும் உறுதிப்படுத்துகின்றன.

எனினும் தமிழில் தோன்றிய சமணக் காப்பியங்கள் எவையும் இக்கலவை நடையைப் பின்பற்றவில்லை என்ற சூழ்நிலையில் பாரதவெண்பா மட்டும் இந்த முறையைப் பின்பற்றுவானேன் என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

வியாச பாரதமும் பாரத வெண்பாவும்

மக்கள் தம் வாழ்க்கை முறைமைக்காகவோ, முன்னேற்றத்திற்காகவோ, மொழிபெயர் தேயங்கட்குச் சென்று குடியேறுமிடத்து அவ்வந் நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்பத் தம் வாழ்க்கைக் கூறுகளாகிய நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொள்வது இயற்கை. அதுபோல நூல்களும் மொழிபெயர்ந்து செல்லுங்கால், செல்லும் பண்பாட்டிற்கேற்பச் சிற்சில மாற்றங்களை அடைவது இயல்பு. இத்தகைய பண்பாட்டுக் குடியேற்றத்தின்போது தருமொழிப் பாடங்கள் (Source language texts) சில விடுபடுவதும், சில திரிபடைவதும், சில புதிய சேர்க்கைகளை ஏற்றுக் கொள்வதும் உண்டு. இவ்வாறே வியாசமுனிவரின் பாரதமும் தமிழ் வடிவம் பெற்றபோது பல்வேறு மாறுபாடுகளையும் சேர்க்கைகளையும் பெற்றுப் புகுந்த மண்ணிற்கேற்ற புதுப்பொலிவுடன் வலம் வரலாயிற்று. பெருந்தேவனாரின் பாரத வெண்பாவில் காணப்பெறும்

சில மாற்றங்களையும் புதுமைகளையும் கீழ்வருமாறு சுருங்கக் காணலாம்:

பெருந்தேவனார் வாழ்ந்த காலமாகிய கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு தமிழ்ப் பக்தி இயக்கத்தின் வெற்றிகரமான நிறைவு கண்ட காலம்; வைதிகச் சமயங்கள் மேலோங்கி நின்ற காலம். வைணவ சமயத்தைப் பொறுத்தவரையில் சங்ககால இறுதியில் பெருவழக்காக எழுந்த பாகவதக் கதைகளும், பக்தி இயக்க காலத்தே உரம்பெற்றுப் பரவிய திருமாலின் அவதாரக் கதைகளும் ஆழ்வார் பெருமக்களால் பரவலாக்கப்பெற்ற புராணக் கதைகளும் கண்ணன் என்னும் பாத்திரத்தைத் திருமாலின் இணையற்ற இனிய அவதாரமாக மாற்றிவிட்ட சூழ்நிலையில் பாரதவெண்பா தோன்றியது. அதன் விளைவாகப் பெருந்தேவனார் பாரதத்தில் வரும் பாத்திரமாகிய கண்ணன், எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல இறைவடிவமாகச் செயற்பட்டு, அவனன்றி ஓரணுவும் அசையாத கட்டுக்கோப்பினை உடைய ஒரு காப்பியத்தின் 'சூத்திரதாரியாகப்' (dues ex machina) படைக்கப்பட்டுள்ளான். அதன் விளைவாகப் பெருந்தேவனார் செய்த மாற்றங்களாவன:

1. துருவாசர் குந்திக்கு ஒரு மந்திரம் கொடுத்ததாக வியாசர் கூற ஐந்து மந்திரம் கொடுத்ததாகப் பாரத வெண்பா கூறுகிறது. (வெண்பா 220–உரை).

2. குந்தி தான்பெற்ற கன்னனை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் மிதக்க விட்டாள் (வெண்பா 222).

3. கன்னனுக்கு அவன் பிறந்த சூழலைக் கூறி விளக்குபவன் கண்ணன். (வெண்பா 220).

4. கண்ணன் செய்த சூழ்ச்சி காரணமாகத் துரியோதனன் அசுவத்தாமன்மேல் ஐயுற்று நம்பிக்கையிழக்கிறான். வியாசர் இதனைக் குறிப்பிடவில்லை.

5. வியாசர் கூறாத சுவேதன் கிளைக்கதையைப் பாரதவெண்பா கூறுகிறது. (14–18).

6. விதுரனை ஒழுக்கம் நிறைந்த அறத்தின் நீங்காத ஓர் அமைச்சனாக வியாசர் படைத்துள்ளார். அவனை ஒரு வீரனாகவோ வில்லாளியாகவோ வியாசர் படைக்கவில்லை. அரசவையில் துரியோதனன் தன்னைப் பழித்துரைத்தமைக்காக விதுரன் தன் வில்லை முறித்து எறிந்தான் என்று அவனுடைய பாத்திரப் படைப்பில் இன்றியமையாத மாற்றத்தினைப் பெருந்தேவனார் செய்கிறார். (181,182).

7. பெரு வீரனாக மூலநூல் காட்டும் சகதேவனை, முக்காலமும் உணர் ஞானியாக மாற்றி, அவனுக்குக் கண்ணன் தன் பிரபஞ்ச வடிவத்தைக் காட்டியருள்வதாகப் பாரதவெண்பா காட்டுகிறது (134–136).

8. குந்தி தானாகவே கன்னனிடம் செல்வதாக வியாசர் கூற, கண்ணனின் அறிவுரைப்படி கன்னனின் அரண்மனைக்குக் குந்தி செல்வதாகப் பெருந்தேவனார் கூறுகிறார்.

9. கன்னனிடம் சென்று அவனுடைய கவச குண்டலங்களைப் பெறுவதற்காக இந்திரன் தானே செல்வதாக மூலநூல் கூறக் கண்ணனின் அறிவுரைப்படி இந்திரன் சென்றான் என்று தமிழ்ப் பாரதம் கூறுகிறது (276, 286).

10. துரியோதனின் மனைவி பானுமதி, தான் தாயம் ஆடிக்கொண்டிருந்தபோது எதிர்பாராமல் அங்கே திடீரென வந்த துரியோதனனைக் கண்டதும் எழுந்தாள். அவள் ஆட்டத்தின் இடையில் போவதைத் தடுக்க அவளுடைய பூந்துகிலைப் பற்றிக் கன்னன் இழுக்க அவளுடைய மேகலாபரணம் இற்று நவரத்தின மணிகள் நாற்புறமும் சிதறியோடின. அப்போது துரியோதனன் சிரித்த முகத்துடன் இம்மணிகளை 'நான் பொறுக்கவோ, பொறுக்கிக் கோக்கவோ' என்று கன்னனைக் கேட்டான். அத்தகைய பெருந்தன்மை உடையானைத் தான் கைவிடல் இயலாது என்றான் கன்னன் (319–320, உரை). இச்செய்தி வியாச பாரதத்தில் இல்லை.

11. பாரதப் போருக்கு முன்னர் அதன் வெற்றிக்காக அருச்சுனனின் மகன் அரவானைப் பலியிடும் நிகழ்ச்சி மூலநூலில் இல்லை; கண்ணனின் கடவுள் தன்மையைப் புலப்படுத்துவதற்காகப் பாரதவெண்பா இக்கிளைக் கதையினைப் புதியதாகச் சேர்த்துள்ளது.

12. வியாசர் துரியோதனன் 'யானைக்கொடி' உடையோன் என்று கூறுகிறார் (துரோண பருவம் 125 - 126);

பெருந்தேவனார் துரியோதனனை 'அரவக் கொடியோன்' என்று கூறுகிறார். இம்மாற்றத்தைத் தென்னக மொழிகளில் எழுந்த பல பாரதங்கள் பின்பற்றியுள்ளன (தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பாரத சம்பு போன்ற வடமொழி நூல்கள்.)

இவ்வாறே பெருந்தேவனார் படைத்த பல புதுமைகளையும், மாற்றங்களையும் பல்வேறு தென்னக

மொழிப் பாரத நூல்கள் பின்பற்றியுள்ளன எனக் காணுமிடத்துப், பாரதக் காப்பிய மரபிற்கு அல்லது புதுமரபின் தோற்றத்திற்குத் தமிழ்ப் பாரதமாகிய பாரதவெண்பா அளித்த நன்கொடை தெற்றெனப் புலனாகிறது.

3. மாவிந்தம்

வியாச பாரதத்தின் சுவர்க்காரோஹண பருவத்தை 339 வெண்பாக்களில் பாடியுள்ள இந்நூலில் ஆசிரியர் பெயரையும் காலத்தையும் அறிய இயலவில்லை. இந்நூலைப் பதிப்பித்த தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தைச் சேர்ந்த பதிப்பாசிரியர் பாரத வெண்பாவை இயற்றிய பெருந்தேவனாரே இந்த வெண்பா நூலையும் இயற்றினார் என்று கூறுகிறார். இந்த இருநூல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞர்கள், மாவிந்தம் பிற்காலப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனக் கருதுகின்றனர்.

4. அருள்நிலை விசாகர் பாரதம்

கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குரிய திருவாலங்காட்டுக் கல்வெட்டு, அருள்நிலை விசாகன் வத்ஸராஜன் என்பவரால் ஒரு பாரத நூல் தமிழில் இயற்றப்பட்டது என்று கூறுகிறது. இந்த நூல் தற்போது வழக்கில் இல்லை.

5. வில்லிபுத்தூரார் பாரதம்

கி.பி.14ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் என்பவரால் இயற்றப்பெற்ற பாரத நூல்தான் தமிழ் இலக்கிய உலகில் மிகுதியும் புகழ்பெற்ற பாரதமாக விளங்குகிறது. வியாச பாரதத்தின் முதல் பத்துப் பருவங்களை மட்டும் 50 சருக்கங்களாகப் பகுத்து 4300 விருத்தப்பாக்களில் இந்நூல் பாடப்பெற்றுள்ளது. அதாவது, பாண்டவர்களின் வெற்றியைப் பாடி, தருமர் முடிசூட்டு விழாவோடு நிறைவு செய்திருப்பதை இங்கே நினைந்து பார்த்தால், தலைவர்கள் மற்றும் அவதாரங்களின் அந்திம நிலையைப் பாடுவதை வைணவ மரபு போற்றுவதில்லை என உணரலாம்.

'காசில் கொற்றத்து இராமன் கதையினை ஆசை பற்றி அறையலுற்றேன்' எனக் கம்பன் கூறுவதுபோல, வில்லிபுத்தூராரும் தாம் பாரதம் பாட நேர்ந்ததற்குரிய காரணமாக,

மன்னு மாதவன் சரிதமும் இடைஇடை, வழங்கும்
என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு
இசைந்தேன் (குருகுலச். 6)

என்று திருமால் அவதாரமாகிய கண்ணனைப் பற்றிய கதைத் தொடர்பு கருதிப் பாடியதாகக் கூறுகிறார்.

வியாசர்பாரதத்தைப் பின்பற்றித், தாம் பாரதத்தைப் பாடுவதாக வில்லிபுத்தூரார் கூறுகிறார். (குருகுலச். 3,4) எனினும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அகத்திய பட்டரால் இயற்றப்பெற்ற பாலபாரதத்தையும் பெருந்தேவனாரின் பாரத வெண்பாவையுமே மிகுதியாக அடியொற்றி வில்லிபுத்தூரார் தம் பாரதத்தை இயற்றியதாக அறிஞர்கள் கருதுவர்.

வில்லிபாரதம் வழங்கும் மாற்றங்களும் புதுமைகளும்

இலக்கியக் குடியேற்றத்தின் விளைவாகப் பெருந்தேவனாரின் பாரதவெண்பாவில் காணப்படும் மாற்றங்களும், சேர்க்கைகளும் வில்லிபாரதத்திலும் காணப்படுகின்றன. அவற்றைத் தவிர வில்லிபுத்தூராரே சில மாற்றங்களையும் புதுமைகளையும் செய்திருக்கக் காண்கிறோம். சங்கப் பாடல்கள் முதலான முந்தைய இலக்கிய மரபில் பாரதப் போரில் இருசார் படையினர்க்கும் சேரமன்னன் உதியன் சேரலாதன் பெருஞ்சோறு அளித்த செய்தி கூறப்படுவதை மேலே கண்டோம். வில்லிபாரதம் அச்செய்தியைக் கூறவில்லை. மாறாகப் பதினேழாம் நாட்போரில் பாண்டவர்க்கு உதவியாகச் சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழ்வேந்தரும் போரிட்டனர் என்று வில்லிபாரதம் கூறுகிறது. (முதற்போர் – 35, பதினேழாம் நாட்போர் – 65, 107–118, 120–134).

மேலும், பாரதப் போரில் ஈடுபட்ட வீரர்கள் வெட்சி, வஞ்சி, தும்பை ஆகிய பூக்களைச் சூடிப் போருக்குச் சென்றனர் என்று தொல்காப்பியப் புறத்திணை மரபை வில்லிபுத்தூரார் வடபுலத்தே நிகழ்ந்த பாரதப்போர் வீரர்கள்மேல் ஏற்றி உரைத்துள்ளார். இவ் இரு புதிய சேர்க்கைகளும் பெறுமொழிப் பண்பாட்டுக் கூறுகள் தருமொழிப் பண்பாட்டுப் பாடத்தின் மீது (text) ஏற்றி உரைக்கப்பட்டமைக்கான சான்றுகளாகக் கருதத்தக்கன.

தருமொழிப் பாடத்தைத் தொகுத்துக் கூறும் பாங்கும் வில்லிபாரதத்தில் காணப்படுகிறது. வியாச பாரதத்தில் வரும் 700 சுலோகங்களை உடைய பகவத்கீதையின் செய்தியைப் பாரதவெண்பா 3 வெண்பாக்களிலும், வில்லிபாரதம் 6விருத்தங்களிலும் சுருக்கிக் கூறுகின்றன. கலித்தொகையாகிய சங்க இலக்கியக் காலத்தில் ஆயர் தலைவனாகப் படைக்கப்பெற்றுள்ள

கண்ணன் சிலப்பதிகாரம் முதலான சங்கம் மருவிய இலக்கியங்களிலும், பாரத வெண்பாவிலும் அவதாரமாகப் படைக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். வில்லிபுத்தூராரோ இடைமிடையே கண்ணனைப் பற்றிப் பாடும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் பாரதக் கதையைத் தமிழில் பாடியதாகக் கூறுகிறார். இவ்வாறு அவதார நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள பண்பாட்டில் – மொழிபெயர்ந்து வழங்கும் தமிழ்ப் பாரதங்களில் – கண்ணனின் தத்துவப் பொழிவாகக் கருதப்படும் பகவத்கீதை 1/2 விழுக்காடாகவும், (1/2 %) ஒரு விழுக்காடாகவும் (1%) சுருக்கிக் கூறப்பட்டிருப்பது புதுமையாகவும், வியப்புக்கு உரியதாகவும், ஆய்வுக்கு உரியதாகவும் அமைகிறது.

6. ஆதி பருவத்து ஆதி பருவம்

கி.பி 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தே அம்பலத்தாடுமையர் என்னும் கவிஞரால் இயற்றப்பெற்றஇந்த நூல், மூலநூலின் ஆதிபருவக் கதையை 566 பாடல்களில் சுருக்கிக் கூறுகிறது. இதில் சந்தனு மகாராசாவிற்கு முன்னரும் பின்னரும் ஆண்ட அரசர்களின் கதை சுருக்கிக் கூறப்படுகிறது. இலக்கியச் சிறப்பில்லாத இந்தப் பாரதநூல் ஆய்வாளர் இடையே மட்டும் வழங்கி வருகிறது.

7. அரங்கநாதக் கவிராயர் பாரதம்

அரங்கநாதக் கவிராயர் என்பவரால் கி.பி. 1753இல் இயற்றப்பட்ட இந்தப் பாரத நூல் வியாச பாரதத்தின் 11ஆவது பருவம் தொடங்கி 18ஆவது பருவம் முடிய உள்ள கதைப் பகுதியினைத் தமிழில் தருகிறது. 45 சருக்கங்களையும் 2477 பாடல்களையும் உடைய இந்த நூல் வில்லிபாரதம் பாடாது விட்ட கதையை நிறைவு செய்வதாக அமைந்துள்ளது. ஆக வியாசபாரதம் முழுவதும் செய்யுள் வடிவில் அமைய உதவிய படைப்பு என்பதன்றி இலக்கியச் சிறப்புகள் எவையும் இந்த நூலில் காணப்பெறவில்லை.

8. நல்லாப்பிள்ளை பாரதம்

கி.பி 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நல்லாப்பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்ற இந்தப் பாரத நூல் பாரதக் கதை முழுவதையும் 14,000 பாடல்களில் பாடுகிறது. மூல பாரதத்தின் கிளைக் கதைகள் எல்லாவற்றையும் பாடுவதாலும், பெரும்பாலான பாடல்கள் வில்லிபாரதத்திலிருந்து பெயர்த்து எழுதப்பட்டனவாகையாலும் இந்நூல் மிக நீண்டு அமைந்துவிட்டது. பாரதச் சொற்பொழிவாளர்க்கு மிகுதியும் பயன்படும் இந்நூல், பாரதக் கதையைப் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லியும் வடமொழி வியாசரைத் தென்னகத்துச் சாதாரண மக்களுக்கு அறிமுகம் செய்தும் அவர்கள் வீட்டுக் கதையாக்கிய பெருமை உடையது.

9. பாரத சார வெண்பா

கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெருமாள் சுவாமிகள் என்பவரால் இயற்றப்பெற்ற இந்தப் பாரதநூல் 748 வெண்பாக்களில் பாரதக் கதையின் சுருக்கத்தைத் தருகிறது. மரபின்வழி வந்த காப்பியப் படைப்பில் இறுதி நூலாகக் கருதப்படும் பாரதசார வெண்பா சில மாற்றங்களைக் கொண்டிருக்கக் காண்கிறோம். எனினும் இலக்கிய நயம்பட இந்நூல் இயற்றப்படாமையின் வாசகர் வரவேற்பைப் பெறாமல் வழக்கொழிந்து விட்டது.

கிளைக் கதைகள்

காப்பியத்தின் மையக் கதைப்பின்னலை அடிப்படை--யாக வைத்து எழுந்த பாரத நூல்களைத் தவிர, மூல பாரதத்தில் உள்ள கிளைக்கதைகளை மட்டும் தனித்தனியாகத் தந்த இலக்கிய முயற்சிகளும் தமிழில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவ்வாறு தமிழில் படைக்கப்பெற்ற கிளைக்கதைகள் மரபுசார்ந்த கவிதை நூல்களாகவும், மக்கள் இலக்கியம் எனப் போற்றப்படும் நாட்டுப்புறக் கதைகளாகவும் மலர்ந்துள்ளன. அவற்றுள் நளவெண்பா, நைடதம், புரூரவ சரிதை, புரூரவ நாடகம், மாரி வாயில், பாஞ்சாலிசபதம் ஆகிய மரபுசார் நூல்களும், பாரத அம்மானை, அல்லி அரசாணிமாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் தூது, அபிமன்னன் சுந்தரி மாலை, ஏணியேற்றம், அரவான் அம்மானை, கர்ண மகாராசன் சண்டை, குருட்சேத்திரமாலை, பொன்னுருவி மசக்கை, ஆரவல்லி – சூரவல்லி கதை போன்ற நாட்டுப்புற அல்லது நாட்டார் கதை இலக்கியங்களும் அடங்கும்.

முறைமை மாறாத மரபுசார் இலக்கியத் தழுவல்களைவிட, நாட்டார் கதையிலக்கியங்களில் தான் பெறுமொழி மண்ணின் மணம் மிகுதியாகவும் நுகரத்தக்கதாகவும் வீசுகிறது. தருமொழி ஞானி வியாச

பகவானைத் தமிழக வீதிகளில் உலவவிட்டு உயிர்ப்பிக்கும் தொண்டினை இத்தகைய நாட்டுப்புற இலக்கியங்கள் ஏறக்குறைய கடந்த 400 ஆண்டுகளாகச் செய்து வந்துள்ளன எனின் அது மிகையாகாது.

தமிழிலக்கியச் செய்திகள் வியாச பாரதத்தில் இடம்பெற்றமை

இதுகாறும் கண்டவற்றால்,வியாசர் பெயரால் வழங்கும் தென்புல வழக்கு வடமொழி மகாபாரதத்தில் காணப்பெறும் பல சுவையான, கதைப் பின்னலோடு மிகவும் தொடர்புடையனவாக அமைந்துவிட்ட கதைக்கூறுகள், தமிழ்ப் பாரத நூல்களிலிருந்து மொழிபெயர்ந்து மூல நூலோடு இணைந்துவிட்ட பாங்கினைக் காண்கிறோம். அவ்வாறு தமிழ்க் கொடையாக அமைந்துவிட்ட கதைக் கூறுகளில் இன்றியமையாத சிலவற்றைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

1. பாஞ்சாலியைத் துகிலுரிதல் – கண்ணபிரான் காத்தல்.

2. அருச்சுனன் பேடியாதல்.

3. சயத்தர தத்தன் வதை – கண்ணன் திகிரியால் கதிர் மறைத்தல்.

4. சிவன் நீலகண்டனாக மாறுதல்.

5. சிபி–புறா கதை.

6. சுவேதா கிளைக் கதை.

7. விதுரனை வில்வீரனாக மாற்றியது.

8. எடுக்கவோ கோக்கவோ என்னும் நிகழ்ச்சி.

9. அரவக் கொடியோன்.

10. அந்தணர்களும் சண்டாளர்களே.

11. கண்ணனை அவதாரமாகக் காட்டுதல்; பாரதக் கதையின் மூலவராகப் போற்றுதல்.

12. கீதையைப் புறக்கணித்தல்.

மகாபாரதக் காப்பிய வளர்ச்சிக்குத் தமிழிலக்கியம் ஆற்றியுள்ள பங்கினை முழுவதுமாக அறிந்து மதிப்பிட வியாசபாரத ஏடுகளை இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து ஒப்பிட்டுக் காணவேண்டும். தனிமனித ஆய்வாக நின்றுவிடாமல், ஒரு குழுவின் பணியாக மேற்கொள்ளப் பெற்றால் இந்த ஒப்பாய்வு விரைவாகவும் மிகத் துல்லியமாகவும் நிறைவேறும் வாய்ப்பு உண்டாகும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள்



முனைவர். ஆ. ஆனந்தராசன்,
மதுரை.

தேவாரம் முதலாகப் பெரியபுராணம் ஈறாக உள்ள பன்னிரு திருமுறைகளையும், திருவுந்தியார் முதலாக உள்ள சாத்திரங்களையும் சைவத்தின் இருகண்கள் எனப் போற்றுவர்.

திருமுறைகள் அனுபவ இலக்கியமாய் அமைந்திருக்க, சாத்திரங்கள் அவற்றிற்கு இலக்கணமாய் அமைந்து நிற்பனவாம்.

திருமுறைகள் தோன்றிச் சைவசமயம் தழைத்தோங்கிய பின்னர், அத்திருமுறைகளில் கூறப்பட்டுள்ள ஞானநுண்பொருள்களை ஐயத்திற்கு இடமின்றி விளக்கவும், ஆராய்ச்சி முறையில் அவற்றைத் தெளிவுபடுத்தவும் எழுந்தனவே சாத்திரங்களாகும்.

அந்தகைய சாத்திர நூல்களுள் மிகச் சிறந்தனவாகத் தொகுத்துத் தரப்பட்ட நூல்கள் பதினான்கு. அவை, 1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப் படியார் 3. சிவஞான போதம் 4. சிவஞான சித்தியார் 5. இருபா இருபஃது 6. உண்மை விளக்கம் 7. சிவப்பிரகாசம் 8. திருவருட்பயன் 9. வினா வெண்பா 10. போற்றிப் பஃறொடை 11. கொடிக் கவி 12. நெஞ்சுவிடு தூது 13. உண்மைநெறி விளக்கம் 14. சங்கற்ப நிராகரணம் என்பன.

இவ்வரிசையில் முன்னே உள்ள திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும் காலத்தால் முற்பட்டவை. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இவையிரண்டும் வரன்முறையாகச் சாத்திரம் கூறும் நூல்கள் அல்ல. இவற்றில் சாத்திரமும் உண்டு; தோத்திரமும் உண்டு. சிவஞானபோதத்திற்கு முந்தியே இவை தமிழ்நாட்டில் சைவ நன்மக்களிடையே பெருமதிப்பைப் பெற்று விளங்கிய சிறந்த அனுபூதி நூல்களாகும். அச்சிறப்புக் கருதி இவ்விரண்டையும் சாத்திர நூலாகவே கொண்டு, சிவஞானபோதத்திற்கு முற்பட்டவையாதல் பற்றி, அவற்றை முன்னே வைத்து முதல் இரண்டு நூல்களாக வரிசைப்படுத்தினார்கள் என்று கொள்ளலாம்.

இச்சாத்திரங்கள் இருவகைப்படுவன. ஒன்று, உபதேச முறையில் அமைந்தவை. மற்றொன்று, ஆராய்ச்சி முறையில் அமைந்தவை. சாத்திர வரிசையில் தொடக்கத்தில் உள்ள திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டும் உபதேச முறையில் அமைந்தவை. மற்ற நூல்களெல்லாம் ஆராய்ச்சி முறையில் அமைந்தவையாகும்.

மேலும், முதலில் உள்ள திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் இரண்டும் தனிப் பரம்பரையில் தோன்றியவை. ஏனைய பன்னிரண்டு நூல்களும் மெய்கண்ட தேவரது பரம்பரையில் எழுந்தவையாகும்.

இச்சாத்திரங்கள் பதினான்கும் 'மெய்கண்ட சாத்திரங்கள்' என்ற பெயரால் வழங்கப்படுகின்றன. மெய்கண்ட தேவரது சந்தானத்தில் தோன்றியவை என்ற கருத்தில் இப்பெயர் இடப்பட்டுள்ளது. ஆயின் மெய்கண்ட சந்தானத்தில் தோன்றாத திருவுந்தியாரையும் திருக்களிற்றுப்படியாரையும் மெய்கண்ட நூல்கள் என வழங்குவது பொருந்துமா? என வினவலாம். பெரும்பான்மை பற்றி அவை உள்ளிட்ட பதினான்கு சாத்திரங்களும் மெய்கண்ட நூல்கள் என வழங்கப்பெறுகின்றனவாதலின் உந்தி, களிறு இரண்டையும் அங்ஙனம் வழங்குதல் அமையும் எனலாம்.

முன்னே தோன்றிய இவ்விரு நூல்களையும் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம்.

இவ்விரு நூல்களையும் செய்தருளிய ஆசிரியர்கள் ஒரே பெயரை உடையவர்கள், உய்ய வந்த தேவர் என்பது அவர்கள் பெயர். ஊர்ப் பெயரைச் சேர்த்து அவ்விருவரையும் வேறுபடுத்திக் குறிப்பிடுவர். அம்முறையில், திருவுந்தியாரைச் செய்தருளியவர் திருவியலூர் உய்யவந்த தேவர். திருக்களிற்றுப் படியாரின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவர்.

திருவியலூரில் வாழ்ந்த உய்யவந்த தேவர் தம்மை யடுத்த மாணாக்கராகிய ஆளுடைய தேவரின் பொருட்டாகத் திருவுந்தியாரைச் செய்தார். ஆளுடைய தேவர் அந்நூலைத் திருக்கடவூரைச் சேர்ந்த தம் மாணாக்கருக்கு உபதேசித்துத் தம் ஆசிரியரின் பெயரான உய்யவந்த தேவர் என்பதையும் அவருக்குத் தீட்சா நாமமாகச் சூட்டினார். இவ்வாறு அம் மாணாக்கர் திருக்கடவூர் உய்யவந்த தேவர் ஆயினார். அவர் தமது ஆசிரியருக்கு ஆசிரியர் செய்த திருவுந்தியாருக்கு விளக்கமாகச் செய்த நூலே திருக்களிற்றுப் படியார் ஆகும். அம்முறையில் இவ்விரு நூல்களும் முதல்நூலும் வழிநூலும் ஆவன என்பது விளங்கும்.

திருவுந்தியார் 45 தாழிசைகளால் ஆனது. தாழிசை ஒவ்வொன்றும் மூன்றடி உடையது. திருவாசகத்தில் உள்ள திருவுந்தியாரைப் பின்பற்றியே இது பாடப் பெற்றிருக்கிறது எனலாம். உந்தி பறத்தல் என்ற மகளிர் விளையாட்டை எடுத்துக் கொண்டு அந்த அமைப்பில், மிகவும் அரிய பொருளை மிகவும் எளிய முறையில் பாடியுள்ள அருமை வியத்தற்குரியது. இந்நூலின் பாடல்கள் திருமுறைகளின் சாரமாய் உள்ளன. சைவ சித்தாந்த நுண்பொருள்களை உலகியல் பொருள் போலத் தோன்றும்படி மறைத்துச் சுவைபடச் சொல்லியுள்ள பான்மை திருமந்திரத்தை நினைப் பூட்டுகிறது.

முதலில் ஞானாசிரியரின் பெருமையைக் கூறித் தொடங்குகிறது திருவுந்தியார்; யாராலும் அறிவதற்கரிய அந்தப் பரம்பொருள் அனைவரும் தம் ஊனக் கண்ணால் எளிதிற் கண்டும் உரையாடியும் அளவளாவி மகிழும் வண்ணம் ஆசாரியராய் எழுந்தருளி வந்தது என்று முதற் செய்யுள் கூறுகின்றது. அதுபோலவே முடிவிலும் ஆசாரியரை வாழ்த்தியே நூல் முடிகின்றது.

திருவுந்தியாரின் வழிநூல் திருக்களிற்றுப்படியார் என்பதை முன்னர்க் குறிப்பிட்டோம். திருவுந்தியாரில் குறிப்பாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்ட கருத்துக்களைத் திருக்களிற்றுப் படியார் விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறுகிறது.

இந்நூலை இதன் ஆசிரியர் தில்லையில் கனகசபையில் உள்ள திருக்களிற்றுப் படியில் (பஞ்சாக்கரப் படியில்) வைத்த போது நடராசப் பெருமான் அந்நூலின் பெருமையை உலகத்தார் உணரும் வகையில், அப்படியில் உள்ள கல் யானை தனது துதிக்கையால் எடுத்து அதனைத் தனது திருவடியில் வைக்கச் செய்தருளினான். அக்காரணம் பற்றியே அந்நூலுக்குத் திருக்களிற்றுப் படியார் என்ற பெயர் வந்தது என்பர்.

திருவுந்தியாரின் பொருளை இனிதாக விளக்கிச் செல்லும் நூறு வெண்பாக்களை இந்நூல் கொண்டுள்ளது.

அடியார் தொண்டுகளை மெல்வினை, வல்வினை என்று இரண்டாக வகுத்துச் சொல்கிறது இந்நூல். எல்லா மக்களும் எளிதில் செய்தற்குரிய சரியைத் தொண்டுகளும், கிரியைத் தொண்டுகளும் மெல்வினை எனப்படும். சிறுத்தொண்டர் தம் பிள்ளையைத் தம் கையாலே அறுத்துக் கறி சமைத்தது, சண்டீசர் தம் சிவ பூசைக்கு இடையூறு செய்த தந்தையின் காலை வெட்டியது, அரிவாட்டாயர் பெருமானுக்குக் கொண்டு சென்ற நிவேதனப் பொருள்களைக் கமரில் கால் தவறிக் கொட்டிய குற்றத்திற்காகத் தமது கழுத்தைத் தாமே அரிவாளால் அரிந்து கொண்டது போன்ற அரிய செயல்கள் வல்வினை என்று விளக்குகிறது.

ஞானசம்பந்தர் முதலிய சமயாசாரியர் நால்வரும் நிகழ்த்திய அற்புதச் செயல்களை ஒவ்வொரு வெண்பாவால் கூறுகிறது இந்நூல். வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீது பாடிய பாடலை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். மங்கையர்மோகம், முத்தி நெறிக்குத் தடை என்று ஆகமங்களில் வெளியிட்டருளிய அம்முதல்வனையே தம் மனைவி யாரது ஊடலைத் தீர்க்கத் தூதாய் அனுப்பினார் வன்றொண்டர் என்றால் அவரது பெருமையை என்னென்பேன் என்று வியந்தும் நயந்தும் கூறுகிறார் ஆசிரியர்.

'மோகம் அறுத்திடில் நாம் முத்தி கொடுப்பதென

ஆகமங்கள் சொன்ன அவர் தம்மைத் –தோகையர்பால்

தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை

ஏதாகச் சொல்லுவேன் யான்.'

சமயாசாரியர்கள் முதலிய நாயன்மார்களின் வரலாறுகளும் அவர்களது அருள்மொழிகளும் ஆங்காங்கே பிரமாணமாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. அவற்றோடு ஒத்த பிரமாண நூலாகத் திருக்குறளையும் கொண்டு இவ்வாசிரியர் பல இடங்களில் எடுத்தாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இனி மூன்றாவதாக உள்ள சிவஞான போதமே சித்தாந்த சாத்திரங்களுள் ஒப்புயர்வற்றதாய்த் திகழ்வது. அதனை அருளிச் செய்தவர் மெய்கண்டார். அவர் வாழ்ந்த காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு. அவர் பெண்ணாகடம் என்ற ஊரில் தோன்றித் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்தவர். மெய்கண்டார் என்பது தீக்கைப் பெயர். அவரது பிள்ளைமைப் பெயர் சுவேதவனப் பெருமாள் என்பது.

மெய்கண்டாருக்குப் பல பெருமைகள் உண்டு. ஆகமங்களிலும் திருமுறைகளிலும் பரந்து கிடந்த சித்தாந்தப் பொருள்களை முறைப்படுத்தித் தருக்க நூல் நெறிக்கு ஏற்ப அதிகாரம், இயல், பாதம், அதிகரணம் என்ற பிரிவுகள் அமைய வகைப்படுத்தி நூலாக்கித் திட்ப நுட்பமுற முதன்முதலில் வழங்கிய பெருமை இவரையே சாரும். இவருக்கு முன்னரே சித்தாந்த நூல்கள் பல தோன்றியிருப்பினும் அவையெல்லாம் இவ்வாறு முறைப்பட வகுத்து விளக்கிச் செல்லும் பான்மையுடையனவல்ல. அதனால், மெய்கண்ட தேவரையே சைவ சித்தாந்தத்தின் முதலாசிரியர் என்று போற்றுகின்றனர்.

மேலும் மெய்கண்டார் மாணாக்கர் பலருக்குத் தமது நூலாலும், உபதேசத்தாலும் சித்தாந்தப் பொருளைத் தெளிய உணர்த்த ஆட்கொண்டு அவர்கள் வழியாகச் சைவசித்தாந்தம் எங்கும் பரவநின்று நிலவும்படி செய்தார். அவரது மரபே திருக்கயிலாய பரம்பரை எனப் பெறுகின்றது.

மெய்கண்டாருக்கு மாணாக்கராய்த் திகழ்ந்த பலருள் இருவர் குறிப்பிடத்தக்கவர். ஒருவர் அருணந்தி சிவாசாரியார். அவர், தம் ஆசிரியர் செய்தருளிய சிவஞான போதத்திற்கு விளக்கமாகச் சிவஞான சித்தியார் என்னும் பெருநூலையும், இருபா இருபஃது என்னும் சிறு நூலையும் செய்தனர். மற்றொரு மாணாக்கர் திருவதிகை மனவாசகங் கடந்தார். அவர் உண்மை விளக்கம் என்னும் நூலைச் செய்தார். இவ்விரு பெருமக்களும் தம் ஆசிரியரின் சிறப்பினைத் தம் நூலுள் விளங்கப் புலப்படுத்தியுள்ளனர். அருணந்தி சிவனார், தமக்கு இறைவன் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கும் மெய்கண்ட தேவ நாயனாராக வந்து, ஞானத்தையருளிப் பிறவிக் கடலினின்றும் எடுத்து முத்திக் கரையிற் சேர்த்தருளினான் என்று மகிழ்ந்து கூறியுள்ளார்.

இனிச் சிவஞானபோத நூலின் அமைப்பைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் செய்த பாயிரம் உள்ளது. அதில் இரு செய்யுட்கள் உள்ளன. அவை கடவுள் வாழ்த்தும், அவையடக்கமும் ஆகும். சிவபிரானே முதற் கடவுள் என்னும் சைவத்தின் முதற் கொள்கை கடவுள் வாழ்த்தில் உணர்த்தப்பட்டுள்ளது. அவையடக்கச் செய்யுளில், 'பசுக்களாகிய தம் இயல்பையும் பதியாகிய இறைவனது இயல்பையும் உள்ளவாறு உணர்ந்த சைவசமய ஆசாரியப் பெருமக்களே எமக்குத் தலைவர் ஆவர்' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் மூன்று பொருள்கள் தோற்றமும் அழிவும் இன்றி என்றும் உள்ளன என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்து. அதனையும் பிற கருத்துக்களையும் பன்னிரண்டு நூற்பாக்களால் மெய்கண்டார் விளக்கியுள்ளார். அந்நூற்பாக்களின் பொருள் புலப்படுதற்கு ஆசிரியரே ஒவ்வொரு நூற்பாவுக்கும் சுருக்கமான பொழிப்புரை செய்துள்ளார்; நூற்பாக்களின் பொருளை விளக்கும் எண்பத்தொரு வெண்பாக்களையும் செய்துள்ளார்.

சிவஞானபோதம் சொற்சுருக்கமும், பொருட் பெருக்கமும் உடையது. அதனை வியந்து,

‘சிறிய ஆடியிற் பெரிய மால்
வரைப் பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் பொருளெலாம்
அகப்படுத்து அவற்றின்
நெறி யெலாம் விளக்கிய சிவ
ஞான போதம்’ (விநாயக புராணம்)

என்று கச்சியப்ப முனிவர் பாராட்டியிருப்பது பொருத்தமேயன்றோ?

சுருங்கிய சொற்களையுடைய சிவஞான போதமாகிய முதல் நூலின் பொருளை இனிது விளக்குவதாய் அதன் வழியாய் அமைந்த

சிவஞான சித்தியார் அடுத்து வைக்கப் பெற்றுள்ளது, அதனை அருளிச் செய்தவர் மெய்கண்ட தேவரின் தலை மாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியார் என்பதைச் சற்று முன்னே குறிப்பிட்டோம். இஃது அவருடைய தீட்சா நாமம். சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயரும் அவருக்கு உண்டு.

அவர் மெய்கண்டாரின் நேர்மாணாக்கர் ஆதலின் அவர் தமது நூலில் விரித்துக் கூறிய பொருளே சிவஞான போதத்தின் உண்மைப் பொருள் என்று அறிஞர்கள் கொண்டதில் வியப்பேதும் இல்லை. மேலும் அவர் பன்னிரு நூற்பாக்களால் அமைந்த சிவஞானபோத நூலின் கருத்தை 629 விருத்தப் பாக்களால் மிக விரிவாக விளக்கியிருத்தலின், சிவஞானபோதத்திற்குப் பாவகையால் அமைந்த பாடியம் (பேருரை) என அவரது நூலைக் குறிப்பிடுவர்.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் அளவால் மிகப் பெரியது சிவஞான சித்தியார். அது பரபக்கம், சுபக்கம் என்னும் இருபெரும் பிரிவுகளை உடையது. பர பக்கத்தில் 301 செய்யுட்களும் சுபக்கத்தில் 328 செய்யுட்களும் உள்ளன.

பரபக்கத்தில் பிற சமயத்தார் கொள்கைகள் அவர்கள் கூறும் முறையிலேயே கூறப்பட்டுப் பின்னர்த் தக்க முறையில் மறுக்கப்படுகின்றன. சுபக்கத்தில் தன் கொள்கையாகிய சைவ சித்தாந்தம் இனிய முறையில் எடுத்துரைக்கப்படுகின்றது.

சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்குமிடத்து ஆசிரியர் பிற சமயத்தார் நிகழ்த்தும் தடைகளும், அவற்றிற்குத் தாம் கூறும் விடைகளுமாக அமைத்து விளக்கியுள்ளார் ஆதலின், பிறசமயத்தார் கொள்கைகளை முன்னே தெரிந்திருந்தால்தான் சுபக்கத்தில் கூறப்படும் பொருளை ஒருவர் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியும். அதுபற்றியே, பரபக்கம் முன்னர் பயிலுதற்கு உரியது என்னும் கருத்தால் அதனைச் சுபக்கத்தின் முன்னர் அமைத்துக் கொண்டார் ஆசிரியர்.

அங்ஙனமாயின், பரபக்கத்தை முதலில் கட்டாயம் பயின்றுதான் மேற்செல்ல வேண்டுமா ? எனக் கேட்கலாம். அஃது ஆசிரியர் கருத்தன்று.

பரபக்கத்தைப் பயில்வதற்கு ஆர்வமும், முயற்சியும், ஆழ்ந்த புலமையும் வேண்டும். நுண்ணுணர்வுடைய சிலருக்கே அது கூடும். அவர் போலன்றிச் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை மட்டும் தனியே அறிய விரும்புவோரே மிகப் பலராவர். அவர்கள் சுபக்கத்தை மட்டும் தனிநூலாகக் கொண்டு கற்றுப் பயனடைதற்கு உரியர்.

சுபக்கத்தை அவ்வாறு தனி நூலாகக் கொள்வது ஆசிரியருக்கு உடன்பாடு ஆகுமா? எனின், ஆம். தமது நூலை ஒரே நூலாகக் கொள்ளவேண்டும் என்பதே அவர் கருத்தாக இருக்குமானால் தொடக்கத்தில் மட்டுமே காப்பும் பாயிரமும் பாடி அமைந்திருப்பார். அங்ஙனம் செய்யாமல், பரபக்கம் சுபக்கம் ஆகிய ஈரிடத்திலும் அவர் தனித்தனியே காப்பும், பாயிரமும் அமைத்திருப்பது ஒன்றே, இவ்விரு பகுதிகளையும் தனித்தனி நூலாகக் கொள்வோர் கொள்க என்ற அவரது உடன்பாட்டினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இனி, மெய்கண்டார் செய்தருளிய முதல் நூல் சிவஞானத்தைப் போதிப்பது - அறிவிப்பது ஆதலின் சிவஞானபோதம் ஆயிற்று. போதத்தால் சிவஞானத்தை உணர்ந்த பின் அதனை நன்கு சித்திக்கச் செய்வதால் இது சிவஞான சித்தியாயிற்று. சிவஞானத்தைச் சித்திக்கச் செய்தலாவது, அதனை நன்கு நிலைபெறுவித்தல். அஃதாவது, அதனை அனுபவ ஞானமாக ஆக்குதல். எனவே, பாசத்தின் நீங்கி அனுபவ ஞானத்தைப் பெற விரும்புவோர்க்குச் சித்தியாரில் உள்ள, அருளனுபவ நிலைகளை விளக்கிக் கூறுகின்ற பாடல்கள் பெருந்துணை புரியும். 'சிவத்திற்கு மேல் தெய்வமில்லை; சித்திக்கு மேல் நூலில்லை.'

அருணந்தி சிவனார் சிவஞான சித்தியாரைச் செய்த பின்பு தம் ஆசாரியரை வினாவும் முறையில் இருபா இருபஃது என்னும் மற்றொரு நூலைச் செய்தனர். இந்நூல் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மாறிமாறி வரும் முறையில் அமைந்து, இருபது பாடல்களைக் கொண்டுள்ளது. அதுபற்றியே நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. அந்தாதித் தொடையில் அமைந்துள்ள சிறப்பு இந்நூலுக்கு உண்டு.

இந்நூலிலுள்ள வினாக்கள், சித்தாந்தப் பொருளைக் கேட்ட மாணாக்கர்கள் பின் அதனைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் மிக நுட்பமாக எழுப்பப்பட்டுள்ளன. வினாக்கள் பலவற்றிற்கு நூலில் விடையில்லை. விடைகள் மாணாக்கர்களே சிந்தித்துக் காணும்படி விடப்பட்டுள்ளன. சிவஞான சித்தியார் முதலிய

சாத்திரங்களைக் கேட்டுணர்ந்து அந்நூல்களின் வழி நின்று சிந்தித்தால் அவற்றிற்குத் தக்க விடைகள் கிடைக்கும்.

மாணாக்கர்களுக்கு எவ்வாறெல்லாம் ஐயப்பாடுகள் உண்டாகும் என்பதை எதிர்பார்த்து அவற்றையெல்லாம் எடுத்துக்காட்டிச் சிந்திக்க வைக்கின்ற ஒரு சிறந்த சிந்தனை நூலாக இது விளங்குகிறது. அது மட்டுமன்று. தமக்கு உண்மை ஞானத்தை அருளிப் பிறவிக் கடலினின்றும் தம்மைக் கரையேற்றிய ஆசாரிய மூர்த்திகளாகிய மெய்கண்ட தேவரின் பெருமைகளைச் சொல்லிப் போற்றுகின்ற ஒரு தோத்திர நூலாகவும் இதனைச் செய்துள்ளார் ஆசிரியர் அருள்நந்தி சிவம்.

அருள்நந்தி சிவனார் செய்த இரண்டு நூல்களை அடுத்து மெய்கண்டாரின் மற்றொரு மாணவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் செய்த உண்மை விளக்கம் வைக்கப் பெற்றுள்ளது.

இந்நூல் சித்தாந்த உண்மைகள் அனைத்தையும் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுவது; சித்தாந்தத்தினை அறிய விரும்புவோர் தொடக்கத்தில் கற்பதற்கு ஏற்ற நூலாய் அமைந்துள்ளது.

இந்நூல் வெண்பா யாப்பினால் ஆனது. காப்புச் செய்யுள் உட்பட 54 வெண்பாக்கள் உள்ளன.

மனவாசகங் கடந்தார் தாம் வினாவிய வினாக்களுக்குத் தம் ஆசிரியர் விடையளிக்கும் முறையிலேயே நூலை அருளிச் செய்துள்ளார்.

முப்பொருள் இயல்புகளைப் பதி, பசு, பாசம் என்ற வரிசை முறையில் வைத்து விளக்கிச் செல்லும் போக்கே பொதுவாக நூல்களுள் பின்பற்றப்படுவது. மனவாசகங் கடந்தார் அவ்வரிசை முறையை விடுத்துப் பாசத்தை முதலில் எடுத்துக் கொண்டு பாசம், பசு, பதி என்ற வரிசையில் விளக்கிச் செல்வது ஒரு புதிய அணுகுமுறையாகும். முப்பொருள்களில் பாசமாகிய உலகமே எளிதில் விளங்கக்கூடியது. அதனால், அதனை முதலில் விளக்கிவிட்டு, அரிதில் விளங்கக் கூடிய மற்றவற்றைப் பின்னர் விளக்கியுள்ளார் ஆசிரியர்.

பாசமாகிய மாயையே முப்பத்தாறு தத்துவங்களாய் விளங்கி நிற்கும். அவற்றின் இயல்புகளை முதலில் விளக்கிக் கூறி, ஆன்மா, கன்மம் என்ற ஏனைய பாசங்களின் இயல்புகளை அடுத்து விளக்கிப் பின்னாப் பசு, பதி என்பவற்றின் இயல்புகளையும், முத்தி நிலையையும் விளக்கியுள்ளார்.

ஏனைய சாத்திரங்களில் விளக்கப்பெறாத, நடராசப் பெருமானது திருக்கூத்தின் உட்பொருளை இந்நூல்தான் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. இஃது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இதுவரையில் ஆறுநூல்களைப் பற்றி அறிந்தோம். இனி எஞ்சி நிற்கும் எட்டு நூல்கள் சிவப்பிரகாசம் முதலியவை. அவ் எட்டினையும் அருளிச் செய்தவர் உமாபதி சிவாசாரியார். அவர் மெய்கண்ட பரம்பரையில் நான்காம் ஆசாரியராய் விளங்கியவர்.

மெய்கண்டார், சந்தான முதற்குரவர் ஆவார். அவரது தலை மாணாக்கராய்த் திகழ்ந்த அருணந்தி சிவாசாரியார் மெய்கண்ட சந்தானத்தின் இரண்டாம் குரவர். அருணந்தி சிவாசாரியாரின் மாணாக்கர் மறைஞான சம்பந்தர். அவர் அச்சந்தானத்தின் மூன்றாம் குரவர். மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்ற மாணாக்கர்தாம் உமாபதி சிவம். எனவே இவர் நான்காம் சந்தான ஆசிரியர் எனப்படுகிறார்.

இவர் செய்த எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் என வழங்கப்படுகின்றன. அவ் எட்டனுள் முதன்மை பெற்று விளங்குவது சிவப்பிரகாசம்.இது சிவஞானபோதத்தின் சார்பு நூல் ஆகும்.இது சிவஞான சித்தியார் போலச் சிவஞானபோதத்தை முழுதும் அடியொற்றிச் செல்லவில்லை.சிவஞான போதத்தின் கருத்தை மட்டும் உட்கொண்டு, சிவஞான போதத்திலும் சித்தியாரிலும் விளக்கப்படாத பல நுண்பொருள்களை எடுத்து விளக்குகிறது.அதனால் அவ்விரு நூல்களோடு இதுவும் ஒருங்கு வைத்து அறியத்தக்கதாய் உள்ளது. நூறு விருத்தங்களால் ஆனது இந்நூல்.

சைவ சித்தாந்தப் பொருளைப் பொது என்றும் உண்மை என்றும் இரண்டாக வகுத்து விளக்கிச் செல்லும் போக்கு இந்நூலுக்குரிய தனிச் சிறப்பாகும்.

சைவ சித்தாந்தம் என்ற பெயரே முன்னே தோன்றிய ஆறு நூல்களில் சொல்லப்படவில்லை. உமாபதி சிவம்தான் இந்நூலில் சைவசித்தாந்தம் என்ற பெயரை முழுமையாக எடுத்தாண்டு, இக்கொள்கை எந்த எந்த வகையில் பிற கொள்கைகளினும் சிறந்து நிற்கிறது என்பதையும் ஒரு செய்யுளில் எடுத்துக்காட்டியுள்ளார். இன்னும் பல அரிய பெரிய கருத்துக்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

உமாபதி சிவனார் செய்த நூல்களுள் சிவப்பிரகாசத்துக்கு அடுத்த படியாக வைத்துச் சொல்லப் பெறுவது திருவருட் பயன். இறைவனது திருவருளின் இயல்புகளை விளங்கக் கூறி அதுவே நாம் பெறுதற்குரிய பொருள் என்பதைத் தெளிய உணர்த்தும் இந்நூலுக்கு இப்பெயரிட்டது பெரிதும் பொருந்துவதாகும்.

இது நூறு குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்டது. பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோரதிகாரமும் பத்துக் குறள்களால் இயன்றுள்ளது. இவ்வமைப்பு முறை திருவள்ளுவரது திருக்குறளை அடியொற்றி உள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்.திருக்குறள் அறநெறியை விளக்க வந்த பொதுநூலாய் விளங்குகிறது. இந்நூல் அருள் நெறியை விளக்கும் சிறப்பு நூலாய்த் திகழ்கிறது.

இந்நூலின் பொருள்நிலையைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். பதிமுதுநிலை, உயிரவை நிலை. இருள்மல நிலை என்பன முதல்மூன்று அதிகாரங்கள். அவற்றில் இறை, உயிர், தளை என்ற முப்பொருள்களின் இயல்பு முறையே தொகுத்துத் தரப்பட்டுள்ளது. அருளது நிலை என்பது நான்காம் அதிகாரம். அது திருவருளின் இயல்புகளைப் பல உவமைகள் வழியாக விளக்கிக் கூறுகிறது. அருளுரு நிலை என்ற ஐந்தாம் அதிகாரம் ஆசான் மூர்த்தியின் அருளினாலேதான் இறைவனது அருளைப் பெறமுடியும் என்று கூறுகிறது. அறியும் நெறி என்ற ஆறாம் அதிகாரம் ஆசான் மூர்த்தியின் உபதேசத்தைச் சிந்தித்துத் தெளியும் முறையைக் கூறுகின்றது. உயிர் விளக்கம் என்ற ஏழாம் அதிகாரம் பாசத்தினின்றும் நீங்கும் முறைமையையும், இன்புறுநிலை என்ற எட்டாம் அதிகாரம் பாசம் நீங்கப் பெற்ற உயிர் பேரின்பத்தில் திளைத்திருக்கும் நிலையையும் கூறுகின்றன. ஐந்தெழுத்தருள் நிலை என்ற ஒன்பதாம் அதிகாரம் திருவைந்தெழுத்தை ஓதும் முறையை உணர்த்துவது. இறுதியில் உள்ள, அணைந்தோர் தன்மை என்ற பத்தாம் அதிகாரம் உடம்பு உள்ள போதே முத்தி நிலையைப் பெற்ற சீவன்முத்தரது தன்மையை விளக்குவது. உமாபதி சிவனார் இவ்வாறு பத்து அதிகாரங்களில் சைவ சித்தாந்தப் பொருள் அனைத்தையும் தொகுத்து உணர்த்தியுள்ளார்.

சைவ சித்தாந்தம் கற்போர் முதலில் உண்மை விளக்கத்தைக் கற்று இரண்டாவதாகத் திருவருட் பயனைக் கற்றல் வழக்கமாய் உள்ளது.

இனி, உமாபதி சிவம் செய்தருளிய மற்றொரு நூலாகிய வினாவெண்பாவின் அமைப்பினைக் குறித்துத் தெரிந்து கொள்வோம்.

ஆசாரியரின் உபதேச மொழியைப் பெற்றுப் பின்பு சிந்தனையில் ஈடுபடும் பொழுது மாணாக்கர்களுக்குப் பலவகையான ஐயங்கள் தோன்றும். அவற்றை அவ்வப்பொழுது ஆசாரியரை வினாவித் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் தம் ஆசாரியரை வினாவும் முறையில் அமைந்தனவாக மூன்று நூல்கள் சித்தாந்த சாத்திரங்களில் உள்ளன. அவைகளில் ஒன்று வினாவெண்பா. மற்ற இரண்டு நூல்கள் இருபா இருபஃது, உண்மை விளக்கம் என்பன. அவைகளைப் பற்றி முன்பே அறிந்துள்ளோம்.

வினா வெண்பாவில் 13 செய்யுட்கள் உள்ளன. அவை வெண்பா யாப்பில் அமைந்தவை. உமாபதி சிவம் தமது ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தரிடம் சைவ சித்தாந்த நுண்பொருள் பற்றிய ஐய வினாக்களை வினாவும் முறையில் இந்நூலை அமைத்துள்ளார்.

இருபா இருபஃதில் உள்ளது போலவே இந்நூலிலும் வினாக்கள் மட்டுமே உள்ளன; விடைகள் கூறப்படவில்லை. சிவப்பிரகாசம், திருவருட் பயன் முதலிய நூல்களை நன்கு சிந்தித்தால், வினா வெண்பாவில் உள்ள வினாக்களுக்கு விடைகள் கிடைக்கும் என்று கருதியே ஆசிரியர் விடை கூறாது போயினார். சிந்தனையால் மாணாக்கரின் நுண்ணுணர்வு பெருகல் வேண்டும் என்பது ஆசிரியரின் திருவுள்ளமாகும்.

உமாபதி சிவம் தோத்திர நூல் முறையில் அமைத்துச் செய்த சாத்திர நூல் போற்றிப் பஃறொடையாகும்.

இறைவன் எல்லாவுயிர்களிடத்தும் உடனாய் நின்று அவைகளுக்கு வேண்டும் எல்லா நலன்களையும் எப்பொழுதும் செய்து வருகின்றான். இவ்வாறு அவன் கைம்மாறு கருதாத பெருங்கருணையோடு உயிர்களுக்கு உதவி வரும் அருட்செயல்களை எடுத்துக் கூறிப் 'போற்றி, போற்றி' என்று அவனுக்கு வணக்கங் கூறுகின்றது இந்நூல்.

இவ்வாறு பலவாற்றானும் போற்றுதல் செய்வதாலும், நீண்ட அடிகளையுடைய பஃறொடை வெண்பாவாய் அமைந்திருப்பதாலும் போற்றிப் பஃறொடை என்னும் காரணப் பெயரைப் பெற்றது இந்நூல்.

இறைவனது அருட்செயல் அனைத்தும் ஐந்தில் அடங்குவனவாகும். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவை.

அவ்வைந்தொழில்களையும் உணர்த்தி நிற்பது கூத்தப் பெருமானது திருநடனம். ஐந்தொழில் நடனத்தை இறைவன் இடையறாது புரிந்து நிற்றல் உயிர்களின் பிறவியை அறுத்தற் பொருட்டு ஆதலின்,

"மன்றுள் நிறைந்து பிறவி வழக்கறுக்க
நின்ற திருத்த நிலை போற்றி"

என்று நூலின் முதலில் இறைவனைப் போற்றுகிறார் உமாபதி சிவம்.

இவ்வாறு நடனநிலையில் வைத்து இறைவனது எல்லாச் செயல்களையும் தொகுத்துப் போற்றிய ஆசிரியர் பின் அவ்வருட் செயல்களை வகுத்துக் கூறலுறுகிறார். கேவலம், சகலம், சுத்தி ஆகிய மூன்று நிலைகளிலும் அவனது அருட்செயல் எவ்வெவ்வாறு நிகழ்கின்றது என்று எடுத்துக் காட்டி, இறுதியில் பக்குவப்பட்ட உயிர்களைத் தானாகச் செய்து தன்னோடு இரண்டறச் சேர்த்துக் கொண்டு தனது பேரின்பத்தை அளித்து வரும் இறைவனது பேரருளைப் போற்றுகின்றார்.

இறைவனே மறைஞானசம்பந்தர் என்ற பெயர் கொண்டு குருமூர்த்தியாக வந்து தம்மை ஆட்கொண்ட அருட்செயலைப் பலவாறாகப் போற்றி மகிழும் பான்மையை இந்நூலிற் காணலாம்.

உமாபதி சிவம் செய்தருளிய மிகச்சிறிய நூல் கொடிக்கவி என்பது. இதில் ஐந்து பாடல்கள் உள்ளன. முதற்பாடல் கட்டளைக்கலித்துறை. ஏனையவை வெண்பாக்கள்.

தில்லைக் கோயிலில் திருவிழாவின் போது கொடியேற்றுங்கால் ஏற்றுக் கொடி ஏறவில்லை. தில்லை வாழந்தணர் வருத்தமுற்றனர். 'உமாபதி சிவம் வந்தால் கொடியேறும்' என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அவ்வண்ணமே அவர்கள் சென்று உமாபதி சிவத்திடம் வேண்ட, அவரும் வந்து இக்கொடிக் கவியைப் பாடிக் கொடியேற்றம் செய்தார் என்பது இந்நூல் பற்றி வழங்கிவரும் வரலாறாகும்.

கொடியேற்றமாகிய நிகழ்ச்சி, ஆன்மா மலங்களினின்றும் நீங்கி உயர்ந்து திருவருளின் துணையால் சிவத்தைச் சேரும் என்னும் தத்துவப் பொருளை உட்கொண்டதாகும் என்பர். இப்பொருளை அடிநிலையாகக் கொண்டே கொடிக்கவிப் பாடல்கள் அமைந்துள்ளன என்பது புலனாகும்.

சிவம் உயிர்க்குயிராய் எப்பொழுதும் நீங்காதிருக்கவும், பாசம் உயிரை மறைத்து நிற்கின்றது. அங்ஙனம் உயிர் பாசத்தில் அழுந்தியிருப்பினும், அதனினின்றும் நீங்கி, படலம் படர்ந்த கண் அப்படலத்தினின்றும் நீங்கி ஒளியைப் பெறுவது போலத் திருவருளைப் பெறுதல் உண்மை என்று சொல்லிக் கொடி கட்டினேன் என்று முதற்பாடலில் கூறுகின்றார் ஆசிரியர்.

அஞ்செழுத்தும், ஆறெழுத்தும், எட்டெழுத்தும், நாலெழுத்தும், பிஞ்செழுத்தும், பெருவெழுத்தும், பேசும் எழுத்தும், பேசா எழுத்தும் என இவ்வாறு திருவைந்தெழுத்தின் வகைகள் எல்லாவற்றையும் ஒரு பாடலில் கூறியுள்ளார். இவைகளைக் குருமுகத்தில் உபதேச முறையினாலேயே கேட்டு அறிந்து கொள்ளல் வேண்டும். ஆதலின், இவற்றை வெளிப்படையாக ஓதாது மறைபொருளாகக் கூறியுள்ளார் எனலாம்.

இங்ஙனம் சைவசித்தாந்தத்தில் மிக நுணுக்கமாய் உள்ள பொருள்கள் பல கொடிக்கவியில் அமைந்துள்ளன.

உமாபதி சிவம் செய்துள்ள சாத்திர நூல்களுள் தூதுப் பிரபந்தம் ஒன்றும் உள்ளது. அதுவே நெஞ்சு விடு தூது. ஞானாசிரியரைப் பிரிந்து ஆற்றாத ஞானசீரரது நிலையைத் தலைவியின் நிலையில் வைத்து விளக்கும் முறையில் அமைந்திருப்பது இந்நூல்.

தலைவி பின்வருமாறு கூறுகிறாள். 'இறைவன் என் பொருட்டு மானிடச் சட்டை தாங்கிக் குருவாய் வந்தான். அந்தக் குரு வடிவமே சம்பந்த மாமுனிவன் (மறைஞான சம்பந்தர்). தலைவனாகிய அவ்விறைவன் பவனி வரும்பொழுது, எல்லோரும் கண்டு வணங்கியது போல, நானும் கண்டு துதித்தேன். ஆனால் அவன் என்னைத் தனது பார்வையாலே வேறுபடுத்தி விட்டான். பஞ்ச மலங்களும் அப்பொழுதே ஒழிந்தன. தத்துவக் கூட்டங்களின் தொடர்பெல்லாம் அறவே நீங்கின. என் குணம், வேறு எதனையும் நினையாமல் அவனையே நினைவதாயிற்று. பொன்னும், பொருளும், பூமியும் எல்லாம் பொய்யாகி, வெண்ணீறும் திருவேடமும் பூசையுமே மெய்யாயின' என்று தன் நிலையை எடுத்துச் சொல்லுகிறாள்.

இவ்வாறு அருள் செய்த இறைவனைப் பிரிந்திருக்க ஆற்றாமையினாலே அவள் தன் நெஞ்சை அழைத்து அவன்பால் தூது செல்லும்படி வேண்டுகிறாள்; வழி சொல்லி அனுப்பும்போது எச்சரிக்கை செய்கிறாள். 'நீ செல்லும் வழியில் சில தீங்கான இடங்கள் உண்டு. மகளிர் இன்பமே முத்தி என்று கூறும் உலகாயதர், நானே பிரம்மம் என்று உபதேசம் செய்யும் ஏகான்மவாதிகள், ஓர் உயிரைக் கொல்வது பாவமே யன்றிப் பிறர் கொன்று வந்து கொடுப்பதைத் தின்பது பாவமாகாது என்று கூறும் பௌத்தர், உடலை வாட்டி வருத்துவதுதான் முத்தி என்று கூறும் சமணர், திருநீற்றையும், சிவனடியார் வேடத்தையும், சிவாலயத்தையும் இகழ்கின்ற சைவ நிந்தகர் முதலியோர் உள்ள தீய இடங்களை, நெஞ்சே, நீ நண்ணாதே; கண்ணெடுத்தும் பாராதே' என்று கூறுகிறாள்.

இவ்வாறு எச்சரித்தபின், 'நெஞ்சே, என் தலைவன் சம்பந்தமாமுனிவன் வீற்றிருக்கும் திருவோலக்கம் எய்தி அவன் அடியில் வீழ்ந்து இறைஞ்சி, 'உன் பவனியைத் தரிசித்த ஒரு பெண் பலவகை இன்னல்களுக்கு ஆளாகுதல் பொருந்துமோ' என்று சொல்லி, 'அவனது கொன்றைமாலையை வாங்கிக் கொண்டு விரைவில் திரும்பி வா' என்று விடுக்கிறாள்.

ஏனைய தூது நூல்களின் தலைவர்களாகிய அரசர்கள், வள்ளல்கள் ஆகியோர் புறவுலகில் வாழ்ந்தோர். அவர்களிடத்தில் புறவுலகில் திரியும் வண்டு, கிளி, மேகம் முதலியவற்றைத் தூது விடுதல் பொருந்தும். ஆனால் இறைவனாகிய தலைவன் அகத்தில் அல்லவா இருக்கிறான். அவனிடத்தில் புறத்தில் உள்ள வண்டு முதலியவற்றைத் தூது விடுதல் அவ்வளவு பொருத்தமாக இல்லையே. அகத்தில் உள்ள அவனிடத்தில் அகத்தில் உள்ள நெஞ்சைத் தூது விடுவதுதானே முறை. அதனால்தான் உமாபதி சிவம் நெஞ்சினைத் தூது விடும் முறையில் இந் நூலை அருளிச் செய்துள்ளார்.

உமாபதி சிவம் தசகாரியம் என்னும் பொருள் பற்றி ஒரு சிறுநூல் செய்துள்ளார். அதுவே உண்மைநெறி விளக்கம் என்பது.

பசுவாகிய உயிர் பாசமாகிய உலகச் சார்பிலிருந்து விடுபட்டுப் பதியாகிய இறைவனை உள்ளவாறு உணர்ந்து அவனோடு ஒன்றுபட்டு இன்புறும் முறையைப் பத்துப் படிநிலைகளாக வைத்துச் சைவ சித்தாந்தம் விளக்கிக் கூறும். அப்படிநிலைகள் பத்தும் தசகாரியம் எனப்படும். அவையாவன: தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன.

இந்தத் தசகாரிய நிலைகளை மிகச் சுருக்கமாக ஆறே பாடல்களில் விளக்கிக் கூறுகிறது உண்மை நெறி விளக்கம்.

தத்துவம் என்பவை நம்மைச் சார்ந்துள்ள மாயா காரியங்கள்; அஃதாவது, ஐம்பொறி முதலிய கருவிக் கூட்டம். இவை நம் அறிவைத் தம்பால் ஈர்த்து அப்பாற் போகவிடாமல் தம்வசப்படுத்தியுள்ளன. அதனால் நாம் நம்மையறியும் ஞானம் இல்லாமல், நமக்கு மேல் உள்ள இறைவனையறியும் ஞானமும் இல்லாமல், உடம்பையே நாமாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட தத்துவக் கூட்டத்தை விட்டு நாம் முதலில் நீங்க வேண்டும். அவற்றை அறிவற்றவை என்று கண்டு சிறிது சிறிதாகத்தான் அவற்றிலிருந்து விடுபட முடியும். அவ்வாறு விடுபடும் முறையில் மூன்று படிகள் உள்ளன. அவை தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்பன. இம்மூன்று படிகளை இந்நூலின் முதற் செய்யுள் கூறுகிறது.

தத்துவங்களிலிருந்து விடுபடுங்கால் தத்துவங்களுக்கு வேறாக, அறிவு வடிவாய் உள்ள ஆன்மா ஒன்று உண்டு என்று உணரும். அந்த ஆன்ம அறிவு தானே அறியும் சுதந்திரம் உடையதன்று; தன்னோடு என்றும் உடனாய் நிற்கும் முதல்வன் அறிவிக்கவே அறியும்; அம் முதல்வனால் அறிவு பெற்று அவன் செலுத்திய வழியே செல்வதாகும் ஆகையால் முதல்வனையின்றி நமக்குச் செயலில்லை என்ற உண்மையைப் படிப்படியே தெளிந்து தன் செயல் அற்றிருக்கும் நிலையை அடையும். இவ்வாறு தன்னைத் தெளிய உணரும் முறையில் மூன்று படிகள் உள்ளன. அவை ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி என்பன. நான்கு, ஐந்து, ஆறாம் படிகள் ஆகிய இம்மூன்றையும் இரண்டாவது செய்யுள் தெரிவிக்கிறது.

அனாதியே ஆணவ மலத்திற் கட்டுண்டு கிடக்கும் உயிர்களை உய்விக்க வேண்டி இறைவன் தனது சத்தியால் பல திருமேனிகளைக் கொண்டு ஐந்தொழில்களைச் செய்து உலகை இயக்கி வருகின்றான் எனப் பொதுவாக அறிந்து கொள்ளுதல் சிவரூபம் ஆகும். இஃது ஏழாவது படி. இதனை மூன்றாவது செய்யுள் குறிப்பிடுகிறது.

சிவனே எல்லாவற்றிற்கும் முதல்வன்; எனக்கு எந்த முதன்மையும் இல்லை என்று உணர்ந்தபோது

ஆன்மாவிற்கு யான் எனது என்னும் தன் முனைப்பு ஒழியும்; யான் எனது அற்றுவிட்டால் எங்கும் சிவம் தோன்றுமேயன்றி வேறு பொருள் தோன்றாது. சிவம் தோன்றினால் முன் கண்டறியாத ஒரு பேரின்பம் ஆன்மாவிற்குத் தோன்றும். இந்நிலையே சிவதரிசனம் எனப்படும். இஃது எட்டாவது படியாகும். இதனை நான்காவது செய்யுள் விளக்குகிறது.

சிவதரிசனம் வாய்த்தபொழுதும் பழைய வாசனையால் யான் எனது என்னும் தற்போதம் எழும். அதனை அடக்கித் தன் செயலற்றுத் தன்னை மறந்து சிவனையே உணர்ந்து நிற்கும் நிலையே சிவயோகம் எனப்படும். இஃது ஒன்பதாவது படி. இதனை ஐந்தாவது செய்யுள் கூறுகின்றது.

இந்தச் சிவயோக நிலையை அடைந்த ஆன்மாவைச் சிவன் தன்னுள் அடக்கி, இரண்டற்ற அந்நிலையில், தனது பேரா இன்பத்துள் திளைத்திருக்கச் செய்வன். இதுவே சிவபோகம். இது பத்தாவது படி. இதனை இறுதிச் செய்யுளாகிய ஆறாவது செய்யுள் கூறி முடிக்கின்றது.

இவ்வாறு ஞானத்தின் வழியிலே படிமுறையாகச் சென்று சிவத்தை அடையும் முறைமையை விளக்குவது இவ்வுண்மைநெறி விளக்கமாகும்.

இனி உமாபதி சிவம் செய்த நூல்களுள் நாம் காணவேண்டியதாக எஞ்சி நிற்பது சங்கற்ப நிராகரணம் ஆகும்.

இந்நூல் சிவஞான சித்தியாரின் பரபக்கம் போன்றது. பரபக்கத்தில் புறச் சமயங்களே மறுக்கப்பட்டுள்ளன. அதனால், அங்கு மறுக்கப்படாத அகச் சமயங்களை எடுத்து மறுத்தற்கு எழுந்தது இந்நூல் எனலாம்.

இங்கு மறுக்கப்படும் அகச்சமயங்களாவன பாடாண வாத சைவம், பேத வாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், நிமித்த காரண பரிணாம வாத சைவம் (சிவாத்துவித சைவம்) என்பன. இவற்றிற்கு மேல், ஏழாவதாகச் சுத்த சைவம் என்ற ஒன்றும் மறுக்கப்படுகிறது. மேற்கூறிய ஏழு சமயங்களின் மறுப்போடு, ஐக்கிய வாத சைவம், மாயாவாதம் என்னும் வேறு இரு சமயங்களின் மறுப்பும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

சங்கற்ப நிராகரணம் என்ற பெயரில் உள்ள சங்கற்பம் என்ற சொல் கொள்கை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. நிராகரணம் என்பதற்கு மறுப்பு என்பது பொருள். பிற சமயக் கொள்கைகளும் அவற்றின் மறுப்பும் ஆகிய இவற்றை ஒரு புதுமையான முறையில் அமைத்துள்ளார் உமாபதிசிவம். அம் முறை வருமாறு:

சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்கு ஆனித் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அன்று ஆறாம் திருவிழா. ஒரு மண்டபத்தில் சமய அறிஞர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் மேற்காட்டிய சைவ சமயத்தின் உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்; சிவாகமங்களைக் கற்றவர்கள். ஆனால் சித்தாந்த சாத்திரங்களை அறியாதவர்கள்.

அவ்விடத்தில் ஒருபால் மாயாவாதி ஒருவர் இருந்தார். மற்றொருபால் மெய்கண்ட பரம்பரையில் வந்த சித்தாந்த சைவ ஆசாரியர் ஒருவரும் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது வீடுபேற்றை அடைய விரும்பிய பக்குவர் ஒருவர் அங்கு வந்து அதற்குரிய வழி யாது என்று கேட்டார். அவரிடம் முதலில் மாயாவாதிதான் பேசினார். அவர் தமது மாயாவாதக் கொள்கையை எடுத்துச் சொல்லி, இதுவே வீடுபேற்றிற்கு உரிய வழி என்றார். அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐக்கியவாத சைவர் மாயாவ தியின் கொள்கையை மறுத்துத் தமது கொள்கையைக் கூறி அதுவே வீடுபேற்றிற்கு வழி என்றார். அக்கொள்கைகளைப் பாடாண வாதசைவர் மறுத்துத் தம் கொள்கையைக் கூறினார்.

இவ்வாறு ஒருவர் கொள்கையை மற்றொருவர் மறுத்து வர, முடிவாகச் சுத்த சைவர் கொள்கையைச் சித்தாந்த சைவ ஆசாரியர் மறுத்துரைத்தார். ஆனால் தமது கொள்கை இன்னது என்பதை அவர் விளக்கிக் கூறவில்லை. அப்பொழுது 'உமது கொள்கையை விளக்குக' என்று சுத்த சைவர் கேட்கிறார். அதற்குச் சித்தாந்த சைவ ஆசாரியர், 'மெய்கண்ட பரம்பரையில் பெற்ற எமது கொள்கை சிவப்பிரகாசம் என்னும் நூலில் விரிவாக உள்ளது. அதனை நல்லாசிரியர்பால் கேட்டுணர்க' என்று கூறி முடிக்கின்றார். இவ்வாறு அமைந்துள்ளது சங்கற்ப நிராகரணம்.

இந்நூலில் 13 செய்யுட்கள் உள்ளன. அத்தனையும் ஆசிரியப்பாவால் ஆனவை. அவை அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

இதுகாறும் கூறியவாற்றால், சைவ சமய சாத்திரங்கள் பதினான்கும் அரிய ஞானக் கருவூலமாய்த் திகழ்வன என்பதும், அவற்றின் பொருள் நிலையும், அமைப்பு முறையும், பிறவும் நன்கு புலனாகும்.

திருமந்திரப் பதிப்பு



முனைவர். சுப. அண்ணாமலை,
மதுரை.

திருமந்திரச் சிறப்பு

திருமந்திரத்தை அருளிய திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில், "நம்பிரான் திருமூலன்" எனக்குறிப்பிட்டு வணங்கும் சிறப்புடையவர். தாயுமானவர் "சக்கரவர்த்தி தவராச யோகியெனும் மிக்க திருமூலனருள் மேவு நாள் எந்நாளோ?" என்று திருமூலரது யோகநெறியின் உயர்வைப் பாடுகின்றார். இரு பேராறுகள் கலப்பதே போல், தமிழ் நெறியும் வைதிக நெறியும் கலந்து அமைந்திட, சைவ சமயம் ஒரு பெருஞ்சமயமாக உருவாகிய காலத்தில், அவ்வுருவாக்கத்திற்குத் திருமூலர் தமது பணியினை ஆற்றிச் சைவ நெறிக்குச் சாத்திரமும் தோத்திரமுமாக அமையும் முதல் நூலை ஆக்கினார். வைதீக நெறியினர் இந்திரன், பிரமன் முதலிய கடவுளரை விடுத்துச் சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்றுக் கொண்டமைக்குத் தமது நூலில் வேத, புராண, உபநிடத நூற்சான்றுகள் காட்டுகின்றார்.

தமிழ் நெறியைத் தழுவி வடமொழியில் எழுதப்பட்ட ஆகமங்களை ஒப்பத் தமிழில் முதல் ஆகமமாகத் தமது நூலை அமைத்தார். இதனைத் "தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப" என்பர் சேக்கிழார். ஆகமம் என்ற வடசொல்லுக்குத் 'தொன்று தொட்டு வரும் மரபின் வழி வருவது' என்று பொருள். அப்பொருளுக்கு ஏற்பத் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வரும் நெறியாகிய அன்பு நெறியின் மரபில், இறையன்பின் வெளிப்பாடாக, ஆடல்பாடல் நெறி திருமூலர் காலத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிநிலைக் கூறுபாடுகளை உடையதாக வளர்ந்திருந்தது. சைவ ஆகமங்கள் இந்நான்கையும் பாதங்களாகக் (பிரிவுகள்) கொண்டு சைவ நெறியை விளக்குவன என்பர். திருமூலர் தமது ஆகம நூலில் யோக பாதத்தை விரிவாகவும் ஏனைய மூன்றையும் பண்டைத் தமிழ்நெறியைத் தழுவிச் சுருக்கமாகவும் கூறுகின்றார். யோகத்திற்கும் அன்பு நெறியே அடிப்படை என்று வலியுறுத்துகின்றார்.

திருமந்திரம் சிவயோகம் பற்றித் தோன்றிய முதற்பெரு நூலாகும். யோகியரைச் சித்தர் எனத் திருமூலர் வழங்குவர் ஆதலின், அவர் தமிழகத்தின் முதற் சித்தர் ஆவார். பிற்காலத்தில் சித்தர் மரபு தோன்றிக் கிளை பிரிந்து வளர்வதற்கு அவர் வித்தூன்றினார். அவரது சிவயோகமுறை ஒரு புது உண்மையைத் தோற்றுவித்தது. அழியும் தன்மையதாகிய உடம்பை யோக சாதனையால் அழியாமல் நிலை நிறுத்தலாம் - இறவாமை பெறலாம் என்பதைத் திருமூலர் முதன்முதலாகக் கூறி நிலை நாட்டினார்.

திருமந்திரப் பதிப்புகள்

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருமந்திரத்திற்குப் பல பதிப்புகள் வெளி வந்துள்ளன. அவை,

1. திருமந்திரம் - திரு.வி. கலியாணசுந்தரனார் பார்வை, 1909, 3083 பாடல்கள்.

2.திருமந்திரம் - திருவாவடுதுறைச் சுப்பிரமணியத் தம்பிரான் பதிப்பு, 1897, இயல் 234க்கு 3083 பாடல்கள்.

3. மாவை. வே. விசுவநாதப்பிள்ளை பதிப்பு, 1912-3048 பாடல்கள்.

4. திருமந்திரம் - வி. உலகநாத முதலியார் - விவேக போதினி, மைலாப்பூர், சென்னை.

5. திருமூலர் அருளிய திருமந்திரம் - எஸ். சங்கரலிங்க முதலியார் பார்வை, இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை. 1934 - 3083 பாடல்கள்.

6. திருமூலநாயனார் திருவாய் மலர்ந்து அருளிய திருமந்திரம் - பதிப்பாசிரியர், பதிப்பு, பதிப்பித்த ஆண்டு ஆகியன பற்றித் தெரியவில்லை.

7. திருமந்திரம் - சைவசித்தாந்த மகா சமாஜம் - எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்பு - 1940 - 3047 பாடல்கள்.

8. திருமந்திரம் மூவாயிரம் - துடிசை கிழார் அ. சிதம்பரனார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1942 - 3000 பாடல்கள்.

9. திருமூலர் திருமந்திரம், ஸ்ரீபஞ்சாட்சர தீபம் என்ற உரையுடன்- திருவாவடுதுறை ஆதீனம், 1957 - 3046 பாடல்கள்.

10. திருமந்திர மாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம் - ஸ்ரீகாசிமடம், டி.எம். குமரகுருபரன் பிள்ளை, 1956 - 3047 பாடல்கள்.

11. திருமந்திர மாலையாகிய திருமந்திரம் 3 பகுதிகள் - சி. அருணை வடிவேல் முதலியார், தருமபுர ஆதீனம், 1974 - 3000 பாடல்கள்.

12. திருமந்திரம் முதல் மூன்று தந்திரங்கள் - ஜி. வரதராசன் உரையுடன், 1971.

13. திருமந்திரம் 4,5,6 - ஆம் தந்திரங்கள் - ஜி. வரதராசன் - பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1983.

14. திருமந்திரம் 7,8,9 ஆம் தந்திரங்கள் - 1985, இவை மூன்றும் மொத்தம் 3047 பாடல்கள் கொண்டவை.

15. திருமந்திர மாநாட்டு மலர், கன்னடியத் திருமேனி கம்பளிச்சட்டை கைலாயச்சித்தர் உரை - திருவாவடுதுறை ஆதீனம் 1954.

16.TIRUMANTIRAM- With English Translation, SRI RAMAKRISHNA MATH, MADRAS, 1991.

என்பனவாகும். மற்றும் சில பதிப்புகள் இப்பொழுதைய பதிப்பாசிரியர் பார்வைக்கு வராமல் போயிருக்கலாம்.

பாடல் தொகை

மேற்கண்ட பதிப்புகளுள், முன்னர் வந்தவற்றில், முறையே, 3083, 3048, 3047 என்ற மொத்த எண்ணிக்கை உடைய பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பிலும், சைவ சித்தாந்தக்கழகப் பதிப்பிலும், அவற்றிற்கு முன்னைய பதிப்புகளில், ஒரே பாடல் இரண்டு முறை வந்தனவாகச் சில இடங்களைக் குறித்துள்ளனர்.

சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பில், உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுத் திருமந்திரப் பதிப்புகளில் காணப்படாத பாடல்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன.

மேற்போந்த செய்திகளாலும், திருமந்திரம் 3000 'தமிழ் மூவாயிரம்' என இந்நூலின் பெயர் வழங்குதலானும், இவற்றுள் இரண்டாவது பெயரை, "முன்னிய அப்பொருள் மாலைத்தமிழ் மூவாயிரம் சாத்தி" எனச் சேக்கிழார் மொழிதலானும் திருமந்திரப் பாடல் தொகை எத்துணை என ஐயம் நிகழ்கின்றது. திருமந்திரப் பாயிரத்துள் "மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்" என வரும் பாடல் பிற்காலத்தார் வாக்காயினும், திருமந்திரப் பாடல் தொகையினை உறுதி செய்தற்குச் சான்றாக அமையும். ஆகவே, பதிப்புகளில் முறையே 83, 48, 47 என்ற எண்ணிக்கையில் பிற்காலத்தார் சேர்த்த பாடல்கள் உள்ளமை உறுதியாகிறது. அவை, எவையெனக் கண்டறியப்படவில்லை. ஆதலின் அவற்றைக் கண்டறிந்து, தனியே காட்ட வேண்டும்.

மூலபாடத்தின் நிலை

திருமந்திரப் பாடல்களின் மூலபாடம் மேற்காட்டிய பதிப்புகள்தோறும் வேறுபடுகின்றது. அப்பதிப்புகளுள் சைவசித்தாந்த மகா சமாஜப் பதிப்பு மட்டுமே, பாடல்தோறும் பாடபேதங்களைக் குறிக்கின்றது. மாவை. வே. விசுவநாதப்பிள்ளை பதிப்பில் மிகச்சில விடங்களில் பாடவேறுபாடு காட்டப்படுகின்றது. திருவாவடுதுறை ஆதீனப் (தண்டபாணிதேசிகர் உரை) பதிப்பில், உரையின் போக்கில், சிலவிடங்களில் பாடவேறுபாடு காட்டப்படுகிறது. தருமபுர ஆதீனப் பதிப்பில், அதன் ஆசிரியர் தமது பதிப்பு முன்னுரையில், திருமந்திரத்தின் 'மூலம்' தக்க வகையில் சைவர்களால் பாதுகாக்கப்படவில்லை என்ற குறையைக் குறிப்பிட்டு, பாடத்திரிபும், இடைச்செருகலும் இந்நூலுள் மிகுதியாக உள்ளன என்று எழுதுகிறார். ஆயினும், தமது

பதிப்பிற்குத் திருமந்திரச் சுவடி, கையெழுத்துப்படி எதனையும் ஒப்புநோக்கியதாகக் குறிப்பிடவில்லை. எனினும், அவர் தமது உரையின் போக்கில் பல பாடல்களில், பாடம் பொருந்தாது என்றும், பாடமன்று என்றும் சுட்டிக்காட்டி, தாம் பொருந்தும் என எண்ணியவாறு பாடங்களைத் திருத்தியுள்ளார். இது மூலபாட ஆய்வியல் முறையினை அறிந்தவர்க்கு வியப்பைத் தருவதாகும்.

இப்பொழுதைய பதிப்பிற்குக் கிடைத்த சுவடிகளின் வரலாறு

பதிப்பாசிரியர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஏட்டுச் சுவடிகள் விவரணப் பட்டியலைப் பார்த்ததில் அறிந்த விவரப்படி, சென்னை, கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகம், திருவாவடுதுறை ஆதீனம், சென்னை டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் நூலகம், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம், புதுச்சேரி பிரெஞ்சு இந்தியக் கழகம், திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகம், விருதுநகர் வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி, துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் பெரிய மடம், தருமபுர ஆதீனம் ஆகிய இடங்களில் உள்ள திருமந்திர ஏட்டுச் சுவடிகள், ஒரு கையெழுத்துப் பிரதி, ஆக 15 பழைய திருமந்திரப் படிகள், அந்தந்த ஊர்கட்கே சென்று, நிழற்படப்படி எடுத்து வரப்பெற்றன.

S.M.Katre என்பாரின் Introduction to Indian Textual Criticism என்ற நூலில் கூறப்படும் மூலபாட ஆய்வு முறைப்படி இச்சுவடிகளுள் பத்துச் சுவடிகளின் முதல் 200 பாடல்களை ஒப்பு நோக்கிய பொழுது, இந்த 10 சுவடிகளும் ஏழு குடும்பங்களாக வகைபட்டு அமைந்திருப்பது அறியப்பட்டது. அவ்வாறு அறியப்பட்ட ஆய்வு வருமாறு:

குடும்பங்கள்	-	சுவடிகள்
1. சுவடி - அ		சுவடி - உ
2. சுவடி - ஆ		சுவடி - ஐ
3. சுவடி - எ		சுவடி - ஒ
4. சுவடி - இ		
5. சுவடி - ஈ		
6. சுவடி - ஊ		
7. சுவடி - ஒ		

பிற சுவடிகளில் பாடல்கள் மிகுதியாக இல்லாமையாலும் அப்பாடல்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆதலாலும் குடி வழியில் சேர்க்கவில்லை. ஆனால் அவற்றின் பாடல்கள் ஒப்பு நோக்கப்பட்டன.

மேலே காட்டிய குடிவழிகளுள் முதல் மூன்றும், இரண்டு இரண்டு சுவடிகளை உறுப்பாக உடையவை. ஏனைய நான்கும் ஒற்றைச் சுவடிக் குடும்பங்கள். எனவே பாட ஒப்புநோக்கில், முதல் மூன்று குடும்பங்கட்கும் மேலேடுகள் எவ்வாறு இருந்திருக்கும் என்று கண்டு, பிறகு ஒற்றைச்சுவடிகளின் பாடங்களை, அம்மேலேட்டுப் பாடங்களுடன் ஒப்பு நோக்குவது மூலபாட ஆய்வியல் முறையாகும். இவ்வாறு ஒப்புநோக்கிச் சரியான பாடத்தைத் தேர்வதற்கு உரிய மூலபாட ஆய்வியல் விதிகள் வருமாறு:

1. சுவடிகளின் பாடங்கள் ஒத்திருப்பின் அதுவே தேரப்படும். ஒரு குடிவழிச் சுவடிகளின் பாடம் ஒத்திருப்பின் அவற்றின் மேலேட்டின் பாடமும் அதுவே. ஒவ்வா எனின், அவற்றுள் செவ்விய பாடம் மேலேட்டுப் பாடமாகும்.

2. ஒரு குடிவழியின் ஓர் உறுப்பு - மற்றொரு குடிவழியின் யாதேனும் ஓர் உறுப்புடன் ஒத்திருப்பின் அது தேரப்படும்.

3. பல குடிவழிகள் உள்ளபொழுது, இரண்டும் அதற்கு மேற்பட்டவையான குடிவழிகளின் மேலேடுகளின் பாடமும் ஒத்திருப்பின், அது தேரப்படும்.

4. குடிவழிகள் பாடத்தில் வேறுபடின், படியெடுத்தோர் தற்செயலாகச் செய்த தவறா (Transcriptional Possibility) அல்லது அவர்கள் ஒரு காரணம் பற்றித் திருத்தியதா என்று ஆய்ந்து கண்டு, முதற்பிரிவில் பிழையற்ற பாடத்தைத் தேர வேண்டும். மற்ற பிரிவில், அவர் திருத்திய திருத்தம் எது, ஆசிரியரின் வாக்கு எது என்பதை உள்ளார்ந்த வாய்ப்புகளைக் கொண்டு கண்டறிய வேண்டும். உள்ளார்ந்த வாய்ப்புகள் (Intrinsic Possibility) என்பவை பாடற்பொருள், அதிகாரப் பொருள், நூலின் நோக்கு, யாப்பு, சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், நூலாசிரியர் காலச் சொல் வழக்கு, அவரது நடை என்பனவாகும். இவ்விரு வகையாலும் பாடம் தேர்தல் 'மீட்டுருவாக்கம்' (Recension) எனப்படும். எந்தக் குடிவழியின் பாடமும் பொருந்தவில்லையெனின், ஏறக்குறைய நூலாசிரியர் கருத்திற்கு ஒத்த பாடத்தை, ஏற்ற வகையில் திருத்துவது மூலபாட ஆய்வாளரால் ஏற்றுக் கொள்ளப்படுவதே.

மேற்காட்டிய விதிகளை மேற்கொண்டு திருமந்திர நூல் முழுவதும் இப்பொழுதைய பதிப்பில் பாடத் தேர்வும், மிகச் சில இடங்களில் பாடத்திருத்தமும் பெற்றுள்ளது. பாடத் தேர்விற்கு இங்கு சில சான்றுகள் காட்டப்படும்.

1. பாடல் எண் 366, "துடுப்பிடு" என்னும் பாடல். 1

2 ஆம் அடி, 3ஆம் சீர்.

சுவடி அ :பாடம்: மச்செரி

சுவடி உ :பாடம்: மஞ்செரி

இவை ஒரு குடி ஆமினும் தம்முள் வேறுபடுகின்றன. பிற குடிவழிகளின் மேலேடுகள் "மஞ்செரி" என்ற பாடமே உடையன. சுவடி 'உ'வின் பாடம் அவற்றை ஒத்தலின், அதன் குடிவழி மேலேடு கொண்ட பாடமும் அதுவே எனக் கொண்டு அப்பாடம் தேரப்படுகின்றது.

2. பாடல் எண் 449 : "அன்புறு சிந்தை" என்னும் பாடல் 3ஆம் அடி 4ஆம் சீர்:

சுவடி அ பாடம் துடக்கறுத்

மேலேடு : துடக்கறுத்

சுவடி உ பாடம் துடக்கறுத்

சுவடி எ பாடம் துடக்கற்று

மேலேடு: துடக்கற்று

சுவடி ஒ பாடம் துடக்கற

சுவடி ஆ பாடம் துடக்கறுத்

மேலேடு : துடக்கறுத்

சுவடி ஐ பாடம் துடக்கறுத்

சுவடி ஊ பாடம் துவக்கறு

சுவடி ஓ பாடம் தொடக்கறுத்து

1. தொடக்கு என்பதே சொல்லின் வடிவம் ஆதலின் ஓ சுவடி - போல, எல்லாக்குடி வழியிலும் தொகரமே முதல் எழுத்தாக இருந்திருக்க வேண்டும். அது துகரமாக எழுதப்பட்டமை, படி எடுத்தோரின் தற்செயலான தவறு.

2. 'தொடக் கறுத்து' (பிழை நீக்கி) என்ற பாடம் இரண்டுக்கு மேற்பட்ட மேலேடுகளில் உள்ளமையால் அது தேரப்படுகின்றது.

3. பாடல் எண் 687 :"காலோடுயிரும்" என்னும் பாடல் : 4ஆம்அடி 2ஆம்சீர் :

சுவடி அ பாடம் யெண்மண்டி

மேலேடு : யெண்மண்டி

சுவடி உ பாடம் யெண்மண்டி

சுவடி ஆ பாடம் வெண்மடி

மேலேடு : வெண்மடி

சுவடி ஐ பாடம் வெண்மடி

சுவடி எ பாடம் பெண்மண்டிக்

மேலேடு : வெண்மடிக்

சுவடி ஒ பாடம் வெண்மண்டிக்

சுவடி இ பாடம் வேண்டிக்

சுவடி ஈ பாடம் வேண்டிக்

சுவடி ஊ பாடம் வென் மண்டி

சுவடி ஓ பாடம் வெண் மண்டி

மேலேடுகளை ஒப்பு நோக்குமிடத்து "வெண்மண்டி" என்பது இரண்டு குடிவழியில் உள்ளமையின் சரியான பாடம் எனத் தோன்றினாலும், ஈண்டு "காலது எண் மண்டிக் கொண்ட இப்போதே" என நின்று, 'பிராண வாயு எண்ணால் மிகுந்து' எனப் பொருந்தாப் பொருள் தருகின்றது. 'வேண்டிக் கொண்ட' என்பதும் பொருள் வகையாலும் யாப்பிலக்கணம் பற்றியும் பொருந்தாப் பாடம் ஆகும். 'எண் மடி' என்ற பாடம் 'எட்டு முறை' எனப் பொருள்பட்டு ஈண்டுப் பொருந்துகின்றது. இஃது உடம்படுமெய் சேர வெண்மடி என்றாயிற்று.

4) பாடல் எண் 978: "எட்டுவரையின்" என்னும் பாடல்:

4ஆம் அடி, 3 - 4 ஆம் சீர்கள்:

சுவடி அ பாடம் : செவிசித்தாமே

மேலேடு : செவிசித்தாமே

சுவடி உ பாடம்: செவிசித்தாந்தமே

சுவடி ஆ பாடம்: செய்விதிற்காமே

மேலேடு : செவ்விதிற்காமே

சுவடி ஐ பாடம்: செவ்விதிற்காமே

சுவடி எ பாடம்: செபி சீக்கிரமே

மேலேடு : செவிசக்கரமே

சுவடி ஒ பாடம்: செவிச் சக்கரமே

சுவடி இ பாடம்: செவிசிறகாமே

சுவடி ஒ பாடம்: செவிசிறகாமே

மேற்கண்ட ஐந்து மேலேட்டுப் பாடங்களும் படியெடுத்தோரின் தற்செயலான தவறுகள் அற்றவை. ஆசிரியரின் பாடத்தை ஒரு காரணம் பற்றி அவர்கள் திருத்தியமையால் நேர்ந்த வேறுபாடங்கள். உள்ளார்ந்த 'வாய்ப்புகளைக் கொண்ட' இவற்றுட் சரியான பாடத்தைத் தேர வேண்டும். சித்தி என்பது ஆசிரியரின் வழக்கேயன்றிச் சித்து என்பதன்று. ஆதலின் 'செவி சித்தாமே' என்ற பாடம் சொல் வழக்கால் பொருத்தமின்று. மந்திரம் சித்தியன்று ஆதலின் இது பொருளாலும் பொருத்தமின்று. செவி சிறகாமே என்பது வேற்றுமைத் தொகை. ஆதலின் சகரம் மிக வேண்டும். அன்றிச் 'செபி சிறகு' எனினும் பொருந்தாத் தொடராகும். எஞ்சி நிற்கும் 'செவிசக்கரமே' 'செவ்விதிற்காமே' என்ற இரு பாடங்களும் பொருந்தும் ஆயினும், இப்பகுதியில் மந்திரங்கள் செபித்தலினும் தியானித்தலே யோகச் செயலுக்கு ஏற்றது ஆதலின் 'செவ்விதிற்காமே' என்ற பாடம் தேரப்படுகின்றது.

இடைச் செருகல் எனக் கருதத்தகும் பாடல்கள்

இப்போது கிடைக்கும் பதிப்புகளில் மிகுதியாக உள்ளனவும், பல காரணங்களால் இடைச் செருகல் எனக் கருதத்தக்கனவும் ஆகிய பாடல்கள், இப்பொழுதைய பதிப்பிற்காக ஆராயப்பட்ட பெரும்பாலான சுவடிகளில் உள்ளன. ஆகவே இச்சுவடிகளின் மேலேடுகள் எழுதப்பட்ட காலத்துக்கு முன்பே இடைச்செருகல் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. இச்சுவடிகளுள் பலவற்றில் படியெடுக்கப்பட்ட காலம் பற்றிய குறிப்பு இல்லை. முன்வந்த பதிப்புகளுள் சிலவற்றில் சில பாடல்களை இடைச் செருகல் என இனம் காட்டியுள்ளனர். எனினும் அவற்றினும் எண்ணிக்கையில் மிகுந்த பாடல்கள் இடைச் செருகல் என இப்போதைய ஆய்வில் தோன்றுகின்றன.

சிற்சில இயல்கள் முழுதுமே இடைச் செருகலாகத் தோன்றுகின்றன. அப்பாடல்கள், இடைச் செருகல் எனக் கருதற்குரிய காரணங்களுடன், இப்பதிப்பில் காட்டப்படுகின்றன.

அவை இடைச்செருகல் எனக் கருதற்குரிய காரணங்கள் 21 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்களை உடையவையும் உண்டு. இக்காரணங்கட்குக் குறியீடுகள் அமைக்கப்பட்டு பாடலின் ஈற்றில் நக வளைவினுள் காட்டப்படுகின்றன.

இரண்டு முறையும் மூன்று முறையும் வந்த பாடல்கள்

மாவை. வே. விசுவநாதப்பிள்ளை பதிப்பில் 43 பாடல்கள் இரண்டு முறை வந்துள்ளன. ஒரு பாடல் மூன்று முறை வந்துள்ளது. அவை இப்பதிப்பில் ஏற்புடைமைக்குத் தக்கவாறு ஒவ்வோரிடத்தில் மட்டும் தரப்படுகின்றன. (விசு) பதிப்பில் மொத்தம் உள்ள 3047 பாடல்களில் இந்நாற்பத்து நான்கை நீக்கினால், 3003 பாடல்கள்.

இப்பதிப்பிற்காகக் கிடைத்த சுவடிகளுள், நான்கில் மட்டும் உள்ளதும், பதிப்புகள் அனைத்திலும் உள்ளதும் ஆகிய 'உபதேசம்' என்னும் பகுதி, முதல் தந்திரத்தில் முதல் அதிகாரமாகக் காணப்படுகிறது. இது சில சுவடிகளில் இல்லாமைக்குரிய காரணங்கள் யாவை என ஆராய்ந்த போது சில செய்திகள் தெரிய வந்தன. சில பதிப்புகளில், நூலின் இறுதியில் வாழ்த்திற்கு முன்னைப் பாடலாக வரும்

“மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்

மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்

மூலன் உரை செய்த முப்பது உபதேசம்

மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே”

என்பது. இது திருமூலர் உரைத்தவை மூன்று நூல்கள் எனக்கூறும்.

ஆயினும் சில அறிஞர் இம்மூன்று நூல்களும் தனித்தனி நூல்கள் அல்ல. 'தமிழ் மூவாயிரம்' நூலின் உள்ளே 'மந்திரம் முந்நூறும்' 'உபதேசம் முப்பதும்' அடங்கும் எனக் கருதினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'திருமந்திர மாலை முந்நூறு' என்னும் நூலினை ந. சிவப்பிரகாச தேசிகர் உரையோடு 1976இல் வெளியிட்டது. அதில் 'தமிழ் மூவாயிரம்' என்ற நூலின் அதிகாரங்களிலும் வேறான மொத்தம் 29 அதிகாரங்களிலும் 373 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 2 பாடல்கள் மட்டுமே 'தமிழ் மூவாயிரத்திலும்' உள்ளன. மேற்குறிப்பிட்ட “மூலன் உரை செய்த” என்னும் பாடலில் குறிப்பிட்ட 'முந்நூறு மந்திரம்' என்பது தனிநூல் என இப்பதிப்பின் வாயிலாகத் தெளிவாகி விட்டமையால் 'முப்பது

உபதேசம்' என்பதும் தனி நூலாகவே இருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்டவாறு சில சுவடிகளிலும் பதிப்புகளிலும் முதல் தந்திரத்தின் முதலதிகாரமாக உள்ள 'உபதேசம்' என்னும் பகுதியே இத்தனிநூல் எனக் கருதுவதற்குத் தக்க சான்றுகள் அப்பகுதிக்கண் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது, அஃது அந்தாதித் தொடை அமையப் பெற்று மண்டலித்து முடிவதாகும். மேலே குறிப்பிட்ட 'திருமந்திர மாலை முந்நூறு' என்னும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீட்டு நூலும் மண்டலித்தே முடிவது ஒப்பு நோக்கத்தக்கது.

'உபதேசம்' என்னும் இப்பகுதியில் ஓரதிகாரத்திற்கு உரிய பொருள் வரையறை அமையாது, 'தமிழ் மூவாயிரம்' நூலில் கூறப்பட்ட செய்திகள் மிகச் சுருக்கமான முறையில் தரப்பட்டனவாகத் தோன்றுகின்றன. ஆதலின் திருமூலர் இயற்றிய 'உபதேசம் முப்பது' என்னும் தனிநூலைச் சுவடி எழுதியோர் 'தமிழ் மூவாயிரத்தோடு' இணைத்து முதல் தந்திரத்தின் முதலதிகாரமாக எழுதி விட்டனர் எனத் தோன்றுகிறது. இப்பொழுதைய பதிப்பில் இது தனிநூல் என்னும் குறிப்புடன் சேர்க்கப்பட்டுள்ளது.

நூலின் பெயர்

திருமூலர் தமது நூற்பெயரை யாண்டும் 'திருமந்திர மாலை' எனக் கூறவில்லை. இது நூற்பெயர் என்பதற்குப் பலரும் சான்றாகக் காட்டுவது, "மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை உறைப்பொடுங்கூடி நின்று ஓதலுமாமே" என வரும் அகச் சான்று. மந்திரமாலை என்பதன் பொருள் திருவைந்தெழுத்து என்பதாகும். திருமூலர் 'ஆகமம் செப்பலுற்றேனே' என்று பாடுகின்றார். திருமந்திரப் பதிப்புகள் அனைத்திலும் 'செப்பும் சிவாகமம் என்னும் பேர் பெற்றும்' என்ற பாடமே உள்ளது. ஆனால், இப்பொழுதைய பதிப்புக்குக் கிடைத்த சுவடிகளுள், காலத்தாற் பிந்திய சுவடி ஒன்றைத் தவிர, ஏனையவற்றில் 'செப்பும் சதாசிவம் என்னுமிப்பேர் பெற்றும்' என்ற பாடம் உள்ளது. சிவாகமம் என்பது நூல் வகையின் பெயரேயன்றி நூலின் பெயர் என்றல் சாலாது. 'நந்தி அருளாலே மூலனை நாடிப் பின் நந்தி அருளாலே சதா சிவன் ஆயினேன்' எனத் திருமூலர் கூறுதலின், தாம் 'சதாசிவன்' எனப் பெயர் பெற்றமைக்கு ஒப்பத் தம் நூலுக்குச் 'சதாசிவ ஆகமம்' எனப் பெயரிடும் திருக்குறிப்புப் பெற்றார் எனக் கொள்ளலாம்.

மற்றொரு பாடலில் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (பாடல் 58) எனக் கூறுகின்றார். இதனையே பிறிதொரு பாடலில் 'தமிழ்ச்சாத்திரம்' (பாடல் 63) எனக் கூறுகின்றார். தேவார அடங்கல் முறையில், திருக்கடைக் காப்பு, தேவாரம், திருப்பாட்டு என்ற மூன்று நூல்களும் அடங்கியமை போலத் திருமந்திர அடங்கல் முறையில் சதாசிவ ஆகமம், திருமந்திரமாலை, உபதேசம் என்னும் மூன்று நூல்களும் அடங்கும் எனக் கொள்ளத் தடையில்லை. ஆயினும் திருமூலர் தமிழில் ஆகமம் செய்தார். அதற்கு நந்தியருளால் 'சதாசிவ ஆகமம்' எனப் பெயர் இட்டார் என்பதை மறத்தலாகாது. ஆகமங்கள் யாவும் வடமொழியிலேயே உளவாக, தமிழில் இவ்வோர் ஆகமம் உளதால், தமிழுக்குப் பெருமையன்றோ?

தமிழ் ஆகமம் இறைவன் திருவாக்காகவே வெளிப் போந்தது என்னும் கருத்துப்படத் திருமூலர் 'ஆகமச் சிறப்பு' - அதிகாரத்தில் "ஆரியமும் தமிழும் உடனே சொலிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்று கூறுவதும் காணத்தகும்.

நூலமைப்பு

இந்நூல் 9 தந்திரங்களாக வகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த மகா சமாசப் பதிப்பின் முன்னுரையில் 'தந்திரப் பிரிவுகளும் அதிகாரப் பகுப்புகளும் ஆசிரியர் செய்தன வல்ல' என்று எழுதப்பட்டுள்ளது. இப்பொழுது கிடைக்கும் சுவடிகளுள் ஏழில் தந்திரப்பிரிவுகள் இல்லை. மற்றும் சுவடிகளில் இயல்வைப்புமுறை ஒத்திருக்கவில்லை. தந்திரப் பிரிவுகள் தொன்று தொட்டுவரின் இயல் வைப்பு முறையும் மாறாது ஆதலின், தந்திர வகைப்பாடு பிற்காலத்தவரால் செய்யப்பட்டமை தெளிவு.

"ஆகமச் சிறப்பில்" "நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே" என்றும்,

பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்ற நல் வீரம் உயர் வாதுளம் சிந்தம்
மாற்றவ் வியாமளை மாகுங்கா லோத்தரம்
துற்றநல் சுப்பிரம் சொல்லு மகுடமே

என்றும் வருவன கொண்டு குருபரம்பரையாக நந்தி பெற்றவை ஒன்பது ஆகமங்கள் என்றும், அவை காரணம், காமிகம் முதலியவை என்றும் கருதி, திருமூலர் நந்தியின் மாணவர் ஆதலின் அவர்பால் தாம் கேட்ட ஆகமப் பொருளை 9 தந்திரங்களாக வகுத்திருப்பார் என்றும் எண்ணிப் பிற்காலத்தார் இத்

தந்திரப் பிரிவைச் செய்திருக்க வேண்டும். ஞானாவரண விளக்கம் என்னும் நூலுக்குப் பேருரை வரைந்த வெள்ளி அம்பலவாண சுவாமிகள், 'பெற்ற நல்லாகமம்' என்ற பாடல் போலிக்கட்டுரை (பிறர் செய்தது) என்று தக்க காரணங்களுடன் கூறியுள்ளார். திருமந்திரத்திற்கு உரையெழுதிப் பதிப்பித்த அருணை வடிவேல் முதலியார் இப்பாடலின் மூன்றாவது அடி பிறர் திரித்துவிட்டது என்று கூறுகின்றார். அதில் கூறப்படும் 'யாமளம்' சிவாகமம் அன்று, வாம ஆகமம். காலோத்தரம் ஓர் உபாகமம் என்பன அவர் தரும் காரணம். "காமிகாதி முழுதும் உணர்தற்குச் சில சந்தானத்திற்கு மாத்திரம் குரவர் என வந்து ஒன்பது என வாராது எனச் சிற்றறிவு தோன்றக் கிடத்தலானும்.. பாரம்பரியக் கிரமத்தில் உருத்திர தேவாதிகளும் இவ்வொன்பதே பெற்றார், மற்றைய பெற்றிலர் என வருதலானும்" என்று இவ்வாறு காரணம் காட்டி இப்பாடல் போலிக்கட்டுரை என வெள்ளியம்பல சுவாமிகள் கூறுகின்றார்.

இவ்வாசிரியர் இருவருடைய கருத்தையும் நோக்கும்போது, சிவாகமங்கள் இருபத்தெட்டுள் ஒன்பதை மட்டும் நந்தி பெற்றார் என்று கூறுதலும் அவ்வொன்பதுள் யாமளம், காலோத்தரம் என்னும் இரண்டும் சேர்ந்திருந்தன என்பதும் பொருந்துவன அல்ல என்று அறியலாம். ஆகவே இடைச்செருகலாகிய இப்பாட்டை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை ஒன்பது தந்திரங்களாகப் பிரித்தமையும் பொருந்தாதாகின்றது. "நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே" என இங்கு ஆசிரியர் கூறுவதைப் போன்றே பிறிதோரிடத்தும் "ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்" எனக்கூறி ஐயம் அகற்றுகின்றார். 28 சிவாகமங்கள் ஒன்பது வகையாகக் கொள்ளப்படும் என்பது அவர் கருத்து.

மேற்குறிப்பிட்ட "பெற்ற நல்லாகமம்" என்னும் பாடலுட் கூறிய ஒன்பது ஆகமங்களின் மொழி பெயர்ப்பாக ஆசிரியர் ஒன்பது தந்திரங்களையும் செய்தார் என நிலவும் கருத்தும் மேற்போந்த காரணத்தால் மறுக்கப்படும்.

பாயிரம்

சுவடிகளுள் தந்திரப் பிரிவு உள்ளவற்றில் மட்டுமே பாயிரம் என்ற பிரிவும் காணப்படுகின்றது. அவற்றுள் புதுச்சேரிச் சுவடியிலும், தருமபுர ஆதீனத்துச் சுவடியிலும் 'சிறப்புப் பாயிரம்' என்னும் பெயர் உள்ளது. மற்றொன்று திருவாவடுதுறை ஆதீனத்துச் சுவடி. அதில் பாயிரமா, சிறப்புப் பாயிரமா என்பது தெளிவாக அறியக்கூடவில்லை. தந்திரப் பிரிவு செய்த பிற்காலத்தாரே தந்திரங்களுள் அடங்காதவையாகச் சில இயல்களைப் பாயிரம் அல்லது சிறப்புப்பாயிரம் என்னும் பெயருடன் ஒரு பிரிவாக அமைத்திருத்தல் வேண்டும். இப்பாயிரத்துள் இடைச்செருகலாகப் பல பாடல்கள் உள்ளன எனக் கருத இடம் இருக்கிறது. விசுவநாதப்பிள்ளை பதிப்பின் நூன்முகத்தில் ஒய்.வி. இரமண சாஸ்திரி, 'இப்பிரிவின் 16 பாடல்கள் இடைச்செருகல்' என்று எழுதியுள்ளார். இப்போதைய பதிப்பிற்காக ஆராய்ந்த பொழுது 17 பாடல்கள் இடைச்செருகல் என்று அறியப்பட்டன. அவற்றை நீக்கி, உரிய பாடல்களை உரிய இயல்களில் அமைத்த பொழுது, பாயிரத்தின் இயல்களாக முன்னைப் பதிப்புகளில் உள்ள குருபாரம்பரியம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு என்னும் இயல்கள் மிகையாதலும் காணப்பட்டது. ஆகவே இப்போதைய பதிப்பில் 'பாயிரம்' என்ற பெயர் இன்றிக் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, வரலாறு, அவையடக்கம், திரிமூர்த்தி என்னும் ஆறு இயல்கள் மட்டும் கொள்ளப்படுகின்றன. நூல் முழுதும் தந்திரப் பிரிவு மேற்கொள்ளப்படவில்லை. இயல்கள் வரிசையெண் இட்டுத் தரப்படுகின்றன.

விசுவநாதப்பிள்ளை பதிப்பில், பாயிரத்தின் முதல் இயல், 'பரசிவப்பிரபாவம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. தருமபுரவாதீனப் பதிப்பு, "ஒன்றவன் றானே" என்னும் பாடலைக் "கடவுள் வாழ்த்து" இயலாகக் காட்டுகின்றது. இப்பாடலில் வாழ்த்தும் குறிப்போ, வணங்கும் குறிப்போ இல்லை. இதனை அடுத்துவரும் "போற்றிசைத் தின்னுயிர்" என்னும் பாடலை "நுதலிய பொருள்" என்றும், அடுத்த இருபாடல்களை "நூற் சிறப்பு" என்றும் தருமபுரப் பதிப்புக் குறிக்கிறது. இதற்குச் சுவடியாதாரம் காட்டப்படவில்லை. இந்நான்கு போக, எஞ்சிய 46 பாடல்களை மட்டும் இப்பதிப்பு, சிவபரத்துவம் என்ற அதிகாரமாகக் கொள்கின்றது. இதற்கும் சுவடியாதாரம் காட்டப்படவில்லை. இவ்வியலின் இறுதிப்பாடலில் வாழ்த்தி வணங்கும் குறிப்பு உள்ளமையால், இவ்வியல் 48 பாடலும் 'கடவுள் வாழ்த்து' என்பதே பொருந்தும்.

திருவாய்மொழியில் அகப்பொருள் மரபு



முனைவர் ம.பெ. சீனிவாசன்,
சிவகங்கை.

'வான்றோய் நல்லிசைச் சான்றோர்' என்னும் பெருமைக்குரியவர்கள் சங்கப் புலவர்கள் ஆவர். எனவே அவர்தம் செய்யுட்கள் 'சான்றோர்கவி' எனச் சிறப்பிக்கப் பெற்றன. சங்க இலக்கியத்தில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவன அகத்திணைச் செய்யுட்களே. மொத்தமுள்ள சங்கப் பாடல்கள் 2381; அவற்றுள் அகத்திணை பற்றியன 1862 ஆகும். தமிழுக்கே உரிய அகத்திணை மரபின் செல்வாக்கை இது தெளிவுறுத்தும். சங்க நூல்களையடுத்து நீதி நூல்கள் தோன்றிய காலத்திலும் இவ்வகத்திணை மரபு தொடர்வதையும் காப்பியங்களிலும் ஆழ்வார் நாயன்மார் பக்தி இலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கூடத் தவறாது இடம் பெறுவதையும் நாம் காணலாம். 'உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துள்ள' இறைவனைப் போலக் காலந்தோறும் தோன்றிய பலவகை இலக்கியங்களிலும் அகத்திணை மரபு ஊடுருவி நிற்கின்றது. அதிலும் குறிப்பாகப் பக்தி இலக்கியத்தில் இதன் தாக்கம் அதிகம். பக்திக் கவிஞர்கள் உலகியலடியாகப் பிறந்த அகத்திணைக் காதலைப் பக்திக் காதலாக எளிதில் மடை மாற்றம் செய்து கொண்டனர். அதன் விளைவாக இறைவனை அனுபவிக்கும் முறைகளுள் ஒன்றாக நாயகி பாவமும் (Bridal Mysticism) ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. பிற நாட்டுச் சமய இலக்கியங்களிலும் இம்முறை காணப்படுகின்றது.

இனி, ஆழ்வார்களின் தலைவராகிய நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் அகப்பொருள் மரபு இடம் பெறுவதைச் சுருக்கமாகக் காண்போம்.

மணிவல்லிப் பேச்சு

நம்மாழ்வார் அருளிய நூல்கள் நான்கு. அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இவற்றை முறையே ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களின் சாரம் என்பர் பெரியோர்.

இவற்றுள் முதல் நூலான திருவிருத்தமே அகப்பொருள் அமைப்புடைய முழு நூலாக விளங்குகிறது. ஒரு வகையில் இது சைவ நூலான திருக்கோவையாரை ஒத்திருக்கிறது. இதில் உள்ள நூறு பாசுரங்களுள் முதற் பாசுரமும் இறுதியில் உள்ள எட்டுப் பாசுரங்களும் தவிர ஏனையவை யாவும், அகப்பொருள் கிளவித் துறையில் அமைந்தவையே. வெறிவிலக்கு, தூது, நலம் பாராட்டு, காலமயக்கு, இயற்பழித்தல், இயற்பட மொழிதல், அறத்தொடு நிற்றல், பொழுதுகண்டு இரங்கல் முதலியன இந்நூலிற் காணலாகும் சில அகப்பொருள்துறைகளாம்.

திருவிருத்தம் எட்டாம் பாசுரம், 'தலைவன் பொருள் வயிற் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக் குரைத்தலையும்', ஒன்பதாம் பாசுரம், 'தலைவன், தலைவியின் நீங்கலருமை கூறுதலையும் பேசுகின்றன. அவளின் கண்ணழகில் மயங்கிய தலைவன், 'வண்பூ மணிவல்லி யாரே பிரிபவர்?' என்கிறான். 'கண்ணழகியாகிய உன்னைப் பிரிந்து ஆற்றியிருத்தல் இயலாதாகலின், உன்னைப் பிரியேன்' என்பது இப்பாசுரத்தால் தலைவன் உணர்த்தும் கருத்தாகும். இங்குத் தலைவி, 'மணிவல்லி' யாக - மணிபோன்ற கொடியாகச் சித்திரிக்கப்படுகிறாள். அத்தலைவி நம்மாழ்வாராகிய பராங்குச நாயகியே. தலைவனோ, விண்ணோர் தலைவனாகிய கண்ணன் எம்பெருமான். எனவே வைணவப் பெரியோர் நாயகி பாவனையால் அமைந்த நம்மாழ்வார் கூற்றினை 'மணிவல்லிப் பேச்சு' என்றே குறிப்பிட்டனர். அப்பேச்சும் இயல்பானதே என்பது அவர்களின் கருத்தாகும். இதனை ஆசாரிய ஹ்ருதயம் 'மணிவல்லிப் பேச்சு வந்தேறியன்று' என அழகாகக் குறிப்பிடும்.

திருவாய்மொழி

நம்மாழ்வாரின் நான்கு நூல்களுள் இறுதியாகப் பாடப்பெற்றது திருவாய்மொழியே. இதுவே உயிர்க்கு உறுதி பயக்கும் சிறந்த நூலாகப் போற்றப்படுகிறது. 'உலகேழின் தாகம் தீர்ப்பது திருவாய்மொழி' என்றும்,

"*பெருநூல் பிறபல கற்பதில் மாறன்*
ஒருநூல் கற்பது ஊதியம் உயிர்க்கே"

என்றும் முன்னோர்கள் இதனைச் சிறப்பித்துப் பேசியிருக்கின்றனர்.

அந்தாதி யமைப்பில் 1102 பாசுரங்கள் கொண்ட பெருநூல் இது. பதிகத்துக்குப் பாசுரம் 11 வீதம் 100 பதிகங்கள் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. (ஒரு பதிகத்தில் மட்டும் 13 பாசுரங்கள்). இந்நூலிலும் 27 பதிகங்களில் அகப்பொருள் மரபை அமைத்துப் பாடியிருக்கிறார் நம்மாழ்வார்.

அவரது படைப்புகளில் வியத்தகு ஒப்புமைகள் சிலவற்றை நாம் காணக் கூடும். தம்முடைய நான்கு நூல்களையுமே அந்தாதியாகப் பாடிய நம்மாழ்வார், முதலும் முடிவுமாகவுள்ள இரு நூல்களிலும் அகப்பொருள் மரபை இடம்பெறச் செய்திருப்பது இங்கு நினைக்கத்தகும்.

சீரியநற்காமம்

'இறைவனிடத்துப் பக்தி செலுத்தும் அடியார்கள் பெண்பாவனையிற் பேசுவது ஏன்? இவ்வகைப் பேச்சில் அத்துணைச் சிறப்பில்லையே' என்று நினைப்போரும் உள். 'இறைநினைவோடு உலகியற் காதலை ஊடாட விடுவது பொருத்தம் அன்று' என்பது அவர்கள் கருத்து. திருவாய்மொழியில் முதல் மூன்று பதிகங்களைப் பெருவிருப்புடன் கேட்டு வந்த ஒருவன், ஆழ்வார் பெண்தன்மை பெற்று நாரையைத் தூது அனுப்பும், 'அஞ்சிறைய மடநாராய்' என்னும் பதிகம் வந்தவுடனே துணுக்குற்று, 'இது காமுகர் வாக்யமாய் இருந்ததே' என்று கைவிட்டுப் போனானாம். இந்நிகழ்ச்சியைப் பதிவு செய்திருக்கும் ஈட்டுரைகாரர், 'இது பகவத்காமம் என்று அறிந்திலன், நல்வினையின்மையாலே' என்கிறார். அவர் குறிப்பிட்டிருப்பதைப் போலப் பிறழவுணர்ந்ததனால் அவன் நல்வினை யில்லாதவனே.

அடியார்களின் காதல் உலகியற் காமம்போல் விலக்கத்தக்கதன்று. கண்ணனுக்கே ஆகும் காமம் அது. எனவே அதனைச் 'சீரியநற்காமம்' என்றே சிறப்பித்தார் திருவரங்கத் தமுதனார்.

இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பினை ஒன்பதாக வகைப்படுத்துவர். இதனை 'நவவிதசம்பந்தம்' என வைணவத் தத்துவ நூல்கள் குறிப்பிடும். இவற்றுள் ஒன்றான நாயக நாயகி உறவே சிறந்ததும் உயர்ந்ததுமாம். இறைவன் ஒருவனே நாயகன். புருஷோத்தமனாகிய அவனுக்கு முன்னர் உலகமடங்கலும் பெண்தன்மையுற்றுவிடுகின்றன. இவ்வாறு நோக்குகையில் ஆழ்வார்கள் பெண்ணாகிப் பேசுவது இடுசிவப்பன்று; இயற்கையே.

அன்றியும் சிநேகத்துக்குப் பள்ளமடையாவது பிராட்டி நிலையாகையாலே ஆழ்வார்கள் தாமான தன்மையழிந்து தலைவி நிலையடைந்து பேசுவர். அந்நிலையில் திருமங்கை மன்னனைப் பரகால நாயகி என்றும் நம்மாழ்வாரைப் பராங்குச நாயகி என்றும் வழங்குதல் வைணவ மரபு.

ஈரத்தமிழ்

பொதுவாக ஆழ்வார்களின் பேச்சு இருவகை நிலைகளில் அமையும். ஒன்று, ஞானநிலை. பிறிதொன்று பிரேமை (காதல்) நிலை. ஞானச் செல்வர்களான ஆழ்வார்கள் ஞானம் மேலோங்கி நிற்கையில் பேசுவது முதல்வகை. பிரேமை பெருக்கெடுக்கும் போது பேசுவது மற்றொரு வகை. முன்னதை 'ஞானத்தமிழ்' என்றும், பின்னதை 'ஈரத்தமிழ்' என்றும் இயம்பலாம். இந்த ஈரத்தமிழையே, 'ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் அமுதத் திருவாய் ஈரத்தமிழ்' என்று அமுதனார் குறித்ததாகக் கொள்ளலாம். இவ்விரு வகையான பேச்சையும்,

"*ஞானத்தில் தம்பேச்சு*
பிரேமத்தில் பெண்பேச்சு"

என்று ரத்தினச் சுருக்கமாக விளக்கினார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

தோழி, தாய், மகள்

திருவாய்மொழியில் பெண்ணுடை உடுத்துப் பேசும் பதிகங்கள் 27 என முன்பே குறித்தோம். இவை தோழி, தாய், மகள் என மூவகை மாந்தரின் பேச்சாக அமையும். இவற்றைத் தோழி பாசுரம், தாய் பாசுரம், மகள் பாசுரம் என வழங்குதல் மரபு. 27 பதிகங்களுள் தோழி பேச்சாக அமைவன மூன்று; தாய் நிலையில் ஏழு. எஞ்சிய பதினேழும் - மகள் கூற்றாக - உள்ளன. இங்ஙனம் மூவர் நிலையிலும் நின்று பேசுபவர் நம்மாழ்வாரே. அவரின் அளவற்ற இறையனுபவமே இவ்வாறு கிளைத்து நிற்கிறது. 'பெருக்காறு பல

தலைத்துக் கடலை நோக்குமாப் போலே' என ஆசாரிய ஹிருதயம் இதனை உவமை முகத்தால் விளக்கிக் கூறும். கரையழியப் பெருகிய பேராறானது, பல்கிளைகளாகப் பிரிந்து கடைசியில் கடலிடைச் சென்று சேர்வது போல, ஆழ்வாருடைய அன்பும் தோழி முதலான பல நிலைகளாலும் இறைவனாகிய கடலையே சென்றடைகிறது என்பது கருத்து.

தோழிபாசுரம்

திருவாய்மொழியில் 'தீர்ப்பாரை யாம் இனி', 'துவளில்மாமணிமாடம்', 'கருமாணிக்கமலை' என்பன தோழி பாசுரங்கள்.

இவற்றுள் முதலது,'வெறிவிலக்கு'ப் பற்றியது. மகளின் நோய்க்கான உண்மைக் காரணத்தையறியாமல் தாய் வெறியாட்டெடுக்கையில் தோழி கண்டிப்பதைக் கூறும் பாசுரங்கள் இதில் அடங்கும். அக இலக்கியங்களில் இத்துறையிலமைந்த பாடல்களைக் காணலாம்.

மூன்றாவதான 'கருமாணிக்கமலை' என்னும் பதிகத்தில், 'அறத்தொடு நிலை' பேசப்படுகிறது.

அறத்தொடு நிற்றலாவது தலைவியொருத்தி தலைவன் ஒருவனைக் காதலித்துக் களவிற் கூடியதை அறியாத அவள் பெற்றோர்கள் அவளை வேறொருவனுக்கு மணம் செய்விக்க முயலும்போது, தலைவி தன் கற்புக் கெடாதிருக்கும் பொருட்டு நாணத்தைத் துறந்து முன் நிகழ்ந்ததைத் தோழிக்குக் குறிப்பாகக் கூறுவாள். தோழி- செவிலி, நற்றாய் முதலியோர்க்குக் கூறுவாள். பூத்தருபுணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என இவ்வறத்தொடு நிலை பலவகையாகக் கூறப்பட்டுக் குறிப்பாக உணர்த்தப்படும்.

தமிழ் அகப்பொருள் நூல்களால் அறியலாகும் செய்தி இது. 'கருமாணிக்கமலை' என்னும் பதிகத்தில், 'தலைவி திருப்புலியூரில் உள்ள இறைவனின் அழகிலே ஈடுபட்டாள்"; 'அவன்து அணிகலன் ஒளியில் இவள் அகப்பட்டாள்', 'இரவும் பகலும் இடைவிடாது அவனிருக்கும் புலியூரையே புகழ்கின்றாள்' என்கிறாள் தோழி.

'அன்னைமீர்! இதற்கு என் செய்வேன்? நீங்களும் இவளுக்கு ஒன்றும் கற்பிக்கவில்லை. நானும் கற்பிக்கவில்லை. அங்ஙனமிருந்தும் இவள் இப்பேச்சுக்களைப் பேசுதற்கு நான் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை' என்னும் முறையில் தோழியின் பேச்சு அமைகின்றது.

இது, கபிலரின் குறிஞ்சிப்பாட்டின் இறுதியில் உள்ள வெண்பாவில்- அறத்தொடு நிற்கும் தோழி பேச்சாக அமைந்த அடிகளை நமக்கு நினைவூட்டுகிறது.

"நின்குற்றம் இல்லை; நிரைதொடியும்
பண்புடையள்;
என்குற்றம் யானும் உணர்கலேன்"

என்பன அவ்வடிகளாம். இங்குக் குறிஞ்சிப்பாட்டுத் தோழியும் திருவாய்மொழித்தோழியும் உணர்வு நிலையில் ஒருவராகவே இருக்கக் காண்கிறோம்.

இப்பதிகத்தைப் 'பிறர்வரைவுமறுத்தல்' என்னும் துறையென்றும், 'மணவிலக்கு' என்னும் கிளவித் துறை என்றும் ஈட்டுரை குறிப்பிடும்.

இதனால் திருவாய்மொழி உரையாசிரியர்களால் பண்டை அகப்பொருள் நெறி நினைக்கப்பட்டமை அறியலாம். இதற்கு அடிப்படையாவன ஆழ்வாரின் அகப்பொருட் பாசுரங்களே.

இடைநின்ற 'துவளில் மாமணிமாடம்' என்னும் பதிகத்தில் தோழி தாய்மாரைப் பார்த்து, 'இவள் இயல்பறியாது நீங்கள் இவளுக்குத் திருத்தொலை வில்லிமங்கலத்தைக் காட்டினீர்கள். இனி உங்களால் இவளை மீட்க முடியுமோ?' என்கிறாள். 'உடலும் நெஞ்சும் அழிந்து தேவபிரான் மேல் ஈடுபட்டு நிற்கிறாள். இவளுக்குண்டாய் இருக்கும் உள்ளத்தின் சுவையையறிந்து திரும்பி விடுங்கள் அல்லது இவளது இன்ப அனுபவத்துக்கு இடையூறில்லாமல் பார்த்துக் கொண்டே நில்லுங்கள்' என்று தோழி பேசுவதாக இப்பதிகத்தின் பாசுரங்கள் அமைந்துள்ளன.

"துவளில் மாமணி மாடமோங்கும் தொலைவில்லி
மங்கலம் தொழும்"

எனத் தலைவியின் செய்கையைச் சொல்லத் தொடங்குகிறாள் தோழி. 'குற்றமற்ற மாணிக்கங்களால் அமைக்கப் பெற்ற மாடங்கள் நிறைந்தது தொலைவில்லி மங்கலம். தலைவனுடைய ஊர் அது. அணிமையில் உள்ள அவ்வூர் தலைவியின் கண்ணிற்படுவதால் அதைத் தொழுதவண்ணம் இருக்கிறாள்' என்பது தோழி கூற்று.

தலைவன் ஒருவன் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவியைப் பிரியும்போது, "என் ஊர் மிக அண்மையில் உள்ளது. என் மாடத்தின் சுதையொளி நின் மலையின் கருமையை மாற்றும்படி பக்கத்திலேயே அமைந்துள்ளது. நீ கவலைப்படாதே" என்று சொல்லிப்

பிரிவான். அஃது 'இடமணித்து' என்னும் துறையின் பாற்படும். அம்முறைப்படியே, தலைவி அவன் பிரிந்தநாள் தொட்டு, அவன் ஊரையும் அவ்வூரில் உள்ள மாடங்களையும் அம்மாடங்களிலுள்ள மணிகளையும் பார்த்து வைத்தகண் வாங்க மாட்டாதே இருப்பாள். அதுபோல் இத் தலைவியும் (ஆழ்வார் நாயகி) இவ்வூரைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே மிக விருப்பம் கொண்டிருக்கிறாள் என்பது இதனால் உணர்த்தப்படுகிறது.

தாய் பாசுரம்

'ஆடியாடி', 'பாலனாய்', 'மண்ணையிருந்து துழாவி', 'கடல் ஞாலம்', 'உண்ணும் சோறு' முதலான திருவாய்மொழிப் பதிகங்கள் தாய் கூற்றாக அமைந்துள்ளன. மாலவனுக்கே தன் மகள் பிச்சேறி நிற்கும் நிலையைப் பேசுவன இப்பாசுரங்கள். இரவு பகலாக எம் பெருமானை எண்ணி வாழு(டு)ம் மகளின் ஆற்றாமையையே இவை வெளிப்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக ஒரு பாசுரம்:

மாலுக்கு வையம் அளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்கு
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு, என்கொங்கலர்
ஏலக்குழலி இழந்தது சங்கே (6-6-1)

'இவள் வாமன அவதாரத்தின் குணங்களிலும் செயல்களிலும் அகப்பட்டு வளை இழந்தாள்' என்கிறாள் தாய்.

தன் மகள் மேல்பட்ட அம்புகளை, 'இஃதொரு குத்து, இஃதொரு வெட்டு' என்று எண்ணுவதைப் போல, 'மாலுக்கு' என்றும், 'மணாளற்கு' என்றும் 'நியாயற்கு' என்றும் 'கண்ணற்கு' என்றும் எண்ணுகின்றாள் தாய்.

"என் மகளோ, 'ஏலக்குழலி'. இவள் கூந்தலைக் கண்டு தோற்று இவளுக்கு அடிமையாகத் தக்க அவன், இவள் நலங்களை அழித்தானே" என வருந்துகின்றாள்.

ஒன்றுக்கொன்பது (வடிவழகு, வள்ளன்மை முதலான) அற்புதங்களைக் காட்டி இவளை மயக்கிக் கழலாத வளையை அபகரித்தான் என்பது தாயின் குற்றச்சாட்டு.

இவ்வாறு மகளின் காதல் அல்லது காதலனைக் குறித்துத் தாய் பேசுவதாகச் சங்க நூல்களிற் காணவியலாது. அகப்பொருள் மரபைப் பின்பற்றும் பக்தி இலக்கியங்கள், சிற்சில இடங்களில் சிறிது மாற்றம் செய்து தம்போக்கில் புதிய தடத்தை அமைத்துக் கொண்டன. இதுபோன்ற பாசுரங்களே அதற்குச் சான்று.

இவ்வகையான பாசுரங்களுக்குச் சமய மரபில் தரப்படும் விளக்கம் வருமாறு:

அ) தோழி பாசுரங்கள், ஆன்மா, பிறதெய்வங்களுக்கு அடிமைப்பட்டதன்று என்பதையும்,

ஆ) தாய் பாசுரங்கள், 'இறைவனுக்கு ஆட்பட்டது ஆன்மா; அவனை அடைய அவனே வழியாகிறான்' என்பதையும்,

இ) மகள் (தலைவி) பாசுரங்கள், 'இறைவனுடன் உடனே கூட வேண்டும்' என்னும் பதற்றத்தைக் காட்டும் என்பதையும் தத்துவார்த்த விளக்கமாகத் தந்திருப்பது இங்குக் கருதத் தக்கது.

மகள் பாசுரம்

இனி, 'அஞ்சிறைய மடநாராய்' என்னும் திருவாய் மொழி தொடங்கிப் பதினேழு பதிகங்கள் தலைவி பேச்சாக அமைந்துள்ளன.

'வாயும் திரையுகளும்' என்னும் பதிகத்தில் தலைவியானவள் நாரை, அன்றில், கடல், காற்று, மேகம், நிலா, இருள், கழி, விளக்கு ஆகியவற்றை நோக்கி, அவற்றுக்குண்டான சில தன்மைகளை இயற்கையானவை என்று கருதாது, அவையும் தன்னைப்போல் எம்பெருமானைப் பிரிந்து வருந்துவதாக நினைந்து, அவற்றுக்காகவும்தான் வருந்துகின்றாள்.

கடற்கரையில் கண்ணிமைக்காது மேனி வெளுத்தும் இளைத்தும் இருக்கிற ஒரு நாரையைக் கண்டு, 'நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயோ?' என்று வினவுகின்றாள்.

"வாயும் திரையுகளும் கானல் மடநாராய்!
ஆயும் அமருலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்
நோயும் பயலமையும் மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயோ?"

என்பது முழுப் பாசுரம்.

இதனை விளக்கவந்த ஈட்டுரைகாரர் 'பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்தில் ஆகையாலே', கடற்கரைச் சோலையை அடைந்து வருந்தியிருந்த தலைவி நாரையை நோக்கி இங்ஙனம் பேசியதாகக் குறிப்பிட்டார்.

இங்குத் தமிழ் அகப்பொருள் மரபுப்படி நெய்தலுக்குரிய ஒழுக்கமான இரங்கல் எனும் உரிப்பொருள் நினைக்கப்பட்டமை அறியலாம். ஆழ்வாரின் அகப்பொருள் பாசுரங்களில் ஐந்திணைச் சிந்தனை படிந்திருப்பதற்கு இது சான்று.

இங்ஙனம் ஆழ்வார் பாடிய தலைவி, மகள் பாசுரங்களில் அகப்பொருள் மரபின் தாக்கத்தை அதிகம் உணரலாம். வைணவ உரையாசிரியர்களின் விளக்கம் இதற்கு உதவுகின்றது.

தலைவனின் பிரிவுக்கு ஆற்றாது வருந்தும் தலைவி ஒருத்தி அன்றில் பறவைகளைத் தூது விடக் கருதி அவற்றை முன்னிலைப் படுத்திப் பேசுகின்றாள்.

"அன்றில் பறவைகளே! அவன் பிரிவால் நான் படும் பாட்டைக் கண்டிருந்தும் மனம் இரங்கி, 'இப்படி நாம் இவளைப் பிரிந்திருப்பது தகாது' என்று கருதாதவன் என் தலைவன். அவனுக்கு என்ன சொற்களைச் சொல்லி நான் அவற்றை உங்களிடம் கூறியனுப்புவேன்? 'நல்ல உயிரானது அத்தலைவரின் பொருட்டு இனிமேல் அவரிடத்தில் தங்கியிராது' என்று ஒரு வார்த்தை நீங்கள் அவரிடம் போய்ச் சொல்வீர்களோ? மாட்டீர்களோ?"

"என்னீர்மை கண்டிரங்கி இது தகாது என்னாத
என்னீல முகில் வண்ணற்கு என் சொல்லியான்
சொல்லுகேனோ?
'நன்னீர்மை இனியவர்கண் தங்காது' என்றொரு
வாய்ச்சொல்
நன்னீல மகன்றில்காள்! நல்குதிரோ? நல்கீரோ?"

என்பது பாசுரம்.

திருவரங்கத்தில் பட்டர் இதற்கு விளக்கம் அருளிச்செய்த போது இப்பாசுரத்தின் முதலடி குறித்து ஒருவர் ஐயம் எழுப்பினார்.

'தலைவி பிரிந்திருக்கும் நிலையில் கூறியது இது. அவன் அருகில் இருந்திருந்தால் நாயகியின் பிரிவுத்துயர் பற்றிய பேச்சுக்கு இடமில்லையே! பிரிவின் போது தலைவியின் பிரிவாற்றாமை முதலிய தன்மைகளைப் பிறர் சொல்லக் கேட்க முடியுமே தவிரக் கண்ணாற் காண முடியுமா? ஆதலின், 'என் நீர்மை கேட்டிரங்கி' என்று இருக்க வேண்டுமே தவிர, 'என் நீர்மை கண்டிரங்கி' என்று இருப்பது பொருந்தாது' என்றார்.

இதற்குப் பட்டர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

"முன்பு தலைவியோடு கூடியிருந்த காலத்தில் அவளை அணைத்துக் கொண்டிருக்கிற தலைவன் சற்றே கையைத் தளர்த்தினாலும், தலைவிக்குப் பிரிவுத்துயர் ஏற்பட்டு, அவள் உடம்பு வெளுப்பதைக் கண்டவன் தானே! 'இவளைப் பிரிவது கூடாது' என்றல்லவா உடன் உறைந்திருக்கவேண்டும்! இதனை நினைத்தே தலைவி, 'என் நீர்மை கண்டு இரங்கி' என்றாள்" என்றார்.

இதனாலும் ஐயம் நீங்கப் பெறாத அவர், 'இப்படியும் நடக்குமா?' என்று கேட்க,

புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு (1187)

என்னும் திருக்குறளையும்,

"ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி யற்றே பசலை; காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே"

என்னும் குறுந்தொகையையும் (399) நீ அறியாயோ?

என்று வினவினாராம்.

காதலனோடு கூடியிருக்கும் நிலையிலும் அணைத்த கை நெகிழ்கின்ற மிகச் சிறிய பிரிவுக்கும் ஆற்றாது தலைவியின் நிறம் வேறுபடுவதை அதாவது பசலை படர்வதை விளக்குகின்றன இப்பாடல்கள். இவற்றின் கருத்தை உள்வாங்கிச் செறித்தது போலக் குறுகத் தறித்த கோலம் கொண்டிருக்கிறது நம்மாழ்வாரின் பாசுரத் தொடர். அகத்திணை நூல்களிற் போல விரித்துப் பேசாது அதனை மறைத்து, அதே சமயம் நுட்பமாக உணர்த்திய திறம் இங்கு நினைக்கத்தக்கது. இதனாலும் பண்டை அகச்செய்யுட்களிற் காணலாகும் பசலை பற்றிய கருத்துமரபு ஆழ்வார் பாசுரங்களில் இடம் பெற்றமை அறியலாம்.

இவ்வாறே ஆழ்வாரின் திருவுள்ளம் பழைய அகத்திணை மரபை உள்வாங்கிக் கொண்டது என்பதற்கு ஈட்டுரை காட்டும் மற்றொரு சான்றையும் காண்போம்.

கோபிகை ஒருத்தியின் கூற்று இது:

"கண்ணா! நீ மிகக் கொடியவன். 'பெண்களை வருத்தக் கூடாது' என்கிற பொதுவான அருள் உடையவனும் அல்லை. அதிலும் 'நோவுபட்டாரை நலியத் தகாது' என்கிற சிறப்பான அருளும் உன்னிடத்தே இல்லை. என் பெரிய மார்பகங்களை நீ தழுவும் போதெல்லாம் அந்தத் தழுவுகைக்கு

உள்ளடங்காமல் பெருகிய இன்ப வெள்ளம் ஆகாசத்தையும் கடந்து அறிவை அழுத்தும் படியாகச் சூழ்ந்து, அப்போதே அது கனவாகக் கழிகின்றது. அந்த நிலையிலே ஆசையானது மனத்தின் இடந்தோறும் இடந்தோறும் உள்ளே புகுந்து உயிரால் பொறுக்க முடியாதபடி பெருகுகின்றது. அந்தோ! மேலும் மேலும் உன்னைப் பிரிவதற்குக் காரணமாக இருக்கிற பசு மேய்க்கப் போவதை நீ தவிர்ப்பாயாக"

தகவிலை தகவிலை யேநீ, கண்ணா!
தடமுலை புணர்தொறும் புணர்ச்சிக்கு ஆராச்
சுகவெள்ளம் விசும்பு இறந்து, அறிவை முழ்க்கச்
சூழ்ந்து அதுகனவு எனநீங்கி, ஆங்கே
அகஉயிர் அகம் - அகம் தோறும் உள்புக்கு
ஆவியின் பரம்அல்ல வேட்கை, அந்தோ!
மிகமிக இனி உன்னைப் பிரிவை ஆமால்
வீவநின்பசு நிரை மேய்க்கப் போக்கே

என்பது திருவாய்மொழிப்பாசுரம். ஆழ்வாரின் கவிப்பண்பைக் காட்டுகிற அழகிய பாசுரங்களுள் இதுவும் ஒன்று.

நாயகி பாவத்திற் பாடும் ஆழ்வாரின் 'சுகவெள்ளம்' ஆகாயத்தையும் கடந்து பரவி அறிவை மூழ்கச் செய்யும் அனுபவம் இதில் பேசப்படுகிறது. இதனை விளக்குதற் பொருட்டுச் சங்க இலக்கியத்திலிருந்து அகத்திணைச் செய்யுள் ஒன்றை முழுமையாக எடுத்துக்காட்டுகிறார் ஈட்டின் உரையாசிரியரான நம்பிள்ளை.

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

என்னும் குறுந்தொகைச் செய்யுள்தான்(3) அது. இதனாலும் ஆழ்வாரின் உள்ளத்தில் ஊறிக்கிடந்த அகப்பொருள் மரபை நாம் உணர முடிகின்றது.

மடலூர்தல்

மடலூர்தல் என்றோர் அகப்பொருள்துறை தமிழில் உண்டு. இத்துறையமைத்துப் பாடிய சங்கப் புலவர் ஒருவர் மடல்பாடிய மாதங்கீரனார் என்றே பெயர் பெற்றார். தலைவன் ஒருவன், தன் காதலி இன்னாள் என ஊரறிய அறிவித்து, அவளை அடையும் பொருட்டுப் பனங்கருக்கினால் ஆன குதிரை மீதேறி ஊர்ந்துவரல் மடல் மாவேறல் அல்லது மடலூர்தல் எனப்படும். இவ்வாறு மடலூர்தல் ஆண்களுக்கே உரியது எனவும் பெண்கள் மடலூர்தல் கூடாது எனவும் ஆழ்வாருக்கு முந்திய நூல்கள் கூறுகின்றன. ஆயினும் நம்மாழ்வார் இம்மரபினை மாற்றி, தலைவி நிலையையடைந்து - தாம் மடலூரத் துணிவதாக 'மாசறுசோதி' எனும் பதிகத்தில் பாடியுள்ளார். முன்னை அகப்பொருள் மரபில் அவர் செய்த மாற்றம் இது.

'மடலூர்தல் ஆண்களுக்கு மட்டுமே - என விதித்திருக்கப் பெண்ணாகிய நீ மடலூர்ந்தால் ஊரவர் பழிக்க மாட்டார்களா?' என்கிறாள் தோழி. அதற்குப் பராங்குச நாயகியோ, "தோழி! ஊரார் பழிச்சொற்கள் நம்மை என்ன செய்யும்?" என்று கூறி மடலேறத் தொடங்குகின்றாள்.

'ஊரவர் கவ்வை தோழீ என்செய்யுமே?'

என்று ஆழ்வார் நாயகி பாவத்தில் எழுப்பிய கேள்வி, தோழிக்கான பதிலாக மட்டுமன்றி, 'பெண்கள் மடலேறுவதாக ஆழ்வார் பாடியது பொருந்துமா?' என்று கேட்போர்க்கு விடையாகவும் அமைந்து விடுகின்றது. 'ஆற்றாமை மிகுதியால் ஆண்கள் மடலேறலாம் எனில் பெண்களுக்கு மட்டும் அதனை விலக்குவது ஏன்? 'ஒத்த நிலையில் உள்ள இருவர்க்கும் அது ஏற்புடையதே' என்னும் கருத்தில் பெண்மடலேற்றம் குறித்து ஆழ்வார் பாடியிருக்கிறார் என உணர்தல் வேண்டும். 'இதனை உணராதார் பழிதூற்றுவது குறித்துக் கவலையில்லை' என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். வைணவ மரபில் 'ஆழ்வார்' என்பது நம்மாழ்வார் ஒருவரையே குறிக்கும்.

ஆழ்வாரின் உள்ளக் கருத்தை நன்குணர்ந்தவர் திருமங்கைமன்னன். எனவே நம்மாழ்வாரை முன்னோடியாகக் கொண்டு, மடல் என்னும் துறையைப் பெருக்கி இரண்டு நூல்கள் பாடினார். அவை சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன. 'மறுத்துரைப்பாரின் வாயை அடைக்க ஒன்றுக்கு இரண்டாக மாற்றம் உரைப்பார் போல' 'மடல்' என்னும் ஒரு துறையிலேயே இரண்டு நூல்கள் செய்தார் அவர். அன்றியும் தாம் பாடிய பெரிய திருமடலில் 'பெண்மடல் ஏற்கத் தக்கதே' என்பதை வலியுறுத்தும் முறையில்,

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு, அதனையாம்
தெளியோம்"

என்றும் தெளிவுறுத்தினார்.

பின்னாளில் எழுந்த இலக்கண நூல்கள் 'கடவுளர் தலைவராயின் பெண்கள் மடலேறலாம்' என விதி செய்தன. 'கடவுட் காமம் கண்ணிய பகுதியாயின் பெண்கள் மடலேற்றம் பொருந்தும்' எனவும் அமைதி காட்டின.

இதனால் நம்மாழ்வார் தொடங்கி வைத்த மரபு மாற்றம், புதிய இலக்கிய வகையின் அடையாளமாக ஏற்கப்பட்டதை அறியமுடிகிறது.

திருவடிமேல் உரைத்த தமிழ்

ஆழ்வார் தாமான தன்மையிற் பேசிய போதும் பெண்தன்மை எய்திப் பேசிய போதும் அவரின் நோக்கு ஒருநிலைப்பட்டதாகவே இருக்கும்; உயர்வற உயர்நலமுடையவனின் திருவடி சேர்வதுவே அந்த நோக்கமாகும். இதனை 'நண்ணாதார்' என்னும் பதிகத்தின் பலசுருதிப் பாட்டினால் அறியலாம்.

"திருவடியை நாரணனைக் கேசவனைப் பரஞ்சுடரை
திருவடி சேர்வது கருதிச் செழுங்குருகூர்ச் சடகோபன்
திருவடிமேல் உரைத்த தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்
திருவடியே அடைவிக்கும் திருவடி சேர்ந் தொன்றுமினே"

என்கிறார் நம்மாழ்வார். இதனால் தம்முடைய நூலான திருவாய்மொழிக்கு அவர், 'திருவடிமேல் உரைத்த தமிழ்' என்று ஒரு பெயர் சூட்டியதாகவும் கருத இடமுண்டு.

தலைவி, தலைவனது பிரிவுக்கு இரங்கிப் பேசும் பாசுரம் ஒன்றில்,

"அடிச்சியோம் தலைமிசை நீயணியாய்
ஆழியங்கண்ணா! உன்கோலப் பாதம்"

என்கிறாள். இதனால் நாயகி நிலையிலும் இறைவனின் தாள், தலை சேர்தலையே ஆழ்வார் அவாவி நின்றமை அறியலாம்.

நூலின் தொடக்கத்திலேயே, 'துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே' என்று தம் நெஞ்சினைக் கேட்டுக் கொண்டவர் ஆழ்வார். அவ்வாசை, அகப்பொருள் மரபு தழுவிப் பெண்ணாக மாறியபோதும் மாறவே இல்லை. தமிழ் மாறனின் இந்த மாறாத மனநிலையை அரும்பத உரைகாரர் ஒருவர் மிக நுட்பமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"காமுற்ற கையறவோடு எல்லே! இராப்பகல்
நீமுற்றக் கண்துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் தாள்நயந்த
யாமுற்ற துற்றாயோ! வாழி கனை கடலே"

என்பது நாயகி நிலையில் பேசும் பாசுரம்.

"ஓயாமல் ஒலியெழுப்பும் கடலே! நீ விரும்பிய பொருள் கையில் கிடைக்கப் பெறாத காரணத்தால் இரவும் பகலும் முற்றும் நீ உறங்கவில்லை. அதனோடு நில்லாது, மனமும் உருகி ஏங்குகின்றாய். ஆகையால் தென்னிலங்கை முழுவதையும் நெருப்பிற்கு உணவாகக் கொடுத்த இராமபிரானுடைய திருவடிகளை விரும்பிய - யான்பட்ட துன்பத்தினை நீயும் பட்டாயோ? உன் துன்பம் நீங்கி வாழ்வாயாக" என்கிறாள்.

இங்கு உரையாசிரியர்க்கு ஓர் ஐயம் எழுகிறது. "சேதுபந்தன சமயத்தில் தாள் நயந்தது கடல். பிராட்டி (தலைவி) யின் நிலையை அடைந்திருப்பதனாலே தோள் நயந்தவர் ஆழ்வார். எனவே 'தோள்நயந்தயாம்' என்று பாடாமல், 'தாள்நயந்தயாம்' என்று பாசுரமிட்டது ஏன்?." இதற்கு அவரே விடையும் தருகிறார்.

"பிராமணர் பைத்தியம் பிடித்தாலும் வேதம் சொல்வது போல, அடிவிடாத தம் வாசனையாலே என்று கண்டு கொள்க" என்கிறார். எந்நிலையிலும் இறைவன் திருவடிகளையே சிந்தித்துக் கொண்டிருந்த ஆழ்வாரின் திருவுள்ளம் அறிந்து சொன்ன அழகிய விளக்கம் இது. இதனால் கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன ஆழ்வாரின் பாசுரங்கள் என்பது போதரும்.

முடிவுரை

நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்குத் 'தமிழ் ஆயிரம்' என்றோர் பெயர் வழங்கும். 'அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்' என்பது மதுரகவியாழ்வாரின் திருவாக்கு. இங்கெல்லாம் 'தமிழ்' என்பது அந்நாளில் உள்ள அகப்பொருட் பாசுரங்களைக் குறிப்பாகப் புலப்படுத்துவதாகவும் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளுதற்குத் தமிழ் மரபில் இடமுண்டு. ("இந்நூல் 'தமிழ்' நுதலிற்று" எனவும், "ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் 'தமிழ்' அறிவித்தற்குப் பாடியது" எனவும் வருவனவற்றை நோக்குக.)

மொத்தத்தில், செழுமையான தமிழ் அகப் பொருள் மரபில் படிந்து குடைந்தாடி, இறை நெஞ்சர்க்கும் இலக்கிய வாணர்க்கும் பெரும்பயன் விளைத்தவர் நம்மாழ்வார் என்று அறியலாம்.

திருமுனைப்பாடி நாடு



மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்,
சென்னை.

தமிழ்நாட்டின் வடஎல்லை வேங்கடம்;தெற்கு எல்லை குமரிமுனை; கிழக்கும் மேற்கும் கடல் எல்லையாகும். "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்பது தொல்காப்பியப் பாயிரம். "கிழக்கும் மேற்கும் கடல் எல்லை ஆதலின் வேறு கூறார் ஆயினர்" என்ற நச்சினார்க்கினியர் உரையையும் இதனோடு சேர்த்து இவ்வுண்மையை உணரலாம். தமிழ் கூறும் உலகம் என்னாது 'நல்லுலகம்' என்று அடைமொழி கொடுத்துச் சிறப்பித்தது அன்று தொட்டு இன்று வரை ஆன்மீகப் பெருஞ்செல்வத்தை, சமய நுண்பொருளை தத்துவத் தனிப்பெரும் விளக்கத்தை உலகிற்கு வாரி வழங்கி வருவது தமிழகம் என்பதாலே ஆகும்.

இத்தமிழகம் சங்ககாலம் எனப்படும் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நான்கு பெரும்பிரிவுகளாகவும் பதின்மூன்று சிறு பிரிவு களாகவும் பகுக்கப்பட்டிருந்தது என்பதனை முற்கால இலக்கண இலக்கிய ஆய்வுகளால் விளங்கிக் கொள்ளலாம்.

பாண்டி நாட்டின்வடபகுதியைச் செந்தமிழ் நாடுஎன்றும், ஏனைய பன்னிரண்டு நாடுகளைச் செந்தமிழ் சேர் நாடுகள் என்றும் ஒரு தனிப்பாடல் கூறும். அவற்றைக் கொடுந்தமிழ் நாடு என்பாரும் உளர். அப்பாடல்,

"தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண் பூழி
பன்றி அருவா அதன் வடக்கு - நன்றாய
சீதம் மலாடு புனல் நாடு செந்தமிழ் சேர்
ஏதம் இல் பன்னிருநாட் டெண்."

என்பதாகும்.

வடபாண்டி நாட்டின் எல்லையை வையையாற்றின் வடக்கும் மருத யாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் ஆம் என்று உரைகாரர் கூறுவர். தென் மாவட்டங்களில் மதுரை மாவட்டமே செந்தமிழ் நாடு என்று குறிப்பிடப் பெற்றது என்று கூறி அமையலாம். இப்பன்னிரண்டுள் அருவா நாடு, அருவாவடதலை நாடு, மலாடு என்பன தொண்டை நாடு என்று வழக்குப் பெற்றன. புனல் நாடு சோழ நாடாயிற்று. ஏனைய பகுதிகளில் சில பாண்டி நாட்டில் சேர்ந்தன. பல சேரநாடு எனப் பெற்று அடங்கின.

இவ்வாறு இப்பதின்மூன்று நாடுகளும் சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள் என்று வழங்கும் வழக்கும் சங்க கால வழக்கே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும் குடிகள் எனச் சிறப்பித்துக் கூறும் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களால் ஆளப் பெற்ற நாடுகளைப் போலவே தொண்டை நாடும் சங்க காலத்தே 'தொண்டைமான் இளந்திரையன்' என்னும் பேரசால் ஆளப் பெற்ற செய்தியைப் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாண் ஆற்றுப்படை கூறும்.

இந்த இளந்திரையனின் முன்னோர்கள் "முந்நீர்த் திரைதரும் மரபினர்" என்பதையும் அவர் வழி வந்ததனால் 'திரையன்' என அழைக்கப் பெற்றதையும் அந்நூல் கூறுகிறது.

இத்திரையன் வழியினரே பல்லவர் என்பதும், இவர்-களால் பிற்காலத்தே தொண்டைநாடு ஆளப்பெற்றது என்பதும், பல்லவர் தொண்டையர் மரபினரே என்பதும் பெரும்பாணாற்றுப் படை ஆராய்ச்சி-யுரையில், மகாவித்துவான் இரா. இராகவையங்கார் அவர்களால் நன்கு விளக்கப் பெற்றுள்ளன.

தொண்டை நாட்டின் சில பகுதிகள் சங்க காலத்தேயே குறுநில மன்னர்களால் ஆளப் பெற்றுள்ளன. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இளந்திரையன் காலத்துக்குச் சற்று முன் பின்னாகத் தொண்டை நாட்டின் தென்பகுதியைத் திருக் கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் மலையமான் திருமுடிக்காரியாவான். மலையமானால் ஆளப் பெற்ற காரணத்தால் இப்பகுதி மலையமான் நாடு என அழைக்கப்பெற்றது. அது மேலும் மருவி 'மலாடு' என மாறியது. தொண்டை நாட்டின் எல்லையை,

"மேற்கு பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்

ஆர்க்கும் உவரி அணிகிழக்குப் - பார்க்குள்உயர்

தெற்குப் பினாகி திகழ் இருபதின் காதம்

நற்றொண்டை நாடெனவே நாட்டு"

என்று பழைய வெண்பா ஒன்று கூறுகிறது. கொள்ளிடத்தின் தென்கரை சோழநாடு என்றும், அதன் வடகரை தொண்டை நாடு என்றும் வழங்கும் வழக்கமும் உண்டு.

பிற்காலச் சோழர் காலத்தில் திருத்தில்லையம்பலத்து நடராசப் பெருமான் அவர்களது குலதெய்வமாகக் கொள்ளப் பெறுதலின் அப்பகுதி சோழரிடம் பெரும்பான்மையும் இருந்து வந்தது எனலாம். முன்பின் உள்ள சிலவற்றைத் தவிர்த்து வடார்க்காடு மாவட்டம், சென்னை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், தென்னார்க்காடு மாவட்டம் என்ற நான்கு பழைய மாவட்டங்களும், புதுவைப் பகுதியும் தொண்டைநாடு என்பதில் அடங்கும் என்பதில் ஐயம் இல்லை.

"செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி"

என்றஅகநானூற்றுப் (340) பாடற்பகுதியால் கடற்கரைப் பகுதியில் அமைந்த பழவேற்காடு என்று தற்போது வழங்கும் பவத்திரியைத் தலைநகராகக் கொண்டு திரையன் இத்தொண்டை நாட்டை ஆண்டு வந்தான் என்பதும், அவனுக்குப் பின்னர் வந்த "தொண்டைமான் இளந்திரையன்" காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு (பெரும்பாணாற்றுப்படை) ஆண்டனன் என்பதும் சங்க நூல்களால் அறியப்படும் செய்திகள் ஆகும்.

சமயத்துறையில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் அக்காலத்து நாற்பெரும் சமயங்களுக்கும் வாழ்வும் வளர்ச்சியும் தந்து, தத்துவத்துறையின் வித்தகராய சான்றோர் பலரைப் பெற்ற பெருமையால் "தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்று பாராட்டப் பெறும் பேறு பெற்றது இத் தொண்டை நாடு. தமிழின் தலைக்கால இலக்கியங்களுள் தொன்மை பெற்றதாகிய இரண்டு ஆற்றுப்படை (சிறுபாண், பெரும்பாண்) இலக்கியங்களைப் பெற்ற சிறப்பும் இந்நாட்டுக் குரியதே.

இத்தொண்டை நாட்டின் தென் முகப்பு சோழ நாட்டை ஒட்டிய வடவெல்லை ஆதலின் பல்லவ சோழரிடையே போர்கள் ஏற்படும் போதன்றி மற்றக் காலங்களிலும் எல்லைப் பாதுகாப்பு என்னும் முறையில் படைகள் பாசறை எனப்படும் பாடிவீடு அமைத்துத் தங்கியிருத்தல் இடையறாது நிகழ்வது ஆதலின் இப்பகுதி திருமுனைப்பாடி நாடு என்னும் பெயரையும் பிற்காலத்தே பெற்றது என்பது தெரிய வருகிறது.

சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தே தடுத்தாட்கொண்ட புராணத்தின் முதல்பாட்டிலே,

"மங்கையர் வதன சீத மதி இருமருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு

என்று கற்பிற் சிறந்த பொற்புடை மங்கையர் வாழும் திருமுனைப்பாடி நாடு என்று சிறப்பித்துக் கூறுவர். இந்நாட்டுப்பகுதி சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்ததனால் அதனைக் கருத்தில் கொண்டு 'நடுநாடு' என்னும் பெயரும் இதற்கு வழங்குவதாயிற்று. இதனுள் திருக்கோவலூர்ப் பகுதி மட்டும் 'சேதி நாடு' என வழங்கப் பெற்ற வழக்கினையும் பெரியபுராணத்துக் காண்கிறோம்.

திருமுனைப்பாடி நாடு சங்க காலத்தே சிறப்புற்றிருந்த நிலப்பகுதி ஆகும். இதனைத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் 'மலையமான் திருமுடிக்காரி' என்ற கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய மன்னன். முள்ளூர் மலைக்குத் தலைவன்; கோவலூரை அரசிருக்கையாகக் கொண்டவன்; போரில் வெல்லற்கரியவன்; மூவேந்தர்க்குப் போர் நிகழுங் கால் தன்னைத் துணை வேண்டும் அரசர்க்குப் போரில் உதவி செய்து வெற்றி பெறச் செய்தவன்; அதனால்,

"வென்வேல் மலையன் இல்லன் ஆயின்
ஆரமர் கடத்தல் எளிதுமன் நமக்கு"

என்று தோற்ற அரசர்களாலும் பாராட்டப் பெறும் மாவீரன்; வரையா வீகையும் வள்ளன்மையும் உடையான் எனச் சிறப்பிக்கப் பெற்றவன்.

சங்கப்புலவர் தலைமணியாக, "செறுத்த செய்யுள் செய் செந் நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" என்றும், "பொய்யா நாவின் கபிலன்" என்றும், "உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்" என்றும் சங்கப் புலவர் பலராலும் பாராட்டப் பெற்ற புலனழுக்கற்ற அந்தணாளராக விளங்கியவர் கபிலர் பெருமான். நட்பிற்கு இலக்கணமாக விளங்கி வேள் பாரியின் உயிர்த் தோழராக விளங்கிய அவரால் பாராட்டப் பெறும் பெருஞ் சிறப்புப் பெற்றவன் இம்மன்னன். இவனால் ஆளப்பெற்றது என்பதே இந்நாட்டின் சிறப்பைச் சொல்லப் போதுமானது.

புலவர்களால் பாராட்டப்பெற்ற மாபெரும் புலவர் கபிலர். "ஆகவும் கெடவும் பாடல் தரும் கபிலர்" என்று அவரது ஆற்றலை உரையாசிரியர் சிறப்பித்துக் கூறுவர். அவ்வாற்றலால் "தெய்வப் புலவர்" என்னும் பெயர் வழக்கும் அவருக்குண்டு. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் சங்க இலக்கியப் பரப்பின் மூன்று தொகுதிகளிலும் கபிலரது கவிவளத்தைச் சுவைக்கலாம். தனிப்பாடல் ஒன்றுடன் சேர்த்து 278 பாடல்கள் சங்ககால இலக்கியத்தில் கபிலருடையவை ஆகும். இத்தனை மிகுதியான பாடல்கள் பாடிய ஒரே புலவர் கபிலர். "குறிஞ்சிக் கபிலன்" என்று சிறப்பிக்கப் பெற்றவர் இவர். செய்யுட் கிழமைக்கு இன்றுவரை இலக்கண ஆசிரியர்கள் "கபிலரது பாட்டு" என்பதையே எடுத்துக்காட்டாக ஆளுவதொன்றுமே இவரது புலமைக்குச் சான்றாகும்.

இத்தகு புலவர் பெருமான் பாரி மகளிரைப் பாரியின் இறப்புக்குப் பின் மலையமான் மரபில் மணம் முடித்துத் தம் கடமை நிறைவேறியதாகக் கருதி, வேள் பாரியாகிய உயிர் நண்பனின் பிரிவால் உயிர் தரிக்கலாற்றாது, திருக்கோவலூர்ப் பெண்ணையாற்றின் நடுவில் உள்ள மணற்பரப்பின் இடைக்கல்லிலே வடக்கிருந்து மூலக்கனலை மூட்டி எழுப்பி வீடு பேறடைந்தனர். எண்ணிய எண்ணியாங்கு எய்துவதற்குத் தன்னை வழிபடுவார் அனைவர்க்கும் இன்றும் அருளி எழிலுடன் விளங்குவது கபிலக்கல் எனப்படும் அவரது நினைவுக் கோயில். இதனைக் கல்வெட்டு,

"வன்கரை பொருது வருபுனல் பெண்ணைத்
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலும் முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத்து அந்தரிசனம் செல
மினல் புகும் வீடுபேறு எண்ணிக்
கனல் புகும் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட்டான் வீரட்டானம்
அனைத்தினும் அலாதியானது"

(திருக்கோவலூர்)

என்று கூறி மகிழ்வதையும் காணலாம்.

இத்தகு அளப்பரும் பெருமை பெற்ற இந்நாட்டிற்கு வேறொரு பெயரும் உண்டு என்பதைக் கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன.

மெய்ப்பொருள் நாயனார் என்ற மன்னரின் தலைநகராக இருந்தது இத்திருக்கோவலூரே. மலைநாடு, மலையமான் நாடு, மலாடு எனப்படும் நாட்டிற்குத் தலைநகர். இந் நாயனார்க்கு 'மலாடர் கோமான்' எனப் பெயர் வழங்குவர் சேக்கிழார்.

இக்கோவலூர்ப் பெருமாள் கோயிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை நமக்குப் புதிய பல செய்திகளை இந்த நாட்டைப் பற்றித் தருகின்றன.

இந்த நாட்டின் பெயர் மலாடான ஜனநாத வளநாடு, உள்நாட்டின் பெயர் குறுக்கைக் கூற்றம், ஊரின் பெயர் திருக்கோவலூரான மதுராந்தக சதுர் வேத மங்கலம், இவ்வூர்ப் பெருமாளின் பெயர் திருஇடைகழி ஆழ்வார் என்பன அவை. இப்பெயர்கள் 1000 ஆண்டுகளுக்கு முன் சோழர் காலத்தே வழங்கி வந்த பெயர்கள் ஆகலாம். வேறொரு கல்வெட்டு,

"மிலாடாகிய ஜனநாத வளநாட்டுத் திருக்கோவலூர் எழுபத்தெண்பது நாட்டு பதினென் பூமிச் சித்திரமேழி விண்ணகரமான திருவிடைகழி" என்று கூறப்பட்டுள்ளது.

இதனால் 'மலாடு' என்பது 'மிலாடு' எனவும் வழங்கப் பெற்றமை அறியலாம். மெய்ப்பொருள் நாயனார் பற்றிக் கூறும் ஓர் கல்வெட்டு 'தத்தா நமரே காண்' என்ற மிலாடுடையார் "திருமேனி ஒன்று" எனக் குறிப்பிடுவதிலிருந்து பெரியபுராண இலக்கியச் செல்வாக்கும் நமக்கு அறிய வருகிறது.

பெருமாள் கோயில் இரண்டாம் பிரகாரம் வடபுறச்சுவரில் ஓர் அருமையான கல்வெட்டுள்ளது. உழவர்கள் பெருமையை எடுத்துக் கூறும் அச்செய்யுள் பகுதி மிகவும் அருமையானது. இது முழுமையும் உணர்தற்குரியது.

"பூமிதேவிக்கு மக்களாகி நிகழ்
செந்தமிழ் வடகலை தெரிந்துணர்ந்து
நீதி கேட்டு நிபுணராகி
நறுமலர் வாடாத் திருமகள் புதல்வர்
எத்திசைக்கும் விளக்காகி
இன்சொல்லால் இனிதளித்து
வன்சொல்லால் மறம் கடிந்து
சது சாகர பரிமண்டலத்து
சந்திராதித்த வரையினி தோங்கி
வாதராசன் காற்றசைப்ப
வருணராசன் நீர் தெளிப்ப
தேவராசன் திசை விளக்க
எத்திசை மகளிரும் இனிது வீற்றிருப்பத்
தெங்கும் பலாவும் தேமாஞ்சோலையும்
வாழையும் கமுகும் வளர்கொடி முல்லையும்
பூவையும் கிள்ளையும் பொலிவொடும் செழுமி
வாட்ட மின்றிக் கூட்டம் பெருகி
அறம் வளரக் கலி மெலியப்
புகழ் பெருகப் பகை பணியத்
திசை யனைத்தும் செவிடு படாமல்
செங்கோல் முன்னாகவும்
சித்திர மேழியே தெய்வமாகவும்
செம்பொற் பசும்பையே வலிமையாகவும்
கடிமையினொடும் கருணையெய்திச்
சமயதர்மமினிது நடத்தி, நிகழாநின்ற
உத்தம நீதி யுயர் பெருங் கீர்த்தி
முத்தமிழ் மாலை முழுவது முணர்ந்த
சித்திர மேழிப் பெரிய நாட்டோர்"

என்னும் இக்கல்வெட்டுச் செய்யுள் பகுதி இந்த நாட்டு உழவர் பெருமையை குடிமக்களின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டுவதோடு அவ்வற்புதம் விளைக்க வல்ல கலப்பையாகிய மேழியையே அடிப்படையாக வைத்து 'சித்திர மேழிப் பெரிய நாடு' என்னும் பெயரையும் இந்த நாட்டிற்குத் தந்துள்ளது.

உழவர்கள் பூமிதேவியின் மக்கள்; செந்தமிழ் வடமொழி இரண்டும் அறிந்தவர்கள்; நீதி தெரிந்த நிபுணர்கள்; செல்வத்தில் திகழ்ந்தவர்கள் என இப்பாடல் கூறுவதிலிருந்து இத்திருமுனைப்பாடி நாட்டின் உழவர் சமுதாயத்தின் உயர்வை அறியலாம்.

இத்தகு உழவர் சமுதாயப் பெருங்குடியிலிருந்து தான் இந்த நடு நாட்டில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் திருமகனாராக, சைவம் வளர்த்த பெருமானாக ஒரு திருநாவுக்கரசர் தோன்றினார் என்று நினைக்கும் போது கல்வெட்டுச் செய்தி நூற்றுக்கு நூறு உண்மை என்பதை உணரலாம்.

இத்திருமுனைப்பாடி நாட்டை வரைபடத்தில் தென்னார்க்காடு மாவட்டம் என அழைக்கப்படும் பகுதியாகக் காணலாம். 1951ஆம் ஆண்டில் அமைந்த தென்னார்க்காடு மாவட்டப் பகுதியே இடைக்காலத்தில் திருமுனைப்பாடி நாடு என வழங்கிய பகுதியாகும். எட்டு வட்டங்களைத் தன்னகத்தே கொண்ட பகுதி இது. அவை வடக்கே இருந்து செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம், கடலூர், திருக்கோவலூர், கள்ளக்குறிச்சி, விருத்தாச்சலம், சிதம்பரம் என்ற எட்டு வட்டங்கள் ஆகும்.

வடதிருக்காவிரி என்று புகழப்படும் கொள்ளிடம், தென்திசையில் கங்கையெனும் திருக்கெடிலம், காசிக் கங்கையினும் வீசம் அதிகமான மணிமுத்தாறு, 'வெண்ணை உருகுவதன் முன் பெண்ணை பெருகும்' எனச் சிறப்பிக்கப் பெறும் தென்பெண்ணை, வெள்ளாறு, தொண்டி, சங்கராபரணி, கோமுகி, திருக்கனூர் ஆறு என்று பல நதிகள் இந்நாட்டுப் பகுதியைச் செழிக்க வைக்கின்றன.

மேற்குப் பகுதியில் உள்ள கல்வராயன் மலைத்தொடர், வடக்கே உள்ள புகழ்பெற்ற செஞ்சிக்கோட்டை, இடையே உள்ள முருகப் பெருமான் வீற்றிருக்கும் மயிலம் மலை, ஆங்காங்கே உள்ள திருவயிந்திபுரம் போல அமைந்த சிறு குன்றுகள், 1½ இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள காடுகள் இவ்வளவும் இம்மாவட்டத்துக்குப் புகழ் சேர்க்கும் குறிஞ்சிவளம் எனலாம்.

புதுவை, கடலூர், பரங்கிப்பேட்டை கடற்பகுதிகளும், மரக்காணம் உப்பளப் பகுதிகளும், தென்னந்தோப்புகளும் இம்மாவட்டத்தின் நெய்தல் நிலக் கருவூலங்கள் ஆகும். கொள்ளிடம், தென்பெண்ணை, கெடிலம் என்ற பேராறுகளும், பிறநதிகளும், இம்மாவட்டம்

சார்ந்த கடலில் கலக்கின்றன ஆதலின் மாசி மாதத்துக் கடல் நீராட்டுப் பெருவிழா இம்மாவட்டத்தில் புகழ் பெற்றது எனலாம்.

வீராணம் ஏரி, பொன்னேரி, வீடூர் அணை, இடங்கில் ஏரி என்ற இன்னபிற ஏரிகளாலும், வெள்ளாற்றுப் பாசனத்தாலும், கடலூர், சிதம்பரம் வட்டங்களின் மருத வளம் சிறப்புற்றது எனச் சொல்ல வேண்டுவதில்லை. சோறு வளர்க்கும் சோணாட்டைப் போல நெல்லுடைத்து புதுவை, கடலூர், சிதம்பரம் பகுதிகள் ஆகும்.

இம்மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 2,693,024 ஏக்கர்கள். (புதுவைப் பகுதி இதில் கணக்கிடப் பெறவில்லை) புதுவைப் பகுதியும் சேர்ந்ததே பழைய திருமுனைப்பாடி நாடாகும் என்பதை நினைவில் கொள்க.

பெரும்பாலான நிலங்கள் பருவமழையை எதிர்பார்த்துக் கிடப்பன ஆதலின் காடும் காடு சார்ந்த இடமாகிய முல்லை நில வளத்துக்குக் குறைவில்லை.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலை நில வளமும் இந்நாட்டகத்துள்ளதே. ஆதலின் ஐந்திணை வளத்தாலும் குறைவின்றிப் பொலிந்த நாடு திருமுனைப்பாடி நாடு என்பதில் ஐயம் இல்லை.

செஞ்சிக் கோட்டையை ஆண்ட ராஜா தேசிங்கும், அவரது தோழர் மஹபூப்கானும் கொண்டிருந்த நட்பின் சிறப்பு பிற்காலத்தே இந்நாடு கொண்டிருந்த மத நல்லிணக்கத்தை முன்னரே கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தது எனலாம்.

இத்திருமுனைப்பாடிநாட்டுக்கு 'நடுநாடு' என்னும் பெயர் உண்டு என்பதை முன்னர்க் கூறினோம். அதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. சமயப்பயிரை நடுகின்ற நாடு என்பதனால் இதனை நடுநாடு என்று குறித்ததாகக் கொள்ளலாம். சிவவழிபாட்டில் தலைசிறந்து விளங்கியவரும், தியான யோகத்தால் மூலக்கனலை எழுப்பி வீடுபேற்றை எய்தியவரும் ஆகிய கபிலர் பெருமான் நினைவாலயத்தைத் தாங்கிச் சமயத்துறையில் தனக்குள்ள அழுத்தத்தையும் ஆழத்தையும் சங்க காலத்தையே மெய்ப்பித்துக் கொண்ட நாடு இந்நடுநாடு.

பயிர் வளங்கொழிக்கும் இச்சித்திர மேழித் திருநாட்டில் உயிர்வளம் பெருக இறையுணர்வு சிறக்கச் சமயம் வளர்ந்த வரலாறு தனித்து ஆராயத்தக்கது.

சேக்கிழார் பெருமானின் சமுதாயச் சிந்தனைகள்



முதறிஞர் தி. நா. இராமச்சந்திரன்,
தஞ்சை.

சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் சைவர் பெற்ற ஒப்பற்ற பனுவல். இது ஒரு பென்னம்பெரிய மலைத்தொடர். இதன்பால் 72 மகோன்னத சிகரங்கள் உள. இச்சிகரங்கள் அனைத்தையும் ஏறிக் கண்டவர் எவருமிலர் என்றே எண்ணுகிறேன். சில சிகரங்களைச் சென்று அடைய முடியாத தன்மையைக் கண்டு இவையிற்றால் ஆய பயன் ஏதுமில்லை என்பாரும் உளர். ஆனால், அனைவருமே உறுதி கூறி அருளிய திப்பிய கிரந்தமே திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம். இத் திருத்தொண்டர் புராணத்தில் தெய்வச் சேக்கிழாரின் சமுதாயச் சிந்தனைகளை ஈண்டுக் காண்போம்.

தெய்வச் சேக்கிழாரின் சமூகச் சிந்தனைகளில் கல்வி சிறப்பிடம் பெறுகிறது. சமயம், ஆன்மிகம், லௌகிகம், ஆத்திகம், பண்பாடு, பொருளாதாரம் இவை ஒவ்வொன்றும் செழித்து ஓங்க ஒரு நாட்டுக்கு ஆதாரத் தேவையாக அமைவது கல்வியே. கல்வியில் பெரிய கம்பரும்,

"ஏகம் முதற் கல்வி முளைத்து எழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதற்றின் பணை போக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனிஒன்று பழுத்தது போலும் அன்றே"

என்றார். போரக ஒன்றைக் கம்பர் ஒரு பெரு மரமாக உருவகிக்கின்றார். அம்மரத்தின் முளையாக விளங்குவது அடிப்படைக் கல்வியே. அதிலிருந்துதான் இனப்பண்பாடு தொடங்குகிறது. முளைத்த அக்கல்வி நீண்டு நிமிர்ந்து வளர்கிறது. அங்ஙனம் வளர்ந்து ஓங்கிய கல்விக்குக் கேள்வியும் பயிற்சியும் இன்றி அமையாதனவாக அமைகின்றன. கேள்வி என்பது கற்ற கல்வியை அனுபவ ஞானத்தில் வளர்ப்பதாகும். கற்கும் நிலையில்,

"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
கால் கூறல்லது பற்றலன் ஆகும்;
அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்"

இது நன்னூல் சாற்றும் செய்தி. கற்பிக்க முற்படுவோர் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். எந்த ஆசானும் மாணாக்கனிடம் இல்லாத அறிவை அவனுக்குப் புகட்டல் முடியாது. இல்லது தோன்றாது என்பது சற்காரிய வாதம். அன்றாடக் காட்சியிலிருந்து ஓர் உண்மையை உணரத் தலைப்படுவோம். அழுக்கேறிய பாத்திரத்தைச் சுத்தம் செய்யப் புளியைப் பயன்படுத்துவர். பாத்திரமும் பளபளக்கும். இப்பளபளப்பு, பாத்திரத்துக்குப் புளி வழங்கிய கொடை அன்று. உலோகப் பாத்திரத்திற்கு இயற்கையாகவே பளபளப்பு உண்டு. அதனை மாசு மூடும். புளி அம்மாசினை அகற்றும். அவ்வளவுதான். மாணவனுக்கு அறிவு உண்டு. அது கருண்டு கிடக்கும். அச்சுருளை நீக்குவதே ஆசானின் பணி.

Educate என்ற சொல் educere என்ற வேரிலிருந்து பிறந்தது. அதன் பொருள் 'to draw out', 'to lead', 'to unfold' (வெளிக்கொணர்தல், வழிகாட்டல், மடல் அவிழ்த்தல்) என்பதாகும். இக்கருத்தை யான் அறிந்தவரையில் முதன்முதலாகக் கூறி அருளியவர் தெய்வச் சேக்கிழாரே. மருள் நீக்கியாரைப் பள்ளியில்

சேர்க்க உள்ளனர். இதை வருணிக்க வந்த சேக்கிழார் பெருமான், ".. .. .. புலன் கொளுவ மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்குவித்தார்" என்று அருளியுள்ளார். கல்வியாளர்கள் இதை நன்கு புரிந்து கொண்டு முறையாகச் செயல்பட வேண்டும்.

பிள்ளையை எந்த வயதில் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்ற வினாவிற்கு, சேக்கிழார் பெருமான் கூறும் விடை இதுவே:

சீராளத் தேவரை,

"வந்து வளர் மூவாண்டில் மயிர்வினை மங்கலம் செய்து
தந்தையாரும் பயந்த தாயாரும் தனிச் சிறுவர்
சிந்தை மலர் சொல் தெளிவில் செழும் கலைகள் பயிலத்தம்
பந்தம் அற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார்."

சைவ மக்கள் பெற வேண்டிய கல்வி, சைவம் ஏற்றுப் போற்றும் வகையில் அமைதல் வேண்டும். சர்வபரித் தியாகத்திற்குச் சமைவாக வாழ்வாரே சைவர். ஒழுக்கச் செல்வர்களே சைவர். நீதி வழுவா நெறிமுறையில் நின்று இயங்குவோரே சைவர். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் பக்குவம் பெற்றோரே சைவர்

ஒரு பற்றும் இல்லாதவர் அப்பர் அடிகள் என்று சிவனார் அறிவர். என்றாலும் உலகவர் இவ்வுண்மையை அறிதல் வேண்டும் என்பதற்காகவே அடிகள் உழவாரத் திருப்பணி புரியுமிடத்தில் செம்பொன் நவமணிகள் ஆகியவற்றை ஈசனார் குவித்து வைத்தார். அதுகண்டு அடிகள் என்ன செய்தார்?

"செம்பொன்னும் நவமணியும் சேண் விளங்கி ஆங்கு எவையும்
உம்பர் பிரான் திருமுன்றில் உருள் பருக்கையுடன் ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
வம்பலர் மென் பூங்கமல வாவியினிற் புக எறிந்தார்"

"புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்மன் திருப்புகலூர் நாயனார் திருவருளால்
வில்லோடு நுதல் மடவார் விசும்படு வந்து இழிந்தார்"

அப்போதும் அப்பர் அடிகள் 'சித்த நிலை திரியாது செய்பணியின் தலை நின்றார்,' ஏகனாகி இறைப்பணியே புரிந்தார்.

பெரிய புராணம் நமக்கு வழங்குகின்ற சமூகச் சிந்தனைகளில் தலையாய ஒன்று, 'சித்தநிலை திரியாது செய்பணியின் தலை நிற்றலே.' செயத்தக்க பணியும் சிவனார் உகப்பதாக, சிவனடியார் உகப்பதாக அமைதல் வேண்டும். சித்தநிலை திரியாது (absolutely undistracted) , 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற மகா விரதத்தை நாளும் நாளும் நிறைவேற்றி வருவோரே சைவர் ஆவர்.

சமூகம் எங்ஙனம் செயல்புரிய வேண்டும் என்பதைச் சாத்திரம் நமக்குச் சாற்றுகிறது. நாம் வினைபுரிந்தே தீரவேண்டும். எவ்வகை வினை புரிந்தால் நாம் உறுதி கூட முடியும்? வினைகளை, சாத்திரங்கள் இரண்டு வகைகளாக வகுக்கின்றன. அவை மெல்வினை, வல்வினை என்ப. இவை இரண்டுமே, சொல்லுமிடத்துச் சிவதன்மமே. இவ்விரண்டில் நம் மனம் பற்றிய ஒன்றில் சென்று சிவனார் திருவடிகளை அணைவதே வேத ஆகமக் குறிக்கோளாகும். சற்றே எளிதானதும், சாத்திர சம்மதமானதும் ஆகிய பணியில் தொடர்ந்து, படர்ந்து, நின்று இயங்குதல் மெல்வினை இயற்றுதல் எனப்படும்.

சிறுத்தொண்ட நாயனாரது செயல், சண்டீசப் பெருமானது செயல், அரிவாட்டாயரது செயல் மற்றும் இவர் போன்றோரது செயல் வல்வினை என்று போற்றப்படுகிறது. இவையிற்றை நாம் இயற்ற முடியாது. இயற்றவும் வேண்டாம். இயல்வது கரவாமல் பணிசெய்தலே சாலும்.

பெரிய புராணச் சமூகத்தை நாம் அறிந்து கொண்ட பிறகே, அப்புராணம் சாற்றும் சிந்தனைகள் பற்றி நம்மால் எண்ணமுடியும். அப்பழையகாலச் சமுதாயம் எப்படி விளங்கிற்று? அக்காலத்தில் நாட்டில் நடைபெற்றது முடியாட்சியே. இந்திய நாட்டிற்கே உரித்தான சாதிகள் சிறப்போடு விளங்கின. தெய்வச் சேக்கிழார், "வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர்

விருந்தின் ஆர்ப்பும் சாதிகள் நெறியில் தப்பா தனயரும் அனையில் தப்பார்" என்று அருளியுள்ளார்.

பலவகையான சாதியினரை ஒன்றுபடுத்த ஒரு மந்திரம் இருந்தது. அதன்பேர் பஞ்சாட்சரம், திருவைந்தெழுத்து.

"நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப் புள்ளுமாவும்

ஓதிய எழுத்தாம் அஞ்சம் உறுபிணி வரத்தாம் அஞ்சம்"

பெரிய புராணம் சாதிகளை ஒழிக்க வேண்டும் என்று கூறவில்லை. சாதிகளைக் கடக்க வேண்டும் என்பதே இப்புராணம் சாற்றும் மங்கலச் செய்தி. சாதிகள் உலகம் இயங்கப் பயன்படும். குலவிச்சை கல்லாமற் பாகம்படும். ஆனால் சாதி வெறி உலக அமைதியைக் குலைக்கும். சமய வெறிபோல் சாதி வெறியும் கடுந் தீங்கு இழைக்கும். மணிவாசகர் பெருமான் அருளுவதாவது:

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்

ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு

பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என் உரை மாய்த்துக்

கோதில் அமுது ஆனானை குலாவு தில்லை கண்டேனே."

சேக்கிழார் பெருமான் காட்டிய சமுதாயத்தில் சாதிகள் நெறி பிறழா. தீண்டத்தகாத சாதி என்று சொல்லப்பட்ட சாதியில் அவதரித்த நாயன்மார் மூவரை, தெய்வச் சேக்கிழார் ஐயர் என்றே கூறுகிறார். இம்மூவர், கண்ணப்பர், நந்தனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியோராவர்.

தீண்டத் தகாத சாதியில் அவதரித்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், தம் மனைவியோடு, சம்பந்தப் பெருமானைத் தரிசிக்க வருகிறார். செய்தி கேட்ட ஆளுடைய பிள்ளையார் அத் திவ்விய தம்பதியை எதிர்கொள்ள வருகிறார். தெய்வச் சேக்கிழார் இதை இப்படி அருளுகிறார்: "பெரும் பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ள" பாணர் தம்பதி "வரும் பான்மை தரு வாழ்வு வந்து எய்த மகிழ் சிறந்தார்." அங்ஙனம் மகிழும் பாணரைப் பார்த்து, பிள்ளையார், "ஐயர்! நீர் உள மகிழ இங்கு அணைந்த உறுதி உடையோம்" என்று கூறி அவரை வரவேற்கிறார். தம்முடன் திருப்பயணம் மேற்கொண்டு ஒழுகும் பாணர் தம்பதியருக்குத் தங்குதற்கு இடம் அமைத்துத் தரும்படி நீலநக்கரை நோக்கி, "நீலகண்டப் பெரும்பாணர்க்கு இன்று தங்க ஓர் இடம் கொடுத்து அருளுவீர்" என்று பணிக்கின்றார். நீலநக்கரும் அத்தம்பதிகட்குத் தம் பதியில் "நடு மனை வேதியின் பாங்கர்" இடம் உதவுகிறார். ஹோம குண்டத்தின் பக்கத்திலே சகோட யாழ்த் தலைவர் தம் துணைவியாரோடு துயில்கிறார். ஆங்கு வேதியில் அறாத செந்தீ வலம் சுழிவுற்று ஓங்கி, முன்னையில் ஒரு படித்தன்றியே ஒளிர, நீலநக்கர் இன் களி மகிழ்வு எய்துகிறார். உலகியலில் சாதிகள் உண்டு. ஆன்ம இயலில் அவை கடக்கப்படும்.

பலப்பல வகையான மக்களைக் கொண்டது ஒரு சமுதாயம். ஒவ்வொரு வகையினரும் ஒவ்வொரு வகையில் அவ்வச் சமுதாயத்தின் வேர்கள் ஆவர். பெரிய புராணச் சமூகம் குயவர் வாழ்வு பற்றியும், நுளையர்களைப் பற்றியும், அந்தணர்களைப் பற்றியும், வணிகர்களைப் பற்றியும் மிக அழகாகப் பேசும். மேலும், வேளாண்குடி மக்கள், ஆநிரை காத்து ஓம்பும் கோவலர், ஆதிசைவர், சிற்றரசர், பேரரசர், சேனாதிபதிகள், சான்றார், சரியை - கிரியை - யோக - ஞான மார்க்கங்களில் ஈடுபட்டிருப்போர், வேடர், செக்கார், புலவர், புரவலர், அமைச்சர், புறச் சமயிகள், மாமாத்திரர், வேள்வி புரிவோர், கோயிற் பணியாளர்கள் - இப்படிப் பலதிறப்பட்டார் சரிதைகளும் பெரிய புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன. ஏகாலியர், பாணர், பாடினியர், பஞ்சமர், ஆதர் முதலியோர் பற்றியும் பெரிய புராணம் பரக்கப் பேசும். எச்சாதியிலும், எக்குலத்திலும் அடியார் அவதரிக்கலாம். இதை வலியுறுத்துவது பெரிய புராணமே.

காமதகனம் நடைபெற்ற கயிலையில் பன்னூறு ஆண்டுகள் தொண்டு புரிந்து வந்த ஆலால சுந்தரருக்குக் காம எழுச்சி உண்டாகுமா? என்றாலும் அப்படி ஒரு நிகழ்ச்சி கண் இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து விட்டது. எப்படி? ஏன்? தெய்வச் சேக்கிழார் அருளுகிறார்:

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத், தீதிலா திருத்தொண்டத் தொகைதரப் போதுவார், அனிந்திதை, கமலினி என்ற உமை சேடியர்மேல் மனம் போக்கினார்." இது சிவலீலை. இவ்லீலையே திருத்தொண்டத் தொகை, அந்தாதி, பெரிய புராணம்

ஆகியவை அவதாரம் செய்யக் காரணமாயிற்று. தமக்கு உரிய பெண்டிருடனே சுந்தரர் வாழ்ந்து இல்லறம் நடத்தினார். பிற பெண்டிரை அவர் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. செங்கோல் அரசன் அருள் உரிமைச் சேனாதிபதியான கோட்புலியார், சுந்தரரிடம் "அடியேன் பெற்ற மக்கள் இவர்; அடிமையாகக் கொண்டருளி கடிசேர் மலர்த்தாள் தொழுதுய்யக் கருணை அளிக்கவேண்டும்" என்று வேண்டினார். அதற்கு நம்பி ஆரூரர், "தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தூய மக்கள்" என்று சாற்றியருளினார். மேலும் தம் பெயரைச் சிங்கடியப்பன் என்றும், வனப்பகை அப்பன் என்றும் தம் பாடல்களில் பதிவு செய்தார்.

சம்பந்தப் பெருமானால் உயிர்த்து எழுந்த பூம்பாவையைச் சம்பந்தர் மணத்தல் வேண்டும் என்று சிவநேசன் வேண்ட, "நீர் பெற்ற பெண் விடத்தினால் மாண்டு போனாள். என்னால் உயிர்ப்பிக்கப்பட்ட இப்பெண் என் மகள் ஆவாள்" என்று ஆளுடைய பிள்ளையார் அருளினார்.

மாது சொன்ன சூளால் திருநீலகண்டக்குயவனார் மட்டுமா இளமையைத் துறந்தார்? அவர் மனைவியாரின் துறவு என்ன சாதாரணமானதா? இத்தம்பதியைக் கண்டு காமதகனம் செய்த கண்ணுதற் கடவுளே ஆச்சரியம் கொண்டார் என்று சொல்லத் தோன்றுகிறது. அவர்களைப் பார்த்து சிவபெருமான், "வென்ற ஐம்புலனால் மிக்கீர்" என்றல்லவா விளித்து அருளினார்! தவற்றைக் கடிந்து ஒழுக்கத்தில் நிலை நின்ற இக்குயவர் சிவயோகியாரைவிடச் சாலச் சிறந்தவர் என்றல்லவா தில்லைவாழ் அந்தணர் கருதினர்! குயவனார் மீது வழக்கிட்டு, தில்லைவாழ் அந்தணர்கள் வந்திருந்த திருந்தவையில் வாதிட்ட சிவயோகியின் சொற்களைச் செவிமடுத்த அந்தணர்கள், சிவயோகியின் வாக்கை அப்படியே நம்பிவிடாமல், குயவனாரைப் பார்த்து,

"இப்புதியவர் ஏதோ சொல்லுகிறார். நிறையுடைய வேட்கோவரே, நடந்தது என்ன என்று நீர் மொழியும்" என்றல்லவா கூறினர்.

சிவஞானபோதம் கூறுவது என்ன? "மால் அற, நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே!" என்பதுதானே. உயிர் போகும் நிலையிலும் 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று நிறுவினாரே மெய்ப்பொருள் நாயனார்.

பெரியபுராணம் என்பது செயலாக்கம் பெற்ற சைவ சித்தாந்தமே. சித்தாந்த வாழ்வை வாழ்ந்து காட்டியவர் நாயன்மார்.

அரன் அடியார் அரனினும் மேம்பட்டவர் என்று சித்தாந்தம் செய்தவர் விறன்மிண்டர்.

குடும்பத்தோடு துலை புகுந்து கொடுத்த வாக்கைக் காப்பாற்றியவர் அமர்நீதியார்.

அடியார் உறும் தீமையைக் களைவதே தமது கடன் என்று காட்டியவர், பரசுபாணியராக விளங்கிய எறிபத்தர்.

திருநீறே அனைத்தும்; எந்நிலையிலும் அது தொழற்பாலது என்று நிறுவித் தம் உயிரைத் தியாகம் செய்தவர் ஏனாதி நாதர்.

முக்கண்ணனுக்கே தம் ஒரு கண்ணை ஈந்தவர் கண்ணப்பர். இறைவனை இறைவன் தந்த கண் கொண்டு காண்டல் வேண்டும் என்பதே சாத்திரத்தின் சாரமான செய்தி. அடடா, பக்தனையும் பக்தன் தந்த கண்கொண்டு காண்டலே நேரிது என்றல்லவா கண்ணுதல் காட்டியருளினான். இதுவன்றோ காணும் உபகாரமும், காட்டும் உபகாரமும் ஆகும்.

தாமும் தம் குடும்பத்தாரும் தொடர்ந்து பட்டினியால் கடும் வேதனை உற்றிருந்த வேளையிலும் தூய கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்தினார் குங்கிலியக் கலய நாயனார்.

சவம் தாங்கும் மயானத்துச் சாம்பர் பூசும் சம்புவிற்குத் தம் மகளின் கூந்தலை அடியோடு அரிந்து, அம் மகளின் திருமண நாள் அன்று தந்தவர் மானக் கஞ்சாறர்.

இன்று சிவனாருக்கு அமுது படைக்க முடியாத நிலை வந்ததே என்று, அரிவாளை ஊட்டியில் பூட்டி அறுத்தெறியத் தலைப்பட்டாரே அரிவாட்டாயர்.

ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் மணக்கும் மதுரையில் அவதரித்த மூர்த்தி நாயனார், தம்முடைய சந்தனச் சாந்து கைங்கரியத்திற்கு முட்டுப்பாடு வந்தபோது, 'தேய்க்கும் கை முட்டாது' என்று கூறி, வட்டம் திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார். கட்டும் புறந்தோல் நரம்பு என்பு கரைந்து தேய, அது கண்டு பொறுக்காத சொக்கேசன் அவரை அக்கணமே குணப்படுத்தி, அவருடைய கை, யாண்டும் எஞ்ஞான்றும் சந்தன மணம் வீசும்படி அருளினார்.

சுருங்கக் கூறின், நாயனார் என்பவர் சிவநெறிப்பட்டர்ந்து தம் கொள்கையில் ஊன்றி நிற்பவர் ஆவார். தம் பணிக்கு முட்டுப்பாடு வரின், உயிர் தரியார். இதுவே நாயனாருக்கும் நமக்கும் உள்ள நெடுவாசி. கொள்கை என்று நாம் எதையும் கொள்ளமாட்டோம். அப்படியே ஒன்றைக் கொண்டாலும் சாத்தியக் குறைவு நேருங்கால் நெகிழவிட்டு விடுவோம்.

சேக்கிழார் பெருமான் காட்டும் சமுதாயத்தில் எல்லோரும் சிவநெறியில் நிலைத்து நின்றனர் என்று கூறமுடியாது. அனைவருக்கும் இந்நிலை சாத்திய மானது அன்று என்றாலும் அசாத்தியம் என்பதையும் சாதித்துக் காட்டச் சிலர் இருந்தனர். இன்னமும் அவர் உளர்; என்றும் அப்படிப்பட்ட மகோன்னத மகா புருடர்கள் உளராவர். இவர்களே நாயன்மார்.

பெரியபுராணம் காட்டும் நல்லறம் இல்லறமே. இவ்வில்லறமும் எத்திறத்தது? தெரிந்து கொள்ள, பெரிய புராணத்தை நாட வேண்டும். பத்தினி என்பவள் குடும்ப விருட்சத்தின் வேர். வேர் இல்லாமல் மரம் இல்லை. மரத்தின் உயிராக இருப்பது வேர். இந்த வேரின் இருப்பு வெளியில் தெரியாது. கட்டட மாட்சியைக் கண்டு வியப்போர் அஸ்திவாரத்தைக் காணமாட்டார்கள். ஆனால் அஸ்திவாரம் இல்லையேல் கட்டடம் இல்லை.

பெண்களாலே சமூகம் செழிக்கும். மானக்கஞ்சாறர் புதல்வி - ஏயர்கோன் கலிக்காம நாயனார் மனைவி - இவரது பெயர் என்ன? நாம் அறியேம். ஆனால் இவரது சாதனை ஒரு நூறு நாயன்மாரின் சாதனைக்குச் சமமானது.

கணவர் தற்கொலை செய்து கொண்டுவிட்ட நிலையிலும், இல்லத்திற்கு எழுந்தருளிய சிவனடியாரை முறையாக வரவேற்றுப் போற்றியவர் ஒரு பெண்.

'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை' என்பதை நிறுவியவர் இளையான்குடி மாற நாயனாரின் தர்மபத்தினி அல்லரோ?

தான் பசித்திருந்தாலும், தன் கணவரும், குழந்தைகளும், சுற்றத்தாரும் பசித்திருத்தல் ஆகாது என்று தாலியைக் கழற்றித் தந்தவர் ஒரு பெண்.

மகன் இறந்துவிட்ட நிலையிலும் வந்த அடியாருக்கு உணவு படைத்தல் உடனே நிகழ வேண்டும் என்று செயல்பட்டவர் ஒரு பெண்.

பெரியபுராணம் உத்தமிகளைப் போற்றும் புராணம். பெரியபுராண சமூகத் தீரர்கள் அதீதத்தில் ஆழ்ந்து பொலிந்தவர்கள்.

பெரியபுராணம் அதீதமான பக்திமான்களைப் பரவ வந்த பார காவியம். இப் பெருமக்களாலே சமூகம் பெருமை உறும். தாம் செய்யும் தொண்டினைப் பிரகடனப்படுத்த மாட்டார் அடியார். அன்னாருக்கு உள்ள பக்குவம் பற்றிப் பிறர் அறியார். ஆகவே உணர்த்த உணரும் ஆன்மாக்களுக்கு உண்மையை உணர்த்தவே உமாமகேசன் உவப்புடன் எழுந்தருளினார்.

தருமம் தன் வழிச் செல்கை கடனென்பதை பெரியபுராணச் சமுதாயம் நிறுவியுள்ளது. சேக்கிழார் பெருமானும் அதனை விரித்துரைத்துள்ளார். "இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர் மேல் புனையும் உரை நம்மளவில் புகலலாந் தகைமையதோ?" என்று வியந்து சேக்கிழார் பெருமான் அச்சமுதாயத்தைப் பாடுகிறார்.

முருகன்: தமிழ் அடையாளத்தின் படிமலர்ச்சி

முனைவர். அ. பாண்டுரங்கன்,
புதுச்சேரி.

'சமயம்' என்பது புனிதமான ஒன்றினைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்பர் எமிலி தர்கைம். தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில், பழங்காலம் தொடங்கி, இன்றுவரை பல வழிபாடுகள் நடைமுறையில் உள்ளன. ஆயினும், இவ்வழிபாடுகளில் முருக வழிபாடே தமிழ் மக்களின் தனிவழிபாடாகப் படிமலர்ச்சி பெற்றுள்ளது. முருகன் தமிழ்க் கடவுளாக மட்டுமல்லாமல், தமிழ் இனத்தின் – தமிழ் மொழியின் – அடையாளமாகவும் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளான். முருக வழிபாட்டின் படிமலர்ச்சியை வரலாற்றுப் பின்புலத்தில் சுருக்கமாகத் தொட்டுக்காட்ட இக்கட்டுரை முயல்கின்றது.

1. முருக வழிபாடு தமிழ்நாட்டில் பெருங்கற்படைக் காலப் (Megalithic) பண்பாட்டிலேயே தொடங்கிவிட்டது என்பதனை ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகளிலிருந்து நாம் அறிகின்றோம். இத்தாழிகளில் முருகனுடைய போர்க்கருவியாகிய வேலோடு, காவடி எடுப்போர் இன்றும் பயன்படுத்தும் வாய்க்கூடுகளும் சேவல் உருவங்களும் கிடைத்துள்ளன. வேல் இரும்பால் செய்யப்பட்டிருப்பதை நோக்கும்போது, இரும்பின் பயன்பாட்டை–அதனைக் கருவியாக ஆக்கிக் கொள்ளும் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொண்ட காலத்திலிருந்து–முருக வழிபாடு தமிழ்நாட்டில் தொடங்கி விட்டதெனக் கருதலாம். இப்பண்பாட்டின் காலம் கி.மு. ஆயிரம் என்பர் வரலாற்றறிஞர்.

பழந்தமிழ் இலக்கியங்களான தொகை நூல்களில்–குறிப்பாக அகத்திணை நூல்களில்–முருகன் மலைவாழ் மக்களின் தெய்வமாகச் சித்திரிக்கப் பெறுகின்றான். அணங்கு, சூர் போன்ற தெய்வங்களைப் போன்று, முருகனும் திருமணம் ஆகாத பெண்களைத் தீண்டி வருத்தும் தெய்வமாகக் குறிக்கப் பெறுகின்றான். முருகனால் தீண்டப்பட்ட பெண்களின் பெற்றோர், முருகனின் பூசாரியான வேலனை அழைத்து முருகனைச் சாந்திசெய்யும் விழா எடுப்பர். இவ்விழா வெறியாடல் எனப்படுகின்றது. வெறியாடும்போது முருகனின் பூசாரியான வேலன், ஆவேசமுற்று வேலைக் கையில் தாங்கி ஆடுவான்; முருகனுக்கு ஆட்டினை அறுத்துக் குருதிப்பலி கொடுக்கப்படும்; வேலன், இறுதியில் முருகனால் தீண்டப்பட்ட பெண்ணின் நெற்றியில் முருகனுக்குப் பலியாகக் கொடுக்கப்பட்ட ஆட்டின் குருதியைத் தொட்டுத் திலகம் வைப்பான்; பலியாகப் படைக்கப்பட்ட பூக்களை அப்பெண்கள் கூந்தலில் அணிந்துகொள்ளக் கொடுப்பான்; குறி சொல்வான்.

முருகனை ஆண்பூசாரி வழிபாடு செய்தது போன்றே, பெண் பூசாரியும் வழிபாடு செய்தாள். திருமுருகாற்றுப் படையில் குறமகளான பெண்பூசாரி நடத்தும் பூசை அச்சம் தருவதாக வருணிக்கப்பட்டுள்ளது. முருகபூசையான வெறியாடலை நிகழ்த்தும் போது, வெறியாடுங்களம் புதுமணல் நிரப்பப்பட்டுச் சந்தனம் தெளிக்கப்பட்டு மலர் மாலைகளால் அலங்கரிக்கப் படுகின்றது. முருகனுடைய சேவல்கொடி வெறிக் களத்தில் ஏற்றப்பட்டது; பலவகையான இசைக் கருவிகள் ஒலிக்கப்பட்டன. பூசாரி மணிகளை ஆட்டி ஒலி எழுப்புகின்றான்; அவன் மந்திரங்களை முணுமுணுக்கின்றான்; கைவிரல்களால் முத்திரை காட்டுகின்றான். ஆண்பூசாரியான வேலனும்,

பெண்பூசாரியான குறமகளும் தங்கள் கைகளில் செந்நிறநூலால் காப்புக் கட்டிக்கொள்கின்றனர்; ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு ஆடைகளை இடுப்பின்மேல் உடுத்திக் கொள்கின்றனர். இவ்வழிபாட்டின் தொடர்ச்சியை இன்றும் நாம் தமிழ்நாட்டில் சில இடங்களில் காணமுடிகின்றது.

அகத்திணை நூல்கள் களவுத் திருமண ஒழுக்கத்தில் காதலியைத் தேடிவரும் காதலனை முருகனாக வருணிக்கின்றன. அவன் முருகனைப் போன்று வேலைக் கையில் தாங்கி வருகின்றான்; அவன் தோள்களில் மணம் மிக்க மாலைகள் புரள்கின்றன; இளமையும், அழகும் வீரமும் உடைய அத் தலைவனை, முருகனே என எண்ணித் தாய்மார்களில் சிலர் தலைவியை நாடிவந்த அவனை வழிபடவும் செய்கின்றனர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் முருகனுக்கு மனைவியாக வள்ளியைச் சித்திரிக்கின்றன. வள்ளி மலைவாழ் மக்களான குறவர் குடியில் பிறந்தவள்; முருகன் அவளைக் காதலிக்கின்றான்; வள்ளியின் பெற்றோர்களுக்குத் தெரியாமல் முருகன்–வள்ளி களவுத் திருமணம் நடக்கின்றது; பழந்தமிழ்க் களவுத் திருமண மரபுகளின்படி வள்ளி, முருகனுடன் உடன்போக்கில் சென்று, அவனைத் திருமணம் செய்துகொள்கின்றாள். அகத்திணை நூல்கள் அளிக்கும் இத்தகைய குறிப்புகளிலிருந்து, முருகன் குறிஞ்சி நில மக்களின்– மலைவாழ் மக்களின்–குலதெய்வமென அறிகின்றோம். தொல்காப்பியரும் முருகனை மலைவாழ் மக்களின் தெய்வமாகப் பதிவு செய்துள்ளார். "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல், பொருள், அகத்.1956 : 5) என்பது தொல்காப்பியரின் கூற்று.

1.1 தமிழகத்தில் இனக்குழுச் சமுதாய அமைப்பு உடைந்து, அரசு உருவாகத் தொடங்கியது. இனக்குழுக்களை வென்று அடக்கி வேந்தர்களும் மன்னர்களும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினர். வேட்டைச் சமூகமாக வாழ்ந்த இனக்குழுக்களை வெற்றி கொள்ளுவதற்குப் புதிய ஆயுதம் – புதிய போர்க்கருவி – தேவைப்பட்டது. இரும்பைக் காய்ச்சி வேல்வடிக்கும் தொழில் நுட்பம் பரவிய நிலையில் வேல் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. இரும்புக் கருவியைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்ட இரும்பு நாகரிகக் குழுக்கள் வில்லையும் அம்பையும் ஏந்திப் போர் செய்த இனக்குழு மக்களை எளிதில் வெல்ல முடிந்தது. மலைவாழ் மக்களின் குலதெய்வமான முருகன் அவர்களைப் போன்றே வில்லும் அம்பும் தாங்கிய தெய்வமாக இருந்தான். பின்னர் அவன் கையில் வில்லுக்கும் அம்புக்கும் பதிலாக இரும்பால் செய்யப்பட்ட வேல் கொடுக்கப்பட்டது. நகர நாகரிகம் பரவாத இடங்கள் சிலவற்றில் உள்ள முருகன் கோயில்களில் இன்றும் முருகன் வில்லும் அம்பும் ஏந்தியவனாகக் காட்சியளிக்கின்றான். வேலைத் தன் ஆயுதமாகக் கொண்ட முருகன் இப்போது ஆள்வோரின் தெய்வம் ஆகின்றான். முருகனின் சினமும் சீற்றமும் தோல்வியே அறியாத அவன் வெற்றியும் அவனை அரசர்களின் தெய்வமாக்குகின்றன. முருகவழிபாடு இவ்வாறு வளர்ந்த நிலையில் முருகனுக்குக் கோயில் கட்டப்படுகின்றது. முருகன் கோயில் புனிதமானதாகக் கருதப்படுகின்றது. பெண்களும் முருகன் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்கின்றனர்; ஆனால், தீட்டான பெண்கள் மட்டும் கோவிலுக்குள் செல்வதிலிருந்து விலக்கப்படுகின்றனர்.

சமண பௌத்தத் துறவிகள் தமிழகத்தில் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தில் குடியேறியதைப் போன்று, வேதங்களைப் போற்றிய ஆரியர்களும் அதே காலத்தில் தமிழகத்தில் குடியேறினர். வைதிக சமயத்தினர் தமிழக இனக்குழு மக்களிடம் நிலவிய பழமையான கொற்றவை சேயோன் மாயோன் வழிபாடுகளைத் தமது புராணக்கதைகள் மூலம் வைதிக சமயத் தெய்வங்களாகத் தகவமைத்துக் கொண்டனர். இதன் விளைவாக, வேதங்களில் பெருமையாகக் குறிப்பிடப்படாத விஷ்ணுவும் உருத்திரனும் ஸ்கந்தனும் பார்வதியும் முறையே தமிழ்நாட்டின் தொன்மையான தெய்வங்களான சிவபெருமான் திருமால் முருகன் கொற்றவை ஆகியோருடைய வழிபாடுகளுடன் இணைக்கப் பெற்றனர். ஸ்கந்த புராணம் கூறும் ஸ்கந்த குமரன் தொடர்பான வடமொழிக் கதைகள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக முருகன் பௌராணிக சமயத்தினரின் ஸ்கந்தனோடும் கார்த்தி கேயனோடும் சுப்ரமணியனோடும் இணைக்கப் பெற்றான். பிற்சங்கத் தொகை நூலான பரிபாடலில் இக்கலவையை நாம் காணமுடிகின்றது.

2. பரிபாடலில் இடம்பெற்றுள்ள செவ்வேள் பாடல்களில், முருகன் சிவபெருமானின் மகனாகப் போற்றப் பெறுகின்றான். சிவபெருமானின் விந்தணுக்களிலிருந்து தோன்றிய நெருப்பைத் தாங்க இயலாத வாயு அதனைச்

சரவணப் பொய்கையில் இட, அவை ஆறு குழந்தைகளாக உருவெடுத்து வளர்கின்றன. கார்த்திகைப் பெண்கள் இக்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்கின்றனர். சரவணப் பொய்கையில் வளரும் குழந்தைகளைப் பார்க்க வந்த பார்வதி ஆறு குழந்தைகளையும் வாரியெடுத்து அணைத்ததும் ஆறு குழந்தைகளும் ஒரு குழந்தையாகி, ஆறு முகங்களுடனும் பன்னிரண்டு கைகளுடனும் கூடிய ஆறுமுகனாக உருமாறுகின்றது.

தாய்வழிச் சமுதாயத்தில் கொற்றவையின் மகனாக இருந்த முருகன், புதிதாக அறிமுகப்படுத்தபட்ட தந்தைவழிச் சமுதாயத்தில் சிவபெருமானின் மகனாக படிமலர்ச்சி பெறுகின்றான். வைதிக சமயத் தாக்கத்தால் முருகன் தேவர்களின் சேனாதிபதி ஆகின்றான். தேவர்கள் அசுரர்களோடு நடத்திய போர்களில் இந்திரனின் ஆற்றல் குறைந்து விடுகின்றது. ததீசி முனிவரின் முதுகெலும்பால் செய்யப்பட்ட வச்சிராயுதம்–குலிசப்படை–இப்போது பயனற்று விட்டது. எலும்புக் கருவிகளைப் பயன்படுத்திய கற்காலம் அழிந்து இரும்புக் காலம் தோன்றியபோது, இந்திரன் தன் ஆற்றலை இழந்துவிட்டதில் வியப்பில்லை. சரவணப் பொய்கைக்கு வந்து தன்னோடு போரிட்ட இந்திரனைக் குழந்தை முருகன் எளிதில் வெல்கின்றான். இந்திரன் அக்னி முதலிய தேவர்கள் முருகனுக்குப் போர்க்கருவிகள் கொடுத்து அவனைத் தேவர்களின்படைத்தலைவனாக–தேவசேனாதிபதியாக–ஆக்குகின்றனர்.

தேவர்களின் படைக்குத் தலைமை ஏற்றுத் தனக்கு வெற்றி தேடிக் கொடுத்த முருகனுக்கு உலக வழக்கப்படி, தன்மகள் தெய்வயானையை மனைவியாக்கி இந்திரன் மகிழ்கின்றான். முருகன்–தெய்வயானை திருமணம் ஆரியர்களின் திருமண மரபுகளின்படி வேத மந்திர முழக்கங்களோடு வேள்வித்தீ எழுப்பித் தீவலம் செய்யும் திருமணமாகப் புராணங்களில் வருணிக்கப்பட்டுள்ளது. இத்திருமணம் வைதிக சமயத்தின் அங்கீகாரம் பெற்ற திருமணமாகையால், தெய்வயானையே முருகனின் முதல் மனைவியாகக் காட்டப் பெறுகின்றாள். தமிழர்களின் களவு மணமுறைப்படி முருகன் மணந்து கொண்ட வள்ளி பின்னுக்குத் தள்ளப்பட்டு, முருகனின் இரண்டாவது மனைவியாக ஆக்கப் பெறுகின்றாள்.

2.1. பரிபாடல்களில் இடம்பெற்றுள்ள செவ்வேள் பாடல்கள், முருக வழிபாடு வைதிக சமயத்தின் தாக்கத்தால் (Impact) பெற்ற புதுக்கோலத்தைப் புனைந்து காட்டியிருப்பினும், வைதிகப் பண்பாட்டின் எதிர்ப்புக் குரலும் அப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பாடல்கள்தாம் முதன்முதலில் முருக வழிபாட்டின் தமிழ் அடையாளத்தைத் தேடும் பாடல்களாக உள்ளன. சங்க காலத்தில் நடைபெற்ற வெறியாடல் 'பேஎ விழவு' என்று ஒரு பரிபாடலில் இழித்துரைக்கப்படுகின்றது. அப்போது பாடப்படும் பாடல் "பொய்யும் அல்ல; மெய்யும் அல்ல" எனப்படுகிறது (பரிபாடல், 1980, 5 : 14–16). வைதிகர்களின் பார்வையில் வெறியாடல் சடங்குகள் மதிப்பிழந்து விட்டதனையே இப்பாடல் காட்டுகின்றது.

இத்தகையதொரு சூழ்நிலையில், பரிபாடலிலுள்ள மற்றொரு பாடல் தமிழர்களின் களவுத் திருமணத்தைத் தூக்கி நிறுத்த முயல்கின்றது. வள்ளியின் காதல் மணம் சிறந்ததா, தெய்வயானையின் கற்பு மணம் சிறந்ததா என்னும் வினாக்கள் மறைமுகமாக எழுப்பப்பட்டு விட்டன. வைதிகர்களான அந்தணர்கள் கற்பு மணமே சிறந்தது என்று வாதிட, அவர்களுக்கு விரிவான முறையில் பதில் அளிக்கும் முகமாக இப்பரிபாடல் (9) அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடிய குன்றம் பூதனார் என்னும் புலவர் அந்தணர்களை நோக்கி "காமத்தில் சிறந்தது காதல் காமமோ?; தமிழை ஆராயாதவர்களே களவுத் திருமணத்தைப் பழித்துரைப்பர்" (மேலது, 9:12–26) என்கின்றார். இப்பாடல் பகுதிக்கு உரை வரைந்த பரிமேலழகர் "களவிற் புணர்ச்சியுடைமையான் வள்ளி சிறந்தவாறும் அத்தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார்" (மேலது : உரை) என்பர். முருகனைத் தமிழோடு இணைத்துக் காணும் முதல் முயற்சியாகப் பரிபாடலில் இடம்பெற்றுள்ள இப்பாடல் திகழ்கின்றது எனலாம்.

2.2 முருகப்பெருமானைத் தமிழோடு அடையாளப்--படுத்தும் மற்றொரு முயற்சி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றைப் புராண மரபில் எடுத்துரைக்கும் இறையனார் களவியலுரை பாண்டியர்களின் ஆதரவோடு கூட்டப்பட்ட மூன்று தமிழ்ச் சங்கங்களின், தலைச்சங்கத்தில் சிவபெருமானோடு குன்றம் எறிந்த குமரவேளாகிய முருகனும் தமிழாராய்ந்தான் என்று கூறுகின்றது. தமிழ்ப் புலவர்கள் இறையனார் இயற்றிய களவியல் இலக்கண நூலுக்குத் தத்தம் நோக்கில் உரை எழுதிய போது, அவ்வுரைகளில் எது சிறந்த உரை என்று

தேர்ந்தெடுப்பதற்காக மதுரை ஆலவாய் அழல் நிறக்கடவுள் (சிவபெருமான்) உருத்திரசன்மனை அடையாளம் காட்டினார். சங்கப் புலவர்கள் ஐந்து வயதுச் சிறுவனும் ஊமையனுமாகிய உருத்திரசன்மனிடத்தில் தங்கள் உரையை வெளிப்படுத்துவதற்குத் தயங்கினர். சிவபெருமான் அவர்களிடம் அசரீரியாக, "மதுரை உப்பூரிகுடிகிழார் மகனான ஐந்து வயதுச் சிறுவன் உருத்திரசன்மனை அழைத்துச் சென்று ஓர் ஆசனத்தில் அமர்த்தி நீங்கள் கீழே இருந்து ஒவ்வொருவராக உங்கள் உரையை எடுத்துரையுங்கள்; உண்மையான உரையை எடுத்துரையுங்கள்; உண்மையான உரையைக் கேட்டால், அவன் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்திருப்பான். உருத்திரசன்மன் குமாரக் கடவுளின் அவதாரம்; ஒரு சாபத்தால் அவன் ஊமைப்பிள்ளையாகப் பிறந்தான்" என்று பணித்ததாகக் களவியலுரை கூறுகின்றது (இறையனார் களவியலுரை, 1976 ; 8). தமிழுக்கு–குறிப்பாக, அகத்தமிழ் இக்கணத்துக்கு–அடையாளமாகத் திகழ்பவன் முருகனே என்பதனை இவ்வுரை வலியுறுத்துகின்றது.

3. சைவ பக்தி இயக்கம் முருக வழிபாட்டைச் சிவவழிபாட்டோடு ஐக்கியப்படுத்த முயன்றுள்ளது. நாயன்மார்கள் முருகனைச் சிவபெருமான்–பார்வதியின் மகனாக ஏற்றுப் போற்றிப் பாடுகின்றனர். ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள சேந்தனார் பாடிய திருவிடைக்கழி முருகன்மேல் பாடிய அந்தாதி ஒன்று மட்டுமே திருமுறையில் முருகனைப் பற்றிய தனிநூலாக–அமைந்துள்ளது. இப்பதிகம் அகப்பொருள் மரபில் அமைந்துள்ளது. சேந்தனார் இப்பதிகத்தில் முருகனைச் சுப்ரமணியனாகவும் கங்கையின் மகனாகவும் வருணிக்கிறார். முருகன் திருமாலின் மருகன் என்னும் கருத்தும் இப்பதிகத்தில் சேந்தனாரால் முன் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் முருகனைச் சிவபெருமானாக–"கருண்ட பூங்குஞ்சிப் பிறைச்சடை முக்கண்ணுடைக் கோமளக் கொழுந்து" ஆகக் காண்கின்றார் (ஒன்பதாம் திருமுறை, 1969 : 53). சிவபெருமானுக்காகப் பெருங்கோயில்களைக் கட்டிய சோழப் பேரரசர்கள் முருகனுக்கெனத் தனிக் கோயில்கள் எடுத்ததாகத் தெரியவில்லை. முருக வழிபாடு ஒரு தனிவழிபாடாகச் சோழர் காலம்வரை உருவாகவில்லை என்று எண்ண வேண்டியுள்ளது.

3.1 அகத்தியரைத் தமிழோடு தொடர்புபடுத்தும் குறிப்புகள் பாண்டியர் செப்பேடுகளில் இடம்பெற்றுள்ளன. சிவபெருமான் திருமணத்தின்போது தென்னாட்டுக்கு அனுப்பப்பட்ட அகத்தியருக்குச் சிவபெருமானே தமிழ் கற்பித்தார் என்னும் புராணக்கதை உருவாகியது. திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களை வாதில் வென்று அழித்துச் சைவத்தைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தினார்; அவர் உமையின் ஞானப்பாலைப் பருகியவர். காலப்போக்கில், திருஞானசம்பந்தரை முருகனின் அவதாரமாகக் கருதும் போக்கு வளர்ச்சி பெற்றது. தக்கயாகப் பரணி, திருஞான சம்பந்தரை முருகனாகவே அடையாளப்படுத்துகின்றது (1960 : 290). முருகனையும் தமிழையும் அடையாளப்படுத்தும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

4. தமிழ் இலக்கிய வரலாற்றில் நக்கீரர் முருக பக்தராகவே காட்சியளிக்கின்றார். இறையனார் பாடிய "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடலுக்குப் (குறுந்தொகை, 2000 : 2) பாண்டியன் பரிசளிக்க முடிவு செய்தபோது, அப்பாடலில் இடம்பெற்றுள்ள, 'பெண்களின் கூந்தலுக்கு மணம் உண்டு' என்னும் கருத்து இயற்கைக்கு மாறுபட்டது என்று கூறி அப்பாடலின் கருத்தை ஏற்க மறுத்து எதிர்த்து வாதிட்ட நக்கீரர், சிவபெருமானால் சபிக்கப்பட்டுப் பொற்றாமரைக் குளத்தில் தள்ளப்பட்டதாகக் கூறப்படும் திருவிளையாடல் புராணக்கதை நன்கு சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். முருகன் சைவத்திற்குள்ளிலிருந்து வெளியேறித் தன்னைத் தனிப்பெருந்தெய்வமாகத் தகவமைத்துக் கொள்ளும் முயற்சியையே இது காட்டுகின்றது எனலாம். முருக பக்தனான நக்கீரரையும் அவரோடு குகையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த புலவர்களையும் திருமுருகாற்றுப்படையை நக்கீரர் பாடியதும் முருகன் விடுவித்ததாகக் கூறப்படும் புராணக்கதையும் எளிதில் ஒதுக்கப்படக் கூடியது அன்று. நக்கீரரின் தீவிரமான தமிழ்ப் பற்றை, மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தமிழைப் பழித்த குயக்கொண்டான் என்னும் வடமொழிஆர்வலனைச் சாகவும் பிழைக்கவும் வைத்த தொன்மங்கள் விளக்குகின்றன. நக்கீரரின் அம்மந்திரப் பாடல்கள், "தமிழ் வடமொழியினும் மேம்பட்டது; தனித்தன்மை வாய்ந்தது" என்பதனை விளக்க எழுந்தன ஆகலாம்.

4.1 பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருமுருகாற்றுப்படையே முதன் முதலில் முருகனை முழுமுதல் கடவுளாக–புலன்கடந்த பொருளாகச்

(Transcendent) சித்திரிக்கின்றது. இது, பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள நெடுநல்வாடையைப் பாடிய சங்கப் புலவர் நக்கீரரால் பாடப்பட்டதன்று என்பதே ஆய் வாளர்கள் பலரின் கருத்து. நூறு அடிகளுக்கு மேற்பட்ட ஒன்பது நீண்ட பழம் பாடல்களை எட்டுத்தொகை நூல்கள் போல ஒரு தொகை நூலாகத் தொகுத்த காலத்தில் அத்தொகை நூலுக்கு, மற்றதொகை நூல்களின் முகப்பில் கடவுள் வாழ்த்து இருப்பது போல, இத்தொகைக்கும் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றிருந்த நக்கீர தேவநாயனார் பாடிய திருமுருகாற்றுப் படையைக் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைத்துப் பத்துப்பாட்டு எனத் தொகுப்பாசிரியர் நூலாக்கினர் என்று கருத இடமுள்ளது. இன்றுள்ள நிலையில், பத்துப்பாட்டுத் தொகுப்பு, யாரால் யார் ஆதரவுடன் எக்காலத்தில் தொகுக்கப்பட்டது எனத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறஇயலவில்லை. இறையனார் களவியலுரை (கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதி) பத்துப்பாட்டு பற்றி ஒன்றும் கூறாமல் இருப்பதிலிருந்து, அத்தொகை களவியலுரை எழுதப்பட்ட காலத்தில் வழக்கில் இல்லை என்பது தெளிவு. தொல்காப்பிய உரையாசிரியர்களில் முதல் உரையாசிரியரான இளம்பூரணரே பத்துப்பாட்டுப் பற்றி முதன்முதலாகக் கூறுகின்றார்:

"பெரிய பாட்டு பத்துப்பாட்டினுள்ளும் சிலப்பதி காரத்துள்ளும்
மணிமேகலையுள்ளுங் கண்டு கொள்க"

(தொல், பொருள், இளம், 1956 : நூற்பா, 459 உரை)

என்பது அவர் கூற்று.

சிந்தைக்கு எட்டாப் பரம்பொருளாகிய முருகன் தன் பக்தன் முன் தோன்றி, "அஞ்சல்; அறிவல் நின்வரவு" என்று அன்புடன் வரவேற்று, அப்பக்தனுக்குப் பெறலரும் பரிசிலாகிய தன் திருவடிகளைக் காட்டிக் கொடுக்கிறான் (பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, 1956 : 289–295). இவ் ஆற்றுப்படை வீடுபேறு பெறுவதற்குப் பக்குவம் பெற்றுள்ள பக்தன் ஒருவனை முருகனிடத்தே ஆற்றுப்படுத்துகின்றது என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்குவர் (மேலது : 79). இவ் ஆற்றுப்படை முருக வழிபாட்டின் பழந்தமிழ்க் கூறுகளையும் வைதிகர்களின் வேத ஆகம வழிபாட்டு நெறிகளையும் ஒருங்கிணைத்து அந்நூலை முருகன் அடியார்களின் பாராயண நூலாக ஆக்கியுள்ளது. முருக வழிபாடு தனிவழிபாடாக வளர்ந்து வந்ததைப் பொய்யாமொழிப் புலவரைப் பற்றிய கதைகளிலிருந்தும் ஔவையாரைப் பற்றிய கதைகளிலிருந்தும் நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

5. கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகம் தன்னாட்சியை இழந்தது. திரிபுவனச் சக்கர வர்த்திகளாகக் கோலேச்சிய பாண்டியர்கள் வடக்கிலிருந்து ஊழித்தீயெனக் கிளர்ந்து வந்த இஸ்லாமியப் படையெடுப்புகளால் நிலைகுலைந்தனர். சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் தென்னகமும் அதில் அடங்கிய தமிழ்நாடும் மகமதியர் ஆட்சியின் கீழ் வந்தன. தமிழர்களின் பண்பாட்டுத் தளமாக விளங்கிய மதுரையில் சுல்தானின் பிரதிநிதிகள் ஆட்சி செய்யத் தொடங்கிய அக்காலத்தில் கோவில்கள் சூறையாடப்பட்டன; தெய்வத் திருமேனிகள் உடைத்து நொறுக்கப்பட்டன. படையெடுப்பாளர்களை எதிர்த்த தென்னாட்டு மன்னர்கள் மிகவும் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டனர் (K.A. Nilakanta Sastri, 1958 ; 218-252; N.Subramaniyan, 1972 : 273-281).

இத்தகைய சூழ்நிலையில், இஸ்லாமியப் படையெடுப்பாளர்களுக்கு எதிரான உணர்வுகள் மேலெழும்பத் தொடங்கின; டில்லி சுல்தான் முகமதுபின் துக்ளக்கால் மதம் மாற்றப்பட்டு டில்லியில் வளர்ந்து கொண்டிருந்த காம்பிலி அரச குமாரர்களான ஹரிஹரரும் புக்கரும் டில்லி சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக, தென்னாட்டுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வரச குமாரர்கள் தென்னிந்தியாவுக்கு வந்ததும் சிருங்கேரியில் வாழ்ந்த அத்வைத சமயத் தலைவரான வித்யாரண்யரால் மீண்டும் இந்து சமயத்திற்கு மீட்கப் பெற்றுத் துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் கி.பி. 1336–ஆம் ஆண்டில் தம் குருவின் நினைவாக வித்யாரண்ய நகரை உருவாக்கினர்; அதுவே, பின்னர் விஜயநகரமாகப் (வெற்றித் திருநகர்) புகழ்பெற்றது. இந்துக்களை இஸ்லாமியர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகத் தோன்றிய விஜயநகரம் படிப்படியாகத் தன் ஆட்சியின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டு வந்தது. தமிழ்நாட்டின் தென்பகுதியில் இருந்த மதுரையில் ஆட்சி செய்து கொண்டிருந்த சுல்தானின் ஆட்சியை அகற்றுவதற்காகப் புக்கரின் மகனான குமார கம்பண்ணன் ஒரு பெரும்படையுடன் தெற்கு நோக்கி வந்து கி.பி. 1370–ஆம் ஆண்டில் மதுரை சுல்தானைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுப் பாண்டியர்களிடம்

ஆட்சியை ஒப்புவித்து விட்டு, விஜயநகரப் பிரதிநிதியை அங்கு வைத்துவிட்டுத் திரும்பினான். முஸ்லிம் படையெடுப்பாளர்களால் அழிந்து கிடந்த மதுரை திருவரங்கம் கோவில்கள் மீண்டும் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டன(K.A. Nilakanta Sastri, 1958: 226 -228; 254-256).

5.1. அருணகிரிநாதரின் வருகையை இப்பின்புலத்தில் நோக்கினால்தான் அவரின் வரலாற்று முக்கியத்துவம் புலப்படும். ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தனியாட்சி நடத்தித் தங்கள் மொழியையும் சமய நம்பிக்கைகளையும் பண்பாட்டையும், போற்றிப் பாதுகாத்து வந்த தமிழ்மக்கள், இப்போது தங்களிடமிருந்து மாறுபட்ட ஓர் ஆட்சிக்கும் சமயப் பண்பாட்டுக்கும் அடங்கிக் கிடக்க வேண்டியதாயிற்று. இஸ்லாமிய சமயத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு ஆட்சி செய்த சுல்தான்களின் கொடுஞ்செயல்கள் மக்களை இளந்தெரியாத ஓர் இருளுக்குள் தள்ளின. விஜயநகர அரசர்கள் இந்துக்களாக இருப்பினும், அவர்கள் கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். மொழியாலும் பண்பாட்டாலும் தமிழகம் பிற இனத்தவரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. "காலம் காலமாக அந்நியர்களின் ஆதிக்கத்தில் அடங்கிக் கிடந்த தங்களை மீட்க, ஓர் இறைத்தூதர்–மெசையா–மீட்பர்–வருவார்" என்று யூதர்கள் நம்பியதைப் போன்று, தமிழர்களும் தனியொரு தலைவனின் வருகைக்காக ஏங்கி நின்றனர். அருணகிரி நாதர் தோன்றி "முருகனே தமிழர்களின் தலைவன்" என அடையாளம் காட்டினார். அவர் ப்ரபுட தேவ மாராஜன் என்னும் பெயருடைய விஜயநகர மன்னன் ஒருவனைத் தம் திருப்புகழ் பாடல்களில் (271) குறிப்பிட்டுள்ளார். தமிழகமே அருணகிரி நாதரின் வருகையால் புத்தெழுச்சி பெற்றதென்று கூறுதல் மிகையாகாது.

5.2 அருணகிரிநாதரின் தோற்றத்தோடு தமிழ்நாட்டில் இரண்டாவது பக்தியுகம் தொடங்கிவிட்டது என்பர் கா.சிவத்தம்பி (பண்பாடு, 1995, மலர் : 3, 13–24). முதல் பக்தியுகத்தில் (கி.பி. 6–9 ஆம் நூற்றாண்டுகள்) ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்நாடு முழுவதும் கால் நடையாகப் பயணம் செய்து சமண பௌத்த சமயங்களுக்கு எதிராக மக்களைத் தட்டி எழுப்பியதைப் போன்றே, அருணகிரியாரும் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து முருகனை மையமாகக் கொண்ட பக்தி இயக்கத்தைக் கட்டமைத்துக் கொண்டார். ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமண பௌத்த சமயங்களுக்கு எதிரான தம் பிரச்சாரத்தில் தமிழை முதன்மையான கருவியாகப் பயன்படுத்திக் கொண்டதைப் போன்று அருணகிரிநாதரும் தமிழைத்தம் இயக்கத்துக்கு ஒரு கூர்மையான ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார். ஆழ்வார்களும் நாயன்மார்களும் இசைத்தமிழில் பாடியது போன்றேஅருணகிரிநாதரும் இசைத் தமிழுக்கே முதன்மை கொடுக்கின்றார். சைவ வைணவத் திருமுறைகளில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் போன்று அருணகிரிநாதரின் பாடல்களும் அகவயமானவை. அதாவது, இறைவனைப் படர்க்கையில் நின்று நோக்காமல், தன்மையில் நின்று–நேருக்குநேராக நின்று– உணர்ந்து பாடும்போது, இறைவன் நம் அருகில் இருப்பதாக நாம் உணர்கிறோம். திருப்புகழின் சந்தக் குறிப்புகளும் அகவயத்தன்மை விவரிப்புகளும் அருணகிரிநாதரின் பாடல்களைத் தமிழகத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் சென்றன. அருணகிரிநாதர் தம் கவிதை நோக்குக்குத் திருஞான சம்பந்தரைக் கட்டமைத்துக் கொண்டதனை அவரே தம் பாடலில் பதிவு செய்துள்ளார்:

"புமியதனில் ப்ரபுவான
புகலியில்வித் தகர் போல
அமிர்தகவித் தொடை பாட
அடிமை தனக் கருள்வாயே" (133)

என்பது அவர் வாக்கு.

5.3 அருணகிரிநாதர் திருஞான சம்பந்தரைப் போன்று பதினாயிரம் பாடல்களைப் பாடினார் என்னும் கருத்து உள்ளது. வ.சு.செங்கல்வராய பிள்ளையின் பதிப்பில் 1304 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன; சமாஜப் பதிப்பில் 1361 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன. இப்பாடல்களை மேற்போக்காகப் பயின்றாலும், தமிழின் அடையாளத்தை அருணகிரிநாதர் பல பாடல்களில் தெளிவாகப் பொறித்திருப்பதை நாம் காண இயலும். அவற்றுள் சிலவற்றை இப்போது நோக்குவோம்.

5.3.1 தமிழ்மொழிக்குப் பழங்காலத்திலிருந்தே முத்தமிழ், வண்டமிழ், தென்றமிழ், தீந்தமிழ் எனப் பல்வேறு அடைகள் கொடுக்கப்பட்டு வந்துள்ளன. அருணகிரி நாதரும் தம் பாடல்களில் தமிழை, நற்றமிழ் (67), செந்தமிழ் (37, 172, 360), வண்டமிழ் (248), தெள்ளுதமிழ் (318), முதிய மாத்தமிழ்(393), முத்தமிழ் (146, 231, 264, 280, 289, 362,

377) என அடைகொடுத்துப் பாடிச்செல்கின்றார். அவர் முருகப் பெருமானை முத்தமிழோன் (199) என்று போற்றுகின்றார்.

5.3.2 இறையனார் களவியலுரை முருகனைத் தலைச்சங்கப் புலவனாகக் கூறுகின்றது. அருணகிரிநாதர் இம்மரபினை உள்வாங்கிக் கொண்டு பாடுகின்றார் :

செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக குறைவோனே (42)
மாத மிழ்த்ரய சேயே நமோ நம (341)
தமிழ்ப் பெருமாளே (342)
வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே (39)
தண்டமிழ் தெரிதரு புலவோனே (283)

என்னும் பாடல் பகுதிகளை நோக்கும்போது இவ்வுண்மை புலனாகின்றது.

5.3.3 அகத்திய முனிவருக்கும் தமிழுக்கும் உள்ள உறவு இறையனார் களவியலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முனிவர் இடைச்சங்கத்தின் தலைவராக வீற்றிருந்தார் என்கின்றது களவியலுரை (1976 : 5). திருவிளையாடல் புராணங்கள் சிவபெருமானிடமிருந்து அகத்தியர் தமிழ் கற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கின்றன. அருணகிரி நாதர், அகத்தியர் முருகப்பெருமானிடம் தமிழ் கற்றார் என்று பதிவு செய்கின்றார். அருணகிரிநாதர் வாக்கில் அகத்தியரும் அடி தொழுகின்றமுத்தமிழ் வித்தகக் கலைஞனாக முருகன் விளங்குகின்றான்.

சிவனைநிகர் பொதியவரை முனிவனாக மகிழஇரு
செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே (15)

என்னும் அடிகளில் அகத்திய முனிவனுக்கு முருகன் தமிழ் கற்பித்ததை அருணகிரி நாதர் நினைவூட்டுகின்றார். அகத்தியர் முருகனைக் கும்பிடுபவர் என்றும் அவர் பாடுகின்றார் :

கும்பமுநி கும்பிடும் தம்பிரானே (24)

என்பது அருணகிரி நாதர் கூற்று.

5.3.4 அகப்பொருள் இலக்கணம் தமிழுக்கே சிறப்பாக அமைந்துள்ள இலக்கணம் ஆகும். வடமொழி உள்ளிட்ட வேறுமொழிகளில் பொருள் இலக்கணம் இல்லை என்பது பலரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். பொருள் இலக்கணத்திலும் அகப்பொருள் இலக்கணமே தமிழின் தனித்தன்மைக்குச் சான்றாக அமைகின்றது. தமிழ் என்றாலே அகப்பொருள் என்னும் வழக்கும் உள்ளது. ஆரிய அரசன் யாழ்ப்பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார் என்பது அப்பாட்டின் இறுதியில் உள்ள கொளுத்தொடராகும். இத்தொடரில் தமிழ் என்னும் சொல் அகப்பொருள் காதல் என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இத்தகு சிறப்பு வாய்ந்த அகப்பொருள் இலக்கணத்தை உலக மக்கள் வழிபடும்படி முருகன் எடுத்துரைக்கின்றான் எனப்பாடுகின்றார் அருணகிரி நாதர் :

வழுதியர் தமிழி னொருபொரு ளதனை
வழிபட மொழியு முருகேசா (135)

என்பன திருப்புகழ்ப் பாடல் அடிகள்.

திருப்புகழ்ப் பாடல்களில் அகப்பொருள் பாடல்களும் உள்ளன. இரண்டு எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு :

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து *வெயில்காய*
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் *வசைகூற*
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
குறைதீர வந்து *குறுகாயோ* (46)

இப்பாடலில் தன்மகளின் காதல் நோயைத் தணிப்பதற்குத் தலைவன் வரவேண்டும் என்று தாய் வேண்டுகின்றாள். மற்றொரு பாடலில் தன் மகள் பசலை நோயினால் வருந்த அவன் வாராதிருப்பது அழகோ என்று தாய் முருகனை வினவுகின்றாள் :

மலரடி பணியு மடமகள் பசலை
மயல்கொண்டு தளர்வ *தழகோதான்* (135).

5.3.5 நக்கீரரைச் சிறந்த முருக பக்தர் என மேலே நாம் குறிப்பிட்டோம். முருகப் பெருமான் நக்கீரருக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்பித்ததாகவும் அருணகிரி நாதர் பாடுகின்றார் :

வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயிலிலக் கணங்க *ளியல்போதி*

அடிமோனை சொற்கி ணங்க வுலகாமு வப்ப என்று

னருளா லளிக்கு கந்த பெரியோனே (84).

இத்திருப்புகழ் அடிகளில் முருகப்பெருமான் நக்கீரருக்குத் தமிழ் இலக்கணம் முழுவதையும் கற்பித்ததோடு "உலகம் உவப்ப" என்று திருமுருகாற்றுப்படைக்கு அடியெடுத்துக் கொடுத்ததாகவும் அருணகிரிநாதர் பாடுகின்றார்.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு

பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு

(மேலது, திருமுருகாற்றுப்படை : 1–2)

என்பன திருமுருகாற்றுப்படை அடிகள்.

இவ்வடிகளில் "உலகம் உவப்ப" என்னும் தொடர் முருகனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டது என்னும் கருத்தினை அருணகிரிநாதர் பதிவு செய்துள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சேக்கிழாருக்கும் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுத்தது போல முருகனும் நக்கீரருக்கு அடியெடுத்துக் கொடுத்தான் என்கின்றார் அருணகிரி நாதர்.

5.3.6 பரசமய கோளரியான திருஞான சம்பந்தரை முருகனின் அவதாரமாகக் கருதும் மரபை அருணகிரியாரும் போற்றுகின்றார்.

ஒருநாள் உமையிரு முலைப்பா லருந்தி

முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்

ஐம்புலக் கிழவன் அறுமுக னிவனென

எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை (96)

என்னும் இப்பாடலில் திருஞானசம்பந்தர் சீகாழிக் குளக்கரையில் அம்பிகையின் ஞானப்பாலுண்ட வரலாற்றை அருணகிரிநாதர் போற்றுகின்றார். ஞானப் பாலுண்ட பிள்ளை "தோடுடைய செவியன் . . ." எனத் தொடங்கும் திருப்பாடலைப் பாடி முத்தமிழ் விரகராய் நாற்கவிப் புலவராய்ச் சிறப்பெய்தியமையை அவருடைய தேவாரத் திருப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

அம்பிகையின் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தப் பிள்ளையார் தம் பண்சுமந்த பாடல்களால் தமிழை நிலைநிறுத்திச் சமணர்களைக் கழுவேற்றிய செய்தி திருப்புகழில் பல பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் சில எடுத்துக்காட்டுகள் இங்கே தரப்பட்டுள்ளன :

உமைமு லைத்தரு பாற்கொடு அருள்கூறி

உரிய மெய்த்தவ மாக்கிநல் லுபத்தேசத்

தமிழ்த னைக்கரை காட்டிய திறலோனே

சமண ரைக்கழு வேற்றிய பெருமாளே (303).

பீலி வெந்துய ராவி வெந்தவ

சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை

பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு

பேணி யங்கெதி ராறு சென்றிட

மாற னும்பிணி தீர வஞ்சகர்

பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே (75).

புழுகொழுகு காழி கவுணியரில் ஞான

புதிதனென ஏடு தமிழாலே

புனலிலெதி ரேற சமணர்கழு வேற

பொருதகவி வீர குருநாதா (141).

சீட்டை யெழுதிவை யாற்றி லெதிருற

ஓட்டி யழல்பசை காட்டி சமணரை

சீற்ற மொடுகழு வேற்ற அருளிய குருநாதா (158).

திருஞானசம்பந்தர் சமணர்களை வாதங்களில் வென்று மதுரை பாண்டிய மன்னனின் ஆதரவு பெற்றிருந்த சமணர்களை அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வென்று பாண்டியனின் சுரத்தை நீக்கியதோடு அவனது கூனை நிமிர்த்தியதும் பெரியபுராணத்தில் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளன.

5.3.7 தமிழ் மரபுப்படி முருகனுக்கு வள்ளியே முதல் மனைவி என்று மேலே எடுத்துக் காட்டினோம். முருகன் வள்ளியைக் களவில் உடன்போக்கில் அழைத்துச் சென்றமை பழந்தமிழ் இலக்கியங்களில் ஆவணப் படுத்தப்பட்டு உள்ளது. அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாடல்களில் முருகன் வள்ளி மீது கொண்டிருந்த பெருங்காதலை–ஆராக்காதலைப்–பல பாடல்களில் பதிவு செய்துள்ளார் :

வடிவார் குறத்தி தன்பொ னடிமீது நித்த முந்தண்

முடியான துற்று கந்து பணிவோனே (84).

மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்

மங்கைதனை நாடி வனமீது

வந்த சரணார விந்தமது பாட

வண்டமிழ்வி நோத மருள்வாயே (240).

துள்ளுமத வேள்கைக் கணையாலே

தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே (318).

குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே (10).

இங்கே மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பாடல்கள், முருகன் வள்ளிமீது கொண்டிருந்த தீராக் காதலைப் புலப்படுத்துகின்றன. வேத வேள்வி மரபுகளின்படி தீவலம் செய்து மணந்து கொண்ட இந்திரன் மகளாகிய தெய்வானைக்கு முதலிடம் கொடுக்காமல், வள்ளிக்கு முதன்மை கொடுத்துப் பாடுவதன் மூலம் அருணகிரி நாதர் தமிழ் மரபான களவுத் திருமணத்தை முருகனோடு அடையாளப்படுத்துகின்றமை தெளி வாகின்றது.

5.3.8. முருகனை முழுமுதல் கடவுளாக ஏற்றுக்கொண்டு அருணகிரியார் பற்பல பாடல்களைப் பாடியுள்ளார். கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி போன்ற நூல்கள் முருகனாகிய இறைஅனுபவத்தைப் பக்தர்களுக்கு எடுத்துரைக்கின்றன. முக்திக்கு உரிய மொழி வடமொழி என்னும் நிலைப்பாட்டுக்கு எதிரான கோட்பாட்டினை முன்னெடுத்துச் சென்ற அருணகிரிநாதர், முக்தி பெறுவதற்குத் தமிழில் பாடத் தனக்கு முருகன் அருள்தர வேண்டும் என்று பற்பல பாடல்களில் வேண்டுகின்றார்.

5.4 ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய பக்திப் பாடல்களுக்கும் அருணகிரி நாதர் பாடியுள்ள பக்திப் பாடல்களுக்கும் இடையிலுள்ள நுட்பமான வேற்றுமை பெரிதும் வெளிப்படுத்தப்படாமல் உள்ளது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருமால், சிவபெருமான் என்று எதிர்நிலைகளில் நின்று பாடினர். ஆனால், அருணகிரிநாதரோ சைவத்தையும் வைணவத்தையும் இணைத்துப் பாட முயன்றுள்ளார். தாம் வாழ்ந்த காலத்தில் (கி.பி. 14–ஆம் நூற்றாண்டு) சைவ–வைணவ வேறுபாடுகளுக்கு இடமில்லை என்பதனை அருணகிரிநாதர் தெளிவாக உணர்ந்திருந்தார் என்று கருதுவது பொருந்தும். ஒருவகையான சைவ–வைணவ இணைப்பையே (Synthesis) அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாடல்களில் முன்வைக்கிறார் எனலாம். முருகனைத் திருமால் மருகன் என்று அவர் பாடும் போதெல்லாம், பாடலின் பிற்பகுதியில் இராமாவதாரம் பற்றியோ கிருஷ்ணாவதாரம் பற்றியோ விரிவாக வருணித்து அருணகிரிநாதர் பாடுகின்றார். அவர் வாழ்ந்த காலத்தின் கட்டாயமாக இதனைக் கொள்ள வேண்டியுள்ளது.

6. அருணகிரிநாதரைப் பின்பற்றித் தமிழின் அடையாளத்தை முருகனோடு இணைத்துப் பிற்காலத்தில் பலரும் பாடியுள்ளனர். சான்றாக, வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார், இராமலிங்க சுவாமிகள் போன்றோரைக் குறிப்பிடலாம். உரைநடையில் ஞானியார் அடிகள், மறைமலை அடிகள், திரு.வி.க போன்றோரும் எழுதியுள்ளார்கள். தமிழின் அடையாளமாக முருகன் கட்டமைக்கப்பட்டுள்ள செய்தி விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஆய்வுப் பொருளாகும்.

திருப்புகழ் அன்பர்கள், (புதுடில்லி) வெளியிட்டுள்ள "திருப்புகழ் இசைவழிபாடு" என்னும் நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்கள் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

துணை நூல்கள்

1. இறையனார் களவியலுரை, 1976, கழகம், சென்னை.

2. ஒன்பதாம் திருமுறை, 1969, தருமபுர ஆதீனம், தருமபுரம்.

3. குறுந்தொகை, 2002, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

4. சிவத்தம்பி.கா, பண்பாடு, 1995, கொழும்பு.

5. தக்கயாகப் பரணி, 1960, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

6. திருப்புகழ், இசைவழிபாடு, 2004, புதுடில்லி.

7. தொல்காப்பியம், பொருளதிகாரம், 1956, கழகம், சென்னை.

8. பத்துப்பாட்டு, 1956, உ.வே.சாமிநாதையர், சென்னை.

9. பரிபாடல், 1980, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

10. Nilakanta Sastri.K.A, A History of South India, 1958, O.U.P.

11. Subramanyan.N, 1972, Madurai.

வைணவ இலக்கியம்



முனைவர்.பிரேமா நந்தகுமார்,
திருவரங்கம்.

பெரியாழ்வாரின் பாசுரங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது, திருப்பல்லாண்டு. தமிழிலக்கியத்திற்குப் புதிய வரவு. பக்தியின் கொடு முடியிலே தாய்ப்பாசுரங்கள் எழுதியிருக்கிறார். அனுமன் சீதைக்குக் கணையாழி தந்து அடையாளம் கூறும்போது, ஆதிகாவியத்தில் இல்லாத சில செய்திகள் கூறுகிறார்:

அல்லியம்பூமலர்க் கோதாயடி பணிந்தேன் விண்ணப்பம்
சொல்லுகேன் கேட்டருளாய் துணைமலர்க்கண் மடமானே!
எல்லியம்போ தினிதிருத்த லிருந்ததோரிட வகையில்
மல்லிகைமாமாலைகொண்டங்கார்த்தது மோரடையாளம்.

பெரியாழ்வாரின் மகளான ஆண்டாள் பிறப்பால் பெண் என்பதால் அவளது நாயக-நாயகி பாவத்தில் எழுதப்பட்டுள்ள பாசுரங்கள் தன்னிகரற்று விளங்குகின்றன. 'வாரணமாயிரம்' என்று தொடங்கும் பத்துப்பாசுரங்கள் பிரசித்தமானவை. பழந்தமிழர் களின் தைந்நீராடலில் வையை நதிக்குப் பெண்கள் பூசை செய்து நல்ல கணவனைப் பெற வேண்டிக் கொள்வார்கள். இவ்வழக்கத்தை ஏற்று, கண்ணனிடம் கைங்கரியம் செய்யும் பெருமையை வேண்டுவதாக ஆண்டாளின் 'திருப்பாவை' மாற்றியமைத்திருக்கிறது. உரையாசிரியர் பெரியவாச்சான் பிள்ளை இந்நூலை "உபநிஷத்து தமிழானபடி" என்று பெருமைப் படுத்துகிறார். வைணவ இலக்கியத்தின் மிகச் சிறந்த கூறாக விளங்கும் திருப்பாவையில் பக்தியுடன் சமுதாயச் சிந்தனைகளும் கலந்துள்ளன.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு,
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலேநீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோ தோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்!

இனிமையே தமிழாக உருவெடுத்ததுபோல் தொண்டரடிப் பொடியாழ்வாரது பாசுரங்கள் மிளிர்கின்றன. அவரது 'திருப்பள்ளியெழுச்சி' தமிழ் கண்ட புது இலக்கிய வகை. அரங்கன் குறித்துப் பத்தே பாசுரங்கள் பாடி அமரத்துவம் பெற்றவர் திருப்பாணாழ்வார். அரங்கனின் கண்ணழகை அவர் அனுபவிப்பதே அலாதிதான்:

பரியனாகிவந்த வவுணனுடல்கீண் அமரர்க்
கரியவாதிபிரா னரங்கத்தமலன் முகத்துச்
கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்
பெரியவாயகண்களென்னைப் பேதைமை செய்தனவே.

திருமழிசையாழ்வாரது திருச்சந்தவிருத்தம் துள்ளு நடை பயிலும். குலசேகரவாழ்வார் அடைக்கலமெனும் தத்துவத்தை அற்புதமான உவமைகளால் விளக்கியிருப்பதை நாள்தோறும் பாடி மகிழலாம். சமத்துவம் என்பது பேச்சில் மட்டுமன்று, வாழ்ந்து காட்டவேண்டிய நன்னெறியும் ஆகும் என்பதைத் திருமங்கையாழ்வாரது பாசுரம் வலியுறுத்தும்:

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
இரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி எம்பி' என் றொழிந்திலை உகந்து,
தோழன் நீயெனக் கிங்கொழி, என்ற
சொற்கள் வந்தடி யேன் மனத் திருந்திட
ஆழி வண்ண! நின் அடியிணை யடைந்தேன்
அணிபொழில் திரு வரங்கத்தம் மானே!''

'வேதம் தமிழ் செய்த மாறன்' எனப்படும் நம்மாழ்வாருக்கு உள்ள முதல் ஏற்றம், அவரைப் பற்றி மதுரகவியாழ்வார் பாடிய 'கண்ணிநுண் சிறுத்தாம்புப்' பாசுரங்கள் நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் ஒரு திருமொழியாகக் கொண்டாடப்படுவது எனலாம். ஆழ்வார்களில் தலையானவர் நம்மாழ்வார். இவர் அருளிய பிரபந்தங்கள் நான்கும் வேதத்துடன் ஒப்பிடப்பட்டு, தமிழ்மறை என்று சிறப்பிக்கப் படுகின்றன. இவை பின்வருமாறு:

திருவிருத்தம் (ரிக் வேதம்)
திருவாசிரியம் (யஷுர் வேதம்)
பெரிய திருவந்தாதி (அதர்வண வேதம்)
திருவாய்மொழி (சாம வேதம்)

அவருடைய சீரான மதுரகவியாழ்வார் "மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி/என் நெஞ்சுள் நிறுத்தினான்" என்பார். நம்மாழ்வாரது பாசுரங்களின் பெருமையைக் கூறுமிடத்து, பெரியவாச்சான் பிள்ளை "ஓர் ஆத்மாவுக்கு ஹிதாம்சத்துக்கு ஒரு பாட்டே அமையும் படியிறே இவர் பாடிற்று" என்று வியந்து போகிறார். உண்மைதான். 1102 பாடல்கள் கொண்ட திருவாய்மொழியினில் எந்த ஒரு பாட்டை எடுத்தாலும் 'தோள் கண்டார் தோளே கண்டார்' கதைதான். பகவதனுபவத்திற்கு உதவி செய்பவர்கள் பகவத்ஸாக்ஷாத்காரம் பெற்ற பெரியோர். அந்த வகையிலே நிர்குணமாகவும் ஸகுணமாகவும் எம்பெருமானைக் காண நம்மாழ்வார் உதவுகிறார். சொரூப எல்லைகளைக் கடந்து உலகிற்கு ஒரு பிரார்த்தனையாக முதல் பாசுரமே பரிமளிக்கிறது.

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே

கிருஷ்ணாவதாரத்தில் பிரத்தியேக ஈடுபாடு கொண்ட நம்மாழ்வார் கண்ணனை எங்கும் எதிலும் கண்டதை ஒரு அகத்துறைப் பாசுரம் கூறும்:

உண்ணும் சோறு, பருகும் நீர் தின்னும்
வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கவன் ஊர் வினவித்
திண்ணம் என்னிளமான் புகும் ஊர் திருக்கோளூரே.

இனித் தோன்றிய வைணவ இலக்கியம் அனைத்துமே அனேகமாக ஆழ்வார்களது தொடர்ச்சி எனலாம். ஆழ்வார்களுக்குப் பின் வந்த வைணவ ஆசாரியர்கள் வடமொழியை அதிகமாகக் கையாண்டனர். பாசுரங்களை விளக்கும்போது வேதங்கள், உபநிஷத்துக்கள், இதிஹாஸங்கள் முதலியவற்றையும் ஆர்வலர்களுக்கு உரையாசிரியர்கள் எடுத்துச் சொல்ல வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் இந்த வகையிலே, வட மொழியுடன் கலந்த தமிழ் மணிப்பிரவாள மொழியெனப்பட்டது. அதே சமயம், சுமார் முந்நூறு ஆண்டுகள் பயன்பாட்டிலிருந்த மணிப்பிரவாள உரைகளே தமிழை அழியாமலும் காத்தன எனலாம். ஏனெனில் இவ்வுரைகளில் தூய தமிழ்ச் சொற்கள் பரவிக் கிடக்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை இவ்வுரைகள் காலக்ஷேபம் செய்யப்படுவதால் இத்தமிழ்ச் சொற்களும், வழக்குகளும் மறையாமல் உள்ளன. வெள்ளாயம், அறவை, சிறுபேர், நெடும்பாடு, ஆனைக் குக்குதிரை வைத்தல், கருமாரி பெய்தல் என்பன ஒருசில.

ஆளவந்தார், ராமானுஜர், பட்டர் போன்ற ஆசாரியர்கள் வடமொழியில் எழுதிவந்தாலும், ஒரு சிலர் தமிழிலும் நல்ல பிரபந்தங்களை இயற்றினார்கள். திருவரங்கத்து அமுதனார் இயற்றிய இராமனுச நூற்றந்தாதி, நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டு மறையாக வைணவர்களால் ஓதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வங்கிபுரத்தாய்ச்சியின் நூற்றெட்டுத்திருப்பதிக் கோவை, ஆழ்வார்கள், அவர்கள் பாடிய திருத்தலங்கள் பற்றி எளிய நடையில் கூறுகிறது. மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலை, ஆர்த்தி, திருவாய்மொழி நூற்றந்தாதி என்ற மூன்று சிறந்த தமிழ்ப் பிரபந்தங்கள் இயற்றியிருக்கிறார்.

வேதாந்த தேசிகரின் வடமொழி நூல்கள்மிகப்பிரசித்தி பெற்றவை. அதே சமயம் அவர் எளிய தமிழில் எழுதிய செய்யுட்கள் தேசிகப்பிரபந்தம் என்று கொண்டாடப் படுகின்றன. குருவுக்குக் கைம்மாறு கண்ணனால்கூட செய்யமுடியாது என்று பட்டுப்போன்ற ஒரு செய்யுளில் தேசிகர் வற்புறுத்துகிறார்.

ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை
இருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும்
காணகில்லான்
போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும்
பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம்
பெற்றதற்கே.

காஞ்சிபுரத் தலமஹிமையை மெய்விரத மான்மியம் எனும் பிரபந்தத்தின் இனிய செய்யுட்களில் காணலாம். புராண வரலாறு: ப்ரும்மா ஸத்யவ்ரதக்ஷேத்ரமெனப்படும் காஞ்சிபுரத்தில் விசுவகர்மாவை ஒரு யாகசாலை அமைக்கும்படி கட்டளையிட்டான். சிறப்பாக அமைக்கப்பட்ட வேள்விச்சாலையில் ஒரு அசுவமேதயாகம் செய்யத் தொடங்கினான். வேள்வி செய்யும்போது உடனிருப்பதற்காகத் தன் மனைவி சரஸ்வதியை யாகசாலைக்கு வருமாறு கேட்டுக் கொண்டான். சரஸ்வதி வர மறுத்ததால், ப்ரும்மா ஸாவித்ரி எனும் மனைவியை வைத்துக் கொண்டு வேள்வியைத் தொடங்கினான். இதனால் கோபமுற்ற சரஸ்வதி யாகசாலையை அழிக்க வேகவதி நதியாகப் பாய்ந்து வந்தாள். ஒரு நதி வெள்ளத்தில் அலைவிரித்துப் பாயும் வேகத்தைத் தேசிகரின் செய்யுளில் காணலாம்.

அன்ன வடிவாள் அசையும் அன்ன நடையாள்
உயரும் அன்ன அரசு ஏறி வருவாள்
அத்தன் அயன் அத் தனையன் உத்திதனை
அத்திதென உத்தி புரியாள்
அன்ன நடைவிடா நடம் இதென்ன நடவா
நடுவு நண்ணு குவடு ஏறி இழிவாள்
நல் பதிகள் அல் பதிகள் கல் புரள
அற்புத மருற்கதியினால்
கல் நடைவிடா இடமில் உன்னதி சிறா
விகடம் மன்னு கிரி கூடம் இடியக்
கட்டவிடை இற்று விழ முற்றும் விழ
உற்று அடைய விட்டு அருகு உற
அன்ன நய சீர் அயன் இது என் என
விழா அமரர் மன்னுபதி ஏறிமகிழ
அச்சுதன் அணைத்தனுவில் அத்திசை வர
அத்தகைய அற்ற அணுகினாள்.

இப்படி பிரவஹித்துவரும் சரஸ்வதியைத் தடுப்பதற்காக எம்பெருமான் நதி வரும் வழியில் அணையாகக் கிடந்தான். சரஸ்வதியும் நாணி ப்ரும்மாவைச் சேர, யாகம் இனிதே நடந்தது. வேள்வித்தீயில் எம்பெருமான் வரதராஜனாகத் தோன்றினான் என்று மெய்விரத மான்மியம் நிறைவுறுகிறது.

வேதாந்த தேசிகர் அருளிய தமிழ்ப்பிரபந்தங்களின் கொடுமுடி அடைக்கலப்பத்து என்பதில் ஐயமில்லை. பத்தே பாசுரங்கள். அடைக்கலப்பாதையில் அழைத்துச்செல்லும் கவிதைவாரியான இந்நூலை மனனம் செய்து அமைதி பெற்றவர்களை எண்ணிக்கையில் அடைக்க முடியாது. வேறு எந்த யோகத்தையும் பின்பற்ற முடியாத அகதிக்குத் தெய்வமே துணை. எங்கு எங்கு ஓடினாலும், எந்த இடங்களில் தேடினாலும் என்ன உபயோகம்? அன்னை ஜானகிக்குத் தவறிழைத்த காகம் ராமனது திருவடியில் சென்று விழுந்தது போல் தம்மைத் தேசிகர் உணர்த்திக் கொள்ளுகிறார்.

பத்தி முதலானவற்றில் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையும் உழன்றோடி இளைத்து விழும் காகம்
போல்
முத்தி தரும் நகரேழின் முக்கியமாம் கச்சி தனில்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான்
புகுந்தேனே.

இனி, வைணவ இலக்கியத்தில் காப்பிய மேதுமில்லை எனும் குறைதீரக் கம்பரது இராமாவதாரம் தோன்றியது. ஆழ்வார்களின் அருளிச்செயலில் தோய்ந்த கம்பர், வடமொழியும் நன்கு பயின்றிருக்க வேண்டும் என்பது காப்பியத்தைப் படிக்கும்போதே தெரிய வருகிறது.

வடமொழிக் காப்பியங்களில் அவருக்கு இருந்த ஈடுபாட்டினை அவையடக்கப் பகுதியில் காண்கிறோம்.

தேவபாடையின் இக் கதை செய்தவர்

மூவர் ஆனவர் தம்முளும், முந்திய

நாவினான் உரையின்படி, நான் தமிழ்ப்

பாவினால் இது உணர்த்திய பண்புஅரோ.

வால்மீகி, வசிஷ்டர், போதாயனர் முதலியோர் எழுதிய நூல்களைக் கம்பர் அறிந்திருந்தார். அதுபோல் நாராயணனின் பெருமை சொல்லும் காப்பியம் தமிழில் இல்லையே என்று அவர் நினைத்திருக்கலாம். சமண மதத்தினர்க்குச் சீவக சிந்தாமணியும் பவுத்தர்களுக்கு மணிமேகலையும் இருந்தன. திரு.மு.இராகவை--யங்கார் சேக்கிழாரைக் கம்பனுக்கு முன் காலத்தவராகக் காண்கிறார். அதன் பிரகாரம், சைவர்களுக்குப் பெரிய புராணம் இருந்தது. அதனால் வைணவ பரமாகக் கம்பர் ராமகதையைத் தேர்ந்தெடுத்துக் காப்பியம் இயற்றினார் என்று கொள்ளலாம்.

கம்பரது காப்பியத்தின் பெருமை அது தமிழ்ப்பண்பாட்டின் உருவம் என்பதுதான். சங்ககாலத்திலிருந்து தமிழர் வளர்த்திருந்த சமுதாய, அரசியல் சிந்தனைகளைப் பொதிந்து வைத்துள்ள காப்பியம். தமது தமிழ் நடைக்குக் கம்பர் இளங்கோவடிகளையும், ஆழ்வார்களையும், திருத்தக்கத் தேவரையும், ஏனைய பழந்தமிழ் இலக்கிய கர்த்தாக்களையும் நன்கு படித்து உபயோகித்துக் கொண்டார் எனலாம். கம்பரது காப்பியம் அறியாத தமிழரில்லை எனும்படி இன்று இந்நூல் அருமை பெருமைகளில் சிறந்து விளங்குகிறது.

கம்பர் இராமனை விஷ்ணுவின் அவதாரமாகவே காண்கிறார். ஆயினும் சாமானிய மனிதனாகவும் இராமன் நடந்து கொள்கிறான். அப்படியிருந்த --தால்தான் நமக்குக் காவியத்தில் ருசியும், இராமன் மற்றும் அனைத்துக் கதாபாத்திரங்களிடமும் ஈர்ப்பும் ஏற்படும். காப்பியம் என்பதற்கேற்ப, விரிவாக நாட்டுச் சிறப்பு, நகர்ச்சிறப்பு அமைக்கிறார். தமிழர்கள் வரையறை செய்து கொண்டபடி நிலப்பிரிவுகள் முதலியன சுட்டப்படுகின்றன. கோசல நாடு மருத நிலம் என்று காண்கிறோம்:

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,

கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,

தெண்திரை எழினி காட்ட, தேம் பிழி மகர யாழின்

வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும்மாதோ.

பண்டைத்தமிழர் வழக்கப்படி இராமனும் சீதையும் பரமசிவனின் வில்லை ஒடிக்கும் முன்பே, ஒருவரை ஒருவர் கண்டு காதல் வயப்பட்டதாகக் கம்பர் காட்சியை அமைத்திருக்கிறார். இதயங்கள் பேசிக் கொள்கின்றன. அது போதுமே, என்று இராமன் - சீதை அவதார ரகசியத்தை ரகசியமாகவே உணர்த்துகிறார்.

மருங்கு இலா நங்கையும், வசைஇல் ஐயனும்,
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ

கம்பரால் ஆறு காண்டங்களில் கூறப்படும் ராமகாதை, தமிழகத்தில் வைணவருக்கு ஒரு பாராயண பிரபந்தமாகவே ஆகிவிட்டது. கம்பரது தமிழின் மாட்சியும் அவர் காட்டும் பாத்திரங்கள் தெய்வீகத்துடன் ஒளிர்வதும் ஒரு காரணம். இராமாயணமே சீதையின் பெருங்கதை (ஸீதாயா: சரிதம் மஹத்) என்று வால்மீகி கூறுவதை அப்படியே ஏற்றுக் கொண்டு கம்பர் ஜானகியின் பாத்திரத்தை அமைத்திருக்கிறார்.

உன்பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற

மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன்

தன்பெருந் தனயை என்னும் தகைமைக்கும், தலைமை சான்றாள்

என்பெருந் தெய்வம்! ஐயா! இன்னமும் கேட்டி என்பான்...

விற்பெருந் தடந்தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்,

நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்;

இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்

கற்புஎனும் பெயரது ஒன்றும், களிநடம் புரியக் கண்டேன்.

கம்பரது இராமாவதாரத்தில் பல சிறப்புகள், பல பாத்திரங்கள் வாயிலாகத் துதிகள் ஆங்காங்கே ஒளி வீசுகின்றன. ஒப்பில்லாத விராதன் துதி பதினான்கு

செய்யுட்களில் தமிழ் மொழியைத் தெய்வ மொழியாக்குகிறது.

தாய்தன்னை அறியாத கன்று இல்லை; தன் கன்றை

ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகின் ஐய!

நீ அறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலை அறியா;

மாயை இது என் கொலோ? வாராதே வர வல்லாய்!

காப்பியத்தில் எங்குமே ரசக்குறைவாக ஒரு செய்யுள் காணமுடியாது. நன்னெறிக்கும் ஒரு காப்பியமாக விளங்கும் இராமாவதாரம் கற்பு, ஏக பத்தினி விரதம், வாய்மை, வீரம், வைராக்கியம், பொறுமை என்று பல நல்ல நெறிகளைக் கதை மாந்தர் மூலம் புகட்டுகிறது. சாதி சமய வழக்கை விட்டுச் சகோதரத்துவம் பேணக் கம்பரின் இராமச்சந்திரமூர்த்தியிடம் செல்ல வேண்டும். வீடணன் அடைக்கலம் கோரி வருகிறான். அவனைத் தம்பியாகவே இராமன் ஏற்றுக் கொண்டு விடுகிறான்.

குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு; பின், குன்று சூழ்வான்

மகனொடும், அறுவர் ஆனேம்; எம்முழை அன்பின் வந்த

அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;

புகல் அருங்கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

காப்பியத்தின் மேன்மைக்கு இன்னுமொரு முக்கிய காரணம் உண்டு. அதுதான் இரணியவதைப் படலம். வால்மீகியின் இராமாயணத்தில் இல்லாத இந்தக் காட்சியைக் கம்பர் யுத்தகாண்டத்தில் அமைத்ததுமன்றி, பக்திக்கும் அடைக்கல நெறிக்கும், கம்பீரமான தமிழ் மொழிக்கும் ஒரு அருங்கலச் செப்பாகவே அமைத்திருக்கிறார். அகம்பாவமே உருவெடுத்த இரணியன் சரிதத்தைக் கேட்டபின்பு இராவணன் மனம் மாறிவிடும் என்று வீடணனுக்கு ஒரு சிறு நம்பிக்கை. அதனால் மந்திராலோசனையின் போது நரசிம்மாவதாரத்தின் பெருமையை விளக்குகிறான். வைணவத்தின் உயிர்நாடியான எட்டெழுத்தினை ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆழ்ந்த கம்பரது தமிழ் காட்டும்:

காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்,

சேம வீடு உறச்செய்வதும், செந்தழல் முகந்த

ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும், ஒருவன்

நாமம்; அன்னது கேள்; நமோ நாராயணாய!

பக்தர்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்ட செய்யுட்கள் நிறைந்த இப்படலத்தில், எங்கும் நிறைந்துள்ள இறைவனைப் பிரகலாதன் காட்டும் செய்யுளை அறியாதார், தமிழ் அறியாதாரே!

சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சதகூறு இட்ட

கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற

தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லிலும் உளன்; இத்தன்மை

காணுதி விரைவின் என்றான்; நன்று எனக் கனகன் சொன்னான்.

இரணியன் தூணை அறைகிறான். நரசிம்மம் தோன்றுகிறது. அழிவற்ற தமிழ்ச்செய்யுளும் தோன்றுகிறது:

நசைதிறந்து இலங்கப் பொங்கி, 'நன்று, நன்று!' என்ன நக்கு,

விசைதிறந்து உருமு வீழ்ந்ததென்ன ஓர் தூணின், வென்றி

இசைதிறந்து உயர்ந்த கையால் எற்றினான்; எற்றலோடும்,

திசைதிறந்து,அண்டம் கீறச் சிரித்தது, அச்செங்கண் சீயம்.

கம்பரது காப்பியம் தவிர அவர் பாடிய சடகோபர் அந்தாதி ஒரு வைணவ விளக்காக ஒளி சிந்துகிறது. நம்மாழ்வாரிடம் அவர் தெய்வ பக்தி கொண்டிருந்ததை இந்நூல் வெளிப்படுத்துகிறது. ஆழ்வார், 'கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ' என்று தோற்றுவித்த கேள்வி கம்பரை வெகுவாகத் தாக்கியது போலும்! கம்பர் உத்தரகாண்டம் பாடவில்லை; இராமபட்டாபிஷேகத்துடன் முடித்துவிட்டார். பிற்பாடு ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டம் பாடியிருக்கிறார்.

இராமகாதை போல் பாரதமும் வைணவ இலக்கியமே. கண்ணனின் அவதார மேன்மை கூறுவது. கம்பரது காலத்திலேயே பெருந்தேவனாரின் பாரத வெண்பா தோன்றியதாகத் தெரிகிறது. பெருந்தேவனார் மூன்றாம்

நந்திவர்மன் காலத்தவர் என்று திரு மு. அருணாசலம் கூறுகிறார். நூலில் வெண்பாவும் உரைநடையும் மாறி மாறி வருகின்றன. முழுமையாகக் கிடைக்காவிட்டாலும், கிடைத்துள்ள 830 பாடல்களில் பெரும்பாலானவை திருமாலிடம் ஆசிரியருக்கு இருந்த அசைவற்ற பக்தியைக் காட்டுகின்றன.

நீலமே, காரின் முகிலே, நெடுங்கடலின்
கோலமே அத்திகிரிக் கோமானே - மூலமென
மாத்தா மரைமடுவில் மாலயானை ஓலமிடக்
காத்தாய், கடை போகக் கா.

ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய கம்பரது இராமாவதாரத்திற்குப் பல நூற்றாண்டுகள் கழிந்தபின் வைணவ புராணங்கள் தோன்றலாயின. பதினான்காம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் பாரதம் பாடினார். வக்கபாகை ராஜ்ஜியத்தின் அதிபதியாகிய வரபதியாட் கொண்டான் கேட்டுக் கொண்டதன் பேரில், கண்ணனைப் பற்றிக் காப்பியமெங்கும் பாடமுடியும் எனும் பக்தி காரணமாக ஆசிரியர் இந்நூலை எழுதியதாக அவரே கூறுகிறார்:

முன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானுமீ தியம்புதற்
கிசைந்தேன்.

இவரும் பத்துப் பருவங்களே பாடியிருக்கிறார். பல செய்யுட்கள் தமிழர் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தவை. செய்யுளைப் படிக்குந்தோறும் கௌரவர் சபையிலே அபலையாகத் திரௌபதி நின்ற காட்சியை நாமும் கண்டு பதைக்கிறோம். அதே சமயம் பூரண பக்தியின் செவ்வியினையும், அடைக்கலநெறியின் ஆற்றலையும் உணர்கிறோம்:

ஆறாகியிருதடங்க ணஞ்சனவெம் புனல் சோர
வளகஞ்சோர
வேறான துகிற்கைந்த கைசோர மெய்சோர
வேறோர் சொல்லுங்
கூறாமற் கோவிந்தா கோவிந்தா வென்றரற்றிக்
குளிர்ந்து நாவில்
ஊறாத வமிழ்தூற வுடல்புளகித் துள்ளமெலா
முருகி னாளே.

16ஆம் நூற்றாண்டில் செவ்வைச் சூடுவார் பாகவதம் இயற்றினார். பாகவதம் என்று வரும்போது அந்நூலை முழுமையான வைணவ இலக்கியமாகவே காண்கிறோம். கிருஷ்ணாவதாரத்திற்குப் பத்தாம் கந்தத்திலிருந்து ஆரம்பம். அதுவரை நாராயணனின் முந்தைய அவதாரங்கள் பற்றி விரிவாகக் கூறி ஆசிரியர் காப்பியத்தை நடத்துகிறார். பல அழகிய துதிகள், நாராயண கவசம், நம்மைக்கட்டிப் போடும் கதைப்போக்கு. கண்ணன் பிறப்பும் வளர்ப்பும் யாருக்குச் சலிக்கும்? மண்ணையுண்ட வாயன் அன்னைக்குக் காட்டும் காட்சியைச் செவ்வைச் சூடுவார் தெள்ளிய தமிழில் அமைக்கிறார்.

விண்கண்டாள் விண்வளைக்கும் வெங்கதிருந்
தண்சுடரும் விளங்கக் கண்டாள்:
மண்கண்டாள், மண்வளைந்த மாகடலும்
பேருயர்மால் வரையும் கண்டாள்;
தண்கொண்ட வெண்தோட்டுத் தளவநெடு
வனங்கண்டாள், தனையும் கண்டாள்;
பண்கொண்ட வண்டரற்றும் பசுந்துளவோன்
இவன்எனவே பரவி னாளால்.

நெல்லி நகர் அருளாள தாசர் (வரதராச ஐயங்கார்) எழுதியுள்ள புராண பாகவதம் 132 படலங்களில் பாகவதக் கதையைச் சொல்வதாக அமைந்திருக்கிறது. இதில் புதுமையாக நாரதர், பாகவதத்தை ருக்மணிக்குச் சொல்வதாக இருக்கிறது. மேலும், நப்பின்னைக்கென்றே ஒரு தனிப்படலம் இருக்கிறது. யசோதையின் சகோதரன் கும்பனின் மகள் நப்பின்னையை, கண்ணன் ஏழு ஏறுகளை அடக்கிப் பரிசாகப் பெற்று மணந்ததாக அருளாளதாசர் கூறுகிறார். இதுவரை தோன்றிய வைணவ நூலாசிரியர்கள் போல் அருளாளதாசரும் ஆழ்வார்களது பாசுரங்களில் ஆழங்கால்பட்டிருப்பது நன்கு தெரிகிறது. பாகவதத்தினுள்ளே பாரதக் கதையை விரிவாகவே அமைத்துள்ளார். கண்ணன் சரிதையல்லவா? கௌரவசபைக்குத் தூது செல்லும் கண்ணன் வரும் காட்சி:

காண்டீபம் கையின் ஏந்தும் காளைதன் சகாயன்
வந்தான்
நீண்டபார் வான்பாதத்தின் அளந்தருள் நிமலன்
வந்தான்
பூண்டவன் புழைக்கை மாமுன் அழைத்திடப்
போந்தான் வந்தான்
பாண்டவர் தூதன் வந்தான் என்றன பைம்பொற்
சின்னம்.

வரும் தர்மம் காப்பாற்றப்படும், அறநெறி ஓங்கும், கிருத யுகம் பிறக்கும் என்று நம்பிக்கையுடன் நூல் நிறைவுறுகிறது.

வைணவ புராண இலக்கியத்தில் கூடற்புராணம், திருக்குருகை மான்மியம் போன்ற சில அருமையான நூல்கள் உள்ளன. ஆண்டாள் பிள்ளைத்தமிழ், இராமனுஜத் திருப்புகழ், ஆண்டாள் சந்திரகலாமாலை, அழகர் கிள்ளை விடுதூது என்று பட்டியல் நீளும். பல நூல்கள் சிதைந்து போயின. ஆசிரியர் பெயர் தெரியாவிட்டாலும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இரணியவதைப் பரணி மிக முக்கியமான நூல். நரசிங்கம் பிரகலாதனிடம் மன்னிப்புக் கேட்பதாக அமைந்த செய்யுட்கள் நூலாசிரியர் மனிதாபிமானம் மிக்கவர் என்பதைத் தெளிவுறுத்தும்.

வருக! என் துணைவன் இங்கே
வருக! என்று அருளி வள்ளல்,
ஒருகைகொண்டு அணைத்துப் பின்னை
உச்சிமேல் ஒரு கை வைத்தே,

தாதையை நீயும் காணச்
சலத்தினால் தவறு செய்த
பேதைமை நம்பால் உண்டு, இப்
பிழையைநீ பொறுத்தி என்றே...

துதி இலக்கியமாக மலர்ந்தவற்றில் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் அஷ்டப் பிரபந்தத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டும். திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்தந்துவமாலை, திருவரங்கக்கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, மற்றும் சீரங்கநாயகரூசல் என்ற எட்டுச் செய்யுட் சுரங்கங்களைக் கொண்டது. துதி நூல்களிலே அகப்பொருள் பரமாக எழுதுவதில் ஐயங்கார் சாமர்த்தியம் மிக்கவர்.

கழலப்புகுந்த வளையறியா ரென் கருத்தறியா
ரழலப்புகன் றொறுப்பா ரென்னைமா ஏறுகாற்கரும்பு
சுழலப்புனைந் ததுழாய்மார்பர் மாலிருஞ்
சோலை யென்னார்
தழலப்புவா ரென்றனங்களி லேசந்தனங்
களென்றே

யமகம், திரிபு முதலியவற்றைக் கையாள்வதில் வித்தகர் என்பதையும் இங்கே கூறவேண்டும். சீரங்கநாயகரூசல் பாட்டிலே ஆழ்வார்களின் சொற்றொடர்களைப் பாங்காக அமைத்திருக்கிறார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேனென்ற
திகழருக்கனணி நிறமுந்திகிரிசங்கு
மிருட்கொண்ட கருங்கங்குலிடையேகோல
விடை கழியிற்கண்ட பிரானேற்றம்பாட
மருக்கொண்ட கொன்றையான் மலரின்மேலான்
வானவர்கோன் முதலானோர் மகுடகோடி
நெருக்குண்டதாளரங்கராடீரூசல்
நீளைக்குமணவாளராடீரூசல்.

இந்த ஊஞ்சல்பாட்டின் வழியிலே ஐயங்காரின் குமாரர் கோனேரியப்பனையங்கார் சீரங்க நாயகியாரூசல் பாடியிருக்கிறார்.

வழிவழியாக இனிய தமிழில் வைணவ இலக்கியம் இன்றுவரை வளர்ந்து வருகிறது. சென்ற நூற்றாண்டில் கூடப் பல பெரும் புலவர்கள் இவ்விலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர். மதுரகவி ஸ்ரீநிவாச ஐயங்காரது பன்முகப்புலமை அனுமன் அந்தாதி, அலங்கார கிருஷ்ணன் பதிகம், திருவரங்கன் நிரோஷ்டக கொம்பில்லா யமக அந்தாதி, பிருந்தாவனப்பேறு முதலிய நூல்கள் மூலம் தெரியவருகிறது.

புராணங்கள் காட்டும் திருவிளையாடல்கள்



பேரா. இரா. சுப்புராயலு,
தஞ்சை.

நம்நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் புராணங்கள் 18 ஆகும். அவையாவன: 1. பிரம்ம புராணம் 2. பத்ம புராணம் 3. வைணவ புராணம் 4. சைவ புராணம் 5. பாகவத புராணம் 6. பவிடிய புராணம் 7. நாரத புராணம் 8. மார்க்கண்டேய புராணம் 9. ஆக்கினேய புராணம் 10. பிரமகைவர்த்த புராணம் 11. இலிங்க புராணம் 12. வராக புராணம் 13. கந்த புராணம் 14. வாமன புராணம் 15. மச்ச புராணம் 16. கூர்ம புராணம் 17. கருட புராணம் 18. பிரமாண்ட புராணம் என்பனவாம். இவற்றுள் பத்து சிவ புராணங்கள், நான்கு விஷ்ணு புராணங்கள், இரண்டு பிரம புராணங்கள், ஓர் அக்கினி புராணம், ஒரு சூரிய புராணம் ஆகியவை அடங்கும். இவை அனைத்துமே வடமொழிப் புராணங்கள் ஆகும்.

இப்புராணங்களை எங்கு சொல்ல வேண்டும், யார் சொல்ல வேண்டும், எப்படிச் சொல்லவேண்டும், யார் கேட்க வேண்டும் என்பதற்கு நியமங்கள் உள்ளன. வேத, உபநிடதங்களைத் தொடர்ந்து சிவபெருமான் பதினெண் புராணங்களையும் நந்தியெம்பெருமானுக்கு அருள, நந்தியெம்பெருமான் அவற்றைச் சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். சனற்குமாரரிடம் அவற்றை வியாச முனிவர் கேட்டுச் சூத முனிவரிடம் கூற, அவர் மற்ற முனிவர்கள் கேட்டு உய்யுமாறு உலகுக்கு அருளினார். இவற்றுடன் இதிகாசங்களும் எழுந்தன. இவை அனைத்துமே மனித குலத்தை நல்வழிப்படுத்தவும், இறைவழியில் செலுத்தவும் எழுந்தவையாகும்.

தமிழில் எழுதப்பட்ட புராணங்களுள் முதன்மையானவை மூன்று ஆகும். அவை கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவையாகும். தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களோடு தொடர்புபடுத்தி இப்புராணங்கள் எழுதப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து பல்வேறு தலபுராணங்களும் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. கந்தபுராணத்தில் காஞ்சியின் பெருமை பேசப்படுகிறது. பெரிய புராணத்தில் திருவாரூரின் பெருமை சாற்றப்படுகிறது. திருவிளையாடற் புராணம் மதுரையின் பெருமையை உரைப்பதாகும். இப்புராணங்கள் சைவ புராணங்கள் ஆகும். சிவபெருமானின் திருவிளையாடல்களைக் காட்டுவன ஆகும்.

இறைவனை அலகிலா விளையாட்டு உடையார் என்று கம்பர் கூறினார்.

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

என்பது கம்பராமாயணப் பாடலாகும். எனவே இறைவனின் திருவிளையாடல்களை இப்புராணங்கள் எவ்வாறு பேசுகின்றன என்பதையும், ஆன்மாக்கள் கடைத்தேற அவை எவ்வாறு வழிகாட்டுகின்றன என்பதையும் இங்குக் காண்போம்.

1. கந்த புராணத்தில் திருவிளையாடல்

வடமொழியில் உள்ள ஸ்கந்த புராணம் ஆறு சங்கிதைகளை உடையது. அவையாவன: 1. சனற்குமார சங்கிதை, 2. சூத சங்கிதை, 3. பிரம சங்கிதை, 4. விஷ்ணு சங்கிதை, 5. சங்கர சங்கிதை, 6. சூர சங்கிதை ஆகியனவாம். இவற்றுள் சங்கர சங்கிதை பன்னிரண்டு கண்டம் உடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசிய கண்டம்.

சிவரகசிய கண்டம் ஏழு காண்டங்களை உடையது. அவையாவன: 1. சம்பவ காண்டம், 2. அசுர காண்டம், 3. மகேந்திர காண்டம், 4. யுத்த காண்டம், 5. தேவ காண்டம், 6. தட்ச காண்டம், 7. உபதேச காண்டம் ஆகியனவாம். இவற்றுள் முதல் ஆறு காண்டங்களைக் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள் கந்தபுராணம் என்று பெயரிட்டுத் தமிழில் 10,345 பாடல்களைக் கொண்ட நூலாக அருளிச் செய்தார். ஏழாவதாகிய உபதேச காண்டத்தைக் கோனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச் செய்தார். இவர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் மாணவராவார்.

கந்த புராணத்தில் முதலாவது காண்டம் உற்பத்திக் காண்டமாகும். இரண்டாவதாகிய அசுரகாண்டம் 43 படலங்களைக் கொண்டது. மூன்றாவதாகிய மகேந்திர காண்டம் 21 படலங்களையும் நான்காவதாகிய யுத்த காண்டம் 16 படலங்களையும் உடையன. ஐந்தாவதாகிய தேவ காண்டம் 5 படலங்களையும் ஆறாவதாகிய தட்ச காண்டம் 24 படலங்களையும் கொண்டுள்ளன. இப்படலங்களில் பல்வேறு புராண நிகழ்வுகள் விவரித்துக் கூறப்பட்டிருப்பினும், இப்புராணம் சிவபெருமானின் குமரரான முருகப் பெருமானின் பெருமையை எடுத்துக் கூறுவதாகவே உள்ளதால் இது கந்த புராணமாயிற்று.

கந்தனின் திருவிளையாடலை விளக்குவதற்காகத் திருவிளையாட்டுப் படலம் என்ற ஒரு தனிப்படலம் உற்பத்திக் காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. இப்படலம் 128 பாடல்களைக் கொண்டது. குமரனாகிய முருகவேள் தன் மனத்தில் திருவிளையாடல் புரிய இச்சை கொண்டு மண்ணுலகிலும், விண்ணுலகிலும், சத்தியலோகத்திலும், சத்திலோகத்திலும் மற்றஅண்டங்கள் அனைத்திலும் உலவினான். பாலனாகவும், காளையாகவும், வேதியனாகவும், முனிவனாகவும், வீரனாகவும் உருக்கொண்டு உலவினான். நடந்தும், குதிரை மேலும், யானை மேலும், தேரின் மேலும், சிங்கத்தின்மேலும், ஆட்டுக்கடாமீதும், விமானத்தின் மீதும் சென்றான். இவனது திருவிளையாடலையும், மாயச் செயல்களையும் கண்டு உமை மகிழ்ந்து சிவபெருமானிடம் கூற, சிவபெருமான் தம்முடைய சக்தியே ஆறுமுகன் என்றும், தாமும் அவனும் வேறுபாடு உடையவர் அல்லோம் என்றும் விளக்கினார். அசுரர்களை அழித்து, தேவர்களைக் காக்கவே முருகன் தோன்றியுள்ளான் என்றும் கூறினார். முருகனின் திருவிளையாடல்களைக் கண்டு உமை மகிழ்ந்திருந்தாள்.

முருகன் தன் மனத்தில் ஒரு திருவிளையாடலை நினைத்து அதனை நிகழ்த்தத் தொடங்கினான். மலைகளை நிலைகுலையச் செய்து முறைமை கெடுமாறு செய்தான். கடல்களை ஒன்றாக்கினான். ஆறுகளை நிறுத்தினான். பாதாள உலகில் உள்ள நாகங்களைப் பிடித்து மலைகளில் சுற்றிக் கட்டித் தேர்களை இழுப்பதுபோன்று இழுத்தான். திசை யானைகளை ஒன்றோடொன்று பொருத வைத்தான். ஆகாய கங்கை நீரைக்கொண்டு வடவாக்கினியை அணைத்தான். கருடனையும், வாசுகி என்னும் பாம்பையும் பிடித்துச் சண்டையிடச் செய்தான். சூரியனைச் சந்திரனின் பாதையில் செலுத்தினான். தேவலோகத்தில் பழமையான நகரங்களைப் பெயர்த்து அமைப்பு மாறும்படி செய்தான். நட்சத்திரங்களைக் கவண் கற்களாக்கித் தேவர்களின் மகுடம் மீது அடித்து வீழ்த்தினான். மனிதரும், தேவரும் அச்சம் அடையும்படி, ஆனால் அழிவடையாத வகையில் முருகன் தன் திருவிளையாடல்களை நடத்தினான். அசுரர்கள் கண்களில் முருகன் தென்படாததால் அவர்கள் குழப்பமடைந்தனர். இவை சிவபெருமான் செய்த மாயம் என்று எண்ணினர்.

தேவர்கள் ஒன்றுசேர்ந்து மேருமலையில் தங்கியிருந்த இந்திரனிடம் சென்று முறையிட்டனர். இந்திரன், தனக்கும் இது என்னவென்று தெரியவில்லை என்று கூறிப் 'பிரமனைப் பார்த்துக் கேட்போம்' என்று புறப்பட்டான். அப்போது மேருமலையில் முருகன் சிறுகுழந்தைபோல் காட்சியளித்தான். அவர்களின் ஐயத்தைத் தீர்ப்பதுபோன்று மேருமலையை அசைத்தான். அதன் சிகரத்தைப் பிடுங்கி எறிந்தான். முருகனை இன்னார் என்று அறியாத தேவர்கள் அவன் குழந்தை அல்லன், மாய வித்தைகளைப் பெற்றவன் என்று கருதி அவனுடன் போர் செய்து வெற்றி கொள்ள முடிவு செய்தனர்.

இந்திரன் ஐராவத யானையை அழைத்து அதன் மேலமர்ந்து வலிமை பொருந்திய வச்சிராயுதம் முதலிய கருவிகளுடன் முருகனைச் சூழ்ந்து கொண்டு போரிட்டான். அவன் வீசிய ஆயுதங்கள் முருகன்மீது பட்டு மணல்போலப் பொடியாகிவிட்டன. ஐராவத யானையின் மீது முருகவேள் செலுத்திய அம்பு அதனைக் கொன்று சாய்த்தது. மற்றொரு அம்பு இந்திரன் மகுடத்தைச் சாய்த்தது. மற்றஅம்புகள் இந்திரனை மூர்ச்சையடையச் செய்தன. குமாரவேளின் அம்புகள் எமனது வலிமையை அடக்கின. சூரியனையும்,

வாயுவையும், அக்கினியையும் அழித்தன. தேவர்கள் நிலைகுலைந்தனர். சிலர் வீழ்ந்தனர். ஓடியவர்கள் வாழ்ந்தனர்.

வெற்றி பெற்று நின்ற முருகனைக் கண்ட நாரதன் தேவகுருவான வியாழனிடம் சென்று நிகழ்ந்தவற்றை உரைத்தான். வியாழனும் போர்க்களம் சென்று குமாரவேளைக் கைதொழுது போற்றி, "அசுரர்களான தாரகாசுரன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகியோர் கொடுத்த துன்பம் தாளாமல் இந்திரன் மேரு மலையில் வந்து மறைந்திருந்தான். முருகன் அருள்பெற்று அவர்களை அழித்துத் தன் அரசைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணினான். உனது திருவிளையாடல் அறியாத இந்திரன் ஞானம் இல்லாமல் போர் செய்யத் துணிந்தான். நீ அவனுக்கு உரிய தண்டனையைத் தந்துள்ளாய். இந்தத் தேவர்கள் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்க. அவர்கள் உணர்வு பெற்று எழுகின்றவகையில் அருள்புரிக" என்று வணங்கி வேண்டினான். குமரன் குறுநகை செய்து ஐராவத யானை முதல் தேவர்கள் ஈறாக அனைவரும் உயிர்பெற்று எழத் திருவருள் புரிந்தான். இந்திரன் முதலான தேவர்கள் தாங்கள் போரிட்டது கந்தனுடன் என்பதை அறிந்து வருந்தினர்; வாடினர்; மயங்கினர்; நடுங்கினர். முருகன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். குமாரவேள் அருள் செய்து வருந்த வேண்டாம் என்று ஆறுதல் அளித்தான்.

ஆனால் தேவர்கள், "அறிவற்ற மூடர்களாகிய எங்களை மன்னிக்கவேண்டும்" என்று மீண்டும் கேட்டனர். அதற்குக் குமரன், "நீங்கள் நம்மை ஒரு குழந்தையாக நினைத்துப் போரிட்டீர்கள். நம்முடைய வலிமையும், உயர்வும் இன்னும் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறி விசுவரூபம் எடுத்துக் காட்டினான். அவ்வுருவத்தில் எட்டுத் திக்குகளும், பதினான்கு புவனங்களும் எட்டு மலைகளும், ஏழு கடல்களும் அடங்கியிருந்தன. அவ்வடிவம் முழுதும் காண இயலாததாகி ஓங்கி நின்றிருந்தது. தேவர்கள், "எங்களால் முழுவதும் பார்க்கும்படி அருள் செய்ய வேண்டும்" என்று கேட்கவும், முருவேள் கருணை கொண்டு எல்லையற்ற தொலைவையும் பார்க்கக்கூடிய ஒளி மிகுந்த கண்களை அளித்தான். அவன் வடிவம் முழுவதையும் இந்திரன் முதலான தேவர்கள் தரிசித்தனர்.

தேவர்கள் முருகவேளை வணங்கி, "அருவமாகவும் உருவமாகவும் அருவுருவமாகவும் நின்ற வேதநாயகனே! எங்கள் சோகமானவற்றை நீக்கிச் சூரபத்மன் முதலான அசுரர்களைத் தொலைத்து எங்களை வாழ்விப்பாய். உன் பழைய வடிவத்துடன் எங்களுக்கு அருள்புரிவாய்" என்றதும், முருகன் "இன்னதோர் அண்டம் தன்னில் எம்மில் வேறுற்றவெல்லாம் தொன்னெறியாக" என்று அருள்புரிந்தான். உடனே முறைபிறழ்ந்து இருந்த பொருள்கள் யாவும் முன்னைய நிலையைப் பெற்றன.

முருகன் மேருமலையை விட்டகன்று கயிலைமலைக்குப் பக்கத்திலிருந்த மற்றொரு பெரிய மலைக்குச் செல்லவும், அங்கு தேவர்கள் தொடர்ந்து சென்று திருவடிகளை வணங்கினர். இந்திரன், விசுவகர்மாவை விட்டு ஒரு பெரிய கோயிலை அமைக்கச் செய்தான். அத்திருக் கோயிலில் குமாரவேளை எழுந்தருளும்படி வேண்டினான். குமாரவேளும் எழுந்தருளினான். ஆகாய கங்கை நீரால் தேவர்கள் குமாரவேளைத் திருமஞ்சனம் ஆட்டினர். பட்டாடை சூட்டி, பொன் ஆபரணங்களால் அலங்கரித்து மலர்மாலைகள் சூட்டினர். கந்தனும் கயிலை சென்றடைந்தான். கந்தனின் இத்திருவிளையாட்டுப் படலம், குழந்தையாகிய கந்தனின் வலிமையையும், மகிமையையும் வெளிப்படுத்துவதற்காகக் கந்தபுராணத்தில் இடம்பெறச் செய்ததாகும்.

2. பெரிய புராணத்தில் திருவிளையாடல்

பெரிய புராணம் சேக்கிழாரால் அருளப் பெற்ற திருத்தொண்டர் புராணமாகும். சைவத்திரு முறைகள் பன்னிரண்டனுள் இது பன்னிரண்டாம் திருமுறையாகும். இது எந்த நூலின் மொழிபெயர்ப்போ, தழுவலோ அன்று. சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையின் வழிநூலாகும். தமிழில் வரையப்பெற்ற மூலநூலாகும். இதில் 63 நாயன்மாரின் வரலாறும் 9 திருக்கூட்டத்தினரின் சிறப்பும் பேசப்பட்டுள்ளன. இந்நூல் 13 சருக்கங்களையும், 4286 பாடல்களையும் கொண்டது. சைவ அடியார்களின் வரலாறு தனித்தனியாகப் பேசப்பட்டிருந்தாலும், அயலார் அறியாமல் திருத்தொண்டு செய்த நாயன்மாரின் பெருமையை உலகறியச் செய்யச் சிவபெருமான் திருவிளையாடல்கள் நிகழ்த்தியுள்ளார். இத்திருவிளை யாடல்களைத் திருவிளையாடல் என்றே சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளதனைப் பெரிய புராணத்தில் காணமுடிகிறது.

உமையிடம் நிகழ்த்திய திருவிளையாடல் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவன் விரும்புவது பூசனையே என்பதனைக் கேட்டுணர்ந்த உமையம்மை சிவபெருமான் அருளியபடி தென்திசையில் காஞ்சி நகரில் மா அமர்ந்த இருக்கையைத் தேடி வருகிறாள். இறைவன் திருவிளையாட்டால் 'ஏக மா முதல் எதிர்ப்படாது ஒழிய' பிராட்டி அருந்தவம் புரிந்தாள். பின்னர் சிவபிரான் வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில் வந்து தோன்றினார்.

உமையம்மை பூசனையினை ஆகம விதி வழி இயற்ற, நாதரும் பெருவியப்போடு நயந்து, நங்கை அர்ச்சனை செய்யும் பொழுதில் காதல் மிக்க ஓர் திருவிளையாட்டில் ஈடுபட்டார். கம்பை மாநதியில் கடல் ஏழும் ஒன்றாக ஓங்கி, வானமும் உட்படப் பரந்து மீது செல்வது போல் வெள்ளம் வரத் திருவுள்ளம் செய்தார். தம் பெருமான் மேல் வெள்ளம் வந்துறும் என வெருக்கொண்டு, பதைப்புறு காதலுடன் திருக்கையால் தடுத்தும் வெள்ளம் நில்லாமையால் மாவின் மேவிய தேவ நாயகரை முலைக்குவட்டோடு வளைக்கையால் நெருக்கி இறுகத் தழுவிட, ஏகம்பர் தம் மேனி குழைந்து காட்டினார். ஆதி தேவனார், அகிலாண்ட நாயகி மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு, வளைத்தழும்புடன் முலைச்சுவடு அணிந்தார். இத்திருவிளையாடலால் காஞ்சி மாநகர் அம்மையின் அறம் வளர்க்கும் பதியாயிற்று.

'பெரியபுராணத்தின் நாயகரான சுந்தரர், 'தம்பிரான் தோழர்' என்று பெயர் பெற்றவர். சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற பெருமையுடையவர். திருமுதுகுன்றத்தில் சிவபெருமான் பன்னிரண்டாயிரம் பொன் அருள, அதனை ஆரூர் உள்ளோர் வியப்ப அங்கே வரப் பெறவேண்டும் என்று சுந்தரர் வேண்டினார். சிவபெருமானும், "மணிமுத்தாற்றில் இட்டு, பொருள் முழுவதையும் ஆரூர்க் குளத்தினில் போய்க் கொள்க" என்று அருளினார்.

ஆனால் ஆரூர்க் குளத்தில் பரவையார் முன்பாகக் குளத்தில் இழிந்து தடவும்போது, நீற்றழகர் திருவிளையாட்டினில் நின்று மாற்றுறு செம்பொன் குளத்து வருவியாது ஒழிந்தருளினார். பரவையார் நகை செய்ய, சுந்தரர், "கூத்தா! தந்தருளாய் இக் கோமளத்தின் முன்" என்று பரவிப் பாடவும், கூத்தனார் திருவருளால் பொன்திரள் வந்தெய்தியது.

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியைக் கண்டு முந்தை விதியால் உள்ளம் திரிந்தார். சிவபெருமான் சுந்தரரிடம், "சங்கிலியை உனக்குத் தருகிறோம்; கொண்ட கவலை ஒழிக" என்று சாற்றிய பின், சங்கிலியின் கனவில் தோன்றிச் சுந்தரரை மணந்து கொள்ளுமாறு கூறினார். சுந்தரர் பரவையாருடன் ஆரூரில் வாழ்வதை அறிந்திருந்த சங்கிலி அதனைச் சிவபெருமானிடம் கூறவும், அவர், "பொற்கொடியாய்! உனை இகந்து போகாமைக்கு ஒரு சபதம் அற்றமுறு நிலைமையினால் அவன் செய்வான்" என்று அருளினார். பின்னர் தம் தோழனார்பால் வந்து அதனைக் கூறவும், சுந்தரர், "மங்கையவள்தனைப் பிரியாவகை சபதம் செய்வதற்கு அங்கு அவளோடு யான் வந்தால், அப்போது கோயில் விட்டு, தங்கும் இடம் திருமகிழ்க்கீழ் கொள வேண்டும்" எனத் தாழ்ந்தார். உம்பர் நாயகரும் அதற்கு உடன்படுவாராய், "நம்பி! நீ சொன்னபடி நாம் செய்தும்" என்றருளினார். செஞ்சடையார் அவர் மாட்டுத் திருவிளையாட்டினை மகிழ்ந்தார். சங்கிலியார் மருங்கு முன்பு போல் சார்ந்தருளி "நங்கை உனக்கு ஆரூரன் நயந்து சூளுறக் கடவன்! அங்கு நமக்கு எதிர்செய்யும் அதற்கு நீ இசையாதே! கொங்கலர் பூ மகிழின்கீழ்க் கொள்க!" என்று குறித்தருளினார்.

சுந்தரர் மகிழ மரத்தடியில் சூளுரைத்துக் கொடுத்து சங்கிலியாரை மணம் புணர்ந்தார். ஆனால் ஒற்றிநகரை விட்டுப் புறப்பட்டபோது, வாக்கு மீறியதால் கண்ணை இழந்தார். ஊன்றுகோல் ஒன்றினை ஏதிலார் போல் சிவபெருமான் தந்தருள, அவர் பல பதிகளுக்கும் சென்றார். காஞ்சியில் ஏகம்பரரை வணங்கி வேண்டி இழந்த இடக்கண் பெற்றார். திருவாரூர் சென்று புற்றிடங் கொண்டாரை வணங்கியபோது இழந்த வலக்கண்ணையும் பெற்றார்.

திருவாரூரில் பரவையார் சுந்தரரை ஏற்க மறுத்த போது, சிவபெருமான் தூது செல்ல இசைந்து, மறைமுனிவர் கோலத்தில் சென்று பரவையாரை அழைத்து, தாம் வந்த நோக்கத்தை எடுத்துரைத்தார். பரவையார், "சால நன்று நம் பெருமை" என்று கூறி, "சங்கிலித் தொடக்குண்டாருக்கு இங்கு ஒரு சார்வுண்டோ? நீர் கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகிது" என்று மறுத்தார். சிவபெருமான் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாது தனிப்பெருந்தோழனார்தம் வெம்பு வேட்கை காணும் திருவிளையாட்டினை மேவி பரவையார் மறுத்ததே கொண்டு மீண்டார். சுந்தரர் ஆவலுடன் காத்திருக்க சிவபெருமான் முறுவலுடன் வந்தார். திருமுகம் முறுவல் செய்வது ஒன்றிய விளையாட்டு என்று சுந்தரர் ஓரார். பரவையார்

மறுத்ததைக் கேட்ட சுந்தரர், "அவள் பால் இன்று மேவுதல் செய்யீராகில் விடும் உயிர்" என்று வீழ்ந்தார். சிவபெருமானும் அருளால் நோக்கி, மீண்டும் தம்முடைய கோலத்தில் சென்று பரவையாரை சம்மதிக்க வைத்து இருவர் பூசலையும் தீர்த்து வைத்தார்.

பெரிய புராணத்தில் திருநீலகண்ட புராணம், அமர்நீதி நாயனார் புராணம் ஆகியவற்றில் அடைக்கலமாகப் பொருளைக் கொடுத்து, அதனை மறைவித்து, பின்னர் அதனைத் திரும்பக் கேட்டு, தம் தொண்டர் கொடுக்க இயலாதபோது அவர்தம் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். இயற்பகை நாயனார் புராணம், சிறுத்தொண்டர் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம், காரைக்காலம்மையார்புராணம் ஆகியவற்றில் காட்டப்படும் பக்திக்கு ஈடு இணை இல்லை. பெரிய புராணத்தில் சிவபெருமானின் திருவிளையாடல், அயலறியாமல் வாழ்ந்த தொண்டர்தம் பெருமையை அகிலம் அறியும்படி செய்துள்ளது.

3. திருவிளையாடற் புராணம் காட்டுவன

சிவபெருமான் பார்வதிதேவியாருக்குத் திருவாய் மலர்ந்தருளிய சங்கர சங்கிதையை முருகக் கடவுள் அவ்வம்மையார் மடியிலிருந்து கேட்டு, அதனைத் தம் மாணவராகிய அகத்திய முனிவருக்குச் சொல்லி அருளினார். அந்தச் சங்கிதையில் தல விசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் என்னும் மூன்று விசேடங்களும் உள்ள தலமாக மதுரையம்பதி கூறப்பட்டுள்ளது.

மதுரைக்குரிய தலபுராணங்களாக எழுந்தவை நான்கு. உத்தர மகாபுராணம் என்னும் வடமொழி நூலின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சயம் என்னும் நூலிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது 'திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்' ஆகும். இதனை இயற்றியவர் செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி. இரண்டாவது, கடம்பவன புராணம் ஆகும். 'நீபாரண்ய மகாத்மியம்' என்ற வடமொழி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. இலம்பூர் வீமநாத பண்டிதர் இயற்றியது. மூன்றாவது சுந்தர பாண்டியம். வடமொழி நூலான இது வாயற்பதியைச் சேர்ந்த அனதாரி என்னும் புலவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. நான்காவது பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம். இது திருவாலவாயில் தலப்பெருமையை விவரிக்கும் புராணமாகும். சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இத்தலத்தில் நிகழ்த்தியுள்ளார். திருவாலவாய்க்கு ஒப்பாய தலமும், பொற்றாமரை வாவிக்கு ஒப்பாகிய தீர்த்தமும், சோமசுந்தர மூர்த்திக்கு ஒப்பாகிய சிவலிங்கமும் மூவுலகத்திலும் இல்லை என்று கூறுவது திருவிளையாடற் புராணம். இது ஒரு தலபுராணமாக இருந்தபோதும், இதன் தனித்தன்மை காரணமாகத் 'திருவிளையாடற்புராணம்' என்ற மகுடத்துடன் திகழ்கிறது.

திருவிளையாடற்புராணம் மூன்று காண்டங்களை உடையது. அவையாவன : 1. மதுரைக் காண்டம், 2. கூடற்காண்டம், 3. திருவாலவாய்க் காண்டம் ஆகியன. மதுரைக் காண்டம் 18 படலங்களையும், கூடற்காண்டம் 30 படலங்களையும், திருவாலவாய்க் காண்டம் 16 படலங்களையும் கொண்டவை. 64 திருவிளையாடல்களுக்கும் 64 படலங்கள் உள்ளன. அருச்சனைப் படலம் ஒன்றும் இறுதியில் உள்ளது.

முன்பே கூறியவாறு தலம், தீர்த்தம், மூர்த்தம் ஆகியவற்றின் சிறப்புகளையும், ஆலவாயுடையார் நடத்திய 64 திருவிளையாடல்களையும் இப்புராணத்தில் விரிவாகப் பயிலலாம்.

இறைவன் திருவிளையாடல்கள் நிகழ்த்துவதற்கான காரணம்தான் என்ன? உயிர்களின் பாசநீக்கம் செய்வதுதான் திருவிளையாடலின் நோக்கமாகும். அறக்கருணை மூலமும், மறக்கருணை மூலமும் இறைவன் திருவிளையாடல்களை நிகழ்த்தியது உயிர்களை இவ்வுலகின் தளையினின்றும் அகற்றிப் பாசநீக்கம் செய்வதற்கே என்பதனைக் கண்டுணரலாம். இதனை ஒவ்வொரு திருவிளையாடல் மூலமும் அறிந்துணரலாம். இறையருள் பெற்று இன்புறலாம்.

ஆசிரியருக்குக் கடிதம்

அன்புடையீர்,

"செந்தமிழை" நேரம் வாய்த்தபோதெல்லாம் படிக்கின்றவன் நான். சில கட்டுரைகள் நன்றாக அமைந்துள்ளன. சர்.பி.டி. இராஜன் திருவனந்தை வந்திருந்தபோது செந்தமிழின் நல்ல அம்சங்களைப் பாராட்டி மேலும் திருந்துவதற்கு உரிய முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். ஆங்கிலப் படிப்பும் நாணயமும் அரசியல் செல்வாக்கும் உடைய ஒரு பெரியார் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகக் கிடைத்தது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். எனவே தமிழன்பர்கள், ஆசிரியர்கள், அனைவரும் சேர்ந்து தமிழ்ச்சங்கத்தைப் பலப்படுத்துவதற்கும் அதன் சஞ்சிகையான 'செந்தமிழைப்' பிரபலப்படுத்துவதற்கும் முயலவேண்டும். கி.ஆ.பெ. விசுவனாதனாரின் கழகம், காரைக்குடி கழகம், உலகத் தமிழ்க்கழகம் என்றெல்லாம் பல நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாகப் பழமையும் சிறப்பும் உடைய மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சீர்ப்படுத்திப் புகழுடையச் செய்வது மிக இன்றியமையாதது.

தமிழன்பர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், தமிழ்ச்சங்கம் வளர்வடைவதற்கு ஒரு திட்டம் தீட்டிப் பணம் கோருக. தமிழகத்தில் எழுத்தாளர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் உள்ளவர்களிடம் கட்டுரை கோருக. பழைய பொருள்களில் மட்டும் கட்டுரை அமையாமல், மொழிப் பிரச்னை, கலைச்சொற்கள், வெளியாகும் தமிழ் ஆங்கில நூல்களின் விமர்சனம், பிறமொழி இலக்கியச் சிறப்பு முதலியவை பற்றியும் கட்டுரை கோருக. நான் சிறுவனாக இருக்கும்போது செந்தமிழ் படியாத தமிழ்ப் புலவனைக் கண்டதில்லை. அந்த நிலையைக் குறைந்தது மூன்றாண்டுகளுக்குள் நீங்கள் தோற்றுவிக்க வேண்டும்.

இங்ஙனம்,

வி.ஐ. சுப்பிரமணியம் எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
கேரளப் பல்கலைக்கழகம்.

வள்ளலாரும் தமிழும்



ஊரன் அடிகளார்,
வடலூர்.

வள்ளலாரின் தமிழ்ப்பற்று

தம்மைத் தமிழ்நாட்டிற் பிறப்பித்தமைக்காக வள்ளலார் இறைவனுக்கு நன்றி கூறுகிறார். அந்த அளவிற்கு அவருக்கு நாட்டுப்பற்று இருந்தது.

"சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்தியஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே பேராசை, பெருங்கோபம், பெருமோகம், பெருமதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்கம் முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றை இடங்களிற் பிறப்பியாமல் குணங்களே பெரும்பாலும் விளைவதற்குரிய இவ்விடத்தே, உறுப்பிற் குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!"

என்பது வள்ளலார் இறைவனிடம் செய்துகொண்ட சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பத்தின் ஒரு பகுதி.

இதைப்போன்றே, தமக்குத் தமிழ்ப்பற்றை உண்டாக்கியதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறார்.

"இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய்ச் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்"

என்பது அதே விண்ணப்பத்தின் மற்றொரு பகுதி. தமிழ்நாட்டின் சிறப்பையும் தமிழ்மொழியின் சிறப்பையும் பெருமானது நாட்டுப்பற்று மொழிப்பற்றுகளையும் இவ்விண்ணப்பத்தால் நன்கறியலாம்.

தமிழ், எல்லா மொழிகளுக்கும் தந்தைமொழி

வள்ளலார் காலத்தில் விளங்கிய சங்கராச்சாரிய சுவாமிகள், ஒரு சமயம் சமஸ்கிருதமே மற்ற எல்லா மொழிகளுக்கும் "மாத்ரு பாஷை" (தாய்மொழி) என்று கூறினாராம். இதனைக் கேள்வியுற்ற வள்ளலார், ஆ! அப்படியா? அப்படியாயின் தமிழே எல்லா மொழிகளுக்கும் "பித்ரு பாஷை" (தந்தை மொழி) என்று கூறி அயர்த்தினாராம். அதோடு விடவில்லை. "தமிழ்" என்னும் பெயருக்கே, சொல்லுக்கே, இலக்கண இலக்கிய தத்துவ வியாக்கியானம் ஒன்றைச் செய்தருளினார். 'தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரை' என்ற பெயருடன் அவ்விளக்கம் வழங்குகிறது.

தமிழ் எப்பாஷைகளுக்கும் பிதுர் பாஷை என்றும், தமிழ் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி என்றும், தமிழில் உள்ள "ழ" கரம் இயற்கை உண்மைத் தனித் தலைமைச் சிறப்பியல் ஒலி என்றும், அது சிவயோக பூமியாகிய பரத கண்டத்தில் ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந்தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலும் இல்லாத சிறப்பியல் எழுத்து என்றும் வள்ளலார் அதில் அழுத்தந்திருத்தமாக விளக்கஞ் செய்கிறார்.

இறையனுபவ இயற்கை உண்மையே தமிழ் என்றும், தமிழ் மொழியே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும் என்றும் வள்ளலார் அறுதியிட்டு உறுதி கூறுகிறார்.

சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு இறைவன் அடி எடுத்துக் கொடுத்த "உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்" என்பதிலுள்ள "உலகெலாம்" என்பதற்கு வள்ளலார் மிகவும் நீண்டதோர் வியாக்கியானம் எழுதியுள்ளார். "உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்" என்னும் அதில், வடமொழி வேதங்களை விடத் தமிழ்த் திருமுறைகள் சிறந்தவை என்று வள்ளலார் கூறும் விளக்கங்கள் மிக அருமையானவை, திட்ப நுட்பமானவை. ஆயினும் எளியவை, இனியவை. தமிழுலகம் அவசியம் அறிய வேண்டியவை.

இறைவன் வள்ளலாரைத் தமிழால் வளர்த்தல்

தம்மைச் செந்தமிழால் இறைவன் வளர்க்கிறான் என்பதை, "மெய்யடியார் சபை நடுவே எந்தை உனைப்பாடி மகிழ்ந்தின்புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய்" (4802) என வாயாரப் பாடி மகிழ்கிறார் வள்ளலார்.

இறைவன் தமிழால் அருளுதல்

இறைவன் தமிழால் அன்பர்களுக்கு அருளுகிறான் என்கிறார் வள்ளலார். "வடிக்குறும் தமிழ்கொண்டு அன்பருக்கருளும் வள்ளலே! ஒற்றியூர் வாழ்வே!" என்பது வள்ளலார் ஒற்றியூர்ச் சிவபெருமான் தியாகராசரைப் பாடிய திருவருட்பா(875). தியாக வள்ளலைப் பாடும் இவ்வடி நம் வள்ளலாருக்கும் அப்படியே பொருந்தும். திருவருள் தமிழ்கொண்டு, திருவருட்பாத் தமிழ் கொண்டு அன்பர்களுக் கெல்லாம் அருளுகிறார் நம் வள்ளலார் இராமலிங்கர்.

தமிழ்க்கவிதையின் சாந்தம்

திருஒற்றியூர், வள்ளலார் இளமையில் சென்னையில் வசித்த காலத்தில் வழிபட்ட தலம். அங்கிருந்த நந்தி ஆசிரமம் (இன்றைய நந்தீசுவரர் கோயில்) வள்ளலாருக்கு மிகவும் பிடித்தமான இடம். நந்தி ஆசிரமம், அங்கு ஓடிய நந்தி ஓடை ஆகிய இரண்டின் இனிய இயற்கைச் சூழலை நன்கு அனுபவித்த வள்ளலார் அந்நாளில் பாடிய குடும்பகோஷம் என்னும் (முற்றுப்பெறாத) கவிதை நூலில் நந்தி ஆசிரமத்தைத் "தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது " என்று வருணிக்கிறார்.

கண்டவர் உளமெலாம் கட்டு கின்றது
தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது
விண்டயன் பதமுதல் விரும்பத் தக்கது
எண்டரும் தவம்அர சிருக்கும் சீரது

- குடும்பகோஷம் 19

தமிழ்க்கவிதையின் சாந்தத்தை வள்ளலார் அனுபவித்தது என்னே! என்னே!! "சான்றோர் கவி எனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்" என்ற கம்பராமாயணச் செய்யுளடி நினைவுக்கு வரவில்லையா?

வள்ளலாரின் தமிழ் மாலைகள்

தாம் பாடும் பாமாலைகளைத் "தமிழ்ப்பூமாலை", "சீர்த்தமிழ் மாலை", "மதன இன்தமிழ் மாலை" என்றெல்லாம் வள்ளற் பெருமான் மகிழ்ந்து வியந்து கூறுகின்றார். வள்ளலார் அருளிய திருவருட்பா மாலைகள் எல்லாம் வாடாத தமிழ் மாலைகள். வள்ளலாரின் வாடாத தமிழ்மாலைகளை இறைவன் மகிழ்ச்சியோடு அணிந்து கொண்டு அருளினான்.

வள்ளலாரின் வழிகாட்டி நூல்கள்-வள்ளலார் கண்ட தமிழ்ப் பிரஸ்தானத் திரயங்கள்

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்று நூல்களையும் வள்ளலார் தமக்கு வழிகாட்டி நூல்களாகக் கொண்டார்.

அறத்துக்கு (நீதிக்கு)த் திருக்குறள்

சாத்திரத்துக்குத் திருமந்திரம்

தோத்திரத்துக்குத் திருவாசகம்

என்று இம்மூன்று நூல்களையும் தேர்ந்தெடுத்துத் தம் வழிகாட்டி நூல்களாக அமைத்துக் கொண்டார். இளமையில் பன்னிரண்டாம் அகவைப் பருவத்தில் அமைத்துக் கொண்ட அமைப்பு.

தமிழ் அறநூல்களுள் திருக்குறளே முதன்மையானது. அதனினுஞ் சிறந்த அறநூல் வேறு இல்லை. 'சாத்திரத்துக்குத் திருமந்திரம், தோத்திரத்திற்குத் திருவாசகம்' என்றொரு பழமொழியே அமைந்து விட்டது. தமிழ்ச் சாத்திர நூல்களுள் திருமந்திரத்திற்கு ஒப்பானதும் உயர்வானதும் வேறெதுவுமில்லை. தமிழ்த்தோத்திர நூல்களுள் திருவாசகத்திற்கு ஒப்பானதும் உயர்வானதும் வேறெதுவுமில்லை.

நடத்தச் செய்தவர் வள்ளலாரே. அந்நாளில் பெரும்புலவர்கள், இளம் புலவர்களுக்கும் தமிழ் கற்கும் மாணாக்கர்களுக்கும் திருக்குறளைப் பாடஞ் சொல்லுவது வழக்கமே தவிரப் பொது மக்களுக்கு வகுப்பு நடத்துவது வழக்கமில்லை. பண்டித நிலையில் வழங்கி வந்த திருக்குறளைப் பாமர மக்களுக்கும் அறியும் நிலைக்குக் கொண்டு வந்து நாட்டிலேயே முதன் முதலாகத் திருக்குறள் வகுப்பைத் தம்முடைய தமது மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு நடத்தச் செய்தவர் வள்ளலாரே.

திருமூலர் திருமந்திரம் இறைவனாலேயே வள்ளற்பெருமானுக்கு உபதேசிக்கப் பெற்ற (எடுத்துக்காட்டப் பெற்ற) நூல். இந்த மார்க்கத்தின் (சன்மார்க்கத்தின்) உண்மை திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும் என்பது உபதேசக் குறிப்புகளுள் ஒன்று.

வழிபடு கடவுள் முருகன், வழிபடுகுரு திருஞானசம்பந்தர், வழிபடு நூல் திருவாசகம் என்ற ஒரு அமைப்பை வள்ளற் பெருமான் இளமையில் ஒன்பதாண்டுப் பருவத்தில் அமைத்துக்கொண்டார். பின்னாளில் வள்ளலார் ஏறாத பெருநிலைகளி லெல்லாம் ஏறுதற்கு 'வழிபடும் மூன்று வழிகாட்டி' மூன்று என்ற இவ்வடிப்படை அமைப்புகளே கருவியாயிருந்தன.

திருவாசகம் வள்ளலாரின் வழிபடுநூல் மட்டுமன்று, வாழ்க்கை நூலும் ஆகும். வள்ளலார் திருவாசகத்திற்கே வாழ்க்கைப்பட்டவர். திருவாசகத் தோடு தேனிலவு கொண்டவர் என்றே நாம் எழுதியிருக்கிறோம். வள்ளற்பெருமான் திருமணநாள் முதல் இரவில் மணமகளோடு திருவாசக முற்றோதலிலேயே ஈடுபட்டார். மணமக்கள் இருவரும் விடியவிடியத் திருவாசக முற்றோதலே செய்தனர். அத்திருவாசக முற்றோதலே வள்ளலாருக்கு வாழ்க்கைப்பட்ட தனக்கோடி அம்மையாருக்கு உபதேசமாயிற்று. வள்ளலார் திருவாசகத்திற்கே வாழ்க்கைப்பட்டவர், திருவாசகத்தொடு தேனிலவு கண்டவர் என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது! திருவாசகம் முழுவதும் வள்ளலாருக்கு மனப்பாடம். இது பெருமானே எமக்கறிவித்த நற்செய்தி.

வள்ளற்பெருமானின் சமரசசுத்த சன்மார்க்கத்திற்கு மூலமும் முதலும் கருவும் ஆகிய நுண் பொருள்கள் பல, திருக்குறள்; திருமந்திரம்; திருவாசகம்; இம்மூன்றிலுமுண்டு

உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் வேதாந்த உலகில் பிரஸ்தானத்திரயங்கள் என வழங்கும்.

திருக்குறள்,திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றும் வள்ளலார் கண்ட தமிழ்ப்பிரஸ்தானத் திரயங்களாம்.

வள்ளலார் கண்ட முதியோர் பாடசாலை; மும்மொழிப் பாடசாலை

"சன்மார்க்க போதினி"என்று ஒரு பாடசாலையையும், "சமரச வேதபாடசாலை" என்றொரு பாடசாலையையும், ஆக இரண்டு பாடசாலைகளை வள்ளலார் ஏற்படுத்தினார். சன்மார்க்க போதினி பாடசாலை, ஆபால விருத்தர்கள் வரை யாவர்க்கும் பயில்விப்பது என்கிறார் வள்ளலார். ஆபாலவிருத்தர்கள் வரை என்றால் பாலர் தொடங்கி விருத்தர்கள் வரை என்று பொருள். "ஆசேது இம பரியந்தம்" (சேது முதல் இமயம் வரை) என்னும் வடமொழி வழக்குப் போன்றது. இவ்வழக்கறியாதார் ஆபாலர் - மாடு மேய்க்கும் சிறுவர் என்றெழுதிவிட்டனர். ஆ - பசு, என்பது உண்மை. ஆயினும் இங்கு வள்ளலார் ஆபாலவிருத்தர் வரை என்றது, ஆசேது இமபரியந்தம் என்பது போலப் பாலர் முதல் விருத்தர்வரை என்றே பொருள்படும். பாலர் கல்வி பழைமையானது. விருத்தர் கல்வி (முதியோர் கல்வி) வள்ளலார் காலத்தில் இல்லை. முதன் முதலாகத் தமிழ்நாட்டில் முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர் வள்ளலாரே.

சன்மார்க்க போதினி பாடசாலையில் "தமிழ் ஆரியம் இங்கிலீஷ்" ஆகிய மூன்று மொழிகளும் போதிக்கப்படும் என்கிறார் வள்ளலார். தமிழ் ஆரியம் இங்கிலீஷ் என்ற முறைவைப்பே அழகாக அமைந்திருக்கிறது. தாய்மொழியும் நாட்டுமொழியும் ஆதலின் தமிழ் முதலில் வைக்கப்பட்டது. தமிழோடு ஒருபுடை ஒத்துத் தத்துவ நூல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு பழங்காலந்தொட்டே வழங்கி வந்ததாகலின் ஆரியம் (சமஸ்கிருதம்) அதன்பின் இரண்டாவதாக வைக்கப்பட்டது. அன்றைய ஆட்சி மொழியாகவும் உலகமொழியாகவும் விளங்கிய ஆங்கிலம் மூன்றாவது மொழியாக வைக்கப்பட்டது. முறைவைப்பின் அருமைதான் என்னே! என்னே!!. நம் நாட்டவர் முன்னேற்றமடைவதற்கு ஆங்கிலக் கல்வியும்

முதன்முதலில் பொதுமக்களுக்குத் திருக்குறள் வகுப்பு அவசியம் என்று வள்ளற்பெருமான் கருதினார்.

நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே வள்ளலார் மும்மொழிப் பாடசாலையைத் தொடங்கினார். முதன் முதலில் தமிழ்நாட்டில் மும்மொழிப் பாடசாலையை ஏற்படுத்தியவர் வள்ளலாரே. முதன்மொழி தமிழ். இரண்டாவது மொழி சமஸ்கிருதம். மூன்றாவது மொழி ஆங்கிலம். மும்மொழிப் பாடசாலையில் முதியோர்களும் சேர்ந்து கற்க ஏற்பாடு.

வள்ளலாரின் திட்டம் எப்பேர்ப்பட்ட திட்டம்! மும்மொழியா? இருமொழியா? என்று இன்று நம் மத்திய அரசும் மாநில அரசுகளும் குழம்பிக் கொண்டும் குழப்பிக் கொண்டும் உள்ள நிலையில், வள்ளலாரின் மொழிக் கொள்கை நமக்கு வழிகாட்டியாக அமைகிறது. சமஸ்கிருதத்தின் இடத்தில் இந்தி; அவ்வளவே.

முன்னாளில் பன்மொழிப்புலவர்கள் பலராக இருந்தனர். வரவரப் பின்னாளில் பன்மொழிப் புலமை அருகிவிட்டது. சர்வேதசம், பன்னாடு என்ற பேச்சுகளும் செயல்களும் மிகுந்து வரும் இந்நாளில் பன்மொழிப்புலமை இன்றியமையாதது. வள்ளலார் அன்றே வழி காட்டினார். இன்று நாம் பின்பற்றிப் பயன்பெறுவோம், சிறப்புறுவோம்.

வள்ளலார் தமிழுக்கு வழங்கிய கொடை

திருஅருட்பா. ஆறு திருமுறைகளாக வகுக்கப்பெற்ற 5818 பாடல்கள். ஆறு திருமுறைகளிலும் சேராத வேறு பல பாடல்கள்.

மனுமுறைகண்டவாசகம் (1854), ஜீவகாருண்ய ஒழுக்கம் (1867) என்னும் இரண்டு உரைநடை நூல்கள்.

ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி, தொண்டை மண்டலசதகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு உரை முதலிய உரைகள்.

உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம், தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரை முதலிய வியாக்கியானங்கள்.

கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவிலொடுக்கம் (1851), படிக்காசுப்புலவர் பாடிய தொண்டை மண்டல சதகம் (1855), விருத்தாச்சலம் குமாரதேவர் மடம் முத்தைய சுவாமிகள் செய்த சின்மயதீபிகை (1857) ஆகிய மூன்று நூல்களையும் முதன்முதலாகப் பதிப்பித்தது.

சன்மார்க்க விவேக விருத்தி என்றொரு திங்களிதழைத் தொடங்கியது.

தொழுவூர் வேலாயுத முதலியார் முதலிய பலருக்குப் பாடஞ் சொன்னது.

இவையெல்லாம் வள்ளலார் தமிழுக்கு வழங்கிய கொடைகளாம்.

இராமலிங்கரின் தத்துவப் பார்வைகள் : சமூகம்



முனைவர். அ. அறிவுநம்பி,
புதுச்சேரி

உலகம் முழுவதும் வெவ்வேறு கால கட்டங்களில் தத்துவஞானிகள் தோன்றியுள்ளனர். தமிழகத்தில் புகழ்மிக்க தத்துவஞானிகள் தம் கருத்துகளைப் பல கால கட்டங்களில் கூறிவந்துள்ளனர். வள்ளலார் என்றும் அருட்பிரகாசர் என்றும் இராமலிங்க அடிகள் என்றும் பலவாறாகப் பேசப்படும் இராமலிங்கர் சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் ஆற்றியுள்ள பணிகள் பலவாகும். 05–10–1823 ஆம் தேதி பிறந்த இராமலிங்கர் ஆன்மநேய ஒருமைப்பாட்டைப் பரப்ப எழுந்த ஞாயிறாகவே தோன்றினார். அவருடைய தத்துவங்கள் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவன. தத்துவ ஞானம் என்பதற்கு 'முடிவான உண்மை உணர்வு' என்றும், 'தத்துவஞானி' என்பதற்கு 'முடிவான உண்மையை உணர்ந்தோன்' என்றும் தமிழ்ப்பேரகராதி (Lexicon) விளக்கம் தரும். இராமலிங்கரின் தத்துவக் கருத்துகளைச் சமுதாயத்திற்கானவை, சமயத்திற்கானவை எனப் பிரித்துப் பார்க்க இயலும். இந்த முதற்பகுதி சமூகத்திற்கான தத்துவக் கருத்துகளை முன்வைக்கிறது.

அருளே உலகம் :

உலகம் இயங்குவதே ஒருவர்மீது ஒருவர் காட்டும் அன்பால்தான். வேறுபாடில்லாமல் எல்லாப் பொருளின் மீதும் அன்பு காட்டும்போது அது அருளாகும். அனைத்தும் சமம் என்ற அவரின் தத்துவத்தை அவர் எழுதிய அருள்விளக்க மாலையில் காணலாம். ஒரு சிறு செடி வாடிப் போய் நிற்கிறது. இராமலிங்கர் பார்க்கிறார். நமக்குத் தோன்றாத இரக்க உணர்வு அவருக்கு எழுகிறது. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கதறுகிறார். இந்த அருள் உணர்வின் முற்றிய நிலையில்தான் அவர் தம் முழக்கமாக

'அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி'

என்று அமைக்கிறார். அவருடைய தத்துவத்தின் மையப் பொருள் 'அருளே இறைவன்' என்பதாகும். அதனால்தான் அவருடைய பாடல்கள் 'அருட்பா' எனப்பட்டன. மேலும் அருட்பெருஞ்சோதி அகவலில்,

'என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
என்னிரு கண்ணே என்கணுள் மணியே'

என்னும் போதும் அருளையே முதன்மைப் படுத்துவார். அன்பு ஒரு சார்புடையது. அருளே பொதுமையானது. உலகியல் உணர்ச்சிக்கு அன்பு அடிப்படை. உலகம் கடந்த பொதுமைக்கு அருள் அடிப்படை. விஞ்ஞான முறையில் சொன்னால் பௌதிக அணுக்களால் ஆனது இந்த உடல். இதற்கும் உயிருக்கும் இடையில் இணைப்பாக இருக்கும் உணர்ச்சியே அன்பு. அன்புநெறி பக்குவமாகக் கனிந்து எல்லாப் பொருளையும் ஒன்றாகக் கருதும் முதிர்ச்சி பெறும்போது அது அருளாகி விடுகிறது.

மரணத்தை வெல்லுதல் :

அருள் உள்ளம் கிடைத்துவிடின் உயிர் பற்றிய பற்று நீங்கிவிடுகிறது. எனவே, அருள் நெஞ்சம் வாய்க்கப் பெற்றவர்களுக்கு மரணம் இல்லை. அவருடைய வரிகள் வருமாறு: "சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும் காமம் குரோதம் முதலியவை நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை, புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள்தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாவர்.

மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள்." வள்ளலாரின் தத்துவ விளக்க நூலாக அருட்பெருஞ்சோதி அகவலைக் குறிப்பிடுவார்கள்.

1. மனித சமூகத்திற்கு அடிப்படை அருள்.

2.அந்த அருளை நிரம்பப் பெற்றோர் மரணத்தை வெல்வார்கள்.

இந்த இரண்டையும் மக்களுக்கு எடுத்துக் கூற இராமலிங்கர் எடுத்துக் கொண்ட புதிய பாதைதான் 'சன்மார்க்கம்' எனப்படும்.

சன்மார்க்கம் :

இறைவனுக்கும் அடியவருக்கும் இடையிலான உறவைப் பொதுவாக மூன்றாகக் காட்டுவர்.

1. சற்புத்திர மார்க்கம் (தந்தை–மகன்–உறவு)

2. தாச மார்க்கம் (ஆண்டான்–அடிமை–உறவு)

3.சகமார்க்கம் (நட்பு உறவு)

இவற்றைக் கடந்து 'என்மார்க்கம்' என்று வள்ளலார் குறிப்பிடுவதே சன்மார்க்கம். முன்கூறிய மூன்றும் சுகநிலை பெறுதல், உத்தமன் ஆகுதல், ஒங்குதல் என்ற மூன்றையும் கொண்டவை. வள்ளலாரின் சன்மார்க்கம் ஒருபடி மேலேபோய் மரணத்தை வெல்லுவது என்பதையும் கூறும். இந்தப் புதிய தத்துவம் வள்ளலாரின் தனிச் சிறப்பைக் காட்டும். உள்ளது சிறத்தல் (Evolution) என்ற பரிணாமக் கொள்கையின் அடிப்படையில் கொள்கைகள் பிறப்புமுறைகள் அமையும். வரலாற்று அடிப்படையில் கண்டால் சமய நெறிகள் பரிணாம விதியின் அடிப்படையில் வளருவதை உணரலாம். சமுதாயம் பற்றிய கருத்துகளில் உச்சத்தில் நிற்கும் சன்மார்க்க நெறியும் ஒருவகைப் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் எழுந்ததே. ஒரு குறிப்பிட்ட சாதியார், சமயத்தார் என்று அமையாமல், உலகமக்கள் யாவருக்கும் உரியது இந்தச் சன்மார்க்கம். சமய சன்மார்க்கம், மத சன்மார்க்கம் போன்றவற்றைக் கடந்தது சுத்த சன்மார்க்கம். இதனை 'உண்மைநெறி' என்பார் வள்ளலார். இதனை இப்படி விளக்கலாம்.

1. சத்+மார்க்கம் என்பதே சன்மார்க்கம். 'சத்' என்ற சொல்லுக்கு இயற்கை உண்மை என்பது பொருள். உண்மைப் பாதை என்பதே சன்மார்க்கம்.

2. மத மாற்றங்களைக் கடந்து தலைமை என்ற நிலையில் உள்ள கடவுளை அடைதல்.

3. ஞானத்தின் வழியில் ஒரு பொதுக்கடவுளை எண்ணிச் சாகாக் கலை (மரணமிலாப் பெருவாழ்வு) அடைதல்

4. உண்மையைப் பெறவும், பிறருக்கு உணர்த்தவும் சன்மார்க்க வழியில் நிற்பது.

5. ஆன்மா என்பது கடவுளின் ஏகதேசம். இயற்கைவடிவான இறையை வணங்குதல் வேண்டும்.

இராமலிங்கர் தன்னளவில் செய்து காட்டிய தத்துவநெறியில் குறிக்கத்தக்கது ஒன்று உண்டு. வெவ்வேறு சமயங்கள் கூறிய சன்மார்க்கங்களை இணைத்து ஒன்றாக்கியதும், அவற்றில் மறுக்கப்பட வேண்டியவற்றை மறுத்துப் புதியதான சுத்தசன்மார்க்கம் கண்டதும்தான் அவரின் மிகப்பெரிய சாதனை எனக் கூறவேண்டும்.

அருள் நெறி :

ஏன் இந்தச் சன்மார்க்கம் வேண்டும்? இப்படி ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு சிந்தித்தால் ஒரு விடை தெரியும். உலகம் முழுமையான ஆற்றலுடன் மேலும் முன்னேறச் சன்மார்க்கம் உதவுகிறது என்பதே விடை. காரணம் என்ன? மத நிலைகளைக் கடந்தது சன்மார்க்கம். சன்மார்க்கத்தை வலியுறுத்திய வள்ளலார் தன்னை முன்வந்த அடியவர்களின் தொடர்ச்சியாகவே குறிப்பார். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்' என்பது புகழ்மிக்க தொடர். இவ்வாறு தோன்றிய அடியவர்கள், உயிர்கள் படும் துன்பங்களைக் கண்டு கண்ணீர் வடிப்பார்கள். பிற உயிர்களுக்காக இரங்கி, வருந்தி அழுது அழுது இறைவனை வணங்குபவர்களில் இராமலிங்கர் குறிப்பிடத்தக்கவர்.

"கோழை உலகு உயிர்த்துயரம்

இனிப் பொறுக்க மாட்டேன்"

என்ற வள்ளலார் உலக உயிர்களுக்காக அழுதவர். ஆண்டவனைத் தொழுதவர். மக்களின் அறியாமையே துயர்களுக்குக் காரணம் என வள்ளலார் ஐந்து அறியாமையைச் சுட்டுகிறார்.

1. எப்படிச் செய்வது எனத் தெரியாது செயல்படுவது.

2. சரியான பாதையில் செல்லாது மாறிப் போவது.

3. முறையான நெறியில் நில்லாது குழப்பத்தில் மாறிமாறிச் செயல்படுவது.

4. இதுவே சரியானது என உணரமுடியாமல் மயங்குவது.

5. சரியான நெறியில் சென்று முழுமையான இன்பத்தைப் பெறாமல் அழிவது.

ஏன் இந்த நிலை? பிறஉயிர்களிடத்தும் அன்பு காட்டாது நிற்பதே. ஜீவகாருண்ய ஒழுக்கம் வள்ளலாரால் புகழ்பெற்றது. தமிழில் 'நலம்', 'உயிர் இரக்கம்' என்று கூறலாம். சுயநலத்தை விட்டுவிட்டு எவன் ஆண்டவனிடம் எல்லா உயிர்க்காகவும் வேண்டு கின்றானோ அவனே மனிதன், அவனே ஞானி. குறுகிய நெறிகளைக் காட்டிய பிறஞானிகள் ஆங்காங்கே நின்றுவிட்டனர். 'உலகம் பொதுவானது; உயிர்களும் பொதுவானவை' என்பதை மந்திரமாகக் கொண்ட இராமலிங்கருடைய பொதுமைநெறி எல்லா எல்லைகளையும் கடந்து நிற்பது. எல்லா உயிர்களுக்கும் இன்பம் தருவது. அருள் நிறைந்த இந்த நெறியே உலகை வளர்க்கும் என்பது அவருடைய தத்துவப் பாடம் ஆகும்.

வாழும் முறை:

சமுதாய வளர்ச்சிக்கென வள்ளலார் கூறியிருப்பவை பல. அத்தத்துவங்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பார்த்து அவற்றின்படி தனிமனிதனும் சமுதாயமும் வாழவேண்டும். அவர் கூறவிரும்பும் தத்துவச் சிந்தனைகளை மீண்டும் பார்க்கலாம்.

1. ஜீவ காருண்யம் :

"பசியினால் வருந்துகின்றவர் எச்சமயத்தவர் ஆயினும், எத்தேசத்தவர் ஆயினும் அவர்களது தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செயல் ஒழுக்கம் முதலியவைகளைப் போதித்து விசாரியாமல் எல்லாச் சீடர்களிடமும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்துக்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்திப்பதே ஜீவகாருண்யம்" என்று இராமலிங்கர் கூறுவார். இதில், மேலும் சிறப்புடைய செய்தி உண்டு. புலால் உண்பவர்களை வெறுக்கும் இராமலிங்கர் புலால் உண்பவர்களை விலக்கிவைக்கக் கூறுபவர். ஆனாலும் அவர்களும் 'பசி' என்று கேட்டு வந்துவிட்டால் 'அவர்களுக்கும் உணவு தந்து இரக்கம் காட்டுக' என்கிறார். இவ்வாறு அடுத்த உயிரின் 'பசியை நீக்குதல்' தலைமையான நெறி. வள்ளலார் ஆண்டவனிடம்,

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்"

என்று வேண்டுகிறார். இதனையே தத்துவரீதியில் தம் எழுத்துகளில் கூறுகிறார். பிச்சையெடுத்தலின் கொடுமையை அவர் பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார்.

2. இராமலிங்கரின் தத்துவச் சிந்தனையின்படி, தனித்த உயிர், அணு அளவினதாக இருந்தாலும் அது எல்லாவற்றிலும் பரவி நிற்பது என்றும், உயிரானது இறைவனைச் சார்ந்திருப்பினும் இறைவனைப் போலவே நிலையானது என்றும், இறைவன் தந்த உடலை உயிர் அடையும்போது மனிதன் ஆகிறது என்றும் அறியலாம். இந்த உடல், உயிர் இரண்டும் வளம்பெறுவதற்கு அவர் கூறும் வழிமுறைகள் மூன்று.

1. பிறஉயிர்களுக்குத் தேவையானதை அளிப்பது.

2. பிறஉயிர்களைக் கொல்லுதல் கூடாது.

3. புலாலை நீக்குவது

முன்னிரண்டையும் 'பரஜீவகாருண்யம்' என்றும் ,மற்றதை 'அபரஜீவகாருண்யம்' என்றும் இராமலிங்கர் குறிப்பார்.

3. பொன்னுடல் பெறுதல் :

பொதுக்கடவுளை நெஞ்சிலே தாங்கி,எல்லாஉயிரையும் நேசிக்கும் தன்மை பெறவேண்டும். சன்மார்க்க நெறியில் கொஞ்சமும் விலகாமல் மரணத்தை வெல்லும் உத்தியில் வென்றுவிட்டால் உடல் பொன்னுடலாகும். மனிதர்கள் யாவரும் 'மரணமிலாப் பெருவாழ்வு' பெற அனைத்து வகைகளிலும் முயலவேண்டும்.

4. மனிதராகப் பிறந்தோர் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் நான்கு என்பன வள்ளலார் பாதை.

1. இந்திரிய ஒழுக்கம்:- இனியபேச்சு, பொய் சொல்லாமை, பிறஉயிரின் கொடுமையை நீக்குதல், சரியான உணவு முறையால் உடலைக் கவனித்துக் கொள்ளுதல்.

2. கரண ஒழுக்கம்:- இறைவனைத் தவிர வேறு எதிலும் நாட்டம் கூடாது. பிறர் மீது பகை கொள்ளக் கூடாது; அக்கிரமம் செய்தல் கூடாது.

3. ஜீவ ஒழுக்கம்:- சாதி, சமயம், குலம், கோத்திரம், உயர்வு, தாழ்வு போன்றவற்றைக் கருதாமல் சமமாக எல்லாரையும் காணுதல்.

4. ஆன்ம ஒழுக்கம்:- ஆன்மாவின் உயர்வுக்கு இறைவனை வணங்குதல். இறையின் பேரொளியில் ஒன்றிப் போதல். இவையனைத்தும் வள்ளலார் மனித சமூகத்திற்குக் கூறிய வழிமுறைகள்.

5. ஆன்ம நேய ஒருமைப்பாடு :

வள்ளலார் காண விரும்பிய 'போர் இல்லாத உலகம்' ஆன்ம நேய ஒருமைப்பாட்டால் மட்டுமே அமையும். ஒரே கரையில் புலியும், புள்ளிமானும் பக்கத்துப் பக்கத்தில் நின்று நீர் அருந்தும் என இலக்கியங்கள் கூறுமே, அந்த அருள் உலகைக் காணவேண்டும். இதற்காகவே அவர் சன்மார்க்க சங்கத்தை உருவாக்கினார். அச் சங்கம் ஆற்றிய சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வேறு சமயத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் பலரும் ஆதரவு காட்டினர் என்று குறிப்பிடுவர். அச் சங்கம் புதிய மடமோ, மதமோ இல்லை. நெஞ்சில் இருள்கொண்ட மனிதரை வெளிச்சம்காட்டி நல்ல சமுதாயத்தை நோக்கி அழைத்துவரும் ஒரு மன்றம் தான் அச்சங்கம்.

6. மனிதரில் உயர்வு தாழ்வு இல்லை என்பதைப் பல வழிகளில் காட்டியவர் இராமலிங்கர். இதைப் போலவே சமுதாயச் சீர்திருத்தத்தையே கருதிய நாராயணகுருவும் உடன் வைத்து எண்ணப்படுபவர். 'கடவுள் ஒருவரே' என்பதே இருவரின் தத்துவ போதனையாகும். சமயத்தின் பேரால் சண்டைகள் செய்தல் கூடாது என்பதை வலியுறுத்திய மற்றொரு மகான் இராமகிருஷ்ண பரமஹம்சர். இறைவன் ஒருவன் என்பதை பரமஹம்சரின் வழியில் நின்று விவரிக்கும் இராமலிங்கர், மனித மனங்களைத் தூய்மை செய்யும் வழி முறைகளையும் கூறுகின்றார். சமுதாய நலனுக்கு உழைத்த தேவதூதர்களாக இராசாராம் மோகன்ராய், இராமலிங்கர், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணர் ஆகிய நால்வரையும் ம.பொ. சிவஞானம் கூறுவார். இவர்கள் யாவரும் சாதிவேறுபாடுகளை நீக்கவும், தெய்வம் ஒன்று என உணர்த்தவும் முயன்றவர்கள். அவர்களில் இராமலிங்கரின் 'சன்மார்க்கம்' தத்துவரீதியில் வளம் நிறைந்தது.

தமிழ்ச்சங்கம்

மதுரையில் கடைச்சங்கம் இருந்தது. அதில் 49 புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தார்கள் என்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. மறுபடியும் அங்கே ஒரு தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திப் புலவர்களைக் கொண்டு தமிழைக் கற்பிக்க வேண்டும் என்று பாலவனத்தம் ஜமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவர் எண்ணினார். எப்போதும் தமிழ் சம்பந்தமான வேலைகளைச் செய்வதில் அவருக்கு ஆர்வம் அதிகம். 1901 மே மாதம் தொடங்கினார். அதற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்ய வேண்டும் என்று உ.வே.சாவுக்குக் கடிதம் எழுதினார். கல்லூரி, நூல்நிலையம், செந்தமிழ் என்ற மாத இதழ் என்று மேலும் மேலும் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிப் பாண்டித்துரைத் தேவருக்கிருந்த ஆசைக்கு எல்லையே இல்லை.

பிரம்ம சமாஜமும் வள்ளலாரும்



முனைவர் தா. ஈசுவரபிள்ளை,
தஞ்சாவூர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்--களை ஏற்படுத்திய காரணிகளில் பல இயக்கங்கள் பெரும்பங்காற்றியுள்ளன. இவ்வியக்கங்களுள் பிரம்ம சமாஜத்தின் கொள்கைத் தாக்கத்தால் வள்ளலார் படைப்புகளில் காணப்படும் சிந்தனைகளைச் சில சான்றுகள் மூலம் சுருக்கமாகக் காட்டும் நிலையில் இக்கட்டுரை அமைகின்றது.

சமுதாய மாற்றம்

மாற்றம் என்பது உலகியல் நியதி. உலகில் உள்ள அனைத்தும் மாற்றங்களுக்கு உட்பட்டனவே ஆகும். சமுதாயமும் இதற்கு விலக்கன்று. சமுதாய மாற்றம் (Social Change) என்பது குறித்துச் சமுகவியலாளர்கள் பல்வேறு விளக்கங்கள் அளிக்கின்றனர். அவற்றுள் ஒரு சிலவற்றை இவண் சுட்டலாம்.

மிக நீண்டகாலம் தொடர்புடைய இன்றியமையாமை வாய்ந்த சமுதாய மதிப்புகளைக்(Social Values) கொண்டுள்ள சமுதாய அமைப்பில் ஏற்படும் சில திருத்தங்களைக்(alternations) குறிப்பது சமுதாய மாற்றம் ஆகும்" என்று ஜான் எம்.ஷெப்பர்டு விளக்குகின்றார்.[1]

சமுதாய மாற்றம் என்பது நிலைத்து நிற்றல்(Persistance) என்பதற்கு மாறானது என்றும்[2] குறிப்பிட்ட அளவிலுள்ள மாற்றம் என்றும், நிறுவனங்களுக்கிடையே காணப்படும் உறவுகளைக் குறிப்பது என்றும்,[3] குழுக்களின் அளவிலுள்ள மாற்றம் என்றும், சமுதாய நடத்தைகள் (Social Behaviours), சமுதாய அமைப்பு(Social Structure), சமுதாய, பண்பாட்டு மதிப்புகள்(Social, Cultural values)ஆகியவற்றுள் காணப்படும் மாற்றங்கள் என்றும்[4] குப்புசாமி விளக்கங்கள் அளிக்கின்றார்.

சமுதாய மாற்றம் என்பது கால நடைமுறை (Time Process). சமுதாய வாழ்க்கை நிலையில் ஏற்படும் மாற்றங்களுடன் தொடர்புடையனவாகச் சமுதாயங் களும் மாறுகின்றன.

சூழல்களின் பல்வேறு காரணிகள், சிறந்த சமுதாய வாழ்க்கையை உருவாக்கும் மனித அறிவுக் கூர்மை (Human ingenuity) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று நடைமுறை (Historical process) என்ற விளக்கமும் அளிக்கப்படுகிறது.[5]

சமுதாய மாற்றத்திற்கான காரணிகள்

சமுதாய மாற்றம் குறித்து ஆராய்ந்த சமுதாயவியலாளர்கள் சமுதாய மாற்றத்தின் காரணிகளாகத் தொழில் நுட்பக் காரணிகள் (Technological Factors), பொருளாதாரக் காரணிகள் (Economic Factors), மக்கள் தொகைக் காரணிகள் (Demographic Factors), உயிரியல் காரணிகள் (Biological Factors), சட்டங்கள் (Legislations), பண்பாட்டுக் காரணிகள் (Cultural Factors), அறிவியல் வளர்ச்சி முதலானவற்றைக் குறிப்பிடுவர். சமுதாய மாற்றங்களின் காரணிகளுள் இயக்கங்களும் குறிப்பிடத்தக்கன ஆகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமய நிலை

1819இல் தமிழ்நாடு ஐரோப்பியக் குடியேற்றத்தின் இன்றியமையாத மையமாகத் திகழ்ந்தது என்பர். மக்கள் கிறித்தவ மதத்தில் மாறுவதற்கு வழிவகுக்கும் வகையில் சமயப் பரப்பு அமைப்பின் செயல்பாடுகள் அமைந்தன. கிறித்தவ மிசினரியின் தொண்டுகளும் தியாகங்களும் மக்களைக் கவர்ந்தன; ஏழைகளுக்கு

உதவுதல், கல்வி அளித்தல், பெண்கள் நிலை உயரப் பாடுபடுதல், விதவை இல்லங்கள் அமைத்தல், வேலை வாய்ப்பைப் பெருக்கப் பலதொழில்நுட்ப நிறுவனங்கள் அமைத்தல் முதலான பல சமுதாயப் பணிகளில் ஈடுபட்டன. பல கிறித்தவ மிசினரிகள் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்து இந்தியா வந்தன. இவற்றின் மனிதநேயச் செயல்பாடுகள் இந்தியப் பண்பாட்டைத் தொட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவ சமயம் தழைத்துக் காணப்பட்டது.

கிறித்தவ சமயம் பரவுதல், மேற்கத்தியக் கல்வி முறை போன்ற பல காரணங்களால் சைவ சமயம் அதன் மரபையும் தூய்மையையும் காக்கக் கொள்கைப் பிடிப்புள்ளதாகவும் நெகிழாத்தன்மை உடையதாகவும் மாறியது. அதனால், இந்து சமயத்துள் சைவ, வைணவ வாதங்கள், எதிர்வாதங்கள், வேதாந்த-சித்தாந்தப் பூசல்கள் என்பன காணப்பட்டன. வைணவ சமயத்துள்ளும் வடகலை-தென்கலைப் பூசல்கள் இடம்பெற்றன.

இச்சூழலில் சமயப் புரட்சி நடத்தும் தலைவர்கள் பலர் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதெனக் கருதுவர்.[6] கிறித்தவப் பாதிரிமார்கள் மேற்கொண்ட சமுதாயப் பணிகளைக் கண்டு இதுவரையிலும் உறங்கிக்கிடந்த இந்துக்கள் விழிப்படைந்தனர்.

இந்து சமயம் தொடர்பான நூல்களையும், புராண இதிகாச நூல்களையும் எழுதி வெளியிடத் தொடங்கினர்.[7]

"இந்திய அறிவொளியாளர்கள் சமயத்தைத் தூய்மையாக்கி, அதை ஆரம்ப நிலைக்கு எடுத்துச் சென்றனர்" என்று கூறும் பூ. சோமசுந்தரம் அவர்கள் இந்து சமயக் கண்ணோட்டத்தில் விவேகத்தையும் ஒருகடவுள் வழிபாட்டு அம்சங்களையும் கொண்டு வந்தனர் என்கிறார். அதே சமயம் குழந்தைத் திருமணம், விதவைகள் மறுமணத் தடை, பலதார மணம் போன்ற நிலப் பிரபுத்துவ இந்தியச் சமுதாயத்தின் உயர்ந்த இடத்திற்குப் பெண்களுக்குள்ள உரிமைகளை ஊர்ஜிதம் செய்தார்கள். கலப்பு மணத்திற்கு இருந்த தடைகளை அகற்ற வலியுறுத்தினர்.[8]

இத்தகைய சமயச் சூழல்களினாலும் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன.

இயக்கங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட இயக்கங்கள் சமயத்தின் பழைமையான பொருளைத் திரும்ப நிறுவ (Reinstall) முயன்றன. எனவே, இயக்கச் சிந்தனையாளர்கள் சாத்திரங்களை விமர்சனப் பார்வையுடன் நோக்கி, இந்து சமயத் தத்துவங்களுக்குப் புதிய விளக்கங்கள் அளித்தனர். இதனால் இயக்கங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின எனலாம். கண்மூடித்தனமான நம்பிக்கைகளுக்குப் பதிலாகக் காரணங்களையும் தீர்வுகளையும் (Reasons and Judgements) கண்டறிய முற்பட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் நாட்டு மக்களின் சுயஉணர்வில் சமயக்கருத்துக்கள் ஊடுருவிக் காணப்பட்டன. சாதிப் பழக்கவழக்கங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் ஆதிக்கம் செலுத்தின. இச்சூழலில் புதிய சமுதாய, அரசியல் சிந்தனைகள், சீர்திருத்தவாத மற்றும் குறுங்குழுவாதப் போதனைகளின் வடிவில் வந்தன என்று பூ. சோமசுந்தரம் குறிப்பிடுகின்றார்.[9]

சீர்திருத்த இயக்கங்களின் சாதனைகளாகச் சமய இலக்கியங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றின் கொடிய கைகளிலிருந்து சமுதாய வாழ்க்கையை விடுவித்தல், பெண் கல்வியைத் தேசியப் பொறுப்பாக்கல், எதிர்கால முன்னேற்றத்திற்காக, அமுக்கப்பட்ட மக்களை விழிப்படையச் செய்தல், சமுதாயத்தை விட்டு விலக்கல் என்ற கொடிய பயங்கரவாதத்தைக் கொண்ட சாதிமுறையைச் சாடுதல்[10] போன்றவற்றை நடராசன் குறிப்பிடுவதாகக் காட்டுவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்கள் கிறித்தவச் சமயத்தைச் சார்வதிலிருந்து தடுக்கப் பல இயக்கங்கள் தேவைப்பட்டன எனலாம். இவ்வகையில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணா மிசன், பிரம்ம ஞான சபை போன்ற இயக்கங்கள் தோன்றின. இவை இந்து சமயத்தைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் அதை மறுவலிமை செய்யமுடியும் எனக் கருதின. மூட நம்பிக்கை, பொருளற்ற சடங்குகள், செலவுமிக்க விழாக்கள், நெகிழா மரபுகள், பழைய பழக்கங்கள் முதலியன இந்து சமயத்தைச் சிக்கலுக் குள்ளாக்குகின்றன என்பதை உணர்ந்து , ஒருசமயக் கோட்பாட்டு நோக்கைக் (Mono Theistic outlook) கொண்டுவரப் பாடுபட்டன.

இயக்கங்களின் சீர்திருத்த நோக்கை விளக்கும் வேலுப்பிள்ளை, இயக்கங்கள் மிசினரி என்ற முத்திரையுடன் சமுதாய மாற்றத்தை நோக்கி இயங்க ஆரம்பித்தன என்றும், இயக்கங்கள் சதி, கல்வியின்மை, குழந்தை மணம், குழந்தைக் கொலை, விதவை நிலை, பெண்களின் இழிநிலை, பலதாரமணம், தீண்டாமை, குறுகிய சாதிமுறை, சமுதாயத் தடைகள் முதலியவற்றை எதிர்த்தமையால் சமய மற்றும் சமுதாயப் பார்வையைப் பெருக்கியதுடன் விரைந்த சமுதாய மறுமலர்ச்சிக்குரிய முயற்சிகளையும் மேற்கொண்டன என்றும் குறிப்பிடுகின்றார்.[11]

பிரம்ம சமாஜம்

பிரம்ம சமாஜம் என்ற இயக்கம் இராசா ராம்மோகன்ராயால் (1772-1833) தோற்றுவிக்கப் பெற்றது ஆகும். "இந்து சமயத்தவர்களிடையே காணப்பட்ட வாழ்க்கை வழிகளிலும், இந்து சமயத்தில் இடம் பெற்ற சமுதாய முறைகளிலும் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றக் கல்வியாளர்களால் நிறுவப்பட்ட ஓர் அமைப்பு பிரம்ம சமாஜம்" என்று பி.பி. கஜேந்திர கட்கர் குறிப்பிடுகின்றார். இந்து சமயத்தில் காணப்பெறும் வேதங்களையும் வேதாகமங்களையும் கற்றுத் தேர்ந்த இராசாராம்மோகன்ராய் கிறித்தவ சமயக் கோட்பாடுகளையும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் கிறித்தவ சமயக் கொள்கைகளைக் கற்றுணர்ந்ததன் விளைவாலும் ஐரோப்பியர்களின் பரந்த கொள்கைகளைக் கண்ணுற்றதால் ஏற்பட்ட தாக்கத்தாலும் இந்து சமயத்திற்கு ஒரு மறுமலர்ச்சி (Revolution) தேவை என உணர்ந்தார். இந்து சமயத்தவர்களிடையே காணப்படும் பழக்கவழக்கங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றில் இம்மறுமலர்ச்சியினை உண்டாக்க வேண்டியது இன்றியமையாத தேவை என எண்ணியதன் விளைவாக 1815-இல் ஆத்மிய சபை (Atmiya saba) என்ற நிறுவனத்தை நிறுவினார். 1819-இல் கல்கத்தா தனியொருமைக் கோட்பாட்டுக் குழு (Calcutta Unitarian Committee) என்ற குழுவை நிறுவினார். பின்னர், 1828, ஆகசுடு 20இல் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தார்.

சமய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாமை அளித்த மோகன்ராய், சமயத்தைச் சூழ்ந்துள்ள அழுக்குகளை அகற்றுவதன் மூலம் சமய மறுமலர்ச்சியை உருவாக்கலாம் என எண்ணினார். உருவ வழிபாடு என்பது வரையறுக்கப்பட்ட இறைப்பற்றுத் தன்மை (Limited Capacity) உள்ளவர்களால் மேற்கொள்ளப் படுவது எனக் கருதினார். இந்து சமயத்தில் காணப்படும் அழுக்குகளையும் கொடுமைகளையும் அகற்ற எண்ணினார். பிரம்ம சமாஜத்தின் மூலம் குறிப்பிட்ட மறை நூல்களை ஆதாரமாகக் கொள்ளல், அவதாரங்கள் என்ற கருத்தில் நம்பிக்கை இன்மை, பல தெய்வ வழிபாட்டையும் உருவ வழிபாட்டையும் கண்டனம் செய்தல், சாதி வேறுபாடுகளைச் சாடுதல் முதலியவற்றை வலியுறுத்தினார்.

சமயத்தை ஆன்மீக உணர்வுடன் மட்டும் அணுகாது, சமுதாய, அரசியல் நோக்குகளிலும் அணுகினார். இந்து சமயத்தில் கொடுமைகளையும் தேவையற்ற செயல்களையும் உருவாக்கிய பழமைவாதத்தை எதிர்த்தார். சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் பாராட்டும் நிலை காணப்படுகின்றமையைக் கண்டித்தார். இவ்வேறுபாடுகளை அகற்றத் தாம் நிகழ்த்தும் வழிபாட்டுக் கூட்டங்களிலும், தியான நிகழ்ச்சிகளிலும் பல்வேறு பிரிவினரும் கலந்து கொள்ள வழியமைத்துக் கொடுத்தார். 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பல்வேறு இயக்கங்களுக்கும் இவர் அடிக்கல் இட்டதாக ஹேம் சர்க்கார் குறிப்பிடுகின்றார்.[12] அசைக்க முடியாத கடந்த காலத்திலிருந்து கணக்கிடக் கூடிய எதிர்காலத்திற்குச் செல்லும் இந்தியாவின் வாழும் பாலம் (Living Bridge) என்ற நிலையில் வரலாற்றில் இடம் பெறுகிறார் என்றும், பழங்காலச் சாதிமுறைக்கும்-மனிதாபிமானத்திற்கும், மூடநம்பிக்கைக்கும்-அறிவியலுக்கும், இயங்காத வழக்கத்திற்கும்-முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள தோரணவாயில் (arch) என்றும், மிஸ்கோலெட் (Miscolet) போற்றிப் புகழ்கின்றார்.[13] ஸசாரியாஸ் (Zacharias) என்பவர் இராசாராம்மோகன்ராய் தோற்றுவித்த பிரம்ம சமாஜத்தை இந்தியாவில் தோன்றிய அனைத்துச் சமுதாய, சமய இயக்கங்களின் மூலத் தொடக்கம் (Foundation head) என வருணிக்கின்றார். [14] இத்தகைய பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளின் சமயச் சிந்தனைகள், சாதி எதிர்ப்புச் சிந்தனைகள், மனிதாபிமானச் சிந்தனைகள் என்பன வள்ளலாரின் (1825-1874) படைப்புக்களில் இடம்பெறுமாற்றைச் சில சான்றுகள் மூலம் காட்டலாம்.

சமயச் சிந்தனைகள்

வள்ளலார் தாம் வாழ்ந்த சமுதாயத்தில் மக்கள் சமயங்களின் பெயரால் பேய் பிடித்து அலைகின்றமையையும், சமய நெறிகள் பிள்ளை விளையாட்டு என உணராமல் வாழ்கின்றமையையும், அதனால் சண்டையிட்டு வீணாக இறக்கின்ற மையையும், பலவாகிய சமய நெறியில் தெய்வங்கள் பலவாகக் கூறப்படுகின்றன என்று உணராமையையும், சாத்திரங்களாகிய சேற்றில் இறங்கி வீணாகத் துன்புறுகின்றமையையும், வீண்வாதங்கள் செய்கின்ற மையையும், தெய்வம் ஒன்றே என்ற பொதுமை எண்ணமின்றிக் காழ்ப்புணர்வு கொள்கின்றமையையும் கண்டு மனம் புண்பட்ட நிலையில் பல பாடல்கள் பாடியுள்ளார்.[15]

உண்மை நிலையை உணராது, மக்கள் சமுதாயத்தில் ஒற்றுமையின்றி வாழ்வதற்குக் காரணமான சமயத்தைப் பித்துறு சமயப் பிணக்கு, சமயப்புன்மை, துட்ட கண்கெட்ட ஆங்காரி, விகற்பம், வெப்பகம், சங்கடம், சழக்கு, தடை, பேய், வலை, குழி என்றெல்லாம் சாடுகின்றார்.[16]

'கடவுள் ஒருவரே' என்ற ஒற்றுமை உணர்வை ஊட்டுவதற்குப் பதில் தத்தம் சமயக் கொள்கைகளே உயர்ந்தவை என வாதிட்டு, மக்களிடையே பிரிவு மனப்பான்மை ஊட்டுவோரை, "வாதமிடு சமயவாதிகள்" என்று சாடவும் செய்கின்றார்.

இறைவன் சாதி வேறுபாடுகளை அறியாதவன், சாதியைக் கடந்தவர்க்கு உறவினனாக விளங்குபவன், சமயப் பூசலிடுவோர்களால் பெறுதற்கு அரியவன், மதத்தில் மயங்காத மதியில் விளங்குபவன், சமய வேறுபாடுகளைக் கடந்தவர்க்கு அருள்பவன், சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன் என்று இறைவனைப் பொதுமைப்படுத்துவதுடன் சாதி வேறுபாடுகள் அகலவும் வழிவகை செய்கின்றார். மக்களிடம் சமய வேறுபாடுகள் அகன்று ஒற்றுமை உணர்வு மலர வேண்டும் என்ற பொதுமை உள்ளத்துடன்,

"ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுமோ" என ஏங்குவதுடன்,

"சாதி மதம் தவிர்த்தவரே அணைய வாரீர்" எனச் சன்மார்க்கச் சங்கத்தில் சேர அழைப்பும் விடுக்கின்றார்.

சாதி வேறுபாடுகளைக் கடிதல்

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களை வேறுபடுத்தும் கொடிய சக்தியாகச் சாதிமுறை (Caste System) என்ற சமுதாய நிறுவனம்(Social Institution) திகழ்வதைக் கண்ட வள்ளலார் சாதி வேறுபாடுகளற்ற சமத்துவச் சமுதாயம் மலரவும் வழிவகுக்கின்றார்.

வள்ளலார் சாதிமுறையை இருட்சாதி, மருட்சாதி, சழக்கு, பேயாட்டம், விகற்பம் என்று கடிகின்றார். சாதிவேறுபாடுகளை வளர்க்கும் சாத்திரங்களைக் குப்பைகள், சந்தடி, பொய்வகைச் சாத்திரங்கள் என இகழ்கின்றார். மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் குலத்தைப் புலையுறு குலம், பொய்க்குலம் எனச் சாடுகிறார். சாதிவேறுபாடுகள் பாராட்டாது அனைவரும் சமம் என உணர்ந்து மகிழவேண்டும். அனைவரும் ஒன்றுபட்ட உள்ளத்துடன் கூடிச் சமுதாய வாழ்க்கை வாழவேண்டும். சாதிவேறுபாடுகளை மறந்து சன்மார்க்கப் பொது அடைதல் வேண்டும். சாத்திரங்களால் வாழ்க்கையில் தடுமாற்றம் ஏற்படும். சாதிவேறுபாடுகளால், போற்றற்கரிய மானிடப்பிறப்புகள் அழிய நேரிடும் என்பன போன்ற அறிவுரைகளைக் கூறுகின்றார்.[17]

மனித நேயம்

சமுதாயம் ஒன்றுபட, சமுதாயமக்கள் ஒற்றுமை உணர்வுடன் வாழ, சமுதாய வாழ்க்கை மேம்பட மனித நேயம் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்த வள்ளலார் மனிதநேயச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தக் காணலாம். பொருளாதார நிலையில் மேம்பட்டோர் இன்பமிக்க, மதிப்புமிக்க வாழ்க்கை வாழும் நேரத்தில் பொருளாதார நலிவுற்ற வறியவர்கள் துன்பமிக்க இழிந்த, இயலாமை நிறைந்த, வறுமைமிக்க வாழ்க்கை வாழ்வதைக் கண்ட வள்ளலார் செல்வர்களிடம் மனிதநேயச் சிந்தனையைத் தூண்டுகின்றார். இதன் முதல் நிலையாக வறியவர்களின் பசியை அகற்ற வேண்டி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றார். பசியின் கொடுமைகளையும், வறியவர்களின் பசித் துன்பத்தையும் விளக்கி, செல்வர்கள் ஜீவகாருண்யம் என்ற நெறி நின்று வறியவர்களுக்கு உணவளித்து உதவ வேண்டும் என்று வேண்டுகிறார்.[18]

இவ்வாறு, பிரம்ம சமாஜத்தின் கொள்கைகளால் தாக்கமடைந்த வள்ளலார் சமயக் காழ்ப்பு உணர்வு

கொள்ளல், சாதிவேறுபாடு பாராட்டல் ஆகிய செயல்களை அகற்றி, மனித நேயத்தை வலியுறுத்தி, சமுதாய மாற்றத்திற்குரிய பங்கையும் செலுத்தியுள்ளார் எனலாம்.

மேற்கோள் சான்றுகள்

1. Jon. M. Shepard. Sociology, p.92
2. B. Kuppuswamy, Social Change in India, p.19
3. B. Kuppuswamy, op.cit.p. 93
4. B. Kuppuswamy, op.cit.p. 93
5. Annamalai University, Distance Education Notes, M.A. Sociology. Advanced Socialogy, p.104
6. ம.பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.25
7. மயிலை சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், பக். 26-27
8. பூ. சோமசுந்தரம், இந்தியாவின் வரலாறு, ப.164
9. பூ. சோமசுந்தரம், அதே நூல், ப. 156
10. B. Kuppuswamy, Social Change in India, p.80
11. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக். 67-68
12. Annamalai University, Distance Education Notes, M.A. Sociology. Advanced Sociology, p.74
13. op.cit., P.74
14. op.cit., P.77
15. திருவருட்பா. 6:22:27, 6:23:12, 6:23:14, 6:131:8, 6:131:9, 6:5:8, 6:6:7, 6:28:7, 6:57:65, 6:93:2, 6:93:3, 6:15:19, 6:13:42, 6:129:30, 6:133:1, 6:133:5, 6:20:7
16. திருவருட்பா. 6:23:4, 6:23:20, 6:39:6, 6:46:3,6:46:19,6:57:23, 6:77:2, 6:81:61-62, 6:81:115-116, 6:81:211-212,6:81:221-222, 6:81:293-294,
17. திருவருட்பா. 6:53:5, 6:56:4, 6:56:8, 6:57:85, 6:96:8, 6:111:4, 6:129:29,6:133:7, 6:125:3, 6:133:1, 6:138:6

    உரைநடைப்பகுதி : பக். 51, 52, 57, 65, 68, 69, 70, 71, 80

தமிழில் வழிபாடு தவறாகுமா?



முனைவர். தமிழண்ணல்,
மதுரை.

நடுகல்

தமிழர்கள் தொன்மைமிக்க காலத்தில், போரில் இறந்த வீரர்களுக்கு 'நடுகல்' என ஒரு கல்லை நட்டு அதற்குப் படையலிட்டு வழிபாடு செய்தனர். இதிலிருந்து தமிழர்களின் 'உருவ வழிபாடு' தோன்றியது. அதாவது சிலை வடித்து, ஒரு குறியீடாக மட்டும் இருந்ததைத் தெய்வப் படிம வடிவாக வளர்த்து அதனை வழிபட்டுப் பக்தியில் திளைத்தனர்.

நிலத் தெய்வங்கள்

அவ்வாறே மிகப் பழங்காலத்தே, நிலத்தை ஐவகையாகப் பகுத்து ஒவ்வொன்றன் இயற்கைப் பின்னணிக்கு ஏற்ப ஐவகைத் தெய்வங்களை வழிபட்டனர். அன்று மக்கள் தொகை மிகக் குறைவு. குன்றுகளில் வாழ்ந்தவர்கள் தினைப்புனம் வளர்த்து, தேனும் தினைமாவும் உண்டு, தங்களுக்கென ஒரு வாழ்வு நெறியோடு வாழ்ந்தனர். அவர்கள் இயற்கையில் தெய்வத்தைக் கண்டு 'சேயோனை' (செந்நிறத்தவனை) வழிபட்டனர். முருகனையும் சிவனையும் வழிபடும் முறைகள் அங்குக் கிளைத்தன.

காடுகளில் வாழ்ந்தவர்கள் வேட்டையாடியும் புன்செய்ப் பயிர்வகைகளை வளர்த்தும் தங்கட்கு எனச் சில பழக்கவழக்கங்களுடன் வாழ்ந்தனர். ஒவ்வொரு நிலமும் ஒவ்வொருவகை மரம், செடி, கொடி, பூ, பயிர் வகைகளுக்கு உரியதாக அறியப்பட்டது. பச்சைநிறக் காடுகளிடையே வாழ்ந்த அவர்கள் 'பச்சை மாமலைபோல் மேனி'த் திருமாலை வழிபட்டனர். அதாவது தொடக்கத்தில் மாயோனை (கரிய நிறத்தவனை) வழிபடு தெய்வமாகக் கொண்டனர். கண்ணன் வழிபாடும் அங்குத் தோன்றியதே.

பாலைநிலம் என்பது தனிநிலம் அன்று. தமிழகத்தில் அன்றும் இன்றும் கோடை காலத்தில் வறண்ட நிலமாக மாறும் வானம் பார்த்த பூமிகள் இருக்கின்றன. வயல் சூழ்ந்த, ஆற்றுப் பாசனநிலமும் கடற்கரை நிலமும் பாலையாதல் இயலாது. காடு சூழ்ந்த முல்லைநிலமும், மலைசார்ந்த குறிஞ்சி நிலமும் ஒன்று கலக்கும் எல்லையோரப் பகுதிகள், கோடை வெப்பக்காலத்தில் பாலையாக மாறிவிடும். பிறகு மழை பெய்தால் பசுமை தலைகாட்டும்.

இன்றைய நிலையை நாம் மறந்து அப்பழங்கால நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். மலை, காடு எல்லாம் அடர்ந்து கிடந்ததால் வெட்ட வெளியான இப்பாலை நிலமே, போக்குவரத்துக்குரிய, பெருவழிப்பாதையாக இருந்த காலம் அது.

இந்நிலத்திலும் எயினர்கள் எனப்படுவோர் வாழ்ந்தனர். அண்மையிலுள்ள ஊர்களிலிருந்து ஆனிரைகளைக் கவர்வதும், தங்களின் பாலைநில வழியாகப் போகும் வணிகர்களிடமிருந்து வழிப்பறி செய்வதும் இவர்கள் தொழிலாக இருந்தன.

இவர்களும் பிறநிலத்து வீரர்களும் வலிமை மிக்கவர்கள். அவர்கள் துடிகொட்டிக் 'கொற்றவை' என்ற வெற்றித் தெய்வத்தை வழிபட்டனர். பின்னர் இது அம்மன், காளி வழிபாடுகளாகவும் சக்தி வழிபாடெனவும் உருக்கொண்டது.

மேலே குறிப்பிட்ட மூன்று தெய்வ வழிபாடுகளே மேன்மேலும் வளர்ச்சி பெற்றன. குறிஞ்சிநில வழிபாடு முருகனையும், முல்லைநில வழிபாடு திருமாலையும், பாலைநில வழிபாடு கொற்றவையையும் (சக்தி வழிபாடு)

தந்தன. இன்று உலகெங்கும் தமிழர் வாழும் இடம் எல்லாம் முருகன், பெருமாள், காளி அல்லது அம்மன் வழிபாடுகள் ஆயிரக்கணக்கான பெயர்களுடன் திருக்கோயில் வழிபாடுகளாகத் திகழ்கின்றன.

மருதநிலத் தெய்வம் வேந்தன் அல்லது இந்திரன். இது இன்றைய நம் பொங்கல் வழிபாட்டுடன் தொடர்புடையதாய் சூரிய வழிபாட்டுடன் சேர்க்கப் பட்டுள்ளது. நெய்தல் நில வழிபாடாகிய 'வருணன்' (வண்ணன்) வழிபாடும் வளர்ச்சி பெறவில்லை. அந்நில மக்களின் சிற்சில சடங்குகளுடன் உள்ளது.

சிவ வழிபாடு

தொன்மைமிக்க காலத்தில் ஊர் நடுவே மரம் நட்டு வளர்த்து அதனை வழிபட்டனர். பிறகு சுற்றிலும் மேடை அமைத்து, அங்கு ஒரு 'மரத்தறியை' நட்டு வழிபட்டதுடன் ஊராட்சிப் பொதியிலாகவும், சடங்குகள் செய்யும் அம்பலமாகவும், நீதிமுறைபேசும் மன்றமாகவும் அதனைக் கொண்டனர். பண்பாட்டு மானுடவியலின்படி மரத்தைத் தெய்வமாக வணங்கும் வழக்கம் தமிழரிடம் இருந்தது. அதன் தொடர்ச்சியாகவே மன்றத்தில் 'தறியை' ஒரு குறியீடாக நட்டு வழிபடலாயினர். ஊர் நடுவே அமைத்த இந்த மன்றம் 'பொதியில்', 'அம்பலம்' என்றெல்லாம் அழைக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால் அதுதான் ஊரை ஆளும் தலைமை மாந்தர் - அகவை முதிர்ந்தோர் - கூடுமிடம்; அவர்கள் நீதிவழங்கும் முறைமன்றமும் அதுதான்; தெய்வ வழிபாடும் அங்கேதான். தெய்வத்தின் முன் பிழை செய்ய அஞ்சினர்.

இந்த மரத் 'தறி' (வெட்டிய மரத்துண்டு) கந்து என்றும் அழைக்கப்பட்டது. இதிலிருந்தே - கற்சிற்பம் - திருக்கோயில் என வளரலாயின.

..பலர்தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்
- பட்டினப் பாலை 249

பொதியில் ....
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து
- அகம் 307

மாத்தாள் கந்தின் - அகம் 287

திருமுருகாற்றுப்படையில், முருகன் உறையும் இடங்கள் எனப் பட்டியலிடும் போது, புதுப்பூங் கடம்பும் (கடம்பமரம்), மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் (225-226) என வருகிறது.

பிற்பாடு பொன்னம்பலம், வெள்ளியம்பலம் என இது வளர்ந்த வரலாறு பெரிது. 'பொதுவில் நடமிடும் அம்பலத் தரசே' என வள்ளற்பெருமான் பாடும் போது அதன் தொடக்க கால நிலை நினைவிற்கு வருகிறது.

கருந்தாள் கந்து - அடிபருத்தும் நுனி சிறுத்தும் இருந்தது. அக் 'கந்து' அல்லது 'நடுதறி' அசையாமல் இருக்க அதைச் சுற்றியமைத்த பீடமே, பின்பு ஆவுடையார்பீடம் ஆனது. (அ.ச.ஞா. - பெரிய புராண ஆராய்ச்சி). அப்பர் பெருமான் ஆறாம் திருமுறையில் 61ஆம் பதிகத்தின் அனைத்துப் பாடல்களிலும், இறுதியடியாக 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே' என்று பாடுகிறார். இதுவே தமிழரின் 'சிவலிங்க' வழிபாடாக வளர்ந்தது என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? சிவனின் குறியீடே, நடுதறி, கந்து. அது அசையாமலிருக்கச் சுற்றிலும் 'பீடம்' அமைத்தனர். மாத்தாள் கந்து - என்பதை, வடவர் 'லிங்கம்' என சமஸ்கிருதமாக்கினர்.

சிவபெருமானைச் சங்கப் பாடல்கள் 'முதுமுதல்வன்' (புறம் 166), 'தொல்முது கடவுள்' (மதுரை 42), 'மழுவாள் நெடியோன்', 'ஆதிரையான்' என்றெல்லாம் நூற்றுக்கணக்கான இடங்களில் குறிக்கின்றன. (வே. அண்ணாமலை, சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்)

சிவபெருமானை ஆலமர் செல்வன், தென் முகக் கடவுள் என்றும் பழம் பாடல்கள் குறிக்கின்றன. (சிறுபாண் 97, கலி 81,83) தென்முகக் கடவுளை-தட்சிணாமூர்த்தி என வடமொழிப் பெயர்ப்படுத்தினர்.

தமிழரின் கடவுள் வழிபாடு திருக்கோயில்களாக வளர்ந்த கூர்தலற வளர்ச்சி (பரிணாமம்), இரண்டாயிரம் ஆண்டுப் பழைமையுடையது. அப்பர் பெருமான், தமிழர் கண்ட திருக்கோயில் வளர்ச்சியை ஒரு பதிகத்தில் குறிப்பிடுகிறார். 1. பெருங்கோயில் 2. கரக்கோயில் 3. ஞாழற்கோயில் 4. கொகுடிக்கோயில் 5. இளங்கோயில் 6. மணிக்கோயில் 7. ஆலக்கோயில் என்பன அவை.

சிலப்பதிகாரத்தில் வரும் 'கோட்டங்கள்' பற்றிய குறிப்புகளும் அறியத்தக்கன. (கோட்டம் - கோயில்)

வடமொழி வேதங்களில் உருவ வழிபாடு கூறப்படவில்லை. கோயில் என்ற சொல்லும் இல்லை.

எனவே நாம் உணர வேண்டியன:

1. திருக்கோயில்கள், உருவ வழிபாடு, ஆயிரம் வகைச் சிற்பங்கள், வானுற ஓங்கிநிற்கும் கோபுரங்கள் அனைத்தும் தமிழரின் செல்வங்கள்.

2. உருவ வழிபாடே 'பக்தி மார்க்கம்' எனப்படும் தமிழர் நெறிக்கு வழிவகுத்தது.

3. வடநாட்டில் பக்தி மார்க்கத்தைவிடத் தத்துவநெறியே மேலோங்கியது. 'போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்", என்பது தமிழர் வழிபாட்டு முறை. நீர் கொண்டு நீராட்டி மலரைச் சூட்டி அவர்கள் வழிபட்டனர். அக்கினியிற் போடாமல், படையலிடுவதே தமிழர் முறை என்று பி.டி. சீனிவாசய்யங்கார் குறிப்பிடுகிறார். மேலும் இறைவன் புகழைப் பாடுவதும் தமிழர் நெறியே. திருவள்ளுவர் இறைவனது 'பொருள்சேர் புகழைப்' பாடச் சொன்னார். அவ்வாறு பாடியனவே பக்தி இலக்கியங்களாக உருப்பெற்றன.

தமிழில் பக்தி இலக்கியம்

பேராசிரியர் ப. அருணாசலம் தமிழிலுள்ள பக்தி இலக்கியம் பற்றித் தமது நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார். (பக்தி இலக்கியம், சென்னை, 1973). இயல் இரண்டு முதல் முழுமையாக அவர் தரும் செய்திகள் சிறப்புடையவை. தமிழ்ப் பக்தி இலக்கியம் முழுவதையும் விளக்குபவை.

> "*வேதங்களில் வழிபடு கடவுளரின் திருக்கோலங் களைக் காண முடியவில்லை; வழிபாடும் வேள்வி செய்தலே. ஆகமங்களிலோ வழிபடு கடவுளரின் திருக்கோலங்களைக் காண்கிறோம்; வழிபாடு பூசனையே.*" (பக்46)
>
> *இருக்கு வேத காலத்தில் விக்கிரக வழிபாடு இருந்ததில்லை;*
>
> *சிந்துவெளி நாகரிகத்தில் காணப்படுகிறது.* (பக் 48)

இவ்வாறெல்லாம் எழுதும் பேராசிரியர் ப. அருணாசலம் ஆகமநெறி - தமிழர் நெறியே என அழுத்தம் பெறக் கூறவில்லை. ஏனெனில் தமிழிலிருந்த ஆகம நூல்கள் இன்று சமஸ்கிருத மயமாக்கப்பட்டிருப்பதே. எனினும் பாரத நாட்டின் பக்தி இலக்கிய ஊற்று, தென்னாட்டில் அதுவும் தமிழகத்தில் தொடங்குகிறது என்பதை அவர் நூல்வழி அறிகின்றோம்.

அண்ணாமலையான்

சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவன்; அடிமுடி காண முடியாதவன் என்பதே அண்ணா மலையான் என்பதன் பொருள். புராணக்கதைகளைத் 'தொன்மம்' என்போம். அவை பலவகைப்படும். புனைந்து எழுதப்பட்ட கட்டுக் கதைகள் வேறு; படிமப் பொருள்தரும் இலக்கியத் தொன்மங்கள் வேறு.

சிவபெருமான், பிரமன், விஷ்ணு - மும்மூர்த்திகள் என்பர். இவர்களுள் சிவனே - முது முதல்வன், பிறவாயாக்கைப் பெரியோன், தொல்முது கடவுள் என்பது தமிழர் கொள்கை. இதனால் 'அடிமுடி காணாத வரலாறு' என, ஒரு தமிழ்த்தொன்மம் உருவானது. விஷ்ணு பன்றி வடிவெடுத்து பூமியில் அகழ்ந்து அகழ்ந்து போயும் சிவனின் பாதங்களைக் காணமுடியவில்லை. பிரமன் அன்னப்பறவையாகி மேலே மேலே பறந்தும் சிவனின் முடியைக் காண இயலவில்லை. இத்தகைய தொன்மங்கள் உள்ளுறை பொருளுடையன. பன்றி அகழ்வது- அறிவால் தோண்டித் துருவி ஆராய்வதற்குப் படிமம். அன்னம் மேலே பறப்பது - ஆணவம் மேலே உயரப் பறக்க நினைக்கும் செருக்கு. இறைவனை அறிவால் ஆராய்ந்தோ, ஆணவத்தால் தேடியோ காண முடியாது என்பது கருத்து. அவன் 'அன்பு எனும் பிடியுள் அகப்படு மலை'. பக்தியாலேதான் இறைவனை அணுக முடியும்; அடைய முடியும். அவன் 'அண்ணாமலையான்'. இத்துணைப் பொருட்சிறப்புடைய தமிழ்ப்பெயரை 'அருணாசலேசுவரர்' என்று மாற்றினால், அதன் உட்கருத்தை உணர முடியவில்லை,

> *மால் அறியா நான்முகனும் காணா மலையினை*
> (திருவெம்பாவை)
>
> *பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த*
> *நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்*
> *மாவேறு சோதியும் வானவரும் தாம் அறியாச்*
> *சேவேறு சேவடிக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.*

இவ்வாறு மாணிக்கவாசகர், சிவனே முழுமுதற் கடவுள்; பிறர் யாராலும் அறியப்படாதவன் என்று பாடுகின்றார்.

தத்துவமும் பக்தியும்

தத்துவம் மெய்ம்மையியல்; அறிவாராய்ச்சி. பத்தி அன்பின் வழிபட்டது. தத்துவம் இறைவனைத் தேடலாம், அடையமுடியாது. பத்தி தேடாமலே இறைவனை அடையவல்லது.

மெய்ம்மையியல் நிறுவனச் சமயங்களாகப் பிரியும்; பல்வேறு பெயர்களைச் சுட்டும்; வேறுவேறு வழிகளைக் காட்டும்.

பத்தியோ அனைத்துச் சமயங்களுக்கும் பொது; எல்லாக் கடவுளர்க்கும் பொது. அன்பு வழி எனும் ஒரே வழிப்பட்டது அது. தத்துவமும் பத்தியும் எனும் தமது நூலில் அ.ச. ஞானசம்பந்தன் இதனை நன்கு விளக்கியுள்ளார்.

"பக்திப் பாடல்கள் என்ற தொகுப்பைப்
பெற்றுள்ள சிறப்பு உலக மொழிகள்
அனைத்துள்ளும் தமிழுக்கு வாய்த்ததுபோல்
வேறு எந்த மொழிக்கும் வாய்க்கவில்லை.
அளவுகொண்டு கணக்கிட்டால் கூடத்
தமிழ்மொழியில் முகிழ்த்துள்ள பக்திப்
பாடல்களின் அளவு வேறு எந்த மொழி
யிலும் இல்லை. தமிழுக்கு அடுத்த
இடத்தைப்பெறுவது வடமொழியன்று; ஹீப்ரு
மொழியே என்று வல்லுநர்கள்
கூறுகின்றனர்." அ.ச.ஞா. (பெரியபுராண ஆராய்ச்சி)

இத்தகைய தமிழரின் தெய்வங்களை - முழுமுதற் கடவுளரைத் தமிழில் வழிபடலாகாது; அபத்தம்; முட்டாள்தனம் எனவும் இவை ஆகம நெறிக்கு முரண்பட்டன எனவும் சிலர் பிழைபடப் பேசியும் எழுதியும் பரப்பியும் வருகின்றனர்.

'ஆகமங்கள்' - வழிபாட்டு முறைகள்; பழம் மரபு போற்றுவன. 'ஆகமங்கள் எண்ணிறந்தன' என்பார் திருமூலர். எல்லாச் சமயங்களுக்கும் (சமணம், புத்தம், வைதிகம், தமிழியம்) ஆகமங்கள் உள. தமிழர்களின் எண்ணிறந்த ஆகமங்கள் இடைக்காலத்தே அழிக்கப்பட்டன; சமஸ்கிருத மயமாக்கி, கிரந்த எழுத்தில் எழுதப்பெற்ற இவற்றை, வடநாட்டவர் அறியார். சிவ வழிபாட்டு முறை, தென்னாடு தழுவிய சில கோயில்களில் தவிர, வேறு எங்கும் காணுதல் அரிது. வேதங்களிலும் கீதையிலும் கோயில், கோயில் வழிபாடு பற்றிய சொற்கள் கூட இல்லை. அவை வேள்வியை மட்டுமே வழிபாடாகப் பேசும். இந்நிலையில் தமிழ் வழிபாட்டை மறுப்பவர், தந்நலம் கருதியே, பிழைவழி தேடிப் பிழைக்கின்றனர்.

கிறிஸ்தவரும் தமிழும்



பேரா. சு.இன்னாசி,
சென்னை.

தமிழ்மொழி வரலாற்றில் சமயங்களின் செல்வாக்கு என்றும் தொடர்ந்து வந்திருக்கிறது. ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலந்துள்ளது. தமிழகத்தில் எவ்வெச் சமயங்கள், எவ்வெக் காலங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தனவோ, அவ்வக் காலங்களில், அவ்வச் சமய நூல்களும் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளன. தமிழ், சமயம் ஆகிய இரண்டன் வளர்ச்சியும் தொடர் வண்டியின் இருப்புப்பாதை போன்ற இணைகோட்டு வளர்ச்சி எனலாம்.

இந்திய மொழிகளில் முக்கால் பங்கு திராவிடக் கூறு கொண்டனவேயாம். 18–ஆம் நூற்றாண்டு வரை செவ்வியல் மொழியாம் தமிழ், இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த வடமொழியிலிருந்து தோன்றியது என்ற தவறான சிந்தனை உருப்பெற்றிருந்தது. அச்சிந்தனைக்கு மாறாகத் திராவிட மொழிக் குடும்பத்தின் தலைமை மொழி தமிழே என்ற கருத்து, உருவாக்கம் பெற்றதற்குக் கிறித்தவராகிய டாக்டர். கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கண நூலே காரணமாகும். தமிழ் செவ்வியல் மொழி என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு வழிகோலியது அந்நூலே ஆகும்.

செவ்வியல் மொழி என்னும் சிறப்பைப் பெற்றுத் தந்ததோடு மட்டுமன்று, தமிழின் தற்கால வளர்ச்சிக்குக் கிறித்தவர் செய்துள்ள பணிகள் பலப்பல. அவற்றைப் பின்வருமாறு சுருங்கக் காணலாம்.

பிறநாட்டு அறிஞர்கள் தமிழை அறிந்து அதனைப் போற்றமுற்பட்டதற்குக் கிறித்தவருடைய பணிகளே தூண்டு கோல்களாக அமைந்தன எனலாம். தமிழ் இலக்கணத்தையும், சொற்களையும் மேனாட்டார் அறிவதற்கு ஏற்ற வகையில் இலத்தீன் போன்ற மொழிகளில் தொகுத்து, 17–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே கிறித்தவத் துறவியர் வெளியிட்டுள்ளனர். அவ்வாறு வெளியிடப் பெற்ற அகராதிகளில் கூடச் சொற்களுக்குப் பொருட்களை மட்டும் கூறாமல், தமிழ்ப் புலவர்களைப் பற்றியும், நூல்களைப் பற்றியும் அவற்றில் குறிப்பிடுவது பிறருக்கு அவற்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கமே ஆகும். சான்றாக வீரமாமுனிவர், தம்முடைய தமிழ்–இலத்தீன் பேச்சு மொழி அகராதியில், "திருவள்ளுவர் பெயர்பெற்ற புலவர். அவர் மிகச்சிறந்த திருக்குறளை எழுதியுள்ளார்" என்பது போலத் தமிழ்ப் புலவர்களையும், "சிந்தாமணி, நேரடியாக மாசுபடாத மணி எனப் பொருள் பெறும். பொதுவாக எல்லாவற்றுள்ளும் மிகச்சிறந்த செய்யுட் படைப்போனைக் குறிக்கும். அது சீவகன் என்னும் மன்னன் பெருமை கூறுவது" என்பது போலத் தமிழ் இலக்கியங்களையும் குறித்துச் சொல்வது அயல் நாட்டாருக்குத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கேயாகும்.

தமிழ் இலக்கிய, இலக்கண அறிவு பெறுவதற்கு அச்சு வடிவங்களில் நூல்கள் வெளிவந்தது பெரும் காரணமாகும். தமிழ் எழுத்துக்களை அச்சில் வார்த்து, அச்சு இயந்திரங்களின் வழியாக அவற்றைப் பரப்பும் முயற்சியை முதலில் மேற்கொண்டவர் கிறித்தவரே. கி.பி 1577–இல் ஜான் கொன்சால்வஸ் என்பார் தமிழில் அச்செழுத்துக்களை வார்த்தார். புன்னைக்காயல், அம்பலக்காடு ஆகிய இடங்களில் நூல்கள் அச்சிடப்பட்டன. பின்னர், தரங்கம்பாடியிலும் நூல்களை அழகிய வடிவங்களில் அச்சிடத் தொடங்கினர். அச்சிற்கு வந்த பின்னரும், 'செடி', 'சேடி' 'பொய்'–'போய்'



தூத்துக்குடி திருமந்திர சபை மாநாட்டில் பாண்டித்துரைத்தேவரை வ.உ.சி. வாழ்த்திப் பாடுதல்.

பாசுகரசேதுபதி மகாராஜா அவர்கள் சிவபதமடைந்தமைக்கு ஆற்றாது பாடியவை

பாண்டித்துரைத் தேவர்

சேதுபதி மன்னர்குலக் கடற்றோன்றி யருணனையே சேர்ந்தோ ராழி
மேதினியெங் கணுஞ்செலுத்தி யிரவொழித்துப் புகழொளியை விரித்துத் தேன்போ
லோதுபிர சங்கமழையுவந்துதவு பாற்கரநீ யொடுங்குங் கால
மீதுகொலோ வின்னமுநீ யெய்துவையோ விரங்கியெமக் கிசைத்தி டாயே. (௧)

என்னாவி யுளங்குளிர அண்ணாவென் றன்பொடினி யெனையார் சொல்வார்
மன்னாமன் னாமன்னா வெனயாரை யானினிமேன் மதித்துச் சொல்வேன்
பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு புரந்தளிக்கப் போந்த நீவே
றெந்நாடு சென்றனையோ வெங்கள்குல மணிவிளக்கே யிசைத்தி டாயே. (௨)

அவியுணவொன் றேயருந்து மமருண வவியாவுன் னமுத வாக்காற்
செவியுணவுங் கொடுப்பதற்கோ நிதிமணியைத் தருகாமதேனு வென்னு
மவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து கொடுக்குநல மறைதற் கோவிப்
புவியிலெமை வருந்தவிட்டு வானடைந்தாய் பாற்கரநீ புகன்றி டாயே. (௩)

நீணிலமீ தரனடியார் பெருமையுமன் னவன்சமய நெறியும் பல்கான்
மாணவெடுத் தெடுத்துரைத்துந் திருந்துகிலார் மடமதியின் வமை காணூஉ
வீணிதென வானடைந்தாய் பாற்கரசே துபதியவண் மெய்யில் போகம்
பேணுநரை யுளந்தெருட்டி யுய்விப்பான் விழைந்தனையோ பெரும நீயே. (௪)

பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்காற் றளர்வொழிகென் றெனக்கிசைத்த நலம்பொய் யாதே,
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமையா தெனவே மதித்து வான்போய்,
விண்புலவ ரோடுதம னியங்கொணர நினைந்தனையோ வேந்த ரேறே. (௫)



சென்னை மாநிலக் கல்லூரி நிகழ்வில் பாண்டித்துரைத்தேவருடன் உ.வே.சா, பூண்டி அரங்கநாத முதலியார் நல்லசாமிப்பிள்ளை, நமச்சிவாய முதலியார் ஆகியோர் கலந்து கொண்டது.

நான்காம் தமிழ்ச்சங்கம் கண்ட நல்லவர்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்.
(முன்னாள் அமைச்சர்)

தமிழ்ப்புலவர் கூடியதால் 'கூடல்' என்றே
தமிழ்ப்பெயரைத் 'தென்மதுரை' பெற்றதன்று!
சிமிழ்போன்ற 'தமிழ்ச்சங்கம்' நிறுவி, ஆங்கே
தீந்தமிழைப் பாண்டிமன்னர் வளர்த்தார்!சீறிக்
குமுறிவந்த 'கடற்கோளின் பசியால், தொன்மைக்
'கூடல்நகர்', 'கபாடபுரம்' அழிந்த தம்மா!
அமுதமொழி தமிழ்காக்கப் பின்னர் வந்தார்
அரும்பாண்டித்துரைத் தேவர்; மகிழ்ந்தார்
சான்றோர்!

தமிழுக்குக் கல்லூரி அமைப்ப தற்கும்,
தமிழ்ச்சுவடி தமைத்தேடித் தொகுப்ப தற்கும்,
தமிழாய்ந்தே புதுமலர்ச்சி காண்ப தற்கும்,
தமிழ்த்தேர்வால் மாணவரை உயர்த்து தற்கும்,
தமிழினிலே புதுப்புதுநூல் ஆக்கு தற்கும்,
தமிழ்தழைக்கத் தனிஇதழை நடத்து தற்கும்,
தமிழரங்கம், மாநாடு கூட்டுதற்கும்
'தமிழ்ச்சங்கம்' நிறுவியவர் தேவர் அன்றோ?

எங்கிருந்தோ இங்குவந்த ஆங்கி லேயர்
எழில்தமிழைப் புறந்தள்ளி, ஆங்கி லத்தை
அங்கிங்கே எனாதபடி திணிக்கக் கண்டே,
ஆயிரத்துத் தொள்ளாயிரத் தொன்றாம் ஆண்டில்
இங்கேநான் காம்சங்கம் அமைத்தார் வள்ளல்;
எல்லையிலா மகிழ்ச்சியிலே திளைத்தார் நல்லோர்!
மங்கிவிட்ட தமிழுணர்வு மீண்டும் ஓங்க
வழிகண்ட 'துரை'யவரை வாழ்த்தி னார்கள்!

புரவலராய்ப் புலவர்களைப் புரந்த செம்மல்
புலமையுடன் பலநூல்கள் படைத்தார்! மேலும்
நிரல்நிரலாய்த் தமிழ்நூல்கள் அச்சில் ஏற்றி
நெஞ்சமெலாம் தவழவிட்டார்! காட்டி னுள்ளே
மரங்கள்பல அடர்ந்திருந்தும் அகிலை மட்டும்
மனம்விரும்பித் தேடுவதேன்! இந்த மண்மேல்
அரசர்பலர் கொலுவிருந்தார்; மறைந்தார்; ஆனால்
அளப்பரிய தமிழ்ப்பணியால் நிலைத்தார் 'தேவர்'!

என வேறுபாடு தெரியாமல் மயங்கிய நிலைக்குப் பதிலாக எளிதில் புரிந்து கொள்ளுமாறு குறில், நெடில் வேறுபாடுகளைப் புகுத்தி எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்து தமிழ்ப்பணி புரிந்தவர் வீரமாமுனிவரே.

தமிழ் இலக்கியங்களில் அழிந்துபோயின பலவாகவும், எஞ்சி இருப்பன சிலவாகவும் உள்ளதாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுவர். எஞ்சியனவும் அழிந்து போகாமல் தொகுத்துப் பாதுகாத்து வந்ததில் பெரும்பங்கு கிறித்தவருக்கு உண்டு. அரிய தமிழ் நூல்கள் பல பாரிசு தேசிய நூலகத்திலும், பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலும் தொகுத்துப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சேசு சபையினரால் செண்பகனூரில் பழஞ்சுவடிக் காப்பகம் அமைக்கப்பட்டது. அங்கு நூல்களைத் தொகுத்து வைத்தனர். ஓலைச் சுவடிகளைச் சேகரிக்கும் பணியில் எல்லீசர் போன்றோர் ஈடுபட்டனர். பழமொழிகளைத் தொகுக்கும் முயற்சியில் பெர்சிவல் போன்றோர் உழைத்து ஆங்கில மொழி பெயர்ப்போடு வெளியிட்டனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகத்தில் காலின் மெக்கன்சியின் தொகுப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்மொழியின் படைப்புக்கள் குறித்த வளர்ச்சியை மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி என இருவகையாகப் பகுக்கலாம். மொழி வளர்ச்சியில், மொழிபெயர்ப்பு, உரைநடை, அகராதிகள், இலக்கணங்கள் ஆகியவற்றைக் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் எழுத்து, சொல் அதிகாரங்களை டி ஆல்பர்ட் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். நன்னூல் ஒரு பகுதியை டபிள்யு.ஜாய்சும், எஸ்.சாமுவேல் பிள்ளையும் 1848–இல் மொழி பெயர்த்துள்ளனர். ஜி.யு.போப், ஹென்றி பவர், ஜான் லாசரஸ் போன்றோரும், நன்னூற் செய்திகளை ஆங்கிலத்தில் தரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஜி.யு.போப், புறப்பொருள் வெண்பா மாலையையும் மொழிபெயர்த்தார். அவரே புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றையும், பரிதிமாற் கலைஞரின் தனிப்பாசுரத் தொகையையும் மொழி பெயர்த்தார். கமில் சுவலபேல் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் சில பாடல்களையும், ஹூடன் குறுந்தொகையையும், ப.சோதிமுத்து ஐங்குறுநூற்றையும் மொழி பெயர்த்துள்ளனர். திருக்குறளின் முதலிரு பால்களை இலத்தீனில் வீரமாமுனிவர் மொழிபெயர்த்தார். எல்லீஸ், டூரு, இலாசரஸ் ஆகியோர் ஆங்கிலத்திலும், போஸ், ஜாக்குலியட் லூயிஸ், ஞானோதியாகு ஆகியோர் பிரெஞ்சிலும் தந்துள்ளனர். கிரால், செருமானிய மொழியில் தந்துள்ளார். இவையேயன்றி, டச்சு, சுவீடிஷ், செக், பிஜி, மலாய், சிங்கள மொழிகளிலும் கிறித்தவர்கள் மொழி பெயர்த்துள்ளனர். சிந்தாமணி போன்ற இலக்கியங்களின் பகுதிகளும், நீதி நூல்களும் பலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. திருவாசகம் போன்ற பிறசமய இலக்கியங்களும், ஜி.யு.போப், ஹோயிங்ஸ்டன் போன்றோரால் ஆங்கிலம், செருமனி முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர்களின் இலக்கியக் கருவூலங்களைப் பிறநாட்டார் அறியுமாறு செய்த பணி கிறித்தவரைச் சாரும்.

மொழியின் கட்டமைப்பு செய்யுள், உரைநடை என இருவகைப்படும். அவ்வமைப்பிலும் பழங்கால நிலைக்கும் தற்கால நிலைக்கும் வேறுபாடுகள் உண்டு. தற்கால உரைநடையில் காணப்படும் எளிய நடை, பத்திப் பிரிவுகள், குறியீடுகள் முதலியவை மேனாட்டுக் கிறித்தவரால் கொண்டு வரப்பட்டவையாகும். எளிய நடைக்கு வழிகோலியவர் தத்துவப் போதகர் எனப்படும் இராபர்ட் டி நோபிலி ஆவார். வீரமாமுனிவர் செந்தமிழ், கொடுந்தமிழ் எனப் பாகுபடுத்திக் காட்டினார். விவிலிய மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட சீகன்பால்கு, பெஞ்சமின் சுஷில்ட்ஸ், பெப்ரிஷியஸ் போன்றோரும் உரைநடை வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளனர்.

தமிழில் சொற்களின் பொருள்களைக் காணப் பழங்காலத்தில் நிகண்டுகள் பயன்பட்டன. அவை முழுமையான அகர நிரல் முறையில் அமைந்தில. அந்நிலையிலிருந்து மாறி முறையான அகர நிரல் கொண்ட தற்காலத் தமிழ் அகராதிகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர் கிறித்தவரே ஆவர். தமிழுக்கான முதல் அகராதியைத் தொகுத்தவர் வீரமாமுனிவர். சீகன்பால்கு, எம்.ஏரியல், புருனோ, ஜி.யு.போப் போன்றோரும் அகராதிகளைத் தொகுத்துள்ளனர். இருமொழி அகராதிகளைப் பலர் படைத்துள்ளனர். அவருள் குறிப்பிடத்தக்கோர் அந்தோனி டிபுரொயன்ஸா, வீரமாமுனிவர், சீகன்பால்கு, பியூர்ஜிஸ், ஆர்.பி.குரி, ஏ.பிலின், முசே, துபே, டிபிரெதர்டன், ஹோப்ரோ, ஸ்பெர்ஸ் நெய்டர், வில்லியம் நெலின்சு, பெர்சிவல் முதலியோர் ஆவர். பன்மொழி அகராதிகளை வீரமாமுனிவர், முசே, துபே போன்றோர்

படைத்துள்ளனர். நல்லூர் ஞானப்பிரகாசர் படைத்த வேர்ச்சொல் அகராதி, தேவநேயப் பாவாணர் தொகுத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி ஆகியவை சிறப்பிடம் பெறத்தக்கவை.

தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண விதிகளை மேனாட்டார் மட்டுமன்றித் தமிழரும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு, உரைநடை வடிவில் இலக்கண நூல்களைக் கிறித்தவர் எழுதியுள்ளனர். அவ்வாறு எழுதப்பெற்ற கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில் வீரமாமுனிவர், எகர ஏகார, ஒகர ஓகார வரிவடிவ வேறுபாடுகளைக் கண்டு தந்தார். 'தொன்னூல் விளக்கம்' என்னும் செந்தமிழ் இலக்கண நூலையும் எழுதினார். சீகன்பால்கு, இரேனியஸ், கிரால், ஜி.யு.போப், ஆண்டர்சன் போன்ற பிறநாட்டுக் கிறித்தவர்கள் பிறமொழிகளில் இலக்கண நூல்களை எழுதினர். கூழங்கைத் தம்பிரான், ஹென்றி பவர், ஜான் லாசரஸ், சாமுவேல் பிள்ளை, தாவீது யோசேப்பு, நல்லூர் ஞானப்பிரகாசர், தேவநேயப்பாவாணர், மோமேசு பொன்னையா, இசுரேல், இன்னாசி, அன்னி தாமஸ், ஆல்பர்ட், காசுமான் ஆகியோர் தமிழ் இலக்கணம் குறித்த நூல்களை எழுதியோருள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இலக்கணம் பற்றி அறிவியல் முறையிலான மொழியியல் நூல்களை இன்னாசி, அன்னி தாமஸ் போன்றோர் எழுதியுள்ளனர்.

இலக்கிய வளர்ச்சியில் கிறித்தவர்கள் அனைத்து வகைப் படைப்பிலக்கியங்களையும் படைத்துள்ளனர். அவற்றை வகைப்படுத்திக் காப்பியம், சிறுகாப்பியம், காவியம், புராணம், பாவியம், அந்தாதி, ஆற்றுப்படை, சதகம்,பதிகம், கலம்பகம், உலா, கோவை, பரணி, தூது, பிள்ளைத்தமிழ் போன்ற தலைப்புகளில் கூறியுள்ள விரிவான செய்திகள் 'கிறித்தவத் தமிழ்க் கொடை' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வகைப் படைப்புக்கள் எல்லாம் தமிழின் பிரிவுகளுள் ஒன்றாகிய இயற்றமிழ் வகையைச் சார்ந்தனவாகும்.

இசைத்தமிழ்த் தொண்டிலும் ஆய்வு நூல்கள் எழுதிச் சிறந்த கிறித்தவர்கள் உண்டு. தமிழிசைக்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றியுள்ள பணி குறிப்பிடத்தக்கது. தென்னகத்தில் முதன்முதலில் இசை மாநாட்டை நடத்தியவர் அவரே. ஏழுமுறை ஏழிசை மாநாடுகள் நடத்தியுள்ளார். 'கருணாமிர்த சாகரம்', 'கருணாமிர்தத் திரட்டு' என்னும் நூல்கள் எழுதினார். அமலதாஸ் அடிகள், 'இசை எளிது' என்னும் இதழைச் சில ஆண்டுகள் வெளியிட்டு வந்தார். பி.டி.செல்லத்துரை அடிகளார் 'கர்நாடக இசையில் ராகங்கள்' என்னும் நூலையும் 'தென்னக இசையியல்' என்னும் ஆய்வினையும் வெளியிட்டுள்ளார். வீ.ப.கா.சுந்தரம் தமிழிசைச் சொற்கள் குறித்த ஆய்வைப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்காகச் செய்துள்ளார். இசைத்தமிழில் வண்ணங்கள், கீர்த்தனைகள், நாட்டுப்புறஇலக்கியங்கள் ஆகிய வகைகளில், பல்வேறு படைப்புகளைப் படைத்துள்ள செய்திகளைக் 'கிறித்தவத் தமிழ்க்கொடை' என்னும் நூல் விளக்கும்.

நாடகத்தமிழில், இலக்கிய வகைகளாகவும், நிகழ்கலை வடிவங்களாகவும் பலவற்றைப் படைத்துள்ளனர். குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், கீர்த்தனை நாடகம், சவிட்டு நாடகம், வாசகப்பா, விலாசம், கூத்து, பாஸ்கா, நாட்டியம், அரங்கம் எனப் பல தலைப்புக்களில் படைத்துள்ள செய்திகளைக் 'கிறித்தவத் தமிழ்க்கொடை' என்னும் நூலால் அறியலாம்.

முதன்முதலில் தமிழில் திங்களிதழைத் தொடங்கி, உலகச் செய்திகளையும், இலக்கியப் படைப்புகளையும் வெளியிட்ட பெருமை பாளையங்கோட்டையிலிருந்து வெளிவரும் நற்போதக இதழுக்கே உரியது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் பண்பாட்டு அடிப்படையில் உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களை ஒன்று சேர்க்கவும், ஆய்வுக் கருத்தரங்குகளை ஏற்படுத்தவும், தமிழுணர்வினை ஊட்டவும், உலகத்தமிழ் மாநாட்டுக்கு அடிகோலித் தம் பொறுப்பில் முதல் மாநாட்டை மலேசியாவில் நடத்திக்காட்டியவர் மறைத்திரு. தனிநாயகம் அடிகளாரே.

ஆய்வு நெறிகளில் வழிகாட்டிய மேனாட்டுக் கிறித்தவரின் பணி நினைவு கொள்ளத்தக்கதாகும். சிறந்த ஆராய்ச்சி மேற்கொள்ள முன்வருபவர்கட்கு அடிப்படைத் துணையாய் அமைவன நூல் தொகைகளே. அவ்வகை நூல் தொகுப்புக்களைத் தமிழில் முதன்முதல் வெளியிட்டவரும் கிறித்தவரே. மர்டோக் 1865–இல் வெளியிட்டார். சீகன்பால்கு தாம் படித்த 161 நூல்களைச் சுட்டுவதும் ஒருவகையில் நூல் தொகைக் குறிப்பே. நூலை எழுதிய ஆசிரியர் பெயரைத் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிடும் முறை மேனாட்டுக் கிறித்தவரால் ஏற்பட்டதே. அம்முறை முன்னோர்க்கு இல்லாததால் முக்கூடற் பள்ளு, தமிழ் விடு தூது போன்ற சிறந்த நூல்களைப் படைத்தவர் பெயர் தெரியவில்லை. நூலாசிரியர் பெயர், பாடல், எண் போன்றவற்றைக் குறித்து மேற்கோளாகச் சுட்டப்படும்

ஆய்வு நெறிமுறையும் கிறித்தவரால் தொடங்கப்பட்டதே. அறிஞர் பட்ட ஆய்வேடுகளில் சொல்லடைவு, பொருளடைவு போன்றவை இறுதியில் கொடுக்கப் படுகின்றன. இதற்கும் தமிழில் அடிப்படையிட்டவர் வீரமாமுனிவர். தம்முடைய வேதவிளக்கம் என்னும் நூலின் முதற்பதிப்பில் அதனைத் தொடங்கி வைத்தார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கிறித்தவர் சில தனிக் குறிப்புகளைக் கண்டுள்ளனர். சென்ற நூற்றாண்டு வரை பிரபந்தங்கள் 96 என்பதை ஒரு வழக்காகத் தமிழ்ப் புலவோர் குறித்துச் சென்றுள்ளனர். அது பொருந்துமா என்பது ஐயப்பாடே. எனினும் 96 வகை இலக்கியங்கள் யாவை எனப் பட்டியலிட்டுக் காட்டிய முதல்வர் வீரமாமுனிவர் ஆவார். அவர் சதுரகராதியின் தொகை அகராதியில் அவற்றைப் பட்டியல் இடுகிறார். பிற்காலத்தில் பள்ளு என்று பெயர் பெற்ற இலக்கியம் அவரால் உழத்திப் பாட்டு என்று சுட்டப்படுகிறது. அதற்கான இலக்கணத்தை முதன்முதலில் கூறியவரும் அவரேயாவார். அவ்வகையில் முதல் பள்ளு முக்கூடற்பள்ளு என்பர். ஆனால் ஈழத்தில் கி.பி. 1642–இல் தோன்றிய ஞானப்பள்ளு நூலே முதற்பள்ளு எனக் கொள்வர். அவ்வாறு கொண்டால், அதனைப் படைத்த புலவரும் கிறித்தவரே ஆவார். தமிழகத்தில் தோன்றியுள்ள பள்ளு நூல்களில் முதல் நூல் என்று எடுத்துக் கொண்டாலும், 'செண்பகராமன் பள்ளு' என்னும் நூலாகத்தான் இருத்தல் வேண்டும் என்பதனையும், அதுவும் கிறித்தவ நூலாகத்தான் இருக்கிறது என்பதனையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

உருவக வடிவம் தமிழருக்குப் புதுமை அன்று. சித்தர் பாடல்களிலும், பாசவதைப் பரணி போன்ற சிற்றிலக்கியங்களிலும் உருவகம் கையாளப்பட்டுள்ளது என்றாலும் ஒரு காப்பியம் முழுதும் உருவகமாகப் படைக்கப்பட்ட நூல் இரட்சணிய யாத்திரிகமே ஆகும். காப்பியங்களில் வேறுபாடான சந்தங்களைக் கொண்ட விருத்தங்களைப் படைப்பது தமிழ்ப் புலவர்களுக்குக் கைவந்த கலை எனலாம். கம்பர் 12016 பாடல்களில், 87 சந்தங்களைப் பயன்படுத்தியிருக்க, வீரமாமுனிவர் தம்முடைய தேம்பாவணிக் காப்பியத்தில் உள்ள 3615 பாடல்களில், 90 சந்தங்கள் அமைந்திருப்பதாகக் குறிப்பிடுவர். தமிழ் எழுத்து வடிவங்கள் காலந்தோறும் மாறி வந்திருக்கின்றன. ஆனால் கடந்த 250 ஆண்டுகளுக்கு மேலாக, வீரமாமுனிவர் திருத்தம் செய்த வரிவடிவங்களையே தமிழில் கையாண்டு வந்துள்ளனர்.

தமிழ் உரைநடை வளர்ச்சியில் வேதநாயகம் பிள்ளைக்குத் தனியிடம் உண்டு. உரைநடையில் முதல் புதினத்தைப் படைத்த சிறப்பு அவருக்கு உண்டு. 21–ஆம் நூற்றாண்டிலும் ஆட்சி மொழியை நடைமுறைப்படுத்த வேண்டிக் குரல் எழுப்ப வேண்டிய நிலை உள்ளது. இதனை, 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிலேயே குறிப்பிட்டு வலியுறுத்தியவர் வேதநாயகம் பிள்ளை. அக்காலத்திலேயே சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்க்க முனைந்து, 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலை எழுதியுள்ளார். தாம் கிறித்தவராக இருந்தும், சமயப் பொதுமைச் சிந்தனை விதையைத் தூவினார். அது காரணமாக, 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' என்னும் நூலை எழுதினார்.

தமிழில் ஒரு பிரிவான நாடகத் தமிழ் பற்றிப் பழமையான நூல்களில் குறிப்புக்கள் இருந்தாலும், முறையான இலக்கணத்தைக் கூறும் வகையில் எந்நூலும் அமையவில்லை. பிற்கால இலக்கண ஆசிரியர்கள் அதனைப் பற்றிய இலக்கணத்தைச் சுருக்கமாகக்கூடத் தந்திலர். ஆனால், வீரமாமுனிவர், தம் செந்தமிழ் இலக்கணத்தில், "பழங்காலத்தில் தோன்றியதாகக் கூறப்பெறும் உயர்ந்த செய்யுள் நாடகம் எதுவும் கிட்டவில்லை. அதற்கான இலக்கணம் எதுவும் வரையறுக்கப்படவில்லை. நடிக்கப்படும் நாடகங்களில் மக்கள் பெருவிருப்புடையவராய் இருக்கின்றனர். நடிப்பனவற்றுள் சிறியதாகவும், நகைக்கூறுடைய தாகவும் உள்ளவை கூத்து எனப்படும். பெரியதாகவும் அவலமாகவும் அல்லது அவலமும் நகைக்கூறும் கலந்ததாகவும் உள்ளவை நாடகம் எனப்படும். நாடகம் கடற்கரைப் பகுதியில் வாசகப்பா எனப்படும். இவை பல்வகைப் பாக்களால் இயற்றப்பட்டவை. அவற்றுள் சிந்து வகை மிகுதியாக இடம்பெறும்" எனக் குறிப்பிடுகிறார். மேலும், "உயர்ந்த திறனை வெளிப்படுத்துவதற்கு மாறாக அநாகரிக முறையில் களிப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்குரிய கருவிகளாக நாடகங்களைக் கருதினர். அவற்றில் கலைத்திறனைக் காணப் புகுதல் பயனற்றசெயல்" எனச் சுட்டுகிறார். 'வாசகப்பா' என்ற புதுவகை இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுபவர் வீரமாமுனிவர் மட்டுமே ஆவார்.

திருக்குறளைப் பிறநாட்டாருக்கு மொழி பெயர்த்து அறிமுகப்படுத்திய பெருமை வீரமாமுனிவருக்கே

உரியதாகும். தமிழக மக்களுள் கற்றுச் சிறந்தோர் மட்டுமே அறிந்திருந்த நிலையில் எளிய மக்களுக்கும் திருக்குறளைப் பரப்ப வேண்டுமென்ற சிந்தனை அவருக்கு இருந்திருக்கும் போலும். அதனால் 208 திருக்குறளைத் தேர்ந்து, அவற்றுக்கான உரையை எளிய மக்கள் பேசும் மொழியில் எழுதித் தொகுத்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையால் அந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது.

இறைவனைப் பல்வேறு உறவு முறைகளில் கண்டு பாடியவர் பாரதியார். ஆனால் அவருக்கு முன்னரே இறைவனைப் பல்வேறு தொழிலாளர்களாகவும், பல்வேறு விலங்கினங்களாகவும் கண்டு போற்றிப் பாடியவர் திட்டுர் தேசிகர் என்னும் சிறப்புப்பெயர் பெற்ற ஈசுவர பாக்கிய ஈசாக்கு ஆவார். இக்கட்டுரையாசியர் வெளியிட்டுள்ள "சௌமியத் துறை" என்னும் நூல் அதனைக் காட்டும்.

20ஆம் நூற்றாண்டில் பெண் அடிமை, குழந்தைத் திருமணம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றைச் சாடியவர்கள் பாரதி, பாரதிதாசன் போன்றோர் ஆவார். அதேபோல் பெண்மையின் சிறப்பைப் பேசியவர்களும் பெண்களின் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்தவர்களும் பாரதியார், பாரதிதாசன்,திரு.வி.க போன்றோர் என்பர். ஆனால், இவர்களுக்கு முன்னோடிகளாய் வேதநாயக சாஸ்திரியார், வேதநாயகம் பிள்ளை, ஜி.சே.வேதநாயகம், திட்டுர் தேசிகர் போன்ற கிறித்தவர்கள் திகழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறித்தவர்களுடைய பிறபணிகளை எல்லாம் விட, வேறு எச்சமயத்தவரும் முழுமையாகப் பின்பற்றாத ஒரு சிறப்பு உண்டென்றால்,அது வழிபாட்டு மொழியாக, எவ்விடத்தும், தமிழ் மொழியைக் கொண்டிருப்பதே எனலாம். இவ்வாறே ஒவ்வொரு சமயமும் தமிழுக்கு அணிசேர்க்கும் முயற்சிகளுள் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளது என்பதே உண்மை. என்றாலும் கிறித்தவர் பங்களிப்புப் பற்றிய தனித்தன்மைகளை வெளிப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பள்ளு இலக்கியம் ஒரு பார்வை

முனைவர் இல.கண்ணன்,
முனைவர் தி.கி. இராசரத்தினம்,
வேலூர்.

தமிழில் காலந்தோறும் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. சிற்றிலக்கிய வகைகளும் அவ்வாறே தோற்றம் பெற்றுத் தமிழுக்கு அணி சேர்த்தன. கலம்பகம், தூது, உலா, பிள்ளைத்தமிழ், மடல் என்று பலவகை சிற்றிலக்கியங்கள் தமிழில் வளர்ச்சியுற்றன. பள்ளு இலக்கியமும் அவ்வாறே தமிழில் தோற்றம் பெற்று வளர்ந்தது. பள்ளு இலக்கியம் தோன்றியதற்கான காரணம் ஆராயப்பட வேண்டிய ஒன்று. அந்த வகையில் இக்கட்டுரையானது பள்ளு இலக்கியத்தின் தோற்றச்சூழல் குறித்து ஆராய்கிறது.

பள்ளு – சொற்பொருள்

சிற்றிலக்கிய வகைகளுள் பள்ளு என்பதும் ஒன்று. 'பள்' என்னும் சொல்லில் இறுதி இரட்டித்து உகர விகுதிபெற்றுப் பள்ளு என்னும் சொல் வழங்குகிறது. 'பள்' அல்லது பள்ளு என்பதற்கு உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர், மற்றும் பிறஅறிஞர்களும் பல்வேறு வகையில் பொருளுரைக்கிறார்கள்.

அறிஞர்.ந.வீ செயராமன், " பள் என்பது உழவர்களில் ஒரு சாதியாரைக் குறித்த பெயராக வழங்குவது. இங்ஙனம் உழவுச் சாதியைக் குறித்து வழங்கும் 'பள்' என்னும் பெயர் ஆகுபெயராய் அவர்தம் வாழ்வியல் பற்றி விளக்கும் இலக்கியத்திற்கும் பெயராயிற்று எனலாம்.

இனி, 'பள்ளயம்' என்ற சொல் தேவதைக்குச் செய்யும் படைப்பை உணர்த்துவது என்றும், பள்ளயம் என்பதே குறுகி, 'பள்' என்றாயிற்று என்றும், காளி முதலான தேவதைகட்குப் பூசையிட்டுப் பலிபோடும்போது பாடப்படும் பண்வகை 'பள்ளு' என்று வழங்கியது என்றும், இத்தகைய படையல் முறைகளையும், பண்முறைகளையும் கருப்பொருளாகக் கொண்டு எழுந்தமையால் இவ்விலக்கியமும் 'பள்ளு' எனப்பெயர் பெற்றது என்றும் சிலர் கூறுவர். பள்ளு நூல்களில் தேவதைகட்குரிய படையல் முறையும் அப்போது பாடப்பெறும் பண்வகைகளின் விளக்கமும் மட்டுமே கருப்பொருள்கள் அல்லவாதலால், இக்கருத்து ஏற்புடையதாக அமையவில்லை.

எனவே,பள்ளுச் சாதியினரின் வாழ்வியலை விளக்கும் இலக்கியமாகத் திகழும் நூல் பள்ளு என அழைக்கப்பட்டது என்று கோடலே சிறப்பாகும்" என்று கூறுகிறார்.

பள்ளின் இலக்கணம்

இதுதான் பள்ளின் இலக்கணம் என்று குறிப்பிட்டுச் சொல்ல வாய்ப்பு இல்லையெனினும் தொல்காப்பியத்தில்,

"ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும்"

என்று குறிப்பிடுவதைப் பள்ளின் இலக்கணமாகப் பலரும் குறிப்பிட்டுள்ளனர். பன்னிருபாட்டியல்,

"புரவலர் கூறி அவன்வா ழியவென்
றகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்
எனவரும் ஈரைந்துழத்திப் பாட்டே"

என்று குறிப்பிடுவதைச் சிலர் பள்ளின் இலக்கணம் என்பர். 'ஈரைந்துழத்திப்பாட்டே' என்பதால் இவ்விலக்கணம் பள்ளிற்குப் பொருந்தாமையை அறியலாம்.

சுவாமிநாதம் நாற்பது சிற்றிலக்கிய வகைகளைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. அவற்றுள் பல இலக்கியங்

களுக்கு இலக்கணம் உரைக்கவில்லை. பிறநூல்கள் கூறாத பல சிற்றிலக்கியங்களை ஏசல், திக்குவிசயம், குறம், காதல், பள்ளு, குரவை, வாதாடல், கொம்மை, கதை, வண்ணம், விலாசம் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது. ஆயின், அக்காலத்து வழங்கிய பல இலக்கியங்களைப் பற்றிக் கூறவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த சதுரகராதி அக்காலத்து எழுந்த குறவஞ்சி, பள்ளு ஆகிய இலக்கியங்களைப் பன்னிருபாட்டியல் குறிப்பிடுவது போல் குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்றே குறிப்பிடுகிறது. ஆயின், குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் அவற்றின் இலக்கணமாகச் சதுரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெயரமைப்பு

பள்ளு இலக்கியங்கள் பல்வேறு காலங்களில் எழுந்தனவாயினும், அவற்றில் அமைந்த பாடுபொருளின் அமைப்புமுறை பொதுவாக இருத்தலைப் போலவே, அவை பெயர் பெற்று விளங்குவதிலும் ஒரு பொதுமுறை அமைந்து நிற்றல் காணலாம்.

பள்ளு நூல்கள் பெயர் பெறும் முறையை நால்வகையாகப் பகுக்கலாம்.

அ. பொருண்மையால் பெயர் பெற்றவை

ஆ. ஊரால் பெயர் பெற்றவை

இ. தலைவர்களால் பெயர் பெற்றவை

ஈ. ஊராலும் தலைமக்கள் பெயராலும் பெயர் பெற்றவை

பள்ளின் தோற்றச்சூழல்

சிற்றிலக்கிய வளர்ச்சி ஒருகால கட்டத்திற்கு மட்டும் உரியது அன்று. காலந்தோறும் அதன் வளர்ச்சியைக் காணலாம். சிற்றிலக்கிய வளர்ச்சியில் படிப்படியான நிலையைக் காணமுடிகிறது. சிலப்பதிகாரத்தில் ஐவகை நிலத்திற்குமுரிய பாடல்களைக் காணலாம். குறிஞ்சி நிலத்துப் பாடல்களின் இயல்பினைக் குன்றக்குரவையிலும், பாலை நிலத்துப் பாடல்களை வேட்டுவ வரியிலும், முல்லை நிலத்துப் பாடல்களை ஆய்ச்சியர் குரவையிலும், மருத நிலத்துப் பாடல்களைக் கானல்வரியில் வருகின்ற காவிரியாற்றைப் பற்றிய பாடல்களிலும், நெய்தல் நிலத்துப் பாடல்களைக் கானல்வரிப் பாடல்களிலும் குறிப்பிட்டு வரிப்பாடல்களின் சிறப்பினை ஆசிரியர் விளக்கியுள்ளதைக் காணலாம். புகார்க்காண்டத்தின் இறுதியில், "திணைநிலைவரியும் இணைநிலைவரியும், அணைவுறக்கிடந்த யாழின்றொகுதியும்" என்றும், மதுரைக்காண்டத்தின் இறுதியில், "நேரத் தோன்றும் வரியும் குரவையும்" என்றும், வஞ்சிக் காண்டத்தின் இறுதியில், "வரியும் குரவையும் விரவிய கொள்கையின்" என்றும் இப்பாடல்களின் பெருமை சிறப்பாகக் குறிக்கப் பட்டுள்ளது.

சிற்றிலக்கியங்கள் தோற்றம்பெற்ற தொடக்ககாலத்தில் குறிஞ்சி நிலத்தில் குறவஞ்சியும், மருத நிலத்தில் பள்ளும் தோன்றி வளர்ச்சியுற்றன. ஆயின், மற்றநிலங்களில் இப்படிப்பட்ட இலக்கிய வகை தோற்றம் பெறவில்லை. தமிழ்விடுதூதும், "குறமென்று பள்ளென்று கொள்வார் கொடுப்பாய்க்கு, உறவென்று மூன்றினத்தும் உண்டோ" என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். குறிஞ்சியும், மருதமும் இரு இலக்கிய வகைகளைப் பெற்றபோது, மற்ற நிலங்கள் பெறாதது ஏன் என்பது ஆய்வுக்குரியதே.

குறிஞ்சி நிலத்தில் குறவஞ்சியும், மருத நிலத்தில் பள்ளும் தோன்றக் காரணமான சூழலை ஆராயவேண்டும். பல்வேறு அறிஞர்களின் கருத்தையும் அறியவேண்டும். "ஆறாம் நூற்றாண்டுவரை பேச்சு வழக்குச்சொற் கலவாத, வரையறுத்த யாப்பில் அமைந்த புலமை இலக்கியம் ஆழ்வார், நாயன்மார் வரவால், பக்தி இயக்கத்தால் சற்று நெகிழ்ச்சி அடையத் தொடங்கியது. இறையன்பை, பக்தியைப் பரப்புவதற்கு இன்னிசையைத் துணையாகக் கொண்ட அடியார்கள் அவ்விசைக்கு ஏற்ற நாட்டுப்பாடல் வடிவங்களையும், புதிய யாப்பு முறைகளையும் கையாளத் தொடங்கினர். சொற்களையும் அடைகளையும், அடிகளையும் திரும்பத் திரும்பக் கூறுதல் போன்ற நாட்டுப்பாடல் உத்தியையும் கையாண்டனர். இம்முயற்சி பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பிறிதோர் மாறுதலை விளைவித்தது. கவிஞர்கள், மன்னரையும், கடவுளரையும் பாடுவதுடன் சாதாரண மக்களுக்கும் இலக்கியத்தில் இடம் கொடுக்க முனைந்தனர். இம்முனைப்பின் விளைவாகத் தோன்றியவையே கலம்பகத்தில் மதங்கியார், கீரையார், வலைச்சியார், இடைச்சியார், குறம், பள்ளு முதலான உறுப்புக்களும், குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் போன்ற இலக்கியங்களும்" என்பர்.

சிற்றிலக்கிய வகைகளைப் பக்தி இயக்கம் நன்கு பயன்படுத்திக்கொண்டது. பெரும்பான்மையான சிற்றிலக்கிய வகைகள் சமய வளர்ச்சிக்கே பயன்பட்டுள்ளன. கலம்பகம், உலா, தூது, பிள்ளைத்தமிழ், அந்தாதி, பரணி போன்றவை இவ்வுண்மையை விளக்குவனவாய் அமைந்துள்ளன. குறவஞ்சியும், பள்ளும் அவ்வாறே பக்தி இலக்கியத்துக்குப் பயன்பட்டன.

பள்ளு நூல்களில் சைவ, வைணவ சமரசக்கருத்துகள் இடம்பெறுகின்றன. மேலோட்டமாகப் பார்க்கும்போது, சைவ, வைணவ சமரசத்துக்காகத் தோன்றிய இலக்கியமே பள்ளு என்று தோன்றும். ஆழ்ந்து பார்க்கின், "பள்ளுப்பாடல்களுக்கும் ஏனைய பிரபந்த வகைகளுக்கும் உள்ளடக்க ரீதியிலான வேறுபாட்டு அம்சங்களைக் காணலாம். அனைத்துப் பிரபந்தங்களுமே அடிப்படையில் சமயப் பெருமை பாடுவதையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. எனினும், அதற்கு அழுத்தம் கொடுக்கும் தன்மையில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. சைவ, வைணவ சமரசக் கருத்துக்கள் சிறு தெய்வம் பெருந்தெய்வம் இணைப்பு, பள்ளருக்கு இலக்கியத் தகுதி தரல் போன்ற சில அம்சங்களைக் கூறலாம்" என்பர்.

ஒரு குறிப்பிட்ட காலத்திய அரசியல் – பொருளாதார சமூக நெருக்கடியின் இலக்கிய விளைச்சலாகவே பள்ளுப் பாடல்கள் எனும் தனிவகைப் பிரபந்தங்கள் தோற்றம் பெறலாயின எனலாம்"

ஆக, ஒரு இறுக்கமான சூழலில் தோன்றியதே பள்ளு இலக்கியம் எனலாம்.

குறிப்பிடத்தக்க பள்ளு நூல்களில் சில:–

பள்ளு நூல்களில் முதலில் தோன்றியது திருவாரூர்ப்பள்ளு எனவும், முக்கூடற்பள்ளு எனவும் இருமாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஈண்டுச் சில குறிப்பிடத்தக்க பள்ளு நூல்கள் இடம் பெறுகின்றன.

1. திருவாரூர்ப்பள்ளு
2. குருகூர்ப்பள்ளு
3. திருமலைப்பள்ளு
4. சிவசயிலப்பள்ளு
5. வைசியப்பள்ளு
6. வடகரைப்பள்ளு
7. உரிமைநகர்ப்பள்ளு
8. சீர்காழிப்பள்ளு
9. தில்லைப்பள்ளு
10. கண்ணுடையம்மைப்பள்ளு
11. கதிரைமலைப்பள்ளு
12. பறாளைவிநாயகர்பள்ளு
13. தண்டிகைக் கனகராயன் பள்ளு
14. சேற்றூர்ப்பள்ளு
15. திருவிடைமருதூர்ப்பள்ளு
16. மாந்தைப்பள்ளு
17. கூடற்பள்ளு
18. தஞ்சைப்பள்ளு
19. தென்காசைப்பள்ளு
20. இராசைப்பள்ளு
21. புதுவைப்பள்ளு
22. முக்கூட்டுப்பள்ளு
23. மன்னார்மோகனப்பள்ளு
24. சண்பகராமன் பள்ளு
25. வையாபுரிப் பள்ளு
26. திருச்செந்தில் பள்ளு
27. முக்கூடற்பள்ளு

பள்ளு இலக்கியம் சிற்றிலக்கிய வகையினைச்சேர்ந்தது. பிற்காலத்தில் குறிஞ்சி நிலத்தில் குறவஞ்சியும், மருதநிலத்தில் பள்ளும் தோன்றி வளர்ந்தன. ஆயின், குறவஞ்சி தோற்றம் பெற்ற சூழலுக்கும் பள்ளின் தோற்றச் சூழலுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. பள்ளு இலக்கியம் ஒரு சமரசத்தை முன்னிட்டே எழுந்தது. ஆனால், அது சைவ – வைணவ சமரசம் குறித்தோ, சிறுதெய்வம்–பெருந்தெய்வம் இணைப்புக் குறித்தோ தோற்றம் பெறவில்லை. மாறாக ஒரு பிரிவினர் மற்றோர் சமயத்திற்கு மாறாமல் இங்கேயே நிலைக்கும் படிக்கு எழுந்த இலக்கியம் என்பதே சாலப் பொருந்தும்.

பாடுபொருள் பரவும் வகை



முனைவர். கதிர் மகாதேவன்,
மதுரை.

தாவரங்கள் இயற்கையின் உதவியைக் கொண்டு ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்திற்குப் பரவுவதைப் போல இலக்கிய அடிக்கருத்துக்களும் மக்களின் எண்ணங்களில் புகுந்து பல்வேறு இடங்களுக்கும் இடம் பெயர்ந்து இலக்கியங்களில் இடம் பெற்றுக் காலங்கடந்து வாழும் தகுதியைப் பெறுகின்றன.

பாடுபொருளில் அடிக்கருத்துகள் பரவும் வகைகள் ஆய்விற்கு உரியன. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களை அடிப்படையாக வைத்துக் காப்பியனார் இலக்கியக் கொள்கைகளை வகுத்துள்ளார். தமிழில் இது பொதுமைப் போக்காகக் காணப்படுகிறது. இலக்கிய வரலாறே இத்தகைய போக்கில் ஆராயத்தக்கது.

தொல்காப்பிய இலக்கணம் சுட்டும் இலக்கியக் கொள்கைகள் பாடுபொருள் பரவும் விதத்தைக் குறிப்பாகக் காட்டுகின்றன. தொல்காப்பியர் புறப்பொருளில் பாடும் அடிக்கருத்துகளைச் சிலப்பதிகாரம் ஒரு காண்டமாகவே தோற்று வித்துள்ளது. வஞ்சிக் காண்டம் இத்தகைய போக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அமர் புரியும் வரைமுறைகளைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து என்று தொல்காப்பியம் பாகுபாடு செய்துள்ளது. இப்பாகுபாட்டை அடிப்படையாக வைத்தே சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டம் இயற்றப்பட்டுள்ளது.

வடக்கே இருந்து தெற்கே அரசர்கள் தத்தம் வலிமைகளை நிலைநாட்டப் படையெடுத்து வந்துள்ளனர். அதே போன்று தெற்கே இருந்தும் வடக்கே படையெடுத்துச் செல்வதும் உண்டு. புராண காலந்தொட்டு ஆட்சியில் ஆதிக்கம் செலுத்துவதையும் அமர் புரிவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தொன்மங்கள் எனப்படும் புராணங்கள் இத்தகைய படையெடுப்பினை விளக்குவதற்குப் பாடுபொருளைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். பாடுபொருளில் பதினெட்டு என்ற எண் இந்திய இலக்கியங்களில் பொதுமைப் பண்பாகப் பரவிக் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாகத் தேவ அசுர யுத்தங்கள் பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்றதாகப் புராணச் செய்தி காட்டுகின்றது. இராமனுக்கும் இராவணனுக்கும் நடைபெற்ற போர் பதினெட்டு மாதங்கள் நீடித்ததாக இராமாயணம் கூறுகிறது. குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பதினெட்டு நாட்கள் போர் நடைபெற்றதாக மகாபாரதம் கூறும். இந்தப் போர்களைச் சொல்லிச் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல்லெடுக்க வடநாடு சென்றபோது கங்கைக் கரையில் நூறு அரசர்களுடன் போரிட்டான். அவர்கள் அனைவரையும் பதினெட்டே நாழிகையில் வெற்றி கொண்டான் என்று சிலப்பதிகாரம் கூறும். பதினெட்டு என்ற எண் எவ்வாறு பொதுமைக் கூறாக இந்திய இலக்கியங்களில் காட்சி அளிக்கின்றது என்பதற்கு இதுவே தக்க சான்றாகும். மேலும், இந்திய இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தேவ அசுர யுத்தங்களும், இராம இராவணப் போராட்டங்களும், பாரதப் போரும் பாடுபொருளில் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் கூறும் புறப்பொருள் பாடுபொருள்கள் சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில் ஒவ்வொரு காதையிலும் பாடுபொருளாகக் காணப்படுவது அவற்றின் சிறப்பினைக் காட்டுகின்றன.

அமர்க்களத்தில் வீரன் ஒருவன் தன் தலையை இழந்த பின்னரும் முண்டமாக நின்று போரிட்டதை 'பேயாடு பறந்தலை' என்று சிலப்பதிகாரம் கூறும். சிறந்த வீரர்கள் உள்ளத்தில் தோன்றும் வீர உணர்ச்சிகள் அவன் உடலில் முனைப்பாக ஊடாடியிருப்பதை இப்பாடுபொருள் தெளிவாகக் காட்டுகிறது. மராட்டிய மாநிலத்தில் சத்திரபதி சிவாஜியின் தளபதியாக விளங்கிய தேஷ்பாண்டே என்ற போர் வீரன் முகலாயப் பெரும்படையை எதிர்த்து அய்ந்து மணித்துளிகள் முண்டமாக நின்று இரு கைகளிலும் கத்தி ஏந்தி அமர் புரிந்ததை முகலாய வரலாறே குறிப்பிடுகின்றது. இத்தகைய வீரச்செயல் இந்திய நாடு முழுவதும் இலக்கியங்களில் காணப்படுவதைப் பொதுமைக் கூறு எனலாம்.

ஒரு பாடுபொருள் வளர்ச்சியும் தொடர்ச்சியும் பெற்று ஒரு மொழி இலக்கியத்தில் மட்டுமல்லாமல் பல்வேறு இந்திய மொழிகளின் இலக்கியங்களிலும் பரவியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் பாடாத இந்திய இலக்கியங்கள் இல்லை எனலாம். பாடுபொருளாலும் பண்பாட்டாலும் சிற்சில மாறுதல்கள் ஆங்காங்கே காணப்பட்டாலும் இதிகாசங்களின் போக்கு ஒன்றாகவே பாடுபொருளில் காணப்படுகின்றது. சிலப்பதிகாரப் பாடுபொருள்கள் காலந்தோறும் பாடப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் கண்ணகியைத் 'திருமாவுண்ணி' என்ற பெயரால் அழைக்கின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி வரலாறு காவியச் சிறப்புடன் கூறப்படுவதைக் காணலாம். கண்ணகி கோவலன் வரலாறு நாட்டுப்புற இயலில் மீண்டும் மீண்டும் பாடுபொருள் வரிசையில் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

பலகாலங் கழித்துச் சேரன்செங்குட்டுவன் பேரியாற்றங்கரைக்குப் பொழுதுபோக்கிற்காகவும் மலைவளம் கண்டு மகிழ்ச்சி அடைவதற்காகவும் சென்ற பொழுதுதான் கண்ணகியின் வரலாற்றைக் கேள்விப்படுகிறான். வடநாட்டிற்குப் படையெடுத்துச் சென்று அங்குத் தமிழ்நாட்டைப் பற்றி இழிவாகப் பேசிய கனகவிசயரையும் அவர்தம் கூட்டாளி களையும் கூண்டோடு ஒழிக்கத் திட்டமிட்டான். தமிழர்களின் போர்த்திறத்தை வடநாட்டவர் உணரச் செய்தவன் சேரன் செங்குட்டுவன்.

பாடுபொருள்: அடிக்கருத்துக்களின் அமைப்பும் சூழற்சியும்

ஒரு கவிதை பாடுவதற்கு, எந்தப் பொருள் மையமாக அமைகிறதோ அந்தப் பொருளை அடிக்கருத்து என்று கூறுவர். அடிக்கருத்துக்கள் பழங்காலக் கவிதைகளில் பெரிதும் இடம் பெற்றன. எடுத்த எடுப்பில் பாடக்கூடிய நாநவில் (oral) கவிதைகளில் இடம் பெற்றன. இந்தப் பாடுபொருளை இப்படித்தான் பாட வேண்டும் என்ற வரைமுறையை இலக்கணிகள் வகுத்துள்ளனர்.

இந்தக் காரணத்தால் புலவர் பெருமக்கள் பாடுபொருளை மீண்டும் மீண்டும் பாடினர். ஒவ்வொரு முறை பாடும் பொழுதும் பாடு பொருளின் சூழலுக்கு ஏற்ப அடிக் கருத்துக்கள் புனையப் பெற்றுள்ளன. எனவே, பழங்காலக் கவிதைகளில் - அது அகப் பொருளாயினும் சரி புறப் பொருளாயினும் சரி - மீண்டும் மீண்டும் ஒரு பொருளைப் பற்றிப் பலரும் கவிதை யாத்தனர்.

ஒரு கோவில் கோபுரத்தில் காணப்படும் சுதை உருவங்கள் தூரத்தில் இருந்து பார்ப்பவருக்கு ஒன்று போலத் தோன்றினாலும் அருகில் செல்பவருக்கு ஒவ்வொரு சிலையும் உருவத்தாலும் கற்பனைத் திறத்தாலும் பல கதைகளை உள்ளடக்கிச் செய்தவையாகக் காணப்படும். காட்டாக, அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சுதையினாலான சிற்பங்களில் பல கோயில்களிலும் செய்து வைத்திருப்பதைக் காணலாம். ஒவ்வொரு காட்சி அமைப்பிலும் சிவபெருமான் தோற்றம் அளித்தாலும், அச்சுதை உருவங்கள் கதையாலும் கற்பனையாலும் உணர்ச்சியாலும் வடிவத்தாலும் வேறுபட்டே தோன்றுகின்றன. ஒவ்வொரு கதை அமைப்பிலும் குறிப்புப் பொருள் உண்டு. அவை போலத் தமிழ்ச் சங்க இலக்கியங்களில் கவிதைகள் பாடுபொருளாலும் அடிக்கருத்துக்களாலும் ஒன்று போலத் தோன்றினாலும் குறிப்புப் பொருளாலும், உட்பொருளாலும், இரண்டாம் பொருளாலும், ஆகுபெயராலும், அன்மொழித் தொகையாலும், நுண்பொருளாலும், கூற்றெச்சத்தாலும், குறிப்பெச்சத்தாலும், இறைச்சிப் பொருளாலும், உள்ளுறைப் பொருளாலும் வேறுபடுகின்றன. இதனால் பழங்காலக் கவிதைகளில் புலவர்கள் அடிக் கருத்துகளை ஊட்டவும் கூட்டவும் செய்தனர். சங்க இலக்கியம் பயின்றோர் அப்பாடல்களில் காணப்படும் அடிக்கருத்துக்களை எண்ணி எண்ணி வியந்து

பயின்று அவைகளை இயற்றிய புலவர்களைப் பாராட்டினர். எண்ணற்ற அடிக்கருத்துக்களைப் பாடுபொருளாகக் கொண்டு பாடிய பாடல்கள் பாடு பொருளாலும், ஊடுபொருளாலும், தேடு பொருளாலும் அடிக்கருத்துக்களின் வகைகளை மேம்படச் செய்தன. இத்தகைய பாடுபொருள்கள் உளவியல் பாங்கினைச் செழுமையாகக் காட்டியுள்ளன. எனவேதான் பாடு பொருளின் ஆக்கத்தைப் பொருள் என்றும், திணையைக் கவிதையின் சூழல் என்றும், அடிக்கருத்துக்களைத் துறை என்றும் பாகுபடுத்தி யுள்ளனர்.

திணை என்பது கவிதைப் பாடுபொருள் தோன்றிய சூழலைக் காட்டுகிறது. துறை என்பது பாடுபொருளின் அடிக்கருத்தைச் சுட்டுகிறது. இவ்விரண்டு கூறுகளும் புவியியல் அடிப்படையில் அமைந்துள்ளன. காதற் பாடல்களாகிய அகப்பொருள் ஆயினும் அமர்க்களப் பாடல்களாகிய புறப்பொருள் ஆயினும் ஐந்து திணைகளின் சூழல்களிலேயே இயற்றப்பட்டுள்ளன.

வாய்மொழிப் பண்பும் பாடுபொருளும்

ஒப்பீட்டாய்வாளர்கள் இலக்கியத்தின் தோற்றத்தை ஆராயத் தலைப்பட்டனர். இலக்கியத்தை எழுத்து வடிவத்தில் கண்டு பழகிய நமக்கு, அது தொடக்க நிலையில் வாய்மொழியாய் விளங்கியது எனின் வியப்பாக உள்ளது. மேலும், வினைநவில் கவிதைகள் பெரிதும் நாநவில் திறமுடையன என்பது ஒப்பிலக்கியம் கண்டதோர் உண்மையாகும். பாடுதல் இயற்கை; எழுதுதல் செயற்கை என்பதனை யாவரும் அறிவர். வாய்மொழியாய் இலக்கியங்கள் வழங்கியமை முன்பும் உண்டு. இன்றும் காண்கிறோம். கிரேக்க செர்மானிய மொழி ஒப்பீட்டால், சாடுவிக் வாய்மொழி யாப்பிலுள்ள உலகப் பொதுமையை மெய்ப்பித்துள்ளார். இவ்விரு மொழிகளிலும் ஒரு வகையான அமைப்பு, மொழி வாய்பாடு, மீண்டும் மீண்டும் வருவதால் வாய்மொழிப் பாடல் மரபு தெளிவாகிறது என்கிறார்.

சாடுவிக் ஆய்வு முறையைப் பின்பற்றிய மில்மன்பரி மூலக்கூறுகளின் படைப்பைக் (Elements of production) கொண்டு ஓமருடைய காப்பியப் படைப்பின் தன்மையை ஆராய்ந்தார். அதில் அவர் கண்ட வெற்றியினால் ரோட்லோவின் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னரே ஓமரின் டார்வின் என்று மில்மன்பரி அழைக்கப்பட்டார். ஆகவே, பரியினுடைய கொள்கை மேலும் மேலும் வாய்மொழிப் பாடலின் தன்மையைக் காணப் பெரிதும் பயன்பட்டது.

தமிழர்தம் வீரநிலைக் காலப் பாடலை ஆராய இம்முறையைப் பின்பற்றியவர் டாக்டர் க.கைலாசபதி ஆவார்.

ஒப்பீட்டாளர்கள் கூறும் பின்வரும் கருத்துக்கள் வாய்மொழி இலக்கிய ஆய்வில் அறியத்தக்க உண்மைகள் ஆகும்.

1. பல சமுதாயங்களில் எழுத்து வடிவம் உடன் இருக்கவும், வீரநிலைக் கவிதைகள் (வாய்மொழி இயல்பின்) வாழக் காண்கிறோம்.

2. விதி விலக்கின்றி அநேகமாக எல்லா வீரநிலைக் கவிதைகளும் முதனிலையில் கேட்பவர்களுக்காகப் பாடப்பட்டன; படிப்பவர்க்காக மட்டும் இல்லை.

3. எழுத்து வடிவமும் இலக்கியமும் ஒன்றின் ஒன்று பிரிக்க முடியாதபடி இணைந்திருப்பதாக எண்ணி, எண்ணி நாம் பழகிவிட்டோம். ஆயின், இவ்விரண்டிற்கும் உரிய தொடர்பு தற்செயலாக நேர்ந்த விபத்து எனலாம். மேலும், இலக்கிய வரலாற்றில் எழுத்தும் இலக்கியமும் ஒருங்கிணைந்த நிலை இரண்டாம் இடத்தைப் பெறுகிறது.

4. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் எழுத்து வடிவம் இருந்தும், எழுத்துக் கலை தெரிந்திருந்தும், உயர்நிலை பெற்ற இலக்கியம் வளர்ந்திருந்தும், எழுத்தினை இலக்கியத்திற்கு அண்மைக் காலத்திலேதான் பல மொழிகளில் பயன்படுத்தினர்.

5. வாய்மொழி இலக்கியம் மக்களிடையே நெடுங்காலம் பயின்று பயின்று குறிப்பிட்ட தொடர்த் தொகுதியாகவும், அடிக்கருத்தாகவும் பழங்கதைகளின் தொகுதியாகவும் செறிவு பெறுகிறது. இவ்வாறு இது வழிவழியாக வழங்கப் பெற்று வருகிறது. மேலும், வாய்மொழி இலக்கியம் நிலையற்றது அன்று; அது தோன்றிய காலத்து மாறுதல் அதிகமாகவும் வரவர மாறுதல் குறைவாகவும் இருக்கும் மாற்றங்கள் மட்டுமே நிலைபேறாகிய உண்மையென நாமும் ஒப்புக்கொள்ளத் தொடங்கி இருக்கிறோம்.

சங்கப் பாடல்கள் பல, வாய்மொழிப் பண்பை உடையவை. சங்க காலத்திலும், அக்காலத்திற்கு முன்னரும், நாம் இன்று எழுத்து வடிவத்தில் காணும் இலக்கியத்தில் நிலவிய நாநவில் திறத்தினை

இவ்வாய்மொழிப் பண்புகள் நினைவூட்டுவன. இரு வகையில் வாய்மொழி யாப்பின் புனைதிறத்தை அறியலாம். மொழித்திறத்தில் காணப்படும் வாய்மொழிப் புனைதிறத்தின் உத்தியைக் (Oral Technique) கண்டு ஆய்தல், இரண்டு சமுதாயப் பண்பாட்டுச் (Sociological Approach) சூழல் காணுதல் ஆகும். மேலைநாட்டு வாய்மொழிக் கூறுகளை ஆய்ந்தவர்கள், பாடல்களை, எடுத்த எடுப்பில் பாடப்படுபவை (Oral Composition) என்றும், மீண்டும் மீண்டும் பாடப்பட்டுப் (Oral Transmission) பல தலைமுறைகள் பாடல்களின் உருவும், கருவும் பரவுதல் என்றும் பிரித்துக் காட்டுவர்.

இசையும் கருத்தும்

இசைக் கூறுகள் வாய்மொழிப் பாடல்களுக்கு இன்றியமையாதன எனலாம். சாதாரணமாகப் பாடல்களுக்கு இலக்கணம் வகுப்பதும், இலக்கண விதிமுறைகளைப் பின்பற்றிப் பாடல்களை எழுதுவதும் வழக்கமாகும். ஆனால், வாய்மொழியாகப் பாடல் புனையும் ஆற்றல் பெற்றோர் இலக்கணத்தைப் பொருத்தி எழுத்துக்களை எண்ணிச் சீர்களையும், தளையையும் செம்மை செய்வதில்லை. பாடல்களின் ஓசைதாம் இசைக்குக் காரணமாவதை மனத்தில் கொண்டு, வேண்டும் பாடற்பொருளுக்கு உரிய ஓசையில் பாடல்களைப் புனைவர். யாப்பிலக்கணத்தை வாய்மொழி யாப்பின் புனைதிறத்தில் கண்டால், அப்பாடல்களும், அப்பாடல்களுக்கு முன்னர் இருந்த புனைதிறனும் புலப்படும். இன்ன பாடலை இன்ன பாவடிவில் புனைய வேண்டும் என்பது இலக்கணம். இன்ன இசைவடிவில் இத்தகைய பொருளைப் பாடுவது என்பது பாவின் மரபு வளர்ச்சியாகும். எனவே, வாய்மொழி யாப்பின் புனைதிறத்தை அறிய பாவின் மரபு வளர்ச்சியை ஆய்தல் நன்று. யாப்பிலக்கணமும் இவ்ஆய்விற்கு ஒருவாறு துணை செய்யும்.

உலகில் சந்த ஓட்டம் (Rhythmic flow) பொருள் தன்மையைக் காட்டும்; அத்தகைய நிலை இயற்கையானது. கைவீசி நடத்தல் (marching) சந்த நயமுடையது. கை வீசி நடைபயிலும்போது இசைக்கப்படும் பல்லியம் (Band) இச்சந்த இயல்பை வெளிப்படுத்தும். தயிர் கடைதல், நீந்துதல், மழை பொழிதல் போன்ற பல இயக்கங்களில் சந்த இசையைக் காண்கிறோம். மனிதன் இருதயத் துடிப்பில் ஒருவகைச் சந்த இயல்பு உண்டு. ஈடும், இசையும் வாய்மொழி யாப்பின் புனைதிறத்தைக் குறிப்பின் புலப்படுத்தும் எனலாம். சில இடங்களில் சந்தம் பொருள் தரும் உத்தி (Sound echoing sense) உடையனவாய் இருக்கும்.

அசையும் சீரும்

வாய்மொழி யாப்பிசையில் சந்த அமைப்பு ஒன்று அழுத்தமுடையதாயும் பிறிதொன்று அழுத்தமிலாததாயும் இருப்பதைக் காண்கிறோம். அழுத்தம் பெற்றதும் (Stressed) அழுத்தம் இல்லாததும் (Unstressed) மாறி, மாறி வரும் நிலையை இலக்கணத்தில் அசை அசைந்து சீர் கொள நிற்றல் என்கிறோம். அழுத்த அசை (-). அழுத்தமிலா அசை (C) ஆகியவை மாறி மாறி வரும் போது இசை அமைகிறது. தமிழ் இலக்கணத்தில் இந்நிலையை வரி வடிவங் கொண்டு நோக்கி நேர் என்றும், நிரை என்றும் பிரிக்கிறோம். உண்மையில் இவ்விரண்டு அசைகளும் ஒலிவடிவம் நோக்கி நிற்பன. எனவே, பழந்தமிழர் அசை என்ற சொல்லையும் காரணங் கருதிப் பயன்படுத்தியுள்ளனர். அசைக்கு அடிப்படை எழுத்து எனின், எழுத்தின் அடிப்படை அணுத்திரள் ஒலியாம். எனவே, தொல்காப்பியர் பொருள் அடிப்படையில் யாப்பு அமையும் என்பதனை,

"எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்"

என்று பகுப்பதின் வாயிலாக ஒலிக்குறிப்பிற்கும் பொருளிற்கும் உள்ள தொடர்பினை நிலை நாட்டுகிறார் எனலாம். யாப்பில் காணப்படும் அசையும் சீரும் நமக்கு அன்று அப்பாடல்களில் இயைந்த இசைக் கூறுகளைக் காட்டிக் கொடுக்கின்றன.அசை கூடி இசையாகி, தளை கூடி அடியாகிறது. அடி கவிதையாகிய மெய்யை இயக்குகிறது. எனவே, சொல் கவிதையின் அடியில் ஆடல் கொள்கிறது. கவிதையில் நெடிலும், குறிலும் ஆடலில் நீண்ட குறுகிய கால் அசைவுகளைப் போல அசைந்து இசைக்குத் தாளம் கூட்டுகின்றன. எனவே, பழங்கவிதைகளின் அடிப்படை ஆடலிலும், பாடலிலும் அடங்கி இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். அடி அல்லது பதம் என்ற சொல்லும், சீர் என்ற சொல்லும் நடனத்திற்கு உரியன; கவிதைகளுக்கும் உரியன. பழங்கவிதைகளில் இசை இயற்கையாய் அமையும். இசை ஆடலுடன் கூடிச் சிறப்படையும். இன்று இத்தகைய பாடலின் இசை காற்றுடன் கலந்தது. ஆடற்கலை, இப்பாட்டிசையினூடே அசைவது நமக்குத் தெரியவில்லை! பாட்டும் பண்ணும் தனித்தனியாக

நிற்கின்றன. பண் அடிக்குறிப்பில் இருந்தாலும் அதற்கும் பாடலுக்கும் தொடர்பு இருப்பதாய் நாம் எண்ணுவதில்லை. "பண்கள்" பெயரளவில் நிற்கின்றன. அவற்றைப் போல இன்னிசைக் குயிலுவக் கருவிகள் இன்று இல்லை. அவற்றின் பெயர்களும் இசை விளக்கம் தருவதில்லை. ஈரசைச் சொற்கள் கால் மாறி வைத்து ஆடும் ஆடலுக்கும் வீரனது பீடு நடைக்கும் ஈடாக அமைகின்றன எனலாம். அடியீடு ஏத்தல், (Marching) என்ற சொல்லும் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது. கல்பக, மணல் ஞெமிர நடக்கும் வீரநிலைக் கால வீர்த்தம் செம்மாந்த நடைக்கும், செருக்களப் போக்கிற்கும் கவிதையின் அசை நிலைகள் இசை கூட்டி இருக்க வேண்டும். அமர்க்களங் குறித்த நிலையிலும், அமர்க்களச் சூழலில் பாடிய பாடல்களைப் பொருநர், புலவர், ஏத்துநர், மறம் பாடிய பாடினி ஆகியோர் பாடி இருப்பதைக் காணலாம்.

மேலை நாட்டார் கவிதைகளில் இத்தகைய சந்த அமைப்பு உண்டு. ஐயாம்பிக் கவிதைகளில் (Iambic poetry) குறில் நெடிலான அசைவுகளைக் காண்கிறோம். கிரேக்க, லத்தீன் மொழிக் கூறுகளைப் பின்பற்றிய ஆங்கிலத்தில் நான்கு வகையான அசை நிலைகளைக் கவிதை அடிகளில் காண்கிறோம்.

Iamb (Iambic)

Trochee (Trochaic)

Anapaest (Anapaestic)

Dactyl (Dactylic)

ஆங்கிலத்தில் ஒரடியுள் வரும் சீர் எண்ணிக்கையால் கவிதை அடி பெயர் பெறுவதைக் காண்கிறோம்.

Monometer	-	ஓரடியுள் ஒருசீர்
Diameter	-	ஓரடியுள் இருசீர்
Trimeter	-	ஓரடியுள் முச்சீர்
Tetrameter	-	ஓரடியுள் நாற்சீர்
Pentameter	-	ஓரடியுள் ஐஞ்சீர்
Hexameter	-	ஓரடியுள் அறுசீர்
Heptameter	-	ஓரடியுள் எழுசீர்
Octometer	-	ஓரடியுள் எண்சீர்
Nonameter	-	ஓரடியுள் ஒன்பதுசீர்

நாற்சீரடியும், ஐஞ்சீரடியும் கிரேக்க வாய்மொழிப் பாடல்களில் காணப்படுகின்றன. அறுசீரடிப் பாக்களும் உண்டு.

வரிவடிவமும் ஒலிவடிவமும்

பழந்தமிழர் வீரநிலைக் காலப் பாடல்களாகிய சங்க காலக் கவிதைகள் நமக்குக் கிடைத்துள்ளன. வரி வடிவத்தில் நமக்குக் கிடைத்துள்ள இக்கவிதைகளில் வாய்மொழிப் பண்புகள் காணப்படுகின்றனவா என்பதை ஆய்தல் இன்றியமையாதது. தமிழ் மொழியில் காணப்படும் இலக்கிய வளர்ச்சி (growth) இயற்கையானது. பிற நாட்டவரைப் பார்த்துத் தங்கள் மொழியில் முதன் முதல் இலக்கியத்தைத் தோற்றுவித்தனர் எனல் பொருந்தாது. முறையான ஆய்வில் எடுகோளை (Axiom) முன் கூட்டியே ஏற்றுக் கொள்வதற்குத் தடையெதுவுமில்லை. எனவே, இயற்கையாக அமையும் வாய்மொழிப் பண்பினைப் பழந்தமிழில் சுட்டிக் காட்ட வழியுண்டு. மில்மன்பரி, பன்முறை, பரிந்து வரும் அடைமொழிகளையும், பெயரடைகளையும் மரபுத் தொடர்புகளையும் உவமைகளையும் வரிகளையும் ஓமருடைய காப்பியப் படைப்பில் பயன்படுத்தி அக்காப்பிய வாய்மொழிப் பண்பினை நிலைநாட்டினர். வாய்மொழி இலக்கிய ஆய்வு நடத்திய பிறபல ஆசிரியர்களும் இவ்வழியை மேற்கொண்டனர் என்பர் டாக்டர் க.கைலாசபதி அவர்கள்.

பழந்தமிழில் வாய்மொழி அடிக்கருத்துக் கூறுகள் எந்தச் சூழலில் தென்படுகின்றன என்பதைக் காண்போம்.

1. கவிதைகள் உரையாடலாய் வாய்மொழிப் பண்பினை உணர்த்துவன.

2. தாழிசையில் சொற்கள் அல்லது தொடர்கள் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்து வாய்மொழிப் பண்பினை உணர்த்துவன.

3. ஒரு பொதுச் சொல் தொடர்ந்து கவிதையில் வந்து வாய்மொழி இயல்பினைச் சுட்டுவது.

4. புராண மரபுச் செய்திகள், பேச்சுமொழி, வாய்மொழிக்கு உரிய எளிய வாய்பாடுகள் (formulae) ஆகியவை வாய்மொழி இலக்கியப் பாங்கினைக் குறித்தன.

5. இசைப் பாடல்களில் வாய்மொழிப் பண்பு காணப்படுதல்.

6. நாநவில் கவிதைகளில் பொருள் திறமும் புனைதிறமும் ஒற்றுமை உடையனவாய் இருத்தல்.

மேற்கூறப்பட்ட வாய்மொழிப் பண்பின் உண்மையை அறிய சங்ககால இலக்கியத்திலிருந்து சான்றுகள் காணலாம்.

இலக்கியப் பாடுபொருளும் வாய்மொழிப் பண்புகளும்

பிசி, பழமொழி, உரை, பண்ணத்தி ஆகிய நான்கு இலக்கிய வகைகளும் வாய்மொழி இலக்கிய இயல்பின என டாக்டர் தமிழண்ணல் அவர்கள் குறிப்பிடுவர். எழுத்து, சொல் பற்றிய இலக்கணங்களில் வட்டார வழக்கு எனக் கருதப்படும் திசைச் சொற்கள் செய்யுட் சொல்லாய்த் தொல்காப்பியர் ஏற்றுக் கொள்வது வாய்மொழி அடிக்கருத்து இலக்கியத்திற்கு இடம் அளிப்பதற்கு எனலாம். இன்று நாம் சங்க இலக்கியத்தில் திசைச் சொற்களை அறிவது அரிது. ஆயின், பேச்சுமொழி அனைய சொற்கள் சில காண முடியும். உணர்ச்சிக்கூறு மிக்குக் காணப்படும் பாடல்களில் பேச்சு மொழியின் சாயலைக் காணலாம்.

இலக்கணம் காட்டும் அடிக்கருத்துகள்

சங்க இலக்கியத்தில் பெரும்பகுதியாகக் காணப்படும் அகவற்பா இயற்கையான எளிய வாய்பாடுகள் கொண்டது. அகவல் ஈரசை (நேர், நிரை) கொண்டது. இயற்கையாக வரும் ஈரசையைத் தொல்காப்பியர் இயலசை எனப் பெயரிட்டார். அகவல் ஓசையின் சிறப்பால் இப்பாடலைப் பாடியோர் அகவுநர் எனப்பட்டனர்.

பெரும்பான்மை இயற்சீர்களையும் சிறுபான்மை பிறசீர்களையும் பெற்று ஆசிரியத் தளைகளும் தட்டு அகவலோசை குன்றாது மூன்றடி முதல் நூற்றுக்கணக்கான அடிகளைப் பெற்று ஆசிரியப் பா நடக்கும் என்பது இலக்கணம். ஆயின், இவ்விலக்கணம் வாய்மொழியாய்ப் புனைவதற்கு ஏற்றதாய் அமைந்திருக்கிறது. அளவான சீர் பெற்றமையால், இப்பா அளவடி என்ற சிறப்பினைப் பெறுகிறது. தொல்காப்பியர் அளவடியை அடி என்ற சொல்லாலேயே, 'நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே' என்று கூறுவர். இந்நூற்பாவைப் பேராசிரியர் விளக்கும் போது, 'இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில வென்றாகும்' எனக் கூறுகிறார். மேலும், நான்கு சீர் கொண்டது அடி; அதுவே சிறந்த உண்மையான அடி என்பதை "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" என்று தொல்காப்பியர் விளக்குவர்.

நேரிசை அகவற்பாவில் ஈற்றடிக்கு அயலடியில் முச்சீர் காணப்படும். பழைய கிரேக்கக் கவிதைகள் தமிழ்க் கவிதைகளுடன் இவ்வகையில் ஒப்பிடத்தக்கன என்றார் டாக்டர் ஜெ.ஆர்.மார். அகவற்பா பாடப்படும் பாடல் என்பதைப் பாட்டு முடிவுறும் நிலை ஈற்றயலடி முச்சீராய் இறுவதினால் அறியலாம் என்பர்.

வரியும் அடிக்கருத்தும்

இசைப் பாடல்களில் வாய்மொழிப் பண்பு காணப்படுதல்

வாய்மொழிக் கூறுகளில் சிறப்பான பகுதியாய் இருப்பது இசையாகும். இசையோடு உடன் தொடர்வது நடனமாகும். எனவே, ஆடலுடன் பாடப்படும் பாடல் மீண்டும் மீண்டும் வரும் வாய்மொழி உத்திகளை நினைவூட்டுகிறது. அத்தகைய பாடலில் வரும் சொற்கள் எத்தகைய ஆடல் ஆடப்பெறுகிறது என்பதை ஒலிக்குறிப்பால் புலப்படுத்தும் சிறப்பினைக் காண்கிறோம். இதனைச் சொற்பொருள் இசையணி (Onomatopoeia) என்பர். சங்க இலக்கியத் தொடர்பும் செல்வாக்கும் குன்றாத சிலப்பதிகாரத்தில் வாய்மொழித்திறம் புலப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் வாய்மொழிப் பண்பினை மூவகையாய்ப் பிரிக்கலாம்.

1. பாடலிசையுடன் ஆடல் பாடு பொருள்
2. பாடலிசையுடன் யாழ் பாடுபொருள்
3. குழுவுடன் இசைப்பாடல் பாடுபொருள்

திணை உணர்த்தும் பாடல்

ஐவகை நிலத்திற்கும் உரிய பாடுபொருள் உடைய பாடல்களைத் திணைப்பாடல்கள் எனலாம். திணை என்ற சொல்லின் வேர்ச் சொல்லாகிய திண் என்பது திட்டு என்று ஆகி, நிலத்தைக் குறித்து நிற்கிறது. எனவே, திணை என்ற சொல் முதலில் நிலத்தைக் குறித்துப் பின்னர் அந்நிலத்தில் வாழும் மக்களையும், ஒழுக்கத்தையும், அவர்தம் உணர்ச்சிகளையும் விளக்கும் விரிவு பெற்றது. எனவே, திணையால் அல்லது நிலத்தால் சிறப்புப் பெற்ற பாடல்கள் என்று முதலில் திணையைப் பிரிப்பர். அதற்குப் பின் அந்நிலத்து விளைந்த கருப்பொருளால் சிறந்த

பாடல்கள் என்று பகுப்பர். இவ்விரு பிரிவுகளிலும் இடம் பெறவில்லை எனின், அந்நிலத்திற்கு உரிய உரிமைப் பொருளால் (உரி) வகைப்படுத்துவர். எனவே, திணைப் பாகுபாடு அவ்வந்நிலத்து இயற்கையாய் எழுந்த பாடல்களைச் சுட்டும் என்பதை அன்றோ சுட்டுகின்றது. ஒரு காலத்து இயற்கையாக எழுந்த பாடல்கள் அந்நாட்டுப் பாடல்கள் என்பதையும், அவை வாய்மொழி இயல்பின் வழி வந்தன என்பதையும், உய்த்துணரலாம். இயல், இசை, கூத்து என்ற மூன்றும் ஒன்றின் ஒன்று உறவு கொண்டு வாழ்ந்த காலம் சங்க காலம். எனவே, சங்க அகத்திணைப் பாடல்களில் நாடக முன்னிலைப் பாங்கு (Dramatic Monologue) காணப்படுகிறது. பெரும்பாலான நாட்டுப் பாடல்களில் உள்ள காதற் பாடல்கள் காதலன், காதலி ஆகியோரின் இயற்பெயர்களைச் சுட்டுவதில்லை. அகத்திணையில் தலைவன் தலைவி முதலியோர்களின் இயற்பெயர் சுட்டப்படுவதில்லை. இம்மரபு வாய்மொழிப் பண்பினைச் சுட்டும் எனலாம்.

அகவலும் பாடலும்

"அகவன் மகளே! பாடுக பாட்டே!" எனவும், "பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப" எனவும், "மறம் பாடிய பாடினி" எனவும், "அகவினம் பாடுகம் தோழி" எனவும், "பாடுகம் வா வாழி தோழி" எனவும் வரும் குறிப்புக்களாலும், சங்கப் புலவர்கள் நாநவில் பாடுபொருள் கவிதைகள் பாடினர் எனலாம்.

வீர நிலைக் காலப் பாடல்கள் அவைக்களச் சூழலிலும், அமர்க்களச் சூழலிலும் பெரிதும் பாடப்பட்டன. ஒரு பாடல் பாடிய சூழலைக் கொண்டு அப்பாடலால் எழுந்த பயனை ஒருவாறு கணிக்க முடியும். சான்றாக, ஔவையார் பாடல் ஒன்றைக் காண்போம்.

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே"

நான்கு வரிகளைக் கொண்ட இப்பாடல் அமர்க்களச் சூழலில் பாடப்பட்டிருக்க வேண்டும். இப்பாடல் எழுதி வைக்கப்பட்டிருந்தால் அன்றைய சூழலில் என்ன பயன் விளைந்திருக்கும்? பகைவர் இப்பாடலை அமர்க்களத்தில் கேட்டிருப்பார்களேயானால், அதனால் ஏற்பட்ட பயன் பெரிது! இப்பாடலில் உள்ள ஆக்க உவமை (Dynamic Simile) பகைவர் உள்ளத்தில் சிந்தனையைக் கிளறி, அச்சத்தைத் தோற்றுவித்தல் கூடும். அதுவே, இப்பாடலின் பயனாகவும் இருக்கும். புறநானூற்றுப் பாடல்கள் தோன்றிய சூழலையும், அப்பாடல்கள் விளைத்திருக்க வேண்டிய பயன்களையும் நோக்கத்தையும் காணின் அப்பாடல்கள் சமுதாயச் சூழலில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

அகம், புறம் ஆகிய இரண்டு திணைகளைப் பற்றிய பாடல்களை வைத்து ஆராய்ந்தால், இருதிணைகளும் பாடுபொருளால் வேறுபட்டாலும், புறச் செய்திகள் அகப் பாடலில் இடம் பெறுவதைக் காண்கிறோம். அங்ஙனம் அப்பாடலில் காணப்படும் புறச்செய்திகள் பெரிதும் அரசனைப் பற்றி மட்டுமல்லாமல், அவன் களங்கொண்ட நிகழ்ச்சிகளையும் கூறுகின்றன. மேலும், அகப்பாடல்களில் அரசனைக் குறிக்கும் அடை மொழிகளைப் பார்த்தாலே புலவர்களால் வீரநிலைக் காலச் சூழலை மறக்க முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், இவ்வாய்வில் வீரநிலைக் காலப் பண்பாட்டுச் சூழலில் வினை நவில் கவிதைகள் பாடப்பட்டன என்பதனைப் புறப்பாடல்களின் பொருள்திறங் கொண்டு விளக்கப்படுகிறது.

கபிலர், பரணர், ஔவையார் போன்ற 473 புலவர்கள் சங்க காலத்தில் வருகிறார்கள். ஆயிரக்கணக்கான புலவர்கள் இருந்திருக்கக் கூடும். ஆயின், அவர்களைப் பற்றி நாம் அறிய இயலவில்லை. நமக்குக் கிடைக்கும் பாடல்களில் உள்ள புலவர்களை எழுத்து வடிவத்தில் சந்திக்கிறோம். கருத்து வடிவத்தில் அவர்களுடன் அளவளாவ முடியும். அவர்கள் அனைவரும் எந்தப் பண்பாட்டுச் சூழலில் இருந்தார்கள் என்று கண்டால் அவர்கள் பாடலின் கருத்துக்கள் தெளிவாகும்.

சங்கப் பாடல்களின் யாப்பமைப்பு, கருத்தமைப்பிற்கு இன்றியமையாததாகிறது. எந்தப் பண்பாட்டுச் சூழலில் எவ்வெவ் வகையான கருத்துக்களைப் பாடுகிறார்கள் என்று காணின், அப்பாடல்கள் எங்குக் கருவாயின, எங்கு உருவாயின என அறிதல் இயலும்.

புறத்திணைகளில் பொருள்திறம் (அடிக்கருத்துகள்)

வினைநவில் கவிதைகளை எந்தத் திணையில் எந்தச் சூழலில் என்ன என்ன பொருள்களில் பாடுகிறார்கள் என்று அறிந்தால் நாநவில் பாடுபொருள் திறம்

விளங்கும். சான்றாகப் புறநானூற்றில் வெட்சித் திணையில் - உண்டாட்டு எனும் துறையில் வரும் பாடல்களின் பொருள் திறத்தைக் காண்போம்.

திணை - வெட்சி

துறை - உண்டாட்டு

பாடல் எண்கள் - 257, 258, 262, 269, 297

மேற்கூறிய பாடல்களில் மொத்தமாகப் பின்வரும் ஐந்து கள நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இக் களநிகழ்ச்சிகள் பாடல் பொருள் திறத்தினைக் காட்டுகின்றன. நிரல், நாளைச் சுட்டவில்லை.

1. வேற்றுப் புலம் சென்று ஆநிரை கவர்தல் 2. கள்ளுண்டு களித்தல் 3. பித்தி சூடல் 4. கள்ளினை வாழ்த்தல் 5. கரந்தை நீடிய செரு.

சங்க காலத்து அமர்புரியும் வீரர்கள் மாறினாலும் போர் முறைகள் மாறுவதில்லை. வெட்சிப் போர் புரியும் நோக்கில், இக்கவிதையின் பொருள் நிலை, அக்காலப் போரின் பழக்கத்தைச் சுட்டி நிற்கிறது. இப்பாடலைப் படித்தால், உலோச்சனார், மதுரைப் பேராலவாயார், ஔவையார் (பிற பாடல் பாடியோர் பெயர் தெரியவில்லை) ஆகியோர் ஒரே காட்சியைக் காட்டவில்லை என்பதை அறியலாம். ஆயின், பாடல்களின் பொருள், நிகழ்ச்சிகளின் திறம் ஆகியவை ஒன்று போல் அமைந்துள்ளன.

அமர்க்களக் காட்சிகள் புலவர் உணர்ச்சிகளுக்கு ஏற்ப நீளும்; குறுகும். ஆனால், நிகழ்ச்சிகள் போர் முறைகள் வீரநிலைக் காலத்தில் மாறுவதில்லை.

இக் களநிகழ்ச்சிகள் இத்துறைப் பாடல்களிலும் பிற பல பாடல்களிலும் துணை நிகழ்ச்சிகளாக வருதல் காணலாம். இத்தகைய நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடக்கின்றனவோ அங்கங்குப் பாடப் பெறுதல் காணலாம். புலவர்கள் தாங்கள் கண்ட காட்சியை எடுத்த எடுப்பில் பாடிய புலம் புலப்படும்.

காலமும் பாடுபொருளும்

காலத்திற்கு ஏற்பப் பாடுகின்ற பொருளும் மாறுகிறது. எந்தப் பொருளைப் பற்றி எக்காலத்தில் - கண்டு - கேட்டு - அனுபவித்துப் பாடினார்களோ அந்தப் பொருள் அக்காலத்தின் உரிமைப் பொருளாகும். சங்க காலத்து நடைபெற்ற புற நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடியாய்ப் புறநானூற்றைக் கொள்ளலாம்; ஐயாயிரத்து நானூற்று நாற்பத்து நான்கு வரிகளை முந்நூற்றுத் தொண்ணூற்று ஒன்பது (வாழ்த்து நீங்கலாக) பாடல்களில் பாடியுள்ளனர். அப்பாடல்களில் வரும் நிகழ்ச்சிக் கருத்துகளின் பொருள் திறத்தைப் பாகுபாடு செய்யலாம். அப்பாகுபாடுகள் ஒன்றின் ஒன்று உறவு உடையவை; வீரநிலைக் கால வாழ்வே, ஒன்றின் ஒன்று உறவு கொண்டது ஆகும். அக்காலத்து வாழ்ந்த மனிதனின் பண்பாட்டினை அப்பொருட் கூறுகளின் நிகழ்ச்சிகள் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்தும்.

புறநானூற்றுப் பொருள் திறம்

பண்டைத் தமிழர் பண்பாட்டையும் வாழ்க்கை நெறியையும் நிறுவ வேண்டும் எனும் நோக்கத்துடன் இப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இப்பொருட் பாகுபாடு ஒரு மதிப்பீடே ஆகும். கருத்துப் போக்கில் சில வரிகள் பாகுபாடு மாறுபடலாம். காட்டாக, இகழ்ச்சி என்று கருதும் ஒரு கருத்தைப் பிறிதொரு நோக்கில் புகழ்ச்சியாகத் தோற்றுவிக்கலாம். எனவே, கருத்தும் பொருளும் கவிதையில் வரும் போது மொத்தமாகக் காணவேண்டிய சூழல் நேரும். எந்த நோக்கில் கண்டாலும் பழந்தமிழர் வாழ்க்கை, பெருமிதத்தை நோக்கி நடை போட்டது என்பதை யாரும் மறுக்க இயலாது. வீரம், படை, அமர் ஆகியவை பெருமிதத்திற்கு அடிப்படை ஆயின. கொடை, ஈகை, புகழ் என்பன முன்கூறிய முச்செயல்களுக்குப் பயனாய்ப் பழந்தமிழர்க்குக் கிடைத்தவை.

வாழ்நாள் சிறிது; பெருமிதம் வளர் புகழ் பெரிது என்ற உண்மையைப் பழந்தமிழர் உலகிற்குப் பறைசாற்றினர்.

பாண்டித்துரைத் தேவர் பாடியவை

திருவாவடுதுறையாதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவஞான யோகிகள் மீதியற்றிய கவிகள்

திருக்கும்பவத்தை யகற்றுமருட் செல்வாவருக நால்வேத
சரமெய்ப்பொருளை யுணர்ந்தமுதற் றேவாவருக வெம்முயிரைக்
கருக்கும் வினையை நீக்குகளை கண்ணேவருக சுவைநிறைந்த
கனியேவருக கருணைரசக் கரும்பேவருக கருத்தழிந்து
தருக்குஞ்சமய கோடியெலாந் தகர்த்துச்சைவ மினிதோங்கத்
தமிழின்மாபா டியம்வகுத்த தலைவாவருக சயிலாதி
வருக்கத் துயர்ந்து விளங்குசிந்தா மணியேவருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே (க)

நதியைக் கரந்த சடைப்பெருமான் நயனத் தீயாற் பொடியானோன்
நாளவனசக் கணையுமெய்தா நலனார்ஞானத் திருவுருவாய்ப்
பொதியக் குறுமா முனிவரத்தாற் புவியிற்பிறந்து புகழ்நிறைந்து
பொய்யைத் தணந்து மெய்யுணர்ந்து புனிதாத்துவித நெறிப்படியே
பதியைப் பசுவைப் பாசத்தைப் பரமமோன நிலையினையிப்
படியென்றறியப் பணித்தருளாற் பவசாகரத்தி லுழலாதெம்
மதியைத் திருத்திக் கதியளிக்கும் வாழ்வேவருக வருகவே
வளமார்துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே (உ)

கலைதேர்நமச்சி வாயகுரு கருணைக்கடற் றிளைத்தாடிக்
கலகப்பாசத் தொடரறுத்துக் காமத்தறியை யறவீழ்த்தி
யுலையுஞ்சமய தருக்களைக்கீ ழடிவேரோடு மகழ்ந்தெறிந்திட்
டருளின் படாத்தை முகமேற்கொண் டார்திவேதா கமங்களெனுந்
தொலையாமணிக ளிருமருங்குந் தொனிக்கச்சைவ மதம்பொழிந்து
துங்கமோடு முலகமுற்றுஞ் சுற்றும்வெற்றி வாரணமே
மலையாதருளு முனிவர்சிகா மணியேவருக வருகவே
வளமார்துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே

சித்த மருத்துவமும் தமிழ்ச் சித்தர் மூலிகை மரபும்



மரு.முனைவர் . சே. பிரேமா
தஞ்சை.

முன்னுரை

சித்த மருத்துவம், சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். மிகவும் தொன்மையான மருத்துவ முறைகளில் சித்த மருத்துவமும் ஒன்றாகும். சித்த மருத்துவம்,

1. தாது 2. தாவரம் 3. உயிரினம்

ஆகியவற்றால் செய்யப்பட்ட மருந்துகளை உள்ளடக்கியதாகும். பக்க விளைவுகள், எதிர் விளைவுகள் என்பன இல்லாத மூலிகைகளாலான மருந்துகளைச் செய்யத் தாவரஇனம் இன்றியமையாததாகும். தமிழ் நாட்டிலுள்ள மலைகள், காடுகளில் உள்ள மூலிகைகளையும் சித்தர்கள் கண்டறிந்து பயன்படுத்தியுள்ளார்கள். அந்த வழியிலேயே சித்த மருத்துவம் இன்று இயங்கி வருகின்றது. சித்தர்களின் மூலிகை மரபு இன்று சித்த மருத்துவர்களால் பின்பற்றப்படுகிறது.

தொல் தாவரங்களின் தாயகமாகவே, தமிழகம் இருந்துள்ளது.இத்தாவரங்களைப் பற்றிய குறிப்புகள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் உள்ளன.

உடல் காக்கும் மூலிகைகள்

தொல்காப்பிய காலம் முதல் இன்று வரை,மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் "பிணி" என்றும் "நோய்" என்றும் அழைத்து வந்தனர். உடலைப் பற்றி வருவது "பிணி" என்றும், மனத்தைப் பற்றி வருவது "நோய்" என்றும் கூறினார்கள்.

"நோயும் இன்பமும், இருவகை நிலையில், அவரவர்
உறுபிணி தமபோல் சேர்த்தியும் மூப்பே
பிணியே, வருத்தம் மென்மையோடு
யாப்புறவந்த இளிவரல் நான்கே"

– தொல். பொருள். 194, 250.

நோய் பிணி இவைகளைப் போக்க, மூலிகைகளை, மருந்தாகப் பயன்படுத்தினார்கள். சித்தர்கள், நோய் பிணி இவைகளை 4448 என்று வகைப்படுத்தினார்கள். "வேர் பாரு, தழை பாரு, மிஞ்சனக்கால் பற்ப செந்தூரம் பாரே" என்று முதலில் மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்துகளைத் தந்துள்ளார்கள்.

இடைச்சங்க கால நூலான தொல்காப்பியம், மூலிகைகளைக் குறிப்பிடுகின்றது. "வாயுறைவாழ்த்தே" எனத் தொடங்கும் நூற்பாவில் வேம்பும், கடுவும் குறிப்பிடப்படுகின்றன. வேப்பமரம் இந்தியாவுக்கு மட்டுமே உரிய சிறப்பான ஒன்றாகும். இதற்கான காப்புரிமையை அமெரிக்க நாடு பெற்றபோது அதைத்தடுக்க, வழக்குப் போட நேர்ந்த நிலையை அனைவரும் அறிவார்கள். வெண்சிறு கடுகைத் தீயிலிட்டுப் புகைத்தார்கள். இதன் மூலம், தொற்று நோய்கள் ஏற்படாதவாறு தடுத்தார்கள். "வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும் நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்" – புறம். 296.

சங்கத் தமிழ் இலக்கியங்களில் 210 மரம், செடி, கொடிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. இத்தாவரங்களிலும் மருத்துவ குணங்களை உடைய தாவரங்கள் ஆய்வு செய்யப்பட்டவில்லை. சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட மூலிகைகள் பற்றியவைகளே, சித்த மருத்துவத்தில், மலை வாகடம்

என்னும் தனிப் பிரிவாக அமைந்தன. கற்ப மூலிகைகள் யாவும் "காய கற்பம்" என்றும், "சாகா மூலி" என்றும் பிரிக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டுவரப்பட்டன. இதை ஒட்டிப் பல்வேறு நூல்கள் எழுந்தன.

மூலிகைகள் விளையுமிடங்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் என்பன இந்நூல்களில் உள்ளன. காலங்கிநாதரின் கொல்லி மலைக் கலிங்கம் 100, யாகோபு கற்பம் 1000 என்பன மூலிகைகளைப் பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கும் நூல்களாகும்.

மூலிகைகளின் பெருமைகளைச் சங்க காலத்திலேயே உணர்ந்திருந்தார்கள். சான்றாக ஔவையார் கருநெல்லிக்கனியை, அருந்தத் தந்தது குறித்து அதியமானை ஓர் பாடலில் புகழ்ந்துள்ளார். Phyllanthus Emblica என்றழைக்கப்படும் பெரு நெல்லி வைட்டமின் சி சத்தைக் கொண்டது. இது புளிப்பு, இனிப்பு மற்றும் துவர்ப்புச்சுவை கொண்டது. சாதாரணமாக நமக்குக் குறைந்த செலவில் கிடைக்கும் சத்துள்ள பழம் நெல்லியாகும். இது மிகச் சிறந்த ஈரல் தேற்றி மருந்தாகும். இது உடலில் எதிர்ப்பு சக்தியை நிலைப்படுத்தக் கூடியது. மொத்தத்தில் நெல்லிக்காய் ஒரு கற்ப மருந்தாகத் திகழ்கின்றது. இப்பெருமையை உடைய காரணத்தினாலேயே, இதை ஔவையார்,

"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே" புறம் 91 (8–11)

போகர் கூறும் 44 வகையான காய கற்ப மூலிகைகளில் கருநெல்லியும் ஒன்று. கோரக்கர் மலைவாகடத்தில் கருநெல்லி, அருநெல்லி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. காலங்கிநாதரின் கொல்லிமலைக் கலிங்கத்திலும் கருநெல்லி இடம் பெற்றுள்ளது. கருவூராரின் வாத காவியம் 700. "மாயாதி விந்தையப்பா, கருநெல்லி" என்று குறிப்பிடும். காலங்கி நாதரின் "கொல்லிமலை இரகசியம் 500" என்ற நூலில் கோரக்கர் குகை உள்ள இடத்திற்குப் பக்கத்தில் கருநெல்லி மரம் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நாடானந்தம் பிறந்ததில் கால் உதித்த தீ
நாரமண்ணுண்டாய் மண்தான் நல்கவந்த
ஓடதியில் அன்னமும், அதல் உலகுதிற்கு உயிர்
வாய்ந்த அவ்வோடதியின் உரிமை சொல்வோம்"

என்று தேரன் குணவாகடத்தில் கூறுகின்றார். உணவு, மூலிகைகள், என்பனவற்றை மண் கொடையாகத் தருகின்றது. உயிரினங்கள், இதனால் உயிர் வாழ்கின்றன என்று மூலிகைகளின் பெருமையைப் போற்றுகின்றார். கருநெல்லியின் சிறப்புக் குறித்து,

"பதினைந்தென்னும் சன்னி, பாதத்தயக்கம்,
மதினைந்திட செய்வினை மாறும்-பதியினில்
சனித்த கருவுருவம் தானும் வேறாகும். துனித்த,
கருநெல்லி மரத்தால்"

என்று தேரன் குணவாகடத்தில் கூறுகின்றார்.

"கொல்லி மலையைப் போன்றே அகத்திய மலையும் 75 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாகும். 1300 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உடையது. இதில் 1500 வகை உள்ளுயிரித் தாவரங்கள் உள்ளன. 500 வகைகள் அழியும் நிலையில் உள்ளன. புல் குடும்பம், பயிறு குடும்பம், சூரியகாந்தி, ஆமணக்கு, எருக்கு, துளசி என்பன பெரும்பான்மையானவை. மொத்தம் 3500 தாவரங்கள் உள்ளன. இருபத்தொரு வகையான பனை வகைகள், 9 வகைப் பிரம்புகள், 4 வகையான சாதிபத்திரிகள் என்பன உள்ளன. சங்க காலத்தில் கூறப்பட்ட பல்வேறு மூலிகைகளின் பயன்பாடு, பிற்காலத்தில் மாறுபட்டுள்ளன.

சான்றாகக் கரிசாலையை எடுத்துக் கொள்ளலாம். கரிசாலையை முற்காலத்தவர்கள் கண்ணுக்கிடப்படும் மையாகப் பயன்படுத்தினார்கள். இதனை வணிக நோக்கில் செய்து வந்தார்கள். எனவே, கரிசாலையை வளர்க்க வரி விதிக்கப்பட்டது. பல்லவர்களின் காசாக்குடி செப்பேட்டில் "பிராமணிச் சக்காணமும், கணணீட்டுக் காணமும்" என்று வருகின்றது. இவ்வரிகள், கரிசாலைக்கு வரிகள் போடப்பட்டதைச் சுட்டும். ஆயினும் தற்காலத்தில் ஈரல் தேற்றிச் செய்கையைக் கொண்ட மருந்துகள் செய்யப் பயன்படுகின்றன. மச்சமுனி, கரிசாலையை மட்டும் கொண்டு 800 வகை மருந்துகள் செய்யலாம் என்று கூறுகின்றார். கரிசாலையைப் போன்றே செங்கொடி வேலி என்ற சித்திரமூலம், செங்கழுநீர்ப்பூ என்பன வளர்க்க வரி விதிக்கப்பட்டிருந்தது. எவ்வகையான மருந்துகள் செய்யப்பட்டன என்ற ஆவணங்கள் இன்று கிடைக்கவில்லை. கொடிவேலியை நாட்டுப்புறங்களில் கருவை அழிக்கப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மூலிகைகளை இனம் காண வேர், பட்டை, இலை, பூ, காய் எனும் பஞ்சாங்கத்தைக் கொண்டு பிரித்தறிந்தனர். மூலிகையின் அனைத்துப் பாகங்களும் பயன்படுமேயானால் அதனைச் சமூலம் என்றனர். மூலிகை வளம் மிகுந்த காடுகள், மலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று மூலிகைகளைக் காண்பித்து அவற்றைப் பறிக்கும் விதம், பறிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இவற்றைக் கற்பித்தனர்.

மூலிகைகளின் பெயர்களைப் பரிபாஷையில் அமைத்து அவர்களின் அறிவுத்திறனை வெளிப்படுத்தியும் மாணாக்கர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்தியும் வந்தனர். "இரு குரங்கின் கை" என முசுமுசுக்கைக்கும் கரியமாலின் தொடை எனத் துளசிக்கும் பரிபாஷைகள் உள்ளன. இவை போன்றே அனேக மூலிகைப் பெயர்களை வியக்கத்தக்க வகையில் குறிப்பிட்டுள்ளனர். பட்டறிவும் அனுபவமும் உள்ள மருத்துவர்கள் இவற்றை ஆய்ந்து அறிவார்கள்.

இன்றைய கல்வி முறை– வாழ்க்கை முறை– மிகவும் மாறிவிட்டது. இதனால் காடுகளில் மாணவர்கள் அலைந்து திரிய வேண்டிய அவசியமில்லை.

"தொட்டுக் காட்டாத வித்தை

சுட்டுப் போட்டாலும் வராது"

என்பார்கள். ஆனால் இன்று கணிப்பொறி வழி பலமுறை தொட்டுக் காட்டிவிடலாம். எனினும் அறிவு வளர்ச்சிக்கு இம்முறை வித்திடாது. மேலும், மனித நேயமும் இதனால் அறிய முடியாததாகும்.

பலஎளிய மூலிகைகளைக் கூட அறியமுடியாத அளவில் அடுக்கு மாடிக்கட்டிடங்களில் மக்கள் வாழ்கிறார்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வு இன்று செயற்கையாக மட்டுமே உள்ளது. பாரம்பரிய முறையைப் பயன்படுத்த நினைப்பவர்களுக்குக் கூட வழிகாட்டுபவர்கள் யாருமில்லாத நிலை.

மனிதன் தோன்றும் போதே மருத்துவம் தோன்றியிருக்கும். ஐம்பூதங்களை வணங்கவும் அவற்றால் வாழவும் மனிதன் கற்றுக் கொண்டான் உலகின்கண் உள்ள ஐம்பூதங்களை உடலின் கூறுகளாக்கி அவற்றின் மிகுதி குறை இவற்றை நேர்செய்ய ஐம்பூத மூலிகைகளையும் கண்டறிந்தான்.

இலை தழைகளைப் பச்சையாக உண்டு வந்த மனிதன் உணவு பக்குவப்படும் முறைகளையும் மருந்துகளைப் பக்குவப்படுத்தும் முறைகளையும் அறிந்து மேம்படுத்திக் கொண்டான். இவைகளை அவைகளின் செம்முறைப்படி அக மருந்துகள் 32, புறமருந்துகள் 32 எனச் சித்தர்கள் பிரிவு படுத்தினர். இவை அனைத்திற்கும் மூலிகைகளே ஆதாரமாயின. தாதுப் பொருள்கள், சீவப் பொருள்களான மருந்துகள் என்றாலும் அவற்றைத் தூய்மை செய்ய, மருந்தாக்க மூலிகைகள் தேவைப்படுகின்றன. எனவே, மூலிகைகளில்லாமல் மருந்தில்லை.

நோய் வராமல் தடுக்க, வந்த நோயைத் தணிக்க, உடலுக்கு நலம் தரும் உணவாக, நச்சுத் தன்மை உற்றபோது அதற்கு மாற்றாக, மூலிகைகள் பயன் தருகின்றன. ஒரு நோய்க்கு ஒரு மூலிகை, ஒரு நோய்க்குப் பல மூலிகை, பல நோய்க்கு ஒரு மூலிகை, பல நோய்களைப் போக்கும் பல மூலிகைகளின் கூட்டு மருந்துகள் என மூலிகைகளின் பயன்பாடு விரிந்து மலரும்.

எந்தெந்தப் பருவ காலங்களில் எந்தெந்த மூலிகைகளை எவ்விதம் பயன்படுத்த வேண்டும் எனக் காயகற்ப மூலிகைகள் பற்றிய நுண்ணறிவு சித்தர்களுக்கு உண்டு. மூலிகைகள் கிடைக்காத சமயங்களில் அவற்றிற்கு மாற்றாகக் காய கற்ப மூலிகைகளில் கறுப்பு மூலிகைகளைத் தயாரிக்கும் முறை இவற்றில் கை தேர்ந்தவர்கள் சித்தர்கள்.

மாணாக்கர்களுக்கு மருத்துவத்தைப் போதிக்கும் போது அவை மறந்து விடாது இருக்கப் பாடல்களை அந்தாதியாக அமைத்து மனித மூளை எனும் கணிப்பொறியில் பதிவு செய்து வைத்தார்கள்.

முடிவுரை

இந்தியா மூலிகைகள் அதிகமுள்ள வளமான நாடாகும். சீனாவிலிருந்து 10,000 கோடிக்கான மூலிகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலிருந்து 300 கோடியளவுக்கு மூலிகைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. மூலிகைகளின் பயன்பாட்டை, சித்தர்கள் பல நூல்களில் கூறியுள்ளார்கள். போகர் நிகண்டு 4448 நோய்களை, 4444 மூலிகைகளால் தீர்க்க முடியும் என்றுரைக்கிறது. திருவள்ளுவர் ஞான வெட்டி 1500இல் 3,300 மூலிகைகளைப் பற்றிப் பேசுகின்றார்.

மேலும் கொங்கணர் 3000இல் செம்பு சத்துள்ளவைகள், வங்க சத்துள்ளவை என்று விளக்குகின்றார். அகத்தியர் 12000 என்ற நூல் மூலிகைகளின் வலிமையையும், பஞ்ச பூத மூலிகைகளையும் குறிப்பிடுகின்றது.

எனவே, சித்தர்களின் மூலிகை மரபு பற்றியும், சித்த மருத்துவம் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மூலிகைகள் பற்றிய ஆய்வு தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும்.

பாண்டித்துரைத் தேவர் அருமையும் மறைமலையடிகள் பெருமிதமும்

பாண்டித்துரைத் தேவர் இராமநாதபுரம் அரசர் முத்துராமங்க சேதுபதியின் தமையனார் பொன்னுசாமித் தேவரின் திருமகனாராவர். சிறந்த தமிழ்க் காதலர்; புலவர்; பாவலர்; உயர்ந்த நாவலர்; செய்யுள் நூல்கள் சில யாத்தவர்; தமிழ்த் தொண்டே தனக்கின்பமெனக் கண்டவர்; புலவர்களைப் போற்றி அதனால் தமிழ் வளர்த்த வள்ளல். தம் முன்னோர் மதுரையில் வைத்து நடத்திய முதல்–இடை–கடைச் சங்கங்கள் மறைந்ததை எண்ணி எண்ணி வருந்தினார். வருந்தி வாளாகிடக்க வில்லையவர்.

"நான்காம் தமிழ்ச் சங்கம் நாட்டுவேன்; நற்றமிழ் வளர்ப்பேன்" என்று முனைந்தார். எத்தனையோ இடைஞ்சல்கள் குறுக்கிட்டன. எனினும், எண்ணியதை முடித்து நின்றார்.

"இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை" (நாலடியார்)

அன்றோ? அன்றியும் இக்கோமகன், குடிப்பிறப்பால் மட்டுமன்றித் தோற்றத்தானுங் குணத்தானும், பெயரானும் பாண்டியர் மட்டுமல்ல; பாண்டியர்கட்குத் துரையாம் எனுமாறு விளங்கினார். இதனால், இவர் இயற்பெயர் காரணப் பெயராய்ப் பாண்டித்துரை என்று வழங்கலானது மகிழற்பாலதேயாம். இப்பிரான் தாங்கருதியவாறு 14–9–1901ல் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார்.

நன்றி – மறைமலையடிகள் வரலாறு.

வேளாண்மையில் தன்னுரிமை



இயற்கை விஞ்ஞானி இரா. ச. நாராயணன்,
காந்திகிராமம்.

முறையாக உழுது பயிரிட்ட காலம், உணவின் உற்பத்திக்காலம். இவ்வாறு, உழுது பயிரிட்ட காலத்தின் முன்பு இயல்பாக விளைந்தவற்றைச் சேகரித்து மனிதன் உண்டு வாழ்ந்தான். இன்று நாம் உண்ணும் பல்வேறு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் எல்லாம் பூர்வகாலத்தில் உண்ணும் தகைமையற்ற தாவரங்களாயிருந்தன. உதாரணமாக நாம் உண்ணும் நெல், சோளம், கம்பு, கோதுமை எல்லாமே காட்டுப்புற்களாயிருந்தன. புல் விதைகளை உண்டு பார்த்து ருசியானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பரம்பரை பரம்பரையாக விதைத்து உருவானவைதாம் இன்று நாம் உண்ணும் தானியங்கள். இன்று நாம் ருசித்துத் தின்னும் அரிசியையும் பிற தானியங்களையும் கண்டுபிடித்த ஆதிமனிதர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆதிமனிதர்கள் தொடங்கி வைத்த பாரம்பரிய விதைத் தேர்வுகளின் பலனாக விளைந்த இவற்றின் தோற்றம் கி.மு. 10000 என்று உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உலகில் உணவுத் தோற்ற மையங்களை இலெனின் காலத்தில் வாழ்ந்த வாவிலோவ் என்ற விஞ்ஞானியின் உலகப் பயணம் நிர்ணயித்துள்ளது. இவரே பயோடைவர்சிட்டி என்ற பல்லுயிர்ப் பல்வகைப் பெருக்கத்தின் தந்தை என்று போற்றப்பட்டுள்ளார். ஸ்டாலினால் தண்டிக்கப்பட்டு மரணமுற்றாலும் கூட இவர் சேகரித்த பாரம்பரிய விதைகள் உலகில் 400க்கும் மேற்பட்ட ஆய்வுக்கூடங்களில் காப்பாற்றப்பட்டுப் பயிர்களாயின. புது உலகம் என்று சொல்லப்படும் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல் பகுதி குளிர்மண்டல ஐரோப்பா, மத்திய ஆசியா, இந்தியா, சீனா, இதர கிழக்காசிய நாடுகளில் உள்ள பல இடங்கள் உணவுத் தோற்ற மையங்களாயுள்ளன. இந்தியாவுக்கு உரியவை என்று பார்த்தால் கோதுமை, நெல், கரும்பு, உளுந்து, பாசிப்பயறு, துவரை, கொண்டைக் கடலை, எள், கடுகு, மா, பலா, வாழை, அவரை, மொச்சை, காராமணி, பீர்க்கை, புடல், மிளகு, ஏலம், மஞ்சள், இஞ்சி, காக்காச்சோளம், கம்பு, வரகு, கேப்பை...........என்று 160 வகை உணவுத் தாவரங்களை நமது உரிமை என்று கூறவேண்டும். ஆயிரக்கணக்கான மரங்கள், ஆயிரக்கணக்கான மூலிகைகள், அனைத்துலக அரங்கில் பல்வேறு காப்புரிமைச் சட்டங்கள் உயிரித்தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் பெற்றுள்ள அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு ஆதரவாயுள்ளன.

இந்திய மருத்துவத்தில் அடங்கியுள்ள பல்வேறு மூலிகைகளின் பயன்பாட்டின் பாரம்பர்ய அறிவுகளைப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. அனைத்துலக அரங்கில் பல்லுயிர்ப் பல்வகையின பாரம்பர்யம் என்ற பயோடைவர்சிட்டி சட்டதிட்ட அடிப்படையில் இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்வது ஒருபக்கம். சொந்த நாட்டிலும் நமது மண், நமது நீர், நமது தாவரம் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில் இன்றைய வேளாண்மையில் நாம் நமது தன்னிறைவை, தற்சார்பை, தன்னுரிமையை இழந்து நிற்கிறோம். பாரம்பர்யச் சிறப்பை அழித்துவிட்டோம். விஞ்ஞானத்தைத் தவறாகப் பயன்படுத்தியதால் வேளாண்மையில் விஷம், நீர், நிலம், காற்று, விண்

எல்லாமே விஷமாகி விட்டன. புவியை மேலும் மேலும் வெப்பமாக்கித் தட்பவெப்பநிலையே தடுமாறுவதை இந்தியா உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஆண்டுக்கு ஆண்டு பூமியில் வெப்பம் கூடிய வண்ணம் உள்ளது. பல வகையான நச்சுப் புகை வெளியேற்றத்தால் ஓசோன் படலம் பொத்தலாகி விட்டது. மீட்கும் வழி அவ்வளவு கடினம் அல்ல. புவிஇயல் உயிர்ச்சூழல் சமன்பாட்டை மீட்கவேண்டும். அழிந்த காடுகளை மீண்டும் உருவாக்க வேண்டும். "எங்குக் காணினும் பசுமையடா" என்று சொல்லும்படி நகரங்களிலும், சாலை ஓரங்களிலும் மரம் வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் ஒரு காடு 5 ஏக்கர் பூமியில் வளர்த்தாலே போதுமானது. கால்நடை வளர்ப்பில் தட்பவெப்பத்திற்குப் பொருந்தி வராத மாடுகளையும் ஆடுகளையும் இனப்பெருக்கம் செய்து அவை நோயுற்று மடிவதையும் தடுத்து நிறுத்த வேண்டும். ஜெர்சி, ஃப்ரீசியன் போன்ற குளிர் மண்டலப் பசுக்களைத் தவிர்த்துத் தாா்ப்பார்க்கர், சிந்து, காங்கிராஜ், கிர் போன்ற பாலைவன மாடுகளை வைத்துப் பால் உற்பத்தி செய்யலாம். கூடவே காங்கேயம், உம்பளச்சேரி, அமிர்த்மகால், ஒங்கோல் ரகங்களையும் பராமரித்தல் அவசியம்.

பசுமைப் புரட்சி

இரண்டாம் உலகப்போரின் விளைவால் உணவு நெருக்கடி உலகளாவியதாக இருந்தது. இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னுமான காலகட்டத்தில், கடுமையான உணவுப்பஞ்சம், உணவு இறக்குமதி நிலவியபோது ஒரு அவசர நிலைப் பிரகடனம் போல் அறிமுகமான தீவிர விவசாயத்திட்டம் பசுமைப் புரட்சியாக அழைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தினால் பாரம்பர்யமாக நாம் பின்பற்றிய தற்சார்பு நிலைமாறி, இடுபொருள்களுக்கு ஒரு கிராமத்திற்கு வெளியே நம்பவேண்டிய நிலைவந்தது. பத்தாயிரம் ஆண்டுப் பாரம்பர்யம் இந்தியாவில் 1960 முதல் மெள்ள மெள்ள அழியத் தொடங்கியது. பசுமைப்புரட்சி வெற்றிக்கு வீரியரக விதைகள், ரசாயன உரம், நச்சுள்ள பூச்சிமருந்து, டிராக்டர் போன்ற இயந்திரங்கள் விவசாயிகளிடம் அறிமுகமாயின. யூரியா போன்ற தழைச்சத்துக்குரிய மூலப்பொருள் நாஃப்தா. இது இறக்குமதிப் பொருள். பூச்சிமருந்து உற்பத்தி பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இத்தகைய இடு பொருள்களுக்கு மானிய உதவி உண்டு. இந்த மானியத்தால் லாபம் அடைந்தவர்கள் விவசாயிகள் அல்லர். இடு பொருள்களை உற்பத்தி செய்யும் வணிக நிறுவனங்கள் தாம் லாபம் அடைந்தன. இடு பொருள் உற்பத்தியாளர்களை வாழ வைக்க 12% வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது. விளைச்சல் கிடைத்தது. விவசாயிகள் கடனாளி யானார்கள். பசுமைப் புரட்சித் திட்டத்தால் உணவு உற்பத்தி 1994 - 95 - இல் நான்கு மடங்கு உயர்ந்தது. 20 கோடி டன் என்பது சாதனை உற்பத்திதான். அரசு கொள்முதல் செய்த கோதுமையையும் நெல்லையும் கெட்டுப் போகாமல் சேமிக்கக் கூடிய கொள்கலனுக்கு அந்நிய உதவி நாடப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்டது. உணவு இறக்குமதி நின்று ஏற்றுமதி சந்தைக்குள் நுழைந்தோம். ஆனால் இந்த நிலை நீடிக்கவில்லை. மீண்டும் பற்றாக்குறை வந்துவிட்டது. உணவு இறக்குமதி தொடர்கதையானது.

கடந்த நாற்பது ஆண்டுகளாக நாம் கடைப்பிடித்து வந்த பசுமைப்புரட்சித் திட்டம் பற்றிய ஒரு மதிப்பீடு பின்வருமாறு.

நன்மை எவை என்று கவனித்தால்,

1. அரிசி, கோதுமை உற்பத்தி 400 சதம் வரை (நான்கு மடங்கு) உயர்ந்துள்ளது.

2. பெருவகைத் தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு உற்பத்தியும் 70 சதம் உயர்ந்துள்ளது.

தீமைகள் எவை என்று கவனித்தால், அப்பட்டியல் நன்மைகளைவிடப் பன்மடங்கு நீண்டது.

1. உணவு உற்பத்தி உயர்வில் சமன்பாடு இல்லை. நீர்ப்பற்றாக்குறை நிலவும் சூழ்நிலையில் அதிக நீர்ச்செலவுள்ள பயிர்களான நெல், கோதுமை, கரும்பு வளர்ச்சி ஆபத்தானது. தென்னிந்தியாவின் பெரும்பகுதி கல் பூமி. புஞ்சை தானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு தவிரவும் உளுந்து, துவரை, பாசிப்பயறு, தட்டாம்பயறு, சிறு தானியங்களான தினை, வரகு, சாமை போன்றவற்றைப் பயிர் செய்ய வேண்டும். கரும் பாறைகளைத் துளையிட்டு 1000 அடிக்குச் சுரங்கம் வெட்டி உப்பு நீரைப் பாய்ச்சிச் செய்யப்படும் நஞ்சை நஞ்சாக மாறியது ஒரு புறம். புவியியல் அமைப்பின் தலையீட்டால் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பூகம்பமே ஏற்படும் ஆபத்து உண்டு.

2. நல்ல சத்தான உணவை உண்டு திடகாத்திரமாக வாழ்ந்த தமிழன் பசுமைப்புரட்சியால் திடம்குன்றி நோயாளியாகி விட்டான். பசுமைப்புரட்சியால் ஏழைமக்கள் ரேஷன் அல்லது இலவச அரிசி பெறுகிறார்கள். சத்தில்லாத அரிசிச்சோறு முக்கிய உணவாகிவிட்டது. முன்பு சோளச்சோறு, கேப்பைக்கூழ், கம்பு உருண்டை உண்டவர்கள் இன்று நஞ்சான அரிசிச்சோறு உண்டு நோயாளிகளாக மாறியுள்ளதை தினமும் அரசு மருத்துவமனைகளில் காலை நேரம் கூடும் கூட்டத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம். நஞ்சு, ரேஷன் அரிசி மட்டும் அன்று. நாம் உண்ணும் பழங்கள், காய்கறிகள் எல்லாமே நஞ்சாகிவிட்டன. பசுமைப் புரட்சி விவசாயத்தில் பயன்படுத்தும் பூச்சிமருந்துகளில் கொடிய விஷம் உள்ளது. இந்த விஷம் அனுமதிக்கப்பட்ட அளவை விட 200 சதம் உணவில் மிஞ்சி அது மனிதர்களையும், பறவைகளையும், விலங்கினங்களையும், கால் நடைகளையும் நோயுறச் செய்கின்றன. சாதாரணமாக ஏற்படும் வயிற்றுப்போக்கு முதல், தோல்வியாதி, இதய நோய், புற்று நோய், ஈரல் நோய், நரம்புத் தளர்ச்சி, மூட்டு வலி, பக்கவாதம் வரை அனைத்துக்கும் மூல காரணம் உணவில் உள்ள விஷம். ரசாயன உரத்தால் ரத்தச் சோகை ஏற்படுகிறது. உணவில் உள்ள இயல்பான ஊட்டச் சத்து குறைகிறது.

3. உயிர்ச் சூழல் சமன்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாயத்தில் நன்மை செய்யும் பூச்சிகள் பெருமளவு அழிந்து தீமை செய்யும் பூச்சிகள் எஞ்சுவதால் பயிர்களில் மேலும் நோய் ஏற்பட்டு விட்டது. உணவுத்தாவரங்கள் மீது மேலும் மேலும் நஞ்சு தெளிப்பதால் அந்த நீரைப் பருகும் பறவைகள், கால்நடைகள் இறக்கின்றன.

4. பயோடைவர்சிட்டி என்று கூறப்படும் பல்லுயிர்களின் பல்லினப்பெருக்கம் அழிந்து ஒரினப் பண்பாடு (MONO CULTURE) எஞ்சுகிறது. உதாரணமாக ஒரு காலத்தில் மிகவும் அரிதான மருத்துவக் குணமுள்ள பாரம்பர்ய நெல் பயிரிட்டார்கள். டொப்பிச் சம்பா, கிச்சலிச் சம்பா, குதிரைவால், செறுமணி, வையக்குண்டான், கருடன் சம்பா, கார்சம்பா, பிசினி, சீரகச் சம்பா, ஆனைக் கொம்பன் என்று தமிழ் நாட்டில் மட்டும் 1000 வகையான நெல் பயிராயின. அவை அழிந்தன. வீரியரக நெல்லான ஐ. ஆர். 8, ஏ.டிட்டி வகைகள் மட்டுமே இன்று உள்ளன. இவை ரசாயனத்தில் வளரும் குள்ளரகப் பயிர்கள். இப்போது இவற்றிற்கும் ஆபத்து வந்துள்ளது.

மரபீனி மாற்றம் ஆபத்து

இன்று நாம் பயன்படுத்தும் வீரியரக நெல் சாகுபடியில் நோய்த்தாக்குதல் அதிகம் என்பதால் உற்பத்தி குறைகிறது என்று இப்போதுதான் வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டு பிடித்துள்ளது. இதற்கு மாற்று, பாரம்பர்ய நெல் என்று உணராமல் வைரஸ் தொற்றும் அபாயம் உள்ள பி. ட்டி நெல் அறிமுகமாக உள்ளது. “எதிர்காலத்தில் வளர்ந்து வரும் உணவுத் தேவைக்கு ஈடு கொடுக்கவே பி.ட்டி என்ற மரபீனி மாற்றம் செய்யப்பட்ட நெல்விதைகளை அறிமுகம் செய்கிறோம்” என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கூறுகிறது. உண்மையில் அமெரிக்கா கண்டுபிடித்த லிபர்ட்டிலிங்க் 60 என்ற பி.ட்டி அரிசி ஏற்றுமதியை ஐரோப்பா தடைசெய்து விட்டது. ஆகவே, இந்தியாவில் இந்த வியாபாரத்தைச் செய்ய எண்ணுகிறார்கள். அதே சமயம் ஏற்றுமதிக்குரிய இந்தியாவின் பாசுமதி, சீரகச்சம்பா போன்ற வாசனை அரிசிக்கு நோய் தொற்றும் என்ற பயத்தில் இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் எதிர்ப்பு ஒரு புறம். பி.ட்டி நெல் சோதனை வயல்களைச் சூழல்வாதி அமைப்புகளும், இயற்கை விவசாய அமைப்புகளும் சார்ந்த விவசாயிகள் தீயிட்டுக் கொளுத்திவிட்டதைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆகவே பி.ட்டி அரிசி அறிமுகமாகக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்றால் ஆறுதல். நோய்த் தாக்குதல் இல்லாத பாரம்பர்ய நெல் சாகுபடியை விரிவாக்கம் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரின் மண்ணைப் பொறுத்து நமது முன்னோர்கள் தேர்வு செய்த ஆயிரக்கணக்கான பாரம்பர்ய நெல் ரகங்களைப் பசுமைப் புரட்சி அழித்துவிட்டதே.

நஞ்சை மேல் புஞ்சை

முற்காலத்தில் நஞ்சை மேல் புஞ்சை என்று புஞ்சைத் தானிய சாகுபடித் திட்டத்தைக் குறிப்பிடுவார்கள். புஞ்சை என்றால் பஞ்சம் காக்கும் புஞ்சைத்தானியம் என்று பொருள். புள்ளி விவர அடிப்படையில் (19 ஆம் நூற்.) மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் உள்ளடங்கிய தென் மாநிலங்களில் (தக்காணப் பீடபூமி) உணவு உற்பத்தியில் 75 சதம் புஞ்சைத்தானியங்கள் பங்கு வகித்தன. இன்று மனித உணவில் 90 சதம் அரிசியும் கோதுமையும். புஞ்சைத் தானியங்கள் இன்று முழுக்க

முழுக்கப் பால் மாட்டுக்கும் கோழிக்கும் வழங்கப் படுகின்றன.

நஞ்சை மேல் புஞ்சை என்பது குறிப்பாக ஆயக்கட்டுப் பகுதிகளில் கிடைக்கும் நீரைப் பொறுத்து ஒரு போகம் நெல்லும் அடுத்த போகம் சோளம், கம்பு, கேப்பை, சாமை என்று எதுவும் சாகுபடி செய்வார்கள். இன்று இந்த மரபு அழிந்து விட்டது. ஏரிப்பாசனம் என்பதும் அரிதாகிவிட்டது. ஆங்காங்கே ஆழ்துளைக்குழாய் இறக்கப்பட்டு சற்று உவரான நீரையே பாசனம் செய்கிறார்கள். முன்பெல்லாம் ஏரி மராமத்து நடந்தது. ஏரியில் மழைநீர் சேமிக்கப்பட்டது. பயிர்களுக்கு ஆறு, ஏரி, குளம் போன்ற மேல்மட்ட நீர் கொண்டு சாகுபடி செய்தார்கள். தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 40,000 ஏரி, குளங்கள் உண்டு. இப்போது தமிழ்நாடு முழுவதும் இரு வழிச்சாலை - நால்வழிச்சாலை என்று அமெரிக்க மாதிரியில் தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்க ஜே.சி.பி (JCB) என்ற இயந்திரம் வேகமாக மண்ணைத் தோண்டுவதைப் பார்க்கலாம். இதையே பயன்படுத்தித் தமிழ்நாட்டில் உள்ள 40,000 ஏரி குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்திக் கரை உயர்த்திக் கண்மாய்களைச் சரிசெய்தாலே போதும். எவ்வளவு வெள்ளம் வந்தாலும் தாங்கும். ஏரிக்குத் தாங்கல் என்ற பெயரும் உண்டு. ஏந்தல் என்றும் பெயருண்டு. சரியானபடி திட்டமிட்டால் நமது குடிநீர்த் தேவைக்கும் பயிர்த்தேவைக்கும் அண்டை மாநிலங்களை அண்ட வேண்டிய அவசியம் இல்லை.

தற்சார்பும் தன்னிறைவும்

தற்சார்புக்கு என் மாமாவின் பண்ணை நல்ல இலக்கணம். சாகுபடிச் செலவு என்பது நடவாள் சம்பளம் மட்டுமே. மற்றவை பண்டமாற்றுத்தான். உழைப்பின் ஊதியம் நெல்லாக அளக்கப்பட்டது. நாலு ஏக்கர் நஞ்சை. ஒரு போகம் நெல். மறுபோகம் தானியங்கள். கிச்சில், குதிரைவால், தங்கச் சம்பா போன்ற நெல் சாகுபடி. வீடு நிறையப் பெரிய பெரிய மண்குதிர்கள். சிறிய குதிர்களில் (மட்கலம்) விதை நெல் சேமிப்பு. அறுவடையிலிருந்து பக்குவமாகத் தூற்றிய தலையடி நெல்லை உலரவைத்து மண்குதிரில் கொட்டி வைப்பார்கள். மறு ஆண்டு விதை நெல்லை எடுத்துப் பார்த்தால் துளியும் காளான் தாக்குதல் இல்லாமல் பவுன்போல் இருக்கும். பழைய விதை நெல், வீடு நிறைய மேய்ச்சல் மாடுகள், உழவு மாடுகள், வண்டி மாடுகள், பசுமாடுகள் நிறைந்து காணப்படும். கிராமங்களில் மேய்ச்சல் நிலம் இருந்தது. பாரம்பர்ய நெல் சாகுபடி என்பதால் 5அடி உயரத்திற்கு மேல் நீண்டிருக்கும், வைக்கோலுக்குப் பஞ்சமிராது. பெரிய பெரிய படப்புகள் மலை போல் குவிந்திருக்கும். சித்திரை - வைகாசியில் வயலில் குப்பை அடிப்பார்கள். அந்தக் குப்பையில் சாணம், பசுமூத்திரம் நனைந்த கூளம், இலைச் சருகுகள் கலந்த ஊட்டம், முட்டு முட்டாகக் குவியல் போடுவார்கள். நாற்று விடுவதற்கு வாதநாராயணன், வாகை, வேம்பு, எருக்கு போன்ற பசுந்தழைகள் கொண்ட குலைகளை அமிழ்த்தி நீர்கட்டி அழுகவைத்துச் சேறு கட்டுவார்கள். நீர் வற்றிய குளங்களிலிருந்து பொறுக்கு அடிப்பார்கள். நீர் வற்றும் போது மீன், தவளை போன்ற நீர்வாழ் உயிரினங்களின் மடிந்த ரசம் குணபஜலமாகக் கிட்டும். இப்படியெல்லாம் தழைச்சத்து நிறைந்த (கூடுதல் நைட்ரஜன்) இடுபொருள்கள் தற்சார்புள்ளவை. இவை வெளியிலிருந்து வருவதில்லை. இப்படி இயற்கை உரத்தை இடும் உழவியல் நுட்பத்தில் இன்று பேசப்படும் ஈ.எம். என்ற திறமி நுண்ணுயிர்கள், அசோஸ் பைரிலம், ஃபாஸ்போ பாக்டீரியா, சூடோமோனஸ், விருடி என்ற பாக்டீரியா, காளான் நுண்ணுயிரிகள் இயல்பாகவே மண்ணில் இருந்து இன்று பசுமைப் புரட்சியில் பயன்படுத்தப்படும் வீரியரக நெல் விளைச்சலைக் காட்டிலும் அதிகமாகவே அன்று விளைந்தது. 4 ஏக்கர் வயலில் 160 மூட்டை நெல் விளைந்தது. ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோலும் கிடைத்தது. பாரம்பரிய நெல் கொண்டு எங்கள் முன்னோர் இன்றைய கணக்கு முறைப்படி ஏக்கருக்கு 2400 கிலோ ஹெக்டேருக்கு 6000 கிலோ செலவே இல்லாமல் உள்ளூர் இடுபொருள் கொண்டு எடுத்தனர். எவ்வாறு நாம் நமது தற்சார்பை, தன்னிறைவை, தன்னுரிமையை இழந்தோம் என்ற கேள்விக்கு விடை இன்று நாம் கடைப்பிடிக்கும் நவீன விவசாயத்தின் தீய விளைவில் உள்ளது.

1. பண்டமாற்று முறை அழிந்ததால் நெல்லின் பணமதிப்பு குறைந்தது. விவசாயிகள் வறுமையுற்றனர்.

2. வீரியரக நெல் அறிமுகத்தால் விதைநெல்லுக்கு அரசை அண்டிப் பிழைத்து, வைக்கோல் காணாத குள்ளரகத்தைப் பயிரிட்டுக் கால்நடைகளைக் கசாப்புக் கடைக்கு அனுப்பினோம்.

3. டிராக்டர், டில்லர் போன்ற தற்சார்பு இல்லாத இயந்திரங்களைப் பயன்படுத்தி மரக்கலப்பையையும்,

இரும்புக்கலப்பையையும் இழந்தோம். உழவு மாடுகளின் குளம்பு மண்ணில் பட்டாலே மண்வளமாகும். டிராக்டரும், டில்லரும் சாணி போடுவதில்லை. ரசாயனங்களைத் தூவவே காரணியாகின்றன. உள்ளூரில் உள்ள தச்சர், கருமார் போன்ற தொழில் கலைஞர்களையும் கிராமத்தைவிட்டு அனுப்பி விட்டோம்.

4. வீரியரக விதை வரவால் விவசாயிகள் தங்கள் தேவைக்குரிய பாரம்பர்ய நெல்விதைகளைச் சேமிக்கும் மரபும் அழிந்தது. இவ்வாறு விதை நெல் சேமிக்கும் மட்கலம் செய்து கொடுத்த மண்ணார், குயவர்களும், கிராமங்களில் காணாமல் போய்விட்டனர். அதுபோன்ற மட்கலம் செய்ய மானாமதுரைக்குத்தான் போக வேண்டும்!

பசுமைப் புரட்சியும் பணப்பொருளாதாரமும் விவசாயத்தில் புகுந்து இடுபொருள்களிலும் உற்பத்திக் கருவிகளிலும் நிலவிவந்த தற்சார்புகளை அவற்றின் சுவடே தெரியாதபடி அழித்துவிட்டன.

மண்ணில் தன்னுரிமை

வேளாண்மையில் தோன்றியுள்ள வீழ்ச்சி பற்றி ஆட்சியாளர்கள் இன்று கவலைப்படத் தொடங்கி விட்டார்கள். அதற்கான தீர்வைப் பரிந்துரைக்கும்போது மண்ணில் தன்னுரிமையை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது. இந்திய நிலையை மேல்நாட்டோடு ஒப்பிடுவதால் வந்த வினை இது. இன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஹைடெக் விவசாயம் கடைப்பிடிக்கப்படுகிறது. அங்கெல்லாம் விவசாயிகள் விவசாயம் செய்வதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் விவசாய மானியம் என்பது வரவு செலவு திட்டத்தில் 40 முதல் 50 சதம். மிக மிக அதிகப் பணச் செலவுள்ள தொழில்நுட்பம் வேளாண்மையில் அறிமுகமாகியுள்ளது. இது அவர்கள் நிலை. உலகிலேயே மிகவும் சிறப்பாக அரசின் உதவி இல்லாமல், யாரையும் அண்டி வாழாமல் உயர்ந்த உற்பத்தித்திறனுள்ள விவசாயத்தை இந்தியா செய்துள்ள செய்திகளை "வேளாண்மை வேதம்" என்ற உலகப் புகழ்பெற்ற நூலை எழுதியுள்ள சர். ஆல்பர்ட் ஒவார்ட் குறிப்பிட்டுள்ளார். (Sir. Albert Howard: An Agricultural Testament) இந்திய விவசாயத்தை மேம்படுத்த லண்டனிலிருந்து ராயல்கமிஷன் ஆஃப் அக்ரிகல்ச்சர் மூலம் பிரிட்டிஷ் அரசியால் 1905ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து பொறுப்பேற்று இந்திய விவசாய ஆராய்ச்சிக்கழகத்தை (Indian Council of Agricultural Research) மேம்படுத்தியவர் இவர். 1905 முதல் 1941 வரையில் இந்தியக் கிராமங்களைச் சுற்றிப் பார்த்து ஆயிரக்கணக்கான விவசாயிகளை ஆசிரியர்களாக கவுரவித்துக் குறிப்பிட்ட செய்தி எதுவெனில், "இந்திய விவசாயிகளிடம் கற்றுக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. மாறாக அவர்களிடம் நாம் கற்றுக்கொண்டு ஐரோப்பிய விவசாயத்தை மேம்படுத்தவேண்டும்" என்பது. ஐரோப்பாவில் இயற்கை விவசாயத்தைக் காலூன்ற வைத்த பெருமையும் இவருக்குண்டு.

இதையெல்லாம் உணராமல் இந்திய விவசாயிகளைக் கடனாளிகளாக்கித் தற்கொலைக்குத் தூண்டி அவர்களை நிலத்தை விட்டு ஓடச் செய்து அதிகச் செலவுள்ள அன்னியத் தொழில்நுட்பத்தை வளர்க்கும் முயற்சி நடக்கிறது. பன்னாட்டுப் பயோ நுட்ப முதலாளிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் நிலத்தை வினியோகம் செய்து அவர்களுக்கு மானிய உதவி வழங்க இன்று ஆட்சியாளர்கள் தயாராகிவிட்டார்கள். நாம் நிலத்தை இழக்கப் போகிறோம். நாம் நமது நீரை இழந்து நிற்கிறோம். கங்கை முதல் தாமிரபரணி வரை நமது நதி நீரையும் ஊற்றுநீரையும் குப்பியில் அடைத்துப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை உரிமையை வழங்கிவிட்டோம். புட்டிநீர்விலை புட்டிப்பால் விலையை விட அதிகமாயுள்ளது. நிலம் இழந்து நீரிழந்து இந்தியர்கள் வாழவேண்டுமா?

உணவு உற்பத்தியை உயர்த்தும் ஒரு பாரம்பர்ய, உழவியல் தொழில்நுட்பம் தற்சார்புடன் இயங்கிய வழியை மீட்பதன் மூலமே தன்னிறைவையும் தற்சார்பையும் பெறமுடியும். இந்திய விவசாயிகளையும், கால்நடைகளையும், குறிப்பாக நோய் இல்லாத சிந்தி, தார்ப்பார்க்கர், ஓங்கோல், காங்கேயம், உம்பளச்சேரி கறவைப் பசுக்களையும் வாழ வைக்கவேண்டும். நமது தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி தாம் இறப்பதற்குச் சில நாள்களுக்கு முன் எழுதிய கடிதத்தில் "இந்தியாவுக்கு இன்னமும் பொருளாதார சுதந்திரம் வரவில்லை" என்று கூறியுள்ளதைக் கவனத்தில் கொண்டு, நாம் எல்லாவற்றிலும் தன்னிறைவுள்ள தற்சார்புள்ள சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் இயற்கை விவசாயத்தையும் கடைப்பிடித்து மானமுள்ள இந்தியர்களாக வாழ்ந்து பெருமை கொள்வோம்.

ஓலைச்சுவடிகள் - ஒரு பார்வை



முனைவர். சொ. சாந்தலிங்கம்,
மதுரை.

தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஓலைச்சுவடிகளில் எழுதும் வழக்கம் இருந்துள்ளது. கல்வி நிறுவனங்களிலும், அரசு அலுவலகங்களிலும் சோதிடர் வீடுகளிலும் ஓலைகளே எழுதுவதற்குப் பயன்பட்டுள்ளன. நெடுங்காலமாக ஓலையில் எழுதும் வழக்கம் இருந்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் ஓலை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. முதன்முதலாகப் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில்தான் (கி.பி.500) 'ஓலை எழுதுவான் ராமன்காரி' என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. அரச ஆணைகள் முதலில் ஓலைகளிலேயே எழுதப்பட்டன. அதன் பின்னரே அவை கல்லிலும் செம்பிலும் 'வெட்டுக' எனப் பணிக்கப்பட்டன. அரசனின் ஆணையை நேரில் கேட்கும் அலுவலன் 'திருவாய்கேள்வி' எனப்பட்டான். பின் அதைக் கேட்டு எழுதுபவர்கள் ஓலை, திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம்,[1] ஓலைநாயகக் கண்காணி[2] என்று பல தகுதிகளில் பணியாற்றினர்.

எழுதுவதற்குப் பெரும்பாலும் பனை ஓலைகளையே பயன்படுத்தியுள்ளனர். சில நேரங்களில் தாழை ஓலைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெட்டப்பட்ட பனை ஓலைகளை நடுவிலுள்ள குச்சியை நீக்காமல் அப்படியே இரட்டை ஓலைகளாகவும், குச்சியை நீக்கித் தனித்தனி ஓலைகளாகவும் பயன்படுத்தியுள்ளனர். தனித்தனி ஓலைகள் ஓலைச்சிறகு எனப்பட்டன. ஓலைகளை வெட்டும் கத்தி ஓலைவாரி எனப்பட்டது. எழுதும் கருவி ஊசி, ஆணி, எழுத்தாணி எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டது. நீளம் குறைந்த ஓலைகளில் நடுவிலும், நீளமான ஓலைகளில் இட, வல ஓரங்களில் இரண்டு இடங்களிலும் துளைகள் இடப்பட்டன. இவை ஓலைக்கண் எனப்பட்டன. ஓலைக்கண்களின் இடையே திடமான குச்சிகளை நுழைத்து இறுக்கிக் கட்டப்பட்டன. ஓலைகள் மரச்சட்டங்களின் இடையே வைத்துக் கயிறு கொண்டு கட்டப்பட்டன. இம்மரச்சட்டங்களின் மீது ஓவியங்கள் வரையப்படுவதும் உண்டு.

ஓலைகளைப் பட்டோலை, பொன்னோலை, மந்திர ஓலை, வெள்ளோலை, வாயோலை என இலக்கியங்களும், அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, கீழ் ஓலை, தூது ஓலை, ஓலை பிடிபாடு எனக் கல்வெட்டுகளும் சுட்டுகின்றன.[3]

தஞ்சாவூர்ப் பெரியகோயில் ஓவியத்தில் சுந்தரரைச் சிவபெருமான் தடுத்தாட்கொள்ளும் நிகழ்ச்சி ஓவியமாய்த் தீட்டப்பட்டுள்ளது. அதில் கிழவேதியனாக வரும் சிவபெருமான் கையில் ஓலை ஒன்றை வைத்திருப்பது போலக் காட்டப்பட்டுள்ளது. அதில் 'இப்படி அறிவேன்' என்று எழுதப்பட்டுள்ளதாகவும், இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனுக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலை என்றும் கூறப்படுகிறது. ஓலை என்பது ஆணை என்ற பொருளிலும் வழங்குகிறது. பாண்டிய நாட்டுக் கல்வெட்டுக்கள் பலவற்றில் களவழிநாடாள்வான் ஓலை, துவராபதி வேளான் ஓலை, மாளவச்சக்கரவர்த்தி ஓலை என்ற தொடர்களைக் காணலாம். இவை இச்சிற்றரசர்களின் (அல்லது அரசு அலுவலர்களின்) நேரடி ஆணை என்றே பொருள்படுகின்றன. ஓலைகளைப் பாதுகாக்க அவற்றின் மீது மஞ்சள் பூசப்பட்டது. சிவப்புத் துணியால் சுற்றப்பட்டு மரப்பெட்டிகளில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. மரப்பெட்டிகள் கரையானுக்கு இரையாகாமலிருக்க

அவை உயரத்தில் தொங்கவிடப்பட்டன. தொங்குகின்ற சுவடிகள் 'அசை' எனப்பட்டன.

சிற்பங்களில் கல்விக்கடவுளாம் தட்சிணாமூர்த்தியின் கையிலும், கலைமகள் (சரஸ்வதி) கையிலும் ஓலைச்சுவடிகள் காணப்படுகின்றன. ஓலை எழுதுபவர்களுக்கு வழங்கப்படும் கூலி ஊசிக் கிரந்தம் எனப்பட்டது. ஓலைகள் சேர்த்து வைக்கும் இடம் கோயில் பண்டாரம், சரஸ்வதி பண்டாரம் எனப்பட்டது. ஓலைகளில் புள்ளியிடும் வழக்கம் இல்லை. குறில், நெடில் வேறுபாடின்றியும் எழுதப்பட்டன.

பிற்காலத்தில் பத்திரங்கள் ஓலைகளில் எழுதப்பட்டன. அவற்றிற்குரிய ஓலைகளில் வட்டமான முத்திரைகள் குத்தப்பட்டுள்ளன. இம் முத்திரைகள் தமிழ், ஆங்கிலம், உருது ஆகிய எழுத்துக்களில் உள்ளன. கருவூலம் (Treasury) என ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இம்முத்திரை (Impression) குத்தப்பட்ட ஓலைகள் கருவூலங்களில் விற்கப்பட்டிருக்கலாம். இன்றைய முத்திரைத்தாள்களுக்கு முன்னோடியாக இத்தகு ஓலைகளைக் கொள்ளலாம். நில விற்பனை ஓலைகள், கிரையமுறி, ஒத்திமுறி, உடன்படிக்கைமுறி எனவும் அடிமைச்சாசன ஓலைகள் அடிமைமுறி எனவும் பெயர் பெற்றுள்ளன.

ஓலைகளின் இறுதியில் எழுதியவர் ஒப்பம், சாட்சிக்கையெழுத்துகள் இடப்பட்டுள்ளன. கையொப்ப மிடத் தெரியாதவர்கள் தற்குறி என்று எழுதி கிடைக்கோடு ஒன்றைக் கீறியுள்ளனர்.

இலக்கியச் சுவடிகளில் இறுதியில் சுவடியின் உரிமையாளர் பெயர் எழுதப்பட்டு, 'எடுத்தவன் கொடுக்க' என்ற வேண்டுகோளும் எழுதப்பட்டிருக்கக் காணலாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1903 ஆம் ஆண்டு வரை ஓலையில் எழுதும் வழக்கம் இருந்துள்ளது. 1872 அளவில் அரசு அலுவலகங்களில் தாள்களில் எழுதும் முறையை அறிமுகப்படுத்துவதற்குச் சேஷ அய்யர் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் அரசு அலுவலர்களுக்குப் பேனாவை எப்படிப் பயன்படுத்தவேண்டும், மையில் பேனா நிப்பைத் தொட்டு எழுதுவது எப்படி என்பன குறித்துப் பயிற்சி வகுப்பு நடத்தியுள்ளார். இந்த வகுப்புக் குறிப்புகள் சேர்த்து 1873-இல் சிறு வெளியீடு வெளிவந்துள்ளது.[4]

பர்னர் என்பவர் தென் எழுத்துக்கலையைப் பற்றி ஆராய்ந்து தமிழகத்தில் மிகப் பழமையான கி.பி. 1428ஆம் ஆண்டு ஓலைச்சுவடி கிடைத்திருப்பதாகக் கூறுவார். ஆனால் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இதைவிடப் பழமையான கி.பி. 1273ஆம் ஆண்டைச் சேர்ந்த ஓலை ஒன்றைக் கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டியபுரத்தில் கண்டுபிடித்-திருக்கிறார். கோட்டாறு நகரத்தார் ஒருவருக்குச் சொத்தை ஒத்தி கொடுத்தது பற்றியது இந்த ஓலை.[5]

அண்மையில் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகிலுள்ள அதளை கிராமத்திலிருந்து, சில ஓலைச்சுவடிகள் பார்வைக்கு வந்தன. இவை சுமார் 1800 ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. அவற்றை ஆய்வு செய்யும் போது அக்காலத்தில் இப்பகுதியில் இருந்த சமூகக் கட்டுப்பாடுகள், பொருளாதார நிலை, ஆள் அடிமை முறை, கிராமப்பஞ்சாயத்து முறை, மேல் முறையீட்டு முறை எனப் பல செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. அவற்றுள் ஒரு சான்றாகக் கீழ்வரும் ஓலைச்செய்தி தரப்பட்டுள்ளது. இவ்வோலை ஆவணத்தில் மனைவியை இழந்த ஆணும், கணவனை இழந்த பெண்ணும் களவு உறவில் ஒழுக அதனை அறிந்த அவர்களது சமூகத்தார் அவர்களுக்கு நான்கு பணம் அபராதம் விதிக்கின்றனர். சேர்ந்து வாழவும் அனுமதிக்கின்றனர். ஆனால் அந்தத் தம்பதியர் இருவர்க்கும் நான்குபணம் அபராதம் செலுத்த வசதி இல்லை. எனவே அவர்கள் இருவரும் ஒரு நில உடைமையாளருக்கு அடிமையாக ஒத்தி வைத்துக் கொள்கிறார்கள். நான்கு ரூபாய் கடன் தீரும் வரை தாங்களிருவரும் அடிமை வேலை செய்ய இசைந்து ஒத்திச்சீட்டு ஆவணத்தை எழுதிக் கொடுத்துள்ளனர். இதன் மூலம் பல செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. அவ்வோலை ஆவணம் அப்படியே கீழே தரப்படுகிறது.

1. "விக்ருதி வருசம் ஆடி மாதம் 4 ந் தேதி அதளையிலிருக்கும் சுப்பிரமணிய சேருவைக் காரனுக்கு மேற்படியூரிலிருக்கும் பள்ளச் சங்கிலிக் குடும்பன் மகன் சங்கிலியான் பெண்டாட்டி அளகநாச்சி ஆக நாங்களிருபேரும் ஒத்திச்

2. சீட்டெழுதிக் குடுத்தபடி ஒத்திச் சீட்டாவது யென் பெண்டாட்டி முந்தின தாரம் எடுபட்டுப் போனதினாலே நான் காலியாயிருந்தேன் பெரிய வீரன் பேதியில் இறந்து போய்மேற்படியான் பெண்டாட்டி குழந்தையளை வயி

3. துக்கொண்டு அழகனாச்சி யிருந்தாள் எங்கள் இருபேருக்கும் காணாக்காலத்தில் சோடி சோத்தி யமாய் ஐக்யமாய்க்கூடிக்கொண்டு இருந்ததில் யெங்கள் உறமுறை பள்ளச்சாதியார் கண்டு பிடித்து அளகனாச்சி

4. க்கிச் சுவனாளியான் மகனும், மாமனும் அதளை பள்ளர் உறமுறையார் முன்னுக்கும் விளாச்சேரி, கிளாநேரி, வெருகநூர் உறமுறையார் முன்னுக்குங் கூட்டி யெங்களிருபேருக்கும்குத்தஞ் சிம

5. த்தி சாதினாயப்படிக்கி உறமுறையார் தெகஷணை செய்து திர்ப்பு குடுத்தது ரு 3 சாதி அபராதமாக பணம் 1 ஆக பணம் 4 நாங்கள் இருபேரும் தங்களுக்கு மேற்படி பணத்துக்கு வட்டிக்கு ஈடாக நாளது வருசம் முதல் நாலு

6. வருசத்துக்கு நந்தன வருசம் வரைக்கும் நாங்களிருபேரும் நாலுபேர் ஒப்பந்தம் உள்ளபடியும் கட்டுகளமும் வாங்கிக் கொண்டு பண்ணை வேலை செய்து வருவோமாகவும் வருசம் சென்றவாறே

(ஒலையின் பின்பக்கம்)

1. முதலான 4 பணமும் குடுத்து பண்ணை வேலை விட்டுப் போவோமாகவும் மேற்படி வாயிதாவில் பணம் செல்லாதவரை பணம் செல்லுகிற வரைக்கும் மேலே எழுதிய பணத்துக்கு உளுது பண்ணை வேலை செய்து உணவுகட்டி வாங்கிக்கொண்டு

2. வேலை செய்து கொண்டு வருவோமாகவும் மேலே எழுதிய வருசங்களில் ஒரு நாளாவது ஒருபடி தானியத்தளவிலாவது கால்பணத்தளவிலாவது திருட்டு வேலை செய்தால் மேற்படி பணத்துக்கும் தானியத்துக்கும் ரெட்டிப்புக்கூட்டி

3. குடுப்பேனாகவும் ஒருநாளாவது முகந்தப்பிப் போனால் முகந்தப்பிய நாளைக்கு கணக்கு ஒரு நாளாவது வீட்டிலிருந்து கொண்டு வேலை தான் வானாலும் பின்னாலே தாமிசஞ்செய்த நாள் கணக்கு வச்சு பின்னாலே வேலை செய்வோமாகவும்.

4. பென்று எங்கள் இருபேர் மனோராஜியினாலே சுப்பிரமணியன் சேருவைக்காரனுக்கு சங்கிலிக் குடும்பன் மகன் சங்கிலி மேப்படியான் பெண்டாட்டி அளகுநாச்சியும் இருபேரும் ஒத்திச் சீட்டெழுதிக் குடுத்தோம்

5. யிந்தப்படிக்கி தற்குறி . சங்கிலி - யிந்தபடிக்கி தற்குறிஅளகுநாச்சி, சாட்சி அறிவேன் முத்துக் கருப்பன்.

இவர்களறிய இந்த ஒத்திச்சீட்டெழுதினது அதளைப் பட்டக்குறிச்சிக் கணக்குத் திருமலைப் பிள்ளை.

இவ்வேடு எழுத்தமைதியைக் கொண்டும், இவ்வேட்டோடு கிடைத்த வேறு சில ஒலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுக் குறிப்புகளைக் கொண்டும் கி.பி. 1800 அளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதில் சில எழுத்துப் பிழைகளும் உள்ளன. ர, ற, மயக்கம், ள,ழ வேறுபாடு ஆகியவை சாதாரணமாகக் காணப்படும் பிழைகள் ஆகும்.

ஓலைச்சுவடிகளில் மூல ஏட்டைப் பார்த்து நகல் எடுப்பதற்கு ஏடு திருப்புதல், பிரிநகல், சபாது எனப் பல பெயர்கள் உண்டு. அதளை ஒலை ஒன்றில் இது சபாது என்று முடிகிறது. எனவே அது நகல் எடுக்கப்பட்ட ஒலை எனக் கருதப்படுகிறது.

அதளைக் கிராமத்தில் பல ஒலை முறிகள் கிடைத்துள்ளன. தலங்காவல் உரிமை பற்றிய ஒலைகள், நில விலை ஆவணங்கள், ஒத்தி முறிகள், கால்வாய் நீர்ப்பாசனப் பங்கீடு பற்றிய ஒலைகள் ஆகியவை அவற்றுள் அடங்கும். இவற்றின் மூலம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முந்திய சமூகப் பொருளாதார நிலைமைகள் பற்றிய செய்திகள் அறியக் கிடக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. விரிவான செய்திகளுக்கு பார்க்க ஆவணம் இதழ் 8 பக்கம் 107 - 117 சு. இராசகோபால் 'ஒலைச் சுவடிகளில் எழுத்து முறை' - கட்டுரை.
2. கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் முதல் பகுதி எண் 11/1968
3. மேற்படி நூல் எண். 56/1968
4. அ.கா. பெருமாள், தென்குமரியின் கதை 2003, பக்கம் 267 - 268.
5. மேற்படி நூல் பக். 301.

கோயிலும் கல்வெட்டுகளும்
(கி.பி. 800 – 1400)



முனைவர். வெ. வேதாசலம்,
மதுரை.

இடைக்காலத் தமிழக வரலாற்றைக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமல் எழுத இயலாது. பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர வேந்தர், நாயக்க மன்னர் காலங்களின் வரலாற்றை அறியத் துணைநிற்கும் அரிய சான்றுகளாகக் கல்வெட்டுகள் உள்ளன. பண்டைய அரசியல், பொருளியல், சமயம், சமுதாயம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றிற்குரிய தரவுகளின் கருவூலமாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன. இந்தியாவில் இதுவரை 75000 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60000 கல்வெட்டுகள் விந்தியமலைக்குத் தெற்கே உள்ளன. அவற்றில் 25000 கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் உள்ளன. ஆவணங்களைக் கல்லில் அதிக அளவில் பொறித்து வைக்கும் வழக்கமும் அவற்றிற்கு நிலைத்த தன்மையைத் தரும் பண்பும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன.

கி.பி. 850 க்கும் 1300 க்கும் இடைப்பட்ட சோழர், பாண்டியர் காலங்களிலேயே தமிழ் நாட்டில் கல்வெட்டுகள் மிகுந்த அளவில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தினைச் சார்ந்த 16500 கல்வெட்டுகள் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளில் தொண்ணூற்றைந்து விழுக்காடு கோயில்களிலேயே உள்ளன. சமூக, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் கால வாரியாக மாறுபடுகிறது. தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தியியக் கத்தின் விளைவாகச் சமயம் சார்ந்த வாழ்வாகச் சமூகம் மாறியது. அதனைத் தொடர்ந்து ஏராளமான கற்கோயில்கள் பல்லவர், சோழர், பாண்டியர் காலங்களில் தோன்றின. கோயில் சமூகத்தின் கருப்பொருளாக ஊரின் மையமாக மாறியது. அந்நிலையில் கோயில்களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு ஆதரவளித்தவர்கள் தாம் அளித்த கொடை ஆவணங்களை என்றும் அழியாதவாறு கோயில்களில் கல்வெட்டுகளாகப் பொறித்து வைத்தனர்.

இடைக்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில் ஏராளமான நிலங்களுக்கு உரிமைபடைத்த நிலவுடைமை நிறுவனமாக இருந்தது. பலருக்குக் கடனளிக்கும் பொருட்பலம் படைத்த வங்கியாக விளங்கியது. ஏராளமான மக்களுக்கு பணிவாய்ப்பிற்கு இடமளித்த சமூக நிறுவனமாகத் திகழ்ந்தது. உயர் கல்வியும் ஆரம்பக் கல்வியும் அளிக்கும் கல்விக்கூடமாக அமைந்தது. பலதரப்பட்ட கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாகவும், கலைப்பொருள்களின் கருவூலமாகவும் அமைந்தது.

ஆதரவற்றவர்களுக்கு 'ஆதரவளிக்கும்' அஞ்சினார் புகலிடமாக விளங்கியது. மருந்துகள் அளித்து, நோய்வாய்ப்பட்டோரைக் காக்கும் மருத்துவச் சாலையாகவும் நாடிவந்தோர்க்கு உணவளிக்கும் அறச்சாலையாகவும் அமைந்தது. அரசும் ஊரவைகளும் கோயில் கொடைகள் மீது கவனம் செலுத்தின. கோயில் வழிபாட்டின்மூலம் இவை இணைந்தன என்பதைக் கோயில் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, அவற்றின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றைக் கல்வெட்டுகள் மூலம் நன்கு அறியமுடிகிறது. கோயில்களின் வழிபாட்டு முறைகளையும் அக்கால மக்களின் சடங்குகளையும் சமூகப்பழக்கவழக்கங்களையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கோயில்கள் பலதரப்பட்ட சமயங்களின் மையமாக விளங்கின. இதனால்

அவற்றையொட்டிப் பல சமயங்களின் மடங்கள் தோன்றின என்பதையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

அரசு–கோயில்–ஊர்

அரசு நிர்வாகம், கோயில்கள் மூலமாக, ஊரவைகள், சமூகம் ஆகியவற்றோடு உறவுகொண்டு நாட்டின் மீது தனது ஆளுமையை நிலைப்படுத்திக் கொண்டுள்ளது. அரசன் நாட்டின் பல பகுதிகளில் பயணம் செய்தபோது கோயில்மண்டபங்களிலும் கோயில் திருமுற்றங்களிலும் தங்கி மக்களைச் சந்தித்தான். மக்களின் குறைகளைக் கேட்டுக் கோயில் நிர்வாகத்தினையும் கண்காணித்தான். அரசன் நாட்டில் இருந்த நிலங்களை அளந்து வரி விதித்தான். அவற்றைஅளவிடும் அளவுகோல்களின் வரைபடங்களையும் பெயர்களையும் கோயில் சுவர்களில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தான். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊரவையினர் நிலங்களை அளந்து வரி வாங்கினர். சோழவந்தானுக்கு அருகிலுள்ள தென்கரைச் சிவன் கோயிலின் தென்புறச் சுவரில் மனைக்கோல், பாடகக்கோல், மலைமேல் மலைக்குடிக்கோல் என்று பல கோல்கள் காணப்படுகின்றன. இவை முறையே வீடு, நிலம், மேடுபள்ளமான இடங்களை அளக்கப் பயன்பட்டன. மன்னன் பெயரில் அமைந்த அளவுகோல்களும் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வரகுணபாண்டியன் (கி.பி.862 – 880), திருச்செந்தூர்க் கோயில் வழிபாட்டுச் செலவிற்காக 1400 பொற்காசுகளைத் தானமாகத் தந்தான். அவற்றைப் பலவூர்களைச் சேர்ந்த சிறுநாட்டுத்தலைவர்களான அளற்றுநாட்டுக்கோன், இருஞ்சோனாட்டு இருப்பைக்குடிகிழவன், சாத்தம்பெருமான் ஆகியோர் மூலமாகக் கோயிலுக்குக் கொடுத்தான். திருச்செந்தூரைச் சூழ்ந்த பலவூர்களில் இருந்த ஊரவையார்க்கு அக்காசுகளைப் பங்கிட்டு அளித்து ஒவ்வொருவரும் குறிப்பிட்ட வழிபாட்டுப் பணியைச் செய்யுமாறு பணித்தான்.

ஒவ்வொரு ஊரவையினரும் தங்களிடம் அளிக்கப்பட்ட காசுகளிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு கோயில் வழிபாட்டிற்காகும் பொருட்களைக் கொண்டு வந்து தந்தனர். அரசு, நாடு, ஊர் என்ற மூன்றிற்கும் இடையேயுள்ள உறவைத் திருச்செந்தூர்க் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. சோழநாட்டில் அரசுக்கு ஆதரவளித்த பிரமதாயம், நகரம், வேளாண் சமூக ஊர் ஆகியவற்றின் ஊரவையினராக விளங்கிய நிலவுடைமையாளர்கள் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் திருக்கடையூர்ப் பகுதியில் ஏற்பட்ட கலவரம் காரணமாகத் தங்கள் ஊர்களைவிட்டு வெளியேறினர். காலப் போக்கில் பாண்டிய அரசின் தலையீட்டால் அவர்களது ஊர்களில் குடியேற்றப்பட்டனர். இதற்கு நன்றிக்கடனாக அவர்கள் அரசனின் கல்யாணத்திருமேனி நன்றாக இருப்பதற்காக நூற்றுஎட்டுத் திருநந்தாவிளக்குகள் திருக்கடையூர்க் கோயிலில் எரித்துள்ளனர்.

சமயம் சார்ந்த மக்களின் மனத்தில் இடம்பிடிக்கும் முறையில் பல்லவர், சோழர், பாண்டியர் போன்ற பெருமன்னர்கள் ஏராளமான கோயில்களைத் தமிழ்நாட்டில் எடுப்பித்துள்ளனர். பல்லவ மன்னன் இராசசிம்மனால் எடுப்பிக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும், காஞ்சிபுரம் கயிலாச நாதர்கோயிலும் முதல் இராசராசனால் வானுயர எடுப்பிக்கப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், முதல் இராசேந்திர சோழனால் எடுப்பிக்கப்பட்ட கங்கைகொண்ட சோழீசுவரர் கோயிலும் அக்காலச் சமய எழுச்சியைக் காட்டும் கலைக்கூடமாக இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. தமிழ்நாட்டுப் பேரரசர்கள் தங்கள் ஆளுமையை அப்பெருங் கோயில்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். அக்கோயில்களில் தனிக் கவனத்துடன் அவர்களால் செய்து வைக்கப்பட்ட சிற்பங்கள் பேரரசுத்தன்மையை உணர்த்துகின்றன. முதல் இராசராசனின் தஞ்சைக் கோயில் அவன் வெற்றியில் குவித்த செல்வங்களைக் காத்து நிற்கும் ஆன்மீகக் கருவூலமாக விளங்கியது என்பதைத் தஞ்சைக்கோயில் கல்வெட்டுகள் புலப்படுத்து கின்றன. சோழர்கள் தங்கள் வெற்றியின்போது கண்டுகளிக்கப் பல நாட்டுத் தெய்வவுருவங்களை எடுத்துவந்து தமிழ்நாட்டுக் கோயில்களில் வைத்து வழிபட்டனர். தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள சாளுக்கியரின் துவாரபாலர் சிற்பத்தின் அடியில் 'உடையார் ஸ்ரீவிஜய ராஜேந்திரசோழதேவர் கல்யாணபுரம் எறிந்து கொடுவந்த துவாரபாலர்' என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது.

ஊரவையினர் கோயில் பணிகளில் ஈடுபட்டுக் கோயில் தொடர்பான ஆணைகளை நிறைவேற்றி வைத்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வணிக்க ஊர்களில் இருந்த கோயில்களின் உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை மூன்றுகை மாசேனை

போன்ற படைவீரர்கள் ஏற்றுக் காத்துநின்றனர். கோயில்களைத் திருப்பணி செய்தபோது அவற்றிலுள்ள பழைய ஆவணங்கள் படியெடுக்கப்பட்டன. திருப்பணி முடிந்ததும் மீண்டும் அவற்றில் பொறிக்கப்பட்டன. மானாமதுரை வட்டத்திலுள்ள இடைக்காட்டூர்ச் சிவன் கோயில் புதுப்பிக்கப்பட்டபோது பாண்டியனின் ஆணைப்படி அக்கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு மீண்டும் கோயில் விமானத்தில் பொறிக்கப்பட்டன. கண்டராதித்த சோழனின் மனைவியார் செம்பியன்மாதேவியார் தாம் திருக்கற்றளியாக மாற்றிய கோயில்களில் முன்பிருந்த கல்வெட்டுகளைப் படியெடுத்துத் திருப்பணி முடிந்ததும் மீண்டும் அக்கோயிலில் வெட்டுவித்துள்ளார்.

கோயில்கள் உருவாக்கம்

கோயில்களைப் புதியதாக முழுமையாகக் கட்டியது குறித்துக் கல்வெட்டுகள் பேசுகின்றன. பழங்காலத் திலிருந்து தொன்று தொட்டு இருந்துவரும் கோயில் பகுதிகளைக் காலந்தோறும் அவ்வப்போது தனித் தனியாகப் பலர் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவை கோயிலின் காலத்தை அறியத் துணைபுரிகின்றன. மதுரைக்கு அருகிலுள்ள ஆனைமலைக் குடைவரைக்கோயிலை கி.பி.770இல் பராந்தக நெடுஞ்சடையனின் முதன்மந்திரிகள் மாறன் காரி, மாறன் எயினன் என்பவர்கள் தோற்றுவித்தனர். மதுரைக்கு அருகிலுள்ள கீழ்மாத்தூர்ச் சிவன் கோயிலைச் சோழன் கலைகொண்ட வீரபாண்டியன் காலத்தில் அவனது அதிகாரி தமிழவேள் என்பவன் ஸ்ரீகண்டேஸ்வரம் என்ற பெயரில் புதியதாகத் தோற்றுவித்துள்ளான். திருமயம் வட்டத்துச் சுந்தரம் சிவன்கோயிலின் பல பகுதிகளைப் பலர் தனித்தனியாக உருவாக்கியுள்ளனர். பொன்னமராவதிச் சோழீசுவரர் கோயிலின் விமானத்தை எடுப்பித்து அங்குள்ள கருவறையில் சிவலிங்கத்தை நிசதராசன் பிரதிட்டை செய்துள்ளான். திருத்தங்கல் பெருமாள்கோவிலையும் சிவன்கோவிலையும் முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அதிட்டானம் முதல் கலசம் முடிய கற்றளியாக அவனது அதிகாரி தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் மாற்றியிருக்கின்றான்.

விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்றுமாளிகை, (திருச்சுற்று நடைமாளிகை, சுற்றாலை) திருமடைப்பள்ளி, பரிவாரக் கோயில்கள், அம்மன், நாச்சியார் கோயில்கள், மண்டபங்கள், கோபுரங்கள் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோயிலின் உறுப்புகளான திருவாசல்,திருநிலைக்கால், படி, படியிடை, பலிபீடம், தூண், சித்திரகண்டக்கால், திருப்பூப்பலகை, கோமுகம், சாளரம் ஆகியவற்றை எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் பேசுகின்றன. கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகளையும், கற்றிருமேனிகளையும் எழுந்தருளிவித்தவர்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் வருகின்றன. அருப்புக்கோட்டைச் சிவன்கோயில் விமானத்தின் தேவ கோட்டங்களில் உள்ள இலிங்கபுராணதேவர், துர்க்கையார் சிற்பங்களைச் செய்வித்தவரின் பெயர்கள் அவற்றின் அடியில் பொறிக்கப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டம் இடைக் காட்டூர்ச் சிவன்கோயிலில் தேவகோட்டத்துத் தட்சிணாமூர்த்தி உருவத்தினை அழகிய பாண்டிய தெட்சிணாமூர்த்தி என்ற பெயரில் மயிலேறுவான் அடியார்க்கு நல்லான் ஆன அரும்புகழளித்த பாண்டிய தேவர் செய்வித்துள்ளார். முதல் இராசராசனின் தஞ்சைக் கோயிலில் ஏராளமான செப்புத் திருமேனிகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மெய்ப் பொருள் நாயனார் திருமேனியாகும். கல்வெட்டில் இத்திருமேனி, 'தத்தா நமரேகாண்' எனும் மிலாடுடையார் செப்புத் திருமேனி என்று குறிப்பிடப்படுகிறது.

கோயில் நிர்வாகம்

கோயிலை நிர்வாகம் செய்தவர்கள், கண் காணித்தவர்கள், பல வேலைகள் செய்த கோயில் பணியாளர்கள் பற்றி விரிவாகக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன. கோயில் நிர்வாகம் செய்தவர்களைத் தேவகன்மிகள், பதிபாதமூலப்பட்டுடையார், பதிபாதமூலப் பட்டுடை பஞ்சாசாரிய தேவகன்மிகள், ஸ்ரீமாஹேசுவரர், ஸ்ரீமாஹேஸ்வரக்கண்காணியார், ஸ்ரீருத்திரமகேசுவரர், ஸ்ரீபன்மாஹேசுவரர், ஸ்ரீவைஷ்ணவர், அகநாழிகையார், உண்ணாழிகையார், மூலப்பருடையார், மூலப்பருடை சபையார், மூலப்பருடைப் பெருமக்கள் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் ஸ்ரீகாரியம்செய்வார், ஸ்ரீகாரியம் ஆராய்வார், ஸ்ரீகாரியம் திருத்துகின்றவர், தன்மிகள், தானத்தார், குளங்களிலார், ஸ்ரீகரணத்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். பல பெருமக்கள் சேர்ந்து சிறுசிறு குழுக்களாகவும்

கோயில் காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கிருஷ்ணகணப்பெருமக்கள், வீரகணத்தார், சாத்தகணத்தார், அமிர்தகணத்தார், புண்ணிய கணத்துப்பெருமக்கள், கார்த்திகைக்கணப் பெருமக்கள், திருநட்டகணப்பெருமக்கள் என்று அழைக்கப்பட்டனர்.

கோயிலின் தேவைக்குகேற்ப ஏராளமான பணியாளர்கள் இருந்துள்ளனர். இவர்கள் பதவி, செய்யும் வேலை, தகுதி, சம்பளம் குறித்து விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோயில்களில் கோயில் கணக்கு, ஸ்ரீபண்டாரம், ஆவணம், ஸ்ரீகாரியம்செய்வான், ஸ்ரீகாரியம் ஆராய்வான், சிவபிராமணர், பட்டர், பரிசாரகர், அடுவார், தேவரடியார், நட்டுவர், நீர்கொணர்வார், பூவிடுவார், தழையிடுவார், பூத்தொடுப்பார், இடையர் (மன்றாடி, வெட்டிக்குடி) உவச்சர், ஈரங்கொல்லி, தச்சாசாரியர், கொல்லர், கைக்கோளர், வேட்க்கோவன் (குயவன்) மெழுவாள், விறகிடுவார், அடுவான், ஸ்ரீபாதம்தாங்கி, மெய்க்காவல், ஜோதிடர், திருப்பதியம்பாடுவார் என்று பலர் பணிபுரிந்துள்ளனர். தஞ்சைக் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பலர் (48 பேர்கள்) இருந்தனர். அவர்களோடு உடுக்கைவாசிப்பான் (ஒருவர்) கொட்டிமத்தளக்காரரும் (ஒருவர்) அமர்த்தப்பட்டனர். தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் தஞ்சைக் கோயிலில் தளிச்சேரிபெண்டுகள் 400 பேர்கள் இருந்தனர். அவர்களுடன் நட்டுவம் (12 பேர்) வானம்பாடி (4 பேர்), வங்கியக்காரர் (குழல்) (3 பேர்), பாடவியம் (5 பேர்), உடுக்கை வாசிப்பான் (2 பேர்), வீணை வாசிப்பான் (2 பேர்), ஆரியம்பாடுவார் (3 பேர்), தமிழ் பாடுவார் (4 பேர்), கொட்டிமத்தளம் (2 பேர்), முத்திரைசங்கு (3 பேர்), பக்கவாத்தியர் (5 பேர்), காந்தவர் (75 பேர்), திருவாய்க்கேழ்வி (5 பேர்) ஆகியோரும் இருந்தனர். தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தவர்விகளுக்கும் நாயகம் செய்ய இருவர் அமர்த்தப்பட்டனர். அவர்கள் தொடர்பாக மேல்கணக்கர் ஒருவரும் கீழ்க்கணக்கு ஏழுபேர்களும் நியமிக்கப்பட்டனர். பதினோரு பேர்கள் கொண்ட உவச்சர்களின் (சகடை கொட்டிகள்) ஆறு குழுக்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் அறுபத்தாறு பேர்கள் பணிபுரிந்தனர். திருபள்ளித்தொங்கல் பிடிப்பார் (12 பேர்), விளக்குடையார் (8 பேர்), நீர்தெளியான் (4 பேர்), சன்னாளியார் (2 பேர்), திருமடைப் பள்ளிக்குசவர் (11 பேர்), வண்ணத்தார்கள் (2 பேர்), காவிதிமை (இருவர்), நாவிசம் (இருவர்), திரு. (கணி), (2+4), கொலினமை செய்வார் (இருவர்), அம்பட்டன் (ஒருவர்), தய்யான் (2 பேர்), இரத்தினத்தய்யான் (ஒருவன்), கன்னான் (ஒருவன்), தச்சாசார்யம் (5 பேர்கள்), தச்சு (இருவர்), பாணன் (4 பேர்), கண்காணித்தட்டான்மை (இருவர்), பண்டாரிகள் (நால்வர்), ஸ்ரீவிரகர் (170 பேர்), கணக்கர் (6 பேர்), கீழ்க்கணக்கர் (12பேர்), நூற்றுப் பதினெட்டு ஊர்களைச் சார்ந்த நூற்றுப் பதினெட்டு மெய்க்காவலர்கள் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர். மொத்தத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் முதல் இராசராசன் காலத்தில் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வழிபாடு

கோயில்களில் நாள்வழிபாடு, திங்கள்வழிபாடு, ஆண்டுவழிபாடு, சிறப்புவழிபாடு என்று பலவகையான வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட பொருள்களோடு, நிலம், காசு, அவற்றின் மதிப்பு ஆகியவற்றையும் கல்வெட்டுகளில் காண முடிகிறது. இறைவனுக்குத் திருமஞ்சனம், திருமெய்ப்பூச்சு, திருமேனியில் அணியும் ஆடை, ஆபரணங்கள் பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இறைவனுக்குப் படைக்கப்பட்ட திருவமுது பிறபடையல் பொருட்கள் பற்றியும் கல்வெட்டுகள் தெளிவான செய்திகளைத் தருகின்றன.

திருமஞ்சனம்

திருமஞ்சனத்திற்காகப் பால், தயிர், நெய், கோமியம், சாணம் ஆகியவை ஐந்தும் கலந்த பஞ்சகவ்யம் எனப்படும் புனிதநீர் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் வரகுணனின் திருச்செந்தூர்க் கல்வெட்டு இறை வனுக்குரிய வழிபாட்டு முறையைத் தெரிவிக்கும் பழமையான கல்வெட்டுகளில் ஒன்றாகும். திருச்செந்தூர்க் கோயிலில் இறைவன் திருமஞ்சனம் ஆடியருள பசுவின்பால், பசுவின் தயிர், இளநீர் (வழுவைஉட்பட) பயன்படுத்தப்பட்டன. திருமேனியில் பூசியருள மேல்தோல் சிரைத்த பற்று மஞ்சள், சந்தனக்குழப்பு, கற்பூரத்தோடு கட்டி அரைத்த சந்தனம் ஆகியவை அளிக்கப்பட்டன.

ஆடை

இறைவனுக்குரிய ஆடையை நெய்வதற்காகக் கோயிலில் திருமடைவிளாகப் பகுதியிலேயே கம்மாளர் களும் அறுவைவாணியர்களும் குடியேற்றப்பட்டனர். சாதாரண ஆடையிலிருந்து உயர்தர ஆடைகள் வரை நெசவு செய்து கோயிலுக்குத் தரப்பட்டன. இவை

ஸ்ரீஉடையாடை எனப்பட்டது. இறைவனுக்கு அளிக்கும் ஆடை தவிர ஒலியல், பாவாடை, மடைப்பள்ளி மேற்கட்டுப் புடவை, கல்புறைப் புடவை,கர்ப்பக்கிரகத்தில் மேற்புறம் கட்டும் மேற்கட்டி வெண்கூறை, கோயில் பணி யாட்களுக்குப் புடவை ஆகியவை அளிக்கப்பட்டன.

ஆபரணங்கள்

இறைவன், இறைவி ஆகியோர்க்கு அணிவிக்கப்படும் மணிமுடிகள், உடல் முழுவதும் அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் பற்றியும் விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. தஞ்சை, திருவாரூர் போன்ற ஊர்களில் காணப்படும் சோழர் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

தஞ்சைக் கோயில் கல்வெட்டில் கண்டநாண், புல்லிகை கண்டநாண், பாசமாலை, மாணிக்கத்தின்தாலி, பாகுவலயம், குருவிந்தம், இரத்தின வளையல், திருக்கைக்காறை, இரத்தினகடகம், பவளக்கடகம், திருப்பட்டிகை, முத்தின் உழுத்து, மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகக்கிடுகு, இரத்தின மோதிரம், நவரத்தினமோதிரம், பிருஷ்டக்கண்டிகை, ஸ்ரீசந்தம், வலத்திருவடிநிலை, இடத்திருவடி நிலை என்று ஐம்பதிற்கு மேற்பட்ட ஆபரணங்களின் பட்டியல் காணப் படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் அம்மனுக்குக் கல்வடம், பாடகம், திருச்சேறை, முகக்காறை, முலைத்தடம், ஆரம், மாங்கல்யம், பட்டனக்காறை, தோடு, வளி, பஞ்சரம், ஏகவடம், தாழ்வடம் என்று பதிமூன்று வகையான ஆபரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

திருவமுது

திருவமுது படைப்பதற்கு அளிக்கப்பட்ட உணவு வகைகளோடு அவற்றைச் செய்வதற்காக அளிக்கப்பட்ட பொருட்கள், அவற்றின் செய்ம்முறைபற்றியும் கல்வெட்டுகள் விரிவான செய்திகளைத் தருகின்றன. திருவமுதிற்காகச் செந்நெல் தீட்டல் அரிசி, பத்தெட்டுக்குத்தல் பழவரிசி, பசுவின் நறுநெய், பசுவின் தோய்தயிர், கருவாழைப்பழம், வாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை, அடைக்காய் ஆகியவை அளிக்கப்பட்டன. சாதத்துடன் வெஞ்சனமாகப் பலவகைக் காய்கறிகள் அளிக்கப்பட்டன. காய்கறிகள் துமிக்கவும், பொரிக்கவும் நறுநெய், காயம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. புளிங்கறி, புழுக்குக்கறி, பொரிக்கறி, எற்றிக்கறி என்று நான்கு வகைக் காய்கறிகள் படைக்கப்பட்டன. தயிர்க்கூட்டும் இவற்றோடு சேர்க்கப்பட்டது. சமையலுக்குப் பயன்படும் பலசரக்குகளாக மிளகு, மஞ்சள், சீரகம், சிறுகடுகு, கொத்தம்பரி, எற்றிக்காய், பயிற்றுப்பருப்பு, சிறுபயிற்றுப்பருப்பு, சிறுபயிற்றுப்பொரி, தேங்காய், சுக்கு, உளுந்து ஆகியவை அளிக்கப்பட்டன. திருப்பணியாரத்திற்காகத் தேங்காயும் கருப்புக்கட்டியும் தரப்பட்டன. பணியாரம் சுவையுடன் செய்வதற்குத் தேங்காய், கதலிப்பழம், சீரகம், மிளகு, சுக்கு, சர்க்கரை, கரும்பு, நெய், பயிறு ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன.

கும்மாயம் எனப்படும் பயிற்றுப்பொங்கல் பல கோயில்களில் திருவமுதாகப் படைக்கப்பட்டது. இது பயிற்றுப்போனகம் என்றும் அழைக்கப்பட்டது. இதனுடன் சர்க்கரையும் சேர்த்து அக்காரவடிசில் எனப்படும் சர்க்கரைப் பொங்கலைப் படைத்தனர். விசயநகரவேந்தர் கல்வெட்டுகளில் முக்கிய இனிப்புப் பொருளாக அதிரசம் இடம்பெற்றது. இவற்றுடன் இட்லியும், தோசையும் திருவமுதாகக் கோயில்களில் இடம்பெற்றன. பிட்டு என்ற அளவு குறைவான இனிப்புப் பலகாரத்தைச் சோழர் காலத்திலிருந்து கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பூரியும், அப்பமும் இக்காலக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றன. கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசேந்திரன் கல்வெட்டில் அரிசிப்பூரி திருவமுதாக இடம்பெற்றுள்ளது. பிள்ளையாருக்குப் படைக்கப்படும் மோதகமும் கல்வெட்டில் இடம்பிடித்துள்ளது. திருவமுது படைப்பதற்காக வாழை இலைகள் தரப்பட்டன. உணவு உண்ட பின் வெற்றிலை போடுவதற்காக வெற்றிலை, அடைக்காய் (நூறுநூற்றமுது) சுண்ணாம்பு ஆகியவையும் இறைவனுக்குப் படைக்கப்பட்டன.

நந்தவனங்கள்

ஒவ்வொரு கோயிலுக்கும் வழிபாட்டிற்குரிய பூக்களை அளிப்பதற்கு நந்தவனங்கள் இருந்தன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம் என்று அழைக்கப்பட்டன. இவற்றில் பணி செய்யும் ஆட்கள் நந்தவனம் செய்வார், நந்தவனக்குடிகள், நந்தவனம் இறைக்கும் அருந்தவத்தோர் என அழைக்கப்பட்டனர். நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என்று பலவகையான மலர்களைக் கோயில் வழிபாட்டிற்கு இவர்கள் கொண்டு வந்து தந்தனர். குவளை, செங்கழுநீர், மல்லிகை, பெருஞ்செண்பகம், சிறுசெண்பகம், இருவாட்சி, தாமரை,

அல்லி என்று பலவகையான பூக்களைப் பூசைக்குப் பயன் படுத்தினர். பூ நந்தவனங்களிலிருந்து பூக்களைப் பறித்து அவற்றைக் கோயில்களில் கொண்டு வந்து சேர்ப்பதற்குப் பணியாட்கள் இருந்தனர். கோயிலில் இருந்த பூமண்டபங்களில் அவற்றைத் திருப்பள்ளித் தாமம் என்று அழைக்கப்பட்ட மாலையாகத் தொடுப்பதற்கு ஆண்களும் பெண்களும் இருந்தனர். தேவரடியார் பெண்களும் பூத்தொடுக்கும் பணியில் ஈடுபட்டனர். திருப்பத்தூர் இரண்டாம் வரகுணபாண்டியன் கல்வெட்டு கோயிலுக்கு அளிக்க வேண்டிய திருப்பள்ளித் தாமத்தின் அளவை 'இருவிரல் அகலத்து இரண்டிற்கு நறும்பூ இட்டுத் தொடுத்தன இருமுழ நீளத்தன ஒரோவடமாக நியதிபதினைந்துவடம் இடுவதாக' என்று குறிப்பிடுகிறது.

திருநாட்கள்

நாள்தோறும் கோயில்களில் நடத்தப்பெறும் வழிபாடு தவிர ஒவ்வொரு திங்களிலும் குறிப்பிட்ட நட்சத்திரத்தன்று திருவிழாக்கள் நடைபெற்றன. சித்திரைவிஷு, சித்திரை பௌர்ணமி, வைகாசி விசாகத் திருநாள், ஆனிமூலத்திருநாள், ஐப்பசி அசுவினித் திருநாள், ஐப்பசித் திருவோணநாள், கார்த்திகைத் திருநாள், மார்கழித் திருவாதிரை, மார்கழி ஏகாதசி, தைப் பூசத் திருநாள், மாசிமகத் திருநாள், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரத் திருநாள் என்று பல மாதத் திருநாட்கள் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. மேலும் திருக் கல்யாணம், பிரதோசம், திருவேட்டைத் திருநாள், தேர்த் திருநாள் என்று பல திருநாட்கள் பற்றிக் கல்வெட்டில் குறிப்புகள் வருகின்றன. இவை தவிர மன்னர்கள், அரச உறவினர்கள், அதிகாரிகள் ஆகியோரது பிறந்த நாட்களில் கோயில்களில் சிறப்பு சந்தி ஏற்படுத்தப்பட்டுத் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. மன்னர்களின் வெற்றியைக் குறிக்கும் முறையிலும் திருநாட்கள் கொண்டாடப்பட்டுள்ளன.

கோயில் பொருளாதாரம்

இடைக்காலத் தமிழ்நாட்டில் கோயில்கள் படிப்படியே வளர்ந்து தொடக்கத்தில், காசு, கால்நடைகள், பொன், பிறபொருட்கள் என்று பல கொடைகளைப் பெற்றன. பின்னர் என்றும் மதிப்புக்குறையாத நிலங்களை நிலையான வருமானமாகப் பெற்றன.நிலங்களிலிருந்து வந்த நெல் கோயில் பணியாளர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டது. கோயில் செலவினங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. கோயிலில் நிலையாகப் பணிபுரிந்தவர்களுக்கு ஊழிய மானியமாக நிலங்கள் கொடுக்கப்பட்டன. கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஊர், தேவதானம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டது. சமண, பௌத்த கோயில்களுக்குத் தரப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் எனப்பட்டது. பிற்காலத்தில் இசுலாமியர் வழிபாட்டிற்கு அளிக்கப்பட்ட நிலக்கொடையும் பள்ளிச்சந்தம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. பெருமாள் கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் திருவிடையாட்டம் எனப் பெயர் பெற்றது.கோயிலுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட வெள்ளான்வகை ஊர்கள் நல்லூர் எனப்பட்டன. கி.பி.11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் ஏராளமான நல்லூர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. இது இந்நூற்றாண்டுகளில் கோயில்கள் பெரும் நிலவுடைமை நிறுவனமாக மாறியதைக் காட்டுகிறது.

கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் அவற்றின் பயன்பாட்டிற்குத் தக்க முறையில் பல பின்னொட்டுப் பெயர்களோடு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவை புறம், விருத்தி, போகம், கட்டளை என்று பலவாறாக அழைக்கப்பட்டன. கல்வெட்டுகளில் அர்ச்சனா போகம், தேவதான பணிசெய்விருத்தி, வழிபாட்டுப்புறம், ஒழுக்கவிப்புறம், அவிப்புறம், உண்ணாழி கைப்புறம், மெழுக்குப்புறம், புதுக்குப்புறம், நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம், செங்கழு நீர்ப்புறம், சந்திப்புறம், தட்டளிப்புறம், திருச் செண்டைப்புறம், நெய்புறம், திருவிளக்கு நெய்ப்புறம், திருப்பணிப்புறம், திருமடைப் பள்ளிப்புறம், அடுக்களைப்புறம், அக்கிரகாரப்புறம், திருப்பா வாடைப்புறம், அல் அமுதுப்புறம், திருவமுதுப்புறம், திருப்போனகப்புறம், அம்மாவாசைப்புறம், அர்த்தசாமிப்புறம், திருஞானப்புறம், திருமஞ்சனப்புறம், திருமாலைப்புறம், திருப்பள்ளியெழுச்சிப்புறம், திருவாய் மொழிப்புறம், உடுக்கைப்புறம் என்று பல வகையான நிலக்கொடைகள் குறிப்பிடப்படுகின்றன.

கோயில்கள் ஏராளமான நிலங்களைப் பெற்று விளங்கியமையால் பலர் கோயில் நிலங்களைக் குத்தகை எடுத்துக்கொண்டு தங்கள் வாழ்வையும் வளப்படுத்திக் கொண்டனர். கோயிலுக்குச் சேர வேண்டிய நெல்லை ஆண்டுதோறும் கொண்டு வந்து கொடுத்தமை பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் வருகின்றன. சிலவேளைகளில் வரி செலுத்தாதவர்களின் நிலங்கள் ஏலம் விடப்பட்டு அதன் விலைப்பொருள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. கோயில் நிர்வாகத்தினர்

அறக்கொடைகள் மூலம் வந்த பொன்னை வட்டிக்கு விட்டு அவற்றின் மூலம் கோயில் காரியங்களைச் செய்தனர். ஊரின் உடனடித் தேவைகளுக்குக் கோயில் நிர்வாகம் உதவி செய்து சமூகத் தொண்டும் புரிந்துள்ளது. இளையான்குடி ஊரார் போசளப் படையெடுப்பின்போது அவர்களுக்கு வேண்டிய பொருளைத் தரமுடியாது தவித்த வேளையில் அவ்வூர்க் கோயில் நிர்வாகமும் உதவியது. கோயில் பண்டாரத்தில் இருந்த ஆபரணங்கள் விற்கப்பட்டுப் போசளர்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது என்பதை இளையாங்குடி இராசேந்திரசோழீசுவரர் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.

கோயிலும் கலையும்

கோயிலில் நாள்தோறும் மற்றும் திருநாட்களின் போதும் ஆடலும், பாடலும் நடைபெற்றன. சாக்கைக்கூத்து, சாந்திக்கூத்து, தமிழகக்கூத்து, ஆரியக்கூத்து என்று பல்வகையான கூத்துகள் நடத்தப்பெற்றன. பல்லவர்காலத்திலிருந்து கோயில்களில் தேவரடியார், பதியிலார், தளிச்சேரிப்பெண்டுகள் என்று அழைக்கப்பட்ட நாட்டியப்பெண்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். தலைக் கோலிப்பட்டம் பெற்ற திறமை வாய்ந்த ஆடல் மகளிர் அரசன் காணும் வகையில் கோயில் மண்டபங்களில் தங்களது நாட்டியத்தை அரங் கேற்றினர். இவர்களுக்கு நாட்டியப்பயிற்சி அளிப்பதற்கும் அவர்களது நாட்டியத்தை அரங்கேற்று வதற்கும் நட்டுவான்கள் கோயில்களில் இருந்தனர். இவர்களுக்குத் துணையாக உவச்சர்கள், தளி கொட்டுவான், தட்டளிகொட்டிகள் என்று அழைக்கப் பட்ட இசைவாணர்கள் கோயில் பணியில் அமர்த்தப் பட்டனர். இவர்களில் குழல், வீணை, உடுக்கை என்று பலவகை வாத்தியக்கருவிகளை வாசிப்போரும் இடம் பெற்றனர்.

திருவொற்றியூர்க் கோயிலில் இராசராசன் மண்டபத்தில் உறவாக்கின தலைக்கோலி என்பவள் மூன்றாம் இராசராசன் முன்பாக அகமார்க்கப் பாடலைப் பாடினாள். தஞ்சைக் கோயிலில் இராஜ ராஜேசுவர நாடகம் என்றநாடகம் சாந்திக்கூத்தன் திருபாலன் திருமுதுகுன்றனால் ஆடிக் காட்டப்பட்டுள்ளது. திருப்பாதிரிப்புலியூர்க் கல்வெட்டில் பூம்புலியூர் நாடகம் குறிப்பிடப்படுகிறது,

சிவன்கோயில்களில் தேவாரப்பாடல்களும் பெருமாள் கோயில்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் இசையுடன் பாடப்பட்டன. தேவாரப்பாடல்கள் திருப்பதியம் என்ற பெயரில் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றன. இவற்றைப் பாடுவோர் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் எனப்பட்டனர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருவாமாத்தூர்க் கோயிலில் இப்பணியில் பார்வையற்றவர்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவர்களுக்குத் துணையாகப் பணிசெய்ய அமர்த்தப்பட்டவர்கள் கண்காட்டுவார் என்று அழைக்கப்பட்டனர். திருப்பதியம் பாடுவதற் கென்று அமைந்த இடம் திருக்கைகொட்டி எனப்பட்டது. வைணவர்கள் கோயில்களில் திருவாய்மொழியும், திருப்பாவையும் குறிப்பிடத்தக்க இடம் பெற்றன.

கோயிலும் கல்வியும்

புராணம், இதிகாசம், வேதம் தத்துவம் ஆகியவற்றைப் படித்து விளக்கம் செய்யும் இடமாகக் கோயில்கள் இருந்தன என்பதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. இராமாயணம், பாரதம் படிப்பதற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் இராமாயணவிருத்தி, பாரதவிருத்தி எனப்பட்டன. முற்காலச்சோழர் கல்வெட்டுகளில் வேதம் படிப்பதற்காக வேதப்பிராமணர் அமர்த்தப்பட்டனர் என்ற செய்தி உள்ளது. இதற்காக அளிக்கப்பட்ட நிலக் கொடைகள் வேதவிருத்தி, அத்தியானுவிருத்தி, கிடைவிருத்தி எனப்பட்டன. ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயிலிலுள்ள முதற்பராந்தகசோழனின் கல்வெட்டு வேதம் ஒத ஐந்து பிராமணர்கள் அமர்த்தப்பட்டு அவர்கள் உணவிற்காக நிலமளிக்கப்பட்டதைக் கூறுகிறது. திருக்கோட்டியூர்ச் சிவன் கோயிலில் 'பிரபாகரம்' விளக்கம் செய்ய நிலக்கொடை அளிக்கப்பட்டது. சைவ நெறி நூல்கள் சிவதர்மம், திருஞானம் என்ற பெயரில் சிவன் கோயில்களில் படித்து விளக்கமளிக்கப்பட்டன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பல கோயில்களில் சரஸ்வதிபண்டாரம் என்ற பெயரில் நூலகங்கள் இருந்துள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாரத்தில் சரஸ்வதி, வேதவியாசர், அயக்கிரீவன் ஆகியோர்க்கும் திருமேனிகள் செய்விக்கப்பட்டு வழிபடப்பட்டன. சேரன்மாதேவியில் துவாராபதியப்பன் கோயிலில் இருந்த சரஸ்வதி பண்டாரத்துக்கு இரண்டு மா நிலம் அளிக்கப் பட்டுள்ளது. பதிமூன்றாம் நூற்றாண்டில் சிதம்பரம் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாராம் குறித்து விரிவான செய்திகளைப் பிற்காலப்பாண்டியரின் கல்

வெட்டு ஒன்று தருகிறது. இந்நூலகத்தில் இருந்த புத்தகங்களைப் பார்க்கவும் எழுதவும் அவிழ்த்து வாசித்துக்காட்டவும் திவ்விய ஆகமத்தை வாசிப்பிக்கவும், புராணம், சோதிடம் படிக்கவும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்நூலகத்தில் கிரந்தத்தில் எழுதப்பட்ட வடமொழிநூல்களோடு தமிழ் ஏடுகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இச்சரஸ்வதி பண்டாராம் மூன்றாம் குலோத்துங்கசோழனின் குருவான சோமேஸ்வரர் என்ற சுவாமிதேவரால் ஏற்படுத்தப்பட்டது. இவர் எழுதிய புத்தகங்களையும் இவரது சித்தாந்த இரத்தினாகரம் என்ற நூலையும் ஆராய்வதற்குப் பணியாளர் இங்கு நியமிக்கப்பட்டனர். இங்கு முன்பு எழுதி வைக்கப்பட்ட பழமையான ஏடுகளைப் புதியதாகப் படியெடுக்கவும் புதிய நூல்களை ஏடுகளில் எழுதிவைக்கவும் செல்லரித்துப் போன ஏடுகளைத் திரும்ப எழுதவும் பணியாளர்கள் இருந்தனர். மேலும் சிதம்பரம் கோயிலில் இருந்த விக்கிரம சோழன் திருக்கைக்கொட்டிமில் வடமொழியிலும் தமிழிலும் இருந்த நூல்களைத் தேசாந்திரிகளுக்கும் வேண்டுவோர்க்கும் எழுதிக் கொடுக்கவும் ஒக்கப்படிக்கவும் பணியாளர் நியமிக்கப்பட்டனர். சிதம்பரம் கோயிலில் சோழர்காலத்தில் ஏற்படுத்திய இந்நூலகத்தைச் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251–1271) ஆதரவுதந்து அங்கிருந்த புலவர்களுக்கும் பணியாளர்களுக்கும் பல நிலக்கொடைகளை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கோயில்களில் பாலபாடக் கல்வியும் கற்றுத்தரப்பட்டது. மேலநெட்டூர் சிவன்கோயில் சிவப்பிராமணர்களுக்கு ஆகமங்கள் கற்றுக்கொடுக்க ஆகமவிருத்தி என்ற பெயரில் நிலமளிக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சார்ந்த மடங்களும் ஏராளமான ஏடுகளைச் சேர்த்து வைத்து வடமொழிக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் ஆதரவளித்துள்ளன.

கோயில் சுற்றாலைகள், மண்டபங்கள் ஆகியவை கல்விக்கூடமாகவும், கல்லூரிகளாகவும் அக்காலத்தில் விளங்கின. கி.பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து, கோயில்களில் கல்விச் சாலைகள் இருந்தமை பற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன. முதல் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் இருந்த கல்லூரியில் 340 மாணவர்கள் படித்தனர். இவர்களில் 270 மாணவர்கள் பொதுக்கல்வியும் 70 மாணவர்கள் சிறப்புக் கல்வியும் பயின்றனர். இவர்களுக்காக 14 ஆசிரியர்கள் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு ரூபாவதார இலக்கணம், வேதங்கள், சூத்திரங்கள், பிரபாகரமீமாமிசை, வேதாந்தம் முதலியவை தொடர்பாக வடமொழிக் கல்வி அளிக்கப்பட்டது. இது போன்ற கல்லூரி புதுச்சேரிக்கு அருகிலுள்ள திரிபுவனியில் இருந்தது. இங்கு 240 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு சத்யோஜாத சூத்திரங்கள், மனுசாஸ்திரம், வைகானச சாஸ்திரம், பாரதம், இராமாயணம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. திருமுக்கூடலில் இருந்த சிறிய வடமொழிக் கல்லூரியில் 40 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் இருந்தனர். பாகூரில் இருந்த வடமொழிக் கல்லூரிகளில் 190 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் இருந்தனர். திருவாவடுதுறையில் இருந்த கல்விக்கூடத்தில் வடமொழிக் கல்வியோடு மருத்துவக் கல்வியும் அளிக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூரில் இருந்த வியாகரண தியான மண்டபம் வியாகரணப் பள்ளிக்கூடமாக விளங்கியுள்ளது. மேற்கண்ட செய்திகள் சோழர்காலத்தில் வடமொழிக் கல்விக்கு அளித்த சிறப்பை உணர்த்துகின்றன. ஆனால் தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றிற்குக் கல்விச்சாலைகள் கோயில்களில் இருந்ததாக இதுவரை கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கவில்லை.

கோயிலும் சமூகமும்

கோயில் இடைக்காலச் சமூகத்தோடு நெருங்கிய உறவுடைய சமூக மையமாகத் திகழ்ந்தது. முக்கிய சமூக நிகழ்வுகள் கோயிலைச் சார்ந்து நடைபெற்றன. சமூகத்தில் நடைபெற்ற வழக்குகளில் முடிவில் வழங்கப் பட்ட தண்டனைகளில் சில கோயிலுக்குத் திருவிளக்கு எரிக்கும் பரிகாரமாகவே அமைந்தன. சோழர்காலத்தில் எலவானாசூர் என்ற ஊரில் தாய் ஒருத்தி தன்னுடைய குழந்தை ஒன்றின் மீது அரிசினத்தால் எறிந்த அரிமணங்கோல் தவறாக அடுத்தவர் குழந்தைமேல் பட்டுக் காயமுற்றது. இருபது நாட்கள் கழித்து அக்குழந்தை இறந்து போனது. இதனால் எலவானாசூர்க் கோயிலில் கூடிய நாட்டவையினர் அப்பெண்ணின் செயல் 'கைப்பிழைபா' டெனக் கருதி அவளைக் கோயிலுக்கு ஒரு திருநந்தாவிளக்கு எரித்துவர வேண்டும் என்று கட்டளையிட்டனர். அவளுடைய கணவனைக் கோயில் விமானப் பகுதியில் முப்பத்திரண்டு விளக்குகள் வைக்க வேண்டும் என்று

தீர்ப்பு வழங்கினர். கி.பி. பதினோராம் நூற்றாண்டில் ஜம்பை என்ற ஊரில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியாத பெண்ணை அதிகாரிகள் துன்புறுத்தினர். அதனால் மனமுடைந்து நஞ்சு குடித்து இறந்துபோன பெண்ணின் பழிதீரக் கோயிலில் திருவிளக்கு எரித்தனர். ஒருவரோடு ஒருவர் போரிட்டு அதில் ஒருவர் இறந்துபோன வழக்குகளின் தன்மை கருதி, கொலையாளிகளுக்குக் கோயிலில் திருவிளக்கு எரித்துவரும் பரிகாரமே தண்டனையாக அக்காலத்தில் தரப்பட்டுள்ளது. நோயுற்றவரின் துன்பத்தைப் போக்கும் மருத்துவச் சாலைகள் கோயில் வளாகத்தில் இருந்துள்ளன. கோயிலில் விழாக்காலங்களிலும் நாள்தோறும் வெளியூரிலிருந்து வந்த தேசாந்திரி களுக்கும், பயணிகளுக்கும் உணவு வழங்கப்பட்டது. இது இடைக்காலத்தில் கோயில்கள் சமூகத்தின் அறச்சாலைகளாக விளங்கின என்பதைக் காட்டுகிறது. இச்செய்திகள் தொடர்பாகப் பல கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மதுராந்தக வட்டம் திருமுக்கூடலில் கோயில் வருவாயிலிருந்து மருத்துவச் சாலை ஒன்றும் நடத்தப் பெற்றிருக்கிறது. இதில் மருந்துகள் அளிக்கும் மருத்துவர், அறுவைச் சிகிச்சை செய்யும் சல்லியக் கிரியை பண்ணுவான், அறுவைத் தொழில் செய்யும் நாவிதர், மருத்துவப் பணிமகளிர், மருந்து கொணர்பவர் ஆகியோர் இருந்தனர். வீரசோழன் ஆதுலர் சாலை என்று அழைக்கப்பட்ட இம்மருத்துவமனையில் ஓராண்டிற்குத் தேவையான பதினெட்டு வகையான மருந்துகள் இருந்துள்ளதை வீரராசேந்திர சோழனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. தஞ்சையில் இருந்த சுந்தரசோழ விண்ணகரில் (பெருமாள் கோயில்) இராசராசனின் தமக்கையான குந்தவை நாச்சியார் "சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை" என்ற பெயரில் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தியுள்ளார். திருப்புகலூர், திருவாவடுதுறை, கடத்தூர், கூகூர், கீரகவூர் முதலிய இடங்களில் மருத்துவச் சாலைகள் இருந்தமை பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பஞ்சமும் வெள்ளமும் ஏற்பட்ட காலத்தில் கோயில்கள் மக்களுக்கு ஆதரவளித்துள்ளன. இவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து கடன் வாங்கி உயிர் பிழைத்துள்ளனர். ஆலங்குடி, எறும்பூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் இதனைத் தெரிவிக்கின்றன. ஆலங்குடி மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து 1101 கழஞ்சு பொன்னையும் 464 பலம் வெள்ளிப் பாத்திரங்களையும் கடனாகப் பெற்றுப் பஞ்சத்தைச் சமாளித்தனர். தேசாரிந்திரிகளாய் வந்தவர்களுக்கும், இறைவனது அடியவர்களுக்கும், சிவயோகிகளுக்கும், நாள்தோறும் பூசையின் முடிவிலும், திருவிழாக் காலங்களிலும் குறிப்பிட்ட அளவுள்ள உணவு சட்டியில் இட்டு வழங்கப்படும் வழக்கம் தமிழ்நாட்டுக் கோயில்களில் பழங்காலத்தில் இருந்துள்ளது. இதனைச் சட்டிச்சோறு என்று திருவண்ணாமலை, குத்தாலம், ஆத்தூர், பேரூர் போன்ற பல இடங்களில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

முடிவு

இடைக்காலத் தமிழ்நாட்டுச் சமூகத்தின் கருப்--பொருளாக மையமாகக் கோயில்கள் திகழ்ந்துள்ளன என்பதை மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன. அரசன் மற்றும் மக்களின் ஆவண--மான கல்வெட்டுகளில் தொண்ணூறு விழுக்காடு கோயில்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் அரசியல், சமுதாயம் இரண்டிலும் கோயிலுக்கு இருந்த மதிப்பைப் புரிந்து கொள்ளமுடிகிறது. அரசு ஊரவையோடு இயைந்து கோயிலுக்கு ஆதரவளித்தது. அனைத்துத் தரப்பினரும் சமூகமதிப்பைப் பெற்ற கோயில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். கோயில் பணிகள் மூலம் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினர். கோயில் கல்வெட்டுகள், கோயிலின் உருவாக்கம், அமைப்பு, நிர்வாகம், வழிபாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், நாகரிகம், பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் உறுதுணை புரிகின்றன. கோயில்கள் கலைகள் வளர்த்த கலைக் கூடமாகவும், இருப்பிடம், உணவு, மருத்துவம், கல்வி முதலியவற்றைத் தந்த அறச்சாலையாகவும் இருந்தன. இடைக்காலச் சமூகம் கோயிலோடு பிரிக்கமுடியாத உறவுடையதாக விளங்கியது என்பதையும் கல் வெட்டுகள் உணர்த்துகின்றன.

உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா?



முனைவர். இரா. மோகன்,
மதுரை.

பரந்த உரைப்பரப்பையும் நுண்ணிய உரை ஆழத்தையும் கற்கும் அறிஞர்கள், 'தமிழ் உரையாசிரியர்கள் திண்ணிய, நெறிப்பட்ட திறனாய்வுக் கொள்கைகளை - அடிப்படைக் கொள்கைகளை - வேர்க் கொள்கைகளை உள்ளத்தில் உருவாக்கி, உறுதியாக்கி, உரையை ஊன்றி உள்ளனர்' என அறிவார்கள்.

- கா. மீனாட்சி சுந்தரம்
- (பன்மையில் ஒருமை, ப.63)

மேலை இலக்கிய உலகில் திறனாய்வாளர் (Critic) உண்டு; 'உரையாசிரியர்' (Commentator) இல்லை. தமிழ் மொழியில் உரை எழுதுவது என்பது ஒரு தனித் துறையாகவே வளர்ந்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர். 'தமிழர் பொற்காலம்' எனச் சிறப்பிக்கப்படும் பிற்காலச் சோழர் காலத்தில் - கி.பி. 11 முதல் 14 வரையிலான காலகட்டத்தில் - தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தோன்றியவர்களாக இவ்வுரையாசிரியர்கள் விளங்குகின்றனர். நூலாசிரியருடைய உள்ளப் பாங்கினை உற்று நோக்கி உணர்ந்து, அவரவர் பாடிய நூற்பாக்களுக்கும் பாடல்களுக்கும் ஏற்ற பெற்றி அறிந்து, உரை கண்டு நின்ற இவ்வுரையாசிரியர்களுக்குத் தமிழ் கூறு நல்லுலகம் என்றென்றும் கடமைப்பட்டதாகும். இவ்வுரையாசிரியர்கள் இலரேல், தமிழ் உரைநடை இலக்கியம் இன்று இருக்கும் வளர்ச்சி நிலையில் இருந்திராது என்பதையும் வரலாற்று உணர்வுடையோர் நன்கு அறிவர். அறிஞர் வ.சுப. மாணிக்கம் கூறுவது போல், 'இத்தமிழ் கூறு நல்லுலகத்தில் உரையாசிரியர்களின் தொண்டு இந்திய விடுதலைத் தொண்டர்களின் புகழ் போலப் பரந்து விளங்கும்.' (தொல்காப்பியக் கடல், ப.296). இக்கட்டுரை திறனாய்வுத் துறைக்கு உரையாசிரியர்கள் வழங்கியுள்ள பங்களிப்பினைக் குறித்து ஆராய முற்படுகின்றது.

பாராட்டு முறைத் திறனாய்வு

மூல நூலாசிரியர்களின் மேல் உரையாசிரியர்களுக்கு அளவற்ற மதிப்பு உண்டு. நூலாசிரியர்களை நன்கு மதித்து, மிகுந்த பற்றோடு உரை எழுதும் பாங்கினை உரையாசிரியர்களிடம் சிறப்பாகக் காணலாம். இப்பாங்கிற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. அறிஞர்களின் முன்னிலையில் அரங்கேறி அனைவரது ஏற்பினையும் போற்றுதலையும் பெற்ற நூல்களைப் பின்னர்க் குறை கூறுதல் என்பது மரபன்று. அந் நூல்களின் சிறப்புக்களை எல்லாம் ஒல்லும் வகையான் எடுத்துக்காட்டுவதே அடுத்துச் செய்யக் கூடியது. இப்பணியையே உரையாசிரியர்கள் திறம்பட ஆற்றினர். நூலாசிரியரின் கருத்து குற்றம் உடையது போலத் தோன்றினும் - கருத்து வேறுபாட்டிற்கு உரியதாகவே இருப்பினும் உரையாசிரியர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; எப்படியேனும் அமைதி கூறவே முயல்வர். 'எவரும் திறனாய்வுக்கு உட்பட்டவர்' என்பது பொதுவிதி. எனினும் இதற்கு ஓர் விலக்குண்டு எனத் தமிழ் நூல்கள் புலப்படுத்துகின்றன. மூல நூலாசிரியன் கருத்தை விளக்கிக் காட்டுவதும், அது தகாததுபோல் ஒருகால் தமக்குப்பட்டாலும் அங்ஙனம் கூற முனையாது தக்கதாக இசைத்துப் போற்றுவதும் உரையாசிரியர்களின் பண்புகளாம்' என்பர் அறிஞர் வ.சுப. மாணிக்கம். (தொல்காப்பியக் கடல்,ப.298)

பேராசிரியர், தொல்காப்பியரை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவ'னாக (பொருள். நூ.649) மதிக்கிறார். இதனை 'நண்டிற்கு மூக்குண்டோ வெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்' (பொருள். நூ.586, உரை) என வரும் அவரது உரைப்பகுதியால் உணரலாம். நண்டிற்கு மூக்கு உண்டா, இல்லையா என்பது பற்றித் தெரியாது; அது பற்றிக் கவலையும் இல்லை. தொல்காப்பியர் 'உண்டு' என்று கூறி இருக்கிறார் அல்லவா, அதனால், 'நண்டிற்கு மூக்கு உண்டு' என்று எழுதவேண்டும் என்கிறார் என்றால், பேராசிரியர், தொல்காப்பியரை எந்த அளவு மதித்திருக்க வேண்டும்!

'எல்' என்பது, 'இலங்குதல்' என்ற பொருளுடைய ஓர் உரிச்சொல்; ஆயின், தொல்காப்பியர் அதனை இடைச்சொல்லாகக் கருதி இடையியலில் அதற்கு இலக்கணம் கூறியுள்ளார். தொல்காப்பியர் அங்ஙனம் ஓதினமையின், 'எல்' என்பதை இடைச்சொல் என்றே கொள்கிறார் சேனாவரையர். "எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து. ஆயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல் என்று கோடும்" என்பது அவரது உரைக்குறிப்பு (சொல். நூ.269, உரை). சேனாவரையர், தொல்காப்பியர் மேல் வைத்திருக்கும் பெருமதிப்பினை இக் குறிப்பு நன்கு உணர்த்துகின்றது அன்றோ?

'தெய்வப் புலமைத் திருவள்ளுவர்' என்றும், 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து, எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு' என்றும் பரிமேலழகர், திருவள்ளுவரைப் போற்றியுரைப்பார் (குறள் 322, உரை). 'இக் காப்பியஞ் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேர முனி' என்று அடியார்க்கு நல்லார், இளங்கோவடிகளைப் புகழ்ந்து எழுதுவார். இங்ஙனம் உரையாசிரியர்களின் ஆசிரியப் பற்றுக்குச் சான்றுகள் பலவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

இலக்கியத் திறனாய்வு என்ற நோக்கில் உரையாசிரியர்களை அணுகும்போது ஒன்றை உணரமுடிகின்றது. "தமிழ் உரையாசிரியர்களைப் பொறுத்த வரையில் அனைவருமே மூல இலக்கியங்களைத் தொழுதற்குரிய உயர் பொருளாகவே கருதியிருந்தனர் எனலாம். அவர்கள் தம் உரையில் நல்லனவற்றையே கண்டு சொல்கின்றனர்; ஆராய்கின்றனர். இலக்கிய ஆசிரியரிடம் அவர்கள் கொண்ட ஈடுபாடு மிகப் பெரியது. நூலாசிரியர்களையோ அவர்களின் இலக்கியப் படைப்பையோ ஒருகாலும் குறைகூறிச் சொல்லிற்றிலர். உரையாசிரியர்கள் கண்டதெல்லாம் பசுமையான கருத்துக்களே. பாராட்டும் திறனாய்வு (Appreciative Criticism), நடுநிலைத் திறனாய்வு (Judicial Criticism), பழிக்கும் திறனாய்வு (Destructive Criticism) என்ற மூன்றுவகைத் திறனாய்வில் உரையாசிரியர்கள் 'பாராட்டும் திறனாய்' வையே மேற்கொண்டனர்" என்பர் அறிஞர் (இரா. குமரவேலன், 'இலக்கிய உரையாசிரியர்கள்', தமிழ் இலக்கியக் கொள்கை - ஓர் அறிமுகம், தொகுதி 1, பக். 345-346).

இங்ஙனம் மூல நூலாசிரியரைத் திறனாய்வுக்கு உட்படுத்தாத உரையாசிரியர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் திறனாய்வு செய்து கொள்ளத் தவறுவதில்லை; கருத்து மாறுபாடும் வேறுபாடும் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளத் தயங்குவதில்லை.

உரையாசிரியர்களின் மதிப்பீட்டு முறைகள்

நூலின் தரத்தையும் திறத்தையும் மதிப்பிடும் முறையை ஆங்கிலத்தில் 'Criticism' என்பர். இம் மதிப்பீட்டு முறை மேலைநாட்டில் பதினைந்தாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றது. நமது நாட்டில் அதனினும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அம்முறை தலைதூக்கி நிற்பதைக் காணமுடிகிறது. கி.பி. பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பண்டைய உரையாசிரியர்கள் இத்தகைய மதிப்பீட்டு முறையில் மிகவும் மேம்பட்டு விளங்கினர். அன்னோர், பயில்வோர்க்குத் தத்தம் கருத்துக்களை வடிகட்டி அளித்தும், பல்வேறு கருத்துக்களுள் துணிவான கருத்துக்களைக் கூர்ந்தறியும் நெறிமுறைகளைச் சுட்டிக் காட்டியும் மதிப்பீட்டுக் கோட்பாடுகளை (Principles of Criticism) உலகறிந்து உவக்கச் செய்தனர்.

'உரையாசிரியர்களின் மதிப்பீட்டு முறைகள் பல திறப்பட்டன. ஆசிரியர் பேராசிரியர் அழகொழுக மதிப்புரைப்பர். பரிமேலழகர் அமயம் நோக்கி நயந்தும் இகழ்ந்தும் கூறுவர். சேனாவரையர் பணிவும் தருக்க முறையும் காட்டுவர்... முற்கால உரையாசிரியர்களுள் கருத்துக்களைச் சீர்தூக்கும் மதிப்பாளரில் (Critics) நச்சினார்க்கினியர் தலைசிறந்தவர்... பிற்காலத்தவருள் அவஞானம் போக்கும் சிவஞான முனிவர் ஒருவரே மதிப்பாளர் உலகில் உச்சநிலை அடைந்தவராவர். சிலர் ஏனையோர் கருத்தை மறுத்துத் தம் கருத்தையே

நிலைநாட்டுவதில் வல்லவர். இவர் மதிப்புரைக்கும் நடைத்திறம் பாராட்டற்குரியதாயினும் அது பெரிதும் கடுசொற்களையுடையது... சிவஞான முனிவருக்கு அடுத்த நிலையில் உள்ளவரும், உரையாசிரியப் புலவருள் முதல்வரும், பல்லாவரம் மறைமலை யடிகளாவர். நூலாசிரியர் உலகிலும், ஆராய்ச்சி யுரையாசிரியர் உலகிலும் தூய தனித்தமிழ் நடையில் கட்டுரைக்கும் புகழாளர் மறைமலையடிகளார் ஒருவரேயாவர்' என வி.நா. மருதாசலக் கவுண்டர் தம் 'புலமை' நூலில் உரையாசிரியர்களின் மதிப்பீட்டு முறைகளைக் குறித்து விரிவாக எழுதிச் செல்கின்றார் (பக். 215-216). அவர், பண்டைய உரையா சிரியர்களைச் சிறந்த திறனாய்வாளர்களாக மதிக்கின்றார்; அவர்களது உரைகளில் திறனாய்வுக் கூறுகளையும் கோட்பாடுகளையும் கண்டு போற்றுகின்றார்.

இனி, பண்டைய உரையாசிரியர்களின் மதிப்பீட்டுத் திறத்தினைப் புலப்படுத்தும் ஒரிரு சான்றுகளைக் காண்போம். சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவன் கோவலன்; தலைவி கண்ணகி. இளங்கோவடிகள் 'மங்கல வாழ்த்துப் பாட'லில் பன்னிரண்டு வயதுடைய கண்ணகியை முதலில் அறிமுகம் செய்து, பிறகு பதினாறு வயதுடைய கோவலனை அறிமுகப் படுத்துகின்றார். தலைவனான கோவலனை விடுத்து, தலைவியான கண்ணகியை இளங்கோவடிகள் தம் காப்பியத்துள் முதலில் அறிமுகப்படுத்துவதன் காரணம் யாது? 'இவளை (கண்ணகியை) முன் கூறிற்று; கதைக்கு நாயகியாதலின்' என்கிறார் அரும்பத வுரையாசிரியர். அடியார்க்குநல்லாரோ இன்னும் ஒரு படி மேலே சென்று கண்ணகியை முற் கூறினார், 'பத்தினியை ஏத்துதல் உட் கோளாகலான்' என்கிறார் (உ.வே. சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப.40). இன்றைய திறனாய்வாளர்களின் போக்கில் பண்டைய உரையாசிரியர்களும் சிந்தித்துப் பார்த்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்னும் அடைக்கலக்காதை வரிக்கு (138), 'இவளடியைப் பூமி தேவியும் கண்டறியாள் என்றது அகம்விட்டுப் புறப்பட்டு அறியாள்' என்றவாறு. இனி, மண்மகள் இவள் மென்மையைத் தானறிந்து நெகிழ்ந்தில ளென்றுமாம். இன்னும் கால் கொப்புளங் கொண்டு நிலத்திற் பாவாமையிற் கூறினாளெனினும் அமையும்' என அடியார்க்குநல்லார் எழுதியுள்ள அரிய உரை விளக்கமும் இவ்வகையில் நினைவு கூரத்தக்கதாகும் (உ.வே. சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப. 406)

'உண்மையான திறனாய்வாளன் இலக்கியத்தை ஊடுருவி நோக்கும் திறனும் அவ்விலக்கியத்தின் நுட்பமான பொருளை ஓர்ந்துணரும் பான்மையும் உடையவன்' என்பர் (தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.15). சிறந்த திறனாய்வாளனின் இவ்விரு பண்புகளும் அடியார்க்குநல்லாரிடம் காணப்படுவதை மேற்காட்டிய சான்றுகளால் உணரலாம்.

பல்துறைப் புலமை

'ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக் கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற காலவறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்கவழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஒடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், நாட்டின் வரலாற்றறிவும், இன்ன பிறவும் இருந்தால்தான், உரையெழுதும்போது நினைவுக்கு வந்தால்தான் பொருளை முரணின்றிக் காணமுடியும்' என்பர் (வ.சுப. மாணிக்கம், சிந்தனைக்களங்கள், ப.313).

இத்தகைய பல்துறை அறிவுக் கூறுகளை எல்லாம் உரையாசிரியர்களிடம் சிறப்பாகக் காண முடிகின்றது. அவர்களது பல்துறைப் புலமை, அவர்கள் நூல்களுக்கு வரையும் உரைகளின் இடையிடையே வெளிப்பட்டி ருக்கக் காணலாம். இனி, உரையாசிரியர்களின் பல்துறைப் புலமையைப் புலப்படுத்தும் ஒரிரு சான்றுகளைக் காண்போம்.

விடைகூறும் வகைகளைக் குறித்து எழுதும்போது, 'வாய் வாளாதிருத்தலும் அதாவது மறுமொழி ஒன்றும் சொல்லாதிருத்தலும் விடையாகும்' என்று அருமையாக மொழிகிறார் தெய்வச்சிலையார். (சொல்.நூ.13) இதனால் எல்லாவற்றுக்கும் மறுமொழி கூறத்தான் வேண்டும் என்பதில்லை என்பது தெளிவாகின்றது. அரசியல் உலகில் செய்தியாளர்கள் கேட்கும் சில சிக்கலான வினாக்களுக்கு அமைச்சர்கள் யாதும்

உரையாது 'கம்' மென இருப்பதைக் காண்கிறோம். வாதிட்டுத் தோற்ற சமணர்களைப் பாண்டியன் கழுவேற்றியபோது திருஞானசம்பந்தர் வாளாவிருந்தனர் என்பர் சேக்கிழார். துணிந்து கூற வேண்டுமிடத்து விடையைத் துணிந்து கூற வேண்டும் எனவும், மழுப்ப வேண்டுங்கால் மழுப்பிவிட வேண்டும் என்றும், சும்மா இருப்பது நல்லது எனின் அப்படியே இருந்து விடுக எனவும், எவ்வகையான வினாவிற்கு எவ்வகையான விடை கூற வேண்டுமோ அங்ஙனம் கூறுவதே விடைநெறி எனவும் தெய்வச்சிலையார் உலகியல் தெளிவோடு எழுதிச் செல்கின்றார்.

சண்டேசுர நாயனார் புராணத்தில் ஓர் இடம். சிறிய பெருந்தகையாரான சண்டேசுரர் சிவபூசை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய தந்தையான எச்சதத்தன், சிவ பூசைக்கு இடையூறு செய்கிறான்; அருச்சனைக்காக வைத்திருந்த திருமஞ்சனக் குடப்பாலினைக் காலினால் இடறிச் சிந்துகிறான். அக் குற்றத்திற்காகத் தந்தையைத் தண்டிக்க எண்ணிய சண்டேசுரர் தம் பக்கத்தில் கிடக்கும் கோலினை எடுக்க, அவர்க்கு முறைமையினால் அதுவே மழுவாயிட, அதுகொண்டு அவனது தாள்களை எறிகின்றார்; இரு தாள்களையும் இழந்த நிலையில் தந்தையும் மண்ணின் மேல் வீழ்கிறான். இக்காட்சியை,

எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூறு
அகற்றும் படையாக
மறிந்த தாதை இருதாளுந் துணித்த மைந்தர்...!

(சண்டேசுர நாயனார் புராணம், பா. 52)

எனப் பாடுவர் சேக்கிழார். இவ் வரிகளுக்கு உரைவிளக்கம் வரையும்போது சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார், 'ஒரு தாளே பாற்குடத்தை இடறவும் இருதாளும் சிதைத்ததென்னை? எனின், 'ஊன்றி நின்ற தாளினது துணைகொண்டே மற்ற ஒரு தாளைத் தூக்கி இடறினானாதலின் குற்றஞ்செய்த தாளினுக்குத் துணை செய்த குற்றத்தினுட்பட்டது ஊன்றி நின்ற காலுமாம். எனவே நீதிநூல் விதிப்படி குற்றஞ்செய்தாலும் அதற்குத் துணை செய்தாலும் ஒருங்கே தண்டிக்கப்படுதல் முறையாமென்க' என நுட்பமாக எழுதிச் செல்கின்றார். சிவக்கவிமணி இங்ஙனம் உரை எழுதுவதற்கு வாய்ப்பாக அமைந்தது அவரது நீதிநூல் அறிவாகும். ஒரு வழக்கறிஞர் என்பதால் அவருக்கு இது முடிந்தது.

இன்றைய பாலியல் வல்லுநர்கள் விரித்தும் விளக்கியும் கூறிவரும் நுட்பமான கருத்துக்களை எல்லாம் நன்கு அறிந்தவர்களாய்ப் பண்டைய உரையாசிரியர்கள் விளங்கினர். பதச்சோறாக ஒரு சான்று:

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான

என்பது கற்பியலில் தலைவனுக்கு உரியதோர் மரபினை உணர்த்தும் நூற்பா (பொருள். நூ.185). தலைவன் பரத்தையிற் பிரிந்திருந்த காலத்துத் தலைவிக்குப் பூப்பு நேரலாம். இச் செய்தியைக் கேள்விப்பட்ட தலைவன் உடனே தன் வீட்டிற்கு வந்துவிட வேண்டும்.; தலைவியை விட்டுப் பிரியாமல் பன்னிரண்டு நாளும் அவளுடன் உறைதல் வேண்டும். 'இதனால் என்ன பயன்?' என்ற வினாவுக்கு இளம்பூரணரின் உரை விளக்கம் தக்க விடையினைத் தருகின்றது. அவ் விளக்கம் வருமாறு. "இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றும் காலம் என்க." இளம்பூரணருக்கு இருந்த பாலியல் அறிவை இப் பகுதியால் உணர முடிகின்றது. இளம்பூரணரை அடியொற்றிப் "பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத்தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்றாம் நாள் தங்கில் அது சில்வாழ்க்கைத்தாகலும் பற்றி முந்நாளும் கூட்டமின்று என்றார். கூட்டமின்றியும் நீங்காதிருத்தலிற் பரத்தையின் பிரிந்தான் எனத் தலைவி நெஞ்சத்துக் கொண்ட வருத்தம் அகலும். அகல வாய்க்குங் கரு மாட்சிமைப்படுமாயிற்று. இது மகப்பேற்றுக் காலத்திற்குரிய நிலைமை கூறிற்று" என நச்சினார்க்கினியரும் மேற்குறித்த நூற்பாவின் உரை விளக்கத்தில் எழுதியிருக்கும் கருத்துக்கள் இவண் மனங்கொளத்தக்கவை ஆகும்.

இன்றைய ஆய்வுலகம் ஒரு துறை அறிவை மட்டும் கொண்டு ஆய்வு மேற்கொள்வதைப் போற்றுவதில்லை. பல துறைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளையே (Inter-disciplinary Research) இன்றைய அறிஞர்கள் போற்றுகின்றனர். இக்கருத்தின் அடிப்படையில் பண்டைய உரையாசிரியர்களை அணுகும் போது, அவர்களிடம் மொழியியல், அறிவியல், உளவியல், சமூகவியல், வரலாற்றியல், சட்டவியல், நாட்டுப்புறவியல் முதலான பல்துறைப் புலமையும் - பன்மொழி அறிவும் - காணப்படுவதை உணர முடிகின்றது.

மூலச் செம்மை நெறி

உரையாசிரியர்களின் பணி, பழைய நூல்களுக்கு உரை கண்டதோடு நின்றுவிடவில்லை. அன்னோர் பழைய நூல்களில் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த இடைச்செருகல்களை ஆராய்ந்து நீக்கினர்; ஏடு எழுதியவரால் நேர்ந்த பிழைகளைக் களைந்தனர்; ஒரு சாரார் திருத்திய பொருந்தாப் பாடங்களை ஆய்ந்து போக்கினர். இங்ஙனம் உரையாசிரியர்கள் தாம் உரை எழுதும் நூலின் மூலச் செய்யுள்கள் பிழையின்றி அமையப் பெரிதும் முயன்றனர். சுருங்கக் கூறின் இன்றைய மூல பாடத் திறனாய்வு (Textual Criticism) நெறியை நன்கு உணர்ந்தவராகப் பண்டைய உரையாசிரியர்கள் விளங்கினர் எனலாம்.

'பாடங்கள் மேலும் பெருகாமல், காலந்தோறும் புகாமல் உரையாசிரியர்கள் தடுத்துவிட்டனர். ஒரு பாடத்தை மூலத்தில் தழுவிக் கொண்டு உரை வரைவர். மாறுபாடங்கள் இருக்குமேல் உரையிடைக் காட்டுவர். நல்ல பாடங்களுக்கும் இது உரையென வரைவர். அல்ல பாடங்களாயின் இப்பாடம் சரியன்று என மறுத்து ஒதுக்குவர். இங்ஙனம் பாடம் கூறுவாரும் உளர் என்று சிற்சில இடங்களில் சுட்டிச் செல்வர். உரையாசிரியர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்குச் செய்த ஒரு பெருந்தொண்டு மூலச் செம்மையாகும்' என்பர் வ.சுப. மாணிக்கம் (கம்பர், ப.19).

மூவாயிரம் ஆண்டுப் பழமையுடைய தொல் காப்பியத்திற்குச் செம்பதிப்பு ஒன்று இருப்பதற்குக் காரணம் இளம்பூரணர் உரையாகும். அகத்திணை இயலில் தலைமகன், தோழி, நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோரது கூற்று நிகழும் இடங்களை உணர்த்தும் நூற்பாக்கள் உள்ளன; ஆயின், தலைமகள் கூற்று நிகழும் இடங்களை உணர்த்தும் நூற்பா அதில் இல்லை. இதன் காரணத்தினை எண்ணிப் பார்த்த இளம்பூரணர், 'தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்' (பொருள். நூ.45) என அகத்திணை இயல் நூற்பா ஒன்றின் உரைவிளக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

பரிமேலழகர் என்ற 'உரை வேந்தர்' தோன்றியிரா விட்டால் திருக்குறள் மூலம் பல மூலங்களாகி இருக்கும். அவர்தம் உரைச்சிறப்பால் இன்று எத்துணை வகை வகையான பதிப்புக்கள் வெளிவரினும் மூலம் ஒன்றாக இருக்கக் காண்கிறோம். இவ்வகையில் பழந்தமிழ் நூல்களுக்கு உரையாசிரியர்கள் ஆற்றியுள்ள தொண்டு மலையினும் மாணப் பெரிது ஆகும்.

நயங்காண் நெறி

நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம் - நூலுள் புதைந்து கிடக்கும் நுண்ணிய நயங்களை எல்லாம் - உரையாசிரியர்களின் உதவியாலேயே உலகம் ஓதி உணர்ந்து இன்புறுகின்றது. உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின், பழம்பெரும் நூல்களாம் கருவூலங்களில் பொதிந்து கிடக்கும் விலை மதிப்பற்ற பொருள்மணிக் குவியல்களை நாம் பெற முடியாமலே போய் இருக்கும். பண்டை உயர் நூல்களின் உண்மைக் கருத்துக்களைத் தம் மதி நுட்பத்தால் கண்டுணர்ந்து உரை வரைந்த ஆசிரியர்களின் பெருமை விதந்தும் வியந்தும் போற்றுதற்குரியதாகும். இதனாலேயே, "உரையாசிரியர்கள், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று உலக மக்களை அறைகூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள்; அறிவுச் செல்வத்தை அள்ளிச் சொரிந்த வள்ளல்கள்; கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்து விட்ட மேலோர்கள்" என மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்களின் சிறப்பினைப் போற்றிக் கூறுவர் (உரையாசிரியர்கள், ப.24). இனி, உரையாசிரியர்கள் உணர்த்தும் அரிய கருத்துக்களுக்கு - நுண்ணிய நயங்களுக்கு - இரு சான்றுகளைக் காணலாம்.

"வண்ணம் பசந்து புலம்புறு காலை
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே"

என்பது தொல்காப்பியப் பொருளியலில் வரும் ஒரு நூற்பா (பொருள். நூ. 202). இந்நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'புணர்ந்த வகையில்' என்னும் தொடருக்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள நயமான விளக்கம் வருமாறு.

"காதும் ஓதியும் முதலியன கூறப்பெறா; கண்ணுந் தோளும் முலையும் போல்வன புணர்க்கப் படுமென்றற்குப் 'புணர்ந்த வகை' யென்றார்."

'தலைவனது பிரிவாற்றாமை காரணமாகத் தலைவியின் கண், தோள் போன்ற உறுப்புக்கள் வாடி வருந்தினவாகப் பாடுவது மரபு. தலைவியின் காது, கூந்தல் முதலிய உறுப்புக்கள் துன்புற்றனவாக எந்தப்

புலவனும் பாடமாட்டான்; அங்ஙனம் பாடுவது மரபும் அன்று' என்னும் அரிய கருத்தினை - இலக்கிய நெறியினை -நச்சினார்க்கினியாரின் மேற்சுட்டிய உரை விளக்கத்தால் அறிகிறோம்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்பது 'நட்பு' அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா (788). இதில் இடம்பெற்றுள்ள 'உடுக்கை இழந்தவன்' என்ற தொடருக்கு, மணக்குடவர் 'உடை சோரா நின்றானுக்கு' என்றும், பரிப்பெருமாள் 'உடையிழந்தவன் கை' என்றும், காலிங்கர் 'உடை நழுவினவன்' என்றும், பரிதியார் 'புடவை சோர்ந்தால்' என்றும் உரைவிளக்கம் தந்துள்ளனர். ஆயின், பரிமேலழகர் இவர்களினின்றும் சற்று வேறுபட்டு நுட்பமாக ஒரு சொல்லைச் சேர்த்து, 'அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி அவ்விளிவரல் களையுமாறு போல, நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்றுதவி அதனைக் களைவதே நட்பாவது' என விளக்கம் தருகின்றார் (திருக்குறள் - உரைக்கொத்து, பொருட்பால், பக். 468-69).

இத்தகைய உரைகள், மூலங்களுக்கு உரைகளே இவை என்னும் நினைவை மறப்பித்து, தாமே பேரிலக்கியங்களோ என்னும் நினைவைப் பயில்வோர் உள்ளத்துள் எழுப்ப வல்லனவாம். ஒரு சில இடங்களை நோக்கின், 'நூலாசிரியர் இத்தகைய நுண்ணுணர்வுடன் பாடினாரா? அன்றி, உரையாசிரியரின் உரை வண்ணம் இத்தகைய ஏற்றத்தைத் தருகின்றதா?' என்று வியக்கத் தோன்றுகின்றது. இங்ஙனம் உரையாசிரியர்கள் தத்தம் உரைகளின் இடையே காட்டியுள்ள சொல் நயங்கள் - அடைமொழி நயங்கள் - தொடர் நயங்கள் - பொருள் நயங்கள் - நிரல் நயங்கள் - எடுத்துக்காட்டு நயங்கள் - கருத்து நயங்கள் - பல்துறை நயங்கள் - வானத்து மீனினும் பலவாகும்.

இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படைகள்

பண்டைய உரையாசிரியர்களைத் தனியொரு இலக்கியக் கோட்பாட்டினை உருவாக்கியவர் களாகவோ - ஓர் இலக்கிய இயக்கத்தினைத் தோற்றுவித்தவர்களாகவோ - முற்ற முழுக்கக் கூற முடியாது; என்றாலும், இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படைகள் அவர்களது உரைகளில் காணப்படுவதை எவரும் மறுக்க முடியாது. 'உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா?' என்று கேட்டால், 'திறனாய்வாளர்களே' என்று ஒரே சொல்லில் அடித்துக் கூற முடியாது; ஆயின், திறனாய்வின் கூறுகள் பண்டைய உரையாசிரியர்களின் உரைகளில் காணப்படுவதை - சிறந்த திறனாய்வாளர்களின் பண்புகள் உரையாசிரியர்களிடம் காணப்படுவதை - எடுத்துக்காட்ட முடியும். சான்றாக, 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்' (பொருள். நூ. 652) என்ற தொடருக்குப் பேராசிரியர் எழுதியுள்ள உரை விளக்கத்தை இங்கே சுட்டிக் காட்டலாம். மொழிபெயர்ப்புக் கலையின் அடிப்படையை உணர்த்தவல்ல அழகிய அவ் விளக்கம் இதோ:

'மொழிபெயர்த்தென்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது... அதர்ப்படவென்பது, நெறிப்படவென்றவாறு; நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழி பெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும்; தொகுத்தும் விரித்தும் தொகை விரிவாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்குமென்பது. மொழிபெயர்த்தெனவே, பொருள் பிறழாமை பெற்றாம்'. பேராசிரியரின் இக்கருத்து விளக்கம், மொழிபெயர்ப்பு ஓர் அரிய கலையாக வளர்ந்துவரும் இந் நூற்றாண்டிலும் ஏற்றுப் போற்றத்தக்க ஒன்றாகும்.

இதேபோல், 'விருந்தே தானும், புதுவது புனைந்த யாப்பின் மேற்றே' (பொருள். நூ. 540) என்னும் செய்யுளியல் நூற்பாவில் வரும் 'புதுவது புனைதல்' என்ற தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள கருத்து விளக்கமும் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியதாகும். 'புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றுவித்தல்' என்பது அவரது உரைக்குறிப்பு. இன்றைய அறிவுலகம் 'தற்படைப்பாற்றல்' (Originality) என்று போற்றுவதனை இளம்பூரணர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, 'ஒருவன் சொன்ன நிழல்வழியின்றித் தானே தோற்றுவித்தல்' என்னும் கருத்தின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

இங்ஙனம் பல்வேறு இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படைகளை உரையாசிரியர்களிடம் பரக்கக் காணலாம். இக்கட்டுரை 'உரையாசிரியர்கள்' புகழ் பேராசிரியர் மு.வை. அரவிந்தனின் கருத்தோடு நிறைவு பெறுவது பொருத்தமாக இருக்கும்.

"உரையாசிரியர்கள் பற்றித் தமிழ் உலகில் விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது... உரைகள் பற்றிய செய்திகள் நிறைய நிறைய உள்ளன. பல புதிய பார்வைகள் - புதிய பக்கங்கள் - கோணங்கள் உள்ளன. ... அவை எல்லாம் வெளிப்பட்டு உரையாசிரியர்கள் பற்றிய சிந்தனை விரிவடைய வேண்டும். அப்போதுதான் தமிழர் இலக்கியக் கொள்கையும் திறனாய்வு முறையும் நல்ல முறையில் வெளிப்படும்; வடிவம் பெறும்!" (மு.வை. அரவிந்தன், நூலாசிரியருக்கு 17-12-1993-இல் எழுதிய மடலிலிருந்து).

வள்ளல் பாண்டித்துரையும் மறைமலையடிகளும்

தேவர் தாம் நிறுவிய தமிழ்ச்சங்கத்தை வளர்க்கும் வகையில் அயராது பணியாற்றினார். தமிழ் வளர்க்கப் பணம் மட்டும் போதுமா? தமிழ்த்தாயர்களாகிய புலவர்களன்றே வேண்டும்? அப்புலவர்களிலும் காலநிலை அறிந்து – புதிய வகையில் தமிழாராய்ச்சி செய்யும் புலவர்கள் வேண்டும்; முற்போக்குக் குணம் படைத்தவர்களாகவும் அவர்களிருத்தல் வேண்டும். இத்தகு புலவர் எங்கிருக்கின்றார் என்று தேடி நின்றார்.

தேவர் தாம் எதிர்பார்த்தபடியான நலங்களெல்லாம் ஒருங்கே கொண்டு திகழும் அடிகளாரை அறிந்தார்; கண்டார்; அளவிலா மகிழ்ச்சி கொண்டார். அடிகளின் அறிவு; ஆற்றல், புலமைகளில் பெரிதும் ஈடுபட்டார். அவர் சொற்பொழிவினைக் கேட்க விரும்பினார்; மதுரைத் தமிழ்ச் சங்கவிழாவில் பேச அடிகளை அழைத்தார். அவரழைப்பை அன்புடன் ஏற்றார்; அடிகள்.

தமிழ் கூறு நல்லுலகு



கவிப்பேரரசு வைரமுத்து,
சென்னை.

'தமிழ் கூறு நல்லுலகு' என்ற இந்தத் தலைப்பு தமிழில் விதைப் பருவத்திலிருந்து, விழுதுப் பருவம் வரை பார்க்கச் சொல்லி என் கண்களைக் கட்டாயப் படுத்துகிறது.

பல நூற்றாண்டுகளின் படைப்பை என் சின்னப் பேனாவின் சில துளி மையால் ஈரப்படுத்திவிட முடியும் என்பது சாத்தியமில்லை.

எனினும் இறந்த காலங்களின் மேல் பறந்து, ஒரு பறவையின் உச்சிப் பார்வையில் இந்தத் தலைப்பைப் பார்த்துவிட ஆசை - ஒரு ராஜாளியின் உயரத்திற்குப் பறக்கவில்லை யெனினும் ஓர் ஈசல் உயரத்திற்குப் பறந்தேனும்.

ஒரு மொழி எத்தனை எழுத்துக்களை உடையது என்பதோ, அல்லது அந்த மொழிக்கான வார்த்தையின் வயது என்ன என்பதோ உலக சபையில் அதற்குச் சிம்மாசனம் வாங்கித் தராது.

ஒரு நிலக்கரி எத்தனை ஆண்டு பூமியில் புதைந்து கிடந்தது என்பதல்ல கேள்வி. அது வைரமாக அடர்த்தி அடைந்திருக்கிறதா என்பதே கேள்வி.

ஒரு மொழி மனிதனின் கருத்துலகத்திற்குச் செலுத்திய காணிக்கை என்ன? மனிதகுல மேம்பாட்டிற்கு அது சேமித்துத் தந்திருக்கும் சேதி என்ன? இவைதாம் ஒரு மொழியை எடைபோட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற துலாக்கோல்கள். நம் தமிழையும் இந்தத் துலாக்கோலில் நிறுத்துப் பார்ப்பதே நீதியும், நேர்மையும் ஆகும்.

சப்தங்களின் எடையைக் கூட நிறுத்துச் சொன்ன தொல்காப்பியம் - மனித மனத்தின் போக்குவரத்திற்குக் கோடு கிழித்துக் கொடுத்த குறள் - மனிதனின் சமுத்திர உணர்ச்சிகளைச் சின்னச் சிப்பிகளில் சிக்க வைத்துக் காட்டிய சங்க இலக்கியம் - மனக்கசடுகளை வடிகட்டிக் கொடுத்த நீதி நூல்கள் என்னும் சல்லடை இலக்கியங்கள் - கவிதைச் சத்து மிகுந்த காப்பியங்கள் - ஆழ்வார்கள் நாயன்மார்களின் ஆனந்த அழுகைகள் - சித்தர்களின் நெருப்புச் சித்தாந்தங்கள் - ஆடம்பரமான பிரபந்தங்கள் - சிருங்காரத்தின் நனைந்த தனிப் பாடல்கள் - பழைய இலக்கியங்களைத் திருகித் திசை திரும்பிய பாரதியின் எழுத்துக்கள் - பாரதிதாசனின் வாள் வார்த்தைகள் - புதிதாய்ப் பிறப்பெடுத்த உரைநடை இலக்கியம் - கண்ணதாசன் - சுரதா என்னும் தனித் தனிப் பள்ளிகள் - பிரபஞ்சப் பசியோடு பேனாப் பிடித்திருக்கும் புதுக் கவிதைக்காரர்கள் - தமிழ் கூறு நல்லுலகின் பரப்பு இது.

தமிழ்ச் சமுத்திரத்தில் திரும்பத் திரும்ப முக்குளித்த பிறகுதான் முத்துக் குளிக்க முடிகிறது.

தமிழ் இலக்கியத்தின் அடிநாதம் என்னவெனில் தனி மனிதனில் ஆரம்பித்துச் சமூகத்தில் சென்று முடிவதுதான்.

தமிழிலக்கியம் தனி மனிதனைச் சுத்திகரிக்கும் ஆக்கப் பணியைத் தன் தோள்மேல் போட்டுத் தொண்டாற்றி வந்திருக்கிறது.

திருவள்ளுவன் கூட ஒரு பெரிய ஜன சமூகத்தை முன்னிலைப்படுத்தித் தன் குறளை ஒப்பிக்கவில்லை.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்."

"ஒருமைக்கண் தாம் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

"சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

இப்படிக் குறளின் ஒவ்வொரு குரலும் தனி ஒருவனை அல்லது தனி ஒருத்தியை முன்னிலைப்படுத்தித்தான் ஒரு ஞானியின் அனுபவக் குரலில் பேசுகிறது.

தன்னல மறுப்பும் - பொதுநலப் பொறுப்பும் தமிழ் கூறு நல்லுலகம் வலியுறுத்தி வந்த நெறிகள்.

தன்னலம் மட்டுமே செங்கோல் செலுத்தி வந்திருக்குமாயின் இந்த உலக உருண்டை என்றோ உடைந்திருக்கும்.

"புகழெனில் உயிரும் கொடுக்குவர் -பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
உண்டா லம்ம இவ்வுலகம்."

வாழ்க்கை என்பது வாழ்வது மட்டும் அன்று, வாழ்விப்பது; சுயநலம் அறுந்துபட்ட மனதில் சூது விளையாது.

நட்பு அறமுடையதாய், காதல் அறமுடையதாய், இல்லறம் நெறியுடைய தாய்,சமூகம் ஆரோக்கிய - -மானதாய்த் திகழ வேண்டுமெனில் தனி மனிதன் தன்னலச் சகதியிலிருந்து வெளியேற வேண்டும்.

ஒரு தேசம் படைகளால் ஆளப்படுதல் ஆகாது. அறத்தினால்தான் ஒரு தேசம் ஆளப்படுதல் வேண்டும். படைகள் என்பவை ஒருநாட்டின் அறம் காக்கும் அரண்கள்! அவ்வளவே.

தமிழன் உலகிற்கு வழங்கிய உன்னதக் கருத்துக் கருத்து இது.

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல் மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்."

-என்று அரசு நெறிக்குக் கோடு கிழித்துக் கொடுத்திருக்கிறான் தமிழன்.

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

என்று இருபாலார் கடமைதனை எல்லை பிரித்துக் காட்டத்தான் அகம், புறம் என்ற அறிவுப் பகுப்பே பிறந்தது.

"அகம் பெண்ணுக்குத் தலைமை தரும்;
புறம் ஆணுக்குத் தலைமை தரும்."

பெண் அகக் கடமைகளை ஏற்றுக் கொண்டாலும் சுவர்களுக்குள்ளே அவள் சுருண்டுவிடவில்லை. புறத்திற்கு அகத்திலிருந்தே அவள் தன் பங்கை அளித்தாள்.

கொக்குச் சிறகைப் போல் நரைத்த தலையுடைய முதியவள் ஒருத்தி தன் மகன் களத்தில், "களிறு பொருது மாண்டான்" என்று கேட்டுக் கண்ணீர் உகுக்கிறாள்.

அவள் உகுத்த கண்ணீர் சுய சோகத்திற்கோ சொட்டியதெனில் - அன்று; "ஈன்ற பொழுதினும் பெரிது உவந்து சிந்திய கண்ணீர்" அது. எனவே அது களிப்புக் கண்ணீர்.

சொந்த மகனை இழந்த துக்கம் அவளைத் தொடக் கூட இல்லை. அழுத கண்ணீர் ஆனந்தக் கண்ணீர் என்பதே அவளது சமூகப் பொறுப்புக்குச் சான்று சொல்கிறது.

அதனால்தான் இன்னொரு தமிழச்சி - "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே"- என்று பாடினாள்.

பதினெண்கீழ்க் கணக்கிலுள்ள நீதி நூல்களெல்லாம் வெறும் உபதேசங்கள் அல்ல. வாழ்க்கையில் வழங்கி வந்த வாய்மொழிச் சட்டங்கள்.

இறந்தவனையும், இருப்பவனையும் பிறப்பவனையும் ஒட்டு மொத்தமாகச் சிந்தித்த சிறப்பு தமிழின் கருத்துலகிற்குக் கனம் சேர்த்திருக்கிறது.

இலக்கியம் படைப்பவன் அல்லது ஒரு சமூகப் பொதுச் சிந்தனையாளன் எல்லோருடைய சிரிப்பையும் தன் உதடுகளால் சிரித்து விடுகிறான். எல்லோருடைய கண்ணீரையும் தன் கண்களால் அழுது விடுகிறான். ஆழ்வார்களும், நாயன்மார்களும் அழுத கதையை நான் அப்படித்தான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவர்களின் அழுகை பொது அழுகை. சமூக மேம்பாட்டிற்கு அவர்கள் ஒரு வெளிச்சத்தை நம்பினார்கள்.

தனி மனிதனின் ஆணவமும், அகந்தையும் வேரோடு கிள்ளி எறியப்பட்டு விட்டால் சமூக மேன்மை சாத்தியமாகும்; அதற்குப் பக்தி மார்க்கமே பாலமாகும்

என்றோர் நம்பிக்கை இருந்தது அவர்களுக்கு. காலம் கட்டிக் கொடுத்த பாலம் அது.

அவர்களின் பாதை பிழையாகக் கூட இருக்கலாம். ஆனால், அவர்களின் பாட்டு நிஜம். அன்பில் அகந்தையைக் கரைத்துவிடு என்ற மெய்யான, மேன்மையான செய்தியின் வெளிப்பாடுதான் பக்திப்பனுவல்கள்.

"வான் கெட்டு
மாருதம் மாய்ந்து
அழல், நீர், மண் கெடினும்
தான் கெட்டலின்றிச்
சலிப் பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உணர்வு கெட்டு என்
உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம்
கொட்டாமோ."

-தேனில் நனைந்த திருவாசகம் இது.

தன்னில் தானைக் கரைத்து விடுதல் என்ற தத்துவம் தமிழ் கூறு நல்லுலகம் புவிக்குக் கொடுத்த புதையல்.

தங்கத் தமிழ், போரை ஓர் அறம் எனவும், அது தவிர்க்க இயலாத தர்மம் எனவும் பேசுகிறது.

குழுவினங்களாய்ப் பிரிந்து வாழ்ந்த சமூக அமைப்பில் -

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவதன்று இவ் வுலகத் தியற்கை"

- என்று பாடுவது பாவப் பட்டியலில் சேராதுதான்.

ஆனால், ஒரு பன்னிரண்டு நூற்றாண்டுப் பரிணாமத்தில் போரே இல்லாத ஒரு புது உலகத்தைக் கம்பனின் கற்பனை கனாக் கண்டிருக்கிறது.

போர் புகழை வளர்க்கும் என்று தினவு கொண்டவன் கனவு காண்கிறான். போர் இன்மையே - அமைதியே புகழை வளர்க்கும் என்ற கருத்து கம்பனிடம் கருக் கொள்கிறது.

"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போரொடுங்கும்; புகழொடுங்காது."

- இந்த வரிகள் இந்த அணுகுண்டு யுகத்தில் ஒவ்வொரு தேசமும் தன் நெற்றியில் ஒட்டிக் கொள்ள வேண்டிய நிஜ வரிகள்.

'உயிரிகளை நேசிக்க உணர்ந்து கொள் மனிதனே' என்று எம் இலக்கியம் உரத்த குரலில் உலகத்திற்கு ஓதுகிறது.

இந்த அணு ஆயுத வளர்ச்சியில் சில நொடிகளில் பூமி உருண்டையைப் பொசுக்கி விட முடியும். சில நிமிட அணுகுண்டு மழையில் மனித குலம் அழுகி விடக்கூடும். சில லட்சம் ஆண்டுகளாகச் சேமிக்கப்பட்ட நாகரிகம் ஒரு தீக்குச்சி உரசப்படும் நேரத்தில் காணாமல் போய்விடும். பிரமிடுகளும் தாஜ்மஹாலும் அகழ்வாராய்ச்சிப் புத்தகங்களின் அத்தியாயங்களாகி விடும்.

இந்த யுகத்தில்தான் மனித நேசம் மலர வேண்டும்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்! - என்றவனும்,

"காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்!" - என்று பாடியவனும்

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"

- என்று குரல் கொடுத்தவனும் உலக சமாதானத்தின் தூதுவர்கள் அல்லவா?

தமிழ் கூறு நல்லுலகம் நினைக்கப்பட வேண்டிய நேரம் இதுதான்.

உலக வல்லரசுகளே! உங்கள் ஆயுதக் கிடங்குகளில், சோதனைச் சாலைகளில், பீரங்கிகளின் பீடங்களில், உங்கள் யுத்தக் கப்பல்களின் முதுகுகளில் எங்கள் திருவள்ளுவனின், கம்பனின், எங்கள் பாரதியின் - பாரதிதாசனின் எழுத்துக்களை மொழி பெயர்த்து எழுதி வையுங்கள்.

இதயத்தைத் தவிர விஞ்ஞானம் எல்லாவற்றையும் வளர்த்துக் கொண்டிருக்கிறது - அந்த விஞ்ஞானத்திற்கு எங்களின் ஈரக் கொள்கைகள் இதயம் வழங்கட்டும்.

விஞ்ஞானத்தின் மேல் மனிதன் சவாரி செய்ய வேண்டும். மனிதனின் மேல் விஞ்ஞானம் சவாரி செய்துவிடக் கூடாது. எங்கள் தமிழ் கூறு நல்லுலகு உலகைப் பார்த்து இதையே ஓதிக் கொண்டிருக்கிறது!

புதினங்களில் காலந்தோறும் பெண்கள் சித்திரிப்பு



முனைவர்.சி. சுந்தரி,
மதுரை.

நம்நாட்டில் கதை சொல்லும் மரபு மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வந்தது. ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயரின் வரவிற்குப் பிறகு ஏற்பட்ட கல்வி முறையினால், இறக்குமதி செய்யப்பட்ட நாவல் என்னும் கதை கூறும் இலக்கிய வடிவத்தினின்று அது மாறுபட்டதாயிருந்தது.

செய்யுள் வடிவத்திலிருந்த காப்பியங்கள் பெறாத வரவேற்பை நாவல்கள் பெற்றன. காப்பியங்கள் நல்ல புலமை உள்ளவர்கள் மட்டுமே புரிந்து கெள்ளக்கூடிய செய்யுள் வடிவிலிருந்தன. அவை கடவுளரையும் மன்னர்களையும் அவர்களுடைய வீரதீரப் பராக்கிரமங்களைப் பற்றியும் பேசின. நாவல்களில் மிகச் சாமானிய மனிதனின் வாழ்க்கைப் போக்கும் அன்றாடப் போராட்டங்களும்கூடச் சித்திரிக்கப்படுவதால் வாசகர் அவர்களைத் தம்மையொத்த மனிதராக எண்ணி நெருங்கிய உறவு பூண்டனர். நாவல்கள் சமகால வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டின.

"காலப்போக்கில் தமிழ்நாவலைப் பாதிக்கும்அளவிற்குத் தமிழக சமூக வாழ்வில் மூன்று பெரும் சக்திகள் தோன்றி வளர்ந்தன. இவற்றில் இரு சக்திகள் இந்தியா முழுவதற்கும் பொதுவானவை. ஒன்று தமிழ் நாட்டிற்கு மட்டும் சிறப்பானது. தமிழ் நாவலைப் பாதித்த இச்சக்திகளில் ஒன்று தேசிய இயக்கம்; இரண்டாவது தொழிலாளர் – உழவர் சமூக விடுதலை இயக்கம். மூன்றாவது சுய மரியாதை இயக்கமும் அதன் கிளைவடிவங்களும்"[1] என்கிறார் எஸ்.தோதாத்ரி. இம்மூன்று இயக்கங்களும் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகத் தோன்றியவை. சமுதாயம் இருக்கும் நிலையின் அடிப்படையில் நாவல் ஆசிரியர்கள், தமக்கெனத் தனிக்கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் வகையில் நாவல் இலக்கியத்தைப் படைத்திருப்பதை அறிய முடிகிறது. இந்நாவல்களில் இடம்பெறும் பெண்களின் நிலை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

விடுதலைக்கு முந்திய நாவல்

விடுதலைக்கு முந்திய நாவல்களில் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் முதன்மை இடம் பெற்ற குடும்பத்தைப் பற்றிச் சொல்லாமல் செல்ல இயலாது. மனிதனின் சமூக வாழ்வென்பது குடும்பத்தினின்றே தொடங்குகிறது. ஒரு சமுதாயத்தின் அச்சாணி 'குடும்பம்' என்பதில் ஐயமில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் நம்பிக்கையையும் பாதுகாப்பையும் நல்கிடும் குடும்ப அமைப்பு ஒரு சமூக நிறுவனமாகும்.

". . . எப்படியோ குடும்பம் ஏதாவது ஒரு வடிவில் எப்போதும் நம்மோடு இருக்கும். மனத்தின் கற்பனைக்கு எட்டிய அளவில் எதிர்காலத்தில் குடும்பம் தொடர்ந்து, உண்மையில் சமூகத்தின் மைய உறுப்பாக (Nuclear Component) விளங்கும்."[2]

குடும்பத்தில் ஓர் அங்கமான பெண் வைக்கப்பட்டுள்ள நிலை சமுதாயத்திலும் பிரதிபலிக்கும்.

"எல்லாச் சமூகங்களிலுமே பெண்ணுக்கும் ஆணுக்கும் தனித்தனி நெறிமுறைகளும் தனித்தனி நிலைகளுமே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எந்தச் சமூகத்திலும் ஆணையும் பெண்ணையும் ஒரே மாதிரியாக நடத்துவதில்லை. ஆணும் பெண்ணும் ஒரே மாதிரிச் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை. ஒரே மாதிரியான நோக்கங்களையும் கொண்டிருப்பதில்லை. குறிக்கோள்களும் பாதைகளும் கூட ஒரே மாதிரியாயிருப்பதில்லை"[3] என்பது சமூகவியலாளர் கருத்து.



நாணிக்கண்புதைத்தல் எனும் ஒருதுறைக்கோவை பாடிய பொன்னாங்கால் அமிர்தகவிராயருக்கு இரகுநாத சேதுபதி பொன்னாலாகிய பழங்களைப் பரிசாக வழங்குதல்.

அல்லி வட்டம்

அ. ஜெயகாண்டீபன்,
மும்பைத் தமிழ்ச்சங்கம்,
மும்பை.


நெல்நிறை நாழி போலும்
நெஞ்சினில் தமிழ்நி றைத்த
பல்துறைச் சான்றோர் சேர்ந்து
பாங்குடன் தமிழை ஆய
வெல்திற ஆற்ற லோடு
விளங்கிடு மாறு கண்ட
தொல்வர லாற்று மாம
துரைத்தமிழ்ச் சங்கம் வாழ்க!

கூண்டினில் கிளியி ருக்கும்
கொஞ்சிடும்; பறந்தி டாது
பாண்டிய மரபு கண்ட
பைந்தமிழ்க் கிளியோ சங்கக்
கூண்டினில் இருந்து கொண்டே
கொஞ்சியே பறக்கும் எங்கும்
ஆண்டுநூ றடைந்த அந்த
அருந்தமிழ்ச் சங்கம் வாழ்க!

பூவினில் அல்லி வட்டம்
பொலினை யூட்டு தல்போல்
நாவினில் இனிமை யூட்டும்
நற்றமிழ் வளர்ச்சி பேணி,
தீவினை அகற்றி, நாட்டின்
தெருவெலாம் தமிழ்மு ழங்க
ஓவிலா துழைத்தார் தம்மை
உளத்தினில் கொள்வோம் என்றும்!

வகுப்புகள் புலவ ருக்கு
வாய்ப்புற நடத்தி நூலாம்
அப்புற இலக்கி யங்கள்
அறிதொறும் ஆய்ந்து நல்ல
தொகுப்புகள் வெளிக்கொ ணர்ந்த
தொண்டுகள் ஆற்றிக் கற்றோர்
உகப்புறு கின்ற வாறே
ஒளிர்ந்திடும் சங்கம் வாழ்க!

மூழ்கிய சங்கம் மீண்டும்
முகிழ்த்திடச் செய்த வள்ளல்
கீழ்கடன் புரிந்தோர்; நட்பாங்
கிழமையின் சிறந்த சான்றோர்
வாழ்கவர் புகழும் நான்காம்
வண்டமிழ்ச் சங்க மாண்பும்
சூழ்கவே தமிழர் நெஞ்சில்
சுடரொளி பரப்பி வாழ்க!



தமிழ்வளர்ச்சிக்குத் தமிழ்க்கல்லூரி, நூல் நிலையம், செந்தமிழ் இதழ் ஆகியவற்றைத் தோற்றுவித்து நின்று நிலவச் செய்தமை.

மதுரையின் தங்கப் பூ

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன்

நூற்றிதழ்த் தாமரை போல்
பூத்தசெந் தமிழே! என்றும்
நாற்றிசைத் தமிழர் காணும்
நம்பிக்கை ஒளியே! எங்கள்
ஆற்றல்சால் புலமை யாளர்
அறிவுக்கு நிதியே! சொல்நீ
நேற்றைக்கு வந்த தாளா?
நெடுங்குடி காக்கும் வாள் நீ!

சங்கங்கள் இருந்த காலம்
கனவென மங்கிப் போக
எங்கள் பாண்டித் துரைமன்
எழுப்பிய நான்காம் சங்கம்
திங்களாய் உதித்த போது
தேன்நிலா வெள்ள மாகப்
பொங்கு செந்தமிழே! என்றும்
பொலிக நீ வடவிண் மீனாய்!

இலக்கண வெளிச்சம் தந்தாய்!
இலக்கிய நுண்மை தேடித்
துலக்கினாய்! திறந்து வைத்தாய்
சுடர்த்தமிழ்க் கருவூ லங்கள்!
அலைக்கின்ற தீமை ஏதும்
அருந்தமிழ் மொழிக்கு வந்தால்
சிலைக்கின்ற இடியே ராகத்
திக்குகள் கலங்க வைத்தாய்!

பழந்தமிழ் தெரிந்து கொள்ளும்
பல்கலைக் கழக மானாய்!
முழங்கிய தமிழ் உணர்வின்
வலம்புரிச் சங்க மானாய்!
வழங்கிடும் அறிஞர் நெஞ்சின்
வற்றாத சுரங்க மானாய்!
தழைக செந்தமிழே! இன்னும்
தழைகநீ பன்னூற் றாண்டு!

மதுரையின் தங்கப் பூவே!
மன்னவர் விழிக் கனாவே
புதுநெல்லைப் பருவம் தோறும்
வழங்கிடும் தமிழ் வயல்நீ!
அதிர்கின்ற புது யுகத்தில்
எதுஇங்கே புரண்ட போதும்
உதிராத விண்மீன் போல
ஒளிர்க நீ எமது வானில்!

ஒன்றுண்டு கனவு கண்டாய்
தமிழரை ஒன்றாய்க் காண. .
ஒன்றுண்டு தீரா ஆசை
தமிழ்நிலம் முதன்மை காண. .
ஒன்றுண்டு வேட்கை கண்டாய்
தமிழ்மொழி உலகை வெல்ல. .
நின்றென்றும் செந்தமிழ் நீ
நிறைவுடன் துணைநிற் பாயே!

பிரதாப முதலியார் சரித்திரம் (1879)

தமிழில், மாயூரம் வேதநாயகம் பிள்ளை படைத்த முதல் நாவல் இது. பிரதாப முதலியார் சரித்திரத்தில் வேதநாயகம்பிள்ளை படைத்திருப்பது கூட்டுக்குடும்பம். செல்வவளம் பெற்ற குடும்பம் என்பதால் பிரதாப முதலி--யாருக்கு வேலை செய்து சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குடும்பப்பூசலால் தனிக்குடித்தனம் அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. கற்றறிந்த அறிவார்ந்த பெண்களாகச் சுந்தரத்தண்ணியும் ஞானாம்பாளும் படைத்துக் காட்டப் பட்டுள்ளார்கள். அதனால் இந்தக் குடும்பத்தில் வழக்கமான மாமியார், மருமகள் பூசல் இல்லை. பிரதாப முதலியாரின் பாட்டியார் தமது மருமகள் சுந்தரத்தண்ணியை "அவள் அன்னமில்லாதவர்களுக்கு அன்னமும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரமும் கொடுத்து எத்தனையோ ஏழைக்குடும்பங்களைக் காப்பாற்றி வருகிறாள். அவளுக்காகத்தான் மழை பெய்கிறது வெயில் எரிக்கிறது"[4] என்று புகழ்கிறார்.

ஞானாம்பாள் மிகுதியாகப் படித்திருக்கிறோ--மென்கிற கல்விச் செருக்கில்லாமல் மிகவும் அடக்கமுடைய பெண்மணியாகக் காட்சியளிக்கிறார். "பெண்கள் எவ்வளவு படித்தாலும் ஆடவர்களை வெல்ல மாட்டார்கள். பெண்கள் சிறிது காலத்தில் வளர்ந்து மலர்ந்து விரைவில் கெட்டுப்போகிற சிறு செடிகளுக்கு ஒப்பாக விளங்குகிறார்கள். ஆடவர்களோ என்றால் வெகுநாள் தாமதப்பட்டு வளர்ந்து, நெடுநாள் வரைக்கும் பலன் கொடுக்கிற மரங்களுக்கு ஒப்பாகவிருக்கிறார்கள்"[5] என்று ஞானாம்பாள் கூறும் கருத்து தமிழ்நாட்டு மரபுப்படி பெண்கள் ஆடவர்க்கு அடங்கியவராக இருப்பதையே வேதநாயகம்பிள்ளை விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

பிரதாப முதலியார், தங்கள் திருமணத்துக்குத் தடை ஏற்பட்டவுடன், ஞானம்பாளுக்கு, 'எங்காவது மறைவாகப் போய்த் திருமணம் செய்து கொள்ளலாம்' என்று கடிதம் எழுதுகிறார். இக்கடிதத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஞானாம்பாள் தமிழ்ப் பண்பாடு இதற்கு இடம் கொடுக்காது என்று பதில் கடிதம் எழுதுகிறாள். ஐரோப்பியப் பண்பாட்டைச் சுட்டிக்காட்டி அங்கு ஆண், பெண் மறைவாகப் பழகுவதிலுள்ள தீமையை எடுத்துக் காட்டுகிறாள்.

"திருமணமாகாத ஒரு பெண்ணும் மணமாகாதவனும் சேர்ந்து கொண்டு வெளிச் செல்வதினால் உண்டாகிற இழிவும் பழிச் சொல்லும் உலகமுள்ளவரை நீங்குமா?... மணத்துக்கு முன்பு பெண்ணுக்கும் ஆணுக்கும் மறைவிடத்து நடக்கிற இன்னுரையாடல்--களால் விளைகிற தீமைகளைக் குறித்து ஐரோப்பியர்களே முறையிடுகிறதுந் தவிர, நீதி மன்றங்களில் வரும் வழக்குகளினாலும் அந்தத் தீமைகள் இன்னவை என்று நாம் அறிகிறோமல்லவா? அந்தக் கெட்ட வழக்கத்தை இந்நாட்டிற்குக் கொண்டுவர முயற்சி செய்வார்களே--யானால் அவர்கள் நாட்டுப் பற்றுடையவர்கள் அல்ல--ரென்பது தெளிவு"[6] என்ற வரிகளில் தமிழ்ப் பண்பாடு கெட்டுவிடக்கூடாது என்பதில் வேதநாயகம் பிள்ளைக்கு உள்ள கவலை வெளிப்படுகிறது.

பெண்களின் ஆற்றல்

பொய்ச்சாட்சி சொல்லியதாக, பிரதாப முதலியார் உட்பட இருநூறு பிரபுக்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, நாடு கடத்திவிட கலெக்டர் முடிவு செய்த போது, சுந்தரத்தண்ணி பெண்கள் குழுவிற்குத் தலைமையேற்று, கவர்னரிடம் கலெக்டரின் சூழ்ச்சியை எடுத்துக் கூறி விடுதலை பெற்றுத் தருகிறாள்.

ஞானாம்பாள் ஆணுருவில் விக்கிரமபுரியின் ஆட்சியை ஏற்று, சிறப்பாக ஆட்சி புரிகிறாள்.

பெண்களால் எதுவும் முடியும் என்பதை 1879–இல் வேதநாயகம்பிள்ளை எழுதிக் காட்டியுள்ளது, அவருடைய தொலை நோக்கினை உணர்த்துகிறது.

திராவிட இயக்க நாவல்

பிராமணர்கள் வருணாசிரம தர்மத்தைக் கூறி, சமுதாயத்தில் தாங்கள் மற்ற எல்லாப் பிரிவினரையும் விட மேம்பட்டவர்கள் என்ற கருத்தினை இடைவிடாது மக்கள் மனத்தில் பதியவைத்துக் கொண்டிருந்தனர். மக்கள் தொகை எண்ணிக்கையில் குறைவாக இருந்த இவர்கள், மற்ற இனத்தாரைவிடக் கல்வித்துறையில் மேம்பட்டு விளங்கினர். எல்லாத்துறையிலும் பிராமணர்களே அதிக எண்ணிக்கையில் முதலிடம் பெற்று வருவதைக் கண்டு அச்சமுற்ற பிராமணரல்லாத இனத்தவர்கள் இதற்கு ஒரு தீர்வு காண விழைந்தனர். அதன் முதல்படியே டாக்டர் டி.எம்.நாயர், சர்.பி.தியாகராயர் தோற்றுவித்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கம். இதுவே பின்னர் ஜஸ்டிஸ் கட்சி எனப் பெயர் பெற்றது. இதே ஆண்டில் தென்னிந்திய விடுதலை இயக்கம் என்ற அமைப்பும் தொடங்கப்பட்டது.

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சீர்திருத்த இயக்கத்தில் தமிழ் மாகாண காங்கிரஸ் அமைப்பு முழு அளவில் ஈடுபடவில்லை.தேசியவாதிகளிலேயேயும் முற்போக்கு மனம் படைத்த மிகச்சிலரே சீர்திருத்தப் பணியிலே மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். அவர்களைச் சிறுபான்மையினராக்கிவிடும் வகையிலே வைதிக மனம்படைத்த தேசியவாதிகள் தமிழ் மாகாண காங்கிரசிலே ஆதிக்கம் பெற்றிருந்தனர். அதன் விளைவாகவும், தேசியவாதிகளிலே முன்னணியிலிருந்தோரிடை ஏற்பட்ட கோஷ்டிப் பூசல் காரணமாகவும், பெரியார் ஈ.வே.ரா., திரு.எஸ்.இராமநாதன் ஆகிய இருவரும் தேசியப் பாசறையிலிருந்து வெளியேறலாயினர்.

அந்த வெளியேற்றத்தின் விளைவாக, தமிழ்நாட்டிலே சுயமரியாதை இயக்கம் என்னும் பெயரிலே புரட்சிகரமான ஒரு சீர்திருத்த இயக்கம் பிறந்தது. இந்த இயக்கத்தைத் தோற்றுவிக்க முன்னின்று முயற்சி எடுத்தவர் பெரியார் ஈ.வே.இராமசாமியாவர். அவர்தாம் சுயமரியாதை இயக்கத்தின் தாயும் தந்தையும் எனலாம்."[7] 1944–இல் தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் (நீதிக் கட்சி) என்ற பெயரை மாற்றி, திராவிடர் கழகம் என்று பெயரிட அண்ணாவும் பெரியாரும் சேலத்தில் நடந்த நீதிக் கட்சி மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தனர்.

"திராவிடர் விழிப்புணர்ச்சி காரணமாக எழுந்த ஊக்கத்தினால் தமிழ் இலக்கியம் முழுச் சிறப்புற்று மலர்ந்தது. தமிழ் இசை, கலை, கவிதை, நாடகம் ஆகியவை தனித்த வடிவம் பெற்றன. தமிழ் உரைநடை பல்வேறு வகைகளிலும் விரிவும் வளர்ச்சியும் உடையதாக மாறியது. . . . பேச்சுத்தமிழும் தனிக்கவனம் பெற்றது. . . . இத்துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுத்தாளர்களும், சொற்பொழிவாளர்களும் பெரிதும் தொண்டாற்றினர்."[8]

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த எழுத்தாளர்களுள் ஒருவர் பேரறிஞர் அண்ணா. ஒரு புதிய பரம்பரையின் தலைமகன். இவர் பல சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றைச் சமுதாய உணர்வுடன் படைத்துள்ளார். இவருடைய நாவல்களில் சீர்திருத்த இயக்கப் போக்கே தலை சிறந்து நிற்கிறது.

கபோதிபுரக் காதல் (1952)

இந்த நாவலின் கரு பொருந்தாமணம். பொருந்தா மணத்தால் பெண்களின் மனம் சிதைந்து போவதோடு வாழ்க்கையும் சீரழிந்து போய்விடுகிறது என்பதை இந்த நாவலில் விரிவாகச் சித்திரித்துக் காட்டுகிறார் அண்ணா.

"திருமணத்திற்கு வேறு எவ்வகைப் பொருத்தங்களையும் விட மனப்பொருத்தமே சிறந்ததாகும். அண்ணாதுரையின் புதினங்களில் பொருந்தா மணங்களே மிகுதியும் நடைபெறுவதுபோல் படைக்கப்பட்டுள்ளன. அவர் காலத்தில் நாட்டில் பொருந்தாமணங்களே மலிந்திருந்தன என்பதை அவரது கதைகள் காட்டுகின்றன. பொருந்தாமணங்கள் எங்காவது நடைபெற்றால் அவற்றை எதிர்த்துத் தமது எதிர்ப்புக் குரலை எழுத்துவடிவில் தந்துள்ளார். அவர் நோக்கமெல்லாம் முடை நாற்றம் வீசுகின்ற சமுதாயக் கேடுகளைக் குத்திக் கிளறி எதிர்காலச் சந்ததியினர் அத்தீமையைக் களைய வேண்டுமென்பதேயாகும்"[9].

இந்நாவலில் இடம் பெறும் சாரதாவின் பெற்றோர் வீராசாமிப்பிள்ளையும் வேதவல்லியும் ஏழ்மை காரணமாக, பதினாறு வயது நிரம்பாத தம் மகளைப் பணக்காரரான அறுபது வயது மாரியப்பப்பிள்ளைக்கு மணமுடித்துத்தர முடிவு செய்கின்றனர். இதனால் கவலையுற்ற சாரதா நோய்வாய்ப்படுகிறாள். இதற்காக, வைத்தியரை நாடாத வீராசாமிப்பிள்ளை, குடும்பத்தோடு மாரிக்குப்பம் அருகில் உள்ள மாரியம்மன் கோவில் பூசாரியிடம் தாயத்து வாங்கிக் கட்ட வருகிறார். வந்த இடத்தில் வண்டியோட்டிப் பிழைக்கும் மாரியப்ப பிள்ளையின் மகள் வயிற்றுப் பேரன் பரந்தாமனும், சாரதாவும் சந்திக்கின்றனர். திருமண வீட்டில் மயக்கமடைந்த சாரதாவுக்கு மருந்து கொடுக்க வந்த பரந்தாமனையும் சாரதாவையும் சந்தேகப்பட்ட மாரியப்பபிள்ளை, பேரனை விரட்டிவிடுகிறார். சாரதாவின் நடத்தையில் களங்கம் கற்பிக்கப்பட்டு, பிறந்த வீட்டிற்கு அவள் அனுப்பி வைக்கப்படுகிறாள்.

சாரதாவின் அழகால் ஈர்க்கப்பட்ட மாரியப்பப் பிள்ளையின் காரியஸ்தன் கருப்பையா அவரைத் தூண்டி சாரதாவை அழைத்துவரச் செய்கிறான். கிழவர் மாரியப்பப்பிள்ளையை அபினுக்கு அடிமையாக்கி, சாரதாவைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறான்.

"அவளுடைய கன்னிப்பருவம் காதலைக்கண்டது. அது கருவிலேயே மாண்டது. அவளுடைய இரண்டாம் பிறப்பு கணவனுக்கு மனைவியாக வாழ்க்கையில் ரசமின்றி இயந்திரம் போல் இருந்தது. அன்று தோட்டத்தில்

சாகசக்காரக் கருப்பையாவிடம் சிக்கியதால் நிகழ்ந்த அவள் மூன்றாம் பிறப்பால் வெளிக்குக் கற்புக்கரசியாகவும் மறைவில் பிறருக்குப் பெண்டாட்டி யாகவும் இருக்கும் வாழ்வைப் பெற்றாள்."[10]

பெண்ணின் மணவாழ்க்கையைப் பெரும்பாலும் பணத்தையும், சாதியையும் கொண்டே நிச்சயிக் கின்றனர். பொருந்தா மணங்களால் பெண்கள் துன்புறுகின்றனர். தவறு செய்யத் தூண்டப்படுகின்றனர். எப்போதும் சமூகப் பழக்க வழக்கங்கள் பெண்களுக்கு எதிராக அமைகின்றன. ஏனென்றால் அவை ஆண்களால் உருவாக்கப்பட்டவை. பெண்கள் தங்களுக் கிசைந்த வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள, சமூகத்தை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. இக்கருத்துக்களையே 'கபோதிபுரக் காதல்' வலியுறுத்துகிறது.

அபினை மிகுதியாக உண்ட மாரியப்பப்பிள்ளை மரித்துவிட, சாரதா, கண்ணற்ற பரந்தாமனைத் துணிச்சலாகக் கைப்பிடிக்கிறாள். எல்லோராலும் ஆட்டிப்படைக்கப்பட்ட அப்பாவி சாரதா, இறுதியில் துணிச்சலாக ஊரறியச் செய்யும் ஒரே செயல், பரந்தாமனை மணந்து கொள்வது தான்.

மார்க்சிய நாவல்

காலப் போக்கில் மனித அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடாக, மானுட மேம்பாட்டுச் சிந்தனை--யாளர்களின் கருத்துக்கள் உலகெங்கும் பரவலாயின. அவ்வகையில் கார்ல்மார்க்ஸ் போன்ற பொதுவுடைமை வாதிகளின் கருத்துக்கள் இந்தியாவிலும் அரசியல் சிந்தனையாளர்களின் மனத்தில் இடம் பிடித்தன.

இந்திய மார்க்சியவாதிகள், இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது, போராடும் முறையில் காங்கிரஸ் தலைமையின் போக்கில் கருத்து மாறுபாடு கொண்டு பிரிந்து சென்றவர்களே எனலாம். இவர்கள் மேலைநாட்டிலிருந்து பெற்ற மார்க்சியக் கருத்துக்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, பொருளாதார விடுதலை ஒன்றே மக்களின் உண்மையான விடுதலை என்று நம்பியவர்கள்.

"சமுதாய உற்பத்திப் பொருள்களில் ஒன்று இலக்கியம். சிந்தனை வயலின் விளைபொருளாக இருப்பது, வயலின் விளைபொருளிலே முற்றிய வித்துக்கள் மீண்டும் மண்ணை அடைந்து விளை பொருளைத் தருவிப்பது போலவே சிந்தனையில் உருவான தத்துவங்கள் மீண்டும் சமுதாயத்தையும் சிந்தனையையும் பாதித்து வளர்க்கத் துணைபுரிகின்றன."[11]

16–ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக, மேலைநாடுகளைப் போலவே இந்தியாவிலும் மக்கள் வாழ்க்கையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. வயல்களில் வேலை பார்த்த மக்களில் பலர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளின் பயனாக உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தலைப்பட்டனர். இதன் விளைவாக அவர்களுடைய வாழ்க்கைப் போக்கு, கலை, பண்பாடு, சமயச்சிந்தனைகள் அத்தனையிலும் மாற்றங்கள் விளைந்தது, தவிர்க்க முடியாத உண்மையாயிற்று. எனவே படைப்பிலக்கியத்திலும் இத்தாக்கம் ஏற்படுவதைப் படைப்பாளர்களால் தவிர்க்க இயலாது போயிற்று. தமிழ்நாட்டில் இரசிய, சீனநாட்டு மொழிபெயர்ப்புப் படைப்புக்களை வாசகர்கள் பரவலாகப் படிக்கத் தொடங்கியதன் தாக்கமாகவும் இது நிகழ்ந்தது.

மலரும் சருகும் (1967)

விவசாயத்தை நம்பி, ஆனால் நிலவுரிமையின்றிப் பிறருக்காக உழைக்கும் சேரி மக்களிடையே சமுதாய மாற்றங்களால் ஏற்படும் தலைமுறை முரண்பாடுகளை டி.செல்வராஜ் 'மலரும் சருகும்' நாவலில் சித்திரிக்கிறார்.

தனிமனிதனுக்குப் பணக்காரவர்க்கம் இழைக்கும் அநீதிகளை வாய்மூடி மௌனமாக ஏற்றுக் கொள்வதே விதி என்ற நிலை, ஓர் அமைப்பின் கீழே ஒன்று திரண்டு குரல் கொடுக்கும் போது, மாற்றப்படுவதை ஆசிரியர் நன்கு சித்திரித்துள்ளார். இதில் பெண்களின் பங்கேற்பும் போராட்டங்களில் முன்னிலை வகிப்பதும் காலத்திற் கேற்ற மாற்றத்தின் விளைவு என்பதாக அறிய முடிகிறது.

சமூகத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களில் சிலர் சமூக மாற்றங்களால் மேலே வரும் வாய்ப்புக் கிடைக்கும் போது, அவர்கள் எவ்வாறு தங்கள் பழைய நிலையையும், குடும்பத்துக்கும், இனத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்து சுயநலவாதிகளாய் மாறிவிடுகிறார்கள் என்பதை மாடசாமிக் குடும்பனின் குடும்பத்தின் வாயிலாக ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

மாடசாமிக்குடும்பன் மகன் ஈசாக். ஈசாக்கின் மகள் கன்னிமரியாள். கன்னிமரியாள் முதலில் அவளுடைய

அத்தை மகனான ரத்தினத்துக்குப் பேசி முடிக்கப்படுகிறாள். ரத்தினத்திற்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்ததால், அவன் கன்னிமரியாளை மணக்க மறுத்து விடுகிறான். மனமுடைந்த நிலையிலிருந்த கன்னி மரியாளிடம், பண்ணையாரின் மகன் தவறாக நடக்க முயன்றதை அடுத்து, அவள் சுடலை என்கிற அரைப் பைத்தியத்தை, அவளுடைய வீட்டாருக்கு விருப்பம் இல்லாத போதும் கணவனாக ஏற்றுக்கொள்கிறாள்.

பண்ணையாருக்கு எதிரான போராட்டத்தில் மாடசாமிக் குடும்பனின் குடும்பம் காவல் நிலையத்திற்கு, ரத்தினத்தால் இழுத்துச் செல்லப்படுகிறது. ஆவேசம் கொண்ட கன்னிமரியாள் ரத்தினத்தைக் கடுமையாக எதிர்க்கிறாள். அனைவரும் கைது செய்யப்பட்டு வேனில் ஏற்றப்படுகிறார்கள். கைக்குழந்தையைக் கூட விட்டுவிட்டு, மரியாள் ஸ்டேசனுக்குச் செல்கிறாள். துணிச்சலான, சுயமாகச் சிந்திக்கின்ற, சூழலுக்கேற்றவாறு முடிவுகள் எடுக்கின்ற பெண்ணாக விளங்குகிறாள் கன்னிமரியாள்.

இந்நாவலில் இடம்பெறும் ரத்தினத்தின் சகோதரி புஷ்பம், தன் அண்ணனின் செயலை எதிர்க்கிறாள். வீட்டைவிட்டே வெளியேறி ஆசிரமத்தில் சேருகிறாள். சீர்திருத்தவாதியான பிராமணப் பேராசிரியரை மணக்கிறாள். வள்ளி என்கிற மற்றொரு பெண்பாத்திரம் ஈசாக்கின் மகன் மோசேயை விரும்புகிறாள். மனம் விரும்பிய இளைஞனையே, தடைகளையும் மீறித் திருமணம் செய்து கொள்கிற துணிச்சலான பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எழுத்தோவியம் ஆகும். காலந்தொறும் மானுட சமூகத்தில் நிகழும் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, அறிவியல் மாற்றங்களுக்கு ஏற்ப, வாழ்க்கை முறையும் மாறிவருவது கண்கூடு. இத்தகைய மாற்றங்களை அவ்வக் காலத்துப் படைப்பாளிகள் தங்கள் இலக்கியப் படைப்புகளில் எடுத்துக் காட்டிவருவதும் தவிர்க்க இயலாத கூறாக அமைந்துள்ளது. அந்த வகையில் இங்கே, வெவ்வேறு காலத்தில் தோன்றிய மூன்று நாவல்களில், காலந்தொறும் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு மாறிவந்துள்ளது என்பது படைப்பாசிரியர்கள் சித்திரித்துக் காட்டியவாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. எஸ்.தோதாத்ரி, தமிழ் நாவல்–சில அடிப்படைகள், ப.66.

2. Robert Bierstedt, The Social Order, P.34.

3. Ibid, P.312.

4. வேதநாயகம்பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், ப.29.

5. மேலது, ப.24.

6. மேலது, ப.79.

7. ம.பொ.சிவஞானம், விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக்.287–288.

8. ஏ.என்.சட்டநாதன், வ.ஜெயதேவன், சிவ.மாதவன் (மொ.பெ.ஆ), தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும், ப.13.

9. இரா.சேது, அண்ணாவின் கதை இலக்கியம், பக்.57–58.

10. சி.என்.அண்ணாதுரை, கபோதிபுரக் காதல், ப.41.

11. கோ.தான்யா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், ப.56.

தமிழில் நவீன நாடகங்கள்



முனைவர். அ. இராமசாமி,
திருநெல்வேலி.

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பேசி வருவது ஒரு மரபாக இருக்கிறது. இயல் தமிழ் என்பது என்ன..? என்பதை விளக்க நமக்குத் தொல்காப்பியப் பொருளதிகாரம் தொடங்கிப் பழைமையான இலக்கணநூல்கள் இருக்கின்றன. ஆனால் இசைத்தமிழ் இதுதான் என்று விளக்குவதற்கும் நாடகத் தமிழின் இலக்கணம் இவையெனச் சொல்வதற்கும் முறையான இலக்கண நூல்கள் தமிழில் இல்லை. இருக்கின்ற இலக்கண நூல்கள் காலத்தால் மிகப் பிற்பட்டவை. குறிப்பாகப் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அவையும் தமிழ் மொழி வழங்கும் நிலப் பரப்பிற்குள் பிறமொழியாளர்களின் வருகையோடு, இசையும் நாடகமும் அறிமுகமாகி அவற்றின் இலக்கணங்களை விளக்கத் தொடங்கிய பின்பு எழுதப்பட்டவை. பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தின் அறிமுகமே பரிதிமால்கலைஞர் எனத் தம்மை அழைத்துக் கொண்ட சூரியநாராயண சாஸ்திரியாரை நாடகவியலை எழுதத் தூண்டியது. விபுலானந்த அடிகள், ஆபிரகாம் பண்டிதர் போன்றவர்களின் முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக இருந்தவை கர்நாடக சங்கீதத்தின் வரைமுறைப்பட்ட இசையியல் என்பதை இன்று மறுப்பது எளிமையல்ல. ஆனால் அரங்க நிகழ்வுகள் மற்றும் நாடகங்களின் மேடையேற்றம் என்பன மிகத் தொன்மையானவை என்பதற்கான ஆதாரங்கள் நமக்கு உள்ளன.

உலக மொழிகளில் தமிழைப் போலவே மூத்த மொழிகளாகக் கருதப்படும் சமஸ்கிருதத்திலும் கிரீக் மொழியிலும் தோன்றிய இலக்கண நூல்கள் நாடக இலக்கணத்தைச் சொல்வதிலேயே முனைப்புக் காட்டியுள்ளன. கிரேக்க நாட்டில் தோன்றிய சிந்தனையாளன் அரிஸ்டாடில் எழுதிய கவிதையியலில் - (Poetics), நாடகத்தின் கட்டமைப்பு, நாடகங்களின் வகைகள், நாடகக் கதாபாத்திரங்களின் இயல்புகள், நாடகங்கள் எழுப்ப வேண்டிய உணர்வுகள் என எல்லாவற்றையும் விரிவாகப் பேசியுள்ளார். இதே போல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள நாட்டிய சாஸ்திரத்திலும் நாடகம் பற்றிய அனைத்து விவரங்களும் கிடைக்கின்றன. பரதமுனியால் எழுதப்பட்ட அந்நூல் நடனத்தின் இலக்கணத்தைச் சொல்வதின் தொடர்ச்சியாக நாடக இலக்கணத்--தையும் சேர்த்தே சொல்கிறது. தமிழில் நாட்டிய சாஸ்திரம் போன்றதொரு நூலோ, கவிதையியல் போன்றதொரு நூலோ இல்லை என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம்.

இவ்விரு நூல்களும் நடனம்தான் நாடகத்தின் தொடக்கம் என்கின்றன. அதன் தொடர்ச்சியாக நிகழ்த்திய ஆய்வுகள் குறிப்பாகச் சடங்கு சார்ந்த நடனங்களிலிருந்தே நாடகம் தோற்றம் கொண்டுள்ளது என உறுதி செய்துள்ளன. தமிழின் தொல் இலக்கியங்களான அகக்கவிதைகளிலும் புறக்கவிதைகளிலும் சிலப்பதிகாரம் போன்ற தொடர்நிலைச் செய்யுள்களிலும் சடங்கு சார்ந்த நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. வேலன் வெறியாட்டு, துணங்கைக் கூத்து, பின் தேர்க்குரவை, முன்தேர்க்குரவை போன்றனவும் குரவைக்கூத்து, சாக்கைக் கூத்து, விநோதக் கூத்து, சாந்திக்கூத்து, ஆய்ச்சியர் குரவை போன்றனவும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் பதினோராடல்களும்

பண்டைத் தமிழகத்தில் வழக்கில் இருந்த நடன முறைகள் எனலாம். இவை தவிரக் கும்மி, கோல், கரகம், கழியல், சதிர் போன்ற ஆட்ட முறைகளும் தமிழகத்தில் பாரம்பரியமாக நிகழ்ந்து வந்தமைக்குக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. ஆனால் கதை தழுவிய காட்சி வரிசைகளாக நாடகம் நிகழ்ந்ததை உணர்த்தும் குறிப்புக்களோ பிரதிகளோ கிடைக்கவில்லை. அப்படியானால் முத்தமிழில் ஒன்றான நாடகம் எங்கிருந்து வந்தது என்று கேள்வி எழக்கூடும்.

ஐரோப்பியர்களின் வருகையால் இங்கு அறிமுகமான சிறுகதை, நாவல் போல நாடகமும் அவர்களோடு வந்தது என்ற ஐயம்கூட வரலாம். இந்த ஐயம் முழுமையும் உண்மையல்ல. ஆனால் இன்று நாடகம் என்று நிகழ்த்தப்படுகின்ற கலைவடிவத்தில் ஐரோப்பியர்களின் பங்கு சரிபாதியாக இருக்கிறது என்பதும் உண்மை. ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பு தெருக்கூத்து என்ற பெயரில் கதை தழுவிய நிகழ்வுகளை நடத்தி வந்துள்ளனர். தஞ்சைப் பகுதியில் இன்னொரு நாடகவடிவமாக பாகவத மேளா நிகழ்ந்து வந்துள்ளது. அதன் மொழி வடிவம் தெலுங்காகவும் இசைவடிவம் கர்நாடக இசை வடிவமாகவும் இருக்கிறது. மற்றொரு நாடகவடிவமாக மராத்தியச் சாயல் கொண்ட மோடி நாடகங்களும் இருந்துள்ளன. அவையே போல் இன்றும் இசைப்பாடல்களும் வசனங்களும் கலந்த சங்கரதாஸ் சுவாமிகளின் பாணி நாடகங்கள் நடத்தக் குழுக்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றின் தோற்றம் சில நூறாண்டுகளுக்கு முன் என்பதில் ஐயமில்லை. இவ்வகை நாடகங்கள் எல்லாம் இன்றுள்ள அரங்குகள் போல் அல்லாமல் நிகழுமிடத்தை மட்டுமே உறுதி செய்து கொண்டு நிகழ்ந்துள்ளன எனலாம். நிகழிடத்தின் மூன்று புறங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருக்கக் கதை எடுத்துரைப்பதற்கென ஒரு கதாபாத்திரம் வந்து ஒவ்வொன்றையும் சொல்லச் சொல்ல நிகழ்வுகள் நடந்து முடிவதாக அவை அமைந்தன. கட்டியங்காரன் அல்லது விதூஷகன் என்ற கதாபாத்திரம் அமைந்திருக்கும் இந்த வடிவத்தை இந்திய நாடகவடிவம் எனலாம். இந்த வடிவம் தனக்குள் நடன அசைவுகளையும் இசைப் பாடல்களையும் தர்க்கம் சார்ந்த உரையாடல் வடிவத்தையும் முழு இரவுக்குமான நிகழ்வையும் வைத்திருந்தது. வேளாண்மை சார்ந்த பணிகளில் ஈடுபட்டுக் களைத்து வரும் மக்களுக்கான ஓய்வுப் பொழுதுக் கலையாகவும் வாழ்க்கைக்கான வழி நடத்தல் கருத்துக்களைத் தரும் கலையாகவும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் 19 ஆம் நூற்றாண்டின் மையக் காலம் வரை இருந்து வந்தவை இந்த நாடகங்கள்தாம்.

நவீனத்துவத்தின் நுழைவு

பொதுவாக நவீன கலை இலக்கியம் பற்றிய பேச்சுக்கள் அல்லது சொல்லாடல்கள் பல தளங்களில் விரியக்கூடியன. நவீன கலை இலக்கியம் பற்றிய சொல்லாடல் மட்டுமல்ல, நவீன மனிதன் பற்றிய ஒரு சிறு குறிப்பும் விரிவான உரைக்கோவையுமே கூட ஒற்றைப் பரிமாணத்துடன் நிற்பன அல்ல. இங்கே மிகுந்த தன்னுணர்வுடன் உள்வாங்கப்பட்ட நவீன நாடகங்கள் பற்றிய பேச்சும் அதற்கு விலக்கல்ல. பாரம்பரியத்தின் கடுமையான இறுக்கத்தின் மீதும் தடைகளின் மீதும் விமரிசனங்களைப் பரவவிட்ட நவீனத்துவம், நிகழ்கால மனிதனின் இருப்பு, வெளிப்பாடு, மாறவேண்டிய அல்லது மாற்ற வேண்டிய நிலை என ஒவ்வொன்றிலும் தன்னுணர்வுடன் செயல்படுவதை வலியுறுத்தும் நோக்கம் கொண்டது.

நவீனத்துவத்திற்கு எனத் தனித்த அடையாளம் கொண்ட தத்துவம், அரசியல், வடிவம், அவற்றைத் தேடும் முறை எனச் சில அக்கறைகள் உண்டு. ஐரோப்பிய நவீனத்துவம் 16,17 ஆம் நூற்றாண்டு அறிவியல் மற்றும் தொழில்புரட்சிகளின் விளைவு, இறையியல், தத்துவம், அறிவுத்தோற்றவியல் அல்லது மெய்காண் முறை என எல்லாவற்றிலும் ஐரோப்பிய மனிதனுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள், குழப்பங்கள், அதற்கு அவன் உருவாக்கிக் கொண்ட விளக்கங்கள் எனப் பலவும் அதன் பின்னணியில் உண்டு. இவையனைத்தும் இந்திய நவீனத்துவத்திற்கு உண்டு எனச் சொல்ல முடியாது. ஏனெனில் இந்திய மனிதன், அவன் படைப்பாளியாக இருந்தாலும் சரி, சாதாரண மனிதனாக இருந்தாலும் சரி நவீனத்துவத்தை அடைந்தது வாழ்வின் ஊடாக அல்ல. கற்ற கல்வியினூடாக மட்டுமே. ஐரோப்பியர்களின் வருகையோடு கூடிய ஆங்கிலக்கல்வியின் ஊடாகவே நவீனத்துவம் அவனுள் நுழைகிறது.

ஐரோப்பியர்களின் வருகை, மேற்கத்தியக்கல்வி, அதன்வழியான சிந்தனைமரபு உண்டாக்கிய தாக்கம், அவர்களாகவே -ஐரோப்பியர்களாகவே -மாறிவிடுவதில்

இருந்த ஆர்வம் போன்றவை தமிழர்களுக்கு நவீனம் (Modern) என்ற வார்த்தைக்கான கருத்தியல் மற்றும் செயல்பாட்டுத் தளங்களை அர்த்தப்படுத்த முயன்றன. மேற்கத்திய நவீனத்துவம் சிலவகைப்பட்ட புரட்சிகளின் பின்விளைவுகள் என்பதை நாமறிவோம். நெருக்கடிகள் நிரம்பிய போர்க்காலப் பின்னணியும் அதற்கு உண்டு. அது காரணமாகத் தனிமனித விடுதலையை மையமாகக் கொண்டு இறுகிப்போன நிறுவனங்களையும், அவை பாதுகாக்க முயன்ற சமூகப் படித்தரங்களையும், மதிப்பீடுகளையும், கேள்விக் குள்ளாக்குதல் மற்றும் விடை தேடி அலைதல் என்பதை அடையாளமாகக் கொண்டிருந்தது மேற்கத்திய நவீனத்துவம். அத்துடன் நலிவுற்றவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவு என்கிற மனிதாபிமான முகமும் அதற்கு உண்டு. மேற்கத்திய படைப்பாளர்களும் சிந்தனையாளர்களும் நவீனம் என்ற வார்த்தையை உள்வாங்கியதும் உபயோகித்ததும் இத்தகைய கருத்தியல் செயல்பாட்டுத் தளங்களோடுதான். அவர்களின் காலப்பின்னணியும், நெருக்கடிகளும் புதிய புதிய கேள்விகளை முன்வைத்தன; விடைகள் தெரிந்தவை; விடைகள் தெரியாதவை; விடைகளைத் தேட வேண்டியவை; தேடவே முடியாதவை எனப் பல்வேறு கேள்விகள். அவைகள் வெளிப்படுத்திய பல்வேறு விதமான உள்ளடக்கங்கள். அவைகளை வெளிப்படுத்த முடியாமல் திணறிய பழைய வடிவங்களுக்குப் பதிலாகப் புதிய வடிவங்கள்; வெளிப்பாட்டு முறைகள் என ஐரோப்பிய நவீனத்துவ நாடக அரங்கம் பரந்த பரப்பினைக் கொண்டது.

புதிய கேள்விகளையும் புதிய பதில்களையும் வெளிக்கொணர யதார்த்த பாணி அரங்கு போதாது என்று உணர்ந்தவர்கள், காவிய பாணி அரங்கு (Epic theatre) , அபத்த நாடகங்கள் (Absurd Drama), குரூர அரங்கு (Theatre of Cruelty), குறியீட்டியல் (Symbolic) நாடகங்கள், மிகை யதார்த்த நாடகங்கள் (Surrealistic plays), வெளிப்பாட்டியல் (Expressionistic) நாடகங்கள் எனப் புதிய மரபொன்றை உருவாக்கினார்கள். நாடகப் பிரதிகளில் மட்டுமல்லாமல் நிகழ்த்தும் முறையிலும் நடிப்புப் பாணியிலும் கூட இத்தகைய மரபொன்றை மேற்கத்திய மரபில் நாம் காண முடியும். காவிய பாணி அரங்கு தொடங்கி , கண்ணுக்குப்புலப்படா அரங்கு (Invisible theatre) வரையிலான நிகழ்த்து முறைகள், ஒன்றின் இடத்தில் இன்னொன்று என நடப்பட்ட பயிர்கள் அல்ல; அவ்வக்காலத் தேவைகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்தவை. ஆனால் தமிழர்களாகிய நாம் நவீனம் என்பதைப் புதியது எனக் கருத்தியல் ரீதியாகவும் செயல்பாட்டுத் தளத்தில் மனிதாபிமானம் என்பதாகவும் மட்டுமே புரிந்து கொண்டுள்ளோம். மேற்கத்திய நவீனத்துவ மரபில் உள்ளவைகளை ஏற்றுக்கொள்வதிலும் கூடப் புதுமைநாட்டம் மட்டுமே மேலோங்கி நிற்கிறது எனச் சொல்லலாம்.

வெளிப்பாடுகள்

சென்ற நூற்றாண்டின் - 1970 களின் இறுதிவாக்கில் சிறுபத்திரிகை சார்ந்த அறிவாளிகளால் முன்மொழியப் பட்டு, நாடகப் பிரதிகள், பயிற்சி முகாம்கள், நாடக மேடையேற்றங்கள், நாடகவிழாக்கள், அரசு அகாடமிகளின் ஆதரவு, அந்நிய நிதி நிறுவனங்கள்- பண்பாட்டுத் தூதரகங்களின் உதவி, பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டம் என நவீன நாடகங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றின் வளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள பாதிப்பையும் பரிசீலனை செய்தாலே அவற்றின் பரிமாணங்களும் போதாமையும் புரியக் கூடும்.

நவீனத் தமிழ் நாடகத்தின் முக்கிய பரிமாணங்கள் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றின் இயல்புகளும் நோக்கங்களும் பலராலும் பேசப்பட்டுள்ளன. மக்களை நாடிச் செல்லுதலையும், செலவுகளைக் குறைத்து எளிய வடிவில் நிகழ்த்து முறையையும் கொண்ட தெரு நாடகங்கள் அவற்றின் முழுவீச்சில் இன்று இல்லை. அவற்றின் நீர்த்துப் போன வடிவமாக அறிவொளி நாடகங்கள் நடத்தப்பட்டன. நோக்கங்களைக் கோஷங்களாக மாற்றிப் பார்வையாளர்களிடம் நேரடியாகச் செய்திகளைச் சொல்லிவிடத் துடிக்கும் நோக்கம் கொண்டவை அவை. தெரு நாடகங்கள் அல்லது எளிய அரங்கு என்பன வற்றின் மீது இத்தகைய விமரிசனங்களை வைக்கும் இன்னொரு நாடகத்தயாரிப்புகளும் உள்ளன. பல பத்தாயிரங்களையோ லட்சங்களையோ தயாரிப்புச் செலவுகளாகக் கொண்டவை. அவை சங்கீத நாடக அகாடமி, தேசிய நாடகப்பள்ளி போன்ற அரசு நிறுவனங்களிடமிருந்தும், ஃபோர்டு நிதி நிறுவனம், ஐரோப்பிய நாடுகளான ஜெர்மன், ப்ரான்ஸ்,

இங்கிலாந்து போன்ற நாடுகளின் பண்பாட்டுத் தூதரகங்களிடமிருந்தும் நிதியுதவியைப் பெற்றவை. சோதனை, பரிசோதனை-மேலும் சோதனை என்பதையே நோக்கமாகக் கொண்ட நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட்ட கூத்துப் பட்டறையின் நாடகங்கள் இப்போக்கிற்குச் சரியான உதாரணங்கள். பின்னரங்கச் செயல்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து மேடையில் காட்சி ரூபங்களில் திளைக்கச் செய்யும் இத்தகைய நாடகங்களில் வடிவத்தேடல்கள் அதிகம் உண்டு. மேற்கத்தியப் புதுமைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தல், இந்திய அரங்கை - பாரம்பரிய அரங்கை உருவாக்குதல் - தமிழ்த் தேசிய இன அடையாளங்களை வெளிப்படுத்தும் அரங்கத்தை அடையாளப்படுத்துதல் என்று சில நுட்பமான வேறுபாடுகள் அவற்றிற் கிடையே உண்டு. ஆனால் இவையனைத்தும் பார்வையாளர்களோடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய உறவில் ஒன்றுபடுகின்றன. மிகக் குறைவான - தேர்ந்தெடுக்கப்பட்ட பார்வையாளர்களிடம் மட்டுமே இந்நாடகங்களின் உறவு உள்ளது. அவ்வுறவும் கூடப் பார்வையாளன் - மேடைப்படைப்பு என்பதான உறவாக இல்லை. பார்வையாளப் படைப்பாளிகளின் - அறிவார்ந்த விமரிசனத்திற்கு இடமளிக்கக் கூடிய படைப்பாக இருக்க அவை முனைகின்றன. பார்வையாளர்களின் வருகையை விடவும் பத்திரிகைகளின் விமரிசனங்களே போதும் என்ற திருப்தி இத்தகைய நாடகத்தயாரிப்புகளில் ஈடுபடுகிற--வர்களுக்கு உண்டு.

நவீனத்தமிழ் நாடகங்கள் என்பதற்குள் செயல்படும் இத்தகைய போக்குகள் நாடகம் என்ற சக்தி வாய்ந்த கலை ஊடகத்தின் செயல்பாடுகளையே கேலிக்குரியதாகவும், கேள்விக்குரியதாகவும் மாற்றியுள்ளன. ரசனை நிலையிலோ, காத்திரமான சமூகநிகழ்விலோ கூட இந்நாடகங்கள் தமிழ்ச் சமூகத்தின் மீது உண்டாக்கிய பாதிப்புக்கள் மிகமிகக் குறைவு; எதுவும் இல்லை என்று கூடச் சொல்லலாம். இதனை நாடகச் செயல்பாடுகளின் பரப்பிற்கு வெளியே இருந்து சொல்கின்ற ஒரு குற்றச்சாட்டாக நினைக்க வேண்டியதில்லை. தெரு நாடகங்களின் சமூகச் செயல்பாட்டின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு, அத்தகைய தயாரிப்பில் ஈடுபட்ட குழுக்களோடு இணைந்து வேலை செய்தும், சங்கீத நாடக அகாடமியின் நிதி உதவியோடும், பல்கலைக்கழக நாடகத் தயாரிப்பாகவும் செய்யப்பட்ட சோதனை முயற்சிகளிலும் முழு மனத்தோடு ஈடுபட்டும் உள்ளவன் என்ற நிலையில் இப்படிச் சொல்லத் தோன்றுகிறது.

சரியான அர்த்தத்தில் நவீன நாடகம் தமிழுக்கு அறிமுகம் ஆகியிருந்தால்,அதன் முதன்மையான மையம் சாதி அமைப்பைக் கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகவே இருந்திருக்கும். மராத்தியிலும், கன்னடத்திலும், ஆந்திரத்திலும் முக்கியமான நாடக ஆசிரியர்களாகக் கருதப்படுகிறவர்களின் நாடகங்கள் சாதியமைப்பிற்கு எதிராகவே இருந்தன. விஜய் டெண்டுல்கரின் காசிராம் ஹோட்வால், கன்யாதான் (மராத்தி) கிரிஷ் கர்னாடின் பலிபீடம், சந்திரசேகர கம்பாரின் ஜோ.குமாரசாமி (கன்னடம்) அட்லி கிருஷ்ணாராவின் தூர்புரேகலு (தெலுங்கு) போன்ற நாடகங்கள் சாதிப் பிரச்சினையைப் பேசியுள்ள நாடகங்கள். ஆனால் தமிழில் அத்தகைய நவீன நாடகப் பிரதிகளை எண்ணுவதற்கு ஒரு விரலைக் கூட மடக்க வேண்டியதில்லை. பிராமண அழகியல் x பறைச்சேரி அழகியல் எனச் சாதிப் பிரச்சினையின் முகத்தைக் காட்டிய இந்திரா பார்த்தசாரதியின் நந்தன் கதையைத் தாண்டி வந்தால் கே.ஏ.குணசேகரனின் பலி ஆடுகள்தான் சாதிப் பிரச்சினையின் குரூர வடிவங்களை முன்வைத்த நாடகம். பெரும்பான்மை மக்களின் பண்பாடு என்ற போர்வையில் தனது கருத்தியல் வன்முறையைத் தக்க வைப்பதற்கேற்ற வடிவத்தைப் பெற்றுள்ள வைதீக இந்துமதமும் அதன் கருத்துக்களும் இங்கு விமரிசக்கப்படவே இல்லை. இந்துமத அடிப்படைவாதம் என்றில்லை, எந்த மத அடிப்படைவாதத்தையும் சாதி அடிப்படை வாதத்தையும் தமிழின் நவீன நாடகங்கள் விமரிசனத்திற்குரிய ஒன்றாக நினைத்ததே இல்லை. கூர்ந்து கவனித்தால் அவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதை விடவும் அவற்--றோடு சமரசம் செய்து கொண்டவைகளும்; அவற்றின் தாத்பரியங்களில் பிரியம் கொண்டு மூழ்கித் திளைத்தவைகளும்தான் நவீன நாடகங்களாக - நவீனப் படைப்புகளாக முன்வைக்கப்படுகின்றன. அவை - -களுக்கே பத்திரிகைகளின் அங்கீகாரம் கிடைக்கின்றன. தேசிய, சர்வதேசிய அறிமுகங்கள் கிடைக்கின்றன. அங்கீகாரத்துக்கும், ஆதரவிற்கும் ஏங்கும் தனிமனித மனம் சமரசப்பட்டு அதிகாரத்துவ

வலைக்குள் விழுந்து விடுகிறது. தமிழ் நாடகவரலாற்றில் பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். நாடகங்கள்- நாடகக் குழுக்கள் எப்பொழு தெல்லாம் தீவிரப்பட்டு வெகுமக்கள் வடிவமாக மாறுகின்றனவோ அப்பொழுதெல்லாம் திசை திருப்புதலின் பின்னணியில் ஆதிக்கக் கருத்தியல் செயல்பட்டுள்ளது. இந்தியாவில்/தமிழ்நாட்டில் ஆதிக்கக் கருத்தியல் என்பது படிநிலை அமைப்பில் தனது அதிகாரத்தைத் தக்கவைக்கும் பிராமணியம் என்பதைத்தான் குறிக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் நாடகங்கள் கோயில், கோயில் சார்ந்த பிராமணர்கள், பிராமணிய மதிப்பீடுகள் ஆகியவற்றின் மீது காத்திரமான விமரிசனங்களை முன் வைத்தவை. ஆனால் அவற்றை அங்கீகரிக்க மறுத்த குரல்கள் சிறு பத்திரிகைகளின் நவீனத்துவம் (?) சார்ந்த பிராமணீயக் குரல்கள்தான். ஐரோப்பிய யதார்த்தபாணி நாடகங்களின் வடிவச் செழுமையோடு திருப்பங்களும் கொண்டவையாக சி.என்.அண்ணாதுரை, மு. கருணாநிதி, எம். ஆர். ராதா போன்றவர்களின் நாடகப்பிரதிகள் உள்ளன. சமூக விமரிசனத்தை நவீனமாகக் கருதாமல் ஐரோப்பிய இந்திய மாதிரிகளை முன்வைத்து எழுதப்பட்ட ந.முத்து--சாமி, இந்திராபார்த்தசாரதி ஆகியோரின் நாடகங்களே நவீன நாடகங்கள் என முன்மொழியப் பட்டதில் - முன்மொழியும்படி செய்யப்பட்டதில் செயல்பட்டவையும் பிராமணிய மதிப்பீடுகள்தாம். உரையாடல்களின் பலத்தில் வெகுமக்களிடம் எளிமையான புரிதல்களை உண்டாக்கிய திராவிட இயக்க நாடகமரபு தடைபட்டுப் போனதில் ஆதிக்கக் கருத்தியலாளர்களும் அதன் சார்பு நிறுவனங்களும் திருப்தியடைந்தன. அதே நேரத்தில் அத்தகைய நாடகங்களை எழுதி மேடையேற்றிய திராவிட இயக்கத்தினரும் அவற்றின் படைப்பாளிகளும் செயலாளிகளும் அதிகார மையத்திற்குள் நுழைந்தவுடன் அதன் சுழிப்பிற்கேற்பத் தங்களைத் தகவமைத்துக் கொண்டு தங்களின் பயண ஓட்டத்தை நிறுத்திக் கொண்டார்கள் என்பதுதான் உண்மை.

திராவிட இயக்க நாடகமரபையொத்த காத்திரமான தாக்கத்தை உண்டு பண்ணும் இயல்போடு உருவானவை தெரு நாடக முயற்சிகள். பாதல் சர்க்காரின் மூன்றாம் அரங்க அறிமுகத்தோடு எழுபதுகளின் இறுதியாண்டுகளிலும் எண்பதுகளின் தொடக்க ஆண்டுகளிலும் நகரங்கள், சிறு நகரங்கள் எனப் பல இடங்களில் நாடகக் குழுக்கள் தோன்றின. அவற்றின் செயல்பாடுகளில் தேக்கத்தை உண்டு பண்ணவும் போக்கைத் திசை திருப்பவும் வந்தது போல அறிமுகமானது இந்திய அரசின் சங்கீத நாடக அகாடமியின் இளம் இயக்குநர்கள் ஊக்குவிப்புத் திட்டம். சுயேச்சையான நாடகக்குழுக்களாக - சமூக விமரிசனம் சார்ந்த நாடகங்கள் செய்பவர்களாக - ஆதிக்கக் கருத்தியலோடு உடன்பட மறுக்கிறவர்களாக உருவானவர்களை- உருவாக வேண்டியவர்களை, வேர்களைத் தேடும் நாடகக் குழுக்களாக - பாரம்பரியத்தில் பெருமிதங்கொள்ளும் நாடகக் கலைஞர்களாக, தேசிய அடையாளம் கொண்ட நாடக உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்பவர்களாக மாற்றிக் கட்டமைத்தது அந்த ஊக்குவிப்புத் திட்டம்.

சங்கீத நாடக அகாடமியின் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள், அந்தந்த மாநிலத்தின் பாரம்பரிய அரங்கின் அரங்க மொழியைக் கண்டறிந்து, அதனூடாக நாடகப் பிரதியை மேடையேற்றிட வேண்டும் என நிர்ப்பந்தம் செய்தது. இந்த நிர்ப்பந்தத்தினை ஏற்றுக் கொண்ட நிலையில் உள்ளடக்கத்தில் செயல்பட வேண்டிய நவீனத்தின் செயல்தளம் பின்தங்கியது. இந்திய அதிகாரத்துவக் கருத்தியலின் வாகனமான புராண இதிகாசங்களின் கதைக் கூறுகள் புதிய அரங்க மொழியில் மறுவிளக்கம் செய்யப்பட்டன. அக்கருத்தியலோடு மோதி உள்வாங்கப்பட்டு அதன் சாயலோடு விளங்கிய நாட்டார் கதைகள் புதுவகைப் பிரதிகளாக்கப்பட்டன. சமகால மனிதர்களின் உடைகளோ, ஒப்பனைகளோ நாடகமேடைக்கு அந்நியமானவைகள் என ஒதுக்கப்பட்டன. ஆனால் அதன் பார்வையாளர்களோ கிராமங்களிலிருந்து பிய்த்துக் கொண்டு வந்து நகர வாசிகளாக மாறியிருந்த தமிழர்கள் அல்லது இந்தியர்கள். அவர்களிலிருந்து ஒரு சிறு கூட்டம் புதுமையை விரும்பும் - ஆதரித்துவிடும்- மனநிலையோடு பார்வையாளர்களாக ஆனார்கள்.

1984 முதல் 1994 வரை பத்தாண்டுகாலம் செயல்பட்ட சங்கீத நாடக அகாடமியின் இளம் இயக்குநர்கள் திட்டம் நாடகக் கலைஞர்களை- நாடகத்துறை சார்ந்து சமூக அக்கறையை வெளிப்படுத்த நினைத்தவர்களை,

அங்கீகாரத்திற்கு அலைபவர்களாகவும் தேசியஅளவில் அறிமுகம் தேடுபவர்களாகவும், மிகுதியான பணச் செலவில் மேடைப் பிருமாண்டம் ஒன்றைச் செய்து விடும் கனவுகள் நிரம்பியவர்களாகவும் மாற்றி விட்டு நின்று போனது. 1994-க்குப் பின் அகாடமியின் நிதியுதவியும் நாடக விழாக்களும் நின்றுபோன நிலையில் நவீன நாடகக் குழுக்கள் செயல்பாடற்றனவாகச் சிதறுண்டு நின்றன. அதுவே அதிகார மையத்தின் நோக்கமாகக் கூட இருக்கலாம். [பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது]

இளம் இயக்குநர் திட்டத்தினைக் கைவிட்ட மைய சங்கீத நாடக அகாடமி 1995 -இல் வேறு ஒரு திட்டத்துடன் களமிறங்கியது. இளம் நாடகாசிரியர் 'களின் உருவாக்கம் என்னும் திட்டம் முதன் முதலில் தமிழில்தான் தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் மலைச்சாமி எழுதிய முனி என்ற நாடகமும் தேவி பாரதி எழுதிய மூன்றாவது விலாஎலும்பும் விழுது களற்ற ஆலமரமும் என்ற இரு நாடகங்களும் தேர்வு பெற்றன. அவ்விரு நாடகங்களையும் இயக்கும் இயக்குநர்களாக மு.இராமசுவாமியும் ரா.ராசுவும் நியமிக்கப்பட, ஒரு மாத காலம் ஒத்திகைகளும் நடந்தன. ஆனால் இயக்குநர் x நாடகாசிரியன் என்ற முரண்பாட்டின் வெளிப்பாடாக அவ்விரு பட்டறைகளும் அமைந்து போக அத்திட்டத்தை அகாடமி கைவிட்டது.

மைய சங்கீத நாடக அகாடமியின் இளம் இயக்குநர் திட்டமும், அதன் தொடர்ச்சியான இந்தியத்தனம் நிரம்பிய நாடகப் பிரதிகளுக்கான தேடலும் உண்டாக்கிய மாற்றத்தைக் குறிக்க, 'ஒரடி முன்னால் ஈரடி பின்னால்' என்ற புகழ்பெற்ற வாக்கியத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். கதாபாத்திரங்களை முன்னிறுத்தி, அவர்களின் செயல்பாடுகளின் மூலம் முரண்களை அடையாளப்படுத்திய இந்நாடகப் பிரதிகள், நவீனத்துவத்தின் மீதான அபரிமிதமான விருப்பத்தைக் கைவிட்டன. அத்தோடு மேடை யேற்றத்தின்போது நிரப்பப்பட வேண்டிய இடை வெளிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தன. பாரம்பரியக் கலைகளின் அசைவுக் கூறுகளையும் சடங்குகள் சார்ந்த வினைகளையும் கொண்டு அந்த இடைவெளிகள் நிரப்பப்பட்டு மேடையேற்றத்திலேயே அப்பிரதிகள் முழுமையடைந்தன. இந்தப் பிரதிகளின் வரவோடு தமிழ் அறிவுலகச் சொல்லாடல்களாக அமைப்பியல், குறியியல், நேர்கோடற்ற கதையாடல், பின் நவீனத்துவம் போன்றனவும் வந்திருந்தன என்பதையும் நினைவில் கொண்டு வர வேண்டும். குறியீட்டு அம்சங்கள் கொண்ட அரங்க அமைப்பு, உடை, ஒப்பனை, ஒளியமைப்பு போன்றவற்றைத் தவிர்க்கவியலாத அம்சங்களாக்கின இந்நாடகங்கள். மொத்தத்தில் பார்வையாளர்களைத் தேடிச் சென்ற அரங்க நிகழ்வைத் திரும்பவும் ப்ரொஸீனிய அரங்கின் வெளிச்ச ஜோடனைகளுக்குள்ளும் சமயச் சடங்குகளின் அசைவுகள் என்னும் அழகிய - -லுக்குள்ளும் கொண்டு போய்ச் சேர்த்தன.

நவீனத்தின் பரவலும் விமரிசன மனோநிலையில் தாக்கமும் தடுத்து நிறுத்தப்பட்ட நிலை-சிதறுண்ட நிலை நாடகத்தில் மட்டுமே நடந்துவிட்டது என்பதாகத் தோன்றவில்லை. எல்லாவிதமான நவீனப் படைப்பு - -களிலும் சிந்தனைகளிலும் இச்சிதறடிப்பைக் காட்ட முடியும் என்றே தோன்றுகிறது. சாதியமைப்பைக் கேள்விக்கு உள்ளாக்குவனவாகத் தொடக்கம் கொண்டிருக்க வேண்டிய நவீனத்துவத்தின் கீற்றுக்களைப் பாரம்பரியத் தேடல்களுக்குள் நுழையச் செய்ததில் முதன்மையான தடைக்கல் சாதி அமைப்புதான் என்பது உணரப்படாமல் போனதில் உள்ள அரசியல் இன்னும் உணரப்பட்டதாகத் தெரியவில்லை.

1990-களின் மத்தியில் பேச்சுக்களாக மாறியுள்ள தலித் என்னும் தனித்துவம் அரங்கவியலுக்குள்ளும் புகுந்துள்ளது. இத்தனித்துவம் சாராம்சத்தில் படைப்பின் - எழுத்தின் - மையத்தைப் பார்வையாளர் களிடம் நகர்த்தும் நோக்கம் கொண்டது. இந்நோக்கத்தோடு அத்தனித்துவம் நாடகப்பிரதியில் புதிய சுவடுகள் எதையும் பதிக்கவில்லை. இடைவெளிகள் கொண்ட எழுத்து, கதைசொல்லும் மரபு, நடப்பியல் பாணி என்று ஏற்கனவே உள்ள ஏதாவதொரு வடிவத்தின் நீட்சியாகவே உள்ளன. கே.ஏ. குணசேகரனின் தலித் நாடகங்கள் கதை சொல்லும் பாணியிலானவை. ரவிக்குமாரின்,'வார்த்தை மிருகம்,' பிரேமின், 'பாறையைப் பிளந்து கொண்டு' ஆகியன இயக்குநருக்கு அதிகாரமளிக்கும் இடைவெளிகள் கொண்ட பிரதிகள். ஜீவாவின் பிரதிகள் பார்வையாளர்களிடம் முறையிடும் தொடக்கம், திருப்பம், உச்சம் என்ற நடப்பியல் வடிவங்கள். இவைகள் வெவ்வேறு ரூபத்தில்

இருந்தாலும் தலித் பார்வையாளர்களை மட்டும் நோக்கி நீள்வன என்பதில் மாறுபாடுகள் இல்லை.

தமிழ் நவீன நாடகப்பிரதிகளில் அடையாளப்படும் கதைசொல்லல் வடிவம், வடிவச்சீர்மை வடிவம் என்ற இரண்டிலிருந்தும் வேறுபட்ட நாடகப் பிரதிகள் சிலவும் தமிழில் அச்சாகியுள்ளன. ஒருவித நேர்கோடற்ற தன்மையிலும், நிகழ்வுகளின் போது தொடர்ச்சியற்ற பாங்கும், மொழியில் இருண்மையின் தூக்கலும் கொண்ட பிரதிகள் அவை. இவ்வம்சங்கள் காரண--மாகவே இப்பிரதிகள் மேடையேற்ற வாய்ப்புக்கள் இன்றி அச்சில் மட்டும் உள்ளன.

எம்.டி. முத்துக்குமாரசாமியின், 'சைபீரிய நாரைகள்' 'இனி, இங்கு வரப்போவதில்லை', 'குதிரைக்காரன் கதை', பிரேமின் 'ஆதியிலே மாம்சம்' இருந்தது, 'அமீபாக்களின் காதல்', எஸ்.ராமகிருஷ்ணனின் 'இருநாடகங்கள்' முதலியன அத்தகைய நாடகங்கள். நாடக அரங்கேற்றத்தில் தொடர்ந்து செயல்படும் வேலு சரவணனின் 'குழந்தைகள் நாடகங்கள், முருகபூபதியின், 'சோதனை முயற்சிகள்' போன்ற--வற்றிலும் இந்தத் தொடர்ச்சியற்ற தன்மைகள் உண்டு.

முடிவுரை

தமிழ் நவீன நாடகங்கள் பற்றிய பேச்சு அல்லது சொல்லாடல் என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல. அப்பேச்சு ஒரு விதத்தில் தம்காலக் கலை, இலக்கிய முயற்சிகள் மீதும், சமூக இயக்கப் போக்குகள் மீதும் அதிருப்திகளை வெளிப்படுத்திய இளைஞர்களைப் பற்றிய பேச்சு. இன்னொரு விதத்தில் தமிழ் நாடகக்கலைக்கு இந்திய அடையாளத்--தினையும் தமிழ் அடையாளத்தினையும் கொடுக்க மேற்குலகச் சிந்தனைகளை உள்வாங்க முயன்ற சோதனைகளின் வெளிப்பாடுகளைப் பற்றிய பேச்சு. இப்படிச் சொல்வதற்குப் பதிலாக வேறுவிதமாகச் சொல்லிப் பார்க்கலாம். நாடக எழுத்துக்களில் நவீன மனிதனையும் அவனது சிக்கல்களையும் அடையாளப்படுத்திட முயன்ற எழுத்தாளர்களைப் பற்றிய பேச்சாகவும் விதம்விதமாக மேடைக் காட்சிகளை அமைத்துப் பார்க்க முயன்ற அரங்கியல் செயல்பாட்டாளர்களின் வெளிப்பாட்டைப் பற்றிய பேச்சாகவும் இருக்கக் கூடியது. இதே நேரத்தில் அதனைத் தனிமனிதர்களாகவும் நிறுவனங்களின் உதவியோடும் நாடகக் கலையின் பரிசோதனைகளில் தொடர்ந்து ஈடுபட்ட ஒரு சிறு கூட்டத்தைப் பற்றிய பேச்சாகவும் இருந்தது என்றும் சொல்லலாம்.

தமிழின் நவீன நாடகங்கள் என்பன ஒட்டுமொத்த தமிழ் நிலப்பரப்பில் வாழும் மனிதக் கூட்டத்தின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் மிகச்சிறிய ஒன்றுதான். ஆனால் அவை தமது மொழிக்கும் அதன் வெளிப்பாட்டிற்கும் அதன்வழி உலகத்தோடு தொடர்பு கொள்பவர்களுக்கும் புதியனவற்றைக் கொண்டு வரவேண்டும் என்ற தீராத வேட்கையின் வெளிப்பாடு. அந்த வேட்கையின் பின்னால் தமிழர்களின் நிகழ்கால இருப்பில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் கிட்டும் என்ற இலட்சியப் பயணங்களும் கூட இருந்தன; இருக்கின்றன.

[தமிழ் நவீன நாடகத்தோடு தொடர்புடைய நாடகக் குழுக்கள், நாடக ஆசிரியர்கள், நாடக விழாக்கள், நிதிநல்கை நிறுவனங்கள் போன்றனவற்றின் பட்டியல் அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது.]

நவீன நாடகங்களின் பின்னணியில் மொழி பெயர்க்கப்பட்ட நாடகங்களின் ஆசிரியர்கள்

1. மோகன் ராகேஷ்-இந்தி - சரஸ்வதி ராம்நாத்
2. பாதல் சர்க்கார்- வங்காளம்- கோ.ராஜாராம், பானுமதி,திசு சதாசிவம்
3. கிரிஷ் கர்னாட்- கன்னடம்- விஜயலட்சுமி/ பாவண்ணன்
4. விஜய் தெண்டுல்கர்-
5. சந்திரசேகர கம்பார் -கன்னடம்- திசு சதாசிவம்/
6. சாமுவேல் பெக்கட்-ஐரிஷ்-
7. பெர்ட்டோல்ட் பிரக்ட்-ஜெர்மன் -திசு சதாசிவம்
8. யூஜேன் இயொனஸ்கோ-பிரெஞ்ச்-டி.எஸ்.தட்சணாமூர்த்தி/பென்னேஸ்வரன்
9. ஸீக்பிரிட் லென்ஸ்-நிரபராதிகளின் காலம்-தனுஸ்கோடி
10. ஜி.சங்கரப்பிள்ளை-மலையாளம்-ராமானுஜம்

அ]. நாடகங்களும் நாடக ஆசிரியர்களும்

ஆசிரியர்	நூலின் பெயர் -பதிப்பு ஆண்டு	பதிப்பு	இடம்பெற்றுள்ள நாடகங்கள்
ஆறுமுகம்.வ.	கருஞ்சுழி /2000	தலைக்கோல்,புதுவை14	1.கருஞ்சுழி 2.ஊசி
இந்திரா பார்த்தசாரதி	இராமாநுஜர்/1997 இந்திராபார்த்தசாரதி நாடகங்கள் /2000	தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-17 ராஜராஜன் பதிப்பகம் 19,கண்ணதாசன் சாலை தியாகராயநகர், சென்னை	இராமாநுஜர் 1.இறுதி ஆட்டம் 2.கொங்கைத்தீ 3.ஔரங்கசீப் 4.நந்தன் கதை 5.பசி 6.மழை 7.காலயந்திரங்கள் 8.புனரபி ஜனனம் புனரபி மரணம் 9.தர்மம் 1.போர்வை போர்த்திய உடல்கள்
இராமானுஜம்,சே.	இராமானுஜம் நாடகங்கள்	காவ்யா, 14,முதல் குறுக்குத்தெரு ட்ரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-24	1.புறஞ்சேரி 2.பிணம்தின்னும் சாத்திரங்கள் 3.சுமை 4.முகப்போலிகள் 5.சஞ்சயன் காட்சி தருகிறான் 6.அரவைஇயந்திரங்கள் 7.அக்கினிக்குஞ்சு 8.கேகயன் மடந்தை 9.வெறியாட்டம் 10.செம்பவளக்காளி 11.மௌனக்குறம்
இராமசுவாமி.மு	துர்க்கிர அவலம் 1986	மதுரை	துர்க்கிர அவலம்
செண்பகம் இராமசுவாமி	சாபம்! விமோசனம்.? /2000	ருத்ராபதிப்பகம், தஞ்சை-7	1.சாபம் விமோசனம் 2.புரட்சிக்கவி 3.ஆபுத்திரன்
பிரபஞ்சன்	முட்டை	அன்னம், சிவகங்கை	1.முட்டை 2.அகல்யா
முருகபூபதி	கூந்தல் நகரம்-2000	அனன்யா, தஞ்சாவூர்-5	1.சரித்திரத்தின் அதீத மியூசியம் 2.கண்ணாடியுள் அலைவுறும் பிம்பங்கள் 3.வனத்தாதி 4.தேகவயல் 5.ரகசிய நிழல்கள் 6.தனித்திருக்கப்பட்டவர்கள் 7.கூந்தல் நகரம் 1.செம்மூதாய்
பிரேமிள்	நக்ஷத்திரவாஸி-1993	முன்றில்,சென்னை	1.நக்ஷத்திரவாஸி 2.கூட்டியக்கம்
இன்குலாப்	ஔவை-1998	அகரம் , கும்பகோணம்	1.ஔவை 2.மணிமேகலை
ராம்.எஸ். எம்,ஏ	எப்போ வருவாரோ/1994	ராம்.எஸ். எம்,ஏ	1.சுயதர்மம் 2.மூடிய அறை 3.மணிமேகலையின் கண்ணீர் 4.எப்போ வருவாரோ
கே.ஏ.குணசேகரன்	பலிஆடுகள் 1999 சத்தியசோதனை-1998 பவளக்கொடி அல்லது குடும்பவழக்கு-2001	நவஜோதி பதிப்பகம் என்சிபிஎச்,சென்னை அடையாளம் வெளியீடு, கருப்பூர்	1.பலி ஆடுகள் 2.அறிகுறி 3.பாறையைப் பிளந்துகொண்டு 4.கனவுலகவாசி 5. தொட்டில் தொடங்கி 1.சத்தியசோதனை 1.பவளக்கொடி

இளையபத்மநாதன்		அலைகள்	ஒரு பயணத்தின் கதை தீனிப்போர்
காந்தி மேரி.எம்.எஸ்	காட்டுக்குள்ளே திருவிழா-1999		சிறுவர் நாடகங்கள்
ஞாநி	பலூன்-1981 1983	ஞானபானு வெளியீடு சென்னை	பலூன்
ரமேஷ்;பிரேம்	அம்பாக்களின் காதல்	அம்பா,புதுவை	1.ஆதியிலே மாம்சம் இருந்தது 2.அம்பாக்களின் காதல்
ஞான ராஜசேகரன்	வயிறு-1980	அன்னம் ,சிவகங்கை	1.வயிறு 2.மரபு 3.பாடலிபுத்திரம்
எம்.டி.முத்து குமாரசாமி	காலச்சுவடு வெளி	நாகர்கோயில், சென்னை	1.சைபீரிய நாரைகள் இனி இங்கு வரப்போவதில்லை 2.குதிரைக்காரன் கதை
எஸ். ராமகிருஷ்ணன்	வெளி	சென்னை	1.உருளும் பாறைகள் 2.தனித்திருக்கப்பட்டவர்கள் 3.சூரியனின் அறுபட்ட சிறகுகள் 4.அரவான்
இரவி	நிலாக்கூட்ட விருந்து 2004	விற்பனை உரிமை சுதர்சன் புக்ஸ்	1.நிலாக்கூட்டவிருந்து 2.சின்ன சின்ன எலிகள் 3.டாரோவும் பாட்டியும் 4.பாண்டோராவின் பெட்டி 5.நிலவைத் தேடி 6.ஒரு கழுதையின் கதை 7.கானக ரத்தினம். 8.மழைக் காளான், 9. மந்திர ஆப்பிள் 10.நீலக்குதிரை
நிஜந்தன்	அழிதல் காணும் காலம் -1992	அரூபம் ,சென்னை	1.மிச்சம் 2.மீட்பின் முயற்சியில் 3.நிலைப்பு 4.ஒய்தல் பொழுது 5.இசைபட இழத்தல் 6.அழிதல் காணும் காலம்

ஆ] நாடகக்குழுக்கள்

1.பரீக்ஷா,சென்னை-1978

2.வீதி,சென்னை-1978

3.கூத்துப்பட்டறை, சென்னை-1977

4.நிஜநாடக இயக்கம், மதுரை-1978

5 முத்ரா, சென்னை-1982

6. எது..? சென்னை -1988

7. சுதேசிகள்,மதுரை-1988

8. ஒத்திகை, மதுரை-1991

9. தியேட்டர் லெப்ட், மதுரை-1991

10.தளிர் அரங்கு, காந்திகிராமம்- 1986

11.துளிர், தஞ்சை-1987

12.அரங்கம், தஞ்சாவூர்-1988

13.ஜ்வாலா,மதுரை-1988

14.ஐக்யா,சென்னை-1989

15.யவனிகா,சென்னை-1991

16,Audio Visual People, Chennai- 1991

17.திருச்சி நாடக சங்கம்-1990

18.சென்னைப் பல்கலை அரங்கம்-1989

19.களம், ன்னை-1993

20.கூட்டுக்குரல், புதுவை- 1992

21.ஆர்டிஸ்ட், புதுவை 1994

22.ஆழி, புதுவை 1994

23. தன்னானே கலைக்குழு, புதுவை 1994

இ] நாடகவிழாக்கள்

1.சங்கீத நாடக அகாடமியின் மண்டல மற்றும் தேசிய நாடகவிழாக்கள்-1984-1993

2.மதுரையில் நிஜநாடக இயக்கம் நடத்திய நாடகவிழாக்கள்-1988,1990.1992

3.கூத்துப்பட்டறையுடன் இணைந்து புரிசைத் துரைசாமித் தம்பிரான் குழுவினர் நடத்திய நாடகவிழாக்கள்-1989,1990

4.திருச்சியில் நடந்த பாதல் சர்க்கார் நாடகவிழா-1989

5. சுபமங்களா ஆசிரியராக இருந்த கோமலின் முயற்சியில் நடந்த, ஸ்ரீராம் குருப்பின் நிதியுதவியுடன் நடந்த நாடகவிழாக்கள்- 1989,1992,1993,1994

6.புதுச்சேரியில் தலைக்கோல் குழுவினர், களம் அமைப்பினர், சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப்பள்ளியின் தேர்வுக்கான தயாரிப்புகள் எனச் சில.

7.1990களில் மதுரை, புதுவை, நெய்வேலி, கடலூர், தஞ்சை எனப் பல இடங்களில் நடந்த தலித் கலைவிழாக்கள்

8. பிற மாநிலங்களில் நடைபெறும் மண்டல நாடகவிழாக்கள்

9.ஜெர்மன் தூதராலயத்துடன் இணைந்த மாக்ஸ்முல்லர் பவன், சென்னை, அல்லியான்ஸ் பிரான்சே, சென்னை, புதுவை ஆகியவற்றின் ஆதரவுடன் நடந்த நாடகவிழாக்கள்

1.பரிக்ஷா மேடையேற்றியுள்ள நாடகங்கள் (1978, நவம்பர் தொடங்கி)

1. இந்திராபார்த்தசாரதி - போர்வை போர்த்திய உடல்கள்

2. அம்பை - பயங்கள்

3. ந.முத்துசாமி - நாற்காலிக்காரர், கட்டியக்காரன்

4 அறந்தை நாராயணன் - மூர் மார்க்கெட்

5 ஞாநி- ஏன்,பலூன், ஸ்ரீமான் பொதுஜனம்

6. பிரபஞ்சன் - முட்டை

7 ஜெயந்தன் - மனுஷா மனுஷா

8. கே.வி. ராமசாமி - ஹிரண்யன்

9 வெங்கட்சாமி - ஸ்ரீமான் பொதுஜனம்

10. கே.எஸ் .ராஜேந்திரன்- வரிசை

11.கங்கை கொண்டான் - ஊர்வலம்

12 பாதல் சர்க்கார் - தேடுங்கள், முனியன், பிறகொரு இந்திரஜித்.

13.ரஞ்சித் ராய் சௌத்ரி - பாரத தர்மம்

14.அ.ராமசாமி - பல்லக்குத் தூக்கிகள்

15 சி.என். அண்ணாதுரை - சந்திரமோகன்

பூமிகா (ஞாநியின் துணைவி பத்மாவின் வழிநடத்துதலில் இயங்கிய நாடகக் குழு)

1. சுஜாதா - சரளா, இரு கடிதங்கள்
2.அம்பை - பயங்கள்

2.கூத்துப்பட்டறை (1980 தொடங்கி)

1.ந.முத்துசாமி/ கிருஷ்ணமூர்த்தி - சுவரொட்டிகள் - 1980
2. ந.முத்துசாமி/ மானவேந்திரநாத், கிருஷ்ண மூர்த்தி - உந்திச்சுழி-1981
3. ந.முத்துசாமி/ கோபாலகிருஷ்ணன் - விறகு வெட்டி - 1983
4.கே.எஸ்.ராஜேந்திரன் - பண்டிதர் மூவரும் மாண்டதொரு சிங்கமும்-1985
5. அவரே - அமைதி கோர்ட் நடந்து கொண்டிருக்கிறது - 1985
6.வ.ஆறுமுகம் - இடதுசாரிக்காகக் காத்திருத்தல்-1985
7. அவரே - முற்றுகை,சுவரொட்டிகள்-1987
8.தனுஷ்கோடி - நிரபராதிகளின் காலம்-1989
9.ந.முத்துசாமி - இங்கிலாந்து, தூதகடோத்கஜம்-1989
10.சே.ராமானுஜம் - நாற்காலிக்காரர்,-1989, அண்டோரா-1992
11. பிரசன்னா ராமசாமி, பாகீரதி, ஜான் மார்ட்டின் - கோணிக்காரன்- 1990
12. அன்மோல் வெலானி- இங்கிலாந்து -1990
13. பிரவீன் - காம்யூவின் காலிகுலா-1994,
14. ந. முத்துச்சாமியின் தலை

3.நிஜநாடக இயக்கம் (1978 தொடங்கி)

1. பண்டிதர் மூவரும் மாண்டதொரு சிங்கமும்-1978
2.நல்வாழ்வை நோக்கிப் பீடு நடைபோடுகிறது நாடு.
3.ஆஸ்தான மூடர்கள் -1978
4.வெத்துவேட்டு -1979
5. கபாடி மேட்ச் -1979
6. என் பிரியத்திற்குரிய-1980
7. பிணந்தூக்கிகள்-1981
8.நியாயங்கள்-1981
9. துண்டு- 1981
10. பாதுகாவலன் -1982
11. பலூன் -1982
12.நவீன குசேலர்-1983
13. அர்த்தநாரீஸ்வரர்-1983
14. இந்தியா டுடே-1983
15. துர்க்கிர அவலம்-1984
16. சாபம்.! விமோசனம்..?-1987
17. ஸ்பார்ட்டகஸ்-1989
18. இரைச்சல் -1989
19. புரட்சிக்கவி-1990
20. பட்டணம் போகும் பாகவதர்கள் -19
21. இருள் யுகம்-1994
22. முனி-1995
23. கலிலியோ-1998
24. சாம்பான்
25. கலகக்காரர் தோழர் பெரியார்-2004

துணை நின்ற நூல்கள்

அண்ணாமலை,சி., (2003) ; நாடகம் பதிவும் பார்வையும், காவ்யா, சென்னை-24 (2004); கலைவெளி மதில், காவ்யா, சென்னை-24(2004); தமிழில் நாடகப் பதிவுகள், காவ்யா, சென்னை - 24

இராமசுவாமி,மு., (1998); தமிழ் நாடகம் நேற்று இன்று நாளை, ருத்ரா தஞ்சாவூர் -7

இராமசுவாமி, மு., முருகேசன், கு. கோவிந்தசாமி,பெ.(பதி) (1999) ; இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை,113

குணசேகரன்,கே.ஏ.,(1999); இன்றைய தமிழ் நாடகச் சூழல், தன்னானே, பாண்டிச்சேரி,-8

பகவதி.கு.,(பதி) (2000); தமிழ் நாடகம்நேற்றும் இன்றும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 113

மங்கை.அ. (2001); பெண்-அரங்கம் தமிழ்ச்சூழல், ஸ்நேகா,சென்னை

"இராமசாமி,அ.,(1992); நாடகங்கள் விவாதங்கள், ஒப்பனை, புதுவை

(1999) ; ஒத்திகை, விடியல், கோவை

ஈ] மைய சங்கீத நாடக அகாடமி நடத்திய இளம் இயக்குநர்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம்

நாடகம்	குழு	இயக்குநர்	விழா	ஆண்டு
துர்க்கிர அவலம்	நிஜநாடக இயக்கம்	மு.ராமசுவாமி	மண்டலம்- பெங்களூர் தேசியம்- புதுடெல்லி	1984
கட்டியங்காரன்	கூத்துப்பட்டறை	கே.எஸ்.ராஜேந்திரன்	எர்ணாகுளம்- மண்டலம்	1985
நந்தன் கதை	தளிர் அரங்கு	ரா.ராசு	மைசூர், டெல்லி	1986
சாபம்!விமோசனம்?	நிஜநாடக இயக்கம்	மு.ராமசுவாமி	சென்னை	1987
கடவுள்	எது.?	மு.நடேஷ்	திருவனந்தபுரம்	1988
கொங்கைத்தீ	அரங்கம், தஞ்சை	ரா.ராசு	பாண்டிச்சேரி	1989
கருஞ்சுழி நாயைப்பறிகொடுத்தோம்	தலைக்கோல் தளிர் அரங்கு	ஆறுமுகம்.வ குருவம்மாள்	விஜயவாடா „	1990 „
தீனிப்போர்	பல்கலை அரங்கம்	மங்கை	மைசூர்	1991
உருளும் பாறைகள் ஊசி	சுதேசிகள், மதுரை தலைக்கோல்	ஆறுமுகம்.வ	ஹைதராபாத் „	1992 „
பனிவாள்	ஆழி, புதுவை	வேலு சரவணன்	மதுரை	1993



அங்கதத்திற்கு ஒரு மீரா



முனைவர் நிர்மலாமோகன்,
மதுரை.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் வகுத்துக் கொண்ட கவிஞர் மீரா என்னும் மீ.இராசேந்திரன், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே கவிதை படைக்கத் தொடங்கியவர். தொடக்க காலத்தில் மரபுக் கவிதைகள் மட்டுமே பாடிவந்த கவிஞர் மீரா, காலத்தின் கட்டாயத்தினால்–தேவையினால்–புதுக்கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தார். அப்துல்ரகுமான், நா.காமராசன், சிற்பி போன்ற வானம்பாடிக் கவிஞர்களோடு ஒன்றிணைந்து சோதிமிகு நவ கவிதைகளைப் படைக்க முற்பட்டார்.

கவிதைத் தலைப்பைப் படிக்கும் பொழுதே அதை எழுதிய கவிஞருக்கு எதில் ஈடுபாடு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளமுடியும். ஒருவருக்குப் படிமம் என்றால், மற்றவர்க்குக் குறியீட்டு உத்தி கைகொடுக்கும்; வேறு ஒருவர்க்கு முரண் உத்தி படிந்து வரும்; பிறிதொருவர்க்குத் தொன்மம் இயல்பாக வரும். உவமை, உருவகம், படிமம், குறியீடு, தொன்மம், முரண் என்னும் உத்திகளின் அடிப்படையில் கவிஞர்கள் தம் கவிதைகளைப் படைப்பதுபோல் மீரா என்றாலே அவரது முதல் புதுக்கவிதைத் தொகுதியான 'ஊசிகள்' உடனே நம் நினைவுக்கு வரும். 'ஊசிகள்'–பெயருக்கு ஏற்றாற்போல் கேலி, கிண்டல், குத்தல், எள்ளல் என்னும் அங்கதச் சுவைபட, இச்சமுதாயத்தை, சமுதாயத்தின் குறைபாடுகளை, தனிமனிதனின் இயல்புகளை எடுத்துக் காட்டும் சிறந்த தொகுப்பு. 'அங்கதத்திற்கு ஒரு மீரா' என்று கூறும் அளவிற்கு அவரது கவிதைகளில் மறைந்து காணப்படும் அங்கத உத்தியை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

அங்கதம் – விளக்கம்

'வெளிப்படையாகக் கூறுதல்', 'கரந்த மொழியிற் கூறுதல்' என அங்கதம் இரு வகைப்படும் என்கிறது தொல்காப்பியம்.

"அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள், கரந்தது எனஇரு வகைத்தே"
"செம்பொரு ளாயின் வசைஎனப் படுமே"
"மொழி கரந்து சொல்லின் அது பழிகரப்பாகும்"
"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்"

(செய்யுளியல், நூ.123, 125, 128)

என்னும் நூற்பாக்கள் அங்கதம் என்பதற்கு உரிய விளக்கத்தினை அளிக்கின்றன. "ஒருவனுடைய குறையையோ, ஒரு சமூகத்தாரின் குறையையோ, அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப் படையாகவும் குறிப்பாகவும் கூறுதல் அங்கதமாகும். அங்ஙனம் கூறுங்கால் நகைச்சுவை தோன்றக் கூறுதல் இன்புறத்தக்கதொன்றாகும்" என்று அங்கதத்திற்குப் பண்டிதமணி மு.கதிரேசனார் தரும் விளக்கமும் இங்கே நினைவு கூரத்தக்கது.

(உரைநடைக் கோவை, இரண்டாம் பகுதி, ப.75)

கவிஞர் மீராவின் கவிதைகளில் அங்கதம்

"என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகையில் உலாவுவதைவிடச் சமுதாய நடைபாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன்" (ஊசிகள், 'பரிசோதனை', ப.3) என்று கூறும் கவிஞர் மீரா,

சமுதாய நடைபாதைகளைச் செப்பனிடுவதற்கு அங்கதத்தை நல்லதொரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். மெல்லிய நகைச்சுவை உணர்வு விளங்கும் வண்ணம் அவர் அங்கதக் கவிதைகளைப் படைத்துத் தந்துள்ளார்.

அரசியல் அங்கதம்

மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்றைய அரசியல்வாதிகள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களின் கவனம் நாட்டை முன்னேற்றுவதில் இருக்கிறதா? அல்லது வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில்தான் இருக்கிறதா? இல்லை, இல்லை. கட்சி விட்டுக் கட்சி தாவுவதில்தான் இருக்கிறது என்பதை வேகம் என்னும் தலைப்பில் அமைந்த மீராவின் கவிதை நயமாக எடுத்துக் காட்டுகிறது. அக்கவிதை வருமாறு :

"எங்கள் ஊர் எம்.எல்.ஏ./ ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை/ கட்சி மாறினார்
மின்னல் வேகம்/ என்ன வேகம்?
இன்னும் எழுபது/ கட்சி இருந்தால்
இன்னும் வேகம் காட்டி இருப்பார் . . .
என்ன தேசம்?/ இந்தத் தேசம்?"

(ஊசிகள்,ப.3)

அரசியல் வாதிகள் கட்சி மாறும் வேகத்தை மின்னலோடு ஒப்பிட்டுக் காட்டும் கவிஞர், 'இன்னும் எழுபது கட்சி இருந்தால் இன்னும் வேகம் காட்டியிருப்பார்' என்னும் இடத்தில் அரசியல்வாதியைக் குட்டும் கவிஞர், 'என்ன தேசம் இந்தத் தேசம்' என்னும் இறுதி வரியில் தமது ஆழ்ந்த ஆற்றாமையைப் புலப்படுத்தியுள்ளார்.

பதவி வெறியில்லாத அரசியல்வாதியை இன்று காண முடியாது. 'ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது பழமொழி. இப்பழமொழியின் அடிப்படையில் அரசியல்வாதியின் பதவி வெறியைக் கிண்டல்பண்ணுகிறார் கவிஞர் மீரா. 'ஆனை மாதிரி' என்பது கவிதையின் தலைப்பு.

"அப்புசாமியின்/அப்பா/ஆனை மாதிரி!
இருந்தபோது/ எம்.பி.
இறந்த போது/ சிவலோக பதவி . . . .
அப்புசாமியின்/ அப்பா/ ஆனைமாதிரி"

(ஊசிகள்.ப.22)

சுதந்திரத்திற்கு முன்னால் 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று முழங்கிய அரசியல்வாதி, சுதந்திரத்திற்குப் பின்னால் 'சரண்டல் எனது பிறப்புரிமை' என்று கூறும் அளவிற்கு மாறிவிடுகிறார். இம்மாற்றத்தை ஒரு கவிதையில் அருமையாகச் சுட்டுகிறார் கவிஞர் மீரா. 'பழக்கம் பொல்லாதது' என்னும் தலைப்பில் அமைந்த அக்கவிதை வருமாறு:

"ஆராவமுதன்/ அமைச்சர் பதவியை
இழந்து வருந்தி இருந்த ஓர் இரவில்
அருகில் தூங்கிய/ ஆசை மனைவியை
சும்மா சும்மா/ சுரண்டலானார்
அம்மா கேட்டார் ஆத்திரத்தில்
ஏன்தான் உங்களுக்கு/ இன்னும் அந்தப்
பொல்லாப் பழக்கம்/ போகவில்லையோ!

(ஊசிகள்.ப.19)

"அங்கதம் என்பது கத்தியைப் போல வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என இருக்க வேண்டும். மாறாக, ரம்பத்தைப் போல இழுத்துக் கொண்டே இருக்கக்கூடாது" (Satire should be like a sword, but not a Saw; it should cut and not mangle) என்று ஆங்கில அகராதி குறிப்பிடுவது போல, கவிஞர் மீராவின் அரசியல் அங்கதக் கவிதைகள் விளங்குகின்றன.

சமுதாய அங்கதம்

அரசியல் அங்கதத்திற்கு அடுத்து மீராவின் கவிதைகளில் சிறப்பிடம் பெறுவது சமுதாய அங்கதம் ஆகும். இன்றைய சமுதாய அவலங்களை அங்கதச் சுவையோடு சித்திரிப்பதில் மீராவுக்குத் தனி ஈடுபாடு உள்ளது. மரபுக் கவிதைகளில் ஆழ்ந்த பயிற்சியும் ஆர்வமும் கொண்ட அவர் பழமையான கருத்துகளைப் புதுமையான கண்ணோட்டத்துடன் படைத்துச் செல்கின்றார். ஓர் எடுத்துக்காட்டு;

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

எனக் குறுந்தொகைப் பாடல் ஒன்று அன்றைய காதலுக்கு இலக்கணம் சொல்கின்றது. ஆனால் இன்றைய காதல் அப்படி இருக்கிறதா? 'காதலிலும் கலப்படம் வந்துவிட்டதே' என்று ஒரு புதுக்கவிஞர் வருந்துவதைப் போல இன்றைய சூழலில் மாறிவிட்ட காதலைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர் மீரா. இன்றைய 'நவயுகக் காதல்' எப்படி இருக்கிறது? இதோ மீராவின் கவிதை இப்படிச் சொல்கிறது:

உனக்கும் எனக்கும்/ஒரே ஊர்/ வாசுதேவநல்லூர்
நீயும் நானும் ஒரே மதம்/ திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்/ வகுப்புங்கூட
உன்றன் தந்தையும்/ என்றன் தந்தையும்
சொந்தக்காரர்கள் மைத்துனன்மார்கள்
எனவே/ செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

(ஊசிகள். ப.48)

இன்றைய நிலையில் ஊர் பார்த்து, உறவு பார்த்து, சாதி பார்த்து, மதம் பார்த்து, கணக்குப் பார்த்து வருகின்ற காதல்தான் வெற்றி அடைகின்றதாம். கவிஞரின் ஏளனத்தைப் பாருங்கள்!

ஊழல்

இன்று அரசு நிறுவனங்களிலும் ஊராட்சி மன்றங்--களிலும் அலுவலகக் கூடங்களிலும் ஊழல் என்னும் கொடிய அரக்கனின் நடமாட்டம் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறது. 'ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு' என்பது போலக் காத்திருக்கும் ஊழல் பேர்வழிகளை நயமாகச் சாடுகிறது ஒரு கவிதை:

"வீர வலசை/ விவசாயி போல
மாறுவேடத்தில்/ மந்திரி வந்தார்
ஆட்சித் தலைவர்/ அலுவலகத்தில்
உட்கார்ந்திருந்தவோர் ஊழியரிடம் போய்
விவரம் ஏதோ/ வேண்டும் என்றார்;
இரண்டு தாளை/ எடுத்து நீட்டினார்
மாட்டேன் என்றே/ மறுத்தார் ஊழியர்
மந்திரி மகிழ்ந்தார்;
தம்துறைஊழியர்/நேர்மையை நினைத்து
நெஞ்சங் குளிர்ந்து/ சென்றார் வெளியே . . .
சென்றதும் ஊழியர்/ திருவாய் மலர்ந்தார் . . .
பத்து ரூபாய்க்கா/ பார்த்துச் சொல்வேன்
அவ்வளவு எளிதாய்? அலையவிட்டுநான்
அப்புறம் கறப்பேன்/ அறுபது எழுபது . . ."

(ஊசிகள்.பக்.38–39)

மரபுக் கவிதையில் அங்கதம்

அங்கதம் என்பது தனிமனிதனின் குறையையோ, சமூகத்தாரின் குறையையோ அவர்தம் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் சுட்டுவது ஆகும். தத்தம் எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆர்வம் இருக்கும். குருவி சோதிடத்தின் வழி தன் எதிர்காலத்தை அறிய நினைக்கும் ஒரு மனிதனின் பலவீனத்தை அங்கதச் சுவைபட எடுத்துக்காட்டுகிறது, 'மீசை இருந்தது' என்னும் தலைப்பில் அமைந்த மரபுக் கவிதை. இதோ அது :

"ஆல மரத்தின் அடியில் ஒருவன்
சிட்டுக் குருவியைச் சீட்டுக் குருவியாய்
ஆக்கி ஏதோ அளந்து கொண்டிருந்தான்;
'எதிர்காலத்தைப் பார்க்கலாம்' என்று நான்
கேட்க காசளித்தேன் அவனிடம். உடனே
கூண்டைத் திறந்தான்; குருவி வந்தது;
வந்த குருவி வழக்கப் படியோர்
சீட்டை எடுத்துக் கொடுத்துச் சென்றது;
அதனை, விரித்துப் படித்தேன், 'விரைவில் நல்ல
அம்சமும் செல்வமும் அமையப் பெற்ற,
கணவன் கிடைப்பான், கவலைப்படாதே'
என்றச் சீட்டில் எழுதியிருந்தது!
சீட்டைப் போட்டுச் சிரித்தேன்; ஒருகால்
மங்கையாய் இந்நேரம் மாறியிருக்கலாம்
என்று நிசமாய் எண்ணிப் பயந்து
மீசையைத் தடவிப் பார்த்தேன்!
மீசை இருந்தது மிகப்பெரி தாகவே! . .

(மீரா கவிதைகள், ப.145)

குருவி எடுத்துக் கொடுத்த சீட்டில் எழுதப் பெற்றிருந்த வாசகத்தைப் படிக்கும் நமக்குச் சிரிப்புப் பொங்கி வருகின்றது; தொடர்ந்து 'மீசை இருந்தது மிகப் பெரிதாகவே' என்ற கவிதையின் கடைசி வரியைப் படிக்கும்போது நம்மிடம் இருந்து பெருஞ்சிரிப்பு வெளிப்படுகின்றது. இன்றைய மனிதன் மறைவாகத் தனக்குள்ளே மூடநம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருப்பதை இக்கவிதை தனக்கே உரிய அங்கதப் பாணியில் சாடுகின்றது.


முடிவுரை

"ஒன்றன் நிலை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கும் அது எப்படி இருக்கிறது என்பதற்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்த முயல்வது அங்கதமாகும்" '(Satire is always conscious of difference between what things are and what they ought to be -Arthur Pollard, Satire, P. 2) என்று அறிஞர் ஆர்தர் பொலார்டு குறிப்பிடுகின்றார். அங்கதத்திற்கு ஆர்தர் பொலார்டு தரும் இவ்விளக்கம், கவிஞர் மீராவின் கவிதைகளுக்கு முழுவதும் பொருந்துவதாகும். சமுதாயம் எப்படி இருக்கிறது, அது எப்படி இருக்கவேண்டும் என்ற இரண்டிற்கும் உள்ள இடைவெளியைக் குறித்துச் சிந்திக்கும் வகையில் மீராவின் கவிதைகளில் அங்கதச் சுவை மென்மையாகவும், மேன்மையாகவும், கேலியாகவும், கிண்டலாகவும், நக்கலாகவும், நையாண்டியாகவும் வெளிப்பட்டுள்ளது எனலாம்.

மு.இராமசாமிக்கவிராயரிடத்தில் பாண்டித்துரையாருக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. கவிராயர் முதுமை எய்திச் சாகும் தறுவாயில் பாண்டித்துரைத் தேவர் சேற்றூர் சென்று கவிராயரின் உடல்நிலையைக் கண்டு வருந்தி இருக்கக் கவிராயர் பாடியது.

"முன்பாண்டிப் புரவலனும் சங்கம் வைத்தோர்
சாமமதின் முடுக்கி விட்டான்
இன்பாண்டித் துரையோசங் கப்புலவர்
தனிகரென இருத்தற் கெண்ணித்
தன்பாண்டில் தனைநடத்திப் பொருள்தேடிக்
கொண்டுவந்து தந்து காத்தே
என்பாண்டி எனுங்கடவுள் திருவருட்செல்
வமும்எய்தி இருக்கின் றானே"

சுவாமி விபுலாநந்தரின் ஆய்வுத் திறனும் நவீன நோக்கும்



முனைவர் அருணாசலம் சண்முகதாஸ்,
யாழ்ப்பாணம்.

1. முன்னுரை

மதுரைத் தமிழ்ச்சங்கத்துடனும் செந்தமிழ் இதழுடனும் நெருங்கிய தொடர்புடையவராய் இருந்தவர் தவத்திரு முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள். நூற்றாண்டுக்கு மேலாக, நிறைந்த தமிழ்ப் பணியினை ஆற்றிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தினையும் செந்தமிழ் இதழையும் விழாவெடுத்துச் சிறப்புச் செய்யும் வேளையில் வெளியிடவுள்ள தமிழ்ச்சங்கம்–செந்தமிழ் ஒரு நூற்றாண்டுப் பணிகள் என்னும் மலருக்கு சுவாமி விபுலாநந்தர் பற்றி எழுதுவது பொருத்தமென எண்ணினேன். சுவாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். தமிழ்நாட்டில் மயிலாப்பூரில் இருந்த காலத்திலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்திலும் பெருந்தொகையான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இக்கட்டுரைகளை ஆராயின் அடிகளாருடைய ஆய்வுத் திறன்களையும் அவரது நவீன நோக்கினையும் நன்கு இனங்காணக்கூடியதாயுள்ளது. அவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

2. ஆராய்ச்சி எவ்வாறு மேற்கொள்ளப் படவேண்டும்.

மரபுவழி விடயங்களை ஆய்வு செய்வதா அல்லது நவீன விடயங்களை ஆய்வு செய்வதா என்பது பற்றி ஆய்வாளர்கள் எண்ணுவதுண்டு. உயர்கல்வியை முடித்துக்கொண்டு ஆய்விலே ஈடுபட வேண்டுமெனச் சிலர் எண்ணக்கூடும். ஆனால், விபுலாநந்த அடிகளாரோ உயர் கல்வியில் ஆராய்ச்சியின் இன்றியமையாமையினை வற்புறுத்தியுள்ளார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துக்குரிய கலைத் திட்டத்தினைச் சுவாமி அமைத்த பொழுது இலக்கணம், சங்கநூல், காப்பியம், இதிகாசம், புராணம், பிரபந்தம், சைவசித்தாந்தம், வைணவசித்தாந்தம், நியாய வேதாந்தம், நூல்களிற்புலமை என்னும் பத்துத் துறைகளை அமைத்து உயர்கல்வி மேற் கொள்ளப்படவேண்டும் என்றும் நாளடைவில் கணிதம், சோதிடம், வைத்தியம், பௌதீகம், சித்திரம், சிற்பம், இசை, நாடகம் முதலிய துறைகளையும் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இவற்றுக்கு மேலாக ஒவ்வொரு துறையிலும் பயிலும் மாணவர்கள் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவது இன்றியமையாதுள்ளது. இதுபற்றி செ.அழகரத்தினம் கூறுவது பொருத்தமாய மைவதை நோக்கலாம்.

"ஒவ்வொரு துறைக்கும் அடிகள்,"ஆராய்ச்சிக் கட்டுரை" எனும் பகுதியையும் கட்டாயப் பகுதியாக அடக்கியுள்ளது கவனிக்கப்படவேண்டியது. இவை உயர் கல்வியில் ஆராய்ச்சியின் அவசியத்தை வற்புறுத்துவதாக அமைந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உண்மையில் இப்பாடத்திட்டத்தினை நுணுகி ஆராய்ந்தால், விபுலாநந்த அடிகளின் நுண்மாண் நுழைபுலம் பட்டெனத் தெரியும். அடிகள் கருதிய முறையில் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அதனைச் செயற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அது இன்று இந்துக்களின் கலாசாரப் பல்கலைக் கழகமாகப் பரிணமித்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கலாம்." [1]

3. ஆய்வுக்குரியனவற்றை இனங்காணல்

இன்று ஆய்வுக்குரிய விடயங்களை இனங்காணலும், ஆய்வினை மேற்கொள்வதும் இலகுவாக வந்துவிட்டன.

ஆனால் சென்றநூற்றாண்டின் தொடக்ககாலப் பகுதிகளிலே எவ்வெவ்விடங்களை ஆராய வேண்டுமென எண்ணுவதே ஓர் ஆய்வாக அமைந்துவிடும். ஆய்வுத்திறனும் ஆய்வு நுணுக்கு நோக்கும் உடையவர்களாலேயே அது முடியும். சுவாமி அத்தகைய ஆய்வுத் திறனுடையவராக இருந்துள்ளார். அவர் இனங்கண்ட ஆய்வுப்புலம் பற்றி அவருடைய கூற்றுகளாலேயே எடுத்துக்காட்டுகிறோம். "நமது முன்னோர்கள் எழுதிவைத்த ஞான நூல்களும் பிறவும் இன்னும் ஐரோப்பிய பண்டிதரால் ஆராய்ந்தளவிடப்படாத நிலையினவாக விளங்குகின்றன" எனக் கூறும் சுவாமி "அத்தகைய நூல்களை முதற்கண் நாம் ஆராய்ந்துள்ளோமா?" என்று வினவுகிறார்.

"இதுவரையில் மேற்றிசையோர் மெய்கண்டானை மதியாமல் இருப்பது ஏனென்றால் மெய்கண்டான் உதித்த தமிழ் நாட்டிற்குரிய நாம் மெய்கண்டானுடைய அரிய நூலை முறைப்படி ஆராயாமையினாலென்போம். மெய்கண்டானுடைய சிறப்பியல்பு, பிறநாட்டு ஆசிரியருக்கும் மெய்கண்டானுக்குமுள்ள ஒற்றுமை, விகற்பம், மெய்கண்டான் உதித்தற்கு முன் தமிழ்நாட்டுச் சமயநிலை, ஆரியரது காலம், முதல்நூல், வழிநூல், பிற்பட்ட ஆராய்ச்சியினால் மெய்கண்டானது நூலிற் காணப்படும் வழுக்கள், வழுவமைதிகள் என்றின்னோ--ரன்னவற்றை எல்லாம் பிறநூலுதவி, பிறமொழி நூலுதவி கொண்டு ஆராயின் அவ்வாராய்ச்சி உலகிற்குப் பயன்படுவதாகும். உலகு அதனைப் பயன்படுத்திக் கொள்ளும்"[2]

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவரும் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநருமாகிய வண.பிதா கலாநிதி மரியசேவியர் அடிகளார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து முனைவர் பட்ட ஆய்வேட்டினை ஜெர்மன் மொழியிலே எழுதியுள்ளார். இவர் போன்றோருடைய ஆய்வுகளுக்கு எதிர்வுகூறுவதாகச் சுவாமியினுடைய மேற்கோள் அமைகின்றது.

4. சான்று காட்டல்

ஆய்வுக்குச் சான்று காட்டுவது இன்றியமையாததாகும். சுவாமியே தம்முடைய ஆய்வுக் கட்டுரைகளிலே சான்று காட்டி எழுதியுள்ளமையினைக் காணலாம். அவர் தம்முடைய இலக்கியக் கட்டுரைகளிலும் வரலாற்றுக் கட்டுரைகளிலும் எடுத்துக் கொண்ட பொருளின் பொதுத் தன்மைகளையும் தனித் தன்மைகளையும் காட்டும் ஆய்வு மனப்பாங்கினைக் காணும் அதே வேளையில் பெருந்தொகையான இலக்கிய வரலாற்றுச் சான்றுகளைக் காட்டியமை நவீன ஆராய்ச்சியாளருக்கு வழிகாட்டியாக அமைகின்றது. எடுத்துக் காட்டாக, சுவாமியினுடைய "இலக்கியச்சுவை" என்னும் கட்டுரையைக் குறிப்பிடலாம். அதில்,

"பாரதத்திற்குக் காப்பியத் தலைவன் யாவன்? கண்ணபிரான் என்பாரும், அருச்சுனன் என்பாரும், உதிட்டிரன் என்பாரும், சுயோதனன் என்பாருந் தம்முள்ளே முரணி நிற்க, ஈண்டுக் குறிப்பிட்ட அனைவரையுந் தன் அன்பினாற் பிணித்த அங்கர்கோனாகிய கன்னன் காப்பியத் தலைவனாவா னென்பாரது கூற்று வலிமையுற்று நிற்கின்றது".[4] என்று கூறுமிடத்து அடிகளாருடைய ஆய்வுத் திறனையும் நுணுகிய நோக்கினையும் காணக்கூடிய தாயுள்ளது. ஏன் கன்னனைக் காப்பியத் தலைவனாகக் கொள்ளவேண்டுமென்பதற்கு மூன்று சான்றுகள் மேற்குறிப்பிட்ட கட்டுரையிலே காட்டுகின்றார். முதலாவது, திரௌபதி ஐவரைப் பற்றி அறிவதற்கு முன்னர் கன்னனைப் பற்றித்தான் அறிகிறாள். அவளுடைய செவிலித்தாயர்,

"பெண்மைக்கு இரதியென வந்த பெண்ணா
ரமுதே பேருலகில்
உண்மைக்கிவனே வலிக்கிவனே உறவுக்கிவனே
உரைக்கிவனே
திண்மைக்கிவனே நெறிக்கிவனே தேசுக்கிவனே
சிலைக்கிவனே
வண்மைக்கிவனே கன்னனெனும் மன்னன்
கண்டாய் மற்றிவனே"

ஒரு தலைமகனுக்குரிய அத்தனையுமுடையவனைக் கண்ட திரௌபதி தன் மனத்துள்ளே அவனை வரித்துக்கொண்டாள். இரண்டாவது, அருச்சுனனது ஆயிரம் அம்புகள் துளைத்த துளைகளினின்றும் குருதி பாய்கின்றபோதும் கண்ணன் வேதியன் வடிவிலே வந்து புண்ணியமனைத்தையும் தருக என்று கேட்டபொழுது கொடுத்தமை. மூன்றாவது, தாயாகிய குந்திதேவி போர்க்களத்தினை அடைந்து, இறந்துபடுகின்ற கன்னனை மார்புறத்தழுவி, அவன்தான் தன் தலைமகன் என்பதை,

"ஒரைஞ்சு பேருளரால் அறந்தவ றாத உதிட்டிரனா
தியர் உரகக் கொடியோனாதி
ஈரைஞ்சு பதின்மருளர் தம்பிமார்கள் இங்கிதங்கள்
அறிந்தடைவே ஏவல் செய்யப்

பாரஞ்சு மொருகுடைக்கீழ் நீயே யாளும் பதமடைந்தும்
விதிவலியாற் பயன்பெறாமல்
காரஞ்சு கரதலத்தா யந்தோ வந்தோ கடவுளர்தம்
மாயையினாற் கழிவுற்றாயே"

என்று அரற்றுவதினூடாக அறியக்கூடியதாயுள்ளதென அவர் கூறுகின்றார். மேலும் "இத்தகையதோர் காட்சியினை ஹோமர் எழுதிய வீரகாவியங்களிலும் காண்டலாகாது" என்றும் கூறியுள்ளார். சுவாமியினுடைய ஆய்வுத்திறன் எவ்வாறமைந்துள்ளது என்பது அவருடைய சான்று காட்டி நிறுவும் பண்பிலிருந்து கண்டுகொள்ளக் கூடியதாயுள்ளது.

5.ஆய்வு அறம்

ஆய்வு செய்பவர்கள் சில அறங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றியேயாகவேண்டும். எல்லாவற்றையும் இங்கு விரிவஞ்சிக் குறிப்பிடவில்லை. சுவாமி எங்களுக்குக் காட்டித் தந்த ஒரேயொரு ஆய்வு அறத்தினை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். வ.சிவசுப்பிரமணியம் (1993: 128–129) இதனை விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். தமது கருத்துக்களை மறுத்துக் கூறவேண்டிய இன்றியமையாத தேவை ஏற்படின் அவற்றை நாகரிகமான முறையிலே மறுத்துரைப்பார்" எனக் கூறும் சிவசுப்பிரமணியம் சுவாமியினுடைய "அறத்துப்பாலாராய்ச்சி"க் கட்டுரையை எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளார். மேலும், எஸ்.வையா-புரிப்பிள்ளை 1922இல் செந்தமிழ் ஆய்விதழிலே எழுதிய தொடர் கட்டுரைகளிலே தமிழ்மொழி பற்றிக் கூறிய கருத்துக்களை மறுத்து "வடமொழிக்குத் தமிழ்மொழி செவிலித் தாயாகுமா?" என்ற தலைப்பில் ஈழத்தவர் ஒருவர் கண்டனக் கட்டுரையொன்றினைச் செந்தமிழிலே எழுதினார். இதேவேளை சுவாமி (அப்பொழுது பண்டிதர் மயில்வாகனனாக இருந்தவர்) "விஞ்ஞான தீபம்" என்னும் தொடர் கட்டுரையின் முதல் கட்டுரையினைச் செந்தமிழ் சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தார். அக்கட்டுரையினால் ஏற்படக்கூடிய ஐயப்பாடுகளை அகற்றுவதற்காகச் செந்தமிழ் ஆசிரியருக்குப் பின்வரும் கடிதத்தினை அவசரமாக எழுதி அனுப்பினார்.

ஐயா, இதன்பின் சேர்த்திருக்கும் 'விஞ்ஞானதீப' நூன்முகத்தில் எழுதியிருக்கிற பொருண்முடிபுகளுள் ஒரு சில ஆவணி மீ௳ 'செந்தமிழி'ல்' தமிழ் மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா? என்னும் வியாசத்திலுங் காணப்படுதலாலும் இனிப் பொருட்பாகுபாட்டினைப் பற்றி யானுரைத்த முடிபுகள் சில அவ்வியாசத்தை எழுதியவர் கொண்ட முடிபுகளோடு முரணுற்று நிற்பதனாலும் எனது உரை குறித்த வியாசத்திற்கு உடம்படல் கருதியோ மாறுகொளல் கருதியோ எழுந்ததென்று எண்ணுதற்கிடமுண்டு. ஆவணி மீ செந்தமிழ் வெளியாவதற்கு முன்னமே எனது வியாசம் தங்களுக்கு அனுப்பப்பட்டதென்னும் உண்மை வெளிவரின் அவ்வித ஐயப்பாடு நிகழாது. ஆதலினால் அவ்வுண்மையையுரைக்கும் இக்குறிப்பினை எனது வியாச முடிவில் வெளியிடும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இராமகிருஷ்ண மடம், பண்டித மயில் வாகனன்

திருமயிலை.

செந்தமிழ் ஆசிரியரும் ஆய்வறம் பேணும் வகையில் கட்டுரைக்கு முன்னர் பண்டித மயில்வாகனனாரின் கடிதத்தைப் பிரசுரித்தார்.

6. ஆய்வு மொழியைத் தேர்ந்தெடுத்தல்

ஆய்வு செய்பவர் தம் ஆய்வுமுடிபுகளை அறிவியலடிப்படையிலே வெளிப்படுத்துதற்குரிய மொழியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வுக்கும் நவீன அறிவியல் துறைகளை வளர்ப்பதற்கும் ஆங்கில அறிவின் இன்றியமையாமையினை நன்கு உணர்ந்து கொண்ட அடிகளார் தாய்மொழியே ஆய்வுக்குச் சிறந்த மொழியெனக் கருதுவதாக அவருடைய பல ஆக்கங்களிலிருந்து பெறக்கூடியதாயுள்ளது. சென்னைச் சர்வகலாசாலையிலே தமிழ் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்பதைப் பலரும் சுட்டிக்காட்டினர். சென்னைச் சர்வகலாசாலை எதற்கும் செவிசாய்க்க வில்லை. அப்பொழுது அடிகளார் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (1923) சஞ்சிகையிலே,

"சென்னைச் சருவகலாசாலை சுதேச பாஷைகளைப் புறக்கணித்து வருகிறதென்பது மறுக்கொணா உண்மையே, சருவகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ? ஏழைச் சனங்களிடமிருந்து பெறுகிற வரிப் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாக்களைச் சருவகலாசாலைக்குக் கொடுத்துவருவது என்ன காரணத்திற்காகவோ? சருவகலாசாலையர் அளிக்கிற

பட்டங்கள் தம்மொழி மறந்து பிறமொழியிற் பிதற்றுகிற பேதை மக்களைக் குறியீடு செய்வதற்குரிய அடிமை முத்திரையாமோ? அன்றேல், அவை அறிவு நிறைமாந்தருக்குக் கல்விக் கழகத்தினர் கொடுத்துதவும் அறிவு முத்திரையாமோ? என்ற இன்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது தேசாபிமானமுடைய பெரியார்மேற் பொறுத்த கடனாகும். தனக்குரிய சிறப்பியல்பு எது? உலகிலுள்ள கல்விக் களஞ்சியத்திற்குத் தான் கொடுத்துதவக்கூடிய பெரும்பொருள் யாது? என்று இன்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது சென்னைச் சருவகலாசாலைமேற் பொறுத்த கடனாகும்.

என்று அறந்தழுவிய சினத்துடன் சுவாமி எழுதலானார். தமிழ் மொழியை உயர் கல்விக்கும் ஆய்வுக்கும் பயன்படுத்தும்போது எத்தகைய தமிழ் வழக்கினைப் பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாகவும் சுவாமி எண்ணியுள்ளார்." "சோழ மண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும்" என்னும் கட்டுரையில் ,

"நாடக நூலுக்குக் கொடுந்தமிழ் வழக்கு வருமென்பது ஒருபாலாக அறநூல் (Ethics and Law) பொருணூல் (Natural and Social Sciences), இன்ப நூல் (Fine Arts), வீட்டுநூல் (Religion and Philosophy) என அறிஞர் வகுத்துரைத்த

நூல்களைச் செந்தமிழில் எழுதுவது முறையா? கொடுந்தமிழில் எழுதுவது முறையா? என்னும் வினா எழுகிறது. ஆராய்ந்து கற்கும் அறிவுடையோருக்கு உரியவாதலாலும், இடவேறுபாடு பால்வேறுபாடு, வருண வேறுபாடு என்னும் வேறுபாடுகளை இகந்து நிற்பவாதலாலும் அறிவு நூல்கள் செந்தமிழ் மொழியிலே ஆக்கப்பட வேண்டு மென்பது முடிவாகின்றது." [6]

7. ஆய்வுப் புலங்கள்

சுவாமியினுடைய ஆய்வுத்திறனை அவர் தெரிவுசெய்து ஆய்வு மேற்கொண்ட ஆய்வுப்புலங்களூடாக அறியக்கூடியதாயுள்ளது. பழைமையினை ஆராய்ந்து புதியவர்களுக்குக் கொடுக்கவேண்டும். பிற நாகரிகங்களை ஆராய்ந்து அவற்றை அறியாத எம்மவர்க்குக் கொடுக்கவேண்டும். எம்மிடம் உள்ள--வற்றைப் பிறரும் அறியும்படி கொடுக்கவேண்டும் என்னும் நோக்குகளை அடிப்படையாகக் கொண்டே சுவாமியினுடைய ஆய்வுகள் நடைபெற்றன. எம்முடைய பண்பாட்டின் மீட்டுருவாக்கத்திலே சுவாமி ஈடுபட்டிருந்தார். குறிப்பாகப் பண்டைத் தமிழரிடம் இருந்த இசைக்கருவியாகிய யாழினை மீட்டுருவாக்கஞ் செய்யும் ஆய்வு சுவாமிக்கு அழியாப்புகழினைத் தந்து நிற்கின்றது. ஒரு விஞ்ஞானி தன்னுடைய ஆய்வுக்கூடத்திலே இரவுபகலாகப் பரிசோதனைகள் செய்வதுபோல அறிவுப் புலவராகிய பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் யாழ் பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். தமிழ், இசை, ஒலியியல், கணிதவியல், வரலாறு ஆகிய துறைகளை உள்ளடக்கியதாக யாழ் பற்றிய ஆய்வு அமைந்தது. [7]

ஓர் ஆய்வு எவ்வாறு நிகழ்த்தப்பட வேண்டும் என்பதற்குச் சுவாமிகளுடைய யாழ் நூல் ஆராய்ச்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். ஏதாவது பட்டத்தினையோ சான்றிதழையோ எதிர்பார்த்து சுவாமி இந்த ஆய்வினை மேற்கொள்ளவில்லை. ஆய்வுப்பயன் உலகளாவியதாக இருப்பதை நன்குணர்ந்தே அடிகளார் இந்த ஆய்விலே ஈடுபட்டார். யாழ் நூலை 1947 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 5ஆம் 6ஆம் நாள்களிலே திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலிலே ஆளுடைய பிள்ளையார் திருமுன்னர் அரங்கேற்றுவது பற்றித் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் தம்முடைய அறிவிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

"அருண்மிகு விபுலாநந்த அடிகளார், பதினான்கு ஆண்டுகளாக இடைவிடாது நிகழ்த்திய இசை ஆராய்ச்சியினால் நுண்ணிதிற் கண்டுணர்ந்த பழந்தமிழின் நூன்முடிபுகளை ஒரு கோவைப்படுத்தி, ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து போன தமிழர் இசைக்கருவியாகிய யாழின் இயல்பினை நன்குணர்ந்து உருவாக்கிச் செயல்படுத்தும் வண்ணம், பண்டைத்தமிழர் இசைத்திறன் விளக்கும் இசைத்தமிழ் நூலாகிய யாழ் நூலினைத் தமிழகத்திற்கு இயற்றி உதவியுள்ளார்." [8]

இப்பேராய்வு நூலினை ஆசிரியர் தமிழகத்துக்குத் தந்துள்ளார் என்று கூறுமிடத்து அவருடைய ஆய்வின் பயன் எவ்வளவு பரந்தது உயர்ந்தது என்பதை நாம் உணரக்கூடியதாயுள்ளது. ஆய்வுநெறி பற்றிக் கூறுபவர்கள் ஆய்வு ஏணியின் கடைசிப்படியாக ஆய்வுப் பயனைக் குறிப்பிடுவர். ஓர் ஆய்வினை மேற்கொள்ளும் போது அதன் பயனை நன்கு உணர்ந்தே மேற்கொள்ள வேண்டும். பயனில்லாத ஆய்வு விழலுக்கிறைத்த நீராகும். பதினான்கு ஆண்டுகள் சுவாமிகள் உழைத்த உழைப்பு இந்த உலகிலே சந்திரனும் சூரியனும் இருக்கும் வரையும் நின்று நிலவும் பெற்றியது.

சுவாமி விபுலாநந்தருடைய ஆய்வுத் திறன்களிலே குறிப்பிடக்கூடியது அவருடைய ஒப்பியல் ஆய்வாகும். அடிகளாருடைய ஒப்பியலாய்வு முயற்சி அவர் பிறமொழி இலக்கியங்களிற் கொண்ட சிறப்பான ஈடுபாட்டின் விளைவேயாகும். வடமொழி, ஆங்கிலமொழிகளாலான இலக்கியங்களிலுள்ள சிறப்புக்களை நன்கு உணர்ந்த அடிகளார் அவற்றைத் தமிழ் மக்களும் அறிந்து சுவைக்க வேண்டுமென மொழிபெயர்ப்புகள் செய்துவந்தார். இவ்வாறு பிறமொழி இலக்கியங்கள், வரலாறு என்பவற்றில் ஈடுபடும்போது அவற்றை எம்முடைய மொழி, வரலாறு என்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயலுதல் இயல்பான செயற்பாடேயாகும். "யவனபுரத்துக் கலைச்செல்வம்" என்னும் கட்டுரையிலே அடிகளார் கிரேக்க மொழி இலக்கியங்களிலே காணப்படும் சில பண்புகளை வடமொழியுடனும் தமிழ் மொழியுடனும் ஒப்பு நோக்குகிறார். எஸ். வையாபுரிப்பிள்ளை, க. கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர் கிரேக்க இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முன்னரே சுவாமி விபுலாநந்தர் அத்தகைய ஒப்பியலாய்வினை மேற்கொண்டிருந்தமை அவருடைய ஆய்வுத் திறனின் இன்னொரு பரிமாணமாகும். சுவாமி இலக்கிய ஒப்பாய்வுடன் மாத்திரம் நிற்காது கிரேக்க – தமிழ் மொழி வரிவடிவ ஒப்பாய்வினையும் மேற்கொண்டிருந்தார். "யவனபுரத்துக் கலைச்செல்வம்" கட்டுரையிலே இருமொழிகளினுடைய ஒலி வரிவடிவ ஒற்றுமைகள் பலவற்றை எடுத்துக்காட்டி, "அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்கு, தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகின்றது. இவ்விரு மொழியின் வரிவடிங்கள் ஒன்றினின்றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின் வேறாகிய மற்றொரு மொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தன வாமோ என்பதனை மேலாராய்வாம்" என்று குறிப்பிடுகிறார். ஈழத்திலே ஒப்பியலாய்வுக்கு அடிகளாரே முன்னோடியாக விளங்கினார். ஒப்பியல் ஆய்வுக்குப் பயன்படக் கூடிய தரவுகளை மொழி பெயர்ப்புகளூடாகவும் கட்டுரைகளூடாகவும் வழங்கினார்.

அடிகளாருடைய ஆய்வுப் புலங்களிலே இன்னொன்று மொழியாய்வாகும். ஹென்றி ஸ்வீட் (Henry Sweet) போன்றோருடைய ஒப்பியலாய்வு, நவீன மொழியியலின் தந்தை பேர்டினன் டி சொசியோ (Ferdinand de Saussayre)வின் மொழி பற்றிய கருத்துக்கள் பரவி வரும் வேளையிலே சுவாமி அவற்றுட் சிலவற்றைத் தமிழ்மொழியுடன் இணைத்து நோக்கியுள்ளார்.

8. ஆய்வு நுணுக்கம்

சுவாமியினுடைய ஆய்வுகளுக்கு மணி முடியாக அமைவது யாழ் நூல் ஆய்வேயாகும். யாழ்நூல் ஆய்வு இரண்டு வகையான ஆய்வு நுணுக்கங்களையுடையது.

1. பண்டைய பண்பாட்டுக் கருவியை மீட்டுருவாக்கம் செய்தல்.

2. தேவாரங்களைப் பகுப்பாய்வு செய்தலும் மீள்பார்வை செய்தலும்.

இவ்விரண்டனுள் முதலாவது விடயம் முன்னர் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது விடயம் பற்றிச் சில சொல்வோம். தேவாரவியலிலே தேவாரங்களுடைய பண்கள் பற்றி விரிவாக நோக்குகின்றார். அப்பண்களுடைய நுணுக்கமான பண்புகள் பற்றியும் வேறுபாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இப்பண்கள் சிலவற்றின் மெட்டுக்களிலே நாட்டார் பாடலிசை சேர்ந்துள்ளது தொடர்பாகவும் இடையிடையே குறித்துச் செல்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாட்டுப்பாடல் மெட்டுக்களைத் தமது தேவாரப் பாசுரங்களுக்குப் பயன்படுத்தியுள்ள செய்தியினைச் சுவாமி விபுலானந்தர் தம்முடைய யாழ் நூலிலே குறிப்பிட்டுள்ளார். காலத்தாற் பிந்திய சுந்தரருளிய தேவாரங்கள் நாட்டுப் பாடல்கள் பலவற்றையெடுத்தாண்ட சிறப்பினை யுடையன என்று சுவாமி கூறுவர். இந்தளப் பண்ணில் அமைந்த திருப்பதிகம் மகளிரது கும்மிப்பாடலுக்கு இயைந்த சந்தமாக அமைவதை அவர் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரின் 10ஆம் பதிகம் 3ஆம் பாடலை ஆராய்ந்தால் அது இயற்றமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுசீர் ஆசிரிய விருத்தமாயமைகின்றது. ஆனால் அப்பாடலின் சந்தத்தினை நோக்கும் போது அது வேறு வகையிலே அமைகின்றது. அப்பாடலுக்கு,
தானதனாதன – தானதனா – தன – தானதனாதன–
தானதனா எனக் கட்டளையடி கொண்டு,

கொடிகளிடைக்குயில் கூவுமிடம் - மயில்
ஆலுமிடம்மழு-வாளுடைய
கடிகொள்புனற்சடை கொண்டநுதற் - கறைக்
கண்டனிடம் பிறைத் - துண்டமுடிச்
செடி கொள்வினைப்பகை-தீருமிடந்-திரு-வாகு
மிடந்திரு மார்பகலத்
தடிகளிடம் மழல் வண்ணனிடங்-கலிக்-கச்சிய
நேகதங்- காவதமே

எனக் கும்மிச் சந்தத்துக்கேற்பப் பிரித்துக் காட்டுகிறார் சுவாமி விபுலானந்தர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தமிழில் மக்கள் நாட்டமுடைய பல இலக்கியங்கள் தோன்றின. குறவஞ்சி, பள்ளு, கும்மி, சித்தர் பாடல்கள் என்பன அத்தகைய இலக்கியங்களாகும். இவற்றுள், கும்மி பெருவாரியாகக் கையாளப்பட்டதால், இருபதாம் நூற்றாண்டில் யாப்பதிகாரம் என்னும் பா வடிவ நூலை எழுதிய புலவர் குழந்தை அதனை ஒரு யாப்பு வடிவமாகக் கொண்டு அதற்கு இலக்கணம் வகுக்கின்றார்.

இவ்வாறு தேவாரப் பண்களோடு தொடர்புடைய நாட்டாரிசையினை ஆய்வு செய்த சுவாமிகள் தேவாரங்கள் பற்றியும் நுணுக்கமாக நோக்கியுள்ளார். இன்று ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுடைய ஒரு விடயம் உள்ளது. அது திருஞானசம்பந்தர் பாடிய "தோடுடைய செவியன்" என்னும் பதிகம் பற்றியதாகும். க.இரகுபரன், 'தோடுடைய செவியனுக்கும்' அது பாடப்பட்ட சந்தர்ப்பம் எனப் பெரியபுராணமும் பிறரும் கூறும் நிகழ்ச்சிக்கும் வெளிப்படையான இயைபேதும் இருப்பதாகத் தெரியவில்லை' என ஆராய்ந்து கூறுகிறார்.[7] அவருக்குப் பக்கவலுவாக இருப்பது சுவாமியினுடைய ஆய்வு நுணுக்கமாகும். சுவாமி தோடுடைய செவியன் பற்றிக் கூறியதைக் கீழே தருகிறோம்.

"உள்ளங்கவர் கள்வன்" என்னும் சொற்றொடரின் பொருளினை ஒருவாறு தெரிந்து கொண்டோம். இச்சொற்றொடர், 'தோடுடைய செவியன்' என்னுந் தேவாரத் திருப்பதிகத்தினுள் வருகின்றது. இது தந்தையை நோக்கிக் கூறிய மொழி ஆகுமோ எனில், ஆகாது என்பது வெளிப்படை. இச்செய்யுளை வெளியிட்ட பொழுது, திருஞானசம்பந்த சுவாமிகளுடைய கண்முன்னே தோன்றிய காட்சியினை ஓவியன் உள்ளத்து உணர்வதுபோல, அவருடைய திரு வாயினின்று எழுந்த மொழிகளைக் கொண்டு நாம் ஒரு வகையாக அறிந்து கொள்ளலாம். முதலேழு செய்யுள்களின் முதலிரடிகள் உள்ளங்கவர் கள்வனது உருவத்தை நமக்குக் காட்டுகின்றன. .... இவனது ஆடலையும் பாடலையும் கண்ட இளமகளிர் நிறையழிந்து, கையிலணிந்த வளையல்கள் சோரத் தெருவீதியில் வந்து நிற்கின்றனர். முன்னொரு காலத்திலே, தாருகா வனத்திலே இப்பெரியோன் இவ்வண்ணமே நடந்து கொண்டான் என்பது நமது நினைவுக்கு வருகிறது. கூட்டமாக வந்து நிற்போருள் ஒருத்தி ('ஏர் பரந்த இனவெள்வளை சோர', 'இறைகலந்த இன வெள்வளை சோர') கையிலணிந்த வெள்ளிய வளையல்கள் கழன்றுவிழத் தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனது தன்மையை வாய்விட்டுரைக்கிறாள்." சுவாமியினுடைய கருத்துப்படி இப்பதிகப் பாடலுக்கும் கூறப்படும் கதை நிகழ்வுக்கும் தொடர்பில்லை என்பது புலப்படுகின்றது. பின்வரும் ஆய்வாளர்களுக்கும் தம் ஆய்வுகளுக்கும் அரண் செய்யும் வகையில் கருத்துக்களை முன்வைப்பவர்களே ஆய்வு நுணுக்கமுடைய ஆய்வாளர்கள். சுவாமி அப்படிப்பட்ட ஓர் ஆய்வாளராவர்.

ஆய்வின் பயன் பற்றி முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். ஆய்வின் பயனை நன்குணர்ந்து ஓர் ஆய்வினைச் செய்து வழங்கும் நுணுக்கம் சுவாமியிடம் காணப்பட்டது. ஆங்கில நாட்டின் கலைச் செல்வத்தை ஆராய்ந்து "ஆங்கில வாணி" என்னும் கட்டுரையினை எழுதி ஆங்கி லேயருடைய வரலாறு, ஆங்கிலப் புலவர்களுடைய அற்புதமான இலக்கியப் படைப்புக்கள் பற்றியெல்லாம் ஆய்வு செய்து எழுதியுள்ளார். இதிலே காணப்படும் ஒரு நுணுக்கம் என்னவென்றால் ஆங்கில யவன வரலாற்றைக் கூறுமிடத்துத் தமிழ்நாட்டு இந்திய விடயங்களையும் ஒப்பிட்டுக் கூறுவதாகும். எடுத்துக்காட்டாக, மேனாட்டார் அறிவு விசாலிப் பதற்குரிய மற்றொரு நிகழ்ச்சி அராபியா தேசத்திலே நிகழ்ந்தது. "திருநாவுக்கரசு சுவாமிகள் நமது நாட்டிலிருந்த காலத்திலே அராபிநாட்டு மக்மா நகரிலே முகம்மது நபி அவதரித்தார்" என்று சுவாமிகள் கூறும் பகுதியினைக் குறிப்பிடலாம். இக்கட்டுரையினை முடிக்கும் போது சுவாமி பின்வரும் குறிப்புக்களைத் தந்துள்ளார்:

"ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டினை ஒருவாறு நிகர்ப்ப, ஆரியமும் தமிழும் வல்ல பண்டிதமணியாருக்கு ஆங்கில மொழிக் கவிநயத்தினை ஒரு சிறிது காட்டல் கருதி எழுந்த பாட்டிடையிட்ட இவ்வுரைத் தொடர்நிலையானது, வடபால் இமயத்துச் சம்பாவதி நகருக்கடுத்த மாயாவதித் தவப் பள்ளியிலே, விஷ௵வரு வைகாசி ௴ நிறைவேறியது.

கேதாரநாதர் திருவடி வாழ்க.

கட்டுரையின் இறுதியிலே கொடுத்திருக்கும் குறிப்பு ஆய்வின் பயனை நன்கு புலப்படுத்துகின்றது. பண்டைத் தமிழிலக்கிய நிகழ்வொன்றினை முதலிலே குறிப்பிடுகிறார். ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழின் சிறப்பினை உணர்த்துவதற்காகத் தமிழின் அகத் திணைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு கபிலர் குறிஞ்சிப் பாட்டு என்னும் பாட்டினை இயற்றித் தந்தார். குறிஞ்சிப் பாட்டு ஆரியபிரகத்தனுக்குப் பயன்பட்டது போல அடிகளாருடைய "ஆங்கில வாணி" பண்டிதமணி கதிரேசன் செட்டியாருக்குப் பயனளிக்குமென எண்ணி எழுதப்பட்டது.. "சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தை வினை முழுவதும் ஒய வுரைப்பன்யான்" என்று மணிவாசகர் சொன்னது போல் பண்டித மணியாரின் மனம் மகிழ அவரைப் போன்றவர்கள் யாவரும் மகிழ அடிகளார் "ஆங்கில வாணி" ஆராய்ச்சியினை வழங்கியுள்ளார்.

9. நவீனப் போக்கு

அடிகளாருடைய நவீன நோக்குக்கு எடுத்துக்காட்டாக அமைவது அவர் அறிவியலைத் தமிழ்மொழி மூலம் மாண வர்க்குக் கற்பிக்க வேண்டிய வழிவகைகளைப் பற்றி எண்ணியதாகும். வட்டுக்கோட்டை செமினரியிலே இருந்தவர்கள் பல அறிவியல் நூல்களைத் தமிழிலே எழுதியமை பற்றிப் புகழ்ந்து சுவாமி கூறியுள்ளார்.[10]

"சுவாமி, யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமார் வைத்து நடத்திய செமினியை எடுத்துக் காட்டாகப் பலமுறையும் கூறுவார். அச்செமினியில் படித்து வேலை செய்த பெரியோர்கள் கணித நூல், வேதி நூல், வானூல், பூதநூல், மருத்துவ நூல், உடல் நூல் முதலிய மேனாட்டு விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டார்கள். அவ்வேலையை இடையிலே கைவிடாது யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்து ஆற்றியிருந்தால் தமிழ் மொழி மிக விரைவாக முன்னே றியிருக்கும்" என்று பேராசிரியர் கணபதிப் பிள்ளை கூறியுள்ளமை சான்றாக அமைகின்றது. பழைமையிலே நன்றாகக் காலூன்றிப் புதுமையினை உள்ளம் மகிழ்ந்து வரவேற்பவராக அமைந்தார். பழைய நூல்களைப் புதுப்பித்தல் தொடர்பாக ("ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்", விவேகானந்தன், 1926, ப.146), "நாடகம், இசை, சிற்பநூல், சித்திரநூல், விஞ்ஞான நூல், வைத்தியநூல், சோதிடநூல், கணிதநூல், நாணயநூல், அரசியல் நூல், தேசசரித்திர நூல், சட்டநூல் என்னும் இத்துறைகளிலுள்ள பழைய நூல்களைப் புதுக்கிப் பதிப்பித்தும் புதிய நூல்களாக்கியும் தருதல் மதுரையிலும், யாழ்ப்பாணத்திலும் சங்கமிருந்து தமிழாராயும் சான்றோர் கடனாகும். அங்ஙனம் செய்வாராயின் தமிழ்க்கல்வி இன்னும் பல துறைகளிற் சென்று விருத்தியடையும்" என்று கூறிச் செல்கிறார். சுவாமிகளினுடைய நவீன நோக்குக்கு அவர் மேலைத் தேய நாகரிகம் பற்றி மிகுந்த விருப்புடனே ஆராய்ந்தறிந்ததும், அவ்வாறு அறிந்த விடயங்கள் யாவற்றையும் நம்மவரும் அறியும் வண்ணம் எழுதி வைத்ததும் நல்ல எடுத்துக் காட்டாகும். நவீனக் கலைகளெல்லாம் மேற்கே மெத்த வளருகின்றவாம் என அறிந்து அவற்றைத் தமிழ்நாட்டிற்கும் கொண்டுவர முயன்றவர் சுவாமியவர்கள்.

பல்கலைக்கழகம் இந்தியாவுக்குப் புதியதல்ல. நாலந்தாவில் அமைந்த பல்கலைக்கழகம் பற்றி வரலாறு கூறும். எனினும் மேலைத்தேய நவீனப் பல்கலைக்கழக அமைப்பு முறைவந்தபோது சுவாமி அதனை வரவேற்றார். ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் நமது சாதியாருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இன்றியமையாத சாதனங்களுள் ஒன்று. ஆதலின் தமிழ்ப் பெருமக்கள் இவ்விஷயத்தின்மேல் ஊக்கம் செலுத்தி ஆவன செய்வார்களாக"[11] என்று குறிப்பிடுகிறார். இதில் "நமது சாதியாருடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்கு" என்பது நாம் கவனிக்க வேண்டியதொன்றாகும். அடிகளார் முன்னேற்றமான பல விடயங்களிலே தம் கருத்தினைச் செலுத்தியுள்ளார். சுவாமி விபுலானந்தரின் நவீன சிந்தனைக்கு இன்னொரு எடுத்துக்காட்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைத் தம்முடைய மாணவர்க்கும் பிறர்க்கும் அறிமுகஞ் செய்து வைத்தவர் சுவாமி விபுலானந்தரேயாவார்.[12]

10. முடிவுரை

இறைவன் எங்களுக்குத் தந்த இணையில்லா அருளறிஞர் சுவாமி விபுலாநந்தர். அவர் இளம் வயதிலேயே எம்மை விட்டுச் சென்றது எங்கள் தவக்குறைவேயாகும். நாமெல்லாம் பல்கலைக் கழகப் பதவிகளுக்குத் தேடிச்செல்ல, சுவாமிகளிடமோ பல்கலைக் கழகப் பதவிகள் தேடி வந்தன. அப்பல்கலைக் கழகங்கள் சுவாமியை வருந்தி அழைத்துத் தமிழ்த் தவிசிலே அமர்த்திய நிகழ்வு ஈழத்துத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு

மக்களுக்கு மிகுந்த பெருமையினை அளிப்பதாகும். சுவாமியினுடைய யாழ்நூல் ஆய்வு பற்றி மறு நோக்குகள் தற்போது எழுகின்றன. அமைதியாகவும் உன்னிப்பாகவும் அவற்றைநோக்கி அவற்றின் வலிவு மெலிவுகளைத் தமிழுலகத்துக்கு வழங்கவேண்டிய ஒரு பெரிய கடமை அறிஞர்க்குண்டு.

அடிக்குறிப்புகள்

1. செ.அழகரெத்தினம், சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகளும், தொண்டுகளும், தமிழ் மன்றம், வவுனியா தேசியக் கல்விக் கல்லூரி, வவுனியா, இலங்கை, (2001: 135–36).
2. மு.கு.நூ. (2001: 135).
3. சுவாமி விபுலாநந்தர், இலக்கியக் கட்டுரைகள், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு, (1973 ப. 36).
4. மு.கு.நூ. (1973 பக். 2–5)
5. வ.சிவசுப்பிரமணியம், விபுலாநந்த தரிசனம், மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்த நூற்றாண்டு விழாச்சபை, மட்டக்களப்பு, இலங்கை. (1993).
6. இலக்கியக் கட்டுரைகள். (1973 ப. 151)
7. வ.சிவசுப்பிரமணியம், விபுலாநந்த தரிசனம், (பக். 118– 119).
8. சுவாமி விபுலாநந்தர், யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு, தஞ்சை, 1947.
9. இரகுபரன், க.சம்பந்தர் தேவாரம் – ஓர் இலக்கிய விமர்சன நோக்கு, முதுதத்துவமாணி ஆய்வேடு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 2005.
10. க. கணபதிப்பிள்ளை, "யாழோசை", ஈழத்து வாழ்வும் வளமும், கொழும்பு, 1962.
11. சுவாமி விபுலாநந்தர், "தமிழ்ப் பல்கலைக்கழகம்", விபுலானந்தர் உள்ளம், தொகுப்பாசிரியர். ச.அம்பிகைபாகன், விபுலாநந்த அச்சகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், (1976, ப.25)
12. Swamy Vipulananda, "The Development of Tamil Religious Thought", Annamalai University Journal, Vol.1:2, 1932, P.214.

சிங்கப்பூர்ப் பேச்சுத் தமிழ் – சமுதாய மொழியியல் அணுகுமுறை

முனைவர் இரா. வேல்முருகன்.
சிங்கப்பூர்.

உலக மொழிகளில் தமிழ்மொழி மிகப் பழமையும் வளமையும் கொண்ட மொழியாக வலம் வந்து கொண்டிருக்கிறது. பிறமொழிகளுக்கு இணையாக, உயர்தனிச் செம்மொழியாகவும், வாழும் மொழியாகவும் விளங்கும் தமிழ்மொழி எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என இருவகை நிலைகளைப் பெற்றிருக்கிறது. இவ்விரு வழக்குகளிலும், பிறமொழித் தாக்கம் ஏற்படுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. உலகமொழிகள் பலவற்றில் ஒலிகளும், சொற்களும் சொற்றொடர்களும் பிறமொழிக்குச் செல்வதும், பிறமொழியிலிருந்து பெறுவதும் இயற்கையாகவே காலம் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிங்கப்பூர்த் தமிழ் மக்களிடமும், பள்ளி மாணவர்களிடமும் தமிழ் மொழிப் பயன்பாட்டின்போது பிறமொழித் தாக்கம் ஏற்படுவதைக் காணமுடிகிறது. பிறமொழிக் கூறுகளைக் கடன் வாங்குவது என்பது தவிர்க்க முடியாத செயல் என்றாலும் அதற்குரிய சூழலையும், எந்த அளவிற்குப் பிறமொழியைத் தன்னகத்தே பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். சிங்கப்பூரின் சூழ்நிலையையும், பள்ளிகளில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பிறமொழித் தாக்கம் ஏற்படுவதற்குரிய காரணங்களையும், அவற்றின் அளவுகோல் என்ன என்பதையும் சமுதாய மொழியியல் அணுகுமுறைவழியாக விளக்குகிறது இக்கட்டுரை.

சிங்கப்பூரின் பன்மொழி வழக்குச் சூழல்

தொடக்க காலத்திலிருந்தே சிங்கப்பூருக்கு மலேசியா, இந்தியா, சீனா, இலங்கை, இந்தோனிசியா போன்ற நாடுகளிலிருந்து பல்வேறு இனமக்கள் வந்து குடியேறி வாழ்ந்து வருகின்றனர். 2000–ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சிங்கப்பூரின் மொத்த மக்கள் தொகை 4,017,733 மில்லியன். இவர்களில் சீனர்கள் 76.8 விழுக்காட்டினர், மலாய்க்காரர்கள் 13.9 விழுக்காட்டினர். 7.9 விழுக்காட்டினர் இந்தியர்கள். 1.4 விழுக்காட்டினர் பிறஇனத்தவர்கள். இந்தியர்களுள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, பஞ்சாபி, இந்தி, வங்காளி மொழி பேசுவோர் அடங்குவர். இவர்களுள் அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் தமிழர்களே.

சிங்கப்பூர்ப் பள்ளிகளில் செந்தமிழ்

இங்கு 147 தொடக்கப்பள்ளிகளிலும், 70 உயர்நிலைப் பள்ளிகளிலும், 9 உயர்நிலை மொழி நிலையங்களிலும், 16 தொடக்கக் கல்லூரிகளிலும், ஒரு மத்தியக் கல்வி நிலையத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தொடக்க நிலையில் 15,129 மாணவர்களும், உயர்நிலையில் 8,933 மாணவர்களும், பல்கலைக் கழகப் புகுமுக நிலையில் 700க்கும் மேற்பட்ட மாணவர்களும் தமிழ் பயில்கிறார்கள்.

பன்மொழி வழக்குச் சூழலில் பல்வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்றவர்கள் ஒன்று சேர்ந்து வாழும் நம் நாட்டில் தாய்மொழியே முதல் மொழி என்றோ, தாய்மொழி தமிழ் என்றோ சொல்லுகின்ற கோட்பாடு பொருந்தாது. எனவேதான், இங்கு ஆங்கிலம் முதல் மொழியாகவும் எல்லோருக்கும் பொது மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் விளங்குகிறது. தமிழ் மொழி இரண்டாம் நிலை மொழியாகவே கற்றுக் கொடுக்கப்படுகிறது. தமிழ் மாணவர்களின் தன்மைக்கேற்பத் தமிழ்மொழி, உயர் தமிழ், அடிப்படைத்

தமிழ், தமிழ், தமிழ் மொழி என நான்கு நிலைகளில் கற்பிக்கப்படுகிறது.

மொழி கற்றலும் கைவரப் பெறலும்

ஒரு குழந்தை தன் தாய்மொழியை மற்றவரின் துணையின்றித் தானாகவே இயற்கையான மொழிச் சூழலில் பயில்வதை மொழி கைவரப் பெறல் (Language acquisiton) என்றும், அதே நேரத்தில் ஓர் அந்நிய மொழியை வகுப்பறையில் இயற்கையான மொழிச் சூழல் இல்லாமல் ஆசிரியர் துணையோடு பயில்வதை மொழி கற்றல் (Language Learning) என்றும் விளக்கம் தருகின்றனர் சமுதாய மொழியியலார்.

மொழி கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் காலம் காலமாக மாறிக் கொண்டு வருகின்றன. முந்தைய காலங்களில் தாய், தந்தையர், உற்றார், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர், நண்பர்கள் எனப் பலரின் உதவியால் மொழியைக் கற்றுக் கொள்வதற்கு இயற்கையாகவே நல்ல சூழ்நிலை அமைந்திருந்தது. இன்றைய நம் சிங்கப்பூரின் நிலை அவ்வாறில்லை.

பல குடும்பங்களில் தாய்மொழி தமிழை மட்டுமல்லாமல் பிறமொழிகளையும் பயன்படுத்தி வருகின்றனர். கலப்புத் திருமணத்தால் தந்தை மொழி தமிழ், தாய் பேசும் மொழி வேறாக அமைந்து வருகிறது. இந்தச் சூழலில் அவர்களது குழந்தை பள்ளிக்குச் சென்று தமிழ் படிக்க நேரிடும் போது எளிதில் புரிந்து கொள்ள இயலாமல் இன்னலுற்றுத் தமிழ் மொழியை வெறுக்கும் சூழ்நிலையும் உருவாகிறது. அதோடு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளைப் பேசும் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் பலரும் தங்கள் குழந்தைகள் ஆங்கிலம் பேசுவதையே பெரிதும் விரும்புகின்றனர்.

தங்கள் குழந்தைகள் பேசும் ஆங்கிலத்தைக் கண்டு அகம் மகிழும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆங்கில மொழி அவசியம் என எண்ணித் தங்கள் குழந்தைகளுடன் ஆங்கிலத்திலேயே அனுதினமும் உரையாடும் பெற்றோர்களும் அதிகமாகவே உள்ளனர். இது மட்டுமன்றிப் பல்வேறு இனத்தவர்கள் வாழும் சூழலில் மற்றவர்களுடன் ஆங்கிலத்திலேயே உரையாட வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

தமிழை மாணவர்கள் எளிமையாகவும், இனிமையாகவும் கற்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகளில் சில மாற்றங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் அனைவருக்கும் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் ஊடுருவலைச் சில வேளைகளில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இத்தகைய கலப்பினைச் சமுதாய மொழியியலார் இருவகைப்படுத்துவர். அவையாவன :

1. மொழிமாறும் இயல்பு (Code-Switching)
2. மொழிக் கலப்பு (Code-mixing)

மொழிமாறும் இயல்பு (Code-Switching)

ஒரு மொழியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போதே தன்னிச்சையாக, தன் கருத்தை வெளியிட ஏதுவாக உள்ள வேறொரு மொழியின் சொற்றொடரைப் பயன்படுத்தி உரையாடுவது மொழி மாறும் இயல்பு எனப்படும். இரண்டாவதாகப் பயன்படுத்துகிற மொழியில் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.பரவலாக ஆதிக்கம் பெற்றுத் திகழும் மொழியே மொழி மாறும் இயல்பில் பங்கு கொள்கிறது.

சான்றாக : ஒருவர் தம் நண்பரோடு பேசிக் கொண்டிருக்கும் போது,

"இது பெரிய பிரச்சினையா ? இதுக்குப் போயி வருத்தப் படுறியே! Take it easy டா!"

எனக் கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். இங்கு மொழி மாறும் இயல்பு ஏற்படுகிறது. தமிழ்ச் சொற்றொடரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போதே "இதை எல்லாம் பெரிதாக்காமல் எளிதாக எடுத்துக் கொள்" என்பதற்குப் பதிலாக Take it easy எனப் பிறமொழித் தொடரைப் பயன்படுத்துவது மொழி மாறும் இயல்பு எனப்படும்.

வகுப்பறையில் ஆசிரிய மாணவர்களிடையே கற்பித்தல் நடைபெறும் போது மாணவர்கள் தமிழ்ப் பாடத்தை எளிதில் புரிந்து கொண்டு அவர்கள் தன்னம்பிக்கையோடு உரையாடும் வரை அவர்கள் விரும்பிய ஆங்கில மொழிச் சொற்றொடரையே அதிகம் பயன்படுத்துகின்றனர். சிங்கப்பூர்த் தமிழ்ப்

பெற்றோர்களும் பேச்சுத் தமிழில் பிறமொழிச் சொற்களைக் குறிப்பாக மலாய் மொழிச் சொற்களை அதிகம் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

தமிழ் வகுப்பறையில் ஆங்கிலத் தொடரை மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்த அனுமதிக்கலாமா என்பது நம் முன் நிற்கும் மிகப் பெரிய வினா! தொடர்ந்து அனுமதித்தால் மொழிச் சிதைவு ஏற்படுவதோடு, மொழிப்பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடக் கூடிய சூழ்நிலையும் ஏற்படும். எனவே மாணவர்களுக்குத் தமிழ் மொழியைப் புரிந்து கொள்ளும் வரை தமிழ் மொழியில் அவர்கள் தடையில்லாமல் பேசும் வரை ஆங்கிலச் சொற்றொடர்களைப் பயன்படுத்த அனுமதிக்கலாம்.

மொழிக் கலப்பு (Code-Mixing)

ஒரு மொழியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது இடையிடையே பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவது மொழிக் கலப்பு எனப்படும்.

மொழிக் கலப்பு ஏற்படுவதற்கான காரணங்கள்

1. பிறமொழியைக் கலந்து பேசுவது கௌரவம் என (Prestige Motive) எண்ணியதால்
2. எளிமையாகத் தன் கருத்தைக் கூறமுடியும் என்பதால்
3. சொல்வளம் அதிகம் இல்லாததால்
4. சரியான ஏற்புடைய சொல்லை நிரப்ப இயலாததால்

மொழிக் கலப்பு ஏற்படுகிறது எனலாம்.

தமிழ்மொழியில் உரையாடிக் கொண்டிருக்கும் போதே இடையில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. சில வேளைகளில் வகுப்பறைகளிலும் ஆசிரிய மாணவர்களிடையே நடைபெறும் உரையாடலில் ஆங்கில மொழிக் கலப்பு காணப்படுகிறது.

மாணவர்களுக்கு எளிதில் புரிய வேண்டும் என ஆசிரியரும், புரிந்ததை ஆசிரியரிடம் கூற மாணவர்களும் மொழி மாறும் இயல்பையும்,மொழிக் கலப்பையும் முடிவற்றநிலையில் பயன்படுத்திக் கொண்டே சென்றால் தமிழ் மொழியைச் சரளமாக இருவருமே வகுப்பறையில் பேச இயலாத சூழ்நிலை உருவாகலாம்.

மாணவர்களுக்குத் தமிழ்மொழி மீது ஆர்வமும் அதே நேரத்தில் அதிக சொல்வளப் பெருக்கமும் ஏற்பட்டால் பிறமொழிக் குறுக்கீட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு நல்ல தமிழில் பேசலாம்.

தமிழ்மொழியில் ஏற்கெனவே கடன் வாங்கிப் பல காலமாகப் பயன்பாட்டில் இருந்துவரும் சொற்களைத் தவிர்க்கவும் முடியாது. அவற்றுக்கு இணையாகப் புதுமையான தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சேர்த்தாலும் தாமரை இலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் நின்று கொண்டிருக்கும்.

சான்றாக Coffee என்பதைக் காப்பி என்று சொல்வது பொருத்தமாகுமே தவிர 'குளம்பி' என்று தமிழ்ப்படுத்தி மாணவர்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் போது, குழம்பி விடுவதோடு தமிழ் அவர்களுக்குக் கேலிக்குரிய மொழியாகவும் மாறிவிடும். இதே போன்று Power point, Bottle, Switch, Ball point, Eraser, Note, Tissue paper, Contact lens, Socket, Tyre, Shampoo, Conditioner, Hair dye, Sofa, SIM card, Liquid paper போன்ற சொற்களையும், ஆங்கிலச் சொல்லாக இருந்தாலும் அச்சொற்களை அப்படியே பயன்படுத்துவது ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒன்று.

Ball point பேனா என்பதைப் பந்து முனைப் பேனா என்றும் Bottle ஐ சீசா என்றும் Eraser ஐ அழிப்பான் என்றும் Ruler ஐ அளவுகோல் என்றும் தூய தமிழில் மாணவர்கள் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என விஷப் பரீட்சையில் இறங்கினால், அவர்களிடம் இருக்கும் ஆர்வமும் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, இரண்டாம் மொழி நிலையில் தமிழைக் கற்கும் மாணவர்கள் சிற்சில அவசியமான சொற்களை ஆங்கிலத்திலேயே சிலகாலம் பயன்படுத்துவதில் தவறில்லை.

இதே போன்று சிங்கப்பூர்த் தமிழ்ப் பெற்றோர்களிடம் மலாய் மொழிச் சொற்கள் அதிகம் கலந்திருப்பதைக் காணமுடிகிறது. சான்றாக,

தமிழில் கலந்திருக்கும் மலாய் மொழிச் சொற்கள்	தமிழ்ச் சொற்கள்	பொருள் (ஆங்கிலத்தில்)
அச்சா	ஊறுகாய்	Pickles
இஞ்சே	பெரிய மனிதர்	Mister
எத்தே	வாத்து	Duck
ஊடான்	இறால்	Prawn
கச்சாங்	கடலை	Groundnut
கச்சோர்	தொந்தரவு	Disturbance
கம்போங்	கிராமம்	Village
கரிபப்	உணவுப்பண்டம்	Curry puff
கலாகம்பு	மூங்கில் கம்பு	Bamboo Stick
காகா	அக்கா	Elder Sister
காடி	கார்	Car
கித்தா	ரப்பர் பேண்ட்	Rubber band
குசினி	சமையலறை	Kitchen
கோசோங்	காலி	Empty
கோபிஸ்	முட்டைக்கோசு	Cabbage
கோப்பி	காப்பி	Coffee
கோரெங்	பொரித்த	Fried
சப்பாத்து	காலணி	Shoes
சம்பால்	மிளகாய் மசால்	Chilli paste
சின்னாங்கு	சுலபம், எளிது	Easy
சிலுவார்	கால்சட்டை	Pants
சாத்தே	குச்சிக்கறி	Meat on stick
சாபுன்	சோப்	Soap
சேவா	வாடகை	Rent
தவக்கே	முதலாளி	Owner
தாங்காப்படி	படி, ஏணி	Stairs
தே	தேநீர்	Tea
நாசி	சாதம்	Rice
பசார்	சந்தை	Market
பாராங்	வெட்டரிவாள்	Chopper
பொங்குசு	பொட்டலம்	Parcel
மக்கான்	உணவு	Food
மங்கு	கோப்பை	Bowl
வக்குள்	கூடை	Basket
ஜாகா	காவல்	Watch
ஜாடு	துடைப்பம்	Broomstick

போன்ற மலாய்ச் சொற்கள் தமிழ் மொழியில் அதிகமாகப் பயன்பாட்டில் உள்ளன.

வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியில் இவை போன்ற எண்ணிறந்த கலைச்சொற்கள் எவ்வித மாற்றமுமின்றியும், தமிழாக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. புதிதாக உருவாகும் எல்லாச் சொற்களையும் மொழி பெயர்த்துத் தமிழாக்கம் செய்யச் சான்றோர் குழு ஒன்றை உருவாக்கினால் தமிழ் அகராதியில் தமிழ்ச்சொற்களின் எண்ணிக்கை பெருகுவதோடு பிறமொழிக் கலப்பையும் ஓரளவு தவிர்க்கலாம்.

புதிய புதிய சொற்கள் தேவைக்கேற்ப உருவாகிக் கொண்டு இருப்பது இயற்கையின் நியதி. இதனைத் தடுக்க இயலாது. இது போன்ற சொற்களைக் கல்விச் சொற்கள் அல்லது கற்றசொற்கள் எனப் பெயரிடலாம் என்கின்றனர் சமுதாய மொழியியலார்.

மொழியில் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதும் இன்று நேற்றல்ல, காலம் காலமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதுதான். அதே நேரத்தில் புதிதாகத் தோன்றும் எல்லாச் சொற்களும் பிறமொழிச் சொற்களாக இருக்கவேண்டும் என்றஅவசியம் இல்லை. சில பிறமொழிச் சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டு, பயன்பாட்டில் வெற்றியும் கண்டிருக்கின்றன.

Computer என்ற சொல்லுக்குப் பதிலாகக் கணினி என்று மொழிபெயர்க்கப்பட்டு அச்சொல் எவ்விதச் சிக்கலுமின்றி எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோல Dollar என்பது வெள்ளி எனவும், Short message service என்பது குறுந்தகவல் எனவும் பயன்பட்டுவருவது காணமுடிகிறது. இவைபோன்று பல சொற்கள் தமிழர்களிடையே பயன்பாட்டில் இருக்கின்றன.

முடிவுரை

மாணவர்களின் மனநிலையை – பேசும் மொழியை – அவர்கள் வளர்ந்த சூழ்நிலையை அறிந்து கொள்ளக் கூடியவர் ஆசிரியர் ஒருவரே. தமிழை விரும்பும் மாணவர்களோடு அரைகுறையாக அறிந்த மாணவர்களும் தமிழ் மீது ஆர்வமே இல்லாத மாணவர்களும் வந்து சேரக்கூடிய நிலையில் தூய தமிழில் பேசித்தான் "தமிழைக் காப்பாற்றவேண்டும்" என எண்ண வேண்டியதில்லை. மாணவர்களின் மனநிலைக்கு ஏற்பவும் பெற்றோர்களின் சூழ்நிலைக்கேற்பவும் மொழி மாறும் இயல்பையும் மொழிக் கலப்பையும் வேண்டிய அளவு அனுமதித்து, மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றபிறகு, பிறமொழிக் கலப்பைக் குறைக்க வழிவகை செய்யலாம். மொழியின் சிதைவே ஓர் இனத்தின் வீழ்ச்சிக்கு அடித்தளம் என்பர். அத்தகைய நிலையிருந்து மீள, சிங்கப்பூர்த் தமிழினம் இன்முகத்துடன் தமிழைப் பயன்படுத்தச் சிறந்த அணுகுமுறைகளைப் பின்பற்றித் தமிழ்மொழியை இனிய மொழியாய், உலகம் போற்றும் உன்னத மொழியாய் வாழ வைக்கமுடியும் என்பது திண்ணம்.

சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்கள் செய்யும் மொழிப் பிழைகளும் அவற்றைக் களைவதற்கான வழி முறைகளும்

முனைவர் . வசந்திவேல்முருகன்,
சிங்கப்பூர்.

கருத்துப் பரிமாற்றத்திற்குக் காரணமாக அமைந்து, மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த நிலையில் அமைவது மொழி. நாகரிகத்தின் வித்தாகவும், செயல் திறனுடையதாகவும், சமுதாய வாழ்வின் முது கெலும்பாகவும் திகழும் மொழி, மனித இனத்தைப் பல நூற்றாண்டுகள் இணைத்து வாழவும் வழி வகுக்கிறது.

பன்மொழிச் சூழலில் சிங்கப்பூர்

பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளாக சீனம், மலாய் மொழி சிங்கப்பூரின் தேசிய மொழியாகவும், ஆங்கிலம் அரசாங்கத்தின் நிர்வாக மொழியாகவும் உள்ளது. இந்தியர்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதால் தமிழ் அதிகாரத்துவ மொழிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் தமிழ்மொழி பயிலும் மாணவர்கள் மொழித் திறனில் சிறந்து விளங்கவேண்டும் என்பது கட்டாயமாக உள்ளது.

மொழியின் அடிப்படைத் திறன்களாக கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், சிந்தித்தல் என்னும் ஐந்துவகைத் திறன்களிலும் மாணவர்கள் மேம்பாடு அடைய ஆசிரியர்கள் பல்வேறு புதிய புதிய உத்திகளைப் பயன்படுத்திக் கற்றுக் கொடுக்கின்றனர். இருப்பினும் கட்டுரை எழுதுவது என்பது மாணவர்களுக்கு மிகுந்த இடர்ப்பாடாகவே உள்ளது. இந்நிலை ஏற்படுவதற்குரிய காரணங்களாகப் பின்வருவனவற்றை வகைப்படுத்தலாம்.

- முதல் மொழி ஆங்கிலம்
- உறவினர்களோடும், நண்பர்களோடும் பேசுவது பெரும்பாலும் ஆங்கிலம்
- தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள மனப்பாங்கு (Language Attitude)
- ஆங்கிலத்தில் பேசுவதுதான் சமுக மதிப்பை உயர்த்தும் என்ற எண்ணம்
- தமிழ் பேசுவதற்குரிய குறைவான சூழல்
- தமிழ்ப் புத்தகங்களை வாசிக்கும் குறைவான பழக்கம்
- பெற்றோர்கள் தமிழ் தெரிந்தாலும் பிள்ளைகளிடம் தமிழில் பேசாத நிலை
- தந்தையோ தாயோ வேற்று இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்கும் சூழல்

எந்த மொழியும் பேசக்கூடிய சூழலில் இருந்தால்தான் அதனுடைய எழுத்துவடிவம் செம்மையாக அமையும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். அதனை நினைவில் கொண்டு சிங்கப்பூர் அரசாங்கத்தின் கல்வி அமைச்சு, தற்போது வகுப்பறைகளில் மாணவர்கள் தமிழில் பேசுவதை ஊக்கப்படுத்துமாறு ஆசிரியர்களுக்குப் பரிந்துரை செய்கிறது. எனவேதான் தற்போது தமிழ் ஆசிரியர்கள், மாணவர்களைத் தமிழில் பேசவைப்பதைத் தங்களது முதல் பணியாகக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். இதன் தொடர்பாகத் தமிழ் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் தமிழ் கற்பிக்கும் நோக்கத்தில் பலவித பட்டறைகளும், கருத்தரங்கங்களும் கல்வி அமைச்சால் நடத்தப்பட்டு வருகின்றன.

சிங்கப்பூர் உயர்நிலைப்பள்ளியில் தமிழ் பயிலும் மாணவர்கள் தமிழில் எழுதும் போது பிழைகள் ஏற்படுவது இயல்பாக அமைந்து விடுகிறது. அவ்வாறு அவர்கள் பிழைகள் செய்வதற்கான காரணங்களையும், எவ்வகைப் பிழைகள் பொதுவாக ஏற்படுகின்றன என்பதனையும்,

அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும், பயிற்சிகளையும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்ப் பாட வகுப்பில் தமிழ் பேசுவதில் உள்ள ஆர்வம் எழுதுவதில் இல்லை. இதற்குக் காரணம் எழுதும்போது ஏற்படும் பிழைகளைத் தவிர்ப்பதற்கு அவர்கள் போதிய முயற்சி எடுக்காததேயாகும்.

மாணவர்கள் செய்யும் பொதுவான பிழைகள்

குறில், நெடில் பிழைகள்

சொற்களை எழுதும் போது குறில் எழுத்துக்கும்,நெடில் எழுத்துக்கும் உள்ள வரிவடிவ வேறுபாட்டைத் தெளிவாக அறிந்துகொள்ளாததாலும், துணை எழுத்துகளும், கொம்புகளும் உச்சரிக்கும் போது எவ்வாறு மாறுகின்றன என்பதை மாணவர்கள் உணராததாலும் இத்தகைய பிழைகள் ஏற்படுகின்றன என்று கூறலாம். மாணவர்கள் செய்யும் பிழைகளும், அவற்றிற்கான சரியான சொற்களும்

1. ஆசிரியர் = அசிரியர்
2. சொன்னாள் = சென்னாள்
3. போது = பொது
1. தேர்வு = தெர்வு
2. கோட்டை = கேட்டை
3. தொலைக்காட்சி = தோலைக்காட்சி
4. பேசுவேன் = பெசுவேன்
5. தூங்கி = துங்கி
6. வெளியே = வேளியே
7. ஆரம்பிப்பேன் = அரம்பிப்பேன்

இவை போன்ற பிழைகளை அவர்களின் கட்டுரை மற்றும் பயிற்சித் தாள்களில் காணமுடிகிறது. இதுபோன்ற பிழைகளைத் தவிர்க்கத் தினமும் மாணவர்களுக்குப் பாடம் தொடங்குவதற்கு முன்பு சொல்வதெழுதல் பயிற்சி தரப்படுகிறது. மேலும் குறில், நெடில் வேறுபாடு உடைய சொற்களைத் தெளிவாக ஆசிரியர் முதலில் உச்சரித்துக் காண்பித்துப் பின்பு அவர்களை உச்சரிக்கச் செய்வதால் கற்றல் சிரமமின்றி நடைபெறுகிறது. சொல்வதெழுதல் பயிற்சிக்குரிய பனுவல் பெரும்பாலும் குறில், நெடில் வேறுபாடு கொண்ட சொற்களை அதிகம் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

சான்று

"அடர்ந்த காட்டில் வாழும் விலங்குகளில் யானையும் ஒன்று. அது மிகப்பெரிய உருவத்தைக் கொண்டது. பிற விலங்குகளைக் காட்டிலும் யானை எப்போதும் தன் குடும்பத்தோடுதான் இருக்கும். தனக்குத் துன்பம் கொடுப்பவர்களை யானை ஒரு போதும் மன்னிக்காது. பழி வாங்கியே தீரும். எனவே அதனிடம் அன்புடன் நடந்து கொள்வது நல்லது"

மேலே கொடுக்கப்பட்டுள்ள பனுவலில் உள்ள குறில், நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களின் எண்ணிக்கையும் பனுவலில் கடினத்தன்மையும் மாணவர்களின் நிலைக்கேற்பக் கூட்டியோ குறைத்தோ கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர குறில், நெடில் வேறுபாடு கொண்ட சொற்களைத் தெளிவாக அறிந்துகொள்ள உதவும் பயிற்சித்தாள்களும் மாணவர்களின் எழுத்தில் காணப்படும் பிழைகளைக் குறைக்க உதவுகின்றன எனலாம்.

சான்று

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை, அடைப்புக் குறிகள் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் இருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து நிரப்புக.

1. பள்ளிக்குச் சென்ற கண்ணன் பள்ளி முடிந்ததும் ------ (வீட்டுக்கு/விட்டுக்கு)

2. நான் ------- (முரளியுடன்/முரளிக்குப்) பள்ளி சென்றேன்.

3. நேற்று நான் ------- (கொடுத்த/கெடுத்த) பணத்தை அவனிடம் திருப்பிக் ------- (கேட்டேன்/கெட்டேன்)

லகர, ளகர, ழகரப் பிழைகள்

குறில் நெடில் பிழைகளை அடுத்து மாணவர்கள் ல ள ழ என்ற மூன்று இடையின எழுத்துக்களை எழுவதிலும், அவற்றைப் பொருள் வேறுபட உச்சரிப்பதிலும் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இதற்குக் காரணம் வரிவடிவத்தில் இவ்வெழுத்துகளுக்கிடையே தெளிவான வேறுபாடு இருந்தாலும் அவற்றை உச்சரிக்கும்போதும், எழுதும் போதும் குழப்பம் ஏற்படுகின்றது. இக்குழப்பத்தைத் தவிர்க்க மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்த முறையில் பாம்பு ல என்றும், மெக்டோனல் ள என்றும், பழத்திற்கு வரும் ழ என்றும் நினைவில் வைத்துக் கொள்கின்றனர்.

இது போன்ற குழப்பங்களைத் தவிர்க்க ல, ள, ழகர எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் கொடுக்கப்பட்டு அவற்றைப் பொருள் வேறுபட வாக்கியத்தில் அமைத்தெழுதும் முறையில் பயிற்சி அளிக்கும்போது பிழைகள் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

சான்று

கீழே கொடுக்கபட்டுள்ள இணைச் சொற்களைப் பொருள் வேறுபடத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்திடுக.

1. மலை	1. அழை	1. வளி
2. மழை	2. அலை	2. வழி

சொல்வதெழுதல் பயிற்சிக்குரிய மாதிரிப் பனுவல்

காலையிலும் மாலையிலும் தவறாமல் கோவிலுக்குச் செல்வது மாலாவின் வழக்கம். அழகான மலர்களால் கட்டப்பட்ட மாலையை, மாலா தினமும் கோவிலுக்குக் கொண்டு செல்வாள். தன் தோழி அல்லியுடன் மாலா எப்போதும் அன்பாகப் பழகுவாள். இதனால் இருவரும் பலமுறை கோவிலுக்குச் சேர்ந்தே செல்வார்கள். அல்லியும், மாலாவும் பல காலம் வரை ஒரே பள்ளியில் படித்தவர்கள். மாலாவும் அல்லியும் மழைக்காலம் என்றாலும் வெயில் காலம் என்றாலும் தவறாமல் கோவிலுக்குச் செல்வது வழக்கம்.

இதுபோன்ற பனுவல்களை மாணவர்கள் கேட்டு எழுதும்போது அவர்கள் பிழைகள் செய்வதற்குரிய வாய்ப்புகள் குறைகிறது. சில வேளைகளில் இது போன்ற பனுவல்களை மாணவர்களைக் குழு நடவடிக்கையாகக் கொடுத்து உருவாக்கச் சொல்வதால் மாணவர்களின் சிந்தனை ஆற்றல் வளர்வதோடு தம்மாலும் ஒன்றை உருவாக்கமுடியும் என்ற நம்பிக்கையும் பெறுகின்றனர். இது மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேலும் எளிமைப்படுத்துவதோடு தமிழ் கற்கும் ஆர்வத்தையும் தூண்டுகிறது.

பொதுவாக மாணவர்களுக்குத் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் கேட்பது என்பது பிடித்தமான பொழுதுபோக்காக உள்ளது. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதனைப் பயன்படுத்திக் கற்றலை வளப்படுத்தலாம். ல, ழ, ள என்ற எழுத்துக்கள் கொண்ட சொற்கள் அதிகமாக இடம்பெறும் திரை இசைப் பாடல்களை வகுப்பில் ஒளியேற்றிக் கேட்கச் சொல்லலாம். இம்முறை (Songster Method) என்று சொல்லப்படுகிறது. பின்பு இப்பாடல் வரிவடிவத்தை ஒளி ஊடுருவித்தாளில் காண்பித்து அதில் இடம் பெற்றுள்ள ல, ழ, ளகரச் சொற்களை அடையாளங் காணச் செய்யலாம். இம்முறை தற்போது பல பள்ளிகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

சான்றாக,

கண்ணுக்கு மையழகு
கவிதைக்குப் பொய்யழகு
கன்னத்தில் குழியழகு
கார் கூந்தல் பெண்ணழகு

போன்ற வகையான பாடல்களின் ஒலிகள் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது. இந்த நடவடிக்கையை ஆசிரியர் வகுப்பில் பயன்படுத்தும் போது மாணவர்களில் பலர் தங்களுக்குப் பிடித்த இது போன்ற பாடல்களை வேகமாகவும் ஆர்வமாகவும் கூறுவர். இந்நடவடிக்கை மாணவர்களின் தமிழ் கற்கும் சூழலை வேகப்படுத்துவதோடு அவர்களை நடவடிக்கையில் ஈடுபடுத்துவது கற்றலுக்கு வெற்றியைத் தருகிறது என்றே கூறலாம். முடிவில் ஒவ்வொரு பாடலிலும் இடம் பெற்றுள்ள ல, ழ, ளகர எழுத்தில் உள்ள சொற்களைப் பட்டியிலிட்டுக் கொடுக்கும்போது கற்றல் முழுமை பெறுகிறது.

ரகர, றகரப் பிழைகள்

தொடக்க நிலையில் இருந்தே ஒரே மாதிரியான உச்சரிப்பைப் போன்று தோற்றமளிக்கும் ரகர, றகர, எழுத்துக்களில் மாணவர்களுக்கு எப்போதும் குழப்பம் உண்டு. இதற்குக் காரணம் இவ்விரு எழுத்துக்களை உச்சரிக்கும் போது எவ்வித வேறுபாடும் இல்லாமல் உச்சரிப்பதும் பேசுவதுமே காரணமாகின்றன. இதனை நினைவில் வைத்துக் கொள்ள மாணவர்கள் அவர்களுக்குத் தெரிந்த வகையில் சின்ன ர என்றும் பெரிய ற என்றும் கூறுகின்றனர்.

இப்பிழைகளைத் தவிர்க்க ரகர, றகர ஒலி வேறுபாடு கொண்ட சொற்களைக் கொடுத்துப் பொருள் வேறுபட வாக்கியம் அமைத்தல், கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புதல் போன்ற பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும்போது தமிழ் கற்பது பெரும் சுமை என்ற மனப்போக்கில் பெரும் மாற்றத்தைக் காணமுடிகிறது. மேலும் ரகர, றகர வேறுபாடு காட்டும் சொற்களை ஒரு சட்டகத்தில் கொடுத்து விடுபட்ட இடங்களை மாணவர்களை நிரப்பச் சொல்லும் முறையால் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

ர கர எழுத்தில் அமைபவை	ற கர எழுத்தில் அமைபவை
காரம்	அறம்
மரம்	முறம்
சுரம்	நிறம்

ணகர, னகர, நகரப் பிழைகள்

தமிழ் மாணவர்கள் கட்டுரை, கடிதம் எழுதும் போது குழப்பத்தினால் செய்யும் மற்றொரு வகைப் பிழை ணகர, னகர, நகரப் பிழைகள் ஆகும். இந்த மூன்று எழுத்துக்களில் மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்படக் காரணம் உச்சரிப்புத் தெளிவின்மையும், அவை சொற்களில் எந்தெந்த இடங்களில் வரும் என்பது தொடர்பானவற்றில் முழுமையான பயிற்சியின்மையுமே காரணம் ஆகும். இருப்பினும் மாணவர்கள் ணகர, னகரப் பிழைகளைப் பொறுத்தவரை இரண்டு சுழி வருமா என்றும் மூன்று சுழி வருமா என்றும் கேட்டுத் தங்கள் குழப்பத்தை தெளிவாக்கிக் கொள்கின்றனர்.

இத்தகைய பிழைகளைத் தவிர்க்க இவ்விரு எழுத்துக்கள் மிகுதியாகப் பயின்று வரும் பனுவல்களை ஆசிரியர் கூற மாணவர்கள் எழுதும் பயிற்சி வாரம் ஒருமுறை கொடுக்கப்படவேண்டும். மேலும் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் கொண்டு அவர்களைப் பனுவல்களையோ,கதையையோ உருவாக்கச் சொல்லலாம். பொதுவாக இந்நடவடிக்கையின் போது கூடிக்கற்றல் முறை (Cooperative learning) மிகுந்த வெற்றியைத் தருகிறது.

சொல்லியல் பிழைகள்

மாணவர்கள் கட்டுரை எழுதும்போது, சொற்களைச் சேர்த்து எழுதும் முறையை முழுமையாக அறியாத காரணத்தால் பிழையின்றி எழுதுவது மிகப்பெரிய சாதனை என்று எண்ணுகின்றனர். பொதுவாகக் கட்டுரை, கடிதம் எழுதும் போது ஆசிரியரின் உதவி அதிகம் தேவைப்படுகிறது. மேலும் ஆங்கிலச் சொற்களைக் கூறி, அச்சொல்லுக்கு இணையான தமிழ் வார்த்தை என்ன என்று கேட்டபின் எழுதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். எழுத்துப் பிழைகள், சந்திப் பிழைகள், ஒருமைப் பன்மை மயக்கம் என்பன போன்ற பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. ஒரு சிலரோ சொல்வளம் அதிகம் பெற்றிருந்தாலும் அவற்றை முறையாக இடம் அறிந்து பயன்படுத்துவதில்லை.

வேற்றுமை உருபுகளைத் தவறாகப் பயன்படுத்துதல்

கட்டுரை எழுதும் போதும், பயிற்சித்தாள் செய்யும்போதும், தேர்வுகளின் போதும் வேற்றுமை உருபுகளைத் தவறாகப் பயன்படுத்துவதை அறியமுடிகிறது.

சான்றாக,

1. எல்லோருக்கும் விளையாட்டுக்குப் பிடிக்கும்.
2. என் வீடு பக்கத்தில் கோவில் உள்ளது.
3. இது ஒரு நல்ல கருத்து உள்ளது.
4. என் தந்தை தேடினேன்.
5. நானும் தமிழ்ப் புத்தகம் படிக்க பிடிக்காது.
6. அதைக் கேட்ட சீதா நெஞ்சில் கத்தி குத்தயதாக இருந்தது.

இது போன்ற பிழைகளைத் தவிர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

வேற்றுமை உருபுகள் பற்றிய செய்திகளை மாணவர்களின் நிலைக்கேற்ப எளிமையாகக் கற்றுக் கொடுப்பது என்பதும் ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது. இருப்பினும் மிக எளிமையான பயிற்சிகளைக் கொடுப்பதன் வாயிலாகப் பிழைகளைக் குறைக்க முடியும்.

பயிற்சி

1. ஆசிரியர் மாணவர்களுக்கு / மாணவர்களிடம் கேள்வி கேட்டார்.
2. என் தந்தையை நான் / எனக்குப் பிடிக்கும்.
3. பாலன் மரத்தை / மரத்தில் ஏறினான்.

வாக்கியப் பிழைகள்

மாணவர்களிடம் எழுத்துப் பிழைகளை மட்டுமன்றி அவர்களது வாக்கியப் பிழைகளையும் அதிகம் காணலாம். இப்பிழைகள் பொதுவாக வீட்டில் அதிகம் தமிழ் பேசாத குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களிடம் அதிகம் காணப்படுகிறது.

1. நாம் அப்பா நம்மைப் பாட்டி வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.
2. நாம் எல்லாம் தூங்கச் சென்றோம்.
3. நாளை எனக்கு இரண்டு பரீட்சை இருந்தது.

4. இரண்டு நாள் மருத்துவமனைக்கு தங்க வேண்டி வந்தது.
5. நல்ல காற்று வீசுவதால் காற்றாடியை திறக்க வேண்டாம்.
6. அவனுடன் போன் போட்டுப் பேசினேன்.
7. பேருந்தைப் பிடித்துச் சென்றேன்.
8. எனக்கு சாப்பிட மணி இல்லை.

இது போன்ற பிழைகளைப் பயிற்சி கொடுப்பதன் வழியும், குழு நடவடிக்கைகள் மூலமும் குறைக்க முடியும்.

வலிமிகுதல்

மாணவர்கள் எழுதும்போது எந்த இடத்தில் வல்லொற்று மிகும், எங்கு மிகாது என்பதைத் தெளிவாக அறியாத காரணத்தால் மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. இது பெரும்பாலும் அனைத்து மாணவர்களுக்கும் இருக்கின்ற பொதுவான இடர்ப்பாடாகும்.ஒற்று மிகுவதால் என்ன மாற்றம் ஏற்படும் என்பதையும், மிகாமல் இருந்தால் வாக்கியம் எப்படிப் பொருள் தரும் என்பதையும் மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பயிற்சி தருவது மிக மிக இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

இதனால் மாணவர்கள் செய்யும் ஒற்றுப் பிழைகளைத் தவிர்க்க ஆசிரியர்கள் இலக்கணத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லாமல் மொழியோடு இணைத்துக் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் இலக்கணம் என்பது கடினமான ஒன்று என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் எழும். இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமையை அடுத்து ஒற்று மிகும் என்பதைக் கற்றுக் கொடுப்பதற்குரிய வாக்கியங்களைத் தெரிவு செய்து பயிற்சி அளித்து இத்தகைய பிழைகளைப் போக்கலாம்.

இது தொடர்பான பயிற்சிகளைக் கொடுக்கும்போது செய்தித் தாளில் உள்ள எளிமையான செய்திகள் அல்லது ஒரு பக்கக் கதைகள் கொடுக்கப்படவேண்டும். பின்னர் அவற்றில் ஒற்று மிகுந்தும் ஒற்று மிகாமலும் அமைந்துள்ள சொற்கள் அடையாளம் காணுமாறு கூறலாம்.

பயிற்சியில் மாணவர்கள் ஓரளவு தேர்ச்சி பெற்றபின் அவர்களுக்கு ஒற்று மிகுதல் தொடர்பான பிறசெய்திகள் அறிமுகம் செய்யப்படவேண்டும். மேலும் வாக்கியங்கள் கொடுக்கப்பட்டு அவற்றைப் பொருத்தமான இடங்களில் ஒற்றுக்களை நிரப்பும்படியான பயிற்சியும் தரலாம்.

முடிவுரை

விளையும் பயிருக்குக் களை பகை, வளரும் தமிழுக்குப் பிழை பகை என்ற கூற்றிற்கேற்பத் தொடக்கநிலையிலேயே மாணவர்களின் திறனுக்கேற்பவும், ஆர்வத்திற்கேற்பவும் எழுதுவதில் பிழை ஏற்படாமல் இருக்கப் பல பயிற்சிகள் கொடுக்க வேண்டும். தற்போது புதிய புதிய உத்திகளையும், அணுகுமுறைகளையும், தரமான கருத்துள்ள திரைப்படப் பாடல்களையும் பயன்படுத்தித் தமிழ் கற்பிக்கப்படுவதால் சிங்கையில் இன்று தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று வருகின்றனர் என்பதில் ஐயம் இல்லை.

சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் வாசிப்புத்திறனின் பங்கு



சித்ரா வாசுதேவன்,
சிங்கப்பூர்.

நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்ட நம் தமிழ்மொழி சிங்கப்பூர் மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் தமிழ் கற்பதைச் சுவையாகக் கருதாமல் சுமையாகக் கருதுவதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தமிழ் மொழியை வகுப்பறையில் புதிய புதிய அணுகுமுறைகளுடன் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மொழி அறிஞர் கர்ரே அவர்கள் தாய்மொழி கற்பித்தலில் அமையும் முக்கிய நோக்கங்களை இரண்டு வகைகளில் விளக்குவார்.

1. தாய்மொழியைச் செம்மையாகக் கையாளப் பயிற்சி அளித்தல்.

2. கேட்கும்போதும், படிக்கும்போதும் அவற்றைத் தெளிவாக உணர்ந்து, அவற்றிற்கு ஏற்ற சரியான விளக்கங்களைத் திறனுடன் வெளிப்படுத்தப் பயிற்சி அளித்தல்.

அவரது கருத்திற்கு ஏற்ப மொழியைச் செம்மையாகக் கையாளவேண்டுமெனில் அடிப்படைத் திறன்களான கேட்டல், வாசித்தல், பேசுதல், எழுதுதல் ஆகிய நான்கிலும் மாணவர்களைத் திறன் பெறச் செய்தல் வேண்டும்.

வாசித்தல் திறன்

மொழி கற்றல் கற்பித்தலில் முக்கியத் திறனாக விளங்குவது வாசிப்புத் திறன் ஆகும். இதனைப் படித்தல் திறன் எனவும் அழைப்பர். எழுதப்படும் எழுத்துக்களைக் கண்ணால் கண்டு வாயால் உச்சரித்துப் பொருளை உணர்வது வாசிப்பு எனப்படும். வாசிக்கும் பொழுது, எழுத்தும் சொல்லும் அடங்கிய வரிவடிவங்களைக் காணுதல், அவற்றை ஒலிவடிவங்களாக மாற்றித் தெளிவாக உச்சரித்தல், வரிவடிவத்தின் பொருளினை உணர்ந்து கொள்ளுதல் என்ற மூன்று வகையான செயல்களும் செவ்வனே நடைபெறுவதால் இவை மூன்றும் வாசித்தல் திறனுக்கு இன்றியமையா--ததாகின்றன.

வாசிப்புத் திறன் மேம்படும்போது,

வரிவடிவங்களில் உள்ள ஆழமான கருத்துக்களை அறியலாம்.

இலக்கிய இன்பத்தினை நுகரலாம்.

கற்பனை ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

மேன்மேலும் கற்க வேண்டும் என்றஆர்வம் ஏற்படும் .

இத்தகைய பயன்பாடுகளைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு வாசிப்புத் திறனைக் கற்பிக்க வேண்டும்.

வாசித்தலின் வகைகள்

மொழி அறிஞர்கள் வாசிப்பினை மூன்று வகைப்படுத்துவர்.

1. திறன் வளர்க்கும் வாசிப்பு (Developmental Reading)

2. பொழுதுபோக்கு வாசிப்பு (Pastime Reading)

3. பயன்கருதிய வாசிப்பு (Functional Reading)

இலக்கிய நூல்கள் பலவற்றை வாசித்தலும், அதன் விளைவாகச் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதலும் திறன் வளர்க்கும் வாசிப்பு எனப்படும்.சிறுகதை, நாவல், நாடகம்,படக்கதைகள் போன்ற இலக்கியங்களைச் சுவைத்து இன்பம் காணுதலையே குறிக்கோளாகக் கொண்ட வாசிப்பு

பொழுதுபோக்கு வாசிப்பு எனப்படும். வாசித்தலால் ஏற்படுகின்ற பயன்பாட்டை முக்கிய நோக்கமாகக் கொண்டு அமைவது பயன்கருதிய வாசிப்பு எனப்படும்.

காமன்வெல்த் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ் வகுப்புகளில் வாசிப்புத்திறனில் மிகவும் பின் தங்கியிருப்பதை உணர்ந்து அக்குறைகளைக் களைய மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகளையும், அதனால் அடைந்த நல்ல முன்னேற்றங்களையும் இக்கட்டுரை விவரிக்கின்றது. உயர்நிலை வழக்கநிலை மாணவர்களும், வழக்கநிலைத் தொழில்நுட்ப மாணவர்களும் சேர்ந்து மொத்தம் 38 மாணவர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மாணவர்களைத் தனித்தனியாக வாசிக்கச் சொல்லும் போது அவர்களிடம் கண்ட குறைபாடுகள் இங்குப் பட்டியலிடப்படுகின்றன.

1. உச்சரிப்புப் பிழைகள்

2. பொருளுணர்ந்து வாசிக்காத நிலை

3. உணர்வற்று வாசித்தல்

4. உள்ளதை உள்ளவாறு வாசிக்க இயலாத நிலை

5. தொடச்சியாக வாசிக்க இயலாமை

6. அச்சமும் கூச்சமும் மேலோங்கி நிற்றல்

இவை போன்ற சிக்கல்கள் இருப்பதை உணர முடிந்தது.இவை ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் போக்குவதற்கு முன்பு அம்மாணவர்களுக்கு வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் சில வழிமுறைகள் பின்பற்றப்பட்டன.

1. வண்ண வண்ணப் படங்களைத் தேர்வு செய்து அப்படங்களின் கீழ் அப்படங்கள் பற்றிய சுருக்கமான தொடர்களை எழுதி மாணவர்களிடம் காண்பித்து வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்

2. வகுப்பறையில் நடைபெறக்கூடிய செயல்பாடுகளையும் அவற்றை எந்தெந்த மாணவர்கள் செய்ய வேண்டும் என்ற விளக்கத்தையும் 'வெங்காட்' அட்டையில் எழுதி மாணவர்களிடம் காட்டும் போது, தமக்குரிய வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்க அச்செய்திகளைச் வாசிக்கச் செய்தல்.

3. புதிய புதிய பொருட்களையும் அவை தொடர்பான செய்திகளையும் எழுதி வைத்து, அப்பொருள் என்னவாக இருக்கும் என்ற ஆர்வம் தோன்ற அதனை வாசிக்க வைத்தல்

4. மாணவர்களுக்கேற்ற சுவையான செய்திகளையும், பழமொழிகள், மரபுத்தொடர், இணைமொழி, உவமைகள் போன்றவைகளையும் வண்ண வண்ண எழுத்துக்களால் எழுதிவைத்து அவற்றை மாணவர்கள் ஆர்வத்துடன் வாசிக்கச் செய்தல்

5. தமிழ் முரசு நாளிதழோடு இணைப்பாக வெளிவரும் மாணவர் முரசில் உள்ள விழிப்புணர்வுக் கட்டுரைகள், சிறுசிறு கதைகள் முதலியவற்றை நகல் எடுத்து ஒவ்வொரு மாணவரிடமும் கொடுத்து வாசிக்கச் சொல்லுதல்.

இவை போன்ற வழிமுறைகள் மாணவர்களது வாசிப்புத் திறன் மேம்பாட்டிற்கு ஓரளவு உறுதுணையாக அமைந்தன என்றே சொல்லவேண்டும்.

மாணவர்களின் குறைபாடுகளைக் களைவதற்கு மேற்கொண்ட வழிமுறைகள் :

வகுப்பறையில் மாணவர்கள் வாசிக்கத் தொடங்கும் போது அதற்கான நல்ல சூழல்களை உருவாக்கி, அவர்களை ஊக்கப்படுத்தி வாசிப்பைத் தொடங்கச் செய்யலாம்.

உச்சரிப்புப் பிழையின்றி வாசித்தல்

மாணவர்களிடம் எளிமையான பகுதி ஒன்றைக் கொடுத்து வாசிக்கச் சொல்லப்பட்ட போது ல, ள, ழ; ர, ற; ன, ண; போன்ற ஒலி வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் சில மாணவர்கள் வாசித்ததைக் காணமுடிந்தது. இவ்வொலி வேறுபாடுகள் அவர்களுக்கு மிகப்பெரிய சவாலாகவே அமைந்திருந்தன. ல, ள, ழ ஒலிகள் கொண்ட இணைச்சொற்களை இரண்டிரண்டாக மாணவர்களை எழுதச் சொல்லி அழுத்தம் திருத்தமாக உச்சரிக்கப் பயிற்சியளிக் கப்பட்டது. இது போலவே மற்ற ஒலி வேறுபாட்டுச் சொற்களும் தெளிவாக விளக்கப்பட்டன. இதற்கு அடுத்த நிலையில் அவர்களுக்குப் பிடித்த திரையிசைப் பாடல்களை இசையோடு பாடிக்காட்டி அவர்களையும் பிழையில்லாமல் பாட வைத்ததன் முடிவில் உச்சரிப்புத் திறனை மேம்படுத்த முடிந்தது. இத்தகைய நடவடிக்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்ட மாணவர்கள், கொடுக்கப்பட்ட பாடலுக்குப் பதிலாகப் புதிய பாடல் ஒன்றை எழுதித் தெளிவான உச்சரிப்போடு வாசிக்க முயன்றனர்.

'வாள மீனுக்கும் விலங்கு மீனுக்கும்' என்றபாடல் வரிகளை எழுதியும், 'வாழைப்பழமும் பலாப்பழமும் நல்லது' என எழுதியும், அவற்றை ஏற்ற இறக்கத்தோடும், தெளிவான உச்சரிப்போடும் வாசித்தது அவர்களுக்குக் கிடைத்த வெற்றியே எனலாம்.

இதுபோல,

'பள்ளிச் சிறுவன் தலைமேல் பல்லி விழுந்தது'

'கொல்லை காத்த கிழவிக்குத் தொல்லை தரும் வெள்ளை எலி!'

'ஆற்றோரம் அருகம்புல் அழகழகாய் வளர்ந்திருக்கு!'

போன்ற தொடர்களைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கச் செய்ததில் அவர்களது உச்சரிப்புத் திறன் நன்கு மேம்பட்டிருந்தது.

பொருளுணர்ந்து வாசித்தல்

மாணவர்கள், ஒரு பகுதியை வாசிக்கும் பொழுது பொருளைப் பற்றிக் கவனம் செலுத்தாமல், இருக்கின்ற சொற்களை அப்படியே வாசிக்கும் மனப்போக்கு இருப்பதை உணரமுடிந்தது.

சான்றாக :

"அக்கா, மகள் வீட்டிற்குப் போனாள்" என்ற தொடரை "அக்காமகள்" எனச் சேர்த்து வாசிக்கும் போது பொருளே மாறிவிடுகிறது. இவ்வேறுபாட்டினை மாணவர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். எனவே பொருளுணர்ந்து வாசிப்பதற்கும், உரிய இடங்களில் இடைவெளிவிட்டு வாசிப்பதற்கும் பல தொடர்களை உருவாக்கி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது மிக அவசியம் என வலியுறுத்தப்பட்டது. இல்லையெனில் பொருட்குழப்பம் ஏற்படுவதோடு பல குழப்பங்களுக்கும் ஆளாக நேரிடும். மாணவர்களின் இந்தக் குறைபாடு மற்ற மாணவர்களின் கேலிக்கு உள்ளாக நேரிட்டுத் தொடர்ந்து வாசிப்பதற்கு இயலாமல், வாசிப்பில் வெறுப்பும் ஏற்பட்டுவிடும்.

உணர்ச்சியுடன் வாசித்தல்

வரிவடிவம் எத்தகைய உணர்வுடன் எழுதப்பட்டிருக்--கிறதோ அதற்கேற்றாற்போல் உணர்ச்சியுடனும், குரல் ஏற்ற இறக்கத்துடனும் வாசிக்கக் கற்றுக் கொடுப்பது உணர்வுடன் வாசித்தல் எனப்படும்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

என்ற தமிழ் உணர்வுமிக்க வரிகளை உணர்வே இல்லாமல் வாசித்தால் உணர்வு வேகம் குன்றி உயிரற்ற நிலையாக அமைந்துவிடும். இக்கருத்தினை மாணவர்களிடம் வலியுறுத்தி வாசிக்கக் கற்றுக் கொடுத்ததால் அவர்கள் உணர்வுகள் மேலோங்கப் பாடலைப் பாடும் நிலை ஏற்பட்டது. நல்ல கருத்தும், நாட்டுப்பற்றும், வீர உணர்வும் மிக்க பாடல் வரிகளை உருவாக்கி மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும்போது அவர்களிடம் தன்னம்பிக்கையும், விழிப்புணர்வும் தோன்றுவதை அறியமுடிகிறது.

உள்ளதை உள்ளவாறு வாசித்தல்

பாட நூல்களில் அச்சிடப்பட்டிருப்பதை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே வாசிப்பதுதான் உள்ளதை உள்ளவாறு வாசித்தல் எனப்படும்.

'கோபே நிலநடுக்கம்' என்ற பாடப் பகுதியைக் 'கேபோ நிலநடுக்கம்' என்றோ, 'சாதனை படைத்த இளைஞன்' என்பதைச் 'சானை படைத்த இளைஞன்' என்றோ 'வேற்றுலக விந்தை' என்பதை 'வெற்றுலக விந்தை' என்றோ வாசிக்கக்கூடிய மாணவர்களுக்குக் குறில் நெடில் வேறுபாடுகளைக் கவனமுடன் வாசிக்கும் பழக்கமும், சொற்களில் உள்ள ஒலியை மாற்றும்போது பொருள் மாறிவிடும் தன்மையும் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டன. இவற்றைக் கருத்தில் கொண்ட மாணவர்கள் வாசிப்புப் பகுதியை உள்ளதை உள்ளவாறு பிழையின்றி வாசித்தனர். இவை போன்ற அணுகு முறைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி ஐந்து வாரங்களுக்குப் பிறகு அவர்கள் வாசிப்புத் திறனில் மிகச் சிறந்த முன்னேற்றம் அடைந்திருப்பதையும் காண முடிந்தது.

வாசிப்பு முறைகள்

வாசிப்புமுறைகளை அவற்றின் தன்மைக்கேற்ப இருவகைப்படுத்தலாம்.

1. வாய்விட்டு வாசித்தல் அல்லது உரக்க வாசித்தல்
2. வாய்க்குள் அமைதியாக வாசித்தல் அல்லது மௌன வாசிப்பு

கையெழுத்திலோ அச்சிலோ உள்ள செய்திகளைக் கண்ணால் கண்டு நல்ல உச்சரிப்புடன் உரக்க வாசித்தலே வாய்விட்டு வாசித்தல் எனப்படும். இம்முறையில் இதழ், நாக்கு, அண்ணம், பல் முதலிய உறுப்புகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

வகுப்பறையில் மாணவர்களுக்கு வாய்விட்டு வாசித்தலை அறிமுகப்படுத்தும்போது மூன்று வகையான படிநிலைகளைப் பின்பற்றினேன்.

1. தெளிவான உச்சரிப்போடு அழுத்தம் திருத்தமாகப் பகுதிகளை மாணவர்களுக்கு வாசித்துக் காண்பித்தல்.

2. மாணவர்கள் எல்லாரும் ஆசிரியர் வாசிப்பதைத் தொடர்ந்து அவரோடு சேர்ந்து வாசித்தல்.

3. மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக வாசித்தல்.

இந்த அணுகுமுறை மிகச்சிறந்த வெற்றியைக் கொடுத்தது என்றே சொ ல்லலாம்.

:

வாய்விட்டு வாசிப்பதற்கு முக்கியத் துணைக்கருவியாக அமைவது செய்தித்தாள் ஆகும். 'தமிழ் முரசு' நாளிதழை வாரம் இருமுறை மாணவர்களுக்கு வழங்கி வாசிக்கப் பயிற்சியளித்த போது அவர்கள் ஆர்வத்தோடு வாசித்துப் பழகுவதைக் காணமுடிந்தது.

வாய்க்குள் அமைதியாக வாசித்தல் அல்லது மௌன வாசிப்பு

இந்த வகையான அணுகுமுறை சில வேளைகளில் நன்மை பயப்பதாக இருந்தாலும் பல வேளைகளில் வெற்றியைத் தருவதாக அமையவில்லை. மௌன வாசிப்பின் போது மாணவர்களின் கவனம் வேறுபக்கம் செல்கிறது. வாசிப்பது போல் வேறு சிந்தனைகளில் இருப்பதையும் அறிய முடிந்தது.

எனவே வாசிப்பில் ஏற்படுகின்ற குறைநிறைகளை மனதில் கொண்டு ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடங்கவேண்டும். வாசிப்புத் திறனில் மாணவர்கள் மேம்பாடு அடைய வேண்டியது மிக அவசியம். தமிழ் மொழியின் இனிமையையும், அதன் ஓசை நயங்களையும் மாணவர்கள் சுவைத்து இன்புறவேண்டுமெனில் பல வகை அணுகுமுறைகளின் வழியாக வாசிப்புத் திறனைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதன்மூலம் மாணவர்கள் வாசிப்புத் திறனில் சிறந்து விளங்குவதோடு தமிழ் மொழியின் மீது தணியாத தாகம் கொண்டு உயர்தனிச் செம்மொழியை உலக அளவில் உயர்வடையச் செய்வர் என்பது திண்ணம்!

மதுரைத் தமிழ்ச்சங்க மூன்றாம் விழா

கடுங்கோடைகாலம்; வைகாசித் திங்கள்; கல்லூரிகட்கு விடுமுறைப்பருவம், அடிகள் சென்னையினின்றும் மதுரையை அடைந்தார். தேவர் விரும்பியபடி 24-5-1904ல், தமிழ்ச்சங்க விழாவில், அடிகள் விரிவுரையாற்றி அவையோரனைவரையும் மகிழ்வித்தார். தேவர் பாராட்டும், மகிழ்ச்சியும் எல்லை கடந்தன.

1904ஆம் ஆண்டு தொடங்கி ஐந்தாண்டுகளின் மதுரைத் தமிழ்ச்சங்கத்து நான்கு விழாக்களில் மறைமலைஅடிகள் கலந்துகொண்டு அரிய பேருரைகளை ஆற்றினார். அவ்விழாக்களின் அவையத்து முந்தியிருந்த அவையோர் அனைவரும் இப்புத்திளமைப் பெரும்புலவரைப் போற்றிப் புகழ்வதில் முந்தினர். விழாவின் உயிராய் ஒளியாய் அடிகளிலங்கினார். அடிகள் பேச்சினுக்காக அறிஞர்களும் அன்பர்களுந் திரண்டனர். தமிழ்ச்சங்கமாம் இனிய வானத்தில் நிறைவுற்றதண்மதியாய் அடிகள் அறிவொளி பரப்பி நின்றார். தண்ணிய கதிரொளியாம் இனிய சொற்பொழிவுகளால் புலவர் உலகத்தை நிறைத்தார், உள்ளத்தை மகிழ்வித்தார்.

மதுரைத் தமிழ்ச்சங்க விழாவினால் அடிகள் புத்துணர்ச்சி கொண்டார். தமிழ் மொழியும், தமிழர் நாகரிகமும், தமிழர் சமயமும் பழிக்கப்படுவதை இகழப்படுவதை எதிர்க்கும் வீரரானார். தமிழர் சிறப்பை நிலைநாட்டுவதெனக் கங்கணங் கட்டிக் கொண்டார்.

தமிழ்ச்சங்கத் தலைவர்கள்

வ. எண்.	பெயர்	ஆண்டு
1.	வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர்	1901 - 1911
2.	திரு.பி.சா. சுப்பிரமணிய ஐயர்	1911 - 1912
3.	திரு.இராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி	1913 - 1928
4.	திரு.தினகர பகதூர்	1928 - 1932
5.	திரு.சண்முக ராசேசுவர நாகநாத சேதுபதி	1933 - 1967
6.	திரு.பி.டி. இராசன்	1967 - 1971
7.	திரு.ஆர்.எஸ்.இராமநாத சேதுபதி	1971 - 1979
8.	திரு.இராணி இந்திரா தேவியார்	1979 - 1998
9.	முகவை மன்னர் திரு. நா. குமரன் சேதுபதி	1998 முதல்



வள்ளல்.
பொன் பாண்டித்துரைத் தேவர்
1901 - 1911



திரு. பி.சா. சுப்பிரமணிய ஐயர்
1911 - 1912



திரு. இராசேசுவர
முத்துராமலிங்க சேதுபதி
1913 - 1928

திரு. தினகர பகதூர்
1928 - 1932



திரு. சண்முக ராசேசுவர
நாகநாத சேதுபதி
1933 - 1967



திரு. பி.டி. ராஜன்
1967 - 1971



திரு. இராமநாத சேதுபதி
1971 - 1979



இராணி இந்திரா தேவியார்
1979 - 1998



முகவை மன்னர்
திரு.நா. குமரன் சேதுபதி
1998 முதல்

தமிழ்ச்சங்கச் செயலாளர்கள்

வ. எண்.	பெயர்	ஆண்டு
1.	திரு.எஸ். சாமிநாதய்யர்	1901 - 1911
2.	திரு.தி.செ. ஸ்ரீனிவாச அய்யங்கார்	1911 - 1932
3.	திரு.நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்	1932 - 1954
4.	திரு.வி. சண்முகசுந்தரம்	1954 - 1965
5.	திரு.கி. பழனியப்பன்	1965 - 1971
6.	திரு.வே.அ. வேலுசாமி	1971 - 1972
7.	திரு.தொ.பெ.மு. பெரியசாமி	1972 - 1984
8.	ந.சே. முத்துமலைச்சாமி	1984 - 1989
9.	திரு.மா. தனுக்கோடி பாண்டியன்	1989 - 2000
10.	திரு.இரா. அழகுமலை	2000 முதல்

திரு. எஸ். சாமிநாதய்யர்
1901 - 1911



திரு.தி.செ.ஸ்ரீனிவாச அய்யங்கார்
1911 - 1932



நாவலர்.
திரு.ச.சோமசுந்தர பாரதியார்
1932 - 1954



திரு. வி. சண்முகசுந்தரம்
1954 - 1965



திரு. கி. பழனியப்பன்
1965 - 1971

திரு. வே.அ. வேலுசாமி
1971 - 1972



திரு. தொ.பெ.மு. பெரியசாமி
1972 - 1983



திரு. ந.சே. முத்துமலைச்சாமி
1984 - 1989



திரு. மா. தனுக்கோடி
பாண்டியன்
1989 - 2000



திரு. இரா. அழகுமலை
2000 முதல்

செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர்கள்

வ. எண்.	பெயர்	ஆண்டு
1.	திரு. வி. சண்முகசுந்தரம்	1957 - 1965
2.	திரு.எஸ்.பார்த்தசாரதி	1965 - 1971
3.	திரு.மா. தனுக்கோடி பாண்டியன்	1971 - 1990
4.	திரு.மா . சங்கரபாண்டியன்	1990 - 2006
5.	திரு.இரா. குருசாமி	2006 முதல்



திரு. வி. சண்முகசுந்தரம்
1957 - 1965

திரு.எஸ்.பார்த்தசாரதி

1965 - 1971



திரு. மா. தனுக்கோடி
பாண்டியன்
1971 - 1990



திரு.மா . சங்கரபாண்டியன்
1990 - 2006



திரு.இரா. குருசாமி
2006 முதல்

செந்தமிழ் இதழ் ஆசிரியர்கள்

வ. எண்.	பெயர்	ஆண்டு
1.	திரு. இரா. இராகவையங்கார்	1902 - 1904
2.	திரு. மு. இராகவையங்கார்	1904 - 1910
3.	திரு. திருநாராயணையங்கார்	1910 - 1947
4.	திரு. கி. இராமாநுசய்யங்கார்	1947 - 1952
5.	திரு. நா. அப்பணையங்கார்	1952 - 1957
6.	திரு. கு.மா. திருநாவுக்கரசு	1957 - 1963
7.	திரு. இரா.வே. நாராயணன்	1963 - 1974
8.	திரு. ச. சாம்பசிவனார்	1974 - 1984
9.	திரு. பழநி. அரங்கசாமி	1984 - 1989
10.	பேரா. டாக்டர் நா. பாலுசாமி	1989 - 2001



திரு. இரா. இராகவைய்யங்கார்
1902 - 1904



திரு. மு. இராகவைய்யங்கார்
1904 - 1910



திரு. திருநாராயணையங்கார்
1910 - 1947

திரு. கி. இராமாநுசய்யங்கார்
1947 - 1952

திரு. நா. அப்பனையங்கார்
1952 - 1957

திரு. கு.மா. திருநாவுக்கரசு
1957 - 1963

திரு. இரா.வே. நாராயணன்
1963 - 1974



திரு. ச. சாம்பசிவனார்
1974 - 1984



திரு. பழநி. அரங்கசாமி
1984 - 1989



பேரா. டாக்டர் நா. பாலுசாமி
1989 - 2001

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை





தோற்றம் : 1901

நிறுவனர் : வள்ளல் **பொன். பாண்டித்துரைத்தேவர்**
அவர்கள்

நூற்றாண்டு விழா

நாள் : **2008 செப்டம்பர், 20, 21,** சனி, ஞாயிற்றுகிழமை

<u>விழாக்குழு</u>

மாட்சிமைதங்கிய மன்னர் திரு. **நா. குமரன் சேதுபதி,**
தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

மாட்சிமைதங்கிய இராணி திருமதி. **இலட்சுமி நாச்சியார்**
துணைத்தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

திருமிகு. **இரா. அழகுமலை**
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்.

திருமிகு. **இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி.

திருமிகு. **க. முத்தையா பசும்பொன்**
ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச் சங்கம்.

முனைவர். திரு. **க. சின்னப்பா**
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி.

நூற்றாண்டு விழா மலர் விலை ரூ.400/-




மதுரைத் தமிழ்ச் சங்கம்
செந்தமிழ்க் கலலூரி

